மூலநூல் :

# The Great Controversy

## Ellen G White

தமிழில் :

# மாபெரும் ஆன்மீகப் போராட்டம்!

எலன் ஜி. உவைட் அம்மையார்

**THE GREAT CONTROVERSY** (Tamil)

by E G White

First Edition : 3000

Copyright @ 2001

William Carrey Book Publications

Printed at

**Thomson Graphic & Co.**

22, Little Cottage, H. C. F.,

Mathigiri - TVS Road,

Hosur - 635 110. T.N., INDIA

Phone : (04344) 62887

# மாபெரும் ஆன்மீகப் போராட்டம்!

**எலன் ஜி. உவைட் அம்மையார்**

தமிழாக்கம்:

**திரு. கே. ஆர். பீட்டர் சைமன்**

[ஸ்ரீ ஜெய விலாஸ் மோட்டார் சர்வீஸ் லிமிடெட், மதுரை].

**டாக்டர். கே. சண்முகநாதன், Ph. D.,**

[பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை].

பதிப்பாசிரியர்:

**பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா**

[ஓசூர் எஸ். டி. ஏ. தமிழ் சபை]

# இந்தநூலை எழுதியவரின் எண்ணம் என்ன?

- இந்தப் புத்தகமானது மக்கள் அனைவரும் வாசிக்கப்படும் அளவிற்கு அவர்கள் முன்பாகக் கொண்டுவரப்படவேண்டும்!

- வெள்ளியைவிட—பொன்னைவிட நான் அதிகமாகப் பாராட்டுவது இந்த ”**மாபெரும் ஆன்மீகப் பேராட்டம்**” புத்தகத்தைத்தான்!

- இந்தப் புத்தகம், நிகழவிருக்கும் (நிகழ்ந்துகொண்டிருக்கும்) **மாபெரும் ஆன்மீகப் போராட்டத்தின்** சம்பவங்களை முன்னதாகவே எ(தீர்க்கதரிசனமாக) நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறது! (GC 11)

- இந்தப் புத்தகத்தின் வாயிலாக ஆண்டவர் தமது மக்களிடம் பேசுகிறார்! (GC 129)

- இந்த நூலில் சரித்திரச் சம்பவங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன! (GC 11–12)

- இந்த நூலின்மூலமாக ஆண்டவருடைய மக்களுக்குத்தேவையான வெளிச்சம் அனைத்தும் கொடுக்கப்பட்டிருக்கிறது! (CM 123–130).

- இந்தப் புத்தகத்தை நான் எழுதிக்கொண்டிருந்த வேளைகளில் தூதர்களுடைய நேரடிப்பிரசன்னம் எனக்குக் கிடைத்தது!(CM128).

- இந்த நூல் எந்த அளவிற்கு அதிகமாக மக்களால் அறியப்பட்ட நூலாக இருக்குமோ அந்தஅளவிற்கு ஞாயிறு ஆசரிப்பு இயக்கத்திற்கு எதிரான பலத்த அரணாக இருக்கும்! (CM 123).

- இந்த நூல் அதிகமாக விற்கப்படுமானால், பொல்லாத மனிதர்களின் ஏமாற்றறுச் செயல்கள் அனைத்தும் தடுக்கப்பட்டுவிடும்! (CM 129).

- இந்த நூல் ஆவியானவரின் ஒளிப்படுத்தலினால் வெளிப்படுத்தப்பட்டு எழுதப்பட்டது! (CM 127).

—எலன் ஜி. உவைட்

அம்மையார் எழுதிய ஏனைய நூல்களிலிருந்து மற்றவர்களுக்கு எழுதிய கடிதங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட கருத்துக்களே மேற்கண்ட கருத்துகள்!

—பதிப்பாசிரியர்

மூலநூல் :

# The Great Controversy

Ellen G White

தமிழில் :

# மாபெரும் ஆன்மீகப் போராட்டம்!

எலன் ஜி. உவைட் அம்மையார்

“**பா**வத்தால் விழுந்துபோன இந்த உலகம் இப்பொழுது நடைபெறுகின்ற **மாபெரும் ஆன்மீகப் போராட்டத்திற்கான** யுத்தக் களமாக இருப்பதை பரலோகத்தினுடைய—பூலோகத்தினுடைய வல்லமைகள் அனைத்தும் சாட்சியிட்டுக்கொண்டிருக்கின்றன!

நன்மைக்கும் தீமைக்கும், பரத்திற்கும் பாதாளத்திற்கும் நடைபெறுகின்ற இந்த மகத்தான போராட்டத்திற்கு இந்தப் பூவுலகம் ஒரு காட்சியரங்கமாக இருக்கும்படி ஏற்படுத்தப் பட்டுள்ளது!

மனுக்குலத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் இந்த **மாபெரும் ஆன்மீகப் போராட்டத்தில்** தங்களது பங்கினைச் செய்தே தீரவேண்டும்!

எந்த ஒரு நபரும் இந்தப் பேராட்டத்தில் நான் நடுநிலை கொண்டிருக்கிறேன் என்று சொல்லும் இடத்தில் இருக்கவே முடியாது!”

**—எலன் உவைட்**
**“அவரையே உயர்த்துங்கள்” பக்கம்: 253.**

# எலன் ஜி. உவைட் அம்மையார்

(காலம் : 26.11.1827—16.7.1915)

இரண்டாயிரத்திற்கும் அதிகமான தரிசனங்களை ஆண்டவரிடத்திலிருந்து பெற்று, எழுதப்பட்ட இந்த நூலாசிரியரின் புத்தகங்கள் வேத அறிஞர்களாலும் விஞ்ஞானிகளாலும் மதிக்கப்பட்டவைகளாகத் திகழ்கின்றன!

**ஆ**ச்சரியப்படவேண்டாம்! ஒரே நபர் எழுதிய புத்தகங்கள்தான் உயரமாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது! ஆம்; அவைகள் அனைத்தையும் எழுதியவர் திருமதி. எலன் ஜி. உவைட் அம்மையார் அவர்கள்தான்!

அதன் உயரம் ஆறு அடி ஒரு அங்கலம் (6''1'); அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 29,084!

அம்மையாரால் எழுதப்பட்ட அனைத்து நூல்களும் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளிவரவேண்டும்; அதற்காக ஜெபிப்போம்!

—***பதிப்பாசிரியர்***

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | எருசலேமின் அழிவு...! நமக்கு ஒரு எச்சரிக்கை!! | 1 |
| 2. | முதலாம் நூற்றாண்டில் உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்கள்! | 27 |
| 3. | அதர்மம் அரசோச்சிய காலம் ... ? | 39 |
| 4. | வாழ்வாங்கு வாழ்ந்த வால்டென்னியர்கள்! | 53 |
| 5. | சீர்திருத்தத்தின் விடிவெள்ளி ஜான் விக்ளிஃ! | 75 |
| 6. | நெருப்பாற்றிலே நீந்தியவர்கள்! | 97 |
| 7. | போப்புவை எதிர்த்து போர்முரசு கொட்டியவர்! | 125 |
| 8. | சிங்கத்தின் குகையில் சீர்திருத்தவாதி! | 155 |
| 9. | சுவிட்சர்லாந்தின் சீர்திருத்தவாதி ஸ்விங்ளி! | 187 |
| 10. | விவிலியத்தின் வெளிச்சமும் வீணர்களின் அச்சமும்! | 203 |
| 11. | எதேச்சாதிகாரத்தை எதிர்த்த இளவரசர்கள்! | 217 |
| 12. | கொற்றத்தில் கோலோச்சிய கொடுமைக்காரர்கள்! | 235 |
| 13. | போராட்டத்தில் பூத்திட்ட பொன்மலர்கள்! | 267 |
| 14. | போப்புவை எதிர்த்துப் போராடிய புரட்சியாளர்கள் | 277 |
| 15. | போப்புவின் கொடுமைகளும் புரட்சியின் சிறுமைகளும்...! | 301 |
| 16. | ஒரு புதிய தேசத்தில் புகலிடம் தேடியவர்கள்! | 331 |

| | | |
|---|---|---|
| 17. | தீர்க்கதரிசனங்களில் இயேசுவின் இரண்டாம் வருகை! | 343 |
| 18. | வில்லியம் மில்லர் வெளிப்படுத்திய விளக்கம்! | 365 |
| 19. | இனிப்பான ஒரு எதிர்பார்ப்பு! | 395 |
| 20. | கசப்பான ஒரு ஏமாற்றம்...! | 409 |
| 21. | ஒரு எச்சரிக்கை நிராகரிக்கப்பட்டது! | 433 |
| 22. | நிறைவேறின தீர்க்கதரிசனங்கள்! | 453 |
| 23. | பரிசுத்தஸ்தலம் என்றால் என்ன? | 527 |
| 24. | இயேசு கிறிஸ்துவே நமது மத்தியஸ்தர்! | 543 |
| 25. | தேவனுடைய கற்பனைகள் மாற்றப்படமுடியாதவைகள்! | 555 |
| 26. | ஒரு சீர்திருத்தப் பணி! | 577 |
| 27. | நவீன எழுப்புதல்கள்! | 589 |
| 28. | உன் மீது வழக்கு இருக்கிறது...! | 611 |
| 29. | பாவத்திற்கு காரணன் யார்? | 627 |
| 30. | மனிதனுக்கும் சாத்தானுக்கும் இடையே உள்ள பகை! | 643 |
| 31. | தீய ஆவிகளின் அட்டகாசங்கள்! | 651 |
| 32. | சாத்தானின் கண்ணிகள்! | 659 |
| 33. | மரணமே...! உன் ஜெயம் எங்கே? | 675 |
| 34. | அந்தகாரலோகாதிபதியின் தந்திரச் செயல்கள்! | 699 |

| | | |
|---|---|---|
| 35. | போப்புமார்க்கத்தின் தன்மைகளும் நோக்கங்களும்! | 713 |
| 36. | வரவிருக்கும் போராட்டமும் அதன் காரணமும்! | 737 |
| 37. | சத்தியத்தின் ஒளியால் நித்தியத்தின் வழியில்...! | 751 |
| 38. | இறுதி எச்சரிப்பு ! | 765 |
| 39. | சிறுமந்தையே, பயப்படாதே! | 779 |
| 40. | விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்...! | 807 |
| 41. | ஆயிரம் வருட அரசாட்சி! | 829 |
| 42. | போராட்டம் முடிவடைகிறது! | 841 |

# மாபெரும் ஆன்மீகப் போராட்டம்!

**“நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு**

**எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி,**

**தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும்**

**தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில்,**

**மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல,**

**துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும்,**

**இப்பிரபஞ்சத்தின்**

**அந்தகார லோகாதிபதிகளோடும்,**

**வானமண்டலங்களிலுள்ள**

**பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும்**

**நமக்குப் போராட்டம் உண்டு.”**

***—பவுல் அடிகளார்***
***(எபேசியர் 6:11–12)***

# 1

# எருசலேமின் அழிவு...! நமக்கு ஒரு எச்சரிக்கை!!

**(மூலநூல் : The Great Controversy பக்கம் : 17–38)**

"உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்திற்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும். இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கின்றன. உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச்சூழ மதில்போட்டு, உன்னை வளைத்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்குச்செய்யும் நாட்கள் உனக்கு வரும்" (லூக்கா 19:42–44) என்றார். (1)

ஒலிவ மலையின்மீது நின்று, இயேசு எருசலேமை நோக்கினார். அவர்முன்பாக நேர்த்தியும் சமாதானமுமான காட்சி வியாபித்திருந்தது. அது பஸ்கா பண்டிகையின் காலம். தேசியப் பண்டிகையான அதைக் கொண்டாடும்படி எல்லா இடங்களிலிருந்தும் யாக்கோபின் பிள்ளைகள் அங்கு கூடியிருந்தனர். இஸ்ரவேலின் தலைநகரமான அது, அழகிய திராட்சைத் தோட்டங்களுக்கும் பசுமையான சரிவுகளுக்கும் நடுவில் யாத்ரீகர்களின் கூடாரங்களால் நிறைந்த பனிக்குன்றுகளை உடையதாகவும், அரச அரண்மனைகளினாலும் பெரும் மாளிகைகளினாலும் எழும்பினதாகவும் இருந்தது. "வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும், சர்வபூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது; அதுவே மகாராஜாவின் நகரம்" (சங்கீதம் 48:2) என்று பண்டைய ஆஸ்தான பாடகர்கள் பாடினதற்கிசைவாக, பரலோகத்தின் ஆதரவில் அது இருப்பதாக எண்ணி, அழகுடனும் பாதுகாப்புடனும் இருப்பதாகக்கருதி, துன்பத்தைக் காணாத ஒரு அரசியைப்

போல, நான் அமர்ந்திருக்கிறேன் என்றவண்ணமாக இருந்தது. எருசலேம் தேவாலயத்தின் மாபெரும் கட்டிடங்கள் கண்களுக்குப் பூரணமான காட்சியாக இருந்தன. பனிபோன்ற வெண்மையான அதன் பளிங்குச் சுவர்களின்மீதும், தங்கமயமான வாசலின்மீதும், கோபுரங்களின்மீதும் மறைகின்ற சூரியனின் ஒளி படவே, அவை பளபளத்தன. யூத நாட்டின் பெருமையாக—பூரண வடிவுள்ளதாக அது நின்றிருந்தது. எந்த இஸ்ரவேல் பிள்ளையால்தான் அதைக் கண்டு மகிழாமலும், மனக்கிளர்ச்சி அடையாமலும், போற்றாமலும் இருக்கவியலும்! ஆனால், இயேசுவின் உள்ளம் வேறுவிதமான சிந்தனை களை உடையதாக இருந்தது. "அவர் சமீபமாய் வந்தபோது, நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டழுதார்"–லூக்கா 19:41. வெற்றிவீரராக அவர் எருசலேமிற்குள் நுழைந்தபோது, குருத்தோலைகள் அசைந்து, ஓசன்னா என்று எழுப்பிய ஆரவாரம் குன்றுகளில் மோதி எதிரொலித் தது. ஆயிரக்கணக்கானவர்கள் ராஜா என்று மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தபோது, திடீரென உண்டான ஒரு மர்மமான துயரம் உலக மீட்பரைத் திகைக்க வைத்தது. மரணத்தை வென்றவர், அதன் அடிமைத்தளையில் இருந்தவர்களை கல்லறைகளிலிருந்து அழைத்து எழுப்பியவர், தேவகுமாரன், இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டவர், துயரத்தால்—சாதாரணத் துயரத்தால் அல்லாமல், மிகுந்த—அடக்கமுடியாத வேதனையால் அழுதார்! (2)

தமது பாதங்கள் எங்கே சென்றுகொண்டிருந்தன என்பதை அவர் நன்கு அறிந்திருந்தும், தமக்காகக் கண்ணீர் சிந்தவில்லை. அவரை வேதனைக்குள்ளாக்கவிருக்கும் காட்சி—கெத்செமெனே, அவர்முன் இருந்தது. நூற்றாண்டுகளாகப் பலிஆடுகள் நடத்திச் செல்லப்பட்டுக்கொண்டிருந்த பாதையில், "அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போல" (ஏசாயா 53:7) அவர் செல்லவேண்டியதாயிருந்ததும், ஆட்டுவாசலும் அவரது காட்சிக்கு வந்தன. அவர் சிலுவையில் அறையப்படவேண்டிய இடமாகிய கல்வாரி வெகுதூரத்தில் இல்லை. பாவநிவாரணபலியாக கிறிஸ்து தமது ஆத்துமாவை ஊற்றிவிடும் சமயம், அவர் நடந்துசெல்ல வேண்டியதான பாதையில் இருளும் திகிலும் விழவேண்டியிருந்தது. அப்படியிருந்தும், மகிழ்ச்சிமிக்க இந்தவேளையில், மேலே சொல்லப்பட்ட காட்சிகளை எண்ணிப் பார்த்ததினால் அவருக்குள் துயரத்தின் சாயல் படியவில்லை. அவருக்கு நேரிடவிருக்கிற, மனித இனத்தால் தாங்கிக்கொள்ள இயலாத வேதனைகள் தன்னலமற்ற அவரது ஆத்துமாவை இருளச் செய்யவில்லை. எருசலேமின் ஆயிரக்கணக்கானவர்களுக்காக—யாரை இரட்சிக்கவும் ஆசீர்வதிக்கவும் வந்தாரோ, அவர்களது குருட்டுத்தனத்தையும், மனந்திரும்ப மறுக்கும் சுபாவத்தையும் பார்த்து அழுதார். (3)

தெரிந்துகொள்ளப்பட்ட ஜனத்துக்கு ஆயிரக்கணக்கான வருடங்களாக தேவனால் வழங்கப்பட்டிருந்த சிறப்பான ஆதரவும் பாதுகாப்பும், இயேசுவின் கண்களுக்குமுன் வந்தது; வாக்குத்தத்தத்தின் மகன் எதிர்ப்பில்லாத பலி ஆடாகக் கட்டப்பட்டுக்கிடந்த—தேவகுமாரன் தம்மைப் பலியாகச் செலுத்துவதின் முன்னடையாளமாக இருந்த பலிபீடத்தின் இடமாக மோரியா மலை இருந்தது; அங்குதான் விசுவாசத்தின் தகப்பனுக்கு மேசியாவைப்பற்றிய மகிமைமிக்க வாக்குத்தத்தமும் ஆசீர்வாதமிக்க உடன்படிக்கையும் உறுதிப்படுத்தப்பட்டது (ஆதி. 22:9,16–18). குற்றமுள்ள மனிதர்களின் இரட்சிப்பிற்காக நிகழ இருக்கின்ற இரட்சகரின் ஈடுபலியைக் காட்டும் அடையாளமாக, சங்காரதூதனின் (1 நாளா. 21) பட்டயத்தைத் தடுத்த, பலியின் அக்கினி உயர எழும்பிச்சென்ற ஒர்னானின் களம் அந்த இடத்தில் இருந்தது; சர்வபூமியிலும் தேவனால் சிறப்பிக்கப்பட்ட இடமாக எருசலேம் இருந்தது. கர்த்தர் "சீயோனைத் தெரிந்துகொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார்" (சங். 132:13). பரிசுத்த தீர்க்கதரிசிகள் அங்கிருந்துதான், காலம் நெடுகிலும் எச்சரிப்பின் தூதைக் கொடுத்துவந்தனர். ஆசாரியர்கள் அவர்களுடைய தூபகலசங்களை அசைக்க, வணங்குபவர்களின் ஜெபங்களுடன் சேர்த்து, சுகந்த வாசனையான மேகம் அங்கிருந்துதான் தேவசமூகத்திற்கு எழும்பி இருந்தது. அங்குதான் மகிமையின் மேகத்தில், கிருபாசனத்திற்கு மேலாக, யேகோவா தமது பிரசன்னத்தை வெளிப்படுத்தியிருந்தார். பரலோகத்தையும் பூலோகத்தையும் இணைக்கின்ற ஏணியின் அடிப்பாகம் அங்குதானிருந்தது. அந்த ஏணியின் வழியாகத்தான் தேவதூதர்கள் பூமிக்கு இறங்கவும் பரலோகத்திற்கு ஏறவும் (ஆதியாகமம் 28:12; யோவான் 1:51) வழியைக் கண்டனர். அதுவே எல்லாவற்றிற்கும் மேலான பரிசுத்தமான இடத்திற்குச் செல்லும் பாதையை உலகிற்குத் திறந்தது. இஸ்ரவேல் ஒரு தேசமாக, பரலோகத்துடன் அதற்குண்டாயிருந்த பிணைப்பைத் தொடர்ந்து பாதுகாத்திருந்தால், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதாக என்றென்றைக்கும் நிலைத்திருந்திருக்கும் (எரே. 17:21–25). ஆனால் அனுகூலம் பெற்றிருந்த அந்த மக்களின் வரலாறு, பின்னிட்டுப்போவதும் கலகம்செய்வதுமான அத்தாட்சிகளை உடையதாக இருந்தது. அவர்கள் பரலோகத்தின் கிருபையை நிராகரித்துவிட்டனர். வழங்கப்பட்டிருந்த சலுகைகளைத் தவறான வழியில் வீணடித்திருந்தனர். கொடுக்கப்பட்டிருந்த வாய்ப்புக்களை மலிவானவைகளாக எண்ணி, கைநழுவவிட்டிருந்தனர். (4)

இஸ்ரவேல், "தேவனுடைய வார்த்தைகளை அசட்டைசெய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்திருந்தபோதிலும்" (2 நாளா. 36:16), கர்த்தர் இன்னமும் இரக்கத்தைக் காக்கின்றவராகவும், அக்கிரமத்தையும்

மீறுதலையும் மன்னிக்கிறவராகவும், இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும் மகா தயையும் சத்தியமும் உள்ளவராகவும் இருந்தார் (யாத்திராகமம் 34:6). அதுமட்டுமன்று, மறுபடியும் மறுபடியும் அவர்கள் தேவனை நிராகரித்தபோதும், அவரது இரக்கம் அவர்களுடன் மன்றாடிக்கொண்டிருந்தது. ஒரு தகப்பனுக்கு மகன்மீது இருக்கக்கூடிய அன்பைவிட, அதிகமான அன்போடு "தமது ஜனத்தையும் தமது வாசஸ்தலத்தையும் காப்பதற்கான இரக்க முள்ளவராயிருந்தபடியால், அவர்களிடத்துக்குத் தம்முடைய ஸ்தானாபதிகளை ஏற்கெனவே அனுப்பினார்" (2 நாளா. 36:15). கண்டனம், கெஞ்சுதல், கடிந்து கொள்ளல் அனைத்தும் பயனற்றுப் போனபோது, பரலோகத்தின் அதிஉன்னதமான ஈவை அவர்களிடம் அனுப்பினார். அதுமட்டுமல்ல. அந்த ஒரே ஈவின் மூலமாக பரலோகம் முழுவதையுமே தாரைவார்த்துவிட்டார்! (5)

மனம் திரும்ப மறுக்கும் அந்தப் பட்டணத்தினிடம் வேண்டுதல் செய்யும்படி, தேவகுமாரன்தாமே அனுப்பப்பட்டார். நற்கனி தரும் ஒரு திராட்சைச் செடியாக, இஸ்ரவேலை எகிப்திலிருந்து கிறிஸ்துதான் கொண்டுவந்தார் (சங். 80:8). அவரது கரமே அஞ்ஞான மார்க்கத்தை அதற்கு முன்னிருந்து துரத்தியது. செழிப்பான குன்றின்மீது அவர் அதை நாட்டியிருந்தார். அவர் தமது பாதுகாவலினால், அதைச் சுற்றிலும் வேலி அடைத்திருந்தார். அதைச் சீர்படுத்திக் காத்திட அவரது ஊழியக்காரர்கள் அனுப்பப்பட்டிருந்தனர். "நான் என் திராட்சத் தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்?" (ஏசா. 5:1–4) அதற்குச் செய்யப்படாதது என்ன? என்று அவர் வியந்தார். அது நல்ல திராட்சைக்கனிகளைக் கொடுக்கும் என்று அவர் எதிர்பார்த்திருந்தபோது, அது காட்டுத் திராட்சைக் கனியைக் கொடுத்தது. என்றபோதிலும் அது நற்கனிதரும் என்ற ஆவல்மிகுந்த நம்பிக்கையில், அவர் தமது திராட்சைத் தோட்டத்திற்கு நேரடியாக வந்தார்; அதை அழிவிலிருந்து காக்கவேண்டும் என்பதற்காக வந்தார்; அவர் அவருடைய திராட்சைச் செடியைச் சுற்றிலும் கொத்தினார்; அதைக் கிளை நறுக்கி உரமிட்டார்; அவரால் நடப்பட்ட இந்தத் திராட்சைச் செடியைக் காப்பதற்கு அவர் தொடர்ந்து சகல முயற்சிகளையும் செய்தார். (6)

ஒளியின் கர்த்தரான மகிமையின் கர்த்தர் மூன்று ஆண்டுகள் அவரது சொந்த ஜனங்களிடம் உள்ளும் புறமுமாகச் சென்றார். "நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்"–அப்போ. 10:38; லூக். 4:18; மத். 11:5. பிசாசினால் ஒடுக்கப்பட்டிருந்த அனைவரையும் குணப்படுத்தி, தரித்திரருக்குச்

சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, இதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்கி, சிறைப்பட்டவர்களை விடுதலைசெய்து, குருடருக்குப் பார்வையைத் தந்து, சப்பாணிகளை நடக்கச்செய்து, செவிடர்களுக்கு காது கேட்கச்செய்து, குஷ்டரோகிகளைச் சுகப்படுத்தி, மரித்தோரை எழுப்பி, நன்மைசெய்கிறவராக எங்கும் சுற்றித்திரிந்தார். "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28) என்னும் கிருபையின் அழைப்பு சகல வகுப்பினருக்கும் ஒரேவிதமாகக் கொடுக்கப்பட்டது. (7)

நன்மைக்குப் பதிலாகத் தீமையும், அன்புக்குப் பதிலாக வெறுப்பும் அவருக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டபோதிலும் (சங். 109:5), இரக்கம் காட்டுதல் என்னும் கிருபையின் ஊழியத்தை அவர் சீராகச் செய்தார். அவரது கிருபையை நாடிச்சென்றவர்களை அவர் ஒருபோதும் நிராகரிக்கவில்லை. நிந்தையையும் அவமானங்களையும் அன்றாடப் பங்காகப் பெற்று, மனிதர்களின் தேவைகளைச் சந்திக்கவும், அவர்களது துயரங்களை இலகுவாக்கவும் ஊழியம்செய்தவர், நித்திய ஜீவனாகிய பரிசைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கெஞ்சினார். அவருக்கென்று ஒரு வீடில்லாதவராக, அலைந்து திரிபவராக இருந்தார். முரட்டாட்டமிக்க மிகக் கடினமான இதயங்களால், அவரிடமிருந்து வந்த இரக்கத்தின் அலைகள் திருப்பியடிக்கப்பட்டபோது, விவரிக்க இயலாத அன்பும் இரக்கமும் நிறைந்த பலத்த அலையாக மீண்டும் அவரிடமிருந்து அவர்களை நோக்கி அனுப்பப்பட்டது. இஸ்ரவேல் தனக்கு உதவக்கூடியவராக இருந்த ஒரே நண்பரையும் விட்டுத் திரும்பிவிட்டது. அவரது அன்பின் வேண்டுதல்கள் நிந்திக்கப்பட்டன. அவரது ஆலோசனைகள் கேட்கப்படவில்லை. அவரது எச்சரிப்புகள் கேலியாக்கப்பட்டன! (8)

நம்பிக்கை, மன்னிப்பு ஆகியவைகளின் காலம் வேகமாகக் கடந்துகொண்டிருந்தது. நெடுநாட்களாக தாமதப்படுத்தப்பட்டிருந்த, தேவ கோபாக்கினையின் பாத்திரம் கிட்டத்தட்ட நிரம்பி இருந்தது. காலங்கள் நெடுகிலும் நிகழ்ந்த மருளவிழுகையினாலும் கலகத்தினாலும் குற்றமுள்ளதாயிருந்த ஒரு ஜனத்தின்மேல் சொரிவதற்கென்று ஆபத்துக்களாகிய மேகங்கள் கருமை அடைந்துகொண்டிருந்தன. நிகழவிருக்கின்ற அந்த நிலையிலிருந்து அவர்களைக் காக்கக்கூடியவரான, ஒரே ஒருவரை அவர்கள் அலட்சியப்படுத்தி–நிந்தித்து–நிராகரித்தனர். விரைவில் அவரைச் சிலுவையில் அறையவும் உள்ளனர். தேவனுடைய ஆதரவையும் ஆசீர்வாதங்களையும் பெற்றிருந்த இஸ்ரவேல் ஜனத்தின் நாட்கள், கிறிஸ்து கல்வாரியில் தொங்கும்போது முடிவடைய இருந்தது.

உலகத்தின் ஆதாயங்களையும் பொக்கிஷங்களனைத்தையும்விட, ஒரு ஆத்துமாவின் இழப்பு கணக்கிட முடியாத அளவிற்கு நஷ்டமாயிருந்தது. கிறிஸ்து எருசலேமைப் பார்த்தபோது, ஒருகாலத்தில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருந்த அந்த ஜனம், அவரது விசேஷமான பொக்கிஷமாக இருந்த அந்த இடம், முற்றிலுமாக அழிய இருக்கும் காட்சியைக் கண்டார். (9)

இஸ்ரவேலின் பாவங்களால், அதற்கு நிகழ இருக்கும் பயங்கரமான பாழ்க்கடிப்பிற்குக் காரணமான, அதன் மருளவிழுகையை எண்ணி, தீர்க்கதரிசிகள் அழுதனர். அடிமைகளாக்கப்பட்டுப்போன கர்த்தரின் மந்தைக்காக, வெட்டுண்டுபோன தன் ஜனத்தின் குமாரத்திகளுக்காக இரவும்–பகலும் அழுவதற்குத் தனது கண்கள் கண்ணீரூற்றாயிருக்கவேண்டும் என எரேமியா விரும்பினார் (எரே. 9:1; 13:17). அப்படியிருக்க, வருடங்களாக மட்டுமின்றி, யுகங்கள் நெடுகிலுமான தீர்க்கதரிசனப் பார்வையை உடையவரின் துயரம் எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்! இதுவரை யேகோவாவின் வாசஸ்தலமாயிருந்த அந்த நகரத்தின்மீது சங்காரதூதன் கடந்துசெல்லுவதை அவர் கண்டார். பிற்காலத்தில் தீத்து அரசனும் அவனது இராணுவமும் சூழ்ந்துகொள்ளவிருக்கின்ற அதே இடமான ஒலிவமலைச் சிகரத்தின்மீது அவர் நின்று, கண்ணீரால் மங்கிய கண்களினால், அந்த நகரத்தின் பள்ளத்தாக்குகளையும் புனிதமான பிராகாரங்களையும், எதிரிகளின் இராணுவம் அவைகளைச் சூழ்ந்து கொண்டிருப்பதையும் கண்டார். யுத்தம் செய்வதற்காக இராணுவம் நடக்கின்ற சத்தத்தை அவர் கேட்டார். முற்றுகையிடப்பட்ட அந்த நகரத்திலிருந்து தாய்மார்களும் குழந்தைகளும் உணவிற்காக அழுகின்ற குரலை அவர் கேட்டார். அவர்களுடைய புனிதமான அழகான வீடுகளும் அரண்மனைகளும் கோபுரங்களும் அக்கினிக்கு இரையாக்கப்பட்டு, ஒரு காலத்தில் அவை நின்றிருந்த இடங்கள் மண்மேடுகளாகவும் இடிபாடுகளாகவும் இருக்கப்போவதையும் அவர் கண்டார்! (10)

காலத்தினூடாக அவர் நோக்கியபோது, உடன்படிக்கையின் ஜனங்கள் கவனிப்பாரற்று, “கடற்கரையில் சிதறிக்கிடக்கும் உடைந்த கப்பலின் பாகங்களைப்போல” ஒவ்வொரு நாட்டிலும் சிதறிக்கிடப்பதை அவர் கண்டார். எருசலேமிற்கும் அவளது பிள்ளைகளுக்கும் வரவிருக்கும் தண்டனையால், முதல் தடவையாக பருகவிருக்கும் கோபாக்கினையின் முழுப்பாத்திரத்தையும் அவர் கண்டார். “எருசலேமே! எருசலேமே! தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளை தன் சிறகுகளின்கீழே

கூட்டிச்சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக, நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச்சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன். உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று"–மத். 23:37. தேவ அன்பும், ஏக்கமும், இரக்கமும் நிறைந்தவரிடமிருந்து இப்படிப்பட்ட துக்கமான வார்த்தைகள் வந்தன. உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாய் இருக்கும். நியாயத்தீர்ப்பைச் செலுத்தும் தேவதூதனை நான் நிறுத்திவைத்தேன். உன்னை மனந்திரும்பும்படி நான் அழைத்த அழைப்பு வீணாயிற்று. நீ சாதாரணமான வேலைக்காரர்களையோ பிரதிநிதிகளையோமட்டும் நிராகரிக்காமல், உன்னுடைய மீட்பரான, இஸ்ரவேலின் பரிசுத்தரையே நிராகரித்துவிட்டாய். நீ அழிக்கப்பட்டுப்போனால், அதன் பொறுப்பு உன்னுடையதாகமட்டுமே இருக்கும். "அப்படி இருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை"–யோவான் 5:40. (11)

கீழ்ப்படியாமைக்கான தேவனுடைய நியாயத்தீர்ப்பைச் சந்திக்க விரைந்து சென்றுகொண்டிருந்த எருசலேமில், அவிசுவாசத்தாலும் கலகத்தாலும் கடினப்பட்டுப்போன ஒரு உலகத்தை கிறிஸ்து கண்டார். விழுந்துபோன ஒரு இனத்தின்மீதுள்ள ஆபத்து, அவரது ஆத்துமாவை நெருக்கியதால், அவரது உதட்டிலிருந்து அதிக வருத்தமான அழுகை உண்டானது. துன்பமும் கண்ணீரும் இரத்தம்சொரிதலும் மானிடரின் பாவத்தினால் உண்டானவைகள் என்னும் ஆதாரத்தை கண்டதால், துயரத்தால் அமிழ்ந்துபோன பூமியின்மீது அவரது எல்லையற்ற இரக்கம் நிறைந்த இதயம் நெகிழ்ந்தது. அவர்களெல்லோரையும் விடுவிக்க அவர் வாஞ்சித்தார். உதவிகளுக்கு ஆதாரமாயிருப்பவரை ஒருசிலர்மட்டுமே தேடுவார்கள். இரட்சிப்பை அவர்களுக்கு அருகில் கொண்டுவருவதற்காக அவர் தமது ஜீவனை மரணத்தில் ஊற்றவும் விருப்பமுள்ளவராக இருந்தார். ஆனால் ஜீவனைப் பெற்றுக்கொள்ளுவதற்காகச் சிலர்மட்டுமே அவரிடம் வரக்கூடியவர்களாக இருந்தனர். (12)

பரலோகத்தின் மேன்னையானவர் கண்ணீரில் இருக்கிறார்! முடிவில்லாதவரான தேவனின் குமாரன் ஆவியில் கலங்கி, துயரத்தில் கீழே கவிழ்கிறார். இந்தக் காட்சி பரலோகம் முழுவதையும் வியப்பில் ஆழ்த்தினது. இந்தக் காட்சி பாவத்தின் அநீதத்தன்மையை நமக்கு வெளிக்காட்டுகிறது. தேவப் பிரமாணத்தை மீறும்போது உண்டாகும் விளைவுகளிலிருந்து குற்றவாளியைக் காப்பதுதென்பது, எல்லையற்ற வல்லமைக்குங்கூட எவ்வளவு கடினமான ஒரு காரியமாக இருக்கிறது என்பதையே இந்தக் காட்சி வெளிக்காட்டுகிறது. உலகின் கடைசித் தலைமுறையை

இயேசு நோக்கிப்பார்த்து, எருசலேமின் அழிவிற்குக் காரணமான வஞ்சனையைப் போன்ற வஞ்சனையில், அவர்கள் ஈடுபட்டிருப்பதை கண்டார். கிறிஸ்துவை நிராகரித்ததுதான் யூதரின் பெரும் பாவமாக இருந்தது. அதைப்போலவே, பரலோகத்திலும் பூமியிலுமுள்ள இறையரசின் அஸ்திவாரமாகிய தேவப்பிரமாணத்தை நிராகரிப்பதே கிறிஸ்தவ உலகின் பெரும் பாவமாயிருக்கும். யேகோவாவின் கற்பனைகள் நிந்திக்கப்பட்டு, இல்லாதவைகளென்று எண்ணப்படும். இரண்டாம் மரணத்தினால் உண்டாகும் அழிவிற்குப் பாத்திரமான இலட்சக்கணக்கானவர்கள் சாத்தானுக்கும் பாவத்திற்கும் அடிமையானவர்கள், தங்களைச் சந்திக்கும் நாளில் சொல்லப்படும் சத்திய வார்த்தைகளைக் கவனிக்க மறுத்துவிடுவார்கள். கடுமையான குருட்டாட்டம்! விநோதமான ஏமாற்றுதல்!! (13)

கிறிஸ்து பஸ்கா பண்டிகைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, யூத ஆட்சியாளர்களின் மாய்மாலத்தை மறுதலித்து கடைசித் தடவையாகத் தேவாலயத்தைவிட்டுப் புறப்பட்டபின்பு, மறுபடியும் அவர் தமது சீடர்களோடுங்கூட ஒலிவமலைக்குச் சென்று, அந்தப் பட்டணத்தை நோக்கி இருந்த ஒரு சரிவான புல்வெளியில் அமர்ந்தார். அவர் மறுபடியும் ஒருமுறை அதன் சுவர்களையும், அதன் கோபுரங்களையும், அதன் மாளிகைகளையும் நோக்கினார். அழகின் கிரீடமாக அந்த புனித மலையைச் சிங்காரித்து ஜொலித்துக் கொண்டிருந்த ஆலயத்தை மீண்டும் நோக்கினார். (14)

“சாலேமில் அவருடைய கூடாரமும், சீயோனில் அவருடைய வாசஸ்தலமும் இருக்கிறது” (சங். 76:2) என்று ஆயிரம் வருடங்களுக்குமுன் இஸ்ரவேலை தேவன் தாம் வாசம்பண்ணும் இடமாகத் தெரிந்துகொண்டதினால் அதன் மீது அவருக்கிருந்த ஆதரவை சங்கீதக்காரன் பெரிதுபடுத்திக் கூறினார். “யூதா கோத்திரத்தையும் தமக்குப் பிரியமான சீயோன் பர்வதத்தையும் தெரிந்துகொண்டார். தம்முடைய பரிசுத்தஸ்தலத்தை மலைகளைப் போலவும், என்றைக்கும் நிற்கும்படி தாம் அஸ்திவாரப்படுத்தின பூமியைப் போலவும் கட்டினார்”–சங். 78:68,69. இஸ்ரவேல் வரலாற்றின் மிக உன்னதமான காலத்தில் முதலாம் ஆலயம் கட்டப்பட்டிருந்தது. இதற்காக ஏராளமான பொக்கிஷங்கள் தாவீது அரசனால் சேகரித்து வைக்கப்பட்டிருந்தது. அதன் நிர்மாணப் பணியின் திட்டமனைத்தும் தெய்வீக ஏவுதலால் செய்யப்பட்டிருந்தது (1 நாளா 28:12,19). இஸ்ரவேலின் ஞானிகளில் சிறந்தவனான சாலொமோன் அரசனால் அது கட்டிமுடிக்கப்பட்டிருந்தது. உலகம் அதுவரை கண்டிருந்த கட்டிடங்கள் அனைத்தையும்விட, அந்த தேவாலயம் மிக மேலானதாக இருந்தது. அப்படியிருந்தும் இரண்டாவது தேவாலயம்பற்றி, ஆகாய் தீர்க்கதரிசியின் மூலமாக கர்த்தர்: “முந்தின

ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும்." "சகல ஜாதிகளையும் அசையப் பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன்" (ஆகாய் 2:9,7) என்றார். (15)

முதல் தேவாலயம் நேபுகாத்நேச்சாரால் அழிக்கப்பட்டபின், கிறிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய ஐநூறு ஆண்டுகளுக்கு முன், அது திரும்ப எடுத்துக்கட்டப்பட்டது. ஆயுட்காலம் முழுவதும் அடிமைத்தனத்திலிருந்து திரும்பிவந்த ஜனங்கள் பாழடைந்து கிட்டத்தட்டப் பாலைவனம்போலிருந்த அதை திரும்பக் கட்டினார்கள். இரண்டாவது ஆலயத்தின் அஸ்திவாரம் போடப்பட்டபோது, சாலொமோனின் தேவாலத்தின் மகிமையைக் கண்டிருந்த, அவர்கள் நடுவிலிருந்த வயதுசென்ற முதியவர்கள், அது முதலாம் தேவாலயத்தைவிடத் தரக்குறைவாக இருப்பதைக் கண்டு அழுதனர். "இந்த ஆலயத்தின் முந்தின மகிமையைக் கண்டவர்களில் உங்களுக்குள்ளே மீந்திருக்கிறவர்கள் யார்? இப்பொழுது இது உங்களுக்கு எப்படிக் காண்கிறது? அதற்கு இது உங்கள் பார்வையில் ஒன்றுமில்லாதது போல் காண்கிறதல்லவா" (ஆகாய் 2:3; எஸ்றா 3:12) என்று அந்த ஜனங்களில் உண்டாயிருந்த உணர்ச்சியை ஆகாய் தீர்க்கதரிசி அழுத்தமாக விவரித்தார். அதற்குப்பின், இந்த இரண்டாம் ஆலயத்தின் மகிமை முதலாம் ஆலயத்தின் மகிமையைவிட மேலானதாக இருக்குமென்கிற வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. (16)

ஆனால் இரண்டாம் ஆலயத்தின் கட்டிடச்சிறப்பு முதலாம் ஆலயத்தைவிட மேலானதாக இருக்கவில்லை. மேலும் முதலாம் ஆலயத்திலிருந்த தேவப் பிரசன்னம் இதில் இருக்கவில்லை. அதன் பிரதிஷ்டையைக் குறிக்கும் தெய்வீக வல்லமை எதுவும் அச்சமயம் வெளிக்காட்டப்படவில்லை. புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட ஆசரிப்புக்கூடாரம் நிரம்பும்படி மகிமையின் மேகம் எதுவும் காணப்படவில்லை. அதின் பலிபீடத்தின்மீது படைக்கப்பட்ட பலியை எரிக்க, பரலோகத்திலிருந்து அக்கினி கீழே இறங்கவில்லை. அங்கு கேருபீன்களுக்கு மத்தியிலிருந்த கிருபாசனம் இருக்கவில்லை. அங்கு ஷெக்கினா என்னும் தேவப்பிரசன்னம் இருக்கவில்லை. சாட்சியின் பலகைகளும் அதற்குள் இருக்கவில்லை. யேகோவாவினிடத்தில் விசாரிக்கும் ஆசாரியனுக்கு யேகோவாவின் சித்தம் இன்னதென்று அறிவிக்கும் சத்தமும் அங்கு கேட்கப்படவில்லை. (17)

ஆகாயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட தேவ வாக்குத்தத்தம் நிறைவேறிவிட்டது என்பதைக் காட்டும் வீண் முயற்சியில் நூற்றாண்டு களாக யூதர்கள் ஈடுபட்டிருந்தனர். அதேசமயம், தீர்க்கதரிசியின் வார்த்தையின்

உண்மையான பொருள் என்ன என்பதை அறிய முடியாதபடிக்குப் பெருமையும் நம்பிக்கையின்மையும் அவர்களைக் குருடாக்கி இருந்தன. யேகோவாவின் மகிமைமிக்க மேகத்தினால், இரண்டாவது ஆலயம் சிறப்பிக்கப்படவில்லை. ஆனால் தெய்வத்துவத்தின் பரிபூரணமெல்லாம் தமக்குள் வாசமாய் கொண்டிருப்பவரின் பிரசன்னத்தினால்—மாம்சத்தில் வந்த தேவனால் அது நிரம்பி இருந்தது. நாசரேத்தின் மனிதன் அந்த ஆலயத்தின் பரிசுத்த பிராகாரங்களில் போதித்து சுகமளித்தபோது, சகல ஜனங்களாலும் விரும்பப்பட்டவர் உண்மையில் அந்த ஆலயத்திற்கு வந்திருந்தார். முதலாம் ஆலயத்தின் மகிமையைவிட இந்த ஆலயத்தின் மகிமை கிறிஸ்துவின் பிரசன்னம் ஒன்றினால் மட்டுமே மேலானதாக இருந்தது. ஆனால் பரலோகம் அளித்த ஈவை, இஸ்ரவேல் நிராகரித்து விட்டது. மிகத் தாழ்மையான அந்த ஆசாரியர் அந்த ஆலயத்தின் தங்கவாசலைக் கடந்துசென்ற அந்த நாளிலேயே அதன் மகிமையும் அந்த ஆலயத்தை விட்டு நிரந்தரமாக நீங்கிப்போயிற்று. "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (மத். 23:38) என்ற இரட்சகரின் வார்த்தைகள் ஏற்கனவே நிறைவேறிவிட்டன. (18)

எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்டுப்போகும் என்று கிறிஸ்து முன்னறிவித்தபோது, சீடர்கள் ஆச்சரியமும் பயமும் நிறைந்தவர்களாக, அவரது வார்த்தைகளின் பொருளைப் பூரணமாக அறிந்துகொள்ள விரும்பினார்கள். அந்தக் கட்டிடத்தின் அலங்காரத்தைச் சிறப்பிக்க, செல்வமும் வேலையும் கட்டிடப் பணியின் திறனும் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் செலவிடப்பட்டிருந்தன. அந்த ஆலயம் மிகச் சிறப்பானதாக இருக்கும்படி ஏரோது மன்னன் அரசின் செல்வத்தையும் யூதர்களின் பொக்கிஷங்களையும் தாராளமாகச் செலவுசெய்திருந்தான். உலகப் பேரரசனுங்கூட அதற்காகத் திரளான நன்கொடைகளைச் செலுத்தியிருந்தான். ரோமாபுரியிலிருந்து தருவிக்கப்பட்ட மிகப்பெரிய பளிங்குக் கற்களால் அதன் வடிவின் ஒருபகுதி அமைக்கப்பட்டிருந்தது. "இதோ, இந்தக் கல்லுகள் எப்படிப்பட்டது! பாரும்" (மாற்கு 13:1) என்று அவரது சீடர்கள் கூறி, அவரது கவனத்தை ஈர்த்தனர். இதற்குப் பதிலாக: "இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 24:2) என்று இயேசு சொன்னார். (19, 20)

கிறிஸ்து உலகப்பிரகாரமான மகிமையில் வந்து மனந்திரும்பாத யூதர்களைத் தண்டித்து, ரோமரின் நுகத்தடியை அந்த ஜனத்தின் மீதிருந்து உடைத்தெறிந்து, உலகச் சக்கரவர்த்தியாக இருக்கப்போகும் சம்பவத்தை அவரது சீடர்கள் எருசலேமின் விழுகையுடன் இணைத்துப் பார்த்தனர். கர்த்தர் இரண்டாம் தடவை வரப்போவதாக அவர்களுக்குச்

சொல்லியிருந்தார். எனவே, எருசலேமின்மீது நிகழ இருக்கின்ற நியாயத்தீர்ப்புகள்பற்றி குறிப்பிடப்பட்டபோது, அவர்களது எண்ணங்கள் அவரது வருகையை நோக்கிச் சென்றன. அவர்கள் ஒலிவ மலையின்மீது அவரைச் சூழ்ந்திருந்தபோது, “இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும்” (மத். 24:3) என்றார்கள். (21)

எதிர்காலக் காட்சியானது அந்தச் சீடர்களுக்குக் கிருபையினால் திரையிடப்பட்டு மறைக்கப்பட்டிருந்தது; அவர்களுடைய மீட்பரின் பாடுகளையும் மரணத்தையும் அவர்களுடைய நகரமும் தேவாலயமும் அழியப்போகிறதையும் அந்த வேளையில் அவர்கள் தெளிவாக அறிந்திருந்தார்களானால், பயங் கரங்கள் அவர்களை மேற் கொண்டிருந்திருக்கும். காலத்தின் முடிவிற்கு முன்னிருந்த முக்கிய சம்பவங்களைக் கிறிஸ்து மேலோட்டமாக வரைந்து காட்டினார். அவரது வார்த்தைகள் அப்பொழுது சரியாக அறிந்துகொள்ளப் படவில்லை. ஆனால் அவைகளின் பொருளும் அதில் சொல்லப்பட்டிருந்த போதனைகளும் தேவையானபோது அவருடைய ஜனங்களுக்கு வெளிப் படுத்தப்படவேண்டியதாக இருந்தது. அவர் உரைத்த தீர்க்கதரிசனம் இருவகைப் பொருள் உள்ளதாக இருந்தது. அது எருசலேமின் அழிவை நிழலாட்டமாகக் காட்டிய அதே சமயத்தில், கடைசி நாளில் நிகழ விருக்கும் பயங்கரங்களையும் தீர்க்கதரிசனமாக முன்னறிவித்தது. (22)

மருள விழுந்துபோன இஸ்ரவேலின்மீது வரவிருக்கும் நியாயத் தீர்ப்பைக் குறித்து, குறிப்பாக மேசியாவை நிராகரித்துச் சிலுவையில் அறைவதனால் உண்டாகக்கூடிய தேவ கோபத்தின் பழிவாங்குதலைக் குறித்து, அவரது பேச்சைக் கவனித்திருந்த சீடர்களுக்கு இயேசு அறிவித்தார். பயங்கரமான உச்சக்கட்டத்தை அடையுமுன் சற்றும் தவறாத அடையாளங்கள் நிகழும். பயப்படும் அந்த வேளை சடுதியாவும் விரைவாகவும் வரும் என்று இதைப்பற்றி தமது அடியார்களை இரட்சகர் எச்சரித்தார். “மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்தஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்”–மத். 24:15,16. ரோமர்களின் உருவ வழிபாட்டுமுறைகள் எருசலேமின் மதில்களுக்குச் சற்றுத் தொலைவில், பரிசுத்த பூமியின்மீது அமைக்கப்படும்போது, கிறிஸ்துவின் அடியார்கள் நகரத்தைவிட்டு வெளியே ஓடிப்போவதில் பாதுகாப்பு பெறவேண்டும். எச்சரிப்பின் அடையாளம் காணப்படும்போது, தப்பிச்செல்ல இருப்பவர்கள் தாமதிக்கக்கூடாது. எருசலேமிலும் யூதேயாவெங்கிலும் தப்பிச்செல்லுவதற்காகக் காணப்படும் அடையாளத்திற்கு உடனே கீழ்ப்படியவேண்டும். வீட்டின் மேலிருக்கிறவன்

தனது விலைமதிப்புள்ள பொக்கிஷத்தைக் காப்பதற்கென்று வீட்டிற்குள் செல்லக்கூடாது. வயல்களிலோ அல்லது திராட்சைத்தோட்டங்களிலோ தங்கள் மேலாடைகளைக் கழற்றிவைத்துவிட்டு பகலின் உஷ்ணமான வேளையில் வேலை செய்பவர்கள், தங்கள் மேலாடைகளை எடுப்பதற்குத் திரும்பக்கூடாது. பெரும் அழிவிற்குள்ளாகாதபடிக்கு அவர்கள் விநாடி நேரங்கூடத் தாமதிக்கக்கூடாது. (23)

ஏரோதின் நாட்களில், எருசலேம் அழகுபடுத்தப்பட்டதாக மட்டும் இராமல், கோபுரங்களினாலும் சுவர்களினாலும் கோட்டைகளினாலும் நிர்மாணம் செய்யப்பட்டு, அதனுடைய இயற்கையான பலம் அதிகரிக்கப்பட்டு, வலிமையுடையதாகவும், எதிரிகள் உள்ளே நுழையமுடியாததாகவும் இருந்தது. அதன் அழிவுபற்றி அந்தக் காலத்தில் வெளிப்படையாக யார் முன்னறிவித்தாலும் அவர்களை, நோவாவை பயத்தைக் கொண்டு வருபவன் என்று நோவாவின் காலத்தில் அக்காலத்து மக்கள் எப்படிக் கருதினார்களோ அப்படியே கருதினார்கள். ஆனால் “வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை” (மத்தேயு 24:35) என்று கிறிஸ்து அறிவித்திருக்கிறார். எருசலேமின் பாவத்தினிமித்தம், அதற்கு எதிராக தேவகோபம் உண்டாகும் என்று பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அதன் முரட்டுத்தனம்மிக்க அவநம்பிக்கை அதன் விழுகையை நிச்சயமாக்கியிருந்தது. (24)

“நியாயத்தை அருவருத்து, செம்மையானவைகளையெல்லாம் கோணலாக்கி, சீயோனை இரத்தப்பழியினாலும், எருசலேமை அநியாயத்தினாலும் கட்டுவிக்கிற யாக்கோபு வம்சத்துத் தலைவர்களே, இஸ்ரவேல் வம்சத்து அதிபதிகளே, இதைக் கேளுங்கள். அதின் தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள்; அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள்; அதின் தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறிசொல்லுகிறார்கள்; ஆகிலும் அவர்கள் கர்த்தரை சார்ந்துகொண்டு: கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள்மேல் வராது என்கிறார்கள்” (மீகா 3:9–11) என்று கர்த்தர் மீகா தீர்க்கதரிசியின் மூலமாக அறிவித்திருந்தார். (25)

கள்ளத்தனமும், சுய நீதியுமிக்க எருசலேம்வாசிகளைப்பற்றி, இந்த வார்த்தைகள் உண்மையாக விவரிக்கப்பட்டிருந்தன. நாங்கள் மிகுந்த கண்டிப்புடன் தேவப்பிரமாணங்களை அனுசரிப்பவர்கள் என்று அவர்கள் தங்களைப்பற்றிக் கூறிக்கொண்டு, தேவப்பிரமாணத்தின் கோட்பாடுகள் அனைத்தையும் மீறிக்கொண்டிருந்தனர். கிறிஸ்துவினுடைய பரிசுத்தமும் மாசின்மையும் அவர்களுடைய அக்கிரமங்களை வெளிக்காட்டினதால்,

தங்களுடைய பாவங்களின் பலனாக ஏற்பட்ட துன்பங்களுக்கெல்லாம் கிறிஸ்துதான் காரணம் என்று குற்றஞ்சாட்டி, கிறிஸ்துவை வெறுத்தனர். அவர் பாவமற்றவர் என்று அவர்கள் அறிந்திருந்தபோதிலும், தங்களுடைய ஜனங்களின் பாதுகாப்பிற்கு, அவருடைய மரணம் தேவையானது என்று அறிவித்திருந்தனர். "நாம் இவனை இப்படி விட்டுவிட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள், அப்பொழுது ரோமர் வந்து, நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப்போடுவார்களே என்றார்கள்"– யோவான் 11:48. கிறிஸ்து பலியாக்கப்பட்டால், தாங்கள் மறுபடியும் ஒருமைப் பாடுள்ள பலமிக்க ஜனமாக இருக்கமுடியும் என்று இவ்விதமாக ஆராய்ந்து நிதானித்து, ஜனங்கள் முழுவதும் அழிவதைவிட, ஒருவன் மரிப்பது நல்லது என்று அவர்களுடைய பிரதான ஆசாரியன் சொன்னதற்கு இசைந்தார்கள். (26)

இவ்வாறாக, "சீயோனை இரத்தப்பழியினாலும், எருசலேமை அநியாயத்தினாலும்" யூதத் தலைவர்கள் கட்டினார்கள். இரட்சகர் அவர்களுடைய பாவத்தைக் கண்டித்ததினால், அவரைக் கொலை செய்தபின்னும், அவர்கள் நாங்கள் தேவனுடைய அனுகூலத்தையுடைய அவருடைய சுவிசேஷத்தை நிராகரித்தவர்களின்மீதும், அவரது குமாரனை கொலைசெய்தவர்களின்மீதும் தேவன் காட்டிய நீடியபொறுமை மிக வியப்பானது! கனிகொடாத மரத்தைப்பற்றிய உவமை, யூத ஜனங்களுடன் தேவன் நடந்துகொண்டவிதத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. "இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது" (லூக்கா 13:7) என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்ட போதிலும், தேவ இரக்கம் சிறிதுகாலம் தாமதித்தது. கிறிஸ்துவின் சுபாவத்தையும் அவரது ஊழியத்தையும் குறித்து, இன்னும் அறிவில்லாத அநேக யூதர்கள் இருந்தனர். பெற்றோர்களுக்குக் கிடைத்திருந்த வெளிச்சத்தையும், வாய்ப்புகளையும் பெறாத அவருடைய ஜனங்கள், எங்கள் எதிரியிடமிருந்து அவர் எங்களை விடுவிக்கவேண்டும் என்பது அவர்களுடைய சுயநீதி நிறைந்த எண்ணமாக இருந்தது. "ஆகையால் உங்கள் நிமித்தம் சீயோன் வயல்வெளியைப்போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம், ஆலயத்தின் பர்வதம் காட்டுமேடுகளாய்ப் போம்" (மீகா 3:12) என்று மீகா தீர்க்கதரிசி முன்னுரைத்தார். (27)

எருசலேமின் வீழ்ச்சியைக்குறித்துக் கிறிஸ்து தாமே அறிவித்த நாற்பது வருடங்களுக்குப் பின்னும், அந்த நகரத்தின்மீதும் அதன் ஜனத்தின்மீதும் நிகழ இருந்த நியாயத்தீர்ப்பை அவர் தாமதிக்கச் செய்தார். அநேக பிள்ளைகள் இருந்தனர். கிறிஸ்துவின் பிறப்பிலும் ஜீவியத்திலும் மட்டுமல்லாது, அவரது மரணம் உயிர்த்தெழுதலிலும் தீர்க்கதரிசனம்

எவ்விதமாக நிறைவேறியது என்பதைக் காணும்படி, அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்களுடன் இணைந்தவர்கள் மூலமாகக் கொடுக்கப்பட்ட பிரசங்கங்களின் வழியாக, தேவன் அவர்கள்மீது ஒளிவீசும்படிச் செய்தார். பிள்ளைகள் பெற்றோரின் பாவங்களுக்காகத் தண்டிக்கப்படவில்லை. பெற்றோருக்குக் கொடுக்கப்பட்டிருந்த சகல வெளிச்சத்துடன்கூட, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகப்படியான வெளிச்சத்தையும் நிராகரித்ததின் காரணமாக, பிள்ளைகள் அவர்களுடைய பெற்றோர்களின் பாவங்களுக்குப் பங்காளிகள் ஆகி, தங்களுடைய அக்கிரமங்களின் அளவை நிரப்பினார்கள். (28)

எருசலேமின்மீதான தேவனுடைய நீடியபொறுமை, யூதர்களின் முரட்டுத்தனமான பிடிவாதத்தன்மையை உறுதிப்படுத்தியது. இயேசுவின் சீடர்களின்மீதிருந்த வெறுப்பாலும் மூர்க்கத்தனத்தினாலும் அவர்கள் தங்களது இரக்கத்தின் இறுதி அழைப்பை நிராகரித்தனர். அப்பொழுது தேவன் அவர்களின்மீதிருந்த பாதுகாப்பைப் பின்னிழுத்து, சாத்தான்மீதும் அவனது தூதர்களின்மீதும் தாம் வைத்திருந்த தடைசெய்யும் வல்லமையை நீக்கிவிட்டார். அதினால், அந்த ஜனங்கள் தாங்கள் தெரிந்துகொண்ட, அவர்களது தலைவனான சாத்தானின் கட்டுப்பாட்டிற்குள் விட்டுவிடப்பட்டனர். தீய உணர்வுகளைக் கட்டுப்படுத்துகிற கிறிஸ்துவின் கிருபையை அவர் களுடைய பிள்ளைகள் நிராகரித்துவிட்டதினால், அவர்களிடத்தில் இருந்த அவ்வுணர்வுகள் இப்பொழுது வெற்றியடைந்தன. மிகப் பயங்கரமான— ஆத்துமாவின் மிகக் கீழ்த்தரமான இச்சைகளை சாத்தான் அவர்களில் அனுப்பினான். உணர்ச்சிகளினாலும் குருட்டுத்தனமான வெறிகளினாலும் ஆட்கொள்ளப்பட்டு, காரண காரியங்களை அறியவும் சிந்திக்கவும் மனிதர்கள் தவறினர். கொடுமைசெய்வதில் அவர்கள் சாத்தானைப் போலாகி விட்டிருந்தனர். சந்தேகம், விரோதம், சண்டைகள், கலகம், கொலை ஆகியவைகள் குடும்பங்களிலும், ஜனங்களிடத்தில் மேலானவர்கள்முதல் கீழானவர்கள்வரை அனைவரிடத்திலுமிருந்தது. ஒரு இடத்திலும் பாதுகாப்பு இருக்கவில்லை. நண்பர்களும் உறவினர்களும் ஒருவரையொருவர் வஞ்சித்தனர். பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளையும், பிள்ளைகள் தங்கள் பெற்றோரையும் கொன்றனர். அதிபதிகள் தங்களை ஆளும் வல்லமையை இழந்தவர்களாக இருந்தனர். கட்டுப்பாடற்ற இச்சைகளின் வெறியினால், அவர்கள் பயங்கரவாதிகளாயினர். குற்றமற்றவரான களங்கமற்ற தேவ குமாரனைக் குற்றவாளியாக்குவதற்காக யூதர்கள் பொய்ச்சாட்சிகளையும் அங்கீகரித்திருந்தனர். இப்போது பொய்க்குற்றச்சாட்டுகள் அவர்களுடைய சொந்த வாழ்க்கையை நிலையற்றதாக்கிவிட்டது. “இஸ்ரவேலின் பரிசுத்தரை எங்கள் முன்பாக இராமல் ஓயப்பண்ணுங்கள்” (ஏசாயா 30:11) என்று அவர்கள் தங்களுடைய செயல்களின்மூலமாக காலங்காலமாகவே

சொல்லிக்கொண்டிருந்தனர். இப்பொழுது அவர்களுடைய விருப்பம் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுவிட்டது. அதற்குமேல் தேவபயம் அவர்களுக்கு இடையூறு செய்யவில்லை. அந்த ஜனத்தின் தலைமையில் சாத்தான் இருந்தான். மிகமேலான சமூக, மார்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளெல்லாரும் அவனால் வாரிக்கொள்ளப்பட்டனர். (29)

ஒருவரை ஒருவர் எதிர்க்கும் பிரிவுகளின் தலைவர்கள், துர்ப்பாக்கியமாகப் பலியாக்கப்பட்டவர்களைக் கொள்ளையடிக்கவும், சித்திர வதை செய்யவும் ஒன்று சேர்ந்தவர்கள், மறுபடியும் ஒருவர்மீது ஒருவர் வீழ்ந்து, இரக்கமின்றி வெட்டிக் கொலைசெய்தனர். பயங்கரமான அவர்களது கோபாவேசத்தை ஆலயத்தின்மீதுள்ள பக்தியினாலுங்கூடக் கட்டுப் படுத்தமுடியவில்லை. ஆராதனைசெய்துகொண்டிருந்தவர்கள், பலிபீடத்தின் முன் அடித்து வீழ்த்தப்பட்டனர். கொலையானவர்களின் உடல்களினால் ஆலயம் தீட்டுப்பட்டிருந்தது. அப்படியிருந்தும், இந்த நரகத்தன்மைமிகுந்த செயல்களைச் செய்யத்தூண்டியிருந்தவர்கள், அவர்களது குருட்டுத்தனமான தேவதூஷணமிக்க இறுமாப்பினால், எருசலேம் தேவனுடைய நகரமாக இருப்பதினால், அது அழிக்கப்படும் என்னும் பயம் தங்களுக்கில்லை என்று ஜனங்கள்முன் அறிவித்திருந்தனர். பெரும் படைவரிசைகளான ரோம நாட்டுப் படையினர் அந்த நகரத்தை முற்றுகையிட்டிருந்த அந்த நேரத்தில், (யூதத் தலைவர்கள்) தங்களுடைய வல்லமையை மேலும் உறுதியாக ஸ்திரப்படுத்திக்கொள்ளுவதற்காக கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு லஞ்சம்கொடுத்து, தேவனிடத்திலிருந்து அவர்களுக்கு விடுதலை வருவதற்காக அவர்கள் காத்திருக்கவேண்டும் என்று அறிவிக்கும்படிச் செய்திருந்தனர். அவர்களுடைய எதிரிகளைத் தோற்கடிக்க உன்னதமானவர் குறுக்கிடுவார் என்று திரளானவர்கள் கடைசிவரை நம்பியிருந்தனர். ஆனால் இஸ்ரவேல் அதற்குக் கொடுக்கப்பட்டிருந்த தெய்வீகப் பாதுகாப்பை உதைத்துத் தள்ளியிருந்தது. எனவே, இப்போது அதற்கு பாதுகாப்பு இல்லை. எதிரிகளின் சேனைகள் அவர்களது அரண்களைத் தகர்த்து போர்செய்யக்கூடியவர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், உட்கட்சிப் பிரிவினைகளால் ஒருவராலொருவர் கொலைசெய்யப்பட்ட அவர்களது பிள்ளைகளின் இரத்தத்தால் அவர்களது தெருக்கள் கருஞ்சிவப்பு நிறமாகிக்கொண்டிருந்தது. அந்தோ, பரிதாபத்திற்குரிய எருசலேமே! (30)

எருசலேமின் அழிவைப்பற்றிக் கிறிஸ்துவினால் முன்னறிவிக்கப்பட்டவைகள் அனைத்தும் எழுத்தின்படி நிறைவேறின. “நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்” (மத். 7:2) என்ற அவரது எச்சரிப்பில் இருந்த உண்மையை யூதர்கள் அனுபவித்தனர். (31)

நிகழ இருக்கும் பாழ்க்கடிப்பு, வீழ்ச்சி ஆகியவைகளை முன்னறி விக்கும் துன்பகரமான சம்பவங்களுக்காக, அடையாளங்களும் அதிசயங் களும் தோன்றின. நடுஇரவு நேரத்தில் செயற்கையான ஒரு ஒளி, ஆலயத்தின்மீதும் பலிபீடத்தின்மீதும் பிரகாசித்தது. சூரியன் மறையும் வேளையில், மேகங்களின்மீது இரதங்களும் போர் வீரர்களும் யுத்தம் செய்வதற்காக அணிதிரள்வது போன்ற காட்சிகள் சித்திரங்களாகத் தெரிந்தன. இரவுநேரங்களில், பரிசுத்தஸ்தலத்தில் ஊழியத்தில் ஈடுபட்டிருந்த ஆசாரியர்கள் இனம்புரியாத சத்தங்களினால் பயந்து, கலங்கினார்கள். நிலம் நடுங்கிற்று. நாம் இங்கிருந்து வெளியேறிச் செல்லுவோமாக என்னும் திரள் கூட்டமானவர்களின் அழுகுரல்கள் கேட்கப்பட்டன. பெரிய கிழக்கு வாசல் கதவு—மனிதர்கள் கூட்டமாகச் சேர்ந்து நகர்த்தினாலுங்கூட சாத்தமுடியாத அளவிற்கு மிகவும் கனமானதாக இருந்த, கல்தளத்திற்கடியில் மிக ஆழமாகப் புதைக்கப்பட்டிருந்த தடித்த இரும்புத் தூண்களுடன் பிணைக்கப்பட்டிருந்த அந்த வாசல் கதவு, காணக்கூடிய ஒருவரும் இல்லாமல் நள்ளிரவில் திறவுண்டது! —Milman*, The History of the Jews,* book 13. (32)

ஒரு மனிதன் எருசலேம் நகரின் தெருக்களில், மேலும் கீழுமாக, **ஏழு வருடங்கள்** தொடர்ந்து நடந்து, அந்த நகரத்திற்கு வர இருக்கும் ஆபத்துக்களை அறிவித்திருந்தான். அவன் பகலிலும் இரவிலும் கிழக்குத் திசையிலிருந்து ஒரு சத்தம், மேற்குத் திசையிலிருந்து ஒரு சத்தம், நான்கு திசைகளிலிருந்தும் எருசலேமுக்கும் ஆலயத்திற்கும் எதிரான ஒரு சத்தம், மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் எதிரான ஒரு சத்தம், சகல ஜனங்களுக்கும் எதிரான ஒரு சத்தம், என்ற வார்த்தைகளை ஒரு அவலமான ஒப்பாரியைப் போல சோகமாக அலறிக்கொண்டிருந்தான்.—*Ibid*. அந்த அந்நியன் சிறையாக்கப்பட்டு, கசையால் அடிக்கப்பட்டான். ஆனால் அவனது உதடுகளில் இருந்து எவ்விதமான குற்றச்சாட்டும் உண்டாகவில்லை. அவமதிப்புக்கும் நிந்தனைக்கும் ஆளான போதும், எருசலேமிற்கு ஐயோ! அதன் குடிகளுக்கு ஐயோ! என்று மட்டும் பதில் கூறினான். அவன் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே, கொலைசெய்யப்படும் நாள்மட்டும் அவன் கூறிவந்த எச்சரிப்புக்கள் ஓயவில்லை. (33)

எருசலேமின் அழிவின்போது, ஒரு கிறிஸ்தவன்கூட அழியவில்லை! "எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதன் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள். அப்பொழுது யூதேயாவி லிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமில் இருக்கிறவர்கள் வெளியே புறப்படவும் வேண்டும்" (லூக்கா 21:20,21) என்று கிறிஸ்து அவரது சீடர்களை எச்சரித்திருந்தார். அவரது வார்த்தைகளை நம்பியிருந்த அனைவரும் வாக்குப்பண்ணப்பட்டிருந்த அடையாளத்தைக் கவனித்திருந்தனர்.

செஸ்டியஸ் என்னும் ரோம நாட்டுத் தளபதியின் தலைமையில் ரோம ராணுவவீரர்கள் எருசலேமைச் சூழ்ந்துகொண்டபின், உடனடியான ஒரு தாக்குதலுக்குச் சாதகமான அனைத்தும் அவர்களுக்கு இருந்தது. முற்றுகைக்கு உள்ளானவர்கள் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கையற்ற நிலையில், எதிர்ப்பு எதுவும் இல்லாமல் சரணடையக்கூடிய நிலைமையில் இருந்தபோது, சற்றும் எதிர்பாராத விதத்தில், வெளிப்படையான எந்த காரணமுமின்றி, அந்த ரோம நாட்டுத் தளபதி தனது இராணுவத்தைப் பின்வாங்கச் செய்து அந்த முற்றுகையை விட்டுவிட்டுச் சென்றனர். ஆனால் தேவனுடைய மக்களின் நன்மைக்காக, தேவனுடைய இரக்கமிக்க ஏற்பாடு, நிகழ்ச்சிகளை இயக்கியிருந்தது. காத்துக்கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு முன்குறிக்கப்பட்டிருந்த அடையாளம் கொடுக்கப்பட்டு, இரட்சகரின் எச்சரிப் புக்குக் கீழ்ப்படிய விரும்பின அனைவருக்கும் இப்பொழுது ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. யூதர்களானாலும் ரோமர்களானாலும் கிறிஸ்தவர்கள் ஓடிப்போவதற்கு இடையூறு செய்யாதபடி நிகழ்ச்சிகள் ஆட்சிசெய்யப்பட்டன. செஸ்டியஸ் திரும்பிச்சென்றபோது, முற்றுகையிடப்பட்டிருந்த யூதர்கள் வெளியேவந்து, போர்செய்யாமல் சென்றுகொண்டிருந்த அவனது சேனையைப் பின்தொடர்ந்தனர். இவ்விதமாக, இந்த இரு கூட்டத்தினரும் ஈடுபட்டிருந்தபோது, அந்த நகரத்தைவிட்டு வெளியேறக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. அந்த நேரத்தில் அவர்களைக் குறுக்கிட முயன்றிருந்திருக்கக்கூடிய எதிரிகளும் அந்த நாட்டில் இல்லாமலிருந்தனர். அச்சமயத்தில், கூடாரப்பண்டிகையை முன்னிட்டு யூதர்கள் எருசலேமில் கூடியிருந்தனர். அதனால் அந்த தேசம் முழுவதிலுமிருந்த கிறிஸ்தவர்கள் தடைசெய்யப்படாதவர்களாகத் தப்பிச்செல்லமுடிந்தது. யோர்தானுக்கு அப்பாலுள்ள, பெரேயா தேசத்தில் இருந்த பெல்லா என்னும் நகருக்கு அவர்கள் ஓடிப்போனார்கள். (34)

செஸ்டியசின் சேனையைப் பின்தொடர்ந்த யூதசேனைகள், ரோமர்களின் சேனையை அழித்துவிடக்கூடிய விதத்தில், அவர்களது இராணுவத்தின் பின்பகுதியின்மீது மிகப் பயங்கரமாகப் பாய்ந்தனர். ரோமர்களின் சேனை மிகுந்த கஷ்டத்துடன் பின்திரும்பிச் செல்லுவதில் வெற்றி அடைந்தது. ஏறத்தாழ எவ்விதமான இழப்புமின்றி தங்களுக்குக் கிடைத்த கொள்ளைப் பொருட்களுடனும் வெற்றியுடனும் யூதர்கள் எருசலேமிற்குத் திரும்பினர். என்றபோதிலும், வெளிப்படையாகத் தோன்றிய இந்த வெற்றி, அவர்களுக்குத் தீங்கைத்தான் கொண்டுவந்தது. ரோமர்களின் தாக்குதலைத் தடுக்கவேண்டுமென்ற பிடிவாதமான ஆவியை அவர்களில் தூண்டிவிட்ட அது, விழுந்துபோன அந்த நகரத்தின்மீது, சொல்லிமுடியாத ஆபத்தை விரைவாகக் கொண்டுவந்தது. (35)

எருசலேமின் மீதான முற்றுகையை ரோமநாட்டுத் தளபதி டைட்டஸ் திரும்பவும் தொடங்கினபோது, அதன்மீது உண்டான ஆபத்துக்கள் மிகப் பயங்கரமானவையாக இருந்தன. பஸ்கா பண்டிகையின் சமயத்தில், இலட்சக்கணக்கான யூதர்கள் அந்த நகரத்திற்குள் கூடியிருந்தபோது, அந்த நகரம் முற்றுகையிடப்பட்டது. அங்கு உணவுப் பொருட்கள் ஏராளமாக இருந்திருந்தது. அவைகளைக் கவனமாகச் செலவுசெய்திருந்தால், அதுவே அவர்களுக்குப் பல வருடங்களுக்குப் போதுமானதாக இருந்திருக்கும். ஆனால், அங்கிருந்த ஒருவரை ஒருவர் எதிர்க்கும் பிரிவினைக்கோஷ்டிகளின் பொறாமையினாலும், பழிவாங்குதலினாலும் அந்த உணவுப்பொருட்கள் அதற்கு முன்னதாகவே அழிக்கப்பட்டுவிட்டதினால், இப்பொழுது பட்டினியின் பயங்கரங்கள் அனைத்தும் அனுபவத்திற்கு வந்தன. ஒரு படி கோதுமை, ஒரு தாலந்துக்கு விற்கப்பட்டது. மனிதர்கள் அவர்களது அரைக் கச்சைகளின்(பெல்ட்) தோலையும், காலணிகளின் தோலையும், ஆயுத உறைகளின் தோலையும் கடித்துத் தின்னுமளவிற்கு பசியின் கொடுமை அத்தனை பயங்கரமாயிருந்தது! நகரத்தின் சுவர்களுக்கு வெளியில் வளர்ந்திருந்த காட்டுச்செடிகளை உணவிற்காகப் பிடுங்கிக்கொண்டுவர மக்கள் இரவு நேரங்களில் திருட்டுத்தனமாக பெரிய எண்ணிக்கையில் கோட்டைச்சுவரைக் கடந்துசென்றனர். இதில் அநேகர் பிடிபட்டு, கொடுமையான சித்திரவதைகளுக்கும் மரணத்திற்கும் உள்ளாகியிருந்தபோதிலும், இந்த நிலைமை தொடர்ந்தது. இவ்வளவு பெரிய ஆபத்துக்கிடையில், அவர்கள் சேகரித்து வந்த பொருட்கள், அடிக்கடி அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப் பட்டன. மறைத்து வைத்திருந்த கொஞ்ச உணவை அவர்களிட மிருந்து பிடுங்கிக்கொள்ள, அதிகாரத்திலிருந்தவர்கள் கொடூரமான—மனிதத்தன்மை யற்ற, சித்திரவதைகளைச் செய்தனர். இப்படிப்பட்ட கொடுமைமிக்க செயல்கள் நல்ல முறையில் உணவை உண்டிருந்தவர்களாலேயே அடிக்கடி நடத்தப்பட்டிருந்தது. எதிர்காலத்திற்காக உணவுப் பொருட்களைச் சேகரித்து வைப்பதற்காகவும் அவர்கள் இப்படிச்செய்தனர். (36)

பஞ்சத்தினாலும், கொள்ளைநோயினாலும் ஆயிரக்கணக் கானவர்கள் இறந்தார்கள். இயல்பான மனிதநேயம் அழிந்து விட்டதுபோல் காணப்பட்டது. கணவர்கள் மனைவிகளையும், மனைவிகள் தங்கள் கணவன்களையும் கொள்ளையிட்டனர். வயதுசென்ற பெற்றோர்களின் வாய்களிலிருந்து, அவர் களது பிள்ளைகள் உணவைப் பிடுங்கிச்செல்லுவது காணக்கூடியதாக இருந்தது. “ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ?” (ஏசாயா 49:15) என்னும் தீர்க்கதரிசியின் கேள்விக்கு, விழுந்துபோன அந்த நகரின் சுவருக்குள்ளிருந்து “இரக்கமுள்ள ஸ்திரீகளின் கைகள் தங்கள் பிள்ளைகளைச் சமைத்தன, என் ஜனமாகிய

குமாரத்தியின் அழிவில் அவைகள் அவர்களுக்கு ஆகாரமாயின" (புலம்பல் 4:10) என்று பதில் கிடைத்தது. பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு, "உன்னிடத்தில் சுகசெல்வத்தினாலும் செருக்கினாலும் தன் உள்ளங்காலைத் தரையின்மேல் வைக்க அஞ்சின செருக்கும் சுகசெல்வமுமுள்ள ஸ்திரீ தன் கால்களின் நடுவே புறப்பட்ட தன் நஞ்சுக்கொடியினிமித்தமும், தான் பெற்ற பிள்ளைகளினிமித்தமும், தன் மார்பில் இருக்கிற புருஷன்மேலும் தன் குமாரன்மேலும் தன் குமாரத்தியின்மேலும் வன்கண்ணாயிருப்பாள்; உன் சத்துருக்கள் உன் வாசல்களில் உன்னை முற்றிகைப்போட்டு நெருக்குங் காலத்தில், சகலமும் குறைவுபடுவதினால், அவைகளை இரகசியமாய்த் தின்னுவான்" (உபாகமம் 28:56,57) என்று தீர்க்கதரிசனமாகக் கொடுக்கப்பட்ட எச்சரிப்பு மறுபடியும் நிறைவேறியது. (37)

ரோம நாட்டு சேனைத்தலைவர்கள், யூதர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணி, அதினால் அவர்களைச் சரணடையச்செய்யலாம் என எண்ணினார்கள். சிறைப்பிடிக்கப்பட்ட கைதிகளில் எதிர்ப்புக் காட்டியவர்கள் சவுக்கால் அடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, அந்த நகரச்சுவரின் முன்பாகச் சிலுவைகளில் அறையப்பட்டனர். இந்தவிதமாக, நாள்தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் சாகடிக்கப்பட்டனர்; இத்தகைய பயங்கரமான செயல்கள், யோசபாத்தின் பள்ளத்தாக்கு, கல்வாரி ஆகிய இடங்களில் சிலுவைகளுக்கிடையில் கடந்துசெல்ல இடமில்லாமல் போகுமட்டும் தொடர்ந்தது. "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளை கள்மேலும் இருப்பதாக" (மத்தேயு 27:25) என்று பிலாத்துவின் நியாயாசனத் திற்குமுன் கூறப்பட்ட பயங்கரமான வஞ்சம்தீர்க்கும் சொல்லாகிய சாபத்தின் பலன் அவர்களைப் பயங்கரமாகச் சந்தித்தது. (38)

பயங்கரமான அந்தக் காட்சிக்கு ஒரு முடிவைக்கொண்டு வரவும், அதின்மூலமாக எருசலேமை அதன் முற்றிலுமான அழிவிலிருந்து காக்கவும், டைட்டஸ் மனப்பூர்வமான விருப்பமுள்ளவனாக இருந்தான். பள்ளத்தாக்கு கள் எங்கும் இறந்தவர்களின் உடல்கள் குவியல்களாக இருந்ததை அவன் பார்த்தபோது, திகைத்துப்போனான். வசியம் செய்யப்பட்ட ஒருவனைப்போல, அவன் ஒலிவ மலையின் உச்சியில் நின்று, மேன்மையான அந்த ஆலயத்தைப் பார்த்து, அதின் ஒரு கல் கூடத் தொடப்படலாகாது என்று கட்டளையிட்டான். அந்த பலம் மிக்க இடத்தைக் கைப்பற்றிக்கொள்ள முயலுமுன், பரிசுத்தமான அந்த இடத்தை இரத்தத்தால் தீட்டுப்படுத்தும்படி தன்னை நிர்ப்பந்திக்க வேண்டாம் என்ற தனது ஆர்வமிக்க வேண்டுகோளை, யூதத் தலைவர்களுக்கு விடுத்தான். அவர்கள் வெளியே வந்து, வேறு எந்த இடத்திலிருந்தாவது போர்செய்தால், எந்த ஒரு ரோம நாட்டு வீரனும் அந்த ஆலயத்தின்

பக்திமிக்க தன்மையை மீறமாட்டான் என்றான். அவர்களையும் அவர்களது நகரத்தையும் அவர்களது தொழுகையின் இடத்தையும் காப்பாற்றுவதற்காக அவர்கள் சரணடையவேண்டும் என்று ஜோசிபஸ் என்பவனும் (சரித்திர ஆசிரியன்) மிகமேலான பேச்சுத்திறனுடன், அவர்களைக் கெஞ்சி மன்றாடி னான். ஆனால் கசப்பான சாபங்கள் அவனது வார்த்தைகளுக்குப் பதிலாகக் கிடைத்தன. அவர்களது இறுதி மத்தியஸ்தனாக இருந்த அவன் அவர்களுக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருந்தபோது, கூரிய ஆயுதங்கள் அவன்மீது வீசி எறியப்பட்டன. தேவகுமாரனுடைய வேண்டுகோள்களை யூதர்கள் நிராகரித்திருந்தனர். சிநேகபாவமிக்க ஆட்சேபணையும் கெஞ்சுதலும் இப்பொழுது கடைசிவரை எதிர்த்து நிற்க அவர்களை நடத்தியது, அந்த ஆலயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற டைட்டசின் முயற்சி வீணானதாக இருந்தது. அவனைவிடப் பெரியவரான ஒருவர்: "ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடி இடிக்கப்பட்டுப்போகும்" என்று அறிவித்திருந்தார்! (கி.பி. 70–ல் இந்த நிகழ்ச்சியானது தீர்க்கதரிசனத்தின்படியே நிகழ்ந்தேறியது). (39)

யூதத் தலைவர்களின் குருட்டுத்தனமான பிடிவாதமும் முற்றுகை இடப்பட்டிருந்த நகருக்குள் நிகழ்ந்திருந்த அதிக வெறுப்புமிக்க குற்றங்களும், ரோமர்களின் அச்சமூட்டக்கூடிய கோபத்தையே தூண்டிவிட்டன. எனவே, அந்த ஆலயத்தைப் பலாத்காரத்தினால் கைப்பற்ற டைட்டஸ் இறுதியாக முடிவுசெய்தான். அப்படியிருந்த போதிலும், கூடுமானால் அது அழிவிலிருந்து காப்பாற்றப்படவேண்டும் என்று தீர்மானித்தான். ஆனால், அவனது கட்டளைகள் கருத்தில் கொள்ளப்படாமற்போயின. பின்பு, இரவு நேரத்தில் அவன் தனது கூடாரத்திற்குச் சென்றபின், முற்றுகையிடப்பட்ட ஆலயத்திலிருந்த யூதர்கள் வெளியிலிருந்த போர்வீரர்களைத் தாக்கினார்கள். இந்த போராட்டத்தின்போது, ஒரு வீரன் அந்த ஆலயத்தின் நுழைவு மண்டபத்தின் திறந்தவெளியின் வழியாக ஒரு தீப்பந்தத்தை வீசியெறிந்தான் உடனே கேதுரு மரப்பலகையால் மூடப்பட்டிருந்த அதன் அறை தீப்பற்றி எரிந்தது. டைட்டஸ் தனது சேனையின் துணைத் தலைவர்களுடன் அந்த இடத்திற்கு விரைந்து, அந்தத் தீயை அணைக்கும்படி இராணுவ வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அவனது வார்த்தைகள் செவிமடுக்கப்படாமல் போயிற்று. இராணுவ வீரர்கள் அவர்களது கோபாவேசத்தில் எரியும் தீப்பந்தங்களை ஆலயத்தைச் சேர்ந்திருந்த அறைகளிலும் வீசியெறிந்து, அங்கு அடைக்கலமாயிருந்த ஏராளமானவர்களை அவர்களது பட்டயத்தினால் கொன்றுகுவித்தனர். ஆலயப்படிக்கட்டுகளின்வழியாக இரத்தம் தண்ணீரைப்போல பெருக்கெடுத்து ஓடியது. ஆயிரம் ஆயிரங்களான யூதர்கள் அழிந் தனர். போரின் சத்தத்திற்குமேலாக "இக்கபோத்" (மகிமை நீங்கிப் போய்விட்டது) என்னும் உரத்த சத்தங்கள் கேட்கப்பட்டன. (40)

இராணுவ வீரர்களின் கோபாவேசத்தைத் தடுக்கமுடியவில்லை என்பதை டைட்டஸ் கண்டான். அவன் தனது உடன் அதிகாரிகளுடன் அந்தப் பரிசுத்த மாளிகையின் உட்பகுதியைச் சுற்றிக் கவனித்தான். அதன் அழகிய தோற்றமும் பிரகாசமும் அவனை ஆச்சரியத்தால் நிரப்பியது. அக்கினி பரிசுத்த ஸ்தலத்திற்குள் இன்னும் பரவாமல் இருந்ததினால், அதைக் காக்கும் கடைசி முயற்சியில் அவன் ஈடுபட்டு, பாய்ந்து முன்சென்று, அந்தப் பெருந்தீயின் முன்னேற்றத்தைத் தடைசெய்யும்படி வீரர்களை எச்சரித்தான். லிபராலிஸ் எனும் நூற்றுக்கு அதிபதி, கீழ்ப்படிந்து செயல்படும்படி தனது சேவகர்களை வற்புறுத்தினான். ஆனால் யூதர்களின்மீதிருந்த பகையுணர்வு, போரின் பயங்கரமான அமளி, கொள்ளைப் பொருள்களின் மீதிருந்த தீராத ஆசை ஆகியவைகள், பேரரசனின்மீதிருந்த மதிப்பையுங்கூட விட்டுவிடச்செய்திருந்தன! அக்கினித் தழலின் ஒளியில் தங்களைச் சுற்றிலும் காணப்படும் அனைத்தும் பொன்னாக ஜொலிப்பதைப் போர்வீரர்கள் கண்டு, கணக்கில் அடங்காத பொக்கிஷங்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக யூகித்துக்கொண்டனர். ஒரு வீரன் தான் என்ன செய்கிறோம் என்று அறியாமலேயே தனது தீ பந்தத்தை கதவின் கீல்களுக்கிடையில் நுழைக்கவே, வினாடி நேரத்தில் அந்தக் கட்டிடம் முழுவதும் தீக்கிரையாயிற்று. கண்தெரியாமல் போகச்செய்யும் புகையினாலும் அக்கினியினாலும் வீரர்கள் பின்வாங்கிச்செல்ல நேரவே, மேன்மைமிக்க அந்த மாளிகை அதன் முடிவைக்காண விட்டுவிடப்பபட்டது! (41)

ரோமர்களின் பார்வைக்கே அது வேதனைதரும் திடுக்கிடக் கூடிய காட்சியாக இருந்தபோது, யூதர்களுக்கு எவ்விதமாக இருந்திருக்கும்? அந்த நகரத்தின் தலைமையிடமாக இருந்த அந்தக் குன்று, ஒரு எரிமலையைப்போல எரிந்தது. பயங்கரமான ஓசையுடன் கட்டிடங்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் சரிந்து வீழ்ந்தன. கேதுரு மர மச்சுப்பாவிய கூரைகள் நெருப்புத் தகடுகளாயின. உயர்ந்தெழும்பி நின்றிருந்த கோபுரங்கள், சிவப்புநிற ஒளியுடன் நெருப்புத் தூண்களைப் போலாயின. வாசற்கோபுரங்களில் இருந்து பெரும் நெருப்பும், பெரும் புகையும் எழும்பின. இந்தப்பெரும் நெருப்பினால், பக்கத்துக் குன்றுகளும் வெளிச்சத்தால் நிறைந்தது. கருமையடைந்த பெரும் மனிதக்கூட்டத்தினர் அழிவு நெருங்கிவருவதைப் பயங்கரமான திகிலுடன் கவனித்துக்கொண்டிருந்தனர். நகரத்தின் மேல்பகுதியின் சுவர்களும், உயரமான இடங்களும், வெளிரிய முகங்களாலும் நம்பிக்கையற்ற வேதனையால் நிறைந்த முகங்களாலும் நிரம்பியிருந்தன. மற்றவர்கள் ஒன்றும் செய்யமுடியாத கோபத்தால் முகத்தைச் சுளித்துக்கொண்டிருந்தனர். அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்த ரோமவீரர்களின் அமளிகளும், அக்கினி ஜுவாலையால் அழியும் கலகக்காரர்களின் கூச்சல்களும்,

சீறி எழும் நெருப்புச் சுவாலையின் சீற்றத்துடனும், கீழே விழும் பெரும் உத்தரங்களின் இடி முழக்கங்களுடனும் கலந்தன. நகரின் மேல்பகுதியில் இருந்த மக்களின் வீறிடும் அலறல்களும், மார்பில் அடித்துக்கொள்ளும் கதறல்களும், மலைகளிலும் அதன் சுவரெங்கிலும் எதிரொலித்தது. பசியினாலும் பஞ்சத்தினாலும் செத்துக்கொண்டிருந்த மனிதர்கள், தங்க ளுடைய மனத்துயரம், பாழ்க்கடிப்பு ஆகியவைகளை வெளிக்காட்டி, அலறு வதற்கு தங்களிடம் மீதமாக இருந்த பலத்துடன் ஒன்று திரண்டனர். (42)

நகரின் உட்புறத்தில் நிகழ்ந்த படுகொலைகள் வெளியில் காணப்பட்டதைவிட, அதிகப் பயங்கரமானதாக இருந்தது. ஆண்களும், பெண்களும், முதியோரும், இளைஞரும், கலகக்காரர்களும், ஆசாரியர்களும், சண்டையிட்டவர்களும், இரக்கம் காட்டும்படி மன்றாடினவர்களும் வேற்றுமை யின்றி கோடரிகளால் வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை கொலைசெய்தவர்களின் எண்ணிக்கை யைவிட அதிகமாக இருந்தது. படுகொலைசெய்யச் சென்ற இராணுவத்தினர், தங்களது வேலையைச் செய்வதற்கு, பிணக்குவியல்களின்மீதுதான் ஏறிச் செல்லவேண்டியதிருந்தது. —Milman, *The History of the Jews,* book 16. (43)

அந்த ஆலயத்தின் அழிவிற்குப்பின், விரைவில் அந்த நகரம் முழுவதும் ரோமர்களின் கரங்களுக்குள் வீழ்ந்தது. உள்ளே நுழைய முடியாதவைகளாக இருந்த தங்களுடைய கோபுரங்களை, யூதத் தலைவர்கள் கைவிட்டுவிட்டு தனிமையாக நிற்பதை டைட்டஸ் கண்டான். அவன் வியப்புடன் அவர்களைப் பார்த்து: "தேவன் அவர்களைத் தனது கரங்களுக்குள் கொடுத்துவிட்டார்" என்று அறிவித்தான். ஏனெனில் எப்படிப்பட்ட சக்திவாய்ந்த இயந்திரத்தினாலும் கூட பிரம்மாண்டமான அந்தக் கோட்டை கொத்தளங்கள் மேற்கொள்ளப்பட முடியாததாக இருந்தது; அந்த நகரமும், ஆலயமும் அவைகளின் அஸ்திவாரம்வரை எரிந்துபோயின; பரிசுத்தமான அந்த வீடு (ஆலயம்) நின்றிருந்த நிலம், ஒரு வயலைப்போல உழப்பட்டது. "யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் நாட்களில் மொரேசா ஊரானாகிய மீகா தீர்க்கதரிசனஞ்சொல்லி, யூதாவின் சகல ஜனங்களையும் பார்த்து: சீயோன் வயல்வெளியாக உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம்; இந்த ஆலயத்தின் பர்வதம் காட்டிலுள்ள மேடுகளாய்ப்போம் என்று சேனைகளின் கர்த்தர் உரைத்தார் என்று சொன்னான்"–எரேமியா 26:18. முற்றிகைக்குப்பின் நிகழ்ந்த படுகொலையில் இலட்சக்கணக்கான மக்கள் அழிந்தனர். உயிருடன் இருந்தவர்கள் வெற்றிபெற்றவர்களின் பரிசுப்பொருட்களாக ரோம் நகருக்கு இழுத்துச்செல்லப்பட்டு, அடிமைகளாக விற்கப்பட்டனர். ரோம் நகரின் விளையாட்டு அரங்கங்களில் காட்டுமிருகங்களுக்கு

இரையாக வீசி எறியப்பட்டனர். அல்லது உலகம் முழுவதிலும் வீடில்லாமல் அலைபவர்களாகச் சிதறடிக்கப்பட்டனர். (44)

யூதர்கள் அவர்களைக் கட்டும் விலங்குகளை அவர்களாகவே வார்த்திருந்தனர் பழிவாங்குதலின் பாத்திரத்தை அவர்கள் தாங்களாகவே நிறைத்திருந்தனர். ஒரு ஜாதியாக இருந்த அவர்களின் மீது வந்த முழுமையான அழிவு, சிதறடிப்பின்போது பின்தொடர்ந்த ஆபத்துகள் ஆகியவை, அவர்களது சொந்தக் கரங்களினால் விதைத்ததின் அறுவடையைச் செய்துகொண்டிருந்தன. "இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக்கொண்டாய்; ... நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய்"– ஓசியா 13:9; 14:1. தேவனுடைய நேரடியான கட்டளையினால் தான் அவர்களுக்குத் தண்டனை வந்தது என்று அவர்களது துன்பங்களால் அடிக்கடி எடுத்துக்காட்டப்படுகின்றன. பெரும் வஞ்சகனாகிய சாத்தான் இவ்விதமாகத்தான் அவனது சொந்த வேலையை மறைக்க வகைதேடுகிறான். தெய்வீக அன்பையும் இரக்கத்தையும் முரட்டுத்தனமான பிடிவாதத்துடன் நிராகரித்ததினால், தேவனுடைய பாதுகாப்பு தங்களைவிட்டு விலகிச்செல்லும்படிச் செய்தனர். அதனால் அவர்களது விருப்பத்தின்படி அவர்களை ஆளுவதற்குச் சாத்தான் அனுமதிக்கப்பட்டான். சாத்தானின் வல்லமைக்கு தங்களை விட்டுக்கொடுப்பவர்களுக்கு என்ன நிகழும் என்பதன் நடைமுறை விளக்கமாக எருசலேமின் அழிவில் நிகழ்த்தப்பட்ட சகிக்கமுடியாத கொடுமைகள் உள்ளன. (45)

நாம் அனுபவிக்கும் சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் நாம் எந்த அளவிற்கு, கிறிஸ்துவிற்குக் கடன்பட்டிருக்கிறோம் என்பதை நாம் அறியோம். கட்டுப்படுத்தும் தேவனுடைய வல்லமைதான், மனித இனம் முற்றிலுமாக சாத்தானின் கட்டுப்பாட்டிற்குள் கடந்து சென்றுவிடாதபடி, தடுத்துக்கொண்டிருக்கிறது. தீமைசெய்கிறவனின் கொடுமைமிக்க— தீமைமிக்க வல்லமையைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கும் தேவனுடைய இரக்கத்திற்கும் நீடியபொறுமைக்கும், கீழ்ப்படியாதவர்களும் நன்றிகெட்டவர்களும் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டியதற்குக் காரணம் இருக்கிறது. தெய்வீகச் சகிப்புத்தன்மையின் எல்லையை மனிதர்கள் கடந்துசெல்லும்போது, அந்தக் கட்டுப்படுத்துதல் நீக்கப்படுகிறது. மீறுதலுக்கான தண்டனையை நடத்திவைக்கும் ஒருவரை நிராகரித்தவர்களை, அவர்கள் விதைத்தவைகளை அவர்களே அறுவடை செய்துகொள்ளும்படி அவர் விட்டுவிடுகிறார். நிராகரிக்கப்பட்ட ஒளிக்கதிர் ஒவ்வொன்றும், நிந்திக்கப்பட்ட அல்லது செவிசாய்க்கப்படாமல் விடப்பட்ட எச்சரிக்கை ஒவ்வொன்றும், நடப்பிக்கப்பட்ட வெறிச்செயல் ஒவ்வொன்றும், தேவப் பிரமாணத்தின் மீறுதல் ஒவ்வொன்றும், விதைக்கப்பட்ட ஒரு விதையாக இருந்து, அதன்

தவறாத அறுவடையைத் தருவதாக உள்ளது. தொடர்ந்து பிடிவாதமாக எதிர்க்கப்படுவதால், தேவனுடைய ஆவியானவர் இறுதியில் பாவியிடமிருந்து விலக்கிக்கொள்ளப்படவே, ஆத்துமாவின் தீய ஆசைகளைக் கட்டுப்படுத்தும் வல்லமை இல்லாமலாகிவிடுகிறது. தெய்வீகக் கிருபையுடனும் ஈவுடனும் சச்சரவுசெய்து, தெய்வீக இரக்கத்தின் பரிந்துபேசுதலைத் தடுத்துக்கொண்டிருக்கும் அனைவருக்கும், எருசலேமின் அழிவு பயங்கரமான— பக்தி விநயமான எச்சரிப்பாக உள்ளது! பாவத்தின்மீதுள்ள தேவனுடைய வெறுப்பு, குற்றமுள்ளவனின்மீது உண்டாகக்கூடிய தண்டனையின் நிச்சயம், ஆகியவைகளுக்கு இதைவிட அதிகமான ஒரு சாட்சி ஒருபோதும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. (46)

எருசலேமைச் சந்திக்கவுள்ள நியாயத்தீர்ப்புபற்றிய இரட்சகரின் தீர்க்கதரிசனம், பயங்கரமான பாழ்க்கடிப்பைப்பற்றிய மற்றொன்றின் நிறைவேறுதலின் மங்கிய நிழலாக இருந்தது. தெரிந்துகொள்ளப்பட்ட நகரத்தில், தேவனுடைய இரக்கத்தை நிராகரித்து, அவரது பிரமாணத்தைக் காலின்கீழிட்டு மிதித்ததினால், உலகத்தில் ஏற்பட்ட பயங்கரமான அழிவினை நாம் காணலாம். உலகம் இதுவரை சாட்சியாகக் கண்டுள்ள மனித இனத்தின் துன்பங்களின் பதிவேடுகள் இருண்டவையாக உள்ளன. அதை சிந்திக்கும்போது, இதயம் நோயடைந்து மனம் மயக்கமடைகிறது. பரலோக அதிகாரத்தை நிராகரித்ததின் பலன் பயங்கரமானவைகளாக உள்ளது. ஆனால், எதிர்காலத்தைப்பற்றிய வெளிப்படுத்தல்களில், அதைவிடவும் இருளடைந்த ஒருசாட்சி முன்வைக்கப்பட்டுள்ளது. அமளிமிக்க நீண்ட ஊர்வலங்கள், சச்சரவுகள், அமளியாய் யுத்தம்பண்ணுகிற வீரருடைய ஆயுதவர்க்கங்கள், இரத்தத்தில் புரண்ட உடுப்பு (ஏசாயா 9:5) ஆகியவை கடந்த காலத்தின் பதிவேட்டுச் சான்றுகளாக உள்ளன. மனிதர்களுடைய வெறிகளையும், சாத்தானின் கோபத்தையும் கட்டுப்படுத்தாதபடி தேவனுடைய ஆவி முற்றிலுமாக விலகிச்செல்லும் அந்த நாளில் உண்டாகக்கூடிய பயங்கரங்களுடன் ஒப்பிடும்போது, இவையெல்லாம் ஒன்றுமில்லை. அப்போது, இதற்குமுன் ஒருபோதும் இருந்திராத விதத்தில், உலகம் சாத்தானின் ஆளுகையின் முடிவுகளைப் பார்க்கும். (47)

ஆனால் எருசலேமின் அழிவைப்போன்றிருக்கும் அந்த நாளில், நித்திய ஜீவனுக்கென்று பெயரெழுதப்பட்டிருக்கும் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் (ஏசாயா 4:4). விசுவாசமுள்ளவர்களைத் தம்முடன் சேர்த்துக்கொள்ளுவதற்காக, தாம் இரண்டாம் முறை வருவதாக கிறிஸ்து அறிவித்திருக்கிறார். “அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல

கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலுதிசைகளிலுமிருந்தும் கூட்டிச்சேர்ப்பார்கள்"–மத்தேயு 24:30–31. "நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்"–2தெசலோனிக்கேயர் 2:8. பண்டைய இஸ்ரவேலர்களைப் போலவே, துன்மார்க்கர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளுகின்றனர். அவர்களுடைய அக்கிரமத்தினால், அவர்கள் விழுகிறார்கள். பாவமிக்க ஒரு வாழ்க்கையினால் அவர்கள் தேவனுடன் தொடர்பில்லாத ஒரு நிலையில் தங்களைத் தாங்களே விலக்கிவைத்துக்கொள்கின்றனர். தீமையினால் அவர்களது தன்மைகள் மிகவும் கீழாகிவிட்டதினால், அவரது மகிமையின் பிரசன்னம் அவர்களைப் பட்சிக்கும் ஒரு அக்கினியாக இருக்கிறது. (48)

கிறிஸ்துவின் வார்த்தைகளினால் கொடுக்கப்பட்டுள்ள போதனைகளை அலட்சியப்படுத்தமலிருக்க மனிதர்கள் எச்சரிக்கை உள்ளவர்களாக இருப்பார்களாக. வரவிருக்கும் பாழாக்குதலில் இருந்து தப்பிக்கும்படியாக தமது சீடர்களுக்கு அடையாளங்களைக் கொடுத்து எச்சரித்ததுபோல, இறுதி அழிவைக் குறித்த அடையாளங்களைக் கொடுத்து, வரவிருக்கும் கோபத்திற்குத் தப்பி ஓடிச்செல்லும்படி அவர் உலகை எச்சரித்திருக்கிறார். "சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்"-–லூக்கா 21:25. அவரது வருகையின் இந்த முன்னடையாளங்களான "இவைகளை எல்லாம் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார்" (மத்தேயு 24:29; மாற்கு 13:24–26; வெளி. 6:12–17) என்பதை அறிய வேண்டும். "ஆகையால் நீங்கள் விழித்திருங்கள்" என்று எச்சரிக்கிறார். அந்த எச்சரிப்பிற்குச் செவிசாய்ப்பவர்களை, அந்தநாள் மேற்கொள்ளாதபடிக்கு அவர்கள் அந்தகாரத்தில் விடப்படமாட்டார்கள். ஆனால், விழித்திராதவர்களின்மீது, "இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வரும்"–1தெச. 5:2. (49)

எருசலேமின் அழிவைப்பற்றிய இரட்சகரின் எச்சரிப்பைப் பெற்றுக்கொள்ள யூதர்கள் எப்படி ஆயத்தமற்றவர்களாக இருந்தார்களோ, அதைப்போலவே, இந்தக் காலத்திற்குரிய தூதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமற்றதாக உலகம் இருக்கிறது. அந்தநாள் எப்பொழுது வந்தாலும் தெய்வபக்தி இல்லாதவர்களுக்கு அவர்கள் அறியாத நேரத்தில்தான் வரும்.

வாழ்க்கை அதன் மாறாத வட்டத்தில் சுழன்றுகொண்டிருக்கும் போது, மனிதர்கள்— இன்பம் காண்பதிலும் வியாபாரத்திலும் போக்குவரத்திலும் பணம் சம்பாதிப்பதிலும், சமயத் தலைவர்கள்—உலகத்தின் முன்னேற்றத்தைப்பற்றியும் அறிவு வளர்ச்சியைப்பற்றியும், மக்கள்—ஒரு பொய்யான பாதுகாப்பு என்னும் தொட்டிலில் ஆடுவதிலும் ஈடுபட்டிருக்கும்போது, காவல் இல்லாத வீட்டிற்குள், நடுஇரவில் திருடன் நுழைவதுபோல், கவனமற்றவர்களின்மீதும் தெய்வபக்தி இல்லாதவர்களின்மீதும் அழிவு திடீரென்று வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை. (50) ★

2

# முதலாம் நூற்றாண்டில் உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்கள்!

(மூலநூல் : The Great Controversy பக்கம்: 39–48)

இயேசுவின் இரண்டாம் வருகை சம்பந்தப்பட்ட காட்சிகளை, அவர் தமது சீடர்களுக்கு வெளிப்படுத்தினபோது, அவர் எடுத்துக்கொள்ளப் படவேண்டிய நேரத்திலிருந்து, அவர்களுக்கு விடுதலை தரும்படியாக அவர் வல்லமையோடும் மகிமையோடும் திரும்பிவரும்வரை, அவருடைய மக்களுக்கு உண்டாகக்கூடிய அனுபவங்களை முன்னுரைத்தார். அப்போஸ்தல சபையின்மீது வீசவிருந்த புயல்களை, மீட்பர் ஒலிவமலை யிலிருந்து கண்டு, அதற்கும் அப்பால், அவரது பின்னடியார்களின்மீது இருண்ட காலத்தில் நிகழவுள்ள உபத்திரவத்தையும் அவர் ஆழமாக நோக்கி அறிந்தார். திகைப்பூட்டும் அடையாளங்களுடைய சில வார்த்தைகளினால், உலகத்தின் அதிபதிகளால் தேவனுடைய சபைக்கு நிகழவிருப்பவைகளை அவர் முன்னறிவித்தார் (மத்தேயு 24:9, 21, 22). தங்களுடைய எஜமானன் நடந்துசென்ற தாழ்வு, நிந்தை, பாடுகள் ஆகிய பாதையில் அவரது பின்னடியார்களும் நடந்தாகவேண்டும். உலக இரட்சகருக்கு எதிராக வெடித்த பகைமை அவருடைய நாமத்தின்மீது நம்பிக்கைவைக்கும் அனைவர்மீதும் வெளிக்காட்டப்படும். (1)

ஆரம்பகால சபையின் வரலாறு மீட்பருடைய வார்த்தைகளின் நிறைவேறுதலுக்குச் சாட்சி கொடுக்கிறது. பூமி—பாதாளம் ஆகியவைகளின் வல்லமைகள், கிறிஸ்துவின் பின்னடியார்களின் வடிவிலிருந்த கிறிஸ்துவிற்கு எதிராக அணிதிரண்டன. சுவிசேஷம் வெற்றியடைந்தால், அஞ்ஞான மார்க்கமும் அதன் ஆலயங்களும் பலிபீடங்களும் அடித்துச்செல்லப்படும் என்பதை அஞ்ஞான மார்க்கம் முன்னதாகவே கண்டறிந்திருந்தது. எனவே, கிறிஸ்தவ மார்க்கத்தை அழிக்க அது தனது சக்திகளை அழைத்தது.

உபத்திரவம் என்னும் நெருப்பு மூட்டப்பட்டது. கிறிஸ்தவர்கள் உடமைகள் பறிக்கப்பட்டவர்களாக, அவர்களுடைய வீடுகளிலிருந்து விரட்டப்பட்டனர். துன்பப்படுதல் என்னும் பெரும் போராட்டங்களையும் அவர்கள் சகித்தனர் (எபிரெயர் 10:32). அவர்கள் "நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்"–எபிரெயர் 11:36. தங்கள் இரத்தத்தினாலே அநேகர் தங்கள் சாட்சிகளை முத்திரையிட்டார்கள். சுயாதீனர்கள்–அடிமைகள், செல்வந்தர்கள்–ஏழைகள், கற்றவர்கள்–கல்லாதவர்கள் என அனைவரும் வேறுபாடின்றி, இரக்கமற்ற வகையில் கொல்லப்பட்டனர். (2)

பவுல் இரத்தசாட்சியாக மரித்த காலக்கட்டத்தில் நீரோ அரசனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த உபத்திரவங்கள், சில சமயங்களில் அதிகமானதாகவும் சில சமயங்களில் குறைவானதுமான கொடுமைகளாக நூற்றாண்டுகளாகத் தொடர்ந்தன. கிறிஸ்தவர்கள் மிகப் பயங்கரமான குற்றவாளிகள் என்று அவர்கள்மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இயற்கையினால் உண்டான பாழ்க்கடிப்புக்கள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், பூகம்பம் ஆகியவைகளுக்கும் கிறிஸ்தவர்கள்தான் காரணம் என்று அறிவிக்கப்பட்டது. வெகு ஜனங்களின் வெறுப்புக்கும் சந்தேகத்திற்கும் அவர்கள் ஆளானபோது, லாபநோக்கத்திற்காக, குற்றமற்றவர்களைக் காட்டிக்கொடுக்க, தகவல் கொடுப்பவர்கள் தயாராக நின்றனர். பேரரசுக்கு எதிராகக் கலகம் செய்பவர்கள், மதவிரோதிகள், சமுதாயத்தின் விஷப்பூச்சிகள் என்று அவர்கள் தீர்க்கப்பட்டனர். ஏராளமானவர்கள் மிருகங்களுக்கு இரையாக்கப்பட்டனர்; சிலர் சிலுவைகளில் அறையப்பட்டனர்; சிலர் விளையாட்டு அரங்கங்களில் எரிக்கப்பட்டனர்; சிலர் மிருகங்களின் தோல்களால் சுற்றப்பட்டு, நாய்களால் கிழித்தெறியப்படுவதற்காக, விளையாட்டு மைதானங்களில் வீசியெறியப் பட்டனர்; அவர்களது தண்டனைகள் அடிக்கடி மக்கள் கூடிக்களிக்கின்ற பொழுதுபோக்காக நடத்தப்பட்டிருந்தன. திரளான மக்கள், அவர்களது மரண ஓலமிக்க வேதனைக் காட்சியை சிரிப்புடனும் கைதட்டலுடனும் கண்டுகளிப்பதற்காகக் கூடினர். (3)

கிறிஸ்துவின் பின்னடியார்கள் எங்கெல்லாம் தஞ்சம் புகுந்தனரோ, அங்கெல்லாம் அவர்கள் விலங்குகளைப்போல வேட்டையாடப்பட்டனர். பாழிடங்களிலும் தனிமையான இடங்களிலும் ஒளிப்பிடம் தேடும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். "மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும் படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்; வேறுசிலர் நிந்தை களையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும்

உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்; உலகம் அவர் களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்"–எபிரெயர் 11:36–38. அடுக்குத் தொடர்குகைகள் ஆயிரக் கணக்கானவர்களுக்குத் தங்குமிடமாயின. ரோம் நகருக்கு வெளியே, குன்றுகளின் அடிவாரத்தில், மண்ணுக்கும் பாறைகளுக்கும் ஊடாக, நீண்ட சுரங்கங்களாகத் தோண்டப்பட்ட இடுக்கமான பாதைகள், நகரச் சுவர்களுக்கு வெளியே தெரியாமல் மைல் கணக்கில் பரவி இருந்தன. பூமிக்கடியிலிருந்த ஒதுக்குப்புறமான இடங்களில், கிறிஸ்துவின் பின்னடியார்கள், தங்களில் இறந்தவர்களைப் புதைத்தனர்; இப்படிப்பட்ட அவர்கள், சந்தேகத்திற்குரியவர் களாக்கப்பட்டு, தடைசெய்யப்பட்ட வேளைகளில், இந்த இடங்களை தங்கள் வீடுகளாகக் கண்டனர். நல்ல போராட்டத்தைப் போராடின இவர்களை ஜீவாதிபதியானவர் எழுப்பும்போது, கிறிஸ்துவிற்காக இரத்தசாட்சிகளான அநேகர், இந்தத் துயரமிக்க தாழிடங்களிலிருந்து வெளிவருவார்கள். (4)

மிகக்கடுமையான உபத்திரவத்திலும் இவர்கள் இயேசுவின் சாட்சிகளாக தங்களுடைய விசுவாசத்தை பலவீனப்படுத்தாமல் பாதுகாத்திருந்தனர். சகலவிதமான சுகங்களையும் இழந்து, சூரிய வெளிச்சத்திலிருந்து விலக்கப்பட்டு, பூமியின் இருண்ட மடியைத் தங்களது நட்புமிக்க வீடாகக் கொண்டிருந்தபோதிலும், குறைகூறும் வார்த்தைகளை அவர்கள் சொல்ல வில்லை. தனிமையையும் துன்பங்களையும் சகித்துக்கொள்ளும்படி, அவர்கள் ஒருவரையொருவர் விசுவாசமும் பொறுமையும் நம்பிக்கையும்மிக்க வார்த்தை களினால் தைரியப்படுத்தினார்கள். உலகத்திற்குரிய பொருள்களின் இழப்புகள், கிறிஸ்துவின்மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையை குறைக்க வில்லை. சோதனைகளும் உபத்திரவங்களும் அவர்களுக்குக் கிடைக்க இருக்கின்ற இளைப்பாறுதலுக்கும் வெகுமதிக்குமருகில் அவர்களைக் கொண்டுவருகின்ற படிக்கட்டுகளாக அமைந்தன. தங்களுக்கு முன்னிருந்த தேவனுடைய பணியாளர்களைப் போலவே, அநேகர் "மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்"–எபிரெயர் 11:35. கிறிஸ்துவிற்காக உபத்திரவப்பட நேரிடும்போது, அதிகமான மகிழ்ச்சியோடு இருக்கவேண்டுமெனவும், பரலோகத்தில் அவர்களுக்குக் கிடைக்க இருக்கும் பரிசு மிகவும் அதிக மேன்மையானதென்றும், தங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளும் இவ்விதமாகவே உபத்திரவப்படுத்தப்பட்டிருந்தனர் என்றும் அவர்களுடைய எஜமான் கூறியிருந்த வார்த்தைகளை அவர்கள் தங்கள் நினைவிற்குக் கொண்டுவந்தனர். பற்றியெரியும் அக்கினி ஜுவாலைகளுக்கு நடுவில், தாங்கள் சத்தியத்திற்காகப் பாடனுபவிப்பதற்குத் தகுதியடைந்ததற்காக,

அவர்கள் மகிழ்ந்து பாடிய வெற்றியின் பாடல்கள், விண்ணுக்கு எழும்பின. அவர்கள் விசுவாசத்தினால் மேல் நோக்கியபோது, பரலோகப் பிராகாரங்களில் இருந்து, மிகுந்த வாஞ்சையுடனும் ஆர்வத்துடனும் அவர்களுடைய உறுதியை அங்கீகரித்து, கிறிஸ்துவும் தேவதூதர்களும் அவர்களைப் பார்ப்பதைக் கண்டனர். "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி. 2:10) என்னும் வார்த்தைகள் தேவ சிங்காசனத்திலிருந்து அவர்களை நோக்கிவந்தன. (5)(6)

கொடுமைகளின் மூலமாக, கிறிஸ்துவின் சபையை அழித்துவிட வேண்டும் என்ற சாத்தானின் முயற்சி வீணாகியிருந்தது. இந்த விசுவாசத்திலிருந்த அவர்கள் கம்பத்தில் கட்டப்பட்டு, நெருப்பிற்கு மத்தியில் நின்று உயிர்விட்டபோது, இயேசுவின் சீடர்கள் எந்த மாபெரும் போராட்டத்தில் உயிர்விட்டார்களோ, அது முடிவடைந்திருக்கவில்லை. வீழ்ச்சி அடைந்தாலும்—அவர்கள் வெற்றி அடைந்தார்கள்! தேவனுடைய பணியாளர்கள் கொலைசெய்யப்பட்டனர்; ஆனாலும் அவருடைய பணி சீராக முன்னேறிச்சென்றது! சுவிசேஷம் தொடர்ந்து பரவியது; அதைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது; யாரும் உட்புகாமலிருந்த இடங்களுக்கு எல்லாம் சுவிசேஷம் நுழைந்து, ரோமின் உயர்ந்த இடங் களுக்குள்ளும் அது சென்றது. உபத்திரவத்தை விரைவுபடுத்தும்படி நெருக்கினவர்களைப் பார்த்து, ஒரு கிறிஸ்தவர்: "நீங்கள் எங்களை சித்திரவதைசெய்யலாம்; துன்பப்படுத்தலாம்; சலிப்படையச்செய்யலாம்; உங்களுடைய தீயதன்மைகள் எங்கள் பலவீனங்களைச் சோதனைக்குட் படுத்தலாம்; ஆனால், அதுவே பிறரை எங்கள்பால் இழுக்கும் பலத்த அழைப்பாக அமையும்! எந்த அளவிற்கு அதிகமாக நாங்கள் புற்களைப்போல் கத்தரிக்கப்படுகிறோமோ, அந்த அளவிற்கு நாங்கள் மறுபடியும் துளிர்த்து வளர்வோம். கிறிஸ்தவனின் இரத்தம் விதையாக உள்ளது" என்று சொன்னார்.—Tertuilian, *Apology*, Paragraph 50. (7)

ஆயிரக்கணக்கானவர்கள் சிறைப்படுத்தப்பட்டு, கொலை செய்யப் பட்டனர். ஆனால் அவர்களின் இடங்களை நிரப்ப மற்றவர்கள் கிளர்ந்து எழும்பினர். தங்களுடைய விசுவாசத்திற்காக இரத்தசாட்சிகளானவர்கள், கிறிஸ்துவுடன் பாதுகாக்கப்பட்டு, அவரால் வெற்றி வீரர்களெனக் கணக்கிடப் பட்டனர்; அவர்கள் நல்லபோராட்டம் போராடி, கிறிஸ்து வரும்பொழுது, அவரிடமிருந்து மகிமையின் கிரீடத்தைப் பெறுபவர்களாக இருந்தனர்; அவர்கள் அனுபவித்த பாடுகள், கிறிஸ்தவர்களை ஒருவருக்கொருவருடனும் அவர்களுடைய இரட்சகருடனும் கிட்டிச்சேரச் செய்தது; அவர்களுடைய வாழ்க்கையின் மாதிரியும் சாட்சியான மரணமும் சத்தியத்திற்கு தொடர் சாட்சியாக இருந்தது. சாத்தானின் சேவையில், அவனுக்கு அடிமையாக

இருந்தவர்கள், அவனது சேவையைவிட்டு விலகிச்சென்று கிறிஸ்துவின் கொடியின்கீழ் நிற்பதென்பது சற்றும் எதிர்பாராததாக இருந்தது. (8)

எனவே, சாத்தான் அவனுடைய கொடியைக் கிறிஸ்தவ சபையில் நாட்டி, தேவ அரசாங்கத்திற்கு எதிராக வெற்றிகரமான யுத்தம்செய்ய, திட்டங்கள் தீட்டினான். கிறிஸ்துவின் பின்னடியார்கள் வஞ்சிக்கப்பட்டு, தேவனின் அதிருப்திக்குள்ளாகும்படி நடத்தப்பட்டால், அப்பொழுது அவர் களுடைய பலமும் கோட்டையும் விழுந்துவிடும். அவர்கள் எளிதில் இரையாக விழுந்துவிடுவார்கள். (9)

ஆம். பலவந்தத்தினால் அடையமுடியாமலிருந்தவைகளைத் தந்திரத் தினால் அடைந்துகொள்ள பெரும் எதிரியானவன் முயன்றான். உபத்திரவம் நின்று அதற்குப்பதிலாக, உலகப்பிரகாரமான கவர்ச்சியும் மேன்மையும் வைக்கப்பட்டன. முக்கியமான சத்தியங்களை நிராகரித்து, கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ளும்படி விக்கிரக ஆராதனைக் காரர்கள் நடத்தப்பட்டனர். இயேசுவை தேவகுமாரனென்று அறிவிக்கவும், அவரது மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளை நம்பவும் செய்தனர்; ஆனால் பாவத்தைப்பற்றிய உணர்வும், மனந்திரும்பவேண்டும் அல்லது இதயத்தில் மாற்றம் தேவை என்ற அவசியத்தையும் அவர்கள் உணரவில்லை. கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கை என்னும் மேடையில் அனைவரும் ஒற்றுமைப்படுவதற்கு, கிறிஸ்தவர்கள் அவர்களது கோட்பாடுகளைச் சற்று விட்டுக்கொடுக்கவேண்டுமென்றும், அதேபோல், அவர்களும் அவர்களுடைய கோட்பாடுகளை விட்டுக்கொடுக்க இசைவதாகவும் தீர்மானம் செய்தனர். (10)

சபை இப்பொழுது பயங்கரமான பேராபத்தில் இருந்தது, இதனுடன் ஒப்பிடும்போது, சிறைவாசம், சித்திரவதை, நெருப்பிற்கிரையாகுதல், வாளினால் வெட்டப்படுதல் ஆகியவை ஆசீர்வாதங்களாக இருந்தன. தங்களால் சமரசம் செய்துகொள்ள இயலாது என அறிவித்து, கிறிஸ்தவர்களில் சிலர் உறுதியாக நின்றனர். வேறு சிலர் கிறிஸ்தவ மார்க்கத்தின் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டவர்களுடன் ஐக்கியப்படுவதற்காக, கிறிஸ்தவக் கோட்பாடுகளில் மாறுதல் செய்வதை ஆதரித்தனர். இதனால், அவர்களிலும் முழு மாறுதல் உண்டாகும் என்றனர். கிறிஸ்துவின் உத்தமமான பிள்ளைகளுக்கு அது மிகவும் கொடுமையான காலமாக இருந்தது. கிறிஸ்தவமார்க்கம் என்று சொல்லும் போலியான உடையுடன், சாத்தான் தானாக சபைக்குவந்து, அவர்களது விசுவாசத்தைக் கறைப்படுத்தி, சத்திய வார்த்தையிலிருந்து அவர்களது மனதை திசைதிரும்பும்படியாகச் செயலாற்றினான். (11)

பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள், இறுதியில் தங்களுடைய தரத்தைத் தாழ்த்திக்கொள்ளச் சம்மதிக்கவே, கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் அஞ்ஞான மார்க்கத்திற்குமிடையில் ஒரு ஒற்றுமை உண்டாக்கப்பட்டது! விக்கிரக ஆராதனைக்காரர்கள் தாங்கள் மனந்திரும்பி விட்டதாகவும், சபையுடன் ஐக்கியப்பட்டுவிட்டதாகவும் அறிவித்தபோதிலும், அவர்கள் தங்களுடைய விக்கிரக ஆராதனைப் பொருட்களை இயேசு, மரியாள், பரிசுத்தவான்கள் ஆகியோரின் உருவங்களாக மாற்றி, அவைகளைத் தொழுது, இன்னமும் அவர்களுடைய விக்கிரக ஆராதனைகளைத் தொடர்ந்துகொண்டே இருந்தனர்; இவ்விதமாக, சபைக்குள் புளிப்பை உண்டுபண்ணும் துர்நாற்றமுடைய இந்த உருவ வழிபாடு, அதன் அழிவுக்குரிய வேலையைத் தொடர்ந்து செய்தது. தவறான கோட்பாடுகளும், மூடத்தனமான சமயச் சடங்குகளும், உருவ வழிபாடுமிக்க ஆராதனை முறைமைகளும், அதன் விசுவாசத்திற்கு உள்ளும் வழிபாட்டிலும் சேர்க்கப்பட்டன; கிறிஸ்துவின் பின்னடியார்கள் உருவவழிபாடு செய்பவர்களுடன் இணைந்ததினால், கிறிஸ்தவ மார்க்கம் கறைபட்டு, சபை அதன் தூய்மையையும் வல்லமையையும் இழந்தது. அப்படியிருந்தும், இந்த மாய்மாலத்தினால் தவறாக வழிநடத்தப்படாத சிலர் இருந்தனர். அவர்கள் சத்தியத்திற்கு ஆதாரமானவருடன் நேர்மையாக நடந்து, தேவனை மட்டும் வணங்கினர். (12)

நாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்று சொல்லிக்கொள ளபவர்களுக்கிடையில், எப்பொழுதும் இரு பிரிவுகள் இருந்து வந்துள்ளன. ஒரு வகுப்பினர் மீட்பரின் வாழ்க்கையை உய்த்தறிந்து, தங்களிடமுள்ள குறைபாடுகளை நீக்கி, கிறிஸ்துவின் சாயலை அடைய வாஞ்சையுடன் முற்படும்போது, இன்னொரு வகுப்பினர், தங்களுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டுகிற தெளிவானதும் நடைமுறையில் உள்ளதுமான சத்தியத்தைப் பின்பற்றுவதிலிருந்து பின்வாங்கினார்கள். சபை அதன் மேலான நிலையிலுங்கூட, முற்றிலும் சத்தியமும் தூய்மையும் உண்மையும் உள்ளவர்களால் நிரம்பியிருக்கவில்லை. அறிந்தபோதிலும் வேண்டுமென்றே பாவத்தில் நடப்பவர்களை சபைக்குள் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று நமது மீட்பர் போதித்தார்; அப்படியிருந்தும், அவர் தவறான சுபாவம் உள்ளவர்களை தம்முடன் இணைத்து, தம்முடைய போதனையினாலும், உதாரணமான நடத்தையினாலும், அவர்கள் தங்கள் தவறுகளைக்கண்டு அவைகளைத் திருத்திக்கொள்ளும் நன்மையை அடைந்துகொள்ளக்கூடிய வாய்ப்பினை அனுமதித்தார். பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்குள் ஒரு துரோகி இருந்தான். யூதாசின் சுபாவத்தில் என்ன அடங்கியிருக்கிறது என்பதை அவன் அறிந்துகொள்ளவும், மனந்திரும்பவும், தெய்வீகக் கிருபையினால் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து தனது ஆத்துமாவைத்

தூய்மைப்படுத்திக் கொள்ளவும் சீடர்களுடன் இணைக்கப்பட்டான்; ஆனால் அவன்மீது பிரகாசிக்கும்படியாக, தெய்வீகக் கிருபையினால் அருளப்பட்ட வெளிச்சத்தில் யூதாஸ் நடக்கவில்லை; அவனது தீய சுபாவங்கள் மேலாதிக்கமுள்ளவையாக ஆயின. அந்தகார சக்திகளின் கட்டுப்பாட்டிற்கு அவன் தன் மனதை விட்டுக்கொடுத்தான். அவனது குற்றங்களுக்காக அவன் கடிந்துகொள்ளப்பட்டபோது, அவன் கோபமடைந்தான். இவ்வாறாக, தனது ஆண்டவரை காட்டிக்கொடுக்கும் பயங்கரமான குற்றம்செய்ய நடத்தப்பட்டான். இதைப்போலவே, தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு, தீமையைத் தங்களில் வளர்க்கும் அனைவரும், அவர்களுடைய பாவ நடவடிக்கையைச் சுட்டிக்காட்டுபவர்களை, அவர்களுடைய சமாதானத்திற்கு இடையூறு செய்கிறவர்களாக நினைத்து வெறுக்கின்றனர். இப்படிப்பட்டவர்களுக்குச் சாதகமான ஒரு வாய்ப்புக் கிட்டும்போது, அவர்களுடைய நன்மைக்காக கடிந்துகொள்ளுகிறவர்களை, யூதாசைப்போலவே அவர்களும் வஞ்சிப்பார்கள். (13)

சபையில் இரகசியமாக அக்கிரமங்களைச் செய்துகொண்டு, தெய்வ பக்தியின் வேஷத்தைத் தரித்திருந்தவர்களை அப்போஸ்தலர்கள் சந்தித்தனர். அனனியாவும் சப்பீராளும் தேவனுக்காகப் பூரணமாகத் தியாகம்செய்வதுபோல் நடித்து, இச்சையுடன் தங்கள் சொத்தின் ஒரு பகுதியை தங்களுக்கென்று வைத்துக்கொண்டு, வஞ்சகர் செய்யும் செயலைச் செய்தனர். இந்தப் போலியானவர்களின் சுபாவத்தை சத்திய ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தி, சபையின் தூய்மைக்கு எதிராக நடத்தப்பட்ட தீய திட்டத்தை நீக்கினார். சபையில் எல்லாவற்றையும் அறியும் கிறிஸ்துவின் ஆவி இருக்கிறது என்பதற்கு, சாட்சியாக இருந்த இந்த அடையாளம், மாயக்காரர்களுக்கும், துன்மார்க்கர்களுக்கும் பயங்கரமாக இருந்தது, பழக்கத்தாலும், சுபாவத்தாலும் தொடர்ந்து கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருந்தவர்களுடன், அவர்களால் அதிகக் காலம் இணைந்திருக்க முடியவில்லை. அவரது பின்னடியார்களின்மீது சோதனைகளும் உபத்திரவங்களும் வந்தபோது, சத்தியத்திற்காக எல்லாவற்றையும் விட்டுவிடத் தயாராக இருந்தவர்கள்மட்டுமே அவருடைய சீடர்களாவதற்கு விரும்பினர். இவ்வாறு உபத்திரவம் தொடர்ந்துகொண்டு இருந்தவரைக்கும், ஒப்பிட்டுப்பார்க்குமளவிற்கு சபை தூய்மையாக இருந்தது. ஆனால் உபத்திரவம் நின்றபோது, உண்மையற்றவர்களும் பக்தியற்றவர்களுமாயிருந்து மதம் மாறினவர்கள் சபைக்குள் சேர்க்கப்பட்டபோது, சாத்தானுக்கு சபைக்குள் காலூன்றும்படியான வழி திறக்கப்பட்டது. (14)

ஆனால் ஒளியின் பிரபுவிற்கும் அந்தகார பிரபுவிற்குமிடையில் ஒற்றுமை கிடையாது; அவர்களது பின்னடியார்களுக்கிடையிலும் ஒற்றுமை நிலவ முடியாது. அஞ்ஞான மார்க்கத்திலிருந்து, அரைகுறையாக மதம்மாறினவர் களுடன் ஒருமைப்படுவதற்குக் கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொண்டபோது, சத்தியத்திலிருந்து வெகுதூரம் விலகிச்செல்லக்கூடிய ஒரு பாதையில் அவர்கள் நுழைந்தனர். மிக அதிகமான எண்ணிக்கைக்குட்பட்ட கிறிஸ்துவின் பின்னடியார்களை வஞ்சிப்பதில் வெற்றி அடைந்ததை எண்ணி, சாத்தான் வெற்றிச் சிரிப்பு சிரித்தான்! அதற்குப்பின், இப்படிப்பட்டவர்களுக்கு அவன் அவனுடைய மிக அதிகமான வல்லமையைக் கொடுத்து, தேவனுக்கு உண்மையாக இருப்பவர்களை உபத்திரவப்படுத்தும்படி அவர்களை ஏவினான். மெய்க் கிறிஸ்தவ விசுவாசத்தை நன்றாக எதிர்ப்பது எப்படி என்பதை ஒரு சமயம் கிறிஸ்தவ மார்க்கத்தின் பாதுகாவலர்களாக இருந்தவர்களைப்போல, வேறு யாரும் அறிந்திருக்கவில்லை. இப்படி மருள விழுந்த கிறிஸ்தவர்கள், அவர்களுடைய அரைகுறையான அஞ்ஞான நண்பர்களுடன் ஒருமித்து, கிறிஸ்தவ மார்க்கத்தின் மிக முக்கியமான கோட்பாடுகளுக்கெதிராக யுத்தஞ்செய்தார்கள். (15)

வஞ்சகங்களையும் அருவருப்புக்களையும் ஆசாரிய உடைக்குள் மறைத்து, அவைகளை சபைக்குள் கொண்டுவருபவர்களுக்கெதிராக, உறுதியாக நிற்பதற்கான விசுவாசமுடையவர்களாக இருப்பதற்கு, ஆபத்தைப் பொருட்படுத்தாத போராட்டம் செய்வது அவசியமாக இருந்தது. விசுவாசத்தின் தரத்தை நிர்ணயிக்கும் கருவியாக வேதாகமம் அங்கீகரிக்கப்படவில்லை. சமயச் சுதந்திரம் என்னும் கோட்பாடு மதபேதம் என்று சொல்லப்பட்டு, அதை உயர்த்தியவர்கள் வெறுக்கப்பட்டுத் தடைசெய்யப்பட்டனர். (16)

மருளவிழுந்துபோன சபை தன் தவறுகளிலிருந்தும், உருவ வழிபாட்டிலிருந்தும் விடுதலைபெற மேலும் மறுத்தால், அதனுடனுள்ள ஐக்கியத்திலிருந்து பிரிந்துவிடவேண்டும் என்று சில விசுவாசமிக்கவர்கள் நீண்டகாலமாகவும் கடுமையாகவும் நடந்த போராட்டத்திற்குப்பின்னர் முடிவுக்குவந்தனர். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டுமானால், பிரிவினை மிக அத்தியாவசியமானது என்பதை அவர்கள் கண்டனர். தங்களுடைய ஆத்துமாக்களுக்கு மரணத்தை விளைவிக்கக்கூடிய தவறுகளை அங்கீகரித்து, அதனால் தங்களுடைய பிள்ளைகளின் விசுவாசத்திற்கும் பிள்ளைகளின் பிள்ளைகளுடைய விசுவாசத்திற்கும் ஆபத்தை உண்டுபண்ணுகிற உதாரணமானவர்களாக இருக்க அவர்கள் துணியவில்லை. சமாதானத்தையும் ஒற்றுமையையும் நிலைநாட்ட, விசுவாசத்திற்கு இசைவான எல்லா தியாகங்களையும்செய்ய அவர்கள் ஆயத்தமாக இருந்தனர்; ஆனால் கொள்கைகளைத் தியாகம்செய்து,

சமாதானத்தை வாங்குவதற்கு, சமாதானம் அவ்வளவு அருமையானதல்ல என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். சத்தியத்தையும் நீதியையும் விட்டுக்கொடுக்கும் சமரசத்தினால்தான் ஒற்றுமையை வாங்கமுடியும் என்றால், அதைவிட வேற்றுமையும் யுத்தங்களும் உண்டாகட்டுமே என்று எண்ணினர். (17)

உறுதியாக நிலைத்து நிற்கும்படி அந்த ஆத்துமாக்களைச் செயல்படச்செய்த கொள்கைப்பற்று, சபைகளிலும் உலகத்திலும் மீண்டுமாக எழுப்பப்பட்டால் நன்றாக இருக்கும். கிறிஸ்தவ விசுவாசத்தின் தூண்களாயிருக்கும் கோட்பாடுகளுக்கு மாறான வேற்றுமையான கருத்துக்கள் அபாயகரமான அளவிற்கு உள்ளது. இவைகளெல்லாம் அந்த அளவிற்கு முக்கியமானவைகளல்ல என்னும் கருத்து அதிகரித்துவருகிறது. கடந்தகாலத்தில் விசுவாசமிக்கவர்களாக இருந்தவர்கள், எந்தத் தவறான கோட்பாடுகளையும் மரணத்தை உண்டுபண்ணும் மாயங்களையும் தடுக்கும்படி தங்கள் ஜீவனைக் கொடுத்தார்களோ, அவைகள் இப்போது தங்களைக் கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஆயிரக்கணக்கான மக்களால் ஆதரிக்கப்பட்டு, சாத்தானின் ஏவலாளிகளின் கரங்களைப் பலப்படுத்துகிறது. (18)

ஆரம்பகாலக் கிறிஸ்தவர்கள் மிகவும் சிறப்பிற்குரியவர்களாய் இருந்தனர். அவர்களது குற்றமற்ற நடத்தையும், அசையாத விசுவாசமும் பாவியின் சமாதானத்திற்கு இடையூறுசெய்யும் கண்டனமாக இருந்தது. அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக—செல்வமற்றவர்களாக—பதவி அற்றவர்களாக—மேன்மையான பட்டங்களில்லாதவர்களாக இருந்த போதிலும், அவர்களது சுபாவமும் கோட்பாடுகளும் அறியப்பட்ட இடங்களி லெல்லாம், துன்மார்க்கர்களுக்கு ஒரு திகிலாக இருந்தனர்; எனவே, தெய்வ பக்தியற்ற காயீனால் ஆபேல் வெறுக்கப்பட்டதுபோல, இவர்களும் துன்மார்க்கரால் வெறுக்கப்பட்டனர். பரிசுத்த ஆவியினாலான கட்டுப்பாட்டை மீறிய காரணத்தினால், காயீன் ஆபேலுக்குச் செய்தது போல், இவர்களும் அதே காரணத்திற்காக, அதேபோல, தேவனுடைய ஜனங்களைக் கொலை செய்வார்கள்; இதே காரணத்தினால்தான் யூதர்கள் மீட்பரை நிராகரித்து, அவரைச் சிலுவையில் அறைந்தனர்; ஏனெனில், அவரது சுபாவத்திலிருந்த தூய்மையும் பரிசுத்தமும் யூதர்களுடைய சுயநலத்திற்கும் ஊழலுக்கும் எதிரான தொடர்ச்சியான கடிந்துகொள்ளுதலாயிருந்தது. கிறிஸ்துவின் காலத்தில் இருந்து இன்றுவரை, அவருக்கு விசுவாசமான சீடர்கள், பாவத்தை விரும்பி, அதன் பாதையில் நடப்பவர்களின் வெறுப்பையும் எதிர்ப்பையும் எதிர்கொள்கின்றனர். (19)

அப்படியானால், சுவிசேஷம் சமாதானத்தின் ஒரு தூது என்று எப்படி அழைக்கப்படுகிறது? மேசியாவின் பிறப்பை ஏசாயா முன்னறிவித்தபோது, அவரது பெயரை சமாதானப்பிரபு என்று அறிவித்தான். கிறிஸ்து பிறந்திருக்கிறார் என்பதை தேவதூதர்கள் மேய்ப்பர்களுக்கு அறிவித்தபோது, அவர்கள் பெத்லெகேமின் வெளியில் உயரநின்று "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று பாடினார்கள். "பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன்" (மத்தேயு 10:34) என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கும் தீர்க்கதரிசன அறிவிப்புகளுக்குமிடையில் முரண்பாடு இருப்பதுபோல் காணப்படுகிறது; ஆனால் சரியான விதத்தில் அறிந்துகொண்டால், அவை இரண்டும் முழுமையான இசைவுள்ளவைகளாக இருப்பது தெரியும். சுவிசேஷம் என்பது ஒரு சமாதானத்தின் தூது. பெற்றுக் கீழ்ப்படிந்தால், சமாதானத்தையும் ஒற்றுமையையும் மகிழ்ச்சியையும் உலகெங்கும் பரப்பும் ஒரு மார்க்கமாக கிறிஸ்தவம் இருக்கும். கிறிஸ்தவத்தின் போதனைகளை ஏற்றுக்கொள்ளும் அனைவரையும் நெருக்கமான சகோதரத்துவம் என்னும் ஒருமைப்பாட்டிற்குள் அது கொண்டுவரும். அது தேவனை மனிதனுடனும், மனிதர்களை ஒருவருக்கொருவருடனும், ஐக்கியப்படுத்துவதாகவும் இருக்கிறது; ஆனால் உலகமோ பெரிய அளவில் கிறிஸ்துவின் மிகக் கசப்பான எதிரியான சாத்தானின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. சுவிசேஷம் அவர்களது பழக்கவழக்கங்களுக்கும் விருப்பங்களுக்கும் மாறுபட்டதாயிருந்து, அவர்கள் முன் நித்திய ஜீவனுக்கான கொள்கைகளை வைக்கும்போது, அவர்கள் அதற்கு எதிராக எழுந்து கலகம் செய்கிறார்கள். அவர்களது பாவங்களை வெளிப்படுத்தி, தவறுகளைக்காட்டும் அதன் தூய்மையை அவர்கள் வெறுத்து, அதின் நீதியும் பரிசுத்தமும் அவர்கள்மீது பாராட்டும் உரிமையைக் குறித்து அவர்களுக்குச் சொல்லுபவர்களையும் உபத்திரவப்படுத்தி, அழிக்கின்றனர். இப்படியாக அது கொண்டுவரும் உயர்ந்த சத்தியங்களினால், வெறுப்பையும் சண்டையையும் உண்டுபண்ணுகிற சந்தர்ப்பத்தை உண்டாக்குகிறது; எனவேதான் சுவிசேஷம் ஒரு பட்டயமாகச் சொல்லப்படுகிறது. (20)

துன்மார்க்கரின் கரத்தில் நீதிமான் உபத்திரவங்களை அனுபவிக்க அனுமதிக்கும் தேவ இரகசியமான தெய்வீகப் பாதுகாப்பு, விசுவாசத்தில் பலவீனராயுள்ள அநேகரின் பெரும் குழப்பத்திற்குக் காரணமாக உள்ளது. மிகவும் கீழ்த்தரமானவர்கள் முன்னேறவும், மிகவும் தூய்மையானவர்கள் கீழ்த்தரமானவர்களின் கொடுமையான வல்லமையினால் வேதனைப்படவும் தேவன் அனுமதிப்பதினால், சிலர் தேவன்மீதுள்ள தங்களின் நம்பிக்கையை விட்டுவிடவும் ஆயத்தமாக உள்ளனர். நீதியும் இரக்கமுமுள்ள ஒருவராக,

எல்லையில்லா வல்லமை உள்ளவராக அவர் இருக்கும்போது, இப்படிப்பட்ட அநீதியையும் ஒடுக்குதலையும் அவர் சகித்துக்கொள்ளுவது எப்படி? என்று கேட்கப்படுகிறது. நம்மால் ஒன்றும் செய்யவியலாத ஒரு கேள்வியாக இது உள்ளது. தேவனுடைய தெய்வீகப் பாதுகாப்பு எவ்விதமாகச் செயல்படுகிறது என்பது நமக்குப் புரியாததாக உள்ளதால், அவரது நல்ல தன்மைகளைப்பற்றி நாம் சந்தேகிக்கக்கூடாது. தேவன் அவரது அன்பைப்பற்றி நமக்குப் போதுமான சாட்சியங்களை வைத்திருக்கிறார். “ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்;” (யோவான் 15:20) என்று, சோதனைகளும் இருளும் உள்ள நாட்களில் சந்தேகம் அவர்களது ஆத்துமாக்களை அழுத்த இருப்பதை முன்னறிந்து, மீட்பர் அவரது சீடர்களுக்குச் சொன்னார். தீய மனிதர்களின் கொடூரத்தினால், பாடுகளை அனுபவிக்கும் இயேசுவின் பின்னடியார்களைவிட அதிகமான பாடுகளை இயேசு நமக்காக அனுபவித்தார். சித்திரவதையையும், இரத்த சாட்சியான மரணத்தையும் அனுபவிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள், நேசகுமாரனின் அடிச்சுவடுகளைத்தான் பின்பற்றுகின்றனர். (21)

“கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயி(ல்லை)ராமல்” (2பேதுரு 3:9). அவர் அவருடைய பிள்ளைகளை மறக்கவோ அலட்சியப்படுத்தவோ இல்லை; மாறாக, அவருடைய சித்தத்தின்படி செய்யவிரும்பும் ஒருவரும் துன்மார்க்கரால் வஞ்சிக்கப்படாமலிருக்கும்படி, துன்மார்க்கர் அவர்களுடைய சுபாவத்தை வெளிக்காட்ட அனுமதிக்கிறார். அப்படியே சுத்திகரிக்கப்படும்படி, நீதிமான்களை பாடுகள் என்னும் சூளையிலிட்டு, விசுவாசத்தையும் தெய்வபக்தியின் நிஜத்தையும் மற்றவர்கள் காணச்செய்கிறார். அத்துடன் அவர்களுடைய நடக்கையின் மூலம் தேவபக்தி இல்லாதவர்களைக் கண்டனம் செய்யவும் அனுமதிக்கிறார். (22)

அவருடைய ஜனங்களை ஒடுக்கின அனைவருக்கும், அவர்களது செயல்களுக்குத்தக்கதாகப் பதில்செய்யும்படி, தேவனுடைய பழிவாங்கும் நாள் விரைந்து வருகிறது. தேவனுக்கு விசுவாசமாக இருப்பவர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட ஒவ்வொரு கொடுமையான செயலும், கிறிஸ்துவிற்கே செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு, அப்படிச் செய்தவர்களுக்குத் தண்டனை அளிக்கப்படும். (23)

இக்காலத்திலுள்ள சபைகளின் கவனத்தை ஈர்க்கவேண்டிய வேறொரு முக்கிமான கேள்வி உள்ளது. “அன்றியும் கிறிஸ்து இயேசுவிற்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்”

(2தீமோத்தேயு 3:12) என பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார்; அப்படியானால், உபத்திரவம் பெருமளவிற்கு உறங்கிக்கொண்டிருப்பதேன்? சபை உலகத்தின் தரத்துடன் இசைந்து விட்டதினால், அது எதிர்ப்பை எழுப்பவில்லை! இப்பொழுதுள்ள மதம், கிறிஸ்துவும் அவரது அப்போஸ்தலர்களுமிருந்த நாட்களில் இருந்தது போல், தூய்மையும் பரிசுத்தமுமான கிறிஸ்தவ விசுவாசமும் உடையதாக இல்லை. பாவத்துடன் சமரசம்செய்யும் ஆவியினால் வேத வசனத்திலுள்ள பெரும் சத்தியங்கள் கவனமற்ற வகையில் கருதப்பட்டதினால், சபையில் உயிராற்றல்மிக்க பக்தி மிகவும் குறைவாக இருப்பதினால், கிறிஸ்தவமார்க்கம் வெளிப்படையாக உலகத்துடன் பெரும்பான்மையாய் இசைந்திருப்பதினால், உபத்திரவம் எழவில்லை. ஆரம்பகால சபையிலிருந்த விசுவாசமும் வல்லமையும் எழுப்புதல் அடையட்டும்—அப்போதுதான் உபத்திரவத்தின் ஆவி எழுப்புதல் அடைந்து, உபத்திரவம் என்னும் நெருப்பும் மீண்டும் எரியத்தொடங்கும்! (24) ★

# 3

# அதர்மம் அரசோச்சிய காலம் ... ?

**(மூலநூல் : The Great Controversy பக்கம் : 49–60)**

போப்புமார்க்க வல்லமை அமைக்கப்படும்போது நிகழ உள்ள மருளவிழுகையைப்பற்றி பவுல் அப்போஸ்தலன் தெசலோனிக் கேயருக்கு எழுதின இரண்டாம் நிரூபத்தில்: "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லா வற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்" (2 தெச. 2:3,4) என்றும், இது நிகழ்வதற்கு முன் கிறிஸ்துவின் நாள் வராது என்றும், முன்னறிவித்தார். அதற்கும் மேலாக, "அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது" (2 தெச. 2:7) என்றும் அக்காலத்திலிருந்த சகோதரரை எச்சரிக்கிறார். அந்த ஆரம்ப நாட்களிலேயே, போப்புமார்க்கம் அமைவதற்கான பாதையாக, தவறுகள் சபைக்குள் நுழைவதை அவர் கண்டார். (1)

அக்கிரமத்தின் இரகசியமும், அதனுடைய வஞ்சகமும் தேவதூஷணமும் நிறைந்த வேலையை ஆரம்பத்தில் திருட்டளவாகவும் மௌனமாகவும்செய்து, பின்னர் பெலமடைந்தது. மனிதர்களின் உள்ளத்தை தன் கட்டுப்பட்டிற்குள் கொண்டுவந்த பின்னர், அதன் வஞ்சகமும் தூஷணமுமான வேலையில் முன்னேறிச்சென்றது. கிட்டத்தட்ட ஒருவரும் உணரமுடியாத விதத்தில் அஞ்ஞான மார்க்கம் கிறிஸ்தவ சபைக்குள் நுழைந்தது. சபை அஞ்ஞான மார்க்கத்தினால் உண்டான பயங்கரமான உபத்திரவத்தை அனுபவித்தபோது, சமரசத்தின் ஆவியும் உலகத்துடன் இசைந்திருத்தலின் ஆவியும் சில காலத்திற்குக் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. ஆனால் உபத்திரவம் நின்ற

போது, கிறிஸ்துவிடமும் அவரது அப்போஸ்தலர்களிடமும் இருந்த தாழ்மையும் எளிமையும் புறம்பாக ஒதுக்கப்படவே, கிறிஸ்தவ சமயம் நியாய ஸ்தலங்களிலும் அரசர்களின் அரண்மனைகளிலும் நுழைந்தது. தேவன் இருக்கவேண்டிய இடத்தில், மனிதக் கோட்பாடுகளையும் சடங்காச் சாரங்களையும் தேவனுக்குப் பதிலாக வைத்தது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் நிகழ்ந்த, கான்ஸ்டண்டைன் பேரரசனின் பெயரளவிலான மதமாற்றம் மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டுவரவே, போலியான நீதியின் வஸ்திரத்தை அணிந்துகொண்டு உலகம் சபைக்குள் நுழைந்தது. அப்பொழுது கறைகளின் செயல்கள் வேகமாக முன்னேறின. மறைந்தழிந்து விட்டதுபோல் தோற்றமளித்த அஞ்ஞானமார்க்கம் வெற்றி வீரனாக மாறியது. அதன் ஆவி சபையைக் கட்டுப்படுத்தியது; அதன் கோட்பாடுகள், சமயச் சடங்குகள், மூட நம்பிக்கைகள் கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று சொல்லிக்கொண்டவர்களின் விசுவாசத்தில் இணைக்கப்பட்டன. (2)

கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் அஞ்ஞான மார்க்கத்திற்கும் இடையில் உண்டான இந்தச் சமரசம், எதிர்க்கிறவனும், தேவனுக்கு மேலாகத் தன்னை உயர்த்துகிறவனுமான—"பாவமனிதன்" என்று தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டவனுடைய வளர்ச்சிக்கான அமைப்பு—தவறான சமய அமைப்பு, சாத்தானுடைய வல்லமையின் பெரும் படைப்பாகும். சிங்காசனத்தில் அமர்ந்து, உலகை தனது விருப்பப்படி ஆட்சிசெய்யும்படி, அவன் செய்த முயற்சியின் நினைவுச்சின்னமாக அது உள்ளது. (3)

ஒரு தடவை கிறிஸ்துவுடன் சமரசம் செய்துகொள்ள சாத்தான் முயன்றான். சோதனைக்களமாயிருந்த வனாந்தரத்தில், அவன் தேவ குமாரனிடம் வந்து, உலக இராஜ்யங்களனைத்தையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காட்டி, அந்தகாரப் பிரபுவாகிய அவனது மேலாண்மையை அவர் அங்கீகரித்தால், அவைகளையெல்லாம் அவரது கரத்தில் கொடுத்துவிடுவதாகக் கூறினான். இல்லாததை உள்ளதுபோல் பாவித்துப்பேசிய சோதனைக்காரனைக் கிறிஸ்து கடிந்துகொண்டு, அவனை விலகிச்செல்லும்படி நிர்ப்பந்தித்தார்; ஆனால் அதேவிதமான சோதனைகளுடன் அவன் மனிதர்களைச் சந்தித்து வெற்றி அடைகிறான். உலகப்பிரகாரமான ஆதாயங்களையும் கௌரவங்களையும் அடைந்துகொள்ளுவதற்காக, பெரிய மனிதர்களின் உதவியையும் ஆதரவையும் தேடிச்செல்ல சபை நடத்தப்பட்டு, இவ்விதமாக அது கிறிஸ்துவை நிராகரித்து, சாத்தானின் பிரதிநிதியான ரோமப் பேராயரின் உறவைப்பெற இணங்கும்படிக்கு ஈர்க்கப்பட்டது. (4)

உலகெங்கும் உள்ள கிறிஸ்துவின் சபைகளின் தலைவர் போப்பு என்பதும், இவருக்கு உலகெங்குமுள்ள பேராயர்கள் போதகர்கள்மீது

மேலாண்மைமிக்க வல்லமை உள்ளது என்பதும், ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் தலையாய கொள்கைகளில் ஒன்றாகும். இதற்கும் அதிகமாக, போப் தேவத்துவத்தின் பட்டத்தை எடுத்துக்கொண்டார்! போப் கர்த்தராகிய தேவன் என்று அவர் தனக்குப் பெயர் இட்டுக்கொண்டு, தவறா வரமுடையவர் என்றும் கூறிக்கொண்டு, மனிதர்கள் அவரைத் தொழவேண்டும் என்றும் உரிமையுடன் கோருகிறார்! இவ்விதமாகச் சோதனைக்களமான வனாந்தரத்தில் சாத்தான் பாராட்டின அதே உரிமையை, ரோமன் கத்தோலிக்கச் சபையின் மூலமாக வற்புறுத்துகிறான்! ஏராளமான எண்ணிக்கையில் உள்ளவர்கள் போப்பை வணங்க இணங்குகின்றனர்! (5)

ஆனால் கிறிஸ்து கொடிய எதிரியைப் பார்த்து: "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" (லூக்கா 4:8) என்று சொன்னதுபோல, தேவனுக்குப் பயந்து, அவரை வணங்குபவர்கள், பரலோகத்திற் கெதிரான துணிவான இந்த ஏற்பாட்டினை எதிர்க்கின்றனர். சபைக்குத் தலைவராக இருக்கும்படி, தேவன் எந்த ஒரு மனிதனையும் ஏற்படுத்தி யிருப்பதாக, அவரது வார்த்தையில் குறிப்பிடவில்லை. போப்பரசனின் மேலாண்மை என்னும் கோட்பாடு வேதவசனப் போதனைகளுக்கு நேர் எதிரானது. பறித்துக்கொள்வதாலேயே அன்றி, போப்புவிற்குக் கிறிஸ்துவுடைய சபையின்மீது எந்தவித அதிகாரமும் இல்லை. (6)

புரொட்டஸ்டண்டுகள் மதவிரோதிகள் என்றும், வேண்டுமென்றே அவர்கள் சபையைவிட்டுப் பிரிந்துபோகிறவர்கள் என்றும், மதத்திற்கு எதிரான கொள்கையுடையவர்கள் என்றும் அவர்கள்மேல் குற்றச்சாட்டுவதில் ரோமன் கத்தோலிக்கர்கள் பிடிவாதமாகவே இருந்தனர். ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையில் அவர்களுக்குத்தான் பொருந்தும். "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்டதை" (யூதா 3)—கிறிஸ்துவின் கொடியைக் கீழேபோட்டுவிட்டவர்கள்—அவர்கள்தான்! (7)

தன்னுடைய வஞ்சனையை அறியவும், தன்னுடைய வல்லமைக்கெதிராக நிற்கவும், பரிசுத்த வேதவாக்கியங்கள் மனிதர்களுக்கு உதவும் என்பதை சாத்தான் நன்றாக அறிந்திருந்தான். உலக மீட்பருங்கூட வேதவாக்கியங்களின் மூலமாகத்தான் அவனது தாக்குதலை முறியடித்தார்! "என்று எழுதியிருக்கிறதே" என்னும் நித்திய சத்தியமாகிய கேடயத்தை ஒவ்வொரு தாக்குதலின்போதும் காட்டினார். எதிராளியின் ஒவ்வொரு கருத்தையும் வேதவாக்கியத்தின் ஞானத்தினாலும் வல்லமையினாலும் அவர் எதிர்த்தார். மனிதர்களை இழுத்துச் செல்லவும், போப்பு மார்க்கத்தின் அதிகாரத்தை அமைக்கவும், வேதவாக்கியங்களைப்பற்றிய அறியாமையில்

மக்களை வைக்கவும் சாத்தான் விரும்புகிறான். வேதாகமம் தேவனை உயர்த்தி, மனிதர்களை அவர்களது உண்மையான நிலையில் வைக்கும். எனவே, அவைகளின் பரிசுத்தமான சத்தியங்கள் மறைக்கப்பட்டு, அமிழ்த்தப் பட்டாகவேண்டும் என்பதான இந்தத் தர்க்கவியல், ரோமன் கத்தோலிக்க சபையால் கையாளப்பட்டது. வேதாகமம் பரவுவது நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தடைசெய்யப்பட்டது. வேதாகமத்தை வாசிப்பதிலிருந்தும், அவைகளை வைத்திருப்பதிலிருந்தும், மக்கள் தடைசெய்யப்பட்டனர். கொள்கையற்ற பாதிரிமார்களும் உபதேசிகளும், அதன் போதனைகளை அவர்களது நோக்கங்களுக்கு ஏற்றபடி விளக்கினர். இவ்வாறாக, போப்பு, சபை—அரசு ஆகியவைகளின் அதிகாரத்தை பெற்று, கிட்டத்தட்ட எல்லோராலும் தேவனின் பிரதிநிதி (பதிலாளி) என்று ஒப்புக்கொள்ளப்பட்டார் (தவறான விதத்தில்)! (8)

தவறுகளைக் கண்டுபிடிக்கும் கருவியான (வேதாகமம்) நீக்கப் பட்டுவிடவே, சாத்தான் அவனது விருப்பப்படி செயல்பட்டான். “காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான் (மாற்றும்)” என்று தானியேல் 7:25–ல் சொல்லப்பட்டபடி, தீர்க்கதரிசனம் இதை முன்னறிவித்திருந்தது. இந்த முயற்சி தாமதமாகச் செய்யப்படவில்லை. பிற மதத்திலிருந்து மதம்மாறிவருபவர்களின் உருவ வழிபாட்டிற்குத் துணையாக நிற்கவும், அவர்களைப் பெயரளவில் கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளச்செய்யவும்வேண்டி, கிறிஸ்தவ ஆராதனையில் சிலைகளைப் போற்றுகின்ற—துதிபாடுகின்ற, முறைகள் மெல்லமெல்ல அறிமுகப்படுத்தப்பட்டன. கடைசியாக, ஒரு ஆலோசனைக் கூட்டத்தின் தீர்மானத்தின்மூலம், உருவ வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சமய விரோதமான செயலை நிலைப்படுத்த, ரோமன் கத்தோலிக்க சபை, தேவப்பிரமாணத்திலுள்ள உருவ வழிபாடு செய்யக்கூடாது என்கிற இரண்டாம் கற்பனையை நீக்கிவிட்டு, பத்தாவது கற்பனையை இரண்டாகப் பிரித்து, பத்துக் கற்பனைகள் என்ற எண்ணிக்கையைக் காக்க முனைந்தது! (9)

அஞ்ஞான மார்க்கத்திற்குச் சலுகை வழங்கும் ஆவி பரலோக வல்லமையை மேலும் அவமதித்து, தேவன் ஆசீர்வதித்துப் பரிசுத்தப்படுத்திய ஓய்வுநாளை (ஆதியாகமம் 2:2,3) மாற்றியமைத்து, சூரியவணக்கத்திற்குரிய நாளாக—பண்டிகை நாளாக அஞ்ஞானிகள் அனுசரித்துவந்த—ஞாயிற்றுக் கிழமையை உயர்த்தியது. இவ்வாறாகச் சாத்தான் நான்காவது பிரமாணத் திலும் மோசக்கருத்துடன் குறுக்கிட்டான். இந்த மாறுதல் ஆரம்பத்தில் வெளிப்படையாகச் செயல்படவில்லை. முதலாம் நூற்றாண்டின் ஆரம் பத்தில், மெய்யான ஓய்வுநாள் கிறிஸ்தவர்கள் அனைவராலும் அனுசரிக்கப் பட்டிருந்தது. அவர்கள் தேவனை மேன்மைப்படுத்துவதில் அதிக வாஞ்சை

உள்ளவர்களாயிருந்து, தேவப்பிரமாணம் மாறாதது என்று நம்பி, பிரமாணங்களின் பரிசுத்தத்தை வைராக்கியமாகக் காத்துவந்தனர்; ஆனால், சாத்தான் அவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற, மிகவும் தந்திரமாக அவனது ஏவலர்களின் மூலமாகச் செயலாற்றினான். மக்களுடைய கவனத்தை ஞாயிற்றுக் கிழமைக்கு ஈர்ப்பதற்காக, அந்தநாளை கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளின் மேன்மையைப் போற்றும் பண்டிகைநாளாக ஆக்கினான்! சமயச் சடங்குகள் அந்த நாளில் நடத்தப்பட்டன; என்றாலும் அந்தநாள் ஒரு பொழுதுபோக்கு நாளாகவேக் கருதப்பட்டது, ஓய்வுநாள் இன்றும் பரிசுத்த நாளாகவே அனுசரிக்கப்பட்டுவருகிறது. (10)

சாத்தான் அவனது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வழியை ஆயத்தம்செய்யும்படி, கிறிஸ்துவின் மனித அவதாரத்திற்குமுன், ஓய்வுநாளை மிகவும் கடினமான நாளாகவும், அதைக் கடைப்பிடிப்பதை மிகவும் பாரமானதாகவும் மாற்றும்படி யூதர்களை நடத்தினான். இப்பொழுதோ, அதை இப்படிக் கருதும்படியாக அவர்களை நடத்தின தவறான வெளிச்சத்தை அனுகூலமாக எடுத்துக்கொண்டு, ஓய்வுநாள் அனுசரிப்பு ஒரு யூத சமுதாய ஏற்பாடு என்று, அதன்மீது அவமதிப்பை உண்டுபண்ணுகிறான். கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக் கிழமையை ஒரு மகிழ்ச்சிமிக்க பண்டிகை நாளாகத் தொடர்ந்து அனுசரித்தபோது, யூதமார்க்கத்தின்மீதுள்ள அவர்களுடைய வெறுப்பைக் காட்டும்படிக்கு, ஓய்வுநாளை உபவாசநாளாகவும், துக்கமும் வருத்தமும் நிறைந்த நாளாகவும், அனுசரிக்கும்படி அவர்களை நடத்தினான். (11)

நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கான்ஸ்டண்டைன் பேரரசன் ரோம் நாடெங்கிலும் ஞாயிற்றுக்கிழமையை ஒரு பண்டிகைநாள் என்று கட்டளை பிறப்பித்தான். அவனுடைய அஞ்ஞானக் குடிமக்கள் சூரியனின் நாளை வணக்கத்திற்குரிய நாளாக்கினர். கிறிஸ்தவர்களால் அது மேன்மைப்படுத்தப்பட்டது. ஒன்றையொன்று எதிர்க்கின்ற அஞ்ஞானமார்க்கம் கிறிஸ்தவமார்க்கம் ஆகிய இரண்டின் விருப்பங்களையும் ஒருமைப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டும் என்பது பேரரசனின் குறிக்கோளாயிருந்தது. ஒரேநாள் அஞ்ஞான மார்க்கத்தினராலும் கிறிஸ்தவர்களாலும் ஆசரிக்கப்பட்டால், அது பெயரளவிலான கிறிஸ்தவமார்க்கத்தை, அஞ்ஞான மார்க்கத்தினர் ஏற்றுக்கொள்ள வழி வகுக்கும். அதனால் சபையின் வல்லமையும் மகிமையும் உயரும் என்ற ஆசையாலும், ஆதிக்க வெறியினாலும், சபையின் பேராயர்கள் இதைச் செய்யும்படியாக பேரரசனை வற்புறுத்தினார்கள். ஞாயிற்றுக்கிழமை ஓரளவிற்குப் பரிசுத்தமானது என்று கருதும்படி, கிறிஸ்தவர்கள் மெதுவாக நடத்தப்பட்டபோதிலும், அவர்கள் இன்னும் நான்காவது கற்பனைக்குக் கீழ்ப்படிந்து, உண்மையான ஓய்வுநாள் கர்த்தருக்குப் பரிசுத்தமானது என்று கடைப்பிடித்திருந்தனர். (12)

பிரதான வஞ்சகன் அவனது செயலை இத்துடன் முடிக்கவில்லை. கிறிஸ்தவ உலகத்தை அவனது கொடியின்கீழ் கொண்டுவரவும், அவனது பிரதிநிதிகளாயிருந்து, கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டிருந்த பிரதான பிஷப் (போப்) மூலமாக அவனது வல்லமையைச் செயல்படுத்தவும், தீர்மானித்திருந்தான். அரைகுறையாக மனந்திரும்பின அஞ்ஞானிகள் மூலமாகவும், பேராசைமிக்க பாதிரிமார்களின் மூலமாகவும் உலக ஆசையுடைய சபை பிஷப்புகள் மூலமாகவும் அவனுடைய நோக்கத்தை நிறைவேற்றினான். சபையின் மேலான—மதிக்கப்படும் பொறுப்புகளிலிருந்தவர்கள் உலகெங்கிலும் இருந்து அழைக்கப்பட்டு பெரும் ஆலோசனைக்கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டன. ஒவ்வொரு ஆலோசனைக்கூட்டத்திலும், தேவன் ஏற்படுத்தின ஓய்வுநாளானது கீழாகத் தாழ்த்தப்பட்டு, அதற்குச் சமமாக ஞாயிற்றுக்கிழமை மேலாக உயர்த்தப்பட்டது! இவ்வாறாக, அஞ்ஞானத் திருவிழா தெய்வீக ஏற்பாடு என்று மேன்மைப்படுத்தப்பட்ட அதேநேரத்தில், வேதாகம ஓய்வுநாள் யூதர்களின் ஞாபகச்சின்னம் என்று சொல்லப்பட்டு, அதை ஆசரிப்பவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது! (13)

“தேவன் என்னப்படுவது எதுவோ, அவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவன்” (2 தெசலோனிக்கேயர் 2:4) என்று கூறப்பட்டபடியே பெரும் மாயக்காரன் தன்னை உயர்த்துவதில் வெற்றியடைந்தான். மனித இனம் முழுவதற்கும் உண்மையும் ஜீவனுமுள்ள தேவனைத் தவறின்றிச் சுட்டிக்காட்டுகின்ற, ஒரே தெய்வீகப் பிரமாணத்தை மாற்ற அவன் துணிந்தான். நான்காம் பிரமாணத்தில், வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணின சிருஷ்டிகராக தேவன் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். அதன்மூலமாக, பொய்யான தேவர்கள் அனைவரிலிருந்தும் அவர் வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கிறார். சிருஷ்டிப்பின் நினைவுச் சின்னமாக—ஏழாவதுநாள்—மனிதனின் ஒரு ஓய்வுநாளாக இருக்கும்படி பரிசுத்தப்படுத்தப்பட்டது. ஜீவனுள்ள தேவனை, ஜீவனுக்கு ஆதாரமானவராகவும், பயபக்திக்கும் தொழுகைக்கும் இலக்கானவராகவும், மனிதர்களின் மனதில் எப்பொழுதும் வைத்திருக்கும்படி, அது வடிவமைக்கப்பட்டது.... மனிதர்களை தேவனிடமுள்ள பிணைப்பிலிருந்தும், அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதிலிருந்தும் பிரிக்க சாத்தான் முயலுகிறான்; எனவேதான், தேவனைச் சிருஷ்டிகர் என்று சுட்டிக்காட்டுகின்ற, சிறப்பான அந்தக் கற்பனைக்கெதிராகச் செயல்படும் முயற்சியில் ஈடுபடுகிறான். (14)

ஞாயிற்றுக்கிழமையில் நிகழ்ந்த கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அந்நாளைக் கிறிஸ்தவ சபையின் ஓய்வுநாளாக ஆக்கியது என்று புரொட்டஸ்

டாண்டுகள் கூறுகின்றனர்; ஆனால், அதற்கான வேதாகம ஆதாரம் இல்லை. கிறிஸ்துவினாலோ அல்லது அவரது சீடர்களாலோ அந்த நாளுக்கு அப்படிப்பட்ட மேன்மை அளிக்கப்படவில்லை. "அக்கிரமத்தின் இரகசியம்" என்பதில்—ஞாயிறு ஆசரிப்பின் ஆரம்பம் ஒரு பொய்க் கிறிஸ்தவ ஏற்பாடு என்கிற பொருள் அடங்கியுள்ளது. இந்த வேலை பவுலின் நாட்களிலேயே ஆரம்பமாகி இருந்தது. போப்பு மார்க்கத்தின் இந்தப் பிள்ளையைக் கர்த்தர் எப்போது எங்கே சுவீகாரம் செய்தார்? வேதவாக்கியங்கள் அனுமதிக்காத இந்த மாற்றத்திற்கு ஏற்ற—பொருத்தமான காரணமாக எதனைக் காட்டமுடியும்? (15)

ஆறாம் நூற்றாண்டில் போப்பு மார்க்கம் உறுதியான வகையில் ஏற்படுத்தப்பட்டுவிட்டது. ரோம் நகரம் அதன் வல்லமையின் இருப்பிடமாகவும், ரோம் நகரப் பேராயர் சபை முழுவதற்கும் தலைவர் என்றும் அறிவிக்கப்பட்டார். அஞ்ஞான மார்க்கம் போப்புமார்க்கத்திற்கு இடம்கொடுத்திருந்தது. "வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது"– வெளி. 3:2. இப்பொழுது தானியேலின் தீர்க்கதரிசனத்திலும் வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்திலும் உள்ள 1260 வருட போப்புமார்க்கத்தினரின் ஒடுக்குதல் ஆரம்பமானது (தானி. 7:25; வெளி. 13:5–7). கிறிஸ்தவர்கள் போப்பு மார்க்கத்தின் சடங்குகளையும் தொழுகை முறைகளையும் ஒப்புக்கொண்டு, அதன் மேன்மைக்குப் பணியவேண்டும்; அல்லது அவர்களுடைய வாழ்நாளை நிலவறையில் கழிக்கவேண்டும்; அல்லது சித்திரவதை செய்யும் கருவியால் சாகவேண்டும்; அல்லது உயிருடன் எரிக்கப்படவேண்டும்; அல்லது கொலைஞரின் கோடாலியால் தலை வெட்டப்படவேண்டும். இப்படிப்பட்ட மரணங்களிலொன்றை அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். "பெற்றோராலும் சகோதரராலும் சொந்த ஜனங்களாலும் சிநேகிதராலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள்; உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள். என் நாமத்தினிமித்தம் எல்லோராலும் பகைக்கப்படுவீர்கள்" (லூக்கா 21:16,17) என்ற இயேசுவின் வார்த்தைகள் இப்போது நிறைவேறின. முன்னெப்போதும் இருந்ததைவிடவும், மிக மூர்க்கமான உபத்திரவம் விசுவாசிகளுக்கு உண்டானது. உலகம் ஒரு பெரிய போர்க்களமாயிற்று. நூற்றுக்கணக்கான வருடங்கள் கிறிஸ்துவின் சபை தனிமையிலும், இருளிலும் தஞ்சஞ்கொண்டிருந்தது. தீர்க்கதரிசி இதைக்குறித்து: "ஸ்திரீயானவள் வனாந்தரத்துக்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது" (வெளி. 12:6) என்று கூறுகிறார். (16)

ரோமன் கத்தோலிக்கச் சபை ஆட்சிபீடம் ஏறியது, இருண்ட காலத்தின் ஆரம்பத்தைக் குறிப்பிட்டுக்காட்டுகிறது! அவனது வல்லமை அதிகரித்தபோது, இருள் அதிகரித்தது. விசுவாசம், மெய்யான அஸ்திவாரமாயிருக்கும் கிறிஸ்துவிடமிருந்து (ரோமின் மேல்) போப்புவிற்கு மாற்றப்பட்டது. பாவ மன்னிப்பிற்கும்—நித்திய மீட்பிற்கும், தேவகுமாரனின்மீது நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக, மக்கள் போப்புவையும் அவரால் அதிகாரம்பெற்ற குருமார்களையும் நோக்கினார்கள். உலகிலுள்ள அவர்களது மத்தியஸ்தர்—போப்பு என்றும், ஒருவரும் அவர் மூலமாக அல்லாமல் தேவனை அணுக முடியாதென்றும், கடவுளுக்குப் பதிலாக நிற்கும் போப்புவிற்குத் தவறாமல் கீழ்ப்படியவேண்டுமென்றும் மக்கள் கற்பிக்கப்பட்டனர்; இந்தக் கட்டளையைவிட்டுவிலகி—அதை மீறுபவர்கள், சரீர—ஆத்தும தண்டனைகளை அனுபவிப்பதற்கு அதுவே போதுமான காரணமாயிருந்தது. இவ்வாறாக, மக்களின் இதயங்கள் தேவனிடமிருந்து, தவறக்கூடிய—தவறிக்கொண்டிருக்கின்ற—கொடுமையான மனிதர்களிடத்திற்கு மட்டுமல்ல, அதையும் கடந்து, இவர்கள்மூலமாகச் செயலாற்றும் அந்தகாரப் பிரபுவினிடத்திற்கும் திருப்பப்பட்டது. பாவம்—பக்தி என்ற ஆடைக்குள் மறைந்துகொண்டது. வேதவாக்கியங்கள் நசுக்கப்படும்போது, மனிதன் தன்னையே மேலானவனாகக் கருத ஆரம்பிக்கிறான். அப்போது நாம் ஏமாற்றுதல்களையும், வஞ்சகங்களையும், கீழ்த்தரமாக்கும் அக்கிரமங்களையும்தான் காணவேண்டியதிருக்கும். மனிதச் சட்டங்களினாலான சடங்காச்சாரங்களின் உயர்வால், தேவப்பிரமாணங்களை ஒதுக்கிவைக்கும் ஊழல்கள் வெளித்தோன்றின. (17)

கிறிஸ்துவின் சபைக்கு அந்த நாட்கள் அபாயகரமானவையாக இருந்தன. விசுவாசத்துடன் பரிசுத்த தரத்தைக் காத்திருந்தவர்கள் உண்மையில் மிகச் சிலராகமட்டுமே இருந்தனர். சத்தியம் சாட்சியற்ற நிலையில் விடப்படாமலிருந்தாலுங்கூட, சில சமயங்களில் தவறுகளும் மூடநம்பிக்கைகளும் அதை முற்றிலுமாக மேற்கொண்டுவிடும் என்பதுபோல் காணப்பட்டு, உண்மையான மதம் தடைசெய்யப்பட்டு, பூமியிலிருந்து நீக்கப்பட்டுவிடக்கூடும் என்பதுபோலும் காணப்பட்டது. சுவிசேஷம் பார்வையிலிருந்து மறைந்தது. ஆனால் மதவடிவங்கள் பெருகின. மக்கள் மிகக் கடுமையான சமயச் சடங்குகளின் கட்டுப்பாடுகளினால் பாரப்படுத்தப்பட்டனர். (18)

அவர்கள் போப்புவை மட்டும் அவர்களது மத்தியஸ்தராகக் கருதாமல், பாவப்பரிகாரத்திற்கு அவர்களுடைய சொந்தக் கிரியைகளை நம்பும்படியும் கற்பிக்கப்பட்டனர். நீண்ட புண்ணியஸ்தலப் பயணங்கள், பாவப்பரிகாரச் செயல்கள், புனிதச் சின்னங்களை வணங்குதல், சபைக்கான கட்டிடங்களைக் கட்டுதல், புண்ணிய ஸ்தலங்களை அமைத்தல், பலிபீடங்கள்

கட்டுதல், பெரும் தொகையைச் சபைக்குக் கொடுத்தல், போன்ற மற்றும் அநேக செயல்களினால், தேவ கோபத்திற்குப் பரிகாரம் உண்டுபண்ணி, தேவனைச் சமாதானப்படுத்தி, அவரிடமிருந்து அனுகூலங்களைப் பெறலாம் என்றும் போதிக்கப்பட்டனர். இது, அற்பமான காரியங்களுக்காகக் கோபமடைகின்றதும், மனிதனின் பரிகாரச் செயல்களினாலும் பரிசுகளினாலும் சாந்தம் அடைகின்றதுமான குணமுடையவராக தேவனைக் காட்டியது. (19)

இவைமட்டுமன்றி, ரோமன் கத்தோலிக்க மதத்தலைவர்களுக் கிடையில் துர்க்குணங்களும் தீய பழக்கங்களும் இருந்து, அதன் செல்வாக்கு தொடர்ந்து அதிகரிப்பதுபோல் காணப்பட்டது. எட்டாம் நூற்றாண்டின் முடிவில், அப்போதைய பிஷப்புகளிடம் இருந்த ஆவிக்குரிய வல்லமை, முதலாம் நூற்றாண்டில் இருந்த பிஷப்புகளிடமுமிருந்தது என்று அவர்கள் உரிமைகொண்டாடினர். இந்தக் கூற்றின் உரிமையை நிலைநாட்ட, அதன் வல்லமையின் அடையாளத்தைக் காட்ட, ஏதாவது செய்தாகவேண்டியதிருந்தது. இந்தக்கருத்தைப் பொய்யின் பிதாவானவன் தயாராகக் கொண்டுவந்தான். பழங்கால எழுத்துக்கள், சந்நியாசிகளால் பொய்க்கையெழுத்தால் எழுதப்பட்டன. போப்பின் உலகளாவிய மேலாண்மை பழங்காலத்திலிருந்தே உள்ளது என்பதை ஸ்தாபிக்கும்படி இதுவரை கேள்விப்படாத ஆலோசனைக் கூட்டங்களின் கட்டளைகள் கண்டுபிடிக்கப்பட்டன. சத்தியத்தை நிராகரித்த சபைகள் இந்த ஏமாற்றும் செயல்களை பேராசையுடன் ஏற்றுக்கொண்டன. (20)

குப்பையும் தவறுமான கோட்பாடுகள் ஊழியத்தைத் தடுத்ததினால், மெய்யான அஸ்திவாரத்தின்மேல் கட்டிடம் எழுப்பின சில விசுவாசிகள் கலக்கமும் இடைஞ்சலும் அடைந்தனர். "சுமைகாரரின் பெலன் குறைந்துபோகிறது. மண்மேடு மிச்சமா யிருக்கிறது; நாங்கள் அலங்கத்தைக் கட்டக்கூடாது" (நெகேமியா 4:10) என்று நெகேமியாவின் நாளில் எருசலேமின் சுவரை எடுத்துக்கட்டினவர்கள் சொன்னதுபோல, சிலர் சொல்லுவதற்குத் தயாராக இருந்தனர். உபத்திரவத்திற்கெதிரான தொடர்ச்சியான போராட்டம், ஏமாற்றுதல், அக்கிரமம் ஆகியவைகளினாலும் அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்கச் சாத்தான் செய்த ஒவ்வொருவிதமான இடையூறுகளினாலும் சிலர் களைப்படைந்தனர். விசுவாசத்துடன் கட்டின சில கட்டிடப் பணியாளர்கள், இதயம் சோர்ந்து, தங்களுடைய சொத்துக்களையும் உயிரையும் பாதுகாப்பதற்காக மெய்யான அஸ்திவாரத்தைவிட்டு விலகிச் சென்றனர். அவர்களது எதிரிகளினால் உண்டான எதிர்ப்பைக் கண்டு கலங்காத மற்றவர்கள், "அவர்களுக்குப் பயப்படாதிருங்கள், நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை

நினைத்து....” என்றபடி... வேலைசெய்யச் சென்றார்கள். “கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டவர்களாய் கட்டினார்கள்” (நெகேமியா 4:14, 18; எபே. 6:17). (21)

சத்தியத்திற்கெதிரான வெறுப்பும் எதிர்ப்புமிக்க அதே ஆவி, தேவனுடைய எதிரிகளை ஒவ்வொரு காலத்திலும் தூண்டிக்கொண்டிருந்தது. அதைப்போலவே, தேவனுடைய ஊழியக்காரர்களிடம் அதே ஜாக்கிரதையும் நேர்மையும் எதிர்பார்க்கப்படுகிறது. “நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லோருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்” (மாற்கு 13:37) என்று கிறிஸ்து அவரது முதல் சீடர்களுக்குச் சொன்ன வார்த்தைகள் காலத்தின் முடிவிலுள்ள நமக்குங்கூட பொருந்தக்கூடியதே! (22)

இருள், காரிருள் ஆவதைப்போல் தோன்றினது. உருவ வழிபாடு மிகவும் அதிகமாகி, சாதாரணமாகிவிட்டது! சிலைகளுக்கு முன் மெழுகுவர்த்திகள் எரிக்கப்பட்டு, அவைகளை நோக்கி ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. மிகக் கீழ்த்தரமான மூடநம்பிக்கைகள்மிக்க சம்பிரதாயங்கள் நிலவிவந்தன. பகுத்தறிவே இல்லாமல் போய்விட்டதோ என்று எண்ணுமளவிற்கு மனிதர் களின் மனங்கள் மூட நம்பிக்கையால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. உலகப்பிரகாரமான மகிழ்ச்சியை நாடி, உணர்ச்சிகளின்படி நடந்த ஊழல் மிக்க குருமார்களையும் பேராயர்களையும் வழிநடத்துதலுக்காக நோக்கிப் பார்த்த மக்கள் அறியாமையிலும் தீய குணங்களிலும் மூழ்கி இருப்பார்கள் என்றுதான் எதிர்பார்க்கமுடியும். (23)

ரோமன் கத்தோலிக்க சபை பரிபூரணமானது என்று பதினோராம் நூற்றாண்டில் ஏழாம் கிரகோரி என்ற போப்பின் நிர்வாக அமைப்பு பறைசாற்றிய செயல் அகந்தையின் அடுத்த படிக்கட்டாக இருந்தது. வேத வாக்கியங்களின்படி சபை ஒருபோதும் தவறியதில்லை; அது ஒருபோதும் தவறவும்செய்யாது என்பது அவரால் முன்வைக்கப்பட்ட அறிவிப்பு களில் ஒன்றாகும்; ஆனால், வேதவாக்கியச் சான்றுகள் இதற்கு இசைவாக இருக்கவில்லை. அகந்தைமிக்க அந்தப் போப்பானவர் அடுத்து, “பேரரசர் களையும் நீக்கும் வல்லமை தனக்கு உண்டென்றும், அவரால் கொடுக்கப் பட்ட தண்டனையை எவராலும் மாற்றி எழுத இயலாது என்றும், ஆனால், அவைகளைத் திரும்பவும் மாற்றும் முன்னுரிமை அவர் ஒருவருக்கு மட்டும் உண்டு” என்றும் அறிவித்தார்.(24)

நான்காம் ஹென்றி எனும் ஜெர்மானியப் பேரரசனை அவர் நடத்தியவிதம் தவறா வரம் பெற்றவர் என்று தன்னைப்பற்றிக்கூறும் போப்புவின் கொடுங்கோன்மையான சுபாவத்தை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. போப்புவின் அதிகாரத்தை மதிக்காமலிருக்க உத்தேசித்ததற்காக,

அந்தப் பேரரசன் சபையிலிருந்து தள்ளிவைக்கப்பட்டு, சிங்காசனத்திலிருந்தும் நீக்கப்பட்டான். போப்புவின் உத்திரவினால் அவனுக்கெதிராகக் கலகம் செய்யும்படித் தூண்டிவிடப்பட்ட அவனது சொந்த இளவரசர்களால் அவன் கைவிடப்பட்டு, அவர்களால் உண்டான பயமுறுத்தல்களினால் திகைப் படைந்தவனாக, போப்புவுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தான். போப்புவின்முன் தன்னைத் தாழ்த்து வதற்காக, அவன் அவனுடைய மனைவியுடனும் விசுவாசமிக்க வேலைக்காரன் ஒருவனுடனும் அந்த குளிர்காலத்தின் மத்தியில் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து சென்றான். மெய்க்காப்பாளர்கள் எவருமின்றி, போப் கிரகோரி தங்கியிருந்த கோட்டைக்கு அவன் நடத்திச்செல்லப்பட்டு, அங்கு திறந்தவெளியில், தலைப்பாகையும் காலணியும் இல்லாது, மோசமான உடையில், கடும் குளிரில், போப்புவைக் காணும்படிச் செல்லும் அனுமதிக்காகக் காத்து நின்றான். மூன்று நாட்கள் அவன் உபவாசித்துப் பாவஅறிக்கை செய்யும்வரை போப்பு அவனுக்கு மன்னிப்புக் கொடுக்க இரங்கவில்லை; அதற்குப்பின்னரும், காத்திருக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்தான் அவனது பதவியின் அடையாளத்தையும், அரச உரிமையையும் திரும்பப் பெற்றான். அரசர்களின் பெருமையைக் கீழ்ப்படுத்துவது தனது கடமை என்று போப் கிரகோரி தனது வெற்றியைக் குறித்துப் பெருமையடித்துக்கொண்டார். (25)

“உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்” (மத்தேயு 20:27) என்று தன் சீடர்களுக்குப் போதித்து, சமாதானத்தையும் மன்னிப்பையும் கொண்டுவருவதற்காக இதயக் கதவைத் தட்டுபவராகத் தன்னைக்காட்டும் எளிமையும் சாதுவுமான கிறிஸ்துவிற்கும், தன்னைப்பற்றி மிகையாக எண்ணும் இறுமாப்புமிக்க போப்புவிற்கும் இடையிலுள்ள ஒப்புவமை எவ்வளவு வினோதமாக உள்ளது! (26)

அதற்கடுத்த நூற்றாண்டுகள் ரோமன் கத்தோலிக்க மார்க்கம் முன்வைத்த, தொடர்ச்சியான—அதிகமான தவறுகளுக்குச் சாட்சி பகர்ந்தன. போப்புமார்க்கம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பே, அஞ்ஞான தத்துவ சாஸ்திர போதனைகள் சபைக்குள் கொண்டுவரப்பட்டு செல்வாக்கைப் பெற்றிருந்தது. மதம்மாறிவிட்டதாகச் சொல்லிக் கொண்ட அநேகர், அவர்களுடைய அஞ்ஞான மார்க்கக் கோட்பாடு களையே தொடர்ந்து பற்றிக்கொண்டிருந்து, அதையே ஆராய்ந்து கொண்டிருந்ததோடல்லாமல், அஞ்ஞானிகளிடத்தில் கிறிஸ்தவ செல்வாக்கு விரிவடைய, அது ஆதாரமாயிருக்கும் என மற்றவர்களிடமும் அதை வற்புறுத்தினர். இவ்விதமாகக் கிறிஸ்தவ விசவாசத்திற்குள் ஆபத்தான தவறுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இயற்கையில் மனிதன் அழியகூடியவனல்ல, மரணத்தில் அவனுக்கு நினைக்கும் ஆற்றல் உண்டு

என்பது இவைகளில் மிக முக்கியமான தாகும். மரித்த பரிசுத்தவான்களை நோக்கி, உதவிகேட்டு மன்றாடு தல், கன்னிமரியாளைப் போற்றுதல் ஆகிய ரோமன் கத்தோலிக்க சபையின் ஏற்பாட்டிற்கு இந்தக் கோட்பாடுதான் அஸ்திவாரமிட்டது. இதிலிருந்துதான் போப்புமார்க்கத்தின் ஆரம்பகாலத்தில் ஏற்படுத்தப் பட்ட, பாவமன்னிப்புப் பெறாதவர்கள் கடைசியாக நித்திய காலமாக வாதிக்கப்படுவார்கள் என்ற மதப்புரட்டும் துளிர்த்தது. (27)

அதன்பின், எளிதில் நம்பக்கூடிய மூடநம்பிக்கையுள்ள ஏராள மானவர்களைப் பயப்படுத்த—உத்தரிக்கிறஸ்தலம் என்னும் மற்றொரு அஞ்ஞான மார்க்கக் கோட்பாட்டைத் தழுவிய கண்டுபிடிப்பை அறிமுகப் படுத்துகின்ற பாதை ஆயத்தம் செய்யப்பட்டது. இதனால், நித்திய ஆக்கினைக்குட்படுத்தப்படாத பாவிகளின் ஆத்துமாக்கள்—தங்களுடைய சொற்ப பாவங்களுக்காகத் தண்டிக்கப்படுகின்ற ஒரு இடமுண்டென்றும், அங்கிருந்து அசுத்தங்கள் நீக்கப்பட்டுத் தூய்மை அடைந்தபின், அவர்கள் பரலோகத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்கிற மதவிரோத நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டது. (28)

ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தைப் பின்பற்றுகிறவர் களிடமிருந்த கெட்டபழக்கங்களுக்காக, அவர்களைப் பயப்படுத்தி, அதனால் லாபமடைய வழிவகுக்கும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. பாவ மன்னிப்புப் பெறுதல் என்னும் கோட்பாடு இதற்குத் துணையாக்கப்பட்டது. போப்புவின் ஆளுகையின் இடத்தை விரிவாக்கவும், அவருடைய விரோதிகளைத் தண்டிக்கவும், அவரது ஆவிக்குரிய மேலாண்மையை மறுப்பவர்களைப் பூமியிலிருந்து அழிக்கவும் அவருடன் சேருகிறவர்களுக்கு, அவர்களுடைய கடந்தகால— நிகழ்கால— எதிர்காலப் பாவங்களுக்கான வேதனையிலிருந்தும் தண்டனையிலிருந்தும் பாவமன்னிப்பும் விடுதலையும் வாக்குத்தத்தம்செய்யப்பட்டது. அத்துடன் சபைக்குப் பணம் கொடுத்தால், அவர்களுடைய பாவங்களிலிருந்து அவர் களுக்கு விடுதலை கிடைக்குமென்றும், போதிக்கப்பட்டனர்; இப்படிப்பட்ட வழிகளினால், தலைசாய்க்க இடமில்லை என்று சொன்னவரில் இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டவர்கள், தங்களது மிக மேலான ஆடம்பரத்திலும் தீய பழக்கங்களிலும் தொடர்ந்து நிலைத்திருப்பதற்காக தங்களுடைய கருவூலங்களை நிரப்பினார்கள்! (29)

வேதவாக்கியத்திற்கு இசைவான கர்த்தருடைய திருவிருந்துக் கட்டளைக்குப் பதிலாக, விக்கிரக ஆராதனையான திருப்பலிப் பூசையை ஏற்படுத்தினார்கள். போப்பு மார்க்கக் குருமார்கள் தங்களுடைய போலியான அறிவற்ற ஆராதனை நாடகத்தினால், அப்பத்தையும் திராட்சைரசத்தையும் உண்மையாகக் கிறிஸ்துவின் சரீரமாகவும்

இரத்தமாகவும் மாற்றுவதாகச் சொல்லிக்கொண்டனர்; —Cardinal Wiseman, *The Real Presence of the Body and Blood of Our Lord Jesus Christ in the Blessed Eucharist, Proved From Scripture,* lecture 8, sec. 3, par. 26 .இவ்விதமாக, எல்லாவற்றையும் சிருஷ்டித்த சிருஷ்டிகரைச் சிருஷ்டிக்கும் வல்லமை தங்களிடம் உள்ளதாகக் கற்பனைசெய்து, தூஷணமான துணிகரத்தையும் உரிமைபாராட்டினார்கள். பரலோகத்தை நிந்திக்கும் இந்த பயங்கரமான மதவிரோதச் செயலின்மீது, சகல கிறிஸ்தவர்களும் மரணதண்டனையின் அடிப்படையில் விசுவாசம் வைக்கவேண்டும் என்று வற்புறுத்தப் பட்டனர். இதனை மறுத்த ஏராளமானவர்கள் இரும்புக் கம்பங்களில் கட்டப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டனர். (30)

பதிமூன்றாம் நூற்றாண்டில், போப்புவை ஆதரிக்கும் தீவிரவாதிகள் இயக்கம் அமைக்கப்பட்டு, விசுவாசக் குறைவைப்பற்றி நடத்தின விசாரணை, மிகவும் பயங்கரமானதாயிருந்தது. போப்பு மார்க்கத்தின் தலைவர்களுடன் அந்தகாரப் பிரபு செயலாற்றினான். சாத்தானும் அவனது தூதர்களும் நடத்திய இரகசிய ஆலோசனைக்கூட்டங்களின் மூலமாக, தீய மனிதர்களின் மனதைக் கட்டுப்படுத்தினார்கள். மனிதக் கண்களுக்கு மிகவும் பயங்கரமாகத் தோன்றக்கூடிய, சகிக்கமுடியாத அக்கிரமம் மிகுந்த இந்தத் தீர்மானங்களை, கண்களுக்குப் புலப்படாமல் அவர்கள் நடுவில் நின்ற தேவதூதன் மனித செயல்களின் வரலாற்றில் பதிவுசெய்தான். மகா பெரிய பாபிலோன், பரிசுத்தவான்களின் இரத்தத்தினால் வெறிகொண்டிருந்தது. இந்த மருளவிழுந்த வல்லமையின்மீது, பழிவாங்கும் நடவடிக்கை எடுக்கும்படி, இரத்த சாட்சிகளாக இறந்துபோன இலட்சக்கணக்கானவர்கள் தேவனை நோக்கி மரணச் சமயத்தில் கதறினர். (31)

போப்புமார்க்கம் உலகின் எதேச்சாதிகாரியானது. ரோமப்போப்புவிற்கு அரசர்களும் பேரரசர்களும் அடிபணிந்தனர். மனிதர்களின் விதி நிகழ்காலத்திற்கும் நித்தியகாலத்திற்கும் அவரது ஆதீனத்திற்குள் இருப்பதுபோல் காணப்பட்டது. நூற்றுக்கணக்கான வருடங்களாக, ரோமன் கத்தோலிக்க சபைக்கோட்பாடுகள் விரிவாகவும் தவறாமலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் சமயச் சடங்குகள் பக்திவிநயத்துடன் செய்யப்பட்டு, அதன் குருமார்கள் சிறப்பிக்கப்பட்டு, தாராளமான சேவைகளினால் தாங்கப்பட்டனர். இதுபோன்ற பெரிய மதிப்பையும் பெரும் உருவத்தையும் வல்லமையையும் ரோமன் கத்தோலிக்கச் சபை ஒருபோதும் பெற்றிருக்கவில்லை. (32)

**“போப்புமார்க்கத்தின் நண்பகலாக இருந்த காலங்கள் உலகின் நடு இரவாக இருந்தது!”**—J. A. Wylie, *The History of Protestantism,* b. 1, ch. 4. வேதவாக்கியங்கள் மக்களுக்கு மட்டுமின்றி, குருமார்களுக்கும்

தெரியாததாக இருந்தது. போப்புமார்க்கத் தலைவர்கள், அவர்களது பாவங்களை வெளிக்காட்டக்கூடிய ஒளியை, பழங்காலத்தில் பரிசேயர்கள் வெறுத்ததுபோல வெறுத்தனர். நீதியின் தரத்தை அறிவிக்கின்ற தேவப் பிரமாணம் நீக்கப்பட்டுவிடவே, அவர்கள் எல்லையில்லாத வல்லமை உள்ளவர்களாகி, எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி, தீய பழக்கங்களில் ஈடுபட்டனர். ஏமாற்றுதல், வெறுப்பு, கீழ்த்தரமான செயல்கள் ஆகியவை நிலவி இருந்தன. செல்வத்தையும் பதவியையும் பெற்றுக்கொள்வதற்காக, குற்றம் செய்யவும் மனிதர்கள் பின்வாங்கவில்லை. போப்புமார்கள், குருமார்கள் ஆகியோரின் அரண்மனைகளில் மிக மோசமான குடிப்பழக்கம், விபசாரம் ஆகிய காட்சிகள் நிறைந்திருந்தன. சபையில் சிறப்புக்குரியவர்கள் என்று எண்ணப்பட்டு ஆளுகை செய்துவந்த சில பேராயர்களின் படுமோசமான குற்றங்களை, மதச்சார்பற்ற அதிபதிகள் வெளிக்காட்டி, இவர்களை சகிக்கமுடியாத இராட்சதர்கள் என்று அறிவிக்கமுயன்றனர். ஐரோப்பா ஐரோப்பா நூற்றுக்கணக்கான வருடங்களாக கல்வியிலும் கலையிலும் நாகரிகத்திலும் முன்னேற்றமில்லாத நாடாக இருந்தது. கிறிஸ்தவ சமூகத்தில் இருந்த சன்மார்க்கம், அறிவியல் ஆகியவைகளை பக்கவாதம் என்கின்ற பெரும்நோய் தாக்கியது. (33)

போப்புமார்க்க ஆட்சியின் வல்லமையின் கீழ், “என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன். இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; தேசத்துக் குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; அதேனென்றால் தேசத்திலே உண்மையும் இல்லை, இரக்கமும் இல்லை; தேவனைப்பற்றிய அறிவும் இல்லை. பொய்யாணையிட்டு, பொய்சொல்லி, கொலைசெய்து, திருடி, விபசாரம்பண்ணி, மிஞ்சி மிஞ்சிப்போகிறார்கள்; இரத்தப்பழிகளோடே இரத்தப்பழிகள் சேருகிறது” (ஓசியா 4:6,1,2) என்ற தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின. வேத வசனங்களை நீக்கியதினால் அந்த நிலை ஏற்பட்டது! (34) ★

# 4

# வாழ்வாங்கு வாழ்ந்த வால்டென்னியர்கள்!

**(மூலநூல் : The Great Controversy பக்கம் : 61–78)**

போப்புமார்க்கத்தின் நீண்டகால மேலாதிக்கத்தினால் பூமியின்மீது நிலவியிருந்த இருளுக்கு மத்தியில், சத்தியத்தின் ஒளி முற்றிலுமாக அழிக்கப்படவில்லை. தேவனுக்கும்—மனிதனுக்கும் இடையிலுள்ள மத்தியஸ்தர் கிறிஸ்து ஒருவரே; வேதாகமம்தான் வாழ்க்கையின் சட்டம்; அதனைப் பற்றிக்கொண்டு மெய்யான ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிப்பதே கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசமாகும்; இப்படிப்பட்ட விசுவாசத்தை வளர்த்திருந்த தேவனுடைய மனிதர்கள் ஒவ்வொரு காலத்திலும் இருந்தனர். இந்த மனிதர்களுக்கு உலகம் எவ்வளவு கடன்பட்டிருக்கிறதென்பதை பின்சந்ததியார்கள் அறியார்கள். அவர்கள் மதவிரோதிகளென்று அடையாளமிடப்பட்டனர். அவர்களது எழுத்துக்கள் அடக்கப்பட்டு, தவறெனத் திரித்துக் கூறப்பட்டன அல்லது சிதைக்கப்பட்டன. அப்படியிருந்தும் காலங் காலமாக தங்களுடைய விசுவாசத்தை அவர்கள் அதன் தூய்மையில் காத்துக்கொண்டிருந்தனர். இதை அவர்கள் தங்களின் பின்சந்ததியினருக்குப் பரிசுத்தமான பிறப்புரிமையாக வைத்துச் சென்றனர். (1)

ரோமன் கத்தோலிக்க சபையின் மேலாதிக்கத்தைத் தொடர்ந்து இருண்டகாலம் உண்டானது. இந்தக் காலத்தில் இருந்த தேவனுடைய மக்களின் வரலாறு பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளது; ஆனால் மனித ஆவணங் களில் அவை சொற்ப இடம்தான் பெற்றுள்ளன. அவர்களை உபத்திரவப்படுத்தினவர்கள் அவர்கள்மீது சுமத்திய குற்றச்சாட்டுகளைத் தவிர அவர்களது வாழ்க்கையைப்பற்றிய சில அறிகுறிகள் மட்டுமே

காணப்படக்கூடும். ரோமன் கத்தோலிக்க சபையின் கோட்பாடுகளுக்கு எதிரான—மனிதர்களானாலும்—எழுத்துக்களானாலும் அனைத்தும் அழிக்கப் பட்டன. போப்புமார்க்கத்தின் பிடிவாதமான கோட்பாட்டின்மேல் ஒரு சந்தேகமோ அல்லது அதன் அதிகாரம்பற்றி ஒரு கேள்வியோ வெளிக் காட்டப்பட்டால், செல்வந்தர்களானாலும்—ஏழைகளானாலும், மேலானவர் களானாலும்—கீழானவர்களானாலும் உயிரை இழப்பதற்கு அதுவே அவர் களுக்குப் போதுமானதாக இருந்தது. இணங்காதவர்களைக் கொடுமைப் படுத்தின ஒவ்வொரு ஆதாரத்தையும் அழித்துவிட ரோமன் கத்தோலிக்க சபை முயன்றது. அப்படிப்பட்ட ஆதாரங்களை உடைய புத்தகங்களும் எழுத்துக்களும் ஆவணங்களும் எரிக்கப்படவேண்டும் என்றக் கட்டளையை போப்புவின் ஆலோசனைக் கூட்டம் பிறப்பித்தது. அச்சுப்பதித்தல் கண்டுபிடிக்கப்படும்முன்பு, புத்தகங்கள் எண்ணிக்கையில் சிலதாகவும் பாதுகாக்க இயலாதவையாகவும் இருந்தன. எனவே, ரோமன் கத்தோலிக்க சபையினருக்கு அவர்களது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான தடைகள் கொஞ்சமாகத்தான் இருந்தது. (2)

மனசாட்சியின் சுதந்திரத்தை அனுபவிப்பதில் தொந்தரவு செய்யப் படாத ஒரு சபையும் ரோமன் கத்தோலிக்க சபையின் எல்லைக்குள் இருக்கவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றியதும், தன் போக்கை அங்கீகரிக்க மறுத்த அனைவரையும் நொறுக்கும்படி, அது தன் கரத்தை நீட்டினது. எனவே, சபைகள் ஒன்றன்பின் ஒன்றாக, அதன் ஆளுகைக்குக் கட்டுப்பட்டு அடங்கின. (3)

பிரிட்டன் நாட்டில், கிறிஸ்தவ மார்க்கம் ஆதியிலேயே வேரூன்றி யிருந்தது. முதலாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் பெற்றுக்கொண்ட சுவிசேஷம் அப்போது ரோமன் கத்தோலிக்க சபையின் மருளவிழுகையால் கறைபடாமலிருந்தது. மிகத்தொலைவிலிருந்த இந்த இடத்திற்கும் நீட்டப் பட்டிருந்த, அஞ்ஞானப் பேரரசர்களால் உண்டான உபத்திரவங்கள்தான் பிரிட்டனிலிருந்த இந்த முதல் சபைகள் ரோமிடமிருந்து பெற்ற பரிசுகள். உபத்திரவத்தின் காரணமாக, இங்கிலாந்தை விட்டு அநேக கிறிஸ்தவர்கள் ஓடிப்போனார்கள். இவர்கள் ஸ்காட்லாந்தில் அடைக்கலம் புகுந்தனர். அங்கிருந்து சத்தியம் அயர்லாந்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. இந்த தேசங்களிலெல்லாம் அது மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (4)

சாக்சோனியர்கள் பிரிட்டனின்மீது படையெடுத்தபோது அஞ்ஞான மார்க்கம் ஆளுகையைக் கைப்பற்றியது. வெற்றி பெற்றவர்கள் அவர்களது அடிமைகளால் போதிக்கப்படுவதை வெறுத்தனர். அதனால் கிறிஸ்தவர்கள் மலைகளுக்கும் புதர்களடங்கிய மறைவிடங்களுக்கும் பின்வாங்கிச்செல்ல

வற்புறுத்தப்பட்டனர்; அப்படியிருந்தும் சொற்ப நேரத்திற்கு மறைந்திருந்த ஒளி, தொடர்ந்து எரிந்தது. ஒரு நூற்றாண்டுக்குப்பின், ஸ்காட்லாந்தில் அது வீசிய மிகவும் பிரகாசமான ஒளி தூரமான இடங்களுக்கும் விரிவடைந்தது. பக்திமிக்க கொலம்பா என்பவரும் அவரது உடன் ஊழியர்களும், சிதறிப்போன விசுவாசிகளை ஐயோனா என்னும் இடத்தில் ஒன்று திரட்டி, அந்த இடத்தை அவர்களது ஊழியத்தின் தலைமை இடமாக ஏற்படுத்தினார்கள். இந்த சுவிசேஷகர்களுக்கு நடுவில் வேதாகம ஓய்வுநாளை ஆசரிக்கின்ற ஒருவர் இருந்தார். அவர்மூலமாக, ஓய்வுநாள் சத்தியம் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஐயோனாவில் ஒரு பள்ளி ஏற்படுத்தப்பட்டது. அங்கிருந்து ஊழியக்காரர்கள் ஸ்காட்லாந்து, இங்கிலாந்து போன்ற இடங்களுக்கு மட்டுமல்லாது, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய இடங்களுக்கும் இத்தாலிக்குங்கூடச் சென்றார்கள். (5)

ஆனால் ரோமன் கத்தோலிக்க மார்க்கம் பிரிட்டனின்மீது அதன் கண்ணை வைத்திருந்து, அதைத் தனது மேலாதிக்கத்திற்குக் கீழாக்கத் தீர்மானித்தது. ஆறாம் நூற்றாண்டில், அதன் மிஷனரிமார்கள் அஞ்ஞான சாக்சோனியர்களை மதம்மாறச்செய்தனர். அகந்தைமிக்க மிலேச்சர்கள் அவர்களை ஆதரித்து வரவேற்றனர். அவர்கள் ரோமன் கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளும்படி ஆயிரக்கணக்கானவர்களை ஊக்கப் படுத்தினார்கள். இந்த வேலை முன்னேற்றமடைந்தது. அப்போது போப்பு மார்க்கத் தலைவர்களும் அவர்களால் மதமாற்றம் அடைந்தவர்களும் பழங்காலக் கிறிஸ்தவர்களை எதிர்த்தனர். தெளிவான ஒரு வேற்றுமை இதில் காணப்பட்டது, முன்சொல்லப்பட்டவர்கள் மூடநம்பிக்கையையும் ஆடம்பரத்தையும் போப்புமார்க்க அகந்தையையும் வெளிக்காட்டினர்; பின்சொல்லப்பட்டவர்கள் எளிமையும் தாழ்மையும் உள்ளவர்களாகவும், சுபாவத்திலும் கோட்பாட்டிலும் நடக்கையிலும் வேதாகமத்தைப் பின்பற்றுகிறவர்களாகவும் இருந்தனர். இந்தக் கிறிஸ்தவ சபைகள் ரோமன் கத்தோலிக்க சபையின் மேலாதிக்கத்தை அங்கீகரிக்கவேண்டுமென்று, ரோமன் கத்தோலிக்க சபையின் பிரதிநிதி கோரினார். தாங்கள் எல்லோரையும் நேசிக்க விரும்புவதாகவும், சபையின் மேலாதிக்கத்தின் உரிமை போப்புவிற்கு இல்லை என்றும், கிறிஸ்துவின் பின்னடியார்கள் ஒவ்வொருவரிடமும் தாங்கள் காட்டவேண்டிய அதே கீழ்ப்படிதல்தான் போப்புவிடமும் காட்டப்படுமென்றும் பிரிட்டன் மக்கள் மிகவும் பணிவாகப் பதில் அளித்தார்கள். அவர்களை ரோமன் கத்தோலிக்க சபையுடன் இணைக்க திரும்பத்திரும்ப முயற்சிகள் செய்யப்பட்டன; ஆனால், இந்தத் தாழ்மையான கிறிஸ்தவர்கள் ரோமப்பிரதிநிதிகள் வெளிக்காட்டின அகந்தையைக்கண்டு ஆச்சரியமடைந்து, கிறிஸ்துவைத்தவிர வேறு எஜமானர்களை அறியோம் என்று பதிலளித்தனர்.

போப்புமார்க்கத்தின் உண்மையான ஆவி இப்பொழுது தெளிவாக வெளிப் படுத்தப்பட்டது. “உங்களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவரும் சகோதரர் களை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்; இல்லாவிட்டால், உங்கள்மீது போரைக் கொண்டுவரும் விரோதிகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள நேரிடும்” என்று ரோமன் கத்தோலிக்கசபைத் தலைவர் கூறினார். வாழ்க்கை நெறிகளை சாக்சோனியர்களுக்குக் காண்பிக்க நீங்கள் எங்களுடன் சேராவிட்டால், அவர்களிடமிருந்து மரணஅடி பெறுவீர்கள் என்றார்.—J. H. Merle D’Aubigne, *History of the Reformation of the Sixteenth Century,* b. 17, ch. 2. இவை வீணான பயமுறுத்தல்களாக மட்டுமிருக்கவில்லை. பிரிட்டனிலிருந்த சபைகள் போப்புவின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியும்வரை அல்லது அழியும்வரை, வேதாகம விசுவாசத்திற்குச் சாட்சிகளாக இருந்த இவர்களுக்கெதிராகப் போர்—சதியாலோசனை—வஞ்சகம் ஆகியன செயல்படுத்தப்பட்டன. (6)

ரோமின் எல்லைக்கு அப்பாலிருந்த நாடுகளில், நூற்றுக் கணக்கான வருடங்களாக, ரோமன் கத்தோலிக்க சபையின் கறையினால் முற்றிலுமாகப் பாதிக்கப்படாத கிறிஸ்தவர்கள் இருந்தனர். அவர்கள் அஞ்ஞான மார்க்கத்தினால் சூழப்பட்டிருந்து, காலம் கடந்து சென்றபோது அதன் தவறுகளால் பாதிக்கப்பட்டனர்; ஆனாலும் தங்களின் விசுவாசச் சட்டங்களுக்கு வேதாகமத்தையே ஆதாரமாகக் கொண்டிருந்து, அதன் அநேக சத்தியங்களைத் தழுவி வந்தனர். இந்தக் கிறிஸ்தவர்கள் தேவப் பிரமாணங்களின்மீது நம்பிக்கைவைத்து, நான்காம் கற்பனையான ஓய்வுநாளையும் ஆசரித்து வந்திருந்தனர். மத்திய ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலுமிருந்த அர்மேனியர்களுக்கு மத்தியிலும் இந்த விசுவாசத்தையும் நடத்துதலையுமுடைய சபைகள் இருந்திருந்தன. (7)

போப்புமார்க்கத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்தவர்களில் வால்டென்னி யர்கள் முன்னணியில் நின்றிருந்தனர். போப்புமார்க்கம் அதன் ஆளுகையை அமைத்திருந்த அதன் இருப்பிடத்திலேதானே அதன் தவறுகளும் ஊழல்களும் எதிர்க்கப்பட்டன. பிட்மாண்ட் சபைகள் அவைகளின் சுதந்திரத்தை நூற்றுக் கணக்கான ஆண்டுகள் காத்துவந்திருந்தன; ஆனால் அவைகள் ரோமன் கத்தோலிக்க சபைக்குக் கீழ்படியவேண்டுமென்று வற்புறுத்தப்பட்ட நேரம் வந்தது. ரோமன் கத்தோலிக்க சபையின் கொடுங்கோன்மைக்கு எதிராக, அவர்கள் வெற்றியடையமுடியாத போராட்டத்தை நடத்தினர். அதன்பின் உலகம் முழுவதும் வணங்குவதுபோல் காணப்பட்ட இந்த சபையின் மேன்மையை, அந்த சபையின் தலைவர்கள் மனமின்றி அங்கீகரித்தனர். அப்படி இருந்தும்

போப், குருமார்கள் ஆகியோரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய மறுத்த சிலர் இருந்தனர். அவர்கள் தங்களுடைய தூய்மையையும் விசுவாசத்தின் எளிமையையும் தேவனுடனுள்ள பிணைப்பையும் காத்துக்கொள்வதில் தீர்மானமுள்ளவர்களாக இருந்தனர். ஒரு பிரிவினை உண்டாயிற்று. பண்டைய விசுவாசத்தைப் பற்றிக்கொண்டிருந்தவர்கள் இப்பொழுது பின்வாங்கினார்கள். சிலர் தங்களுடைய பிறப்பிடமான ஆல்ப்ஸ் மலையைத் துறந்து, சத்தியத்தின் கொடியை அயல்நாடுகளில் உயர்த்தினார்கள். மற்றவர்கள் பின்வாங்கி, தனிமையான பள்ளத்தாக்குகளிலும் மலை இடுக்குகளிலும் தங்கி, தேவனைத் தொழும் சுதந்திரத்தைக் காத்துக்கொண்டனர். (8)

ரோமன் கத்தோலிக்க மார்க்கம் தவறான கோட்பாடுகளை முன்வைத்திருந்தது. வால்டென்னியக் கிறிஸ்தவர்களால் நூற்றாண்டுகளாகக் காக்கப்பட்டு போதிக்கப்பட்ட விசுவாசம் வேறுபட்டதாக இருந்தது. அவர்களுடைய சமய நம்பிக்கை, தேவனால் எழுதப்பட்ட வார்த்தைகளை அஸ்திவாரமாகக்கொண்ட மெய்யான கிறிஸ்தவமாக இருந்தது. உலகத்திலிருந்து ஒதுக்கப்பட்டு, தங்களுடைய மந்தைகளிலும் திராட்சைத் தோட்டங்களிலும் வேலைசெய்திருந்த அந்தத் தாழ்மையான விவசாயிகள், மருளவிழுந்த சபையினால் உண்டான—சத்தியத்திற்கெதிரான மதப்புரட்டிற்கும் பிடிவாதமான கோட்பாட்டிற்கும் தாங்களாகவே வந்துவிடவில்லை. அவர்களது விசுவாசம் புதிதாகப் பெற்றுக்கொண்ட ஒன்றாகவும் இருக்கவில்லை. அவர்களுடைய சமய நம்பிக்கை அவர்களுடைய முற்பிதாக்களிடம் இருந்து அவர்கள் பெற்ற பரம்பரைச் சொத்தாக இருந்தது. "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட"(யூதா:3) அவர்களுடைய விசுவாசத்திற்காக—அப்போஸ்தல சபையின் விசுவாசத்திற்காக அவர்கள் போராடினார்கள். வனாந்தரத்திலிருந்த சபை, உலகின் பெரும் தலைநகரில் இருக்கவில்லை. உலகின் பெரும் தலைநகரில் (ரோம் நகரம்) சிங்காசனத்தில் அமர்ந்திருந்த, அகந்தைமிக்க மதத்தலைமையைப்போல் அது இருக்கவில்லை. உலகத்திற்குக் கொடுக்கப்படும்படி தேவன் ஒப்படைத்த சத்தியமாகிய பொக்கிஷத்திற்கு—கிறிஸ்துவின் மெய்யான சபைக்கு அவர்கள் காவலாளர்களாக இருந்தனர். (9)

வேதாகம ஓய்வுநாளின்மீது ரோமன் கத்தோலிக்க சபைக்கு வெறுப்பு உள்ளது. உண்மையான சபை, ரோமன் கத்தோலிக்க சபையை விட்டுப் பிரிவதற்கான பல காரணங்களில், ஓய்வுநாள் மிக முக்கியமான ஒன்றாகும். தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டபடி, போப்புவின் வல்லமை சத்தியத்தைத் தரையிலே விழத் தள்ளிற்று. மனிதர்களின் சடங்காச்சாரங்களும் சம்பிரதாயங்களும் அதில் உயர்த்தப்பட்டது. தேவப்பிரமாணம் பூமியின் தூளில் தள்ளப்பட்டு, காலின்கீழ் மிதிக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையை

பரிசுத்தநாளாக மேன்மைப்படுத்தும்படி, ஆரம்ப காலத்திலேயே போப்பு மார்க்கத்தின் ஆட்சியின் கீழிருந்த சபைகள் வற்புறுத்தப்பட்டன. தவறுகளுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் இடையில் அநேகர் குழப்படைந்தனர். தேவனுடைய உண்மையான ஜனங்களுங்கூட, செய்வதறியாது, ஓய்வுநாளை ஆசரித்த அதே சமயத்தில், ஞாயிற்றுக்கிழமையில் வேலைசெய்வதிலிருந்தும் விலகினார்கள்; ஆனால் இது போப்புமார்க்கத் தலைவர்களைத் திருப்திப்படுத்தவில்லை. அவர்கள் ஞாயிற்றுக்கிழமையை மேன்மைப்படுத்தினால்மட்டும் போதாது, ஓய்வுநாளை அவமதிக்கவும்வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதை மேன்மைப்படுத்தினவர்களைக் கடினமான வார்த்தைகளினால் எதிர்த்தனர். ரோமன் கத்தோலிக்க சபையின் வல்லமையிலிருந்து ஓடிப்போவதினால் மட்டுமே, அவர்களால் தேவப்பிரமாணங்களுக்குச் சமாதானமாகக் கீழ்ப்படிய முடிந்தது. (10)

ஐரோப்பிய மக்களில் வால்டென்னியர்கள்தான் பரிசுத்த வேதாகம மொழிபெயர்ப்பை முதன்முதலாகப் பெற்றார்கள். சீர்திருத்தம் உண்டாவதற்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே, வால்டென்னியர்கள் அவர்களது சொந்த மொழியில் வேதாகமத்தைக் கையெழுத்துப் பிரதியாகக் கொண்டிருந்து, கலப்படமில்லாத சத்தியத்தைக் கொண்டிருந்தனர். அதுவே வெறுப்பிற்கும் உபத்திரவத்திற்கும் அவர்களை இலக்காக்கிற்று. கடைசிக்காலத்தில் தோன்றக்கூடிய பாபிலோன், ரோமன் கத்தோலிக்க சபைதான் என்று அவர்கள் அறிவித்தனர். அவர்களது உயிருக்கு ஆபத்து என்ற நிலையிலும் அதன் ஊழல்களைத் தடுப்பதற்கு எழுந்து நின்றனர். தொடர்ச்சியான உபத்திரவத்தின் அழுத்தத்தினால், சிலர் விசுவாசத்தில் சமரசம் செய்து, கொஞ்சம் கொஞ்சமாக அதன் கோட்பாடுகளுக்கு இணங்கினர். மற்றவர்கள் விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தனர். இருண்ட காலத்திற்கும் மருள விழுகைக்கும் ஊடாக வால்டென்னியர்கள் ரோமன் கத்தோலிக்க சபையின் மேலாதிக்கத்தை மறுத்து, சிலைவழிபாட்டை விக்கிரக ஆராதனையென்று நிராகரித்து, மெய்யான ஓய்வுநாளை ஆசரித்திருந்தார்கள். மிகப்பயங்கரமான எதிர்ப்பு என்னும் புயலின்போதும் தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டனர். ரோமன் கத்தோலிக்க சபையினரால், குவிக்கப்பட்ட விறகுக்கட்டைகளுக்கு நடுவே நாட்டப்பட்ட கம்பங்களில் கட்டப்பட்டு எரிக்கப்பட்டனர்; வாளினால் வெட்டப்பட்டனர்; ஈட்டியினால் குத்தப்பட்டனர்; அப்போதும் தேவனுடைய வார்த்தைக்காகவும் அவரது மேன்மைக்காகவும் அவர்கள் தடுமாற்றமின்றி நின்றனர். (11)

காலம்நெடுகிலும் உபத்திரவப்பட்டு, ஒடுக்கப்பட்ட வால்டென்னியர்களுக்கு உயர்ந்த மலைகள் அடைக்கலம் தரும் மறைவிடங்களாயிருந்தன.

இங்கு மத்திய காலத்திலிருந்த இருளுக்கிடையில், சத்தியத்தின் ஒளி, எரிந்து பிரகாசிக்கும்வண்ணம் காக்கப்பட்டது; சத்தியத்திற்குச் சாட்சிகளாக இருந்தவர்கள் இங்கு ஆயிரம் வருடங்கள் அவர்களது பண்டையக்கால விசுவாசத்தைக் காத்திருந்தனர். (12)

அவர்களது நம்பிக்கைக்குப் பொருத்தமாக, வல்லமைமிக்க சத்தியம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதைப் பாதுகாக்குமிடமாக, வியக்கத்தக்க சரணாலயத்தை தேவன் அவர்களுக்கு ஏற்படுத்தி இருந்தார். நாடுகடத்தப்பட்ட அந்த விசுவாசிகளுக்கு, அந்த மலைகள், யேகோவாவின் மாறாத நீதியின் அடையாளமாக இருந்தன. மாறாத, அரச மேன்மையில் உயர்ந்துநின்றிருந்த அந்த மலைகளை, அவர்கள், அவர்களுடைய பிள்ளைகளுக்குக் காட்டி, எந்தவித வேற்றுமையும் மாறுபாடும் இல்லாத யேகோவாவைப்பற்றி அவர்களிடம் பேசினார்கள். நிலைத்து நிற்கின்ற இந்தக் குன்றுகளைப்போல, அவரது வசனங்கள் என்றும் நிற்பவை என்று அவர்களிடம் கூறினார்கள். தேவன் இந்த மலைகளை ஸ்தாபித்து, அவைகளைப் பலத்தினால் இடைக்கட்டினார். முடிவில்லாத அவரது வல்லமையுள்ள கரமேயன்றி வேறொன்றும் அவைகளை அவ்விடத்திலிருந்து அசைக்க முடியாது. அதைப்போலவே வானத்திலும் பூமியிலும் உள்ள அவரது அரசாங்கத்தின் அஸ்திவாரமாயிருக்கும்படி அவருடைய பிரமாணங்களை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். இந்த மலைகளை வேருடன் பெயர்ததுக் கடலில் எறிந்துவிடமுடியும் என்றும், யேகோவாவின் கற்பனைகளில் ஒன்றை மாற்றிவிடமுடியும் அல்லது அவரது சித்தத்தின்படிச் செய்கிறவர்களுக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தங்களில் ஒன்றை இல்லாமல் செய்துவிடமுடியும் என்றும் எண்ணி தன் உடன் மனிதனை அழிப்பதற்கு, மனிதனின் கரம் எட்டலாம்; என்றாலும் தேவப் பிரமாணத்தின்மீதுள்ள விசுவாசத்தைக் காப்பதில் தேவனுடைய ஊழியக்காரர்கள் அசையாத குன்றுகளைப்போல உறுதியாக இருக்கவேண்டும். (13)

தாழ்வான பள்ளத்தாக்குகளிலுள்ள மலைகள், தேவனுடைய சிருஷ் டிக்கும் வல்லமைக்கு எப்போதுமுள்ள சாட்சிகளாயிருக்கின்றன. அந்த யாத்ரீகர்கள் யேகோவாவின் பிரசன்னத்தைக் காட்டுகின்ற மௌனமான அந்த அடையாளங்களை நேசித்தனர். தங்களுக்கு உண்டான கஷ்டங் களுக்காக அவர்கள் ஒருபோதும் முணுமுணுக்கவில்லை. தனிமையான அந்த மலையில், அவர்கள் ஒருபோதும் தனிமையாக இருக்கவில்லை. மனிதர்களின் கோபத்திலும் கொடுமையிலுமிருந்து தேவன் அவர்களைக் காக்கும்படி ஒரு புகலிடம் தந்திருந்தார். அதற்காக அவர்கள் தேவனுக்கு நன்றி சொன்னார்கள். அவர்முன் நின்று அவரைத் தொழும்படி அவர்களுக்குக்

கிடைத்த சுதந்திரத்திற்காக அவர்கள் மகிழ்ந்தனர். எதிரிகளால் அடிக்கடி பின்தொடரப்பட்டபோது, இக்குன்றுகளின் பெலன் அவர்களுக்கு நிச்சயமான பாதுகாப்பாக இருந்தது. அநேக மலைச்சிகரங்களிலிருந்து அவர்கள் தேவனை ஸ்தோத்திரித்தனர். நன்றி தெரிவிக்கும் அவர்களது பாடல்களை ரோமன் கத்தோலிக்க சபையின் இராணுவத்தினால் மௌனமாக்கிட இயலவில்லை. (14)

கிறிஸ்துவின் இந்தப் பின்னடியார்களின் பக்தி தூய்மையும் எளிமையும் வாஞ்சைமிக்கதாயும் இருந்தது. வீடுகள், நிலங்கள், நண்பர்கள், இனத்தார் ஆகிய அனைத்தையும்விட, உயிருக்கும் மேலாக, சத்தியத்தின் கொள்கைகளை அவர்கள் மதித்தனர். இந்தக் கொள்கைகளை அவர்களது இதயங்களில் பதிக்க அவர்கள் வாஞ்சையுடன் முயன்றனர். இளைஞர்கள் சிறுவயதிலிருந்தே வேதவாக்கியங்களில் போதிக்கப்பட்டனர். தேவப்பிரமாணத்தின் உரிமையைப் பரிசுத்தமாகக் கருதும்படி கற்பிக்கப்பட்டனர். வேதாகமப் பிரதிகள் அபூர்வமாயிருந்தன. எனவே, அதன் விலையேறப்பெற்ற வசனங்கள் மனப்பாடம் செய்யப்பட்டன. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகியவைகளின் பெரும் பகுதிகளை அவர்கள் மனனம் செய்திருந்தபடியால், அவைகளைத் திரும்பச் சொல்லக் கூடியவர்களாகவும் இருந்தனர். இயற்கையின் எழில்மிக்க காட்சிகளுடனும் அன்றாட வாழ்க்கையில் உண்டாகும் எளிமையான ஆசீர்வாதங்களுடனும், தேவனைப்பற்றிய எண்ணங்கள் பிணைக்கப்பட்டன. சகலவிதமான அனுகூலங்களையும் வசதிகளையும் தேவையான ஒவ்வொன்றையும் தருகிறவர் தேவன் என்ற நன்றியுணர்வுடன் அவரை நோக்கும்படி சிறுபிள்ளைகள் கற்றறிந்திருந்தனர். (15)

மென்மையும் அன்பும் நிறைந்த பெற்றோர் அவர்களது பிள்ளைகளுக்கு சுறுசுறுப்பைக் கற்றுத்தரும்படி அவர்களை ஞானமாக நேசித்தார்கள். அவர்களுக்குமுன் சோதனையும் கடினமிக்க வாழ்க்கையும், ஒருவேளை இரத்தசாட்சியாக மரிக்கக்கூடிய நிலைமையும் இருந்தது. துன்பத்தை அனுபவிக்கவும், கட்டுப்பாட்டிற்குக் கீழ்ப்படியவும் தங்களுக்காகத் தாங்களே சிந்திக்கவும் செயல்படவும் அவர்கள் கற்பிக்கப்பட்டனர். பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவும், பேசும்போது வார்த்தைகளைக் காத்துக்கொள்ளவும், மௌனத்தின் ஞானத்தைப் புரிந்துகொள்ளவும் அவர்கள் சிறுவயது முதல் கற்பிக்கப்பட்டனர். பொறுப்பற்ற ஒரு வார்த்தையை அவர்களது விரோதிகள் கேட்க நேரிட்டால்கூட, அது அதைப் பேசியவரின் உயிருக்கு ஆபத்தை உண்டுபண்ணும்; அதுவுமல்லாமல், நூற்றுக்கணக்கான அவரது சகோதரரின் உயிரையும் அது ஆபத்துக்குள்ளாக்கிவிடக்கூடும். ஏனெனில், ஓநாய்கள்

அவைகளின் இரையை வேட்டையாடுவதுபோல, சமயச் சுதந்திரத்தின்மீது உரிமைபாராட்டுகின்றவர்களைப் பின்தொடர, சத்தியத்தின் விரோதிகள் துணிந்திருந்தனர். (16)

வால்டென்னியர்கள் அவர்களது உலகப்பிரகாரமான செல்வச்செழிப்பை, சத்தியத்திற்காகத் தியாகம் செய்தனர். விடாமுயற்சியினாலும் கடின உழைப்பினாலும் அவர்களது உணவைச் சம்பாதித்தனர். மலைகளிலிருந்த—விவசாயம் செய்வதற்குத் தகுதியான ஒவ்வொரு இடமும், கவனத்துடன் பண்படுத்தப்பட்டன. பள்ளத்தாக்குகளும் செழுமைக்குறைவான குன்றுகளுங்கூட, பயன்தரும்படி விவசாயம்செய்யப்பட்டன. சிக்கனமும் சுயமறுப்பும் பிள்ளைகளின் கல்வியின் ஒருபகுதியாக இருந்தது. அவைகளை அவர்கள் பரம்பரைச் சொத்தாகப்பெற்றனர். அவர்களுடைய தேவைகள்—அவர்களது சுய உழைப்பு, முன்யோசனை, விசுவாசம் ஆகியவைகளினால் மட்டுமே அவர்களுக்குக் கிடைக்கும் என்றும், தேவன் வாழ்க்கையைச் சீருள்ளதாக வடிவமைக்கிறார் என்றும், அவர்கள் போதிக்கப்பட்டனர். இந்த முறையானது, உழைப்புமிக்கதும் களைப்பூட்டுவதாகவும் இருந்தது. ஆனாலும் விழுந்துபோன மனிதனுக்குத் தேவையான முழுமையுள்ளதாகவும் அவனுடைய பயிற்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தேவன் ஏற்படுத்தின பள்ளியாகவும் இருந்தது. (17)

உழைக்கவும், கடுமையாகப் பாடுபடவும் இளைஞர்கள் பழக்கப்படுத்தப்பட்டனர். அவர்களது புத்திக்கூர்மையின் அவசியம் அலட்சியப்படுத்தப்படவில்லை. அவர்களது முழுப்பலமும் தேவனுக்குச் சொந்தமானது என்றும், அவை அனைத்தும் தேவனுடைய சேவைக்கென்று மேம்பாடடையச் செய்யவேண்டும் என்றும் அவர்கள் கற்பிக்கப்பட்டனர். (18)

வௌடாயிஸ் (வால்டென்னிய) சபைகள் அவைகளின் தூய்மையிலும்சரி—எளிமையிலும்சரி—அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்த சபைகளைப்போன்றே இருந்தன. போப், குருமார்கள் ஆகியோரின் மேலாதிக்கத்தை நிராகரித்த அவர்கள், வேதாகமம் ஒன்றுதான் மேலாண்மையும் தவறாமையின் அதிகாரமும் கொண்டது என்று அதைப் பற்றிக்கொண்டிருந்தனர். அவர்களது போதகர்கள் ரோமன் கத்தோலிக்க குருமார்களைப்போல—பிரபுக்களைப்போல இருக்கவில்லை. அவர்கள் "ஊழியம்கொள்ள வராமல், ஊழியம்செய்யவந்தார்" என்ற அவர்களது எஜமானனின் உதாரணத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தனர். அவருடைய பரிசுத்த வார்த்தைகள் என்னும் புல்லுள்ள இடங்களுக்கும் ஜீவஊற்றுக்கும் அவர்கள் தேவனுடைய மந்தையை நடத்திப் போஷித்தனர். மனித டாம்பீகத்தையும் பெருமையையும் காட்டுகின்ற பெரிய சபைகளிலும் பெரிய ஆலயங்களிலும்

அவர்கள் கூடவில்லை. கிறிஸ்துவின் ஊழியர்களிடமிருந்து சத்தியத்தின் வார்த்தைகளைக் கவனிப்பதற்கு, அவர்கள் மலைகளின் நிழல்களிலும் ஆல்பைன் பள்ளத்தாக்குகளிலும், ஆபத்தான வேளைகளில் மலைகளில் பாதுகாப்பாயிருந்த இடங்களிலும் கூடியிருந்தனர். அந்தப் போதகர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தது மட்டுமன்றி, நோயாளிகளையும் சந்தித்தனர். சிறுவர்களுக்கு வேதபாடம் கற்றுக்கொடுத்தனர். தவறுகிறவர்களைக் கண்டித்தனர். விவகாரங்களுக்குப் பரிகாரம் தேடினர். இசைவையும் சகோதர சிநேகிதத்தையும் உண்டுபண்ண உழைத்தனர். சமாதானகாலத்தில் மக்கள் கொடுத்த மனமுவந்த காணிக்கைகளினால் அவர்கள் தாங்கப்பட்டனர்; ஆனால் கூடாரவேலை செய்திருந்த பவுலைப்போலவே, தேவைப்பட்டபோது, தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும் வகையில் ஏதாவதொரு தொழிலையும் கற்றிருந்தனர். (19)

இளைஞர்கள் போதகர்களால் போதிக்கப்பட்டிருந்தனர். பொதுவான கல்வியின் பல பிரிவுகளில் கவனம் செலுத்தப்பட்டிருந்தாலும் வேதாகமம்தான் முக்கிய பாடமாக இருந்தது. அநேக நிரூபங்களுடன் மத்தேயு, யோவான் எழுதின சுவிசேஷங்களை மனப்பாடம் செய்திருந்தனர். அவர்கள் வேதாகமங்களின் பிரதிகளை நகல் எடுப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். வேதாகமம் முழுவதும் சில கையெழுத்துப் பிரதிகளில் இருந்தது. மற்றவைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள்மட்டும் இருந்தன. அவைகளில் வசனங்களுக்கு வேதாகமத்தை விளக்கக்கூடியவர்களால் கொடுக்கப்பட்ட விளக்கங்களுமிருந்தன. இவ்விதமாக, தேவனுக்குமேலாகத் தங்களை உயர்த்த வகைதேடினவர்களால் மூடிவைக்கப்பட்டிருந்த சத்தியத்தின் பொக்கிஷங்கள் வெளியே கொண்டுவரப்பட்டன. (20)

சில சமயங்களில் இருண்ட பெரும் குகைகளில் இருந்து, தீவட்டிகளின் வெளிச்சத்தில் பொறுமையுடனும் ஓய்வற்ற உழைப்புடனும் வசனம் வசனமாக, அதிகாரம் அதிகாரமாக, வேத வாக்கியங்கள் எழுதப்பட்டன. இவ்விதமாக சுத்தமான பொன் பிரகாசிப்பதுபோல, வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்தை வெளியிடும் வேலை தொடர்ந்தது. அவை எவ்வளவு ஒளிமிக்கதாகவும் தெளிவானதாகவும் வல்லமை உள்ளதாகவும் உள்ளன என்பதை அவைகளுக்காக சோதனைகளை அனுபவித்தவர்களாலும் அந்தப் பணியில் ஈடுபட்டவர்களாலும் மட்டுமே உணரமுடிந்தது. பரலோகத்திலிருந்து வந்த தூதர்கள் விசுவாசமிக்க இப்பணியாளர்களைச் சூழ்ந்திருந்தனர். (21)

மதப்புரட்டு, தவறுகள், மூடநம்பிக்கை என்னும் குப்பைகளுக் கடியில் சத்திய வார்த்தைகளைப் புதைத்துவிட சாத்தான் போப்புவின் குருமார்களையும் பாதிரிகளையும் நெருக்கி ஏவினான்; ஆனால் இருண்டகாலத்திற்கும்

ஊடாக, அது கறைபடாததாக மிகவும் ஆச்சரியப்படத்தக்கவிதத்தில் பாதுகாக்கப்பட்டிருந்தது. அது மனிதனின் முத்திரை அற்றதாக தேவனுடைய முத்திரையை ஏற்றதாக இருந்தது. வேதவாக்கியங்கள் எளிமையும் தெளிவு மிக்க அர்த்தத்தை உடையவைகளாயுமிருந்தன. அவைகளை இருளடையச் செய்யவும் தங்களது சொந்த சாட்சியங்களுக்கெதிராக ஆக்கும் முயற்சியிலும் மனிதர்கள் களைப்படையாதவர்களாக இருந்தனர். அழிப்பதற்கென்று வீசும் புயலுக்கும் பயங்கரமான கடல் அலைகளுக்கும் நடுவில் அகப்பட்டக் கப்பலைப்போல தேவனுடைய வார்த்தைகள் அவைகளை மேற்கொண்டு பயணம்செய்கின்றன. பூமிக்கடியிலுள்ள சுரங்கங்களில் ஏராளமான பொன்னும் வெள்ளியும் அதைத் தோண்டுபவர்களுக்குக் கிடைக்கும்; அதைப்போல் மிகுந்த ஆர்வத்துடனும், ஜெபத்துடனும் தேடுபவர்களுக்குமட்டுமே சத்தியத்தின் கருவூலங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. சிறுவயதிலும், இளமைப்பருவத்திலும், பெரிய மனிதனாக இருக்கும்போதும், காலம் நெடுகிலுமாகக் கற்பதற்கென தேவன் வேதாகமத்தை வடிவமைத்தார். அவர் தம்மை வெளிப்படுத்துவதற்காக, வேதாகமத்தை மனிதர்களுக்குக் கொடுத்தார். புதிதாக அறிந்து கொள்ளப்படும் ஒவ்வொரு சத்தியமும் அதன் ஆசிரியரின் பண்பை வெளிக்காட்டுபவையாக உள்ளன. வேதவாக்கியங்களை வாசிப்பது, மக்களை அவர்களது சிருஷ்டிகருடன் நெருங்கிய உறவிற்குக் கொண்டுவரும் கருவியாக அமைந்துள்ளது; அவரது சித்தத்தைப்பற்றிய தெளிவான அறிவைத் தருவதாக உள்ளது; அதுவே தேவனுக்கும்—மனிதனுக்கும் இடையில் உள்ள செய்தித் தொடர்புக் கருவியாகவும் இருக்கிறது. (22)

“கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்” என்று வால்டென்னியர்கள் கருதியிருந்த அதே நேரம், மனதை விரிவடையச் செய்வதும், உணர்ந்துகொள்ளும் திறனை அதிகப்படுத்திக் கொள்ளுவதும், மனிதர்களைப்பற்றிய அறிவும் செயலாக்கமும் அவசியமானது என்பதை அறியாத குருடர்களாக இருக்கவில்லை. விரிவான கல்வி, சிந்தனை, கண்டுபிடிப்புகள் ஆகியவைகளைக் கற்றுத்தரக்கூடிய பிரான்சிலோ, அல்லது இத்தாலியிலோ இருந்த பெரிய கல்விக்கூடங்களுக்கு அவர்களது சுயதேசமான ஆல்ப்ஸ் மலைப்பள்ளிகளிலிருந்து சில இளைஞர்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். அப்படி அனுப்பப்பட்டவர்கள், மிகவும் தந்திர மான மதப்புரட்டுக்களையும் மிகவும் பயங்கரமான அபாயங்களையும் கொண்டுவருகின்ற வஞ்சகங்களடங்கிய சோதனைகளைச் சந்தித்தனர். தீயபழக்கங்களைக் கண்டனர், சாத்தானின் தீய ஏவலாளர்களைச் சந்தித்தனர்; ஆனால், சிறுவயதிலிருந்தே அவர்கள் கற்ற கல்வி, இவைகளையெல்லாம் சந்திப்பதற்கு அவர்களைத் தகுதிப்படுத்தும் தன்மையோடு இருந்தது. (23)

அந்தப் பள்ளிகளில், அவர்கள் எங்கு சென்றபோதிலும், ஒருவர்மீதும் நம்பிக்கைவைக்காமலிருக்க வேண்டியதிருந்தது. அவர்களது பெரும் செல்வமாகிய வேதவாக்கியக் கையெழுத்துப்பிரதிகளை மறைத்துவைக்கும் விதத்தில், அவர்களது உடைகள் ஆயத்தம் செய்யப்பட்டிருந்தன. மாதக்கணக்கிலும் வருடக்கணக்கிலும் அவர்களது உழைப்பினால் உண்டான இந்தக் கனிகளை அவர்கள் தங்களுடன் எடுத்துச்சென்றிருந்தனர். சந்தேகத்தை எழுப்பாமல் செயல்படக்கூடியபோதெல்லாம், சத்தியத்தை ஏற்றுக்கொள்ள இதயம் திறக்கப்பட்டவர்களாகக் காணப்பட்ட சிலரின் பாதையில் அவைகளின் சில பகுதிகளை மிகவும் எச்சரிக்கையுடன் வைத்தனர். இந்த நோக்கத்தைச் செயல்படுத்திட, வால்டென்னிய இளைஞர்கள் அவர்களது அன்னைகளின் மடிகளில் இருக்கும்போதிலிருந்தே பழக்கப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் தங்களுடைய வேலையைப் புரிந்துகொண்டு, விசுவாசத்துடன் அதைச் செய்தனர். இந்தப் பள்ளிகளிலிருந்து மெய்யான விசுவாசத்திற்கு மனம் மாறினவர்கள் ஆதாயஞ்செய்யப்பட்டனர். அதன் கொள்கைகள், அதன் சுகந்தத்தை அந்தப் பள்ளிகளெங்கிலும் பரவச்செய்தன. அப்படி இருந்தும் போப்புமார்க்கத் தலைவர்கள் மிகநெருக்கமான விசாரணையினால்கூட, அவர்களுடைய கோட்பாடுகளுக்கு எதிரான மதப்புரட்டுகள் என்று கருதப்பட்டவைகளின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க இயலவில்லை.(24)

கிறிஸ்துவின் ஆவி, ஒரு ஊழியக்காரனின் ஆவியாக உள்ளது. புதுப்பிக்கப்பட்ட இதயத்திலிருந்து வருகிற முதல் துடிப்பு—மற்றவர்களை மீட்பரிடம் கொண்டுசெல்லவேண்டும் என்பதே. சத்தியத்தை அதன் தூய்மையுடன் தங்கள் சபைகளில் மட்டும் காத்துக்கொண்டால் போதாது; அவர்களிடமிருந்து தேவன் இன்னும் அதிகமானவர்களை எதிர்பார்க்கிறார் என்பதை அவர்கள் உணர்ந்தனர். இருளில் இருப்பவர்களின்மீது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்யும் பக்திவிநயமான பொறுப்பு அவர்களிடம் உள்ளது என்பதையும் அவர்கள் உணர்ந்தனர்; எனவே, ரோமன் கத்தோலிக்க சபை புகுத்தியிருந்த அடிமைத்தளையை உடைக்க, தேவனுடைய பலமிக்க வார்த்தைகளின் வல்லமையை அவர்கள் நாடினார்கள். வௌடாயிஸ் மக்கள் ஊழியக்காரர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டனர். இந்த ஊழியத்தில் ஈடுபட விரும்பின ஒவ்வொரு ஊழியரும் ஒரு சுவிசேஷகரின் அனுபவத்தை அடைந்தாகவேண்டும் என்று கோரப்பட்டனர். தங்கள் ஊர்களில் இருந்த சபையின் பொறுப்பை அவர்கள் ஏற்பதற்குமுன், ஒவ்வொருவரும் மூன்று வருடங்கள் ஏதாவதொரு பணிக்களத்தில் சேவைசெய்தாக வேண்டும். சுயவெறுப்பையும் தற்தியாகத்தையும் எதிர்பார்த்த இந்த சேவை, மனிதருடைய ஆத்துமாக்கள் சோதிக்கப்பட்ட அக்காலத்தில் ஊழியர்களுடைய வாழ்க்கைக்கு மிகச்சரியான அறிமுகமாயிருந்தது. இந்தப்

பரிசுத்தமான பதவிக்கென்று அபிஷேகம் செய்யப்பட்ட இளம் போதகர்கள்முன் உலகப்பிரகாரமான செல்வமும் மகிமையும் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் அவர்கள் அவைகளைப் பார்க்காமல், உழைப்பும் ஆபத்தும் இரத்தசாட்சியாக மாறக்கூடிய நிலைமையும் இருப்பதைக் கண்டனர். இயேசு அவரது சீடர்களை இருவர் இருவராக அனுப்பி இருந்தார். அதைப்போலவே, இந்த ஊழியக்காரர்களும் இருவர் இருவராக வெளியே சென்றனர். வழக்கமாக ஒரு இளைஞனுடன் அனுபவத்தில் முதிர்ந்த ஒருவர் சென்றிருந்தார். இளைஞனின் பயிற்சிக்கு அவர் பொறுப்புள்ளவராக இருந்தார். இளைஞன் அந்த முதியவரின் போதனைக்குச் செவிசாய்க்கவேண்டியதிருந்தது. இந்த இரு உடன்ஊழியர்களும் எப்பொழுதும் ஒருமித்திருக்கவில்லை. ஆனால் ஜெபம் செய்வதற்காகவும் ஆலோசனைகளுக்காகவும் அதிகமாக சந்தித்து விசுவாசத்தில் ஒருவரையொருவர் பலப்படுத்திக் கொண்டிருந்தனர். (25)

அவர்களது ஊழியத்தின் நோக்கத்தை அவர்கள் வெளிக்காட்டி இருந்தால், தோற்கடிக்கப்பட்டிருந்திருப்பார்கள். எனவே, மிகுந்த கவனத்துடன் அவர்களது உண்மையான நோக்கத்தை மறைத்திருந்தனர். ஒவ்வொரு ஊழியக்காரனும் ஏதாவதொரு தொழிலைக் கற்றிருந்தான். இந்த ஊழியக்காரர்கள் மதச்சார்பற்ற வேலைக்காகச் செல்லுகிறோம் என்ற திரைமறைவில் அவர்களது பணியினைத் தொடர்ந்தனர். அலைந்துதிரிந்து செய்கின்ற வியாபாரத்தை அவர்கள் வழக்கமாகத் தேர்ந்தெடுத்தனர். (26)

தூரமான இடத்திலன்றி அந்நாட்களில் வாங்கப்படமுடியாத பட்டுத் துணிகள், ஆபரணங்கள் மற்றும் அநேக பொருட்களைச் சுமந்துசென்றனர். மிஷனரிகளாகச் சென்றிருந்தால், அவமரியாதையாக நடத்தப்பட இருந்த இடங்களில், அவர்கள் வியாபாரிகளாக வரவேற்கப்பட்டிருந்தனர். பொன்னையும் வைரத்தையும்விட விலை உயர்ந்த ஒரு செல்வத்தை மக்கள் முன் வைக்கவேண்டியதாக இருந்தது.— Wylie, b. 1, ch. 7. அதற்கான ஞானத்திற்காக, அவர்களது இதயங்கள் எப்பொழுதும் தேவனை நோக்கி உயர்த்தப்பட்டவையாக இருந்தன. அவர்கள் தங்களுடன் முழு வேதாகமத்தையோ, அதன் ஒருபகுதியையோ இரகசியமாக எடுத்துச்செல்லும் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம், அவர்களிடம் பொருள் வாங்குவதில் ஈடுபட்டிருந்தவர்களை, இந்தக் கைப்பிரதிகளின்மீது கவனம் வைக்கும்படிச் செய்தனர். இவ்வாறாக, தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்படியான ஆர்வம் அடிக்கடி எழுப்பப்பட்டது. அவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பினவர்களுக்கு அவைகளின் சில பகுதிகள் மகிழ்ச்சியுடன் தரப்பட்டன. (27)

இந்த ஊழியம் அவர்களின் சொந்த மலை அடிவாரங்களில் இருந்த சமவெளிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் ஆரம்பமாகி, எல்லைகளைக் கடந்து

விரிவடைந்தது. அவர்களது எஜமானனைப் போலவே, அவர்களும் காலணிகள் இல்லாதவர்களாகவும், முரட்டு உடைகளை அணிந்தவர்களாகவும், பயணத்தால் அழுக்கடைந்தவர்களாகவும், தூரமான இடங்களில் இருந்து பெரும் நகரங்களுக்குள் நுழைந்தனர். விலைமதிப்புமிக்க விதைகளை அவர்கள் எங்கும் விதைத்தார்கள். அவர்களது பாதையில் சபைகள் எழும்பின. இரத்தசாட்சிகளின் இரத்தம் சத்தியத்திற்குச் சாட்சியாக இருந்தது. விசுவாசமிக்க இந்த மனிதர்களின் ஊழியத்தினால், ஏராளமான ஆத்துமாக்கள் பெருகின. இந்த அறுவடையை தேவனுடைய நாளானது வெளிப்படுத்தும். தேவனுடைய வார்த்தைகள் தங்களைத் திரையிட்டு மறைத்துக்கொண்டு, மௌனமாக, அவைகளின் பாதையை வகுத்துச்சென்றன. மகிழ்ச்சிமிக்க வரவேற்பை அவை வீடுகளிலும் மனிதர்களின் இதயங்களிலும் சந்தித்தன. (28)

வேதவாக்கியங்கள் வால்டென்னியருக்கு, கடந்தகாலத்தில் தேவன் மனிதர்களுடன் இடைப்பட்டதன் ஆதாரமாகவும் நிகழ் காலத்திலுள்ள பொறுப்பு கள், ஊழியங்கள் ஆகியவைகளின் வெளிப்படுத்தலாகவும்மட்டும் இருக்க வில்லை; எதிர்காலத்திலுள்ள ஆபத்துக்களையும் மகிமைகளையுங்கூட விவரிக்கின்றவையாக இருந்தன. எல்லாவற்றிற்கும் முடிவு வெகுதூரத்தில் இல்லையென்று அவர்கள் நம்பினர். ஜெபத்துடனும் கண்ணீருடனும் அவர்கள் வேதாகமத்தை வாசித்தனர். அப்போது மிகுந்த விலைமதிப்புள்ள அதன் வார்த்தைகளால், ஆழமாக உணர்த்தப்பட்டனர். மீட்கும் இந்த சத்தியங்களைப் பிறருக்கு அறிவிக்கவேண்டிய அவர்களது கடமையையும் அவர்கள் உணர்ந்தனர். வேதாகமத்தின் பரிசுத்தமான பக்கங்களில், மீட்பின் திட்டம் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதையும், இயேசுவை நம்புவதால் உண்டாகும் ஆறுதல், நம்பிக்கை, சமாதானம் ஆகியவைகளையும் அவர்கள் கண்டனர். அவர்களது அறிவை ஒளிபெறச்செய்யும்வண்ணம் அவர்களது இதயங்களில் அது பிரகாசித்தது. அது அவர்களை மகிழச்செய்தபோது, போப்புமார்க்கத்தின் இருளில் இருந்தவர்களின்மீது, அந்த ஒளிக்கதிர்கள் பாயவேண்டுமென்று அவர்கள் வாஞ்சித்தனர். (29)

போப், குருமார்கள் ஆகியோரின் வழிகாட்டுதலில், திரளானவர்கள் அவர்களது ஆத்துமாக்களின் பாவமன்னிப்பைப் பெறும்முயற்சியில், தங்களது சரீரங்களை வீணாக வதைத்துக் கொண்டிருந்ததைக் கண்டனர். தங்களை இரட்சிக்கும்படியாக, தங்களது நற்செயல்களின்மீது நம்பிக்கை வைக்கும்படி அவர்கள் கற்பிக்கப்பட்டிருந்தனர். எனவே, அவர்கள் எப்பொழுதும் தங்களையே நோக்கிக்கொண்டிருந்தனர். அவர்களது மனங்கள் அவர்களது பாவகரமான நிலைமையையே சிந்தித்துக்கொண்டு இருந்தன. தாங்கள் தேவகோபத்திற்கு ஆளாகி இருப்பதைக் கண்டு,

சரீரத்தையும் ஆத்துமாவையும் வதைத்துக்கொண்டிருந்தும், இளைப்பாறுதல் இல்லாதவர்களாக இருந்தனர். இவ்வாறாக, நேர்மையான ஆத்துமாக்கள் கத்தோலிக்கமார்க்கத்தின் கோட்பாடுகளினால் கட்டப்பட்டிருந்தன. ஆயிரக் கணக்கானவர்கள் நண்பர்களையும் உறவினர்களையும் விட்டுப்பிரிந்து, தங்களுடைய வாழ்க்கையை மடங்களின் அறைகளில் கழித்தனர்; அடிக்கடி செய்யப்பட்ட உபவாசங்கள், தங்களுக்குத் தாங்களே கொடுத்துக் கொண்ட கொடுமையான சவுக்கடிகள், இரவெல்லாம் கண்விழித்திருத்தல், தங்குமிடங்களில் இருந்த மிகக் குளிர்ச்சிமிக்க கற்களின்மீது சாஷ்டாங்கமாக மணிக்கணக்கில் விழுந்துகிடத்தல், புண்ணிய ஸ்தலங்களுக்கு நீண்ட பயணம்செய்தல், தாழ்மைப்படுத்தும் பாவமன்னிப்புச் செயல்கள், பயங்கர மான சித்திரவதைகள்—இவைபோன்ற செயல்களினால், ஆயிரக்கணக்கான வர்கள், மனசாட்சியில் சமாதானத்தைக்காண வீணாக முயன்றிருந்தனர்; பாவப் பாரத்தால் அழுத்தப்பட்டவர்களாக, பழிவாங்கும் தேவகோபம்பற்றிய பயத்துடன் நடமாடி, களைப்படைந்து, இயற்கை வழிவிடும்வரை வேதனையுடன் இருந்து, அநேகர் ஒளியின் ஒரு கீற்றையோ நம்பிக்கையையோகூடக் காணாமல் கல்லறைகளில் அடங்கினர். (30)

ஆவிக்குரிய உணவின்றி பட்டினிகிடந்த இந்த ஆத்துமாக் களுக்கு ஜீவ அப்பம் கொடுக்கவும், தேவனுடைய வாக்குத்தத்தம் என்னும் தூதினால் வரும் சமாதானத்தைக் கொடுக்கவும், அவர்களது மீட்பின் ஒரே நம்பிக்கையாகக் கிறிஸ்து இருப்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டவும் வால்டென்னியர்கள் வாஞ்சித்தனர். தேவப் பிரமாணங்களை மீறினதற்கு, தங்களுடைய நற்கிரியைகளினால் பாவநிவாரணம் உண்டுபண்ணலாம் என அவர்கள் நம்பியிருந்த இந்தக் கோட்பாடு, தவறை அடிப்படையாகக்கொண்டது என்று வால்டென்னியர்கள் அவர்களிடம் கூறினார்கள். மனித மேன்மைகளைச் சார்ந்து இருப்பது, கிறிஸ்துவின் அன்பைப்பற்றிய நோக்கிற்குக் குறுக்கே வளருகிறது; விழுந்துபோன மனித இனத்தினால், அதன் மீட்பிற்காக எந்த ஒரு செயலையும் தேவனுக்குமுன் வைக்க இயலாது; அப்படி இருந்ததால்தான் இயேசு மனிதனுக்காக அவரது ஜீவனைத் தியாகபலியாகச் செலுத்தினார். சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்தவரின் மேன்மைகள்தான் கிறிஸ்தவ விசுவாசத்தின் அஸ்திவாரமாக உள்ளது. உடலுடன் கையும் காலும் பிணைக்கப்பட்டிருப்பதுபோல், ஆத்துமா கிறிஸ்துவுடன் பிணைக்கப்பட்டதாக இருந்து, கிறிஸ்துவைச் சார்ந்திருக்கிறது என்பதே உண்மை. (31)

போப், குருமார்கள் ஆகியோரின் போதனைகள், தேவ சுபாவத்தையும் கிறிஸ்துவின் சுபாவத்தையும் மிகவும் ஈவு இரக்கம் அற்றதாகக் காட்டி யிருந்தன. விழுந்து கிடக்கும் நிலைமையிலுள்ள மனிதனிடம், அனுதாப

மில்லாதவராக இரட்சகர் காட்டப்பட்டு, அதினிமித்தம் குருமார்கள் பரிசுத்தவான்கள் ஆகியோரின் மத்தியஸ்தம் கெஞ்சிக் கேட்கப்படவேண்டும் என்பதாக அவர்கள் போதித்திருந்தனர். தேவனுடைய வார்த்தையினால், மனங்களில் வெளிச்சமடைந்த அவர்கள், இயேசுவை மனஉருக்கமுள்ள அன்புமிக்க இரட்சகராக, மனிதர்கள் அனைவரையும் அவர்களுடைய பாவப்பாரத்தோடும் சோர்வுகளோடும் கவலைகளோடும் தம்மிடம் வரும்படியாக கரம்நீட்டி அழைக்கிறவராக அவர்களுக்குக் காட்டுவதற்கு வாஞ்சித்தனர். தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் காணாமலும், தேவனிடம் நேரடியாக வந்து தங்கள் பாவங்களை அறிக்கைசெய்ய முடியாமலும் இருப்பதற்காக சாத்தான் அவர்கள்முன் அடுக்கிவைத்திருந்த தடைகள் அனைத்தையும் நீக்கிட அவ்வூழியர்கள் வாஞ்சித்தனர். (32)

வெளடாயிஸ் ஊழியக்காரர்கள், சுவிசேஷத்தின் விலைமதிப்புமிக்க சத்தியங்களை, விசாரித்தவர்களுக்கு வாஞ்சையுடன் விவரித்தனர். மிகக்கவனமாக எழுதப்பட்டிருந்த வேதாகமப் பகுதிகளை, அவர்கள் எச்சரிக்கையுடன் கொடுத்தனர். பழிவாங்கும் நோக்கத்துடன் நியாயத்தீர்ப்பைச் செயல்படுத்தக் காத்திருக்கும் ஒரு கடவுளை மட்டுமே அவர்களது மனசாட்சியால் காணமுடிந்திருந்தது. இவ்விதமாக, பாவத்தால் நொறுங்குண்ட ஆத்துமாவிற்கு நம்பிக்கையை ஊட்டுவது அவர்களது (வெளடாயிஸ் ஊழியர்களது) பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. அடிக்கடி நடுங்கும் உதடுகளுடனும் கண்ணீர்வடியும் கண்களுடனும் முழங்காலில் நின்று, பாவியின் ஒரே நம்பிக்கையாக இருந்த விலைமதிப்புமிக்க வாக்குத்தத்தத்தை அந்தச் சகோதரர்களுக்கு எடுத்துக்காட்டினார்கள். இப்படியாக, தமது செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்தையுடைய, நீதியின் சூரியன் பிரகாசிக்கும்படி, அநேக இருண்ட மனங்களிலிருந்த துயரம் என்னும் கார்மேகத்தை சத்தியத்தின் ஒளி ஊடுருவிச் சென்றது. வேத வசனங்களில் சில பகுதிகளைச் சரியாகப் புரிந்துகொண்டதாக உறுதியுண்டாகவில்லையெனில், அதைக்கேட்க விரும்பியவர்களுக்கு, அவர்கள் புரிந்துகொள்ளும்வரை, திரும்பத்திரும்ப அடிக்கடி அவைகள் வாசித்துக்காட்டப்பட்டது. “அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்” (1 யோவான் 1:7) “சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், … விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவான் 3:14–16) என்னும் இந்த வசனங்கள் திரும்பத்திரும்பச் சொல்லப்படுவதற்கு ஆவலுடன் விருப்பப்பட்டன. (33)

கத்தோலிக்கமார்க்கத்தின் உரிமைபாராட்டுதலைக்குறித்து, அநேகர் வஞ்சிக்கப்படவில்லை. பாவிக்காக மனிதர்களோ, அல்லது தேவதூதர்களோ மத்தியஸ்தம்செய்வது எவ்விதம் வீணானது என்பதை அவர்கள் கண்டனர். அவர்களது மனங்களில் உண்மையான வெளிச்சம் உதித்தது. அப்போது அவர்கள்: “கிறிஸ்து என் ஆசாரியர்; அவரது இரத்தம் எனக்கான தியாகபலி; அவரது பலிபீடம் நான் பாவ அறிக்கை செய்யுமிடம்” என்று மகிழ்சியுடன் கூறினார்கள். “விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்” (எபி. 11:6) “நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே, அவருடைய நாமமே அல்லாமல், வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப். 4:12) என்னும் வசனங்களைத் திரும்பத்திரும்பச் சொல்லி, இயேசுவின் மேன்மைகளின்மீது தங்களை முற்றிலுமாகச் சார்ந்திருக்கச் செய்தனர். (34)

புயலால் அலைக்கழிக்கப்பட்ட ஏழ்மையான சில ஆத்துமாக்களுக்கு, மீட்பரின் அன்பைப்பற்றிய நிச்சயத்தை நடைமுறைப்படுத்துவது மிகமிக மேன்மையானதாகக் காணப்பட்டது. அது கொண்டுவந்த இளைப்பாறுதல் அவ்வளவு பெரிதாக இருந்தது. அவர்கள்மீது வீசப்பட்ட ஒளிவெள்ளம் அவர்களைப் பரலோகத்திற்கே எடுத்துச்சென்றதுபோல் காணப்பட்டது. அவர்களுடைய கரங்கள் நம்பிக்கையுடன் இயேசுவின் கரங்களைப் பற்றிக் கொண்டன. நித்திய கன்மலையின்மீது அவர்களது பாதங்கள் ஊன்றப் பட்டன. மரணத்தைப்பற்றிய எல்லா பயமும் நீங்கிவிட்டது. சிறையினாலும் எரியும் அக்கினியினாலும் தங்களுடைய இரட்சகரின் நாமத்தை மேன்மைப் படுத்தும்படி, அவர்கள் அதை விரும்பினார்கள். (35)

சத்தியத்தையும் அதன் ஒளியையும் வாஞ்சித்த சிலருக்குச் சில சமயங்களிலும், பலருக்குப் பல சமயங்களிலும், சில வேளைகளில் தனி நபருக்கும், இரகசியமான இடங்களில் வேதவசனங்கள் வாசித்துக்காட்டப் பட்டன. அடிக்கடி முழுஇரவுகளும் இவ்விதமாக கழிக்கப்பட்டன. இரக்கத்தின் தூதுவன் இரட்சிப்பைப் பற்றிக்கொண்டதன் ஆரவாரம் அடங்கும்வரை அவர்களுக்கு வேதவாக்கியங்களை வாசித்துக்காட்டியிருந்தான். அந்தத் தூதுவனை வாசிப்பதை நிறுத்த வற்புறுத்தும்படி, அதனைக் கேட்டிருந்த வர்களின் வியப்பும் கொண்டாட்டமும் அவ்வளவு பெரிதாக இருந்தது. எனது காணிக்கையை தேவன் அங்கீகரிப்பாரா? அவர் என்னை நோக்கிப் புன்முறுவல் செய்வாரா? என்னை மன்னிப்பாரா என்பதுபோன்ற வார்த்தைகள் அடிக்கடி சொல்லப்பட்டன. “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” (மத். 11:28) என்ற வசனம் அவர்களின் கேள்விகளுக்குப் பதிலாக வாசிக்கப்பட்டது. (36)

விசுவாசம் வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டபோது "இனிமேல் தீர்த்த யாத்திரைகள் இல்லை; இனிமேல் புண்ணிய ஸ்தலங்களுக்கான வேதனை மிக்க பயணங்கள் இல்லை; நான் பாவியாகவும் பரிசுத்தமில்லாதவனுமாக, இருக்கிறவண்ணமாகவே இயேசுவிடம் வரலாம்; எனது பாவ மன்னிப்பிற்கான மன்றாட்டை, அவர் அலட்சியப்படுத்தமாட்டார். 'உன்னுடைய பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது' என்னுடைய பாவங்களுங்கூட எனக்கு மன்னிக்கப்படும்" என்ற மகிழ்ச்சிமிக்க பதில்கள் உண்டாயின.(37)

துதித்தலினாலும் நன்றி தெரிவிப்பதினாலும் பரிசுத்தமான மகிழ்ச்சியின் ஆரவாரம் இதயத்தை நிரப்பும். இயேசுவின் பெயர் உயர்த்தப்படும். இந்த மகிழ்ச்சிமிக்க ஆத்துமாக்கள் தங்களால் முடிந்த அளவிற்கு மற்றவர்களுக்கு வெளிச்சத்தைப் பரப்பினார்கள். தங்களுடைய அனுபவங்களைத் திரும்பச் சொல்லுவதற்காக, மெய்யான ஜீவப்பாதையை அவர்கள் கண்டுகொண்டதைச் சொல்லுவதற்காகத் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பினார்கள். சத்தியத்தின்மீது ஏக்கமாயிருந்தவர்களின் மனங்களில் நேரடியாகப் பேசின பக்திவிநயமான ஒரு வல்லமை அவ்வேதவாக்கியங்களில் இருந்தது. அது தேவனுடைய குரலாக இருந்து, அதைக் கேட்டவர்களுக்குள், அவர்கள் குற்றவாளிகள் என்ற உணர்வைக் கொண்டுவந்தது. (38)

சத்தியத்தின் தூதுவன் அவனது வழியே சென்றுவிட்டான்; ஆனால் அவனுடைய தாழ்மையான தோற்றமும் உண்மையும், அவனது அக்கறை, ஆழ்ந்த ஊக்கம் ஆகியவையும் அடிக்கடி குறிப்பிடப்பட்டன. அநேக சமயங்களில் அவன் எங்கிருந்து வந்தானென்றோ, அல்லது எங்கே சென்றா னென்றோ, அவனைச் செவிமடுத்தவர்கள் கேட்கவில்லை. அவர்கள் முதலில் ஆச்சரியத்தினாலும், அதன்பின் நன்றியுள்ள மகிழ்ச்சியினாலும் பிரமிப்படைந்து போனார்கள். அதனால் அவர்கள் அவனைப்பற்றி விசாரிப்பதற்கு நினைக்க வில்லை. அவர்களுடைய வீட்டிற்கு வரவேண்டுமென்று அவர்கள் அவனை வற்புறுத்தினபோது, மந்தையிலிருந்து காணாமல்போன ஆட்டைத் தேடிச் செல்ல வேண்டியதாக உள்ளது என்று அவன் பதில் கூறினான் "அவன் பரலோகத்திலிருந்து வந்த ஒரு தேவதூதனாக இருப்பானோ" என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டனர். (39)

அநேக சமயங்களில் சத்தியத்தின் அந்தத்தூதன் பின்னர் காணப்படவேயில்லை. ஒருவேளை அவன் வேறொரு இடத்திற்குச் சென் றிருக்கலாம்; அல்லது அறியப்படாத நிலவறை எதிலாவது தனது உயிரை இழந்திருக்கலாம்; சத்தியத்திற்காகச் சாட்சிபகர்ந்த இடத்தில், அவனது எலும்புகள் உரிக்கப்பட்டிருந்திருக்கலாம்; ஆனால் அவன் விட்டுச் சென்ற வசனங்கள், அழிக்க இயலாதவையாக இருந்தன; அவை மனிதர்களின்

இதயங்களில் கிரியைசெய்துகொண்டிருந்தன. நியாயத்தீர்ப்பின்போதுதான், ஆசீர்வாதமான அதன் பலன்கள் முழுவதுமாகத் தெரியும். (40)

வால்டென்னிய தூதுவர்கள் சாத்தானுடைய ராஜ்ஜியங்களிலும், மிக ஜாக்கிரதையாக எழுப்பப்பட்ட அந்தகார வல்லமையின் எதிர்ப்புகளுக் குள்ளும் நுழைந்தனர். தீமையின் அதிபதியினால், சத்தியத்தின் முன்னேற்றத் திற்கான முயற்சிகள் ஒவ்வொன்றும் கண்காணிக்கப்பட்டது. அவனுடைய பிரதிநிதிகளைப்பற்றிய பயங்களை ஏவினான். அந்த தாழ்மையுள்ள— அலைந்துதிரிந்து ஊழியம்செய்யும் ஊழியர்களின்மூலம், தங்களுடைய குறிக்கோளுக்கு ஆபத்து ஏற்படுவதைப் போப்பதிகாரத் தலைவர்களால் பார்க்கமுடிந்தது. சத்திய ஒளி தடையின்றிப் பிரவேசிக்க அனுமதிக்கப் பட்டிருந்தால், மக்களைச் சூழ்ந்திருந்த தவறான போதனைகளாகிய, காரிருள் நீக்கப்பட்டிருக்கும்; அது மனிதர்களுடைய மனதை தேவனுக்கு நேராகமட்டும் திருப்பி, ரோமினுடைய அதிகாரத்தை முற்றிலுமாக அழித்துவிட்டிருக்கும். (41)

பண்டைய சபையின் விசுவாசத்தை உடையவர்களான இவர்கள் உயிருடனிருப்பது, ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் மருள விழுகைக்குத் தொடர்ச்சியான சாட்சியாயிருந்தது. ஆனால் அது மிகக் கசப்பான வெறுப்பையும் உபத்திரவத்தையும் எழுப்பிவிட்டது. வேதாகமங்களை ஒப்படைத்துவிட அவர்கள் தெரிவித்த மறுப்பு, கத்தோலிக்க சபையினால் சகித்துக்கொள்ளமுடியாத ஒரு குற்றமாக இருந்தது; எனவே, அந்த சபை அவர்களைப் பூமியிலிருந்து அழித்துவிடத் தீர்மானம்செய்தது. அப்பொழுது அவர்களிருந்த மலை வீடுகளில், அவர்களுக்கெதிரான சிலுவைப்போர் ஆரம்பமாயிற்று. மதவிரோதக் குற்ற விசாரணைக்காரர்கள் அவர்களது பாதையில் வந்ததால் குற்றமற்ற ஆபேலைக் கொலைபாதகனான காயீன் கொன்றதுபோன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி திரும்பத்திரும்ப நிகழ்ந்தன. (42)

மீண்டும் மீண்டும் அவர்களது செழிப்பான நிலங்களும் வீடுகளும் ஆலயங்களும் அடித்து நொறுக்கப்பட்டன. ஒருசமயம் செழுமையாயிருந்த வயல்களும், குற்றமற்றவர்களாலும் உற்சாகமானவர்களாலும் நிறைந்திருந்த வீடுகளும், பாழிடங்களாக்கப்பட்டன. கடித்துக் குதறும் மிருகம் இரத்தத்தின் ருசியினால் மேலும் வெறிகொள்ளுவதுபோல், போப்பு மார்க்கத்தாரின் ஆங்காரம், அவர்களால் துன்புறுத்தப்பட்டவர்களின் வேதனைகள் அதிகரித்தபோது, மேலும் அதிகரித்தது. மலைப் பள்ளத்தாக்குகளிலும் மலைச் சிகரங்களின் பாறைகளிலும் மறைந்திருந்த தூய்மையான விசுவாசத்தை உடையவர்களில் அநேகர் பின்தொடரப்பட்டு, வேட்டையாடப்பட்டனர். (43)

தடைசெய்யப்பட்டிருந்த சமுதாயத்தினரின் பண்பைக்குறித்த எந்த விதமான குற்றச்சாட்டையும் கொண்டுவரமுடியவில்லை. அவர்கள் சமாதான மும் அமைதியும் பக்தியுமிக்க ஜனங்கள் என்று அவர்களது விரோதிகளுங் கூடக் கூறினார்கன். போப்புவின் மாறுபட்ட விருப்பத்தின்படி தேவனைத் தொழமாட்டோம் என்றதுதான் அவர்கள் செய்த பெரும் குற்றமாக இருந்தது. இந்தக் குற்றத்திற்காக, கொடிய மனிதர்களும் பேய்களும் கண்டுபிடித்த தாழ்த்தப்படுத்துதல், அவமானங்கள், சித்திரவதைகள் ஆகிய கொடுமைக ளெல்லாம் அவர்கள் மீது குவிக்கப்பட்டன. (44)

ஒரு சமயம் இவர்களைப் பூமியிலிருந்தே அழித்துவிட ரோமன் கத்தோலிக்கச் சபை தீர்மானித்தபோது, அவர்களை மதவிரோதிகள் எனக் கண்டனம்செய்யும் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதன்படி அவர்கள் கொலைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் சோம்பேறிகள் என்றோ, நாணயமில்லாதவர்களென்றோ, ஒழுக்கம் இல்லாதவர்கள் என்றோ, குற்றம் சாட்டப்படவில்லை; மாறாக மெய்யான தொழுவத்திலுள்ள ஆடுகளை ஈர்த்துக்கொள்ளும் பக்தியும் பரிசுத்தமுமான தோற்றம் கொண்டவர்களென்று அறிவிக்கப்பட்டனர். எனவே அருவருக்கத்தக்கவர்களும், தீமையை அதிகரிப்பவர்களுமாக இருந்த அந்த இனத்தினர் அவர்களது உரிமையை விட்டுவிடும் அறிக்கையைச் செய்ய மறுத்தால், நச்சுப் பாம்புகளைக் கொல்லுவதுபோல் அவர்கள் கொல்லப்படவேண்டும் என்ற கட்டளையை போப்பு பிறப்பித்தார்.—Wylie, b. 16, ch. 1. அதிகார இருமாப்புமிக்க அவர் அதே வார்த்தைகளை மறுபடி சந்திக்க எதிர்பார்த்திருக்கிறாரா? “மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்” (மத்தேயு 25:40) என்று சொல்லப்பட்டுள்ளதன்படி நியாயத்தீர்ப்பில் போப்புவிற்கு எதிராக நிற்கத்தக்கதாக, அவைகள் பரலோகப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளன என்பதை அவர் அறிந்திருந்தாரா? (45)

இந்த மதவிரோதிகளுக்கெதிரான சிலுவைப் போரில், சபை அங்கத்தினர்களனைவரும் கலந்துகொள்ளவேண்டுமென்று அந்த அறிக்கை அழைத்தது; இப்படிப்பட்ட கொடுமையான செயலில் ஈடுபடுவதற்கான ஊக்கப்பரிசும் அறிவிக்கப்பட்டது. அப்பரிசு—சபை அங்கத்தினர்கள் சபைக் கெதிராகச் செய்துள்ள செயல்களுக்காக (பொதுவாகவும் குறிப்பாகவும்) உண்டாகக்கூடிய வேதனைகளில் இருந்தும் தண்டனைகளில் இருந்தும் அனைவருக்கும் விடுதலை தரப்படும்; சிலுவைப்போரில் பங்குபெறும் அவர்கள் நிறைவேற்றாமல் விட்டுவிட்ட எல்லாவிதமான ஆணைகளில் இருந்தும் அவர்களுக்கு விடுதலை கொடுக்கப்படும்; அவர்கள் சட்டவிரோதமாகச்

சம்பாதித்த சொத்துக்கள் அனைத்தும் சட்டப்படியானவைகள் என்று அறிவிக்கப்படும்; ஏதாவது ஒரு மதவிரோதியைக் கொன்றால், அவர்களின் பாவம் அனைத்தும் மன்னிக்கப்படும்; வௌடாயிஸ் மக்களுடன் செய்யப்பட்டிருந்த எல்லா ஒப்பந்தங்களையும் அது நீக்கி, அவர்களுடைய வீட்டுப்பொருள்களை விட்டுவிட்டுச்செல்லவும் உத்தரவிட்டது. எந்தவிதமான உதவியும் அவர்களுக்கு ஒருவரும் செய்யக்கூடாது என்றுகூறி, சகலரும் அவர்களது சொத்துக்களைக் கைப்பற்றிக்கொள்ள அதிகாரம் கொடுத்தது.—Wylie, b. 16, ch. 1. இந்த அறிவிப்பு திரைமறைவிலிருந்து செயல்பட்ட சத்துருவின் ஆவியைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது; இது வலுசர்ப்பத்தின சீற்றமாகும்; அங்குள்ளதாகக் கூறப்படும் கிறிஸ்துவின் குரல் அல்ல! (46)

தேவப்பிரமாணத்தின் மாபெரும் தரத்திற்கு இசைவாக, தங்களுடைய சுபாவத்தை மாற்றிக்கொள்ள போப்புமார்க்கத் தலைவர்கள் இணங்கமறுத்து, தங்களுக்குப் பொருந்தக்கூடிய ஒரு தரத்தை நிர்ணயம்செய்தனர். ரோமன் கத்தோலிக்கமார்க்கம் அதை விரும்பினபடியால், அனைவரும் அதற்கு இசையவேண்டும் என்று அது எல்லோரையும் வற்புறுத்தி, மிகப் பயங்கரமான—துயரம் தருகின்ற முடிவுகளைச் சட்டமாக்கிற்று. ஊழலும் தேவதூஷணமுமிக்க குருமார்களும் போப்புகளும் சாத்தான் அவர்களைச் செய்யும்படி ஏவின வேலையைச் செய்தனர். இரக்கம் அவர்களது இயல்பில் இல்லாததாகிவிட்டது. கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து, அப்போஸ்தலர்களைக் கொலைசெய்த அதே ஆவி, நீரோ மன்னனை இரத்த வெறியனாக்கிய அதே ஆவி, தேவனால் நேசிக்கப் பட்டிருந்தவர்களைப் பூமியிலிருந்து அழித்தொழிப்பதற்காக வேலைசெய்தது! (47)

அநேக நூற்றாண்டுகளாக தேவனுக்குப் பயந்த அந்த ஜனங்களுக்கு நேரிட்ட உபத்திரவங்கள், தங்கள் மீட்பரை கனப்படுத்தும் பொறுமையுடன் சகிக்கப்பட்டன. அவர்களுக்கு எதிராக சிலுவைப்போர்கள் நடந்தபோதும், மனிதத்தன்மை சற்றுமில்லாத கொலைபாதகங்களுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டபோதும், தங்களுடைய மிஷனரிமார்களை—விலைமதிப்புமிக்க சத்தியங்களை எங்கும் பரப்பும்படியாக அவர்கள் அனுப்பி வைத்திருந்தனர். சாகும்படி வேட்டையாடப்பட்டனர்; அப்படியிருந்தும் அவர்களுடைய இரத்தம் விதைக்கப்பட்ட விதைகளுக்குத் தண்ணீராக அமைந்தது; அது கனிகொடுக்கத் தவறவில்லை. (48)

இவ்வாறாக, **லூத்தரின்** பிறப்பிற்கு நூற்றாண்டுகளுக்குமுன், வால்டென்னியர்கள் தேவனுக்குச் சாட்சி பகர்ந்தனர். அநேக நாடுகளில் பரவி, விக்ளி.்.பின் காலத்தில் ஆரம்பமான சீர்திருத்தத்தின் விதைகளை அவர்கள் விதைத்தனர். அந்த விதைகள் லூத்தர் காலத்தில் ஆழமாகவும்

அகலமாகவும், பெரிதாகவும் வளர்ந்தது. "தேவ வசனத்தினிமித்தமும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும்" (வெளி. 1:9) பாடுகளைச் சகித்துக்கொள்ள முன்வருபவர்களால் அது இன்னமும், காலத்தின் முடிவுவரை, முன்னேறிச்செல்ல வேண்டியதிருக்கிறது. (49) ★

# 5

# சீர்திருத்தத்தின் விடிவெள்ளி ஜான் விக்ளி˙.!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 79–96)**

சீர்திருத்தத்திற்கு முன்னான காலத்தில் வேதாகமத்தின் ஒரு சில பகுதிகள்மட்டுமே உபயோகத்தில் இருந்தன் ஆனால் தேவன் அவருடைய வார்த்தைகள் முற்றிலுமாக அழிந்துவிட அனுமதிக்கவில்லை. அதன் சத்தியங்கள் என்றைக்கும் மறைத்துவைக்கப்பட முடியாததாக இருந்தது. அவருடைய ஊழியக்காரர்களை விடுவிக்கும்படியாகச் சிறைக் கதவுகளின் தாழ்ப்பாள்களைத் திறந்ததுபோல, பூட்டப்பட்டிருக்கும் அவரது வார்த்தைகளை எளிதில் கட்டவிழ்த்துவிட அவரால் முடியும். மறைத்துவைக்கப்பட்டிருக்கும் கருவூலங்களைத் தேடுவதுபோல் சத்தியத்தைத் தேடும்படி, ஐரோப்பாவிலும் மற்ற நாடுகளிலும் இருந்த மக்களை தேவஆவியானவர் நெருக்கினார். வேதவாக்கியங்களுக்கு தெய்வாதீனமாக நடத்தப்பட்ட அவர்கள், அதன் பரிசுத்தமான பக்கங்களை, மிகுந்த வாஞ்சையுடன் வாசித்தனர். தங்களுக்கு என்ன நேரிட்டாலும், ஒளியை ஏற்றுக்கொள்ள அவர்கள் விருப்பம் உள்ளவர்களாக இருந்தனர். எல்லாவற்றையும் தெளிவாகக் காணாவிட்டாலும், நெடுங்காலமாகப் புதைத்துவைக்கப்பட்டிருந்த அநேக சத்தியங்களை உணர்ந்துகொள்ளும்படி, அவர்கள் தகுதிப்படுத்தப்பட்டனர். தவறுகள், மூடநம்பிக்கைகள் ஆகிய சங்கிலிகளைத் தகர்த்தெறிந்து, அவைகளால் அடிமைப்படுத்தப் பட்டிருந்தவர்களுக்கு, விடுதலையை அறிவிக்க, பரலோகத்தால் அனுப்பப்பட்ட தூதர்களாக அவர்கள் முன்சென்றனர். (1)

வால்டென்னியர்களைத் தவிர, மற்றவர்களுக்கிடையில் கற்றோரால் மட்டுமே அறிந்துகொள்ளக்கூடியவகையில், தேவனுடைய வார்த்தை நீண்ட

காலமாகப் பூட்டிவைக்கப்பட்டிருந்தது. ஆனால் பல நாடுகளிலும் உள்ள மக்கள் அவர்களது தாய்மொழியில் அறிந்து கொள்ளுவதற்கேற்ப, வேத வாக்கியங்கள் மொழிபெயர்க்கப்படும் காலம் வந்தது. உலகமும் அதன் நள்ளிரவைக் கடந்திருந்தது. இருளான மணிநேரங்கள் பெலவீனமடைந்து, அநேக நாடுகளில் அருணோதயத்தின் அடையாளம் தோன்றியது. (2)

பதினான்காம் நூற்றாண்டில், சீர்திருத்தத்தின் விடிவெள்ளி இங்கிலாந்தில் உதித்தது. இங்கிலாந்திற்காக மட்டுமல்லாமல், கிறிஸ்தவ உலகம் முழுவதற்குமான சீர்திருத்தத்தின் விடிவெள்ளியாக ஜான் விக்ளி∴ப் திகழ்ந்தார். அவரால் சொல்லும்படி அனுமதிக்கப்பட்ட, ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திற்கெதிரான அறைகூவல், ஒருபோதும் மௌனப்படுத்தப்படக் கூடாததாக இருந்தது. அந்த எதிர்ப்பு தனிப்பட்டவர்களுக்கும், சபைகளுக்கும் நாடுகளுக்கும் விடுதலையைக் கொண்டுவருகிற போராட்டத்தைத் துவக்கியது. (3)

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்றறிந்த விக்ளி∴ப், தாராளமான கல்வியையும் பெற்றார். பக்தியைப் போலவே, அவரிடமிருந்த சிறந்த தாலந்துகளுக்காகவும் ஆழ்ந்த அறிவிற்காகவும் கல்லூரியில் எடுத்துக்காட்டானவராக இருந்தார். அறிவின்மீதிருந்த தாகத்தின் காரணமாக, கல்வியின் ஒவ்வொரு துறையிலும் அவர் அறிமுகமாக விழைந்தார். சமயத் தத்துவங்களிலும், சபைச் சட்டங்களிலும், சமூகச் சட்டங்களிலும், குறிப்பாக அவரது நாட்டிலிருந்த கலைகளிலும் அவர் கற்பிக்கப்பட்டிருந்தார். இந்த ஆரம்பகாலப் பயிற்சியின் மதிப்பை, பின்நாட்களில் அவர் ஆற்றிய பணியில் வெளிப்படையாகக் காணமுடிந்தது. அவரது நாட்களில் நிலவியிருந்த யூகங்களை அடிப்படையாகக்கொண்ட தத்துவங்களைப்பற்றிய முழுமையான அவரது அறிவு, அதன் தவறுகளை எடுத்துக்காட்ட அவரைத் தகுதிப்படுத்தியது தேசியச்சட்டம்—சமயச்சட்டம் ஆகியவைகளில் அவருக்கிருந்த கல்விப் பயிற்சியினால், தேசியச்சுதந்திரம், சமயச்சுதந்திரம் ஆகிய போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தார். தேவனுடைய வார்த்தையிலிருந்துபெற்ற ஆயுதத்தைப் பயன்படுத்த அறிந்திருந்த அதேசமயம், பள்ளிகளிலிருந்து அறிவுக்கூர்மையையும் பெற்று, பள்ளியிலிருந்த மனிதர்களின் தந்திரங்களையும் அறிந்துகொண்டார். அறிவின் மேன்மையால் அவரிடமுண்டாயிருந்த வல்லமையும், அவரது அறிவின் விசாலமும் பரிபூரணமும், அவரது நண்பர்கள் மற்றும் விரோதிகள் இடையே அவருக்கு மதிப்பை உண்டாக்கியது. அவரைச் சார்ந்தவர்கள், நாட்டின் அறிவுமிக்கவர்களுக்கிடையில் அவர் முன்னணியில் நிற்பதை திருப்தியுடன் கண்டனர். சீர்திருத்தத்தை ஆதரித்தவர்களின்

அறியாமையையோ பெலவீனத்தையோ வெளிக்கொணர்ந்து, அவைகளை சீர்திருத்தத்திற்கெதிராக நிறுத்துவதற்கு எதிரிகள் தடுக்கப்பட்டனர். (4)

விக்ளி∴ப் கல்லூரியில் பயின்றுகொண்டிருந்தபோதே, வேதாகம ஆராய்ச்சியில் ஈடுபட்டார். வேதாகமம் பழங்கால மொழியில்மட்டுமே இருந்த அந்தக் காலத்தில், கற்றறிந்த மேதைகள் சத்திய ஊற்றின் பாதையைக் காண தகுதியடைந்திருந்தனர், கல்லாதவர்களுக்கு அது மூடிவைக்கப்பட்டிருந்தது. இவ்வாறாக, ஒரு சீர்திருத்தவாதியாகப் பணியாற்ற விக்ளி∴பிற்கு ஏற்கனவே பாதை ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது. கற்றறிந்த மனிதர்கள் தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து, அதில் வெளிப்படுத்தப்பட்டிருந்த அவரது இலவச கிருபை என்னும் மாபெரும் சத்தியத்தை, கண்டறிந்திருந்தனர். இந்த சத்தியத்தைப்பற்றிய அறிவை தங்களுடைய போதனைகளினால் பரப்பி, மற்றவர்களையும் ஜீவவார்த்தைகளுக்குத் திரும்பும்படி அவர்கள் வழிநடத்தினார்கள். (5)

வேதவசனங்களின் திசையை நோக்கி விக்ளி∴பின் கவனம் சென்ற போது, பள்ளிக் கல்வியில் தேர்ந்தவராவதற்கு எவ்விதமான முழு முயற்சி யுடையவராக இருக்கவேண்டியதிருந்ததோ, அதே முழு முயற்சியுடன் அவைகளின் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். சமயக் கல்விகளோ சபையின் போதனைகளோ திருப்திப்படுத்தமுடியாத ஒரு மாபெரும் தேவை அதற்குமேல் இருப்பதை அவர் உணர்ந்தார். இதற்கு முன்பு அவர் எவைகளை தாகத்துடன் தேடி அலைந்தாரோ, அவைகளை தேவனுடைய வார்த்தைகளில் கண்டார். இங்கு மீட்பின் திட்டம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதையும், மனிதனின் ஒரே பரிந்துபேசுபவராக கிறிஸ்து ஏற்படுத்தப்பட்டிருப்பதையும், அவர் கண்டார். அவர் தன்னை கிறிஸ்துவின் ஊழியத்திற்கென்று ஒப்புக்கொடுத்து, தான் கண்டறிந்த சத்தியத்தை அறிவிக்கத் தீர்மானித்தார். (6)

பிற்காலத்தில் தோன்றின சீர்திருத்தவாதிகளைப்போல, அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், அது அவரை எங்கு நடத்திச் செல்லுமென்பதை அவர் முன்னறியாமலிருந்தார். தன்னை ரோமிற்கு எதிராக துணிவுடன் நிறுத்தவில்லை ஆனால் சத்தியத்தின்மீதிருந்த பக்தி அவரைத் தவறுக்கு எதிராகக் கொண்டுவந்தது. போப்புமார்க்கத்தின் தவறுகளை எந்த அளவிற்குத் தெளிவாக அறிந்திருந்தாரோ, அந்த அளவிற்கு மிகுந்த ஆர்வத்துடன் வேதாகமப் போதனைகளை வெளிப்படுத்தினார். மனிதச் சடங்காச் சாரங்களுக்காக, ரோம சபை, வேத வாக்கியங்களைக் கைவிட்டுவிட்டதை அவர் கண்டார். வேத வாக்கியங்களைத் தடைசெய்ததற்காக, அச்சமின்றி குருமார்களின்மீது குற்றம்சாட்டி, வேதாகமம் மீண்டும் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றும், சபையில் அதன் அதிகாரம் மீண்டும் ஏற்படுத்தப்பட

வேண்டும் என்றும் கோரினார். அவர் ஒரு ஆர்வமிக்க ஆசிரியராகவும் நாவன்மைமிக்க பேச்சாளராகவும் மட்டுமிருக்கவில்லை, அவருடைய அன்றாட வாழ்க்கையும் அவர் பிரசங்கித்த சத்தியத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்தது. வேதவாக்கியங்களைப்பற்றிய அவரது அறிவு, வழக்காடும் திறன், தூய்மையான வாழ்க்கை, வளைந்து கொடுக்காத தைரியம், கண்ணியம் ஆகியவை அவர்மீது பொதுவான மதிப்பையும் நம்பிக்கையையும் அவருக்கு சம்பாதித்துத் தந்தது. ரோமசபையில் நிலவியிருந்த அக்கிரமங்களைக் கண்டு, அவர்களது பழைய விசுவாசத்தின்மீது அதிருப்திகொண்டிருந்த அநேகமக்கள், விக்ளி∴பின் மூலமாகக் காட்சிக்குக் கொண்டுவரப்பட்ட சத்தியத்தை, மறைக்கமுடியாத பெரு மகிழ்ச்சியுடன் புகழ்ந்தனர். ஆனால் இந்தச் சீர்திருத்தவாதியின் செல்வாக்கு தங்களது செல்வாக்கைவிட உயர்ந்துவருவதை உணர்ந்த போப்புமார்க்கத் தலைவர்கள் சினத்தால் நிறைந்தனர். (7)

விக்ளி∴ப் தவறுகளை மிகச் சரியாகக் கண்டுபிடிக்கக் கூடியவராக இருந்து, ரோம அதிகாரத்தினால் அனுமதிக்கப்பட்ட அநேக தவறுகளை அச்சமின்றி அடித்துக்கூறினார். அவர் அரசரின் போதகராக இருந்த சமயத்தில், ஆங்கிலேய மன்னர்களும் காணிக்கை செலுத்தவேண்டும் என்று போப்பு பாராட்டிய உரிமைக்கு எதிராக தைரியத்துடன் நின்று, மதச்சார்பற்ற அதிபதிகளின்மீது அதிகாரமிருப்பதாக எண்ணும் போப்புமார்க்கத்தின் உத்தேசம், பகுத்தறிவிற்கும் வேதாகம வெளிப்படுத்துதலுக்கும் எதிரானது என்றார். போப்புவின் கோரிக்கை மிகுந்த கோபத்தை எழுப்பினபோது, விக்ளி∴பின் போதனைகள், நாட்டிலிருந்த பெரியவர்களின் மனங்களில் செல்வாக்கை உண்டாக்கியது. போப்புவிற்கு காணிக்கை (கப்பம்) செலுத்த மறுத்த அரசனும் மேன்மக்களும், உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்த போப்புவின்உரிமையை மறுப்பதில் ஒன்றுபட்டனர். இவ்வாறாக இங்கிலாந்தில் போப்புமார்க்கத்தின் மேலாண்மையின்மீது பலத்த அடி விழுந்தது. (8)

அந்த சீர்திருத்தவாதி, தீமைக்கு எதிராக மிகுந்த தீர்மானத்துடன் நடத்திய மற்றொரு நீண்ட போராட்டம், ரோமன் கத்தோலிக்க குருமார்களின் அமைப்புகளுக்கெதிரானதாகும். இங்கிலாந்து நாட்டின் விரிவடையும் செல்வச்செழிப்பை நாசம் செய்யும் தொற்றுநோயாக இந்தக் குருமார்களின் கூட்டம் பெருகியது. தொழில், கல்வி, சன்மார்க்க நெறி ஆகிய அனைத்தும் அதனை வாடச்செய்யும் ஆதீனத்தை உணர்ந்தது. சந்நியாசிகளின் சோம்பேறித்தனமான பிச்சையெடுக்கும் வாழ்க்கை நீதியின் கடினமான விரையமாக இருந்ததோடல்லாமல் பயனுள்ள வேலையின் மீது பழியையும் கொண்டுவந்தது. இளைஞர்கள் சன்மார்க்க நெறியற்றவர்களாகவும்,

ஊழல்மிக்கவர்களாகவும் ஆனார்கள். இந்தப் பக்கிரிகளின் செல்வாக்கினால், மடங்களில் தங்கி, தனித்திருக்கும் வாழ்க்கையை மேற்கொள்ள அநேகர் ஈர்க்கப்பட்டனர். இச்செயல்கள் பெற்றோரின் அனுமதியின்றி நடந்தது மட்டுமல்லாமல், அவர்களுக்குத் தெரியாமலேகூட நடந்தது. ஆரம்பகால ரோமன் கத்தோலிக்க சபை குருமார்களில் ஒருவர், பெற்றோர்மீது பிள்ளைகள் காட்டவேண்டிய அன்பிற்கும் கடமைக்கும் மேலாக, சந்நியாசி மடத்தின் உரிமையைப் பெரிதுபடுத்தி: “உன் தந்தை அழுதுகொண்டும் புலம்பிக்கொண்டும் உன் வாசற்படிக்குமுன் படுத்துக்கிடந்தாலும், உன் தாய் உன்னைச் சுமந்த உடலையும் உனக்குப் பாலூட்டின முலைகளையும் காட்டினாலும், நீ அவர்களைக் காலால் மிதித்துத் தள்ளிவிட்டு கிறிஸ்துவை நோக்கி நேராகச் செல்லுவாயாக” என்று அறிவித்தார். “ஓநாயை போன்ற இரத்தவெறியும் கிறிஸ்தவனையும் மனிதனையும் விடக் கொடுமையையும் கொண்டது” என்று பிற்காலத்தில் லுத்தர் அழைத்ததுபோல, தனித்தன்மையற்ற இந்த அரக்கச் செயலினால் பெற்றோருக்கு எதிராக அவர்களுடைய பிள்ளைகளின் இதயங்கள் திருடிச்செல்லப்பட்டன. (Barnas Sears, The Life of Luther, pages 70, 69). பழங்காலப் பரிசேயர்கள், அவர்களுடைய பாரம்பரியங்களினால், கற்பனைகளை வலிமையற்றதாக்கினதுபோல, போப்புமார்க்கத் தலைவர்களும் செயல்பட்டனர். இவ்விதமாக, இல்லங்கள் பாழாக்கப்பட்டு, பெற்றோர் தங்களது மகன்கள், மகள்கள் ஆகியோரின்மீது கொண்டிருந்த சமூக உரிமைகளையும் இழந்தவர்களானார்கள். (9)

பல்கலைக்கழகங்களில் படித்துக்கொண்டிருந்த மாணவர்கள்கூட, துறவிகளின் தவறான வெளிக்காட்டலின்மூலமாக, அவர்களது நிலையைப் பின்பற்றும்படி இழுக்கப்பட்டனர். இந்தத் தொற்றுநோயினால் தங்களது சொந்த வாழ்க்கைகளை அழித்து, தங்களின் பெற்றோருக்குத் துயரத்தை உண்டுபண்ணின இந்த செய்கையை எண்ணி, பின்னர் அவர்கள் மனம் வருந்தினார்கள். ஆனால் ஒருமுறை இந்தக் கண்ணியில் அகப்பட்டபின், அவர்களது சுதந்திரத்தை மீண்டும் அவர்களால் அடைந்துகொள்ள முடியாமலிருந்தது. இந்தத் துறவிகளின் செல்வாக்கைக் கண்டஞ்சிய பெற்றோர்களில் அநேகர் தங்கள் மகன்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்ப மறுத்தனர். பெரிய கல்வி மையங்களில் மாணவர்களின் வருகை வீழ்ச்சியடைந்தது. பள்ளிகள் சோர்வடைந்து, அறியாமை நிலவியது. (10)

பாவ அறிக்கையைக் கேட்டு, மன்னிப்பருளும் அதிகாரத்தை, போப்பானவர் குருமார்களுக்கும் அறிவித்திருந்தார். அது பெரும் தீமைக்கு ஆதாரமாக அமைந்தது. தங்களது ஆதாயங்களின்மீது நாட்டம்கொண்ட குருமார்கள், சகலவிதமான குற்றவாளிகளுக்கும் மன்னிப்பை அருள

ஆயத்தமானதால், அதன் விளைவாக மிக மோசமான தீய பழக்கங்கள் விரைவாக அதிகரித்தன. ஏழைகளுக்கு உதவியிருக்கக்கூடிய தர்மங்களைக் குருமார்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அச்சுறுத்தி, அப்படித் தர மறுத்தவர்களை பக்தியற்றவர்கள் என்று புறக்கணித்து, குருமார்கள் இந்த தர்மங்களை அடைந்துகொண்டதினால், நோயாளிகளும் ஏழைகளும் துன்பங் களை அனுபவிக்கும்படி விட்டுவிடப்பட்டனர். ஏழ்மையை வாழ்க்கையாகக் கொண்டோம் என்று அறிவித்த குருமார்களின் செல்வம், தொடர்ந்து அதிகரித்தது. அவர்களது மாடமாளிகைகளும் ஆடம்பரமான உணவுகளும் நாட்டில் வறுமை பெருக்கத்தை வெளிப்படையாகக் காண்பித்தது. குருமார்கள் அவர்களது நேரத்தை ஆடம்பரங்களிலும் இன்பங்களிலும் செலவழித்தபோது, அவர்களுக்குப்பதிலாக, ஆச்சரியமான கதைகளையும் கட்டுக்கதைகளையும் வேடிக்கை விநோதங்களையும் சொல்லக்கூடிய அறிவற்றவர்களை அவர்களின் போலியாக வெளியே அனுப்பினர். அப்படியிருந்தும், மூடபக்திமிக்க திரளானவர்களை தங்கள் பிடியில்வைத்து, போப்புவின் மேலாதிக்கத்தை அங்கீகரிக்கவேண்டியது மதச்சார்புள்ள கடமை என்றும், பரிசுத்தவான்களைப் போற்றுவதும், குருமார்களுக்கு அன்பளிப்புகளைக் கொடுப்பதும் பரலோகத்தில் ஒரு இடத்தைப் பெற்றுக்கொள்ளப் போதுமானது என்றும் நம்பும்படிச் செய்திருந்தனர். (11)

இந்தத் தனித்த சந்நியாச வாழ்க்கையில், ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டுவர கற்றவர்களும் பக்திமிக்கவர்களும் வீணாக முயன்றனர். ஆனால் விக்ளி∴ப், மிகுந்த உள்ளுணர்வுடன் இந்தத் தீமையின் வேரை வெட்டி, இந்த முறையே தவறானது இது கைவிடப்பட வேண்டும் என்று அறிவித்தார். விவாதங்களும் விசாரணைகளும் துயில்விட்டு எழுந்தன. குருமார்கள் நாடெங்கும் திரிந்து, போப்புவினால் உண்டாகும் பாவமன்னிப்பை விற்றுக்கொண்டிருந்த போது, பாவமன்னிப்பை பணத்தினால் வாங்க இயலுமா என்பதைப்பற்றி, அநேகர் சந்தேகப்படத்தொடங்கி, ரோமாபுரியிலுள்ள பேராயரிடமிருந்து பாவமன்னிப்பைப் பெறுவதைவிட, பாவமன்னிப்பை தேவனிடம் தேடமுடியாதா? என்றும் கேள்வி கேட்டனர். ஒருபோதும் திருப்தி யடையாத குருமார்களின் பேராசையையும் பிடுங்கித்தின்னும் ஆசையையும் கண்டு திடுக்கிட்டவர்கள் சிலரல்ல. “சந்நியாசிகளும், குருமார்களும் எங்களை புற்றுநோயைப்போல அரித்துத் தின்னுகின்றனர் தேவன் எங்களை விடுவிக்கவேண்டும் அல்லது அழிந்துபோவோம்” என்று அவர்கள் சொன்னார்கள்.—D’Aubigne, b. 17, ch. 7. தங்களுடைய பேராசையை மறைப்பதற்காக, இயேசுவும் அவரது சீடர்களும் மக்களின் உதாரத்துவத்தினால் தாங்கப்பட்டனரென்றும், பிச்சையெடுக்கும் அவர்கள் இயேசுவின் அடிச்சுவடு களைப் பின்பற்றுவதாகவும் உரிமை பாராட்டிக்கொண்டனர். இந்த

உரிமைபாராட்டுதல் அவர்களது நோக்கத்தையே காயப்படுத்தியது. ஏனெனில், வேதாகமத்தை வாசிக்கும்படி அநேகரை இது நடத்தியது— மற்றெல்லாவற்றையும் விட, ரோம் கொஞ்சமும் விரும்பாத விளைவை அது உண்டுபண்ணியது. ரோமன் கத்தோலிக்க நிர்வாகம் மூடிமறைக்க வேண்டும் என்று விரும்பிய சத்தியத்தின் ஆதாரத்திற்கு மனிதர்களின் மனம் நடத்தப்பட்டது. (12)

விக்ளி∴ப் குருமார்களுக்கெதிரான துண்டுப் பிரசுரங்களை எழுதி வெளியிடத் தொடங்கினார். ஆனாலும், அவர்களுடன் வாக்குவாதம் செய்கின்ற மாதிரி எழுதாமல், மனிதர்களின் எண்ணங்களை வேதாகமத்தின் போதனைகளுக்கும், அதன் ஆசிரியரிடத்திற்கும் அழைக்கும்படி எழுதினார். மன்னிக்கும் அல்லது சபைக்குப் புறம்பாக்கும் வல்லமை ஒரு சாதாரண குருவிடம் உள்ளதைவிட போப்புவிடம் அதிகம் இல்லை எந்த ஒரு மனிதனும், முதலில் தேவ கோபாக்கினையை தன்மேல் சுமத்திக்கொண்டாலொழிய மெய்யாகவே சபைக்குப் புறம்பாக்கப்பட முடியாது என்று அவர் அறிவித்தார். லட்சக்கணக்கான ஆத்துமாக்களும் சரீரங்களும் அடிமைப்படுத்தப்பட்டிருந்த, போப் நிறுத்தியிருந்த ஆவிக்குரியதும் உலகப்பிரகாரமானதுமான ஆளுகையை தூக்கி எறிய, பலமிக்க வேறு எவ்வழியையும் அவரால் தேர்ந்தெடுக்க முடியவில்லை. (13)

ரோமன் கத்தோலிக்க நிர்வாகத்தின் ஆக்கிரமிப்பிற்கெதிராக, ஆங்கிலஅரசின் உரிமையைப் பாதுகாக்கும்படி, விக்ளி∴ப் மறுபடியும் அழைக்கப்பட்டார். அவர் ராஜரீகத் தூதுவராக நியமிக்கப்பட்டதால், போப்புவின் ஆணையாளர்களுடன் இரண்டு வருடங்களை நெதர்லாந்து என்னுமிடத்தில் கழித்தார். அங்கு அவர் பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளிலிருந்து வந்திருந்த சபை நிர்வாகிகளுடன் தொடர்புகொள்ளும்படி கொண்டுவரப்பட்டு, அதனால் திரைக்குப் பின்னாலுள்ள காட்சிகளைக் கண்டார். இங்கிலாந்து நாட்டில் இருந்தபோது அறிந்துகொள்ளமுடியாதபடி மறைந்திருந்த வைகளைப்பற்றிய அறிவை அடைந்துகொள்ளும் வாய்ப்பு அவருக்கு இப்போது கிடைத்தது. அவரது பிற்கால ஊழியத்திற்குத் தேவையான அநேக விஷயங்களை அதிகமாக அறிந்துகொண்டார். போப்புவின் மன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட போப்புவின் பிரதிநிதிகளிலிருந்து, அந்த சமயத் தலைவரின் சுபாவத்தையும், குறிக்கோளையும் அவர் அறிந்துகொண்டார். பிறர் பொருளின்மீது ஆசை, பொறாமை, வஞ்சகம் இவைதான் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் கடவுள்களாக உள்ளன என்று செல்லி, அவருடைய பழைய போதனைகளை, இங்கிலாந்திற்குத் திரும்பிவந்தபின், மீண்டும் வெளிப்படையாக, அதிக ஆர்வத்துடன் கூறினார். (14)

“நம் நாட்டிலுள்ள ஏழை மனிதர்களின் சம்பாத்தியங்களையும், ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மார்க்குகளையும் (அந்த நாட்டு நாணயம்), அரசரின் பணத்தையும், நற்கருணைக்காவும் ஆவிக்குரிய பொருள்களுக்காகவும் வசூலிப்பது, சுயநலத்துக்காக செய்யப்படும் சபிக்கப்பட்ட மதப்புரட்டாகும். இந்த மதப்புரட்டை கிறிஸ்தவ மார்க்கம் முழுவதும் உறுதிப்படுத்தும்படி செய்கின்றனர். நமது நாட்டிற்குள் தங்கத்தாலான ஒரு மலை இருந்தாலும், அதிலிருந்து அந்த அகந்தைமிக்க குருமார்களின் வசூலிப்போர் தவிர இதுவரை வேறு ஒரு மனிதனும் கொஞ்சஞ்கூட எடுக்காமலிருந்தாலும், காலப்போக்கில் அந்த மலையையே கரைத்துச் சென்றுவிடுவார்கள். அவர்கள் ஒவ்வொரு பணத்தையும் நம் நாட்டிலிருந்து எடுத்து, அதைத் திரும்பத்தராமல், புனிதப் பொருட்களின் விற்பனை என்பதன் பெயரால், தேவனின் சாபத்தைக் கொண்டுவருகின்றனர்” என்று துண்டுப் பிரசுரங்கள் ஒன்றில் போப்புவைப்பற்றியும் அவருக்காக வசூலிப்பவர்களைப்பற்றியும் அவர் எழுதிவெளியிட்டார்.—John Lewis, History of the Life and Sufferings of J. Wiclif, page 37. (15)

விக்ளி∴ப் இங்கிலாந்திற்குத் திரும்பினதும், லூட்டர்வொர்த் என்ற இடத்திலிருந்த மடாலயத்தின் தலைவராக அரசரால் நியமிக்கப்பட்டார். அவரது வெளிப்படையான பேச்சின் காரணமாக, அரசருடைய மகிழ்ச்சி குறையவில்லை என்பதன் நிச்சயமாக அது இருந்தது. விக்ளி∴ப்—ன் செல்வாக்கு நீதிமன்றத்தை வடிவமைப்பதிலும் நாட்டின் நம்பிக்கையை உருவாக்குவதிலும் உணரப்பட்டது. (16)

போப்புமார்க்கத்தின் இடிமுழக்கங்கள் அவருக்கெதிராக உண்டாயின. இங்கிலாந்திலிருந்த பல்கலைக்கழகத்திற்கும் அரசனுக்கும் குருமார்களுக்கும் மூன்று கட்டளைகள் அனுப்பப்பட்டன. அவையனைத்தும் மதப்புரட்டின் ஆசிரியரான விக்ளி∴பை உடனடியாக வாய்மூடச்செய்யும் தீர்மானமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்ற கட்டளைகளாக இருந்தன. (17)

இந்தக் கட்டளை வந்து சேருவதற்கு முன்னதாகவே, பேராயர்கள் அவர்களது வைராக்கியத்தின் காரணமாக, விசாரணைக்கு ஆஜராகவேண்டும் என்று விக்ளி∴பிற்கு கட்டளையிட்டிருந்தனர். ஆனால் அந்த விசாரணை மன்றத்திற்கு அந்த நாட்டிலிருந்த மிக அதிகமான அதிகாரமுடைய இரு இளவரசர்கள் அவருடன் வந்தனர். அத்துடன் மக்கள் கூட்டமும் அந்தக் கட்டிடத்தைச்சூழ்ந்து, விரைந்து உள்ளே வந்தது. அந்த நிலைமை நீதிபதிகளைப் பயத்திற்குள்ளாக்கியதால், விசாரணையை தற்காலிகமாக நிறுத்திவைத்து, அவரை அவரது பாதையில் சமாதானத்துடன் செல்ல அவர்கள் அனுமதித்தனர். இந்தப் பாதிரியார்கள் சீர்திருத்தக்காரருக்கு

எதிராக, அவர்களது ஆதீனத்திற்குள் கொண்டுவர வகைதேடியிருந்த, மூன்றாம் எட்வர்டு அரசர் வயதான காலத்தில் இறந்துவிடவே, விக்ளி·.பை முன்னதாக பாதுகாத்திருந்தவர் அரச பதவிக்கு வந்தார். (18)

ஆனால் மதப்புரட்டரான விக்ளி·.பை கைதுசெய்து, சிறையில் அடைக்கவேண்டும் என்ற ஒரு கண்டிப்பான ஒரு கட்டளை இங்கிலாந்து முழுவதற்கும் வந்தது. இந்த நடவடிக்கைகள் அவரைச் சுட்டெரிப்பதை நேரடியாகச் சுட்டிக்காட்டுவதாக இருந்தது. ரோமன் கத்தோலிக்க நிர்வாகத்தின் பழிவாங்கும் செயலுக்கு விக்ளி·.ப் விரைவில் நிச்சயமாக இரையாவார் என்பதுபோல் தோன்றியது. ஆனால், “நீ பயப்படாதே் நான் உனக்குக் கேடயமாக இருக்கிறேன்” (ஆதி. 15:1) என்று பழங்காலத்தில் இருந்த ஒருவருக்கு அறிவித்தவர், அவரது ஊழியக்காரனைக் காக்க தமது கரத்தை நீட்டினார். சீர்திருத்தவாதிக்கு மரணம் வராமல், அவரது அழிவை அறிவித்த போப்புவிற்கு மரணம் உண்டானது! பதினோறாம் கிரகோரி என்ற போப்பு இறந்துபோகவே, விக்ளி·.பை விசாரணை செய்வதற்கென்று வந்திருந்த ரோம சபையின் நிர்வாகிகள் பிரிந்து சென்றனர். (19)

சீர்திருத்தம் மேலும் வளரும் வாய்ப்பினைக் கொண்டுவருவதற் கேதுவாக தெய்வீக நடத்துதல் நிகழ்ச்சிகளுக்குமேல் கடந்துசென்றது. கிரகோரியின் மரணத்திற்குப்பின், ஒன்றையொன்று எதிர்க்கின்ற இரண்டு போப்புகளின் தேர்தல் நிகழ்ந்தது! தவறாமையுடையது என்று சொல்லிக்கொண்டே இரு எதிரெதிரான அதிகாரங்கள் ஒவ்வொன்றும் தனக்கு அடுத்தவர் கீழ்ப்படியவேண்டும் என்று உரிமைபாராட்டின. ஒவ்வொன்றும் அதன் விரோதியின்மீது மிகப் பயங்கரமான சாபத்தைக்கூறி, தன்னை ஆதரிப்பவருக்கு பரலோகத்தில் பலன்கள் கிடைக்கும் என்று அறிவித்து, விசுவாசமுள்ளவர்கள் அடுத்தவரின்மீது போர்தொடுக்கத் தனக்குத் துணைசெய்யவேண்டுமென்றும் கோரினது. இந்த நிகழ்ச்சி, போப்புமார்க்கத்தைப் பலவீனப்படுத்தியது. போட்டி அணிகள் அடுத்த அணியைத் தாக்க அதனால் முடிந்த அனைத்தையும் செய்தன. இதனால் விக்ளி·.பிற்கு கொஞ்சகாலம் ஓய்வு கிடைத்தது. சாபங்களும் எதிர் குற்றச்சாட்டுகளும் ஒரு போப்பிடமிருந்து அடுத்த போப்புவின்மேல் பறந்துகொண்டிருந்தன. குற்றங்களும் ஊழல்களும் சபைக்குள் பெருமழைபோல் சொரிந்தன. அதேசமயத்தில், லுட்டன்பர்க் என்னுமிடத்தில் தனது சபையில் ஒதுங்கியிருந்த சீர்திருத்தவாதி, ஒருவருடன் ஒருவர் சண்டை இட்டுக்கொண்டிருக்கும் போப்புகளைப் பார்ப்பதை விட்டுவிட்டு, சமாதானப்பிரபுவான இயேசுவை மக்கள் நோக்கிப்பார்க்கும்படி கருத்தாய் பாடுபட்டுக்கொண்டிருந்தார். (20)

கருத்துவேற்றுமையினால் உண்டான இந்தப்பிளவு, அதன் போராட்டங்களினாலும் ஊழல்களினாலும் போப்புமார்க்கம் உண்மையில் எப்படிப்பட்டது என்பதைக் காண மக்களைத் தகுதிப் படுத்தி, சீர்திருத்தத்திற்கான பாதையை ஆயத்தம்செய்தது. "போப்புகளின் மதசம்பந்தமாக கருத்துவேறுபாடு" என்ற துண்டுப் பிரசுரத்தின்மூலம், ஒருவரையொருவர் அந்திக்கிறிஸ்து என்று தாக்கி சண்டையிடும் இந்த இருவரும், உண்மையைச் சொல்லுகிறார்களா என்று ஆலோசனை செய்யும்படி, மக்களை அழைத்தார் விக்ளி.்.ப். இதற்கும்மேலாக, "சாத்தான் ஒரு குருவின்மூலம் ஆட்சி செய்யாமல், இரு குருமார்களின்மூலமாக ஆட்சிசெய்கிறான் என்பதை எளிதில் கண்டு, கிறிஸ்துவின் பெயரால், மக்கள் அவர்கள் இருவரையும் மேற்கொள்ளலாம்" என்றார்.—R. Vaughan, Life and Opinions of John de Wycliffe, vol. 2, p. 6. (21)

அவரது எஜமானர் ஏழைகளுக்குப் போதித்ததுபோலவே, விக்ளி.்.பும் போதித்தார். தமது சபையாகிய லுட்டன்பர்கில் இருந்த தாழ்மையான இல்லங்களில் மட்டும் சத்தியத்தின் ஒளியைப் பரப்புவதில் திருப்தி அடையாமல், அது இங்கிலாந்தின் எல்லாப் பகுதிகளுக்கும் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தார். சத்தியத்தை நேசித்து, அதைப் பரப்புவதைவிட மேலானது வேறொன்றும் இல்லையென எண்ணி, தங்களை அர்ப்பணித்திருந்த எளிமையான மனிதர்களை, அதை நிறைவேற்றும்படி, ஒரு போதகர்களின் குழுவாகத் திரட்டினார். அந்த மனிதர்கள் பெருநகரங்களின் சந்தைவெளிகளிலும், தெருக்களிலும், நாட்டுப்புறச்சந்துகளிலும் எங்கும் போதித்துச் சென்றனர். அவர்கள் முதியோரையும் நோயாளிகளையும் ஏழைகளையும் தேடிச்சென்று, தேவகிருபையின் மகிழ்ச்சிமிக்க செய்திகளை அவர்களுக்குத் திறந்து காட்டினார்கள். (22)

ஆக்ஸ்போர்டு சமயத்துறையின் பேராசிரியராயிருந்த விக்ளிப் பல்கலைக்கழக அரங்கங்களில் தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கித்தார். அவரது போதனையின்கீழிருந்த மாணவர்களுக்கு அவர் மிகுந்த விசுவாசத்துடன் சத்தியத்தை முன்வைத்ததினால், அவர் "சுவிசேஷ வல்லுனர்" என்னும் பட்டத்தைப் பெற்றார். எனினும் வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததுதான் அவரது வாழ்க்கையில் அவர்செய்த மாபெரும் ஊழியமாக இருந்தது. "சத்தியமும் வேதவாக்கியங்களின் பொருளும்" என்ற அவரது நூலில், தேவனுடைய ஆச்சரியமான செயல்களை, இங்கிலாந்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தன் தாய்மொழியில் அறிந்து கொள்ளும்படி, வேதாகமத்தை, ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவேண்டும் என்ற தனது நோக்கத்தை அவர் வெளிக்காட்டினார். (23)

ஆனால் திடீரென்று அவரது பணிகள் தடைபட்டன. அவருக்கு அறுபது வயதுகூட ஆகாமலிருந்தபோதிலும், ஓய்வற்ற உழைப்பு, வாசிப்பு, அவரது எதிரிகளிடமிருந்து உண்டான தாக்குதல் ஆகியவைகளின் விளைவு அவர்மேல் காணப்பட்டு, அவரது பலத்தைப் பாதித்து, அவரைக் காலத்திற்கு முன்பாகவே முதியவராக்கியது. அவர் ஒரு அபாயகரமான நோயினால் பீடிக்கப்பட்டார். இச்செய்தி பாதிரிமார்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டுவந்தது. ரோமன் கத்தோலிக்க சபைக்கு எதிராக அவர் செய்த தீமைகளுக்காக, அவர் மனம் கசந்து மனந்திரும்புவாரென இப்பொழுது அவர்கள் எண்ணினர். அவரது பாவ அறிக்கையைக் கேட்பதற்காக, அவரது வீட்டைநோக்கி விரைந்தனர். இறந்துவிடுவார் என்று நினைக்கக்கூடிய விதத்திலிருந்த அந்த மனிதரிடத்திற்கு, நான்கு வகைப்பட்ட சமய அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், நான்கு அரசு அதிகாரிகளுடன் சென்றனர். “உமது உதட்டின்மேல் மரணம் இருக்கிறது உமது தவறுகளால் தொடப்பட்டவராக, எங்களைக் காயப்படுத்தும்படி நீர் பேசின அனைத்தையும் விட்டு பின்வாங்குவதாக எங்கள்முன் அறிக்கையிடும்” என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர். அந்த சீர்திருத்தவாதி அமைதியாக அவைகளைக் கேட்டு, தமது உதவியாளரிடம் தன்னைப் படுக்கையில் உட்காரவைக்கச்சொல்லி, படுக்கையில் உட்கார்ந்து, அவர் சொன்னவைகள் தவறு என்று அறிக்கைசெய்வதை எதிர்நோக்கி நின்றிருந்தவர்களை உற்றுநோக்கி, அடிக்கடி அவர்களை நடுங்கவைத்திருந்த அவரது பலத்த சத்தத்தில், மிக உறுதியாக: “நான் சாகமாட்டேன் நான் உயிர்வாழ்ந்து, பாதிரிமார்களின் தீயசெயல்களை அறிவிப்பேன்” என்றார்.—D’Aubigne, b. 17, ch. 7. அந்த பிரதிநிதிகள் ஆச்சரியமும் கலவரமுமடைந்து அவரது அறையை விட்டு வெளியேறினர்! (24)

விக்ளி.ஃபின் வார்த்தைகள் நிறைவேறின. ரோமன் கத்தோலிக்க சபைக்கு எதிராக சக்திவாய்ந்ததாக இருந்த ஆயுதத்தை—வேதாகமத்தை, விடுதலை வழங்கவும், ஒளியடையச் செய்யவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும், பரலோகம் ஏற்படுத்தியிருந்த வேதாகமத்தை, அவரது நாட்டு மக்களிடம் கொடுப்பதற்காக அவர் வாழ்ந்தார். இப்பணியை நிறைவேற்றுவதில் உண்டான பெருந்தடைகள் மேற்கொள்ளப்படவேண்டியதிருந்தது. விக்ளி.ஃப் மிகுந்த பலவீனமாயிருந்து, இன்னும் சில வருடங்கள்தான் உழைப்பதற்கு எஞ்சி உள்ளன என்பதையும் அவர் சந்திக்கவேண்டிய எதிர்ப்பையும் அறிந்திருந்தார் ஆனாலும் தேவனுடைய வார்த்தைகளில் உள்ள வாக்குத் தத்தத்தினால், தைரியப்படுத்தப்பட்ட அவர் எதற்கும் அஞ்சாதவராக முன்சென்றார். அவரது முழுச்சக்தியையுடைய புத்திசாலித்தனத்துடனும் திரண்ட அனுபவத்துடனும் மிகமிக மேலான ஊழியத்திற்காக, விசேஷமான

தெய்வீகப் பாதுகாப்பினால், அவர் காக்கப்பட்டும் ஆயத்தப்படுத்தப்பட்டும் இருந்தார். கிறிஸ்தவம் முழுவதும் குழப்பத்தில் நிறைந்திருந்தபோது, வெளியிலெழுந்த புயலைக் கவனிக்காமல் லுட்டன்பர்கில் இருந்த தம்முடைய அறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமது பணியில் அவர் ஈடுபட்டார். (25)

இறுதியாக, இதுவரை மொழிபெயர்க்கப்பட்டிராத ஆங்கில வேதாகமத்தின் முதல் மொழிபெயர்ப்புப்பணி நிறைவடைந்தது. இங்கிலாந்து நாட்டிற்கு தேவனுடைய வார்த்தைகள் திறக்கப்பட்டன. அந்த சீர்திருத்தவாதி இப்போது சிறைக்கும் சுட்டெரிக்கப்படும் மரணத்திற்கும் அஞ்சவில்லை. ஒருபோதும் அணைக்க இயலாத ஒளியை அவர் இங்கிலாந்து நாட்டு மக்களின் கரங்களில் வைத்தார். அறியாமை, தீய பழக்கங்கள் என்னும் விலங்குகளை உடைக்கவும், தனது நாட்டுக்கு விடுதலையையும் உயர்வையும் கொண்டுவரவும், போர்க்களங்களில் உண்டாகும் சிறப்பான வெற்றிகளினால் ஒருபோதும் அடையமுடியாத ஒரு வெற்றியை அடையும் படியும், வேதாகமத்தைத் தனது நாட்டுமக்களிடம் கொடுத்தார். (26)

அதுவரை அச்சுக்கலை அறியப்படாததாக இருந்ததினால், மெதுவான—களைப்பூட்டும் வேலையினால் மட்டுமே வேதாகமப் பிரதிகளை அதிகரிக்க முடிந்தது. அந்த நூலைப் பெற்றுக்கொள்வதற்கான ஆர்வம் மிகப்பெரிதாக இருந்ததினால், அநேகர் அதை நகல் எடுப்பதில் ஈடுபட்டனர். ஆனால் நகல் எடுப்பவர்கள் மிகுந்த சிரமத்தின் பேரில்தான் அதன் தேவையைச் சந்திக்கமுடிந்தது. சில செல்வந்தர் கள் முழு வேதாகமத்தையும் விரும்பினர் மற்றவர்கள் ஒரு பகுதியை மட்டும் வாங்கினார்கள் அநேக சமயங்களில் ஒரு வேதாகமத்தை வாங்கப் பல குடும்பத்தினர் ஒன்றுபட்டனர். இவ்வாறு, விக்ளிஃபின் வேதாகமம் விரைவாக மக்களின் வீடுகளுக்கு வழியைக் கண்டுபிடித்துச் சென்றது. (27)

காரணங்களை அறியும்படி மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வேண்டுகோள், போப்புமார்க்கத்தின் கட்டாயமான கோட்பாடுகளுக்குப் பணிந்திருந்த மந்த நிலையிலிருந்து அவர்களை துடித்தெழச் செய்தது. கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தினால் உண்டாகும் இரட்சிப்பு, வேதவாக்கியங்களின் பூரணமான தவறாமை—என்ற தனித்த புரொட்டஸ்டண்டு கோட்பாடுகளை விக்ளிஃப் கற்றுக்கொடுத்தார். அவர் வெளியே அனுப்பின பிரசங்கிகள், வேதாகமத்தை விக்ளிஃப் எழுதியவைகளுடன் சேர்த்துப் பரப்பினர். அதன் வெற்றியினால், இங்கிலாந்து மக்களில் ஏறத்தாழப் பாதிப்பேரால் புதிய விசுவாசம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (28)

வேதாகமங்களின் தோற்றம் ரோமன் கத்தோலிக்க சபை அதிகாரிகளுக்குத் திகிலைக் கொண்டுவந்தது. இப்பொழுது அவர்கள்

விக்ளி·.பைவிட அதிக வல்லமையுள்ள ஒரு ஏதுகரத்தைச் சந்திக்க நேரிட்டது. அந்த ஏதுகரத்திற்கு முன்பாக, அவர்களது ஆயுதங்கள் பயனற்றவைகளாக இருந்தன. இக்காலத்தில் வேதாகமத்தைத் தடைசெய்யும்சட்டம் இங்கிலாந்தில் நடைமுறையில் இருக்கவில்லை ஏனெனில், மக்களின் மொழியில் அதுவரை அது வெளியிடப்பட்டிருக்கவில்லை. அப்படிப்பட்ட சட்டங்கள் பின்னர் இயற்றப் பட்டு, கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இடைப்பட்ட அக்காலத்தில் குருமார்களின் முயற்சியினாலும் தடுக்கமுடியாதபடி, தேவனுடைய வார்த்தை களைப் பரப்பும் வாய்ப்பு ஏற்பட்டது. (29)

சீர்திருத்தவாதியின் சத்தத்தை மௌனமடையச்செய்வதற்கு போப்பு மார்க்கத் தலைவர்கள் மறுபடியும் திட்டம் தீட்டினர். தொடர்ச்சியாக மூன்று தடவைகள் விக்ளி·.ப் விசாரணைக்காக பயனற்ற விதத்தில் அழைக்கப்பட்டார். முதலாவது கூடின பேராயர்களின் குழுவானது விக்ளி·.ப் எழுதின அனைத்தும் மதப்புரட்டானவை என்று அறிவித்தது. இரண்டாம் ரிச்சர்டு என்ற இளம் அரசனை அவர்கள் தங்கள் பக்கத்திற்கு வென்றிருந்ததினால், குற்றம் எனக் கருதப்பட்ட கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்களைச் சிறைக்கனுப்பவேண்டுமென்ற அரசகட்டளையை வெளியிடச் செய்தனர். (30)

விக்ளி·.ப், சினாடு என்ற பேராயர்களின் விசாரணைக் குழுவிலிருந்த தமது காரியத்தை, மக்கள் சபையில் மேல்விசாரணை செய்யும்படியாக மனு செய்தார். அவர் தேசிய சபையின் முன்நின்று, ரோம சபைத் தலைவரின்மீது அச்சமின்றிக் குற்றம்சாட்டி, சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் தகாத நடவடிக்கைகளில் சீர்திருத்தம் செய்யப்படவேண்டும் என்று கோரினார். போப்பு மார்க்கத்தின் பதவி ஆசையையும், ஊழல்களையும் பிறர் உணர்ந்துகொள்ளும்வண்ணம் வல்லமையுடன் சித்தரித்துக்காட்டினார். அவரது எதிரிகள் குழப்பத்தில ஆழ்த்தப்பட்டனர். விக்ளி·.பின் நண்பர்களும் ஆதரவாளர்களும் பணியும்படி வற்புறுத்தப்பட்டனர். வயதுமுதிர்ந்த சீர்திருத்தவாதியானவர் அவரது வயதான காலத்தில், நண்பர்களற்றவராகத் தனித்துவிடப் பட்டால், அரசும் சமயமும் கலந்த அதிகாரத்திற்குமுன் பணிந்துவிடுவார் என்று இரகசியமாக எதிர்பார்க்கப்பட்டது ஆனால் அதற்குப்பதிலாக, போப்புமார்க்கத்தினர் தோற்றுப்போனதை அவர்களே கண்டனர். மனதைக் கலங்கச்செய்யும் விக்ளி·.பின் வேண்டுகோள்களினால் எழுச்சி அடைந்த மக்கள்சபை, உபத்திரவப்படுத்தும் சட்டத்தை ரத்துசெய்ததி னால் சீர்திருத்தவாதி மறுபடியும் விடுதலைசெய்யப்பட்டார். (31)

மூன்றாவது தடவையாக, அந்த நாட்டின் மிக மேலான சமய நிர்வாகிகளின் மன்றத்திற்கு, விசாரணைக்காக அவர் கொண்டு வரப்பட்டார். “இங்கு மதப்புரட்சிக்கு எந்தவிதமான ஆதரவும் காட்டப்படமாட்டாது

கடைசியாக இங்கு ரோமன் கத்தோலிக்க சபை வெற்றி அடைவதினால், சீர்திருத்தவாதியின் ஊழியம் நிறுத்தப்படும்" என்று போப்புவின் அதிகாரிகள் எண்ணினர். அவர்களது நோக்கம் நிறைவேறினால், விக்ளி∴ப் தமது கருத்துக்கள் தவறானவை என்று அறிவிக்கவோ அல்லது தீக்கிரையாவதற்காக நீதிமன்றத்தைவிட்டுச் செல்லும்படிக்கோ வற்புறுத்தப்படுவார். (32)

ஆனால் விக்ளி∴ப் பின்வாங்கவில்லை. வேஷமிடவும் மறுத்து விட்டார். அவர் அவரது போதனைகளை அச்சமின்றிக்காத்து, அவரை உபத்திரவப்படுத்துபவர்களின் குற்றச்சாட்டுகளைப் பின்வாங்கச் செய்தார். அவர் தன்னை மறந்து, தன் நிலையை மறந்து, சந்தர்ப்பத்தை மறந்து, அவரது பேச்சைக்கேட்டிருந்தவர்களை தெய்வீக மன்றத்திற்கு வரும்படி அழைத்து, சத்தியம் என்னும் தராசினால் அவர்களது தந்திரங்களையும் ஏமாற்றுகளையும் நிறுத்துக் காட்டினார். ஆலோசனை அறையில், பரிசுத்த ஆவியானவரின் வல்லமை உணரப்பட்டது. தேவனிடமிருந்து உண்டான கவரும் சக்தி கேட்டோரின்மீது இருந்தது. அந்த இடத்தைவிட்டு நகரவும் சக்தியற்றவர்கள்போல் உணர்ந்தனர். தேவனுடைய அம்பராத் துணியிலிருக்கிற அம்புகளைப்போல, சீர்திருத்தவாதியின் சொற்கள் அவர்களது இதயங்களைத் துளைத்தன. அவருக்கெதிராக அவர்கள் கொண்டுவந்த மதவிரோதக் குற்றச்சாட்டுகளை திருப்திப்படுத்தும் வல்லமையுடன் அவர்கள் மீதே அவர் திருப்பிவிட்டெறிந்தார். அவர்கள் தங்கள் தவறுகளைப் பரப்பத் துணிகரம்கொண்டது ஏன்? என்றார். ஆதாயத்திற்காகவும் தேவகிருபையை வியாபாரமாக்கவும் அவர்கள் அப்படிச் செய்தார்கள் என்றார். (33)

இறுதியாக, "நீங்கள் யாருடன் போர் செய்கிறீர்கள்?" என்று அவர் கேட்டார். "கல்லறையின் ஓரத்தில் நிற்கும் வயதான ஒரு மனிதனுடனோ? அல்ல! சத்தியத்துடன் போர் செய்கிறீர்கள்! நீங்கள், உங்களைவிட பலம் பொருந்தியதும் உங்களை மேற்கொள்ளக் கூடியதுமான சத்தியத்துடன் போர்செய்கிறீர்கள்" என்று சொல்லிவிட்டு, அந்த அரங்கத்தைவிட்டு வெளியேறினார்.—Wylie, b. 2, ch. 13. அவரது எதிரிகளில் ஒருவனாலும் அவரைத் தடுக்கமுடியவில்லை! (34)

விக்ளி∴பின் ஊழியம் கிட்டத்தட்ட முடிவடைந்து, இவ்வளவு காலமாக உயர்த்திப்பிடித்திருந்த சத்தியத்தின் கொடி விரைவில் அவரது கரத்திலிருந்து விழுந்துவிடப்போவதுபோல் இருந்தது. ஆனால் அவர் மீண்டும் ஒருமுறை, சுவிசேஷத்திற்குச் சாட்சிபகர வேண்டியதாயிருந்தது. அந்த நாட்டில், தவறுகளின் பலமான கோட்டையிலிருந்தே சத்தியம் பறைசாற்றப்படவேண்டியதாக இருந்தது. அடிக்கடி பரிசுத்தவான்களின் இரத்தத்தைச் சிந்தியிருந்த ரோம்நகருக்கு, போப்புவின் விசாரணைக்காக

விக்ளி∴ப் அழைக்கப்பட்டார். தம்மை பயமுறுத்தியிருந்த ஆபத்தை அறியாத குருடராக இல்லாமலிருந்தாலுங்கூட, அந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியாதபடி பக்கவாதம் உண்டாகாதிருந்திருந்தால், அந்த அழைப்பை அவர் ஏற்றிருந்திருக்கக்கூடும். ரோம் நகரில் நேரடியாகப் பேசமுடியாமல் இருந்தாலும், கடிதத்தின்மூலமாக அவரால் பேசமுடியும். அதைச் செய்ய அவர் தீர்மானித்தார். (35)

அந்த சீர்திருத்தவாதி அவரது மடாலய அலுவலகத்திலிருந்து ஒரு கடிதத்தை எழுதினார். மரியாதையான விதத்திலும், கிறிஸ்தவ ஆவியுடனும் எழுதப்பட்ட அந்தக் கடிதம் அகந்தையும், ஆடம்பரமுமிக்க போப்புவை தெளிவாகக் கடிந்துகொள்ளுவதாக இருந்தது. "நான் சத்தியமும் தெளிவுமுள்ளதென்று நம்பியிருக்கும் எனது விசுவாசத்தை, ஒவ்வொரு மனிதனும், குறிப்பாக ரோம் நகரப் பேராயர் (போப்பு) அவர்களும் மிக மனமுவந்து உறுதிப்படுத்தவோ அல்லது அதில் தவறிருந்தால், அதை அவர் திருத்தவோ செய்யலாம் என்று விவரித்து, அவ்வாறு அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று சொன்னார். முதலாவதாக, "கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷம் தேவனுடைய பிரமாணத்தின் சரீரமாயிருக்கிறது என்று நான் நம்புகிறேன். ரோமப் பேராயர் பூமியில் கிறிஸ்துவின் பதிலாளியாக இருப்பதனால், எல்லா மனிதர்களையும்விட அவர் சுவிசேஷத்தின் சட்டங் களுக்குக் கட்டுப்பட்டவராக இருக்கவேண்டும் என்று அவரை நான் பொறுப்பாளராக்குகிறேன். ஏனெனில், கிறிஸ்துவின் சீடர்களுக்குள் காணப்பட வேண்டிய பெருந்தன்மை, உலகப் பிராகாரமான மதிப்புகளோடும் மேன்மை களோடும் இசைந்ததாக இராமல், கிறிஸ்துவின் வாழ்க்கையையும் அவர் நடந்த விதத்தையும் மிகச் சரியாகப் பின்பற்றுவதில்தான் இருக்கிறது. இங்கு கிறிஸ்து நடத்திய அவரது பரதேசப் பிரயாணத்தின்போது, சகலவிதமான உலகப்பிராகாரமான ஆளுகையையும் மதிப்புகளையும் தூரமாக விட்டுவிட்டு, மிக ஏழையான மனிதனாக அவர் இருந்தார்." (36)

"போப்புவையோ அல்லது மற்ற பரிசுத்தவான்களையோ பின்பற் றாமல், இப்படிப்பட்ட காரியத்தில் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவையே விசுவாசமுள்ள எந்த மனிதனும் பின்பற்றியாக வேண்டும். பேதுருவும் செபதேயுவின் குமாரரும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை விரும்பிப் பின்பற்று வதற்குப் பதிலாக, உலக மேன்மையை விரும்பி, குற்றம்செய்தார்கள். அப்படிப்பட்ட குற்றங்களில் அவர்களைப் பின்பற்றக்கூடாது." (37)

"போப்பு உலகப்பிரகாரமான சகலவிதமான ஆளுகையையும் மதச்சார்பற்ற வல்லமையிடம் விட்டுவிட்டு, அவரது குருமார்களுக்குப் போதிக்கும்படியாக வல்லமையுடன் செயல்படச் செல்லவேண்டும். ஏனெனில்,

கிறிஸ்து அப்படித்தான் செய்தார். குறிப்பாக அவர்களது அப்போஸ்தலர்கள் மூலமாக அப்படிச் செய்தார்.” (38)

“இக்காரியங்கள் எதிலாவது நான் தவறு செய்திருந்தால், அதைத் திருத்த எனது மரணம் அவசியமானால், எனது மரணத்தினால் நான் அதை மிகவும் தாழ்மையுடன் திருத்திக் கொள்ளுவேன். என்னால் நான் விரும்பும்வண்ணம் சரீரப் பிராகாரமாகச் செயல்பட முடிந்திருந்தால், நேரடியாகவே ரோம்நகருக்கு வந்து, ரோம் நகரப் பேராயரின் முன்பு தோன்றியிருந்திருப்பேன் ஆனால் அதற்கு நேர் எதிரான விதத்தில் கர்த்தர் என்னைச் சந்தித்து, மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட, தேவனுக்குக் கீழ்ப்படியும்படி கற்பித்திருக்கிறார்” என்றார்.(39)

முடிவில் அவர், “ஆறாம் அர்பன் என்ற போப் அவர்கள் தொடங் கினதுபோல, போப்பும் அவரது குருமார்களும் கர்த்தராக இருக்கிற இயேசு கிறிஸ்துவையும் அவரது நடத்தையையும் பின்பற்றி, மற்றவர்களும் அவரது மாதிரியைப் பின்பற்றி நடக்கும்படி பயனுள்ள வகையில் போதிக்கலாம்” என்று கூறினார்.—John Foxe, Acts and Monuments, vol. 3, pp. 49, 50. (40)

இவ்வாறாக, போப்புவிற்கும், அவரது கர்தினால்களுக்கும் மட்டுமின்றி, கிறிஸ்தவ சமுதாயம் முழுவதற்கும், கிறிஸ்துவின் தாழ்மையையும் எளிமை யையும் காட்டினார். அவரது பிரதிநிதிகள் என்று தங்களைக் கூறிக்கொண் டிருக்கிறவர்களுக்கும் அவர்களது எஜமானருக்கும் இடையே இருந்த வேற்றுமையையும் அவர் எடுத்துக்காட்டினார். (41)

அவரது நேர்மைக்கு விலையாக அவரது உயிர் இருக்குமென்று விக்ளிஃப் முழுமையாக எதிர்நோக்கினார். அவரது அழிவை நிறைவேற்றுவதில் அரசனும் போப்புவும் பேராயர்களும் ஒற்றுமைப்பட்டிருந்தனர். சில மாதங்களுக்குள் அவருக்கு மரணதண்டனை விதிப்பது நிச்சயம் என்பதுபோல் காணப்பட்டது் ஆனாலும் அவரது தைரியம் அசையாததாக இருந்தது் இரத்தசாட்சி என்னும் தொலைவில் உள்ள கிரீடத்தைத் தேடுவதாக நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்? அகங்காரமான குருமார்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் இரத்தசாட்சியென்னும் பதவி உங்களை பற்றாமல் விடாது. என்ன? “நான் உயிருடனிருந்தும் மௌனமாய் இருக்க வேண்டுமா? ... ஒருபோதும் முடியாது! அடி விழட்டும் அதன் வருகைக்காக நான் காத்திருக்கிறேன்” என்று கூறினார்.—D’Aubigne, b. 17, ch. 8. (42)

ஆனால், தெய்வீகப் பாதுகாப்பு அவரது ஊழியக்காரனை தொடர்ந்து கேடயத்தால் மறைத்தது. சத்தியத்திற்காகத் தனது வாழ்க்கை முழுவதிலும், அன்றாட வாழ்க்கையிலுள்ள ஆபத்துக்களுக்கு இடையிலும்

தைரியமாக நின்றிருந்த மனிதன், வெறுப்புமிக்க அவரது எதிரிகளிடம் இரையாக விழக்கூடாது. தன்னை மறைத்துக்கொள்ள விக்ளிஃப் ஒருபோதும் முயலவில்லை. ஆனால், கர்த்தர் அவரைப் பாதுகாவலராக இருந்தார். அவரது எதிரிகள் அவர்களது இரையைப்பற்றி நிச்சயித்திருந்தபோதிலும், அவர்களுக்கு எட்டாதவகையில் தேவனுடைய கரம் அவரை விலக்கியது. லுட்டன்பர்க் சபையில் ஆராதனை நடத்திக்கொண்டிருந்தபோது, அப்பம் பிட்கும் வேளையில், பக்கவாதத்தினால் அவர் தாக்கப்பட்டு, விழுந்து, சற்று நேரத்தில் உயிர்விட்டார். (43)

விக்ளிஃபிற்கு அவரது பணியை தேவன் ஏற்படுத்தியிருந்தார். சத்தியவார்த்தையை அவரது வாயில்வைத்து, இந்த வார்த்தை அவர் மூலமாக மக்களுக்குக் கிடைப்பதற்காக, தேவன் அவரைச் சுற்றிக் காவல் வைத்திருந்தார். சீர்திருத்தம் என்ற பெரும்பணியின் அஸ்திவாரம் இடப்படும் வரை அவரது உயிர் காக்கப்பட்டு, அவரது ஊழியமும் நீட்டிக்கப்பட்டது. (44)

இருண்ட காலத்தின் இருளிலிருந்து விக்ளிஃப் வந்தார். அவரது சீர்திருத்தத்தின் முறையை, அவருக்கு முன்னிருந்தவர்களின் சீர்திருத்தப் பணியிலிருந்து உருவகப்படுத்தும்படியாக, அவருக்குமுன் ஒருவரும் இருக்கவில்லை. சிறப்பான ஊழியத்தைச் செய்யும்படி எழுந்த யோவான் ஸ்நானனைப்போல எழுந்த அவர், ஒரு புதிய காலத்தின் முன்னோடியாக இருந்தார். அப்படியிருந்தும், அவர் படைத்த சத்தியத்தின் முறையில் அவருக்கு முன்னதாக வந்தவர்களால் மேற்கொள்ளமுடியாததும், நூறு வருடங்களுக்குப் பின்வந்தவர்களால் அடையமுடியாததுமான, ஒற்றுமையும் முழுமையுமிருந்தது. அவருக்குப்பின் வந்தவர்களால் திருத்தியமைக்கத் தேவையில்லாதபடி, மிக அகலமாகவும் ஆழமாகவும் போடப்பட்ட அஸ்திவாரத்தின் மேல்பக்க வடிவ அமைப்பும் பலமும், உண்மையும் உறுதியுமிக்கதாக இருந்தது. (45)

மனசாட்சிக்கும், புத்திக்கும், ரோமன் கத்தோலிக்க வண்டியுடன் இதுவரை கட்டிவைக்கப்பட்டு இருந்த நாடுகளுக்கும் விடுதலையைத் தரும்படி, விக்ளிஃப் ஆரம்பித்து வைத்த மாபெரும் இயக்கம், வேதாகமத்தை அதன் ஊற்றாகக்கொண்டிருந்தது. பதினான்காம் நூற்றாண்டிலிருந்து, யுகங்கள் நெடுகிலும் ஜீவதண்ணீராக ஓடிய ஆசீர்வாதம் என்னும் நீரோட்டத்தின் ஆதாரம் இங்குதான் இருந்தது. பரிசுத்த வேத வாக்கியங்களை தேவசித்தத்தின் வெளிக்காட்டுதல் எனவும்இ விசுவாசத்திற்கும் நடைமுறைக்கும் போதுமான சட்டம் எனவும் மிகத்தெளிவான விசுவாசத்துடன் விக்ளிஃப் ஏற்றுக்கொண்டார். ரோமன் கத்தோலிக்க சபை தெய்வீகமானது என்றும், தவறாமையுடையது

என்றும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஸ்தாபிக்கப்பட்ட அதன் போதனைகளையும், சம்பிரதாயங்களையும் கேள்விக்கிடமின்றி, ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவர் கற்பிக்கப்பட்டிருந்தார் ஆனால் தேவனுடைய பரிசுத்த வார்த்தைகளைக் கவனிப்பதற்காக, இவைகளனைத்தையும்விட்டு அவர் திரும்பினார். இந்த அதிகாரத்தை மக்கள் அங்கீகரிக்கவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார் சபை போப்புவின் மூலமாகப் பேசிக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, தேவனுடைய வார்த்தையின் மூலமாகப் பேசட்டும். தேவனின் சத்தம் மட்டும்தான் உண்மையான ஒரே அதிகாரம் உடையது என்று அவர் அறிவித்தார். வேதாகமம் தேவனுடைய பூரணமான சித்தத்தின் வெளிக்காட்டுதல் என்று போதித்ததோடல்லாமல் பரிசுத்த ஆவியானவர் மட்டும்தான் அதற்கு விளக்கம் கொடுப்பவர் ஒவ்வொரு மனிதனும் தனது கடமையைத் தானாகவே அறிந்துகொள்ள, வேதாகமத்தின் போதனைகளைக் கற்கவேண்டும் என்றும் போதித்தார். இவ்வாறாக, அவர் மனிதரின் மனங்களை போப்புவிடமிருந்தும், ரோமன் கத்தோலிக்க சபையிடமிருந்தும், தேவனுடைய வார்த்தைகளுக்குத் திருப்பினார். (46)

மாபெரும் சீர்திருத்தவாதிகளில் ஒருவராக விக்ளிஃப் இருந்தார். புத்திசாலித்தனத்தின் விசாலத்திலும், சிந்தனையின் தெளிவிலும், சத்தியத்தைக் கடைப்பிடிப்பதிலுள்ள உறுதியிலும், அதைப் பாதுகாப்பதற்கான தைரியத்திலும், அவருக்குப் பின்வந்த சிலருக்குச் அவர் சமமாகக் கருதப்பட்டார். வாழ்க்கையில் தூய்மையைக் கற்பதிலும், உழைப்பதிலும், களைப்படையாத விழிப்புணர்வு, குற்றமற்ற கண்ணியம், ஊழியத்தில் கிறிஸ்துவைப்போன்ற அன்பு, விசுவாசத்தன்மை ஆகியவைகளே சீர்திருத்த வாதிகளில் முதன்மையானவராயிருந்த அவரது பண்பாக இருந்தது. அறிவில் இருளும் சன்மார்க்க ஊழலும் நிரம்பி இருந்த காலத்தில் தோன்றினார் விக்ளிஃப். (47)

கற்பிக்கும், மாற்றத்தை உண்டுபண்ணும் பரிசுத்த வேதவாக்கியங்களுக்குச் சாட்சியாக விக்ளிஃபின் குணலட்சணம் இருந்தது. அவர் எப்படிப்பட்டவரோ, வேதாகமம்தான் அவரை அப்படிப்பட்டவராக்கியது! வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்கள் அனைத்தையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற முயற்சி, எல்லாத் திறமைகளுக்கும் புத்துணர்வையும் வலிமையையும் கொடுக்கிறது. அது மனதை விரிவடையச்செய்து, உணரும் தன்மையைக் கூர்மையாக்கி, நிதானிக்கும் தன்மையைக் கனியச்செய்கிறது. வேதாகம ஆராய்ச்சி, சிந்தனையையும் உணர்ச்சிகளையும் ஊக்கத்தையும் வேறுவகை ஆராய்ச்சியால் இயலாத அளவிற்கு மேன்மைப்படுத்துகிறது. காரியங்களில் உறுதி, பொறுமை, தைரியம், துன்பங்களைச் சகித்துக் கொள்ளும் மனோபலம் ஆகியவைகளுடன் பண்பைத் தூய்மைப்படுத்தி,

ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்துகிறது. ஆர்வமும் பக்தியும் மிக்க வேத ஆராய்ச்சி, அப்படிச்செய்யும் மாணவனின் மனதை, எல்லையின்றி விரிவான தாயிருப்பவரின் மனதுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளச் செய்து, மனிதத் தத்துவங்களின் சிறந்த பயிற்சியின் விளைவாக உண்டாவதைவிட மிக மேலான பலத்தையும் செயலாற்றும் புத்திக்கூர்மையையும் உடைய மனிதர்களை உலகத்திற்குத் தரும். "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்" (சங்கீதம் 119:130) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். (48)

விக்ளிஃபினால் போதிக்கப்பட்ட கருத்துக்கள் சிலகாலம் தொடர்ந்து பரவியது. விக்ளிஃபியர்கள் என்றும் லோலார்ட்ஸ் என்றும் அறியப்பட்டிருந்த அவரது பின்னடியார்கள், இங்கிலாந்து எங்கும் சென்றதோடல்லாமல், சுவிசேஷத்தின் அறிவைச் சுமந்துசென்று, மற்ற நாடுகளிலும் பரப்பினார்கள் இப்பொழுது அவர்களது தலைவர் அகன்றுபோய்விடவே, இதற்கு முன்பிருந்ததைவிட மிகுந்த வைராக்கியத்துடன் அந்தப் பிரசங்கிகள் உழைத்தார்கள். திரளானவர்கள் அவர்களுடைய போதனைகளைக் கேட்கக் கூடினார்கள். மனமாற்றமடைந்த சிலரில் மேன்மக்களும் அரசனின் மனைவியுங்கூட இருந்தனர். அநேக இடங்களில் மக்களின் நடத்தையில் குறிப்பிடத்தக்கவிதத்தில் சீர்திருத்தம் உண்டாகி, ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் அடையாளமான சிலைகள் ஆலயங்களில் இருந்து நீக்கப்பட்டன. ஆனால், வேதாகமத்தைத் தங்களின் வழிகாட்டியாகத் துணிவுடன் ஏற்றுக்கொண்டவர்களின் மீது, விரைவில் உபத்திரவம் என்ற இரக்கமற்ற புயல் வீசியது. தங்களுடைய அரச அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள, ரோமன் கத்தோலிக்க நிர்வாகத்தின் ஆதரவு தேவை என வாஞ்சித்த இங்கிலாந்தின் வரலாற்றில், முதல் தடவையாக, சுவிசேஷத்தின் சீடர்களுக்கெதிராக மரணதண்டனை கட்டளையிடப்பட்டது. இரத்தசாட்சிகளின் மரணம் அடுத்தடுத்து தொடர்ந்தது. சத்தியத்தின் பரிந்துரையாளர்களாயிருந்து, சித்திரவதை செய்யப்பட்டவர்கள் தங்கள் அழுகையை, சேனைகளின் கர்த்தரின் செவிகளில் மட்டும்தான் சொல்ல முடிந்தது. சபையின் எதிரிகளென்றும் ராஜதுரோகிகளென்றும் கடைசிவரை வேட்டையாடப்பட்ட அவர்கள், ஏழைகளின் வீடுகளையும் மறைவிடங்களாகிய குகைகளையும் அடிக்கடி அடைக்கலமாகத் தெரிந்துகொண்டு, அந்த இரகசியமான இடங்களில் இருந்து தொடர்ந்து பிரசங்கித்தனர். (49)

உபத்திவம் மிக மூர்க்கமாக எழுந்தபோதிலும், சமய விசுவாசத்திலிருந்த ஊழல்களுக்கெதிராக, அமைதியான, பக்திசிரத்தைகொண்ட, பொறுமையான மறுப்பு நூற்றுக்கணக்கான வருடங்களாகச் சொல்லப்பட்டன. ஆரம்ப காலத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு சத்தியம்பற்றிய குறைவான அறிவுமட்டுமே

இருந்தது ஆனால் அவர்கள் தேவனுடைய வார்த்தையை நேசித்து, அதற்குக் கீழ்ப்படியக் கற்றிருந்தனர். அதற்காக அவர்கள் பொறுமையுடன் பாடுகளை அனுபவித்திருந்தனர். அப்போஸ்தலர்களின் நாட்களிலிருந்த அநேக சீடர்களைப்போல, கிறிஸ்துவின் காரியத்திற்காக அநேகர் தங்களுடைய உலகப்பிரகாரமான உடைமைகளைத் தியாகம்செய்தனர். தங்களுடைய வீடுகளில் வசிக்க அனுமதிக்கப்பட்டிருந்தவர்கள், விரட்டியடிக்கப்பட்ட இந்த சகோதரர்களுக்கு மகிழ்ச்சியுடன் தங்கள் வீடுகளில் புகலிடம் தந்ததால், அவர்களுங்கூட சேர்ந்து விரட்டியடிக்கப்பட்டனர். அந்த நிலைமையை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். தங்களை உபத்திரவப்படுத்தின அவர்களின் கோபாவேசத்தால், பயமடைந்த ஆயிரக்கணக்கானவர்கள், தங்களுடைய விசுவாசத்தைத் தியாகம்செய்து, சுதந்திரத்தைவாங்கி, பாவச்செயல்களுக்காக வருந்தும் உடையை அணிந்து, அவர்களது பழைய விசுவாசத்தை மறுத்து, சிறைச்சாலைகளை விட்டு வெளியேறினார்கள் என்பது உண்மை. அந்த எண்ணிக்கை குறைவாக இருக்கவில்லை. மேன்மக்களும், தாழ்மையும் எளிமையுமுள்ள கீழ்மக்களுமாக சத்தியத்திற்குச் சாட்சியாக அச்சமின்றி, லோலார்டு கோபுரம் எனும் நிலவறைகளில் நின்றவர்கள், சித்திரவதை, மற்றும் நெருப்பின் ஜுவாலைக்கும் நடுவில் நின்று, அவரது பாடுகளுக்கு, உடன் சகோதரர்களாக எண்ணப்பட்டதற்காக மகிழ்ந்தனர். (50)

விக்ளி∴பின் வாழ்நாளில் போப்பு மார்க்கத்தினர் அவர்களது எண்ணத்தை செயல்படுத்துவதில் தோல்விகண்டனர். அவரது உடல் அமைதியாகக் கல்லறையில் வைக்கப்பட்டபோதும், அவர்களது வெறுப்பு திருப்தியடைவதாக இருக்கவில்லை. அவர் மரணமடைந்து, நாற்பது வருடங்களுக்குப்பின்னர், கான்ஸ்டன்ஸ் என்ற இடத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்ட கட்டளைப்படி, அவரது எலும்புகள் அனைத்தும் கல்லறையிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டு, பொதுமக்கள் முன் எரிக்கப்பட்டு, அந்தச் சாம்பல் அருகிலிருந்த நீரோடையில் கலக்கப்பட்டது. “அவரது சாம்பல் அடுப்பிலிருந்து பாத்திரத்திற்கும், பாத்திரத்திலிருந்து சிற்றோடைக்கும், சிற்றோடையிலிருந்து ஆற்றுக்கும், ஆற்றிலிருந்து கடலுக்கும், கடலிலிருந்து பெருங்கடல்கள் அனைத்திற்குமாகக் கரைந்து, இவ்வாறாக, விக்ளி∴பின் சாம்பல், அவரது கொள்கையின் அடையாளச் சின்னமாக உலகம் எங்கும் பரவி உள்ளது” என்று பழங்கால எழுத்தாளர் ஒருவர் எழுதினார்.—T. Fuller, Church History of Britain, b. 4, sec. 2, par. 54. அவரது விரோதிகள் அவர்களது தீயசெயல்களின் விளைவுகள் எப்படிப்பட்ட அடையாளமாக மாறும் என்பதை உணராதிருந்தனர்! (51)

விக்ளி∴.பின் எழுத்துக்களினால்தான், பொஹிமியாவைச் சேர்ந்தவரான ஜான் ஹஸ் என்பவர் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திலுள்ள அநேக தவறுகளைவிட்டு விலகி, சீர்திருத்த ஊழியத்தில் நுழையும்படியாயிற்று. இப்படியாக, மிக அகலமாகப் பிரிந்திருந்த இந்த இரு நாடுகளிலும் சத்தியத்தின் விதைகள் விதைக்கப்பட்டது. பொஹிமியாவிலிருந்து ஊழியம் மற்ற நாடுகளுக்கும் பரவியது. அதிக நாட்களாக மறக்கப்பட்டிருந்த தேவனுடைய வார்த்தைகளை நோக்கி, மனிதர்களின் உள்ளங்கள் திருப்பப்பட்டன. மாபெரும் சீர்திருத்தத்திற்கான வழியை தெய்வீகக்கரம் ஆயத்தம்செய்துகொண்டிருந்தது. (52) ★

# 6

# நெருப்பாற்றிலே நீந்தியவர்கள்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 97–119)**

ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே சுவிசேஷம் பொஹிமியாவில் நடப்பட்டது. வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டு, பொது ஆராதனைகள் மக்களின் மொழியிலேயே நடத்தப்பட்டது் ஆனால் போப்புவின் வல்லமை அதிகரித்தபோது, அதே அளவிற்கு தேவனுடைய வார்த்தை இருளாக்கப்பட்டது. “அரசர்களின் பெருமையைக் கீழே தள்ளு வேன்” என்ற எண்ணத்தையுடையவராயிருந்த ஏழாவது கிரகோரி என்ற போப்பு, அடிமைகளாகிக் கொண்டிருந்த மக்களின்மீதும் அதே நோக்கத்தை யுடையவராயிருந்து, பொது இடங்களில் பொஹிமிய மொழியில் ஆராதனை நடப்பதைத் தடுக்கும் ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். தேவன் அவருக்கான ஆராதனை ஒரு அந்நிய மொழியில் நடத்தப்படுவதில் மகிழ்ச்சியுடையவராக இருக்கிறாரென்றும், இந்த நியமனத்தை அலட்சியம் செய்வது அநேக தீமைகளுக்கும், மதத் துரோகத்துக்கும் காரணமாக இருக்கிறது என்றும் அறிவித்தார்.—Wylie, b. 3, ch. 1. இவ்விதமாகத் தேவனுடைய வார்த்தை என்கிற வெளிச்சம் அணைக்கப்பட்டு, மக்கள் இருளால் மூடப்படவேண்டும் என்று ரோமன் கத்தோலிக்க சபை எண்ணியது. ஆனால் சபையைப் பாதுகாக்கப் பரலோகம் வேறு ஏதுகரங்களை ஏற்படுத்தியிருந்தது. உபத்திரவத்தின் காரணமாக அநேக வால்டென்னியர்களும் அல்பீஜியன்களும், பிரான்சிலும் இத்தாலியிலுமிருந்து அவர்களது வீடுகளைவிட்டு விரட்டப்பட்டு, பொஹிமியாவிற்கு வந்தனர். பகிரங்கமாகப் போதிக்க துணியாமலிருந்தாலும், ஆர்வத்துடன் இரகசியமாக உழைத்தனர். இவ்விதமாக நூற்றாண்டுகள்தோறும் மெய்யான விசுவாசம் பாதுகாக்கப்பட்டிருந்தது! (1)

ஹஸ்ஸின் நாட்களுக்குமுன் சபையிலுள்ள ஊழல்களையும் மக்களின் கீழ்த்தரமான செயல்களையும் கண்டிப்பதற்கென பகிரங்கமாக

எழுந்த மனிதர்கள் இருந்தனர். அவர்களது பணி எங்கும் பரவலாக வாஞ்சையை உண்டுபண்ணினது. மதத் தலைவர்களால் உண்டான பயங்கரங்கள் எழுந்தன் சுவிசேஷத்தின் சீடர்களுக்கெதிரான உபத்திரவம் திறக்கப்பட்டது. காடுகளிலும் மலைகளிலுமிருந்து ஆராதனைசெய்யும்படியாக விரட்டப்பட்ட அநேகர், இராணுவ வீரர்களால் வேட்டையாடப்பட்டு, கொலை செய்யப்பட்டனர். கொஞ்ச நாட்களுக்குப்பின், ரோமன் கத்தோலிக்க ஆராதனை முறையைவிட்டுப் பிரிந்துசென்ற அனைவரும் எரிக்கப்பட வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் கிறிஸ்தவர்கள் அவர்களது உயிர்களை விட்டுக்கொடுத்தபோது, அவர்களது நோக்கத்தின் வெற்றியை முன்னோக்கினர். சிலுவையில் அறையப்பட்ட மீட்பரைப்பற்றும் விசுவாசத்தினால்தான் இரட்சிப்பு உண்டாகிறது என்று போதித்தவர்களில் ஒருவர் சாகும்போது: “சத்தியத்தின் எதிரிகளின் மூர்க்கம் எங்களை மேற்கொள்ளுகிறது ஆனால் அது எப்போதும் அப்படி இருக்காது. சாதாரண ஜனங்களுக்கிடையிலிருந்து ஒருவர் போர்வாளும் அதிகாரமும் இல்லாதவராக எழும்புவார் அவரை அவர்களால் மேற்கொள்ள முடியாது” என்று அறிவித்தார்.—Ibid., b. 3, ch. 1. லுத்தரின் காலம் வெகு தொலைவில் இருந்தது. ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திற்கெதிராக ஏற்கனவே ஒருவர் எழும்பிக்கொண்டிருக்கிறார். ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திற்கெதிரான சாட்சி அவரது சாட்சி! அந்த சாட்சி நாடுகளைக் கலங்கச் செய்யும்! (2)

**ஜான் ஹஸ்** மிகவும் தாழ்மையான ஒரு குடும்பத்தில் பிறந்து, ஆரம்பத்திலேயே தகப்பனை இழந்ததால் அநாதையாக விடப்பட்டிருந்தார். எல்லா உடைமைகளையும்விட கல்வியையும் தேவனுக்குப் பயப்படுதலையும் மேலானதாக அவரது பக்திமிக்க அன்னை எண்ணி, இந்தப் பரம்பரைச் சொத்துக்கள் தனது மகனுக்குக் கிடைக்க வகைதேடினாள். ஹஸ் பள்ளிக் கல்வியை முடித்து அதன்பின் பிரேக் பல்கலைக்கழகத்தில் இலவசமாக கல்வி கற்கும் ஒரு மாணவராகச் சேர்ந்தார். ஏழையும் விதவையுமாகியிருந்த அவருடைய அன்னை பிரேக் நகர் வரை அவருடன் சென்றார். தன் மகனுக்கு கொடுப்பதற்கென்று உலகப்பிரகாரமான எந்தப் பரிசும் அவளிடம் இல்லாதிருந்தது. ஆனால் அப்பெருநகரை நெருங்கியதும், தந்தையற்ற மகனின் அருகில் அவள் முழுந்தாளில் நின்று, பரலோகத் தந்தையிடம் மகனுக்கான ஆசீர்வாதத்தை ஜெபத்தில் கெஞ்சிக் கேட்டார். அந்த அன்னையின் ஜெபம் எவ்விதமாகக் கேட்கப்படவிருந்தது என்பதைப்பற்றி அப்போது அவள் உணராதவளாயிருந்தாள். (3)

தனது குற்றமற்ற சாதுவான வாழ்க்கையினாலும் எவரையும் ஈர்க்கின்ற சுபாவத்தினாலும் அனைவரது மதிப்பையும்பெற்ற அதேநேரம்

களைப்படையாத முயற்சியினாலும் விரைவான வளர்ச்சியினாலும் பல்கலைக் கழகத்தில் தனிச் சிறப்பைப் பெற்றார் ஜான் ஹஸ். ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தை உண்மையாகப் பின்பற்றுபவராக இருந்து, அது தருவதாகச் சொல்லிக்கொண்டிருந்த ஆசீர்வாதங்களை வாஞ்சித்துத் தேடியிருந்தார். ஒரு ஜுபிலி விழாவின் சமயத்தில், அவர் பாவஅறிக்கை செய்யச்சென்று, தன்னிடம் கடைசியாக இருந்த சில நாணயங்களை, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அவரது பாவமன்னிப்பின் பங்கைப் பெறுவதற்காகச் செலுத்தி, பின்பு நிகழ்ந்த ஊர்வலத்திலும் கலந்துகொண்டார். கல்லூரிப் படிப்பை முடித்தபின், குருப்பட்டத்தைப் பெற்று விரைவில் தேர்ச்சியடைந்து, அரசவையோடு விரைவில் இணைக்கப்பட்டார். எங்கு கல்வி பயின்றாரோ அங்கேயே பேராசிரியராகவும் பல்கலைக்கழக மடாலயத்தலைவராகவும் ஆனார். பிறரது பொருளுதவியினால் கல்வி பயின்ற, மிகத் தாழ்மையான அவர், அவரது நாட்டிற்குப் பெருமை சேர்ப்பவராக மாறினார். ஐரோப்பா முழுவதிலும் அவர் புகழ் பரவியது. (4)

ஆனால் ஹஸ் வேறொரு துறையில் அவரது சீர்திருத்தப் பணியைத் தொடங்கினார். குருப்பட்டம்பெற்றுப் பல வருடங்களுக்குப் பின்னர் பெத்லெகேம் ஆலயத்தின் சொற்பொழிவாளர் என்ற பதவியைப் பெற்றார். வேத வாக்கியங்களைப்பற்றிய சொற்பொழிவு தங்களின் தாய்மொழியில் இருக்கவேண்டும் என்று இந்த ஆலயத்தின் அமைப்பாளர் கூறியிருந்தார். இந்தப் பழக்கத்திற்கு ரோமன் கத்தோலிக்க சபை நிர்வாகத்திலிருந்து எதிர்ப்பு இருந்திருந்தபோதிலும், பொஹிமியாவில் அது முற்றிலும் கைவிடப் படவில்லை. சமுதாயத்தின் எல்லா நிலைகளில் இருந்த மக்களிடமும், வேதாகமத்தைப்பற்றிய அறியாமையும் மிகவும் மோசமான பழக்கங்களும் உண்டாயிருந்தன. இந்தத் தீமைகளை விட்டுவைக்காமல் எதிர்த்தார். தான் போதித்த சத்தியத்தின் கோட்பாடுகளையும் தூய்மையையும் நடைமுறைப்படுத்துவதற்காக, தேவனுடைய வார்த்தைகளிடம் செல்லும்படி அவர் வேண்டுகோள் விடுத்தார். (5)

பிற்காலத்தில் ஹஸ்ஸுடன் இணைந்து செயல்பட்ட, பிரேக் நகரவாசியான **ஜெரோம்** என்பவர் இங்கிலாந்திலிருந்து திரும்பிவந்தபோது, விக்ளிஃபின் எழுத்துக்களையும் தன்னுடன் கொண்டுவந்தார். இங்கிலாந்தின் அரசியார் விக்ளிஃபின் போதனைகளினால் சமய மாற்றமடைந்தார். அவர் பொஹிமியாவின் இளவரசியாக இருந்ததினால், அவரது செல்வாக்கினால் சீர்திருத்தக்காரரின் பணி அவரது சொந்த நாடெங்கிலும் பரவியது. இந்த எழுத்துக்களை ஹஸ் மிகுந்த ஆர்வத்துடன் வாசித்து, இதை எழுதியவர் உண்மையான ஒரு கிறிஸ்தவர் என்று நம்பி, அந்த சீர்திருத்தவாதி பரிந்துரை

செய்திருந்த சீர்திருத்தங்களை ஆவலுடன் ஏற்றுக்கொள்ள விரும்பினார். ஹஸ் அவரையும் அறியாமலேயே ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திலிருந்து வெகுதூரம் செல்லக்கூடிய ஒரு பாதையில் நுழைந்திருந்தார். (6)

இந்தச் சமயத்தில், கற்றறிந்த இரு அந்நியர்கள் ஒளியைப் பெற்றிருந்து, அதைத் தூரதேசத்தில் பரப்பிடவேண்டுமென்பதற்காக, இங்கிலாந்திலிருந்து வந்திருந்தனர். போப்புவின் மேலாதிக்கத்தை நேரடியாக ஆரம்பத்திலேயே தாக்கினதால், அவர்கள் விரைவில் அதிகாரிகளால் மௌனப்படுத்தப்பட்டனர். ஆனால் அவர்களது நோக்கத்தை விட்டுவிலக அவர்கள் மறுத்து, வேறு வழியைத் தேடினார்கள். அவர்கள் ஓவியர்களும், பிரசங்கிகளுமாயிருந்த தினால், தங்களது திறமையைக் காட்டத்தொடங்கினர். பொதுமக்கள் கூடும் இடத்தில் அவர்கள் இரு ஓவியங்களை வரைந்துவைத்தனர். ஒரு ஓவியம் காலணியற்றவராக—எளிய உடையை அணிந்தவராக—பயணத்தால் கந்தலான உடையை அணிந்த அவரது சீடர்கள் பின்தொடர, இயேசு "சாந்தகுணமுள்ளவராய் கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிக்கொண்டு" (மத்தேயு 21:4) வந்ததைக் காட்டியது. மற்றுமொரு ஓவியம் போப்பு அவருடைய ஆடம்பரமான விலையுயர்ந்த உடையில், மூன்று அடுக்குகளையுடைய கிரீடம் சூடியவராக, மிக அதிகமாக அலங் கரிக்கப்பட்ட ஒரு குதிரையின் மீது அமர்ந்து, குழலூதுபவர்கள் முன்செல்ல, கர்தினால்களும் குருமார்களும் பின்செல்ல, அலங்காரமாகச் செல்வதுபோல வரையப்பட்டிருந்தது. (7)

அனைத்து வகுப்பினரது கவனத்தையும் ஈர்க்கின்ற ஒரு சொற்பொழிவு இங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த ஓவியங்களைக் காண மக்கள் கூட்டமாக வந்தனர். எளிமையும் தாழ்மையுமிக்க தோற்றமுடைய எஜமானான கிறிஸ்து அவரது வேலைக்காரன் என்று சொல்லிக்கொள்ளும் அகந்தையும் கர்வமுமிக்க போப்பு இவர்கள் இருவருக்குமிடையிலிருந்த வேற்றுமைகளைக் கண்ட அநேகர் ஆழமாக உணர்த்தப்பட்டனர். இந்த நீதிவிளக்கத்தை வாசிக்காதவர்கள் ஒருவரும் அங்கிருக்கவில்லை! பிரேக் நகரில் உணர்ச்சிக் கொந்தளிப்பு உண்டானது. எனவே, அந்த அந்நியர்கள், பாதுகாப்பிற்காக எங்காவது செல்வது அவசியம் என்பதைச் சற்று நேரத்திற்குப்பின் கண்டனர். ஆனால் அவர்கள் கற்பித்த பாடம் மறக்கப்படவில்லை. இந்த ஓவியங்கள் ஹஸ்ஸின் உள்ளத்தில் ஆழமான உணர்வைப் பதித்தது. அது வேதாகமத்தையும் விக்ளி.்.ப் எழுதியவைகளையும் உற்றுநோக்கும்படி அவரை நடத்தினது. விக்ளி.்.ப் பரிந்துரைசெய்த எல்லா சீர்திருத்தங்களையும் ஏற்றுக்கொள்வதற்கு அவர் இன்னமும் ஆயத்தப்படாமல் இருந்தாலும், போப்பு மார்க்கத்தின் உண்மையான சுபாவத்தைக் கண்டு, அந்த மதத்

தலைவரிடமிருந்த அகந்தை, பேராசை, ஊழல் ஆகியவைகளைப்பற்றித் தீவிரமான வைராக்கியத்துடன் குற்றஞ்சாட்டினார். (8)

பொஹிமியாவிலிருந்து ஒளி ஜெர்மனிக்குப் பரவியது. ஏனெனில், பிரேக் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த தொந்தரவுகள் நூற்றுக்கணக்கான ஜெர்மன் மாணவர்களை வீட்டிற்கு திரும்பிச் செல்லச் செய்தது. அவர்களில் அநேகர் ஹஸ்ஸிடமிருந்து அவர்களுடைய ஆரம்ப வேதாகம அறிவைப் பெற்றிருந்தனர். அவர்கள் திரும்பிச் சென்றதும், அவர்களது தந்தையர் நாட்டில் சுவிசேஷத்தைப் பரப்பினார்கள். (9)

பிரேக் நகரில் நடந்த ஊழியர்களைப்பற்றிய செய்தி ரோம் நகருக்குக் கொண்டுசெல்லப்படவே, போப்புவிற்குமுன் விரைவில் வந்து நிற்கும்படி ஹஸ் அழைக்கப்பட்டார். அதற்குக் கீழ்ப்படிவது அவரை மரணத்திற்கு ஆளாக்கும். பொஹிமியாவின் அரசர், அரசி, மற்றும் பல்கலைக்கழகத்தின் மேலான சமூக அங்கத்தினர்கள் ஹஸ் பிரேக்கிலேயே இருக்க அனுமதிக்கப்படவேண்டும் என்றும், ரோமன் கத்தோலிக்க சபைத்தலைவருக்குப் பதில்சொல்ல, ஹஸ்ஸுக்குப் பதிலாக அவரது உதவியாளர் ஒருவர் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், ஒரு வேண்டுகோளை விடுக்க ஒன்றுபட்டனர். இந்த வேண்டுகோளை அனுமதிப்பதற்குப்பதிலாக, விசாரணை நடத்தத் தொடங்கி, ஹஸ்ஸைக் குற்றப்படுத்தி, பிரேக் நகரத்தின் சமயச் சடங்குகள் எதிலும் பங்குகொள்ளக்கூடாது என்ற தடையின்கீழ் அவர் இருப்பதாக போப் அறிவித்தார். (10)

அந்தக் காலத்தில் இந்தவிதமான தண்டனைகள் அறிவிக்கப்பட்ட போதெல்லாம், அது மிகப்பரவலான அபாய உணர்வை உண்டுபண்ணியிருந்தது. அதை நடைமுறைப்படுத்தும் சமயச்சடங்கு, போப்புவை தேவனுடைய பிரதிநிதியாகவும், பரலோகம், நரகம் ஆகியவைகளின் திறவுகோலை வைத்திருக்கிறவராகவும், உலகப்பிரகாரமானதும் ஆவிக்குரியதுமான தீர்ப்பைச் செலுத்தும் வல்லமை உடையவராகவும் காண்பித்து, அவரைப் பார்த்து மக்கள் திகிலடையும்படியானவிதத்தில் இருந்தது. சமயச் சடங்குகளை நடத்தக்கூடாது என்ற தடையால் பாதிக்கப்பட்டிருந்த இடத்திற்கெதிராக பரலோகத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டிருக்கும் என்றும், அந்தத் தடையை நீக்கும் இரக்கம் போப்புவிற்கு உண்டாகும்வரை அப்படியே இருக்குமென்றும், அந்தச் சமயத்தில் இறந்தவர்கள் அவர்களுடைய ஆனந்தமிக்க வாசஸ் தலங்களுக்கு வெளியில்தான் இருப்பார்கள் என்றும் நம்பியிருந்தனர். இந்தப் பயங்கரமான அழிவின் அடையாளமாக சகல சடங்குகளும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. ஆலயங்கள் மூடப்பட்டிருந்தன. திருமணங்கள் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இடத்தில்

இறந்தவர்களை அடக்கம்செய்வது மறுக்கப்பட்டு, கல்லறைச் சடங்குகள் எதுவுமின்றி, அவர்கள் சாக்கடைகளிலோ அல்லது வயல்களிலோ புதைக்கப் பட்டனர். இவ்விதமாக, ரோமச்சபை தன் மனதில் தோன்றினபடி செயல்பட்ட தினால், அந்தத் தடையுத்தரவு மனிதர்களின் மனசாட்சியைக் கட்டுப்படுத்தி சோதித்தது. (11)

பிரேக் நகரம் கொந்தளிப்பினால் நிறைந்தது. ஒரு பெரும் கூட்டமான மக்கள், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்துகளுக் கெல்லாம் ஹஸ் தான் காரணம் என்று அவரைக் குற்றஞ்சாட்டி, கத்தோலிக்க நிர்வாகத்தின் பழிவாங்கும் நடவடிக்கைக்கு அவரை ஒப்படைத்துவிடவேண்டுமென்று கோரினர். இந்தப் புயலை அமைதிப்படுத்த, ஹஸ் சிலநாட்களுக்கு அவரது சொந்த ஊருக்குச் சென்றுவிட்டார். பிரேக் நகரில் அவர் விட்டுவந்த அவரது நண்பர்களுக்கு: “நான் உங்களைவிட்டு உங்கள் நடுவிலிருந்து பின்வாங்கிச் சென்றிருந்தால், அது தீய எண்ணமுடையவர்கள் அவர்கள்மீது தாங்களாகவே நிரந்தரமான பழியை உண்டுபண்ண இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகவும், பக்தியுள்ளவர்களுக்குத் துன்பமும், உபத்திரவமும் உண்டாவதற்கு நான் காரணமாக இருக்கக்கூடாது என்பதற்காகவும், இயேசு கிறிஸ்துவின் கட்டளையையும் முன்மாதிரியையும் பின்பற்றும்படியாகவும் செய்யப்பட்டதாகும். தேவனுடைய வார்த்தைகளை உங்களின் நடுவில் பேசுவதை நீண்டகாலத்திற்குத் தடைசெய்யும் நோக்கத்துடன் பக்தியற்ற குருமார்கள் செயல்படக்கூடும் என்று பயந்தும் நான் ஒதுங்கி இருக்கிறேன் ஆனால் தெய்வீக சத்தியத்தை மறுக்கும்படியாக, நான் உங்களை விட்டுச் செல்லவில்லை. அதற்காக நான் தேவனுடைய உதவியுடன் இறப்பதற்கும் விருப்பம் கொண்டிருக்கிறேன்” என்று எழுதினார்.—Bonnechose, The Reformers Before the Reformation, vol. 1, p. 87. ஹஸ் அவரது பணியிலிருந்து நின்றுவிடாமல், வாஞ்சைமிக்க கூட்டங்களில் சொற்பொழிவாற்றும்படி, சுற்றியிருந்த நாடுகளுக்குப் பயணத்தை மேற்கொண்டார். இவ்வாறாக, சுவிசேஷத்தின் செய்தியை ஓய்த்துவிட வேண்டுமென்று போப்பு எந்த அளவிற்குச் செயல்பட்டாரோ, அந்த அளவிற்கு அது மிக அதிகமான இடங்களுக்குப் பரவியது. “சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றுஞ்செய்யக்கூடாமல், சத்தியத்திற்கு அநுகூலமாகவே செய்யக்கூடும்”–2 கொரி. 13:8. (12)

அவரது பணியின் இந்த நேரத்தில், ஹஸ்ஸின் மனம் போராட்டம் நிறைந்த காட்சியை உடையதைப்போல் காணப்பட்டது. சபையானது அதன் இடிமுழக்கங்களினால் அவரைத் திகைப்படையச்செய்ய வகைதேடி இருந்தபோதிலும், அவர் அதன் அதிகாரத்தை மறக்கவில்லை. அவருக்கு

இன்னும் ரோமன் கத்தோலிக்க சபை கிறிஸ்துவின் மணவாட்டியாகவும், போப்பு தேவனின் பதிலாளியாகவும் பிரதிநிதியாகவும் இருந்தார். ஹஸ் சபையின் கோட்பாடுகளுக்கு எதிராகவே போர்செய்து கொண்டிருந்தார். அதுவே அவர் புரிந்துகொண்டிருந்த உணர்வுகளுக்கும், அவரது மனசாட்சிக்கும் இடையில் பயங்கரமான போராட்டத்தை உண்டுபண்ணியது. அவர் நம்பியிருந்தபடி அந்த அதிகாரம் நீதியும் தவறாமையும் உள்ளதாக இருந்திருந்தால், அதற்குக் கீழ்ப்படிய மறுக்கும் தனது குணம் எப்படி வந்தது? கீழ்ப்படிவது என்பது பாவம்செய்வதாக அவருக்குக் காணப்பட்டது் ஆனால் தவறாமையுடைய ஒரு சபைக்குக் கீழ்ப்படிவது இப்படிப்பட்ட பிரச்சினைக்கு ஏன் வழிநடத்தவேண்டும்?—அவரால் பரிகரிக்கமுடியாத ஒரு பிரச்சினையாக அது இருந்தது. ஒவ்வொரு மணிநேரமும் அவரை இந்தச் சந்தேகம் வதைத்துக்கொண்டிருந்தது. மீட்பரின் காலத்திலிருந்த சபையின் ஆசாரியர்கள் கெட்ட மனிதர்களாக மாறி, அவர்களது நீதியற்ற அதிகாரத்தை நியதி இல்லாத முடிவுகளுக்காக செயல்படுத்தியபடியே மறுபடியும் நிகழ்ந்துள்ளது என்பதை—அந்தப் பிரச்சினையில் கிட்டத்தட்ட சரியான விடையை, அவரால் காணமுடிந்தது. அவரது சொந்த வழிகாட்டலுக்காகவும், மற்றவர்களுக்குப் போதிக்கவும்—புரிந்துகொள்ளும் திறனின் மூலமாக மனசாட்சியைக் கட்டுப்படுத்துகிற வேதவாக்கியங்களின் நியதிகளை ஏற்றுக்கொள்ளும்படி அது அவரை வழிநடத்தினது. வேறுவிதமாகச் சொன்னால், குருமாரின் மூலமாக சபை பேசுவதல்ல—வேதாகமத்தில் பேசுகிற தேவனே தவறாமையுள்ள ஒரே ஒரு வழிகாட்டுதலாகும்.—Wylie, b. 3, ch. 2. (13)

சில நாட்களுக்குப்பின்னர், பிரேக்கில் உண்டான உணர்ச்சிகளின் கொந்தளிப்பு அடங்கியபின், அதிகமான வைராக்கியத்துடனும் தைரியத் துடனும் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதைத் தொடர அவரது பெத்லெகேம் ஆலயத்திற்குத் திரும்பிவந்தார். அவரது விரோதிகள் செயலாற்றலும் வல்லமையுமிக்கவர்களாக இருந்தனர். ஆனால் மேன்மக்களில் அநேகரும், அரசியும் அவரது நண்பர்களாக இருந்ததோடல்லாமல், பெரும் எண்ணிக்கையுள்ள மக்கள் அவரது அணியில் இருந்தனர். அவரது தூய்மையையும் மேன்மைப்படுத்துகின்ற போதனைகளையும் தூய வாழ்க்கையையும், ரோமன் கத்தோலிக்கர்கள் போதித்த கீழ்த்தரமாக்கும் பிடிவாதமான கோட்பாடுகளேடும் அவர்கள் நடைமுறைப்படுத்தியிருந்த வெறுக்கத்தக்கதான செயல்களோடும் அமித உணவுப் பழக்கங்களோடும் ஒப்பிட்டுப் பார்த்தபோது, ஏராளமானவர்கள் ஹஸ்ஸின் அணியிலிருப்பதை ஒரு மதிப்பு என எண்ணினர். (14)

இதுவரை ஊழியத்தில் ஹஸ் தனியாக நின்றிருந்தார். இங்கிலாந்தி லிருந்தபோது விக்ளி்.பின் போதனைகளை ஏற்றுக்கொண்ட ஜெரோம்

ஹஸ்ஸின் சீர்திருத்தப்பணியில் இணைந்தார். அவர்களிருவரும் இதற்குப்பின் ஊழியத்தில் இணைந்திருந்து, மரணத்திலும் பிரியமுடியாதவர்களாக இருந்தனர். (15)

மக்களிடமிருந்த ஆதரவை ஈட்டும் மேலான தெளிந்த அறிவு, பேச்சுத்திறன், கற்றல் ஆகியவை ஜெரோமிடம் மிகமேலான நிலையில் இருந்தது. அதேசமயம் நல்ல தன்மைகளோடு பலப்படுத்துகின்ற செயல்களில் ஹஸ் மேலானவராக இருந்தார். அவரது அமைதியான ஆவி ஜெரோமின் துடிப்புமிக்க ஆவியின்மீது கட்டுப்பாட்டை உண்டுபண்ணுவதை ஜெரோம் உண்மையான தாழ்மையுடன் உணர்ந்து, அவரது ஆலோசனைகளுக்கு இணங்கி இருந்தார். இவ்வாறு இணைந்த ஊழியத்தால் சீர்திருத்தம் விரைவாகப் பரவியது. (16)

ரோமன் கத்தோலிக்க சபையின் அநேக தவறுகளை வெளிக் காட்டி, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த மனிதர்களின் மனதில் பெரும்ஒளி பிரகாசிக்க தேவன் அனுமதித்தார் ஆனால் உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய வெளிச்சம் அனைத்தையும் இவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. தேவன் அவருடைய இந்த ஊழியக்காரர்களின்மூலமாக, ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் இருளிலிருந்து மக்களை வெளியே நடத்திக்கொண்டிருந்தார் ஆனால் அவர்கள் சந்திக்கவேண்டிய ஏராளமான பெரும் தடைகள் இருந்தன. அவர் அவர்களைப் படிப்படியாக நடத்தினார். அவர்களால் அதைத் தாங்கிக்கொள்ளமுடிந்தது. முழுமையான வெளிச்ச மனைத்தையும் ஒரே தடவையில் பெற்றுக்கொள்ளுவதற்கு அவர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை. இருளில் இருந்தவர்களுக்குமுன் நடுப்பகலின் சூரியஒளி திடீரென்று தோன்றினால், அது அவர்களை எவ்விதமாகத் திரும்பச் செய்யுமோ, அதைப்போலவே இதுவும் இருந்திருக்கும். எனவே மக்கள் அதைப் பெற்றுக்கொள்ளும்வண்ணம், தேவன் அந்தத் தலைவர்களுக்கு வெளிச்சத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தினார். நூற்றாண்டுகளின் மேல் நூற்றாண்டுகளாக பின்னர் வரவிருந்த விசுவாசமிக்க ஊழியக்காரர்கள், சீர்திருத்தத்தின் பாதையில் மக்களை மேலும் நடத்தவேண்டியிருந்தது. (17)

சமயக் கருத்துவேறுபாடு சபையில் இன்னமும் தொடர்ந்துகொண் டிருந்தது. மூன்று போப்புக்கள்(!) பதவிக்காகப் போட்டியிடவே, அவர்களுக் கிடையிலுண்டான போர், கிறிஸ்தவ உலகத்தில் குற்றங்களையும் பதைபதைப்புகளையும் உண்டுபண்ணினது. ஒருவர்மீது ஒருவர் குற்றம் சொல்லுவதில் அவர்கள் திருப்தியடையாமல், உலகப்பிரகாரமான ஆயுதங் களால் ஒருவருடன் ஒருவர் சண்டையிடவும் ஆரம்பித்தனர். ஒவ்வொருவரும் பணம்செலவிட்டு, ஆயுதங்களையும் போர்வீரர்களையும் தங்களைச்

சுற்றிலும் அமைத்துக்கொண்டனர். இவைகளை நடத்தப் பணம் தேவையாக இருந்தது. அதை அடைந்துகொள்ளுவதற்காக, சபையின் ஆசீர்வாதங்கள், பரிசுகள், பதவிகள் யாவும் விற்பனைசெய்யப்பட்டன. குருமார்களும் அவர்களது மேலதிகாரிகளைப் பின்பற்றி, புனிதப் பொருட்களை விற்றுப் பணம் சம்பாதிக்கவும் தங்களுக்கு எதிரானவர்களைத் தாழ்த்தி, அவர்களுடன் போரிடவும், தங்களது வல்லமையைப் பலப்படுத்தும் வழிகளில் ஈடுபட்டனர். நாள்தோறும் அதிகரிக்கும் தைரியத்துடன் மதத்தின் பெயரால், நடைபெற்றிருந்த அக்கிரமங்களுக்கெதிராக, ஹஸ் இடிமுழக்கம் செய்யவே, கிறிஸ்தவ சமுதாயத்தை மேற்கொண்டிருக்கும் துன்பங்களுக்கு, ரோமன் கத்தோலிக்கத் தலைவர்கள்தான் காரணமாயிருக்கிறார்கள் என்று மக்கள் கூறினர். (18)

மறுபடியும் பிரேக் நகரில் இரத்தக்கலவரம் உண்டாகவிருப்பதுபோல் காணப்பட்டது. கடந்த காலத்தில்: “இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா?” (1இராஜா. 16:17) என்றதுபோல, தேவனுடைய ஊழியக்காரர் குற்றஞ்சாட்டப்பட்டார். அந்த நகரம் மறுபடியும் சமயச் சடங்கு மறுப்புச் சட்டத்திற்கு உட்பட்டது. எனவே, ஹஸ் தனது சொந்த கிராமத்திற்குச் சென்றார். அவர் மிகவும் நேசித்திருந்த அவரது பெத்லெகேம் ஆலயத்திலிருந்து உண்மையாகக் கொடுத்துவந்த சாட்சி முடிவை அடைந்தது. சத்தியத்திற்குச் சாட்சியாக அவர் தன் உயிரைவிடும் முன்னர், கிறிஸ்தவ சமுதாயத்தின் விசாலமான மேடைகளில் அவர் பேசவேண்டியதாக இருந்தது. (19)

ஐரோப்பாவைச் சிதறடித்துக் கொண்டிருந்த தீமைகளை குணப்படுத்த கான்ஸ்டன்ஸ் என்னுமிடத்தில் ஒரு பொதுக்குழு கூட்டப்பட்டது, இந்தக்கூட்டம் சிகிஸ்மண்ட் என்ற பேரரசனின் விருப்பப்படி, மூன்று போட்டிப் போப்புகளில் ஒருவரான இருபத்து மூன்றாம் ஜான் என்பவரால் கூட்டப்பட்டது. போப் ஜான் என்பவரின் பண்பும் கொள்கைகளும் விசாரிக்கப்பட்டால், அந்நாட்களில் இருந்த சபை மனிதர்களைப் போலவே சன்மார்க்கமற்றதாக இருக்கும் என்று குருமார்களால்கூடக் கருதப்பட்டதினால், ஒரு ஆலேசனைக் கூட்டத்தை நடத்தவேண்டும் என்ற போப் ஜானின் கோரிக்கை வரவேற்பிற்கு வெகுதூரத்தில் இருந்தது. எப்படியிருந்தாலும், அவர் சிகிஸ்மண்டின் கருத்தை எதிர்க்கத் துணியவில்லை. (20)

இந்த ஆலோசனைக்குழு நிறைவேற்ற விரும்பின முக்கியமான நோக்கம், சபையிலுள்ள சமயப் பிளவைக் குணப்படுத்தி, மதப்புரட்டை வேருடன் களையவேண்டும் என்பதாயிருந்தது. எனவே, ஒருவருக்கொருவர் எதிரான இரு போப்புகளும் அந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு வரும்படி அழைக்கப்பட்டனர். அதைப்போலவே, புதிய கருத்துக்களைப் பிரசங்கம்

செய்வதில் முன்னணியிலிருந்த ஹஸ்ஸும் அதன்முன் தோன்றும்படி அழைக்கப் பட்டார். முன்சொல்லப்பட்டவர்கள் அவர்களது சொந்தப் பாதுகாப்பை எண்ணி நேரடியாக வராமல், அவர்களது பிரதிநிதிகளின் மூலமாகத் தோன்றினார்கள். தன்னை பதவியிலிருந்து நீக்கும் இரகசியமான நோக்கத்துடன் பேரரசன் இருக்கிறான் என்னும் சந்தேகத்துடனும், தான் அணிந்திருந்த மூன்றடுக்குக் கிரீடத்தின் மேன்மைக்குக் களங்கம் உண்டுபண்ணும்படியாக தான் செய்த தீயசெயல்களுக்கான கணக்கை ஒப்புவிக்க வேண்டியதிருக்கும் என்ற பயத்துடனும், அதைப்போலவே அந்த கிரீடத்தை அடைந்து கொள்ளுவதற் காகச் செய்யப்பட்ட குற்றங்களைப்பற்றியும் கேட்கக்கூடும் என்ற எண்ணத் துடனும், மிக டாம்பீகமாக இந்தக் கூட்டத்தை ஏற்படுத்தின போப் ஜான் இருந்தார். அப்படியிருந்தும் பெரும் ஆடம்பரத்துடனும், சபையின் மேலான நிலையிலிருந்தவர்கள் புடைசூழ, ஒரு கூட்டம் சேவகர்கள் பின்தொடர, அவர் கான்ஸ்டன்ஸ் நகருக்குள் நுழைந்தார். அனைத்துக் குருமார்களும் மேலான அந்தஸ்திலிருந்த நகரமக்களும் நெருக்கமான கூட்டத்துடன் அவரை வரவேற்கப் புறப்பட்டுச்சென்றனர். நான்கு தலைமை நீதிபதிகளால் சுமக்கப்பட்ட, ஒரு தங்கத்தாலான பாதுகாப்புக்கூரை அவரது தலைக்குமேல் இருந்தது. வரவேற்பாளர்கள் அவரைச் சுமந்து முன்செல்ல, கர்தினால்களும் மேன்மக்களும் அணிந்திருந்த விலையுயர்ந்த உடைகளும், மாட்சிமைமிக்க காட்சியாக இருந்தது. (21)

அதேசமயம் வேறொரு பயணி கான்ஸ்டன்ஸ் நகரை நெருங்கிக் கொண்டிருந்தார்—ஹஸ்! அவர் தன்னைப் பயமுறுத்தியிருந்த அபாயங்களை உணர்ந்தவராக இருந்தார். அந்தப் பயணம் அவரை மரண மேடைக்கு நடத்திச்செல்லுகிறதென்ற உணர்வுடன், இனி ஒருபோதும் தனது நண்பர் களைச் சந்திக்கப்போவதில்லை என்பதுபோல் அவர்களிடமிருந்து பிரிந்து தனது பயணத்தை மேற்கொண்டார். அதுவுமல்லாமல், அவர் பொஹிமியா வின் அரசரிடமிருந்து பாதுகாப்பு நடத்துதல் கடிதம் பெற்றிருந்தும், பயணத்தின்போது மரணம் உண்டாகலாம் என்று அனுமானித்து, சிகிஸ்மண்ட் பேரரசனிடமிருந்தும் ஒரு கடிதத்தைப் பெற்றிருந்தார். (22)

பிரேக்கிலிருந்த அவரது நண்பர்களுக்கு ஒரு கடிதத்தில்: “எனது சகோதர—சகோதரிகளே! அரசரிடமிருந்துபெற்ற ஒரு பாதுகாப்பு நடத்துதல் கடிதத்துடன், நான் ஏராளமான எனது சரீரப்பிராகாரமான எதிரிகளை சந்திக்கப் புறப்பட்டுச் செல்லுகிறேன். நான் சர்வவல்லமையுள்ள தேவனின் மீது, என் மீட்பருக்குள்ளாக முழுமையான நம்பிக்கை வைத்திருக்கிறேன். அவர் தமது முன்னறிவையும் ஞானத்தையும் என் வாயில் வைத்து, நான் அவர்களைத் தடுக்கவும், நான் சத்தியத்தில் பலமுடையவனாகும்படி

அவர் எனக்குப் பரிசுத்தஆவியைத் தரவும், அதனால் நான் தைரியத்துடன் சோதனைகளையும், சிறையையும், அவசியமானால் ஒரு கொடூர மரணத்தையும் சந்திக்கவும், உங்களது ஆர்வமிகுந்த ஜெபங்களைக் கேட்டு, அவர் எனக்கு அருள்செய்வார். இயேசு கிறிஸ்து, அவரால் நேசிக்கப்பட்டவர்களுக்காகப் பாடுகளைச் சகித்தார். நாம் நமது இரட்சிப்பிற்காக எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக்கொள்ள, அவர் நமக்கு ஒரு முன்மாதிரியினை விட்டுச்சென்றிருக்கிறார் என்பதற்காக ஆச்சரியப்படவேண்டாமா? அவர் தேவன்—நாம் அவரது சிருஷ்டிகள் அவர் கர்த்தர்—நாம் அவரது ஊழியக்காரர்கள்; அவர் இந்த உலகத்தின் எஜமானர்—நாம் பழிக்கிடமான அழிவுக்குரியவர்கள். அப்படியிருந்தும் அவர் பாடுகளைச் சகித்தார். நாம் ஏன் சகிக்கக்கூடாது? குறிப்பாக, பாடுகள் நம்மைத் தூய்மைப்படுத்துவதற்காக என்னும்போது, நாம் ஏன் அவைகளை அனுபவிக்கக்கூடாது? எனவே அருமையானவர்களே! எனது மரணம் அவரது மகிமைக்கு உதவக்கூடியதாக இருக்குமானால், எனக்கு ஏற்படக்கூடிய தொடர்ச்சியான எல்லா அபாயங்களிலும் அவர் என்னைத் தாங்கும்படி, அவை விரைவாக நிகழும்படி ஜெபியுங்கள். ஆனால் நான் எந்தவிதமான கறையும் இல்லாதவனாகத் திரும்பிவிட தேவனிடம் ஜெபிப்போமாக் அதாவது எனது சகோதரர்கள் பின்பற்றும்படியான சிறப்பான உதாரணமாக அவர்களுக்கு நான் இருக்கும்படியாக, சுவிசேஷத்தின் எந்த ஒரு உறுப்பையும் கட்டுப்படுத்தாதவனாயிருக்க ஜெபியுங்கள். ஒருவேளை உங்களால் ஒருபோதும் எனது முகத்தைக் காண முடியாமலாகிவிடலாம். ஆனால் என்னை உங்களுக்குத் திரும்பக் கொடுக்கவேண்டும் என்பது தேவதிட்டமாயிருந்தால், அவரது பிரமாணங்களைப்பற்றிய அறிவுடனும் அன்புடனும் நாம் முன்னோக்கிச் செல்லுவோமாக” என்று குறிப்பிட்டிருந்தார்.— Bonnechose, vol. 1, pp. 147, 148. (23)

சுவிசேஷத்திற்குச் சீஷராக மாறிய ஒரு குருவானவருக்கு அவர் எழுதின வேறொரு கடிதத்தில், ஹஸ் தனது தவறுகளைப்பற்றி மிகஆழ்ந்த தாழ்மையுடன் பேசி, விலை உயர்ந்த ஆடைகளை அணிவதில் மகிழ்ச்சி அடைந்ததற்காகவும், வீணான அலுவல்களில் காலத்தைச் செலவிட்டதற்காகவும் வருந்தி எழுதினார். அதன்பின் உள்ளத்தைத்தொடக்கூடிய “உடமைகளையும் சொத்துக்களையும் சேர்ப்பதினால் உண்டாகும் ஆதாயங்களை நாடாமல், தேவனுடைய மகிமையையும் ஆத்துமாக்களின் இரட்சிப்பையும்பற்றி மனம் நிரப்பப்படட்டும். உங்களுடைய வீட்டை அழகுபடுத்துவதைவிட, ஆத்துமாவை அதிக அழகுபடுத்துவதில்எச்சரிக்கையாக இருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, உங்களுடைய ஆவியின் மாளிகையைப்பற்றிக் கவனமுள்ளவர்களாயிருங்கள். ஏழைகளிடம் அன்பும்

தாழ்மையுமுள்ளவர்களாயிருங்கள் மேலான உணவுகளை விரும்பி உண்டு, வீணர்களாகாதிருங்கள். உங்கள் வாழ்க்கையை நீங்கள் திருத்தாவிட்டால், என்னைப்போல அமிதமானவைகளிலிருந்து விலகாவிட்டால், பயங்கரமான தண்டனைக்குள்ளாவீர்கள். எனது கோட்பாடுகளை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் இளம்வயதுமுதல் எனது போதனைகளைப் பெற்றிருக்கிறீர்கள். ஆகவே இதற்கும்மேலாக உங்களுக்கு எழுதுவது பயனற்றதாகும். நான் ஏதாவது மாயையில் அகப்பட்டு விழுந்திருந்தால், அவைகளை நீங்கள் பின்பற்றவேண்டாமென்று நமது கர்த்தரின் இரக்கங்களினால் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்ற எச்சரிப்புகளைச்சேர்த்து எழுதினார். கடித்தின் அட்டையில் "நான் மரித்துவிட்டேன் என்கிற நிச்சயத்தைப் பெறும்வரை இக்கடிதத்தைப் பிரிக்கவேண்டாம் என்று மன்றாடுகிறேன்" என்று எழுதியிருந்தார்.—Ibid., vol. 1, pp. 148-149. (24)

பயணம் நெடுகிலும், தனது கோட்பாடுகள் எங்கும் பரவியிருப்பதுடன், அவைகள் ஆதரவுடன் போற்றப்பட்டிருப்பதையும் ஹஸ் கண்டார். அவரைச் சந்திப்பதற்கு மக்கள் நெருக்கியடித்துக்கொண்டு வந்திருந்தார்கள். சில பேரூர்களின் தெருக்களில் நீதிபதிகள் அவருடன் சேர்ந்து சென்றனர். (25)

ஹஸ் கான்ஸ்டன்ஸ் நகரத்திற்கு வந்ததும், அவருக்கு பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டது. பேரரசன் கொடுத்திருந்த பாதுகாப்பு நடத்துதல் கடிதத்துடன் அவருக்கு மேலும் பாதுகாப்பு கொடுக்கப்படுமென்ற பேப்புவின் நேரடியான வாக்குறுதியும் கொடுக்கப்பட்டது ஆனால் திரும்பத்திரும்பச்சொல்லப்பட்ட இந்தப் பாதுகாப்பு அறிவிப்புகளையெல்லாம்மீறி, போப், கர்தினால்களின் உத்தரவின்படி, அந்தச் சீர்திருத்தவாதி கைது செய்யப்பட்டு ஒரு அசுத்தமான சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் ரைன் நதியின் மீதிருந்த ஒரு பலமான கோட்டையில் அவர் வைக்கப்பட்டார்.—Ibid., vol. 1, p. 247. (26)

தனது துணிகரமான மீறுதலின் காரணமாக, அதிகமான ஆதாயத்தை அடையமுடியாத போப்பும் அதற்குப்பின் விரைவில் அதே இடத்தில் சிறைவைக்கப்பட்டார்! கொலைகளையும், சொல்லக்கூடாத மிகக் கேவலமான குற்றங்களைச் செய்தாரென்பது அந்த ஆலோசனைக்குழுவின் முன் மெய்ப்பிக்கப்பட்டது. எனவே, மூன்றடுக்கு கிரீடம் நீக்கப்பட்டு, அந்த போப்பு சிறைக்குள் தள்ளப்பட்டார். போப்புகளுக்கு எதிரானவர்களும் நீக்கப்பட்டு, வேறு ஒரு போப் நியமிக்கப்பட்டார். (27)

சீர்திருத்தம் வேண்டுமென்று குருமார்களின்மீது ஹஸ் சுட்டிக் காட்டியிருந்த குற்றங்களைவிட அதிகமான பெரும் குற்றங்களைச் செய்த போப்புவை குற்றவாளியாக தீர்த்த அதே ஆலோசனைக் குழு சீர்திருத்தவாதியை நசுக்குவதற்குப் புறப்பட்டது. ஹஸ்ஸின் சிறைவைப்பினால் பொஹிமியாவில்

சீற்றமெழுந்தது. வல்லமைமிக்க மேன்மக்கள் இந்தத் தவறான செயலுக்காக ஆலோசனைக்குழுவிற்குத் தங்களது உறுதியான எதிர்ப்பைத் தெரிவித்தனர். அவரது பாதுகாப்பு நடத்துதல் கடிதத்தை மீறியதில் எரிச்சலடைந்த பேரரசன் ஹஸ்ஸுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ஆனால் சீர்திருத்தவாதியின் எதிரிகள், தீயநோக்கமுடையவர்களாகவும், தீர்மானமுடையவர்களாகவும் இருந்தனர். அவர்கள் பேரரசனின் தவறான எண்ணங்களுக்கும், பயங்களுக்கும், சபையின்மீதுள்ள வைராக்கியத்திற்கும் வேண்டுகோள் விடுத்தனர். மதப்புரட்டருடனுள்ள விசுவாசத்தில் இல்லாமல் இருப்பதற்கு அவருக்கு முழுமையான சுதந்திரம் உண்டு என்றும், அந்த ஆலோசனைக்குழு பேரரசனுக்கு மேலானதாக இருந்து, அவரை அவரது வாக்குறுதியிலிருந்து விடுதலைசெய்ய, அதனால் முடியுமென்பதையும் மெய்பிக்க, மிக நீண்ட வாக்குவாதங்களைக் கொண்டுவந்து, பேரரசனை மேற்கொண்டது.—Jacques Lenfant, History of the Council of Constance, vol. 1, p. 516. (28)

இருட்டறையின் ஈரம், அசுத்தமான காற்று ஆகியவை கிட்டத்தட்ட சாகக்கூடிய ஒரு நோயை ஹஸ்ஸிற்குக் கொண்டுவந்தது. நோயாலும், சிறையினாலும் பலவீனமடைந்திருந்த ஹஸ், இறுதியில் ஆலோசனைக் குழுவிற்குக் கொண்டுவரப்பட்டார். தன்னுடைய கௌரவமும் நல்ல விசுவாசமும் அவரைக் காக்கும் என்று உறுதிமொழி கொடுத்திருந்த அதே பேரரசனின்முன், அவர் சங்கிலிகளினால் பிணைக்கப்பட்டவராக நின்றார். அவரைப்பற்றிய நீண்ட விசாரணையின்போது, அவர் சத்தியத்தை உறுதியாகத்தாங்கி, கூடிவந்திருந்த அரசு, சபை ஆகியவைகளின் கௌரவ மிக்கவர்களின் கூட்டத்தின்முன், அதன் சபைத்தலைமைக்கு எதிராகவும், ஊழல்களுக்கு எதிராகவும் தனது பக்திவிநயமும் விசுவாசமுமிக்க எதிர்ப்பைத் தெரிவித்தார். தனது கோட்பாட்டை மறுத்து அறிக்கைசெய்தல், அல்லது சாதல் ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்துகொள்ளும்படி அவரிடம் கேட்கப்பட்டபோது இரத்தசாட்சியாகுதல் என்ற முடிவை ஏற்று மரணமடைய அவர் ஒப்புக்கொண்டார். (29)

தேவ கிருபை அவரைத் தாங்கியது் அவரது இறுதித் தீர்ப்பிற்கு முன்னான அவரது பாடுகள் நிறைந்த வாரங்களில், பரலோக சமாதானம் அவரது ஆத்துமாவை நிரப்பியது. “சிறையில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட எனது கரத்துடன், நான் எனது மரணதண்டனை நிறைவேறும் என்பதை எதிர்பார்த்து, ஒரு சிநேகிதருக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இயேசு கிறிஸ்துவின் உதவியுடன் மறுபடியும் வருங்கால வாழ்க்கையின் சுவைமிக்க சமாதானத்தில் நாம் சந்திக்கும்போது, தேவன் என்மீது எப்படி

இரக்கம் காட்டியிருக்கிறார் என்பதையும், எனது சோதனைகளுக்கும், விசாரணைகளுக்கும் மத்தியிலும் அவர் எவ்வளவாக வல்லமையுடன் என்னைத் தாங்கி இருக்கிறார் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ளுவீர்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்.—Bonnechose, vol. 2, p. 67. (30)

மெய்யான விசுவாசத்தின் வெற்றியை, அவர் அவரது இருட்டறையின் சோகத்தின்முன் கண்டார். அவரது கனவில் சுவிசேஷத்தைப் பெற்றிருந்த பிரேக் நகர ஆலயத்திற்கு அவர் திரும்பி வந்து, அதன் சுவரில் வரைந்திருந்த கிறிஸ்துவின் ஓவியங்களை போப்புவும் அவரது பேராயர்களும் அழிப்பதைக் கண்டார். இக்காட்சியால் அவர் ஆழ்ந்த மனவேதனைக்குள்ளானார் ஆனால் மறுநாள் அநேக ஓவியர்கள் வந்து மிகத் தெளிவான வண்ணங்களில் முன்னிருந்த அளவுகளைவிடப் பெரிய அளவுகளில் கிறிஸ்துவின் உருவங்களை மேலும் அதிகமாக வரைந்ததைக் கண்டபோது, அவரது துயரம் மகிழ்ச்சியாக மாறிற்று. அவர்களது வேலை முடிந்ததும் அந்த ஓவியர்களைச் சூழ்ந்திருந்த கூட்டத்தினரை அவர்கள் நோக்கி, உற்சாகத்துடன் "இப்பொழுது போப்புமார்களும் பேராயர்களும் வரட்டும்! இனிமேல் அவர்களால் ஒருபோதும் அழிக்க இயலாது!" என்றனர். இந்தக் கனவைப்பற்றி சீர்திருத்தவாதி எடுத்துக்கூறும்போது: "கிறிஸ்துவின் உருவத்தை ஒருபோதும் சிதைக்க இயலாது என்பதில் நான் நிச்சயமுடையவனாக இருக்கிறேன்" என்று கூறினார். "அவர்கள் அதை அழிக்க விரும்பினார்கள் ஆனால் என்னைவிட மேலான அருளுரையாளர்களால், அது மனிதர்களின் இதயங்களில் புதிதாகப் பதிக்கப்படும்" என்றார்.—D'Aubigne, b. 1, ch. 6. (31)

கடைசியாக, அவர் ஆலோசனைக் குழுவின்முன் கொண்டுவரப் பட்டார். பேரரசன், பேரரசனின் இளவரசர்கள், அரசாங்க உதவியாளர்கள், கர்தினால்கள், பேராயர்கள், குருமார்கள் ஆகியோரின் கூட்டமாக இருந்த அந்த நாள் பார்வையாளர்களாக வந்திருந்தவர்களால் நிறைந்து, மிகவும் ஒளிமிக்க கூட்டமாக இருந்தது. மனசாட்சியின் விடுதலையை காத்துக்கொள்ளுவதற்காக நடந்த நீண்ட போராட்டத்தில், ஏற்பட உள்ள முதல் தியாகத்திற்குச் சாட்சியாக இருக்கும்படி, கிறிஸ்தவ ஆளுகையின் சகல இடங்களிலிருந்தும் மக்கள் வந்து கூடியிருந்தனர். (32)

அவரது இறுதிமுடிவை அறிவிக்கும்படியாக அவர் அழைக்கப்பட்ட போது தனது முடிவை மாற்ற முடியாது என்று ஹஸ் அறிவித்து, துளைக்கும் அவரது பார்வையால் தனது வாக்குறுதியான வார்த்தையை வெட்கமின்றி மீறின அரசனைப்பார்த்து: பொதுமக்களின் விசுவாசத்தின் கீழும், இங்குள்ள பேரரசனின் பாதுகாப்பிலும், தனது சுதந்திரமான மனவிருப்பத்தின்படி

ஆலோசனைக்குழுவின் முன்பாகத் தான் தோன்றியதாகவும், தனது முடிவை மாற்ற முடியாது என்றும் அறிவித்தார்.—Bonnechose, vol. 2, p. 84. அனைவருடைய கண்களும் தன்னை நோக்கித் திரும்பியபோது, சிக்மண்ட் அவர்களின் முகம் சிவந்தது. (33)

தீர்ப்பு அறிவிக்கப்பட்டு, கேவலப்படுத்துதல் என்ற சடங்கு ஆரம்பமானது! பேராயர்கள் ஆசாரிய உடையை அணியும் விதத்தில், அவர்களது கைதிக்கு உடை அணிவித்தனர். குருமாருக்குரிய அவரது உடையை அவர் நீக்கியபோது, அவமானத்தைக் காட்டும்படியாக நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஏரோதுக்குமுன் கொண்டுசெல்லப்பட்டபோது, ஒரு வெள்ளை அங்கி தரிப்பிக்கப்பட்டார் என்றார்.—Ibid., vol. 2, p. 86. பின்வாங்கும்படியாக அவர் மறுபடியும் கேட்டுக்கொள்ளப்பட்டபோது, மக்களைப் பார்த்து: நான் வேறு எந்த முகத்துடன் பரலோகத்தைப் பார்க்க வேண்டும்? நான் திரள்கூட்டமான மனிதர்களுக்கு எவ்விதமாகத் தூய்மையான சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேனோ அவர்களை என்னால் வேறு எவ்விதமாகப் பார்க்கமுடியும்? இல்லை! இப்பொழுது மரணத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் எனது பலவீனமான இந்த உடலைவிட, அவர்களின் மீட்பை மேலானதாகக் கருதுகிறேன் என்றார். அந்தச் சடங்கின் ஒவ்வொரு பகுதியாக ஒவ்வொரு பேராயரும் ஒரு சாபத்தைக் கூறினார்கள். இறுதியாக அவரது சிரசின்மீது பயங்கரமான பேய்களின் உருவங்கள் வரையப்பட்டு, மதப்புரட்டர்களின் தலைவன் என்று பொறிக்கப்பட்ட எழுத்துக்களுள்ள, ஒரு கிரீடத்தை(அல்லது பட்டயத்தை) அவரது சிரசில் சூட்டினார்கள். “எனக்காக முள்முடியைச் சுமந்த கர்த்தாவே! இந்த அவமானமிக்க கிரீடத்தை உமக்காக நான் அணிந்துகொள்ளுகிறேன்” என்று மகிழ்ச்சியுடன் கூறினார். (34)

அவர் இவ்விதமாக நடத்தப்பட்டபோது, குருமார்கள் அவரது ஆத்துமாவைச் சாத்தானுக்குப் படைத்தார்கள். ஹஸ் வானத்தை அண்ணாந்து பார்த்து, வியப்புடன்: “கர்த்தராகிய இயேசுவே, என்னுடைய ஆவியை உமது கரத்தில் வைக்கிறேன் ஏனெனில் நீர் என்னை மீட்டிருக்கிறீர்” என்று கூறினார்.—Wylie, b. 3, ch. 7. (35)

அதற்குப்பின்னர், மரணதண்டனை நிறைவேற்றப்படும்படியாக அவர் மதச்சார்பற்ற அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, மரணதண்டனை நிறைவேற்றப்படுமிடத்திற்கு நடத்தப்பட்டார். ஆயுதம்தாங்கிய நூற்றுக்கணக்கான மனிதர்களும், விலையுயர்ந்த ஆடைகளுடனுள்ள குருமார்களும், பேராயர்களும், கான்ஸ்டன்ஸ் நகர மக்களும் நிரம்பிய ஊர்வலம் சென்றது. அவர் கம்பத்துடன் கட்டப்பட்டபின்னர், நெருப்பு மூட்டுவதற்கு அனைத்தும் தயாரானபோது, அவரது தவறை மறுதலிக்கும்படியாக அவர்

மறுபடியும் எச்சரிக்கப்பட்டார். “எந்தத் தவறுகளை நான் மறுப்பேன்? நான் குற்றமில்லாதவன் என்பது எனக்குத் தெரியும்! நான் எழுதினவைகளும் பிரசங்கித்தவைகளுமாகிய அனைத்தும் பாவத்திலிருந்தும் அழிவிலிருந்தும் காக்கும்படிச் செய்யப்பட்டவை. எனவே நான் எழுதினவைகளையும், பிரசங்கித்த சத்தியத்தையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் என்னுடைய இரத்தத்தினால் உறுதிப்படுத்துகிறேன்” என்றார்.—Ibid., b. 3, ch. 7. (36)

அவரைச் சுற்றிலும் வைக்கப்பட்ட நெருப்புத்தழல்கள் உயர்ந்த போது. நித்தியமாக அவரது சத்தம் மௌனமடையும்வரை அவர், இயேசுவே! தாவீதின் குமாரனே! எனக்கு இரங்கும் என்று பாடத் துவங்கினார். (37)

அவரது வீரத்தைக் கண்டு அவரது எதிரிகளுங்கூடத் திகைப் படைந்தனர். ஹஸ் இரத்தசாட்சியானதுபற்றி வைராக்கியமிக்க போப்பு மார்க்கத்தைச் சேர்ந்த ஒருவர்: “ஹஸ்ஸும் அவருக்குப் பின் விரைவில் இறந்த ஜெரோமும், அவர்களது கடைசி மணிநேரம் வந்தபோது, இருவரும் ஒரே எண்ணமுடையவர்களாக இருந்தனர். அவர்கள் ஒரு திருமண விருந்துக்குச் செல்லுவதுபோல், தங்களை நெருப்புக்கு ஆயத்தம்செய்தனர். வேதனையைப்பற்றி அவர்கள் அழுது புலம்பவில்லை. நெருப்புத்தழல்கள் உயர்ந்தபோது, அவர்கள் தெய்வீகப்பாடல்களைப் பாடத்தொடங்கினார்கள். அவர்களது பாடல்களை, நெருப்பின் பயங்கரத்தால் நிறுத்தமுடியவில்லை” என்று விவரித்தார்.—Ibid., b. 3, ch. 7. (38)

ஹஸ்ஸின் உடல் எரிந்து சாம்பலானது அந்த இடத்திலிருந்து அந்தச் சாம்பலை அள்ளி, ரைன் நதியில் போட்டார்கள். அங்கிருந்து அது சமுத்திரத்திற்குச் சென்றது. அவர் பிரசங்கித்த சத்தியத்தை வேருடன் பிடுங்கிவிட்டோமென்று அவரை உபத்திரவப்படுத்தினவர்கள் வீணாகக் கற்பனை செய்துகொண்டார்கள். அன்று கடலில் கலந்த அந்தச் சாம்பல்கள், பூமியிலுள்ள எல்லா நாடுகளுக்கும் விதைக்கப்பட்ட விதைகளாக மாறி, அறியப்படாத நாடுகளில் சத்தியத்தின் சாட்சிகளான கனிகளை ஏராளமாகக் கொடுக்கும் என்பதை அவர்கள் கனவிலும் கருதவில்லை. கான்ஸ்டன்ஸ் ஆலோசனை அரங்கத்தில் பேசின அந்த சத்தமானது, வரும் காலம் நெடுகிலும் கேட்கும்படியான எதிரொலியை எழுப்பினது. ஹஸ் இப்போது இல்லை ஆனால் அவர் இறந்ததற்குக் காரணமான சத்தியம் ஒருபோதும் அழியவில்லை. அவரது விசுவாசத்தின் உதாரணமும், கான்ஸ்டனஸ் நகரமும், திரள்கூட்டமானவர்களை சித்திரவதை மரணம் ஆகியவைகளின் முன் சத்தியத்திற்காக உறுதியாக நிற்கும்படி தைரியப்படுத்தும். ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் துணிகரமான விசுவாச மீறுதல்களையும், கொடூரத்தையும் அவரிடம் நிறைவேற்றின மரணதண்டனை உலகம்

முழுவதற்கும் தெளிவான ஒரு காட்சியாக்கிவிட்டது. சத்தியத்தின் எதிரிகள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலேயே, அவர்கள் வீணாக அழிக்க எண்ணிய காரியத்தைத் தீவிரமாக்கிக்கொண்டு சென்றனர்! (39)

அப்படியிருந்தும் மற்றுமொரு சிதை கான்ஸ்டன்ஸில் ஏற்படுத்த வேண்டியதாக இருந்தது. மற்றொரு சாட்சியின் இரத்தம் சத்தியத்திற்காக சாட்சிபகர்ந்தாக வேண்டும். ஆலோசனைக்குழுவிற்கு ஹஸ் சென்றபோது, அவரை வழியனுப்பின ஜெரோம் அவரை தைரியத்துடனும் உறுதியுடனும் இருக்கும்படி ஊக்கப்படுத்தி, அவர் ஏதாவது ஆபத்துக்குள் வீழ்ந்துவிட்டால், அவரது உதவிக்கு தானே பறந்துவருவதாகக் கூறியிருந்தார். சீர்திருத்தவாதியின் சிறைவைப்பைக் கேட்டதும், விசுவாசமிக்க அவரது சீடரான ஜெரோம் தனது வாக்குறுதியை நிறைவேற்ற உடனடியாக ஆயத்தமானார். பாதுகாப்பு நடத்துதல் கடிதம் எதுவுமின்றி, அவர் ஒரே ஒரு துணையுடன் கான்ஸ்டன்ஸுக்கு புறப்பட்டார். அங்கு அவர் சென்றபோது, ஹஸ்ஸின் விடுதலைக்காக எதுவும் செய்யமுடியாதவராக தன்னையே ஆபத்துக்குள்ளாக்கிக்கொண்டார். அவர் அந்த நகரத்தைவிட்டு ஓடினார். ஆனால் வீட்டை நோக்கிச்சென்ற பயணத்தில் அவர் கைதுசெய்யப்பட்டு, சங்கிலிகளால் கட்டப்பட்டவராக, போர்வீரர்களின் கூட்டத்தின் கட்டுப்பாட்டில் திரும்பக் கொண்டுவரப்பட்டார். ஆலோசனைக்குழுவின் முன்பாக முதல் தடவையாக தோன்றி, அவர்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கெதிராக அவர் பதில்கூற முயன்றபோது, “அவனை சுட்டு எரித்துக்கொல்லுங்கள்! சுட்டெரித்துக் கொல்லுங்கள்!!” என்ற சத்தம் மேலிட்டது.—Bonnechose, vol. 1, p. 234. அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கும் விதத்தில் அவர் சங்கிலியால் கட்டப்பட்டு இருட்டறையில் வைக்கப்பட்டு, வெறும் ரொட்டியினாலும் தண்ணீரினாலும் மட்டுமே போஷிக்கப்பட்டார். (40)

சிலமாத சிறையிருப்பில் அவரைக் கொடூரமாக நடத்தியபின், அவரது உயிரைப் போக்கிவிடக்கூடிய ஒரு நோய் அவரைப் பயமுறுத்தியதை அவரது விரோதிகள் அறிந்து, அவர் அவர்களிடமிருந்து தப்பிவிடக்கூடும் என்று பயந்து, ஒரு வருட சிறையிருப்பிற்குப் பின்னர், அவரைச் சற்று மென்மையாக நடத்தினார்கள். போப்பு மார்க்கத்தினர் எதிர்பார்த்ததுபோல் ஹஸ்ஸின் மரணத்தினால் ஒன்றும் நிகழவில்லை. அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாதுகாப்பு நடத்துதல் கடிதத்தை மீறியது கோபம் எனும் பெரும் புயலை உண்டுபண்ணினதால், ஜெரோமை எரிப்பதைவிட, அவரைப் பின்வாங்கும்படி வற்புறுத்துவது ஆபத்தில்லாத மார்க்கமாக இருக்கும் என்று ஆலோசனைக்குழு எண்ணினது. அவர் அரங்கத்திற்குக் கொண்டுவரப்பட்டு, ஒன்று தனது கோட்பாட்டை மறுத்துக்கூறவேண்டும் அல்லது சிறையில்

சாகவேண்டும் என்று சொல்லப்பட்டது. அவர் அனுபவித்த கடுமையான பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவரது சிறையிருப்பின் ஆரம்பத்தில் மரணம் நேரிட்டிருந்தால், அது அவருக்குக் காட்டப்பட்ட இரக்கமாக இருந்திருக்கும். ஆனால் சிறைச்சாலை வாழ்க்கையில் உண்டான துன்பங்களின் நடுக்கத்தாலும், பீடித்த நோயினாலும், கவலையினாலும், நிச்சயமற்ற தன்மையினாலும், உண்டான சித்திரவதைகளினாலும், நண்பர் களிடமிருந்து பிரிக்கப்பட்டதினாலும், ஹஸ்ஸின் மரணத்தினால் உண்டான மனச்சோர்வினாலும், ஜெரோமின் தைரியம் அவரைவிட்டுச் சென்றது. அதனால் அவர் ஆலோசனைக்குழுவிற்குக் கீழ்ப்படிய இணங்கினார். கத்தோலிக்க விசுவாசத்தைப் பற்றிக்கொள்ளவும் விக்ளி஁ப், ஹஸ் ஆகியோர் போதித்த பரிசுத்தமான சத்தியங்கள் நீங்கலாக, மற்ற கோட்பாடுகளைக் குற்றப்படுத்தின ஆலோசனைக் குழுவின் நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளுவதாகவும் அவர் வாக்குறுதி கொடுத்தார்.—Ibid., vol. 2, p. 141. (41)

இந்த அவசர நிலைமையைச் சமாளிக்கும் முயற்சியில், ஜெரோம் அவரது மனசாட்சியின் குரலை மௌனமடையச்செய்து, தன்னை அழிவிலிருந்து காக்க முயன்றார். ஆனால் அவர் இருட்டறையின் தனிமையில், தான் செய்தது என்ன என்பதைத் தெளிவாகக் கண்டார். அவர் ஹஸ்ஸின் தைரியத்தையும் நேர்மையையும், தான் சத்தியத்தை மறுதலித்ததையும் ஒப்பிட்டு சிந்தித்துப் பார்த்தார். அவர் யாருக்கு ஊழியம்செய்வதாக வாக்குறுதி கொடுத்திருந்தாரோ, அந்த தெய்வீக எஜமானன் தனக்காக சிலுவையில் மரணத்தைச் சகித்ததையும் எண்ணிப்பார்த்தார். அவர் பின்வாங்கிப்போவதற்குமுன், அவரது எல்லாப் பாடுகளுக்கும் இடையில், தேவனுடைய ஆதரவு என்ற வாக்குத்தத்தத்தையும் ஆறுதலையும் கண்டிருந்தார். இப்போது குற்ற உணர்வினால் உண்டான வருத்தமும், சந்தேகமும் அவரது ஆத்துமாவை வதைத்தன. ரோமன் கத்தோலிக்க நிர்வாகத்துடன் சமாதானத்தைக் கண்டடையுமுன், அவர் மேலும் பல பின்வாங்குதலைச் செய்தாக வேண்டும் என்பதை அறிந்தார். அவர் நுழைந்துகொண்டிருக்கும் பாதை முழுமையான மருள விழுகையில்தான் சென்று முடிவடையும். ஒரு சொற்பகாலப் பாடுகளிலிருந்து தப்பிக்கும்படியாக, அவர் தனது கர்த்தரை மறுதலிக்கமாட்டார் என்ற அவரது தீர்மானம் உறுதியாக எடுக்கப்பட்டாகிவிட்டது. (42)

விரைவில் அவர் மறுபடியும் ஆலோசனைக்குழுவின் முன் கொண்டு வரப்பட்டார். அவரது பணிவு அவரது நீதிபதிகளைத் திருப்தப்படுத்தாம லிருந்தது. ஹஸ்ஸின் இரத்தத்தினால் தூண்டப்பட்ட அவர்களது இரத்தப் பசி புதிய இரைக்காகக் குரலெழுப்பிக்கொண்டிருந்தது. சத்தியம்பற்றிய ஒரு

நிபந்தனையற்ற சரணாகதியின் மூலமாகமட்டுமே, ஜெரோமினால் அவரது உயிரைக் காத்துக்கொள்ள முடியும். ஆனால் அவர் தமது விசுவாசத்தைப் புதுப்பித்து, உறுதிசெய்து, இரத்தசாட்சியான அவரது சகோதரரைப் பின்பற்றி, அக்கினிப் பிரவேசம் செய்யத் தீர்மானித்திருந்தார்! (43)

அவர், முன்பு மறுத்துச் சொன்னதைப் பின்னர் மறுத்து, சாகும் ஒரு மனிதனாக, தனது தற்காப்பை செயல்படுத்தத் தேவையான பக்தி விநயமான ஒரு வாய்ப்பை தேவையாகக் கருதியிருந்தார். அவரது பேச்சின் விளவுகளுக்குப் பயந்த குருமார்கள், அவருக்கு எதிராக, அவருக்குமுன் வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டின் உண்மையை அவர் ஒப்புக்கொள்ளவேண்டும் அல்லது மறுக்கவேண்டும் என்று வற்புறுத்தினர். அப்படிப்பட்ட கொடூரத்தையும் நீதியின்மையையும் ஜெரோம் எதிர்த்தார். “நீங்கள் என்னை முந்நூற்று நாற்பது நாட்கள் பயங்கரமான சிறையில் பூட்டிவைத்தீர்கள். அழுக்குகள், இரைச்சல்கள், துர்வாடை ஆகியவைகளுக்கிடையில் எனது தேவைகள் எதையும் நிறைவேற்றாமல் வைத்தீர்கள். அதன்பின், அழிவுக்குரிய விரோதிகளுக்குச் செவிசாய்த்து, நான் சொல்லுவதைக் கேட்பதற்குமறுத்து, நீங்கள் உங்கள் முன்பாக என்னைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். நீங்கள் மெய்யாகவே ஞானவான்களாகவும், உலகத்திற்கு ஒளியாகவும் இருந்தால், நீதிக்கு எதிராகப் பாவம் செய்யாமலிருப்பதற்கு கவனமுள்ளவர்களாக இருங்கள். என்னைப் பொறுத்தவரை நான் அழிவுக்குரிய ஒரு பலவீனன். எனது உயிர் அவ்வளவு முக்கியமானதல்ல. அநீதியான ஒரு தீர்ப்புச் செய்யாதீர்கள் என்று நான் கூறும்போது, உங்களுக்காகப் பேசுவதைவிட, எனக்காக நான் குறைவாகவே பேசுகிறேன்” என்றார்.—Ibid., vol. 2, pp. 146, 147. (44)

அவரது வேண்டுகோள் இறுதியாக அனுமதிக்கப்பட்டது. சத்தியத்துக்கு எதிராகவோ அல்லது அவரது எஜமானின் மதிப்பைக் குறைக்கும்படியாகவோ பேசாதபடி, தேவ ஆவியானவர் தனது எண்ணங்களையும் வார்த்தைகளையும் கட்டுப்படுத்தவேண்டுமென்று ஜெரோம் தனது நீதிபதிகளுக்கு முன் முழந்தாளில் நின்று ஜெபித்தார் “என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டுபோகப்படுவீர்கள். அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது: எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்” (மத்தேயு 10:18–20) என்று முதல்சீடர்களுக்குச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் அவருக்கு அந்த நாளில் நிறைவேறியது. ஜெரோமின் வார்த்தைகள் அவர்களது

எதிரிகளிடத்திலுங்கூட ஆச்சரியத்தையும், பாராட்டுதலையும் எழுப்பியது. ஒரு வருடம் முழுவதிலும் வாசிக்கவும் பார்க்கவுங்கூட முடியாதபடி பெரும் உடல் உபாதையுடனும் மனக்கலவரத்தோடும் இருட்டறையாகிய சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். அப்படியிருந்தும் அவரது வாதங்கள் மிகத் தெளிவுடனும், வல்லமையுடனும் அவர் வாசிப்பதற்கு இடையூரற்ற வாய்ப்பைப் பெற்றிருந்தார் என்பதுபோல முன்வைக்கப்பட்டன. அநீதி மிக்க நீதிபதிகளினால், குற்றவாளிகள் எனத் தீர்ப்புச்செய்யப்பட்ட பரிசுத்த மனிதர்களின் நீண்ட பட்டியலை, அவரது பேச்சைக் கேட்டிருந்தவர் களுக்குச் சுட்டிக்காட்டினார். கிட்டத்தட்ட ஒவ்வொரு தலை முறையிலும் தங்களது காலத்திலிருந்த மக்களை உயர்த்த வகைதேடினவர்கள் பழிக்கப்பட்டுப் புறம்பாக்கப்பட்டனர். ஆனால் பிற்காலத்தில் அவர்கள் சிறப்பிக்கப்படுதலுக்குத் தகுதியுடையவர்கள் என்று காட்டப்பட்டனர். ஒரு அநீதியான நீதிமன்றத்தில், கிறிஸ்துவுங்கூட குற்றவாளியென்று தீர்ப்புச்செய்யப்பட்டார். (45)

ஜெரோம் பின்வாங்கினபோது, ஹஸ் குற்றவாளி என்ற தீர்ப்பை சம்மதித்திருந்தார். ஆனால் இப்பொழுது அவர்: “எனக்கு ஹஸ்ஸைச் சிறுவயதிலிருந்தே தெரியும். நீதியும் பரிசுத்தமுமுள்ள ஒரு மிகச் சிறந்த மனிதராக அவர் இருந்தார். அவர் குற்றவாளியெனத் தீர்ப்புச் செய்யப்பட்டார். அவரது களங்கமின்மையுடன் நான் சாவதற்கு ஆயத்தமாக இருக்கிறேன். எனது எதிரிகளினாலும் பொய்ச்சாட்சிகளினாலும் ஆயத்தம்செய்யப்பட்டிருக்கும் வேதனைகளுக்கு முன்னிருந்தும் நான் பின்வாங்கமாட்டேன். ஒரு நாள்— எதினாலும் வஞ்சிக்கமுடியாத மாபெரும் தேவனுக்கு முன்பாக அவர்கள் செய்த வஞ்சகத்திற்குக் கணக்குக் கொடுக்கவேண்டியது வரும்” என்றார்.— Ibid., vol. 2, p. 151. (46)

“எனது இளம் வயதிலிருந்து நான் செய்த பாவங்களனைத்திலும் விக்ளி∴ப் அவர்களுக்கும் எனது ஆசிரியராயிருந்த இரத்தசாட்சியான ஜான் ஹஸ் அவர்களுக்கும் விதிக்கப்பட்ட அக்கிரமமான தண்டனையை அங்கீகரித்த, சாவுக்குரிய இடத்தில் நான் செய்த பாவத்தைப்போல் எனது மனதைப் பாரப்படுத்தி, மிகவும் வேதனை தரக்கூடிய பச்சாதாபத்தை உண்டுபண்ணினது வேறெதுவும் இல்லை என்று, சத்தியத்தை மறுத்தது பற்றிய சுய நிந்தனையை ஜெரோம் கூறினார். ஆம்! நான் அவமானத்தினால் உண்டான நடுக்கத்துடனும் சாவைப்பற்றிய பயத்தினாலும் அவர்களுடைய கோட்பாடுகளைப் பழித்துக்கூறினேன். எனவே, என்னுடைய பாவங்களை மன்னிக்கும்படி நான் சர்வவல்லமையுள்ள தேவனிடம், குறிப்பாக எனது வெறுக்கத்தக்க செயலுக்காக மன்னிப்புக்கேட்கிறேன். நீங்கள் விக்ளி∴பையும் ஹஸ்ஸையும் அவர்கள் சபையின் கோட்பாடுகளை அசைத்தார்கள் என்பதற்காக அல்ல, சாதாரணமான குருமார்களின் ஊழல்களையும்,

அவர்களது டாம்பீகத்தையும், அகந்தையையும், சகலவிதமான கெட்ட பழக்கங்களையும் சுட்டிக்காட்டி, அவர்களை நெறிகெட்டவர்களென்று குறிப்பிட்டதினால் பழித்தீர்கள். மறுக்க முடியாதவைகளாயிருந்த, அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்தையும் நான் எண்ணி, அவர்களைப்போலவே நானும் அறிவிக்கிறேன்" என்று ஜெரோம் அவரது நீதிபதிகளைச் சுட்டிக்காட்டிக் கூறினார். (47)

அவரது பேச்சு தடைசெய்யப்பட்டது. "இதற்கும் அதிகமான எந்தச் சான்று நமக்குத் தேவையாக உள்ளது? மிகவும் பிடிவாதமான இந்த மதப்புரட்டனை தூரக்கொண்டு செல்லுங்கள்" என்று குருமார் கள் கோபாவேசத்தால் நடுங்கிக்கொண்டு கூறினார்கள். (48)

இந்தப் புயலினால் அசைக்கப்படாத ஜெரோம்: "என்ன? நான் சாவதற்குப் பயப்படுகிறேன் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?" என்று உரக்கக் கேட்டார். "மரணத்தைவிட மிகப் பயங்கரமான இருட்டறையில் நீங்கள் என்னை ஒரு வருடம் வைத்திருந்தீர்கள். துருக்கியனையும், யூதனையும், அஞ்ஞானியையும்விட மிகக் கேவலமான விதத்தில் நீங்கள் என்னை நடத்தினீர்கள். நான் உயிருடன் இருக்கும்போதே எழுத்தின்படி என் மாம்சம் என் எலும்புகளிலிருந்து அழுகி விழுந்துவிட்டது. அப்படியிருந்தும் நான் அதைப்பற்றிக் குறைகூறவில்லை. ஏனெனில், புலம்பல் ஒரு பலமான மனிதனையும் இதயத்திலும், ஆவியிலும் நோயுள்ளவனாக்கிவிடும். ஆனால் ஒரு கிறிஸ்தவனுக்கு எதிராக இழைக்கப்படும் காட்டுமிராண்டித்தனமான செயல்களை என்னால் உங்களிடம் உணர்த்திக்காட்டாமலிருக்க முடியாது" என்றார்.—Ibid., vol. 2, pp. 151-153. (49)

மறுபடியும் கோபப் புயல் வீசியது. ஜெரோம் மிக விரைவாகச் சிறைக்குக் கொண்டுபோகப்பட்டார். அப்படியிருந்தும் அந்த அரங்கத்தில் இருந்த சிலரின்மீது அவரது வார்த்தைகள் ஆழ்ந்த உணர்த்துதலை உண்டுபண்ணினதால், அவர்கள் அவரது உயிரைக் காக்க விரும்பினார்கள். சபையின் மேன்மக்கள் அவரைச் சந்தித்து, ஆலோசனைக் குழுவிற்குக் கீழ்ப்படியும்படி அவரை வற்புறுத்தினார்கள். ரோமன் கத்தோலிக்க சபைக்கு எதிராக உள்ள அவரது எதிர்ப்பை மறுக்கும்போது, தரப்படவிருக்கும் பிரகாசமான வாய்ப்புகள் அவர்முன் வைக்கப்பட்டன் ஆனால் அவரது எஜமானனைப்போலவே, ஜெரோமும் உலகத்தின் மகிமையைத் தருவதாகச் சொல்லப்பட்டபோதும் அசையாமல் உறுதியாக இருந்தார். (50)

"நான் தவறில் இருக்கிறேன் என்பதைப் பரிசுத்த எழுத்துக்களில் இருந்து சுட்டிக்காட்டுங்கள் அப்போது நான் என் விசுவாசத்தை விட்டு விலகுகிறேன்" என்று அவர் கூறினார். (51)

“பரிசுத்த எழுத்துக்கள்!” அவரது சோதனைக்காரர்களில் ஒருவர், “அதனால் மட்டுமே அனைத்தும் நியாயம் தீர்க்கப்படவேண்டுமா? சபை விளக்காதவரை யாரால் அதைப் புரிந்துகொள்ளமுடியும்” என்றார்.(52)

“மனிதர்களின் சடங்காச்சாரங்கள் நமது மீட்பரின் சுவிசேஷத்தைவிட அதிகமான விசுவாச மதிப்பை உடையனவா? பவுல் நிருபம் எழுதினபோது, மனிதர்களின் சடங்காச்சாரங்களைக் கவனிக்காமல், வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்றே எச்சரித்தார்” என்றார் ஜெரோம். (53)

“மதப்புரட்டன்! நான் இவ்வளவு நேரம் வரை உனக்காகப் பரிந்து பேசினதற்காக மனம் வருந்துகிறேன், நீ பேயினால் நெருக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேன்” என்பதே பதிலாக இருந்தது.— Wylie, b. 3, ch. 10. (54)

குற்றவாளியெனத் தீர்க்கும் தண்டனை அவசரமாக அவருக்கு வழங்கப்பட்டது. ஹஸ் எங்கு உயிர்விட்டாரோ, அதே இடத்திற்கு, அவர் நடத்திச்செல்லப்பட்டார். அவரது முகம் மகிழ்ச்சியினாலும் சமாதானத் தினாலும் ஒளிவிட, அவர் மகிழ்ச்சியுடன் அவரது பாதையில் பாடிக் கொண்டே சென்றார். அவரது பார்வை கிறிஸ்துவின் மேலிருக்க, மரணம் அதன் பயங்கரத்தை இழந்திருந்தது. கொலைஞர்கள் நெருப்பு மூட்டும்படி அவருக்குப் பின்னால் அடியெடுத்து வைத்தபோது: “தைரியமாக முன்னுக்கு வாருங்கள்” என்று அந்த இரத்தசாட்சி அறைகூவி, “நெருப்பை என் முகத்திற்குமுன் பற்றவையுங்கள் நான் பயந்திருந்தால், இங்கு இருந்திருக்கமாட்டேன்” என்றார். (55)

“சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தகப்பனே! என்மீது இரக்கமாயிரும் எனது பாவங்களை மன்னியும் ஏனெனில் நான் உம்முடைய சத்தியத்தை எப்போதும் நேசிக்கிறேன் என்பதை நீர் அறிந்திருக்கிறீர்” என்பது தீயின் நாக்குகள் உயர்ந்தபொழுது, அவர் சொன்ன ஜெபமாக இருந்தது. அவருடைய சத்தம் நின்றது. ஆனால் அவருடைய உதடுகள் ஜெபத்தைச் சொல்லிக்கொண்டிருந்தது.—Bonnechose, vol. 1, p. 234. (56)

நெருப்பு அதன் வேலையைச் செய்துமுடித்தபோது, தரையின்மேல் தங்கியிருந்த அந்த இரத்தசாட்சியின் சாம்பல் சேகரிக்கப்பட்டு, ஹஸ்ஸின் சாம்பலைப்போலவே அதுவும் ரைன் நதியில் கொட்டப்பட்டது. இவ்வாறாக தேவனுடைய ஒளியைத் தாங்கினவர்கள் அழிந்தனர் ஆனால் அவர்கள் அறிவித்த சத்தியத்தின் ஒளி, வெளிச்சமாயிருந்த வீரர்களின் உதாரணம், அணைக்கப்படமுடியாததாக இருந்தது. அது, சூரியனை அதன் பாதையி லிருந்து திரும்பச்செய்து, காலை உதயமாவதையும் உலகின்மீது ஒளி வீசுவதையும் தடுக்கச்செய்யும் முயற்சியைப்போலிருந்தது! (57)

ஹஸ்ஸின் மரண தண்டனையின் நிறைவேறுதல் பொஹிமியாவில் பெரும் பயங்கரத்தை உண்டுபண்ணினது. குருமார்களின் தீய எண்ணங்களுக்கும், பேரரசனின் நம்பிக்கைத் துரோகத்திற்கும் அவர் இரையாக வீழ்ந்துபோனார் என்பது அந்த நாடுமுழுவதிலும் உணரப்பட்டது. அவர் சத்தியத்தின் விசுவாசமிக்க ஆசிரியர் என்றும், அவருக்கு மரண தண்டனையை விதித்த ஆலோசனைக்குழுவினர் கொலைக்குற்றம் செய்தவர்கள் என்றும் பழிசுமத்தப்பட்டனர். அதற்குமுன் ஒருபோதும் இல்லாததைவிட இப்போது அவரது கோட்பாடுகள் மக்களின் கவனத்தை ஈர்த்தது. போப்புவின் கட்டளைகளினால் விக்ளி.ஃபின் எழுத்துக்கள் குற்றமுள்ளவைகள் என்று தீக்கிரையாக்கப்பட்டன் ஆனால் இந்த அழிவிற்குத் தப்பினவைகள் மறைவிடங்களில் இருந்து வெளியில் கொண்டுவரப்பட்டு, வேதாகமத்துடன் சம்பந்தப்படுத்தி வாசிக்கப்பட்டது. மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய பகுதிகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. இவ்விதமாக, அநேகர் சீர்திருத்த விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கு வழிநடத்தப்பட்டனர். (58)

ஹஸ்ஸைக் கொலைசெய்தவர்களால் அவரது நோக்கத்தின் வெற்றியை சாட்சியாகக்கண்டு, அமைதியாக நிற்கமுடியவில்லை. அந்த இயக்கத்தை ஒடுக்குவதற்குப் போப்புவும் அரசனும் ஒருமிக்கவே, சிக்மண்டின் படையானது பொஹிமியாவின்மீது ஏவப்பட்டது. (59)

ஆனால் ஒரு விடுதலைவீரர்—இந்தப் போருக்குப்பின் முற்றிலும் கண்களை இழந்த ஒருவர்—அப்படியிருந்தும் அவரது காலத்திலிருந்த போர்த் தளபதிகளில் மிகச் சிறந்த தளபதியாக இருந்தவர்—சிஸ்கா (ஞுஜ�ளுமுயு) என்பவர் பொஹிமியர்களின் தலைவராக எழுப்பப்பட்டார். தேவனுடைய உதவியிலும், அவர்களது காரியத்திலிருந்த நீதியிலும் அவர்கள் நம்பிக்கைவைத்து, அவர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட மிகப் பலம்பொருந்திய படைகளை வென்றனர். பொஹிமியாவை ஆக்கிரமிக்க திரும்பத்திரும்ப பேரரசனால் அனுப்பப்பட்ட படைகள் அவமானத்துடன் திருப்பிவிடப்பட்டன. ஹஸ்ஸைட்டிகள் (ஹஸ்ஸை பின்பற்றுவோர்) மரணபயத்திற்கும் மேலாக எழும்பினதால், அவர்களுக்கு எதிராக எதனாலும் நிற்க இயலவில்லை. சில வருடங்களுக்குப்பின் சிஸ்கா இறந்துவிட்டார் ஆனால் அவரது இடத்தை அவருக்குச் சமமான தைரியமும் திறமையுமிக்கவரும், சில வகைகளில் அவரைவிட அதிகமான தகுதியையுடைய தலைவருமாயிருந்தவரான ப்ரோக்கோப்பியஸ் என்பவர் நிரப்பினார். (60)

குருடரான வீரர் இறந்துபோனதை அறிந்த பொஹிமியர்களின் எதிரிகள், அவர்கள் இழந்துபோன அனைத்தையும் மீட்டுக்கொள்ளச்

சாதகமான வாய்ப்புக் கிட்டியுள்ளதென எண்ணினர். இப்பொழுது ஹஸ்ஸைட்டிகளுக்கெதிராக ஒரு சிலுவைப் போரைப் பறைசாற்றி, ஒரு பெரும்படை மறுபடியும் பயங்கரமான தோல்வியை சந்திப்பதற்கென்றே ஏவப்பட்டது. மற்றொரு சிலுவைப்போர் பறைசாற்றப்பட்டது. ஐரோப்பாவில் போப்புவின் கீழிருந்த எல்லா நாடுகளிலிருந்தும் படைவீரர்கள் பணம் போர்க்கருவிகள் ஆகியவை சேகரிக்கப்பட்டன. போப்புமார்க்கத்தின் தரப்பில் அணிதிரண்ட திரள்கூட்டமானவர்கள் கடைசியாக மதப்புரட்டாளர்களான ஹஸ்ஸைட்டிகளுக்கு ஒரு முடிவு உண்டாக்கப்படும் என்ற வாக்குறுதி தந்தனர். வெற்றியின்மீது நம்பிக்கை வைத்து, ஒரு பெரும்படை பொஹிமியாவிற்குள் நுழைந்தது. அவர்களைப் புறமுதுகிடச்செய்ய மக்கள் ஒன்றுதிரண்டனர். இந்த இரு அணிகளுக்கும் இடையில் ஒரு ஆறு குறுக்காகச் செல்லும் இடம்வரை அவை ஒன்றையொன்று நெருங்கின. கூட்டணியில் இருந்தவர்கள் எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருந்தபோதிலும், ஹஸ்ஸைட்டிகளைத் தாக்குவதற்கு முன்னேறுவதற்குப்பதிலாக, அவர்கள் ஆடாமல் அசையாமல் அவர்களை மௌனமாகப் பார்த்துக்கொண்டு நின்றனர். — Wylie, b. 3, ch. 17. (61)

பின்பு அவர்களைத் திடீரென்று பயம் பற்றிக்கொண்டது. காணப் படாத ஒரு வல்லமையினால் சிதறடிக்கப்பட்டதுபோல், ஒரு தாக்குதலையும் நடத்தாமல், அந்த பலமிக்க படை சிதறிப்போனது. ஓடிப்போய்க் கொண்டிருந்தவர்களை ஹஸ்ஸைட் அணியினர் பின்தொடர்ந்து, அதிக எண்ணிக்கையானவர்களை வெட்டிச் சாய்த்தார்கள். வென்றவர்களுக்கு ஏராளமான கொள்ளைப்பொருட்கள் கிடைத்தன. எனவே அந்த யுத்தம் பொஹிமியர்களை நலிவடையச் செய்வதற்குப்பதிலாக செல்வந்தர்களாக்கியது. (62)

சில வருடங்களுக்குப்பின், ஒரு புதிய போப்புவின்கீழ் மேலும் ஓர் சிலுவைப்போர் தொடங்கப்பட்டது. முதலில் செய்யப்பட்டதுபோல், ஐரோப்பாவில் போப்புவின் ஆளுகையின் கீழிருந்த சகல நாடுகளிலிருந்தும் மனிதர்களும், பொருட்களும் சேகரிக்கப்பட்டன. ஆபத்தான இந்தப் பணியில் ஈடுபடுபவர்களுக்கு அளிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் மிகப் பெரியவையாக இருந்தன. ஒவ்வொரு சிலுவைப்போர் வீரனுக்கும் அவன் செய்திருந்த வெறுக்கத்தக்க பாவத்திற்கும் முழுப் பாவமன்னிப்புக் காப்பீடு செய்யப்பட்டது! இப்போரில் இறப்பவர்கள் அனைவருக்கும் பரலோகத்தில் பெரும் அன்பளிப்பு கிடைக்கும் என்றும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது! போரில் உயிர் பிழைப்பவர்களுக்கு போர்க்களத்திலேயே கௌரவமும் பெரும் அன்பளிப்பும் கிடைக்கும் என்றும் கூறப்பட்டது. மறுபடியும் ஒரு பெரும்படை திரட்டப்பட்டு, அது எல்லையைக்கடந்து, பொஹிமியாவிற்குள் நுழைந்தது. (63)

ஹஸ்ஸைட்டுகளின் படை, அவர்கள் முன் வீழ்வதுபோன்று பின்சென்றது. ஆக்கிரமிப்பாளர்கள் வெற்றியடைந்துவிட்டதாக எண்ணும் விதத்தில், தங்களுடைய நாட்டின் உட்புறத்திற்குள் வரும்வரை அது பின்வாங்கியது. கடைசியாக ப்ரோக்கோபியசின் படை நின்று, எதிரியின்மீது திரும்பிப் போரிட முன்சென்றது. சிலுவைப்போர்வீரர்கள் இப்பொழுது தங்களுடைய தவறுகளை உணர்ந்து, மேற்கொண்டு நிகழக்கூடிய ஆபத்தை எதிர்பார்த்து, தங்களது பாளையத்திலே இருந்தனர். ஹஸ்ஸை ட்டுகள் அவர்களது பார்வைக்குப் புலப்படாமல் இருந்தபோதே, அவர்கள் நெருங்கிவரும் சத்தத்தைக் கேட்டபோது, சிலுவைப்போர் வீரர்களிடையே ஒரு கலவரம் உண்டானது. இளவரசர்களும், தளபதிகளும், சாதாரண வீரர்களும் தங்களுடைய ஆயுதங்களை விட்டுவிட்டு, எல்லாத் திசைகளிலும் ஓடிப்போனார்கள். அந்தப் படையெடுப்பின் தலைவராயிருந்த போப்புவின் பிரதிநிதி, பயந்தும் சீர்குலைந்தும்போன அவருடைய படையை ஒன்றுதிரட்ட வீணாக முயன்றார். அவரது மிகமேலான முயற்சியின்போது, அவருங்கூட ஓடிப்போனவர்களின் அலைகளில் அடித்துச்செல்லப்பட்டார். அந்த முறியடிப்பு முழுமையானதாக இருந்தது. வெற்றியடைந்தவர்களின் கரங்களில் ஏராளமான கொள்ளைப் பொருட்கள் வீழ்ந்தன. (64)

இவ்வாறாக, இரண்டாவது தடவையாக ஐரோப்பாவின் சக்தி மிக்க நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட படை, வீரமிக்க ஒரு கூட்டத்தினர், போரில் பழக்கப்பட்டு போருக்கென்று ஆயுதமணிந்தவர்களாக இருந்த மனிதர்கள், இதுவரை ஒரு பலவீனமான சிறிய நாட்டு வீரர்களிடமிருந்து ஒரு அடிகூட வாங்காமல் ஓடிப்போனது, தெய்வீக வல்லமையின் ஒரு தோற்றமாகவே அங்கிருந்தது. படையெடுத்தவர்கள் இயற்கைக்கு மேற்பட்ட ஒரு வல்லமையின் பயங்கரத்தினால் தாக்கப்பட்டனர். பார்வோனின் அணியைச் செங்கடலில் ஆழ்த்தினவர், கிதியோனின் முந்நூறு வீரர்களுக்கு முன்னால் மீதியானியர்களின் சேனையை ஓடச்செய்தவர், அகந்தைமிக்க அசீரியனின் படையை ஒரே இரவில் விழச்செய்தவர், அவரது எதிரிகளின் வல்லமையைப் பலவீனப்பட்டுப்போகும்படிச்செய்யத் தமது கரத்தை நீட்டினார். “உனக்கு விரோதமாகப் பாளயமிறங்கினவனுடைய எலும்புகளைத் தேவன் சிதறப்பண்ணினபடியால், பயமில்லாத இடத்தில் மிகவும் பயந்தார்கள் தேவன் அவர்களை வெறுத்தபடியினால், நீ அவர்களை வெட்கப்படுத்தினாய்” (சங்கீதம் 53:5) என்ற வாக்குத்தத்தம் நிறைவேறியது! (65)

பலவந்தத்தினால் வெற்றியடையலாம் என எண்ணித் தோல்வி அடைந்த போப்புமார்க்கத் தலைவர்கள், இறுதியாக ராஜதந்திரத்தில் ஈடுபட்டனர். பொஹிமியர்களுக்கு மனசாட்சியின் சுதந்திரம் தருவதாகச்

சொல்லி, உண்மையில் ரோமன் கத்தோலிக்க வல்லமையிடம் அவர்களைக் காட்டிக்கொடுக்கும் ஒரு சமரச ஏற்பாடு செய்யப்பட்டது. வேதாகமத்தை சுதந்திரமாகப் போதித்தல் திருவிருந்து ஆராதனையில் அப்பமும் ரசமும் சபை முழுவதற்கும் கொடுக்கப்படவேண்டும் என்பதான உரிமை் ஆராதனையில் தாய்மொழியைப் பயன்படுத்துதல் மதச் சார்பற்ற எல்லா அமைப்புகளிலிருந்தும் குருமார்கள் நீக்கப்படவும் குற்றங்களைப் பொறுத்தமட்டில் குருமார்களையும் சாதாரண சபையின் அங்கத்தினர்களையும் ஒரேமாதிரி விசாரிக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்குத் தருதல் என்பதான இந்த நான்கு கோரிக்கைகளையும் ரோமன் கத்தோலிக்க சபையுடனுள்ள சமாதானத்திற்கான முன்நிபந்தனையாக வைத்தனர். கடைசியாக, போப்புமார்க்க அதிகாரிகள் இந்த நான்கு நிபந்தனைகளையும் ஒப்புக்கொள்ள முன்வந்தாலும், அவைகளுக்கான விளக்கம் தரும் உரிமையும் அதன் சரியான அர்த்தம்பற்றித் தீர்மானிப்பதும் சபையிடம்தான் இருக்கவேண்டும் என்றனர்.—Wylie, b. 3, ch. 18. இதன் அடிப்படையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, போரினால் வெற்றியடைய முடியாததை ரோமன் கத்தோலிக்க சபையானது பாசாங்கினாலும், ஏமாற்றுவதினாலும் அடைந்தது. ஏனெனில் வேதாகமத்திற்கு அது தன் சொந்த விளக்கத்தைக் கொடுத்ததுபோலவே, ஹஸ்ஸைட்டுகளின் கோரிக்கைகளுக்கும் சொந்தமாக, அதாவது அதன் சொந்த நோக்கங்களுக்குப் பொருந்துகிறமாதிரி—விளக்கத்தைக் திரித்துக் கொள்ள அதனால் முடிந்தது. (66)

போப்பு மார்க்கம் தங்களுடைய சுதந்திரத்திற்குத் துரோகம் இழைத்துவிட்டதைக் கண்ட பொஹிமிய மக்களின் ஒரு பெரும் கூட்டத்தினரால் அந்த ஒப்பந்தத்திற்கு இணங்கமுடியாமலாகிவிட்டது. அவர்களுக் குள்ளே சண்டையும் இரத்தம் சிந்துதலும் உண்டாவதற்கு வழிகோலிட பிரிவினையின்மேல் பிரிவினைகள் உண்டாயின. இந்தச் சண்டையில் ப்ரோக்கோப்பியஸ் விழவே, பொஹிமியாவின் சுதந்திரமும் அழிந்தது. (67)

ஹஸ், ஜெரோம் ஆகியோரைக் காட்டிக்கொடுத்த சிகிஸ்மண்ட இப்போது பொஹிமியாவின் அரசனானான். பொஹிமியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பேன் என்று சொல்லி எடுத்துக்கொண்ட பதவிப் பிரமாணத்தை மதிக்காமல், போப்பு மார்க்கத்தை ஸ்தாபிக்க அவன் புறப்பட்டான். ரோமன் கத்தோலிக்க நிர்வாகத்தின்கீழ் சேவை செய்ததினால் அவனுக்கு நன்மை எதுவும் உண்டாகவில்லை. அவனது வாழ்க்கையானது வேலைகளிலும் ஆபத்துக்களிலுமாக இருபது வருடங்கள் கழிந்தது. நீண்டகாலப் பயனற்ற போராட்டத்தினால் அவனது படைகள் வீணாயின் அவனது செல்வமும் கரைந்துபோனது. அவனது ஒருவருட ஆட்சியில் உள்நாட்டுக்கலகம்

உச்சமடைந்தது. மிக மோசமான அரசன் என்று பின்வரும் சந்ததியார் அழைக்குமளவிற்கு அவப்பெயரைச் சுமந்தவனாக மரித்தான். (68)

கொந்தளிப்புகள், சண்டைகள், இரத்தம் சிந்துதல் ஆகியவை களைப்படையச் செய்தன. மறுபடியும் அயல்நாட்டுப் படைகள் பொஹிமியாவின் மீது படையெடுத்து உள்ளே வந்தன. நாட்டைச் சிதறடிக்கும் உள்நாட்டுச் சமயப் பிரிவினைகள் தொடர்ந்தன. சுவிசேஷத்திற்கு விசுவாசமாக இருந்தவர்கள் இரத்தம்சிந்தும் உபத்திரவத்திற்கு உள்ளானார்கள். (69)

அவர்களது முன்னைய சகோதரர்கள் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்துடன் இணைய முற்பட்டு, அதன் தவறுகளைத் தங்களுக்குள் கொண்டுவர, பூர்வீக விசுவாசத்தைப் பற்றிக்கொண்டிருந்தவர்கள் தங்களை ஒரு தனித்த சபையாக "ஐக்கிய சகோதரர்கள்" என்று அழைத்துக்கொண்டனர். இச்செயலானது எல்லா வகுப்பினரிடமிருந்தும் அவர்கள்மீது சாபத்தைக் கொண்டுவந்தது. அப்படியிருந்தும் இந்த உறுதியானது அசையாததாகவிருந்தது. அவர்கள் காடுகளுக்கும், குகைகளுக்கும் புகலிடம் தேடிச்செல்ல வற்புறுத்தப்பட்டபோதிலும், தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கவும் தேவனை ஆராதிப்பதில் ஒற்றுமைப்படவும் ஐக்கியப்பட்டார்கள். (70)

இரகசியமாகப் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்ட ஊழியக்காரர்களின் வழியாக, சத்தியத்தை அறிவிக்கக்கூடிய, தங்களைப் போன்ற நோக்கமுடையவர்கள், உபத்திரவத்தினிமித்தம் அங்குமிங்குமாக, சிலர் இந்த நகரத்திலும் சிலர் அந்த நகரத்திலும் பிரிந்திருந்தனர் என்பதையும், வேதவாக்கியங்களை அஸ்திவாரமாகக் கொண்டு, அதன்மீது நின்றிருந்த ஒரு பழங்கால சபை, ஆல்ப்ஸ் மலைகளுக்கிடையில் இருக்கிறது என்பதையும் அறிந்துகொண்டனர்.—Wylie, b. 3, ch. 19. இந்தச்செய்தி மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு வால்டென்னியக் கிறிஸ்தவர்களுடன் கடிதத்தொடர்பு ஆரம்பிக்கப்பட்டது. (71)

கடுமையான இருளிலிருந்து விடியலை எதிர்நோக்கி கண்களை அடிவானத்திற்குத் திருப்பி கவனித்திருப்பவர்களைப்போல, உபத்திரவம் என்னும் இருளில் இருந்த பொஹிமியர்கள் சுவிசேஷத்திற்காகக் காத்து இருந்தனர். தீயநாட்கள் அவர்களது பங்காக இருந்தது. ஆனால் முதலில் ஹஸ்ஸும் அடுத்தபடியாக ஜெரோமும்: "காலை விடியுமுன் ஒரு நூற்றாண்டு சுழலும்" என்று திரும்பத்திரும்பச் சொன்ன வார்த்தைகளை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். "நான் மரிக்கப்போகிறேன், தேவன் உங்களை நிச்சயமாகச் சந்தித்து, அவர் உங்களை வெளியே கொண்டுவருவார்" என்று யோசேப்பு அடிமைத்தனத்திலிருந்தவர்களுக்குச் சொல்லிய

வார்த்தைகள் ஹஸ்ஸைட்டுகளுக்குச் (ஹஸ்ஸைப் பின்பற்றியவர்களுக்கு) சொல்லப்பட்டவையாக இருந்தன.—Wylie, b. 3, ch. 19. ஏறத்தாழ 1470 –ல் உபத்திரவம் நின்றது. ஒப்பிடத்தக்கவகையில் முன்னேற்றம் சிறந்துவந்தது. அந்த நூற்றாண்டின் முடிவுவந்தபோது, “ஐக்கிய சகோதரர்களின் இருநூறு சபைகள் பொஹிமியாவிலும், மொரேஷியாவிலும் காணப்பட்டன.—Ezra Hall Gillett, Life and Times of John Huss, vol. 2, p. 570. அழிவுக்குரிய கோபத்திற்கும், நெருப்பிற்கும், வாளுக்கும் தப்பி, ஹஸ் முன்சொல்லியிருந்த அந்தக் காலையைக் காணும்படி அனுமதிக்கப்பட்டிருந்த அந்த மீதியான சபை அவ்வளவு நல்லதாக இருந்தது!— Wylie, b. 3, ch. 19. (72) ★

# 7

# போப்புவை எதிர்த்து போர்முரசு கொட்டியவர்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 120–144)**

ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் இருளிலிருந்து, சபையைத் தூய்மையான விசுவாசம் என்னும் வெளிச்சத்திற்குள் அழைத்தவர்களில் மிக முன்னணியில் நின்றவர் **மார்ட்டின் லுத்தர்.** வைராக்கியம், உறுதி, பக்தி ஆகியவைகளுடன், தேவனைப்பற்றிய பயமேயன்றி வேறு பயம் எதையும் அறியாதவராகவும், பரிசுத்த வேதாகமத்தையன்றி வேறு ஒன்றையும், தமது சமய விசுவாசத்தின் அஸ்திவாரமாக ஏற்றுக்கொள்ளாதவராகவும், அவரது காலத்தில் இருந்தவருள் சிறந்த ஒருவராகவும் லுத்தர் இருந்தார். சபையின் சீர்திருத்தத்திற்காகவும் உலகம் அறிவினால் ஒளியை அடையவேண்டும் என்பதற்காகவும் அந்தப் பெரும்பணியை தேவன் அவர்மூலமாக நிறைவேற்றினார். (1)

சுவிசேஷத்தின் முதல் முன்னோடிகளைப் போல், லுத்தரும் ஏழ்மை யான நிலையிலிருந்து உயர்ந்தார். அவர் ஒரு தாழ்மையான விசுவாசக் குடும்பத்தில் பிறந்தார். அவரது இளமைக் காலம் அதில் கழிந்தது. அவரது தந்தை ஒரு சுரங்கத் தொழிலாளியாகப் பணிசெய்து, லுத்தரின் கல்விச் செலவுக்கானவைகளை கொடுத்துவந்தார். அவர் தன்னுடைய மகனை ஒரு வழக்கறிஞராக்க விரும்பியிருந்தார். ஆனால் நூற்றாண்டுகளினூடே மெதுவாக எழுந்துகொண்டிருந்த தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகின்ற பணியில், லுத்தரை ஈடுபடுத்தும் நோக்கம் உடையவராக தேவன் இருந்தார். துன்பங்களும், தனிமையும், கடுமையான ஒழுக்கமும், கடின உழைப்பும் லுத்தரின் முக்கியமான ஊழியத்திற்காக, எல்லையில்லா ஞானம் படைத்தவர் ஏற்படுத்தின பள்ளியின் பாடங்களாக இருந்தன. (2)

லுத்தரின் தந்தை மிகுந்த செயலாக்கமுடைய மனோபாவம் உடையவராகவும், கண்ணியம், தீர்மானம், நேர்மை ஆகிய பண்புகளை உடையவராகவும் இருந்தார். விளைவுகள் எதுவாக இருந்தாலும் சரி, கொடுக்கப்பட்ட பணியைச்செய்யும் கடமையில், அவர் உண்மையுள்ளவராக இருந்தார். அவரது மேலான நல்ல உணர்வு, தனிமையாக இருக்க வேண்டும் என்ற மடாலய அமைப்பின்மீது நம்பிக்கை இல்லாததாக இருந்தது. அந்த குருமார்களின் மடத்தில் லுத்தர் அவரது அனுமதி இன்றிச் சேர்ந்தது, அவருக்கு மிகுந்த அதிர்ச்சியை உண்டுபண்ணியது. இந்த நிலைமையிலிருந்து தனது மகனுடன் ஒப்புரவாக அவருக்கு இரண்டு வருடங்கள் தேவைப்பட்டன. அப்படியிருந்தும் அவரது கருத்து மாறாததாகவே இருந்தது. (3)

லுத்தரின் பெற்றோர்கள் அவர்களது பிள்ளைகள் நன்முறையில் கற்றுத்தேறவேண்டும் என்பதில் மிகுந்த அக்கரை செலுத்தினார்கள். தேவனை அறிகிற அறிவிலும், கிறிஸ்தவப் பண்புகளை அடைவதிலும் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் போதனை செய்துவந்தனர். அவரது மகன் கர்த்தரின் பெயரை தன் நினைவில் வைத்து, அவருடைய சத்தியத்தை முன்னேற்றமடையச் செய்வதில் உதவக்கூடியவனாக இருக்கவேண்டும் என்று அந்தத் தந்தையால் ஏறெடுக்கப்பட்ட ஜெபம், அவரது மகன் கேட்க உயர எழுந்தது. இந்தப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நுண்ணறிவு, சன்மார்க்கநெறி ஆகியவைகளை அவர்களது வாழ்க்கையின் அன்றாடப் பணிகளினூடே அனுபவித்து, முன்னேறும்படியான அனுகூலங்களை வாஞ்சையுடன் அனுமதித்தனர். தெய்வபக்தியும் பயன்படும் தன்மையுமிக்க ஒரு வாழ்க்கைக்கு தங்களுடைய பிள்ளைகளை ஆயத்தப்படுத்தும் அவர்களது விடாமுயற்சியானது மிகுந்த அக்கரை உள்ளதாக இருந்தது. பண்பின் உறுதியின் பலத்தினால், சில சமயங்களில் அவர்கள் கடுமையைக் காட்டியிருந்தனர் ஆனால் அந்த சீர்திருத்தவாதி சில காரியங்களில் அவரது பெற்றோர்கள் தவறி உள்ளனர் என்பதை உணர்ந்தபோதிலும், அவர்களது ஒழுங்கு நடவடிக்கையைப் பழிக்காமல், அதை அங்கீகரித்திருந்தார். (4)

மிகவும் சிறியவயதில் பள்ளியில் கடினமாகவும் முரட்டுத்தனமாகவும் நடத்தப்பட்டார் லுத்தர். அவரது பெற்றோரின் வறுமை மிக அதிகமாக இருந்ததினால், அவர் வீட்டிலிருந்து பேரூரில் உள்ள பள்ளிக்குச் சென்றபோது, தனது உணவிற்காக வீடுகள்தோறும் முன்நின்று பாடவேண்டியதாக இருந்தது. அப்படியிருந்தும் அவர் அவ்வப்போது பசியால் வாடினார். அக் காலத்தில் மதத்தில் இருந்த துயரமிக்க மூடநம்பிக்கைகள் அவரைப் பயத்தால் நிரப்பியது. அன்புமிக்க பரலோகத் தந்தை என்பதைவிட, கொடுமைமிக்க, பயங்கரமான, வேண்டுகோளிற்குச் செவிசாய்க்காத

நீதிபதியாக தேவனை அவர் கண்டார். இருள்மிக்க எதிர்காலத்தை நடுக்கத்துடன்நோக்கி, துன்பம்மிக்க இதயத்துடன், இரவுவேளைகளில் தரையில் படுத்திருப்பார். அப்படியிருந்தும் அவரது ஆத்துமாவைக் கவர்ந்த, சன்மார்க்கமும் நுண்ணறிவும் நிறைந்த நெறிகளின் தரத்தைக் காப்பதில், மிகவும் அதைரியமூட்டக்கூடிய அநேக சமயங்களில், அவர் தீர்மானம் உடையவராக முன்நோக்கிச் சென்றிருந்தார். (5)

அவர் அறிவுத் தாகமுடையவராக இருந்தார். அவரது ஆர்வ மும் நடைமுறையின்மீதுள்ள வாஞ்சைமிக்க மனித சுபாவமும், வெளித் தோற்றமும் மேலெழுந்தபடியாக இருப்பவைகளைவிட, உறுதியும் பயன் உள்ளவைகளையுமே நாடுபவையாக இருந்தன. தனது பதினெட்டாம் வயதில், எர்ஃபர்ட் பல்கலைப்கழகத்தில் அவர் சேர்ந்தபோது, அவரது ஆரம்ப காலத்திலிருந்ததைவிட, தற்போதைய நிலைமை அதிக சாதகமாகவும் வசதிகள்மிக்கதாகவும் இருந்தது. அவரது பெற்றோர்கள் தங்களது கடுமையான முயற்சியினால், அவருக்குத் தேவையான எல்லாவிதமான உதவிகளையும் செய்யக்கூடிய நிலைமையில் இருந்தார்கள். அவரது அறிவுமிக்க நண்பர்களின் செல்வாக்கானது, அவரது கடந்தகாலப் பயிற்சி யின்போதிருந்த துயரங்களின் விளைவைக் குறைப்பதாக அமைந்தன. மிகச் சிறந்த ஆசிரியர்களின் நூல்களைக் கற்பதிலும், அவர்களது வலிமைமிக்க சிந்தனைகளைத் தனக்குள் சேகரிப்பதிலும், ஞானிகளின் ஞானத்தைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுவதிலும் அவர் ஈடுபட்டார். அவரது கடந்தகால ஆசிரியர்களால் அவர் கடுமையான ஒழுக்கத்தைக் கடைபிடிக்கும்படி நடத்தப்பட்டிருந்தபோதும், சிறப்பானவராக விளங்கியதன் அனுகூலங்களினால், அவரது மனம் விரைவாக முன்னேறியது. மிகப் பிரமாதமான ஞாபகசக்தி, உயிரோட்டமுள்ள கற்பனைகள், பலமிக்க பகுத்தறியும் திறன், களைப்பற்ற வகையில் அவைகளைச் செயல்படுத்துதல், ஆகியவை அவரது சகமாணவர்களுக்கு மத்தியில் அவரை முன்னணியில், முதல்வராக இருக்கச்செய்தது. அறிவின்பாலமைந்த ஒழுக்கம், அவரது புரிந்துகொள்ளும் திறனைக் கனியச்செய்து, எண்ணத்தைச் செயலாக்கமும் தெளிவாக உணர்ந்துகொள்ளக்கூடியதாகவும் செய்து, வாழ்க்கையின் எதிர்காலப் போராட்டங்களுக்கு அவரை ஆயத்தம் செய்தது. (6)

கர்த்தருக்குப் பயப்படுதல் அவரது இதயத்தில் இருந்து, காரியங்களைச் செயல்படுத்துவதில் உறுதியுள்ளவராகவும், தேவனுக்கு முன்பாக மிகுந்த தாழ்மையுள்ளவராகவும் இருக்க வழிகோலியது. தெய்வீக உதவியில் சார்ந்திருக்கும் உணர்வினை உடையவராயிருக்க அவர் தவறவில்லை. அவரது இதயம் தேவ நடத்துதலுக்காகவும் தாங்குதலுக்காகவும் தொடர்ந்து

விண்ணப்பங்களை ஏறெடுப்பதாக இருந்தது. நன்றாக ஜெபம் செய்வது மேலான கல்வியின் அரைப்பகுதி (பாதிப் பகுதிக்கும் அதிகமான கல்வி) என்று அடிக்கடி அவர் கூறுவதுண்டு.—D'Aubigne, b. 2, ch. 2. (7)

பல்கலைக்கழக நூலகத்திலிருந்த புத்தகங்களை ஒருநாள் லுத்தர் சோதித்துக்கொண்டிருந்தபோது, அவர் இதற்குமுன்னர் ஒருபோதும் கண்டிராத ஒரு லத்தீன் வேதாகமத்தைக் கண்டார். அப்படி ஒரு புத்தகம் இருக்கிறது என்பதைப்பற்றிய அறிவே இல்லாதவராக அவர் இருந்தார். சுவிசேஷங்களின் பகுதிகளும், நிருபங்களின் பகுதிகளும், பொது ஆராதனை வேளைகளில் மக்களுக்கு வாசிக்கப்படுவதை கேட்டிருந்த அவர், அவைகள்தான் முழு வேதாகமம் என எண்ணியிருந்தார். இப்பொழுது முதல் தடவையாக, தேவனுடைய வார்த்தைகள் முழுவதையும் அவர் கண்டார். திகிலும் வியப்பும் கலந்தவராக, அவர் அதன் பரிசுத்த பக்கங்களைத் திருப்பினார். விரைந்த நாடியுடனும் துடிக்கும் இதயத்துடனும் ஜீவ வார்த்தைகளை அவருக்கென்று வாசித்து, "ஓ! தேவன்! இப்படிப்பட்ட ஒரு புத்தகத்தை எனக்குச் சொந்தமாகக் கொடுத்தால்" என்று அதன் பக்கங்களை வாசிப்பதை நிறுத்தி, அவ்வப்போது கூறினார்.—Ibid., b. 2, ch. 2. அவருக்கருகில், பரலோகத்தின் தூதர்கள் இருக்க, புரிந்துகொள்ளுவதற்கென்று தேவ சிங்காசனத்திலிருந்து புறப்பட்ட ஒளி, அவர் அறிந்து கொள்ளுவதற்காக தேவ சத்தியங்களின் பொக்கிஷங்களை வெளிக்காட்டின. தேவனுக்கு எதிராகச் செயல்பட அவர் எப்போதும் பயந்திருந்தார். ஆனால் இப்பொழுதோ தான் ஒரு பாவி என்கிற உணர்வு இதற்குமுன் ஒருபோதும் இல்லாதவிதமாக ஆழமாக அவரைப் பற்றிக்கொண்டது. (8)

பாவத்திலிருந்து விடுதலையையும், தேவனுடைய சமாதானத்தையும் அடைய வேண்டும் என்ற அக்கரையுள்ள வாஞ்சை அவரை மடாலய வாழ்க்கையை மேற்கொள்ள வழிநடத்தினது. இங்கு மிகக் கீழ்த்தரமான பணிகளைச் செய்யவும், தெருத்தெருவாகப் பிச்சை எடுக்கவும் அவர் நடத்தப்பட்டார். மரியாதையையும் பாராட்டுதலையும் மிக வாஞ்சையுடன் விரும்புகின்ற வயதில், அப்போது அவர் இருந்திருந்தார். இந்தக் கீழ்த்தரமான வேலை அவரது இயல்பான உணர்வுகளை சிறுமைப்படுத்துவதாக இருந்தது. ஆனால் தமது பாவங்களுக்கு இவை அவசியம் என்று நம்பி, அந்த இழிவை அவர் பொறுமையுடன் சகித்துக்கொண்டார். (9)

அவரது பணிகளுக்கிடையில், அவருக்கு கிடைக்கக்கூடிய ஒவ்வொரு விநாடியையும் வேத ஆராய்ச்சிக்காகச் செலவிட்டார். நித்திரை நேரத்தை குறைத்தும், உணவருந்துவதற்காகச் செலவுசெய்த நேரத்தையுங்கூட குறைத்து, வேதத்தை ஆராய்வதில் ஈடுபட்டார். மற்றெல்லாவற்றையும்விட,

தேவனுடைய வார்த்தைகளை ஆராய்வதில் அவர் மகிழ்ச்சியடைந்தார். அந்த மடாலயச் சுவரின்மீது ஒரு வேதாகமம் சங்கிலியால் பிணைக்கப் பட்டிருப்பதைக்கண்டு, அவர் அடிக்கடி அந்த இடத்திற்குச் செல்லுவார். அவரது பாவத்தைப்பற்றிய உணர்வு ஆழமானபோது தனது சொந்தக் கிரியைகளினால் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் அடைவதற்கு வகைதேடினார். மடாலய வாழ்க்கை, எவைகளிலிருந்து விடுதலையைக் கொண்டுவரவில்லையோ, அந்தத் தீய தன்மையைக் கீழடக்கும் முயற்சியில், உபவாசமிருந்து, உறங்காமலிருந்து, தன்னைத்தானே சவுக்கினால் அடித்து, கடினமான வாழ்க்கையை நடத்தினார். தேவனுக்குமுன்பாக அங்கீகரிக்கப்பட்டவராக நிற்கத் தகுதியடையும்படியான இதயத் தூய்மையை அடைந்துகொள்ளுவதற்கான எந்தத் தியாகத்தையும் செய்வதிலிருந்து, அவர் பின்வாங்கவில்லை. எனது நியமத்திலிருந்த ஒழுங்குகளை என்னால் வெளியில் சொல்ல முடிவதைவிட, அதிகக் கடுமையாக நான் பின்பற்றினேன். நான் உண்மையிலேயே ஒருபக்தியுள்ள சன்னியாசியாக இருந்தேன் என்று அவர் பின்னான காலத்தில் கூறினார். கிரியைகளினால், ஒரு சன்னியாசியால் பரலோகத்தை அடைய முடியுமானால், நிச்சயமாக நான் அதற்குத் தகுதி உடையவனாக இருக்கிறேன். நான் இன்னும் சில நாட்கள் அந்தக் கோட்பாட்டில் தேர்ந்திருந்தால், சாகும்வரை அவைகளைத் தொடர்ந்திருப்பேன்.—Ibid., b. 2, ch. 3. வேதனைமிக்க இந்தக் கிரமங்களின் விளைவாக, அவர் பலவீனமடைந்து அடிக்கடி மயக்கமடைந்து, அவைகளின் விளைவுகளிலிருந்து வாழ்க்கை முழுவதிலும் விடுதலை அடையமுடியாதவராக இருந்தார். இந்த முயற்சிகள் அனைத்தினாலும் அவரது ஆத்தும பாரத்திலிருந்து அவருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. கடைசியாக, அவர் நம்பிக்கை இழப்பின் ஓரத்திற்கே விரட்டப்பட்டார். (10)

எல்லாவற்றையும் இழந்துவிட்டதுபோல் லூத்தருக்குத் தோன்றின சமயத்தில், தேவன் அவருக்கு நண்பனாகவும் உதவிக்காரனாகவும் இருக்கும்படி ஒருவரை எழுப்பினார். **ஸ்டாபிட்ஸ்** என்னும் அந்த பக்திமிக்கவர் தேவனுடைய வார்த்தைக்கு லூத்தரின் மனதைத் திறந்து, தன்னைத்தான் பார்ப்பதை விட்டுவிட்டு, தேவப்பிரமாணங்களுக்கு விரோதமாகச் செய்யப் பட்ட பாவங்களுக்காக நிகழவுள்ள நித்தியத் தண்டனையைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பதையும்விட்டுவிட்டு, அவரது பாவங்களை மன்னிக்கின்ற இயேசுவைப் பார்க்கும்படி நடத்தினார். "உங்களுடைய பாவங்களுக்காக உங்களை நீங்கள் வதைத்துக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு, மீட்பரின் கரத்தில் உங்களை வைத்துவிடுங்கள்" என்றார். "அவரது வாழ்க்கை யிலுள்ள நீதியையும், அவரது மரணம் கொண்டுவருகிற மீட்பையும், அவரையும் நம்புங்கள். தேவகுமாரன் சொல்லுவதைக் கவனியுங்கள்.

தெய்வீக இரட்சிப்பின் நிச்சயம் உங்களுக்குக் கிடைப்பதற்காகவே அவர் மனிதனானார். முதலில் உங்களை நேசித்த அவரை நேசியுங்கள்" என்று அந்த இரக்கத்தின் தூதுவன் பேசினார்.—Ibid., b. 2, ch. 4. இந்த வார்த்தைகள் லுத்தரின் மனதில் ஆழமாகப் பதிந்தன. நெடுநாட்களாகப் போற்றப்பட்டிருந்த பாவங்களுக்கெதிரான போராட்டங்களைத் தாண்டி, சத்தியத்தைப் பற்றிக்கொள்ள அவரால் முடிந்தது. அதனால் இதுவரைத் துன்பப்பட்டுக் கொண்டிருந்த அவரது ஆத்துமாவிற்குச் சமாதானம் வந்தது. (11)

லுத்தர் குருவாக அபிஷேகம்செய்யப்பட்ட பின்னர், மடாலயத்தின் தனிமையான அறையிலிருந்த அவர் விட்டன்பர்க் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராயிருக்கும்படி அழைக்கப்பட்டார். இங்கு அவர் வேதாகமத்தை அதன் மூலமொழியில் படிப்பதில் தன்னை ஈடுபடுத்தினார். அவர் வேதாகமப் புத்தகத்தைத் திறந்து, சங்கீதங்கள், சுவிசேஷங்கள், நிருபங்கள் ஆகியவைகளிலிருந்து, அவைகளைக் கேட்பதில் மகிழ்ச்சியுடையவர்களாக இருந்த மக்களுக்குச் சொற்பொழிவாற்றினார். அவரது நண்பரும் மேலதிகாரியுமாயிருந்த ஸ்டாபிட்ஸ் அவரைப் பிரசங்க பீடத்திலேறி, வேத வாக்கியங்களைப் பிரசங்கிக்கும்படி வற்புறுத்தினார். கிறிஸ்துவிற்குப்பதிலாக நின்று, வேத வாக்கியங்களைப் போதிப்பதற்கு தனக்குத் தகுதி இல்லை என்று உணர்ந்தவராக லுத்தர் தயங்கினார். மிக நீண்ட போராட்டத்திற்குப் பின்னர், அவரது நண்பர்களின் அழைப்பிற்கு இணங்கினார். வேத வாக்கியங்களில் அவர் ஏற்கனவே வல்லவராக இருந்தார். அத்துடன் தேவ கிருபையும் அவர்மீது தங்கி இருந்தது. அவரது வாக்கு வன்மையானது கேட்டவர்களை கவர்ந்துகொண்டது. மிகத் தெளிவாகவும் வல்லமையுடனும் அவர் முன்வைத்த சத்தியங்கள், கேட்பவர்களின் புரிந்துகொள்ளுதலைத் திருப்திப்படுத்தி, கேட்போரின் இதயங்களைத் தொட்டது. (12)

லுத்தர் இன்னமும் ரோமன் கத்தோலிக்க சபையின் உண்மையான மகனாகவே இருந்து, அதைத்தவிர வேறுவிதமாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை என்ற எண்ணமுடையவராக இருந்தார். ரோம் நகரைச் சந்திக்கும்படி தெய்வீக ஏற்பாடு அவரை நடத்தினது. செல்லும் பாதையிலிருந்த மடாலயங்களில் தங்கி, கால்நடையாகவே ரோம் நகரை நோக்கிச் சென்றார். இத்தாலியிலிருந்த ஒரு மடத்தில் காணப்பட்ட செல்வங்களையும், பெரும் கட்டிடங்களையும், சுகபோகங்களையும் கண்டு வியந்தார். அரச குமாரர்களுக்கிணையான மிகுந்த வருமானங்களை அனுபவிப்பவர்களாயிருந்த குருமார்கள், ரசிக்கும்படியான கட்டிடங்களில் வாழ்ந்து, மிக உயர்ந்த விலைமதிப்புள்ள ஆடைகளை அணிந்து, சிறப்பான உணவுவகைகளை விருந்தாக உண்டுகளித்தனர். இவர்களைப்பற்றித்

தவறாகச் சொல்லப்பட்டிருந்த வைகளைப்பற்றிய வேதனையுடன், லூத்தர் தனது சுயமறுப்பும் கடினமும் உள்ள வாழ்க்கையை இவர்களது வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப்பார்த்தார். அவரது மனம் களைப்படையத் தொடங்கியிருந்தது! (13)

கடைசியாக, ஏழு மலைகளையுடைய அந்த நகரத்தை அவர் நோக்கினார். மிகுந்த உணர்ச்சிவசப்பட்டவராக, தரையின்மீது சாஷ்டாங்கமாக விழுந்து: "பரிசுத்த ரோம் நகரமே! நான் உனக்கு வணக்கம் செலுத்துகிறேன்" என்றார்.—Ibid., b. 2, ch. 6. அவர் அந்த நகரத்திற்குள் நுழைந்து, ஆலயங்களைச் சந்தித்து, குருமார்களாலும் சந்நியாசிகளாலும் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்ட ஆச்சரியமான கதைகளைக் கவனித்து, தேவையான எல்லாச் சடங்குகளையும் செய்தார். தனக்கு ஆச்சரியத்தையும், பயத்தையும் உண்டுபண்ணக்கூடிய காட்சிகளை, நோக்கிய இடங்களிலெல்லாம் கண்டார். குருமார்களின் பிரிவுகள் அனைத்திலும் அக்கிரமம் நிறைந்திருப்பதை அவர் கண்டார். குருமார்கள் திருப்பலி பூசை செய்துகொண்டிருந்தபொழுதிலுங்கூட, பேசின தரக்குறைவான கேலிப்பேச்சுகளையும், வீண்பேச்சுகளையும் அவர் செவியுற்றார். குருமார்களோடும், நகர மக்களோடும் கலந்தபோது, சமயக் கருத்து வேறுபாடும் மிதமிஞ்சிய உணவுப் பழக்கங்களும், தீயபழக்கங்களும், நிலவி வந்ததைக் கண்டார். ரோம் நகரில் செய்யப்படும் அக்கிரமங்களும் பாவங்களும் நம்பமுடியாதவை—நம்புவதற்கு அவைகளை நேரில் காணவும், கேட்கவும் வேண்டும்! நரகம் என்று ஒன்று இருந்தால், அதன்மேல்தான் ரோம் நகரம் கட்டப்பட்டு உள்ளது. சகல பாவங்களும் புறப்பட்டுவரும் பாதாளமாக அது இருக்கிறது என்று சொல்லப்படுவது வழக்குச்சொல்லாக இருந்தது.—Ibid., b. 2, ch. 6. (14)

நமது இரட்சகர் ரோமர்களின் விசாரணைக்குப் பின்னர் விசாரணை மண்டபத்தைவிட்டுக் கீழிறங்கிவந்த படிக்கட்டுகள், அற்பதமான விதத்தில் எருசலேமிலிருந்து ரோம்நகருக்குள் கொண்டுவரப்பட்டது என்றும், அந்தப் பிலாத்துவின் படிக்கட்டுகளின்மீது முழங்கால்களால் ஏறிச்செல்லுகின்ற அனைவருக்கும் பாவமன்னிப்பு உண்டாகும் என்றும், ஒரு புது வாக்குத்தத்தம் சமீபத்தில் போப்புவினால் வெளியிடப்பட்ட ஒரு கட்டளையாக இருந்தது. லூத்தர்அந்தப் படிக்கட்டுகளின்மீது ஒருநாள் மிகுந்த பக்தியுடன் ஏறிக்கொண்டிருந்தபொழுதில் "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" (ரோமர் 1:17) என்று இடிமுழக்கம் போன்ற ஒரு சத்தம் அவரிடம் சொல்லுவதுபோல் தோன்றியது. அவர் குதித்து எழுந்துநின்று, வெட்கத்துடனும் கலவரத்துடனும் அந்த இடத்தைவிட்டு விரைவாகச் சென்றார். அந்த வார்த்தையானது அதின் வல்லமையை, அவரது ஆத்துமாவிலிருந்து ஒருபோதும் இழக்கவே

இல்லை. அந்தநேரத்தில் இருந்து, மீட்பிற்காக மனிதர்கள் செய்யும் கிரியைகள்மீது நம்பிக்கை வைத்தல் என்ற தவறை அதற்கு முன் ஒருபோதும் இல்லாதவிதத்தில் மிகத் தெளிவாகவும், இயேசுவின் மேன்மைகளின்மீதான தொடர்ச்சியான விசுவாசத்தின் அவசியத்தையும் அவர் கண்டார். போப்பு மார்க்கத்தின் வஞ்சகத் தோற்றங்களுக்கு ஒருபோதும் மூடாமலிருக்கும்படி, அவரது கண்கள் திறக்கப்பட்டன. அவர் தனது முகத்தை ரோம் நகரின் மீதிருந்து திருப்பினபோது, அவதுடைய இதயமும் திரும்பினது. அந்த நேரத்திலிருந்து, அந்தப் பிளவு, போப்புமார்க்க சபையிலிருந்து அவரது சகலவிதமான உறவுகளையும் பிரிக்கும்வரை, மிகவும் அகலமாக விரிவடையத் தொடங்கியது. (15)

ரோம் நகரிலிருந்து அவர் விட்டன்பர்க் பல்கலைக்கழகத்திற்குத் திரும்பியதும், தெய்வீக அறிஞர் (டாக்டர் ஆ∴ப் டிவைனிட்டி) என்னும் பட்டம் பெற்றார். தாம் மிகவும் நேசித்த வேதவாக்கியங்களை அறிந்து கொள்ள, இதற்குமுன் இல்லாத அளவில் ஈடுபட சுதந்திரம் பெற்றார். வழக்குச்செற்களையும் போப்புமார்களின் கோட்பாடுகளையும் போதிப்பதை விட்டுவிட்டு, தேவனுடைய வார்த்தைகளைக் கவனமாகவும் நேர்மை யாகவும் பிரசங்கிக்க அவர் ஒரு பக்திவினயமான வாக்குறுதியை எடுத்துக்கொண்டார். அதற்குப் பின்னர் அவர் ஒரு சன்னியாசியாகவோ பேராசிரியராகவோ இராமல், வேதாகமத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முன்னோடியாக ஆனார். சத்தியத்தின்மீது பசிதாகமுடையதாயிருந்த தேவனுடைய மந்தையை போஷிக்கும் ஒரு மேய்ப்பனாக அவர் அழைக்கப் பட்டிருந்தார். “வேதவாக்கியங்களின் ஆதாரத்தின்மீது இல்லாத, எந்தக் கோட்பாடுகளையும் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது” என்று அவர் உறுதியாக அறிவித்தார். இந்த வார்த்தைகள் போப்பு மார்க்கத்தின் மேலாதிக்கம் என்னும் அஸ்திவாரத்தின்மீது பலத்த அடியாக விழுந்தது. அவரது வார்த்தைகள் சீர்திருத்தத்தின் உயிராற்றல்மிக்க கொள்கைகளாக அமைந்தன. (16)

தேவனுடைய வார்த்தைகளுக்குமேலாக மனிதக் கோட்பாடுகளை உயர்த்துவதால், ஏற்படவிருக்கும் அபாயத்தை லுத்தர் கண்டார். வேதப் பள்ளியில் பயின்ற மனிதர்களின் உத்தேசமான—நேர்மையற்ற கோட்பாடு களை அவர் அச்சமின்றித் தாக்கி, மக்களை இதுவரை கட்டுப்பாடு செய்திருந்த தத்துவங்களையும், ஆதீனங்களையும் எதிர்த்தார். இப்படிப்பட்ட கல்விகள் பயனற்றவை என்பதோடன்றி அபாயகரமானவை என்றும் அவைகளை மறுத்து, அவரது பேச்சுக்களைக் கேட்பவர்களின் மனங்களை நூதனமான தத்துவ சாஸ்திரிகளிடமிருந்தும், வேதவிற்பன்னர்களிடமிருந்தும்

விலக்கி, தீர்க்கதரிசிகளாலும், அப்போஸ்தலர்களாலும் முன்னதாகவே வைக்கப்பட்டுள்ள நித்தியகாலச் சத்தியங்களுக்குத் திருப்பினார். (17)

அவரது வார்த்தைகளின்மீது சார்ந்திருந்த ஆர்வமிக்க கூட்டத்தினருக்கு, அவர் கொடுத்த தூதானது, மிகவும் விலைமதிப்பு உள்ளதாக இருந்தது. அவர்களது செவிகளில் இதுவரை இப்படிப்பட்ட போதனைகள் விழுந்ததே இல்லை. மீட்பரின் அன்பைப்பற்றிய மகிழ்ச்சி மிக்க செய்திகள், பாவ நிவாரணமான அவரது இரத்தத்தினால் உண்டாகும் பாவமன்னிப்பு, சமாதானம் ஆகியவைபற்றிய வாக்குறுதிகள் அவர்களது இதயங்களை மகிழச்செய்து, அழிவற்றதான நம்பிக்கைகளை அவர்களுக்குள் தூண்டினது. பூமியின் கடைசிப் பகுதிகளுக்கும் சென்று, காலத்தின் முடிவுவரை தன் ஒளியினை அதிகரிக்கச்செய்யும் ஒளிர்கின்ற கதிர்களையுடைய விளக்கானது விட்டன்பர்கில் ஏற்றப்பட்டது. (18)

ஆனால், ஒளிக்கும் இருளுக்கும் இசைவு இருக்க இயலாது. சத்தியத்திற்கும் தவறுக்கும் இடையில் அமர்த்தமுடியாத ஒரு போராட்டம் உண்டு. ஒன்றை உயர்த்தி அதைப் பாதுகாப்பது மற்றொன்றைத் தாழ்த்தி தூக்கி எறிவதாக இருக்கும். "நான் சமாதானத்தையல்ல பட்டயத்தையே அனுப்பவந்தேன்" (மத். 10:34) என்று நமது இரட்சகர் தாமே கூறினார். தேவன் நடத்துவதில்லை. ஆனால் என்னை முன்னேறிச் செல்லும்படித் தள்ளுகிறார். எனது சொந்தச் செயல்களுக்கு நான் எஜமானன் அல்ல. என்னால் மகிழ்ச்சியுடன் ஓய்ந்திருக்கமுடியும் ஆனால் நான் கொந்தளிப்புகளுக்கும் புரட்சிகளுக்கும் நடுவில் வீசியெறியப்பட்டிருக்கிறேன் என்று சீர்திருத்தம் ஆரம்பமான சில காலத்திற்குப் பின் லுத்தர் சொன்னார்.—Ibid., b. 5, ch. 2. இப்பொழுது அந்த எதிர்ப்புக்குள் இறங்கும்படி அவர் நெருக்கப்பட்டார். (19)

ரோமன் கத்தோலிக்க சபை தேவ கிருபையை வியாபார மாக்கியிருந்தது! அவளது பலிபீடங்களுக்கருகில் பணமாற்றம் செய்பவர் களின் மேஜைகள் வைக்கப்பட்டு, வாங்குகிறவர்கள் விற்கிறவர்கள் ஆகியோரின் சத்தம் காற்றில் எதிரொலித்தது. ரோம் நகரில் பரிசுத்த பேதுருவின் ஆலயம் கட்டப்படுவதற்காக நிதி தேவை என்னும் வேண்டு கோளின்படி, போப்புவின் அதிகாரிகளால்,பாவமன்னிப்புச் சீட்டுகள் விற்கப் பட்டன. தேவனை ஆராதிப்பதற்கு குற்றங்களின் விலையினால் ஒரு ஆலயம் கட்டப்படவேண்டியதாக இருந்தது! அக்கிரமத்தின் கூலியினால், மூலைக்கல் வைக்கப்பட்டது! ரோமன் கத்தோலிக்க சபையின் பேராசையை நிறைவேற்றுவதற்காகக் கையாளப்பட்ட அதே உபாயமானது, அதன் வல்லமை அதன் பெரிய தன்மை ஆகியவற்றின்மீதான மரணஅடியை எழுப்பினது. போப்புவின் சிங்காசனத்தை அதிரச்செய்து, அவரது

மூன்றடுக்குக் கிரீடத்தை போப்புவின் தலையில் இருந்து விழச்செய்யும் போப்புமார்க்கத்திற்கு எதிரான தீர்மானமான வெற்றியை எழுப்பும்படியாக இருந்தது. (20)

ஜெர்மனியில் பாவமன்னிப்புச்சீட்டை விற்கும்படி அதிகாரப்பூர்வமாக ஏற்படுத்தப்பட்ட **டெட்செல்** என்பவன், சமுதாயத்திற்கெதிரான மிகக் கீழ்த்தரமான குற்றங்களுக்காகவும், தேவப்பிரமாணங்களுக்கு எதிரான பாவச் செயல்களுக்காகவும் தண்டிக்கப்பட்டவனாக இருந்தான் ஆனால் அவன் அந்தத் தண்டனையிலிருந்து, விடுவிக்கப்பட்டு, போப்புவின் கூலிப்படை யாளியாக இருந்து, பழிநாணாத அவரது திட்டங்களை நிறைவேற்றும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தான். மிகக் கேவலமான வெட்கங்கெட்ட தன்மையை உடைய அவன், அறியாமையும் நம்பமுடியாமையும் மூட நம்பிக்கையுமிக்க மக்களை ஏமாற்றுவதற்காக மெருகூட்டப்பட்ட பொய் களைத் திரும்பத் திரும்பச் சொன்னான். அவர்கள் தேவனுடைய வார்த்தை களை உடையவர்களாக இருந்திருந்தால், இவ்வாறாக ஏமாற்றப்பட்டிருக்க மாட்டார்கள். போப்புமார்க்கத்தின் வல்லமையையும் அதன் பேராசைமிக்க தலைவர்களின் செல்வத்தை அதிகப்படுத்தவும், அவர்களைப் போப்பு மார்க்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் வைக்கவுமே, வேதாகமம் அவர்களுக்குத் தடைசெய்யப்பட்டிருந்தது. (See John C. L. Gieseler, A Compendium of Ecclesiastical History, per. 4, sec. 1, par. 5.) (21)

டெட்செல் ஒரு ஊருக்குள் நுழைந்ததும், அவனுக்கு முன்பாக அறிவிப்பாளனாகச் செல்லுகின்ற மனிதன் “தேவனுடையதும், பரிசுத்த தந்தையுடையதுமான கிருபை உங்கள் வாசலருகில் உள்ளது” என்று அறிவிப்பான்.—D’Aubigne, b. 3, ch. 1 தேவதூஷணமாகத் தன்னைத் தேவன் என்பதுபோல் காண்பிக்குமந்த மனிதனை—பசப்புக்காரனை, மக்கள் பரலோகத்தில் இருந்து தேவனே இறங்கி வந்திருக்கிறார் என்பதாக எண்ணி வரவேற்றனர். அந்த இழிவான வியாபாரம் ஆலயத்தில் ஏற்படுத்தப்பட்டது. டெட்செல் பிரசங்கபீடத்திலேறி, “பாவமன்னிப்புச் சீட்டு தேவனுடைய மிக விலையுயர்ந்த ஈவு” என்று சொல்லி, சீட்டுகளை உயர்த்திக் காண்பித்து: “பவமன்னிப்புச் சான்றிதழின் வலிமை என்னவெனில், அதை வாங்குபவர் எதிர்காலத்தில் செய்யவிரும்பும் சகல பாவங்களுங்கூட அவருக்கு மன்னிக்கப்படும்!? பாவத்திற்கான மனந்திரும்புதலுங்கூடத் தேவையில்லை” என்றான்!!—Ibid., b. 3, ch. 1. இதைவிட மோசடியாக, “பாவமன்னிப்புச் சீட்டு உயிருள்ளவர்களின் பாவங்களை மட்டுமல்ல இறந்தவர்களின் பாவங்களையும் மன்னிக்கவல்லதாக உள்ளது என்று உறுதிகூறி, பணம்காணிக்கைப்பெட்டியின் அடியில் விழுந்ததும், எந்த ஆத்துமாவிற்காக

அது செலுத்தப்பட்டதோ, அது உத்தரிக்கு மிடத்திலிருந்து விடுதலையடைந்து, பரலோகத்தை நோக்கிச் செல்லும்” என்றான். (See K. R. Hagenbach, History of the Reformation, vol. 1, p. 96.) (22)

அற்புதங்களைச் செய்கின்ற வல்லமையை அப்போஸ்தலர்களிடம் இருந்து விலைகொடுத்து வாங்குவதற்கு, மாயக்காரன் சீமோன் முன்வந்தபோது, பேதுரு அவனை நோக்கி: “தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால், உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது” (அப்போஸ்தலர் 8:20) என்று சாபமாகச் சொன்னான். ஆனால் ஆர்வமிக்க ஆயிரக்கணக் கானவர்களால், டெட்செல்லின் இந்தப் பேரமானது ஏற்றுக்கொள்ளப் பட்டது. பொன்னும் வெள்ளியும் அவரது கருவூல அறைகளில் நிரம்பிவழிந்தன. இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான மனம் திரும்புதல், விசுவாசம், பாவத்தை மேற்கொள்ளும் கருத்தான முயற்சிகளைவிட, பணத்தால் அதைப் பெற்றுக்கொள்வது மிகவும் எளிதாகத் தோன்றினது!? (23)

ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்த கல்வியும் பக்தியுமிக்க மனிதர்கள், பாவமன்னிப்புச்சீட்டுப் போதனையை எதிர்த்தனர். பகுத்தறிவிற்கும் வெளிப்படுத்தப்பட்டவைகளுக்கும் எதிரான இந்தப் போலிவேடத்தில் ஏராளமானவர்கள் விசுவாசம் இல்லாதவர்களாக இருந்தனர். அக்கிரமமான இந்த வியாபாரத்திற்கெதிராக, எந்த ஒரு குருவானவரும் தனது கரத்தை உயர்த்தவில்லை. ஆனால் இதன் காரணமாக, மனிதர்களின் எண்ணங்களில் தொந்தரவும் அசௌகரியமும் உண்டாகி, “ஏதாவது ஒரு கருவியின் மூலமாக ஆண்டவர் அவரது சபையைத் தூய்மைப்படுத்திச் செயலாற்றமாட்டாரா?” என தாகத்துடன் ஏங்கித்தவித்தனர். (24)

லுத்தர் நேர்மைமிக்க ஒரு போப்புமார்க்கவாதியாக இருந்த போதிலும், பாவமன்னிப்புச்சீட்டை விற்பனைசெய்கின்ற வெறியர்களின் உள்நோக்கத்தை அறிந்து, மிகுந்த திகிலடைந்தார். அவரது கூட்டத்திலிருந்த அநேகர் இந்தப் பாவமன்னிப்புச் சீட்டுக்களை விலைக்கு வாங்கியிருந்தனர். அவர்கள் பாவ அறிக்கைசெய்து, பாவத்திலிருந்து தூய்மையடையும்படி அவர்களது போதகரிடம் வந்தனர். பாவத்திற்காக மனம்வருந்தி சீர்திருந்த விரும்பாமல், பாவமன்னிப்புச் சீட்டு தங்களிடம் உண்டு என்பதினாலேயே வந்தனர். அவர்கள் தங்களது பாவங்களுக்காக மனம் வருந்தி, வாழ்க்கையில் சீர்திருத்தத்தை உண்டாக்காமற்போனால், அவர்கள் தங்கள் பாவங்களில் சாவார்கள் என்று எச்சரித்து, அவர்களுக்குப் பாவமன்னிப்புக் கொடுக்க மறுத்துவிட்டார். அவர்களது பாவ அறிக்கையை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்

அந்தச் சான்றிதழ்களை மறுத்துவிட்டார் என்ற குற்றச்சாட்டுடனும், பெரும் குழப்பத்துடனும் டெட்செல்லை அணுகினார்கள். அவர்களில் சிலர் அவர்கள் கொடுத்த பணத்தை அவர்களுக்குத் திருப்பித் தரும்படி துணிவுடன் டெட்செல்லை வற்புறுத்தினார்கள். அந்தப் பரதேசியானவர் மிகுந்த கோபாவேசம் நிறைந்தவரானார். அவருடைய மிகவும் பரிசுத்தமான பாவமன்னிப்புச் சீட்டை, எதிர்க்கத் துணிகின்ற வேதப்புரட்டர்களை எரிப்பதற்காகப் பொதுச் சதுக்கங்களில் தீ மூட்டும்படியான கட்டளையைப் போப்புவிடமிருந்து பெற்றுள்ளதாகக்கூறி, மிகப் பயங்கரமான சாப வார்த்தைகளைக் கூறினான்.—D'Aubigne, b.3, ch.4 (25)

இப்போது சத்தியத்தின் வீரனாக லுத்தர் அவரது பணியில் தைரியத்துடன் நுழைந்தார். மிகுந்த அக்கரையும் பக்திவிநயமுமான அவரது எச்சரிப்பின் சத்தம், பிரசங்கபீடத்திலிருந்து கேட்கப்பட்டது. பாவத்தின் குற்றமிக்க தன்மையை அவர் விளக்கி, மனிதனது கிரியைகளினால், பாவத்தினாலுண்டாகும் குற்ற உணர்வினைக் குறைக்கவோ அல்லது அதன் தண்டனையிலிருந்து தப்பிக்கவோ முடியாது என்பதை மக்கள்முன் வைத்தார். பாவத்திற்காக தேவனிடம் மனம் வருந்துவதாலும், கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினாலுமே மனிதன் இரட்சிக்கப்படமுடியும் என்றார். கிறிஸ்துவின் கிருபையை விலைகொடுத்து வாங்கஇயலாது. அது தேவனுடைய இலவசமான ஈவு என்றும் அவர் கூறினார். மேலும், பாவமன்னிப்புச் சீட்டுகளை விலைக்கு வாங்காமல், சிலுவையிலறையப்பட்ட மீட்பரை விசுவாசத்துடன் பார்க்கும்படி, அவர் ஆலோசனை கூறினார். இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி தான் மிகவும் தாழ்மையுடன் இருந்ததையும், பாவப் பரிகாரச் செயல்களைச் செய்ததையும்கூறி, தன்னைத் தான் நோக்குவதை விட்டுவிட்டு, கிறிஸ்துவின்மீது வைத்த நம்பிக்கையினால் மட்டுமே தனக்குச் சமாதானமும், சந்தோஷமும் உண்டானது என்றும், தன் பேச்சைக் கேட்டவர்களுக்குக் கூறினார். (26)

டெட்செல் இந்த பக்தியற்ற போலித்தனமான வியாபாரத்தைத் தொடரவே, லுத்தர் தீச்செயல்களுக்கெதிராக மிகவும் பயன்தரக்கூடிய எதிர்ப்பைத் தெரிவிக்கத் தீர்மானித்தார். விரைவில் அதற்கு ஒரு வாய்ப்பு உண்டானது. விட்டன்பர்க் கோட்டையிலிருந்த ஆலயத்தில் அநேக சமயச் சின்னங்கள் இருந்தன. குறிப்பட்ட பரிசுத்தநாட்களில் அவை மக்களுக்குக் காட்டப்பட்டு, அந்த நாட்களில் ஆலயங்களுக்குச் சென்று பாவ அறிக்கை செய்பவர்களுக்கு பூரணமான பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவித்திருந்தனர். அதன்படியே அந்த இடங்களுக்கு, அந்த நாட்களில் ஏராளமானவர்கள் கூடினார்கள். அந்தப் பண்டிகை நாட்களில் ஒன்றான

சகல பரிசுத்தவான்களின் தினமானது சமீபித்திருந்தது. அதற்கு முந்தினநாள் ஆலயத்தைநோக்கிச் சென்றுகொண்டிருந்த மக்களுக்கிடையில் லுத்தரும் சென்று, பாவமன்னிப்புச்சீட்டின் விற்பனைக்கு எதிரான தொண்ணூற்றைந்து நியாயங்கள் (தவறுகளைத் தவிர்க்கின்ற ஆலோசனைகள்) எழுதப்பட்ட ஒரு காகிதத்தை ஆலயக்கதவின்மீது ஒட்டினார். இந்தத் தத்துவங்கள் மறுத்துப்பேசப்பட வேண்டியவை என்பவர்களுக்கு எதிராக, மறுநாள் பல்கலைக்கழகத்தில் தற்காத்துப்பேசும் தனது விருப்பத்தையும் அறிவித்திருந்தார். (27)

அவரது நியாயங்கள் எல்லோரையும் கவர்ந்தது. அவைகள் வாசிக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் வாசிக்கப்பட்டு, ஒவ்வொரு திசையிலும் எடுத்துச்சொல்லப்பட்டன. பல்கலைக்கழகத்திலும் நகரம் முழுவதிலும் இதைப்பற்றிய எழுப்புதல் பெருமளவில் உயர்ந்தது. பாவமன்னிப்பை அருளும் வல்லமையும், அதற்கான தண்டனைப் பணத்தை வாங்குவதும் ஆகிய செயல்கள் ஒருபோதும் போப்புவிற்கோ அல்லது வேறு மனிதருக்கோ கொடுக்கப்படவில்லை என்பதை நிரூபிக்கப்படவேண்டிய இந்தக் கோட்பாடுகள் எடுத்துக்காட்டின. இது ஒரு ஏளனத் திட்டமாக, மக்களின் மூடநம்பிக்கையைப் பயன்படுத்தி, பணத்தைச் சுரண்டும் உபாயமாக, இந்தப் பொய்யான—போலியானவைகளில் நம்பிக்கைவைக்கும் எல்லா ஆத்துமாக்களையும் அழிக்கும்படியாக, சாத்தானால் உண்டுபண்ணப்பட்ட கருவியாக இருந்தது. கிறிஸ்துவின் சுவிசேஷம்தான் சபையின் மிக அதிக நம்பிக்கைக்குரிய பொக்கிஷம் அதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய கிருபை, மனமாற்றத்துடனும் விசுவாசத்துடனும் அதைத் தேடும் அனைவருக்கும் இலவசமாக அருளப்படுகிறது என்பது தெளிவாக காட்டப்பட்டது. (28)

லுத்தரின் சவாலை ஏற்றுக்கொள்ள ஒருவருக்கும் துணிவு வரவில்லை. அவர் தொடங்கிவைத்த சீர்திருத்தக் கேள்வியானது, சில நாட்களில் ஜெர்மனி எங்கும் பரவின. ரோமன் கத்தோலிக்க சபையில் நிலவியிருந்த பயங்கரமான அக்கிரமங்களைக்கண்டு, அவைகளுக்காகப் புலம்பி, அவைகளின் முன்னேற்றத்தைத் தடுப்பது எப்படி என்று அறியாமல் இருந்த அநேக பக்தியுள்ள ரோமன் கத்தோலிக்கர்கள் இவைகளை மகிழ்ச்சியுடன் வாசித்து, தேவனின் சத்தத்தை அறிந்துகொண்டனர். ரோமன் கத்தோலிக்க சபையில் அதிகரித்துவரும் ஊழல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு, தேவன் தமது கரத்தை நீட்டியிருக்கிறார் என்பதை அவர்கள் கண்டனர். தனது முடிவுகளுக்கு எதிராக எந்தவிதமான மேல்விசாரணையும் செய்ய இயலாது என்று கூறும் இந்த அக்கிரமமான சபையின் வல்லமையைத் தடுத்து நிறுத்த ஒரு தடையை உண்டாக்கவேண்டும் என்று எண்ணியிருந்த இளவரசர்களும் நீதிபதிகளும் இதில் இரகசியமாக மகிழ்ச்சி அடைந்தனர். (29)

ஆனால் பாவத்தை நேசிக்கும் மூடநம்பிக்கைமிக்க ஏராளமானவர்கள், அவர்களது பயத்தை சாந்திசெய்திருந்த ஏற்பாடுகள் அடித்துச் செல்லப் படுவதைக் கண்டு கலங்கினர். குற்றங்களை அனுமதிக்கின்ற தங்களது தந்திரங்களுக்கு இடையூறு உண்டாவதை அறிந்த தந்திரமான சபைப் பிரச்சாரங்கள் அவர்களது ஆதாயங்களுக்கு ஆபத்து உண்டாகி இருப்பதைக் கண்டு, அவர்களது போலியான தன்மைகளை நிலைநிறுத்த ஒன்றுதிரண்டனர். சீர்திருத்தவாதி மிகக் கசப்பான விரோதிகளைச் சந்திக்கவேண்டியதாயிற்று. அவர் உணர்ச்சியினால் உந்தப்பட்டு அவசரப்பட்டுச் செயலாற்றுகிறார் என்று சிலர் குற்றம் சாட்டினர். மற்றவர்கள், அவர் தேவனால் நடத்தப்படாமல், அகந்தையினாலும், உயர்வை அடையவேண்டும் என்ற எண்ணத்தினாலும், யூகங்களின் அடிப்படையினாலும், செயல்படுகிறார் என்பதாகவும் குற்றஞ்சாட்டினார்கள். பெருமையின் தோற்றம் இதில் உள்ளது. இது சச்சரவைத் தூண்டிவிடுகிறது என்னும் குற்றச்சாட்டுகள் இல்லாமல், ஒரு புதிய யோசனையை முன்கொண்டுசெல்ல இயலாதென்பது யாருக்குத் தெரியாது? கிறிஸ்துவும் இரத்தசாட்சிகளும் ஏன் கொலைசெய்யப்பட்டனர்? அவர்கள் வாழ்ந்த காலத்திலிருந்த ஞானத்தை ஏற்றுக்கொள்ளாத பெருமையானவர்கள் போல் தோன்றியதாலும், நிலவியிருந்த பழைய கருத்துக்களுக்கு இசையாமல், புதிய சத்தியங்களை அவர்கள் முன்கொண்டுவந்ததாலுமே. (30)

“நான் செய்வது, மனித யோசனைகளினாலல்ல, தேவனுடைய ஆலோசனையினால் மட்டுமே பலன் தரும். அந்தவேலை தேவனுடையதாக இருந்தால், யாரால் அதைத் தடைசெய்ய இயலும்? அப்படி இல்லாவிட்டால் யாரால் அதை முன்கொண்டு செல்ல இயலும்? எனது யோசனைகள் அல்ல் அவர்களது யோசனைகளல்ல் எங்களுடைய யோசனைகளும் அல்ல் பரலோகத்திலிருக்கிற பிதாவே உமது சித்தத்தின்படியே ஆகட்டும்” என்றார்.—Ibid., b. 3, ch. 6. (31)

லுத்தருடைய பணி தேவஆவியினால் ஏவப்பட்டுச் செய்யப்பட்ட போதிலும், பயங்கரமான எதிர்ப்புகள் இல்லாமல் அவைகளை அவரால் முன்கொண்டுசெல்ல இயலவில்லை. அவரது எதிரிகளின் நிந்தனைகள், அவரது நோக்கங்களைத் திரித்துக்கூறுதல், அவரது பண்பு, நோக்கம் ஆகியவைகளின் மீதான அவர்களது நீதியற்ற தீய பிரச்சாரங்கள், ஆகியவை திகிலூட்டும் பெருவெள்ளத்தைப்போல் வந்தன. அவைகளின் விளைவு இல்லாமலும் இல்லை. சபையிலும் பள்ளிகளிலும் இருந்த தலைவர்கள் ஆகியோர் சீர்திருத்த முயற்சிகளில் அவருடன் ஒருமித்து மகிழ்ச்சியுடன் செயலாற்றுவார்கள் என அவர் நம்பியிருந்தார். மேலான

நிலைமையில் இருந்தவர்களின் தைரியம் ஊட்டும் வார்த்தைகள், அவரை மகிழ்ச்சியினாலும் நம்பிக்கையினாலும் உற்சாகப்படுத்தின. சபையில் ஒரு நல்ல எதிர்காலம் உதயமாவதை அவர் முன்னதாகவே கண்டிருந்தார். ஆனால் தைரியப்படுத்துதல் நிந்தனையாகவும், பழியாகவும் மாறின. சபையிலும் நாட்டிலுமிருந்த அநேக மேன்மக்கள் இந்தத் தத்துவங்களில் இருந்த சத்தியங்களைப்பற்றி உணர்த்தப்பட்டவர்களாக இருந்தனர். ஆனால் இந்தச் சத்தியத்தை ஏற்றுக்கொண்டால், பெரும் மாறுதல்கள் உண்டாகும் என்பதை அவர்கள் விரைவில் கண்டனர். மக்களை விழிப்படையவும் சீர்திருத்தமடையவும் செய்தல் என்பது, மெய்யாகவே ரோமன் கத்தோலிக்க சபையின் அதிகாரத்தைக் கீழே விழச்செய்வதாக அமைந்து, அதன் பொக்கிஷங்களை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பண ஓடைகளை வற்றச்செய்து, இவ்விதமாக போப்புமார்க்கத் தலைவர்களின் வீணான சுகபோகங்களையும், ஆடம்பரங்களையும் குறைந்துபோகச் செய்யும். அதற்கும் மேலாக, மக்களைத் தங்களின் இரட்சிப்பிற்காகக் கிறிஸ்துவை மட்டும் நோக்கிப் பார்க்கும்படி சிந்தித்துச் செயல்படும் பொறுப்பு உள்ளவர்களாக ஆக்கினால், அது போப்புவின் சிங்காசனத்தைக் கவிழ்த்து, காலப்போக்கில் தங்களது அதிகாரத்தையும் அழித்துவிடும் என்று கண்டனர். இந்தக் காரணத்திற்காக, அவர்கள் தேவனால் அருளப்பட்ட அறிவை ஏற்க மறுத்து, அவர்களுக்கு ஒளியைக் கொடுக்கும்படி தேவன் அனுப்பின அந்த மனிதனுக்கு எதிராகப் போர்க்கோலம் பூண்டனர். அவர்களது இந்த எதிர்ப்பினால், கிறிஸ்துவையும் அவரது சத்தியத்தையும் எதிர்த்தனர். (32)

பூமியின் மாபெரும் வல்லமையை எதிர்த்து, ஒரே ஒரு மனிதனாக, தான்மட்டும் நிற்பதை லுத்தர் கண்டபோது, நடுங்கினார். “சபையின் அதிகாரத்தை எதிர்த்துநிற்கும்படி நான் உண்மையிலேயே தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறேனா?” என்று சில சமயங்களில் சந்தேகங்கொண்டார். “உலகம் முழுவதையும் பூமியின் அரசர்களையும் நடுங்கவைக்கும் போப்புவின் அரச மேன்மையை எதிர்க்க நான் யாராக இருந்தேன்” என்றும் அவர் எழுதுகிறார். இந்த இரண்டு வருடங்களில் அவர் எந்த அளவிற்கு மனமுடைந்து, மனச்சோர்வுக்குள் மூழ்கினார் என்பதை ஒருவரும் அறியார்கள். ஆனால் முற்றிலும் உடைந்துபோக அவர் விட்டுவிடப் படவில்லை. மனித ஆதரவுகள் தோல்வியடைந்தபோது, அவர் தேவனை நோக்கினார். சர்வவல்லமையுள்ள அவரது கரத்தில் பூரணமான பாதுகாப்புடன் சார்ந்துகொள்ளமுடியும் என்பதை கற்றுக்கொண்டார். (33)

சீர்திருத்தத்திலிருந்த ஒரு நண்பருக்கு “நமது நுண்ணறிவின் பலத்தினாலும், கல்வி அறிவினாலும் வேதவாக்கியங்களின் பொருள்களை

நம்மால் அறிந்துகொள்வது இயலாது. எனவே, ஜெபத்துடன் ஆரம்பிப்பதுதான் உங்களுடைய முதல் வேலையாக இருக்கட்டும். அவருடைய வார்த்தைகளின் பொருளைச் சரியாக அறிந்துகொள்ள அவரது இரக்கத்தினால் உங்கள்மீது கடாட்சம் வைக்கும்படி, அவரை நோக்கிக் கெஞ்சி மன்றாடுங்கள். அந்த வார்த்தையின் ஆசிரியராயிருக்கும் அவரைத் தவிர, அவரது வார்த்தைகளுக்குப் பொருள் சொல்லுவோர் வேறு யாரும் இல்லை. "அவர்கள் அனைவரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள்' என்று அவர் சொல்லியுள்ளபடி, உங்களது கல்வியின்மீதும் நுண்ணறிவின் மீதும் நீங்கள் நம்பிக்கை வைக்காமல், உங்கள் நம்பிக்கையை தேவனின்மீதும் அவரது ஆவியின் நடத்துதலின்மீதும் வையுங்கள். இந்தக் கரியத்தைச் சோதித்துக் காட்டியுள்ள ஒருவரை (இயேசுவை) நம்புங்கள்" என்று லுத்தர் எழுதினார்.—Ibid., b. 3, ch. 7. இக்காலத்திற்குரிய பக்திவிநயமான சத்தியங்களை மற்றவர்களுக்கு அறிவிக்கும்படி தேவனால் அழைக்கப்பட்டு இருப்பவர்களுக்கான முக்கியமான பாடம் இதில் உள்ளது. சாத்தானால் உண்டாக்கப்பட்டிருக்கும் கட்டுக்கதைகளை நம்பும் மனிதர்களின் எதிர்ப்பை இந்த சத்தியங்கள் கலங்கச் செய்யும். தீயசக்திகளின் வல்லமைகளுக்கெதிரான போராட்டத்தில் மனித நுண்ணறிவின் பலத்தைவிட, மேலான ஏதோ ஒன்று தேவையாக உள்ளது. (34)

சம்பிரதாயங்கள் சடங்காச்சாரங்கள் அல்லது போப்புவின் அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டவைகளைப் பின்பற்றவேண்டும் என்று எதிரிகள் வேண்டுகோள் விடுத்தபோது, லுத்தர் "வேதாகமம்! வேதாகமம் மட்டுமே" என்று அவர்களைச் சந்தித்தார். இங்கு அவர்களால் பதில்சொல்லமுடியாத வாதங்கள் உண்டாயின. எனவே, யூதர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தின்மீது தாகம்கொண்டதுபோல, சம்பிரதாயங்களுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் அடிமையானவர்கள், அவரது இரத்தத்தின்மீது தாகம் கொண்டனர். "இவன் ஒரு மதப்புரட்டன்! இவனை ஒரு மணிநேரத்திற்குக்கூட உயிருடன் விட்டுவைப்பது பாவம்!" என்று ரோமன் கத்தோலிக்க வெறியர்கள் அலறினார்கள். உடனே அவனைக் கம்பத்தில் கட்டிவைத்து எரிக்க வேண்டும் என்றார்கள். ஆனால் லுத்தர் இவர்களது கோபாவேசத்திற்கு இரையாகவில்லை. அவரால் செய்யப்படவேண்டிய வேலை ஒன்று இருந்தது. எனவே அவரைப் பாதுகாக்கும்படி பரலோக தேவதூதர்கள் அனுப்பப்பட்டனர். அப்படியிருந்தும் விலைமதிப்புமிக்க ஒளியை லுத்தரிடமிருந்து பெற்றுக்கெண்டவர்கள், சாத்தானின் கோபத் திற்கு இலக்காக்கப்பட்டு, சத்தியத்திற்காக சித்திரவதைகளையும் மரணத்தையும் பயமின்றி அனுபவித்தனர். (35)

லுத்தரின் போதனைகள், ஜெர்மனி முழுவதிலுமிருந்த சிந்தனையாளர்களின் மனங்களை கவர்ந்தன. அவரது சொற்பொழிவு களினாலும் எழுத்துக்களினாலும் உண்டான ஒளிக்கதிர்கள், ஆயிரக் கணக்கானவர்கள் விழித்தெழுவும், ஒளியேற்றம் பெறவும் உதவி செய்தன. அதுவரை சபையைப் பற்றிக்கொண்டிருந்த, செத்துப்போன சம்பிரதாயங்களின் இடத்தை உயிருள்ள விசுவாசம் எடுத்துக் கொண்டது. ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திலிருந்த மூடநம்பிக்கை களை மக்கள் நாள்தோறும் இழக்கத்தொடங்கினர். தப்பபிப்பிராயங் கள் என்ற வேலி விழுந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு கோட்பாட்டை யும் உரிமையையும் சோதிக்க லுத்தர் பயன்படுத்திய தேவனுடைய வார்த்தைகள், மனிதர்களின் இதயத்தை உருவக்குத்தும் இருபுற மும் கருக்கான பட்டயத்தைப்போலிருந்தது. ஆவிக்குரிய முன்னேற் றத்திற்கான வாஞ்சை எங்கும் எழும்பியது. காலங்கள் நெடுகிலும் அறியப்படாமலிருந்த நீதியின்மேலுள்ள பசியும் தாகமும் எங்கும் உண்டானது. இதுவரை மனிதச் சடங்குகளையும் பாவப்பரிகாரச் செயல்களையும் பூமியிலுள்ள மத்தியஸ்தர்களையும் பார்க்கும்படி திருப்பிவிடப்பட்டிருந்த கண்கள், இப்பொழுது பாவத்திற்கான மனவருத்தத்துடன் கிறிஸ்துவை, சிலுவையிலறையப்பட்ட அவரையே விசுவாசத்துடன் பார்க்கத் திரும்பின. (36)

எங்கும் பரவிய இந்த ஆர்வம் போப்பு அதிகாரத்தின் பயத்தை, மேலும் அதிகரிக்கச் செய்தது. மதப்புரட்டு என்னும் குற்றச்சாட்டுக்கு எதிரான பதில் அளிக்க ரோம் நகரில் தோன்றும்படியான அழைப்பை லுத்தர் பெற்றார். இந்தக் கட்டளை லுத்தரின் நண்பர்களைப் பயத்தால் நிரப்பியது. இயேசுவின் இரத்தசாட்சிகளின் இரத்தத்தை ஏற்கனவே குடித்திருந்த அந்த நகரத்தில், அவரைப் பயமுறுத்தும் அபாயங்களை அவர்கள் முழுமையாக அறிந்திருந்தனர். அவர் ரோம் நகருக்குச் செல்லவேண்டும் என்பதற்கு அவர்கள் மறுப்புத் தெரிவித்து, அவர் தமது விசாரணையை ஜெர்மனியிலேயே பெற்றுக்கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். (37)

முடிவாக, இந்த ஏற்பாடு நடைமுறைக்கு வந்து, இந்தக் காரியம் பற்றி விசாரிக்க போப்புவின் பிரதிநிதி நியமிக்கப்பட்டார். போப்புவினால் அவரது அதிகாரிக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையில், லுத்தர் ஒரு மதப்புரட்டர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறார் என்று இருந்தது. எனவே லுத்தரைத் தடைசெய்து, அவரை விரைவாகக் கீழ்ப்படியச்செய்யும்படி, போப்புவின் பிரதிநிதிக்குக் கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது. லுத்தர் விட்டுக் கொடுக்காதவராக நின்றால், போப்புவின் பிரதிநிதியால் அவரைக் கைதுசெய்ய முடியாமலாகிவிட்டால், அவரை ஜெர்மனியின் எல்லா

இடங்களிலும் தடைசெய்யவும், அவரைத் தீர்த்துக்கட்டவும், சபிக்கவும், அவரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் சமூகத்திலிருந்து நீக்கவும் அந்தப் பிரதிநிதிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது.—Ibid., b. 2, ch. 4. மேலும் கொள்ளைநோயைப்போல் பரவிவரும் மதப்புரட்டை வேருடன் களைய ரோமன் கத்தோலிக்க சபையால் பழிவாங்கப்படும்படி லுத்தரை அதனிடம் ஒப்படைக்கும் காரியத்தில் அலட்சியம் காட்டக்கூடிய பேரரசனையும், அவனைச் சார்ந்தவர்களையும் மட்டுமின்றி, சபையிலும் நாட்டிலும் மேலானவர்களாக உள்ள அனைவரையும் சமூகநீக்கம் செய்ய வேண்டும் என்றும் போப்புவின் பிரதிநிதிக்கு போப்பு கட்டளை கொடுத்திருந்தார். (38)

போப்புமார்க்கத்தின் உண்மையான ஆவி இங்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது. போப்புமார்க்கத்தின் இந்த ஆவணத்தில் கிறிஸ்தவக் கொள்கையின் ஒரு சாயலும், பொதுவான ஒரு நீதியுங் கூடக் காணப்படவில்லை. லுத்தர் ரோம் நகரிலிருந்து வெகுதூரத்தில் இருந்தார். அவரது நிலையைக்குறித்து விளக்கவோ அல்லது அதன் சார்பாகப் பேசவோ அவருக்கு வாய்ப்பு உண்டாகவில்லை. அப்படி இருந்தும் அவரது வழக்கு விசாரிக்கப்படுமுன், அவரை மதப்புரட்டர் என்று அறிவித்து, அதே நாளில் அவர் கடிந்துகொள்ளப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டு, நியாயம்தீர்க்கப்பட்டு, குற்றவாளியாக்கப்பட்டார். இவைகளனைத்தையும் தன்னைத்தான் பரிசுத்த பிதா என்று சபை யிலும் நாட்டிலும் பிரகடனப்படுத்தியவரும், மேலும் பாவம் செய்ய முடியாதவர் என்கிற அதிகாரத்தையும் மேலாதிக்கத்தையும் எடுத்துக் கொண்டவருமான அந்த ஒருவர்—போப்பு—என்பவர் செய்தார்.(39)

உண்மையான ஒருநண்பனின் அனுதாபமும் ஆலோசனையும் லுத்தருக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்பட்டிருந்த அந்தச் சமயத்தில், தேவனது பாதுகாப்பு **மெலாங்தன்** என்பவரை விட்டன்பர்க் நகருக்கு அனுப்பியது. குறைந்த வயதும் அடக்கமும் சுயத்தில் நம்பிக்கை வைக்காத ஆழ்ந்து நிதானிக்கும் தன்மை, விசாலமான அறிவு, வெல்லும் பேச்சுத்திறன் ஆகியவைகளுடன், மெலாங்கதனின் தூய்மையும், நேர்மைமிக்க பண்பும் எல்லோரையும் ஈர்த்துக்கொள்ளுவதாகவும், வரவேற்கப்படுவதாகவும், மதிக்கப் படுவதாகவும் இருந்தது. அவரது திறமையின் சாதுரியம் அவரது சாதுவான இயல்பைவிட மேலானதாக இருக்கவில்லை. விரைவில் அவர் சுவிசேஷத்தின் ஆர்வமிக்க சீடராகி, லுத்தரின் மிகுந்த நம்பிக்கைக்குரிய நண்பராகி, உயர்ந்த ஆதரவாளராகவுமானார். அவரது சாதுவான தன்மை, ஜாக்கிரதை, சரியான நடத்தை ஆகியவை லுத்தரின் தைரியத்திற்கும் சக்திக்கும் துணையாக அமைந்தது. ஊழியத்தில் அவர்களிடத்தில் உண்டான ஒற்றுமை, சீர்திருத்தப்பணியின் பெலனை அதிகரிக்கச்செய்து, லுத்தருக்கு தைரியத்தையூட்டும் பெரும் ஆதாரமாகவும் அமைந்தது.(40)

ஆக்ஸ்பர்க் என்ற இடம் விசாரணை நடத்தப்படும் இடமாக ஏற்படுத்தப்பட்டு, அந்த இடத்திற்கு லுத்தர் நடந்தே சென்றார். மிகப்பெரும் அச்சம் அவரை வரவேற்றது. அவர் கைது செய்யப்பட்டு, வழியிலேயே கொலைசெய்யப்படுவார் என்னும் பயமுறுத்தல்கள் பகிரங்கமாக உண்டாயின. எனவே இந்த முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்று அவரது நண்பர்கள் கெஞ்சினார்கள். விட்டன்பர்கை விட்டுச் சிலகாலம் வெளியே சென்று, அவரை மகிழ்ச்சியுடன் பாதுகாக்கக்கூடியவர்களிடம் அடைக்கலம் காணும்படியுங்கூட, அவர்கள் கெஞ்சிக் கேட்டார்கள். ஆனால் தேவன் அவரை நிற்கும்படி ஏற்படுத்தின நிலையைவிட்டு நகரமாட்டேன் என்று அவர் கூறினார். அவருக்கு எதிராக வீசிக்கொண்டிருக்கிற புயலைக் கவனிக்காது, சத்தியத்தை விசுவாசத்துடன் காப்பதை அவர் தொடரவேண்டும். "நான் எரேமியாவைப்போல் சண்டையும் எதிர்ப்புகளும் உள்ள ஒரு மனிதனாக இருக்கிறேன். ஆனால் அவர்கள் தங்களுடைய அச்சுறுத்தல்களை எந்த அளவிற்கு அதிகரிக்கிறார்களோ, அந்த அளவிற்கு எனது மகிழ்ச்சியைப் பெருகச் செய்கிறார்கள் ... அவர்கள் எனது கௌரவத்தையும் நற்பெயரையும் ஏற்கனவே நாசமாக்கி விட்டார்கள். என்னிடம் மீதமாக இருப்பது மோசமான இந்த உடல் மட்டும்தான். அதையும் எடுத்துக்கொள்ளட்டும். அப்பொழுது எனது வாழ்க்கையின் காலத்தை சிலமணிநேரங்கள் குறைப்பார்கள். ஆனால் எனது ஆத்துமாவைப் பொறுத்தமட்டில், அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. உலகத்திற்குக் கிறிஸ்துவின் வார்த்தையைக் கொடுக்க விரும்புகிறவர்கள், மரணத்தை ஒவ்வொரு மணி நேரத்திலும் எதிர்பார்க்கவேண்டும்" என்பது அவரது பேச்சாக இருந்தது.—Ibid., b. 4, ch. 4. (41)

லுத்தர் ஆக்ஸ்பர்கிற்கு வந்துவிட்டார் என்ற செய்தி போப்புவின் பிரதிநிதிக்கு மிகுந்த திருப்தியைக் கொண்டுவந்தது. உலகத்தின் கவனம் முழுவதையும் எழுப்பிவிடுகின்ற சங்கடத்தை உண்டுபண்ணுகின்ற மதப்புரட்டன் இப்பொழுது ரோமன் கத்தோலிக்க நிர்வாகத்தின் வல்லமையில் இருப்பதுபோல் காணப்பட்டது. லுத்தரைத் தப்பிச்செல்ல விட்டுவிடக்கூடாது என போப்புவின் பிரதிநிதி எண்ணினார். சீர்திருத்தவாதி பாதுகாப்பு நடத்துதல் கடிதம் இல்லாது இருந்தார். அவரது நண்பர்கள் அந்தக்கடிதம் இல்லாமல் போப்புவின் பிரதிநிதிகளின் முன் லுத்தர் தோன்றவேண்டாமென்றதுடன், அந்தக் கடிதத்தைப் பேரரசனிடமிருந்து பெறும் பொறுப்பையும் அவர்களே ஏற்றுக்கொண்டனர். லுத்தரை எதிர்க்கும் குழுவின் தலைவராகிய போப்புவின் பிரதிநிதியோ முடிந்தால் லுத்தரைப் பின்வாங்கச் செய்யவும், முடியாவிட்டால், ஹஸ்ஸும் ஜெரோமும் அடைந்த பங்கை அடையும்படி, அவரை ரோமுக்கு அனுப்பிவைக்கும் நோக்க முடையவராகவும் இருந்தார். எனவே போப்புவின் பாதுகாப்பு நடத்துதல் கடிதம் இல்லாமல், தன்னுடைய

இரக்கத்தை நம்பி தன் முன் லூத்தர் தோன்றும்படித் தனது ஏவலாளர்கள் மூலமாக சூழ்ச்சிசெய்தார். சீர்திருத்தவாதி இதைச் செய்யப் பிடிவாதமாக மறுத்துவிட்டார். பேரரசனால் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டு, பாதுகாப்பு நடத்துதல் கடிதத்தைப் பெரும்வரை அந்தத் தூதரின் முன்பாக லூத்தர் செல்லவே இல்லை. (42)

மிகுந்த சாதுவான தன்மையைக் காட்டி, அதனால் லூத்தரைத் தங்கள்பால் வென்றுகொள்ளும் கொள்கையை உடையவர்களாக அவர்கள் இருந்தனர். அந்தப் பிரதிநிதி லூத்தருடன் நேர்முக சந்திப்பு நடத்தினபோது, மிகுந்த நட்புத்தன்மையை வெளிக்காட்டினார். ஆனால் அதே சமயம், ஒவ்வொரு விஷயத்திலும் எந்தவொரு கேள்வியும் கேட்காமல், சபையின் அதிகாரத்திற்குத் தவறாமல் கீழ்ப்படியவேண்டும் என்று தெளிவாகச் சொன்னார். அவர் சம்பந்தப்படவேண்டியிருந்த மனிதர்களின் சுபாவத்தைப்பற்றி அவர் சரியான அனுமானம் செய்யாமல் இருந்தார். அதற்கு மறுமொழியாக லூத்தர், சபையின்மீது தான் கொண்டிருந்த மதிப்பு, சத்தியத்தின்மீதுள்ள தனது வாஞ்சை, தான் போதித்திருந்த வைகளுக்கெதிரான மறுப்புகளுக்கு பதில் கூறத் தயாராக இருக்கும் தனது ஆயத்தம், தனது கோட்பாடுகளை குறிப்பிட்ட சில பல்கலைக் கழகங்களின் முடிவுக்கு விடுகின்ற கீழ்ப்படிதல் ஆகியவைகளை உணர்த்தினார். ஆனால் அதே சமயம் தனது தவறுகளைத் தெரிவிக்காமலேயே, தான் பின்வாங்கவேண்டுமென்ற கர்தினாலின் நிபந்தனைக்கு மறுப்பும் தெரிவித்தார். (43)

மறுத்துச்சொல்! மறுத்துச்சொல்! என்ற ஒன்று மட்டும்தான் பிரதிநிதி யின் பதிலாக இருந்தது. தனது கருத்துகள் வேதவாக்கியங்களால் தாங்கப் பட்டுள்ளதை அந்தச் சீர்திருத்தக்காரர் காட்டி, தன்னால் சத்தியத்தை மறுதலிக்க முடியாதென அறிவித்தார். லூத்தரின் வாதங்களுக்குப் பதில்சொல்ல முடியாத அவர், நிந்தனைகள், கிண்டல்கள், முகஸ்துதிகள்செய்து, முற்பிதாக்களின் பாரம்பரியங்களிலிருந்து எடுத்துக்கூறி, சீர்திருத்தவாதி பேசுவதற்கு அனுமதிக்காதிருந்தார். இந்த மாநாடு இப்படி நடந்தால் பலனிருக்காது என்பதைக் கண்ட லூத்தர் கடைசியில், எழுத்துவடிவில் தனது பதிலை சமர்ப்பிக்க விருப்பமற்ற அனுமதியைப் பெற்றார். (44)

இப்படிச் செய்வதைப்பற்றி அவர் தனது நண்பர் ஒருவருக்கு “இதில் ஒடுக்கப்பட்டவருக்கு இரண்டு விதமான நன்மை இருக்கிறது. முதலாவது, எழுதப்பட்டவைகள் மற்றவர்களின் நியாயத்தீர்ப்புக்கும் கொடுக்கப்படலாம். இரண்டாவது, மேலாதிக்கமுள்ள மனசாட்சியற்ற தனது எதிரி, தன் பேச்சுத் திறமையினால் தன்னை மேற்கொண்டு விடுவான் என்கிற பயத்தையும் தவிர்க்கலாம்” என்று எழுதினார். —Martyn, vol. 1, pp. 271-272. (45)

அடுத்த நேர்முகச் சந்திப்பில், வேத வாக்கியங்களால் தாங்கப்பட்ட, மேற்கோள் நிறைந்த, தனது மிகத்தெளிவான, சுருக்கமான வலிமை நிறைந்த கண்ணோட்டத்தை வெளிக்காட்டினார். இந்தத் தாள்களை அவர் சத்தமாக வாசித்தபின், அந்தக் கர்தினாலிடம் கொடுக்கவே, இவை எப்படியிருந்தாலும், வீணான வார்த்தைகளடங்கிய சம்பந்தமற்ற மேற்கோள்களின் திரட்சி என்ற குற்றச்சாட்டுடன், அவர் அவைகளை ஒரு பக்கமாக வைத்துவிட்டார். இப்பொழுது லுத்தர் முழுமையாகத் தூண்டப்பட்டவராக, அகந்தைமிக்க ஒரு குருவானவரை சபையின் பாரம்பரியங்கள், போதனைகள் என்ற அவரது யூகங்களின் அடிப்படையிலேயே மேற்கொண்டார். (46)

லுத்தரின் விளக்கங்களுக்கு பதில்சொல்லமுடியாத நிலை இருப்பதைக் கண்ட அந்த குருவானவர், தன் சுயக்கட்டுப்பாட்டை இழந்து, கோபத்துடன், நீ சொன்னவைகளை மறுதலிக்கவேண்டும். இல்லாவிட்டால், உன்னுடைய வழக்கை விசாரித்து அறியக்கூடிய ரோம் நகரிலுள்ள குழுவினிடத்திற்கு, உன்னை நான் அனுப்புவேன் என்று கத்தினார். மேலும், நான் உன்னையும் உன்னைச் சார்ந்தவர்களையும், எந்த நேரத்திலாவது உனக்கு ஆதரவு காட்டுபவர்களையும் சபையில் இருந்தும் விலக்குவேன் என்றார்.—D'Aubigne, b. 4, ch. 8 (47)

சீர்திருத்தவாதி, தன்னிடமிருந்து பின்வாங்குதலை எதிர்பார்க்க வேண்டாம் என்று தெளிவாக அறிவித்துவிட்டு, தனது நண்பர்களுடன் சேர்ந்து, அவ்விடத்தைவிட்டுப் பிரிந்துசென்றார். கர்தினாலின் நோக்கம் இப்படிப்பட்டதாக இல்லை. பலாத்காரத்தினால் லுத்தரைப் பணியச்செய்துவிடலாமென்று என்று தனக்குள் எண்ணிக்கொண்டிருந்தார். தனது ஆதரவாளர்களுடன் சேர்ந்து, தோல்வியைச் சந்திக்கும்படி தனித்துவிடப்பட்ட அவர், தனது திட்டங்களின் தோல்வியினால் மனக்குறைவுடன் ஒவ்வொருவரையும் நோக்கினார். (48)

இந்தச் சந்தர்ப்பத்தில் லுத்தர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் நல்ல பலனைத்தரத் தவறவில்லை. அங்கு கூடியிருந்த மன்றத்தினருக்கு அந்த இருமனிதர்களையும் ஒப்பிட்டுப்பார்க்கின்ற வாய்ப்பு கிட்டியிருந்தது. அவர்கள் வெளிக்காட்டியிருந்த ஆவியின் தன்மைகளைத் தங்களுக்குள் நிதானிக்கவும், அவர்களது நிலைமைகளில் இருந்த வலிமையையும், சத்தியத்தின் தன்மையையும் ஒப்பிடவும் முடிந்தது. இந்த வேற்றுமைகள் எவ்வளவு தெளிவானவைகள்! சாதாரணமாக—தாழ்மைமிக்க—உறுதியுள்ளவராக—சத்தியத்தைத் தனது சார்பில் கொண்டவராக—அந்த சீர்திருத்தவாதி தேவனுடைய பலத்தில் நின்றிருந்தார். தன்னைத்தான் முக்கியப்படுத்தினவராக, காரணமற்றவராக, வேத வாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு ஒரு வார்த்தையும் சொல்ல முடியாதவராக, போப்புவின் பிரதிநிதியாக இருந்தும்

மிகுந்த ஆங்காரத்துடனும் பின்வாங்கு அல்லது தண்டனை அடைவதற்கு ரோம் நகருக்குச்செல் என்று சொல்லுபவராகவே இருந்தார். (49)

பாதுகாப்பு நடத்துதல் கடிதம் இல்லாதவராக லூத்தர் இருந்திருந்தால், ரோமர்கள் அவரைக் கைதுசெய்து, சிறையில் வைக்கத் திட்டமிட்டிருந்தனர். அவர் தங்கி இருப்பதை நீட்டிப்பதினால் எந்தவிதமான பயனும் இல்லை என்றும், அவர் தாமதம் இன்றி விட்டன்பர்கிற்குத் திரும்பிச்செல்ல வேண்டும் என்றும், லூத்தரின் நண்பர்கள் அவரை அவசரப்படுத்தினார்கள். அந்த நோக்கத்தை இரகசியமாக வைப்பதில் மிகுந்த எச்சரிக்கையுடனிருப்பது அவசியம் என்றும் அவர்கள் கருதினார்கள். அதன்படி நீதிபதியினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வழிகாட்டியுடன், பொழுது விடியுமுன் அவர் ஒரு குதிரையிலேறி, ஆக்ஸ்பர்க் நகரைக் கடந்து சென்றார். பலவிதமான ஆபத்துக்களையும் எதிர்நோக்கினவராக, அவர் அந்த நகரின் இருண்ட அமைதியான தெருக்களை இரகசியமாகக் கடந்துசென்றார். விழிப்பும் கொடுமையுமிக்க அவரது எதிரிகள் அவரை அழிக்கத் திட்டமிட்டிருந்தனர். அவருக்காக விரிக்கப்பட்டிருந்த கண்ணிகளிலிருந்து அவர் தப்புவாரா? அந்த நேரமானது கவலையும் ஆர்வமுமிக்க ஜெபம் நிறைந்த விநாடிகளாக இருந்தன. நகரச் சுவரின் ஒரு சிறு வாசலை அவர் அடைந்தார். அந்த வாசல் அவருக்குத் திறக்கப்படவே, அவர் எவ்விதமான இடையூறுமின்றித் தன் வழிகாட்டியுடன் அதைக் கடந்துசென்றார். பாதுகாப்பாக வெளியேறியதும் தங்கள் ஓட்டத்தை விரைவுபடுத்தினார்கள் அந்த யாத்ரீகர்கள். லூத்தர் சென்றுவிட்டார் என்பதைப் போப்புவின் பிரதிநிதி அறிவதற்குமுன், அவரைத் துன்புறுத்துபவர்களுக்கு எட்டாத தூரத்திற்கு, லூத்தரும் அவரைச் சார்ந்தவர்களும் சென்றுவிட்டனர். சாத்தானும் அவனது ஏவலாளர்களும் தோற்கடிக்கப்பட்டனர்! வேட்டைக்காரனின் கண்ணியிலிருந்து ஒரு பறவை தப்பிச் செல்லுவதுபோல், தங்கள் வல்லமைக்குள் இருப்பதாக அவர்கள் எண்ணியிருந்த அந்த மனிதன் சென்றுவிட்டான்! (50)

லூத்தர் தப்பிச்சென்றுவிட்டார் என்ற செய்தியை அறிந்த போப்புவின் பிரதிநிதி, வியப்பினாலும் கோபத்தினாலும் திகைத்துப்போனார். சபைக்குத் தொந்தரவைக் கொடுத்துக் கொண்டிருந்த இந்த மனிதனுடைய காரியத்தில், அவர் காட்டிய ஞானத்திற்காகவும் உறுதிக்காகவும் அவருக்குப் பெரும் சிறப்புகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தார். ஆனால் அவரது நம்பிக்கை வீணாயிற்று. பின்னர் சாக்சோனியரைத் தேர்ந்தெடுத்த ஃப்ரட்ரிக் என்பவருக்கு தனது கோபத்தை வெளிக்காட்டி எழுதிய கடிதத்தில், லூத்தரை மிகுந்த கசப்புடன் மறுத்து, அவரை ரோம் நகருக்கு அனுப்பவேண்டும் அல்லது சாக்சோனியிலிருந்து புறம்பாக்கவேண்டுமென்று கோரி எழுதியிருந்தார். (51)

லுத்தர் தற்காப்பிற்காக, தனது தவறுகளை, போப்புவோ அல்லது அவரது பிரதிநிதிகளோ வேதவாக்கியங்களிலிருந்து தனக்கு எடுத்துக் காட்டும்படியாகவும், அப்படிக் காட்டினால், அவைகளைப் பக்திவிநயத்துடன் தான் ஒப்புக்கொண்டு தனது கொள்கைகளை மறுப்பதாகவும் வாக்குறுதி அளித்தார். இவ்வளவு பரிசுத்தமான ஒரு காரியத்திற்காக பாடனுபவிக்கத் தகுதியுடையவன் என்று தான் கருதப்பட்டதற்காக தேவனுக்கு நன்றி தெரிவித்திருந்தார். (52)

அந்தத் தேர்தல் அதிகாரிக்கு சீர்திருத்தக்கோட்பாடுகள் பற்றி மிகக்குறைவான அறிவுமட்டுமே இருந்தபோதிலும், லுத்தரின் பேச்சில் இருந்த நேர்மை வலிமை தெளிவு ஆகியவைகளினால் அவர் உணர்த்தப்பட்டு, சீர்திருத்தவாதி தவறில் இருக்கிறார் என்பது மெய்ப்பிக்கப்படும்வரை தான் (ஃப்ரட்ரிக்) அவரது பாதுகாப்பாளராக இருக்கத் தீர்மானித்தார். போப்புவின் பிரதிநிதியின் வேண்டுகோளுக்கு அவர்: “டாக்டர் மார்டின் லுத்தர் அவர்கள் ஆக்ஸ்பர்க் நகரில் உங்கள்முன் தோன்றினதால், நீங்கள் திருப்தியடைந்திருக்கவேண்டும். அவரது தவறுகளைப்பற்றி அவருக்கு உணர்த்தாமல், அவரைப் பின்வாங்கச் செய்யும்படி நீங்கள் முயல்வீர்கள் என்பதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. மார்டின் லுத்தர் அவர்களின் கோட்பாடு பக்தியற்றது அல்லது கிறிஸ்தவ சமயத்திற்கு எதிரானது அல்லது மதப்புரட்டானது என்று நமது துரைத்தனத்திலுள்ள கற்றவர்கள் எவருமே தெரிவிக்கவில்லை. எனவே அவரை ரோம் நகருக்கு அனுப்புவதையோ அல்லது நாட்டைவிட்டு வெளியேற்றுவதையோ நாங்கள் முற்றிலும் மறுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்” என்று பதிலளித்தார்.— D’Aubigne, b. 4, ch. 10 (53)

சமுதாயத்தில் சன்மார்க்கக் கட்டுப்பாடு பொதுவாக சீரழிந்து வருவதை அந்தத் தேர்தல் அதிகாரி கண்டார். ஒரு பெரும் சீர்திருத்தப்பணி அவசியமாக இருந்தது. மனிதன் தேவன் எதிர்பார்க்கிறவைகளையும், ஒளியடைந்த மனசாட்சியையும் அங்கிகரித்து கீழ்ப்படியத் தொடங்கினால், குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தவும் தண்டிக்கவும் வேண்டிய சிக்கலான தேவைகள் இருக்காது. இந்த நோக்கத்தை அடைவதற்காக லுத்தர் உழைப்பதையும், சபையில் அவரது செல்வாக்கு அதிகரித்துவருவதையும், உணரப்படுவதையும் கண்டு, அவர் இரகசியமாக மகிழ்ந்தார். (54)

லுத்தர் பல்கலைக்கழகத்தில் ஒரு மிக மேலான வெற்றிகரமான பேராசிரியராக இருப்பதையும் அவர் கண்டார். சீர்திருத்தவாதி தனது கோட்பாடுகளை கோட்டை ஆலயத்தின் கதவுகளில் ஆணியடித்து, ஒரு வருடம் தான் ஆகிறது அப்படியிருந்தும் சகல பரிசுத்தவான்களின் நாள்

எனப்படும் திருவிழாவிற்காக ஆலயத்திற்கு வரும் புனிதப் பயணிகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துவிட்டது. ரோமசபை, ஆராதனைக்கு செல்பவர்களையும், காணிக்கைகளையும் இழந்தது. ஆனால் அந்த இடம் விட்டன்பர்க் நகருக்கு வந்த வேறு ஒரு வகுப்பினரால் நிரப்பப்பட்டது. அவர்கள் புண்ணிய பொருட்களை நேசிக்கிறதற்காக வந்த யாத்ரீகர்கள் அல்ல் கல்விச்சாலையில் கற்பதற்கு வந்த மாணவர்கள். லுத்தரின் எழுத்துக்கள் வேதவாக்கியங்களில் புது ஆர்வம் என்னும் நெருப்பை எங்கும் கொளுத்தினது. ஜெர்மனியின் எல்லாப் பகுதிகளிலிருந்து மட்டுமல்ல, மற்ற நாடுகளிலிருந்தும் பல்கலைக்கழகத்திற்கு திரளாக மாணவர்கள் திரண்டனர். முதன் முதலாக விட்டன்பர்க் நகரைக் கண்ட இளைஞர்கள், மிகத்தூரமான நாடுகளுக்குள் ஒளி நுழையவேண்டுமென்று, கடந்த காலத்தில் இருந்த சீயோன் மலையைப்போல, விட்டன்பர்கிலிருந்து சத்தியத்தின் ஒளியை எங்கும் பரவச்செய்த தேவனை தங்கள் கரங்களை வானத்துக்கு நேராக உயர்த்தி ஸ்தோத்தரித்தனர்.—Ibid., b. 4, ch. 10. (55)

ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் தவறுகளிலிருந்து லுத்தர் இன்னும் பகுதியளவுதான் மாறியிருந்தார். ஆனால் போப்பு மார்க்கத்தின் கட்டளைகளையும் ஆட்சியமைப்புகளையும் தேவனுடைய பரிசுத்த பிரமாணங்களுடன் ஒப்பிட்டபோது, ஆச்சரியமடைந்தார். “போப்புவின் கட்டளைகளை நான் வாசித்துக்கொண்டிருக்கிறேன் ... போப்புதான் அந்திக் கிறிஸ்துவா? அல்லது அவனது சீடனா என்பதை நான் அறியேன்; கிறிஸ்து அந்த அளவிற்கு அவர்களால் திரித்துக்கூறப்பட்டும் சிலுவையிலறையப்பட்டு மிருக்கிறார்” என்று கூறினார்.—Ibid., b. 5, ch. 1. அப்படியிருந்தும் அந்தக் காலத்தில், லுத்தர் ரோமசபையின் ஆதரவாளராகவே இருந்து, அதன் ஐக்கியத்திலிருந்து பிரிவதைப்பற்றிய எண்ணங்கூட இல்லாதிருந்தார்! (56)

சீர்திருத்தவாதியின் எழுத்துக்களும் கோட்பாடுகளும் கிறிஸ்தவ உலகெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது. அந்த ஊழியம் சுவிட்சர்லாந்திற்கும் ஹாலந்திற்கும் பரவியது. அவரது எழுத்துக் களின் பிரதிகள் பிரான்சுக்கும், ஸ்பெயினுக்கும் சென்றன. இங்கிலாந்தில் அவரது போதனைகள் ஜீவ வார்த்தையாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. பெல்ஜியத்திற்கும், இத்தாலிக்குங்கூட சத்தியம் பரவியது. மரணத்திற்கு ஒப்பான மயக்கத்திலிருந்த ஆயிரக்கணக் கானவர்கள், விசுவாச வாழ்க்கையின் நம்பிக்கை என்னும் மகிழ்ச்சிக்கு விழித்தெழுந்தனர். (57)

லுத்தரின்தாக்குதலினால்,ரோமசபைதிக்குமுக்காடவே,மூடபக்தியுள்ள அவரது எதிரிகளில் சிலரும் கத்தோலிக்க பல்கலைக்கழகங்களிலிருந்த அறிஞர்களும் கலகம் செய்யும் இந்த சந்நியாசியைக் கொலைசெய்தாலும்

பாவம் இல்லை என்று அறிவித்தனர். ஒருநாள் ஒரு அந்நியன் தன் உடைக்குள் கைத்துப்பாக்கியை மறைத்துவைத்துக்கொண்டு, லுத்தரிடம் சென்று, அவர் ஏன் இவ்விதம் தனியாகப் பிரிந்து சென்றார் என்று கேட்டான். "நான் தேவனின் கரங்களில் இருக்கிறேன். அவர் எனது துணைவராகவும் கேடயமாகவும் இருக்கிறார். மனிதன் எனக்கு என்ன செய்யமுடியும்?" என்று லுத்தர் பதில் சொன்னார்.—Ibid., b. 6, ch. 2. இந்த வார்த்தைகளைக் கேட்டதும், அந்த அந்நியன் முகம் வெளிரிப்போய், பரலோகத்தின் தூதர்களுடைய சமுகத்திலிருந்து ஓடிப்போவது போல் ஓடிப்போனான். (58)

லுத்தரை அழிக்கும் தீர்மானமானமுடையதாக ரோம் இருந்தது. ஆனால் தேவன் அவரது பாதுகாப்பாக இருந்தார். பள்ளிமடங்களிலும், குடிசைகளிலும், மேலானவர்களின் கோட்டைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அரசர்களின் அரண்மனைகளிலும், எங்கும் அவரது கோட்பாடுகள் கேட்கப்பட்டன. அவரது முயற்சியைத் தாங்க, பெரிய மனிதர்கள் தங்கள் கரங்களை உயர்த்தி இருந்தனர். —Ibid., b. 6, ch. 2. (59)

இந்தச் சமயத்தில் தான் நிலை நிறுத்தவும் போதிக்கவும் வகைதேடிக்கொண்டிருந்த, விசுவாசத்தினால் உண்டாகும் நீதி என்னும் பெரிய சத்தியத்தை ஹஸ்ஸின் எழுத்துக்களிலிருந்தும் கண்டு, அதைப் பொஹிமிய சீர்திருத்தவாதி பற்றிக்கொண்டிருந்ததையும் அறிந்தார். "நாம் எல்லாரும்—பவுலும், அகஸ்டினும் நானும் நம்மை அறியாமலேயே ஹஸ்ஸைப் பின்பற்றுகிறவர்களாக இருந்திருக்கிறோம். தேவன் அதை உலகெங்கும் அறியச்செய்வார். ஒரு நூற்றாண்டுக்கு முன்பே சத்தியம் உலகத்திற்குப் பிரசங்கிக்கப்பட்டு அது பிரகாசித்து ஒளிர்ந்தது" என்று அவர் தொடர்ந்து கூறினார்.—Wylie, b. 6. ch. 1. (60)

"**கிறிஸ்துவின் பதிலாளி** என்ற அழைக்கப்படுபவர், எந்த ஒரு பேரரசனாலும் போட்டியிடமுடியாத அளவிற்கு அரக்கத்தன்மையை வெளிக்காட்டுவதுபேய்த்தனமானது. இதுதான், ஏழ்மையும்தாழ்மையுமாயிருந்த இயேசுவையோ அல்லது பரிசுத்த பேதுருவையோ பிரதிபலிக்கும் விதமா? போப்பு உலகத்தின் கர்த்தர் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் யாருடைய பதிலாளி என்று தன்னைச் சொல்லுகிறாரோ அவர்(கிறிஸ்து): 'என்னுடைய ராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல' என்று கூறினார். அவரது பதிலாளிகளின் ஆளுகை அவர்களுக்கு மேலானவருடைய ஆளுகையைவிடப் பெரிதாக இருக்குமா?" என்று கிறிஸ்தவ சீர்திருத்தத்தின் சார்பாக லுத்தர் ஜெர்மனியிலிருந்த மேலானவர்களுக்கும், பேரரசனுக்கும் எழுதினபோது போப்புவைக் குறிப்பிட்டு எழுதினார்.—D'Aubigne, b. 6, ch. 3. (61)

பல்கலைக்கழகங்களைப்பற்றி: "வேதவாக்கியங்களை விளக்குவதற்கு மிகவிழிப்பான கவனம் செலுத்தி, அவைகளை நமது இளைஞர்களின் இதயங்களில் எழுதாவிட்டால், பல்கலைக்கழகங்கள் நரகத்திற்கு நடத்தும் வாசலாக அமையும் என்று நான் மிகவும் பயப்படுகிறேன். வாழ்க்கையின் நியதியாக வேதவாக்கியங்கள் கருதப்படாத இடங்களில், ஒருவரும் தங்கள் பிள்ளைகளை அமர்த்தக்கூடாது என்று நான் உபதேசிக்கிறேன். தேவனுடைய வார்த்தைகளை விழிப்புடன் போதிக்காத ஒவ்வொரு அமைப்பும் கறைகள் நிறைந்ததாகிவிடும்" என்று எழுதினார்.—Ibid., b. 6, ch. 3. (62)

இந்த வேண்டுகோள் மிக விரைவாக ஜெர்மனி எங்கிலும்பரவி, மக்கள்மீது வல்லமைமிக்க செல்வாக்கை ஏற்படுத்தியது. நாடுமுழுவதும் கலக்கப்பட்டு, சீர்திருத்தத்தின் தரத்தை சூழ்ந்துகொள்ளும்படி, திரளானவர்கள் எழுப்பப்பட்டனர். லுத்தரின் எதிரிகள் பழிவாங்கும் ஆசையால் எரிந்து, அவருக்கெதிராக முடிவான நடவடிக்கை எடுக்கும்படி போப்புவை வற்புறுத்தினர். அவரது கோட்பாடுகள் உடனடியாக அழிக்கப்படவேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது. சீர்திருத்தவாதியும் அவரைச் சேர்ந்தவர்களும் தங்களது கோட்பாடுகளை மறுதலிப்பதற்கு அறுபது நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டனர். அதற்குப் பின்னரும் மறுதலிக்காவிட்டால், அவர்கள் யாவரும் சமூகத்திலிருந்து நீக்கப்படுவார்கள் என்ற எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. (63)

அது சீர்திருத்தத்திற்கெதிராக உண்டான பயங்கரமான நெருக்கடியாக இருந்தது. ஏனெனில், ரோமன் கத்தோலிக்க சபையால் சமூகநீக்கம்செய்யப்படுதல் என்பது நூற்றுக்கணக்கான வருடங்களாக, வல்லமைமிக்க அரசர்களுக்குங்கூட திகிலூட்டுவதாக இருந்தது. அது வல்லமைமிக்க பேரரசுகளையுங்கூட பயத்திலும் பாழ்க்கடிப்பிலும் நிரப்பியிருந்தது. அதின் பழி யார்மீது விழுந்ததோ, அவர்கள் எல்லோராலும் பயத்துடனும் திகிலுடனும் நோக்கப்பட்டனர். அவர்கள் தங்களது உறவினர்களின் தொடர்பிலிருந்து நீக்கப்பட்டு, சட்ட விரோதிகளாக நடத்தப்பட்டு அழிக்கப்படும்படியாக வேட்டை யாடப்பட்டிருந்தனர். லுத்தர் தம்மீது வீச இருந்த புயலைப்பற்றி அறியாதவராக இருக்கவில்லை. ஆனால் அவர், கிறிஸ்துவை தன்னைத் தாங்குபவராகவும் கேடயமாகவும்கொண்டு உறுதியுடன் நின்றிருந்தார். ஒரு இரத்தசாட்சியின் விசுவாசத்துடனும் தைரியத்துடனும் "என்ன நிகழ உள்ளது என்பதை நான் அறியேன் அதை அறிந்துகொள்ள நான் கவலைப்படவுமில்லை அந்த அடி எங்கு என்மீது விழுந்தாலும் சரி, நான் பயப்படவில்லை. பிதாவின் சித்தமில்லாமல், ஒரு இலையுங்கூட உதிர்வதில்லை என்றால், எந்த அளவிற்கு பிதாவானவர்

நம்மைக் கவனிக்கிறார்! நமக்காக மாம்சமான வார்த்தை தானே மரித்திருக்க, அந்த வார்த்தைக்காக உயிர்விடுதல் சாதாரண காரியம். அவருடன் நாம் மரிப்போமெனில், அவருடன் நாம் பிழைப்போம். நமக்கு முன்பாக அவர் கடந்து சென்றவைகளின் ஊடாக நாமும் கடந்துசென்றால், அவர் எங்கே இருக்கிறாரோ அங்கே நாமுமிருந்து, அவருடன் என்றென்றும் வாழ்வோம்" என்று குறிப்பிட்டார்.—Ibid., 3d London ed., Walther, 1840, b. 6, ch. 9. (64)

போப்புவின் கட்டளை லுத்தரை அடைந்தபோது, அவர்: "நான் இதை பக்தியற்றதாகவும் தவறானதாகவும் கருதி, நிந்தித்துத் தடுக்கிறேன். இதனால் இங்கு கிறிஸ்துவே குற்றவாளியெனத் தீர்க்கப்பட்டிருக்கிறார். மிகச் சிறந்த காரணத்திற்காக பாடுகளைச் சகிக்கும் நிலைமை எனக்கு உண்டா யிருப்பதை நான் மகிமையாக எண்ணுகிறேன். ஏனெனில் போப்புவே அந்திக்கிறிஸ்து என்றும், அவரது சிங்காசனம் சாத்தானுடையதென்றும் நான் அறிந்திருக்கிறேன்" என்றார். —D'Aubigne, b. 6, ch. 9. (65)

அப்படியிருந்தும் ரோமன் கத்தோலிக்க சபையின் கட்டளைக்குப் பலன் இல்லாமல் போகவில்லை. சிறை, சித்திரவதை, பட்டயம் ஆகியவை பணிவை வற்புறுத்தின. பலவீனமும் மூடநம்பிக்கையும் மிக்கவர்கள், போப்புவின் கட்டளைக்குமுன் நடுங்கி, பொதுவாக லுத்தரின்மீது அனுதாபம்கொண்டபோதிலும், இந்தச் சீர்திருத்தக் காரியத்திற்காக உயிரை அபாயத்திற் குள்ளாக்குவதைவிட, உயிர் மிகவும் அருமையானது என எண்ணினர். ஒவ்வொரு காரியமும் சீர்திருத்தவாதியின் பணியானது முடிவிற்கு வந்துவிட்டது போன்ற தோற்றத்தைத் தந்தது. (66)

ஆனால் லுத்தர் இன்னும் பயமற்றவராகவே இருந்தார். ரோமன் கத்தோலிக்க நிர்வாகம் அவர்மீது குற்றச்சாட்டுகளை வீசியது. அவர் அழிந்துபோவார் அல்லது கீழ்ப்படியும்படி பலாத்காரம் செய்யப்படுவார் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இன்றி உலகம் அவரை நோக்கியது. ஆனால் அவர் பயங்கரமான வல்லமையுடன் தண்டனையை அதன்மீதே திரும்பவீசி, அதைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்துசெல்லும் தனது தீர்மானத்தை பகிரங்கமாக அறிவித்தார். மாணவர்கள், அறிஞர்கள், சகலவிதமான அந்தஸ்திலும் இருந்த மக்கள் முன், லுத்தர் போப்புவின் ஆணையை, அதன் சட்டதிட்டங்களோடும், போப்புவின் வல்லமையைத் தாங்கும் சில எழுத்துக்களோடும் சேர்த்து எரித்தார். "சிலரது மனதிலுள்ள சத்தியத்தின் நோக்கத்தைக் காயப்படுத்தி, ஆத்துமாக்களை அழிக்க, எனது எதிரிகளால் எனது புத்தகங்களை எரிக்கமுடிந்தது. அதற்குப் பதிலாக, நான் அவர்களது புத்தகங்களை எரிக்கிறேன். அபாயகரமான ஒரு போராட்டம் இப்போது ஆரம்பமாகியுள்ளது. இதுவரை நான் போப்புடன் விளையாடிக்

கொண்டிருந்தேன் இப்போது பகிரங்கமான போரில் ஈடுபடுகிறேன். இந்த ஊழியத்தை நான் தேவனின் பெயரால் தொடங்கினேன். அது அவரது பலத்தினால், நான் இல்லாமலேயே முடிவடையும்" என்று கூறினார். — Ibid., b. 6, ch. 10. (67)

அவரது நோக்கத்தின் பலவீனங்களைக் காரணம்காட்டி, அவரை அசைத்து நிந்தித்த அவரது எதிரிகளை நோக்கி: "தேவையான இந்த ஊழியத்தைச் செய்யும்படி தேவன் என்னை தேர்ந்தெடுத்து அழைக்கவில்லை என்பது யாருக்குத் தெரியும்? என்னை நிந்திப்பதன்மூலமாக, யாரை நிந்திக்கிறோம் என்று பயப்பட வேண்டாமா? உளறுபவர்கள் தேவனைத்தான் நிந்திக்கிறோம் எனப் பயப்படவேண்டாமா? நான் தனித்திருக்கிறேன் என்று அவர்கள் கூறுகிறார்கள். அப்படியல்ல! எகிப்தைவிட்டு மோசே தனியாக போனபோது, ஆகாப் அரசன் ஆட்சிசெய்த காலத்தில் எலியா தனியாக இருந்தபோது, எருசலேமில் ஏசாயா தனியாக இருந்தபோது, பாபிலோனில் எசேக்கியேல் தனியாக இருந்தபோது, யேகோவா எப்படி அவர்களோடு இருந்தாரோ அப்படியே என்னுடனும் இருக்கிறார். ஓ! ரோம நிர்வாகமே! இதைக்கேள்! தேவன் ஒரு பிரதான ஆசாரியரையோ அல்லது உயர்ந்த மனிதனையோ தீர்க்கதரிசியாகத் தேர்ந்தெடுக்கவில்லை. மிகக்கீழான நிலைமையிலும் நிந்திக்கப்பட்டவர்களாகவும் இருந்த மனிதர்களைத் தேர்ந்தெடுத்தார். ஒரு தடவை, மேய்ப்பனாக இருந்த ஆமோசைக்கூட தேர்ந்தெடுத்தார். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அரசர் களையும், இளவரசர்களையும், கோழைகளான ஆசாரியர்களையும், ஞானவான்களையும் கண்டிக்கும்படி தங்களுடைய உயிர்களுக்கு ஆபத்தான நிலையில் பரிசுத்தவான்கள் வற்புறுத்தப்பட்டனர். நானும் ஒரு தீர்க்கதரிசி என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒடுக்குபவர்களின் அணியில் எண்ணிக்கையில் அதிகமானவர்களும், உயர் ஜாதியினர், செல்வம், பரிகசிக்கும் எழுத்துக்களும் இருக்கும்போது, நான் தனியாக இருப்பதினால் அவர்கள் குறிப்பாக பயப்படவேண்டும் என்று சொல்லுகிறேன். ஆம்! நான் தனியாக இருக்கிறேன். ஆனால் எனது பக்கத்தில் தேவனுடைய வார்த்தை இருப்பதினால், நான் அமைதியாக இருக்கிறேன். இத்தனை பெருமையான அவர்களது எண்ணிக்கையில், வல்லமைகளிலும் மிகப்பெரிய இந்த வல்லமை, அவர்களுடன் இல்லை" என்றார்.—Ibid., b. 6, ch. 10. (68)

அப்படியிருந்தும் தனக்குள் ஒரு இறுதிப் போராட்டத்தை நடத்தாமல், ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து பிரியவேண்டும் என்ற இறுதியான முடிவை லுத்தரால் எடுக்கமுடியவில்லை. அந்தச் சமயத்தில் அவர் "சிறு வயதில் மனதில் பதியவைக்கப்பட்ட ஒழுக்கங்களை, ஒரு பக்கமாக

விட்டுவிடுதல் எவ்வளவு கஷ்டமானது என்பதை நான் நாள்தோறும் உணருகிறேன். வேத வாக்கியங்கள் என் பக்கத்தில் இருந்தபோதிலும், போப்புவிற்கு எதிராகத் தனியாக நின்று, அவரை அந்திக்கிறிஸ்து என்று காட்டி, அதை நியாயப்படுத்துவது—ஓ! அது எனக்கு எவ்வளவு வேதனையைத் தந்தது! எனது இதயத்தின் துன்பங்கள் எப்படிப்பட்டவையாக இருந்தது! 'நீ ஒருவன் மட்டும்தான் ஞானியா? மற்ற எல்லோரும் தவறானவர்களா? நீ தவறுள்ளவனாயிருந்து உன் தவறில் பங்கெடுத்த ஏராளமான ஆத்துமாக்கள் நித்திய ஆக்கினையை அடைந்தால், அது எப்படி இருக்கும்' என்று போப்புமார்க்கத்தினரின் உதடுகளில் இருந்து அடிக்கடி உண்டான இந்தக் கேள்விகளை, மிகுந்த கசப்புடன் எனக்கு நானே எத்தனை தடவைகள் கேட்டிருந்திருப்பேன்! இந்தச் சந்தேகங்களுக்கெதிராக, கிறிஸ்து அவரது தவறாத வார்த்தைகளினால் என்னைப் பலப்படுத்தும்வரையில், நான் இவ்விதமாக என்னுடனும், சாத்தானுடனும் பேராடினேன்" என்று குறிப்பிட்டார். —Martyn, Vol.1, pages 372, 373. (69)

லூத்தர் தனது கோட்பாடுகளை மறுத்துக்கூறாவிட்டால், அவர் சபையிலிருந்து நீக்கப்படுவார் என்று போப்பு அறிவித்த இந்தப் பயமுறுத்தல், இப்பொழுது நிறைவேறியது. அவர் பரலோகத்தால் சபிக்கப்பட்டவர் என்றும், அவரது கோட்பாடுகளைப் பெறுபவர்கள் அனைவருக்கும் இதுவேதான் கதி என்றும், அவரை மறுத்து ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து அவரை இறுதியாகப் பிரிப்பதாக அறிவிக்கும் புதுக்கட்டளை தோன்றியது் மாபெரும் போட்டி முழுமை அடைந்தது! (70)

தங்களுடைய காலத்திற்குப் பொருத்தமான சத்தியத்தை அறிவிக்க, தேவன் பயன்படுத்தும் அனைவருக்கும் கிடைக்கும் பங்கு எதிர்ப்புதான்! அந்தக் காலத்திற்கு மிகவும் முக்கியமான ஒரு நிகழ்கால சத்தியம் லூத்தரின் காலத்தில் இருந்தது. சபைக்கான ஒரு நிகழ்கால சத்தியம், இன்று உள்ளது. தமது சித்தத்தின் ஆலோசனைப்படி அனைத்தையும் செய்கிறவர், மனிதர்களை மாறுபட்ட சூழ்நிலைகளில் வைத்து, அவர்கள் வாழும் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற தனித்தன்மை வாய்ந்த கடமைகளையும் அவர்கள்மீது வைப்பதில் பிரியமுடையவராக இருக்கிறார். தங்களுக்குக் கிடைக்கும் ஒளியை விலைமதிப்புள்ளதாகப் போற்றுபவர்களுக்குமுன், சத்தியத்தைப்பற்றிய விசாலமான காட்சி திறக்கப்படும். லூத்தரை எதிர்த்த போப்பு மார்க்கவாதிகளின் காலத்தில் இருந்ததைப்போலவே, பெரும் பான்மையினரால் சத்தியம் இன்றும் விரும்பப்படாமல் இருக்கிறது. முன்காலத்தில், தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளாமல், மனிதர்களுடைய தத்துவங்களையும் பாரம்பரியங்களையும் மட்டுமே ஏற்றுக்கொண்ட குணம் இன்றும் இருக்கிறது.

கடந்தகாலத்தில் சீர்திருத்தவாதிகள் சத்தியத்தை முன்வைத்தபோது, அப்போது இருந்தவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தார்கள் ஆனால் இப்போது உள்ளவர்கள் அதை விருப்போடு ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நிகழ்கால சத்தியத்தை முன்வைப்பவர்கள் எதிர்பார்க்கக்கூடாது. இந்த உலகம் அதன் வரலாற்றின் முடிவை நெருங்கும்போது, சத்தியத்திற்கும்—தவறுகளுக்கும், கிறிஸ்துவுக்கும்—சாத்தானுக்கும் இடையில் நிகழும் மாபெரும் போராட்டத்தின் உக்கிரம் அதிகரிக்கவேண்டியதாக உள்ளது. (71)

“நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும், நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினது உண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள். அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்” (யோவான் 15: 19,20) என்று இயேசு அவரது சீடர்களுக்குச் சொன்னார். “எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் புகழ்ச்சியாகப் பேசும்போது உங்களுக்கு ஐயோ! அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்” (லூக்கா 6:26) என்று நமது கர்த்தர் தெளிவாகக் கூறினார். உலகத்தின் ஆவி, முன்காலத்தில் இருந்ததைவிட, இன்று கிறிஸ்துவின் ஆவியுடன் அதிகமாக இசைந்திருக்கவில்லை. எனவே, தேவனுடைய சத்தியத்தை அதன் தூய்மையுடன் பிரசங்கிப்பவர்கள், முன்பு இருந்ததைவிட அதிகமான ஆதரவை இன்று பெறமாட்டார்கள். சத்தியத்திற்கு விரோதமான எதிர்ப்பின் உருவம் மாறலாம் அந்தப் பகைமை வெளிப்படையாகத் தோன்றாமலிருக்கலாம் ஏனெனில் அது மிகவும் தந்திரமானதாக உள்ளது. ஆனால் அந்த எதிர்ப்பு இன்றும் உள்ளது. காலத்தின் முடிவுவரைக்கும் அது வெளிக்காட்டப்படும். (72) ★

# 8

# சிங்கத்தின் குகையில் சீர்திருத்தவாதி!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 145–170)**

ஐந்தாம் சார்லஸ் என்ற புதிய பேரரசன் ஜெர்மனியின் அரியணை ஏறினான். அவனுடைய வல்லமையை சீர்திருத்தத்திற்கு எதிராகச் செயல்படுத்தும் நோக்கத்துடன், ரோமன் கத்தோலிக்க சபையின் பிரதிநிதிகள் தங்களது வாழ்த்துக்களை அவனுக்கு தெரிவிக்க விரைந்தனர். மற்றொருபக்கத்தில், தன்னைப் பேரரசனாகத் தேர்வு செய்ததற்காக ஐந்தாம் சார்லஸ் பெருமளவிற்குக் கடமைப்பட்டிருந்த சாக்சோனியனான தேர்தல் அதிகாரி, லுத்தரைப்பற்றி விசாரணை செய்யாமல் அவருக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று மன்றாடி இருந்தார். இப்படியாக, அந்தப் பேரரசன் குழப்பமும் சங்கடமுமிக்க நிலைமைக்கு ஆளானான். லுத்தருக்கு மரணதண்டனை வழங்கும் அரசகட்டளையைத் தவிர, வேறெதிலும் போப்புமார்க்க நிர்வாகிகள் திருப்தியடையமாட்டார்கள். "பேரரசனோ அல்லது வேறு எவருமோ லுத்தரின் எழுத்துக்கள் மறுக்கப்பட்டு உள்ளன என்று எனக்குத் தெளிவுபடுத்தவில்லை" என்று அந்தத் தேர்தல் அதிகாரி உறுதியாக அறிவித்து, எனவே, "கற்றறிந்த, பக்தியுள்ள, பட்சபாதமற்ற நீதிபதிகளின் குழுவின் முன்பாக டாக்டர் லுத்தர் தனக்காகப் பேசும்படி பாதுபாப்பு நடத்துதல் கடிதத்துடன் அழைக்கப்படவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். —D'Aubigne, b. 6, ch. 11. (1)

சார்லஸ் பேரரசனானதும் வோம்ஸ் நகரில் கூடின ஜெர்மன் மாநிலங்களின் சட்டமன்றத்தின்மீது, அனைத்துக்கட்சியின் கவனமும் திரும்பியது. இந்த தேசியக் குழுவினால் ஆலோசிக்கப்படவேண்டிய அரசியல் கேள்விகளும் மற்ற காரியங்களும் இருந்தன. ஏனெனில், இந்தக்

கவனமிக்க மன்றத்தில் ஜெர்மன் நாட்டின் இளவரசர்கள் முதல் தடவையாக இளைஞனான அவர்களது பேரரசனை சந்திக்க வேண்டியிருந்தது. சபை மற்றும் நாட்டின் சிறப்புமிக்கவர்கள் தந்தையர் நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் இங்கு வந்திருந்தனர். சமயச்சார்பற்ற பிரபுக்கள், உயர் குடும்பங்களில் பிறந்தவர்கள், தங்களின் பாரம்பரிய உரிமைகளைப் பற்றிய வைராக்கியம்கொண்டவர்கள், **இளவரசத்தன்மைமிக்க** சபைப் பிரசங்கிகள், மெய்க் காப்பாளர்களுடன் அரசவையிலிருக்கும் வீரர்கள், அயல்நாடுகளிலும் தூர தேசங்களிலிருந்தும் வந்திருந்த தூதுவர்கள் ஆகிய அனைவரும் வோம்ஸ் நகரில் கூடியிருந்தனர். அப்படியிருந்தும் அப்பெரும் கூட்டத்தினருக்கிடையில், லுத்தரின் காரியம்தான் பெரும் உணர்ச்சிப் பெருக்கிற்குக் காரணமாயிருந்தது. (2)

லுத்தருக்குப் பாதுகாப்புத் தருவதாக வாக்குறுதி தந்து, கேள்விக்குரிய பிரச்சினைகளைப்பற்றித் தகுதிவாய்ந்த மனிதர்களுடன் சுதந்திரமாக விவாதம் நடத்தும் வாக்குத்தத்தம் செய்து, அவரைப் பிரதிநிதிகளின் கூட்டத்திற்கு அழைத்துவரும்படி, தேர்தல்அதிகாரிக்கு சார்லஸ் உத்தரவிட்டார். பேரரசனின் முன்பாகத் தோன்ற லுத்தர் ஆவலுள்ளவராக இருந்தார். அவரது உடல்நலம் அந்த நேரத்தில் மிகவும் சீர்கெட்டிருந்தது. அப்படியிருந்தும் "என்னால் நல்ல உடல் நலத்துடன் வோம்ஸ் நகருக்குச் செல்லமுடியாமல்போனால், நான் இருக்கும் இந்த நோயுற்ற நிலையில் சுமந்துசெல்லப்படுவேன். ஏனெனில் பேரரசன் என்னை அழைத்திருப்பதால், தேவன்தாமே அழைத்திருக்கிறாரா என்று நான் சந்தேகிக்க இயலாது. பெரும்பாலும் அவர்கள் செய்வதைப்போல எனக்கு எதிராகப் பலாத்காரத்தைப் பிரயோகித்தால், ... என்னை அங்கே வரும்படி அவர்கள் அழைத்திருப்பது நிச்சயமாக என்னிடத்திலிருந்து கற்றுக்கொள்வதற்காக அல்ல ... இந்தக்காரியத்தை நான் கர்த்தரின் கரத்தில் வைக்கிறேன். எரியும் நெருப்புச் சூளையிலிருந்து அந்த மூன்று வாலிபர்களைக் காத்த அவர், இன்றும் உயிருடனிருந்து ஆட்சிசெய்து வருகிறார். அவர் என்னைக் காப்பாற்றாவிட்டால், எனது உயிர் பெரிய காரியமல்ல. தேவபக்தியற்றவர்கள் பரிகசிக்கிறதற்கேதுவாக சுவிசேஷத்தை வெளிப்படுத்தாமலிருப்பதில் கவனமாயிருப்போம். அவர்கள் வெற்றியடைய அனுமதிப்பதற்குப் பதிலாக, அதற்காக நாம் இரத்தம் சிந்துவோம். எனது ஜீவனோ அல்லது மரணமோ, என் சகோதரர்களின் இரட்சிப்பிற்கு எது அதிகம் உதவும் என்பதை யாரால் சொல்லமுடியும்? ஓடிப்போவதையும் திரும்பப் பெறுவதையும் தவிர, அனைத்தையும் என்னிடத்திலிருந்து நீங்கள் எதிர்பார்க்கலாம். ஓடுவது என்னால் முடியாது. நான் சொன்னதை திரும்ப பெறுவது அதைவிடவும் கடினம்" என்று தேர்தல் அதிகாரிக்கு லுத்தர் எழுதினார்.—Ibid., b. 7, ch. 1. (3)

பிரதிநிதிகள் மன்றத்திற்குமுன் லூத்தர் தோன்ற இருக்கிறார் என்னும்செய்தி பரவியபோது. அது ஒரு பொதுவான உணர்ச்சிக் கொந்தளிப்பை உண்டுபண்ணியது. இந்தக் காரியம் ஒப்படைக்கப் பட்டிருந்த போப்புவின் பிரதிநிதியான அலேயாண்டர் எச்சரிக்கையும், மூர்க்கமும் அடைந்தார். இதன் முடிவு போப்புவின் நோக்கத்தைப் பாழ்க்கடிப்பதாக இருக்கும் என்பதை அவர் கண்டார். ஏற்கனவே **குற்றமுள்ளது** என்று போப்பு தீர்ப்பளித்திருந்த ஒரு காரியம்பற்றி விசாரணை நடத்துவது, போப்புவின் மேலாண்மையை அவமதிப்பதாக இருக்கும். இதற்கும்மேலாக, லூத்தரின் பேச்சுவன்மையும், வல்லமையுமிக்க வாதங்களும் இளவரசர்களில் அநேகரை போப்புவின் காரியத்திலிருந்து திரும்பச் செய்யும் என்பதைப்பற்றி அவர் பயந்திருந்தார். எனவே, மிகுந்த அவசரத்துடன் லூத்தருக்கெதிரான குறைகளை எடுத்துச்சொல்லி, லூத்தர் வோம்சில் தோன்றக்கூடாது என்றார். இந்தச் சமயத்தில், லூத்தரை சமூகத்திலிருந்து தள்ளிவைக்கும் கட்டளை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருந்தது. அலேயாண்டர் சொன்னதும் இக்கட்டளையும் சேர்ந்து பேரரசனை அப்பிரதிநிதியின் வேண்டுகோளுக்கு இணங்கத் தூண்டியது. எனவே, லூத்தரால் பின்வாங்கமுடியாவிட்டால், அவர் விட்டன்பர்கிலேயே இருக்கவேண்டும் என்று பேரரசன் தேர்தல் அதிகாரிக்குக் கடிதம் எழுதினார். (4)

இந்த வெற்றியினால் திருப்தியடையாத அலேயாண்டர், ஒரு தனது கட்டளையின் கீழிருந்த எல்லா வல்லமையோடும் லூத்தரின் அழிவை உறுதிப்படுத்த வேலைசெய்தர். ஒரு மேன்மையான காரியத்தை நடத்தும் உறுதியுடன், சீர்திருத்தவாதியின் மேல் துரோகம், கிளர்ச்சி, தெய்வ பயமின்மை, தேவதூஷணம் ஆகிய குற்றங்களைச் சாட்டி, இளவரசர்கள், குருமார்கள், சட்டமன்றத்தின் பிற அங்கத்தினர்களின் கவனத்தில் திணித்தான். அந்தப் பிரதிநிதி வெளிக்காட்டின கோபாவேசமும் உணர்ச்சிகளும் அவன் எந்த ஆவியினால் செயலாற்றுகிறான் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியது. அவர் வெறுப்புடனும் பழிவாங்கும் எண்ணத்துடனும் நடந்துகொள்ளுகிறார் “வைராக்கியமும் பக்தியும்விட, வெறுப்பும் பழிவாங்கும் எண்ணமுமே அவரது நோக்கமாயிருந்தன” என்று ஒரு கத்தோலிக்க எழுத்தாளர் கூறினார்.—Ibid., b. 7, ch. 1. பிரதிநிதிகளின் சபையின் பெரும்பான்மையோர் லூத்தரின் காரியத்தை இதற்குமுன் இருந்ததைவிட, இப்பொழுது அதிகமாக ஆதரித்தனர். (5)

போப்புவின் கட்டளையை நிறைவேற்றும்படி இரட்டிப்பான வைராக்கியத்துடன் அலேயாண்டர் பேரரசனை வற்புறுத்தினார். ஆனால் ஜெர்மன் நாட்டின் சட்டத்தின்படி இளவரசர்களின் சம்மதம் இல்லாமல்

இதை நிறைவேற்றமுடியாது. எனினும் இந்தக் காரியத்தை பிரதிநிதிகள் சபைக்குமுன் வைக்கும்படி அவரை அழைத்தான். போப்புவின் பிரதிநிதிக்கு அது ஒரு பெருமைமிக்க நாளாக இருந்தது. அந்தச் சட்டமன்றம் பெரியதாக இருந்தது. அதில் இருந்த காரியம் அதைவிடப் பெரியதாக இருந்தது. சகல சபைகளுக்கும் தாயும் எஜமானியுமாயிருந்த ரோமன் கத்தோலிக்க சபைக்காக அலேயாண்டர் பரிந்துபேசவேண்டியதிருந்தது. கூடியிருந்த கிறிஸ்தவஉலகத்தின் துரைத்தனங்களுக்குமுன், தனது சபையினுடைய பேதுருவின் வாரிசுத்தன்மையை நியாயப்படுத்தவேண்யதிருந்தது. அவர் மிகுந்த பேச்சுத் திறன் உடையவராக இருந்ததால், அப்பெரும் சந்தர்ப்பத் திற்குத் தக்கவாறு உயர எழுந்தார். மிகப் பெரும் மதிப்புமிக்க விசாரணை மன்றத்தில், ரோமன் கத்தோலிக்க சபை குற்றமுடையது என்று பழிதீர்க்கப்படுமுன், அதனுடைய மாபெரும் பேச்சு வன்மை மிக்கவர்கள் அதற்காகப் பரிந்துபேசும்படி தெய்வீக ஏற்பாடு உத்தர விட்டிருந்தது.—Wylie, b. 6, ch. 4. கொடுக்கப்பட்டிருந்த சில தவறான செய்திகளினால் சீர்திருத்தவாதியின் ஆதரவாளர்கள் அலேயாண்டரின் பேச்சினால் உண்டாகவுள்ள விளைவினை எதிர்நோக்கி இருந்தனர். சாக்சோனியரின் தேர்தல் அதிகாரி அங்கு இருக்கவில்லை. ஆனால் அவரது உத்தரவின்படி இந்த சந்நியாசியின் பேச்சைக் குறிப்பெடுக்கும்படி, அவரது ஆலோசகர்களில் சிலர் அந்தக் கூட்டத்தில் தோன்றியிருந்தனர். (6)

சத்தியத்தைக் கவிழ்க்கும்படி அலேயாண்டர் தனது கல்வியின் முழுத்திறமையுடனும் பேச்சுத்திறமையுடனும் தயாரானார். லுத்தர், சபை, நாடு, உயிருள்ளவர்கள், இறந்தவர்கள், போதகர்கள், சாதாரண விசுவாசிகள், ஆலோசனைக் குழுக்கள், தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் எதிரியாக இருக்கிறார் என்று அவர்மீது ஒன்றன்பின் ஒன்றாகக் குற்றச்சாட்டுக்களை வீசினார். இலட்சம் பேர்களைச் சுட்டெரிக்கப் போதுமான தவறுகள், லுத்தர் ஒருவரின்மீதே உள்ளது என்றும் அவர் அறிவித்தார். (7)

“லுத்தரைப் பின்பற்றின அனைவரும் எப்படிப்பட்டவர்கள்? அவரால் திசை திருப்பிவிடப்பட்டு, தவறாக நடத்தப்பட்டுள்ள பொதுமனிதர்களுடன் சேர்ந்த, சீர்திருத்தப்படமுடியாத நிலையிலுள்ள, ஒழுங்கில்லாத கீழ்மக்கள், திமிர்பிடித்த இலக்கணவாதிகள், ஊழல்மிக்க குருமார்கள், சிற்றின்பப் பிரியரான சந்நியாசிகள், அறியாமைமிக்க வழக்கறிஞர்கள், தரம்தாழ்ந்த மேன்மக்கள் போன்றவர்களே! எண்ணிக்கையிலும், நுண்ணறிவிலும் வல்லமையிலும் கத்தோலிக்க மார்க்கம் எவ்வளவு மேலானதாக உள்ளது! மிக வெளிச்சம் உள்ளதாகக் காணப்படும் இந்த மன்றத்தில் ஏகமனதாக உண்டாகும்

தீர்மானம், தங்களது ஆபத்துக்களை உணராமல் இருப்பவர்களின் கண்களைத் திறந்துகாட்டி, சலனமடைந்துகொண்டிருப்பவர்களைத் தீர்மான மெடுக்கச்செய்து, பலவீனமான இதயமுள்ளவர்களைப் பலப்படுத்தும்" என்றார்.—D'Aubigne, b. 7, ch. 3. (8)

இப்படிப்பட்ட ஆயுதங்களினால், சத்தியத்திற்காகப் பரிந்து பேசுபவர்கள் ஒவ்வொரு காலத்திலும் தாக்கப்பட்டுள்ளனர். தேவனுடைய தெளிவும் நேரடியானதுமான வார்த்தைகளுக்கு விரோதமான காரியங்களுக்கு எதிராக தங்கள் வாதங்களை முன்வைக்கத் துணிபவர்களின்மீது இதே மாதிரியான குற்றச்சாட்டுக்கள் கொண்டுவரப்படுகின்றன. "புதிய கோட்பாடுகளைப் போதிக்கும் இந்தச் சொற்பொழிவாளர்கள் யார்?" என்று மக்களில் பிரபலமான சமயத்தை விரும்புகிறவர்கள் வியப்படைகிறார்கள். "அவர்கள் கல்வியில்லாதவர்களும், குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்களும், கீழ்வகுப்பினராகவும் உள்ளனர். அப்படியிருந்தும் தங்களிடம் சத்தியம் உள்ளதாகவும் தாங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களெனவும் உரிமைபாராட்டுகின்றனர். அவர்களே அறியாமை உள்ளவர்களும் வஞ்சிக்கப்பட்டவர்களுமாம். எங்களது சபையில் உள்ளவர்கள் செல்வாக்கிலும் எண்ணிக்கை யிலும் எவ்வளவு உயர்ந்தவர்கள்! எவ்வளவு கற்றவர்களும் பெரியவர்களும் எங்களுக்கிடையில் உள்ளனர்! எங்கள் பக்கத்தில் எவ்வளவு அதிகமான வல்லமை உள்ளது!"—இவைகளே உலகின் மீதுள்ள அவர்களது செல்வாக்கைச் சொல்லக்கூடியவைகளாக உள்ளன. சீர்திருத்தவாதியின் நாட்களில் இருந்ததுபோலவே அவைகள் இன்றும் முழுமையானவைகளல்ல. (9)

அநேகர் நினைப்பதுபோல் சீர்திருத்தம் லுத்தருடன் முடிவடையவில்லை. இந்த உலக வரலாற்றின் முடிவுவரை அது தொடரப்படவேண்டும். தேவன் தன்மீது பிரகாசிக்க அனுமதித்த ஒளியை, மற்றவர்களின்மீது பிரகாசிப்பிக்கச் செய்கின்ற பெரும்பணி லுத்தருக்கிருந்தது. அப்படியிருந்தபோதிலும், உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய முழு வெளிச்சத்தையும் அவர் பெறவில்லை. அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம்வரை, வேத வாக்கியங்களின்மீது ஒளி தொடர்ந்து பிரகாசித்துக் கொண்டிருப்பதுடன், மேலும் **புதிய சத்தியங்கள் தொடர்ச்சியாக மலர்ந்துகொண்டும் இருக்கின்றன.** (10)

பிரதிநிதியின் பேச்சு மன்றத்தினர்மீது ஆழ்ந்த உணர்வினைப் பதித்தது. போப்புவின் அந்த வீரரை அவ்விடத்தைவிட்டு மறையச் செய்ய, தெளிவும் திருப்திப்படுத்தக்கூடியதுமான தேவனுடைய வார்த்தையைச் சொல்லும் லுத்தர் அங்கிருக்கவில்லை. சீர்திருத்தவாதியின் சார்பில் பேசுவதற்காக வேறு

எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அவர் போதித்த கோட்பாடுகள் குறை உடையவைகள் என்று பழிக்கப்பட்டதுமல்லாமல், முடியுமானால் மதப்புரட்டராகிய அவரையே வேருடன் பிடுங்கிவிடவேண்டுமென்ற ஒரு பொதுவான நோக்கம் அங்கு காணப்பட்டது. தனது காரியத்தைச் சொல்ல ரோமன் கத்தோலிக்க சபைக்குப் போதுமான அனுகூலமிக்க வாய்ப்புகள் கிடைத்திருந்தன. தன்னுடைய நேர்மையைச் சொல்லுவதற்காக அவனிடமிருந்த அனைத்தையும் அவன் கூறினான். ஆனால் வெற்றியின் அந்த வெளித்தோற்றம் தோல்வியின் அடையாளமாக இருந்தது. வெளிப்படையான போரில் ஈடுபடுவதன் வழியாக சத்தியத்திற்கும் தவறுக்குமிடையில் உள்ள வேற்றுமை இனிமேல் மிகத்தெளிவாகக் காணப்படும். ரோமன் கத்தோலிக்க சபை அதுவரை பாதுகாப்பாக நின்றிருந்ததுபோல, அந்த நாளிலிருந்தது ஒருபோதும் நிற்க முடியாமலாகிவிட்டது. (11)

நீதிமன்றத்திலிருந்த அங்கத்தினர்களில் அநேகர், ரோமன் கத்தோலிக்க சபையின் பழிவாங்குதலுக்கு லுத்தரை விட்டுவிடத் தயங்காமலிருந்த அதே சமயத்தில், சபையில் நிலவிவரும் ஒழுக்கக் கேடுகளைக் கண்டு கண்ணீர்விட்டு, மதத்தலைவரின் பேராசை, ஊழல் ஆகியவைகளின் விளைவாக ஜெர்மன் மக்களின்மீது நிகழ்ந்துள்ள அத்துமீறல்களைத் தடுத்தமர்த்த விரும்பினர். மிகவும் அனுகூலமான வெளிச்சத்தில் போப்புவின் ஆளுகையை அந்தப் பிரதிநிதி எடுத்துக்காட்டினார். இப்பொழுது போப்புமார்க்கத்தின் கொடுங்கோன்மையைச் சரியான முறையில் எடுத்துரைக்க பிரதிநிதிகளின் சபையிலிருந்த அங்கத்தினர்களில் ஒருவரைக் கர்த்தர் ஏவினார். போப்புமார்க்கத்தின் வஞ்சனைகள், அக்கிரமங்கள், அவைகளினால் உண்டான பயங்கரமான விளைவுகள் ஆகியவைகளை மிகச்சரியான விதத்தில் ஜார்ஜ் சாக்சோனி என்ற பிரபு, இளவரசர்கள் நிறைந்திருந்த அந்தச் சபையில், மேன்மைமிக்க உறுதியுடன் எழுந்துநின்று கோடிட்டுக் குறிப்பிட்டுக் காட்டினார். அவர் தன் பேச்சை முடிக்கும்போது: (12)

“பரிகாரம் தேடப்படும்படி ரோமன் கத்தோலிக்க சபைக்கு எதிராகக் கூக்குரலிடப்படும் அத்துமீறல்களில் இவை ஒருசிலதுதான். சகலவிதமான வெட்கத்தையும் ஒருபக்கமாக வைத்துவிட்டு, அது விடாப்பிடியாகத் தொடர்ந்த அதன் ஒரே நோக்கம்: பணம்! எப்போதும் பணம் மட்டும்தான்! என்று பின்தொடர்ந்தார். அதற்காக, சத்தியத்தைப் போதிப்பதை தங்களது கடமையாகக் கொள்ளவேண்டிய அந்த மனிதர்கள், தவறானவைகளைத் தவிர, வேறொன்றையும் கூறுவதில்லை. அதற்காக அவர்கள் சகித்துக்கொள்ளப்படுவது மட்டுமன்றி போற்றவும்படுகின்றனர். ஏனெனில் எந்த

அளவிற்கு அவர்களது பொய்கள் பெரியவைகளாக இருந்தனவோ, அந்த அளவிற்கு அவர்களது ஆதாயமும் அதிகமாக இருக்கிறது. எப்பக்கமும் ஊழல்கள் வழிந்தோடும் நீருற்றுக்களின் துர்நாற்றமிக்க ஆதாரமாக அது உள்ளது. ஊதாரித்தனமும், பேராசையும் கைகோர்த்துச் செல்லுகின்றன. ஐயோ பாவம்! குருமார்களின் ஊழல் அநேக ஏழ்மையான ஆத்துமாக்களை நித்தியமாக அழிவிற்குள் அமிழ்த்தும் காரணமாக உள்ளது. ஒரு முழுமையான சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்” என்றார்.— Ibid., b. 7, ch. 4. (13)

இந்த அளவிற்கு தகுதியும் வலிமையும்மிக்க போப்பரசாட்சியின் அத்துமீறல்களுக்கெதிராக பகிரங்கமான குற்றச்சாட்டை, லுத்தர் இருந்திருந்தால்கூட, அவரால் முன்வைத் திருந்திருக்க முடியாது. இப்படிப் பேசியவர் லுத்தருக்கெதிரான தீர்மானமான எதிரியாக இருந்ததால், அவரது வார்த்தைகளுக்கு அதிகமான செல்வாக்கு உண்டானது. (14)

அந்த மன்றத்திலிருந்தவர்களின் கண்கள் திறக்கப்பட்டிருந்தால், தவறுகளான இருளை நீக்கி, சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மனங்களையும் இதயங்களையும் திறக்க, தேவ தூதர்கள் அவர்களுக்கு மத்தியில் இருந்து ஒளிக்கதிர்களை வீசிக்கொண்டிருந்ததைக் கண்டிருப்பார்கள். சீர்திருத்தத்தின் எதிரிகளாயிருந்தவர்களையுங்கூட, சத்தியமான தேவனுடைய வல்லமையும் ஞானமும் கட்டுப்படுத்தியது. இவ்வாறாக, நிறைவேற்றப்படவேண்டிய பெரும் பணிக்கும் அது பாதையை ஆயத்தப்படுத்தியது. மார்டின் லுத்தர் அந்த மன்றத்தில் இருக்கவில்லை. ஆனால் லுத்தரைவிடப் பெரியவரான ஒருவரின் சத்தம் அந்த மன்றத்தினரால் கேட்கப்பட்டது. (15)

ஜெர்மன் மக்களின்மீது அவ்வளவு பாரமாகச் சுமத்தப்பட்ட ஒடுக்குதலை கணக்கிட ஆயத்தமாகும்படி, அந்தப் பிரதிநிதிகளின் சபையில் உடனடியாக ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்த அத்துமீறல்களைச் சீர் திருத்தும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி, பேரரசனுக் கான மன்றாட்டுடன் நூற்றியோறு தவறுகளைக் குறித்த பட்டியல் சமர்ப்பிக்கப் பட்டது. கிறிஸ்தவ ஆத்துமாக்களின் இழப்பு எப்படிப்பட்டது! எப்படிப்பட்ட அநீதி! எப்படிப்பட்ட கட்டாயமான வசூல்! நாள்தோறும் நடத்தப்படும் அவமானமிக்க புரளிகளின் கனிகள் எப்படிப்பட்டவை! இதற்கு கிறிஸ்தவ உலகத்தின் ஆவிக்குரிய தலைமை எப்படி முகம் காட்டுகிறது என்று அந்த விண்ணப்பதாரர்கள் கூறினார்கள். நமது நாட்டின் அழிவையும் கௌரவக் குறைவையும் தவிர்த்தாக வேண்டும். எனவே,ஒரு பொதுச்சீர்திருத்தத்தின் பணி முழுமையானதாக—மிகவும் விரைவாக நடத்தப்பட வேண்டுமென்று நாங்கள் வேண்டுகிறோம் என்றனர்.—Ibid., b.7, ch. 4. (16)

அந்தப் பிரதிநிதிகள் குழு, சீர்திருத்தவாதி உடனடியாக அதன் முன்பாகத் தோன்றிடவேண்டும் என்றும் வற்பறுத்தியது. அலேயாண்டரின் கெஞ்சுதல்கள், மறுப்புகள், பயமுறுத்தல்கள் இருந்துங்கூட, பேரரசன் இறுதியாக அவர்களது வேண்டுகோளுக்குச் சம்மதித்து, லுத்தரைப் பிரதிநிதிகளின் குழுவின்முன் வரும்படி கட்டளை இட்டார். அவருக்குக் கொடுக்கப்பட்ட அழைப்புடன், பாதுகாப்பாக அவரது இடத்திற்கு திரும்பிச் செல்லும் பாதுகாப்பு நடத்துதல் கடிதத்தையும் தந்தார். இது லுத்தரை விட்டன்பர்க் நகருக்கு அழைத்துக்கொண்டுவரும் பணியினை மேற்கொள்ள ஏற்படுத்தப்பட்ட ஒரு தூதுவனின் மூலமாக அனுப்பப்பட்டது. (17)

லுத்தரின் நண்பர்கள் பயத்தால் கவலை அடைந்தனர். அவருக்கு எதிராக இருந்த தவறான எண்ணங்களையும் பகைமை யையும் அறிந்திருந்த அவர்கள், அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாதுகாப்பு நடத்துதல் கடிதம் மதிக்கப்படாமல் போகுமென்று பயந்து, அவருடைய உயிரை அவர் ஆபத்துக்குள்ளாக்கவேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டனர். என்னை வோம்ஸ் நகரில் காணும் விருப்பம், போப்பு மார்க்கவாதிகளுக்கு அவ்வளவாக இல்லை. ஆனால் நான் குற்றம்சாட்டப்படுவதையும் சாவதையும் அவர்கள் விரும்புகின்றனர். அது ஒரு காரியமல்ல. எனக்காக ஜெபம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்காக ஜெபம் செய்யுங்கள். சாத்தானின் இந்த ஊழியக்காரர்களை மேற்கொள்ள கிறிஸ்து அவரது ஆவியை எனக்குத் தருவார். நான் உயிருடன் இருக்கும்போது, அவர்களைப் பழிக்கிறேன். எனது மரணத்தின் மூலமாக நான் அவர்கள்மீது வெற்றி கொள்ளுகிறேன். நான் கூறியவைகளை மறுதலித்துக்கூற என்னை வற்புறுத்தும்படி, அவர்கள் வோம்ஸ் நகரில் விரைந்து செயல்படுகின்றனர். எனது மறுதலிப்புச்சொல் "போப்பு அந்திக்கிறிஸ்துவின் பதிலாளியாக இருக்கிறார் என்று முன்பு நான் கூறினேன். இப்போது அவர் கர்த்தரின் எதிராளியாகவும், சாத்தானின் அப்போஸ்தலனாகவும் இருக்கிறார் என்றும் கூறுகிறேன்" என்று இருக்கும் என அவர் பதில் கூறினார்.—Ibid., b. 7, ch. 6. (18)

லுத்தர் தனது ஆபத்தான பயணத்தை மேற்கொள்ளத் தனியாக அனுமதிக்கப்படவில்லை. அரசனின் தூதனோடல்லாமல் அவரது உறுதி மிக்க மூன்று நண்பர்களும் அவருடன் செல்லத் தீர்மானித்தனர். அவருடன் சேர்ந்துகொள்ள **மெலாங்தன்** மிகுந்த வாஞ்சையுடன் விரும்பினார். அவரது இதயம் லுத்தரின் இதயத்துடன் பின்னி இருந்தது. தேவைப்பட்டால் சிறைக்கும் மரணத்திற்கும் அவரைப் பின்தொடரவும் அவர் ஆர்வமிக்கவராக இருந்தார். ஆனால் அவரது கெஞ்சுதல்கள் மறுக்கப்பட்டன. லுத்தர் கொல்லப்பட்டால், சீர்திருத்தத்தின் நம்பிக்கை இந்த இளைஞரை

நடுநாயகமாகக் கொண்டதாக இருக்கவேண்டும். “நான் திரும்பாவிட்டால், எனது எதிரிகள் என்னைக் கொன்றுவிட்டால், சத்தியத்தைத் தொடர்ந்து போதித்து, சத்தியத்தில் உறுதியாக நிலைத்து நில்லுங்கள்; எனக்குப் பதிலாகப் பணி ஆற்றுங்கள்; உங்களது உயிர் விட்டுவைக்கப்படுமானால், எனது மரணம் சாதாரணமாயிருக்கும்” (Ibid., b. 7, ch. 7) என்று சீர்திருத்தவாதி மெலாங்கதனை விட்டுப் பிரியும்போது கூறினார். லுத்தர் புறப்பட்டுச் செல்லுவதைக் காணக் கூடிவந்திருந்தவர்கள், மிகவும் நெகிழ்ந்தனர். அவரது நற்செய்திப் போதனையால் இதயங்களில் தொடப்பட்ட திரளானவர்கள் கண்ணீருடன் அவருக்கு விடைகொடுத்தனர். இவ்வாறாக, அந்த சீர்திருத்தவாதியும் அவரது தோழர்களும் விட்டன்பர்கிலிருந்து புறப்பட்டனர். (19)

அப்பயணத்தில், அவருக்குத் தீங்கு நேரிடும் என்று மக்கள் வருத்தம் அடைந்திருப்பதை அவர்கள் கண்டனர். சில பேரூர்களில் அவர்களுக்கு மரியாதை காட்டப்படவில்லை. இரவு நேரத்தில் அவர்கள் தரித்திருந்தபோது, நண்பரான ஒரு குருவானவர், இத்தாலிய சீர்திருத்த வாதியான ஒரு இரத்தசாட்சியின் சித்திரத்தை அவருக்கு உயர்த்திக்காட்டித் தனது அச்சத்தை உணர்த்திக் காட்டினார். வோம்ஸ் நகரில் லுத்தரின் எழுத்துக்கள் குற்றப்படுத்தப்பட்டன என்பதை அவர்கள் மறுநாள் கேள்விப் பட்டனர். தடைசெய்யப்பட்டிருந்த அவரது எழுத்துக்களை நீதிபதியின் முன்பாகக் கொண்டுசெல்லும்படியான பேரரசனின் கட்டளையை அரசாங்க ஊழியக்காரர்கள் மக்களுக்கு உரத்த சத்தமாக அறிவித்தனர். பிரதிநிதிகள் குழுவிற்குமுன் லுத்தருக்குள்ள பாதுகாப்பைப்பற்றி பயந்த அவரது வருகையை அறிவிப்பவன், அவரது தீர்மானம் ஏற்கனவே ஆட்டம் கண்டிருக்கக்கூடும் என்றெண்ணி, அவர் மேலும் முன்செல்ல விரும்புகிறாரா என்று கேட்டான். ஒவ்வொரு பேரூரிலும் எனக்குச் சமயச் சடங்கு மறுப்பு உண்டானபோதிலும், நான் முன்செல்லுவேன் என்று அவர் பதில் கூறினார்.— Ibid., b. 7, ch. 7. (20)

எர்ஃபர்ட் நகரில் லுத்தர் கௌரவத்துடன் வரவேற்கப்பட்டார். பிச்சைக்காரனின் திருவோட்டுடன் அவர் அடிக்கடி நடந்து சென்றிருந்த தெருக்களில், இப்பொழுது அவரைப் போற்றுகிற மக்கள்கூட்டம் சூழ்ந்து கொண்டது. அவர் அங்குள்ள மடத்தின் தனி அறையை அடைந்து, இன்று ஜெர்மனியின்மீது வீசும் ஒளி, தனது ஆத்துமாவின் மீது வீசும்படி, நடத்திய போராட்டங்களைப்பற்றி நினைத்தார். பிரசங்கிக்கும்படி அவர் வற்புறுத்தப்பட்டார். அதற்கு அவர் தடுக்கப்பட்டிருந்தார். ஆனால் அவரது வருகையை அறிவிக்கும்படி நியமிக்கப்பட்டவர் அவருக்கு அனுமதி

அளித்தார். ஒரு சமயத்தில் அந்த மடத்தில் கடினமாக வேலை செய்யும் கூலிக்காரனாயிருந்த அந்த யாத்ரீகன், இப்பொழுது பிரசங்கபீடத்தின்மீது ஏறினார். (21)

திரண்டிருந்த ஒரு கூட்டத்திற்கு, "சமாதானம் உங்களுக்கு உண்டாவதாக" என்னும் கிறிஸ்துவின் வார்த்தையிலிருந்து எடுத்து அவர் பேசினார். "தத்துவ சாஸ்திரிகளும் மருத்துவர்களும் எழுத்தாளர்களும் மனிதர்கள் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும் மார்க்கத்தைப் போதிக்க முயன்று, ஒருபோதும் வெற்றியடையவில்லை. இப்பொழுது நான் அதை உங்களுக்குச் சொல்லுகிறேன். மரணத்தை அழிக்கவும் பாவத்திற்குப் பிராயச்சித்தம்செய்யவும் மரணவாசலை அடைக்கவும், கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் ஒரு மனிதரைத் தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பி இருக்கிறார். இது இரட்சிப்பின் பணி. கிறிஸ்து வெற்றி அடைந்திருக்கிறார். மகிழ்ச்சிமிக்க செய்தி இதுதான். நாம் நமது சொந்தக் கிரியைகளினால் இரட்சிக்கப்படாமல், அவரது கிரியைகளினால் இரட்சிக்கப்படுகிறோம் ... 'உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக! எனது கரங்களைப் பாருங்கள்' என்று நமது கர்த்தராக இருக்கிற இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். அதாவது, ஓ! மனிதனே! நான் நான்மட்டும்தான் உனது பாவங்களை நீக்கி உன்னை மீட்டிருக்கிறேன். அதனால் இப்பொழுது உனக்குச் சமாதானம் உண்டு என்று கர்த்தர் கூறுகிறார்" என்றார். (22)

பரிசுத்தமான வாழ்க்கையில், உண்மையான விசுவாசம் வெளிக் காட்டப்படும் என்று அவர் தொடர்ந்தார். "தேவன் நம்மை இரட்சித்திருப்ப தினால், அவர் நமது செயல்களைக்கண்டு மகிழும்படி, நாம் அவைகளை சீர்படுத்துவோமாக! நீ செல்வந்தனாயிருக்கிறாயா? வறுமையிலுள்ள மற்ற மனிதனின் தேவைகளுக்காக உனது செல்வம் செலவிடப்படட்டும். நீ ஏழையாய் இருக்கிறாயா? உனது சேவையினால் செல்வந்தனுக்கு ஊழியம் செய்வாயாக. உனது உழைப்புகள் உனக்காக மட்டுமேயானால், நீ தேவனுக்குச் செய்யும்சேவை பெயரளவில் மட்டுமே இருக்கும்" என்றார்.—Ibid., b. 7, ch. 7. (23)

மக்கள் ஆச்சரியத்தால் வாயடைத்தவர்களாகக் கவனித்தனர். பசியாயிருந்த ஆத்துமாக்களுக்கு ஜீவ அப்பம் பிட்டுக் கொடுக்கப்பட்டது. போப்புகள், பேப்புவின் பிரதிநிதிகள், பேரரசர்கள், இளவரசர்கள் ஆகியோருக்குமுன், அவர்களுக்கும் மேலாக கிறிஸ்து உயர்த்தப்பட்டார். அபாயகரமான தனது நிலைமையைப் பற்றி லுத்தர் குறிப்பிடவே இல்லை. எண்ணங்களுக்கும், அனுதாபங்களுக்கும் இலக்காக தன்னைக்காட்ட அவர் வகைதேடவில்லை. கிறிஸ்துவைப் பற்றிய தியானத்தினால், சுயத்தைப்பற்றிய

பார்வையை இழந்தார். பாவியின் மீட்பராக இயேசுவைமட்டும் முன்வைக்க வகைதேடி, கல்வாரியின் மனிதருக்குப்பின் அவர் மறைந்துகொண்டார். (24)

அந்த சீர்திருத்தவாதி தனது பயணத்தை மேற்கொண்டபோது, எங்கும் மிகுந்த ஆர்வத்துடன் போற்றப்பட்டார். ஒரு வாஞ்சைமிக்க திரள்கூட்டமானது அவரைச் சூழ்ந்துகொண்டு, ரோமன் கத்தோலிக்க வாதிகளின் நோக்கம்பற்றி நட்புமிக்க கரங்களால் அவரை எச்சரித்தது. நீங்கள் உயிருடன் எரிக்கப்படுவீர்கள், ஜான் ஹஸ்ஸைப்போலவே உங்களது உடலும் சாம்பலாக்கப்படும் என்று அவர்கள் கூறினார்கள். அதற்கு அவர்: "அக்கினி ஜுவாலை வானம்வரை உயரும்படி, வோம்சிலிருந்து விட்டன்பர்க் நகரம்வரை அவர்கள் தீ கொளுத்தினாலும் நான் கர்த்தரின் பெயரால் அதற்கு ஊடாகக் கடந்துசென்று, அவர்கள்முன் நிற்பேன். அந்தப் பிகமோத்தின் தாடைக்கு ஊடாக நான் நுழைந்துசென்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிக்கைசெய்து, அதன் பற்களை உடைப்பேன்" என்று பதில் கூறினார்.—Ibid., b. 7, ch. 7. (25)

அவர் வோம்ஸ் நகரை நெருங்கிவிட்டார் என்கிற செய்தி பெரும் உணர்ச்சிக் கொந்தளிப்பை உண்டாக்கியது. நண்பர்கள், அவரது பாதுகாப்பை நினைத்துப் பயந்தனர். அவரது எதிரிகள் தங்களின் நோக்கத்தின் வெற்றியைப்பற்றிப் பயந்தனர். நகருக்குள் அவர் நுழைவதைத் தடுக்கும்படி மிகக் கடுமையான முயற்சிகள் செய்யப்பட்டன. போப்புமார்க்கவாதிகளின் தூண்டுதல் காரணமாக, நண்பராயிருந்த ஒரு வீரரின் கோட்டையில் தங்கும்படி அவர் வற்புறுத்தப்பட்டார். அவரது சகலவிதமாக கஷ்டங்களும் சுமுகமான முறையில் தீர்க்கப்படும் என்று அவரிடம் அறிவிக்கப்பட்டது. அவரைப் பயமுறுத்தியிருந்த அபாயங்களை விவரித்து, அவரது பயத்தை அதிகரிக்கச்செய்ய அவரது நண்பர்கள் முயன்றனர். "வோம்ஸ் நகரின் கூரைகளின்மீதுள்ள ஓடுகளின் எண்ணிக்கையின் அளவில் பேய்கள் அங்கு இருந்தாலும், நான் அதற்குள் நுழைவேன்" என்று அசைக்கப்படாதவராக லுத்தர் அறிவித்தார்.—Ibid., b. 7, ch. 7. (26)

அவர் வோம்ஸ் நகருக்கு வந்து சேர்ந்ததும், அவரை வரவேற்க ஒரு பெருங்கூட்டம் நகரவாசலில் கூடியது. பேரரசனை வரவேற்கக்கூட அப்படிப்பட்ட பெருங்கூட்டம் கூடியதில்லை. அந்த உணர்ச்சிப்பெருக்கு மிகுந்த எழுச்சி உள்ளதாக இருந்தது. அந்தக் கூட்டத்தின் நடுவில் இருந்து ஒரு கரகரத்த குரல் தெளிவாக ஒப்பாரிவைத்தது. அந்த அவலக் குரலானது, முடிவுக்காகக் காத்திருக்கும் லுத்தருக்கான ஒரு எச்சரிப்பாக இருந்தது. அவர் தமது வாகனத்திலிருந்து கீழே இறங்கியபோது, "தேவன் எனக்குப் பாதுகாப்பாயிருப்பார்" என்று கூறினார். (27)

லுத்தர் வோம்ஸ் நகருக்கு மெய்யாகவே வரத்துணிவார் என்று போப்புமார்க்கத்தினர் நம்பவில்லை. அவரது வருகை அவர்களைத் திகிலால் நிரப்பியது. எவ்விதமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆலோசிப்பதற்காகப் பேரரசர் அவசரமாகத் தனது ஆலோசகர்களைக் கூட்டினார். “இந்தக்காரியம்பற்றி நாங்கள் நீண்டநேரம் ஆலோசித்தோம். பேரரசர் இந்த மனிதனை உடனே அழித்துவிடுவாராக. சிக்மண்ட அரசன் ஜான் ஹஸ்ஸை சிறைக்குக் கொண்டுவரவில்லையா? மத விரோதிக்குக் கொடுக்கப்படும் பாதுகாப்பு நடத்துதலை விட்டுவிடவோ அல்லது கடைப்பிடிக்கவோ நாங்கள் கடமைப்பட்டவர்களல்ல” என்று போப்புமார்க்கப் பேராயர்களில் உறுதியான ஒருவர் கூறினார். “அப்படியல்ல, நமது வாக்கை நாம் காத்துக்கொள்ள வேண்டும்” என்று பேரரசர் கூறினார்.—Ibid., b. 7, ch. 8. எனவே சீர்திருத்தவாதி சொல்லுவதையும் கேட்டாகவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. (28)

குறிப்பிடத்தக்க சிறப்புக்குரிய மனிதனைக் காண நகரம் முழுவதும் ஆவல் நிரம்பியதாக இருந்தது. அவர் தங்கியிருந்த இடத்தில் பார்வையாளர்கள் நிறைந்திருந்தனர். சமீபத்தில் உண்டான சுகவீனத்தில் இருந்து லுத்தர் இப்போதுதான் அபூர்வமாகத் தேறியிருந்தார். இருவார காலத்தை எடுத்துக்கொண்ட பயணத்தினால், அவர் களைப்புமிக்கவராக இருந்தார். மறுநாள் அவர் சந்திக்கவேண்டிய முக்கியமான நிகழ்ச்சிகளுக்காக அவர் ஆயத்தம் செய்தாகவேண்டும். மேன்மைமிக்க மனிதர்கள், வீரர்கள், குருமார்கள், நகர மக்கள் ஆகியோரிடம் அவரைக் காணவேண்டு மென்ற ஆர்வம் மிகப் பெரியதாக இருந்து, அவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டதினால், அவரால் சிலமணிநேரம்மட்டும்தான் ஓய்வெடுக்க முடிந்தது. எனது சுவிசேஷத்தினால் விடுதலை பெற்றவர்கள் என்று லுத்தரால் சொல்லப்பட்ட மேன்மக்கள் அநேகருள், சபையின் அத்துமீறல்களுக்கு எதிரான ஒரு சீர்திருத்தம் தேவை என்று பேரரசனிடம் தைரியமாகக் கூறியவர்களும் இருந்தனர். அசையாத அந்தச் சந்நியாசியைக் காண விரோதிகளும் நண்பர்களும் வந்தனர். அவர்களனைவரையும் அவர் சலனமற்ற அமைதியுடன் வரவேற்று, அவர்களது கேள்விகளுக்கு கண்ணியமாகவும் ஞானமாகவும் பதில்கூறினார். அவரது நடத்தை, உறுதியும் தைரியமும் நிறைந்ததாக இருந்தது. உழைப்பினாலும் சுகவீனத்தினாலும் வெளிரி மெலிந்துபோயிருந்த அவரது முகம், அன்பும் மகிழ்ச்சியும் கலந்த உணர்வினை வெளிக்காட்டியது. பக்திவிநயமும் அக்கரையுமுள்ள அவரது வார்த்தைகள் அவரது எதிரிகளாலுங்கூட நிற்கமுடியாத அளவிற்கு வல்லமைமிக்கதாக இருந்தது. நண்பர்கள் எதிரிகள் ஆகிய இரு சாராரும் ஆச்சரியம் நிறைந்தவர்களானார்கள். ஒரு தெய்வீக செல்வாக்கு அவரை

ஆட்கொண்டுள்ளது என்று சிலர் நிச்சயமாக நம்பியிருந்தனர். ஆனால் மற்றவர்கள், அவர் பிசாசு பிடித்தவர் என்று கிறிஸ்துவைப்பற்றிப் பரிசேயர்கள் சொன்னதுபோல அறிவித்தனர். (29)

மறுநாள் லுத்தர் நியாயவிசாரணைக் குழுவின் முன்பாகத் தோன்றும்படி அழைக்கப்பட்டார். மக்கள் கூடியிருந்த அரங்கத்திற்கு அவரை அழைத்துவர, ஒரு அரசாங்க அதிகாரி நியமிக்கப்பட்டு இருந்தார். அப்படியிருந்தும் சிரமத்துடன்தான் அவரால் அந்த இடத்தை அடையமுடிந்தது. போப்புவின் அதிகாரத்தைத் தடுக்கத் துணிந்த அந்த சந்நியாசியைக் காண, ஒவ்வொரு பாதையிலும் பார்வையாளர்கள் ஆவலுடன் கூடியிருந்தனர். (30)

அவர் தனது நீதிபதிகளின்முன் தோன்றப்போகும் சமயத்தில், அநேக போர்களை நடத்தியிருந்த ஒரு வயதுசென்ற தளபதி அவரைப் பார்த்து: "ஏழை சந்நியாசியே, ஏழை சந்நியாசியே, நானோ மற்ற அநேக தளபதிகளோ இரத்தஞ்சிந்தி நடத்தியிருந்த போர்களில் ஒருபோதும் அறிந்திராத ஒரு போரை நடத்த, நீங்கள் செல்ல வேண்டியவராக இருக்கிறீர்கள். உங்களது காரியம் நியாயமானதாக இருக்குமானால், நீங்கள் அதைப்பற்றிய நிச்சயமுடையவராக இருந்தீர்களானால், தேவனின் பெயரால் முன்னேறிச் செல்லுங்கள். அவர் உங்களைக் கைவிடமாட்டார்" என்றார்.—Ibid., b. 7, ch. 8. (31)

இறுதியாக, அவர் அந்தக் குழுவின் முன் நின்றார். பேரரசன் அரியணையில் அமர்ந்திருந்தார். தனது விசுவாசத்திற்கான பதிலைச் சொல்லவேண்டியவராக மார்டின் லுத்தர் நின்றதைப்போல, எந்த ஒரு மனிதனும் இப்படிப்பட்ட ஒரு மன்றத்தின்முன் ஒருபோதும் தோன்றி இருக்கவில்லை. லுத்தரின் இந்தத் தோற்றமே போப்புமார்க்கத்தை மேற்கொள்ளும் வெற்றியின் அடையாளமாக இருந்தது. போப்பு அவரைக் குற்றவாளியாகத் தீர்மானித்திருந்தார். ஆனால் இப்பொழுது அவர் நீதிவிசாரணை மன்றத்தின்முன் நின்றிருந்தார். இந்தச் செயலினாலேயே அந்த நீதிமன்றமானது, போப்புவிற்கும் மேலானதாக ஆக்கப்பட்டிருந்தது. சமயச் சடங்குத் தடையினால், போப்பு அவரைக் கீழ்ப்படுத்தி, மனித சமுகத்திலிருந்து அவரை விலக்கியிருந்தார். அப்படியிருந்தும் உலகத்தின் பெருமதிப்புமிக்க மன்றம் அவரை ஏற்றது. மிகமேலான வார்த்தைகளினால் அவர் அழைக்கப்பட்டார். நிரந்தரமாக மௌனமாயிருக்கும்படியான தண்டனையைப் போப்பு அவர்மீது செலுத்தியிருந்தார். அப்படிப்பட்ட லுத்தர் இப்போது கிறிஸ்தவ ஆளுகை முழுவதிலுமிருந்து, வெகுதூரத்திலிருந்து வந்துசேர்ந்து, பேச்சைக் கவனமாகக் கேட்கின்ற ஆயிரக்கணக்கானவர்களின் முன்பாகப் பேச இருந்தார். லுத்தர் என்னும் கருவியின்மூலமாக ஒரு

ஆழ்ந்த புரட்சி நடைமுறைக்கு வந்தது. ரோமன் கத்தோலிக்க சபையானது ஏற்கனவே அதன் சிங்காசனத்திலிருந்து கீழிறங்கிக்கொண்டிருந்தது. ஒரு சந்நியாசியின் சத்தம் அந்த வீழ்ச்சியான நிலைமைக்குக் காரணமான இருந்தது!—Ibid., b. 7, ch. 8. (32)

வல்லமையும் பதவிகளும் நிரம்பிய அந்த மன்றத்தின் பிரசன்னத்தில், மிகத் தாழ்வான நிலையில் பிறந்திருந்த அந்த சீர்திருத்தவாதி வியப்பும் திகைப்பும் அடைந்தவர்போல் காணப்பட்டார். அவரது உணர்ச்சிப் பெருக்கைக் கவனித்த இளவரசர்களில் அநேகர் அவரை நெருங்கி: “ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்குப் பயப்படாதேயுங்கள்” என்று மெதுவாக அவரது காதில் கூறினார்கள். “என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும் ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டு போகப்படுவீர்கள்! நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்” என்று வேறொருவர் அவரிடம் கூறினார். இவ்வாறாக, சோதனையின் வேளையில் உலகத்தின் பெரிய மனிதர்கள் வழியாக லுத்தரைப் பலப்படுத்த கிறிஸ்துவின் வார்த்தைகள் கொண்டுவரப்பட்டன. (33)

லுத்தர், பேரரசனின் சிங்காசனத்திற்கு நேர்எதிராக நடத்தப்பட்டார். மக்கள் கூடியிருந்த மன்றத்தில், ஒரு ஆழ்ந்த மௌனம் உண்டாயிற்று. அதன்பின் ஒரு அரசாங்க அதிகாரி எழுந்து, சேகரிக்கப்பட்ட லுத்தரின் எழுத்துக்களைச் சுட்டிக்காட்டி, இரண்டு கேள்விகளுக்கு லுத்தர் பதில் கூறவேண்டும் என்று கோரினார். இவைகளை எழுதினது அவர்தான் என்று அறிக்கை செய்கிறாரா? அவைகளில் முன்வைக்கப்பட்டுள்ளவைகளை, அவர் மறுத்துக்கூற உத்தேசிக்கிறாரா? அந்தப் புத்தகங்களின் பெயர்கள் வாசிக்கப் பட்டதும், முதலாவது கேள்விக்குப் பதிலாக, அந்தப் புத்தகங்கள் தன்னுடையவைகள் தான் என்று அவர் அறிக்கைசெய்தார். “இரண்டாவது கேள்வியைப் பொறுத்தமட்டில், அது விசுவாசம் சம்பந்தப்பட்டதும், ஆத்துமாக்களின் இரட்சிப்பு சம்பந்தப்பட்டதும், பரலோகத்திலும் பூமியிலும் மிகவும் விலையுயர்ந்த கருவூலத்தின் வார்த்தை சம்பந்தப்பட்டதாக இருப்பதால், விவேகத்துடனும் அவமரியாதை இல்லாமலும் பதிலளிக்காவிடில், அது எனக்குக் கண்மூடித்தனமானதும் ஆபத்தானதுமாக இருக்கும். சூழ்நிலைகள் கோருவதைவிடக் குறைவாகவோ, அல்லது சத்தியம் எதிர்பார்ப்பதை விட அதிகமாகவோ அறிவிக்கலாம். இந்த இரண்டு காரியங்களில் எதைச்செய்தாலும், “மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என்

பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" (மத். 10:33) என்ற கிறிஸ்துவின் வார்த்தை களுக்குக் கீழ்ப்படுவேன் என்பதால், மாட்சிமை தங்கிய பேரரசரை, எனது எல்லாவிதமான தாழ்மையுடனும், தேவனுடைய வார்த்தை களுக்கு விரோதமாகாமல் பேசும்படி, எனக்குக் காலத்தை அனுமதிக்கவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.—Ibid., b. 7, ch. 8. (34)

இந்த வேண்டுகோளைச் செய்ததன் மூலமாக லுத்தர் ஞானமாக நடந்துகொண்டார். அவர் ஆசையினாலோ, உணர்ச்சியினாலோ செயல்படவில்லை என்கிற அவரது நடத்தை அந்த மன்றத்தைச் சம்மதிக்கச் செய்தது. தைரியத்தையும் சமரசத்திற்கு இணங்காமையையும் உடைய ஒருவரிடமிருந்து எதிர்பார்க்கப்படாத இப்படிப்பட்ட அமைதியும் சுயக்கட்டுப்பாடும் அவரது வல்லமையை அதிகரிக்கச்செய்து, முன்யோசனை, முடிவு, ஞானம், கண்ணியம் ஆகியவையோடு சேர்ந்து, அவரது எதிரிகளை—ரோமன் கத்தோலிக்க சபையின் பிரதிநிதிகளை ஆச்சரியப்படுத்தி, மனம் தளரச் செய்தது. அது அவர்களது வெறுப்பையும் அகந்தையுமிக்க சுபாவத்தையும் கண்டித்தது. (35)

அவர் தன் முடிவை அறிவிக்க மறுநாள் தோன்றவேண்டியது இருந்தது. சத்தியத்திற்கு எதிராக அணி திரண்டு நிற்கும் வல்லமை களைப்பற்றி தியானித்தபோது, அவரது இதயம் சற்று நேரத்திற்கு அவருக்குள் தொய்ந்து, அவரது விசுவாசம் தடுமாறியது. பயமும் நடுக்கமும் அவர்மீது வந்தது. பயங்கரம் அவரை மேற்கொண்டது. அவருக்குமுன் அபாயங்கள் பெருகுவதுபோலவும், அவரது எதிரிகள் வெற்றி அடையப்போவதுபோலவும் தோன்றின. மேகங்கள் அவரைச் சூழ்ந்து, அவரை தேவனிடமிருந்து பிரிப்பதுபோல் காணப்பட்டது. சேனைகளின் கர்த்தர் தன்னுடன் இருப்பார் என்னும் நிச்சயத்தை அவர் மிகவும் வாஞ்சித்தார். தனது ஆத்தும வேதனையினால் அவர் முகங்குப்புறக் கீழேவிழுந்து, தேவனைத் தவிர வேறுயாரும் அறியமுடியாதவிதத்தில், உடைந்த இதயத்தை ஊற்றி, இதயம் கிழியும்படியாக கதறினார். (36)

"ஓ தேவனே! நித்திய காலமாக சர்வவல்லமை உள்ள தேவனே! இந்த உலகம் எவ்வளவு பயங்கரமானதாக இருக்கிறது! என்னை விழுங்க அது தனதுவாயை எப்படித் திறந்திருக்கிறது! ஆனால் உம்மேல் என் விசுவாசம் எவ்வளவு சிறியதாயிருக்கிறது! இந்த உலகத்திலிருக்கிற ஏதாவது வல்லமையை நான் சார்ந்திருக்கவேண்டியதிருந்தால்—எல்லாம் முடிந்துவிட்டது... சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது... தண்டனை முன்சென்று விட்டது... ஓ எனது தேவனே! இந்த உலகத்தின் எல்லா ஞானத்திற்கும் எதிராக எனக்கு உதவிசெய்யும்... உமது வல்லமையினால் இதைச்

செய்துதாரும்... இந்தப் பணி என்னுடையதல்ல—அது உம்முடையது. எனக்கு இங்கு ஒரு வேலையும் இல்லை... உலகத்தின் பெரிய மனிதர்களுடன் வாதிட என்னிடம் ஒன்றும் இல்லை... இந்தக் காரியம் உம்முடையதாயிருப்பதால்... அது நீதி உள்ளதாகவும் நித்தியமானதாகவும் இருப்பதால்.... நான் கெஞ்சிக்கேட்கிறேன். ஆ! உண்மையும் மாறாதவருமான தேவனே! நான் மனிதன்மீது சார்ந்திருக்கவில்லை. மனிதனிடமிருந்து வரும் எதுவும் தள்ளாடக்கூடியது. அவனிடமிருந்து புறப்படும் அனைத்தும் விழுந்துபோகவேண்டும்.... நீர் என்னை இந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்.... எனவே, தேவனே உமது சொந்த சித்தத்தை நடப்பியும். எனது பாதுகாப்பும், எனது கேடகமும், எனது பலத்த துருகமுமாயிருக்கும் உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் என்னைக் கைவிட்டுவிடாமலிரும்" என்று ஜெபித்தார்.—Ibid., b. 7, ch. 8. (37)

அவர் தமது சொந்த பலத்தின்மீது நம்பிக்கை வைக்காமல் இருக்கவும், துணிகரமாக ஆபத்துக்குள் விரைந்துவிடாமலும் இருக்கும்படி, தனக்குள்ள அபாயத்தை உணர, சர்வஞானம் உள்ள தெய்வீகப் பாதுகாப்பு அவரை அனுமதித்தது. அப்படியிருந்தும் உடனடியாக நிகழவிருக்கும் சரீரப்பிராகாரமான ஆபத்தைப்பற்றிய பயமோ, அல்லது சித்திரவதை மரணத்தைப்பற்றிய பயமோ அவரை மேற்கொள்ளவில்லை. நெருக்கடியான நிலைக்கு அவர் வந்து விட்டார். ஆனால் அதைச் சந்திப்பதற்கான தனது இயலாமையை அவர் உணர்ந்தார். அவரது பலவீனத்தினால், சத்தியத்தின் நோக்கத்திற்கு இழப்பு உண்டாகலாம். தமது சொந்தப் பாதுகாப்பிற்காக அல்ல, சுவிசேஷத்தின் வெற்றிக்காக அவர் தேவனுடன் போராடினார். அன்று இரவில் ஆற்றின் அருகில், போராடினபோது இஸ்ரவேலுக்கிருந்த மனவேதனையைப் போன்று அது இருந்தது. இஸ்ரவேலைப்போலவே அவரும் தேவனை மேற்கொண்டார். அவரது படுமோசமான உதவியற்ற நிலையில், வல்லமைமிகுந்த விடுதலைசெய்பவரான கிறிஸ்துவை அவரது விசுவாசம் உறுதியாகப் பிடித்துக்கொண்டது. அந்தக் குழுவின் முன் அவர் தனியாகத் தோன்றப்போவதில்லை என்ற வாக்குறுதியினால் அவர் பலப்படுத்தப்பட்டார். அவரது ஆத்துமாவிற்குள் சமாதானம் திரும்பிவரவே, அந்த நாட்டின் அதிபதிகளுக்குமுன், தேவனுடைய வார்த்தையை உயர்த்தும்படி அவர் அனுமதிக்கப்பட்டதற்காக மகிழ்ந்தார். (38)

தனது மனம் தேவன்மீது தங்கியிருக்க, லூத்தர் தனக்கு முன்பாகவுள்ள போராட்டத்திற்காக ஆயத்தஞ்செய்தார். அவரது பதில்களைப்பற்றிய திட்டம்பற்றி சிந்தித்தார். அவரது சொந்த எழுத்துக்களின் பகுதிகளைச்

சோதித்தார். தனது நிலைக்குப் பொருத்தமான சான்றுகளை வேதாகமத்திலிருந்து எடுத்தார். அதன்பின் தனது இடதுகரத்தைத் தனக்குமுன் திறந்திருந்த வேதாகமத்தின்மீது வைத்து, வலது கரத்தை வானத்திற்கு நேராக உயர்த்தி, தனது சாட்சியை இரத்தத்தினால் முத்திரையிடும்படி அழைக்கப்பட்டாலும், தொடர்ச்சியாக சுவிசேஷத்தைப் பற்றிக்கொண்டிருக்கவும் தனது விசுவாசத்தை சுதந்திரமாக அறிக்கைசெய்யவும் உறுதிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.—Ibid., b. 7, ch. 8. (39)

பிரதிநிதிகளின் குழுவின் முன் மறுபடியும் தோன்றியபோது, அவரது முகத்தில் பயமோ அல்லது திகைப்பின் சாயலோ காணப்படவில்லை. பூமியிலுள்ள மிகப்பெரிய ஒருவரின்முன், அமைதியும், சமாதானமும், மேலான தைரியமும் மேன்மையுமுள்ள—தேவனின் சாட்சியாக அவர் நின்றார். இப்பொழுது அரசாங்க அதிகாரி, லுத்தர் தனது கோட்பாடுகளைப் பின்வாங்கிக்கொள்ள விரும்புகிறாரா? என்று கேட்டார். மிகவும் பணிவும் தாழ்மையுமிக்க குரலில், கோபமும் உணர்ச்சிப்பெருக்குமின்றி, லுத்தர் தனது பதிலைக் கூறினார். அவரது முகம் தன்னம்பிக்கையற்றதாகவும், மரியாதை தருவதாகவும் இருந்தது. அப்படியிருந்தும் அந்த மன்றத்தினரை வியப்படையச்செய்த நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார். (40)

“பேரமைதிமிக்க பேரரசரே! அலங்காரமிக்க இளவரசர்களே! பெரும் கருணை உள்ள பிரபுக்களே! உங்களது கட்டளையின்படி, இன்று நான் மிகுந்த தாழ்மையுடன் உங்கள் முன்பாக நிற்கிறேன். நான் எடுத்துக்கொண்டுள்ள ஒரு காரியம் மிக நீதியானதென்றும், சரியானதென்றும், நல்லவிதமாக நான் நம்பி இருப்பதினால், மேன்மைமிக்க பேரரசையும், மிக மேலானவர்களையும், தேவனுடைய இரக்கத்தினால் எனது மன்றாட்டைக் கனிவுடன் கேட்கும்படிக் கெஞ்சிமன்றாடுகிறேன். எனது பதிலில் நான் நீதிமன்றத்தில் பயன்படுத்த வேண்டிய சரியான சொற்களைப் பயன்படுத்தாவிட்டால், என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில் அப்படிப்பட்டவைகளில் நான் பழக்கமற்றவனாக இருக்கிறேன். ஏனென்றால் நான் ஒரு ஏழைச் சந்நியாசி. அரச அரண்மனையில் வளராமல், மாடாலயத் தனிஅறையில் வளர்ந்தவன்” என்றார்.—Ibid., b. 7, ch. 8. (41)

பின்பு கேள்விகளைப் பற்றி: அவரால் வெளியிடப்பட்டவைகள் அனைத்தும் ஒரே தன்மையை உடையவைகள் அல்ல என்றார். சிலவற்றில் அவர் நல்ல விசுவாசம், நற்செயல்கள் ஆகியவை பற்றிக் கூறியிருந்தார். அவரது விரோதிகளாலுங்கூட அவைகள் இடையூரற்றவையென்றும், நன்மை பயக்கக்கூடியவை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தன. இதிலிருந்து பின்வாங்குவது என்பது அனைத்துக் கட்சியினராலும் சரியென்று அறிக்கைசெய்யப்பட்டுள்ள

சத்தியங்களைப் பழிப்பதாக இருக்கும். இரண்டாம் பகுதியில் எழுதப்பட்டவை, பேப்புமார்க்கத்தின் ஊழல்களையும் புரட்டுக்களையும் அடக்கியதாகவும், அவைகளை வெளிக்காட்டுபவைகளாகவும் இருந்தன. இந்தப் பிரசுரங்களில் பின்வாங்குவது, போப்பு மார்க்கத்தின் கொடுங்கோன்மையை பலப்படுத்தி, பக்தியற்ற அநேக தீய செயல்களுக்கான கதவை அகலமாகத் திறந்து விடுவதாக அமையும். அவரது நூல்களின் மூன்றாம்பகுதியில், நிலவியுள்ள தீமைகளைப் பாதுகாத்துவந்திருந்த தனிப்பட்டவர்களைத் தாக்கி இருந்தார். இவைகளைப் பற்றியவரை அவர் சாதாரணமாக இருந்ததைவிட, சற்று முரட்டுத்தனமாகவே இருந்தார் என்பதை தாராளமாக அறிக்கை செய்தார். தான் தவறற்றவன் என்று உரிமை பாராட்டாமல் இருந்தபோதிலும், இந்த நூல்களைப் பின்வாங்கிக் கொள்ள தன்னால் இயலாது என்றார். ஏனெனில், அப்படிப்பட்ட ஒரு செயல் சத்தியத்தின் எதிரிகளை மிகுந்த தைரியம் அடையச்செய்து, தேவனுடைய ஜனங்களை அவர்கள் மேலும் அதிகமான கொடுமையுடன் நசுக்கும் வாய்ப்பினை உண்டுபண்ணிவிடும் என்றார். (42)

“நான் தேவனாக இல்லாமல் சாதாரண மனிதனாக இருப்பதால், ‘நான் தகாதவிதமாகப் பேசினதுண்டானால், அதை எனக்கும் தெரிவி’ என்று கிறிஸ்து கூறியதுபோல, நானும் என்னைக் காத்துக்கொள்ளக் கூறுவேன். நான் எழுதி உள்ளதில் தவறு உள்ளது என்பதை தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களில் இருந்தும், அப்போஸ்தலர்களின் எழுத்துக்களில் இருந்தும் எனக்கு எடுத்துக்கூறும்படி மேன்மைதங்கிய பேரரசரையும் இந்தச் சபையில் உள்ளவர்களையும், அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும்சரி, அனைவரையும் நான் தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு, மிகுந்த பணிவுடன் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் உணர்த்தப்பட்டவுடன், எனது தவறுகளனைத்தையும் ஒப்புக்கொண்டு, எனது நூல்கள் அனைத்தையும் நெருப்பிலிடுவதற்கு முதல் மனிதனாக இருப்பேன்” என்றார். (43)

“நான் இப்பொழுது சொன்னவைகளை, எப்படிப்பட்ட ஆபத்துக் குள்ளாக இருக்கிறேன் என்பதை அறிந்து, அவைகளை நிறுத்து, ஆலோசித்துக் கூறியிருக்கிறேன். ஆனால் அவைகளினால் நான் பயந்து திகைப்படையவில்லை. பண்டைய காலத்தைப்போலவே, இந்த நாளிலும் சுவிசேஷமானது கருத்து வேறுபாடுகளுக்கும் துன்பங்களுக்கும் காரணமாக இருப்பதைக்கண்டு நான் அதிக மகிழ்ச்சி அடைகிறேன். தேவனுடைய வார்த்தையின் சுபாவமும் விதியும் இதுதான். ‘நான் சமாதானத்தையல்ல பட்டயத்தையே அனுப்ப வந்திருக்கிறேன்’ என்று கிறிஸ்து கூறினார். தேவன் தமது ஆலோசனைகளில் ஆச்சரியமானவராகவும் பயங்கரமானவராகவும் இருக்கிறார். நமக்கு இடையிலுள்ள வேற்றுமைகளை நீக்கும் முயற்சியில்,

நாம் தேவனுடைய வார்த்தைகளுக்கு எதிராகப் போரிடுபவர்களாகக் காணப்படாமல், விடுபடமுடியாத ஆபத்தான பெருவெள்ளத்தையும், இப்போ துள்ள அழிவையும், நித்தியமான அழிவையும் நமது தலைகளின்மீது கொண்டுவராமலிருப்பதற்கு கவனமுள்ளவர்களாக இருப்போமாக. தேவனுடைய வார்த்தைகளில் இருந்து உதாரணங்களை என்னால் காட்ட இயலும். தங்களது செயல்களில் மிகுந்த முன்னெச்சரிக்கை உள்ளவர் களாகத் தோன்றி, தங்களதிகாரத்தை நிலைவரப்படுத்த முயன்ற செயலில், தங்களது அழிவிற்கே செயலாற்றிய பார்வோன், பாபிலோனிய அரசர்கள், இஸ்ரவேலின் அரசர்கள் ஆகியோரைப்பற்றி என்னால் பேசமுடியும். தேவன் 'பர்வதங்களைச் சடிதியாய்ப் பேர்க்கிறார். அவைகள் அதை அறிவதில்லை'" (யோபு 9:5) என்றார்.—Ibid., b. 7, ch. 8. (44)

லுத்தர் ஜெர்மன் மொழியில் பேசியிருந்தார். இப்பொழுது அவைகளை லத்தீன் மொழியில் திரும்பக் கூறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். திரட்டிய முதலாம் முயற்சியினால் அவர் களைப்படைந்திருந்தபோதிலும், மறுபடியும் அவர் முதலில்பேசினது போலவே மிகுந்த தெளிவுடனும், சக்தியுடனும் இரண்டாவதாக லத்தீன் மொழியில் பேசினார். இக்காரியத்தில் தெய்வீகப் பாதுகாப்பு அவரை நடத்தினது. அநேக இளவரசர்களின் மனங்கள் தவறு களினாலும் மூடநம்பிக்கைகளினாலும் குருடாக இருந்ததினால், லுத்தரின் விளக்கங்களின் வலிமையை அவர் முதலில் பேசியபோது அவர்கள் காண வில்லை. ஆனால் இரண்டாவது தடவையாக பேசியபோது, அவர் கூறிய காரியங்களின் கருத்தை அவர்களால் தெளிவாக உணரமுடிந்தது. (45)

ஒளியைப் பெற்றுக்கொள்ளப் பிடிவாதமாகத் தங்கள் கண்களை மூடிக்கொண்டவர்களும், சத்தியத்தினால் உணர்த்தப்படக் கூடாது என்று தீர்மானித்தவர்களும், லுத்தரின் பேச்சின் வல்லமையினால் கோபா வேசமடைந்தனர். அவரது பேச்சை அவர் முடித்தபோது, மன்றத்தின் ஒரு பேச்சாளர் கோபத்துடன் எழுந்து, நீங்கள் கேள்விக்கு பதில் சொல்லவில்லை. நீங்கள் பின்வாங்குகிறீர்களா? அல்லது பின்வாங்கமாட்டீர்களா? என்பதை உணர்த்தும் தெளிவான பதில் தேவை என்றார். (46)

"மிகுந்த அமைதியை உடைய பேரரசரும் இளவரசர்களும் சாதாரணமான தெளிவான நேரடியான பதிலை எதிர்பார்ப்பதால், நான் ஒருபதில்கூற விரும்புகிறேன். அது இதுதான்: போப்பு மார்க்கத்தினர் அடிக்கடி தவறுக்குள் வீழ்ந்துள்ளனர் என்பது நடுப்பகலைப்போலத் தெளிவாக இருப்பதினால், இது அவர்களுக் குள்ளேயே இசைவற்ற வெளிச்சமாக உள்ளதால், என்னால் போப்புவிற்கோ அல்லது அவரது குருவிற்கோ பணியமுடியாது. அப்படி இருக்கும்போது, வேதவாக்கியச் சான்றுகளின்

மூலமாகவோ, அல்லது பொருத்தமான காரணங்களினாலோ நான் உணர்த்தப்படாவிட்டால், குறிப்பிட்டுள்ள அதே வேத வாக்கியங்களில் எனக்குத் திருப்தி உண்டாகாவிட்டால், இவ்விதமாக என்னுடைய சீர்தூக்கும் செயல், தேவனுடைய வார்த்தைகளுக்கு உட்பட்டிருக்காவிட்டால், என்னால் எதையும் பின்வாங்கமுடியாது. நான் பின்வாங்கவுமாட்டேன். ஏனெனில் தனது மனசாட்சிக்கு விரோதமாகப் பேசுவது ஒரு கிறிஸ்தவனுக்குச் சரியாக இருக்காது. இதை எனது நிலையாகக் கொண்டு நிற்கிறேன். வேறுவிதமாக என்னால் செயல்படமுடியாது. தேவன் எனக்குச் சகாயம் செய்வாராக. ஆமென்" என்றார்.—Ibid., b. 7, ch. 8. (47)

இந்த நீதிமான் தேவனுடைய வார்த்தை என்னும் அஸ்திவாரத்தின்மீது இவ்வாறாக நின்றார். பரலோகத்தின் ஒளி அவரது முகத்தை ஒளிபெறச் செய்தது. தவறுக்கு எதிராகவும், உலகை மேற்கொள்ளும் விசுவாசத்தின் மேலாதிக்கத்திற்கும் அதன் வல்லமைக்கும் நேராகவும் சாட்சி பகர்ந்தபோது, அவரது பண்பின் மேலானதன்மையும் தூய்மையான குணமும், இதயத்தின் சமாதானமும் மகிழ்ச்சியும் எல்லோருக்கும் வெளிகாட்டப்பட்டது. (48)

அந்த மன்றம் முழுவதும் வியப்பில் மூழ்கி, சற்றுநேரம் பேச்சற்றதாக இருந்தது. அவர் முதலாவது பேசினபோது, தாழ்ந்த குரலில், கிட்டத்தட்ட கீழ்ப்படிகின்ற மரியாதையுள்ள குரலில் பேசினார். ரோமன் கத்தோலிக்கர்கள் இதை அவரது தைரியத்தின் வீழ்ச்சிக்கான ஆரம்பத்தின் அறிகுறி என்று கூறிக்கொண்டனர். தாமதமாகப் பேசுவதற்கான அவரது வேண்டுகோள் அவரது மறுதலிப்புக்கூற்றின் முன்னுரை என்று கருதினர். அந்தச் சந்நியாசியின் மெலிந்த உருவத்தையும் அவரது எளிய உடையையும் அவர் பேசிய எளிமையான விதத்தையும் மன்னர் சார்லஸ் கவனித்து, சற்று அலட்சியமாக, இந்த மனிதனால் என்னை ஒருபோதும் ஒரு மதவிரோதியாக்க முடியாது என்றார். இப்பொழுது அவர் காட்டிய தைரியமும் உறுதியும், காரணங்களை எடுத்துக்கூறும் அவரது வல்லமையும் தெளிவும், எல்லா தரப்பினரையும் ஆச்சரியத்தால் நிரப்பியது. இந்த சந்நியாசி அஞ்சாநெஞ்சத்துடனும் அசையாத தைரியத்துடனும் பேசுகிறார் என்று அரசனே வியப்பில் ஏவப்பட்டுக் கூறினார். தங்களது நாட்டின் இந்த பிரதிநிதியை அநேக ஜெர்மானிய இளவரசர்கள் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் நோக்கினர். (49)

ரோமன் கத்தோலிக்க கட்சியின் மனப்பான்மை மிகக்கேவல மான நிலையை அடைந்தது. அவர்களது காரியம் அனுகூலமற்ற வெளிச்சத்தில் காணப்பட்டது. அவர்கள் தங்களது வல்லமையை நிலைநிறுத்த வேத வாக்கியங்களுக்குச் செல்லாமல், ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் தோல்வியடையாத வாதமாகிய பயமுறுத்துதலின் மூலமாக அதைச் சாதிக்க

முயன்றனர். "நீங்கள் பின்வாங்காவிட்டால், பேரரசரும் பேரரசாட்சியிலுள்ள நாடுகளும், பிடிவாதமிக்க மதவிரோதியான ஒருவருடன் எவ்விதமாக நடந்து கொள்ளவேண்டும் என்று ஆலோசிக்கப் புறப்படுவார்கள்" என்று அந்தக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார். (50)

லுத்தரின் மேன்மைமிக்க தற்காப்புப் பேச்சை மிகுந்த மகிழ்ச்சியுடன் கவனித்திருந்த அவரது நண்பர்கள், இந்த வார்த்தைகளைக் கேட்டு, நடுங்கினார்கள். ஆனால் "தேவன் எனக்கு உதவிபுரிபவராக இருப்பாராக் என்னால் எதையும் பின்வாங்க முடியாது" என்று டாக்டர் லுத்தர் கூறினார்.—Ibid., b. 7, ch. 8. (51)

இளவரசர்கள் ஒருமித்து ஆலோசனை நடத்திய சமயத்தில், அவரை அந்த மன்றத்திலிருந்து வெளியே செல்லும்படி கட்டளை கொடுக்கப்பட்டது. ஒரு பெரிய நெருக்கடி வந்துவிட்டதென்று உணரப்பட்டது. லுத்தரின் கீழ்ப்படிய மறுத்திடும் செயல் கத்தோலிக்க சபையின் வரலாற்றைக் காலங்கள் நெடுகிலும் பாதிக்கும். பின்வாங்குவதற்காக மீண்டும் ஒரு வாய்ப்பு அவருக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. கடைசித் தடவையாக அவர் மன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டார். தனது கோட்பாடுகளை அவர் மறுத்துக்கூறுவாரா என்ற கேள்வி மறுபடியும் கேட்கப்பட்டது. நான் ஏற்கனவே கொடுத்துவிட்டதைவிடுத்து என்னிடம் கொடுப்பதற்கு வேறு பதில் இல்லை என்று அவர் கூறினார். ரோமன் கத்தோலிக்க சபையின் வாக்குறுதிகளினாலோ அல்லது பயமுறுத்தல்களினாலோ அவரை இணங்கவைக்க முடியாது என்பது தெளிவாகியிருந்தது. (52)

அரசர்களையும் பிரபுக்களையும் நடுங்கவைத்த அவர்களது மேலான வல்லமை இப்படிப்பட்ட ஒரு தாழ்மையான சந்நியாசியால் நிந்திக்கப்பட்டதை எண்ணி, ரோமன் கத்தோலிக்கத் தலைவர்கள் மிகுந்த எரிச்சலடைந்தனர். அவரது உயிரைச் சித்திரவதைசெய்து எடுப்பதை அவர் உணரும்படிச் செய்யவேண்டுமென அவர்கள் விரும்பினார்கள். ஆனால் லுத்தர் தனக்கு உண்டாயிருக்கும் ஆபத்தைப் புரிந்துகொண்டவராக, எல்லோரோடும் கிறிஸ்தவ பண்புடனும் அமைதியுடனும் பேசினார். அவரது வார்த்தைகளில் அகந்தை, ஆசை, திரித்துக்கூறுதல் ஆகிய எதுவும் இல்லை. அவர் தன்னைப்பற்றியும் தன்னைச் சுற்றியுள்ள பெரிய மனிதர்களைப்பற்றியும் மறந்து, போப்புகள், குருமார்கள், பேரரசர்கள், அரசர்கள் ஆகிய அனைவரையும்விட, எல்லையற்ற மேன்மைமிக்க ஒருவரின் பிரசன்னத்தின்முன் இருப்பதை மட்டும் உணர்ந்தார். லுத்தரின் நண்பர்களும் விரோதிகளும் திகைக்கவும் ஆச்சரியப்படவும்கூடிய விதத்தில், லுத்தரின் சாட்சியின் மூலமாக வல்லமையுடனும் மகத்துவமுடனும் கிறிஸ்து

பேசினார். பேரரசின் தலைவர்களின் இதயங்களை உணர்த்திக்கொண்டிருந்த தேவஆவியின் பிரசன்னம் காணப்பட்டது. லுத்தரின் காரியத்திலுள்ள நீதியை பல இளவரசர்கள் அறிக்கை செய்தனர். சத்தியத்தைப்பற்றி அநேகர் உணர்த்தப்பட்டனர். அந்த உணர்த்துதலைப் பெற்றுக் கொண்டவர்களில் சிலருக்குள் அது நீடித்து நிற்கவில்லை. தங்களுடைய உணர்த்துதலை வெளிக்காட்டாத வேறொரு வகுப்பினரும் இருந்தனர். அவர்கள் தங்களுக்கென்று வேத வாக்கியங்களை ஆராய்ந்துபார்த்து, பிற்காலத்தில் சீர்திருத்தத்தின் அச்சமற்ற ஆதரவாளர்களானார்கள். (53)

தேர்தல் அதிகாரியான பிரெட்ரிக், விசாரணைக் குழுவின்முன் லுத்தர் தோன்றுவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து, ஆழ்ந்த உணர்வுகளுடன் அவரது உரையைக் கவனித்தார். அந்த டாக்டரின் தைரியம், உறுதி, தன்னடக்கம், தனது நிலையைக்காப்பதில் அவர் உறுதியுடன் நின்றது ஆகியவைகளை அவர் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் கண்டார். போட்டியிட்ட கட்சிகளை அவர் ஒப்பிட்டுப் பார்த்து, போப்புமார்கள், அரசர்கள், குருமார்களின் ஞானம், சத்தியத்தின் வல்லமையினால் இல்லாமலாக்கப்பட்டதை கண்டார். எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் உணரக்கூடிய தோல்வியை போப்புமார்க்கம் அடைந்தது! (54)

லுத்தரின் விளக்கவுரையின் விளைவை உணர்ந்த போப்புவின் பிரதிநிதி, அதுவரை இராதவண்ணம் மிகவும் பயந்து, அந்த சீர்திருத்தவாதியைக் கவிழ்க்கத் தனது ஆதீனத்திலுள்ள எல்லா வழிகளையும் பயன்படுத்தத் தீர்மானித்தார். வாக்குவன்மைக்கும், இராஜதந்திரத் திறமைக்கும் மிகச் சிறந்தவரெனக் குறிப்பிடப்பட்டிருந்த அந்த பிரதிநிதி, முக்கியத்துவமில்லாத ஒரு சந்நியாசியின் காரியத்திற்காக, மிகுந்த வல்லமையுள்ள போப்பு மார்க்கத்தின் நட்பையும் ஆதரவையும் தியாகஞ்செய்வதால் உண்டாகக்கூடிய தவறையும் அபாயத்தையும் இளைஞரான பேரரசருக்கு கூறினார். (55)

அவரது வார்த்தைகள் பலன் தராமல் போகவில்லை. லுத்தர் பதில்கொடுத்த மறுநாள், தனது முன்னோர்கள் நடைமுறைப்படுத்திப் பாதுகாத்துவந்த கத்தோலிக்க சமயக்கொள்கையைப் பின்பற்றத் தானும் தீர்மானித்திருப்பதை அறிவிக்கின்ற செய்தியை, அந்த மன்றத்தின் முன்வைக்க பேரரசன் ஏற்பாடுசெய்தான். "லுத்தர் தனது தவறுகளை மறுத்துக்கூற மறுத்துவிட்டதினால், அவருக்கும் அவர் போதித்த வேதப்புரட்டுக்கும் எதிராக மிகக்கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் தனது பைத்தியகாரத்தனத்தினால் விலகிச் சென்ற தனி ஒரு சந்நியாசி, கிறிஸ்தவ உலகத்திற்கெதிராக தம்மை அசையாது நிற்கச்செய்திருக்கிறார். இந்த அவபக்தியின் முன்னேற்றத் தைத் தடுப்பதற்காக, நான், எனது இராஜ்ஜியம்,

எனது வல்லமை, எனது நண்பர்கள், எனது கருவூலம், எனது உடல், எனது இரத்தம், எனது எண்ணங்கள், எனது உயிர் அனைத்தையும் தியாகம் செய்வேன் எனது மக்களுக்கு மிகக் குறைந்த அளவுகூட தொல்லை தராதபடிக்கு நான் மார்டின் லுத்தரைத் தடைசெய்யப்போகிறேன். அதற்குப்பின், நான் அவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் பகிரங்கமான விரோதிகள் என அறிவித்து, சமுதாயத்தைவிட்டு நீக்குதல், சமயச் சடங்குகளை மறுத்தல் போன்ற அவர்களது அழிவிற்குக் காரணமாகும் அனைத்துக் காரியங்களையும் செய்வேன். நாட்டின் மாநில அங்கத்தினர்கள் இதற்குத் தகுந்த விதமாக, விசுவாசமிக்க கிறிஸ்தவர்களாக நடந்துகொள்ளும்படி நான் அவர்களை அழைக்கிறேன்" என்றார்.—Ibid., b. 7, ch. 9. எனினும் லுத்தருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடத்துதல் மதிக்கப்படவேண்டும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமுன் அவர் பாதுகாப்பாகத் தன் வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும் (56)

அந்த விசாரணை மன்றத்தின் அங்கத்தினர்களுக்குள் ஒன்றையொன்று எதிர்க்கின்ற இரு கருத்துக்கள் இப்பொழுது உண்டாயின. சீர்திருத்தவாதிக்குக் கொடுக்கப்பட்ட பாதுகாப்பு நடத்துதல் கடிதம் பறக்கணிக்கப்படவேண்டும் என்று பேப்புவின் பிரதிநிதிகள் கூறினர். ஒரு நூற்றாண்டிற்குமுன் ரைன் நதியானது, ஜான் ஹஸ்ஸின் சாம்பலைப் பெற்றுக்கொண்டதுபோல, லுத்தரின் சாம்பலையும் பெறவேண்டும் என்று அவர்கள் கூறினார்கள்.—Ibid., b. 7, ch. 9. ஆனால் ஜெர்மன் இளவரசர்கள், போப்புமார்க்கத்தினராக இருந்தபோதிலும் இப்படிப்பட்ட பொது விசுவாசத்திற்கெதிரான மீறுதலை எதிர்த்து, அது நாட்டின் நற்பெயருக்கே கறையாக மாறும் என்றனர். ஹஸ்ஸின் மரணத்திற்குப்பின், உண்டான அழிவுகளை அவர்கள் சுட்டிக்காட்டி, ஜெர்மனியின்மீதும் தங்களது இளம் பேரரசரின் தலையிலும், அப்படிப்பட்ட பயங்கரமான தீங்குகள் மறுபடியும் நிகழும்படி அனுமதிக்க அவர்கள் துணியவில்லை. (57)

இந்த அடிப்படைத் தீர்மானத்திற்குப் பதிலாக, சார்லஸ் தாமே "விசுவாசம் பூமியின் மீதெங்குமிருந்து நீக்கப்பட்டாலுங்கூட, அது இளவரசர்களிடம் அடைக்கலம் காணவேண்டும்" என்றார்.—Ibid., b. 7, ch. 9. அதற்கும் மேலாக, ஹஸ்ஸின் காரியத்தில் சிக்மண்ட் பேரரசன் நடந்துகொண்டது போல, சீர்திருத்தவாதியின் காரியத்திலும் நடந்துகொள்ளவேண்டும் என்று போப்புமார்க்கவாதிகளான லுத்தரின் மிகக் கசப்புமிக்க எதிரிகள் கூறினர். அதாவது, கத்தோலிக்க சபையின் இரக்கத்திற்கு லுத்தரை விட்டுவிடுங்கள் என்றனர் ஆனால் பொது மன்றத்தில் ஹஸ் தனது சங்கிலியைச் சுட்டிக்காட்டி, அந்த அரசனின் மோசமான விசுவாசத் துரோகத்தை நினைவுபடுத்தின

காட்சியை ஐந்தாம் சார்லஸ் நினைவூட்டி, நான் சிக்மண்டைப்போல் என் முகத்தை அவமானத்தால் தொங்கவிட விரும்பவில்லை என்றார்.—Lenfant, vol. 1, p. 422. (58)

அப்படியிருந்தும், லுத்தர் முன்வைத்த சத்தியங்களை சார்லஸ் துணிகரமாக நிராகரித்தார். நான் எனது முன்னோர்களின் அடிச்சுவடுகளில் நடக்க உறுதியாகத் தீர்மானித்திருக்கிறேன் என்று அந்த அரசன் எழுதினான். சத்தியம், நீதி, ஆகியவைகளின் பாதையில் நடப்பதற்காக, சம்பிரதாயத்தின் பாதையைவிட்டு விலகமுடியாது என்று அவன் முடிவுசெய்திருந்தான். போப்புமார்க்கத்தை தன் பிதாக்கள் தாங்கி இருந்ததினால், அதன் எல்லாக் கொடுமை களுடனும் ஊழல்களுடனும், தானும் தாங்கப்போவதாகக் கூறினான். இவ்வாறாக, தன் பிதாக்களுக்குக் கிடைத்திருந்ததைக் காட்டிலும் அதிகமான எந்த வெளிச்சத்தையும் ஏற்க மறுத்து, அவர்கள் செய்யாத கடமையைத் தானும் செய்ய மறுத்தான். (59)

இந்த நாட்களிலுங்கூடத் தங்களது பிதாக்களின் சம்பிரதாயங் களையும் பாரம்பரியங்களையும் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கும் ஏராளமானவர்கள் உள்ளனர். கர்த்தர் அவர்களுக்கு அதிக வெளிச்சத்தைக் கொடுக்கும்போது, அந்த வெளிச்சம் அவர்களது பிதாக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக அதைப் பெற்றுக்கொள்ள மறுக்கின்றனர். நமது பிதாக்கள் இருந்த இடத்தில் நாம் வைக்கப்படவில்லை. அதனால், நமது கடமைகளும் பொறுப்புகளும் அவர்களுடையதைப்போல் இருப்பதில்லை. நாம் நமக்காக தேவனுடைய வார்த்தையிலுள்ள சத்தியத்தை ஆராய்வதற்குப் பதிலாக, நமது கடமையைத் தீர்மானிக்க நமது பிதாக்களை உதாரணமாகக் காணும்போது, தேவனால் அங்கீகரிக்கப்படமாட்டோம். நமது பொறுப்புகள் நமது முன்னோர்களுடையதைவிட பெரியவை. நமக்குக் கிடைக்கும்படியாக நமது பெற்றோர்களுக்குப் பிறப்புரிமையாகக் கொடுக்கப்பட்டு, அவர்களிடமிருந்து நமக்கு வந்திருக்கிற வெளிச்சத்திற்கு நாம் கணக்குக்கொடுக்கவேண்டியவர்களாக இருப்பதோடு, இப்பொழுது தேவனுடைய வார்த்தையிலிருந்து நம்மீது வீசும் அதிகமான வெளிச்சத்திற்கும் கணக்குக்கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். (60)

“நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது இப்பொழுதோ தங்கள் பாவத்தைக் குறித்துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை” (யோவான் 15:22) என்று நம்பிக்கையில்லாத யூதர்களிடம் இயேசு கூறினார். அதே தெய்வீக வல்லமை லுத்தரின் மூலமாக ஜெர்மனியின் பேரரசனிடமும் இளவரசர்களிடமும் பேசியது. தேவனுடைய வார்த்தையிலிருந்து வெளிச்சம் வீசியபோது, அந்த

மன்றத்திலிருந்தவர்களிடம் கடைசித் தடவையாக தேவனுடைய ஆவி பரிந்துபேசியது. நூற்றாண்டுகளுக்கு முன், அகந்தையும் மக்களால் உண்டாகும் மேன்மையும் உலக இரட்சகருக்கெதிராக பிலாத்துவைத் தனது இதயத்தை மூடச்செய்ததுபோல, “இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பேன்” (அப் .24: 25) என்று பயத்தால் நடுங்கிய பேலிக்ஸ், சத்தியத்தின் தூதனாக நின்றவனை அனுப்பிவிட்டதைப்போல, “நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய்” (அப்போஸ்தலர் 26:28) என்று அகந்தை மிக்க அகிரிப்பா அறிக்கைசெய்து, பரலோகம் அனுப்பின தூதைவிட்டுத் திரும்பினதுபோல, உலகப்பிரகாரமான பெருமையும் கொள்கைகளும் கொடுத்த நிபந்தனைகளுக்கு விட்டுக்கொடுத்து, ஐந்தாம் சார்லஸ் சத்தியத்தின் ஒளியை நிராகரிக்க முடிவுசெய்தார். (61)

லூத்தருக்கெதிராக வடிவமைக்கப்பட்ட திட்டங்களைப்பற்றிய வதந்திகள் அந்த நகரம் முழுவதிலும் பெரும் உணர்ச்சிப்பெருக்கை உண்டுபண்ணினது. சீர்திருத்தவாதிக்கு ஏராளமான நண்பர்கள் இருந்தனர். ரோமன் கத்தோலிக்க சபையின் ஊழல்களை வெளிக்காட்டுபவர்களுக்கெதிராக நடத்தப்படும் நம்பிக்கை துரோகமிக்க கொடுமைகளை அறிந்த இவர்கள், அவரை பலியிடப்படும்படி விட்டுவிடக்கூடாது என்று தீர்மானித்தனர். நூற்றுக்கணக்கான மேன்மக்கள் அவரைப் பாதுகாக்க உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். அரசின் இந்தச் செய்தி, ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் கட்டுப்படுத்தும் வல்லமைக்குக் கீழ்ப்படியும் பலவீனமுள்ளதாக நிரூபிக்கப்பட்டுவிட்டதென்று பகிரங்கமாக எதிர்த்தவர்கள் சிலர் மட்டுமல்ல. வீட்டு வாசல்களிலும் பொது இடங்களிலும் லூத்தரைப் பழித்தும் ஆதரித்தும் அறிக்கைகள் ஒட்டப்பட்டன. “ராஜா சிறுபிள்ளையாய் இருக்கும் தேசமே, உனக்கு ஐயோ!” (பிரசங்கி 10:16) என்ற ஞானியின் பொருள் பொதிந்த வார்த்தை அவைகளில் ஒன்றில் எழுதப்பட்டிருந்தது. ஜெர்மன் நாடெங்கிலும் லூத்தருக்குச் சாதகமாக உண்டான பெரும்பான்மை மக்களின் உற்சாகம் லூத்தருக்கு ஏதாவது அநீதி இழைக்கப்பட்டால், அது பேரரசின் சமாதானத்தை ஆபத்துக்குள்ளாக்கிவிடுவதுடன் சிங்காசனத்தின் ஸ்திரத் தன்மையையுங்கூடக் குலைத்துவிடும் என்று பேரரசனையும் விசாரணைக்குழுவையும் உணர்த்தியது. (62)

சீர்திருத்தவாதியைப் பற்றி நன்கு அறிந்த தனது உள்உணர்வுகளை கவனமாக மறைத்துவைத்திருந்த சாக்சோனியரான பிரெட்ரிக், அதே சமயத்தில் லூத்தரை மிகுந்த விழிப்புடன் களைப்பில்லாமல் காவல் செய்திருந்து, அவரது போக்குவரத்தையும், அவரது எதிரிகளின் போக்கு

வரத்தையும் கண்காணித்திருந்தார். ஆனால் லுத்தரின்மீதிருந்த தங்களின் அனுதாபத்தை மறைக்காமலிருந்த ஏராளமானவர்கள் இருந்தனர். சுயாதீனர்களும் சபை நிர்வாகிகளுமாக இருந்த இளவரசர்கள், பிரபுக்கள், பெரும் வியாபாரிகள் மற்றும் சில குறிப்பிட்டவர்களால் லுத்தர் சந்திக்கப்பட்டார். வந்த எல்லோருக்கும் இடம்கொடுக்க லுத்தரின் அறை மிகச் சிறியதாக இருந்தது என்று ஸ்பாலத்தீன் என்பவர் எழுதினார்.—Martyn, vol. 1, p. 404. அவர் மனிதனைவிட மேலானவர் என எண்ணி, மக்கள் அவரைப் பார்த்தனர். அவரது கோட்பாடுகளின் மீது விசுவாசமற்றவர்களுங்கூட, தனது மனசாட்சியை மீறுவதைவிட வீர மரணத்தை அடைவதுமேல் என எண்ணின அவரது உயர்ந்த நேர்மையைக்கண்டு போற்றினர். (63)

ரோமன் கத்தோலிக்க சபையுடன் சமரசம் செய்துகொள்ளும் சம்மதத்தை லுத்தரிடமிருந்து பெற்றிட ஆர்வமிக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அவர் சபைக்கும் ஆலோசனைக் குழுக்களுக்கும் எதிரான தீர்ப்பைப் பிடிவாதமாகப் பற்றிக்கொண்டிருந்ததால், விரைவில் பேரரசிலிருந்து நீக்கம்செய்யப்படுவார் அப்படி நிகழ்ந்தபின், அவருக்குப் பாதுகாப்பு இருக்காது என்று மேன்மக்களும், இளவரசர்களும் அவருக்கு எடுத்துரைத்தார்கள். எதிர்ப்பு இல்லாமல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கமுடியாது அப்படியிருக்கும்போது ஆபத்து உண்டாகும் என்ற பயம் என்னைக் கர்த்தரிடமிருந்தும் சத்தியமாகிய தெய்வீக வார்த்தையிடமிருந்தும் பிரிக்கவேண்டியது என்ன? இல்லை. அதற்குப் பதிலாக நான் எனது உடலையும் இரத்தத்தையும் உயிரையுங்கூட கொடுத்துவிடுவேன் என்று லுத்தர் பதில் கூறினார்.— D'Aubigne, b. 7, ch. 10. (64)

பேரரசனின் நியாயத்தீர்ப்புக்குப் பணியும்படியும், அப்படிச் செய்தால், அதன்பின் அவருக்கு எந்தவிதமான பயமும் உண்டாகாது என்றும்கூறி, அவர் அழைக்கப்பட்டார். அதற்குப் பதிலாக, முழு இதயத்துடன் பேரரசரும் இளவரசர்களும் மிகவும் எளியவர்களுமான கிறிஸ்தவர்களும் எனது எழுத்துக்களைச் சோதித்துத் தீர்ப்புச் செய்யட்டும். அப்போது நான் சம்மதிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை—அவர்கள் தேவனுடைய வார்த்தைகளை அவர்களது வழிகாட்டியாக எடுத்துக்கொள்ளவேண்டும். மனிதர்கள் அதற்கு கீழ்ப்படிவதைத்தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை. எனது மனசாட்சி அந்த வார்த்தையையே சார்ந்திருக்கிறது. அதன் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்ட ஒருவனாக நான் இருக்கிறேன் என்றார்.— Ibid., b. 7, ch. 10. (65)

நான் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடத்துதலை விட்டு விலகிக்கொள்ளவும், என்னையும் எனது உயிரையும் பேரரசரின் முடிவிற்கு

விட்டுவிடவும் சம்மதிக்கிறேன்.—Ibid., b. 7, ch. 10. ஆனால் தேவனுடைய வார்த்தையை விட்டுவிட ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன் என்றார். மறுபடியும் அவர் ஒரு பொதுக்குழுவின் முடிவுக்குப் பணிய விருப்பமுள்ளவராக இருப்பதாகவும், ஆனால் அந்தக்குழு தேவனுடைய வார்த்தையின்படிதான் முடிவுசெய்ய வேண்டும் என்ற நிபந்தனையையும் கூறினார். தேவனுடைய வார்த்தையையும் விசுவாசத்தையும் சம்பந்தப்பட்டவரையில், போப்புவை ஆதரிக்கிற இலட்சக்கணக்கான குழுக்கள் அவருக்கு இருந்தபோதிலும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் போப்புவைப்போலவே தனக்குத்தானே நல்ல நீதிபதியாக இருக்கமுடியும் என்று அவர் மேலும் கூறினார்.—Martyn, vol. 1, p. 404. இறுதியில் அவரது எதிரிகளும் நண்பர்களும் ஒப்புரவாவதற்காக மேற்கொண்டுசெய்யப்படும் முயற்சிகளினால் எவ்விதமான பயனும் உண்டாகப்போவது இல்லை என்று உணர்த்தப்பட்டனர். (66)

ஒரு நிலையிலாவது சீர்திருத்தவாதி விட்டுக்கொடுத்திருந்தால், சாத்தானும் அவனது அணியினரும் வெற்றியடைந்திருப்பார்கள். ஆனால் அசையாத உறுதிமிக்க அவரது விசுவாசம்தான் சபைக்கு விடுதலையைக் கொண்டுவரும் கருவியாகவும், ஒரு புது யுகத்தின் ஆரம்பமாகவும் இருந்தது! மதம் சம்பந்தப்பட்ட காரியங்களில் தனக்கென்று சிந்தித்துச் செயலாற்றத் துணிந்த இந்த ஒருமனிதனின் செல்வாக்கானது சபையையும், உலகத்தையும் அவரது காலத்தில் மட்டுமின்றி, எதிர்காலத் தலைமுறைகளிலும் தொடர்ந்தது. அவரது உறுதியும் நேர்மையும் காலத்தின் முடிவுவரை இதுபோன்ற அனுபவத்திற்குள் கடந்துசெல்ல உள்ள அனைவரையும் பலப்படுத்தும். தேவனுடைய வல்லமையும் இராஜரீக மேன்மையும், மனிதர்களின் ஆலோசனைகளுக்கும் சாத்தானின் பலமிக்க வல்லமைக்கும் மேலாக உயர்ந்து நின்றது. (67)

பேரரசனின் அதிகாரத்தினால், லுத்தர் தனது வீட்டிற்குச் செல்லும் கட்டளையைப் பெற்றார். பழிவாங்கப்படுதல் தன்னைப் பின்தொடருமென அறிந்தார். பாதைநெடுகிலும் அவரை அச்சுறுத்தும் மேகங்கள் படர்ந் திருந்தன. ஆனால் அவர் வோம்ஸ் நகரைவிட்டுப் புறப்பட்டபோது, அவரது இதயம் மகிழ்ச்சியினாலும் துதியினாலும் நிறைந்திருந்தது. போப்புவை விடிவெள்ளியாக வைத்திருந்தேன் என்று சாத்தான் தானே கூறியிருந்தான். ஆனால் கிறிஸ்து அதில் ஒரு விரிசலான பெரும் பிளவை உண்டுபண்ணி, சாத்தானைவிட அவரே வல்லமை உள்ளவர் என்பதை அறிக்கைசெய்யும்படி அவன் வற்புறுத்தப்பட்டான்.—D'Aubigne, b. 7, ch. 11. (68)

தனது உறுதியை, கலகம்செய்யும் தன்மை என்று பேரரசர் தவறாக எண்ணிவிடக்கூடாது என்ற லுத்தரின் வாஞ்சையை அவர் பேரரசனுக்கு

எழுதினார். வாழ்விலும் சாவிலும், மனிதனைப் பிழைக்கவைக்கும் தேவனுடைய வார்த்தை ஒன்றைத்தவிர வேறு எதற்கும் எந்தவிதமான மறுப்பும் இன்றி பேரரசராகிய உமது கட்டளைக்கு, அது நல்லதானாலும், கெட்டதானாலும் முழு இதயத்துடன் கீழ்ப்படிய நான் தயாராக இருக்கிறேன். என் எண்ணங்களை அறிகின்ற தேவன் இதற்கு எனது சாட்சியாக இருக்கிறார் என்று கூறினார். இந்த வாழ்க்கையிலுள்ள சகல காரியங்களிலும் எனது நேர்மை அசையாததாக இருக்கும், ஏனெனில் இவைகளில் உள்ள நஷ்டமும் லாபமும் இரட்சிப்பைப் பொறுத்தவரை ஒன்றுமில்லாததாக உள்ளது. ஆனால் நித்திய ஜீவனைப்பற்றிய காரியங்களில் மனிதனுக்கு மனிதன் அடிமையாக இருக்கவேண்டும் என்பது தேவனது சித்தத்திற்கெதிரானது. ஆவிக்குரிய காரியங்களில் கீழ்ப்படிதல் என்பது உண்மையான தொழுகையாக உள்ளது. அது சிருஷ்டிகருக்கு மட்டுமே செலுத்தப்படவேண்டும் என்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.—Ibid., b. 7, ch. 11. (69)

வோம்ஸ் நகரிலிருந்து திரும்பிய பயணத்தில் லூத்தருக்குக் கொடுக்கப்பட்ட வரவேற்பானது அவர் புறப்பட்டுச்சென்றபோது கொடுக்கப்பட்டதைவிட அதிகமாக இருந்தது. மிகமேலான சபைப் பிரசங்கிகள் சமூக நீக்கம் செய்யப்பட்ட அந்த சந்நியாசியை வரவேற்றனர். பேரரசனால் மறுக்கப்பட்ட அந்த மனிதனை, நாட்டின் அதிபதிகள் சிறப்பித்தனர். அவர் பேசும்படி வற்புறுத்தப்படவே, அரசாங்கத் தடை உத்தரவு இருந்தபோதிலும், மறுபடியும் பிரசங்கப்பீடத்தின்மீது ஏறினார். தேவனுடைய வார்த்தை சங்கிலியால் கட்டப்பட நான் ஒருபோதும் வாக்குறுதி செய்யவில்லை. இனிமேலும் அப்படிச் செய்யமாட்டேன் என்று அவர் கூறினார்.—Martyn, vol. 1, p. 420. (70)

அவர் வோம்ஸ் நகரைவிட்டுச்சென்ற சில நாட்களுக்குள், போப்புமார்க்கவாதிகள் லூத்தருக்கு எதிராக ஒரு சட்டத்தைப் பிறப்பிக்கும்படி, பேரரசனை மேற்கொண்டனர். அதில், "சந்நியாசியின் வடிவின் கீழ் சாத்தான் இருக்கிறான்" என்று கண்டனம் செய்யப்பட்டார்.—D'Aubigne, b. 7, ch. 11. அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாதுகாப்பு நடத்துதல் முடிவுக்கு வந்ததும், அவரது ஊழியத்தைத் தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்ற கட்டளை உண்டானது. ஒருவரும் அவருக்கு இடம் கொடுக்கவோ, உணவோ தண்ணீரோ கொடுக்கவோ, வார்த்தையினாலோ செயலினாலோ, பொதுவாகவோ தனிப்பட்ட விதமாகவோ, உதவவோ தாங்கவோ கூடாது என்று எல்லோரும் விலக்கப்பட்டனர். அவர் எங்கே இருந்தாலும் அவரைப் பிடித்து அதிகாரிகளிடம் ஒப்படைக்கவேண்டும். முடிவாக இந்தக் கட்டளைக்கு விரோதமாகச் செயல்படத்துணியும் அனைவரும் இதிலுள்ள தண்டனைக்கு

உட்படுத்தப்படவேண்டும் என்று எழுதப்பட்டது. சாக்சோனியத் தேர்தல் அதிகாரியும் லுத்தரின் நெருங்கிய நண்பர்களுமான இளவரசர்களும் அவர் வோம்ஸ்நகரை விட்டுப் புறப்பட்டுச் சென்றதும் தாங்களும் புறப்பட்டுச் செல்லவே, விசாரணைக்குழு தன் விருப்பப்படி செய்துகொள்ளும் அனுமதியைப் பேரரசனிடமிருந்து கட்டளையாகப் பெற்றது. இப்பொழுது ரோமன் கத்தோலிக்கர்கள் வெற்றியடைந்தவர்களாக இருந்தனர். சீர்திருத்தத்தின் தலைவிதியின்மீது முத்திரை வைக்கப்பட்டுவிட்டதாக ரோமன் கத்தோலிக்கர்கள் எண்ணினர். (71)

ஆபத்து நிறைந்த இந்த நேரத்தில், தேவன் அவரது ஊழியக்காரன் தப்பிச்செல்வதற்காக ஒரு வழியை ஏற்பாடு செய்திருந்தார். வியப்புமிக்க ஒரு கண் லுத்தரின் நடையைப் பின்பற்றி, ஒரு உண்மையும் மேன்மையுமிக்க இதயம் அவரைக் காக்கத் தீர்மானித்திருந்தது. லுத்தரின் மரணத்தைவிடக் குறைவான ஒன்றினாலும் ரோமன் கத்தோலிக்க நிர்வாகம் திருப்தியடையாது என்பது தெளிவாக இருந்தது. அவரை மறைத்துவைப்பதின் மூலமாக மட்டுமே, சிங்கத்தின் வாயிலிருந்து அவரைப் பாதுகாக்கமுடியும். சீர்திருத்தவாதியின் பாதுகாப்பிற்கான ஒரு திட்டத்தை ஏற்பாடுசெய்ய சாக்சோனிய பிரெட்ரிக்கிற்கு தேவன் ஞானத்தைக் கொடுத்தார். உண்மையான நண்பர்களின் ஒத்துழைப்புடன் தேர்தல் அதிகாரியின் நோக்கம் செயல்படுத்தப்பட்டு, லுத்தர் அவரது நண்பர்களிடமிருந்தும், எதிரிகளிடமிருந்தும் மிகத்திறமையாக ஒளித்துவைக்கப்பட்டார். அவரது வீட்டை நோக்கிய பயணத்தில் அவர் முற்றுகையிடப்பட்டு, அவரது துணைவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, தனிமையான மலைக்கோட்டையாயிருந்த வார்ட்பர்க் என்னும் கோட்டைக்குக் காடுகளின் வழியாக வேகமாகக் கடத்திச்செல்லப்பட்டார். அவரைச் சிறைப்பிடித்ததும் மறைத்ததும் மிகுந்த இரகசியமாக இருந்ததால், அவர் எங்கு கொண்டுசெல்லப்பட்டார் என்பது சில காலத்திற்கு பிரெட்ரிக்கினாலும் அறியமுடியாததாக இருந்தது. இந்த அறியாமை திட்டமிடப்பட்டதாக இருக்கவில்லை. லுத்தரின் இருப்பிடம் தேர்தல் அதிகாரிக்குத் தெரியாமல் இருக்கும்வரை அவரால் எதையும் வெளிப்படுத்த இயலவில்லை. சீர்திருத்தவாதி பாதுகாப்பாக இருக்கிறார் என்பதைப்பற்றி தன்னில்தானே திருப்தியடைந்து, இந்த அறிவுடன் அவர் சமாதானம் அடைந்தார். (72)

இளவேனில்காலம், வசந்தகாலம், இலையுதிர்காலம் ஆகியவை கடந்துசென்று குளிர்காலம்வந்தது. லுத்தர் இன்னும் சிறைக்கைதியாகவே இருந்தார். சுவிசேஷத்தின் ஒளி அணையப்போவதுபோல் தோன்றுவதைக் கண்டு, அலேயாண்டரும் அவரது கட்சிக்காரர்களும் வெற்றிச் சிரிப்புச் சிரித்தனர். இதற்குப் பதிலாக சீர்திருத்தவாதி சத்தியத்தின் சேமிப்புக்கிடங்கிலிருந்து

தனது விளக்கை எண்ணெயால் நிரப்பிக்கொண்டிருந்தார். அதன் வெளிச்சம் அதிகமான ஒளியுடன் பிரகாசிக்க வேண்டியதாக இருந்தது. (73)

போராட்டங்களின் வெப்பம், கலக்கம், ஆகியவைகளிலிருந்து விடுபட்ட லூத்தர், சிலகாலம் வார்ட்பர்க் கோட்டையிலுள்ள நட்பின் பாதுகாப்பில் மகிழ்ச்சியுடன் இருந்தார். அமைதியாகவும் ஓய்வாகவும் இருப்பதில் அவரால் அதிக நாட்கள் திருப்தியைக் காண இயலவில்லை. உழைப்பிலும் போராட்டங்களிலும் பழகிப்போன வாழ்க்கையை உடையவராக இருந்த அவரால், செயலாற்றாமல் இருப்பதைச் சகிக்க இயலவில்லை. அந்தத் தனிமையான நாட்களில் சபையின் நிலைமை அவர்முன் தோன்றவே. அவர் நம்பிக்கையிழந்து, ஐயோ, அவரது கோபத்தின் இந்தப் பின்நாட்களில் கர்த்தருக்குமுன் ஒரு சுவரைப்போல் நின்று இஸ்ரவேலைக்காக்க ஒருவரும் இல்லையே என்று அவர் கதறி அழுதார்.— Ibid., b. 7, ch. 11. மறுபடியும் அவரது எண்ணங்கள் அவரைப்பற்றித் திரும்பவே, இந்தப் போராட்டத்திலிருந்து விடுபட்டு கோழையாக இருப்பதாக அவர்மீது குற்றம்சாட்டப்படுமே என்று எண்ணி பயந்தார். அவரது மந்தமான தன்மைக்காகவும் சுயநலமிக்க பழக்கங்களுக்காகவும் அவர் தன்னைத் தான் நிந்தித்தார். அதேசமயம் ஒரு மனிதனால் செய்துமுடிக்கமுடியாது என்று தோன்றியதைவிட அதிகமாகத் தினமும் அவர் நிறைவேற்றியிருந்தார். அவரது எழுதுகோல் ஒருபோதும் ஓய்ந்திருக்கவில்லை. மூடப்பட்டதென்று அவரது எதிரிகள் தங்களுக்குள் பெருமையடித்துக் கொண்டிருந்த வேளையில், அவர் மேலும் ஆக்கப்பூர்வமாகச் செயலாற்றிக்கொண்டிருக்கிறார் என்கிற ஆதாரப்பூர்வமான சான்றுகளைக் கண்டு, அவர்கள் வியப்பும் குழப்பமும் அடைந்தனர். அவரது எழுதுகோலிலிருந்து புறப்பட்ட கட்டுக்கட்டான கைப்பிரதிகள் ஜெர்மனி முழுவதிலும் சுற்றிவந்தன. புதிய ஏற்பாட்டை, அவரது சொந்த மொழியான ஜெர்மன் மொழியில், மொழிபெயர்த்ததின் மூலமாக, அவர் தனது நாட்டு மக்களுக்கு ஒரு மிகமுக்கியமான சேவையைச் செய்தார். அவரது காலத்திலிருந்த பாவங்களையும் தவறுகளையும் கண்டிக்க அவர் ஏறத்தாழ ஒருவருடகாலம் அவரது பத்மு பாசறையிலிருந்து சுவிசேஷத்தை அறிவிப்பதைத் தொடர்ந்தார். (74)

லூத்தரின்எதிரிகளின்கோபத்திலிருந்து அவரைக்காப்பதற்காகவும், இந்த மிகமுக்கியமான வேலையைச்செய்ய அமைதியான ஒரு காலம் அவருக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதற்காகவும், தேவன் அவரது ஊழியக்காரரை அவரது பொது வாழ்க்கையிலிருந்து பின்னிழுக்கவில்லை. இவைகளைவிட விலைமதிப்புமிக்க பலன்கள் பெற்றுக்கொள்ளப்படவேண்டியதிருந்தன. தனிமையும் மறைவுமான மலைப்புற ஒதுக்கிடத்தில் உலகப்பிரகாரமான

ஆதரவுகளிலிருந்து லுத்தர் நீக்கப்பட்டு, மனிதப்போற்றுதல்களிலிருந்து மூடப்பட்டார். வெற்றியினால் அடிக்கடி உண்டாகக்கூடிய அகந்தையில் இருந்தும் தன்னைப்பற்றிய நம்பிக்கையிலிருந்தும் இப்படியாக அவர் காக்கப்பட்டார். திடீரென்று உயர்த்தப்பட்ட தலைசுற்றும் உயரத்தில் பாதுகாப்பாக நடக்கும்படி, பாடுகளினாலும், சிறுமையினாலும் அவர் ஆயத்தம் செய்யப்பட்டார். (75)

சத்தியம் கொண்டுவரும் விடுதலையில் மனிதர்கள் மகிழும் போது, தவறு, மூடநம்பிக்கையாகிய சங்கிலிகளைத் துண்டிக்கும்படி தேவன் ஏற்படுத்தினவர்களை உயர்த்திப்பேச மனிதர்கள் தூண்டப் படுகின்றனர். மனிதர்களின் எண்ணங்களும் வாஞ்சையும், தேவனிடத்தில் இருந்து திருப்பப்பட்டு, மனித ஏதுகரங்களின்மீது வைக்கப்படும்படி சாத்தான் வகைதேடுகிறான். அனைத்து நிகழ்ச்சிகளையும் நடத்தும் தெய்வீக ஏற்பாடுகளின் தரத்தை அறியாமல் விட்டுவிட்டு, அவைகளைச் செயல்படுத்தும் சாதாரணக் கருவிகளை சிறப்பிக்கும்படி அவன் அவர்களை நடத்துகிறான். இவ்விதமாக அடிக்கடி போற்றப்படும், பக்திகாட்டப்படும் சமயத் தலைவர்கள், தாங்கள் தேவனைச் சார்ந்திருக்கும் பார்வையை இழந்து, தங்கள்மீது நம்பிக்கைவைக்கும்படி நடத்தப்படுகின்றனர். இதன் விளைவாக, வழிகாட்டுதலுக்காக தேவனுடைய வார்த்தையைப் பார்ப்பதற்குப் பதிலாகத் தங்களை பார்க்கும் மனிதர்களின் மனங்களையும் மனசாட்சிகளையும் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அவர்கள் வகைதேடுகின்றனர். சீர்திருத்தத்தின் பணியானது அதன் ஆதரவாளர்கள் செயல்படுத்தும் இப்படிப்பட்ட ஆவியின் காரணமாக வளர்ச்சி குன்றிவிடுகிறது. இந்த ஆபத்திலிருந்து சீர்திருத்தத்தின் காரியங்களை தேவன் காப்பார். இந்தப் பணியானது மனிதனின் அடையாளத்தைப்பெறாமல், தேவனின் அடையாளத்தைப் பெறவேண்டும் என்று அவர் விரும்பினார். மனிதர்களின் கண்கள், லுத்தர் சத்தியத்தை விளக்குபவர் என்று அவரைப் பார்த்தன. கண்கள் யாவும் சத்தியத்தை விவரிக்கிற நபராக லுத்தரைப் பார்த்தன. ஆனால் அவைகள் சத்தியத்தின் நித்தியகால ஆசிரியராயிருப்பவரையே பார்க்கும்படியாக, லுத்தர் அவர்களின் பார்வைக்குத் தெரியாமல் மறைத்து வைக்கப்பட்டார். (76) ★

# 9

# சுவிட்சர்லாந்தின் சீர்திருத்தவாதி ஸ்விங்ளி!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 171–184)**

சபையைச் சீர்திருத்தும் கருவிகளைத் தேர்ந்தெடுப்பதில் சபையை ஸ்தாபிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அதே தெய்வீகத்திட்டம் செயலாற்றியது. மக்களின் தலைவர்கள் என்ற போற்றுதல்களைப் பெறும் வழக்கத்தைக்கொண்டிருந்த பெரும் கல்விமான்களும் செல்வந்தர்களுமான உலகத்தின் பெரிய மனிதர்களைவிட்டுப் பரலோக ஆசிரியர் கடந்து சென்றார். அவர்கள் பெருமையான தங்களுடைய மேன்மையைக் குறித்து அகந்தையும், சுயத்தின்மீது நம்பிக்கைகொண்டவர்களாகவும் இருந்ததால், உடன் மனிதர்கள்மேல் அனுதாபம் கொள்ளவும் நாசரேத்தின் தாழ்மையான மனிதருக்கு உடன்வேலைக்காரராக இருக்கவும்வனையப்படமுடியாதவர்களாக இருந்தனர். “என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிற வர்களாக்குவேன்” (மத்தேயு 4:19) என்ற அழைப்பு கலிலேயராகிய கல்வியற்ற உழைக்கும் மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தச் சீடர்கள் தாழ்மையுள்ளவர்களாகவும் கற்பிக்கப்படக்கூடியவர்களாகவும் இருந்தனர். அவர்களது காலத்திலிருந்த தவறான போதனைகளினால் எந்த அளவிற்கு ஆட்கொள்ளப்படாதவர்களாக இருந்தார்களோ, அந்த அளவிற்கு கிறிஸ்துவால் அவர்களை அவரது சேவைக்கு அதிக வெற்றிகரமாகப் பயிற்றுவிக்க முடிந்தது. பெரும் சீர்திருத்தத்தின் நாட்களிலும் இவ்வண்ணமாகவே இருந்தது. முன்னணியிலிருந்த சீர்திருத்தவாதிகள், மிகத் தாழ்மையான வாழ்க்கையிலிருந்து வந்த மனிதர்களாக இருந்தனர். அவர்களது காலத்திலிருந்த மேலான நிலைமையைப்பற்றிய பெருமையற்றவர் களான, மதவெறி, குருப்பயிற்சி ஆகியவைகளின் செல்வாக்கிலிருந்து விடுபட்டவர்களாக அவர்கள் இருந்தனர். பெரும் பயன்களை உண்டுபண்ண

மிகத் தாழ்மையான கருவிகளைப் பயன்படுத்துவது தேவனுடைய திட்டமாக உள்ளது. அப்படிச் செய்யும்போது, அதன் மகிமை மனிதர்களுக்குக் கொடுக்கப்படாமல், ஆண்டவரது மகிழ்ச்சிக்கென்று செயலாற்று கிறவர்களின் மூலமாக, தேவனுக்குக் கொடுக்கப்படும். (1)

சாக்சோனியிலுள்ள ஒரு சுரங்கத் தொழிலாளியின் வீட்டில் லுத்தர் பிறந்த சில வாரங்களுக்குப்பின், ஆல்ப்ஸ் மலைகளுக் கிடையிலுள்ள ஒரு மேய்ப்பனின் குடிசையில் **உல்ரிக் ஸ்விங்ளி** பிறந்தார். ஸ்விங்ளியின் பிள்ளைப்பருவச் சுற்றுப்புறங்களும் அவரது ஆரம்பகாலப் பயிற்சியும் அவரது எதிர்கால ஊழியத்திற்கென்று அவரை ஆயத்தப்படுத்துபவையாக இருந்தன. இயற்கையின் மகத்தான காட்சிகளின் அழகு, திகைக்கவைக்கும் கம்பீரம் ஆகியவைகளுக்கு நடுவில் வளர்க்கப்பட்ட அவரது மனம், ஆரம் பத்திலேயே தேவனின் மகா மேன்மையைப் பற்றிய உணர்வு, அவரது வல்லமை, அவரது மகத்துவம் ஆகியவைகளினால் உணர்த்தப்பட்டதாக இருந்தது. தனது பிறப்பிடமான மலைகளில் வீரச்செயல்களினால் சாதித்தவைகளைப் பற்றிய வரலாறு இளமையான அவரது ஆவலை அவரில் தூண்டிவிட்டது. ஆலயத்தில் சொல்லப்பட்டிருந்த கட்டுக்கதை களிலிருந்தும், பாரம்பரியங்களிலிருந்தும் அவரது பக்திமிக்க பாட்டி பொறுக்கியெடுத்துச் சொன்ன சில விலைமதிப்புமிக்க வேதாகமக் கதைகளை அவளது அருகிலமர்ந்து கேட்டார். முற்பிதாக்கள் தீர்க்கதரிசிகள் ஆகியோரின் மாபெரிய செயல்கள் குறித்தும், தேவதூதர்கள் பேசின பாலஸ்தீனக் குன்றுகளின் மேய்ப்பர்களைக் குறித்தும், பெத்லெகேமின் குழந்தை, கல்வாரி மனிதர் ஆகியோரைக் குறித்தும் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டார். (2)

லுத்தரைப்போலவே ஸ்விங்ளியின் தந்தை தனது மகனின் கல்வியில் நாட்டம் கொண்டதால், அந்தச் சிறுவன் ஆரம்பத்திலேயே தனது பிறப்பிடமாகிய பள்ளத்தாக்கைவிட்டு அனுப்பப்பட்டார். அவரது மனம் வேகமாக முன்னேறவே, அவருக்குக் கல்விபுகட்டத் தகுதிவாய்ந்த ஆசிரியரை எங்கு கண்டுபிடிப்பது என்பது ஒரு கேள்வியாயிற்று. ஸ்விட்சர்லாந்தில் மிகச்சிறப்பான பள்ளியைக்கொண்டிருந்த பெர்ன் என்னும் இடத்திற்கு, அவர் தனது பதிமூன்றாம் வயதில் அனுப்பப்பட்டார். இங்கு அவரது நம்பிக்கைமிக்க வாழ்க்கையைப் பாழாக்கக்கூடிய ஒரு அபாயம் உண்டானது. அவரை மடாலயத்திற்குக் கவர்ந்து இழுக்கும் தீர்மானமான முயற்சிகள் குருமார்களால் மேற்கொள்ளப்பட்டன. வெகு ஜனங்களின் ஆதரவைப் பெறுவதற்காக டொமினிகன் பிரிவிலும் பிரான்சிஸ்கன் பிரிவிலும் இருந்த சந்நியாசிகள் போட்டிச் சண்டையில் ஈடுபட்டிருந்தனர். தங்களது ஆலயங்களை காணக்கூடிய விதத்தில் அலங்காரம் செய்வதினாலும், தங்களுடைய சடங்குகளின் ஆடம்பரத்தினாலும், புனிதப் பொருட்கள் மற்றும்

அற்புதங்களைச் செய்யும் சிலைகளினால் உண்டாகும் கவர்ச்சியினாலும், இதை அடைந்துகொள்ள அவர்கள் பாடுபட்டுக்கொண்டிருந்தனர். தாலந்துகள் நிறைந்த இந்த இளைஞனை ஆதாயப்படுத்திக்கொண்டால், அதன் லாபத்தையும் மதிப்புகளையும் பெறலாம் என்று பெர்ன் நகர டொமினிகன் சபையினர் கண்டனர். அவரது இளமை, இயற்கையான பேச்சு மற்றும் எழுத்துத் திறமை, இசையிலும் கவிதையிலும் அவருக்கிருந்த நுண்ணறிவு ஆகியவை அவர்களது டாம்பீகத்தையும் அலங்காரங்களையும்விட, ஆராதனைகளுக்கு மக்களைக் கவருவதற்கும் அவர்களது வருமானத்திற்கும் அதிகப் பயன்தரும் என்று எண்ணி தங்களுடைய வஞ்சனையினாலும் முகஸ்துதியினாலும் ஸ்விங்ளியைத் தங்களது மடத்திற்கு இழுக்க அவர்கள் முயன்றனர். லுத்தர் பள்ளியில் ஒரு மாணவராயிருந்தபோது ஒரு மடாலயத்தில் அடைக்கப்பட்டிருந்தார். தெய்வீக ஏற்பாடு அவரை விடுவிக்காமல் இருந்திருந்தால், அவர் உலகத்தால் இழுக்கப்பட்டிருந்திருப்பார். அப்படிப்பட்ட ஆபத்தைச் சந்திக்கும்படி ஸ்விங்ளி அனுமதிக்கப்படவில்லை. குருமார்களின் திட்டங்களைப்பற்றிய தகவலை தெய்வாதீனமாக அவரது தந்தை அறிந்தார். சாமியார்களின் சோம்பேறித்தனமும் பயனற்றதுமான வாழ்க்கையை அவரது மகன் பின்பற்றுவதை அவர் விரும்பவில்லை. மகனின் எதிர்காலம் அழிவை நோக்கியிருப்பதைக் கண்ட அவர், தாமதமின்றி ஸ்விங்ளியை வீட்டிற்குத் திரும்பும்படியாகக் கட்டளையிட்டார். (3)

அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். ஆனால் அந்த இளைஞரால் அவரது சொந்த ஊரில் அதிக நாட்கள் திருப்தியாக இருக்கமுடியவில்லை. சில நாட்கள் ஓய்விற்குப்பின் அவர் பேசில் என்கிற இடத்திற்கு விரைந்துசென்று, தனது கல்வியை மீண்டும் தொடர்ந்தார். இங்குதான் அவர் முதன்முதலாக தேவனுடைய இலவசமான கிருபையைப்பற்றிக் கேட்டறிந்தார். பழங்கால மொழிகளைப்பற்றிப் போதிக்கும் ஆசிரியரான விட்டம்பர்க் என்பவர், எபிரெய கிரேக்க மொழிகளை ஆராயும்போது, பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும்படியாக நடத்தப்படவே, இவ்வாறாக அவரால் போதிக்கப்பட்டுக்கொண்டிருந்த மாணவர்களின் மனங்களில் தெய்வீக வெளிச்சத்தின் ஒளிக்கதிர்கள் விழுந்தது. படித்தவர்கள் தத்துவசாஸ்திரிகள் ஆகியவர்களால் கற்றுக்கொடுக்கப்பட்டிருந்த கோட்பாடுகளைவிட மிகப் பழமையானதும், எல்லையற்ற விதத்தில் பெரியதுமான ஒரு சத்தியம் இருக்கிறது. பாவியின் ஒரே பரிகாரம் கிறிஸ்துவின் மரணம்தான் என்பதுதான் அந்தப் பழமையான சத்தியம் என்று அவர் அறிவித்தார். இந்த வார்த்தைகள் காலை விடியலுக்கு முன் செல்லும் முதல் ஒளிக்கதிரின் ஒளிபோல இருந்தது ஸ்விங்ளிக்கு. (4)

ஸ்விங்ளி தனது வாழ்க்கைப் பயணத்தில் ஈடுபடும்படி பேசிலில் இருந்து விரைவில் அழைக்கப்பட்டார். தனது சொந்த இடமான பள்ளத்தாக்கிற்கு அருகிலிருந்த ஆல்பின் சபைவட்டம் அவரது ஊழியத்தின் முதல் களமாக இருந்தது. குருவாக அபிஷேகம் பண்ணப்பட்ட அவர் "அவரது முழு ஆத்துமாவோடும் தெய்வீக சத்தியத்தைத் தேடுவதில் ஈடுபட்டார். ஏனெனில் கிறிஸ்துவின் மந்தை தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்போது, தான் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கவேண்டும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்" என்று, அவரது உடன் சீர்திருத்தவாதி ஒருவர் கூறினார். அவர் எந்த அளவிற்கு வேதவாக்கியங்களை ஆராய்ந்தாரோ அந்த அளவிற்கும் அதிகமாக சத்தியத்திற்கும் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் மதப்புரட்டிற்கும் இடையிலுள்ள வேற்றுமையை மிகத் தெளிவாக அறிந்தார். போதுமானதாகவும், தவறாத நியமமுமாக இருக்கிற தேவனுடைய வார்த்தைக்கு அவர் தன்னை கீழ்ப்படுத்தினார். அதுவேதான் அதன் விளக்கமாக இருக்கவேண்டும் என்பதையும் கண்டார். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்ட கோட்பாடுகளைத் தாங்குவதற்கேற்ப, வேத வாக்கியங்களுக்கு விளக்கம்தர அவர் துணியாமல், அதன் நேரடியானதும் காணக்கூடியதுமான போதனை என்ன என்று அறிந்துகொள்ளுவதை தனது கடமையாகக்கொண்டார். அதன் பொருளை முழுமையாகவும் சரியாகவும் புரிந்துகொள்ள எல்லா உதவியையும் நாடி, பரிசுத்த ஆவிக்காக கெஞ்சி மன்றாடினார். உண்மையுடனும் ஜெபத்துடனும் வேதவிளக்கம் தேடுகிற அனைவருக்கும் அவர் வெளிப்படுத்துவார் என்றும் அறிவித்தார். (5)

தேவனுடைய வார்த்தை மனிதனிடமிருந்து வராமல், தேவனிடமிருந்து வருகிறது என்று ஸ்விங்ளி கூறினார். பேச்சுக்களும் தேவனிடமிருந்து வருகிறது என்பதை உங்களுக்குப் புரியவைக்கும் தேவன்தாமே வெளிப்படுத்துவார். தேவனுடைய வார்த்தை... தவறமுடியாதது. அது ஒளிமிக்கது. அது தன்னில்தானே போதனை உள்ளது. சகலவித இரட்சிப்பினாலும், கிருபையினாலும் அது ஆத்துமாவை ஒளிபெறச் செய்கிறது. தேவனுக்குள் ஆறுதல் தருகிறது. அது தன்னைத்தானே மறுத்து தேவனைத் தழுவுவதற்காக தன்னைத் தாழ்த்துகிறது. இந்த வார்த்தைகளின் உண்மையை ஸ்விங்ளியே மெய்ப்பித்தார். அவரது அனுபவத்தைப்பற்றிப் பின்னர் "என்னை முற்றிலுமாக நான் வேதவாக்கியத்திற்கு ஒப்புக்கொடுத்தபோது, தத்துவங்களும் இறையியலும் எப்பொழுதும் எனக்குள் முரண்பாடான கருத்தை உண்டு பண்ணுபவைகளாக இருந்தன. கடைசியாக 'நீ இவைகளையெல்லாம் விட்டுவிட்டு, தேவனைப்பற்றிய பொருளை, அவருக்குச் சொந்தமான எளிய வார்த்தையிலிருந்தே முழுமையாகக் கற்றுக்கொள்ளவேண்டும்' என்ற முடிவிற்கு வந்தேன். அதன்பின் அவரது ஒளிக்காக தேவனிடம் கேட்க

ஆரம்பித்தேன். அப்போது வேத வாக்கியங்கள் எனக்கு மிகவும் எளிதாக இருந்தன" என்று எழுதினார். —D'Aubigne, b. 8, ch. 6. (6)

ஸ்விங்ளி பிரசங்கித்த கோட்பாடு, அவர் லுத்தரிடமிருந்து பெற்றுக் கொண்டதாக இருக்கவில்லை. அது கிறிஸ்துவின் கோட்பாடாக இருந்தது. லுத்தர் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார் என்றால், நான் என்னசெய்கிறேனோ அதையே அவரும் செய்கிறார். என்னைக் காட்டிலும் அவர் அதிக ஆத்துமாக்களை கிறிஸ்துவிடம் நடத்தியிருக்கிறார். அப்படியே ஆகட்டும். அப்படியேயானாலும் கிறிஸ்துவின் வீரனாக இருக்கும் நான் கிறிஸ்துவின் பெயரையன்றி வேறொரு பெயரையும் எடுத்துக்கொள்ள மாட்டேன். அவர் மாத்திரமே எனக்குத் தலைவர். லுத்தரால் எனக்கோ அல்லது என்னால் லுத்தருக்கோ ஒருவரிகூடச் சொல்லப்படவில்லை. ஏன்? நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் தொடர்பில்லாதவர்களாக இருந்தும், கிறிஸ்துவைப்பற்றிய கோட்பாட்டில் மிகவும் நெருக்கமான இசைவுள்ளவர்களாக இருக்கிறோம். தேவஆவியின் சாட்சி எப்படி இசைவுள்ளதாக இருக்கிறதென்று எல்லோருக்கும் வெளிப்படும்படிக்கே என்றார்.—Ibid, b. 8, ch. 9. (7)

கி.பி.1516–ல் ஐன்சிடின் என்ற மடத்தின் பிரசங்கியாக இருக்கும்படி ஸ்விங்ளி அழைக்கப்பட்டார். இங்கு ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திலுள்ள ஊழலை மிக அருகில் காணும் நிலை ஏற்பட்டு, தனது சொந்த இடமான ஆல்ப்ஸ்-ஐயும் தாண்டி உணரப்படும்வகையில், சீர்திருத்தவாதி என்ற செவல்வாக்கை பயன்படுத்த வேண்டியவரானார். ஐன்சிடினில் இருந்த அநேக கவர்ச்சிகளில் தலையாய ஒன்று, அற்புதங்களைச் செய்யும் ஆற்றலை உடையது என்று சொல்லப்பட்டிருந்த கன்னி மரியாளின் சிலையாகும். "பாவங்களுக்கான முழுப்பாவமன்னிப்பையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்" என்ற சொற்கள் அந்த மடத்தின் வாசலில் பொறிக்கப்பட்டிருந்தன.—Ibid, b. 8, ch. 5. மரியாளின் சிலை வைக்கப்பட்டிருந்த அந்தப் புதிய இடத்திற்கு, யாத்ரீகர்கள் சகல பருவகாலங்களிலும் வருவார்கள். ஆனால் அதைப் பிரதிஷ்டை செய்யும் பெரும் பண்டிகை நாளில், திரளான ஜனங்கள் ஸ்விட்சர்லாந்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், பிரான்ஸ், ஜெர்மனியில் இருந்துங்கூட வருவார்கள். இந்தக் காட்சியினால் மிகவும் வேதனையடைந்த ஸ்விங்ளி, மூடநம்பிக்கைகளில் அடிமைகளாயிருந்தவர்களுக்கு, சுவிசேஷத்தின் மூலம் விடுதலையை அறிவிக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார். (8)

"சிருஷ்டிக்கப்பட்டுள்ள மற்ற எந்த இடத்தையும்விட இந்த ஆலயத் தில்தான் தேவன் இருக்கிறார் என்று எண்ணாதீர்கள், உங்கள் வாழ்விடத்தை எங்கெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறாரோ, அங்கெல்லாம் அவர்

உங்களைச் சூழ இருந்து, நீங்கள் ஜெபிப்பதைக் கேட்கிறார். லாபமற்ற கிரியைகளிலும், களைப்பூட்டும் பக்திப் பயணங்களிலும், கன்னிமரியாளிடமும் பரிசுத்தவான்களிடமும், உங்கள் ஜெபங்களை ஏறெடுப்பதிலும் என்ன வல்லமை இருக்கிறது? ஜெபத்தில் அதிகமான வார்த்தைகளைப் பயன்படுத்து வது எதைக் காட்டுகிறது? தாடியை வளர்ப்பதிலோ, தலைமயிரைச் சிரைத்துக் கொள்ளுவதிலோ ஆசாரிய உடையை அணிவதிலோ, பொன்னாபரணங்களை அணிந்துகொள்ளுவதிலோ என்ன சிறப்பு இருக்கிறது? தேவன் இதயத்தைப் பார்க்கிறார். ஆனால் நமது இதயங்கள் தேவனைவிட்டு வெகுதூரமாக உள்ளன. ஒரேமுறையாக, அனைத்து விசுவாசிகளின் பாவங்களுக்காகவும், தன்னைத்தானே சிலுவையில் ஒப்புக்கொடுத்த கிறிஸ்து, நித்தியகாலத்திற்கும் திருப்தியை ஏற்படுத்துகின்ற தியாகமாகவும் பலியாகவும் இருக்கிறார்" என்று அவர் கூறினார். —Ibid, b. 8, ch. 5. (9)

கேட்ட அநேகருக்கு இது வரவேற்கமுடியாததாக இருந்தது. கடினமான அவர்களது பயணங்கள் வீணாக மேற்கொள்ளப் பட்டிருந்தன என்று சொல்லப்பட்டது, அவர்களுக்கு மிகுந்த கசப்பும் ஏமாற்றமும் உள்ளதாக இருந்தது. கிறிஸ்துவின் மூலமாக, அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டிருந்த மன்னிப்பை அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ரோம் அவர்களுக்கு குறித்துக்கொடுத்திருந்த பரலோகத்திற்கான பழைய பாதையிலேயே அவர்கள் திருப்தி அடைந்திருந்தனர். அதைவிடச் சிறந்த எதையும் தேட விரும்பாதிருந்தனர். இதயத்தின் தூய்மையைத் தேடுவதைவிட, தங்களின் இரட்சிப்பிற்காக குருமார்களையும், போப்புவையும் நம்புவது அவர்களுக்கு எளிதாக இருந்தது. (10)

ஆனால் வேறொரு வகுப்பினர், கிறிஸ்துவினால் உண்டாகும் மீட்பைப்பற்றிய செய்தியை, மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். ரோமால் கற்றுக்கொடுக்கப்பட்டிருந்த சமயச் சடங்குகளனைத்தும் ஆத்துமாவிற்குச் சமாதானத்தைக் கொண்டுவருவதில் தோல்வியடைந்தால், தங்களின் பாவப் பரிகாரத்திற்காகச் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தை பெற்றுக் கொண்டனர். அவர்கள் பெற்றுக்கொண்ட விலைமதிப்புமிக்க ஒளியை மற்றவர்களுக்கும் வெளிப்படுத்துவதற்காக, தங்கள் வீடுகளுக்குச் சென்றனர். இவ்வாறாக, சத்தியம் சிற்றூர்களிலிருந்து சிற்றூர்களுக்கும், பேரூர்களிலிருந்து பேரூர்களுக்கும் எடுத்துச்செல்லப்படவே, கன்னிமரியின் புண்ணியஸ்தலத்திற்குச் செல்லும் புதிய யாத்ரீகர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது! அதன் விளைவாக, காணிக்கைகள் குறையவே, அவைகளில் இருந்து ஸ்விங்ளிக்குக் கிடைத்திருந்த சம்பளமும் குறைந்தது. ஆனால் மதவெறி, மூடநம்பிக்கை ஆகியவைகளின் வல்லமையை

உடைக்கும் காரணமாக அது அமைந்ததைக் கண்ட அவருக்கு அது மிகவும் மகிழ்ச்சியைத்தான் உண்டுபண்ணியது. (11)

ஸ்விங்ளி நிறைவேற்றிக்கொண்டிருந்த பணியை ரோமன் கத்தோலிக்க சபை காணாமலிருக்கவில்லை. ஆனால் தற்போதைக்கு அதில் குறுக்கிடவேண்டாம் என்று இருந்தனர். எப்படியும் அவரை தங்கள் வேலைக்கு ஈர்த்துவிடலாம் என்று, அவரை முகஸ்துதி செய்து ஆதாயப்படுத்த முயன்றனர். அந்த சமயத்தில் சத்தியம் மக்களின் இதயங்களைப்பற்றிப் பிடித்து, அவர்களை ஆதாயப்படுத்திக் கொண்டிருந்தது. (12)

ஐன்சினிலிருந்த அவரது ஊழியம் அவர் விரைவில் நுழைய இருந்த விசாலமான களத்திற்கு அவரை ஆயத்தம் செய்துகொண்டு இருந்தது. இங்கு அவர் மூன்று வருடங்கள் இருந்தபின்னர், ஜூரிச் பேராலயத்தின் பிரசங்கியார் பதவிக்கு அழைக்கப்பட்டார். ஸ்விஸ் நாட்டின் மிக முக்கியமான நகரமாக அது இருந்து, இங்கு செயலாற்றப்படும் செல்வாக்கு பரவலாக உணரக்கூடியதாயிருக்கும். எந்த சபைத் தலைவர்களின் விருப்பத்தினால் அவர் அங்கு அழைக்கப்பட்டாரோ, அவர்கள் அவரது புதிய கண்டுபிடிப்புகளைத் தடுக்க நினைத்து, அவரது பொறுப்புக்களை அவருக்கு வரையறுத்துக் கட்டளையிடப் புறப்பட்டனர். (13)

சின்னஞ்சிறு காரியத்தைக்கூட விட்டுவிடாமல், சபையின் வருமானத்தை அதிகப்படுத்த, நீங்கள் உங்களது மிகமேலான திறமையைப் பயன்படுத்தவேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். பிரசங்க பீடத்திலிருந்தும் பாவ அறிக்கைசெய்யும் இடத்திலிருந்தும், சபைக்குச் சேரவேண்டிய தசமபாகங்களையும், காணிக்கைகளையும் கொடுத்து, தங்களது காணிக்கைகளின் மூலமாக, சபையின்மீது அன்புள்ளவர்களாக இருக்கிறார்களென்று சாட்சிபகரும்படி உபதேசம் செய்யுங்கள். நோயாளிகள், திருப்பலிபூசைகள், பொதுவான சபைச் சட்டதிட்டங்கள் ஆகியவைகளின் வழியாக வரும் வருமானத்தில் நீங்கள் மிகுந்த கவனமுடையவராக இருக்கவேண்டும். நற்கருணை கொடுத்தல், பிரசங்கம் செய்தல், சபையினரை நேரடியாகக் கவனித்தல் ஆகிய காரியங்களும் குருமார்களின் பணிக்கு உட்பட்டதாக உள்ளது. ஆனால் இவைகளைச் செய்வதற்கு—குறிப்பாக பிரசங்கம் செய்வதற்கு உங்களுக்குப் பதிலாக ஒரு பதிலாளியை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம். சிறப்பான நபர்களுக்கு மட்டுமே விசேஷமாக நீங்கள் அழைக்கப்படும்போது, நற்கருணை கொடுக்கவேண்டும். வேற்றுமைகளின்றி எல்லா நிலைமைகளிலும் இருக்கும் சாதாரணமானவர்களுக்கு நற்கருணை வழங்கும் அனுமதி உங்களுக்கில்லை என்று அவரது போதனையாளர்கள் கூறினார்கள். —Ibid, b. 8, ch. 6. (14)

அவருக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளைப்பற்றி ஸ்விங்ளி மௌனமாகக் கேட்டபின், இந்த முக்கியமான இடத்திற்கு அவரை அழைத்துச் சிறப்பித்ததற்காக நன்றியைத் தெரிவித்தார். பின்னர், அவர் கடைப்பிடிக்க யோசித்திருக்கும் முறையைப்பற்றி விளக்கத் தொடங்கினார். "இயேசுவின் வாழ்க்கை வரலாறு மக்களின் பார்வையிலிருந்து வெகுகாலமாகவே விலக்கிவைக்கப்பட்டிருக்கிறது. வேதவாக்கியமாகிய ஊற்றுகளிலிருந்து மட்டும் எடுத்து, வசனத்துடன் வசனத்தை ஒப்பிட்டு, அதன் ஆழத்தைக் கண்டுபிடித்து, பரிசுத்த ஆவியானவரின் எண்ணத்தில் என்ன உள்ளது என்பதை அறியும் வண்ணம், ஆர்வமிக்க இடைவிடாத ஜெபத்துடன், மத்தேயு எழுதின சுவிசேஷத்திலிருந்த எடுத்துச் சொல்லுவதே எனது நோக்கமாக இருக்கிறது. தேவனுடைய மகிமைக்காகவும் அவரது ஒரே குமாரனின் மேன்மைக்காகவும் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகவும், உண்மையான விசுவாசத்தின் உபதேசத்திற்காகவும், நான் எனது ஊழயத்தைப் பிரதிஷ்டைசெய்ய விரும்புகிறேன்" என்று கூறினார்.—Ibid, b. 8, ch. 6. சபைத் தலைவர்களில் சிலர் அவரது திட்டத்தை அங்கீகரிக்க மறுத்து, அதிலிருந்து அவரைப் பின்வாங்கச்செய்யும்படி முயன்றபோதிலும், ஸ்விங்ளி உறுதியாக நின்றார். அவர் புதிய முறை ஒன்றையும் அறிமுகம் செய்யாமல், சபை முந்தின நாட்களில் கடைப்பிடித்திருந்த பழைய தூய்மையான முறைமையையே பின்பற்றப்போவதாகவும் அறிவித்தார். (15)

அவர் போதித்த சத்தியங்களின்மீது ஏற்கனவே ஒரு ஆர்வம் எழுப்பப்பட்டிருந்தது. அதனால் அவரது பிரசங்கத்தைக் கேட்க பெரும் எண்ணிக்கையில் மக்கள் திரளாகக் கூடினார்கள். வெகு நாட்களாக ஆராதனையில் பங்குகொள்வதைவிட்டு விலகியிருந்த வர்களும் இப்போது அவரது சொற்பொழிவைக் கேட்பவர்களுக் கிடையில் இருந்தனர். அவர் தமது ஊழியத்தை சுவிசேஷங்களிலிருந்து ஆரம்பித்தார். கிறிஸ்துவின் வாழ்க்கை, போதனைகள், மரணம் ஆகியவைகளைப்பற்றி ஏவப்பட்டு வரையப்பட்டுள்ளவைகளை கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு வாசித்தும் விளக்கியும் கூறினார். ஐன்சின் நகரில் செய்ததுபோலவே, இங்கும், தேவனுடைய வார்த்தை மாத்திரமே தவறாதது என்றும் கிறிஸ்துவின் மரணமே முழுமையான ஒரே தியாகபலி என்றும் எடுத்துக் கூறினார். நான் உங்களை இரட்சிப்பின் மெய்யான ஊற்றாகிய கிறிஸ்துவிடத்திற்கு மட்டுமே நடத்திச்செல்ல விரும்புகிறேன்.—Ibid, b. 8, ch. 6. நாட்டுத்தலைவர்கள் மேதாவிகளிலிருந்து கலைஞர், விவசாயிகள் ஆகிய அனைத்துத் தரப்பு மக்களும் அந்தப் பேச்சாளரைக் கூட்டமாகச் சூழ்ந்துகொண்டனர். மிகுந்த ஆர்வத்துடன் அவருடைய வார்த்தைகளை அவர்கள் கவனித்தனர். இலவசமான இரட்சிப்பை மட்டும் அவர் அறிவித்ததோடன்றி, அந்தக்காலத்தில்

நிலவியிருந்த தீமைகளையும் ஊழல்களையும் அச்சமின்றிக் கடிந்துரைத்தார். பேராலயத்திலிருந்து அநேகர் தேவனைப் புகழ்ந்தவண்ணம் திரும்பிச் சென்றனர். "இந்த மனிதர் சத்தியத்தைப் பிரசங்கிக்கும் ஒரு நபர். இந்த எகிப்திய இருளிலிருந்து நம்மை நடத்திச்செல்லும் நம்முடைய மோசேயாக இவர் இருப்பார்" என்றும் அவர்கள் கூறிக்கொண்டனர்.—Ibid, b. 8, ch. 6. (16)

முதலில் அவரது ஊழியம் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டபோதிலும், சில காலத்திற்குப்பிறகு எதிர்ப்பு எழும்பியது. அவரது ஊழியத்திற்கு இடையூறு செய்யவும், அவரது போதனைகளைப் பழிக்கவும், சந்நியாசிகள் தாங்களாகவே புறப்பட்டனர். அநேகர் அவரைப் பரிகசித்து உறுமினார்கள். மற்றவர்கள் அகந்தையையும் பயமுறுத்துதலையும் உபயோகித்தனர். நாம் ஆத்துமாக்களைக் கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்த வேண்டுமானால், நமது பாதையில் வரும் அநேக காரியங்களுக்கு, நமது கண்களை மூடிக்கொள்ள கற்றுக்கொள்ளவேண்டும் என்று அனைத்தையும் பொறுமையுடன் சகித்த ஸ்விங்ளி கூறினார்.—Ibid, b. 8, ch. 6. (17)

இந்தக் காலக்கட்டத்தில் சீர்திருத்தத்தின் வேலையை முன்கொண்டுசெல்ல, ஒரு புதிய இயக்கம் உண்டாயிற்று. பேசிலில் இருந்த லுத்தரின் சீர்திருத்த விசுவாசத்தின் நண்பரான ஒருவரால், லூசியன் ஒருவர் லுத்தரின் சில புத்தகங்களுடன் ஜூரிச் நகருக்கு அனுப்பிவைக்கப்பட்டார். "இந்த லூசியன் போதுமான அளவு அறிவும் விலாசமும் உடையவராக இருக்கிறாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அவர் அவ்வாறு காணப்பட்டால், நகரிலிருந்து நகருக்கும், பேரூரிலிருந்து பேரூருக்கும், கிராமத்திலிருந்து கிராமத் திற்கும், அதுமட்டுமல்ல வீட்டிலிருந்து வீட்டிற்கும், சுவிட்சர்லாந்து முழுவதற்கும் லுத்தர் எழுதிய சத்தியங்களை, மிகக் குறிப்பாக சாதாரண மக்களுக்காக விளக்கி எழுதப்பட்ட கர்த்தருடைய ஜெபத்தை எடுத்துச் செல்லட்டும். இது அதிகம் அறியப்பட்டால் அதிகமாக வாங்குகிறவர்களை கண்டுபிடிக்கும்" என்று ஸ்விங்ளிக்கு எழுதினார்.—Ibid, b. 8, ch. 6. இவ்வாறாக, ஒளியானது தான் நுழையும் வழியைக் கண்டது. (18)

அறியாமை, மூடநம்பிக்கை ஆகிய விலங்குகளை உடைக்க தேவன் ஆயத்தம் செய்யும் அதேநேரத்தில், மனிதர்களை இருளினால்மூடி அவர்களது விலங்கை உறுதியாக இறுக்கிட, பெரும்வல்லமையுடன் சாத்தான் செயலாற்றுகிறான். கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவமன்னிப்பையும், நீதிமானாவதையும் மக்களுக்கு அறிவிக்க, பல்வேறு இடங்களிலும் மனிதர்கள் எழும்பினபோது, பாவமன்னிப்பைப் பணத்தினால் பெற்றுக் கொள்ளலாம்

என்கிற தனது வியாபாரத்தை கிறிஸ்தவ உலகச்சந்தை முழுவதிலும் விற்க ரோம சபை புதிய பலத்துடன் புறப்பட்டது. (19)

ஒவ்வொரு பாவத்திற்கும் விலை இருந்தது. குற்றம்புரிவதற்கு மனிதர்கள் தாராளமாக அனுமதிக்கப்பட்டனர். சபையின் கருவூலம் நிரம்பிவழிந்தது. இவ்வாறாக, பணத்தினால் உண்டாகக்கூடிய பாவமன்னிப்பு என்ற ஒன்றும், கிறிஸ்துவினால் கிடைக்கும் பாவமன்னிப்பு என்ற மற்றொன்றும் ஆக இரண்டு இயக்கங்கள் முன்னேறின. ரோமசபை பாவத்திற்கு அனுமதி வழங்கி, அதை அதன் வருமானத்திற்கு ஆதாரம் ஆக்கியது. சீர்திருத்தவாதிகள் பாவத்தைக் கண்டித்து, பாவத்திற்கு பரிகாரமாகவும் விடுதலையை வழங்குபவராகவும் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டினார்கள். (20)

ஜெர்மனியில் பாவமன்னிப்புச் சீட்டு வியாபாரம், டொமினிக்கன் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு, இழிஞனான டெட்செல்லினால் அது நடத்தப்பட்டது. ஸ்விட்சர்லாந்தில் இந்த வியாபாரம் பிரான்சிஸ்கன் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு, சாம்சன் என்னும் இத்தாலிய சந்நியாசியின் கட்டுப்பட்டில் இருந்தது. ஜெர்மனியிலிருந்தும் ஸ்விட்சர்லாந்திலிருந்தும் ஏராளமான தொகையை சேகரித்ததால் போப்புவின் கருவூலத்தை நிரப்புவதற்கு சாம்சன் ஏற்கனவே திறமையான சேவை செய்திருந்தான். இப்பொழுது அவன் சுவிட்சர்லாந்து எங்கும் சஞ்சரித்து, திரளான கூட்டத்தினரைக் கவர்ந்து, ஏழை மக்களின் சொற்பமான சம்பாத்தியத்தையும் செல்வந்தர்களிடமிருந்து விலைமதிப்புமிக்க பரிசுகளையும் பெற்று, அனைவரையும் கொள்ளையிட்டான். சீர்திருத்தத்தினால் இந்த வியாபாரத்தை நிறுத்தமுடியாவிட்டாலும், தன் செல்வாக்கினால் அதைக் குறைத்திருந்ததை உணரமுடிந்தது. சாம்சன் ஸ்விட்சர்லாந்தில் ஸ்விங்ளி இருந்த ஐன்சிடின் நகருக்கு அருகில் இருந்த ஒரு நகருக்கு விரைவில் தனது ஏற்பாடுகளுடன் வந்து சேர்ந்தான். அவனது வியாபாரத்தைப்பற்றி அறிந்த ஸ்விங்ளி, அவனை உடனே எதிர்க்கப் புறப்பட்டார். ஆனால் அந்த இருவரும் சந்திக்கவில்லை. பதிலாக அந்த சாமியாரின் பாசாங்கை ஸ்விங்ளி வெளிப்படுத்தினது மிகவும் வெற்றிகரமாக இருந்ததினால், அவன் வேறிடத்திற்குச் செல்லவேண்டியதாயிற்று. (21)

பாவமன்னிப்புச் சீட்டை விரும்புபவர்களைப்பற்றி ஸ்விங்ளி ஜூரிச் நகரில் மிகவும் வைராக்கியமாகப் பிரசங்கம் செய்யவே, சாம்சன் அந்த இடத்திற்கு வந்தபோது, அங்கிருந்து உடனே கடந்துசெல்லும்படியான ஒரு தகவலுடன், சபைக் குழுவிலிருந்த ஒருவர் அவனைச் சந்தித்தார். இறுதியாக சாம்சன் தந்திரமாக அங்கு நுழைந்தான். ஆனால் ஒரு பாவமன்னிப்புச் சீட்டைக்கூட அங்கு அவனால் விற்கமுடியவில்லை. ஸ்விட்சர்லாந்தைவிட்டு விரைவாக அவன் வெளியேறினான். (22)

கி.பி.1519–ம் வருடத்தில் ஒரு கொள்ளைநோய் ஸ்விட்சர்லாந்தில் தோன்றவே, ஏராளமானவர்கள் இறந்தனர். இது சீர்திருத்தத்திற்கு பலத்த ஊக்கத்தைக் கொடுத்தது. சங்காரக்காரனை இவ்விதமாக மனிதர்கள் நேருக்குநேர் சந்தித்தபோது, அவர்கள் சமீப காலத்தில் விலைகொடுத்து வாங்கின பாவமன்னிப்புச் சீட்டுகள் எவ்விதம் வீணானவைகளாக இருக்கின்றன என்பதை உணர்ந்து, தங்களது விசுவாசத்திற்கு அதிக நிச்சயமான அஸ்திவாரத்திற்காக ஏங்கினார்கள். ஜூரிச் நகரில் ஸ்விங்ளி நோயால் அடித்து வீழ்த்தப்பட்டார். பிழைப்பார் என்னும் நம்பிக்கை அற்றுப்போகும் அளவிற்கு அவர் மிகவும் மோசமடைந்தார். அவர் இறந்துவிட்டார் என்று செய்தி எங்கும் பரவியது. சோதனையான அந்த நேரத்தில், அவரது நம்பிக்கையும் தைரியமும் அசைவற்றதாக இருந்தது. பாவப்பரிகாரத்திற்குப் பூரணமாகப் போதுமானதாயிருந்த கல்வாரியின் சிலுவையை அவர் விசுவாசத்துடன் நோக்கினார். முன்பிருந்ததைவிட ஒருபோதும் இல்லாத அதிகமான ஆர்வத்துடன் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே, அவர் மரணத்தின் வாசலிலிருந்து திரும்பிவந்தார். அவரது வார்த்தைகள் அபூர்வமான வல்லமையுள்ளதாக இருந்தன. கல்லறையின் விளிம்பிலிருந்து திரும்பிவந்த அவர்களது சிறப்பான போதகரை, மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அவர்களும் நோயுற்று மரணப்படுக்கையில் இருந்தவர்களை விட்டுவிட்டுத்தான் அவரைக் காண வந்திருந்தனர். இதற்குமுன் ஒருபோதும் இல்லாதவிதத்தில, அவர்கள் சுவிசேஷத்தின் மதிப்பை உணர்ந்தார்கள். (23)

சுவிசேஷ சத்தியத்தின் உண்மைகளை ஸ்விங்ளி மிகத் தெளிவாகப் புரிந்து, புதுப்பிக்கும் அதன் வல்லமையை தனக்குள் முழுமையாக அனுபவித்தார். மனிதனின் வீழ்ச்சியும், இரட்சிப்பின் திட்டமும் அவர் அறிந் துணர்ந்த பொருட்பாடங்களாக இருந்தன. “ஆதாமுக்குள் நாம் அனைவரும் மரித்தவர்களாக, அழிவிற்குள் மூழ்கி தண்டனையின்கீழ் இருந்திருந்தோம். ஆனால் கிறிஸ்து நமக்காக ஒரு நித்திய விடுதலையை விலைக்கு வாங்கியிருக்கிறார். அவரது உருக்கம் நித்திய தியாகபலியாகவும், நிரந்தர சுகம் தருவதாகவும் இருக்கிறது. உறுதியான அசையாத விசுவாசத்தோடு அதைச் சார்ந்திருக்கும் அனைவருக்காகவும் உள்ள தெய்வீக நீதியை அது எப்போதும் திருப்திப்படுத்துகிறது” என்று அவர் கூறினார்.—Wylie, b. 8, ch. 9. ஆனாலும் கிறிஸ்துவின் கிருபையினாலே பாவத்தில் தொடர்ந்து இருக்கும் சுதந்திரம் மனிதர்களுக்கு இல்லை என்று அவர் மிகத்தெளிவாகப் போதித்தார். “எங்கெல்லாம் விசுவாசம் உள்ளதோ, அங்கெல்லாம் தேவன் தங்கி இருக்கிறார் எங்கெல்லாம் தேவன் தங்கியிருக்கிறாரோ அங்கெல்லாம் நற்செயல்களை செய்யும்படியான தூண்டுதல் எழுப்பப்படுகிறது” என்று அவர் கூறினார்.—D’Aubigne, b. 8, ch. 9. (24)

ஸ்விங்ளியின் சொற்பொழிவு அந்த அளவிற்கு ஆர்வத்தை உண்டு பண்ணக்கூடியதாக இருந்ததால், அவரது அருளுரையைக் கவனிக்கும் படியாக வந்திருந்த மனிதர்களால் பேராலயம் நிரம்பிவழிந்தது. கேட்பவர்கள் தாங்கிக்கொள்ளும்விதத்தில் சத்தியத்தை கொஞ்சம் கொஞ்சமாக அவர் களுக்குத் திறந்து காட்டினார். அவர்களைத் திகைப்படையச்செய்து, இறுமாப்பை உண்டுபண்ணக்கூடிய குறிப்புகளைத் தொடக்கத்திலேயே அறிமுகப் படுத்தாமலிருப்பதற்கு அவர் கவன முள்ளவராக இருந்தார். கிறிஸ்துவின் போதனைகளுக்கு அவர்களது இதயங்களை ஆயத்தப்படுத்துவதும், அவரது அன்பினால் அவர்களை மென்மையடையச்செய்வதும், அவரது உதாரணத்தை அவர்களுக்கு முன்வைப்பதும்தான் அவரது முதல் பணிகளாக இருந்தன. சுவிசேஷத்தின் கொள்கைகளை அவர்கள் பெற்றுக் கொள்ளும்போது, அவர்களது மூடநம்பிக்கைகளும் பழக்கங்களும் தவிர்க்க முடியாதபடி தூக்கி எறியப்படுமல்லவா? (25)

ஜூரிச் நகரில் சீர்திருத்தம் படிப்படியாக முன்னேறியது. அபாயக்குரலுடன் அதன் விரோதிகள் எதிர்ப்பைத் தீவிரமாகச் செயலாற்ற எழுந்தனர். ஒரு வருடத்திற்குமுன் விட்டன்பர்க் நகரவாசியான லூத்தர் போப்புவையும் பேரரசனையும் மறுத்து கத்தோலிக்க மார்க்கத்திற்குக் கீழ்ப்படியமுடியாதென்று வோம்ஸ் நகரில் அறிவித்தார். இப்போது அதேபோன்ற நிலைமை ஜூரிச் நகரிலும் உண்டாவதுபோல், ஒவ்வொரு காரியத்திலும் காணப்பட்டது. ஸ்விங்ளியின்மேல் அடுத்தடுத்த குற்றச்சாட்டுக்கள் சொல்லப்பட்டன. ரோம ஆட்சியில் அவ்வப்போது சுவிசேஷத்தின் சீடர்கள் சுட்டெரிக்கப்படும்படி கொண்டுவரப்பட்டிருந்தபோதும், அது போதுமானதாக இருக்கவில்லை. மதவிரோதத்தைப் போதிப்பவர்கள் மௌனப்படுத்தப்பட்டாகவேண்டும். அதன்படி, சமுதாயத்தின் சமாதானமும் நற்சீரும் ஆபத்துக்குட்படும்வண்ணம் சபைச் சட்டங்களை மீறும்படி ஸ்விங்ளி மக்களுக்குப் போதனை செய்கிறார் என்று குற்றம்சாட்டி, ஜூரிச்சின் ஆலோசனைக் குழுவிற்கு மூன்று பிரதிநிதிகளை கான்ஸ்டன்டைன்ஸ் நகரப் பேராயர் அனுப்பிவைத்தார். சபையின் அதிகாரம் ஒதுக்கிவைக்கப்பட்டால், பொதுவான அராஜகம் உண்டாகும் என்று கூறினார். தான் நான்கு வருடங்களாக ஜூரிச் நகரில் சுவிசேஷத்தைப் போதித்துவருவதாகவும், “இந்த நகரம் இந்த நாட்டின் கூட்டமைப்பிலுள்ள மற்றெந்த நகரத்தையும்விட, மிகுந்த அமைதியும் சமாதானமும் உள்ளதாக இருக்கிறது எனவே, பொதுவான பாதுகாப்பிற்கு கிறிஸ்தவமார்க்கம் மிகச்சிறந்த பாதுகாவலனாக இருக்கிறதல்லவா” என்று ஸ்விங்ளி அவர்மீது சாட்டப்பட்ட குற்றத்திற்குப் பதில் கூறினார்.—Wylie, b. 8, ch. 11. (26)

வந்திருந்த பிரதிநிதிகள் சபை, ஆலோசனைக் குழுவினர்களை நோக்கி, அவர்கள் சபையில் தொடரவேண்டுமென்றும், அப்படியில்லா விட்டால் அவர்களுக்கு இரட்சிப்பு இல்லையென்றும் ஆலோசனை கூறினர். "இந்தக் குற்றச்சாட்டுக்கள் உங்களை வருத்தப்படுத்த வேண்டாம். பேதுரு கிறிஸ்துவை விசுவாசத்துடன் அறிக்கை செய்ததினால் அவனுக்கு, நீ பேதுருவாய் இருக்கிறாய் என்ற பெயரைக் கொடுத்த கிறிஸ்து, அதே கன்மலைதான் சபையின் அஸ்திவாரமாக இருக்கிறார். ஒவ்வொரு ஜனத்திலும் எவன் தன் முழு இதயத்துடனும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறானோ, அவன் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறான். இங்குதான் உண்மையான சபை இருக்கிறது. இதற்கு வெளியிலிருந்து ஒருவனாலும் இரட்சிபை அடைய இயலாது" என்றார்.—D'Aubigne, London ed., b. 8, ch. 11. அந்த மாநாட்டின் விளைவாக, பிரதிநிதிகளில் ஒருவராக வந்திருந்த ஒரு பேராயர், சீர்திருத்த விசுவாசத்தை ஏற்றுக்கொண்டார். (27)

அந்த ஆலோசனைக்குழு ஸ்விங்ளிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க விருப்பமற்றதாகிவிடவே, ரோம சபை அவர் மீது புதிய தாக்குதலை நடத்த ஆயத்தமானது. அவரது எதிரிகளின் சதித்திட்டங்களை அறிந்த சீர்திருத்தவாதி, "அவர்கள் வரட்டுமே, செங்குத்தான கற்பாறையானது அதன் பாதங்களின்மீது மோதும் அலைகளுக்கு அஞ்சுவதுபோல நானும் அவர்களுக்கு அஞ்சுகிறேன்" என்று வியந்து கூறினார்.—Wylie, b.8 , ch. 11. எதைக் கவிழ்க்க சபைத் தலைவர்கள் முயன்றார்களோ, அம்முயற்சிகளெல்லாம் அதன் முன்னேற்றத்திற்கு உதவியது. சத்தியம் தெடர்ந்து பரவியது. ஜெர்மனியில் சீர்திருத்தத்தைப் பற்றிக்கொண்டிருந்து, லுத்தரின் மறைவினால் அதைவிட்டு விழுந்துபோனவர்கள், சுவிட்சர்லாந்தில் சுவிசேஷத்தின் முன்னேற்றத்தைக் கண்டு மறுபடியும் தங்கள் இதயத்தை அதற்கு ஒப்புக்கொடுத்தார்கள். (28)

ஜூரிச்சில் சீர்திருத்தம் அமைக்கப்பட்டதின் விளைவாக, தீயபழக் கங்கள் விட்டுவிடப்பட்டு, சுவிசேஷத்தின்கனிகளான ஒழுக்கம் ஒற்றுமை ஆகியவை முழுமையாகக் காணப்பட்டன. "எங்கள் நகரில் சமாதானம் குடி கொண்டிருக்கிறது. சண்டை இல்லை. மாய்மாலம் இல்லை. பொறாமையும் கலகமும் இல்லை. எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவிடமிருந்தும், இதயங் களைச் சமாதானத்தினாலும், பக்தியினாலுமான கனிகளால் நிரப்பும் எங்கள் கோட்பாடுகளில் இருந்தும் அல்லாமல், வேறெங்கிருந்து இந்த ஒருமைப்பாடு உண்டாகமுடியும்?" என்று ஸ்விங்ளி எழுதினார்.—Ibid, b. 8, ch. 11. (29)

சீர்திருத்தத்தின் விளைவாக உண்டான வெற்றிகள், ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தினரை, அதைக் கவிழ்ப்பதற்கு மேலும் அதிகமான

முயற்சிகளைச் செய்வதற்கு அவர்களைத் தூண்டியது. உபத்திரவத்தின் மூலமாக ஜெர்மனியில் லுத்தரின் முயற்சியை ஒடுக்கும்படிக் கையாண்ட உபத்திரவங்கள், பயன்படாமல் போனதைக்கண்ட அது, சீர்திருத்தத்தை தன் சொந்த ஆயுதங்களி னாலேயே சந்திக்க முடிவுசெய்தது. ஸ்விங்ளியுடன் ஒரு விவாதம் செய்யவும், அதற்கான விஷயங்களைத் திட்டம்செய்யும்போது, அப்போருக்கான இடத்தை தாங்கள் தேர்ந்தெடுப்பதோடல்லாமல், விவாதம் செய்பவர்களுக்கிடையிலான, நீதிபதிகளையும் தாங்களே ஏற்படுத்தவேண்டும் என்று தீர்மானித்தனர். இவ்விதமாக ஒரு தடவை ஸ்விங்ளியை தங்களது வல்லமைக்குள் கொண்டுவந்துவிட்டால், தப்பிக்கமுடியாதபடி அவரைக் கவனித்துக்கொள்ளலாம். தலைவரை மௌனப்படுத்திவிட்டால், இயக்கத்தை தீவிரமாக நசுக்கிவிடமுடியும் என்று எண்ணினார்கள். இந்த நோக்கமானது மிகவும் கவனமாக மறைத்துவைக்கப்பட்டது. (30)

பாதன் என்னுமிடத்தில் இந்த விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் ஸ்விங்ளி அங்கிருக்கவில்லை. போப்புமார்க்கவாதிகளின் சதித் திட்டங்களை சந்தேகித்ததாலும், சுவிசேஷத்தை அறிக்கைசெய்பவர்களை எரிக்கும்படி அவர்கள் நாட்டுப்புறங்களில் எரியவைக்கப்பட்டிருக்கும் நெருப்பைப்பற்றி எச்சரிக்கப்பட்டதாலும், இந்த அபாயத்திற்குத் தங்களது போதகர் ஆளாவதை ஜூரிச் ஆலோசனைக்குழு தடுத்தது. ரோமன் கத்தோலிக்க நிர்வாகம் அனுப்பக்கூடிய அதன் கட்சிக்காரர்கள் அனைவரையும் ஜூரிச்நகரில் சந்திக்க அவர் தயாராக இருந்தார். ஆனால் சத்தியத்திற்காக இரத்தசாட்சிகளின் இரத்தம் சற்று முன்பாக சிந்தப்பட்டிருந்த இடமான பாதனுக்குச் செல்லுவது நிச்சயமாக மரணத்தை நோக்கிச் செல்லுவதாக இருக்கும். ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் சார்பாகப் புகழ்வாய்ந்த டாக்டர் ஈக் என்பவர், அவரது ஆதரவாளர்களான கற்றறிந்த டாக்டர்களுடனும் குருமார்களின் கூட்டத்துடனும் பிரதிநிதியாக வந்தபோது, சீர்திருத்தத்தின் பிரதிநிதிகளாக ஓகோலாம்பேடியஸும், ஹாலரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (31)

அந்த மாநாட்டில் ஸ்விங்ளி காணப்படாவிட்டாலும், அவரது செல்வாக்கு உணரப்பட்டிருந்தது. குறிப்பெழுதும் செயலாளர்கள் அனைவரும் போப்புமார்க்கவாதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்—வேறு யாராவது அதில் ஈடுபட்டால், கொல்லப்படுவார்கள் என்ற தடையிருந்தபோதிலும், அங்கு என்ன நடந்தது என்பதைப் பற்றிய விசுவாசமிக்க விளக்கத்தை நாள்தோறும் அவர் பெற்றுக்கொண்டு இருந்தார். இந்த விவாதத்தைப் பார்க்கச் சென்றிருந்த ஒரு மாணவர், அந்த நாளில் முன்வைக்கப்பட்ட வாதத்தைப்பற்றி, ஒவ்வொருநாள் மாலையிலும் குறிப்பெடுத்து வைத்தார். இந்தக் காகிதங்களை வேறு இரு மாணவர்கள் **ஓகோலாம்பேடியஸ்** எழுதின

கடிதத்துடன் சேர்த்து, ஜூரிச் நகரிலிருந்த ஸ்விங்ளியிடம் கொடுத்தனர். தனது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் சீர்திருத்தவாதி பதிலாக எழுதிக் கொடுத்தார். இந்தக் கடிதங்கள் இரவில் எழுதப்பட்டு, அந்த மாணவர்களுடன் மறுநாள் காலையில் பாதன் நகருக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. நகர வாசலைக் காவல் செய்திருந்த காவலாளிகளின் கவனத்திலிருந்து தப்புவதற்காக, இந்தத் தூதுவர்கள் தங்கள் தலைகளில் வியாபாரத்திற்கான கோழிக்கூடைகளைச் சுமந்துவரவே, எந்தவிதமான இடையூறுமின்றி கடந்துசெல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். (32)

இவ்வாறாக, ஸ்விங்ளி அவரது எதிரிகளாயிருந்த தீயவர்களுடன் போர்செய்திருந்தார். “அந்தப் போட்டியைப்பற்றித் தியானித்து அதைக் கவனித் திருந்தது, பாதன் நகருக்குத் தனது ஆலோசனைகளை அனுப்பிவைத்ததன் வழியாக, அவரது எதிரிகளுக்கு நடுவிலிருந்து வாதம்செய்வதைக்காட்டிலும் அதிகமாகவே அவர் உழைத்தார்” என்று மைக்கேபானியஸ் என்பவர் கூறினார்.—D’Aubigne, b. 11, ch. 13. (33)

ரோமன் கத்தோலிக்கவாதிகள் தாங்கள் அடையப்போகும் வெற்றியை எதிர்நோக்கி பெருமிதப்பட்டு, ஊதிப்பருத்தவர்களாக மிக விலை யுயர்ந்த ஆடைகளையும், ஆபரணங்களையும் அணிந்து பாதன் நகருக்கு வந்திருந்தனர். ஆடம்பரமாகக் காணப்பட்டதோடு, அவர்களது உணவு மேஜைகளும் மிக விலையுயர்ந்த உணவுப் பொருட்களினாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட திராட்சைரசத்தினாலும் பரப்பப்பட்டிருந்தன. சபைப் பொறுப்புகளினால் உண்டாகக்கூடிய அவர்களது பாரம், உல்லாசங்களினாலும் களியாட்டுக்களினாலும் இலகுவாக்கப்பட்டிருந்தன. அதற்கு நேர் எதிராக, சிறு பிச்சைக்காரர்களின் கூட்டத்தைவிடச் சற்று மேலானவர்களாக சீர்திருத்த வாதிகள் காணப்பட்டு, சிக்கனமான உணவின் காரணமான, உணவு மேஜையின்மீது குறுகிய நேரத்தைச் செலவிடுபவர்களாக இருந்தனர். ஓகோலாம்பேடியசுக்குத் தங்குமிடம் கொடுத்திருந்தவர், அவரை அவரது அறையில், எப்பொழுதும் வாசிப்பவராகவும் ஜெபத்தில் ஈடுபட்டிருப்பவராகவும் கண்டு, பெரிதும் வியந்து “அந்த மதப்புரட்டர் மிகுந்த பக்தி உடையவராக இருக்கிறார்” என்றார். (34)

மாநில மன்றத்தில், மிகவும் அலங்கரிக்கப்பட்ட பிரசங்கபீடத்தின்மேல், மிகவும் அகந்தையுடன் ஈக் ஏறிய அதே நேரத்தில், தாழ்மையான ஓகோலாம்பேடியஸ் மிகச் சாதாரணமாக அமைக்கப்பட்டிருந்த ஒரு மேசையின் மீதமர்ந்தார். ஈக் அவர்களின் உரத்த குரலும் எல்லையற்ற வாக்குறுதிகளும் அவரை ஒருபோதும் தோற்கச்செய்யவில்லை. பொன், புகழ் ஆகியவைகளின்மீதிருந்த அவரது ஆர்வம் அவரை உற்சாகப்

படுத்தியிருந்தது. ஏனெனில், அந்த விசுவாசத்தைச் சார்ந்து பேசுவதற்கு கைநிறைந்த சம்பளம் கிடைக்க இருந்தது. அவரது மேலான வாதங்கள் தோற்றுப்போனபோது. அவர் அவமரியாதையாகப் பேசுவதிலும் ஆணை யிடுவதிலுங்கூட ஈடுபட்டார். (35)

ஓகோலாம்பேடியஸ் அடக்கமும் சுயநம்பிக்கை அற்றவருமாக வாதத்திலிருந்து ஒதுங்கி, "தேவனுடைய வார்த்தை ஒன்றைத்தவிர நியாயம் தீர்க்கும் சட்டமாக வேற எதையும் நான் அடையாளம் காட்டுவதற்கு இல்லை" என்று பக்திவிநயத்துடனும் வெளிப்படையான உறுதிமொழியுடனும் அதில் பிரவேசித்தார்.—Ibid, b. 11, ch. 13. அவர் நடத்தையில் சாதுவாகவும் மரியாதைமிக்கவராகவும் இருந்தபோதிலும், தகுதி உடையவராகவும் பின்வாங்காதவராகவும் இருந்தார் என்பதை மெய்ப்பித்துக் காட்டினார். ரோமன் கத்தோலிக்கர்கள் அவர்களது வழக்கத்தின்படி சபையின் சம்பிரதாயங்களின்மீதுள்ள வல்லமையைப்பற்றி உரிமைபாராட்டிப் பேசியபோது, சீர்திருத்தவாதி வேதவாக்கியங்களை மிக உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தார். "எங்களுடைய சுவிட்சர்லாந்து நாட்டில் அறிவியல் அமைப்புச் சட்டத்திற்கு இசைவாக இல்லாதவரை, சம்பிரதாயங்களுக்கு வலிமை இல்லை. இப்பொழுது விசுவாசம் சம்பந்தப்பட்ட சகல காரியங்களிலும், வேதாகமம் தான் எங்களது அரசியலமைப்புச் சட்டமாக உள்ளது" என்றார்.—Ibid, b. 11, ch. 13. (36)

வாதிட்ட இருவருக்கும் இடையிலிருந்த வேற்றுமை பயன்தராததாக இல்லை. சீர்திருத்தவாதியால் அமைதியாகவும் தெளிவாகவும் மிகமென்மை யாகவும் பணிவுடனும் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள், மக்களின் மனங்களை ஈக்-ன் பெருமையையும் மூர்க்கமுமிக்க உபதேசங்களையும் விட்டு தூரமாக விலக்கி, சீர்திருத்தவாதியின் கருத்துக்களின் பக்கம் திருப்பின. (37)

அந்த விவாதங்கள் பதினெட்டு நாட்கள் நடந்தன. அதன் முடிவில் போப்புமார்க்கவாதிகள் மிகுந்த நம்பிக்கையுடன் வெற்றியை உரிமை பாராட்டினார்கள். பிரதிநிதிகளில் பெரும்பான்மையானவர்கள் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தை ஆதரித்தனர். அந்த மன்றமானது சீர்திருத்தவாதிகள் முற்றிலுமாகத் தோற்றுப்போனார்கள் என்றும், அவர்கள் தங்கள் தலைவரான ஸ்விங்ளியுடன் சேர்த்து சபையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டனர் என்றும் தீர்ப்பை அறிவித்தது. ஆனால் அனுகூலம் யார் பக்கத்தில் இருக்கிறதென்பதை அந்த மாநாட்டின் கனிகள் வெளிப்படுத்தின. அந்த விவாதத்தில் வெளிப்பட்ட போதனைகள் புரொட்டஸ்டாண்டு இயக்கத்திற்குப் பலமான உற்சாகத்தை உண்டுபண்ணவே, அதன்பின் பெர்ன், பேசல் ஆகிய முக்கிய நகரங்களில் சீர்திருத்தத்தை அறிவிக்க அதிகக் காலம் செல்லவில்லை. (38) ★

# 10

# விவிலியத்தின் வெளிச்சமும் வீணர்களின் அச்சமும்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம் : 185–196)**

லுத்தர் இரகசியமாக காணாமல்போய்விட்டது ஜெர்மனி முழுவதிலும் பெரும் திகில்மிக்க குழப்பத்தை உண்டுபண்ணியது. அவரைப்பற்றிய விசாரிப்பு எங்கும் கேட்கப்பட்டது. அவரைப்பற்றிய பயங்கரமான வதந்திகள் எங்கும் பரவவே, அநேகர் அவர் கொலைசெய்யப்பட்டுவிட்டார் என நம்பினர். அவருக்காக நண்பர்கள் மட்டுமின்றி, சீர்திருத்தத்தை வெளிப்படையாக ஆதரிக்காதிருந்த ஆயிரக்கணக்கானவர்களும், புலம்பினர். அவரது இறப்பிற்காகப் பழிவாங்குவோம் என் அநேகர் ஆணையிட்டனர். (1)

அவருக்கு ஆதரவாக உள்ள மக்களின் எழுச்சி எவ்விதமாக உள்ளது என்பதை ரோமன் கத்தோலிக்க தலைவர்கள் திகிலுடன் கண்டனர். முதலில் லுத்தரின் மரணம்பற்றிய உத்தேசத்தினால், அவர்கள் வெற்றிச்சிரிப்புச் சிரித்திருந்தபோதிலும், விரைவில் மக்களின் கோபத்திலிருந்து தங்களை மறைத்துக்கொள்ள விரும்பினர். தனது எதிரிகளுக்கு மத்தியி லிருந்தபோது அவர் செய்த துணிகரமான செயல்களால், அவரது எதிரிகளுக்கு உண்டான துன்பங்கள் அவர் நீக்கப்பட்டதினால் உண்டான துன்பங் களுக்கு ஒப்பாக இருக்கவில்லை. தைரியசாலியாக இருந்த சீர்திருத்த வாதியை அழிக்கவேண்டுமென்று தங்களது கோபத்தில் வகைதேடியிருந்தவர் களுங்கூட, அவர் ஒரு உதவியற்ற அடிமையாக்கப்பட்டுவிட்டார் என்ற அச்சத்தால் நிரப்பப்பட்டனர். “நம்மைக்காத்துக்கொள்ள எஞ்சி நிற்கும் ஒரே வழி, லுத்தரை விரும்புகிற ஜனத்துக்கு அவரைத் தரும்வரைக்கும் நாம் நமது தீவட்டிகளைக் கொளுத்தி, உலகெங்கிலும் அவரைத் தேடுவதுதான்” என்று ஒருவர் கூறினார்.—D’Aubigne, b. 9, ch. 1. பேரரசரின்

அரசாணை வலுவிழந்தது விழுந்ததுபோல் இருந்தது. அதைக்காட்டிலும் லுத்தரைப்பற்றிய செய்தி அதிக கவனத்தைப் பெற்றதால் போப்புவின் பிரதிநிதிகள் மூர்க்கமடைந்தனர். (2)

அவர் ஒரு சிறைக்கைதியாக பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறார் என்கிற செய்தி மக்களின் பயத்தை சாந்தப்படுத்திய அதே சமயத்தில், அவருடைய நலத்தைக்குறித்த ஆர்வத்தைத் தூண்டியது. முன்னர் இருந்ததைவிட அதிகமான ஆர்வத்துடன், அவரது எழுத்துக்கள் வாசிக்கப் பட்டன. பயங்கரமான அந்த நிலைமைகளில் தேவனுடைய வார்த்தையைக் காத்துநின்ற அந்த வீரரின் காரியத்தில் அதிகம்பேர் சேர்ந்தனர். சீர்திருத்தம் தொடர்ச்சியாக பலமடைந்துகொண்டுவந்தது. லுத்தரால் விதைக்கப்பட்ட விதை எங்கும் முளைத்தெழும்பின. அவரது பிரசன்னத்தால் செய்துமுடிக்க இயலாமல் இருந்த பணியை, அவரது மறைவு நிறைவேற்றியது. அவர்களது பெரும் தலைவர் நீக்கப்பட்டதால் உண்டான ஒரு புதிய பொறுப்பை, மற்ற ஊழியர்கள் உணர்ந்தனர். இவ்விதமாக மிகுந்த மேன்மையுடன் தொடங்கப் பட்ட ஊழியம் இடறலடையும்படி விட்டுவிடப்படக்கூடாது என்று புதிய விசுவாசத்துடனும் ஆர்வத்துடனும் அதை முன்கொண்டு சென்றனர். (3)

ஆனால் சாத்தான் ஓய்ந்திருக்கவில்லை! ஏனைய ஒவ்வொரு சீர்திருத்த இயக்கத்தையும் அழிக்க முயன்றதைப்போலவே, இப்பொழுதும் மக்களை வஞ்சித்து அழிக்க, உண்மையான ஊழியத்திற்குப் பதிலாக, ஒரு போலியான சீர்திருத்தத்தை அவர்களுக்குள் தோற்றுவித்தான். முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சபைக்குள்ளாக கள்ளக்கிறிஸ்துக்கள் இருந்தது போல, பதினோறாம் நூற்றாண்டில் கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பினர். (4)

உலகில் உண்டான சமயம் சம்பந்தப்பட்ட உணர்ச்சிப்பெருக்குகளினால் ஆழமாகப் பாதிக்கப்பட்ட சில மனிதர்கள், தாங்கள் பரலோகத்திலிருந்து சிறப்பான தகவல்களைப் பெற்றிருப்பதாகக் கற்பனைசெய்துகொண்டு, லுத்தரால் மிகவும் பலவீனமான விதத்தில் தொடங்கப்பட்ட சீர்திருத்தத்தை முடிவிற்கு நடத்திச்செல்லும்படி தெய்வீகத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம் என்று அறிவித்தனர். உண்மையில் லுத்தர் நிறைவேற்றியிருந்த ஊழியத்தை அவர்கள் சீர்குலைத்துக் கொண்டிருந்தனர். நடைமுறை சம்பந்தப்பட்ட சகல காரியங்களுக்கும் தேவனுடைய வார்த்தைதான் பூரணசட்டமாக இருக்கிறது என்ற சீர்திருத்தத்தின் அடிப்படை அஸ்திவாரமான பெரும் கொள்கையை அவர்கள் நிராகரித்து, அந்தத் தவறாத வழிகாட்டுதலுக்குப் மாற்றாக, மாறக்கூடிய நிச்சயமற்ற தங்களது அபிப்பிராயங்களையும் உணர்ச்சிகளையும் தவறையும் ஏற்படுத்தினார்கள். உண்மையையும் தவறையும் கண்டுபிடிக்கும் மாபெரும் கருவியாகிய வேதாகமத்தை அவர்கள் ஒதுக்கி வைத்ததினால்,

தனக்குப் பிரியமான விதத்தில் மனங்களைக் கட்டுப்படுத்துகின்ற பாதை சாத்தானுக்குத் திறந்துவிடப்பட்டது! (5)

இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளில் ஒருவர், தான் காபிரியேல் தூதனால் போதிக்கப்பட்டிருப்பதாக உரிமைபாராட்டினார். இவருடன் இணைந்ததினால், தனது கல்வியைத் தொடராமல் விட்டுவிட்ட ஒரு மாணவர், தேவனுடைய வார்த்தையை விளக்கும் ஞானத்தினால், தேவன் தன்னை நிரப்பியிருப்பதாக அறிவித்தார். இயல்பாகவே மூடநம்பிக்கையைப் பின்பற்ற விரும்பின மற்றவர்களும் அவர்களுடன் இணைந்தனர். இந்த உற்சாகவாதிகளின் செயல்கள் அதிகமான உணர்ச்சிப்பெருக்கை உண்டுபண்ணிற்று. லுத்தரின் பிரசங்கங்கள் சீர்திருத்தத்தின் தேவையை உணரும்படி எங்குமிருந்த மக்களை எழுப்பியிருந்தது. இந்தப் பாசாங்கான தீர்க்கதரிசிகளினால் சில நேர்மையானவர்களும் தவறாக நடத்தப்பட்டனர். (6)

இந்த இயக்கத்தின் தலைவர்கள் விட்டன்பர்க் நகருக்குச் சென்று, மெலாங்தன்மீதும் அவரது சக ஊழியர்களின்மீதும் தங்களுக்குள்ள உரிமையை வற்புறுத்தினர். “மக்களுக்குப் போதிக்கும்படி நாங்கள் தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறோம் நாங்கள் தேவனிடமிருந்து சிறப்பான வெளிப்படுத்தல்களையும் பெற்றிருக்கிறோம் எனவே என்ன நிகழும் என்பதையும் அறிவோம் நாங்கள் அப்போஸ்தலர்களாகவும், தீர்க்கதரிசி களாகவும் இருந்து, சொல்லுகிற சத்தியத்தினால் டாக்டர் லுத்தரிடம் முறை யிடுகிறோம்” என்று அவர்கள் கூறினர்.—D’Aubigne, b. 9, ch. 7. (7)

சீர்திருத்தவாதிகள் ஆச்சரியமும் குழப்பமும் அடைந்தனர். இது அவர்கள் ஒருபோதும் சந்தித்திராத ஒரு காரியமாக இருந்தது. எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று அறியாதிருந்தனர். “இந்த மனிதர்களிடம் உண்மையில் அபூர்வமான ஆவிகள் காணப்படுகின்றன. ஆனால் எப்படிப்பட்ட ஆவிகள்? ஒருபக்கம் தேவனுடைய ஆவியை அவித்துப்போடாமலிருக்கவும், மறுபக்கம் சாத்தானின் ஆவியினால் வழிவிலகாமலிருக்கவும் நாம் எச்சரிக்கையாக இருப்போமாக” என்று மெலாங்தன் குறிப்பிட்டார்.— D’Aubigne, b. 9, ch. 7. (8)

புதிய போதனையின் கனிகள் விரைவில் வெளித்தோன்றத் தொடங்கின. மக்கள் வேதாகமத்தை அலட்சியம்செய்யவும் அல்லது முற்றிலுமாக ஒதுக்கிவிடவும் நடத்தப்பட்டனர். பள்ளிகள் குழப்பத்தில் ஆழ்ந்தன. மாணவர்கள் சகலவிதமான கட்டுப்பாடுகளையும் ஒதுக்கி, கல்வியை விட்டுவிட்டு, பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறினர். சீர்திருத்தத்தின் பணியை எழுப்பி, அதைக் கட்டுப்படுத்தத் தாங்கள் தகுதிவாய்ந்தவர்கள் என்று எண்ணின மனிதர்கள், அதை அதன் அழிவின் விளிம்புக்குக்

கொண்டுவருவதில் தான் வெற்றியடைந்தனர். ரோமன் கத்தோலிக்கவாதிகள் தங்களது நம்பிக்கை புதுப்பிக்கப்பட்டவர்களாக "இன்னும் ஒரு முயற்சி, பின்பு அனைத்தும் நமதாகி விடும்" என்று கூறிக்கொண்டனர்.—Ibid., b. 9, ch. 7. (9)

நிகழ்ந்ததை வார்ட்பர்கிலிருந்து செவியுற்ற லுத்தர், "இந்தக் கொள்ளைநோயை சாத்தான் அனுப்புவான்" என்று நான் எப்போதும் எதிர்பார்த்திருந்தேன் என்று கவலையுற்றவராகக் கூறினார்.—Ibid., b. 9, ch. 7. பாசாங்கான தீர்க்கதரிசிகளின் சுபாவத்தை உணர்ந்தவராக சத்தியத்தை அச்சுறுத்தும் ஆபத்தைக் கண்டார். போப்பு, பேரரசன் ஆகியவர்களால் உண்டான எதிர்ப்புங்கூட, இப்பொழுது அவர் அனுபவித்த குழப்பத்தையும் மனத்துயரையும்விடப் பெரிதாக இருக்கவில்லை. சீர்திருத்தத்தின் நண்பர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களிடமிருந்துதான், அதற்கு மிகமோசமான எதிரிகள் தோன்றினார்கள். அவருக்கு அதிக மகிழ்ச்சியையும் ஆறுதலையும் கொண்டுவந்திருந்த அதே சத்தியங்கள், சபையில் சண்டைகளும் குழப்பங்களும் ஏற்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டன. (10)

சீர்திருத்தத்தின் பணியில் முன்செல்லும்படி தேவாவியால் நடத்தப்பட்ட லுத்தர் அவருக்கு அப்பாற்பாட்ட நிலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தார். அந்த நிலையை அடையவேண்டும் என்ற நோக்கமோ அல்லது பெரிய மாற்றங்களை உண்டுபண்ண வேண்டுமென்ற எண்ணமோ அவரிடம் இருக்கவில்லை. எல்லையற்ற வல்லமையின் கரத்தில் அவர் ஒரு கருவியாக மட்டும் இருந்திருந்தார். அப்படியிருந்தும் தனது ஊழியத்தின் பலனை நினைத்து அவர் அடிக்கடி நடுங்கினார். "எனது கோட்பாடுகள் ஒரு மனிதனை—அவன் எப்படிப்பட்ட ஏழ்மையான அறியாமையிலிருந்தாலும் காயப்படுத்தியிருந்தால்,—அது காயப்படுத்தாது அதுதான் சுவிசேஷமே—பின்வாங்குவதைவிட, நான் பத்து தடவைகள் சாவேன்" என்று அவர் ஒருமுறை கூறினார்.—Ibid., b. 9, ch. 7. (11)

சீர்திருத்தத்தின் மையம் என்று சொல்லப்பட்ட விட்டன்பர்க் நகரம் இப்பொழுது மிக விரைவாக மூட நம்பிக்கை, சட்டமின்மை ஆகிய வல்லமைகளின்கீழ் விழுந்துகொண்டிருந்தது. இந்தப் பயங்கரமான நிலைமை லுத்தரின் பேதனைகளினால் உண்டாகவில்லை. ஆனால் ஜெர்மன் நாடு முழுவதிலுமிருந்த அவரது எதிரிகள் இந்தக் குற்றச்சாட்டை அவர்மீது சுமத்தினர். "இந்த பெரும் சீர்திருத்தத்தின் முடிவு இப்படி இருக்க முடியுமா" என்று அவர் தனது ஆத்துமாவில் உண்டான கசப்பினால் சில சமயங்களில் கேட்டார்.—Ibid., b. 9, ch. 7. மறுபடியும் அவர் தேவனுடன் போராடினபோது, அவரது இதயத்திற்குச் சமாதானம் வந்தது.

“இந்த வேலை என்னுடையதாயிராமல், உம்முடையதாயிருக்கிறது. மூட நம்பிக்கையினாலும் மத வெறியினாலும் இந்த வேலை பாதிக்கப்படும்படி நீர் அனுமதிக்கமாட்டீர்” என்று ஜெபித்தார். இப்படிப்பட்ட போராட்டம் நிறைந்த நெருக்கடியான நேரத்தில், அதிக காலம் விலகியிருத்தல் என்கிற எண்ணம் ஏற்றுக்கொள்ளக்கூடாததாக இருந்ததினால், விட்டன்பர்க் நகருக்குத் திரும்பு வதற்குத் அவர் தீர்மானித்தார். (12)

தாமதமின்றி ஆபத்து நிறைந்த பயணத்தைத் துவங்கினார். பேரரசனால் தடைசெய்யப்பட்டிருந்தார். எதிரிகள் அவரது உயிரை எடுத்துக்கொள்ளும் சுதந்திரம் பெற்றிருந்தார்கள். அவருக்கு உதவுவதற்கும் புகலிடம் தருவ தற்கும் அவரது நண்பர்கள் தடைசெய்யப்பட்டிருந்தனர். அவரைச் சார்ந்தவர் களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு இருந்தது. ஆனால் சுவிசேஷத்தின் பணி அபாயமான நிலைமைக்கு உள்ளாகியிருந்ததை அவர் கண்டு, சத்தியத்திற்காகப் போராடுவதற்காக, கர்த்தரின் நாமத்தினால் அச்சமின்றிப் புறப்பட்டுச்சென்றார். (13)

வார்ட்பர்க் நகரைவிட்டுச் செல்லும் அவரது நோக்கத்தைப்பற்றிய கடிதத்தில், “ஒரு தேர்தல் அதிகாரியின் பாதுகாப்பைவிட, மேலான பாதுகாப்புடன் நான் விட்டன்பர்க் நகருக்குச் செல்லுகிறேன் என்பது மேன்மை தங்கிய உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும். மேன்மை தங்கிய உங்களது ஆதரவைக் கோரும் எண்ணம் எனக்கில்லை. உங்களுடைய மேன்மையைக் காப்பது என் நோக்கமாயிருப்பதால் அந்த ஆதரவை விரும்பும் தூரத்தைவிட அதிக தூரம் சென்றுவிட்டேன். உங்கள் மேன்மை என்னை பாதுகாக்கும் அல்லது பாதுகாக்க முடியும் என்று தெரிந்திருப்பதால் நான் விட்டன்பர்கிற்கு வரவில்லை. எந்த உலகப்பிரகாரமான ஆயுதமும் இந்த நோக்கத்தை முன்கொண்டுசெல்லாது. மனிதனுடைய உதவியும் சம்மதமும் இல்லாமல் தேவனே எல்லாவற்றையும் செய்யவேண்டும். அதிக விசுவாசம் கொண்டவனே அதிக பாதுகாப்பைப் பெறுகிறான்” என்று தேர்தல் அதிகாரிக்கு எழுதியிருந்தார்.—Ibid., b. 9, ch. 8. (14)

“மேன்மை தங்கிய உங்களது அதிருப்தியையும் உலகத்தின் கோபத்தையும் பெற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். விட்டன்பர்க் நகர மக்கள் எனது சொந்த ஆடுகளில்லையா? தேவன் அவர்களை எனது பொறுப்பில் விடவில்லையா? தேவைப்பட்டால், அவர்களுக்காக நான் என் ஜீவனையும் கொடுக்க வேண்டாமா? இதைத்தவிர, ஜெர்மனி முழுவதிலும் ஒரு கலகம் உண்டாவதையும், அதனால் தேவன் நம்நாட்டை தண்டிக்கப் போவதையும் காண நான் பயப்படுகிறேன்” என்று விட்டன்பர்க் செல்லும் வழியில் இரண்டாவது கடிதத்தில் எழுதினார்.—Ibid., b. 9, ch. 7. (15)

மிகுந்த எச்சரிக்கையுடனும் தாழ்மையுடனும் கூடவே உறுதியான முடிவுடனும் அவர் தனது பணியில் ஈடுபட்டார். “பலாத்காரத்தின் மூலமாக எவைகளெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ, அவைகளை தேவனுடைய வார்த்தையினால் நாம் தூக்கியெறிய வேண்டும்” என்றார்.—Ibid., b. 9, ch. 8. (16)

மூடநம்பிக்கையும் நம்பிக்கையின்மையும் உடையவர்களுக்கு எதிராக, நான் பலவந்தம் செய்யமாட்டேன். வற்புறுத்தவேண்டாம். மனசாட்சியின் சுதந்திரத்திற்காக நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன். விசுவாசத்தின் சாராம்சமே அதுதான்” என்றார். லுத்தர் விட்டன்பர்க் நகருக்குத் திரும்பிவந்துவிட்டார் என்றும் விரைவில் அவர் பிரசங்கம் செய்யவிருக்கிறார் என்றும் எங்கும் சொல்லப்பட்டது. எல்லாத் திசைகளிலுமிருந்து மக்கள் ஆலயத்திற்கு வந்து கூடினர். ஆலயம் நிரம்பி வழிந்தது. அவர் பிரசங்க பீடத்திலேறி, மிகுந்த ஞானத்துடன் மென்மையாக உபதேசித்துக் கடிந்துகொண்டார். திருப்பலியை அழிக்கும் முயற்சியில் பலாத்காரத்தில் ஈடுபட்ட சிலரது நடவடிக்கைகளைப் பற்றி: (17)

“திருப்பலி (பூசை) என்பது தவறான ஒரு காரியம். தேவன் அதை எதிர்க்கிறார். அது நீக்கப்படவேண்டும். உலகமெங்கிலும் சுவிசேஷ த்தில உள்ள இராப்போஜனம் (கர்த்தருடைய திருவிருந்து) அதற்குப் பதிலாக ஏற்படுத்தப்படவேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் பலாத்காரத்தினால் ஒருவரும் அதிலிருந்து நீக்கப்படலாகாது. இந்தக் காரியத்தை நாம் தேவனின் கரங்களில் விட்டுவிடவேண்டும். நாம் அல்ல, தேவனுடைய வார்த்தை செயலாற்ற வேண்டும். ஏன் அப்படி? என்று நீங்கள் கேட்பீர்கள். ஏனெனில், குயவன் கரத்தில் களிமண் இருக்கிறதுபோல, எனது கரத்தில் மனிதர்களின் இதயங்கள் இல்லை. பேசும் உரிமை நமக்குள்ளது. கட்டாயப்படுத்தும் உரிமை நமக்கில்லை. நாம் போதிப்போமாக. மீதியுள்ளவைகள் தேவனுடையவைகள். நான் வற்புறுத்தினால், அதனால் எனக்கு என்ன ஆதாயம்? முகச்சுளிப்பு, சம்பிரதாயங்கள், சேஷ்டைகள், மனிதச் சட்டங்கள், கபட நாடகங்கள்தான். இதயத்தில் உண்டாகும் உண்மை, மெய்விசுவாசம், அன்பு ஆகிய எதுவும் இருக்காது. இந்த மூன்றும் இல்லாத இடத்தில் ஒன்றுமே இல்லை. அதனாலுண்டாகும் வெற்றியை நான் ஆதரிக்கமாட்டேன். நானும் நீங்களும் இந்த உலகமும் ஒருமிப்பதனால், நமக்கு உண்டாகக்கூடிய பலத்தைவிட, அவரது வார்த்தையின் எளிய பலத்தினால் தேவன் அதிகம் செய்கிறார். தேவன் இதயத்தைப் படிக்கிறார். இதயம் எடுத்துக்கொள்ளப்படும்போது, அனைத்தும் வெற்றியாகும்....” என்றார். (18)

“பிரசங்கம் செய்யவும் எழுதவும் விவாதிக்கவும் நான் ஆயத்தமாக இருக்கிறேன். ஆனால் எவரையும் வற்புறுத்தமாட்டேன். ஏனெனில், விசுவாசம் என்பது தானாக உண்டாகும் செயல். நான் என்ன செய்திருக்கிறேன் என்பதைப் பாருங்கள். போப்பு, பாவமன்னிப்பு நடவடிக்கைகள், போப்புமார்க்கவாதிகள் ஆகியவற்றிக்கெதிராக நின்றேன். ஆனால் பலாத்காரமும் கலகமும் செய்யவில்லை. நான் தேவனுடைய வார்த்தையை முன்வைத்தேன் பிரசங்கித்தேன், எழுதினேன், அத்தோடு நிறுத்திவிட்டேன். நான் உறங்கிக் கொண்டிருந்தபோது... இளவரசரோ, பேரரசரோ செய்யமுடியாததை நான் சொன்ன தேவனின் வார்த்தைகள் செய்து, போப்புமார்க்கத்தைத் தூக்கிவீசியது. என் பங்கிற்கு அதை அடுத்து நான் ஒன்றுமே செய்யவில்லை. தேவனுடைய வார்த்தை முழு வேலையையும் செய்தது. பலாத்காரம் செய்யும்படி நான் வேண்டுகோள் விடுத்திருந்தால், ஒருவேளை ஜெர்மனி எங்கும் இரத்த ஆறு ஓடியிருந்திருக்கும். அதன் விளைவு எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்? ஆத்துமாவும் சரீரமும் அழிந்திருக்கும். எனவே, தேவனுடைய வார்த்தையை உலகத்திற்கு ஊடாக செல்லும்படி விட்டுவிட்டு, நான் அமைதியாக இருந்தேன்” என்றார்.—Ibid., b. 9, ch. 8. (19)

ஆர்வமிக்க கூட்டத்தினருக்கு லுத்தர் ஒவ்வொரு நாளும் ஒரு வாரகாலத்திற்குத் தொடர்ந்து சொற்பொழிவாற்றினார். மதவெறியினால் உண்டான எழுச்சி அலையை தேவனுடைய வார்த்தை தகர்த்தது. தவறான பாதையில் நடத்தப்பட்டிருந்த மக்களை சுவிசேஷத்தின் வல்லமை சத்தியத்தின் பாதைக்குத் திருப்பிக்கொண்டுவந்தது. (20)

பெரும் தீமையை விளைவிக்கக்கூடிய பாதையிலிருந்த மத வெறியாளர்களைச் சந்திக்க லுத்தர் விரும்பவில்லை. இவர்கள் நியாயம் அற்றவர்களாகவும், ஒழுக்கமற்ற ஆசைகளை உடையவர்களாகவும் இருந்து, பரலோக வெளிச்சத்தினால் ஒளி அடைந்திருக்கிறோம் என்று உரிமைபாராட்டிக்கொண்டு, மிகலேசான முரண்பாட்டையோ, மிகமேலான அன்புள்ள கடிந்துகொள்ளுதலையோ, ஆலோசனையையோகூட சகிக்க முடியாதவர்களாக உள்ள மனிதர்கள் என்பதை லுத்தர் அறிந்திருந்தார். இவர்கள் மேலான அதிகாரத்தைத் தங்களுக்குத் தாங்களாகவே எடுத்துக்கொண்டு, எந்தவிதமான கேள்வியுமின்றி ஒவ்வொருவரும் அவர் சொல்வதை அங்கீகரிக்கவேண்டும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் அவருடன் ஒரு நேர்முகச் சந்திப்பு தேவையென்று அவர்கள் கோரியபோது, அவர் சம்மதித்து, அவர்களது போலியான தன்மையை அவர் வெற்றிகரமாக எடுத்துக்காட்டியதினால், அந்த வஞ்சகர்கள் உடனே விட்டன்பர்கை விட்டுச் சென்றனர். (21)

மதவெறி சிறிது காலத்திற்குத் தடுக்கப்பட்டிருந்தது. ஆனால் பல வருடங்களுக்குப் பின், அது பெரும்பலாத்காரத்துடன் எழுந்து, அதிக பயங்கரமான விளைவுகளைக் கொண்டுவந்தது. இந்த இயக்கத்திலிருந்த தலைவர்களைப் பற்றி சொல்வதென்றால், “தேவனுடைய வார்த்தைகள் அவர்களுக்கு உயிரற்ற கடிதமாயிருந்தது. அவர்கள் ‘ஆவி ஆவி’ என்று குரலெழுப்பத் தொடங்கினர். அவர்களுடைய ஆவி அவர்களை நடத்திச் செல்லுகிற இடத்திற்கு நிச்சயமாக நான் அவர்களை பின்பற்றிச் செல்லமாட்டேன். அப்படிப்பட்ட பரிசுத்தவான்கள்மட்டுமே இருக்கிற சபையிலிருந்து தேவன் தமது இரக்கத்தினால் என்னைப் பாதுகாப்பாராக. தங்களது பாவங்களை அறிந்து, உணர்ந்து, தேவனிடமிருந்து ஆறுதலையும் ஆதரவையும் பெறுவதற்காகத் தொடர்ச்சியாக எவர்கள் தங்கள் இதயங்களின் ஆழத்திலிருந்து கதறுகின்றனரோ, அப்படிப்பட்ட தாழ்மையான பலவீனமான நோயுற்றவர்களுடன் நான் வாழ விரும்புகிறேன்” என்று லுத்தர் கூறினார்.—Ibid., b. 10, ch. 10. (22)

மதவெறியர்களில் அதிகம் செலாற்றியிருந்த தாமஸ் முன்செர் திறமைமிக்க மனிதர். சரியாக நடத்தப்பட்டிருந்தால், நல்ல காரியங்களைச் செய்ய அது அவருக்கு உதவியிருக்கும். ஆனால் மெய்யான சமயத்தின் முதல் கொள்கையை அவர் கற்றுக் கொள்ளவில்லை. சீர்திருத்தம் தன்னிலிருந்து ஆரம்பமாகவேண்டும் என்பதை மறந்துவிட்ட ஆர்வம் மிக்கவர்கள் செயல்படுவதுபோல, உலகத்தைச் சீர்திருத்த தேவன் தன்னை அபிஷேகம் செய்திருப்பதாகக் கற்பனைசெய்துகொண்டார்.—Ibid., b. 9, ch. 8. பதவியையும் செல்வாக்கையும் அடையும் ஆசைகொண்டவராக, லுத்தருக்கு அடுத்த நிலையில் இரண்டாவதாக இருக்கக்கூட விருப்பமற்றவராக இருந்தார். போப்புவின் வார்த்தைக்குப் பதிலாக வேதவாக்கியங்களின் அதிகாரத்தை வைக்கும் சீர்திருத்தவாதிகளின் செயலானது போப்பு மார்க்கத்தின் வடிவுள்ள வேறொரு அமைப்பை ஏற்படுத்துகின்ற முயற்சிதான் என்றும் அறிவித்தார். உண்மையான சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும்படி தெய்வீகத்தால் தான் நியமிக்கப்பட்டிருப்பதாக அவரைப்பற்றி அவரே உரிமைபாராட்டினார். “ஆவியை உடையவன் எவனும், தன்னுடைய வாழ்நாள் முழுவதிலும் பரிசுத்த வேத வாக்கியங்களைக் கண்டே இராதவனாக இருந்தாலும், மெய்யான விசுவாசத்தைக் கொண்டிருக்கிறான்” என்று முன்செர் கூறினார்.—Ibid., b. 10, ch. 10. (23)

தங்களில் உண்டாகக்கூடிய ஒவ்வொரு எண்ணமும் உணர்ச்சித்துடிப்பும், தேவனுடைய சத்தம்தான் என்று கருதி, அவைகளின் உணர்த்துதலினால் நடத்தப்படும்படிக்கு மதவெறி ஆசிரியர்கள் தங்களை

ஒப்புக்கொடுத்திருந்தனர். அதன் விளைவாக, வரம்புகளைக் கடந்தனர். "எழுத்து கொல்லுகிறது ஆவியோ உயிர்ப்பிக்கிறது" என்று வியந்துகூறித் தங்கள் வேதாகமங்களை எரிக்கவும் செய்தனர். முன்செரின் போதனைகள் ஆச்சரியமானவை களின்மீது நாட்டம்வைக்கும்படி மனிதர்களை நடத்தினது. அது மனிதர்களின் யோசனைகளையும் அபிப்பிராயங்களையும் தேவனுடைய வார்த்தைக்கும் மேலாக வைக்கும்படி அவர்களது அகந்தையைத் திருப்திப்படுத்தியது. ஆயிரக்கணக்கானவர்களால் அவரது கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. விரைவில் அவர் சகலவிதமான பொது ஆராதனை களையும் மறுத்து, இளவரசர்களுக்குக் கீழ்ப்படிவதென்பது, தேவன் பேலியாள் ஆகிய இருவரையும் தொழும் முயற்சி என்று அறிவித்தார். (24)

போப்புமார்க்கத்தின் நுகத்தை தூக்கி எறிய ஏற்கனவே ஆரம்பமாகியிருந்த மக்களின் மனங்கள், சமூக அதிகாரத்தின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் இருப்பதற்குப் பொறுமையற்றதாக மாறத் தொடங்கியது. தெய்வீக அனுமதியோடு செய்வதாக உரிமை பாராட்டின முன்செரின் புரட்சிகரமான போதனைகள், சகலவிதமான கட்டுப்பாடுகளையும் உடைக்கும்படி அவர்களை நடத்தி, தங்களது தவறான எண்ணங்களின்படியும் ஆசைகளின்படியும் நடந்துகொள்ள அவர்களை அனுமதித்தது. மிகப்பயங்கரமான இராஜத் துரோகங்கள் சண்டைகள் ஆகியவைகளின் காட்சி பின்தொடர, ஜெர்மன் நாடு இரத்தக்களரியானது. (25)

மதவெறியின் விளைவுகள் சீர்திருத்தத்தின் விளைவுகளாக குற்றச்சாட்டப்பட்டதைக் கண்ட லுத்தர். எர்பர்ட் நகரில் இதற்குமுன் அனுபவித்த ஆத்தும வேதனைபோல இரண்டத்தனையான வேதனை அடைந்தார். லுத்தரின் கோட்பாடுகள்தான், சட்டரீதியாக கலகங்களின் காரணம் என்று போப்புமார்க்கவாதிகளான இளவரசர்கள் அறிவித்தனர். அநேகர் அதை அங்கீகரிக்க ஆயத்தமாயிருந்தார்கள். இந்தக் குற்றச்சாட்டு எந்தவிதமான அடிப்படை அஸ்திவாரமும் இல்லாதிருந்துங்கூட, சீர்திருத்தவாதியின் மனம் பெரும் துயரடைந்தது. சத்தியத்தின் நோக்கமானது கீழ்த்தரமான மதவெறியோடு சமமாகக் கணக்கிடப்பட்டதை அவரால் சகித்துக் கொள்ளமுடியவில்லை. மறுபக்கம் கலகக்காரர்களின் கோட்பாடுகளை எதிர்த்ததோடு, அவர்கள் பாராட்டும் உரிமை, தெய்வீக நடத்துதலினால் உண்டாகவில்லை என்று கூறி, சமூக அதிகாரத்திற்கு எதிராக கலகம்செய்கிறவர்கள் என்றும் அவர்களை அறிவித்ததினால், கலகக்காரர்கள் லுத்தரை வெறுத்தனர். அதற்குப் பதில் நடவடிக்கையாக, அவர்கள் லுத்தரைப் பாசாங்குக்காரன் என்றனர். இளவரசர்கள், மக்கள் ஆகிய இரு சாராரின் எதிர்ப்பையும் அவர் தன்மீது வரவழைத்துக்கொண்டதுபோல் காணப்பட்டார். (26)

மிகவும் விரைவாக விழுந்துவிட உள்ள சீர்திருத்தத்தின் வீழ்ச்சியை எதிர்நோக்கி, ரோமன் கத்தோலிக்கவாதிகள் வெற்றிச்சிரிப்புச் சிரித்து, மிகுந்த ஆர்வத்துடன் சீர்திருத்த முயன்ற தவறுகளுக்காகக்கூட, அவர்கள் லூத்தரைக் குறைகூறினர். மதவெறியர்கள் தாங்கள் அநீதியாக நடத்தப்படுகின்றனர் என்று பொய்யாகக்கூறி, மக்களின் அனுதாபத்தைப் பெறுவதில் வெற்றியடைந்து, அநேக சமயங்களில் தவறான பக்கத்தில் நிற்பவர்களுக்குச் சம்பவிப்பதுபோல—இரத்த சாட்சிகள் என்றும் கருதப்பட்டனர். இவ்வாறாக, சீர்திருத்தத்திற்கு எதிராகத் தங்களது சக்திகள் ஒவ்வொன்றையும் செலவிட்ட ஒரு கூட்டத்தினர் கொடுமைக்கும், ஒடுக்கப்படுதலுக்கும் இரையானவர்கள் என இரக்கம் காட்டப்பட்டுப் புகழப்பட்டனர். இது, பரலோகத்தில் முதலில் வெளிக்காட்டப்பட்ட, கலகத்தின் ஆவியினால் தூண்டப்பட்ட சாத்தானின் அதே செயலாக இருந்தது. (27)

அநீதியை நீதியென்றும் நீதியை அநீதியென்றும் அழைக்கும்படி மனிதர்களை வஞ்சிக்க சாத்தான் தொடர்ந்து வகை தேடித்திரிகிறான். அவனது வேலை எப்படி வெற்றிகரமானதாக உள்ளது! தேவனுடைய விசுவாசமிக்க ஊழியக்காரர்கள் சத்தியத்தைப் பாதுகாக்கும்பணியில் அச்சமின்றி நிற்கும்போது, அவர்கள்மீது எவ்விதமாக அடிக்கடி பழியும் நிந்தையும் சுமத்தப்படுகின்றன! தேவனுக்கு உண்மையாக இருப்பவர்கள் அதற்காக மதிக்கப்பட்டு, தாங்கப்படவேண்டியவர்களாக இருப்பதற்குப் பதிலாக, சந்தேகத்தினாலும், அவநம்பிக்கையினாலும் தனியாக நிற்கும்படி விடப்பட்டிருக்கும்போது, சாத்தானின் ஏவலாளர்களாக இருக்கும் மனிதர்கள் துதிக்கப்பட்டு, முகஸ்துதி செய்யப்பட்டு இரத்தசாட்சிகள் என்றுங்கூட நோக்கப்படுகின்றனர்! (28)

போலியான பரிசுத்தம், போலியான பரிசுத்தமாக்கப்படுதல் தன் வஞ்சகத்தைத் தெடர்ந்து செய்துகொண்டு இருக்கிறது. வேதவாக்கியங்களிலிருந்து மனிதர்களின் மனங்களை திசைதிருப்பி, தேவப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதற்குப்பதிலாக, தங்களது உணர்ச்சிகளையும் உணர்த்துதல்களையும் பின்பற்றும்படியாக, லூத்தரின் நாட்களைப்போலவே, அதே ஆவி, பல்வேறு வடிவங்களில் தன்னைக் காட்டிக்கொண்டிருக்கிறது. தூய்மை, சத்தியத்தின்மீது நிந்தையைக் கொண்டுவர சாத்தான் கையாளும் வெற்றிகரமான கருவிகளில் இதுவும் ஒன்று. (29)

ஒவ்வொரு திசையிலிருந்தும் சுவிசேஷத்திற்கு எதிராக உண்டான தாக்குதலை லூத்தர் அச்சமின்றித் தடுத்தார். ஒவ்வொரு போராட்டத்தின் சமயத்திலும் தேவனுடைய வார்த்தை தன்னில்தானே பலமுள்ள ஆயுதம் என்பதை மெய்ப்பித்தது. போப்புவின் அதிகார ஆசைக்கு எதிராகவும்,

சீர்திருத்தத்துடன் உறவுகொள்ள முயன்ற மதவெறிக்கு எதிராகவும், லுத்தர் தேவனுடைய வார்த்தையினால் போர் செய்தார். (30)

ஒன்றையொன்று எதிர்க்கின்ற இவ்வொவ்வொன்றும், அதன் சொந்த வழியில், மனித ஞானத்தை சமயம், சத்தியம், அறிவு ஆகியவைகளின் ஆதாரம் என்று உயர்த்திக்கொண்டு, வேதவாக்கியத்தை ஒரு பக்கமாக நீக்கிவைத்தது. நியாய சாஸ்திரம் அறிவை உருவமாக்கி, அதனை மதத்தின் அளவுகோலாக அமைக்கிறது. ரோமமார்க்கம், போப்புவின் மேலாதிக்கம் அப்போஸ்தலரின் வழியாக அறுந்துபோகாமல் தொடர்ந்து வருகிறது என்றும், காலங்கள் நெடுகிலும் மாறாத தன்மை உடையதென்றும் உரிமைபாராட்டி, ஒவ்வொரு வகையான ஊதாரித்தனத்திற்கும் ஊழலுக்கும் போதுமான வாய்ப்பைக் கொடுத்து, அதை அப்போஸ்தல ஆணையத்தின் பெயரால் பக்தியென்று கூறி மறைக்கிறது. முன்செரினாலும் அவரது உடனாளிகளாலும் ஆவியின் ஏவுதல் என்றும் உரிமைபாராட்டப்பட்ட இவைகள், கற்பனையைத்தவிர மேலான எதனாலும் உண்டாகவில்லை. அதன் செல்வாக்கு தெய்வீக அதிகாரம் அல்லது மனித அதிகாரம் ஆகிய அனைத்தையும் குழிதோண்டிப் புதைப்பதாக இருந்தது. உண்மையான கிறிஸ்தவ மார்க்கமோ, தேவனுடைய வார்த்தையை, தேவ ஆவியின் ஏவுதலாகிய கருவூலத்திலிருந்து பெற்ற சத்தியமாக, சகலவிதமான ஏவுதல்களையும் சோதித்தறிகின்றதாக இருக்கிறது. (31)

லுத்தர் வார்ட்பர்கிலிருந்து திரும்பி வந்தபின்பு, புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பு விரைவில் முடிக்கப்பட்டு, சுவிசேஷம் ஜெர்மன் மக்களுக்கு அவர்களது சொந்த மொழியில் கொடுக்கப்பட்டது. சத்தியத்தை நேசித்த அனைவராலும் இந்த மொழிபெயர்ப்பு மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் மனிதப் பாரம்பரியங்களையும் மனிதக் கட்டளைகளையும் தெரிந்து கொண்டவர்களால் பரிகாசமாக நிராகரிக்கப்பட்டது. (32)

சாதாரண மக்கள்கூட இப்பொழுது தேவனுடைய வார்த்தையின் கட்டளைகளைப்பற்றித் தங்களுடன் விவாதிக்கத் தகுதியடைந்து விடுவார் கள். அப்பொழுது தங்களது சொந்த அறியாமை வெளிப்பட்டுவிடும் என்ற எண்ணம் அவர்களை எச்சரிப்படையச் செய்தது. தேவ ஆவியின் வார்த்தை களுக்கெதிராக காரணங்காட்டப்படுகிற அவர்களுடைய ஆயுதங்கள் வல்லமையற்றவையாக இருந்தன. வேதவாக்கியங்கள் பரவுவதைத் தடுக்கத் தனது சகல வல்லமையையும் அது செயல்படுத்தியது. ஆனால், கட்டளைகள் எதிர்ப்புகள் சித்திரவதைகள் யாவுமே ஒட்டுமொத்தமாக வீணாயின. கத்தோலிக்கமார்க்கம் எந்த அளவிற்கு வேதாகமத்தை பழித்து,

அதைத் தடைசெய்ததோ, அந்த அளவிற்கு, அது உண்மையில் என்ன போதிக்கிறதென்பதை அறியும் ஆவல் மக்களிடம் அதிகரித்தது. வாசிக்கத் தெரிந்த அனைவரும் தங்களுக்கென்று தேவனுடைய வார்த்தையை வாசிக்க ஆர்வமுள்ளவர்களானார்கள். தங்களுடன் எடுத்துச்சென்று, அதன் பெரும்பகுதிகள் தங்களது ஞாபகத்தில் நிற்கும்வரை திருப்தி அடையாமல், திரும்பத்திரும்ப வாசித்தார்கள். மிகுந்த வரவேற்புடன் புதிய ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டதைக் கண்ட லுத்தர், பழைய ஏற்பாட்டை மொழிபெயர்க்கத் தொடங்கி, எவ்வளவு விரைவாக மொழிபெயர்த்தாரோ அவ்வளவு விரைவாக அவைகளை வெளியிட்டார் (33)

லுத்தரின் எழுத்துக்கள் நகரத்தில் வரவேற்கப்பட்டதைப்போலவே, சிற்றூர்களிலும் வரவேற்கப்பட்டது. லுத்தரும் அவரது நண்பர்களும் எழுதி முடித்தவைகளை மற்றவர்கள் பரப்பினார்கள். மடத்தின் தனிமையான கடமைகள் சட்டத்திற்குப் புறம்பனவை என்பதைப்பற்றி, மனதில் உணர்த்தப் பட்ட சந்நியாசிகள், சோம்பேறித்தனமான வாழ்க்கைக்குப் பதிலாக ஆக்கப் பூர்வமான பணியில் ஈடுபட விரும்பினார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தையை அறிவிக்க முடியாத அறியாமையில் இருந்த அவர்கள் மாநிலங்களெங்கும் திரிந்தும், சிற்றூர்களையும் குடிசைகளையும் சந்தித்தும் லுத்தரும் அவரது நண்பர்களும் எழுதின புத்தகங்களை விற்றனர். விரைவில் ஜெர்மன் நாடு தைரியமிக்க இந்தப் புத்தக ஊழியர்களால் நிறைந்தது.—Ibid., b. 9, ch. 11. (34)

மகிழ்ச்சியுடனும் பேரார்வத்துடனும் வேதாகம எழுத்துக்கள் செல்வந்தர்களாலும் ஏழைகளாலும் கற்றோராலும் கல்லாதவர்களாலும் வாசிக்கப்பட்டன. இரவுவேளைகளில் கிராமப்பள்ளிகளின் ஆசிரியர்கள் நெருப்பருகில் கூடியிருந்த மக்கள் கூட்டத்திற்கு அவைகளைச் சத்தமாக வாசித்துக்காட்டினர். செயல்படுத்தப்பட்ட ஒவ்வொரு முயற்சியினாலும் சத்தியத்தைப்பற்றி உணர்த்தப்பட்ட சில ஆத்துமாக்கள் தேவனுடைய வார்த்தையை மகிழ்ச்சியுடன் பெற்று, அந்த நற்செய்தியை அவர்களது பங்காகப் பிறருக்கும் கூறினர். (35)

ஏவுதலினாலான வார்த்தைகள் பரிசோதிக்கப்பட்டன. “உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர் களாக்கும்” (சங்கீதம் 119:130). வேதவாசிப்பு மக்களின் மனங்களிலும் இதயங்களிலும் பலமிக்க மாறுதலைச் செய்து கொண்டிருந்தது. போப்பு மார்க்க ஆளுகை அதற்குக் கீழானவர்களை அறியாமை, கீழ்த்தரம் ஆகியவைகள் என்ற நரகத்தின்கீழ் பிணைத்து வைத்திருந்தது. அதில் மூடநம்பிக்கை மிகுந்த செயல்கள் பக்திவிநயத்துடன் செய்யப்பட்டன.

ஆனால் அவர்களது சகல வேலைகளிலும் இதயத்திற்கும் நுண்ணறிவிற்கும் கொஞ்சங்கூடப் பங்கில்லாமலிருந்தது. சத்தியத்தின் தெளிவான வார்த்தையை முன்வைத்து லுத்தர் சொற்பொழிவாற்றியதும், அதன்பின் தேவனுடைய வார்த்தை சாதாரண மனிதர்களின் கரத்தில் வைக்கப்பட்டதும், அவர்களுக்குள் அடங்கியிருந்த வல்லமையை எழுப்பினதுமட்டுமின்றி, ஆவிக்குரிய தன்மையைத் தூய்மைப்படுத்தி மேன்மைப்படுத்தி, அவர்களது நுண்ணறிவிற்குப் புதுப்பெலனையும் வலிமையையும் தந்தது. (36)

சீர்திருத்தத்தின் கோட்பாடுகளைப் பாதுகாக்கும் சகல நிலைகளிலிருந்த மனிதர்களும் தங்கள் கரங்களில் வேதாகமங்களை வைத்திருந்தனர். வேதவாக்கியங்களை ஆராய்வதை குருமார்களிடமும் சந்நியாசிகளிடமும் விட்டிருந்த போப்புமார்க்கவாதிகள், புதிய போதனைகளை மறுத்துப்பேசுவதற்கு வரும்படியாக குருமார்களையும் சந்நியாசிகளையும் அழைத்தனர். அவர்கள் எவர்களையெல்லாம் கல்வியறிவில்லாத மதவிரோதிகள் என்று மறுத்துக் கூறியிருந்திருந்தார்களோ, அவர்களுக்குமுன், வேதவாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறியாமலிருந்த இந்த குருமார்களும் சந்நியாசிகளும் மொத்தமாகத் தோற்கடிக்கப்பட்டனர். “மகிழ்வதற்கு ஏதுவில்லாதபடி பரிசுத்த வேதவாக்கியங்களின்மீது மாத்திரம் விசுவாசம் வைக்கும்படி லுத்தர் தனது பின்னடியார்களை இசையச் செய்தார்” என்று ஒரு ரோமன் கத்தோலிக்க எழுத்தாளர் எழுதினார்.—Ibid., b. 9, ch. 11. மிகக் குறைவான கல்விஅறிவுடைய மனிதர்கள் சத்தியத்திற்காகப் பரிந்துரை செய்வதையும், கற்றறிந்தவர்களுடனும் சொல்வன்மைமிக்க இறைஇயல்வாதிகளுடனும் அவர்கள் வாதம்செய்வதையும் கேட்க மக்கள் கூட்டமாகத் திரண்டிருந்தனர். சாதாரணமான தேவனுடைய வார்த்தைகளில் உள்ள போதனைகளின் விவாதங்களால் சந்திக்கப் பட்டபோது, இந்தப் பெரிய மனிதர்களின் வெட்கக்கேடான அறியாமை வெளியில் தெரிந்தது. குருமார்களையும் கற்றறிந்த அறிஞர்களையும் விட கூலிக்காரர்களும் இராணுவ வீரர்களும் பெண்களும் சிறுபிள்ளைகளுங்கூட வேதாகமத்தின் போதனைகளை நன்கறிந்திருந்தனர். (37)

பொதுமனிதர்களில், சுவிசேஷத்தை உயர்த்திப்பிடித்திருந்த அதன் சீடர்களுக்கும், மூடநம்பிக்கைமிக்க போப்புமார்க்கவாதிகளுக்கும் இடையில் காணப்பட்ட வேற்றுமை, படித்தவர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையிலும் தெளிவாகக் காட்டப்பட்டிருந்தது. “மொழிகளைக் கற்பதையும் இலக்கியங்களை அறிவதையும் அலட்சியம் செய்திருந்த மதத்தலைவரின் பழைய வீரர்களை எதிர்த்தவர்கள், வேதவாக்கியங்களை ஆராய்ந்து, பழங்காலப் வழக்கங்களை அறிந்திருந்த இளைஞர்களாக இருந்தார்கள்.

செயலாற்றல் மிகுந்து, துணிவுள்ள இதயம் கொண்டிருந்த இந்த இளைஞர்கள், நீண்ட நாட்களுக்கு இவர்களுடன் போட்டியிட ஒருவராலும் முடியாது என்ற அளவிற்கு விரைவாக திறமையடைந்தனர். எனவே, சீர்திருத்தத்தைத் தாங்கின இவர்கள், ரோமன் கத்தோலிக்க அறிஞர்களை சந்தித்த பொதுவான நேரங்களில், எதிரிகளின் மந்த நிலையை வெட்கப்படச்செய்து, அனைவரும் பழிக்கும்படி வெளிக்கொண்டுவருவதற்கேதுவாக எளிதாகவும் நம்பிக்கையுடனும் வாதிட்டனர்."—Ibid., b. 9, ch. 11. (38)

போப்புமார்க்கப்போதகர்கள் தங்களுடைய சபையினரின் எண்ணிக்கை குறைவதைக்கண்டு, நீதிபதிகளின் உதவியைக் கெஞ்சிக்கேட்டு, அவர்களது போதனைகளைக் கேட்டிருந்தவர்களைத் திரும்பக்கொண்டுவர, தங்களது சக்திக்குட்பட்ட சகலவிதமான உபாயங்களையும் செய்தனர். ஆனால் புதிய போதனையில், தங்களது ஆத்துமாவின் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படுவதை கண்டு, இதுவரை மூடநம்பிக்கைமிக்க சமயச்சடங்குகள், மனிதப் பாரம்பரியங்கள் என்கிற உமியையே உணவாகத் தந்திருந்தவர்களை விட்டு மக்கள் திரும்பினார்கள். (39)

சத்தியத்தின் ஆசிரியர்களின்மீது உபத்திரவம் என்ற பெருநெருப்பு கொளுத்திவிடப்பட்டபோது, "ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள்" (மத்தேயு 10:23) என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு அவர்கள் செவி சாய்த்தார்கள். ஒளி எங்கும் ஊடுருவிச் சென்றது. ஓடிப்போனவர்கள் தங்களை உபசரிக்கத் திறக்கும் வாசல்களைக் கண்டு, அங்கு தங்கி, சில சமயத்தில் ஆலயங்களிலோ அல்லது அந்த சலுகை மறுக்கப்பட்டபோது, தனியார் வீடுகளிலோ, அல்லது பொது இடங்களில் நின்றோ கிறிஸ்துவைப் பிரசங்கித்தனர். பிரசங்கிக்கக்கூடிய இடம் எங்கிருந்ததோ, அது பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயமாகக் கருதப்பட்டது. இவ்விதமான வல்லமையுடனும் நிச்சயத்துடனும் அறிவிக்கப்பட்ட சத்தியம் தடுக்கப்படமுடியாத வல்லமையுடன் பரவியது. (40)

மதவிரோதத்தை ஒடுக்குவதற்கு சபை அதிகாரிகளும் சமூக அதிகாரிகளும் வீணாக அழைக்கப்பட்டனர். சிறைத்தண்டனை, சித்திரவதை, நெருப்பு, பட்டயம் ஆகியவைகளை வீணாகவே கையாண்டனர். ஆயிரக் கணக்கான விசுவாசிகள் அவர்களது விசுவாசத்தை தங்களுடைய இரத்தத் தினால் முத்திரையிட்டனர். அப்படியிருந்தும் ஊழியம் முன்சென்றது. சத்தியம் அதிகமாகப் பரவிட உபத்திரவம் உதவியது. சாத்தான் தன்னுடைய மதவெறியை அதனுடன் இணைத்துக்கொள்ள முயற்சித்த செயல் தேவனுடைய ஊழியத்திற்கும் சாத்தானுடைய செயல்களுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டியது. (41) ★

# 11

# எதேச்சாதிகாரத்தை எதிர்த்த இளவரசர்கள்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 197–210)**

சீர்திருத்தத்திற்கு ஆதரவான மிக மேன்மைமிக்க சாட்சிகளில் ஒன்று, கி.பி.1529–ல் ஜெர்மனியிலுள்ள ஸ்பைர்ஸ் நகரில் கிறிஸ்தவ ஜெர்மன் இளவரசர்கள் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திற்கு எதிராக அறிவித்த எதிர்ப்பாகும். தேவனுடைய இந்த மனிதர்களால் காட்டப்பட்ட தைரியம், விசுவாசம், உறுதி ஆகியவை பின்வந்த காலங்களில் சிந்தனை மற்றும் மனசாட்சி சுதந்திரத்தை சம்பாதித்துக் கொடுத்தது. அவர்களது எதிர்ப்புத்தான் சீர்திருத்த சபைக்கு புரொட்டஸ்டாண்ட் என்கிற பெயரைக் கொடுத்தது. அதன் கொள்கைகள் கிறிஸ்தவத்தின் மிக முக்கியமான கருப்பொருள்களாக உள்ளன.—D'Aubigne, b. 13, ch. 6. (1)

இருளும் பயமுமிக்க ஒரு நாள் கிறிஸ்தவத்திற்கு வந்திருந்தது. லுத்தருடைய போதனைகளையும் கோட்பாடுகளையும் தடைசெய்து, அவரை ஒரு சட்டவிரோதியாக வோம்ஸ் நகரம் கட்டளை பிறப்பித்திருந்தபோதிலும், மத சகிப்புத்தன்மை இதுவரை அந்தப் பேரரசில் தெடர்ந்துகொண்டிருந்தது. சத்தியத்திற்குத் தடையாக இருந்த சக்திகளை தெய்வீகப் பாதுகாப்பு தடுத்து நிறுத்தியிருந்தது. சீர்திருத்தத்தை நசுக்கவேண்டுமென்ற வைராக்கிய முடையவனாக ஐந்தாம் சார்லஸ் இருந்தான். ஆனால் அதை நொறுக்கும்படி அவன் தன் கரத்தை உயர்த்தியபோதெல்லாம் அந்த அடி வேறிடத்தில் விழும்படி பலவந்தமாக திசைமாற்றப்பட்டான். ரோமை எதிர்க்கத் துணிந்த அனைவர்மீதும் மீண்டும் மீண்டும் வந்த உடனடி அழிவு தவிர்க்க முடியாததுபோல் காணப்பட்டாலும், மிகவும் நெருக்கடியான நேரத்தில், துருக்கிப் படைகள் கிழக்கு எல்லையில் தோன்றின, அல்லது பிரான்ஸ்

அரசன் அல்லது தனது பேரரசைப் பெரிதாக்க விரும்பிய போப்புதானே, அவன்மீது போர் செய்தார். இவ்வாறாக, யுத்தங்களினாலும் நாடுகளின் கலகங்களினாலும் சீர்திருத்தம் பலமடைந்து பரவும்படி விடப்பட்டது. (2)

எப்படியிருந்தாலும் இறுதியில் போப்புமார்க்க மேலாண்மை, சீர்திருத்தத்திற்கெதிரான ஒரு பொதுக் காரணத்தை உண்டுபண்ணும் படி தனது சண்டைகளை விட்டது, கி.பி.1526–ல் ஸ்பைர்ஸ் என்னும் இடத்தில் கூடிய விசாரணைக்குழு பொதுவான மகா சபை கூடும்வரை, மாநிலங்களுக்கு மதசம்பந்தமான காரியங்களில் முடிவெடுக்க முழுச் சுதந்திரம் கொடுத்தது. ஆனால் இந்தச் சலுகையை அடைவதற்குண்டான அபாயம் கடந்துபோனதும், கி.பி.1529–ல் தனது மார்க்கத்துக்கெதிரான மதவிரோதத்தை நசுக்கும்படி பேரரசன் இரண்டாவது விசாரணை மன்றத்தைக் கூட்டினான். சீர்திருத்தத்திற்கு எதிராகச் செயல்படும்படி இளவரசர்களை சமாதானமான முறையில் தன் பக்கம் இழுத்துக்கொள்ளவும், அது முடியாமற்போனால், பட்டயத்தைக் கையாளவும் சார்லஸ் ஆயத்தமாயிருந்தான். (3)

போப்புமார்க்கவாதிகள் களிகூர்ந்தனர். அவர்கள் பெரும் எண்ணிக் கையில் ஸ்பைர்ஸ் நகரில் தோன்றி, சீர்திருத்தவாதிகளுக்கும் அவர்களது ஆதாரவாளர்களுக்கும் எதிரான தங்களது பகையை பகிரங்கமாக காட்டி னார்கள். “நாங்கள் பூமியின் இழிவுகளாகவும் குப்பைகளாகவும் இருக்கிறோம். ஆனால் ஏழைகளான அவரது மக்களைக் கிறிஸ்து நோக்கிபார்த்து பாதுகாப்பார்” என்று மெலாங்தன் கூறினார்.—Ibid., b. 13, ch. 5. விசாரணை மன்றத்தில் தோன்றிய சுவிசேஷ இளவரசர்கள் தங்களது வீடுகளிலுங்கூட சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டிருந்தனர். ஆனால் ஸ்பைர்ஸ் நகர மக்கள் தேவனுடைய வார்த்தையின்மீது தாகத்தோடிருந்து, தடையுத்தரவு இருந்தபோதிலும், சாக்சோனிய தேர்தல் அதிகாரியின் ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனைக்கு ஆயிரக்கணக்கில் கூடினர். (4)

அந்தச் செயல் நெருக்கடியை விரைவுபடுத்தியது. மனசாட்சிக்குச் சுதந்திரம் வழங்கிய தீர்மானம் ஒழுக்கக்கேடுகளுக்கு காரணமாகிவிட்டதினால், அது நீக்கப்படவேண்டும் என்று பேரரசர் விரும்புகிறார் என்கிற அரசகட்டளை அறிவிக்கப்பட்டது. இந்த நியாயமற்ற சட்டம், சுவிசேஷக் கிறிஸ்தவர்களின் கோபத்தையும் அபாயக் குரலையும் தூண்டிவிட்டது. “கிறிஸ்து மறுபடியும் காய்பா, பிலாத்து ஆகியோரின் கரங்களில் வீழ்ந்துவிட்டார்” என்று ஒருவர் கூறினார். ரோமன் கத்தோலிக்கர்கள் அதிகமான வன்முறையாளர்களானார்கள். துருக்கியர் லுத்தரன்களைவிட மேலானவர்கள், ஏனெனில், அவர்கள் உபவாச நாட்களை ஆசரிக்கின்றனர். லுத்தரன்கள் அவைகளை மீறுகின் றனர். தேவனுடைய பரிசுத்த வேதவாக்கியங்கள், சபையின் பழைய

தவறுகள் ஆகிய இரண்டில் ஒன்றை நாம் தேர்ந்தெடுக்கவேண்டியிருந்தால், முன்சொல்லப்பட்டதை நாம் நிராகரிக்கவேண்டும்" என்று குரோதமுள்ள ஒரு போப்புமார்க்கவாதி அறிவித்தார். "ஒவ்வொரு நாளும், முழுக்கூட்டத்திலும் பேபர் சுவிசேஷகர்களின் மீது புதிய கற்களை வீசுகிறார்" என்று மெலாங்தன் கூறினார்.—Ibid., b. 13, ch. 5. (5)

சபையின் சகிப்புத் தன்மையானது சட்டப்பூர்வமாக்கப்பட்டது. சுவிசேஷ மாநிலங்கள் தங்களது உரிமைகள் மறுக்கப்படுவதை எதிர்த்தன. வோம்ஸ் நகரிலிருந்து கொடுக்கப்பட்ட தடை உத்தரவின் கீழ் லுத்தர் இருந்ததினால், அவர் ஸ்பைர்ஸ் நகரில் தோன்றுவது அனுமதிக்கப்படாமலிருந்தது. ஆனால் அவரது இடம், உடன் ஊழியக்காரர்களாலும், இந்த அவசர நேரத்தில் தேவனுடைய காரியத்திற்குப் பாதுகாப்பாக நிற்கும்படி தேவன் எழுப்பியிருந்த இளவரசர்களாலும் நிரப்பப்பட்டது. லுத்தரின் முந்தைய பாதுகாவலராக இருந்த மேன்மை தங்கிய சாக்சோனியின் பிரெட்ரிக் மரணத்தால் பிரிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவரது சகோதரரும் பின்னுரிமையாளருமாயிருந்த ஜான் பிரபு சீர்திருத்தத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்று, சமாதானத்தின் நண்பராயிருந்து, விசுவாசம் சம்பந்தப்பட்ட காரியங்கள் அனைத்திலும் பெரும் சக்தியையும் தைரியத்தையும் காட்டினார். (6)

சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்ட அனைத்து மாநிலங்களும் ரோமன் கத்தோலிக்க ஆட்சியின் எல்லைக்குள் தவறாமல் கீழ்ப்பட்டு வரவேண்டும் என்று குருமார்கள் கோரினர். மறுபக்கம் சீர்திருத்தவாதிகள் தங்களுக்கு இதற்குமுன் அனுமதிக்கப்பட்டிருந்த சுதந்திரத்தை உரிமைபாராட்டினர். பெருமகிழ்ச்சியுடன் தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்ட அம்மாநிலங்களை ரோம் மீண்டும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதை சகிக்கமாட்டாதிருந்தார்கள். (7)

முடிவாக, சீர்திருத்தம் எங்கு அமைக்கப்படவில்லையோ அந்த இடங்களில், வோம்ஸ் நகரில் வெளியிடப்பட்ட கட்டளை கட்டாயமாக அமுல்படுத்தப்படவேண்டும். மேலும் சுவிசேஷ மாநிலங்களில் எங்கெல்லாம் கலகம் உண்டாகும் அபாயம் இருக்கிறதோ, அங்கு புதிய சீர்திருத்தத்தை அறிமுகம் செய்யக்கூடாது; கருத்து வேற்றுமையுள்ள வேதாகம விஷயங்கள் பற்றி விவாதம் செய்யக்கூடாது; திருப்பலி பூசை கொண்டாடுவதை எதிர்க்கக் கூடாது; கத்தோலிக்கர்கள் லுத்தரின் மார்க்கத்தைத் தழுவ அனுமதிக்கக் கூடாது என்ற சமரசம் முன்வைக்கப்பட்டது. —Ibid., b. 13, ch.5. விசாரணை மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நடவடிக்கை, போப்புமார்க்கக் குருக்களுக்கும் சந்நியாசிகளுக்கும் மிகுந்த மனநிறைவைக் கொண்டு வந்தது. (8)

இந்தக் கட்டளை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், சீர்திருத்தம் இதுவரை சென்றடையாத இடத்திற்குப் பரவமுடியாததுடன், அது ஏற்கனவே எங்கு பரவி உள்ளதோ அங்கும் அது உறுதியான அஸ்திவாரத்தின்மீது அமைக்கப்படமுடியாது.—Ibid., b. 13, ch. 5. பேச்சு சுதந்திரம் தடை செய்யப்பட்டிருக்கும். மாற்றங்கள் அனுமதிக்கப்பட்டிருக்காது. இந்தத் கட்டளை களுக்கும் தடை உத்தரவுகளுக்கும் சீர்திருத்தத்தின் நண்பர்கள் உடனடி யாகக் கீழ்ப்படிய கோரப்பட்டனர். உலகத்தின் நம்பிக்கைகள் அணைந்து விடப்போவதுபோல் காணப்பட்டது. போப்புமார்க்க ஆராதனை முறைகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டால், பண்டைய அத்துமீறல்களை தவிர்க்கமுடியாதபடி மீண்டும் எழுப்பும். அது மதவெறியினாலும், பிரிவினைகளினாலும் ஏற்கனவே அசைந்திருக்கும் பணியின் அழிவைப் பூர்த்திசெய்யும் சந்தர்ப்பத்தையும் உடனடியாக உண்டாக்கிவிடும். —Ibid., b. 13, ch. 5. (9)

சுவிசேஷக்கட்சி ஆலோசனைக்காகக் கூடினபோது, திகைப்பு கலந்த அச்சத்தினால் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தனர். "என்ன செய்யப்படவேண்டும்" என்ற கேள்வி ஒருவரை விட்டு ஒருவருக்குக் கடந்து சென்றது. உலகிற்கான பலம்மிக்க காரியங்கள் இடர்பாட்டில் இருந்தன. "சீர்திருத்தத் தலைவர்கள் இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? உண்மையில் மிகப்பிரமாண்டமானதாயிருந்த இந்த நெருக்கடியைத் தவறானவிதத்தில் எவ்வளவாக தங்களுக்குள் விவாதம் செய்திருந்திருப்பார்கள் இந்த சீர்திருத்தவாதிகள்? கீழ்ப்படிவதற்குச் சாதகமான நியாயம்போல் தோன்றுகின்ற எத்தனை சாக்குப்போக்குகளையும் இசைவான காரணங்களையும் அவர்களால் கண்டிருந்திருக்க முடியும்? லுத்தரின் இளவரசர்கள் தங்களது மத அனுஷ்டானங்களைப் பின்பற்றும் சுதந்திரம் அவர்களுக்கு உத்தரவாதம் செய்யப்பட்டிருந்தது. இந்தக் கட்டளை நடைமுறைக்கு வருவதற்குமுன், சீர்திருத்தக் கொள்கையைத் தழுவிய இளவரசர்களின் பிரஜைகளாக இருந்தவர்களுக்கும் இந்த வரம்பு விரிவுபடுத்தப்பட்டிருந்தது. இது அவர்களைத் திருப்திப்படுத்தக் கூடாதா? பணிதல் எத்தனை அபாயங்களைத் தவிர்த்திருக்கும். இந்த எதிர்ப்பு எப்படிப்பட்ட அறியாத இடையூறுகளிலும் சிக்கல்களிலும் அவர்களை சிக்கவைக்கும்? எதிர்காலம் எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களைக் கொண்டுவரும் என்பது யாருக்குத் தெரியும்? நாம் சமாதானத்தைத் தழுவிக்கொள்ளுவோமாக. ரோமன் கத்தோலிக்க மார்க்கம் வைத்திருக்கும் ஒலிவக்கிளையை நாம் பற்றிக்கொண்டு, ஜெர்மனியின் காயங்களை மூடுவோமாக. இவ்விதமான வாதங்களினால் தாங்கள் எடுக்கவேண்டிய முடிவை நியாயப்படுத்தியிருந்தால், அதன் மூலமாக உண்டாகக்கூடியவைகள் குறைந்த காலத்தில் அவர்களது நோக்கத்தையே கவிழ்த்திருந்திருக்கும். (10)

இந்த ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்த கொள்கைகளை அவர்கள் மகிழ்ச்சியுடன் கண்டு, விசுவாசத்துடன் செயலாற்றினார்கள். அந்தக் கொள்கை என்ன? மனசாட்சியை பலவந்தம் செய்வதும், சுதந்திரமான விசாரணையைத் தடுப்பதும் ரோமின் உரிமையாக இருந்தது. ஆனால் அவர்களும் அவர்களுக்குக் கீழிருந்த புரொட்டஸ்டண்டுகளும் மதச்சுதந்திரத்தை அனுபவிக்கக்கூடாதா? ஆம். அவர்களது ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டிருந்ததுபோல், சலுகையாக அனுபவிக்கலாம், உரிமையாக அல்ல. அந்த ஏற்பாட்டிற்கு வெளியில் இருந்த அனைத்தையும் ஆளுகைசெய்யவேண்டும் என்பதுதான் அதிகாரத்தின் பெரும் கொள்கையாக இருந்தது. மனசாட்சிக்கு இடமில்லை. ரோம் தவறாத நீதிபதி, அதற்குக் கீழ்ப்படிந்தாகவேண்டும். முன்வைக்கப்பட்ட இந்த ஏற்பாட்டை ஒத்துக்கொள்வது, சுதந்திரம் சாக்சோனிய சீர்திருத்தவாதிகளுக்குள் மட்டும்தான் இருக்கும் என்பதைக் குற்றமற்றவிதத்தில் ஒப்புக்கொள்ளுவதாயிருக்கும். ஏனைய கிறிஸ்தவ சமூகம் முழுவதிலும் சுதந்திரமான விசாரணையும், சீர்திருத்த விசுவாசத்தை அறிக்கைசெய்தலும் குற்றமாயிருந்து நிலவறைத்தண்டனையையோ தீயையோ ஏற்றுக்கொள்ள வேண்டும். மதச்சுதந்திரத்தைச் சுருங்கச்செய்வதை அவர்களால் ஒப்புக்கொள்ள முடியுமா? சீர்திருத்தம் அதன் கடைசி மதமாற்றத்தை செய்துவிட்டது என்று அறிவிப்பது, அது அதன் கடைசி எல்லையைத் தொட்டுவிட்டது என்றாகாதா? இந்த நேரத்தில் ரோம் எங்கெல்லாம் ஆட்சிசெய்ததோ, அங்கெல்லாம் அதன் நிரந்தர ஆட்சி தொடராதா? போப்புமார்க்க நாடுகளில் நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் உயிர்விட்டவர்களின் இரத்தம்பற்றி நாங்கள் குற்றமற்றவர்கள் என்று சீர்திருத்தவாதிகள் பரிந்துபேசியிருக்க முடியுமா? சுவிசேஷத்தின் நோக்கத்தையும் கிறிஸ்தவத்தின் சுதந்திரங்களையும் மிகமேலான அந்த நேரத்தில் காட்டிக்கொடுக்கும் செயலாக அது இருந்திருக்கும். —Wylie, b. 9, ch. 15. அதைவிட, அவர்கள் தங்களது ஆளுகைகளையும் பட்டங்களையும் சொந்த உயிர்களையும் தியாகம்செய்வார்கள்.—D'Aubigne, b. 13, ch. 5. (11)

"இந்தக் கட்டளையை நாம் நிராகரிப்போம். மனசாட்சி சம்மந்தப்பட்ட விஷயங்களில் பெரும்பான்மைக்கு வல்லமை கிடையாது" என்று இளவரசர்கள் கூறினார்கள். தான் அனுபவித்துவரும் சமாதானத்திற்குக் காரணமான சகிப்புத்தன்மை கட்டளைக்கு ஜெர்மனி கடமைப்பட்டுள்ளதாக இருக்கிறது. இந்தச் சட்டத்தை நீக்குவது பேரரசைத் தெல்லைகளுக்கும் பிரிவினைகளுக்கும் உள்ளாக்கும் என்று பிரதிநிதிகள் அறிவித்தனர்.—Ibid., b. 13, ch. 5. "மதச்சுதந்திரத்திற்கு அப்பாற்பட்டவைகளைச் செய்வதற்காக ஒரு ஆலோசனைக்குழு கூடும்வரை எதையும் செய்வதற்குப் பிரதிநிதிகளின்

சபைக்குத் தகுதி இல்லை" என்று அவர்கள் கூறினார்கள். மனசாட்சியின் சுநந்திரத்தைக் காப்பது மாநிலத்தின் கடமையாகும். இதுதான் மதசம்மந்தமான காரியங்களில் அதற்குள்ள அதிகாரத்தின் எல்லையுமாகும். மதச் சார்பற்ற ஒவ்வொரு அரசும் சமூக அதிகாரத்தின்மூலமாக, சமய நெறிகளை ஒழுங்குபடுத்தவும், வற்புறுத்தவும் முயலும்போது, அது சுவிசேஷக் கிறிஸ்தவர்கள் எவைகளுக்காக மேன்மையாகப் போராடினார்களோ, அந்தக் கொள்கையைத் தியாகம்செய்வதாக இருக்கும் (12)

போப்புமார்க்கவாதிகள் எவைகளைத் துணிவான பிடிவாதம் என்றார்களோ, அவைகளை அடக்கியாளத் தீர்மானம் செய்தனர். சீர்திருத்தத்தின் ஆதரவாளர்களுக்கிடையில் பிரிவினை உண்டாக்க அவர்கள் முயன்று, அதன் ஆதரவைப் பகிரங்கமாக அறிக்கைசெய்யாதவர்களை அச்சுறுத்த முயன்றனர். சுதந்திரமாக இருந்த நகரங்களின் பிரதிநிதிகளை இறுதியில் சபையின் முன்பாக அழைத்து, உறுதிப்படுத்தப்பட்டநிபந்தனை களுக்கு அவர்கள் இணங்குவார்கள் என்று அறிவிக்கும்படிக் கட்டாயப்படுத்தப் பட்டனர். அவகாசத்திற்காக அவர்கள் வீணாக மன்றாடினார்கள். சோதிக்கப்படும்படி கொண்டுவரப்பட்டபோது, ஏறத்தாழ பாதிப்பேர்தான் சீர்திருத்தத்தின் அணியில் நின்றிருந்தனர். மனசாட்சியின் சுதந்திரத்தையும், நியாயம்தீர்க்கின்ற தனிப்பட்டவர்களின் உரிமையையும் இவ்வாறாகத் தியாகம்செய்ய மறுப்பவர்களின் நிலைமை, எதிர்கால விமர்சனத்திற்கும், பழிக்கும், உபத்திரவத்திற்கும் ஆளாகும் என்பதை அவர்கள் நன்குஅறிந்திருந் தனர். நாம் தேவனுடைய வார்த்தையை மறுதலிக்க வேண்டும் அல்லது எரிக்கப்பட வேண்டும் என்று ஒரு பிரதிநிதி கூறினார்.—Ibid., b.13, ch.5. (13)

பிரதிநிதிகளின் சபையில் பேரரசனின் பிரதிநிதியாயிருந்த பெர்டினண்ட் என்ற அரசன், இளவரசர்கள் இந்தக் கட்டளையை ஏற்றுக்கொண்டு அதைத் தாங்கும்படி கவரப்படாவிட்டால், அது அபாயகரமான பிரிவினைகளை உண்டாக்கும் என்பதைக் கண்டார். எனவே, இப்படிப்பட்ட மனிதர்களைப் பலவந்தம்செய்தல் என்பது அவர்களை அதிகப் பிடிவாதமுள்ளவர்களாக்கிவிடும் என்பதை நன்கு அறிந்து, அவர்களை இணங்கச்செய்யும் தந்திரத்தைக் கையாண்டார். இந்தச் செயல் பேரரசனை மிகவும் மகிழ்ச்சியடையச்செய்யுமென்று அவர்களுக்கு நிச்சயம் கொடுத்து, அந்தக் கட்டளையை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களைக் கெஞ்சினார். ஆனால் விசுவாசமிக்க இந்த மனிதர்கள், பூமியின் அதிபதிகளைவிட மேலான அதிகார முள்ளவரை அறிக்கைசெய்து, சமாதானத்தை நிலைநாட்டவும் தேவனை மேன்மைப்படுத்தவுங்கூடிய ஒவ்வொரு காரியத்திலும் நாங்கள் பேரரசனுக்குக் கீழ்ப்படிவோம் என்றார்கள்.—Ibid., b. 13, ch. 5. (14)

இறுதியாக, அந்த அரசன் பிரதிநிதிகளின் சபையின்முன் அரசாங்கச் சட்டமாக வெளியிடப்பட்டுள்ள அந்தக் கட்டளையை அறிவித்து, தேர்தல் அதிகாரிக்கும் அவரது நண்பர்களுக்கும் உள்ள ஒரே வழி பெரும்பான்மைக்குக் கீழ்ப்படிவதுதான் என்றார். இவ்வாறாகப்பேசியபின், சீர்திருத்தவாதிகளின் நிதானமான யோசனை மிக்க பதிலுக்கு வாய்ப்புக் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் பிரதிநிதிகளின் சபையிலிருந்து வெளியேறிச் சென்றுவிட்டார். அவரைத் திரும்பிவரும்படி அவர்கள் வீணாகக் கெஞ்சினார்கள். அவர்களது காரணங்களுடனுள்ள ஆட்சேபனைக்கு இது தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒரு காரியம். பணிதல் மட்டும்தான் மீதியாக இருக்கிறது என்று மட்டும் அவர் பதில் கூறினார்.—Ibid., b. 13, ch. 5. (15)

கிறிஸ்தவ இளவரசர்கள் மனிதக் கோட்பாடுகளையும் சட்டங் களையும்விட, பரிசுத்த வேதவாக்கியங்கள் உயர்ந்தவையென்று அவைகளைப் பற்றிக்கொள்ளுவார்களென்று ஆளும்கட்சியினர் உணர்ந்திருந்தனர். மேலும் எங்கெல்லாம் இக்கொள்கை ஏற்கப் படுமோ அங்கெல்லாம் காலப்போக்கில் போப்புமார்க்கம் தூக்கியெறியப் படும் என்பதையும் அறிந்திருந்தனர். ஆனால் அவர்களது காலத்திலிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் காணப்படுகிறவைகளை மட்டும் நோக்கிப்பார்த்து, பேரரசன், போப்பு ஆகியோரின் நோக்கம் வலுவுள்ளதாகவும், சீர்திருத்தவாதிகள் பலவீனர்களாகவும் இருப்பதாக, தங்களுக்குள் தற்புகழ்ச்சியாகப் பேசிக்கொண்டனர். போப்புமார்க்கத்தினர் நினைத்திருந்ததைப்போல், சீர்திருத்தவாதிகள் மனித உதவியைச் சார்ந்தவர்களாக இருந்திருந்தார்களானால் அவர்களும் போப்புமார்க்கவாதிகள் நினைத்ததைப்போல வல்லமையற்றவர்களாக இருந்திருப்பார்கள். அவர்கள் எண்ணிக்கையில் பலவீனர்களாயிருந்தாலும், ரோமநிர்வாகத்துடன் கருத்துவேறுபாடு உள்ளவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு அவர்களது பலம் இருந்தது. பிரதிநிதிகள் சபையின் முடிவிலிருந்து வேதவாக்கியங்களின் சத்தியத்தினிடத்திற்கும், ஜெர்மன் நாட்டின் பேரரசனிடமிருந்து, பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் அரசராயிருக்கிறவரிடத்திற்கும் முறையிட்டார்கள்.—Ibid., b. 13, ch. 6. (16)

இளவரசர்களின் மனசாட்சியில் உண்டான உணர்வுகளை அங்கீகரிக்க பெர்டினாண்ட் மறுத்துவிட்டதினால், இளவரசர்கள் அவர் சபையில் இல்லாமல்போனதைப்பற்றிக் கருதாமல், தங்களது எதிர்ப்பைத் தேசிய சபையின் முன் உடனடியாக வைக்க முடிவுசெய்தனர். எனவே பக்திவிநயமான முறையில் ஒரு அறிக்கை வரையப்பட்டு அதில்: “எங்களது ஒரே சிருஷ்டிகரும் பாதுகாப்பவரும் மீட்பரும் இரட்சகரும், ஒருநாள் எங்களது நீதிபதியாக இருக்கக்கூடியவருமான தேவனுக்கு முன்பாகவும்,

அதேபோல அனைத்து மனிதர்கள் சிருஷ்டிகளுக்கு முன்பாகவும், நாங்கள், எங்களுக்காகவும் எங்களுடைய மக்களுக்காகவும், தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும், எந்தவிதத்திலும் எங்களுடைய சரியான மனசாட்சிக்கும், அல்லது எங்களது ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்கும் எதிராக முன்மொழியப்பட்டிருக்கும் கட்டளைக்கு சம்மதிக்கவும் மாட்டோம் அதைப்பற்றிக்கொள்ளவும் மாட்டோம்.” (17),(18)

“சர்வவல்லமை உள்ள தேவன் மனிதனை அவனது அறிவுக்கு அழைக்கும்போது, அவன் அந்த தெய்வீக அறிவைத் தழுவத் துணியக்கூடாது என்று எங்களால் உறுதிகூறமுடியாது. தேவனுடைய வார்த்தைகளுக்கு இசைவாக இருப்பதை அல்லாமல் வேறு மெய்யான கோட்பாடு கிடையாது. வேறுவிதமான எந்த விசுவாசத்தைப்பற்றிய போதனையையும் கர்த்தர் தடுக்கிறார். ஒரு வசனம் மற்றொரு வசனத்தால் விளக்கப்படுகிற, தெளிவான, புரிந்துகொள்ள எளிமையான, ஒளியடைவதற்கேதுவாக பற்றிக்கொள்ளக்கூடிய பரிசுத்த வேதவசனங்கள் எல்லாக் காரியங்களிலும் கிறஸ்தவனுக்கு அவசியம். எனவே தெய்வீகக் கிருபையினால், தேவனுடைய வார்த்தை ஒன்றைமட்டும் அது பழைய புதிய ஏற்பாடுகளில் அடங்கியுள்ளபடி அதனுடன் எதையும் கூட்டாமல், பிரசங்கிப்பதை நடைமுறைப்படுத்த நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். இந்த வார்த்தை ஒன்றுமட்டும்தான் சத்தியம். சகலவிதமான கோட்பாடுகளுக்கும் வாழ்க்கைக்கும் நிச்சயமான சட்டம். ஒருபோதும் தோல்வி அடையாதது அல்லது எங்களை வஞ்சிக்காதது. இந்த அஸ்திவாரத்தின்மீது கட்டுகிற எவனும் நரகத்தின் சகலவித வல்லமைகளுக்கும் எதிராக நிற்பான். அதற்கு எதிராக ஏற்படுத்தப்படும் சகலவிதமான மாயைகளும் தேவனுடைய முகத்துக்குமுன் விழுந்துவிடும்.” (19)

“ஆகையால், எங்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த நுகத்தை நங்கள் நிராகரிக்கிறோம்.” “அதே சமயத்தில், மாட்சிமை தங்கிய அரசர் எல்லாவற்றிற்கும் மேலாக, தேவனை நேசிக்கும் ஒரு கிறிஸ்தவ இளவரசனைப் போல் எங்களிடம் நடந்து கொள்ளுவார் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கிறோம். நாங்கள் அவருக்கும் அதைப்போலவே கிருபைமிக்க பிரபுக்களாயிருக்கின்ற உங்களனைவருக்கும் செலுத்தப்படவேண்டிய சட்டப்படியான எங்களது சகலவிதமான அன்பையும் கீழ்ப்படிதலையும் செலுத்துவோம்” என்று எழுதப்பட்டிருந்தது.—Ibid., b. 13, ch. 6. (20)

பிரதிநிதிகளின் சபையின்மீது ஆழ்ந்த உணர்த்துதல் உண்டானது. மறுப்பாளர்களின் தைரியத்தை அறிந்து, பெரும்பான்மையினர் வியப்பாலும் அபாய எச்சரிப்பாலும் நிரப்பப்பட்டனர். எதிர்காலம் புயல் மிக்கதாகவும் நிச்சய

மற்றதாகவும் அவர்களுக்குத் தோன்றியது. பிரிவினைகள்,சண்டைகள், இரத்தம்சிந்துதல் ஆகியவை தவிர்க்க முடியாதவைகளாகக் காணப் பட்டது. ஆனால் அவர்களது காரியத்தில் உள்ள நீதியைப்பற்றி நிச்சயமுடையவர் களாயிருந்த சீர்திருத்தவாதிகளோ, சர்வவல்லமையுள்ளவரின் கரத்தின்மீது சார்ந்து, முழுமையான தைரியமும் உறுதியுமுள்ளவர்களாயிருந்தனர். (21)

"இந்த போற்றப்பட்ட எதிர்ப்பின் கொள்கைகள்தான்.... புரொட்டஸ்டண்டு மார்க்கத்தில் மைய சாரம். ஆத்துமாவிற்கும் தேவனுக்கும் இடையிலுள்ள காரியங்களில் சட்டங்களை உண்டுபண்ணும் உரிமை சமூக அதிபதிகளுக்கில்லை என்று இந்த எதிர்ப்பாளர்கள் மறுத்து, மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட, நாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று, தீர்க்கதரிசிகளுடனும் அப்போஸ்தலர்களுடனும் சேர்ந்து அறிவித்தனர். சகலவிதமான மனிதப் போதனைகளும், ஒருபோதும் தவறாத தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்பபடிவதாக இருக்க வேண்டும்" என்பதை அது முன்வைத்தது.—Ibid., b. 13, ch. 6. மனிதனின் மேலாண்மை என்னும் நுகத்தை மறுப்பாளர்கள் தூக்கி எறிந்தனர். சபையில் கிறிஸ்துவை மேலானவராக உயர்த்தினர். மனசாட்சியின் வல்லமையை நாட்டின் வல்லமையைவிட மேலானதாகவும், தேவனுடைய வார்த்தையைக் காணக்கூடிய சபைக்கும் மேலானதாகவும் வைத்தது. போப்புவின் மூன்றடுக்குக் கிரீடத்தையும் அரசனின் கிரீடத்தையும்விட, இயேசுவின் கிரீடம் உயர்த்தப்பட்டது. சத்தியத்தைப்பற்றிய அறிவுறுத்துதலை தாராளமாகக்கூறும் தங்களது உரிமையை மறுப்பாளர்கள் மேலும் உறுதிப்படுத்தினர். அவர்கள் தேவனுடைய வார்த்தையை நம்பவதும் கீழ்ப்படிவதும் மட்டுமன்றி தேவனுடைய வார்த்தை எவைகளைக் காட்டுகிறதோ அவைகளைப் போதிப்போம் என்றும் அறிவித்து, குருமார்களும் நீதிபதிகளும் இதில் குறிக்கிடுகின்ற உரிமையை மறுத்தனர். ஸ்பைர்சில் உண்டான மறுப்பானது மதச்சகிப்புத்தன்மையின்மைக்கும், எல்லா மனிதர்களும் தங்களது மனசாட்சி கூறுகின்றபடி தேவனைத் தொழுதுகொள்ளும் உரிமையை மறுப்பதற்கும் எதிரான பக்திவிநயமான சாட்சியாக இருந்தது. (22)

அந்த அறிக்கை வெளியிடப்பட்டாகிவிட்டது. ஆயிரக்கணக்கானவர் களின் ஞாபகத்தில் அது எழுதப்பட்டு, மனித முயற்சிகளினால் அழிக்க முடியாதவிதத்தில் பரலோகப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டது. சுவிசேஷ ஜெர்மனி முழுவதும், தனது விசுவாசத்தின் அறிக்கையாக இந்த மறுப்பை ஏற்றுக்கொண்டது. இந்த அறிவிப்பில் ஒரு நல்லகாலத்தின் நிச்சயத்தை ஒவ்வொரு மனிதனும் கண்டான். "பக்தியுடனும் தாராளமாகவும் பயமில்லாமலும் அறிக்கை செய்யும் கிருபையை உங்களுக்குத்தந்த

சர்வவல்லமையுள்ள தேவன் நித்தியத்தின் நாள்வரை உங்களை அந்தக் கிறிஸ்தவ உறுதியில் பாதுகாப்பாராக" என்று இளவரசர்களில் ஒருவர் ஸ்பைர்சில் இருந்த ஒரு புரொட்டஸ்டாண்டு விசுவாசியிடம் கூறினார். (23)

சீர்திருத்தம் வெற்றியின் ஒரு நிலையை அடைந்தபின், உலகத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளுவதற்காக வளைந்து கொடுத்திருந்தால், தேவனுக்கும் தனக்கும் உண்மையற்றதாக இருந்து, இவ்வாறாக அதன் சொந்த அழிவை அதுதானே காப்பீடு செய்திருந்திருக்கும். மேன்மைமிக்க இந்த சீர்திருத்தவாதிகளின் அனுபவத்தில் பின்வரும் காலங்களிலுள்ள தலைமுறையினருக்கு ஒரு பாடம் இருக்கிறது. தேவனுக்கும் அவரது வார்த்தைக்கும் எதிராக சாத்தான் நடந்துகொள்ளும் விதத்தில் எந்த மாறுதலும் உண்டாகவில்லை. தேவனுடைய வார்த்தை வாழ்க்கையின் வழிகாட்டியாக பதினாறாம் நூற்றாண்டில் இருந்தபோது, அதை எப்படி அவன் எதிர்த்தானோ அப்படிப்போலவே இன்றும் அவன் எதிர்க்கிறான். நமது காலத்தில் அவர்களது கோட்பாடுகளிலும் கற்பனைகளிலுமிருந்து அகலமான பிரிவினை ஏற்பட்டிருக்கிறது. விசுவாசத்திற்கும் கடமைகளுக்கும் வேதாகமம்! வேதாகமம் ஒன்று மட்டுமே சட்டமாக இருக்கிறது என்ற பெரும் புரொட்டஸ்டண்ட் கொள்கைகளுக்கு வரவேண்டிய ஒரு அவசியம் உள்ளது. மதச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி, அதை அழிப்பதற்கு ஒவ்வொரு உபாயத்தின் மூலமாகவும் சாத்தான் இன்றும் செயலாற்றிக் கொண்டிருக்கிறான். ஸ்பைர்ஸ் நகரப் புரொட்டஸ்டாண்டுகள் நிராகரித்த அந்திக்கிறிஸ்துவின் வல்லமையானது, அதன் மேலாண்மையை நிலைநாட்ட இப்போதும் புதிய சக்தியுடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. சீர்திருத்தத்தின்போது காட்டப்பட்ட வளைந்துகொடுக்காமல் தேவனுடைய வார்த்தையை மட்டும் சார்ந்திருந்த அதே தன்மை ஒன்றுமட்டுந்தான் இன்றைய சீர்திருத்தத்தின் நம்பிக்கையாக உள்ளது. (24)

புரொட்டஸ்டாண்டுகளுக்கு ஆபத்து ஏற்படும் அடையாளங்கள் தோன்றின. விசுவாசமுள்ளவர்களைக் காக்கும்வண்ணம் தெய்வீகக்கரம் நீட்டப்பட்டதன் அடையாளங்களும் இருந்தன. இப்படிப்பட்ட நேரத்தில்தான் மெலாங்தன் ஸ்பைர்ஸ் நகரத் தெருக்களின் வழியாகச் சென்று, தனது நண்பரான சைமன் கிரிநெயஸ் என்பவரை தாமதமின்றி ரைன் நதியைக் கடந்துசெல்லும்படி அவசரப்படுத்தினார். இப்படி அவசரமாக ஓடிப்போகவேண்டியதன் காரணம் என்ன? என்று கிரிநேயஸ் ஆச்சரியத்துடன் அறிய விரும்பினார். "எனக்கு அறிமுகமில்லாத வயது முதிர்ந்த பக்தி விநயமான ஒரு மனிதர் என்முன் தோன்றி 'கிரிநேயஸ் அவர்களைக் கைதுசெய்யும்படி, பெர்டினாண்டினால் நீதிமன்றத்தின் அதிகாரிகள் சிலநிமிடங்களில் அனுப்பப்படுவார்கள்' என்று

கூறினார்" என்றார். ரைன் நதியின் நீர் அவரது நண்பரையும் அவரது உயிரை வாங்கத் தேடின எதிரிகளையும் பிரிக்கும்வரை, மெலாங்தன் அந்த நதிக்கரையில் காத்துநின்றார். கிரிநேயஸ் ரைன் நதியின் அக்கரையில் கடந்துசென்றதைக் கண்டபின்னர்: "குற்றமற்றவரின் இரத்தத்தின்மீது தாகம் கொண்டிருந்தவர்களின் கொடுமைமிக்கத் தாடைகளுக்கிடையிலிருந்து அவர் கிழித்தெடுக்கப்பட்டிருக்கிறார்" என்றார். (25)

அந்நாளில் போப்புமார்க்கத்தின் முன்னனி முனைவர் ∴பேபர், தனது பிரசங்கத்தில் கிரிநேயஸ்மீது பொய்ப் பழி சாற்றியிருந்தார். பிரசங்கமுடிவில் "குறிப்பிட்ட வெறுக்கத்தக்க தவறுகளை" சரி என்று கிரிநேயஸ் சாதித்ததால் அவர் ஆட்சேபித்தார். தனது கோபத்தை மறைத்துவைத்திருந்த ∴பேபர் உடனே அரசனிடம் சென்று, அந்த மறுப்பாளரைக் கைது செய்யும் அதிகாரத்தைப் பெற்றார். கர்த்தர் தனது நண்பரைக் காக்கும்படி ஒரு பரிசுத்த தேவதூதனை அனுப்பினார் என்று மெலாங்தன் நம்பினார். (26)

"கிரிநேயஸை உபத்திரவப்படுத்துகிறவர்களிடமிருந்து ஓடையின் தண்ணீர்கள் தப்புவிக்கும்வரை, ரைன் நதியின் கரைகளில் மெலாங்தன் அசைவின்றி காத்திருந்தார். 'குற்றமற்ற இரத்தத்தின்மீது தாகமுடைய கொடிய பற்களுக்கிடையிலிருந்து கடைசியாக அவர் கிழித்தெடுக்கப்பட்டார்' என்று கிரிநேயஸை அக்கரையில் பார்த்தவுடன் மெலாங்தன் கூறினார். அவர் வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்றபின் கிரிநேயஸைத் தேடிய அதிகாரிகள், அவரது வீடு முழுவதையும் மேலிருந்து கீழ்வரை தேடினார்களென்று அவர் வீட்டிற்குத் திரும்பியபின் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது."—Ibid., b. 13, ch. 6. (27)

பூமியின்மேல் வல்லமைமிக்கவர்களுக்குமுன் சீர்திருத்தம் பெரும் முக்கியத்துவம் மிகுந்ததாகக் கொண்டுவரப்பட வேண்டியதாக இருந்தது. பெர்டினாண்டு அரசன் சுவிசேஷ இளவரசர்களின் நீதிமன்ற முறையீட்டைக் கேட்க மறுத்துவிட்டான். ஆனால் தங்களது காரியத்தை பேரரசன், சபை மற்றும் நாட்டுத் தலைவர்கள் கூடியுள்ள மாபெரும் மன்றத்தின் முன் வைக்க அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. பேரரசு முழுவதிலும் உண்டாயிருந்த பிரிவினையை அமைதிப்படுத்துவதற்காக ஐந்தாம் சார்லஸ், ஸ்பைர்ஸ் நகரிலுண்டான மறுப்புக்கு அடுத்தவருடம் ஆக்ஸ்பர்க் நகரில் ஒரு பிரதிநிதிகளின் சபையைக்கூட்டி, அதற்குத் தலைமைதாங்கும் தனது விருப்பத்தை அறிவித்திருந்தான். இந்த இடத்திற்கு வரும்படியாக புரொட்டஸ்டாண்டு தலைவர்கள் அழைக்கப்பட்டார்கள். (28)

பெரும் ஆபத்துக்கள் சீர்திருத்தத்தை பயமுறுத்தின. ஆனால் அதன் பரிந்துரையாளர்கள், தங்களது காரியத்தில் தேவன்மீது

நம்பிக்கைவைத்து, சுவிசேஷத்திற்காக உறுதியாக நிற்போமென்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். சாக்சோனியத் தேர்தல் அதிகாரியை அவரது ஆலோசகர்கள், பிரதிநிதிகளின் சபைக்குச் செல்லவேண்டாம் என்று வற்புறுத்தினர். இளவரசர்களை ஒரு கண்ணியில் பிடிக்கவேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் பிரதிநிதிகளின் குழுவின் முன்பாகத் தோன்ற வேண்டும் என்று பேரரசர் வலியுறுத்தியிருக்கிறார் என்று அவர்கள் கூறினார்கள். “ஒரு நகரின் சுவருக்குள் வல்லமையான எதிரியுடன் ஒன்றாக அடைக்கப்படுவது எல்லாவற்றையும் ஆபத்துக்குள்ளாக்குவதாக இருக்காதா?” என்றார்கள். அதற்கு மற்றவர்கள்: “இளவரசர்கள் தங்களை மட்டும் தைரியப்படுத்திக்கொள்ளட்டும். தேவனுடைய காரியம் காக்கப்படும்” என்று பெருமிதமாக அறிவித்தனர். “நமது தேவன் உண்மையுள்ளவர். அவர் நம்மைக் கைவிடமாட்டார்” என்று லுத்தர் கூறினார்.—Ibid., b. 14, ch. 2. தேர்தல் அதிகாரி அவரது பரிவாரங்களுடன் ஆக்ஸ்பர்க் நகருக்குப் புறப்பட்டார். அவரைப் பயமுறுத்தியிருந்த ஆபத்தை அனைவரும் அறிந்து, துக்கம் நிறைந்த முகத்துடனும் துயரம்மிக்க இதயங்களுடனும் புறப்பட்டுச் சென்றனர். ஆனால் கோபர்க் என்னுமிடம்வரை அவர்களுடன் சென்ற லுத்தர் அப்பயணத்தில் அவர் எழுதின “நமது தேவன் பலத்த கோட்டையாக இருக்கிறார்” என்ற பாடலைப்பாடி, மூழ்கிக்கொண்டிருந்த அவர்களது விசுவாசத்தை உற்சாகப்படுத்தினார். எதிர்நோக்கியிருந்த துன்பத்தைப்பற்றிய அநேக கவலைகள் நீக்கப்பட்டு, பாரமாக இருந்த இருதயங்கள் அந்தப் படலினாலும் அதன் இசையினாலும் இலகுவடைந்தன. (29)

தங்கள் கருத்துக்களை ஒரு முறையான வேதவாக்கியங்களை ஆதாரமாகக்கொண்ட அறிக்கையின்வழியாக பிரதிநிதிகளின் சபையின் முன் வைக்கவேண்டும் என்று சீர்திருத்தத்தைச் சார்ந்த இளவரசர்கள் முடிவு செய்திருந்தனர். இதை ஆயத்தம் செய்யும் பொறுப்பு லுத்தர், மெலாங்தன் மற்றும் அவரது சகாக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கை, புரொட்டஸ்டாண்டுகளால் அவர்களது விசுவாசத்தின் அறிக்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த முக்கியமான சாசனத்தின்மீது தங்களது பெயர்களை எழுத அவர்கள் கூடினர். அது பக்திவிநயமான சோதனைமிக்க நேரமாக இருந்தது. அவர்களது நோக்கத்தில் அரசியல் கேள்விகளோடு குழும்பிவிடக்கூடாது என்பதை அவர்கள் வரவேற்றிருந்தனர். தேவனுடைய வார்த்தையிலிருந்து புறப்படும் ஒரு செல்வாக்கு அல்லாமல், வேறெதையும் சீர்திருத்தம் செயல்படுத்தக்கூடாது என்று அவர்கள் உணர்ந்திருந்தனர். (30)

கிறிஸ்தவ இளவரசர்கள் அந்த அறிக்கையில் கையெழுத்திட முன்வந்தபோது, மெலாங்தன் குறுக்கிட்டு, “இறையியல் வல்லுநர்களும் ஊழியக்காரர்களும்தான் இதைச் செய்யவேண்டும், பூமியின் வல்லமைமிக்க

அதிகாரிகள் வேறு காரியங்களுக்காகத் தனித்து வைக்கப்பட்டுள்ளனர்" என்றார். "என்னைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்கிறதை தேவன் தடுப்பாராக. எனது கிரீடத்தைப்பற்றி நான் கவலைப்படாமல், எனது கடமையைச் செய்ய நான் தீர்மானித் திருக்கிறேன். ஆண்டவரை அறிக்கை செய்ய நான் விரும்புகிறேன். எனது அரச உடைகளும் கிரீடமும் இயேசு கிறிஸ்துவின் சிலுவையைவிட எனக்கு விலைமதிப்புள்ளவைகளல்ல" என்று ஜான் சாக்சோனி பதில் சொல்லி, தனது பெயரை அந்தக் கடிதத்தில் எழுதினார். வேறொரு இளவரசர் தனது எழுதுகோலை எடுத்தபோது "எனது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேன்மைக்கு அது அவசியமானால், எனது பொருட்களையும் உயிரையும் புறம்பாக விட்டுவிட நான் ஆயத்தமாக இருக்கிறேன். இந்த அறிக்கையில் அடங்கி உள்ளதைவிட வேறெந்தக் கோட்பாட்டையும் ஏற்றுக்கொள்ளுவதைவிட, எனது மக்கள் எனது நாடு ஆகிய அனைத்தையும் மறுத்து, கையில் எனது கோலைப் பிடித்துக்கொண்டு எனது தந்தையின் நாட்டைவிட்டு வெளியேறுவேன்" என்று தொடர்ந்தார்.—Ibid., b. 14, ch. 6. அந்த தேவனுடைய மனிதர்களின் விசுவாசமும் துணிவும் அப்படிப்பட்டதாக இருந்தது! (31)

பேரரசனின் முன்பாக நிற்கும் நேரம் வந்தது. தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாலும் இளவரசர்களாலும் சூழப்பட்டு, அரியணையில் அமர்ந்த ஐந்தாம் சார்லஸ் பேரரசன், புரொட்டஸ்டாண்டு சீர்திருத்தவாதிகளைப் பேசும்படி அழைத்தார். அவர்களது விசுவாச அறிக்கை வாசிக்கப்பட்டது அந்த அரச மேன்மைமிக்க மன்றத்தில் சுவிசேஷத்தின் சத்தியங்கள் மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டு, போப்புமார்க்க சபையின் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டன. "சீர்திருத்தத்தின் மிகப்பெருநாள், கிறிஸ்தவம், உலகம் ஆகியவைகளின் வரலாற்றில், மகிமைமிக்க நாட்களில் ஒன்று" என்று அது நன்கு அறிவிக்கப்பட்டது.—Ibid., b. 14, ch. 7. (32)

விட்டன்பர்க் சந்நியாசி (லுத்தர்) வோம்ஸ் நகரில் அந்த தேசிய ஆலோசனைக் குழுவின்முன் தன்னந்தனியாக நின்று சில வருடங்கள் கழிந்திருந்தன. இப்பொழுது அவர் நின்றிருந்த இடத்தில், அந்தப் பேரரசின் மிக மேன்மை தங்கியவர்கள், வல்லமையுள்ள இளவரசர்கள் நின்றிருந்தனர். ஆக்ஸ்பர்க்-ல் தோன்றுவதற்கு, லுத்தர் தடைசெய்யப்பட்டிருந்தார். ஆனால் அவரது வார்த்தையினாலும், ஜெபங்களினாலும் அவர் அங்கு இருந்தார். "மிகத் தெளிவாக அறிக்கை செய்யக்கூடியவர்களால் இவ்வளவு மகிமைமிக்க மன்றத்தில் பகிரங்கமாக கிறிஸ்து உயர்த்தப்பட்ட இந்த நேரம்வரை நான் வாழ்ந்திருப்பதற்காக பூரிப்படைகிறேன்" என்று அவர் எழுதினார்.—Ibid., b. 14, ch. 7. "உம்முடைய சாட்சியை நான் இராஜாக்களுக்கு முன்பாக

அறிவிப்பேன்” (சங்கீதம் 119:46) என்று வேதவாக்கியம் கூறிய தீர்க்கதரிசனம் இங்கு நிறைவேறியது. (33)

பவுலின் நாட்களில் எதற்காக அவர் சிறையில் அடைக்கப்பட்டாரோ, அந்த சுவிசேஷம் ரோம் நகரத்திலிருந்த இளவரசர்களுக்கும் மேன்மக்களுக்கும் முன்பாக இவ்விதமாக கொண்டுவரப்பட்டது. “இந்தச் சந்தர்ப்பத்தில் பிரசங்கபீடத்திலிருந்து பிரசங்கிக்கக்கூடாது என்று பேரரசன் எவைகளைத் தடைசெய்திருந்தானோ, அவைகள் அரண்மனையில் அறிவிக்கப்பட்டன. வேலைக்காரர்கள் கேட்பதற்குக்கூடத் தகுதியற்ற கருத்துக்கள் என்று அநேகர் கருதியிருந்த அது, பேரரசில் இருந்த எஜமானர்களாலும் பிரபுக் களாலும் வியப்புடன் கேட்கப்பட்டது, முடிசூடிய இளவரசர்கள் பிரசங்கித்த அந்தப் பிரசங்கம் ராஜரீக சத்தியம்பற்றியதாயிருக்க, அவர்களும் பெரிய மனிதர்களும் செவிமடுத்தனர். அப்போஸ்தலர்களுடைய காலத்திலிருந்து அன்றுவரை, மிக உயர்வான விதத்தில் இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணின அப்படிப்பட்ட ஒரு பெரும்பணி ஒருபோதும் இருந்ததில்லை” என்று ஒரு எழுத்தாளர் கூறினார்.—Ibid., b. 14, ch. 7. (34)

“லுத்தரன்கள் கூறியது அனைத்தும் உண்மை. அவைகளை நம்மால் மறுக்க இயலாது” என்று ஒரு போப்புமார்க்கப் பேராயர் அறிவித்தார். “தேர்தல் அதிகாரியினாலும் அவரது அணியைச் சோர்ந்தவர்களாலும் தரப்பட்ட அறிக்கையை உங்களது பலத்த நியாயத்தினால் மறுக்க முடியுமா?” என்று டாக்டர் ஈக் அவர்களைப் பார்த்து வேறொருவர் கேட்டார். “அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளின் சபைக் குழுக்களும் எழுதியுள்ளவை களிலிருந்து எடுத்து பதில் கூறமுடியும்” என்பது பதிலாக இருந்தது. “அப்படி யானால், லுத்தரன்கள் வேதவாக்கியங்களில் மூழ்கி எழுந்தவர்களாக உள்ளனர். நாம் அதற்கு வெளியில் மட்டும்தான் இருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ளுகிறேன்” என்று கேள்விகேட்டவரே பதில் கூறினார். —Ibid., b. 14, ch. 8. (35)

ஜெர்மன் இளவரசர்களில் சிலர் சீர்திருத்த விசுவாசத்திற்கு ஆதாயப்படுத்தப்பட்டனர். புரொட்டஸ்டாண்டுகளின் அறிக்கை சத்தியமாக இருக்கின்றன என்று பேரரசர் தானும் அறிக்கைசெய்தார். அந்த அறிக்கை அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, ஐரோப்பா எங்கும் பரப்பப்பட்டது. பின்பு தோன்றிய தலைமுறைகளில் இலட்சக்கணக்கானவர்களால் தங்கள் விசுவாசத்தின் அறிக்கையாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. (36)

விசுவாசமிக்க தேவனுடைய வேலைக்காரர்கள் தனியாக உழைக்க வில்லை. துரைத்தனங்களும், வல்லமைகளும், உயர்ந்த இடத்திலுள்ள தீய ஆவிகளும், அதற்கெதிராக அணிவகுத்தபோது, கர்த்தர் அவருடைய

மக்களைக் கைவிட்டுவிடவில்லை. அவர்களது கண்கள் திறக்கப்பட்டிருந் திருக்கக்கூடுமானால், பழைய காலத்தில் இருந்த தீர்க்கதரிசிக்கு, தெய்வீகப் பிரசன்னம் அருளப்பட்டது போன்ற காட்சியை அவர்களால் இப்போதும் கண்டிருந்திருக்க முடியும். எலிசாவின் வேலைக்காரன் தனது எஜமானுக்கு, பொல்லாங்குமிக்க சேனை அவர்களைச் சூழ்ந்து, அவர்கள் தப்பிக்கக்கூடிய எல்லா வாய்ப்புக்களையும் அடைத்துப்போட்டதை சுட்டிக்காட்டியபோது, எலிசா விண்ணப்பம்பண்ணி: "கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" (2 இராஜா. 6:17) என்றார். உடனே கர்த்தர் அந்த வேலைக்காரனின் கண்களைத் திறந்தார். இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். அதைப்போலவே, சீர்திருத்தப்பணியில் இருந்த ஊழியக்காரர்களை தேவதூதர்கள் பாதுகாத்தனர். (37)

சீர்திருத்தத்திற்கு ஆதரவாக சமயச் சார்பற்ற வல்லமைகளின் ஆதரவைத்தேடக்கூடாது என்பது லூத்தர் மிகமிக உறுதியாக நடைமுறைப் படுத்தியிருந்த கொள்கைகளில் ஒன்றாக இருந்தது. அதற்குப் பாதுகாப்பாக ஆயுத உதவியையும் கேட்கக்கூடாது என்று இருந்தது. பேரரசில் இருந்த இளவரசர்களால் சுவிசேஷம் அறிக்கை செய்யப்பட்டதில் லூத்தர் மகிழ்ந்தார். ஆனால் அவர்கள் ஒரு தற்காப்புச் சேனையாகத் திரளவேண்டுமென்று உத்தேசித்தபோது, சுவிசேஷத்தின் கோட்பாடு தேவனால் மட்டுமே காக்கப்படவேண்டும் என்று அறிவித்தார். மனிதர்கள் எவ்வளவு குறைவாக இந்த வேலையில் தலையிடுகிறார்களோ, அவ்வளவு அதிகமாக அதன் சார்பாக தேவன் குறுக்கிடுவது தெரியும். அரசியல் முன்னெச்சரிக்கையாகக் கருதப்பட்டவைகள் அனைத்தும் அவரது பார்வையில் தேவையற்ற பயமும், பாவமிக்க அவநம்பிக்கையுமாக இருந்தது.—Ibid., b. 10, ch. 14. (38)

சீர்திருத்த விசுவாசத்தைக் கவிழ்க்க, வல்லமைமிக்க எதிரிகள் ஒன்றுசேரும்போது, அதற்கு எதிராக ஆயிரக்கணக்கான பட்டயங்கள் உருவப் பட்டதாக காணப்படும்போது, "சாத்தான் கொந்தளிக்கிறான். தெய்வபக்தியற்ற இளவரசர்கள் ஒருமித்து ஆலோசனை செய்கிறார்கள். யுத்தத்தால் நாம் அச்சுறுத்தப்படுகிறோம். நமது எதிரிகள் தேவஆவியினால் மேற்கொள்ளப்பட்டு சமாதானத்திற்கு இணங்கி வரும்படி தேவ சிங்காசனத்திற்கு முன்பாக விசுவாசத்துடன் ஜெபத்துடனும் போரிட மக்களுக்கு உபதேசியுங்கள். நமது அவசரத்தேவைகளில் மிக முக்கியமானது—நாம் முதன்முதலில் செய்யவேண்டியது—ஜெபம்! மக்கள் பட்டயத்தின் விளிம்பிற்கும் பேயின் கோபத்திற்கும் இந்த நேரத்தில் ஆளாகி இருப்பதை அறிந்து, அவர்கள் ஜெபம் செய்வார்களாக" என்று லூத்தர் எழுதினார்.—Ibid., b. 10, ch. 14. (39)

மறுபடியும் சில நாட்களுக்குப்பின், சீர்திருத்தவாதிகளான இளவரசர்கள் சிந்தித்த போரைப்பற்றிக் குறிப்பிட்டு, "முன்வைக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தை நமது மனசாட்சியில் ஏற்றுக்கொள்ளமுடியாது. நமது கர்த்தராகிய கிறிஸ்து போதுமான பலமிக்கவராக இருக்கிறார். ஆபத்திலிருந்து நம்மைக் காத்து, பக்தியற்ற இளவரசர்களின் நினைவுகளை ஒன்றுமில்லாமல் போகச்செய்ய வழிகளையும் முறைகளையும் கண்டுபிடிக்க அவரால் முடியும். அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய விருப்பமாக இருக்கிறோமா இல்லையா என்றும் இதைச் சத்தியமாகக் கொண்டிருக்கிறோமா இல்லையா என்றும் கிறிஸ்து நம்மைச் சோதிக்கிறார். எவ்விதமாகவும் நமது செயல்களினாலும், இரத்தம் சிந்துவதற்கும் உபத்திரவத்திற்கும் சுவிசேஷம் காரணமாக இருந்துவிடக் கூடாது. அதைவிட சுவிசேஷத்திற்காக நாம் பத்துதடவை மரிக்கலாம். அதற்குமேலும் சங்கீதக்காரன் சொல்வதைப்போல், வெட்டப்படுவதற்காகக் கொண்டுசெல்லப்படும் ஆடுகளைப்போல, நாம் கணக்கிடப்படுவோமாக. நாம் பழிவாங்கும் அல்லது தற்காப்புச்செய்யும் பணியில் ஈடுபடுவதற்குப் பதிலாக, தேவனுடைய கோபத்திற்கு இடம்கொடுப்போம். கிறிஸ்துவின் சிலுவை சுமக்கப்பட்டாகவேண்டும். மேன்மைதங்கிய நீங்கள் அஞ்சாதவர்களாக இருங்கள். நமது எதிரிகள் அவர்களது பெருமை பாராட்டுதலால் செய்வதைவிட அதிகமாக நாம் நமது ஜெபங்களால் செயலாற்றலாம். உங்களது கரங்கள் மட்டும் உங்களது சகோதரர்களின் இரத்தத்தால் கறைபடாதவைகளாக இருக்கட்டும். நாம் பேரரசனின் விசாரணைக்குச் செல்லவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டால், அங்கு தோன்ற தயாராக இருக்கிறோம். உங்களால் விசுவாசத்தைப் பாதுகாக்க இயலாது. ஒவ்வொருவரும் தனது சொந்தப் ஆபத்திலும் அபாயத்திலும் நம்பிக்கை வைக்கவேண்டும்" என்று சாக்சோனி யின் தேர்தல் அதிகாரிக்கு எழுதினார்.—Ibid., b. 14, ch. 1. (40)

மாபெரும் சீர்திருத்தத்தில் உலகை அசைத்த வல்லமை, இரகசிய ஜெபத்திலிருந்து வந்தது. கர்த்தருடைய வேலைக்காரர்கள் அங்கு அவருடைய வாக்குத்தத்தம் என்னும் கன்மலையின்மீது பரிசுத்தமான அமைதியுடன் தங்கள் பாதங்களை ஊன்றினார்கள். ஆக்ஸ்பர்கில் நிகழ்ந்த அந்தப் போராட்டத்தின்போது, தினந்தோறும் ஜெபத்தில் மூன்றுமணி நேரத்திற்குக் குறையாமல் லுத்தர் ஈடுபட்டிருக்கத் தவறவில்லை. அந்த நாளில் முக்கியமாக ஆராயப்படுவதற்கென்று எடுத்துக்கொள்ளப்பட்ட காரியங்கள் இவைதான். ஒரு நண்பனிடம் பேசுவதுபோல், அவர் தனது அறையின் தனிமைலிருந்து துதித்தல், பயம், நம்பிக்கை ஆகியவைகளுடன் தனது ஆத்துமாவை தேவனுக்கு முன்பாக ஊற்றுவது கேட்கப்பட்டது. "நீர் எங்களது பிதாவாகவும் தேவனாகவும் இருக்கிறீர் என்பதை நான் அறிந்திருக்கிறேன். நீர் உமது பிள்ளைகளை உபத்திரவப் படுத்துகிறவர்களைச் சிதறடிப்பீர்.

ஏனெனில் எங்களுடன் சேர்ந்து நீரும் ஆபத்துக்குட்பட்டிருக்கிறீர். இந்தக் காரியங்கள் அனைத்தும் உம்முடையது. உமது ஏவுதலினால்தான் நாங்கள் எங்கள் கைகளை இதில் வைத்திருக்கிறோம். அப்படியானால் ஓ! பிதாவே, எங்களைக் காத்துக்கொள்ளும்" என்று அவர் கூறினார்.—Ibid., b. 14, ch. 6. (41)

"கிறிஸ்துவினால் கிருபையும் சமாதானமும் உண்டு. இந்த உலகத்தி னால் அல்ல, கிறிஸ்துவினால் மட்டுமே என்று நான் கூறுகிறேன். ஆமென்! உங்களை எரித்துக்கொண்டிருக்கும் கவலையை நான் மிக அதிகமாக வெறுக்கிறேன். இந்த நோக்கம் அநீதியாயிருக்குமானால், அதைவிட்டொழித்து விடுங்கள். நீதியாக இருக்குமானால், பயமில்லாமல் நித்திரைசெய்யும்படி நமக்குக் கட்டளையிட்டவரின் வாக்குத்தத்தத்தை நாம் ஏன் பொய்யாக்கவேண்டும்? நீதியும் சத்தியமும் உள்ள வேலையைச் செய்வதற்கு கிறிஸ்து போதுமான வல்லமையற்றவராக இருக்கமாட்டார். அவர் உயிருடன் இருக்கிறார். அவர் ஆளுகை செய்கிறார். அப்படி யிருக்கும்போது, நாம் பயப்படவேண்டிய அவசியம் என்ன?" என்று வேதனையினாலும் பயத்தினாலும் நொறுங்கிப்போயிருந்த மெலாங்தானுக்கு அவர் எழுதினார்.—Ibid., b. 14, ch. 6. (42)

தேவன் அவரது ஊழியக்காரரின் அழுகையின் சத்தத்தைக் கேட்டார். இந்த உலகத்தின் அந்தகாரலோகாதிபதிகளுக்கு எதிராக சத்தியத்தைக் காத்துநிற்பதற்கான கிருபையையும் தைரியத்தையும் இளவரசர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் அவர் கொடுத்தார். "அந்தப்படியே இதோ தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாய் இருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன். அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவ தில்லை" (1பேதுரு 2:16) என்று கர்த்தர் கூறுகிறார். புரொட்டஸ்டாண்டு சீர்திருத்தவாதிகள் கிறிஸ்துவின்மேல் கட்டினார்கள். பாதாளத்தின் திறவு கோல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை. (43) ★

# 12

# கொற்றத்தில் கோலோச்சிய கொடுமைக்காரர்கள்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 211–236)**

ஸ்பைர்ஸ் நகரில் தோன்றிய மறுப்பு, ஆக்ஸ்பர்க் நகரில் கூறப்பட்ட அறிக்கை ஆகியவைகள் ஜெர்மனியில் உண்டான சீர்திருத்தத்தின் வெற்றியை அடையாளப்படுத்திக் காட்டின. போராட்டங்களும், இருளும் வருடக்கணக்கில் அதைப் பின்தொடர்ந்தன. அதன் ஆதரவாளர்களுக்கிடையில் உண்டான பிரிவினைகளினாலும், அதன் எதிரிகளினால் உண்டான தீவிரமான தாக்குதலினாலும், புரொட்டஸ்டாண்டு மார்க்கம் முற்றிலுமாக அழிக்கப்படுவதற்கு விடப்பட்டிருப்பதுபோல் காணப்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் தங்களது சாட்சியை அவர்களது இரத்தத்தினால் முத்திரையிட்டார்கள். உள்நாட்டுக் கலகம் உண்டானது. புரொட்டஸ்டாண்டு இயக்கத்திற்கு, அதைச் சார்ந்த தலைவர்களில் ஒருவரால் துரோகம் இழைக்கப்பட்டது. சீர்திருத்தத்தின் இளவரசர்களில் மிக மேலானவர்கள் பேரரசனின் கைகளில் வீழ்ந்து, அவர்களின் கைதிகளாகி, நகரங்களிலிருந்து மற்ற நகரங்களுக்கு இழுத்துச்செல்லப்பட்டனர். ஆனால் அந்தப் பேரரசன் வெற்றி அடையப்போகிறவர்போல் வெளிப்படையாகத் தோன்றிய நேரத்தில் தோல்வியால் தாக்கப்பட்டார். தனது இரை கடைசியில் தனது பிடியிலிருந்து நழுவிச் சென்றதைக் கண்டு, அழித்துவிடவேண்டும் என்று ஆசையாயிருந்த கோட்பாடுகளுக்காக கடைசியில் அவரே சகிப்புத்தன்மையை அனுமதிக்கும்படி, வேறுவழி இல்லாமல் வற்புறுத்தப்பட்டதைக் கண்டார். மதவிரோதத்தை நசுக்கும் பணியில் அவர் தனது நாடு, கருவூலம், வாழ்க்கை ஆகிய அனைத்தையும் தீக்கிரையாக விட்டுவிட்டார். இப்பொழுது, அவரது சேனை போரினால் வீணானதையும், கருவூலங்கள் ஒழுகிச் சென்றதையும், அவரது கட்டுப்பாட்டிலிருந்த பலநாடுகள் கலகத்தினால் பயமுறுத்தியதையும்,

தான் அழிக்கவேண்டுமென்று வீணாக முயன்ற விசுவாசம் அகிலமெங்கும் பரவுவதையும் கண்டார். ஐந்தாம் சார்லஸ்! சர்வவல்லமை உள்ளவரின் சக்திக்கு எதிராகப் போரிட்டுக்கொண்டிருந்தான். வெளிச்சம் உண்டாகக்கடவது என்று தேவன் கூறினார். ஆனால் அந்த பேரரசன் இருள் நீங்காமல் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று முயன்றுகொண்டிருந்தான்! அவனது நோக்கங்கள் தோற்கடிக்கப்பட்டுப்போகவே, தன் காலத்திற்கு முன்னதாகவே முதுமையடைந்து, சிங்காசனத்தைத் துறந்து, ஒரு அறையில் தன்னை மறைத்துக்கொண்டான். (1)

ஜெர்மனியைப் போலவே, சுவிட்சர்லாந்திலும் சீர்திருத்தத்திற்கு இருண்ட நாட்கள் வந்தன. அநேக இடங்கள் சீர்திருத்த விசுவாசத்தை ஏற்றுக்கொண்டபோது, பலர் குருட்டுத்தனமான பிடிவாதத்தினால், ரோமன் கத்தோலிக்கக் கொள்கையைப் பற்றிக்கொள்ளத் தொடங்கியிருந்தனர். சத்தியத்தை ஏற்றுக்கொள்ள விரும்பினவர்களுக்கு அவர்கள் செய்த உபத்திரவங்களினால், முடிவில் உள்நாட்டுக் கலகத்தை உருவாக்கினார்கள். ஸ்விங்ளியும் சீர்திருத்த இயக்கத்தில் அவருடன் ஒன்றுபட்டவர்களும் காப்பல் என்னும் இரத்தகளத்தில் வீழ்ந்தனர். இந்தப் பயங்கரமான அழிவுகளின் திகிலினால் மேற்கொள்ளப்பட்ட ஓகோலம்பேடியஸ், அதற்குப்பின் விரைவில் இறந்தார். ரோமன் மார்க்கம் வெற்றியடைந்தது. அநேக இடங்களில் அது இழந்திருந்த அனைத்தையும் மீட்டுக்கொண்டதுபோல் காணப்பட்டது. ஆனால் எவரது ஆலோசனைகள் நித்தியகாலமானவைகளோ அவர், அவரது நோக்கத்தையோ அல்லது அவரது மக்களையோ கைவிட்டுவிடவில்லை. அவரது கரம் அவர்களுக்கு விடுதலையைக் கொண்டுவரும். மற்ற இடங்களில் சீர்திருத்தத்தை முன்கொண்டு செல்ல ஊழியக்காரர்களை அவர் எழுப்பினார். (2)

பிரான்ஸ் நாட்டில் சீர்திருத்தவாதி என்ற பெயரால் லுத்தர் அழைக்கப்படுவதற்கு முன்னரே, அந்த நாள் உதயமாகத் துவங்கியிருந்தது. மிகுந்த கல்விமானும் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியரும்,உண்மையும் வைராக்கியமான, போப்பு மார்க்கவாதியாய் இருந்த, வயது முதிர்ந்த **லெ.ஃப்வர்** என்பவர் ஒளியைப் பிடித்துக்கொள்ளுபவர்களில் முதன்மையானவராக இருந்தார். பழங்கால இலக்கியங்களைப்பற்றியஆராய்ச்சிகளிலிருந்து அவரது கவனம் வேதாகமத்திற்குத் திருப்பப்படவே, அந்த ஆராய்ச்சியைத் தனது மாணவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார் (3)

லெ.ஃப்வர் பரிசுத்தவான்களைப் போற்றுவதில் வைராக்கியமுள்ளவராக இருந்து, பரிசுத்தவான்கள் இரத்த சாட்சிகள் ஆகியோரைப்பற்றிய ஒரு அரிய வரலாற்றை சபையின் சரித்திரத்திலிருந்து தயாரிக்கும் பொறுப்பை

ஏற்றிருந்தார். அது பெரும் உழைப்பை உள்ளடக்கிய ஒரு பணியாக இருந்தது. அந்த முயற்சியில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றமடைந்திருந்தார். வேதாகமத்திலிருந்து அதற்கான உதவிகள் கிடைக்கலாம் என எண்ணி, அந்த நோக்கத்துடன் அதை வாசிக்க ஆரம்பித்தார். அங்கு உண்மையாகவே பரிசுத்தவான்கள் அவரது பார்வைக்குக் கொண்டுவரப்பட்டனர். ஆனால் ரோமன் கத்தோலிக்க நாட்காட்டி (காலண்டர்)களில் காணப்பட்ட உருவில் அவர்கள் தோன்றவில்லை. அவரது உள்ளத்தில் ஒரு பரலோக ஒளி வெள்ளம் பாய்ந்தது. மிகுந்த வியப்புடனும் வெறுப்புடனும் அவர் தானாக ஏற்படுத்திக்கொண்டிருந்த பணியைவிட்டுத் திரும்பியவராக, தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பதில் ஈடுபடத் துவங்கினார். அங்கு கண்டுபிடித்த விலைமதிப்புமிக்க சத்தியங்களை விரைவில் அவரே போதிக்கவும் துவங்கினார். (4)

கி.பி.1512–ல் லுத்தராவது ஸ்விங்ளியாவது சீர்திருத்தத்தின் பணியை துவங்குமுன்பாகவே, “கிருபையினாலே நித்தியஜீவனுக்கென்று நம்மைத் தீர்க்கிற விசுவாசத்தினாலாகும் அந்த நீதியை, தேவன்தான் நமக்குக் கொடுக்கிறார்” என்று எழுதினார்.—Wylie, b. 13, ch. 1. இரட்சிப்பின் இரகசியத்தைக்குறித்து, “ஓ! அது சொல்லிடமுடியாத மாபெரும் பண்டமாற்றம்! பாவமற்ற ஒருவர் பலியாக்கப்படுகிறார்; அதனால் குற்றமுள்ளவன் விடுதலையாகிறான்! ஆசீர்வாதங்கள் சாபத்தை ஏற்றுக் கொள்ளுகின்றன; சபிக்கப்பட்டவன் ஆசீர்வாதத்திற்குள் கொண்டுவரப்படுகிறான். ஜீவன் மரிக்கிறது; மரித்தவன் பிழைக்கிறான். மகிமை இருளில் மறைக்கப்படுகிறது. குழப்பத்தைத் தவிர வேறொன்றையும் அறியாதவன், மகிமையின் ஆடையால் உடுத்துவிக்கப்படுகிறான்” என்று லெ.்.ப்வர் எழுதினார். —D’Aubigne, b. 12, ch. 2. (5)

இரட்சிப்பின் மகிமை தேவனுக்கே சொந்தமானது என்று போதித்த அதே நேரத்தில், கீழ்ப்படிதல் என்ற கடமை மனிதனைச் சார்ந்தது என்று அவர் அறிவித்தார். “நீங்கள் கிறிஸ்தவ சபையின் ஒரு அங்கத்தினராக இருந்தால், அவரது சரீரத்தின் ஒரு உறுப்பாக இருக்கிறீர்கள். நீங்கள் அவருடைய சரீரமாக இருந்தால், தெய்வீகத்தன்மை உடையவராக இருக்கிறீர்கள். ஓ! இந்த மாபெரும் சிலாக்கியத்தைப்பற்றி மனிதர்களால் அறியக்கூடுமானால், எவ்வளவு தூய்மையோடும், கற்போடும், பரிசுத்தத்தோடும் அவர்கள் வாழ்வார்கள். அவருடைய மகிமையுடன் ஒப்பிடும்போது, எந்த அளவிற்கு ஆழ்ந்து யோசிக்கவேண்டியதாக உள்ளது. மாமிசக் கண்களால் காண முடியாத அந்த மகிமையை, உலகமகிமைகள் அனைத்துக்கும் மேலானதாக அல்லவா கருதுவார்கள்” என்றார்.—Ibid., b. 12, ch. 2. (6)

லெ.ஃப்வர் அவர்களின் வார்த்தைகளை வாஞ்சையுடன் கவனித்த மாணவர்களில் சிலர், அந்த ஆசிரியரின் குரல் மௌனப்படுத்தப்பட்ட வெகுகாலத்திற்குப்பின், சத்தியத்தை அறிவிக்கத் தொடரவேண்டியவர்களாக இருந்தனர். **வில்லியம் ஃபாரல்** என்பவர் அப்படிப்பட்ட ஒருவராக இருந்தார். பக்திமிக்க பெற்றோர்களின் மகனாக இருந்து, சபையின் போதனைகளில் கேள்விக்கிடமில்லாத வகையில் விசுவாசம் வைக்கும்படி கற்பிக்கப்பட்டு, அப்போஸ்தலனாகிய பவுலுடன் சேர்ந்து "நம்முடைய மார்க்கத்திலுள்ள சமயபேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயத்துக்கு இசைந்தபடி பரிசேயனாய் நடந்தேனென்று சாட்சி சொல்ல அவர்களுக்கு மனதிருந்தால் சொல்லலாம்" (அப்போஸ்தலர் 26:5) என்று கூறக்கூடியவராக இருந்தார். சபையை எதிர்க்கும் அனைவரும் அழிக்கப்படவேண்டும் என்ற எரியும் பக்திவைராக்கியம் உடையவராக அவர் இருந்தார். போப்புவிற்கு எதிராக யாராவது ஒருவர் பேசுவதைக்கேட்க நேரிட்டால், நான் மூர்க்கமான ஓநாயைப்போல பல்லைக் கடிப்பவனாக இருந்திருந்தேன் என்று தனது கடந்தகால வாழ்க்கையைப்பற்றிப் பின்னர் குறிப்பிட்டு பாரல் கூறினார்.—Wylie, b. 13, ch. 1. லெ.ஃப்வருடன் சேர்ந்து பாரிஸ் நகர ஆலயங்களைச் சுற்றிவருவதிலும், பல இடங்களில் பிரார்த்தனைசெய்வதிலும், புனித ஸ்தலங்களைப் பரிசுப்பொருட்களினால் நிறைத்துத் துதிப்பதிலும் அவர் களைப்பற்றவராக இருந்திருந்தார். ஆனால் இந்தச் சடங்காச்சாரங்கள் எதுவும் அவரது ஆத்துமாவிற்குச் சமாதானத்தைக் கொண்டுவரவில்லை. பாவப்பிராகாரமான அவரது செயல்கள் அனைத்தும் அவரை இறுக்க கட்டியிருந்த பாவத்தைப் பற்றிய உணர்வை அவரைவிட்டு விலக்குவதில் தோல்வி அடைந்தன. பரலோகத்திலிருந்து உண்டான ஒரு சத்தத்தைப்போன்று "இரட்சிப்பு கிருபையினால். குற்றமற்ற ஒருவர் குற்றவாளியாக்கப்பட்டு, குற்றவாளி விடுதலைசெய்யப்படுகிறான். கிறிஸ்து வின் சிலுவை ஒன்றுமட்டும்தான் பரலோகத்தின் வாசலைத் திறந்து, நரகத்தின் வாசலை மூடுகிறது" என்னும் சீர்திருத்தவாதியின் வார்த்தைகளை அவர் கவனித்தார்.—Ibid., b. 13, ch. 2. (7)

பாரல் மகிழ்ச்சியுடன் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, பவுலைப்போன்றே, பாரம்பரியங்களின் அடிமைத்தளையிலிருந்து தேவகுமாரனால் உண்டாகும் சுதந்திரத்திற்குத் திரும்பினார். "கொலை வெறிமிக்க ஓநாயின் இதயத்தி லிருந்து" திரும்பிவந்தார். "எளிமையான அபாயமில்லாத ஒரு அமைதியான ஆட்டுக்குட்டியைப்போல முற்றிலும் போப்புவிடமிருந்து பின்வாங்கி, கிறிஸ்துவிற்கு ஒப்புவிக்கப்பட்ட இதயத்துடன்" திரும்பிவந்ததாக அவர் கூறினார்.—D'Aubigne, b. 12, ch. 3. (8)

லெ.ஃப்வர் தனது மாணவர்களுக்கிடையில் ஒளியைப் பரப்புவதைத் தொடர்ந்தபோது, பாரெல் போப்புவின் காரியத்தில் எப்படி இருந்தாரோ

அதேபோன்ற வைராக்கியத்துடன் சத்தியத்தைப் பொதுமக்களின் முன் அறிவித்திட முன்சென்றார். ரோமசபையில் சிறப்புமிக்க ஒருவராயிருந்த மீக்ஸ் நகரப் பேராயர், விரைவில் அவர்களுடன் இணைந்தார். கல்வித் திறமை காரணமாக மிக மேலான நிலையில் வைக்கப்பட்டிருந்த மற்ற ஆசிரியர்களும், சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில் சேர்ந்துகொள்ளவே, கைவினைஞர்கள், விவசாயிகள், அரசனின் அரண்மனையில் பணிபுரிந்தவர்கள் ஆகிய அனைவரையும் வெற்றிகரமாக அது ஆதாயப்படுத்திக்கொண்டது. அப்பொழுது ஆட்சியிலிருந்த முதலாம் பிரான்சிஸ் அரசனின் சகோதரி சீர்திருத்த விசுவாசத்தை ஏற்றுக்கொண்டார். அரசன்தானும், அவரது அரசியின் அன்னையும் ஒரு சமயம் அனுகூலமாக அதை ஆதரிப்பதுபோல் காணப்பட்டனர். பிரான்ஸ் நாடு சுவிசேஷத்திற்கு வெற்றியாக்கப்படும் என்ற மேலான நம்பிக்கையுடன் சீர்திருத்தவாதிகள் முன்நோக்கினர். (9)

ஆனால் அவர்களது நம்பிக்கை நடைமுறைக்கு வரக்கூடாததாக இருந்தது. சோதனையும் உபத்திரவமும் கிறிஸ்துவின் சீடர்களுக்காகக் காத்திருந்தன. எப்படியிருந்தாலும் அது இரக்கத்தினால் அவர்களது கண் களுக்குத் திரையிட்டு மறைக்கப்பட்டது. புயலைச் சந்திக்கின்ற பலத்தை அடைந்து கொள்ளுவதற்காக ஒரு சமாதான காலம் குறுக்கிட, சீர்திருத்தம் துரிதமாக முன்னேறியது. மீக்ஸ் நகரப் பேராயர் தனது மண்டலத்திலிருந்து குருமார்களுக்கும் மக்களுக்கும் போதிப்பதற்காக வைராக்கியத்துடன் பாடு பட்டார். அறியாமையும் ஒழுக்கமுமற்ற குருமார்கள் நீக்கப்பட்டு, அந்த இடங்கள் கற்றறிந்த பக்தி உள்ளவர்களால் நிரப்பப்பட்டன. தனது மக்கள் தேவனுடைய வார்த்தையைத் தாங்களாகவே அறிந்துகொள்ளும் மார்க்கம் உண்டாக்கப்பட வேண்டும் என்கிற பெரிய வாஞ்சையினை உடையவராக அந்தப் பேராயர் இருந்தார். விரைவில் அது செய்துமுடிக்கப்பட்டது. விட்டன்பர்க் அச்சகத்திலிருந்து லூத்தரின் ஜெர்மன் மொழி வேதாகமம் வெளிவந்துகொண்டிருந்த அதே நேரத்தில், புதிய ஏற்பாட்டை மொழி பெயர்க்கும் பணியை லெ.ஃப்வர் பொறுப்பேற்க, மீக்ஸ் நகரில் பிரெஞ்சு மொழியில் புதிய ஏற்பாடு வெளியிடப்பட்டது. தனது நிர்வாகத்திற்குள்ளிருக்கும் மக்களனைவருக்கும் வேதாகமம் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ஓய்வையும் செலவையும் பொருட்படுத்தாது அந்தப் பேராயர் செயல்படவே, விரைவில் மீக்ஸ் நகர மக்கள் அனைவரும் வேதவாக்கியங்களைத் தங்கள் உடைமையாக்கிக்கொண்டனர். (10)

தாகத்தினால் அழிந்துகொண்டிருக்கும் பயணிகள், உயிருள்ள ஒரு நீரூற்றைக்கண்டு மகிழ்வதுபோல், பரலோகத்தின் தூதை இந்த ஆத்துமாக்கள் பெற்றுக்கொண்டன. வயல்வெளிகளில் வேலை செய்தவர்கள், பணிமனைகளிலிருந்த கைவினைஞர்கள் ஆகியோர் விலைமதிப்புமிக்க

வேதாமக சத்தியத்தைப் பற்றி, அவர்களது அன்றாட வேலைகளுக்குமிடையில் உரையாடி மகிழ்ந்திருந்தனர். மாலை வேளைகளில் மதுக்கடைகளில் கூடுவதற்குப்பதிலாக, அடுத்தவர்களுடைய வீடுகளில் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதிலும் ஜெபிப்பதிலும் ஈடுபட ஒன்றுசேர்ந்திருந்தனர். அந்த மக்கள் சமூகங்களில் பெரும்மாற்றம் விரைவில் வெளிக்காட்டப்பட்டது. மிகவும் தாழ்மையான வகுப்பைச் சார்ந்திருந்தவர்களாயிருந்தும், கல்வி அறிவு இல்லாத கடினவேலைசெய்திருந்த விவசாயிகளாக இருந்தபோதிலும், சீர்திருத்தமானது மேலுயர்த்திடும் தெய்வீக கிருபையின் வல்லமை இவர்களது வாழ்க்கையில் காணப்பட்டது. சுவிசேஷத்தை உண்மையுடன் பெற்றுக்கொள்ளுபவர்களுக்குள், அது எவைகளை நிறைவேற்றும் என்பதற்கு சாட்சியாக, அவர்கள் தாழ்மையும் அன்பும் பரிசுத்தமும் உள்ளவர்களாக இருந்தனர். (11)

மீக்ஸ் நகரில் ஏற்றப்பட்ட ஒளி, வெகுதூரம் பரவியது. மாற்றம் அடைந்தவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்துக்கொண்டு இருந்தது. சந்நியாசிகளின் குறுகிய மனப்பான்மை அலட்சியப்படுத்தின அரசன், ரோம தலைவரின் கோபத்தை தற்காலிகமாகத் தடுத்திருந்தான். முடிவில் போப்பு மார்க்கத்தலைவர் அரசனை மேற்கொண்டார். இப்பொழுது அக்கினிஸ்தம்பம் நிறுத்தப்பட்டுவிட்டது. நெருப்பு அல்லது மறுதலித்து கூறுதல் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும்படி மீக்ஸ் பேராயர் வற்புறுத்தப்பட்டபோது, அவர் எளிதான பாதையை ஏற்றுக்கொண்டார். அந்தத் தலைவர் விழுந்துபோனாலுங்கூட, அவரது மந்தை நிலைகுலையாமல் நின்றது. நெருப்பு ஜுவாலைக்கு நடுவில் அநேகர் சத்தியத்திற்குச் சாட்சி பகர்ந்தனர். சமாதான காலத்தில் இவர்களது சாட்சியை ஒருபோதும் கேட்டிராத ஆயிரக்கணக்கானவர்களிடம், இந்தத் தாழ்மையான கிறிஸ்தவர்கள் அக்கினி ஸ்தம்பத்தில் தாங்கள் காட்டிய தைரியத்தினாலும் நேர்மையினாலும் பேசினார்கள். (12)

பாடுகளுக்கும் பரிகாசங்களுக்கும் மத்தியில் கிறிஸ்விற்குச் சாட்சியா யிருக்கத் துணிந்தவர்களுக்கிடையில், தாழ்மையும் ஏழ்மையுமிக்கவர்கள் மட்டுமே இருக்கவில்லை. செல்வம், அந்தஸ்து, உயிரையும்விட சத்தியத்தை மேலாக மதித்த ஆத்துமாக்கள், பிரபுக்களின் மாளிகைகளிலும் கோட்டைகளிலும் அரண்மனைகளிலும் அரசர்கள் மத்தியிலும் இருந்தனர். பேராயர்களின் உடைகளையும் நெற்றிப்பட்டங்களையும்விட வீரர்களின் உடையில் உயர்ந்ததும் உறுதிமிக்கதுமான ஆவி மறைத்துவைக்கப் பட்டிருந்தது. **லூயிஸ் டி பெர்க்கின்** என்பவர் மேலான குடும்பத்தில் பிறந்தவராக இருந்தார். தைரியமிக்க அரசவை வீரராயிருந்த அவர், கல்வியில் ஈடுபாடு உடையவராகவும், மென்மையான பண்புடையவராகவும், குற்றமற்ற

சன்மார்க்கமுள்ளவராகவும் இருந்தார். போப்புமார்க்க நியமங்களைப் பெரிய அளவில் பின்பற்றும் ஒருவராகவும், திருப்பலிப் பூசைகளைக் காண்பவராகவும், சொற்பொழிவுகளைக் கேட்பவராகவும் அவர் இருந்தார். லுத்தரின் மார்க்கத்தை விசேஷமாக வெறுத்தல் என்கிற கிரீடத்தை அவரது மற்ற சிறப்புகளைவிட மேலாக அணிந்தவராக இருந்திருந்தார். ஆனால் மற்ற அநேகரைப்போலவே அவரும் தெய்வீக நடத்துதலினால் வேதாகமத்திற்கு நடத்தப்பட்டு, அதில் போப்புமார்க்கத்தின் போதனைகள் காணப்படாமல், லுத்தரின் கோட்பாடுகள் இருப்பதை ஆச்சரியத்துடன் கண்டார்.—Wylie, b. 13, ch. 9. அதற்குப்பின் அவர் தானாகவே அவரது தியானம் முழுவதையும் சுவிசேஷத்தின் காரியத்தில் செலுத்தினார். (13)

அவரது அறிவின் மேன்மை, பேச்சுத்திறன், பிறரால் மேற்கொள்ளமுடியாத தைரியம், வீரம் நிறைந்த வைராக்கியம், அரசவையில் உள்ள அவரது செல்வாக்கு ஆகியவைகளினால் பிரான்ஸ் நாட்டின் கற்றறிந்த மேன்மக்கள் யாவரிலும் மேலானவராக விளங்கியதுடன், அரசனின் அனுகூலத்தைப்பெற்ற ஒருவராகவும் இருந்ததால், அவரது நாட்டைச் சீர்திருத்துவதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் ஒருவராக அவர் பலராலும் கருதப்பட்டார். “முதலாம் பிரான்சிஸ் இரண்டாவது தேர்தல் அதிகாரியாக இருந்திருந்தால், பெர்க்கின் இரண்டாவது லுத்தராக இருந்திருப்பார்” என்று பிசா கூறினார். “அவர் லுத்தரைவிட மிகமோசமானவர்” என்று போப்புமார்க்கவாதிகள் குற்றம்கூறினர்.—Ibid., b. 13, ch. 9. பிரான்ஸ் நாட்டு ரோமன் கத்தோலிக்கர்களை உண்மையாகவே பயமுறுத்துகிறவராக அவர் இருந்தார். அவரை ஒரு மதவிரோதி என்று கூறி, அவர்கள் சிறையிலடைத்தனர். ஆனால் அவர் அரசனால் விடுதலை செய்யப்பட்டார். இந்தப் போராட்டம் அநேக வருடங்கள் தொடர்ந்தது. ரோம மார்க்கத்திற்கும் சீர்திருத்தத்திற்கும் இடையில் தடுமாறிக்கொண்டிருந்த பிரான்சிஸ் அரசன், மறுபக்கமாக சந்நியாசிகளின் பயங்கரமான வைராக்கியத்தை சகித்துக் கட்டுப்பட்டார். போப்புமார்க்க அதிகாரிகளால், மூன்று தடவைகள் பெர்க்கின் சிறையாக்கப்பட்டார். ஆனால் அவரது அறிவின்மேன்மை, சிறப்புமிக்க பண்பு ஆகியவைகளைப் போற்றிய அரசன், மதத் தலைவர்களின் தீய நோக்கங்களுக்கு அவரைப் பலியாக்க மறுத்துவிட்டார். (14)

பிரான்சில், திரும்பத் திரும்ப அவரைப் பயமுறுத்தும் ஆபத்துக்களைப்பற்றி எச்சரிக்கப்பட்டு, தாங்களாகவே நாட்டைவிட்டு வெளியேறியதால் பாதுகாப்பைக் கண்டுகொண்டவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி பெர்க்கின் அவசரப்படுத்தப்பட்டார். “ஒரு அயல்நாட்டிற்குத் தூதுவராக அனுப்பப்படும்படியாகக் கேட்டு, ஜெர்மனிக்குச் சென்று அங்கு பயணம்செய்யுங்கள். உங்களுக்கு பேடாவைத் தெரியும். எத்திசையிலும்

நஞ்சுவீசும் ஆயிரம் தலைகளுள்ள இராட்சதராக அவர் இருக்கிறர் என்பதும் உங்களுக்குத் தெரியும். உங்களது எதிரிகள் லேகியோன்கள் என்று பெயரிடப்பட்டிருக்கிறார்கள். உங்களது நோக்கம் கிறிஸ்துவின் நோக்கத்தைவிட நல்லதாக இருந்தாலுங்கூட, உங்களைத் துன்பமிக்க விதத்தில் அழிக்கும்வரை அவர்கள் போகவிடமாட்டார்கள். அரசன் தரும் பாதுகாப்பின் மீது அதிகமான நம்பிக்கை வைக்கவேண்டாம். எல்லா நிலைகளிலும் என்னை இறையியல் ஆசிரியர்களின் மூலமாக சமரசப்படுத்த முயலாதீர்கள்" என்று சிறந்த கல்வி அறிவிருந்தும், ஜீவனையும் கௌரவத்தையும் சத்தியத்திற்குக் கீழாகவே மதிப்பிடுகின்ற சன்மார்க்க மேன்மையில் தோல்வியடைந்த—கோழையும் சந்தர்ப்பவாதியுமான எரோஸ்மஸ் எழுதினார்.—Ibid., b. 13, ch. 9. (15)

ஆனால் அபாயங்கள் அதிகமானபோது, பெர்க்கினின் வைராக்கியம் அதிகமாகப் பலமடைந்தது. எரேஸ்மஸ்–ன் அரசியல் மற்றும் தனக்குத்தானே சேவை செய்யும் ஆலோசனைகளை சுவீகரிப்பதிலிருந்து விலகி, இன்னமும் அதிக தைரியமிக்க நடவடிக்கைகளில் ஈடுபட அவர் தீர்மானித்தார். சத்தியத்தைத் காப்பதோடு நில்லாமல், தவறுகளையும் தாக்குவார் அவர். ரோமன் கத்தோலிக்கர்கள் அவர்மீது சாட்ட விரும்பிய மதப்புரட்டு என்னும் குற்றச்சாட்டை, அவர்கள் மீதே சாட்டி, அவர் ஆணியடிப்பார். அவருக்கெதிராக மிகவும் துணிவுடனும் கசப்புடனும் செயலாற்றி யிருந்த அவரது எதிரிகள், பாரிஸ் பல்கலைக்கழகத்தின் இறையியல் துறையில் மிகவும் கற்றறிந்தவர்களாகவும் முனைவர்களாகவும், சந்நியாசிகளாகவும் இருந்தனர். இந்த அமைப்பு, அந்த நகரம், அந்த நாடு ஆகிய இரு இடங்களிலுமிருந்த சபையின் அதிகாரவர்க்கத்தின் மிக உயர்ந்தவைகளில் ஒன்றாக இருந்தது. இந்த முனைவர்கள் எழுதிய எழுத்துக்களிலிருந்து பன்னிரண்டு காரியங்களை பெர்க்கின் எடுத்துவைத்து, இவை வேதாகமத்திற்கு எதிரானவை. எனவே அவை மதப்புரட்டானவை என்று பகிரங்கமாக அறிவித்து, இந்த எதிர்வாதத்தில் நீதி வழங்கவேண்டும் என்று அரசரைக் கேட்டுக்கொண்டார். (16)

ஒருவரை ஒருவர் எதிர்நோக்கும் இந்த வீரர்களின் வல்லமையையும் தீவிரத்தையும் ஒப்பிட்டு நோக்க விரும்பிய அரசன், அகந்தைமிக்க இந்த சந்நியாசிகளின் பெருமையை தாழ்த்தும் ஒரு வாய்ப்பு கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து, ரோமன் கத்தோலிக்கர்கள் தங்கள் நோக்கத்தை வேதாகமத்தின் மூலமாகத் தற்காக்கவரும்படி அழைத்தார். இந்த ஆயுதம் அவர்களுக்குப் பயன்படாது என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். சிறைப்படுத்துதல், சித்திரவதை செய்தல், அக்கினி ஸ்தம்பத்தில் கட்டிவைத்து எரித்தல் ஆகியவை நல்ல பலனைத்தரும் என்பதை அவர்கள் நன்கு புரிந்திருந்தனர். ஆனால்

சூழ்நிலை தங்களுக்கு எதிராக மாறியதை அறிந்த அதன் தலைமையானது, பெர்க்கினை மூழ்கடிக்கும் நம்பிக்கையில் அவர்கள் தோண்டிய குழியில் அவர்களே விழவேண்டியிருப்பதை கண்டனர். தப்பிப்பதற்கு ஏதாவதொரு வழியைக் காண திகிலுடன் தங்களை நோக்கினர். (17)

இந்தச் சரியான நேரத்தில், தெரு முனைகளில் ஒன்றில் நின்றிருந்த ஒரு கன்னிமரியாளின் சிலை சேதப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது. நகரில் பெரும் உணர்ச்சிக் கொந்தளிப்புகள் உண்டானது. துக்கம்கொண்டாடுதலுடனும் கோபத்துடனும் அந்த இடத்தில் மக்கள் திரளாகக் கூடினார்கள். அரசனும் ஆழமாக அசைக்கப்பட்டார். தங்களுக்குச் சாதகமான ஒரு நல்ல கணக்கைக் காட்டிலும், அனுகூலமான ஒரு வாய்ப்பு இங்கு கிடைத்துவிட்டது. அதைச் சாதகமாகப் பயன்படுத்த அவர்கள் விரைந்தனர். "பெர்க்கினின் கோட்பாட்டின் பலன்கள் இவைதான். மதமும், சட்டமும், அரசனின் சிங்காசனமும் லுத்தரைப் பின்பற்றுபவர்களின் சதியால் கவிழ்க்கப்படவுள்ளது" என்று கூக்குரலிட்டனர்.—Ibid., b. 13, ch. 9. (18)

பெர்க்கின் மறுபடியும் கைதுசெய்யப்பட்டார். அரசன் பாரிஸ் நகரிலிருந்து சென்றுவிட்டான். சந்நியாசிகளோ அவர்களது நோக்கத்தின்படிச் செய்யச் சுதந்திரமடைந்தனர். அந்தச் சீர்திருத்தவாதி விசாரிக்கப்பட்டு, மரணதண்டனைக்குத் தீர்ப்புச் செய்யப்பட்டார். அவரைத் தப்புவிக்க பிரான்சிஸ் அரசன் குறுக்கிட்டுவிடக்கூடாது என்பதற்காக அந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட அதே நாளில், மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. கொலை செய்யப்படவேண்டிய இடத்திற்கு மத்தியான வேளையில் பெர்க்கின் நடத்திச்செல்லப்பட்டார். அந்த நிகழ்ச்சியைக் காண்பதற்குப் பெருங்கூட்டம் கூடியிருந்தது. ஆச்சரியத்தினாலும் தவறான தகவல்களினாலும் நிறைந்த அவர்கள், பலியாக்கப்பட இருந்தவர் பிரான்ஸ் நாட்டின் மிக மேலான தைரியமிக்க குடும்பங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். அந்தக் கூட்டத்தில் வியப்பு, கோபம், பரிகாசம், கசப்பான வெறுப்பினால் இருளடைந்த முகங்கள் நிறைந்திருந்தன. ஆனால் ஒரே ஒரு முகத்தின் மீது மட்டும் எந்தவிதமான அமளிமிக்க நிழலும் தங்கவில்லை. அந்த இரத்தசாட்சியின் எண்ணங்கள் அந்தக் காட்சியிலிருந்து வெகு தூரம் சென்றிருந்தது. கர்த்தரின் பிரசன்னத்தைப்பற்றிய உணர்வை மட்டும் உடையவராக இருந்தார் அவர். (19)

அவர் பயணம்செய்திருந்த மிக மோசமான இராணுவ வண்டி, அவரை உபத்திரவப்படுத்த இருப்பவர்களின் கோபமிக்க முகங்கள், சாகப் போகும் பயங்கரமான மரணம் ஆகியவற்றை அவர் கவனிக்கவேயில்லை. உயிரோடிருந்தவரும் மரித்தவரும் சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவரும்,

மரணம் பாதாளம் ஆகியவைகளின் திறவுகோலை உடையவருமானவர் அவரது அருகில் இருந்தார். பரலோக சமாதானத்தினாலும் ஒளியினாலும், பெர்க்கினின் முகம் பிரகாசமாயிருந்தது. வெல்வெட், இரட்டைசாட்டின், டமாஸ்க் என்னும் மேலான துணிகளினால் ஆன உடையை அணிந்திருந்தார்.—D'Aubigne, History of the Reformation in Europe in the Time of Calvin, b. 2, ch. 19. அரசர்களுக்கு அரசராக இருப்பவருக்கும் பிரபஞ்சத்திற்கும் முன்பாக தனது விசுவாசத்தை சாட்சி பகரப்போகும் அவரது மகிழ்ச்சியை துக்கத்தின் அடையாளம் பொய்ப்பிக்கக்கூடாது. (20)

ஜனநெருக்கமான தெருக்களின் வழியாக அந்த ஊர்வலம் சென்ற போது, மறைக்கமுடியாத அவரது சமாதானத்தையும், மகிழ்ச்சியான வெற்றி யையும், அவரது தோற்றத்தையும் மக்கள் ஆச்சரியத்துடன் கவனித்தனர். "ஒரு ஆலயத்தில் அமர்ந்து, பரிசுத்தமான விஷயங்களை தியானிப்பவரைப் போல இருக்கிறார்" என்று அவர்கள் கூறினார்கள். (21)

அக்கினி ஸ்தம்பத்தில் கட்டப்பட்டு எரிக்கப்படுவதற்குமுன், மக்களுக்குச் சில வார்த்தைகளைக் கூறிட பெர்க்கின் முயன்றார். ஆனால் விளைவுகளை எண்ணிப் பயந்த சந்நியாசிகள் கூச்சலிடத் தொடங்கி, வீரர்கள் தங்கள் ஆயுதங்களை ஒன்றுடன் ஒன்று மோதச்செய்து கலகலப்பை உண்டுபண்ணவே, அந்த இரத்தசாட்சி யின் குரல் அந்த சத்தத்திற்குள் அமிழ்ந்தது. இவ்வாறாக கி.பி. 1529–ல் பாரிஸ் நகரின் பண்புமிக்க உயர்ந்த கல்விமானும், சபை மேலதிகாரியுமாயிருந்த பெர்க்கின் மரண மேடையின்மீதிருந்து சாகும்போது, கி.பி.1793–ல் தங்கள் கால்களை மடக்க இருக்கும் மக்களுக்குமுன் ஒரு உதாரணமான அடித்தளமாக தன்னை ஏற்படுத்தினார்.—Ibid., b. 13, ch. 6. (22)

பெர்க்கின் அக்கினி ஸ்தம்பத்தில் கட்டப்பட்டார். பின்னர் அவரது உடல் எரிக்கப்பட்டது. அவரது மரணச்செய்தி பிரான்ஸ் முழுவதிலும் இருந்த சீர்திருத்தத்தின் நண்பர்களைத் துயரப்படுத்தியது. ஆனால் அவரது முன்னுதாரணம் சாகடிக்கப்படவில்லை. "இனி வரவிருக்கும் வாழ்க்கையின்மீது எங்கள் கண்களைப்பதித்து, மரணத்தை மகிழ்ச்சியுடன் சந்திக்க நாங்களுங்கூட ஆயத்தமாக இருக்கிறோம்" என்று சத்தியத்திற்குச் சாட்சிகளாக இருந்தவர்கள் கூறினார்கள். —Ibid., b. 2, ch. 16. (23)

மீக்ஸ் நகரில் உபத்திரவம் நடந்தபோது, சீர்திருத்த விசுவாசத்தைப் பிரசங்கித்திருந்த போதகர்கள் அவர்களது பிரசங்கம் செய்யும் உரிமங்களை இழந்தவர்களாக, மற்ற இடங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர். சிறிது காலத்திற்குப்பின், லெ.ஃப்வர் ஜெர்மனிக்குச் சென்றார். பாரெல் சிறுவனாக

இருந்தபோது வாழ்ந்த, தனது பிறப்பிடமான கிழக்குப் பிரான்சிற்கு சுவிசேஷத்தின் ஒளியைப் பரப்பத் திரும்பினார். மீக்ஸ் நகரில் என்ன நிகழ்ந்தது என்கிற செய்தியை அறிந்தும், அவர் பயமற்ற வைராக்கியத்துடன் பிரசங்கித்த சத்தியத்தை அநேகர் கேட்டனர். அவரைப் பேசாமலிருக்கும்படிச் செய்ய, அதிகாரிகள் விரைந்தெழவே, அவர் நகரத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அவரால் அதற்குமேல் பொது இடங்களில் ஊழியம் செய்யமுடியாமல்போனாலும், சமவெளிகளுக்கும், கிராமங்களுக்கும் கடந்துசென்று, தனியார்களின் வீடுகளிலும் தனிப்பட்ட மலைச்சரிவுகளிலும் தான் சிறுவனாயிருந்தபோது சுற்றி அலைந்த காடுகளிலும் பெரும் குகைகளிலும் தங்குமிடங்கண்டு, அங்கெல்லாம் தொடர்ந்து பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். பெரும் சோதனைகளுக்காக தேவன் அவரை ஆயத்தம் செய்துகொண் டிருந்தார். "சிலுவைகள், உபத்திரவம், சாத்தான் காத்திருப்பதைப் பற்றிய செய்திகள் எனக்குக் கிடைக்காமலில்லை. எனது சொந்த பலத்தினால் நான் தாங்கிக்கொள்ளக் கூடியவைகளைவிட, அவை மிக அதிகமாக இருந்தன. ஆனால் தேவன் எனது பிதாவாக இருக்கிறார். அவர் ஊழியம் செய்கிறார். எனக்குத் தேவையானது கிடைப்பதற்கு அவர் எப்போதும் ஊழியம் செய்வார்" என்று அவர் கூறினார்.—Ibid., b. 12, ch. 9. (24)

அப்போஸ்தலர்களின் நாட்களில் இருந்தது போலவே "சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்று" –பிலிப். 1:12. "சிதறிப்போனவர்கள் எங்கும் சுற்றித்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" (அப். 8:4) என்றபடி, பாரிஸிலிருந்தும் மீக்ஸிலிருந்தும் விரட்டப்பட்டு, பிரான்ஸ் நாட்டின் அநேக மாநிலங்களின் மூலை முடுக்குகளுக்கு ஒளி அதன் வழியைக் கண்டடைந்தது. (25)

தேவன் அவரது நோக்கத்தை விரிவுபடுத்த, தொடர்ந்து ஊழியக் காரர்களை ஆயத்தம்பண்ணிக்கொண்டிருந்தார். பாரிஸ்நகரிலிருந்த பள்ளிகளில் ஒன்றில் சிந்தனையும் அமைதியுமிக்க ஒரு மாணவன் இருந்தான். அவன் தனது வல்லமைமிக்க ஆழமான சிந்திக்கும் மனதிற்கு ஏற்கனவே சான்றுபகருகிறவனாக இருந்தபோது, அவனது குற்றமற்ற வாழ்க்கை, அவனது நுண்ணறிவின் வல்லமைக்கும், சமய சம்பந்தமான தியானத்திற்கும், எவ்வகையிலும் குறைவற்றதாகக் கணப்பட்டது. அதாவது அறிவின் மேன்மையும் அதைச் செயல்படுத்திய விதமும் விரைவில் அவனை அந்த கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பவர் என்ற நிலைக்கு உயர்த்தியது. சபையைக் காப்பதில் மிகுந்த தகுதியும் கௌரவமுமிக்கவர்களில் ஒருவனாக **ஜான் கால்வின்** திகழ்வார் என்பது நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது.

எனவே தெய்வீக ஒளியின் ஒரு கதிர் அவர் அடைத்துவைக்கப்பட்டிருந்த துறவறம், மூடநம்பிக்கை என்னும் சுவர்களுக்குள் ஊடுருவிப் பாய்ந்தது. மதவிரோதிகள் நெருப்பிலிடப்படுவதற்கு தகுதியானவர்களே என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லாதிருந்து, பயத்துடன் புதிய கோட்பாடுகளைக் கேட்டார். அப்படி இருந்தும் அறியாத விதத்தில் அவர் மதவிரோதத்தை நேருக்கு நேர் சந்திக்கும்படி கொண்டுவரப்பட்டு, புரொட்டஸ்டாண்டுப் போதனைகளை அழிப்பதற்காக ரோம இறையியலின் வல்லமையைச் சோதிக்க வற்புறுத்தப்பட்டார். (26)

கால்வினின் ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் சீர்திருத்த இயக்கத்தில் சேர்ந்தவராக பாரிஸ் நகரில் இருந்தார். உறவினர்களான அந்த இரு மனிதர்களும் அடிக்கடி சந்தித்து கிறிஸ்தவ உலகத்தைத் தொந்தரவுபடுத்திக்கொண்டிருந்த காரியங்களைப்பற்றி ஒருமித்து விவாதித்திருந்தனர். “உலகில் இரண்டு சமயங்களே உள்ளன. இதில் ஒரு சமயத்தவர் சடங்குகளினாலும் நற்செயல்களினாலும் தன்னைதான் இரட்சித்துக்கொள்ளுகிற மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்ட கோட்பாடுகளைக் கொண்டவர்கள். மற்றவர்கள், இரட்சிப்பிற்காக முற்றிலும் இலவசமாகக் கொடுக்கப்படும் தேவனது கிருபையை நோக்கும்படி வேதாகமத்தால் போதிக்கப்பட்டவர்கள்” என்று ஒலிவ்டன் என்கிற அந்த புரொட்டஸ்டாண்டுவாதி கூறினார். நான் உங்களுடைய கோட்பாடுகளில் எதையும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். எனது நாட்கள் முழுவதிலும் நான் தவறில் வாழ்ந்திருக்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்று கால்வின் திகைப்புடனும் அச்சத்துடனும் கேட்டார். (27)

ஆனால் தான் விரும்பினபடி வெளியேற்றிவிடமுடியாத சிந்தனைகள் அவரது உள்ளத்தில் எழுப்பப்பட்டன. அவர் தன் அறையில் தனியாக இருந்து, தனது சகோதரனின் வார்த்தைகளைப் பற்றிச் சிந்திக்கத்தொடங்கினார். பாவ உணர்வு அவரைப்பற்றிக் கொண்டது. பரிசுத்தமும் நீதியுமுள்ள ஒரு நீதிபதியின் பிரசன்னத்தில் பரிந்துபேசும் ஒருவர் இல்லாமல் தான் நிற்பதை அவர் கண்டார். பரிசுத்தவான்களின் மத்தியஸ்தம், நற்செயல்கள், ஆலயங்களின் சடங்குகள் ஆகிய அனைத்தும் பாவத்திற்கு நிவாரணம் தர வல்லமை அற்றவையாக இருந்தன. அவரால், அவர்முன் நித்தியமான நம்பிக்கையின்மையை மட்டுமே காணமுடிந்தது. அவரது கவலையிலிருந்து அவரை விடுவிக்க அவரது சபையின் கல்விமான்கள் வீணாக முயன்றனர். பாவ அறிக்கை, பாவப்பரிகாரச் செயல்கள் யாவும் வீணாகக் கையாளப்பட்டிருந்தன. அவைகளால் ஆத்துமாவைத் தேவனுடன் ஒப்புரவாக்க இயலவில்லை. (28)

பயனற்ற இந்தச் சர்ச்சைகளில் கால்வின் இன்னும் ஈடுபட்டிருந்தபோது, ஒரு பொதுச்சதுக்கத்திற்குச் செல்லும் வாய்ப்பு சந்தர்ப்பவசமாக அவருக்குக் கிடைக்கவே, அங்கு சென்றபோது ஒரு மதவிரோதி எரிக்கப்படுவதைச் சாட்சியாகக் கண்டார். அந்த இரத்தசாட்சியின் முகத்தில் தங்கியிருந்த சமாதானத்தைக் கண்டு அவர் வியந்தார். மரணத்தை உண்டுபண்ணும் பயங்கரமான அந்த சித்திரவதைக்கு நடுவில், சபையின் அதிபயங்கரமான குற்றச் சாட்டுகளின்கீழ், அந்த இரத்தசாட்சியின் தைரியத்திற்கும் விசுவாசத் திற்கும், சபைக்கு கண்டிப்புடன் கீழ்ப்படிந்து வாழ்ந்திருக்கும் தன்னுடைய நம்பிக்கையின்மைக்கும் இருளுக்கும் இருக்கிற வேற்றுமையை மிக வேதனையோடு ஒப்பிட்டுப்பார்த்தார். மதவிரோதிகள் என்று குறிப்பிடப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்களின் விசுவாசம் வேதாகமத்தைச் சார்ந்திருந்தது என்பதை அவர் அறிந்து கொண்டார். அதை வாசித்து முடியுமானால் அவர்களது மகிழ்ச்சியின் இரகசியத்தைக் கண்டுபிடிக்க அவர் தீர்மானித்தார். (29)

வேதாகமத்தில் அவர் கிறிஸ்துவைக் கண்டார். ஓ பிதாவே! அவரது தியாகபலி உமது கோபத்தைச் சமாதானப்படுத்தியுள்ளது. அவரது இரத்தம், எனது அசுத்தத்தை கழுவி நீக்கி உள்ளது. எனது சாபத்தை, அவரது சிலுவை சுமந்துள்ளது. அவரது மரணம், எனக்கு நிவாரணமாகியுள்ளது. எங்களுக்காக நாங்கள் அநேக பயனற்ற தவறான கருவிகளைச் செய்துகொண்டோம் ஆனால் நீர் உமது வார்த்தையை எனக்குமுன் ஒரு சுடர்போல வைத்தீர். இயேசுவின் புண்ணியங்களைத்தவிர, மற்ற அனைத்தையும் அருவருக்கும்படி, எனது இதயத்தை நீர் தொட்டிருக்கிறீர்" என்று அவர் கதறினார். —Martyn, vol. 3, ch. 13. (30)

ரோமன் கத்தோலிக்கப் பாதிரியாராக ஆவதற்காக கால்வின் கற்பிக்கப்பட்டிருந்தார். அவர் பன்னிரெண்டு வயதுள்ளவராக இருந்தபோது, ஒரு சிறிய ஆலயத்தின் பிரசங்கியாக நியமிக்கப்பட்டு, சபை நியமத்தின்படி பேராயரால் அவரது தலை சிரைக்கப்பட்டது. அவர் அபிஷேகம் பெறவில்லை அல்லது ஒரு குருவானவரின் கடமைகளை நிறைவேற்றவில்லை. ஆனால் குருக்களின் கூட்டத்தில் ஒரு அங்கத்தினராகி, அந்தப் பணிக்கான பட்டம்பெற்று, அதற்கான சம்பளப்படியையும் பெற்றார். (31)

இப்பொழுது தன்னால் ஒருபோதும் ஒரு குருவாகமுடியாது என்பதை உணர்ந்து, கொஞ்சகாலம் சமூகச் சட்டங்களைப்பற்றி ஆராயத்திரும்பி, முடிவில் தன்னுடைய வாழ்க்கையை சுவிசேஷத்திற்காக அர்ப்பணிக்கத் தீர்மானித்தார். ஆனால் அவர் சமுதாயத்தில் ஆசிரியராவதற்குத் தயங்கினார். அவர் இயல்பாகவே பயந்த சுபாவம் உள்ளவராக இருந்து, இந்தப் பாரமிக்க பொறுப்பின் சுமையை உணர்ந்து, மேலும் கற்பதில்

தம்மை ஈடுபடுத்த விரும்பினார். ஆனால் அவரது நண்பர்களின் ஆர்வமிக்க வேண்டுதல்கள் கடைசியாக அவரை இணங்கவைப்பதில் வெற்றியடைந்தது. "மிகத் தாழ்மையான ஆரம்பத்தை உடைய ஒருவன், மாபெரும் சிறப்புமிக்க நிலைமைக்கு உயர்த்தப்படுவது என்பது ஆச்சரியமானதாக உள்ளது" என்று கூறினார்.—Wylie, b. 13, ch. 1. (32)

அவர் தனது பணியில் அமைதியுடன் இறங்கினார். அவரது வார்த்தைகள் பூமியைப் புத்துணர்வடையச்செய்யவரும் பனியைப்போல் இருந்தன. அவர் பாரிஸைவிட்டுச்சென்று, இப்போது மாநில நகரம் ஒன்றில், சுவிசேஷத்தை நேசித்த அதன் சீடர்களுக்குத் தனது பாதுகாப்பை அளித்திருந்த மார்கரெட் இளவரசியின் பாதுகாப்பிற்கு உட்பட்டார். கால்வின் ஒரு சாதுவான—போலித்தனமில்லாத தன்மையுடைய இளைஞராகவே இருந்தார். வீடுகளில் இருந்தவர்களிடம் அவரது ஊழியம் ஆரம்பமாயிற்று. வீடுகளிலுள்ள அங்கத்தினர்களால் சூழப்பட்ட அவர், வேதாகமத்தை வாசித்து, இரட்சிப்பைப்பற்றிய சத்தியங்களைத் திறந்தார். அந்தத்தூதைக் கேட்டவர்கள், மற்றவர்களுக்கு அந்த நற்செய்தியைச் சுமந்து செல்லவே, விரைவில் அந்த ஆசிரியரின் பெயர் நகரத்தையும் கடந்து, அதற்கு வெளியிலிருந்த பேரூர்களுக்கும் கிராமங்களுக்கும் சென்றது. மேலும் அவர் கோட்டைகளுக்கும் குடிசைகளுக்கும் சென்று, சத்தியத்திற்கு பயமற்ற சாட்சிகளாக நிற்கவேண்டியிருந்த சபைகளுக்கு அஸ்திவாரமிடுகின்ற பணியில் முன்னேறினார். (33)

சில மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் அவர் பாரிஸிற்கு வந்தார். கற்றோர்கள், மேதைகள் ஆகிய கூட்டத்தினரின் நடுவில், வழக்கத்திற்கு விரோதமான குழப்பம் அப்போது இருந்தது. புராதன மொழிகளைப்பற்றிய ஆராய்ச்சி, மனங்களை வேதாகமத்திற்கு நடத்தவே, அதன் சத்தியத்தினால் தொடப்படாத இதயங்களை கொண்டிருந்த அநேகர், அதைப்பற்றி ஆர்வத்துடன் தங்களுக்குள் கலந்துரையாடிக்கொண்டிருந்தனர். ரோமின் வீரர்களுடன் சண்டையிடுவதிலுங்கூட அவர்கள் ஈடுபட்டிருந்தனர். இறையியல் எதிர்வாதங்களை முறியடிப்பதில் கால்வின் வல்லவராக இருந்திருந்தபோதிலும், ஓசையிடும் இந்தப் பள்ளி மனிதர்கள் செய்திருந்த பணியைவிட மிகவும் உயர்வான ஒரு பணியைச் செய்யவேண்டியவராக இருந்தார் அவர். மனிதர்களின் மனங்கள் கலங்கியிருந்த அந்த நேரத்தில், அவர்களுக்காக சத்தியத்தைத் திறக்கவேண்டிய வேளையாக அது இருந்தது. இறையியல் விவாதங்களின் சத்தத்தினால், பல்கலைக்கழக அறைகள் நிறைந்திருந்தபோது, **கால்வின் வீடுவீடாகச் சென்று, மக்களுக்கு வேதாகமத்தைத் திறந்து**, கிறிஸ்துவை—சிலுவையில் அறையப்பட்ட அவரைப்பற்றியேப் பேசிக்கொண்டிருந்தார். (34)

தேவனது தெய்வீக ஏற்பாட்டினால், சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள வேறொரு அழைப்பு பாரிஸிற்குக் கொடுக்கப்பட வேண்டியதாக இருந்தது. லெ.ஃப்வர், பாரெல் ஆகியோரால் கொடுக்கப்பட்ட அழைப்பு நிராகரிக்கப்பட்டிருந்தது என்றாலும் அந்தப் பெரும் தலைநகரிலிருந்த சகல வகுப்பினராலும் மீண்டும் அந்தத் தூது கேட்கப்படவேண்டியதாக இருந்தது. அரசியல் நோக்கங்களால் ஆட்கொள்ளப்பட்டிருந்த அரசன், சீர்திருத்தத்திற்கு எதிராக, ரோம மார்க்கத்தை முற்றிலும் சாராதவனாகவே இருந்தான். பிரான்ஸில் புரொட்டஸ்டாண்டு மார்க்கம் வெற்றியடையும் என்று மார்கரெட் இளவரசி நம்பியிருந்தாள். சீர்திருத்த தூதானது பாரிஸ் நகரில் பிரசங்கிக்கப்படவேண்டும் என்றும் அவள் தீர்மானித்தாள். அரசன் இல்லாதவேளையில், அந்த நகரத்திலிருந்த ஆலயங்களில் பிரசங்கம் செய்யும்படி ஒரு புரொட்டஸ்டாண்டு ஊழியருக்கு அவள் கட்டளை இட்டாள். போப்புமார்க்கத்தின் மேலானவர்களால் இது தடுக்கப்படவே, அந்த இளவரசி அரண்மனையைத் திறந்துவிட்டார். ஒரு அறை கிறிஸ்தவர்கள் கூடுமிடமாக ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு பிரசங்கம் செய்யப்படும் என்றாள். சகல நிலையிலுள்ள மக்களும் வரலாமென்றும் அறிவித்தாள். அந்த ஆராதனைக்கு மக்கள் கூட்டம் திரண்டது. தொழுகைக்கான கூடுமிடம் மட்டுமின்றி அதற்கு முன்னிருந்த கூடங்களும் மக்கள் கூட்டத்தால் நிறைந்தன. மேன்மக்கள், நாட்டின் சிறப்பினைப் பெற்றவர்கள், வழக்கறிஞர்கள், வணிகர்கள், கலைஞர்கள் எனப் பற்பல பிரிவினருமாக ஆயிரக்கணக்கானவர்கள் தினந்தோறும் அங்கு கூடினர். இந்தக் கூட்டத்தைத் தடுப்பதற்குப்பதிலாக, அரசன் அதற்காகப் பாரிஸிலுள்ள இரு ஆலயங்கள் திறந்து வைக்கப்படவேண்டும் என்று கட்டளையிட்டான். இதற்குமுன் ஒருபோதும் அந்த நகரம் இதுபோல் தேவனுடைய வார்த்தையினால் அசைக்கப்பட வில்லை. பரலோகத்திலிருந்து ஜீவ ஆவி மக்களின்மீது ஊற்றப்பட்டது போலக் காணப்பட்டது. புலனடக்கம், தூய்மை, ஒழுக்கம், பணிசெய்தல் என்பவைகள், மதுபானவெறி, விபசாரம், சண்டைகள், சோம்பேறித்தனம் ஆகியவைகள் இருந்த இடங்களைப் பற்றிக்கொண்டன! (35)

ஆனால் சபைத்தலைவர்கள் செயலாற்றாமல் இருக்கவில்லை. இந்தப் பிரசங்கங்களைத் தடைசெய்ய அரசன் குறுக்கிடாமல் இருக்கவே, அவர்கள் சாதாரண மக்களிடம் திரும்பினர். பயத்தையும், தவறான எண்ணத்தையும், மதவெறியையும் எழுப்பிவிடுவதற்கான செயல்கள் எதுவும் அவர்களால் செய்யாமல் விட்டுவைக்கப்படவில்லை. பழைய எருசலேமைப் போலவே பாரிஸ் நகரம் அதன் தவறான ஆசிரியர்களுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்படிந்து, தன்னைச் சந்திக்கும் காலத்தையோ அல்லது அதன் சமாதானத்திற்கான

காரியங்களையோ அறியாமல் இருந்தது. தலைநகரில் இரண்டு வருடங்கள் தேவனுடைய வார்த்தைகள் பிரசங்கிக்கப்பட்டன. அநேகர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டனர். பெரும்பான்மையான மக்கள் அதை எதிர்த்தனர். பிரான்சிஸ் அவர்கள் தனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளுவதற்காக மட்டும் சகிப்புத்தன்மை என்கிற வெளிவேஷத்தைக் காட்டியிருந்தார். அதனால் போப்புமார்க்கத்தினர் மீண்டும் தங்கள் உயர்வை அடைவதில் வெற்றியடைந்தனர். மறுபடியும் ஆலயங்கள் மூடப்பட்டு, எரியூட்டும் அக்கினி ஸ்தம்பங்கள் நாட்டப்பட்டன. (36)

கால்வின் இன்னும் பாரிஸில் இருந்து, ஆராய்ச்சியினாலும் தியானத்தினாலும் ஜெபத்தினாலும் தனது எதிர்கால ஊழியத்திற்காகவும் சத்திய ஒளியைப் பரப்புவதில் தொடரவும் தன்னை ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். அப்படியிருந்தாலும் இறுதியில் அவர்மீது சந்தேகம் உண்டாயிற்று. அவரை நெருப்பிலிட அதிகாரிகள் தீர்மானித்தனர். தனது தனி அறையில் பாதுகாப்பாக இருப்பதாகவும், அபாயம் எதுவும் இல்லை என்றும் அவர் எண்ணிக் கொண்டிருந்த சமயத்தில், அவரைக் கைதுசெய்யும் நோக்கத்துடன் அதிகாரிகள் வந்துகொண்டிருக்கின்றனர் என்று அவரது நண்பர்கள் அறிவித்து, அவரை அவசரப்படுத்தினார்கள். அதே வினாடியில் வீட்டின் வெளிவாசல் கதவைத் தட்டும் பெரும் சத்தம் கேட்டது. தாமதிப்பதற்கு விநாடி நேரங்கூட இருக்கவில்லை. அவரது நண்பர்களில்சிலர் வந்திருந்த அதிகாரிகளைக் கதவருகில் தடுத்து நிறுத்தினார்கள். அதேசமயம் வேறு சில நண்பர்கள் அவர் சன்னல் வழியாகக் கீழிறங்கிச்செல்ல உதவவே, அவர் மிக விரைவாக நகருக்கு வெளியே சென்றார். சீர்திருத்தத்தின் நண்பனாயிருந்த ஒரு கூலிக்காரனுடைய குடிசையில் அவர் அடைக்கலம் கண்டு, அந்த வரவேற்பாளனின் ஆடையை அணிந்து, தன்னை மறைத்துக் கொண்டு, ஒரு மண்வெட்டியை தன் தோளில் வைத்துக்கொண்டு பயணம்செய்து, மார்கரெட் இளவரசியின் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு இடத்தில் மறுபடியம் தஞ்சம் புகுந்தார். (See —D'Aubigne, b. 2, ch. 30). (37)

சில மாதங்கள் வல்லமைமிக்க தனது நண்பர்களின் பாதுகாப்பில் தங்கி, முன்போலவே ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பிரான்ஸை சுவிசேஷப் பணியால் நிரப்பவேண்டும் என்பதில் அவரது இதயம் பதிந்திருந்தது. ஆகவே அவரால் அங்கு அதிக காலம் தங்கியிருக்க முடியவில்லை. இந்தப் புயல் ஓரளவிற்கு அமைதி அடைந்தவுடன், ஒரு பல்கலைக்கழகத்தையும் அதில் புதிய கருத்துக்களுக்கு ஆதரவு உள்ளதையும் கண்டு, பாய்டியர்ஸ் என்னும் அந்த இடத்தில் தனது பணியின் புதிய களத்தை அமைத்தார். எல்லா வகுப்பைச் சேர்ந்த மக்களும் சுவிசேஷத்தை மகிழ்ச்சியுடன் கேட்டனர். பொது

இடத்தில் பிரசங்கம் செய்யப்படவில்லை. தலைமை நீதிபதியின் வீட்டிலும், தனது தங்குமிடத்திலும், சில சமயங்களில் பொதுவான தோட்டங்களிலும் கால்வின் நித்திய ஜீவனைப்பற்றிய வார்த்தைகளை அவைகளைக் கவனிக்க விரும்பினவர்களுக்குக் கூறினார். சிறிது காலத்திற்குப் பின்னர் கேட்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தபோது, நகருக்கு வெளியே கூடுவது பாதுகாப்பாக இருக்கும் என்று எண்ணப்பட்டது. நகருக்கு வெளியில் மலைச்சரிவில் கவிழ்ந்த பாறைகளினாலும் அடர்ந்த மரங்களினாலும் மறைக்கப்பட்டிருந்த ஒரு குகை, ஒதுக்குப்புறத்தை மேலும் அதிகமாக முழுமையாக்கி யிருந்தது. அந்த இடம் கூடுமிடமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது. சிறுசிறு கூட்டங்களாக மக்கள் பல பாதைகளின் வழியாக அந்த இடத்தை அடைந்தனர். அந்த ஒதுக்குப்புறமான இடத்தில் வேதாகமம் வாசிக்கப்பட்டு விளக்கப்பட்டது. இங்கு பிரான்ஸ் நாட்டின் புரொட்டஸ்டண்டுகளினால், முதல்தடவையாக கர்த்தருடைய இராப்போஜன ஆராதனை நடத்தப்பட்டது. இந்தச் சிறு ஆலயத்திலிருந்து அநேக சுவிசேஷகர்கள் வெளியே அனுப்பப்பட்டனர். (38)

மறுபடியும் ஒரு தடவை கால்வின் பாரிஸ் நகருக்குத் திரும்பினார். பிரான்ஸ் ஒரு நாடாக சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையை அவரால் விட்டுவிட முடியவில்லை. ஆனால் கிட்டத்தட்ட ஊழியத்தின் ஒவ்வொரு கதவும் மூடப்பட்டிருப்பதைக் கண்டார். சவிசேஷத்தைப் போதிப்பது நேராக அக்கினி ஸ்தம்பத்திற்குச் செல்லும் பாதையாக இருக்கவே, இறுதியில் அவர் ஜெர்மனிக்குச் செல்லத் தீர்மானித்தார். அவர் பிரான்ஸை விட்டுச் சென்றாரோ இல்லையோ, புரொட்டஸ்டாண்டுகளின்மீது ஒரு புயல் வீசியது. அந்த நேரத்தில், அவர் அங்கிருந்திருந்தால், அப்போதைய அழிவில் நிச்சயமாகவே அவரும் அழிக்கப்பட்டிருந்திருப்பார். (39)

பிரெஞ்சு சீர்திருத்தவாதிகள் தங்களது நாடு ஜெர்மனிக்கும் சுவிட்சர்லாந்திற்கும் சமமாகச் செல்லவேண்டுமென்று விரும்பி, அந்த நாடு முழுவதையும் எழுப்பிட ரோமமார்க்கத்தின் மூட நம்பிக்கையின் மீது தைரியமான ஒரு பலத்த அடி கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்தனர். அதற்குத் தகுந்தபடி திருப்பலிபூசையை எதிர்க்கும் சுவரொட்டிகள் ஒரே இரவில் பிரான்ஸ் நாடு முழுவதிலும் சுவர்களில் ஒட்டப்பட்டன. இந்த வைராக்கியமிக்க தவறான நிதானமும் கணிப்பும் சீர்திருத்தத்திற்கான முன்னேற்றத்தைக் கொண்டுவருவதற்குப் பதிலாக, தன்மீதும், தனது பிரச்சாரகர்களின்மீது மட்டுமல்லாது பிரான்ஸ் நாடு முழுவதிலும் இருந்த சீர்திருத்த விசுவாசத்தின் நண்பர்கள் அனைவரின்மீதும் பாழ்க்கடிப்பைக் கொண்டுவந்தது. மதவிரோதிகள், சிங்காசனத்தின் ஸ்திரத்தன்மைக்கும், நாட்டின் சமாதானத்திற்கும் ஆபத்தை உண்டுபண்ணக்கூடிய குழப்பம்

செய்பவர்கள். எனவே அவர்கள் முற்றிலுமாக அழிக்கப்படவேண்டும் என்ற பாசாங்குமிக்க கோரிக்கையை வைக்க வேண்டும் என்று ரோம சபை நெடுநாட்களாக விரும்பியிருந்ததை அந்தச் சம்பவம் நிறைவேற்றியது. (40)

பாகுபாடு அறியமுடியாத நண்பனாலோ அல்லது கொடிய எதிரியினாலோ, ஏதோ ஒரு இரகசியக் கரத்தினால் சுவரொட்டிகளில் ஒன்று அரசனின் தனி அறையில் ஒட்டப்பட்டது. அரசன் திகைப்பினால் உறைந்துபோனான். இந்தக் காகிதத்தில் யுகங்கள் நெடுகிலுமாக பக்தியுடன் போற்றப்பட்டிருந்த மூடநம்பிக்கைகள் நிதானமற்ற கரத்தால் தாக்கி எழுதப்பட்டிருந்தது. இராஜ சமூகத்தில் இதுவரை இல்லாத தைரியமிக்க துடுக்குத்தனத்துடன், சொல்லக்கூடாத அந்த வார்த்தைகள் அரசனின் கோபத்தை எழுப்பியது. தனது திகைப்பினால் நடுங்கி, சில விநாடிகள் பேச்சற்றவனாக அரசன் நின்றான். அதன்பின் அவனது கோபம் வெளிவந்தது. “எல்லோரும் சிறைபிடிக்கப்படட்டும். லூத்தரின் போதனைகளை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரும் உடனடியாக ஒட்டுமொத்தமாக நிர்மூலமாக்கப்படட்டும்” என்றான்.—Ibid., b. 4, ch. 10. ஆம். பகடை உருட்டப்பட்டாகிவிட்டது. ரோமமார்க்கத்தை முற்றிலும் சார்ந்து நிற்க அரசன்தானே தீர்மானித்துவிட்டான். (41)

பாரிஸ் நகரிலிருந்த ஒவ்வொரு லூத்தரனையும் கைதுசெய்யும் நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டது. விசுவாசிகளை அவர்கள் இரகசியமாகக் கூடுமிடத்திற்கு அழைக்கும் பழக்கத்தை உடையவனாக இருந்த, சீர்திருத்த விசுவாசத்தைப்பற்றிக் கொண்டிருந்த, ஏழையான ஒரு கைவினைஞன் கைதுசெய்யப்பட்டான். உடனடியாக அக்கினிக்கம்பத்தில் கட்டப்பட்டுக் கொலை செய்யப்படுவாய் என்ற பயமுறுத்தலுடன் கத்தோலிக்க சபையின் பிரதிநிதியால், அந்த நகரத்திலிருந்த ஒவ்வொரு புரொட்டஸ்டாண்டினரின் வீட்டையும் அடையாளம் காட்டும்படியாக அவன் நடத்தப்பட்டான். கீழ்த்தரமான இந்தச் செயலைச்செய்ய திகிலினால் அவன் பின்வாங்கினாலும், கடைசியில் அக்கினி ஜுவாலையைப் பற்றிய பயம் அவனை மேற்கொண்டதால், அவன் தன் சகோதரனைக் காட்டிக்கொடுக்கச் சம்மதித்து நம்பிக்கைத் துரோகியானான். திரளானவர்கள் முன்செல்ல, ஒரு கூட்டம் குருமார்கள், தூபகலசங்களைப் பிடிப்பவர்கள், சந்நியாசிகள், இராணுவ வீரர்கள், மொரீன் என்ற அந்த அரசாங்க துப்பறிபவன் ஆகியோரால் சூழப்பட்டு, அந்தத் துரோகியுடன் சேர்ந்து, தெருத்தெருவாகவும் மௌனமாகவும் நகர விதிகளின் வழியாகக் கடந்துசென்றது. பரிசுத்த நற்கருணையின் மேன்மைக்காகவும், திருப்பலிப்பூசையின்மீது மறுப்பாளர் காட்டிய அவமானத்திற்குப் பரிகாரமாகவும் இந்த ஊர்வலம் ஆடம்பரமாக நடத்தப்பட்டது. ஆனால் இந்த நாடகத்திற்கடியில், சாவுக்கேதுவாகிய

நோக்கம் மறைத்துவைக்கப்பட்டிருந்தது. ஒரு லுத்தரனின் வீட்டிற்கு எதிராக வந்து சேர்ந்ததும், காட்டிக்கொடுப்பவன் ஒரு சைகை செய்தான்.

பாரிஸ் நகரிலிருந்த ஒவ்வொரு லுத்தரனையும் கைதுசெய்யும் நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டது. விசுவாசிகளை அவர்கள் இரகசியமாகக் கூடுமிடத்திற்கு அழைக்கும் பழக்கத்தை உடையவனாக இருந்த, சீர்திருத்த விசுவாசத்தைப்பற்றிக் கொண்டிருந்த, ஏழையான ஒரு கைவினைஞன் கைதுசெய்யப்பட்டான். உடனடியாக அக்கினிக்கம்பத்தில் கட்டப்பட்டுக் கொலை செய்யப்படுவாய் என்ற பயமுறுத்தலுடன் கத்தோலிக்க சபையின் பிரதிநிதியால், அந்த நகரத்திலிருந்த ஒவ்வொரு புரொட்டஸ்டாண்டினரின் வீட்டையும் அடையாளம் காட்டும்படியாக அவன் நடத்தப்பட்டான். கீழ்த்தரமான இந்தச் செயலைச்செய்ய திகிலினால் அவன் பின்வாங்கினாலும், கடைசியில் அக்கினி ஜுவாலையைப் பற்றிய பயம் அவனை மேற்கொண்டதால், அவன் தன் சகோதரனைக் காட்டிக்கொடுக்கச் சம்மதித்து நம்பிக்கைத் துரோகியானான். திரளானவர்கள் முன்செல்ல, ஒரு கூட்டம் குருமார்கள், தூபகலசங்களைப் பிடிப்பவர்கள், சந்நியாசிகள், இராணுவ வீரர்கள், மொரீன் என்ற அந்த அரசாங்க துப்பறிபவன் ஆகியோரால் சூழப்பட்டு, அந்தத் துரோகியுடன் சேர்ந்து, தெருத்தெருவாகவும் மௌனமாகவும் நகர விதிகளின் வழியாகக் கடந்துசென்றது. பரிசுத்த நற்கருணையின் மேன்மைக்காகவும், திருப்பலிப்பூசையின்மீது மறுப்பாளர் காட்டிய அவமானத்திற்குப் பரிகாரமாகவும் இந்த ஊர்வலம் ஆடம்பரமாக நடத்தப்பட்டது. ஆனால் இந்த நாடகத்திற்கடியில், சாவுக்கேதுவாகிய நோக்கம் மறைத்துவைக்கப்பட்டிருந்தது. ஒரு லுத்தரனின் வீட்டிற்கு எதிராக வந்து சேர்ந்ததும், காட்டிக்கொடுப்பவன் ஒரு சைகை செய்தான். ஆனால் ஒரு வார்த்தையும் உச்சரிக்கப்படவில்லை. அந்த ஊர்வலம் நின்று, அந்த வீட்டிற்குள் நுழைந்து, அந்தக் குடும்பம் வெளியே இழுத்துக்கொண்டுவரப்பட்டு, அனைவரும் சங்கிலியால் கட்டப்பட்டபின், அந்தப் பயங்கரமான கூட்டத்தினர் புதிதாகத் துன்பப்படுத்தப்பட இருப்பவர்களைத் தேடி முன்சென்றனர். “பெரிய வீடுகளானாலும் சிறிய வீடுகளானாலும் ஒன்றும் விட்டுவைக்கப்படவில்லை. பாரிஸ் நகரக் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களுங்கூட விட்டுவைக்கப்படவில்லை. துப்பறிபவன் அந்த நகரம் முழுவதையும் அதிரச்செய்தான்.—Ibid., b. 4, ch. 10. (42)

பயங்கரவாதத்தின் ஆட்சி ஆரம்பமாகியிருந்தது. துன்பப் படுத்தப்படும்படி இரையானவர்கள் கொடுமைமிக்க சித்திரவதை களினால் மரணத்திற்குள்ளானார்கள். அவர்களது வேதனையின் நேரத்தை அதிகரிக்கச்செய்யவேண்டும் என்பதற்காக, நெருப்பின் உக்கிரம் குறைக்கப்பட்டது. ஆனால் வெற்றிவீரர்களாக அவர்கள்

இறந்தனர். அவர்களுடைய நடத்தை அசையாததாகவும், அவர்களுடைய சமாதானம் மறைக்கப்பட முடியாததாகவும் இருந்தது. அவர்களை உபத்திரவப்படுத்துபவர்கள் அவர்களது தளராத உறுதியை அசைக்கும் வல்லமையற்றவர்களாக, தாங்களே தோற்றுப்போவதை உணர்ந்தனர். மதவிரோதத்தின் காரணமாகச் செயல்படுத்தப்படும் இந்தத் தண்டனையின் பயங்கரம் எங்கும் பரவவேண்டும் என்பது நோக்கமாக இருந்து, பாரிஸ் நகரின் பல இடங்களிலும் கழுமரங்கள் அமைக்கப்பட்டு, எரித்தல் என்பது நாளுக்குப் பின் நாளாகத் தொடர்ந்தது. எப்படியானாலும் முடிவில் இதனால் உண்டான அனுகூலம் சவிசேஷத்தையே சார்ந்தது. புதிய கருத்து எப்படிப்பட்ட மனிதர்களை உருவாக்கக்கூடும் என்பதைக் காண, பாரிஸ் நகரம் முழுவதும் தகுதி அடைந்தது. இரத்தசாட்சிகளின் குவியலைவிட மேலான வேறே பிரசங்கப்பீடம் இருக்கவில்லை! மரணதண்டனை நிறைவேற்றப்படும் இடத்திற்கு அவர்கள் நடத்தப்பட்டபோது. அநேக மனிதர்களின் முகங்களைப் பிரகாசிக்கச் செய்த அமைதியான சந்தோஷம், பயங்கரமான அக்கினி ஜுவாலைக்குள் நின்றபோது அவர்கள் காட்டிய தீரம், துன்பங்களை மன்னிக்கும் அவர்களது சாந்தகுணம் ஆகியவை காரணமாக, கோபத்தை இரக்கமாகவும், வெறுப்பை அன்பாகவும் மாற்றிக்கொண்ட, சுவிசேஷத்திற்கு தடுக்கமுடியாதவிதத்தில் சாதகமாகப் பரிந்து பேசினவர்கள் சிலர் மட்டுமல்ல.—D'Aubigne, b. 13, ch. 20. (43)

மக்களின் கோபத்தை அதன் உச்ச நிலையில் வைக்கத் தீர்மானித்திருந்த குருமார்கள், புரொட்டஸ்டாண்டுகளின்மீது மிகப் பயங்கரமான குற்றச்சாட்டுக்களைச் சாட்டினார்கள். கத்தோலிக்கர்களைக் கூட்டமாகக் கொலைசெய்யவும், அரசாங்கத்தைக் கவிழ்க்கவும், அரசனைக் கொலைசெய்யவும் அவர்கள் திட்டமிட்டிருக் கின்றனர் என்ற குற்றச்சாட்டு அவர்கள்மீது சுமத்தப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டுகளை ஆதரிக்கும் சாட்சியின் ஒரு நிழலைக்கூடக் காண்பிக்க முடியவில்லை. அப்படி இருந்தும் மிகவேறுபட்ட சூழ்நிலைகளில், எதிரெதிரான காரணங்களில், எப்படியாயினும் தீமையைப்பற்றிய இந்தத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற வேண்டியதிருந்தன. குற்றமற்ற புரொட்டஸ்டாண்டுகளின்மீது கத்தோலிக்கர்களால் இழைக்கப்பட்ட கொடுமைகள், தேவ கோபத்தை அவர்கள் பக்கம் திரட்டி, அவர்களது அரசனுக்கும், அவனது அரசாங்கத்திற்கும், அதன் கீழிருந்தவர்களுக்கும் தவிர்க்க முடியாதபடி நிகழ உள்ளதென்று அவர்கள் முன்னறிவித்த வீழ்ச்சியை, பின்வந்த நூற்றாண்டுகளில் உண்டுபண்ணியது. புரொட்டஸ்டாண்டிசம் அமைக்கப்பட்டதினால் இந்த அழிவுகள் உண்டாகாமல், அதை அழித்த காரணத்தினால், முந்நூறு ஆண்டுகளுக்குப்பின் இந்த ஆபத்துக்கள் பிரான்ஸின்மீது உண்டாக வேண்டியதிருந்தது. (44)

சந்தேகம், அவநம்பிக்கை, பயங்கரவாதம் ஆகியவை சமுதாயத்தின் சகல வகுப்பினரிடமும் காணப்பட்டது. கல்வியிலும் செல்வாக்கிலும் பண்பிலும் உயர்ந்து இருந்தவர்களின் மனங்களின்மீது லுத்தரன் போதனைகள் எப்படிப்பட்ட ஆழமான பிடிப்பை வைத்திருந்தது என்பது, பொதுவான அபாயக்குரல் உண்டானபோது காணப்பட்டது. நம்பிக்கையும் கௌரவமுமிக்க பதவிகள் திடீரெனக் காலியாகியிருந்தன. கலைஞர்கள், அச்சுத்தொழிலாளர்கள், மேதைகள், பல்கலைக்கழகங்களிலிருந்த பேராசிரியர்கள், அரசவை உறுப்பினர்கள்கூட மறைந்துவிட்டிருந்தனர். நூற்றுக்கணக்கானவர்கள் பாரீஸை விட்டு, தங்களது சொந்த நாட்டைவிட்டுத் தாங்களாகவே ஓடிப்போனார்கள். இப்படிச் சென்ற ஏராளமானவர்கள், இதன்வழியாக தாங்கள் புரொட்டஸ்டண்டு விசுவாசத்தை ஆதரிக்கும் செய்தியைக் கொடுத்தனர். சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் தங்களுக்கிடையில் மதவிரோதிகள் சகிப்புத்தன்மையுடன் இருந்திருக்கின்றனர் என்கிறதை போப்புமார்க்கவாதிகள் வியப்புடன் நோக்கினர். அவர்களின் கோபம் அவர்களுக்குக் கீழிருந்த தாழ்மையானவர்களின் மீது சென்றது. சிறைகள் நிரம்பிவழிந்தன. சுவிசேஷத்தை அறிவித்தவர்களை எரித்ததினால் உண்டான புகை ஆகாய மண்டலத்தை இருளடையச் செய்வதுபோல் காணப்பட்டது. (45)

பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கல்வியை மேன்மைப்படுத்தும் இயக்கத்திற்குத் தலைமை தாங்கினதற்காக, முதலாம் பிரான்சிஸ் தனக்குள் மகிழ்ச்சி அடைந்தான். சகல நாடுகளிலுமிருந்த கல்விமான்களைத் தன்னுடைய அவையில் சேர்ப்பதில் அவன் மகிழ்ச்சியுடையவனாக இருந்தான். சீர்திருத்த இயக்கத்தை அவன் சகித்துக்கொண்டதற்கு, கல்வியின் மீதிருந்த அவனது பற்றும், அறியாமையின் மேலிருந்த அவமதிப்பும், சந்நியாசிகளிடமிருந்த மூட நம்பிக்கையும் ஓரளவிற்கு காரணமாயிருந்தன. ஆனாலும் மதவிரோதத்தை முற்றிலும் அழித்துவிடவேண்டுமென்ற வைராக்கியத்தினால் உந்தப்பட்டு கல்வியை ஆதரித்த அவன், பிரான்ஸ் நாடு முழுவதிலும் அச்சுப்பணியைத் தடைசெய்ய கட்டளை பிறப்பித்தான்! சமய சகிப்புத்தன்மைக்கும் உபத்திரவத்திற்கும் எதிராக நுண்ணறிவுமிக்க பண்பு பாதுகாப்பாக இருக்காது என்பதற்கு, எழுதப்பட்டிருக்கிற அநேக உதாரணங்களில் இதுவுமொன்று. (46)

புரொட்டஸ்டாண்டு மார்க்கத்தை முற்றிலும் அழிப்பதற்காக, பிரான்ஸ் நாடு ஒரு பொதுச்சடங்கினால் தன்னை ஒப்படைக்க வேண்டியதிருந்தது. திருப்பலிபூசையைப்பழித்த, பரலோகத்திற்கு எதிரான பாவப்பரிகாரத்திற்காக, இரத்தத்தால் பாவநிவர்த்தி செய்யப்படவேண்டும் என்று குருமார்கள் கோரி,

அந்த பயங்கரமான வேலையைச் செய்வதற்கான அனுமதியை மக்களின் சார்பாக அரசன் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்றனர். (47)

இந்த பயங்கரமான சடங்கை நிறைவேற்றும் நாளாக 1535–ம் வருடம் ஜனவரிமாதம் 21–ம் நாள் குறிக்கப்பட்டது. அந்த நாட்டின் மூடநம்பிக்கையினால் உண்டான பயமும், மதவெறியின்மீதான வெறுப்பும் தூண்டி எழுப்பப்பட்டது. பாரிஸ் நகரத் தெருக்கள் அதைச் சூழ்ந்திருந்த நாடுகளிலிருந்த திரள் கூட்டமான மக்களால் நெருக்கமடைந்தது. அந்த நாள், அதைச் சுட்டிக்காட்டும் ஒரு ஊர்வலத்துடன் உதிக்க வேண்டியதிருந்தது. அணிவகுத்துச்சென்ற பாதையிலிருந்த வீடுகளனைத்திலும் துக்கம்கொண்டாடுதலின் துணி விரித்து வைக்கப்பட்டிருந்தது. இடைவெளிகளில் பீடங்கள் நிறுத்திவைக்கப்பட்டு, ஒவ்வொரு வீட்டின் முன்பாகவும் பரிசுத்த நற்கருணையின் மேன்மைக்காக தீச்சுடர் எரியவைக்கப்பட்டது. பொழுது விடியுமுன், அரசனின் அரண் மனையில் அந்த ஊர்வலம் துவக்கப்பட்டது. ஒவ்வொரு சபைக் கோட்டத்திற்கும் சம்பந்தப்பட்ட சிலுவைக் கொடிக்குப்பின், எரியும் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு நகர மக்கள் இருவர் இருவராக வந்தனர். குருமார்களின் நான்கு பிரிவைச் சேர்ந்தவர்கள் அந்தந்தப் பிரிவுக்கான குறிப்பிட்ட சீருடையை அணிந்தவர்களாக வந்தனர். அதன்பின் புகழ்வாய்ந்த புண்ணியப்பொருட்களின் திரள்கள் வந்தன. இவைகளுக்குப்பின் தங்களின் சிவப்பும் இரத்தாம்பர நிறமுமுள்ள அலங்காரமிக்க உடைகளையும் டாம்பீக பொன் ஆபரணங்களையும் அணிந்தவர்களாக, போற்றும்விதத்தில் உயர்ந்த பிரபுக்களின் நிலையில் இருந்த சபைத்தலைவர்கள் வந்தனர். (48)

பெரும் தலைவர்கள் நான்கு இளவரசர்களால் சுமக்கப்பட்ட, விலை உயர்ந்த குடையின்கீழ் வந்தனர். அவர்களுக்குப்பின் அரச உடைகளும் கிரீடமும் இல்லாதவனாக, துக்கமாகக் கீழ்நோக்கிய முகத்துடன் அரசன் நடந்துவந்தான்.—Ibid., b. 13, ch. 21. அவன் தனது கரத்தில் ஒரு எரியும் மெழுகுவர்த்தியைப் பிடித்திருந்தான். இவ்வாறாகப் பிரான்ஸ் நாட்டின் மன்னன் மக்களின் முன், பாவம்செய்த குற்றவாளியைப் போல நடந்துவந்தான். அவனது ஆத்துமாவை மாசுபடுத்திய தீயசெயல்களுக்காக அல்ல, அவன் கைகளைக் கறை படுத்திய குற்றமற்றவர்களின் இரத்தத்திற்காகவும் அல்ல, திருப்பலி பூசையைப் பழிக்கத்துணிந்த தனது மக்களின் சாவுக்கேதுவான பாவத்திற்காக ஒவ்வொரு பீடத்தின்முன்னும், தன்னைத் தாழ்த்தினான். அவனுக்குப்பின் இருவர்இருவராக, அரசியும் நாட்டின் பெரும் தலைவர்களும் எரியும் தீவட்டிகளுடன் நடந்துவந்தனர். (49)

அந்த நாளின் ஆராதனையின் ஒரு பகுதியாக, பேராயரின் அரண்மனையிலிருந்த பெரிய அரங்கத்திலிருந்து, நாட்டின் மேலான

அதிகாரிகளை நோக்கி அரசன் தானே உரையாற்றினான். மிகத் துக்கமான முதத்துடன் அவன் அவர்கள் முன்தோன்றி, நாட்டின்மேல் வந்திருக்கும் "குற்றம், தேவ தூஷணம், துக்கமான கேவலமாக நாள்" என்று நெகிழவைக்கும் வார்த்தைகளில் புலம்பினான். பிரான்ஸ் நாட்டிற்கு அழிவை உண்டுபண்ணும் அச்சுறுத்தலான மதவெறி என்ற கொள்ளைநோயை நீக்குவதற்கு அந்த நாட்டின் விசுவாசமிக்க ஒவ்வொரு குடிமகனும் வரவேண்டும் என்று அழைத்தான். "மதிப்பிற்குரிய பெரியோர்களே! நான் உங்களது அரசனாக உண்மையாக இருப்பதுபோல, எனது அவயவங்களில் ஒன்று இந்த வெறுக்கத்தக்க அழுகலால் பாதிக்கப்பட்டிருந்தால், வெட்டி நீக்கும்படி அதை நான் உங்களிடம் கொடுத்துவிடுவேன்.... அதற்கும்மேலாக எனது குழந்தைகளில் ஒன்று இந்த நோயினால் தீட்டுப்பட்டிருந்தால், அவனை நான் விட்டுவைக்கமாட்டேன்.... நான் நானே அவனை தேவனுக்கென்று தியாகபலியாகக் கொடுத்து விடுவேன்" என்று கண்ணீர் அவனது பேச்சை அடைக்கக் கூறினான். அந்தக் கூட்டத்திலிருந்த அனைவரும் "நாங்கள் கத்தோலிக்க மார்க்கத்துக்காக வாழ்ந்து அதற்காக சாவோம்" என்று ஒருமித்து அழுகையுடன் கூறினார்கள்.—Ibid., b. 4, ch. 12. (50)

சத்தியத்தின் ஒளியை நிராகரித்த அந்த நாட்டைச் சூழ்ந்த இருள் மிகப் பயங்கரமானதாக இருந்தது. "இரட்சிப்பைக் கொண்டுவரும் கிருபை" தோன்றியிருந்தது. ஆனால் அதன் வல்லமையையும் பரிசுத்தத்தையும் கண்டபிறகும், ஆயிரக்கணக்கானவர்கள் அதன் தெய்வீக அழகினால் இழுத்துக்கொள்ளப்பட்டிருந்தபிறகும், அதன் ஒளியினால் நகரங்களும் கிராமங்களும் ஒளியடைந்தபிறகும், பிரான்ஸ் நாடு, அதைவிட்டுத்திரும்பி, ஒளியைக்காட்டிலும் இருளைத் தெரிந்துகொண்டது. பரலோகப்பரிசு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டபோது, அதை அவர்களிடமிருந்து எறிந்துவிட்டனர். அவர்கள் தாங்களாகவே விரும்பிய வஞ்சகத்திற்குப் பலியாகும்வரை தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் கூறினார்கள். இப்பொழுது மக்களை உபத்திரவப்படுத்துவதன் மூலமாக உண்மையாகவே தேவனுடைய ஊழியத்தைச் செய்வதாக நம்பினாலும், அவர்களது அந்த நேர்மையான நம்பிக்கை அவர்களைக் குற்றமற்றவர்களாக ஆக்கிவிடவில்லை. வஞ்சகத்திலிருந்தும், குற்றமற்றவர்களின் இரத்தத்தைச் சிந்துவதால் ஆத்துமாக்களுக்கு உண்டாகும் கறையிலிருந்தும் அவர்களை இரட்சித்திருக்கக்கூடிய ஒளியை அவர்கள் வேண்டுமென்றே புறக்கணித்தார்கள். (51)

எந்த பேராலயத்தில் மதவிரோதிகளை அழிக்கவேண்டும் என்ற பக்திவிநயமான உறுதிமொழியை ஜீவனுள்ள தேவனை மறந்த அந்நாடு

எடுத்ததோ, அதே இடத்தில் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்குப்பின், அறிவு தேவதையை சிங்காசனத்தில் அமர்த்த வேண்டியிருந்தது. மறுபடியும் அந்த ஊர்வலம் அமைக்கப்பட்டு, செய்துமுடிப்போம் என்று பிரான்ஸின் பிரதிநிதிகள் ஆணையிட்ட பணியைச்செய்யப் புறப்பட்டது. வீடு நோக்கிச்செல்லும் அவர்கள் பாதையில், மதவிரோதிகளின் தண்டனையை நிறைவேற்ற, இடை வெளிகளில் அக்கினி ஸ்தம்பங்கள் நிறுத்தப்பட்டது. அரசன் அந்தப் பயங்கரமான காட்சிக்கு சாட்சியாக இருக்கும்படி, அவன் சமீபிக்கும்போது, குவியலுக்கு தீக்கொளுத்தும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.—Wylie, b. 13, ch. 21. கிறிஸ்துவின் இந்த சாட்சிகள் அனுபவித்த சித்திரவதைகள் விவரிப்பதிற்கு மிகவும் பயங்கரமானவை. ஆனால் பலியானவர்களின் பகுதியில் அசைவு உண்டாயிருக்கவில்லை. மறுதலித்துக்கூறும்படி ஒருவர் அழைக்கப்பட்டபோது அவர்: "தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் முன்பு எவைகளைப் பிரசங்கித்தார்களோ, பரிசுத்தவான்களின் கூட்டத்தினர் எவைகளை நம்பினார்களோ, அவைகளைத்தான் நான் நம்புகிறேன். நரகத்தின் வல்லமைகள் அனைத்தையும் எதிர்க்கக்கூடிய தேவனில் எனது விசுவாசமும், நம்பிக்கையும் தளரவில்லை" என்று பதில் கூறினார். —D'Aubigne, b. 4, ch. 12. (52)

அந்த ஊர்வலம் மறுபடியும் மறுபடியும் சித்திரவதை செய்யும் இடங்களில் நின்றது. அந்த ஊர்வலத்தைத் தொடங்கிய இடமான அரசனின் அரண்மனையை அவர்கள் வந்தடைந்ததும் கூட்டம் பிரிந்தது. அந்த நாளில் செய்யப்பட்டவைகளைப்பற்றிய மிகுந்த திருப்தியுடனும், இப்போது ஆரம்பிக்கப்பட்ட இந்தப்பணி மதவிரோதிகளின் முழுமையான அழிவு உண்டாகும்வரையிலும் தொடருமென்று அரசனும் குருமார்களும் ஒருவரை ஒருவர் வாழ்த்தியபடி பிரிந்துசென்றனர். பிரான்ஸ் நாடு நிராகரித்த சமாதானத்தின் சுவிசேஷம் நிச்சயமாக வேருடன் பிடுங்கப்படவிருந்தது. (53)

அதன் விளைவு மிகப் பயங்கரமானவைகளாக இருக்கும். ஜனவரி மாதம் 21–ம் தேதி, 1793–ம் ஆண்டு, சீர்திருத்தவாதிகளை அழிக்கத் தீர்மானித்த அதே தினத்திற்கு மிகச் சரியாக 258 வருடங்களுக்குப்பின், வேறொரு ஊர்வலம் பாரிஸ் நகரின் தெருக்களில் வேறொரு நோக்கத்துடன் சென்றது. "மறுபடியும் அரசன் தான் முதல்நபராக இருந்தான். மறுபடியும் கலகங்களும் கூக்குரல்களும் உண்டாயின. மறுபடியும் அதிகமான எண்ணிக்கையில் துன்பப்படுத்தப்பட்டவர்களின் கூக்குரல்கள் கேட்கப்பட்டன. மறுபடியும் கறுப்புக் கழுமரங்கள் இருந்தன. மறுபடியும் அந்த நாளின் காட்சிகள் மிக பயங்கரமான மரண தண்டனைகளின் நிறைவேறுதலுடன் முடிவடைந்தது. பதினாறாம் லூயி, தன் சிறை அதிகாரிகளுடனும், அவனது மரண

தண்டனையை நிறைவேற்ற வந்தவர்களுடனும் கையோடு கைகோர்த்துச் சண்டையிட்டும், அவனது தலை கோடாரியால் துண்டிக்கப்படும்வரை, தலை வெட்டப்படும் இடத்திற்கு, எதிரிகளால் இழுத்துக்கொண்டு வரப்பட்டான். துண்டிக்கப்பட்ட அவனது தலை மேடையில் இருந்து விழுந்தது.'' இரத்தம் சிந்தும் பயங்கரவாதம் ஆளுகைசெய்த அந்நாட்களில், கிலட்டின் என்னும் கொலைக்கருவியால், அரசன் மட்டுமல்லாது இரண்டாயிரத்து எண்ணூறு மனித உயிர்களின் தலைகளும் அவ்விடத்துக்கருகில் துண்டிக்கப்பட்டு விழுந்தன. (54)

சீர்திருத்தம், தேவப்பிரமாணங்களின் நியமங்களை வெளியிட்டு, திறந்த வேதாகமத்தை உலகத்துக்குக் கொடுத்து, மக்களின் மனசாட்சியின் மீதான அதன் உரிமையை வலியுறுத்தியது. பரலோகத்தின் சட்டதிட்டங்களையும், கொள்கைகளையும் எல்லையற்ற அன்பு மனிதர்களுக்கு விவரித்துக்காட்டியிருந்தது. “ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்'' (உபா. 4:6) என்று தேவன் கூறியிருந்தார். பிரான்ஸ் நாடு, பரலோகத்தின் ஈவை நிராகரித்தபோது, அராஜகம் அழிவு என்பவைகளின் விதைகளை விதைத்தது. அதனால் செயலுக்கேற்ற வினை என்ற தவிர்க்கமுடியாத கோட்பாட்டின் வெளிப்பாடாக புரட்சியும் பயங்கரவாத ஆட்சியும் உண்டாயின. (55)

சுவரில் ஒட்டப்பட்ட அறிவிப்புகளின் விளைவினால் உண்டான உபத்திரவத்திற்கு வெகு நாட்களுக்கு முன்னர், தைரியமும் உறுதியும் மிக்க பாரல் என்பவர், அவரது பிறப்பிடத்தைவிட்டு ஓடிப்போகும்படி வற்புறுத்தப்பட்டார். அவர் சுவிட்சர்லாந்து சென்று, ஸ்விங்ளியின் பணிக்குத் துணைசெய்து, சீர்திருத்தத்திற்குச் சாதகமான நிலை அமையும்படி உதவினார். அவரது வாழ்க்கையின் பிற்பகுதி இங்குதான் செலவிடப்படவேண்டியதாக இருந்தது. அப்படியிருந்தும், பிரான்சிலுள்ள சீர்திருத்தப்பணியின்மீது பெருமளவிற்கு அவரது செல்வாக்கு இருந்தது. அவர் நாடுகடத்தப்பட்ட ஆரம்ப வருடங்களில், தனது பிறப்பிடத்தில் சுவிசேஷத்தைப் பரப்பும் பணியில், அவரது முயற்சிகள் திரும்பியிருந்தன. எல்லையருகிலிருந்த தனது கிராமப்புற மக்களுக்கிடையில், பிரசங்கம் செய்ய அதிகமான காலத்தைச் செலவிட்டு, போராட்டங்களைப்பற்றி விழிப்புடன் கவனித்து, தைரியமூட்டும் வார்த்தைகளினாலும் ஆலோசனைகளினாலும் உதவிசெய்தார். நாட்டை விட்டு வெளியேறிச்சென்ற மற்றவர்களின் உதவியுடன், ஜெர்மன் நாட்டுச்

சீர்திருத்தவாதிகளின் எழுத்துக்கள் பிரெஞ்சில் மொழிபெயர்க்கப்பட்டு, பிரெஞ்சு வேதாகமத்துடன் பெருமளவில் அச்சிடப்பட்டது. இந்த நூல்கள் புத்தக ஊழியர்களால் பெருமளவில் பிரான்ஸில் விற்கப்பட்டன. புத்தக ஊழியர்களுக்கு அவை குறைந்த விலையில் கொடுக்கப்பட்டதால் கிடைத்த லாபம் அப்பணியைத் தொடர்ந்துசெய்ய அவர்களைத் தாங்கியது. (56)

ஒரு தாழ்மையான ஆசிரியரின் உருவில் ஃபாரல் சுவிட்சர்லாந்தில் தமது பணியில் ஈடுபட்டார். ஒதுக்குப்புறமாயிருந்த ஒரு கிறிஸ்தவ சபைக்கோட்டத்திற்கு அவர் சென்று, சிறுவர்களுக்குப் போதிப்பதில் கவனம் செலுத்தினார். கல்வியின் மற்ற பாடங்களைப் போதித்ததோடு, மிகுந்த கவனத்துடன் வேதாகமச் சத்தியங்களை சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்கள் மூலமாக சத்தியம் அவர்களது பெற்றோர்களைச் சென்றடையும் என்று சிலரும் நம்பினர். ஆனால் அந்தப் பணியை நிறுத்த குருமார்கள் முன்வரவே, மூடநம்பிக்கை மிக்க கிராமப்புற மக்கள் அதற்கு எதிராக எழுப்பப்பட்டனர். “அதன் போதனைகள் சமாதானத்தைக் கொண்டுவராமல், சண்டையைக் கொண்டுவருவதால், அது கிறிஸ்துவின் சுவிசேஷமாக இருக்கமுடியாது” என்று குருமார்கள் வற்புறுத்தினார்கள்.—Wylie, b. 14, ch. 3. முதலாவது சீடர்கள் விரட்டப்பட்டபோது, ஒரு பட்டணத்தைவிட்டு அடுத்த பட்டணத்திற்கு ஓடிப்போனதைப்போல, அவரும் ஓடினார். கிராமத்திலிருந்து கிராமத்திற்கும், நகரத்திலிருந்து நகரத்திற்கும், பசி, குளிர், களைப்பு வாழ்க்கையில் எங்குமுள்ள அபாயங்கள் ஆகியவைகளை சகித்தவராக, அவர் கால்நடையாகச் சென்றார். சந்தைவெளிகளிலும் ஆலயங்களிலும், சில சமயங்களில் பேராலயங்களின் பிரசங்கப் பீடங்களிலிருந்தும் அவர் பிரசங்கம் செய்தார். கேட்பவர்கள் இல்லாமல் ஆலயங்கள் இருப்பதை சில சமயங்களில் கண்டார். சில சமயங்களில் அவரது பிரசங்கங்கள் சத்தங்களினாலும் கேலிகளினாலும் இடையூறுசெய்யப்பட்டன. மீண்டும் அவர் பிரசங்கப் பீடத்திலிருந்து முரட்டுத்தனமாக வெளியே இழுக்கப்பட்டார். ஒருமுறைக்குமேல் அவர் ஒழுங்கீனமாக மக்களால் கிட்டத்தட்ட சாகும்படி அடிக்கப்பட்டார். அப்படியிருந்தும் அவர் முன்சென்றார். அடிக்கடி புறக்கணிக்கப்பட்டபோதிலும் களைப்படையாத பிடிவாதத்துடன் தனது கருத்துக்களை வெளிப்படுத்தத் திரும்பினார். போப்புமார்க்கத்தின் பலத்த கோட்டைகளாக இருந்த பேரூர்களும் நகரங்களும், ஒன்றன்பின் ஒன்றாக சுவிசேஷத்திற்கு தங்கள் வாசல்களைத் திறக்கக் கண்டார். ஆரம்பத்தில் அவர் பணியாற்றியிருந்த சிறிய சபைக்கோட்டம் விரைவில் சீர்திருத்த விசுவாசத்தை ஏற்றுக்கொண்டது. மோரட், நாச்சாட்டால் என்னும் நகரங்கள் ரோம சபை சடங்குகளைமறுத்து, அவர்களது ஆலயங்களிலிருந்த ஆராதனைக்கென்று வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்களை நீக்கிவிட்டன. (57)

ஜெனீவா நகரில் புரொட்டஸ்டாண்டு இயக்கத்தின் கொடியை நடவேண்டும் என பாரல் நீண்ட நாட்களாக விரும்பியிருந்தார். அந்த நகரின்மீது அது வெற்றியடைந்தால், அது பிரான்ஸ் சுவிட்சர்லாந்து இத்தாலி ஆகிய நாடுகளின் சீர்திருத்த இயக்கத்திற்கு மையமாக மாறிவிடும் என எண்ணினார். இந்த நோக்கத்தை முன்வைத்து, இவைகளைச் சூழ்ந்திருந்த ஏராளமான பேரூர்களையும், கிராமங்களையும் ஆதாயப்படுத்தும்வரைத் தன் பணியைத் தொடர்ந்தார். அதன்பின் ஒரே ஒரு தோழனுடன் அவர் ஜெனீவாவிற்குள் நுழைந்தார். ஆனால் இரண்டு பிரசங்கங்கள் செய்யமட்டுமே அனுமதிக்கப்பட்டார். அரசாங்க அதிகாரிகளின் மூலமாக, அவர்மீது பழிசுமத்த பயனற்ற விதத்தில் முயன்ற குருமார்கள், சபைக்குழுவின்முன் அவரை வரும்படி அழைத்தனர். தங்கள் ஆடைகளுக்குள் ஆயுதங்களை மறைத்துவைத்துக்கொண்டு, அவரைக் கொலைசெய்கின்ற நோக்கத்துடன் அவர்கள் வந்திருந்தனர். அந்த ஆலோசனைக்கூட்டத்திலிருந்து அவர் தப்பிச்சென்றால், அவரது மரணத்தை நிச்சயிக்க, அந்த அரங்கத்திற்கு வெளியே தடிகளுடனும் பட்டயங்களுடனும் கோபமிக்க ஒரு கூட்டம் காத்திருந்தது. இருந்தபோதிலும், நீதிபதிகளும் ஆயுதப்படையும் அங்கிருந்ததால் அவர் காப்பாற்றப்பட்டார். மறுநாள் அதிகாலையில், அவரது தோழனால் ஏரிக்கு அக்கரையில் இருந்த ஒரு பாதுகாப்பான இடத்திற்கு நடத்தப்பட்டார். இவ்விதமாக, ஜெனீவாவிற்குச் சுவிசேஷம் அறிவிக்கும் அவரது முதல்முயற்சி முடிவடைந்தது. (58)

தோற்றத்தில் மிகத்தாழ்மையாக இருந்ததால், சீர்திருத்தவாதிகளான நண்பர்களாலுங்கூட தாழ்வாக நடத்தப்பட்டிருந்த ஒரு இளைஞன், அடுத்த சோதனைக்கான எளிமையான கருவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். பாரலே நிராகரிக்கப்பட்ட இடத்தில் இப்படிப்பட்ட ஒருவனால் என்ன செய்யமுடியும்? மிகவும் பலமும் தைரியமும்மிக்கவர்களே ஓடிப்போகும்படியாக வற்புறுத்திய புயலை, தைரியக்குறைவும் அனுபவமும் இல்லாத ஒருவன் எப்படிச் சமாளித்து நிற்கமுடியும்? “பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்”–சகரியா 4:6. “பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.” “தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது”–1 கொரி. 1: 27,25. (59)

**புரோமென்ட்** ஆசிரியராக அவரது பணியைத் தொடங்கினார். அவர் பள்ளியில் சிறுவர்களுக்குப் போதித்த சத்தியங்களை அவர்கள் அவர்களுடைய வீடுகளில் திரும்பக்கூறினார்கள். விரைவில் வேதாகம

விளக்கங்களைக் கேட்பதற்காக பெற்றோர்கள் கூடினார்கள். வகுப்பறை கவனித்துக் கேட்பவர்களால் நிரம்பியது. புதிய ஏற்பாடுகளும் கைப்பிரதிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. புதிய கோட்பாடுகளை பகிரங்கமாகக் கேட்கத் துணிவு இல்லாத அநேகரிடம் அவைகள் போய்ச் சேர்ந்தன. சிறிது காலத்திற்குப் பிறகு, அந்த ஊழியக்காரனுங்கூட ஓடிப்போகும்படி கட்டாயப்படுத்தப்பட்டான். ஆனால் அவர் போதித்த சத்தியம் மக்களின் மனங்களைப் பற்றிக்கொண்டது. சீர்திருத்தம் நடப்பட்டாயிற்று. அது தொடர்ந்து பலமடைந்து பரவியது. பிரசங்கிமார்கள் திரும்பிவந்தனர். அவர்களது உழைப்பினால் இறுதியில் புரொட்டஸ்டாண்டுத் தொழுகை முறையானது ஜெனீவாவில் நிலைநிறுத்தப்பட்டது. (60)

காலவின் பல இடங்களிலும் அலைந்துதிரிந்து, வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களையும் துன்பங்களையும் அனுபவித்து, அந்த நகரத்தின் வாசலுக்குள் நுழைந்தபோது, அந்த நகரம் ஏற்கனவே சீர்திருத் தத்தை அறிவித்திருந்தது. தனது பிறந்த இடத்தை சந்தித்துவிட்டு பேசில் நகருக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது, அதன் நேர்வழி ஐந்தாம் சார்லஸ ின் படையினால் சூழ்ந்திருப்பதைக் கண்டு, ஜெனீவாவின் வழியாகச் சுற்றிச்செல்லும்படி வற்புறுத்தப்பட்டார். (61)

இந்தச் சந்திப்பில் தேவனின் கரத்தை ஃபாரல் கண்டு கொண்டார். சீர்திருத்த விசுவாசத்தை ஜெனீவா ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும், அங்கே செய்துமுடிக்கப்படவேண்டிய பெரும் பணியானது இன்னுமிருந்தது. சமூகங்களாக மனமாற்றமடையாமல் தனிப்பட்டவர்களாகவே மனிதர்கள் தேவனுக்கென்று மனமாற்றமடைகின்றனர். புதுப்பிறவி என்பது ஆலோசனைக் குழுக்களின் கட்டளைகளினால் உண்டாகாமல், பரிசுத்தஆவியான வரின் வல்லமையால், இதயத்திலும் மனசாட்சியிலும் நிகழ்த்தப்பட வேண்டும். ஜெனீவா மக்கள் ரோம சபையின் அதிகாரத்தை வீசியெறிந்துவிட்டபோதிலும், அதன் ஆளுகையின்கீழ் பரவியிருந்த தீய பழக்கங்களை விட்டுவிலக, அந்த அளவிற்கு ஆயத்தமாக இருக்கவில்லை. சுவிசேஷத்தின் தூய்மையான கொள்கைகளை இங்கு ஸ்தாபிப்பதும், தேவனால் அழைக்கப்பட்ட நிலைக்கு ஏற்றவிதத்தில் தகுதியடையும்படி இந்த மக்களை ஆயத்தப்படுத்துவதும் எளிதான வேலையல்ல. (62)

இந்தப்பணியில் தன்னுடன் சேர்ந்து பணியாற்ற கால்வின் சரியான நபராக இருப்பார் என்று பாரல் நம்பினார். அங்கே தங்கியிருந்து ஊழியம் செய்யும்படி அந்த இளம் சுவிசேஷகரை தேவனின் பெயரால் பக்திவிநயத்துடன் வலியுறுத்தினார். கால்வின் பயத்தினால் பின்வாங்கினார். பயந்தவராகவும் சமாதானத்தை விரும்புபவருமாக இருந்ததால், தைரியம் சுதந்திரம்

ஆகியவைகளுடன் பலாத்காரத்தின் ஆவியையுங்கூடப் பெற்றிருந்த ஜெனீவா மக்களுடன் தொடர்புகொள்ளுவதில் இருந்து பின்வாங்கினார். அவரது பலவீனமான உடல்நலம், வாசிக்கும் பழக்கமும் ஓய்வைத்தேட அவரை நடத்தியது. சீர்திருத்தத்தின் நோக்கங்களுக்குத் தனது எழுதுகோலினால் சிறப்பான முறையில் சேவை செய்யலாம் என்று நம்பி, வாசிப்பதற்கு ஏற்றவாறு ஒரு அமைதியான இடத்தைத் தேடி, அங்கிருந்துகொண்டு அச்சகங்களின் மூலமாகப் போதித்து சபைகளைக் கட்ட விரும்பினார். ஆனால் ஃபாரல் அவர்களின் அறிவுரையும் பக்தி விநயமான எச்சரிப்பும் அவருக்குப் பரலோகத்திலிருந்து வந்த ஒரு அழைப்பைப்போல் இருக்கவே, அதை மறுக்கத் துணியவில்லை. “பரலோகத்தில் இருந்து தேவனின் கரம் நீட்டப்பட்டு, அவரைப் பிடித்து, பொறுமையில்லாமல் விட்டுச்செல்ல விரும்பிய அந்த இடத்திலிருந்து விலக இயலாதபடி அவரை வைத்ததாக காணப்பட்டது” என்று அவர் கூறினார்.—D’Aubigne, b. 9, ch. 17. (63)

அந்த நேரத்தில், புரொட்டஸ்டாண்டு இயக்கத்தைப் பெரும் ஆபத்துக்கள் சூழ்ந்துகொண்டன. போப்புவின் எதிர்ப்பு ஜெனீவா விற்கு எதிராக இடிமுழக்கமிட்டது, வலிமையான நாடுகள் அதை அழிக்கப்போவதாக பயமுறுத்தின. அரசர்களையும் பேரரசர்களையும் தனக்குக் கீழ்ப்படியும்படி வற்புறுத்தின வல்லமைமிக்க சமயத் தலைவரை இந்தச்சிறிய நகரம் எப்படித் தடுக்கமுடியும்? உலகத்தின் மாபெரும் வெற்றிசிறந்தோரின் படையின் எதிராக இது எவ்வாறு நிற்கும்? (64)

கிறிஸ்தவ உலகம் முழுவதிலும் புரொட்டஸ்டாண்டு மார்க்கம் வல்லமைமிக்க எதிரிகளால் பயமுறுத்தப்பட்டிருந்தது. சீர்திருத்தத்தின் முதல் வெற்றிகள் கடந்துசெல்ல, அதை அழித்துவிடலாம் என்று நம்பி, ரோம் புதிய சக்திகளை வரவழைத்தது. இந்தக் காலத்தில்தான் கொடுமைமிக்க, நேர்மையற்ற, ரோம மார்க்கத்தின் வீரர்களிலெல்லாம் வல்லமைமிக்க ஜெஸுய்ட்ஸ் என்ற சபை ஏற்படுத்தப்பட்டது. சகலவிதமான உலக உறவுகளிலிருந்தும், விருப்பங்களிலிருந்தும் நீக்கப்பட்டு, இயல்பான பற்றுகளுக்குச் செத்துப்போன, அறிவும் மனசாட்சியும் முழுமையாக மௌனப்படுத்தப்பட்ட அவர்கள், தங்களுடைய அமைப்பைத்தவிர வேறு எந்த சட்டத்தையும் பிணைப்பையும் அறியாதவர்களாக, அதன் வல்லமையை மாத்திரம் விரிவுபடுத்துபவர்களாக இருந்தனர். கிறிஸ்துவின் சுவிசேஷம் அதைப் பற்றிக்கொண்டிருப்பவர்களை ஆபத்தைச் சந்திக்கவும், பாடுகளைச் சகிக்கவும், குளிர், பசி, உழைப்பு, வறுமை, கழுமரத்தின் முன் சத்தியத்தின் கொடியை உயர்த்திப்பிடிக்கவும், நிலவறை, அக்கினிக் கம்பங்கள் ஆகியவைகளினால் கலங்காமலிருக்கவும் தகுதிப்படுத்தி இருக்கிறது. இப்படிப்பட்ட ஆபத்துக்களை பொறுத்துக்கொள்ள உதவும்

ஒரு மதவெறியினாலும், சத்தியத்தின் வல்லமையை எதிர்க்க வஞ்சகத்தின் ஆயுதங்களாலும், இந்த சக்திகளுடன் போராட ஜெஸுய்ட்ஸ் மார்க்கம் அதன் பின்னடியார்களை ஏவியது. அவர்களால் செய்யமுடியாத பெரிய குற்றமே இல்லை, நடைமுறைப்படுத்தமுடியாத கீழான வஞ்சனையே இல்லை, ஏற்றுக்கொள்ளமுடியாத மாறாட்டங்களே இல்லை. தொடர் வறுமைக்கும் தாழ்மைக்கும் நேர்ந்துகொண்டவர்களாக, செல்வத்தையும் வல்லமையையும் சேகரிப்பதும், புரொட்டஸ்டாண்டு மார்க்கத்தைக் கவிழ்ப்பதும், போப்பு மார்க்கத்தின் மேன்மையைத் திரும்ப அமைப்பதுமே அவர்களது திட்டமிடப்பட்ட நோக்கமாக இருந்தது. (65)

தங்களுடைய பிரிவின் அங்கத்தினர்களாக தோன்றியபோது, பக்தியைக் காட்டும் உடையை அணிந்திருந்து, சிறைகளையும் மருத்துவ மனைகளையும் சந்தித்து, நோயாளிகளுக்கும் ஏழைகளுக்கும் ஊழியம்செய்து, உலகத்தை வெறுத்துவிட்டதாகச் சொல்லி, நன்மைசெய்பவராகச் சுற்றித் திரிந்த இயேசுவின் பரிசுத்தமான பெயரை அணிந்திருந்தனர். இந்தக் குற்றமற்ற வெளித்தோற்றத்திற்கடியில், மிகப் பயங்கரமான குற்றங்களும் சாவுக்கேதுவான நோக்கங்களும் மறைத்துவைக்கப்பட்டிருந்தன. காரணத்தை முடிவு நீதியாக்கும் என்பது அவர்களது பிரிவின் அடிப்படை யான கொள்கையாக இருந்தது. இவ்வித மாயத்தினால், பொய், களவு, பொய்சத்தியம், கொலை ஆகியவைகள் சபையின் நன்மைக்கு உதவியபோது, மன்னிக்கப்பட்டதோடு புகழவும்பட்டன. பலவிதமான ஆள் மாறாட்டங்களில், அரசாங்க அலுவலகங்களில் நுழையும்படி பாதை அமைத்து, அரசருக்கு ஆலோசகர்களாக இருக்குமளவு உயர்ந்து, நாட்டின் கொள்கைகளை வடிவமைத்தார்கள். தங்களது எஜமானர்களை உளவு பார்க்க, அவர்களின் வேலைக்காரர்கள் ஆனார்கள். இளவரசர்கள், மேன்மக்கள் ஆகியோரின் பிள்ளைகளுக்காக கல்லூரிகளையும், சாதாரண மக்களுக்காகப் பள்ளிகளையும் நிறுவினார்கள். அதனால் புரொட்டஸ்டாண்டு பெற்றோரின் பிள்ளைகள் போப்புமார்க்கத்தின் மதச்சடங்குகளைக் கடை பிடிக்கும்படி இழுக்கப்பட்டனர். கத்தோலிக்கமார்க்கத் தொழுகையின் அனைத்து வெளித்தோற்றங்களும் ஆடம்பரங்களும் சடங்குகளின் காட்சிகளும் மனங்களைக் குழப்பும்படியும், கண்களைக் கூசச்செய்து சிந்தையை அடிமைப்படுத்தும்படியும் செய்யப்பட்டன. இவ்வாறாக, எந்த சுதந்திரத்திற்காக முற்பிதாக்கள் பாடுபட்டு இரத்தம் சிந்தியிருந்தார்களோ, அதற்குப் பிள்ளைகள் துரோகம் செய்தனர். விரைவில் அவர்கள் ஐரோப்பா எங்கும் பரவினர். எங்கெல்லாம் அவர்கள் சென்றார்களோ அங்கெல்லாம் போப்பு மார்க்கத்தின் எழுப்புதலும் பின்தொடர்ந்தது. (66)

அவர்களுக்கு அதிக வல்லமை கொடுப்பதற்காக விசாரணை

செய்யும் கட்டளை மீண்டும் பிறப்பிக்கப்பட்டது. பொதுவான வெறுப்போடு அது கருதப்பட்டிருந்தபோதிலும், கத்தோலிக்க நாடுகளிலும் மறுபடியும் போப்புமார்க்க அதிகாரிகளால் அது ஏற்படுத்தப்பட்டு, பகலின் வெளிச்சத்தால் தாங்கிக்கொள்ள முடியாத பயங்கரமான அட்டூழியங்களை அதன் இரகசிய அறைகளில் அது செய்தது. அநேக நாடுகளில் அவைகளின் மேன்மைகளாயிருந்த ஆயிரக்கணக்கானவர்கள், மிகத் தூய்மையும் மேன்மையும் உடையவர்கள், மிகுந்த நுண்ணறிவும் உயர்வான கல்வி அறிவும் கொண்டவர்கள், பக்தியும் அர்ப்பணிப்புமிக்கப் போதகர்கள், தொழிலதிபர்கள், தேசப் பிதாக்களாயிருந்த நகரவாசிகள் கொலைசெய்யப்பட்டனர். அல்லது வேறு நாடுகளுக்கு ஓடிவிடும்படி வற்புறுத்தப்பட்டனர்! (67)

சீர்திருத்தத்தின் ஒளியை அணைக்கவும், மனிதர்களிடமிருந்து வேதாகமத்தை நீக்கவும், இருண்ட காலத்தின் அறியாமையையும் மூடநம்பிக்கைகளையும் மீண்டும் புகுத்தவும், ரோம நிர்வாகத்தால் பயன்படுத்தப்பட்ட கருவிகள் இப்படிப்பட்டவையாக இருந்தன. ஆனால் தேவனுடைய ஆசீர்வாதத்தின்கீழும், லுத்தருக்குப் பின்வரும்படி அவர் எழுப்பின மேன்மைமிக்க மனிதர்களின் உழைப்பினாலும், புரொட்டஸ்டாண்டு இயக்கம் கவிழ்க்கப்படவில்லை. இளவரசர்களுடைய தயவுக்கும் படைக்கும் அதன் பலம் கடமைப்பட்டிருக்கவில்லை. மிகச் சிறிய நாடுகள், மிகவும் தாழ்மையும் வல்லமையுமற்ற நாடுகள் அதன் பலத்த அரண்களாயின. அதை அழிக்கும்படியாகத் திட்டம் தீட்டிய பலத்த எதிரிகளுக்கு நடுவில், சிறிய ஜெனீவாவும், அக்காலத்திலிருந்த பெரும் செல்வமிக்க நாடான ஸ்பெயினின் கொடுங்கோன்மையினை எதிர்த்துப்போரிட்ட, வடக்குக் கடலின் மணல்கரையிலிருந்த ஹாலந்தும், கடுங்குளிரான மலட்டு சுவீடனும் சீர்திருத்தத்திற்கான வெற்றியைக் கொண்டுவரக் காரணமாக இருந்தன! (68)

வேதாகமம் கூறும் சன்மார்க்க நெறிகளைக் கடைப்பிடிக்கும் முதல் சபையை அமைக்கவும், அதன்பின் ஐரோப்பா முழுவதிலும் சீர்திருத்தம் முன்னேறவும், கால்வின் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் ஜெனீவா நகரில் ஊழியம்செய்தார். பொதுமக்களின் ஒரு தலைவராக அவர் செயலாற்றிய விதத்தில், குறைகள் இல்லாமலில்லை. அவரது கோட்பாடுகளும் தவறில்லாமலில்லை. ஆனால் அவரது காலத்தில் மிக விசேஷமாயிருந்த சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கும், விரைவாகத் திரும்பிவந்துகொண்டிருந்த கத்தோலிக்க அலைக்கு எதிராக புரொட்டஸ்டாண்டு கொள்கைகளை தொடர்ந்து செயல்படுத்தவும், சீர்திருத்த சபைகளில், ரோம சபைப் போதனையின்கீழ் வளர்க்கப்பட்ட அகந்தையும் ஊழல்களும் இருந்த இடத்தில் எளிமையையும் வாழ்க்கையின் தூய்மையையும் வளர்ப்பதற்கும்

அவர் கருவியாக இருந்தார். (69)

சீர்திருத்தக் கோட்பாடுகளைப் பரப்பிட ஜெனீவாவிலிருந்து பிரசுரங்களுடன் ஆசிரியர்கள் வெளியில் சென்றனர். இதுவரை சகல நாடுகளிலும் உபத்திரவப்பட்டவர்கள், போதனைகளையும் ஆலோசனைகளையும் தைரியமூட்டுதலையும் எதிர்நோக்கி இருந்தனர். மேற்கு ஐரோப்பாவிலிருந்த—வேட்டையாடப்பட்ட சீர்திருத்தவாதிகள் அனைவருக்கும், கால்வின் இருந்த நகரம் ஒரு அடைக்கலப்பட்டணமாக அமைந்தது. நூற்றாண்டுகளாகத் தொடர்ந்த அந்த பயங்கரமான புயலிலிருந்து ஓடினவர்கள், பரதேசிகள் ஜெனீவாவின் வாசல்களுக்கு வந்தனர். பட்டினியடைந்தவர்களாக, காயமடைந்தவர்களாக, வீட்டையும் உறவினர்களையும் இழந்திருந்த அவர்கள் அன்புடன் வரவேற்கப்பட்டு, அரவணைப்புடன் கவனிக்கப்பட்டனர். அங்கு ஒரு அடைக்கலத்தைக் கண்டு, தங்களைச் சுவீகரித்த நகரை அவர்கள் தங்கள் திறமைகளினாலும் கல்வியினாலும் பக்தியினாலும் ஆசீர்வதித்தனர். இங்கு அடைக்கலம் கண்ட அநேகர், ரோம நிர்வாகத்தின் கொடுங்கோலாண்மையைத் தடுப்பதற்காக தங்கள் நாடுகளுக்குத் திரும்பிச்சென்றனர். ஜான் நாக்ஸ் என்னும் ஸ்காட் தேசத்து தைரியமிக்க சீர்திருத்தவாதி, அநேக ஆங்கிலேயத் தூய்மையாளர்கள், ஹாலந்து நாட்டின் புரொட்டஸ்டாண்டுகள், பிரான்சின் ஹுகோநாட்கள் ஆகியோர், அவர்களது நாட்டின் இருளை அகற்றி அதை ஒளிபெறச்செய்ய, ஜெனீவாவிலிருந்து சத்திய ஜோதியைச் சுமந்துசென்றனர். (70) ★

## 13

# போராட்டத்தில் பூத்திட்ட பொன்மலர்கள்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 237–244)**

நெதர்லாந்திலிருந்த போப்புமார்க்கத்தின் கொடுங்கோன்மை ஆரம்பகாலத்திலேயே எதிர்ப்பை உண்டுபண்ணியது. லுத்தரின் காலத்திற்கு எழுநூறு வருடங்களுக்கு முன், ரோம் நகருக்குத் தூதர்களாக அனுப்பப்பட்டு, அதன் உண்மையான குணத்தை அறிந்துகொண்ட இரு பேராயர்களால் போப்பு கடிந்துகொள்ளப்பட்டார். “தேவன் அரசியாகவும் மனைவியாகவும் இருக்கிற தமது சபைக்கு, அவளது குடும்பத்திற்கு, மேலானதும் வாடாததுமான சீதனத்தினால், உன்னதமான நிரந்தரமான ஒரு முன்னேற்பாட்டைச் செய்தார். அவளுக்கு நித்தியமான கிரீடத்தையும் செங்கோலையும் கொடுத்தார். இந்த நன்மைகள் அனைத்தையும் ஒரு திருடனைப்போல் நீங்கள் வழிமறித்துப் பிடுங்கிக்கொள்ளுகிறீர்கள். தேவனுடைய ஆலயத்தில் உங்களை நீங்களே, தேவனாக அமர்த்திக்கொண்டீர்கள். மேய்ப்பனாக இருப்பதற்குப் பதிலாக ஆடுகளுக்கு ஓநாய்களாக மாறினீர்கள். நாங்கள் உங்களை மேலான குருக்களாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென விரும்புகிறீர்கள். ஆனால் நீங்கள் ஒரு கொடுங்கோலனாக இருக்கிறீர்கள்.... உங்களை நீங்கள் அழைத்துக்கொள்ளுவதுபோல ஊழியக்காரர்களுக்கு ஊழியக்காரனாக இருக்கவேண்டிய நீங்கள், ராஜாதி ராஜாவாக முயற்சிசெய்கிறீர்கள்.... நீங்கள் தேவனுடைய கற்பனைகளுக்கு அவமதிப்பைக் கொண்டுவருகிறீர்கள்.... பூமியின் விசாலம் பரவுமிடமெங்கும் பரிசுத்தஆவியானவர் சகல சபை களையும் கட்டுகிறவர். நாம் குடிமக்களாயிருக்கிற நமது தேவனுடைய நகரம் பரலோகத்தின் சகல பகுதிகளிலும் பரவி உள்ளது. தெய்வீகமானதாக நடித்துக்கொண்டு, பரலோகத்துக்குத் தன்னை நிகராக்கி, தன்னுடைய ஞானம் அழியாதது என்று பெருமையடித்துக்கொண்டு, கடைசியாக

காரணமின்றி தான் தவறே செய்யாதவள்—செய்யவும் முடியாதவள் என்று சொல்லிக்கொண்டிருக்கிற, தீர்க்கதரிசிகளால் பாபிலோன் என்று பெயரிடப்பட்ட அந்த நகரத்தைக்காட்டிலும் மேலானது" என்றனர்.—Gerard Brandt, History of the Reformation In and About the Low Countries, b. 1, p. 6. (1)

இந்த மறுப்பை நூற்றாண்டுகளிலிருந்து நூற்றாண்டுகளுக்கு எதிரொலிக்க மற்றவர்கள் எழும்பினார்கள். பல நாடுகளிலும் பயணித்து, பல பெயர்களால் அறியப்பட்ட அந்த ஆரம்பகால ஆசிரியர்கள் வௌடாயிஸ் மிஷனரிகளின் சுபாவத்தை உடையவர்களாக இருந்து, சுவிசேஷத்தின் அறிவை எங்கும் பரப்பி, நெதர்லாந்துக்குள்ளும் நுழைந்தனர். அவர்களது கோட்பாடுகள் விரைவாகப் பரவின. வால்டென்னியர்களின் வேதாகமத்தை அவர்கள் டச்சு மொழியில் மொழிபெயர்த்தனர். "அதில் பெரும் அனுகூலம் இருந்தது. வேடிக்கை இல்லை. வஞ்சகங்கள் இல்லை. சத்திய வசனங்களைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. உண்மையில் அங்குமிங்குமாகச் சில கடினமானவைகள் இருந்தன. ஆனால் அதிலும் எது நல்லது எது பரிசுத்தமானது என்கிற ஊனையும் இனிமையையும் எளிதில் கண்டுகொள்ளலாம்" என்று பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்த பண்டைய விசுவாசத்தின் நண்பர்கள் எழுதினார்கள்.—Ibid., b. 1, p. 14. (2)

இப்பொழுது ரோமன் கத்தோலிக்கர்களின் உபத்திரவம் ஆரம்பமானது. ஆனால் விறகுக்கட்டைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் நடுவில் விசுவாசிகள் தொடர்ந்து பெருகி, மையக்கோட்பாட்டின் அதிகாரி வேதாகமம் ஒன்று மட்டும்தான் என்றும் "நம்பும்படி ஒருவரும் பலவந்தப்படுத்தப்படக்கூடாது, மாறாக, போதனையினால் வெல்லப்படவேண்டும்" என்றும் உறுதியுடன் அறிவித்தனர்.—Martyn, vol. 2, p. 87. (3)

லுத்தரின் போதனைகள் நெதர்லாந்தில் செழிப்பான மண்ணைக் காணவே, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆர்வமும் விசுவாசமுமிக்க மனிதர்கள் எழும்பினார்கள். ஹாலந்தின் மாநிலங்களில் ஒன்றிலிருந்து **மென்னோ சைமன்ஸ்** என்பவர் வந்தார். ரோமகல்வியைப் பயின்று, குருவாக அபிஷேகம்செய்யப்பட்ட அவர், வேதாகமத்தைப்பற்றி முழுமையாக அறியாமலிருந்து, மதப்புரட்டு தன்னை வஞ்சித்துவிடுமென்ற அச்சத்தில் வேதாகமத்தை வாசிக்காதிருந்தார். திவ்யநற்கருணையில் இயேசுநாதர் தமது சரீரத்துடனும் இரத்தத்துடனும் எழுந்தருளுகிறார் என்னும் கோட்பாட்டைப்பற்றிய சந்தேகம் அவரைப் பலமாக நெருக்கியபோது, அதை சாத்தானால் வரும் ஒரு சோதனை எனக் கருதி, அதிலிருந்து ஜெபத்தினாலும், பாவஅறிக்கையினாலும் விடுபட முயற்சித்தார். ஆனால்

அது வீண்முயற்சியாயிருந்தது. நேரத்தை விரயமாக்கும் காட்சிகளில் பங்கெடுப்பதினால் அவரைக் குற்றப்படுத்தும் மனசாட்சியின் குரலை மௌனம் அடையச்செய்ய முன்றார். அதனாலும் பயனுண்டாகவில்லை. சில நாட்களுக்குப்பின், அவர் புதிய ஏற்பாட்டை ஆராய்ந்தார். இது, லுத்தரின் எழுத்துக்களுடன் சேர்ந்து சீர்திருத்த விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளச் செய்தது. அதன்பின், சற்றுகாலத்தில், அயல் கிராமம் ஒன்றில், ஒரு மனிதன் மறுபடியும் ஞானமுழுக்கு எடுத்துக்கொண்டதற்காக, அவனது தலை துண்டிக்கப்பட்ட காட்சியை கண்டார். இச்செயல் குழந்தை ஞானமுழுக்கைக்குறித்து வேதாகமத்திலிருந்து ஆராய அவரை நடத்தியது. அதற்கான ஒரு சான்றையும் வேதவாக்கியங்களிலிருந்து அவரால் காண இயலவில்லை. ஆனால் மனந்திரும்புதலும் விசுவாசமும் ஞானமுழுக்கைப் பெற்றுக்கொள்ளும் நிபந்தனையாக எங்குமிருப்பதை கண்டார். (4)

ரோம சபையிலிருந்து மென்னோ விலகி, அவர் பெற்றுக்கொண்ட சத்தியத்தைப் போதிப்பதில் தனது வாழ்க்கையைச் செலவழித்தார். ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய இரு இடங்களிலும், கீழ்த்தரமான ராஜதுரோகத்திற்குப் பரிந்துரைசெய்து, ஒழுக்கத்தையும் பண்பையும் கெடுத்து, பலாத்காரம், உட்கலகம் ஆகியவைகளை பரிந்துரைக்கும் ஒருவகையான மதவெறியர்கள் எழும்பினர். இந்த இயக்கங்கள் எப்படிப்பட்ட பயங்கரமான விளைவுகளுக்கு நடத்தும் என்பதை மென்னோ கண்டு, இந்த மதவெறியர்களின் தவறான போதனைகளையும் காட்டுத்தனமான திட்டங்களையும் விடாமுயற்சியுடன் எதிர்த்தார். எப்படியிருந்தாலும் இந்த மதவெறியர்களால் தவறாக நடத்தப்பட்ட ஆனால் நாசத்துக்கேதுவான அவர்களது கோட்பாடுகளை மறுதலித்த அநேகர் இருந்தனர். வால்டென்னிய போதனைகளின் கனிகளான பண்டைய கிறிஸ்தவர்களின் பின்தோன்றல்களாக அநேகர் இன்னமும் இருந்தனர். இந்த வகுப்பினர்களுக்கிடையில் மிகுந்த வைராக்கியத் துடனும் வெற்றியுடனும் மென்னோ ஊழியம்செய்தார். (5)

இருபத்தைந்து வருடங்களாக அடிக்கடி தன் வாழ்க்கையில் பெரும் துன்பங்களையும் தனிமையையும், ஆபத்துக்களையும் அனுபவித்துக்கொண்டு, தனது மனைவியுடனும் குழந்தைகளுடனும் பயணம் செய்தார். நெதர் லாந்திலும், வடக்கு ஜெர்மனியிலும் பயணம்செய்து, தாழ்த்தப்பட்ட சமூகத் தினருக்கிடையில் வேலைசெய்து, பரந்த செல்வாக்கை ஏற்படுத்தினார். குறைந்த கல்வியையே பெற்றிருந்தாலும் அசையாத நேர்மை உள்ளவராக, இயல்பான பேச்சுவன்மை கொண்டவராக, தாழ்மையான ஆவி, சாதுவான தன்மை, உண்மையும் ஆர்வமுமிக்க பக்தி ஆகியவைகளோடு, எவைகளை போதித்தாரோ, அவைகளின்படி வாழ்ந்து மக்களின் நம்பிக்கையைப்

பெற்றார். அவரது பின்னடியார்கள் சிதறடிக்கப்பட்டவர்களாகவும் ஒடுக்கப்பட்ட வர்களாகவும் இருந்து மதவெறிமிக்க முன்ஸ்டெரிட்ஸ் என்பவர்களால் குழப்பப்பட்டனர். அப்படியிருந்தும் அவரது ஊழியத்தின்கீழ் பெரும் எண்ணிக்கையான மக்கள் மாற்றமடைந்தனர். (6)

பொதுவாக நெதர்லாந்தைவிட வேறெங்கும் அதிகமான சீர்திருத்தக் கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சில நாடுகளில் அதைச் சார்ந்தவர்கள் மிகப் பயங்கரமான உபத்திரவங்களைச் சகித்தனர். ஜெர்மனியில் ஐந்தாம் சார்லஸ் சீர்திருத்தத்தைத் தடை செய்து, அதைச் சார்ந்த அனைவரையும் கம்பங்களில் கட்டி எரிக்கப்பட கொண்டுவருவதற்கும் மகிழ்ச்சியாயிருந்தான். ஆனால் அவனது கொடுங்கோன்மைக்கு எதிரான தடையாக இளவரசர்கள் இருந்தனர். நெதர்லாந்தில் அவனது வல்லமை அதிகமாக இருக்கவே, உபத்திரவப்படுத்தும் கட்டளைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்தன. வேதாகமத்தை வாசித்தல், அதைக் கேட்டல், பிரசங்கித்தல், அதைப்பற்றிப் பேசுவதுங்கூட தண்டனையை அல்லது தீயை கொண்டுவந்தது. இரகசியமாக தேவனை நோக்கி ஜெபித்தல், ஒரு சிலையின்முன் குனிந்து வணங்க மறுத்தல், ஒரு சங்கீதத்தை வாசித்தல் ஆகியவைகளுங்கூட மரணதண்டனைக்குரியவைகளாக இருந்தன. தங்களது தவறுகளைவிட்டு விலகும்படி அவைகளை மறுக்கும் சபதம் செய்பவர்களுங்கூடக் குற்றவாளிகளாக்கப்பட்டனர். அவர்கள் ஆண்களாக இருந்தால், பட்டயத்தால் சாகவேண்டும். பெண்களாக இருந்தால் உயிருடன் புதைக்கப்படவேண்டும். உறுதியாக நின்றிருந்தவர்கள் சில சமயங்களில் இதே தண்டனையை அனுபவித்தனர். சார்லஸ், இரண்டாம் பிலிப் ஆகியோரின் ஆட்சியின்கீழ் ஆயிரக்கணக்கானவர்கள் அழிந்தனர். (7)

ஒரு சமயம் மதவிரோதம் சம்பந்தமாக விசாரணை செய்பவர் களின்முன், திருப்பலி பூசைக்கு வராமலிருந்து வீட்டில் ஆராதனை செய்தனர் என்று குற்றச்சாட்டுடன், ஒரு குடும்பம் முழுவதும் கொண்டுவரப்பட்டது. அவர்களது இரகசியமான வழக்கம்பற்றி விசாரித்தபோது, எல்லோரிலும் இளைய மகன் “நாங்கள் முழங்காலில் நின்று, தேவன் எங்கள் உள்ளங்களைப் பிரகாசிக்கச்செய்து, எங்கள் பாவங்களை மன்னித்து, எங்களது அரசரின் ஆட்சி சிறப்படையவேண்டும் என்றும், அவரது வாழ்க்கை மகிழ்ச்சியானதாக இருக்கவேண்டுமென்றும் ஜெபிக்கிறோம் தேவன் எங்கள் நீதிபதிகளை பாதுகாக்கவேண்டுமென்றும் ஜெபிக்கிறோம்” என்று கூறினார்.—Wylie, b. 7, ch. 6. இதைக்கேட்ட நீதிபதிகளில் சிலர் ஆழமாக நெகிழ்ந்தனர். அப்படியிருந்தும் தந்தையும், மகன்களில் ஒருவரும் நெருப்புக் கம்பத்தில் கட்டிவைத்து எரிக்கப்பட அனுப்பப்பட்டனர். (8)

உபத்திரவம் செய்பவர்களின் கோபம் இரத்தசாட்சிகளின் விசுவாசத்தினால் சமநிலைப்படுத்தப்பட்டது. ஆண்கள்மட்டுமல்ல, மென்மையான இளம்பெண்களுங்கூட, பின்வாங்காமல் தங்கள் தைரியத்தை வெளிக்காட்டினர். நெருப்பைத் தாங்கிக்கொண்டிருந்த அவர்களது கணவர்களுக்கருகில் மனைவிகள் நின்று, தேறுதலான வார்த்தைகளை மெல்லக்கூறி, அல்லது தாவீதின் சங்கீதங்களைப் பாடி அவர்களை உற்சாகப்படுத்தினர். இளம் பெண்கள் தங்களது படுக்கையறைக்கு இரவில் துயிலச்செல்லுவதுபோல், உயிருடன் கல்லறைகளில் நுழைந்தனர். அல்லது மிகச் சிறந்த ஆடைகளை உடுத்தி, திருமணத்திற்குச் செல்வதுபோல் கழுமரத்திற்கும் நெருப்புக்கம்பத்தில் எரிக்கப்படவும் சென்றனர்.—Ibid., b. 18, ch. 6. (9)

அஞ்ஞான மார்க்கத்தின் நாட்களில், சத்தியத்தை அழிக்க வகைதேடியபோது, கிறிஸ்தவர்களின் இரத்தம் விதையாக இருந்தது. (See Tertullian, Apalogy, paragraph 50). உபத்திரவம் சத்தியத்திற்குச் சாட்சியாக இருக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவியது. மேற்கொள்ளமுடியாத மக்களின் தீர்மானத்தினால் வெறிபிடித்தவனாகும் வண்ணம் விஷத்தினால் கொட்டப்பட்டவனைப்போல வெறிபிடித்த அரசன், வருடாவருடம் தனது கொடூரமான பணியில் வீணாகத் தீவிரமடைந்தான். ஆரஞ்சு என்ற இடத்திலிருந்து மதிப்புமிக்க **வில்லியம்** என்பவரால் இறுதியாக நடத்தப்பட்ட புரட்சியானது, ஹாலந்திற்குத் தொழுகையின் சுதந்திரத்தைக் கொண்டுவந்தது. (10)

பிட்மாண்ட் மலைகளில், பிரான்ஸின் சமவெளிகளிலும் ஹாலந்தின் கடற்கரையிலும் சுவிசேஷத்தின் முன்னேற்றம் அதன் சீடர்களின் இரத்தத்தால் அடையாளப்படுத்தப்பட்டது. ஆனால் வட பகுதியிலிருந்த மாநிலங்களில் அது அமைதியாக நுழைந்தது. விட்டன்பர்க்கிலிருந்து தங்களது வீடுகளுக்குத் திரும்பிய மாணவர்கள், சீர்திருத்த விசுவாசத்தை ஸ்காண்டிநேவியாவிற்குச் சுமந்துசென்றனர். வெளியிடப்பட்ட லுத்தரின் எழுத்துக்களும் ஒளியைப் பரப்பின. ஊழல்கள், டாம்பீகம், கத்தோலிக்க சபையின் மூடநம்பிக்கை ஆகியவைகளிலிருந்து திரும்பிய வடதிசையிலிருந்த கடினமான மக்கள் தூய்மையும் எளிமையும் ஜீவனைத் தருவதுமான வேதாகமச் சத்தியங்களை வரவேற்கத் திரும்பினர். (11)

டென்மார்க் சீர்திருத்தவாதியான **டாசென்** ஒரு விவசாயியின் மகன். தீவிரமான நுண்ணறிவு படைத்தவர் என்று அவர் சிறுவனாயிருக்கும்போதே சாட்சிபகரப்பட்டார். கல்வியின்மீது தாகமுடையவராக இருந்தார். ஆனால் குடும்பச் சூழ்நிலையின் காரணமாக, அவர் மடத்தில் நுழைந்தார். அங்கு அவரது வாழ்க்கையின் தூய்மை, சிரத்தை, நேர்மை ஆகியவை

மேலதிகாரியின் ஆதரவைப் பெற்றன. எதிர்காலத்தில் சபைக்கு நல்ல சேவைசெய்யக்கூடிய திறமை அவரிடம் இருப்பதைத் தேர்வுகள் காட்டின. எனவே ஜெர்மனியிலோ அல்லது நெதர்லாந்திலோ இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்கள் ஏதாவதொன்றில் அவருக்குக் கல்வி அளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அந்த இளைஞன் விட்டன்பர்கிற்கு மட்டும்செல்லக்கூடாது என்ற ஒரு தடையுடன், தனக்கு விருப்பமான வேறு பள்ளியைத் தானாகவே தெரிந்துகொள்ளும் அனுமதியைப் பெற்றான். சபயின் மேதை மதப்புரட்டு என்னும் விஷத்தினால் ஆபத்துக்குள்ளாக்கக்கூடாது என்று சமயத் துறவிகள் கூறினர். (12)

அக்காலத்திலிருந்த ரோம கோட்டைகளில் ஒன்றான கோலோன் என்ற இடத்திற்கு டாசென் சென்றார். தியானத்தினால் கடவுளை அறியலாம் என்ற மனிதர்களுடைய கோட்பாட்டின்மீது அவர் வெறுப்படைந்தார். அந்த சமயத்தில், லுத்தரின் எழுத்துக்கள் அவருக்குக் கிடைத்தன. ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் அதை வாசித்தறிந்து, சீர்திருத்தவாதியின் தனிப்பட்ட உபதேசங்களை மகிழ்ச்சியோடு அறிந்துகொள்ள அதிகம் விரும்பினார். ஆனால் இப்படிச்செய்தால், அவரது மடாலயத் தலைவரைக் குற்றப்படுத்தி அவருடைய ஆதரவையும் இழக்கவேண்டும். அவரது தீர்மானம் விரைவில் எடுக்கப்பட்டது. குறுகிய காலத்தில் விட்டன்பர்க்கில் மாணவராகத் தன்னைப் பதிவுசெய்துகொண்டார். (13)

அவர் டென்மார்க்கிற்குத் திரும்பிவந்தபின், மீண்டும் அவரது மடத்திற்குச் சென்றார். அவரை ஒரு லுத்தரன்வாதி என எவரும் சந்தேகிக்கவில்லை. அவர் தனது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் அவரது தோழர்களின் தவறான எண்ணங்களைத் தூண்டிவிடாமல், தூய்மையும் விசுவாசமும் பரிசுத்தமுமான வாழ்க்கைக்கு அவர்களை நடத்த முயற்சித்தார். அவர் வேதாகமத்தைத் திறந்து, அதன் மெய்ப்பொருளை விளக்கிக்கூறி, கடைசியில் பாவியின் நீதியாகவும், பாவியின் இரட்சிப்பிற்கான ஒரே நம்பிக்கையாகவும், கிறிஸ்து ஒருவர் மட்டும் தான் இருக்கிறார் என்று போதித்தார். ரோம மார்க்கத்தின் பாதுகாவலராக அவர் விளங்குவார் என்று அவர்மீது நம்பிக்கை வைத்திருந்த மடத்தின் அதிகாரியின் கோபம் மிகப் பெரியதாக இருந்தது. உடனடியாகத் தனது மேற்பார்வையில் இருந்து நீக்கி, கடினமான மேற்பார்வையின்கீழ், வேறொரு இடத்தில் தனிமையான அறையில் அடைத்துவைக்கப்பட்டார். (14)

அவரது புதிய பாதுகாப்பாளர்களுக்கு திகில் உண்டாகும் வண்ணம் சந்நியாசிகளில் அநேகர் தாங்கள் புரொட்டஸ்டாண்டு மார்க்கத்திற்கு மாறிவிட்டதாக அறிவித்தனர். டாசென் தனது அறையின் கம்பிகளின்

இடைவெளியின்மூலம் சத்தியத்தைப்பற்றிய அறிவை தனது நண்பர்களுக்குக் கொடுத்தார். மதவிரோதத்தைச் சமாளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் காரியத்தில் அந்த டேனிஷ்குருமார்கள் திறமையானவர்களாக இருந்திருந்தால், டாசெனின் குரல் மீண்டும் ஒருபோதும் கேட்கப்பட்டிருக்காது, பூமிக்கடியிலிருந்த ஏதாவதொரு நிலவறையின் கல்லறைக்கு அனுப்புவதற்குப் பதிலாக, அவரை மடாலயத்திலிருந்து வெளியேற்றினார்கள். இப்பொழுது அவர்கள் வல்லமையற்றவர்களாக இருந்தார்கள். அச்சமயம் வெளியிடப்பட்ட அரசின் கட்டளை, புதிய கோட்பாட்டின் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பைத் தந்தது. டாசென் பிரசங்கம்செய்யத் தொடங்கினார். எங்கும் ஆலயங்கள் திறக்கப்பட்டன. அவரது சொற்பொழிவைக் கேட்க மக்கள் திரளாகப் பெருமளவில் கூடினார்கள். மற்றவர்களும் தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கித்தனர். டேனிஷ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாடு எங்கும் விநியோகிக்கப்பட்டது. அந்தப் பணியைக் கவிழ்க்கவேண்டுமென்று பேப்பு மார்க்கவாதிகள் செய்த முயற்சி அதனை மேலும் விரிவடையச்செய்தது. அதற்குப்பின் டென்மார்க் தேசம் சீர்திருத்த விசுவாசத்தை ஏற்றுக்கொண்டதாக அறிவித்தது. (15)

ஸ்வீடனிலுங்கூட, விட்டன்பர்க் கிணற்றிலிருந்து பருகிய இளைஞர்கள் ஜீவத் தண்ணீரைத் தங்கள் நாட்டு மக்களுக்குச் சுமந்து சென்றனர். ஓரிப்ரோ என்னுமிடத்திலிருந்த ஒரு கொல்லனின் மகன்களான, **ஓலாப், லாரென்டியஸ் பெட்ரி** என்ற இரு இளைஞர்களும் தாங்கள் லுத்தர் மெலாங்தன் ஆகியோரிடம் பயின்ற சீர்திருத்தத்தின் சத்தியங்களைப் போதிப்பதில் ஆர்வமுள்ளவர்களாக இருந்தனர். லாரென்டியஸ் மெலாங்தனைப்போல கல்வியும் சிந்தனையும் அமைதியும் மிக்கவராக இருந்தபோது, ஓலாப் அவரது வைராக்கியத்தினாலும், பேச்சுத் திறமையினாலும் மக்களை எழுப்பினார். இருவரும் உறுதியான பக்தி, உயர்ந்த இறையியலறிவு, சத்தியத்தை முன்கொண்டுசெல்லுவதில் குன்றாத தைரியம் உள்ள மனிதர்களாக இருந்தனர். போப்புமார்க்கத்தின் எதிர்ப்பு குறைவாக இருக்கவில்லை. அறிவின்மையும், மூடநம்பிக்கையுமிக்க மக்களை கத்தோலிக்கப் பாதிரிமார்கள் தூண்டிவிட்டார்கள். ஓலாப், பெட்ரி இருவரும் பயங்கரவாதிகளின் கூட்டத்தினரால் அடிக்கடி தாக்கப்பட்டு பல சமயங்களில் உயிர்தப்பிப் பிழைத்தனர். இருந்தபோதும் இந்தச் சீர்திருத்தவாதிகள் அரசனால் காக்கப்பட்டனர். ரோம மார்க்கத்தின் ஆளுகையின்கீழ் மக்கள் வறுமையில்மூழ்கி, ஒடுக்குதலினால் நசுக்கப்பட்டிருந்தனர். அவர்கள் வேதவாக்கியங்கள் இல்லாமல் கைவிடப்பட்டவர்களாக, மனதிற்கு ஒளியைக் கொண்டுவராத, அடையாளங்களையும் சடங்காச்சாரங்களையும் மட்டுமே உடைய ஒரு மதத்தை உடையவர்களாக இருந்து, தங்கள் அஞ்ஞான

முன்னோர்களின் மூடநம்பிக்கைகளுக்கும், அஞ்ஞான பழக்கங்களுக்கும் திரும்பிக்கொண்டிருந்தனர். ஒன்றை ஒன்று எதிர்க்கும் அணிகளின் நிரந்தரச் சண்டைகளினால் அந்த நாடு பிரிந்து, எல்லோரது துன்பத்தையும் அதிகரிக்கச் செய்திருந்தது. நாட்டிலும் சபையிலும் சீர்திருத்தம் உண்டாகவேண்டுமென்று அரசன் தீர்மானித்து, ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திற்கெதிரான சண்டையில் துணைவர்களாக இருக்கத் தகுதியான இவர்களை வரவேற்றார். (16)

அரசனுக்கும் சுவீடன் தேசத்து முன்னணி மனிதர்களுக்கும்முன் கத்தோலிக்க மார்க்கத்திற்கு எதிராக ஓலாப், பெட்ரி சீர்திருத்த விசுவாசக் கோட்டிாடுகளைத் தற்காத்துப் பேசினர். முற்பிதாக்களின் போதனைகள் வேதவாக்கியங்களுக்கு இசைவாக இருக்கும்போது மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று அவர் அறிவித்தார். ஏனெனில், விசுவாசம்சம்பந்தப்பட்ட முக்கியமான கோட்பாடுகள் எல்லா மனிதர்களும் அதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. என்னுடைய உபதேசங்கள் என்னுடையவைகள் அல்ல என்னை அனுப்பினவருடையவையாக இருக்கின்றன (யோவான் 7:16). நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் (கலா. 1:8) என்று வேதம் சொல்லியிருக்கும்போது கோட்பாடுகளை அவர்களது விருப்பப்படி இயற்றி, அவை இரட்சிப்பிற்கு அவசியமானவைகள் என்று கூறி உபதேசிக்கலாமா? என்று சீர்திருத்தவாதிகள் வினவினர். சபையின் கட்டளைகள் தேவப் பிரமாணங்களுக்கு எதிராக இருக்கும்போது, அவைகள் அதிகாரம் உடையவைகள் அல்ல என்றும், வேதாகமம்! வேதாகமம் மட்டுமே! விசுவாசத்தின் சட்டமாகவும் நடைமுறையாகவும் உள்ளது என்பதே புரொட்டஸ்டாண்டு மார்க்கத்தின் கொள்கை என்பதையும் அவர் எடுத்துக்காட்டினார். (17)

இந்த போட்டி, ஒப்பிடத்தக்க ஒரு இருண்ட மேடையின்மீது நடத்தப்பட்டிருந்தாலும், “சீர்திருத்தத்தின் சேனையில் எப்படிப்பட்ட மனிதர்கள் இருந்தார்கள்” என்று நமக்குக் காட்டுகிறது. அவர்கள் கற்றவர்களல்ல; வகுப்புவாதிகளல்ல; சர்ச்சைக்குறியவர்களுமல்ல. அவைகளிலிருந்து வெகு தூரம் சென்று, தேவனின் வார்த்தைகளை படித்து, வேதாகமமாகிய ஆயுத சாலை வழங்கிய போர்க்கருவிகளை நன்கு பிரயோகிக்க அறிந்தவர்கள். புலமையில் அவர்கள் காலத்தைவிட உயர்ந்திருந்தார்கள். நமது கவனத்தை விட்டன்பர்க் மற்றும் ஜூரிச் போன்ற ஒளிமிக்க இடங்களுக்கும், அவைகளில் இருந்த லுத்தர், மெலாங்தன், ஸ்விங்ளி, ஓகோலாம்பேடியஸ்

ஆகிய புகழ்மிக்க பெயர்களுக்கும் செலுத்தும்போது, அந்த இயக்கத்தின் தலைவர்களாக இருந்த அவர்கள் மிகப்பெரும் வல்லமையும் திறமையும் கொண்டிருந்திப்பார்கள் என்றே இயற்கையாக எதிர்பார்க்கிறோம். ஆனால் இந்த அப்படிப்பட்டவர்கள் அல்ல. ஸ்வீடனிலிருந்த பிரபலமில்லாத அரங்கங் களுக்கும் ஓலாப், லாரெம்டியஸ் என்கிற தாழ்மையானவர்களுக்கும்—தலைவர்களிலிருந்து ஊழியக்காரர்கள்வரை திரும்பிப்பார்க்கும்போது என்ன அறிகிறோம்? படிப்பாளிகளையும் இறையியல் வல்லுனர்களையும்—சுவிசேஷ சத்தியத்தின் முழு அமைப்பையும் முழுமையாக படித்துத் தேறின, ரோமமார்க்கத்தின் மேன்மைமிக்கவர்களின்மீதும், பள்ளி ஆசிரியர்களின்மீதும் எளிதில் ஜெயம்கொண்டவர்களைத்தான்!"—Ibid., b. 13, ch. 6. (18)

இந்த வாக்குவாதத்தின் விளைவாக, சுவீடனின் அரசன் புரொட்டஸ்டாண்டு விசுவாசத்தை ஏற்றுக்கொண்டான். அதன்பின் சில நாட்களுக்குள், தேசிய மன்றமும் அதற்கு அனுகூலமாயிருப்பதை அறிவித்தது. புதிய ஏற்பாடு, ஓலாப் பெட்ரியால் சுவீடன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. அதன்பின் அரசனின் விருப்பப்படி, அந்த இரு சகோதரர்களும் முழு வேதாகமத்தையும் மொழிபெயர்க்கும் பொறுப்பை எடுத்துக்கொண்டனர். இவ்வாறாக சுவீடன் மக்கள் முதன் முறையாகத் தங்களது சொந்த மொழியில், தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டனர். நாடு முழுவதிலும் உள்ள போதகர்கள் வேத வாக்கியங்களை விளக்கிச் சொல்லவேண்டுமென்றும், பள்ளிகளில் உள்ள சிறுவர்கள் வேதாகமத்தை வாசிக்கக் கற்பிக்கப்படவேண்டும் என்றும், பிரதிநிதிகளின் சபை கட்டளை பிறப்பித்தது. (19)

ஆசீர்வாதமிக்க சுவிசேஷ ஒளியினால், அறியாமை மூடநம்பிக்கை ஆகியவைகளினால் உண்டான இருள் சீராகவும் நிச்சயமாகவும் நீக்கப்பட்டது. கத்தோலிக்க நிர்வாகத்தின் ஒடுக்குதலில் இருந்து விடுதலை அடைந்த அந்த நாடு, அதுவரை ஒருபோதும் அடைந்திராத பலத்தையும் பெரிய நிலையையும் அடைந்தது. புரொட்டஸ்டாண்டு இயக்கத்தின் கோட்டைகளில் ஒன்று, ஒரு நூற்றாண்டுக்குப்பின், மிகவும் அபாயகரமான காலத்தில், மிகவும் சிறியதாக இதுவரை பலவீனமானதாக இருந்த இந்த நாடு— உதவிக்கரம் நீட்டத்துணிந்த—ஐரோப்பாவின் ஒரே ஒரு நாடாக—முப்பது வருடங்களாகத் தொடர்ந்த பயங்கரமான போரில் ஜெர்மனியின் விடுதலைக்கு உதவியது. வடக்கு ஐரோப்பா முழுவதும் ரோமின் கொடுங்கோன்மையின்கீழ் மீண்டும் கொண்டுவரப்படப் போவதுபோல் காணப்பட்டது. ஸ்வீடனின் படைகள்தான், போப்புமார்க்கத்தின் வெற்றிகளைத் திசைதிருப்பிடவும், புரொட்டஸ்டாண்டுகளான லுத்தரன்களையும் கால்வினிஸ்டுகளையும் சகித்துக்கொள்ளும் வெற்றியைக் கொண்டுவரவும்,

சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டிருந்த நாடுகளில் மனசாட்சியின் சுதந்திரத்தை நிலைநிறுத்தவும் ஜெர்மனிக்கு உதவியது. (20) ★

# 14

# போப்புவை எதிர்த்துப் போராடிய புரட்சியாளர்கள்

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 245–264)**

மூடப்பட்டிருந்த விவிலியத்தை ஜெர்மன் மக்களுக்கு லுத்தர் திறந்துகொண்டிருந்த நேரத்தில், இங்கிலாந்து நாட்டிற்காக அதே பணியைச் செய்யும்படி **திண்டேல்** என்பவர் ஆவியானவரால் ஏவப்பட்டார். விக்ளிப்பின் வேதாகமம் இலத்தீன் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருந்தது, அதில் அநேக பிழைகளிருந்தது. அது ஒருபோதும் அச்சிடப்படவில்லை. கையெழுத்துப் பிரதிகளின் விலை மிக அதிகமாக இருந்ததினால், ஒரு சில செல்வந்தர்களால் மட்டுமே அதை வாங்க முடிந்தது. மேலும், சபை கடுமையாகத் தடைசெய்திருந்ததால், ஒப்பிட்டு நோக்கும்போது மிகக் குறைந்த அளவில்தான் அது பரவியிருந்தது. கி.பி.1516–ல் லுத்தரின் கோட்பாடுகள் தோன்றுவதற்கு ஒரு வருடத்திற்குமுன், **எரேஸ்மஸ்** என்பவர் கிரேக்க, இலத்தீன் மொழிகளிலான புதிய ஏற்பாட்டை வெளியிட்டிருந்தார். இப்பொழுது முதல் தடவையாக தேவனுடைய வார்த்தை அதன் மூலமொழியில் அச்சிடப்பட்டது. இந்தப் பணியில் முந்தைய பதிப்பிலிருந்த பிழைகள் நீக்கப்பட்டு, சரியான அர்த்தங்கள் மிகத்தெளிவாக அமைக்கப்பட்டிருந்தன. இது, கற்றறிந்தவர்களுக்கு இடையிலிருந்த அநேகருக்கு, சத்தியத்தைப் பற்றிய நல்ல அறிவை உண்டாக்கி, சீர்திருத்தப்பணிக்கு உத்வேகம் கொடுத்தது. ஆனால் சாதாரண மக்களுக்கு இன்னமும் பெருமளவில் தேவனுடைய வார்த்தை தடைசெய்யப்பட்டிருந்தன. தனது நாட்டு மக்களுக்கு வேதாகமத்தைக் கொடுக்கும் விக்ளி·.பின் பணியை திண்டேல் நிறைவுசெய்ய வேண்டியவராக இருந்தார். (1)

மிகுந்த கவனமிக்க மாணவரும், சத்தியத்தைத் தேடுபவருமாக இருந்த அவர், எரேஸ்மஸ் என்பவரால் எழுதப்பட்ட கிரேக்க மொழியின்

புதிய ஏற்பாட்டிலிருந்து சுவிசேஷத்தைப்பெற்றுக்கொண்டார். சகலவிதமான கோட்பாடுகளும் வேதவாக்கியங்களால் சோதிக்கப்படவேண்டும் என்ற தனது நம்பிக்கைகளை அச்சமின்றிப் பிரசங்கித்தார். சபைதான் வேதாகமத்தைக் கொடுத்தது, அதனால் சபையினால் மட்டுமே அதை விளக்க முடியுமென்ற போப்புமார்க்கவாதிகளின் உரிமைக்குத் திண்டேல்: "கழுகுகளுக்கு அவைகளின் இரையைக் காணக் கற்றுக்கொடுத்தவர் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? அதே தேவன் பசியுள்ள அவரது பிள்ளைகளுக்கு அவருடைய வார்த்தைகளிலிருந்து அவர்களது பிதாவைக் கண்டுகொள்ள கற்றுக்கொடுக்கிறார். தூரமாக வைத்ததுமட்டுமல்லாது, அதனை எங்களிடமிருந்து மறைத்தவர்களும் நீங்கள்தான். அதைப் போதிப்பவர்களை எரிப்பவர்களும் நீங்கள்தான். உங்களால் முடியுமானால் வேதாகமத்தையுங்கூட நீங்கள் எரித்துவிடுவீர்கள்.—D'Aubigne, History of the Reformation in Europe in Sixteenth Century, b. 18, ch. 4. (2)

திண்டேலின் பிரசங்கம் மிகுந்த ஆர்வத்தை உண்டுபண்ணியது. அநேகர் சத்தியத்தை ஏற்றுக்கொண்டனர். ஆகையால் பாதிரிமார்கள் எச்சரிக்கை அடைந்தனர். அவர் தனது களத்தைவிட்டுச்சென்ற உடனே, அவர்களது அச்சுறுத்தல்களினாலும் திரித்துக் கூறுவதினாலும் அவரது பணியை அழிக்க முயன்றனர். அடிக்கடி வெற்றியும்பெற்றனர். "என்ன செய்யவேண்டும்? நான் ஒரு இடத்தில் விதைக்கும்போது, நான் விதைத்து விட்டுச்சென்ற அந்த இடத்தை எதிரி அழித்துப்போடுகிறான். என்னால் எல்லா இடங்களிலும் இருக்கமுடியாது. ஓ! கிறிஸ்தவர்கள் அவர்களது மொழிகளில் பரிசுத்த வேதவாக்கியங்களைச் சொந்தமாக வைத்திருந்தால், இந்தக் குதர்க்கவாதிகளை தாங்களாகவே எதிர்த்து நிற்க இயலுமே. வேதாகமம் இல்லாமல், சாதாரண விசுவாசியை சத்தியத்தில் நிலைவரப்படுத்துவது முடியாத காரியம்" என்று நடுக்கமடைந்தார்.—Ibid., b. 18, ch. 4. (3)

இப்பொழுது அவரது மனதை ஒரு புதிய நோக்கம் ஆட்கொண்டது. "யேகோவாவின் ஆலயத்தில் தாவீதின் சங்கீதங்கள் இஸ்ரவேலின் மொழியில் பாடப்பட்டன. அப்படியிருக்க, சுவிசேஷம் நமக்கு நடுவில் இங்கிலாந்தின் மொழியில் பேசாதா?... சபை காலை நேரத்தைவிட மத்தியான வேளையில் வெளிச்சம் குறைவாக பெற்றிருக்க வேண்டுமா?.... கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டைத் தங்களின் தாய்மொழியில் வாசிக்கவேண்டும்" என்றார். சபையிலுள்ள வல்லுநர்களும் ஆசிரியர்களும் தங்களுக்குள் இசைவில்லாதவர்களானார்கள். வேதாகமத்தினால் மட்டுமே மனிதர்கள் சத்தியத்திற்கு வந்து சேர முடியும். "ஒருவர் இந்தக் கொள்கையைப் பிடித்துக் கொள்ளுகிறார். வேறொருவர் மற்றொன்றை.... இப்பொழுது இந்த ஆசிரியர்கள்

ஒவ்வொருவரும் மற்றவருடன் முரண்படுகின்றனர். அப்படியிருக்க எவர் கூறுவது சரி—எவர் கூறுவது தவறு என்று நம்மால் எப்படி வேறுபடுத்திக் கூறமுடியும்?… எப்படி?… மெய்யாகவே தேவனுடைய வார்த்தையினால் மட்டும்தான்" என்று அவர் கூறினார். —Ibid., b. 18, ch. 4. (4)

இதற்குப்பின் சில நாட்களுக்குள் அவருடன் எதிர்வாதத்தில் ஈடுபட்ட கற்றறிந்த கத்தோலிக்க முனைவர் ஒருவர்: "போப்புகள் இல்லாமல் இருப்பதைவிட, தேவனுடைய பிரமாணங்கள் இல்லாமலிருந்தால், அது நமக்கு நன்றாக இருந்திருக்கும்" என்று கூறினார். அதற்கு திண்டேல்: "நான் போப்புவையும் அவரது சட்டங்களையும் அவமதிக்கிறேன். இன்னும் அநேக வருடங்களுக்கு தேவன் எனது ஆயுளை நீட்டிக்கொடுத்தால், வேத வாக்கியங்களை நீங்கள் அறிந்திருப்பதைவிட அதிகமாக அறிய கலப்பையை ஓட்டும் ஒரு சிறுவனுக்குங்கூட கற்பிப்பேன்" என்று பதில் கூறினார். —Anderson, Annals of the English Bible, p. 19. (5)

புதிய ஏற்பாட்டு வசனங்களை மக்களுக்கு அவர்களது சொந்த மொழியில் வழங்கவேண்டும் என்று அவர் தனது இதயத்தில் போற்றிக் காத்துவந்த நோக்கமானது இப்பொழுது, உறுதிப்படுத்தப்பட்டதினால், அவர் உடனே அந்தப் பணியில் தன்னை ஈடுபடுத்தினார். உபத்திரவத்தினால் தனது வீட்டிலிருந்து விரட்டப்பட்ட அவர், லண்டன் நகரம் சென்று, அங்கு சில காலம் அவரது பணியை இடையூறின்றித் தொடர்ந்தார். ஆனால் மறுபடியும் போப்புமார்க்கத்தினரின் பலாத்காரம் அவரை ஓடுவதற்கு வற்புறுத்தியது. இங்கிலாந்து முழுவதும் அவருக்கு அடைக்கப்பட்டதுபோல் காணப்படவே, ஜெர்மனியில் அடைக்கலம் தேடத் தீர்மானித்தார். அங்கு அவர் ஆங்கில புதிய ஏற்பாட்டை அச்சிடும் பணியைத் தொடங்கினார். இரண்டு தடவைகள் இந்தப் பணி நிறுத்தப்பட்டது. ஆனால் அச்சிடுவது ஒரு நகரத்தில் தடைசெய்யப்பட்ட போது, அவர் வேறொரு நகரத்திற்குச் சென்றார். கடைசியாக சில வருடங்களுக்கு முன் சுவிசேஷத்தைத் தற்காத்து பிரதிநிதிகளின் குழுவின்முன் லுத்தர் பேசியிருந்த அதே வோம்ஸ் நகரைச் சென்றடைந்தார். அந்தப் பழங்காலநகரில் சீர்திருத்தத்தின் நண்பர்கள் அநேகர் இருக்கவே, மேற்கொண்டு எவ்விதமான இடையூறுமின்றி, திண்டேல் தனது பணியைத் தொடர்ந்தார். விரைவில் புதிய ஏற்பாட்டின் மூவாயிரம் பிரதிகள் முடிக்கப்பட்டு, அதேவருடத்தில் அடுத்த பதிப்பும் தொடர்ந்தது. (6)

பெரும் ஆர்வத்துடனும் விடாமுயற்சியுடனும் அவர் தனது பணிகளைத் தொடர்ந்தார். ஆங்கில அதிகாரிகள் அவர்களது துறைமுகங்களை மிகுந்த விழிப்புடன் கண்காணித்திருந்தபோதும், பலவிதமான வழிகளில் தேவனுடைய வார்த்தை லண்டனுக்குள் கொண்டுசெல்லப்பட்டு, அங்கிருந்து அந்த நாடு

முழுவதற்கும் சுற்றுக்கு விடப்பட்டது! போப்புமார்க்கவாதிகள் சத்தியத்தை அமிழ்த்த முயன்றனர். ஆனால் அது வீணாயிற்று. டர்ஹாம் நகரின் பேராயர் ஒருசமயம், வேதாகமங்களை அழித்துவிட்டால், அது இந்தப் பணிக்குப் பெரும் இடையூறாகிவிடும் என்ற எண்ணத்தில், திண்டேலின் நண்பராயிருந்த ஒரு புத்தக வியாபாரியிடமிருந்து, வேதாகம இருப்பு முழுவதையும் விலைக்கு வாங்கினார். ஆனால் அதற்கு நேர் எதிராக இவ்விதமாகக் கிடைத்த பணம் அப்படிக் கிடைக்காமல் இருந்திருந்தால், ஒரு புதிய பதிப்பினை வெளியிட்டிருக்கமுடியாது என்னும்படி, ஒரு புதிய—சிறந்த பதிப்பிற்கான பொருட்களை வாங்குவதற்குப் பயன்பட்டது. அதன்பின் திண்டேல் சிறைக்கைதியானபோது. வேதாகமத்தை அச்சிடும் செலவுக்கு எவர்கள் அவருக்கு உதவினார்களோ, அவர்களின் பெயர்களை அறிவித்தால், அவர் விடுதலைசெய்யப்படுவார் என்ற நிபந்தனை கொடுக்கப்பட்டது. டர்ஹாம் நகரப் பேராயர்தான் மற்றவர்களையும்விட உதவினார். எப்படியெனில் மீதியாக வைக்கப்பட்டிருந்த புத்தகங்களை அவர் அதிக விலைகொடுத்து வாங்கினதால் தைரியத்துடன் முன்செல்ல அவர் என்னைத் தகுதிப்படுத்தினார் என்று பதில் கூறினார். (7)

திண்டேல் அவரது எதிரிகளால் காட்டிக்கொடுக்கப்பட்டு, ஒரு சமயம் அநேக மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தார். இறுதியில் அவர் இரத்தசாட்சியின் மரணத்தினால் தன் விசுவாசத்திற்குச் சாட்சியானார். ஆனால் அவர் ஆயத்தம் செய்த ஆயுதங்கள், நமது நாட்கள்வரை மட்டுமல்ல, யுகங்கள் நெடுகிலும் போரிட மற்ற வீரர்களைத் தகுதிப்படுத்தியது! (8)

வேதாகமம் மக்களின் சொந்த மொழியில் வாசிக்கப்படவேண்டும். வேதவசனங்களின் ஆசிரியராக தேவன்தாமே இருக்கிறார். அவரது வேத வசனங்கள் அதன் ஆசிரியரின் பலத்தையும் நித்தியத்துவத்தையும் உடையவையாக இருக்கின்றன. அதற்குக் கட்டுப்படாத அரசனோ, நீதிபதிகளோ, ஆளுநர்களோ, பேரரசனோ இல்லை. குறுக்கு வழிகளைப்பற்றி நாம் எச்சரிக்கை உள்ளவர்களாக இருப்போமாக. தேவனுடைய வார்த்தை நம்மை நேர்பாதையில் நடத்தட்டும். முன்னோர்கள் சென்ற வழிகளில் நாம் செல்லவேண்டியதில்லை. நமது முற்பிதாக்கள் என்ன செய்தார்கள் என்பது நம் சம்பந்தப்பட்டதல்ல. ஆனால் அதைவிட அவர்கள் என்னசெய்திருக்க வேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியம் என்று லாட்டிமர் என்பவர் பிரசங்கப் பீடத்திலிருந்து கூறினார்.—Hugh Latimer, "First Sermon Preached Before King Edward VI." (9)

சத்தியத்தைப் பாதுகாத்து நிற்க, திண்டேலின் விசுவாசமிக்க நண்பர்களான **பார்னெசும், பிரித்** என்பவரும் எழும்பினர். **ரிட்லியும்**

**கிரேன்மரும்** பின்சென்றனர். ஆங்கிலேய சீர்திருத்தத்தில் இந்த இரு தலைவர்களும் கற்றவர்களாகவும், அவர்களில் அநேகர் ரோம சமுதாயத்தில் வைராக்கியத்திற்கும் பக்திக்கும் உயர்வாக மதிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். அவர்கள் போப்பு மார்க்கத்திற்கு எதிராக நின்றது, அதன் தவறுகளை அறிந்துகொண்டதின் விளைவாக இருந்தது. பாபிலோனுடைய இரகசியங்களின் அறிமுகம் அவளுக்கெதிரான சாட்சி பகருவதற்கு அதிக வல்லமையைக் கொடுத்தது. (10)

“இங்கிலாந்தில் மிகுந்த ஜாக்கிரதையான பேராயர் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? நான் அவரது பெயரைக் கூறவேண்டும் என்று நீங்கள் செவிமடுத்துக் கவனிப்பதை நான் காண்கிறேன். நான் சொல்லுகிறேன். அதுதான் பிசாசு. அவன் தனது மண்டலத்தைவிட்டு ஒருபோதும் வெளியே சென்றதில்லை. அவன் ஓய்ந்திருப்பதை உங்களால் ஒருபோதும் காண இயலாது. உங்களுக்குத் தோன்றும்போது நீங்கள் அவனை அழையுங்கள். அவன் எப்போதும் வீட்டிலேயே இருக்கிறான். எப்போதும் ஆயத்தமாக இருக்கிறான். அவனை அஜாக்கிரதை உள்ளவனாக உங்களால் ஒருபோதும் காண இயலாது என்று நான் உங்களுக்கு நிச்சயமாகச் சொல்லுகிறேன். பேயின் வீடு எங்கே இருக்கிறதோ அங்கு புத்தகங்கள் விலக்கிவைக்கப்பட்டு—மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருக்கும்; வேதாகமங் கள் நீக்கப்பட்டு—ஜெபமாலைகள் உருட்டப்பட்டுக்கொண்டிருக்கும்; சுவிசேஷத்தின் வெளிச் சம் நீக்கப்பட்டு—மத்தியான வேளையிலும் மெழுகுதிரிகளும், மெழுகு வர்த்திகளும் எரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்; கிறிஸ்துவின் சிலுவை ஒழிக்கப்பட்டிருக்கும்—உத்தரிக்கும் ஸ்தலத்தின் பணப்பைகள் ஊதிப் பெருத்திருக்கும் வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் கொடுக்கப்படாமல், ஏழையையும் வல்லமையற்றவனையும் விலக்கி வைத்து—சிலைகளும் கல்லும் கம்பங்களும் ஆடைஅணிகளினால் உயிருள்ளதுபோல் அலங்கரிக்கப் பட்டிருக்கும் தேவவசனமும் அவரது மிகப் பரிசுத்தமான வார்த்தைகளும் கீழாக்கப்பட்டிருக்கும்—பாரம்பரியங்களும் மனித ஆலோசனைக் குழுக்களும் குருடாக்கப்பட்ட போப்புவும் மேலாக்கப்பட்டிருப்பர். களைகளையும் செத்தைகளையும் விதைக்கும் சாத்தானைப்போல, நமது குருமார்கள் நல்ல கோட்பாடுகளாகிய தானியத்தை விதைப்பதில் அக்கரை உள்ளவர்களாக இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்!—Ibid., “Sermon of the Plough.” (11)

பெரும் கொள்கையாகிய தவறாத அதிகாரமுடைய வேதவாக்கியங் கள்தான் விசுவாசத்திற்கும் நடைமுறைக்குமான கட்டளைகள் என்பது சீர்திருத்தவாதிகளினால் காக்கப்பட்டு, வால்டென்னியர்கள், விக்ளிப், ஜான்

ஹஸ், ஸ்விங்ளி அவர்களுடன் இணைந்தவர்களாலும் காக்கப்பட்டிருந்தது. இது மத சம்பந்தப்பட்ட காரியங்களில் மனசாட்சியைக் கட்டுப்படுத்தும் உரிமை, போப்புக்கள், ஆலோசனைக்குழுக்கள், முற்பிதாக்கள், அரசர்கள் ஆகியோருக்கு இல்லை என்கிறது. வேதாகமம் மாத்திரமே அவர்களது அதிகாரியாயிருந்தது. அதனைக்கொண்டே மற்ற எல்லா கொள்கைகளையும் உரிமைகளையும் பரிசோதித்தனர். (12)

இந்தப் பரிசுத்த மனிதர்கள் நெருப்பின்மீது உயிர் விட்டபோது, தேவன்மீதும் அவருடைய வார்த்தைமீதும் அவர்கள் வைத்திருந்த விசுவாசம் அவர்களைத் தாங்கினது. தீ நாக்கு தங்களுடைய சத்தத்தை அடக்கும் நேரம் "நல்ல ஆறுதல் கொண்டிரு, தேவனுடைய கிருபையினால் ஒருபோதும் அணைக்கமுடியாத மெழுகுவர்த்தியை இங்கிலாந்தில் இன்றுமுதல் நாம் எரியவைப்போம் என்று நான் நம்புகிறேன்" என்று லாட்டிமர் சக இரத்தசாட்சியைப் பார்த்து உரத்துக் கூறினார்.—Works of Hugh Latimer, vol. 1, p. xiii. (13)

ஸ்காட்லாந்தில் கொலம்பா என்பவராலும், அவரது உடன் ஊழியர்களாலும் பரப்பப்பட்ட சத்தியத்தின் விதை முற்றிலுமாக ஒருபோதும் அழிக்கப்படவில்லை. ஏனெனில், இங்கிலாந்து சபை, ரோம சபைக்குப் பணிந்திருந்ததினால் நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப்பின்பும், ஸ்காட்லாந்து அதன் சுதந்திரத்தைக் காத்துக்கொண்டது. இருந்தபோதும் பன்னிரண்டாம்நூற்றாண்டில் போப்புமார்க்கம் இங்கு அமைக்கப்பட்டு வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு முழுமையாக அதன் அதிகாரம் நடப்பட்டது. வேறு எந்த இடத்திலும் இருள் அந்த அளவிற்கு ஆழமாக இருக்கவில்லை. அப்படியிருந்தும் அந்த இருளைத் துளைக்கத்தக்க ஒளியின் கதிர்கள் நுழைந்து, வரவிருக்கும் நாட்களுக்கு வாக்குத்தத்தம் செய்தது. வேதாகமத்துடனும், விக்ளிப்பின் போதனைகளுடனும் இங்கிலாந்திலிருந்து வந்த லோலார்ட்ஸ் இனத்தவர்கள், சுவிசேஷத்தின் அறிவைப் பாதுகாக்க அதிகமாகச் செயல்படவே, அதன் சாட்சிகளும் இரத்தசாட்சிகளும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் இருந்தனர். (14)

பெரும் சீர்திருத்தத்தின் துவக்கத்துடன் லுத்தரின் எழுத்துக்களும் அதன்பின் திண்டேலின் புதிய ஏற்பாடும் வந்தது. கத்தோலிக்க மதத்தலைவர்களால் கவனிக்கப்படாதவர்களாக இந்தத் தூதர்கள், ஒடுக்கப்பட்டிருந்த நான்கு நூற்றாண்டுகளாக ரோமமார்க்கம் செய்திருந்த பணியை தகர்த்து, ஸ்காட்லாந்தில் கிட்டத்தட்ட அணைந்துபோயிருந்த சத்தியத்தின் தீபத்தைத் தூண்டி புத்துயிர் கொடுத்து, மௌனமாக மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் குறுக்காகக் கடந்து சென்றனர். (15)

அதன்பின் இரத்தசாட்சிகளின் இரத்தம் இந்த இயக்கத்திற்குப் புதிய உத்வேகத்தைக் கொடுத்தது. போப்புமார்க்கத் தலைவர்கள் அவர்களது நோக்கத்திற்கு அபாயத்தை உண்டுபண்ணும் பயமுறுத்தலால் திடீரென்று விழித்தெழுந்து, ஸ்காட்லாந்தின் மேன்மையும் சிறப்புமிக்கவர்களின் மகன்களில் சிலரை கம்பத்தில் கட்டி எரித்துக்கொல்லும்படி கொண்டுவந்தது. இதன்வழியாக அவர்கள் பிரசங்க மேடைகளையே ஆயத்தம்செய்தார்கள். அதிலிருந்து இரத்தசாட்சிகளாக மரித்துக்கொண்டிருந்தவர்களின் வார்த்தைகள், அந்த நாடு முழுவதும் கேட்கப்பட்டு, ரோமினுடைய நுகத்தை எறிந்து போடும் அழியாத நோக்கத்தால் மக்களின் ஆத்துமாக்களை கிளர்ச்சியுறச்செய்தது. (16)

பிறப்பைப்போலவே பண்பிலும் இளவரசர்களாயிருந்த தாழ்மையான சீடர்களைக் கொண்டிருந்த **ஹாமில்டன், விஷார்ட்** என்கிற இருவரும் தங்களது உயிரைச் சிதைக்கு ஒப்புக்கொடுத்தனர். ஆனால் எரிந்துகொண்டிருந்த விஷார்ட்—ன் நெருப்புக் குவியலிலிருந்து அக்கினி ஜுவாலைகளால் மௌனப்படுத்த முடியாத—ஸ்காட்லாந்தில் போப்புமார்க்கத்திற்கு தேவனின் ஏவுதலால் சாவுமணியை அடிக்கக்கூடிய ஒருவர் வந்தார்! (17)

**ஜான் நாக்ஸ்** தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தினால் போஷிக்கப்படும்படி, பாரம்பரியங்களிலிருந்தும், தியானத்தால் இறைவனை அறியலாம் என்னும் கொள்கைகளிலிருந்தும் திரும்பினார். **விஷார்ட்** அவர்களின் போதனை, ரோமின் தோழமையை விட்டுவிலகவும் உபத்திரவப்படுத்தப்பட்ட சீர்திருத்தவாதிகளுடன் தன்னை இணைத்துக்கொள்ளவும் அவர் செய்த தீர்மானத்தை உறுதிப்படுத்தியது. (18)

பிரசங்கியின் ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளும்படி அவரது நண்பர்களால் வற்புறுத்தப்பட்டபோது, அந்தப் பொறுப்பிலிருந்து நடுக்கத்துடன் பின்வாங்கி, பல நாட்கள் தனிமையிலிருந்து தனக்குள் உண்டான வேதனைமிக்க போராட்டங்களுக்குப் பின்னர் இணங்கினார். ஆனால் ஒரு முறை அந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டபின் வளையாத தீர்மானத்துடனும், உயிருடனிருந்தவரை அசைக்கமுடியாத தைரியத்துடனும் அவர் முன்நோக்கிச் சென்றார். உண்மையான இதயத்தை உடைய இந்த மனிதர், மனிதனின் முகத்தைக் கண்டு அஞ்சவில்லை. இரத்தசாட்சியாகும்படி அவரைச் சுற்றி எரிந்த நெருப்பு அவரது வைராக்கியத்தைத் தீவிரப்படுத்தத்தான் செய்தது. அச்சுறுத்தும் கோடாரி தலைக்குமேல் வைக்கப்பட்டிருக்க, சிலை வணக்கத்தை அழித்தொழிக்க முழுமையாக உழைத்தார். (19)

அநேக புரொட்டஸ்டாண்டு தலைவர்களின் வைராக்கியத்தை கீழே வீழ்த்திய ஸ்காட்லாந்து அரசியின் முன்பாக நேருக்கு நேராகக்

கொண்டுவரப்பட்டபோது, ஜான் நாக்ஸ் அசையாதவராக சத்தியத்திற்குச் சாட்சியாக நின்றார். முகஸ்துதிகளினாலும் பயமுறுத்தல்களினாலும் மேற்கொள்ளப்பட முடியாதவராக இருந்தார். அரசியினால் மதப்புரட்டர் என்று குற்றம்சாட்டப்பட்டார். நாட்டினால் தடைசெய்யப்பட்டிருந்த ஒரு மதத்தை ஏற்றுக்கொள்ளும்படி மக்களுக்குப் போதித்து, அதனால் இளவரசர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்ற தேவனுடைய கட்டளையை மீறினார் என்று அரசி அறிவித்தார். நாக்ஸ் உறுதியுடன்: (20)

"சரியான மதம் அதன் பிறப்பையோ அல்லது அதிகாரத்தையோ இளவரசர்களிடமிருந்து பெறாமல், தேவனிடமிருந்து மட்டுமே பெற்றிருப் பதுபோல், அவருக்குக் கீழுள்ளவர்களும் தங்களது மதத்தை இளவரசர் களின் விருப்பங்களுக்கு இசைவாக ஏற்படுத்தமுடியாது. ஏனெனில் அநேக நேரங்களில் தேவனின் உண்மையான மதத்தைப்பற்றி மற்றெல்லாரையும்விட இளவரசர்கள்தான் அறிவில்லாதவர்களாயுள்ளனர். ஆபிரகாமின் சந்ததியா ரெல்லாரும் பர்வோனின் மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால், அரசி அவர்களே, இந்த உலகத்தில் எந்த மதம் இருந்திருக்கமுடியும் என்று உங்களை மன்றாடிக் கேட்கிறேன். அப்போஸ்தலர்கள் இருந்த நாட்கள்முழுவதும் ரோமப்பேரரசனின் மதமாக இருந்திருந்தால், இப்போது பூமியில் எந்த மதம் இருந்திருக்கும் என்ற உங்களை நான் மன்றாடிக் கேட்கிறேன். எனவே, அரசி அவர்களே, குடிமக்கள் அவர்களது இளவரசர்களிடம் மரியாதை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருந்தாலுங்கூட, மதம் சம்பந்தப்பட்ட காரியங்களில் இளவரசர்களின் மதத்தால் அவர்கள் கட்டப்பட்டில்லை என்பதை நீங்கள் உணரக்கூடும்" என்றார். (21)

"நீங்கள் வேதவாக்கியங்களுக்கு ஒரு விதமாக விளக்கம் கொடுக்கிறீர்கள். அவர்கள் (ரோமன் கத்தோலிக்க ஆசிரியர்கள்) வேறொரு விதமாக விளக்கம் கொடுக்கிறார்கள். நான் யாரை நம்புவது? யார் நீதிபதியாக இருப்பது?" என்று மேரி அரசி கூறினார். (22)

"தமது வார்த்தையின் மூலமாகத் தெளிவாகப் பேசும் தேவனை நீங்கள் நம்பலாம். அந்த வசனம் போதிப்பதற்கும் அதிகமாக நீங்கள் ஒருவரையோ அல்லது மற்றவரையோ நம்பவேண்டியதில்லை. தேவனுடைய வார்த்தை தன்னில்தானே தெளிவானதாக உள்ளது. ஒரு இடத்தில் ஒரு காரியம் கருகலாகத் தோன்றினால், தனக்குள் எதுவும் மாறுபாடில்லாத பரிசுத்தஆவியானவர் வேறொரிடத்தில் அதை விளக்கி இருப்பதால், எந்தச் சந்தேகமும் இருக்காது. ஆனால் பிடிவாதமாக அறியாமையில் இருக்கிறவர்களுக்குக் கருகலாகவே இருக்கும்" என்று பதில் அளித்தார்.— David Laing, The Collected Works of John Knox, vol. 2, pp. 281, 284. (23)

அரச மேன்மையின் செவிகளில் தனது உயிரின் ஆபத்துக்கிடையில், பயமின்றி சீர்திருத்தவாதி உரைத்த சத்தியங்கள் அப்படிப்பட்டதாக இருந்தது. போப்புமார்க்கத்தின் பிடியில் இருந்து ஸ்காட்லாந்து விடுதலையடையும்வரை, ஜெபித்துக்கொண்டும் கர்த்தருடைய யுத்தத்தை நடத்திக்கொண்டும் அசையாத தைரியத்துடன் அவரது நோக்கத்தைக் காத்துக்கொண்டிருந்தார். (24)

இங்கிலாந்தில் தேசிய மதமாக அமைக்கப்பட்டிருந்த புரொட்டஸ்டாண்டு மதம் மங்கியது. ஆனால் உபத்திரவம் முற்றிலுமாக நிற்கவில்லை. ரோம சபையின் கோட்பாடுகளில் ஏராளமானவைகள் மறுக்கப்பட்டபோதிலும், அவைகளின் வடிவங்களில் தக்கவைக்கப் பட்டிருந்தவை ஒருசில மட்டுமல்ல. போப்புவின் மேலாண்மை நிராகரிக்கப்பட்டது. ஆனால் அவரது இடத்தில் அரசன் சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டான். சுவிசேஷத்தின் தூய்மையிலிருந்தும் எளிமையிலிருந்தும் சபை ஆராதனை ஒழுங்கு மிகத் தூரமாக விரிவாக விலகிச்சென்றிருந்தது. சமயச் சகிப்புத்தன்மை என்னும் பெரும் கொள்கையானது இன்னமும் புரிந்துகொள்ளப்படாததாகவே இருந்தது. மதவிரோதத்திற்கு எதிராக ரோம சபை செயலாற்றியிருந்த பயங்கரமான கொடுமைகள் புரொட்டஸ்டாண்டு அதிபதிகளால் மிக அபூர்வமாகவே செயல்படுத்தப்பட்டிருந்தபோதிலும், ஒவ்வொரு மனிதனும் அவனது மனசாட்சி கூறும்வண்ணமாக தேவனைத் தொழுதுகொள்ளலாம் என்னும் மனிதனின் உரிமையானது அங்கீகரிக்கப்படாமலிருந்தது. அமைக்கப்பட்டுவிட்ட சபையினால் கொடுக்கப்படும் கோட்பாடுகளையும், தொழுகை வடிவங்களையும் அனைவரும் பின்பற்றியாகவேண்டும் என்று கட்டாயப்படுத்தப் பட்டிருந்தனர். ஒப்புக்கொள்ளாதவர்கள் அதிகமாகவோ குறைவாகவோ உபத்திரவத்தை அனுபவித்திருந்தனர். (25)

பதினேழாம் நூற்றாண்டில் ஆயிரக்கணக்கான போதகர்கள் அவர்களது பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். கொடிய அபராதங்கள் சிறைவாசம், சபைக்குப் புறம்பாக்கப்படுதல் ஆகிய வேதனைமிக்க தண்டனைகளுடன் சபையால் அனுமதிக்கப்பட்டிருந்தவை தவிர, மற்ற எந்த மதக்கூட்டத்திலும் மக்கள் பங்குகொள்ளுவதும் தடைசெய்யப்பட்டிருந்தது. தேவனை ஆராதிப்பதற்காகக் கூடுவதைத் தவிர்க்க இயலாதவர்களாக இருந்த விசுவாசமிக்க ஆத்துமாக்கள் குறுகிய இருண்ட சந்துகளிலும் பரண்களிலும் சில பருவகாலங்களில் நடு இரவில் காடுகளிலுங்கூட தொழுதிடும் நிலைக்காளாயினர். தேவனுடைய சொந்த ஆலயமாயிருந்த அடைக்கலம்தரும் காடுகளின் நடுவில் உபத்திரவப்படுத்தப்பட்டு சிதறிப்போன தேவனுடைய பிள்ளைகள், ஜெபத்திலும் துதியிலும் தங்கள் ஆத்துமாக்களை

ஊற்றிவிடக் கூடினார்கள். இவ்விதமான எல்லா முன்னெச்சரிக்கைகளுக்குப் பின்னுங்கூட, அநேகர் தங்களது விசுவாசத்திற்காகப் பாடுகளைச் சகித்தனர். சிறைகள் நிரம்பின. குடும்பங்கள் பிரிக்கப்பட்டன. அநேகர் அயல் நாடுகளுக்குக் கடத்தப்பட்டனர். அப்படியிருந்தும் தேவன் அவரது ஜனங்களுடன் இருக்கவே, அவர்களது சாட்சியை உபத்திரவத்தினால் மேற்கொள்ள இயலவில்லை. அந்த நாட்டின் பெரும்கோட்டையும் மகிமையுமா யிருக்கும்படியான சமூக—சமய சுதந்திரத்திற்கான அஸ்திவாரத்தை அவர்கள் அங்கு போட்டனர். (26)

மறுபடியும் அப்போஸ்தலர்களின் காலத்தைப்போல், உபத்திரவமானது சுவிசேஷம் முன்செல்ல வகைசெய்தது. தீயவர்களும் பெரும் குற்றவாளிகளும் நிரம்பிய ஒரு வெறுக்கப்படத்தக்க நிலவறையில் **ஜான் பனியன்** பரலோகக் காற்றைச் சுவாசித்து, அங்கு மிகவும் ஆச்சரியமான உருவகமாகிய "பரதேசியின் மோட்சப் பிரயாணம்" என்னும் காவியமாகிய, அழிவின் பூமியிலிருந்து வானவர்களின் நகரத்திற்கான பயணம்பற்றி எழுதினார். பெட்போர்ட் சிறையிலிருந்த அந்தக்குரல், இருநூறு ஆண்டுகளுக்கு அதிர்ச்சிதரும் வல்லமையுடன் மனிதர்களின் இதயங்களில் பேசியது. "பரதேசியின் மோட்சப் பிரயாணம்", "பாவிகளில் பிரதானமானவனுக்கு அருளப்பட்ட ஏராளமான கிருபை" என்னும் நூல்கள், அநேகரின் பாதங்களுக்கு நித்திய ஜீவனுக்கான வழியைக் காட்டியது. (27)

திறமையிலும் கல்வியிலும் அனுபவம் மிக்கவர்களாக இருந்த **பாக்ஸ்டர், பிளேவெல், அலினி** ஆகியோரும் மற்ற அநேகரும் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காகத் துணிவுள்ளவர்களாக நின்றனர். இந்த உலகத்தின் அதிபதிகளால் தடைசெய்யப்பட்டு, சட்டவிரோதிகளாக எண்ணப்பட்ட இந்த மனிதர்களால் நிறைவேற்றப்பட்ட பணிகள் ஒருபோதும் அழியாது! பிளேவெல் அவர்களின் "ஜீவனின் ஊற்று", "கிருபையின் மார்க்கம்" என்னும் நூல்கள் ஆயிரக்கணக்கானவர்களுக்கு தங்களது ஆத்துமாக்களைக் கிறிஸ்துவிற்கு ஒப்புவித்துக் காத்துக்கொள்ளுவது எப்படி என்று கற்றுக்கொடுத்தது. பாக்ஸ்டர் எழுதிய "சீர்திருந்திய போதகர்" என்னும் நூல் தேவனுடைய ஊழியத்தில் எழுப்புதலை விரும்பிய அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. அவர் எழுதிய "பரிசுத்தவான்களின் நித்திய இளைப்பாறுதல்" என்னும் நூல் தேவனுடைய ஜனங்களை ஒரு இளைப்பாறுதலின் காலத்திற்கு நடத்துவதாக இருந்தது. (28)

நூறு வருடங்களுக்குப் பின் ஆவிக்குரிய பெரும் இருள் சூழ்ந்திருந்த ஒரு நாளில் **ஒயிட்பீல்ட்** என்பவரும் **வெஸ்லி**யும் தேவனுக் கென்று ஒளிவீசுபவர்களாகத் தோன்றினர். இங்கிலாந்து நாட்டுமக்கள்

அமைக்கப்பட்டிருந்த சபையின் ஆளுகையின்கீழ், அஞ்ஞான மார்க்கத்திலிருந்து வேறுபடுத்திப்பார்க்கமுடியாத சமய வீழ்ச்சியிலிருந்தனர். இயற்கையின் மதம் என்பது வேத மாணவர்களுக்குப் பிடித்தமான பாடமாக இருந்து, அவர்களது இறையியல் கல்வியில் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருந்தது. மேல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பக்தியைப்பற்றி உறுமி, அதை மதவெறி என அழைத்து, அதற்கும்மேலாக தாங்கள் இருப்பதாக எண்ணி, தங்களைப்பற்றிப் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தனர். கீழ் வகுப்பைச் சார்ந்தவர்களோ பெரிதும் அறியாமையில் இருந்து, தீயபழக்கங்களுக்கு விட்டுவிடப்பட்டிருந்தனர். சபையோ விழுந்துபோன சத்தியத்தை எடுத்து நிறுத்தித் தாங்குவதற்கு தைரியமும் விசுவாசமும் இல்லாததாக இருந்தது. (29)

லுத்தர் போதித்த “விசுவாசத்தினால் உண்டாகும் நீதி” என்னும் மிகத்தெளிவான மாபெரும் கோட்பாடு மக்கள் பார்வையிலிருந்து கிட்டத்தட்ட மறைந்துபோய், இரட்சிப்பிற்காக நற்செயல்களின்மீது நம்பிக்கைவைத்தல் என்ற ரோமன் கத்தோலிக்கக் கொள்கை அந்த இடத்தைப் பற்றிக்கொண்டது. ஒயிட்பீல்ட், வெஸ்லி ஆகியோர் அமைக்கப்பட்டிருந்த சபையின் அங்கத்தினர்களாக இருந்து, தேவனுடைய ஆதரவை உண்மையாகத் தேடி, தூய்மையான ஒரு வாழ்க்கையின் மூலமாகவும் சமயச் சடங்குகளைக் கடைபிடிப்பதன் மூலமாகவும் இதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கற்பிக்கப்பட்டிருந்தனர். (30)

ஒரு சமயம் சார்லஸ் வெஸ்லி என்பவர் நோய்வாய்ப்பட்டிருந்து, மரணம் அவரைச் சமீபிப்பதுபோல் தோன்றிய சமயத்தில் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு அவர் எந்த நம்பிக்கையைச் சார்ந்திருக்கிறார் என்று கேட்கப்பட்டது. “தேவனைச் சேவிக்க நான் எனது மிகச் சிறந்த முயற்சிகளைச் செய்திருக்கிறேன்” என்று பதில் தந்தார். கேள்வியைக் கேட்ட நண்பருக்கு கொடுக்கப்பட்ட இந்த பதிலினால் முழுமனநிறைவு கிடைக்கவில்லை என்று தோன்றியபோது, “என்ன? எனது முயற்சிகள் நம்பிக்கைக்கு போதுமானவையாக இல்லையா? எனது முயற்சிகளை அவர் திருடிக்கொள்வாரா? நம்புவதற்கு வேறு ஒன்றுமே எனக்கில்லை” என்றார்.— துழாெ றூாவைநாநயனஇ டுகைந ழக ஊாயசடநள றுநளடநலஇ 'யபந 102. பாவநிவாரணத்தை மறைத்து, கிறிஸ்துவின் மகிமையை அவரிடமிருந்து கொள்ளையிட்டு, மனிதர்களின் மனங்களை இரட்சிப்பின் ஒரே நம்பிக்கையான சிலுவையில் அறையப்பட்ட இரட்சகரின் இரத்தத்தைவிட்டு திருப்பினதால், சபையின்மீது படிந்த இருள் அதிக அடர்த்தியாயிருந்தது என்றார். (31)

உண்மையான மதம் இதயத்தில் இருக்கிறது. தேவப்பிரமாணம் எண்ணங்களில் இருப்பதைப்போலவே வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும்

விரிவடைகிறது என்பதைக் காணும்படி வெஸ்லியும் அவரைச் சார்ந்தவர்களும் நடத்தப்பட்டனர். வெளிப்படையான சுபாவத்தைப்போலவே, இதயத்திலும் பரிசுத்தம் அவசியம் என்பதைப்பற்றிய தெளிவை உணர்ந்து, ஒரு புதிய வாழ்வைத் தேடி, அவர்கள் ஆர்வத்துடன் புறப்பட்டனர். மிகுந்த அக்கரையும் ஜெபமுமிக்க முயற்சியினால் இயல்பான இதயத்திலுள்ள தீமையை அமர்த்த முயன்றனர். அவர்கள் விரும்பியதை—தேவனுடைய தயவைப்பெறும் பரிசுத்தத்தை அடைய எவைகளைச் செய்யவேண்டும் என எண்ணினார்களோ, அந்தச் செயல்களை மிகவும் சரியாகச் செய்து, சுயமறுப்பு, உதாரத்துவம், தாழ்மை ஆகியவை மிகுந்த ஒரு வாழ்க்கை வாழ்ந்தனர். ஆனால் அவர்கள் தேடிய இலக்கை அவர்களால் அடையமுடியவில்லை. பாவத்தினால் உண்டாகும் பழியிலிருந்து விடுதலை பெறவும், அதன் வல்லமையை உடைக்கவும் அவர்கள் எடுத்த முயற்சிகள் வீணானவையாக இருந்தன. “மனிதன் எப்படி தேவன்முன் நீதிமானாயிருக்க முடியும்” என்று எர்பார்டிலிருந்த தன் அறையில் லுத்தர் அனுபவித்த அதே போராட்டம்தான் அவரது ஆத்துமாவைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தது, (32)

புரொட்டஸ்டாண்டுமார்க்க பீடத்தின்மீதிருந்து சமீபகாலத்தில் அணைந்து போன தெய்வீக சத்தியமாகிய நெருப்பு, பொஹிமியக் கிறிஸ்தவர்களால் மீண்டும் பிற்காலங்களுக்கென்று கொடுக்கப்பட்டிருந்த பண்டைய தீவட்டி, எரியவைக்கப்படவேண்டியதாக இருந்தது. சீர்திருத்தத் திற்குப்பின் ரோமன் கத்தோலிக்கப் பெருங்கூட்டத்தினால், பொஹிமியாவிலிருந்த புரொட்டஸ்டாண்டுமார்க்கம், காலின்கீழ் மிதிக்கப் பட்டது. சத்தியத்தை மறுதலிக்க மறுத்த அனைவரும் ஓடிப்போகும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர்களில் சிலர் சாக்சோனியில் அடைக்கலம் கண்டு, பழைய விசுவாசத்தை அங்கு பராமரித்தனர். இந்த கிறிஸ்தவ பின்சந்ததியினரின் வழியாகத்தான் வெஸ்லிக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் ஒளி வந்தது. (33)

ஜானும், சார்லஸ் வெஸ்லியும் தேவனுடைய ஊழியத்திற்கென்று அபிஷேகம் செய்யப்பட்டபின்னர் ஊழியத்தினிமித்தம் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டனர். மொரேவியன்களின் ஒரு கூட்டத்தினர் அவர்கள் சென்ற கப்பலில் இருந்தனர். அவர்களது பயணத்தில் பெரும்புயல் உண்டாகி, ஜானும் வெஸ்லியும் மரணத்திற்கு நேராக முகமுகமாகக் கொண்டுவரப்பட்டபோது, தேவனோடுள்ள சமாதானத்தின் நிச்சயம் தங்களுக்கு இல்லை என்று உணர்ந்தனர். ஆனால் அதற்கு நேர்மாறாக, அவர்களுக்கு அந்நியமாயிருந்த அமைதியையும் நம்பிக்கையையும் ஜெர்மானியர்கள் வெளிக்காட்டினர். (34)

“அவர்களது அக்கரையுள்ள சுபாவத்தை நான் மிகவும் முன்னதாகவே கவனித்தேன். ஆங்கிலேயர்களில் ஒருவரும் செய்ய விரும்பாத தாழ்மையான

சேவையை, அவர்கள் மற்ற பயணிகளுக்குச் செய்து, அகந்தைமிக்க தங்களது இதயங்களுக்கு இது நன்மையாக உள்ளது என்றும், அவர்களை நேசிக்கும் மீட்பர் அவர்களுக்காக அதிகமாகச் சேவை செய்திருக்கிறார் என்றும் கூறி, தங்களது சேவைக்குச் சம்பளம் வாங்காமல் இருந்தது, அவர்களது தாழ்மைக்கு அவர்கள் பகர்ந்த சாட்சியாக இருந்தது. எவ்வித காயமும் நீக்கமுடியாத அவர்களுடைய தாழ்மையைக் காட்டும் வாய்ப்பு நாள்தோறும் அவர்களுக்குக் கிடைத்திருந்தது. அவர்கள் தள்ளப்பட்டாலும் அடிக்கப்பட்டாலும் அல்லது கீழே எறியப்பட்டாலும், மறுபடியும் எழுந்துசென்றார்கள். என்றாலும் அவர்களது வாயிலிருந்து எவ்வித குற்றச்சாட்டும் உண்டாகவில்லை. இப்பொழுது பயத்தின் ஆவி, அகந்தை, கோபம், பழிவாங்குதல் ஆகியவைகளிலிருந்தும் விடுதலை யடைந்துவிட்டனரா என்பதைச் சோதிக்கும் ஒரு வாய்ப்பு உண்டானது. அவர்கள் தங்களது ஆராதனையை ஆரம்பித்து, தாவீதின் சங்கீதத்தைப் பாடினபோது கடல் கொந்தளித்து, கப்பல் பாய்மரத்துடன் உடைந்து, கப்பலின் தளங்களுக்கிடையில் தண்ணீர் வேகமாக நுழைந்து, பெரும்ஆழம் அதை விழுங்கிவிட்டதுபோல காணப்பட்டது. ஆங்கிலேயர் களுக்கிடையில் பயங்கரமான அலறுதல் உண்டானது. ஜெர்மானியர்கள் அமைதியுடன் பாடிக்கொண்டிருந்தனர். நீங்கள் பயப்படவில்லையா? என்று அவர்களில் ஒருவரைக் கேட்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் அப்படி ஒன்றும் இல்லை என்று அவர் பதில் கூறினார். உங்களுடைய பெண்களும் சிறுவர்களும் பயப்படவில்லையா? என்றும் நான் கேட்டேன். இல்லை. எங்களது பெண்களும் சிறுவர்களும் சாவதற்குப் பயப்படுவதில்லை என்று அமைதியாக கூறினார். —Whitehead, Life of Charles Wesley, page 10. (35)

சாவன்னா என்னுமிடத்திற்கு நாங்கள் வந்துசேர்ந்தபின், அந்த மொரேவியன்களுடன் வெஸ்லி சற்று நேரம் கப்பலில் தங்கியிருந்தார். அவர்களது கிறிஸ்தவ சுபாவத்தைப்பற்றி அவர் மிகவும் ஆழமாக உணர்த்தப்பட்டார். இங்கிலாந்து சபையின் உயிரற்ற சம்பிரதாயமான தங்களது ஆராதனைகளிலிருந்து வேறுபட்டிருந்த மொரேவியன்களின் ஒரு ஆராதனையைக் குறித்து: "அவர்களது ஆராதனையிலிருந்த பெரும் எளிமையும் பக்திவிநயமுமாகிய முழுமையும், இடையிலிருந்த கிட்டத்தட்ட ஆயிரத்து எழுநூறு வருடங்களை நான் மறக்கும்படியும் வடிவமும் ஆதிக்கமும் அல்ல, கூடார வேலை செய்த பவுலோ அல்லது மீன்பிடிக்கிற வனாயிருந்த பேதுருவோ தலைமை தாங்கியிருந்த அந்தக் கூட்டத்தில் ஒன்றில் நான் இருப்பதுபோலவும் கற்பனை செய்ய வைத்தது. என்றபோதும் ஆவியானவர் அவரது வல்லமையின் வெளிப்பாட்டோடு இருந்தது" என்று எழுதினார்.—Ibid., pages 11, 12. (36)

வெஸ்லி இங்கிலாந்திற்குத் திரும்பி வந்தபின், ஒரு மொரேவியப் போதகரின் உபதேசத்தின்கீழ், வேதாகம விசுவாசத்தைப்பற்றிய தெளிவாகப் புரிந்துகொண்டார். இரட்சிப்பிற்காகத் தான் சார்ந்திருக்கும் தனது சொந்தக் கிரியைகள் அனைத்தையும் மறுத்துவிட்டு, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" யின்மீது முற்றிலுமாக நம்பிக்கை வைக்கவேண்டும் என்று உணர்ந்தார். லண்டனிலுள்ள மொரேவியன் கழகத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், விசுவாசியின் இதயத்தில் தேவஆவியானவர் உண்டுபண்ணுகின்ற மாறுதலைப்பற்றி லுத்தர் விவரித்திருந்த ஒரு அறிக்கை வாசிக்கப்பட்டது. வெஸ்லி அதைக் கவனித்தபோது, அவரது ஆத்துமாவில் விசுவாசம் பிறந்தது. "என் இதயம் அற்புதமாக அனலடைந்ததை உணர்ந்தேன். இரட்சிப்பிற்காக கிறிஸ்துவை, கிறிஸ்துவை மாத்திரம் நான் நம்புவதாக உணர்ந்தேன். என் பாவங்களை, என்னுடைய ஒவ்வொரு பாவத்தையும் அகற்றி, பாவம் மரணம் ஆகியவைகளின் பிரமாணத்திலிருந்து, என்னை இரட்சித்தார் என்கிற உறுதி எனக்குக் கொடுக்கப்பட்டது."—Ibid., pages 52. (37)

அநேக ஆண்டுகளாகச் செய்யப்பட்ட களைப்பூட்டும் ஆறுதலற்ற முயற்சிகளால்—நிந்தையும் தாழ்மையும் சுயமறுப்பும் நிறைந்த பல ஆண்டுகளால்—தேவனைத் தேடுவது என்கிற தனது ஒரே நோக்கத்தைப் பற்றிக்கொண்டவராக வெஸ்லி இருந்தார். இப்பொழுது அதைக் கண்டு கொண்டார். ஜெபத்தினாலும், உபவாசங்களினாலும், தானதருமங்களினாலும், தன்னை வருத்திக்கொள்ளுவதினாலும் அடையவேண்டும் என்று அவர் போராடிய கிருபை, பணமுமின்றி விலையும் இன்றி இலவசமாக அருளப்பட்ட ஈவு என்பதையே அவர் கண்டுகொண்டார். (38)

கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையினால், ஒரு தடவை ஸ்திரப் படுத்தப்பட்டபின், தேவனுடைய இலவசமான கிருபை என்னும் சுவிசேஷ த்தின் மகிமையைப்பற்றிய அறிவை எங்கும் பரப்பும் வாஞ்சையில், அவருடைய முழு ஆத்துமாவும் கொழுந்துவிட்டு எரிந்தது. உலகத்தை என் ஆலயமாக நான் பார்க்கிறேன். அதன் எப்பகுதியில் நான் இருந்தாலும், கேட்கவிரும்பும் யாவருக்கும், இரட்சிப்பைப்பற்றிய மகிழ்ச்சியான செய்தியை அறிவிக்கவேண்டியது சரி என்றும் அது என்மேல் விழுந்த கடமை என்றும் நிதானிக்கிறேன்" என்று அவர் கூறினார்.—Ibid., pages 74. (39)

அவர் தன் கடினமான—சுயமறுப்புமிக்க வாழ்க்கையை இப்பொழுது இரட்சிப்பை அடைவதற்கான செயலாக அல்லாமல், விசுவாசத்தின் விளைவாகச் செய்தார். அது வேராக இராமல், பரிசுத்தத்தின் கனிகளாக இருந்தன. கிறிஸ்துவிலுள்ள தேவகிருபைதான் கிறிஸ்தவ நம்பிக்கையின்

அஸ்திவாரமாக உள்ளது. அந்தக் கிருபை கீழ்ப்படிதலினால் வெளிக் காட்டப்படும். கிறிஸ்துவின் பாவநிவாரண இரத்தத்தின்மீதுள்ள விசுவாசத் தினால் நீதிமானாக்கப்படுதல், இதயத்தைப் புதுப்பிக்கும் பரிசுத்தஆவியின் வல்லமை, கிறிஸ்துவின் முன்மாதிரிக்கு இசைவான கனிகளை வாழ்க்கையில் கொண்டுவருதல் என்ற, அவர் பெற்றுக்கொண்ட பெரும் சத்தியங்களை, மற்றவர்களுக்குப் பிரசங்கிப்பதற்கு வெஸ்லியின் வாழ்க்கை அர்ப்பணிக்கப்பட்டது. (40)

தங்களுடைய இழந்துபோன நிலையைக் குறித்த கூர்மையான நாள்பட்ட உணர்த்துதல்களினால் ஒயிட்பீல்டும் வெஸ்லியும் அவர்களது ஊழியத்துக்கு ஆயத்தப்பட்டனர். கிறிஸ்துவின் நல்ல போர்வீரர்களாக துன்பங்களைச் சகிக்கும்படி, பரிகாசம், அலட்சியம் போன்றவற்றிற்கு பல்கலைக்கழகத்திலும், ஊழியம்செய்யத் தொடங்கியபோதும் ஆளாக்கப்பட்டனர். அவர்களும் அவர்களிடம் அனுதாபம் காட்டிய வேறுசிலரும் மெதடிஸ்ட் என்று இழிவாக அவர்களுடைய தேவபயமற்ற சக மாணவர்களால் அழைக்கப்பட்டனர். இன்று இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் மிக மேன்மைமிக்கதாகக் கருதப்படும் மிகப்பெரிய ஸ்தாபனங்களில் அதுவும் ஒன்று. (41)

இங்கிலாந்து சபையின் அங்கத்தினர்களான அவர்கள் அதன் ஆராதனைமுறைகளைப் பலமாகப் பற்றிக்கொண்டிருந்தனர். ஆனால் தேவன் அவரது வார்த்தையினால், ஒரு மேலான அந்தஸ்தை அவர்கள் முன்வைத்தார். கிறிஸ்துவையும் சிலுவையில் அறையப்பட்ட அவரையும் பற்றிப் பிரசங்கிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் அவர்களை நெருக்கி ஏவினார். ஆயிரக்கணக்கானவர்கள் அறிவுறுத்தப்பட்டு, உண்மையான மதமாற்றம் அடைந்தனர். இரத்தவெறிபிடித்த ஓநாய்களிடமிருந்து இந்த ஆடுகளைக் காக்கவேண்டியது மிகவும் அவசியமாக இருந்தது. புதிய பெயருடன் ஒரு சபையைத் தொடங்கவேண்டும் என்று வெஸ்லி நினைக்கவில்லை. ஆனால் அவர் மெதடிஸ்ட் உறவு என்னும் பெயரில் அவர்களைத் திரட்டினார். (42)

அமைக்கப்பட்டிருந்த சபைகளினால் இந்தப் பிரசங்கிகள் சந்திக்கவேண்டியதிருந்த எதிர்ப்பு, புதிராகவும் சோதிப்பதாகவும் இருந்தது. அப்படியிருந்தும் சீர்திருத்தம் சபைக்குள்ளாகவே ஆரம்பமாகும்படி தேவன் அவரது ஞானத்தினால், நிகழ்ச்சிகளை விலக்கினார். முற்றிலுமாக அது வெளியில் இருந்து வந்திருந்தால், எங்கு அதிகமாக அவசியமாயிருந்ததோ, அதற்குள் அது நுழைந்திருக்க முடியாது. ஆனால் எழுப்புதலைப் பிரசங்கிப்பவர்கள், சபையின் மனிதர்களாக இருந்து, சபையின் எல்லைக்குள்ளேயே இருந்ததால் எங்கெல்லாம் வாய்ப்புக் கிடைத்ததோ அங்கெல்லாம் சத்தியம் நுழைந்தது. அப்படிச்

செய்யாதிருந்தால் சாத்தப்பட்டிருந்த கதவுகள் திறக்கப்பட்டிருக்காது. சில போதகர்கள் தங்களது சன்மார்க்க உறக்கத்திலிருந்து எழுந்து, தங்களது சபைக்கோட்டங்களில் வைராக்கியமாகப் பிரசங்கம் செய்பவர்களானார்கள். சம்பிரதாயங்களினால் அசையாத கற்களைப்போல் இருந்த சபைகள் உயிரடையும்படி எழுப்பப்பட்டன. (43)

வெஸ்லியின் காலத்திலும் சபையின் வரலாறு முழுவதிலும் இருந்ததைப் போலவே பல்வேறுபட்ட வரங்களை உடைய மனிதர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச்செய்தனர். அவர்கள் கோட்பாடு களின் ஒவ்வொரு கருத்திலும் உடன்பட்டிருக்கவில்லை. (கோட்பாடுகள் பலவற்றில் அவர்களுக்குள் கருத்துவேறுபாடுகள் இருந்தன) என்றபோதும் அனைவரும் தேவஆவியினால் அசைக்கப்பட்டிருந்தனர். கிறிஸ்துவிற்கென்று ஆத்துமாக்களை ஆதாயம்செய்யும் குறிக்கோள் உடையவர்களாக இருந்தனர். ஒயிட்பீல்ட்—க்கும் வெஸ்லிக்கும் இடையில் ஒரு சமயம் உண்டான வேற்றுமை, பிரிவினையை உண்டுபண்ணக்கூடிய அச்சுறுத்தலாக இருந்தது. ஆனால் அவர்களிருவரும் கிறிஸ்துவின் பள்ளியில் தாழ்மையைக் கற்றிருந்ததால் ஒருவருக்கொருவர் சகிக்கும் தன்மையினாலும், அன்பினாலும் ஒப்புரவானார்கள். தவறுகளும் அக்கிரமங்களும் எங்கும் பெருகி, பாவிகள் அழியக்கூடிய நிலைமைகள் உண்டானபோது, தங்களுக்குள் வாக்கு வாதம்செய்ய அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. (44)

தேவனுடைய ஊழியக்காரர்கள் ஒரு கரடுமுரடான பாதையில் நடந்தார்கள். செல்வாக்கும் கல்வி அறிவும்மிக்க மனிதர்கள் அவர்களுக்கு எதிராகத் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தினர். சிலநாட்களுக்குப்பின் குருமார்களில் அநேகர் தீர்மானமான எதிர்ப்பைக் காட்டவே, தூய்மையான விசுவாசத்திற்கும், அதை அறிவித்தவர்களுக்கும் எதிராக சபைகளின் கதவுகள் மூடப்பட்டன. இந்த குருமார்கள் பிரசங்கபீடத்தின்மீதிருந்து கொடுத்த மறுப்புகள் அனைத்தும் இருளின் மூலக்கூறுகளையும், அறியாமையையும், அக்கிரமங்களையும் எழுப்பிவிட்டன. தேவனுடைய இரக்கமாகிய அற்புதத்தால் மீண்டும் மீண்டும் ஜான் வெஸ்லி சாவிலிருந்து தப்பினார். வன்முறையாளர்களின் கூட்டம் கோபத்தால் எழும்பினபோது, தப்பிக்கும் வழிகள் இல்லையென்று தோன்றியபோது, மனித உருவில் ஒரு தேவதூதன் அவருக்குப் பக்கத்தில் வரவே, அந்தக் கூட்டத்தினர் பின்னிட்டுவிழவே, கர்த்தரின் ஊழியக்காரன் அபாயகரமான இடத்திலிருந்து அபாயமற்ற இடத்திற்குக் கடந்துசென்றார். (45)

ஒரு தருவாயில் வெறிகொண்டிருந்த கூட்டத்தினரிடமிருந்து தப்பின விதத்தை: “நாங்கள் சறுக்கலான பாதை வழியாக கீழ்நோக்கி ஒரு

பேரூருக்குச் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு தடவை கீழே விழுந்துவிட்டால் என்னால் மறுபடி எழுந்திருக்கமுடியாது என்று நிதானித்து அநேகர் என்னைக் கீழே தள்ளிவிட முயன்றனர். நான் அவர்களது பிடிக்கு எட்டாதபடி தூரமாகும்வரை நான் தடுமாறவும் இல்லை சறுக்கவும் இல்லை. அநேகர் என்னைக் கீழே விழச்செய்ய எனது கழுத்துப்பட்டையையோ அல்லது ஆடையையோ பிடிக்கமுயன்றும், அவர்களால் பிடிக்கமுடியவில்லை. ஒரே ஒருவரால் மட்டும் எனது சட்டையின் தொங்கலைப் பிடிக்க முடிந்தது. அவர் அப்படிச்செய்தபோது, எனது சட்டையின் ஒரு பாதி அவரது கைக்குச் சென்றுவிட்டது. பாங்க் நோட்டுகளிருந்த பையையுடைய அடுத்த தொங்கல் பாதியாக மட்டும்தான் கிழிந்தது. எனக்குப் பின்னிருந்த ஒரு வெறிபிடித்த மனிதன் அவனது கையிலிருந்த நீண்ட ஓக் மரக் கம்பினால், பலதடவைகள் என்னை அடித்தான். அவன் என் பின்தலையில் ஒரு அடி அடித்திருந்தால் மேற்கொண்டு சிரமப்படவேண்டிய அவசியத்தை அது தவிர்த்திருந்திருக்கும். ஆனால் இந்த அடிகள் ஒவ்வொரு தடவையும் வேறு பக்கம் சென்றன. இது எப்படி என்பதை நான் அறியேன். ஏனெனில் என்னால் வலது புறமாகவோ இடதுபுறமாகவோ திரும்பமுடியாது. வேறொரு மனிதன் நெருக்கத்திலிருந்து கையை உயர்த்தியபடி என்னை அடிக்க ஓடிவந்து, திடீரென்று தன் கையை என்மீது நழுவவிட்டு, ‘இவனுக்கு எவ்வளவு மிருதுவான தலைமயிர் இருக்கிறது’ என்றான். எந்த மனிதர்களின் இதயங்கள் முதலாவதாகத் திரும்பினதோ அவர்கள் அந்தப் பேரூரின் நாயகர்களாக, எல்லாச் சந்தர்ப்பங் களிலும் கீழ்மக்களின் தலைவர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவன் கரடிகளுடன் பந்தையச் சண்டை செய்பவன்” என்று விவரித்தார். (46)

“தேவன் தம்முடைய சித்தத்திற்கு எப்படி மென்மையாக எங்களை ஆயத்தப்படுத்துகிறார்! இரண்டுவருடங்களுக்குமுன் ஒரு செங்கல் கட்டி என் தோள்களின்மேல் உரசி விழுந்தது. இதற்கு ஒரு வருடத்திற்குப்பின் எனது கண்களுக்கு நடுவில் ஒரு கல் விழுந்தது. கடந்தமாதம் ஒரு அடி கிடைத்தது. இன்று மாலை இரு அடிகள் கிடைத்தன. ஒரு அடி நாங்கள் பேரூருக்கு வருவதற்கு முன்னும், ஒரு அடி அதைவிட்டுச் சென்றபின்னும் கிடைத்தன. ஆனால் இரண்டும் ஒன்றுமில்லாதவைபோல் தோன்றின. ஏனெனில் ஒரு மனிதன் அவனது முழுபலத்துடனும் என் மார்பின்மேல் அடித்தாலும், அடுத்தவன் எனது வாயிலிருந்து உடனே இரத்தம் ஒழுகும்படி மிகப்பலமாக குத்தினாலும், இந்த இரண்டு அடிகளிலும், அவர்கள் என்னை வைக்கோலினால் தொடுவதைவிட அதிகமான வலியை நான் உணரவில்லை” என்று கோபமிக்க ஜனக்கூட்டத்திலிருந்து பல சமயங்களில் அவருக்குக் கிடைத்த விடுதலையைப்பற்றி வெஸ்லி கூறினார்.—John Wesley, Works, vol. 3, pp. 297, 298. (47)

அந்த ஆரம்பகாலத்திலிருந்த மெதடிஸ்டுகள்—போதகர்களும் மக்களும் சபை அங்கத்தினர்களிடமிருந்தும், தவறாகக் கூறப்பட்டதினால் கோபமூட்டப்பட்ட வெளியிலிருந்த மதப்பற்றில்லாதவர் களிடமிருந்தும், கேலியையும் உபத்திரவத்தையும் சகித்தனர். பெயரளவில் இருந்த நீதிமன்றங்களின்முன் அவர்கள் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தனர். ஏனெனில் அக்காலத்திலிருந்த நீதிமன்றங்களில் நீதிகிடைப்பதென்பது மிகவும் அரிதாயிருந்தது. அவர்கள் உபத்திரவப் படுத்தினவர்களால் அடிக்கடி பலாத்தகாரத்தை அனுபவித்தனர். கலகக்காரர்கள் வீட்டில் இருந்து வீட்டுக்குச்சென்று அவைகளிலிருந்த மேஜை நாற்காலி போன்ற பொருட்களை உடைத்து, அவர்களுக்குத் தோன்றின இடங்களில் சூறையிட்டு. பெண்களையும் குழந்தைகளையும் மனிதர்களையும் முரட்டுத்தனமாகத் தாக்கினார்கள். குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளில், மெதடிஸ்டுகளின் வீடுகளைக் கொள்ளையடிக்கும்படி, அவர்களது வீட்டுச் சன்னல்களை உடைப்பதற்குத் துணைசெய்ய விரும்புபவர்கள் கூடும் நேரமும் இடமும் குறிக்கப்பட்டபோது, அதற்கான அறிவிப்புகள் ஒட்டப்பட்டன. மனிதச் சட்டங்கள் தேவப் பிரமாணங்கள் ஆகிய இவ்விரண்டையும் பகிரங்கமாக மீறுகின்ற இந்த வன்முறைகள் கண்டிக்கப்படாமல், தொடர்ந்து நிகழும்படி அனுமதிக்கப்பட்டன. பாவிகளின் பாதங்களை அழிவின் பாதையிலிருந்து பரிசுத்தம் அடைகிற பாதைக்குத் திருப்ப வழிகாட்டின ஒரே குற்றத்திற்காக, அந்த மக்களுக்கெதிராக திட்டமிடப்பட்ட உபத்திரவம் செய்யப்பட்டது. (48)

தன்மேலும் தன்குழுவினர்மேலும் தொடுக்கப்பட்ட குற்றங்களைக் குறிப்பிட்டு: “இந்த மனிதர்களின் கோட்பாடுகள் பொய்யானவை, தவறானவை, உணர்வுகளைத் தூண்டக்கூடியவை, இதுவரை கேட்டிராத புதியவைகள், அது ஏமாற்றும் கொள்கை, மதவெறிகொண்டது” என்று சிலர் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆனால் இந்த குற்றங்களனைத்தும் ஏற்கனவே வேரோடு வெட்டப்பட்டிருக்கிறது. இந்த கோட்பாடுகளின் ஒவ்வொரு பிரிவும், நமது சபை குறுக்கிட்டு தடைசெய்திருக்கிற வேதவாக்கியங்களிலுள்ள எளிமையான கோட்பாடுகளென மிகப்பெரிய அளவில் காட்டப்பட்டுள்ளது. எனவே இது பொய்யானதாகவோ அல்லது தவறானதாகவோ இருக்கமுடியாது.” “மற்றவர்கள், அவர்களது கோட்பாடுகள் கடினமானவை, பரலோகப் பாதையை மிகவும் இடுக்கமானதாக்குகிறார்கள் என்கிறார்கள். உண்மையில் அதுவே பூர்வாங்கமான எதிர்ப்பாக இருக்கிறது. சில காலம் அது ஒன்று மட்டுமே, வெவ்வேறுவடிவங்களில் காணப்பட்ட ஆயிரம் காரியங்களுக்கு அடியில் இரகசியமாக இருந்தது. ஆனால் உண்மையாகவே நமது கர்த்தரும் அவரது அப்போஸ்தலர்களும் இடுக்கமாக்கினதைவிட இவர்கள் அதிக இடுக்கமாக்கி உள்ளனரா? வேதத்தில் இருப்பதைக்

காட்டிலும் கடினமான வேறு கொள்கை இருக்கிறதா? தெளிவான சில வேத வசனங்களைமட்டும் கவனித்துப் பாருங்கள். ‘அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்’ லுக்கா 10:27. ‘மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்’–மத். 12:36. ‘ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்’” (1கொரி. 10:31) என்று வெஸ்லி பதில்கூறினார். (49)

“அவர்களது கோட்பாடுகள் இதைவிடக் கடினமானதாக இருந்தால், அவர்கள் குறை சொல்லப்படவேண்டியவர்கள். ஆனால் அது அப்படி இல்லை என்பதை நீங்கள் உங்கள் மனசாட்சியில் அறிவீர்கள். வேத வாக்கியங்களுக்குத் தவறு இழைக்காமல் யார் ஒரு சிறு புள்ளி அளவு கவனக்குறைவாக இருக்கமுடியும்? தேவ இரகசியத்தின் உக்கிராணக்காரன் யாராவது பரிசுத்தமான அந்த கருவூலத்திலிருந்து ஏதாவதொரு பகுதியை மாற்றினால், அவன் உண்மையுள்ளவனாக இருக்கமுடியுமா? முடியாது. அவனால் ஒன்றையும் நீக்க இயலாது. அவனால் எதையும் மென்மையாக்க முடியாது. எல்லா மனிதர்களுக்கும் அறிவிக்கும்படி அவன் நெருக்கி ஏவப்பட்டிருக்கிறான். உங்களது சுவைக்கு ஏற்ற வண்ணமாக என்னால் வேத வசனத்தைக் கொண்டுவர இயலாது. நீங்கள் அதன் தரத்திற்கு வரவேண்டும் அல்லது நிச்சயமாக அழியவேண்டும். ‘இந்த மனிதர்களின் கடுமை’ என்பது பிரபலமான குரலாக உள்ளது. கடுமை? அவர்கள் கடுமையானவர்களா? எந்த வகையில்? அவர்கள் பசியுள்ளவர்களுக்கு ஆகாரம் கொடுத்து, வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுப்பதில்லையா? அது காரியமல்ல. அவர்கள் இதில் குறை உள்ளவர்களாக இல்லை. ஆனால் நியாயந்தீர்ப்பதில் அவர்கள் பட்சம் அற்றவர்களாக உள்ளனர். அவர்களது பாதையைப் பின்பற்றுபவர்களைத் தவிர வேறு எவரும் இரட்சிக்கப்படமாட்டார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள்” என்று கூறினார்.—Ibid., vol. 3 pp. 152, 153. (50)

வெஸ்லியின் காலத்திற்குச் சற்றுமுன், இங்கிலாந்தில் காணப்பட்ட ஆவிக்குரிய வீழ்ச்சி, ஆண்டிநோமியன் போதனையின் விளைவாக இருந்தது. கிறிஸ்து சன்மார்க்கப் பிரமாணங்களை நீக்கி விட்டார் எனவே அவைகளைக் கடைப்பிடிக்கும் கடமை கிறிஸ்தவர்களுக்கு இனி இல்லை.

"நற்செயல்களைச் செய்யும் அடிமைத்தனத்தில்" இருந்து ஒரு விசுவாசி, விடுதலையாக்கப் பட்டிருக்கிறார் என்று அநேகர் உறுதியாகக் கூறுகின்றனர். மற்றவர்கள் சன்மார்க்கப் பிரமாணத்தின் நித்தியத்துவத்தை ஒப்புக்கொண்ட போதிலும், அதன் கட்டளைக்கு மக்கள் கீழ்ப்படியவேண்டும் என்று ஊழியக்காரர்கள் கடிந்துரைப்பது அவசியமற்றது, ஏனெனில் இரட்சிப்பிற்காக தேவன் தெரிந்துகொண்டவர்கள், "எதிர்க்கமுடியாத தெய்வீக உந்துதலினால் பக்தியையும் நற்குணத்தையும் செயல்படுத்த நடத்தப்படுவார்கள்." நித்திய அழிவிற்காக சபிக்கப்பட்டவர்கள் "தெய்வீகப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும் வல்லமையை தங்களிடம் பெற்றிருக்கவில்லை" என்று கூறுகி றார்கள். (குறிப்பு: சுவிசேஷத்தின் முன்வைக்கப்பட்டுள்ள கிருபையின் மகத்துவத்தினால், சன்மார்க்கப் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதிலிருந்து கிறிஸ்தவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்னும் கோட்பாட்டை போதிக்கின்ற யேகோவாவின் சாட்சிகள், பெந்தகொஸ்தெ சபையினர் போன்றவர்கள் இந்தக் கூட்டத்தில் உட்படுவார்கள்). (51)

"தெரிந்துகொள்ளப்பட்டவர்களால் கிருபையிலிருந்து விழமுடியாது அல்லது தெய்வீக ஆதரவு அவர்களுக்கு மறுக்கப்பட மாட்டாது" என்று சொன்ன மற்றவர்கள், "அவர்கள் செய்யும் கெட்ட செயல்கள் உண்மையில் பாவமுள்ளவை அல்ல் அவைகள் தெய்வீகப் பிரமாணங்களை மீறிய செயல்கள் என்றும் கருதப்பட முடியாது. அதனால், தங்களது பாவங்களை அறிக்கை செய்யவோ அல்லது மனம்வருந்திவிட்டு விலகவோ வேண்டிய வாய்ப்பு இல்லை" என்கிற இன்னும் பயங்கரமான முடிவுகளுக்கு வந்தார்கள். எனவே, மிகக்கொடிய பாவங்களில் ஒன்றானாலும், தெரிந்துகொள்ளப்பட்ட ஒருவரால் செய்யப்பட்டிருந்தால், "உலகம் முழுவதிலும் தெய்வீகச்சட்டத்தை மீறின மிக மோசமான பாவம் என்று அது கருதப்பட்டிருந்தாலும், தேவனுடைய பார்வையில் அது பாவமல்ல" —McClintock and strong, Cyclopedia, art. "Antinomians." ஏனெனில், தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் தவிர்க்கமுடியாத குறிப்பிடக்கூடிய குணலட்சணங்களில் ஒன்று, தேவனுக்குப் பிரியமில்லாத எந்தச் செயலையும் அல்லது பிரமாணத்தால் தடைசெய்யப்பட்டிருக்கிற எதையும் அவர்களால் செய்யமுடியாது" என அறிவித்தார்கள். (52)

இந்த இராட்சதக் கோட்பாடு, "போப்பு, பிரமாணத்திற்கு மேலானவரா யிருந்து பிரமாணத்தை திருத்துவதன் மூலமும் மாற்றுவதின்மூலமும், தவறானவைகளைச் சரியாக்கலாம். தேவப் பிரமாணத்திற்கும் மனித நியதிக்கும் முரண்பட்டவிதத்தில் நியாயத்தீர்ப்பு செலுத்த அவரால் முடியும்" என்று ரோமமார்க்கம் உரிமை பாராட்டுவதைப் போலவே, தவிர்க்க முடியாதபடி இருக்கிறது. "இவை இரண்டும், பாவமில்லாதவர்களான

பரலோகவாசிகளுக்கிடையிலும் தேவப் பிரமாணத்திலுள்ள நீதிமிக்க கட்டுப்பாட்டை உடைப்பதற்குச் செயலாற்றிய அதே தலைவனின் ஆவியின் ஏவுதலையே வெளிக்காட்டுகிறது. (53)

மாற்றமில்லாத வகையில், மனிதனுடைய சுபாவத்தை நிலைப்படுத்தும் இந்தத் தேவ கட்டளையின் கொள்கை, அநேகரை தேவப்பிரமாணத்தை நிராகரிக்கும்படியாக வழிநடத்தியது. ஆண்டிநோமிய ஆசிரியர்களின் போதனைகளை உறுதியுடன் எதிர்த்துநின்று, இந்த ஆண்டிநோமியனிசக் கோட்பாடு வேத வாக்கியத்திற்கு எதிரானது என எடுத்துக்காட்டினார் வெஸ்லி. “ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி”–தீத்து 2:11. “நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது”–1 தீமோ. 2:3,6. “உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி”–யோவான் 1:9. ஜீவனின் ஈவாகிய இரட்சிப்பை மனிதர் தங்களுடைய மனப்பூர்வமான மறுப்பினால் மட்டுமே இழந்துவிடுகின்றனர். (54)

கிறிஸ்துவின் மரணத்தினால் (மோசேயின்) சடங்காச்சாரப் பிரமாணங்களுடன் சேர்ந்து, சன்மார்க்கப்பிரமாணத்திலுள்ள கட்டளைகளும் நீக்கப்பட்டுவிட்டன என்று உரிமைபாராட்டுதலுக்கு விடையாக “பத்துக் கற்பனைகளில் அடங்கியுள்ள சன்மார்க்கப் பிரமாணத்தை, தீர்க்கதரிசிகளால் வலியுறுத்தப்பட்டவைகளை அவர் நீக்கவில்லை. அவரது வருகையின் நோக்கம் அதன் எந்தப் பகுதியையும் நீக்குவது அல்ல. ‘பரலோகத்தில் விசுவாசமிக்க சாட்சியாக நிற்கும்’ அது ஒருபோதும் மீறப்பட முடியாதது. அது சிருஷ்டிகரின் கரத்திலிருந்து மக்கள் அனைவரும் வந்தபோது, ‘கற்பலகைகளில் மட்டும் எழுதப்பட்டவையாக’ இராமல், உலகத்தோற்றமுதல் அவர்களது இதயத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆயினும் தேவனுடைய விரலினால் முன்பொரு சமயம் எழுதப்பட்ட அது, பாவத்தின் காரணமாக பெருமளவிற்கு உருக்குலைந்து போயுள்ளது என்றாலும், நாம் நன்மை தீமையைப் பற்றிய மனசாட்சியை உடையவர்களாக இருக்கும்போது, அவைகளை முற்றிலுமாக நீக்கமுடியாது. மனித இனம் முழுவதின்மேலும் எக்காலத்திலும் இந்தப் பிரமாணத்தின் ஒவ்வொரு பகுதியும் வலிமை உள்ளதாக, காலத்தையும், இடத்தையும், வேறு எந்த

சூழ்நிலையையும் சாராமல், தேவனுடைய இயல்பையும், மனிதனுடைய இயல்பையும் இவர்களுக்கிடையிலுள்ள மாறாத உறவையும் சார்ந்ததாகவும் அது இருக்க வேண்டும். (55)

"'அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.' கேள்விக்கிடமற்ற வகையில் இங்கு இதன் பொருள் என்னவெனில் (இசைவுடன் இதற்கு முன்னும் பின்னும் செல்லும் அனைத்துடனும்) — மறைக்க முயலுவதையும் தாண்டி, அதன் முழுமையை நிலைநாட்டவே நான் வந்திருக்கிறேன். அதில் எவைகளெல்லாம் புரியாதவைகளாகவும், இருளானதாகவும் இருந்தனவோ அவைகளை முழுமையாகக் காணக்கூடிய அளவிற்குத் தெளிவாக்க நான் வந்திருக்கிறேன். அதன் ஒவ்வொரு பகுதியின் உண்மையும் முழுமையுமான முக்கியத்துவத்தை அறிவிக்க நான் வந்திருக்கிறேன். அவைகளில் அடங்கிய ஒவ்வொரு கற்பனைகளின் நீளம் அகலம் ஆகியவற்றின் முழு எல்லையையும், உயரத்தையும் ஆழத்தையும் அதன் எல்லாக் கிளைகளிலுமுள்ள அறிவுக்கெட்டாத அதன் தூய்மையையும், அதன் ஆவிக்குரிய தன்மையையும், காட்டவே நான் வந்திருக்கிறேன்" என்பதேயாகும்?—Wesley, sermon 25. (56)

சுவிசேஷம், பத்துக் கற்பனைகள் ஆகியவைகளிலுள்ள பரிபூரண மான இசைவை வெஸ்லி அறிவித்தார். "எனவே சுவிசேஷத்திற்கும் கற்பனைக்கும் இடையில் அறிந்துகொள்ளக்கூடிய மிகமிக நெருக்கமான உறவு இருக்கிறது. ஒருபுறம் கற்பனை தொடர்ச்சியாக சுவிசேஷத்திற்கான பாதையை வகுத்து, அதை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. மறுபக்கம் கற்பனையை மிகச் சரியாக நிறைவேற்றும்படி சுவிசேஷம் நம்மைத் தொடர்ந்து நடத்துகிறது. உதாரணத்திற்கு, தேவனை நேசிக்கவும் நமது அயலாரை நேசிக்கவும் சாந்தமாகவும் தாழ்மையாகவும் பரிசுத்தமாகவும் இருக்கவும் கற்பனை நமக்குக் கற்பிக்கிறது. இவைகளைச் செய்வதற்கு நம்மால் முடியாது என்று நாம் உணருகிறோம். ஆம், 'மனிதனால் இது கூடாதுதான்.' ஆனால் அந்த அன்பை நமக்குத் தரவும், நம்மைத் தாழ்மையும் சாந்தமும் பரிசுத்தமுமானவர்களாகச் செய்யும் தேவனுடைய ஒரு வாக்குத்தத்தத்தைக் காண்கிறோம். இந்த சுவிசேஷத்தை—நற்செய்தியை நாம் பற்றிக்கொள்ளுகிறோம். நமது விசுவாசத்திற்குத்தக்கதாக நமக்குச் செய்யப்படுகிறது. இப்படியாக நியாயப்பிரமாணத்தின் நீதி 'கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தின்' மூலமாக நம்மில் வருகிறது." (57)

"கற்பனையில் மிகவும் சிறிதான அல்லது மிகவும் பெரிதான ஒன்றையோ அல்லாமல், எல்லாவற்றையும் ஒரே அடியில் நீக்கிவிடும்படி, பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் 'பிரமாணத்தையே நியாயந்தீர்த்து',

'நியாயப்பிரமாணத்தைப்பற்றித் தீமையாகப் பேசி' (அதைக் கலைக்கவும் தளர்த்தவும் அது கோரும் கடமையைக் கட்டவிழ்க்கவும் பேசி), அதை மீறும்படி மனிதர்களுக்குப் போதிக்கிறவர்கள் எவர்களோ, அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் எதிரிகளில் முன்னணியில் இருக்கிறார்கள். பலமிக்க இந்த வஞ்சகத்தின் சகல சூழ்நிலைகளிலும் ஆச்சரியப்படக்கூடியது என்னவென்றால், அந்த வஞ்சகத்திற்குத் தங்களை ஒப்புவித்தவர்கள், அவரது கொள்கைகளை அழித்துக்கொண்டிருக்கும் நேரத்திலேயே, கிறிஸ்துவின் பிரமாணத்தைக் கவிழ்ப்பதின் மூலம் அவரை மேன்மைப்படுத்துவதாகவும், அவரது பணியைப் பெரிதுபடுத்துவதாகவும் உண்மையாகவே நம்பிக்கொண்டிருப்பதுதான்! ஆம், கிறிஸ்துவை நோக்கி: 'ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்து', யூதாஸ் அவரை கௌரவித்ததுபோலவே அவர்கள் அவரை கௌரவிக்கிறார்கள். 'முத்தத்தினால் மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாயா?' என்று அவர்கள் ஒவ்வொருவரையும் அவர் கேட்பது நியாயமாயிருக்கும். சுவிசேஷத்தை முன்கொண்டு செல்லும் பாவனையில், அவரது பிரமாணத்தின் எந்தப் பகுதியையும் கனப்படுத்தாமலிருப்பது, முத்தத்தினால் அவரைக் காட்டிக்கொடுப்பதைத் தவிர, அவரது இரத்தத்தை சிந்துவதைத்தவிர, அவரது கிரீடத்தை எடுத்துக்கொள்ளுவதைத் தவிர வேறொன்றுமல்ல. அல்லாமலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, கீழ்ப்படிதலின் எந்த ஒரு பகுதியையாவது நீக்கிவைக்கும்படி விசுவாசத்தைப் பிரசங்கிக்கிற, தேவனுடைய பிரமாணங்களில் மிகவும் சிறிதான ஒன்றையும் எவ்வகையிலாவது பலவீனப்படுத்தும்படி அல்லது நீக்கிப்போடும்படி கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிற எந்த ஒருவரும் நிச்சயமாக இந்தக் குற்றச்சாட்டிலிருந்து தப்பமாட்டார்கள்."—Ibid., sermon 35. (58)

"சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது என்பது பிரமாணத்தின் அனைத்து எல்லைகளுக்கும் முடிவான பதிலாக இருக்கிறது. நாங்கள் இதை முற்றிலுமாக மறுக்கிறோம். பாவத்தைப்பற்றி மனிதனுக்கு அறிவுறுத்துதல், நரகத்தின் விளிம்பில் இன்னமும் உறங்கிக்கொண்டிருப்பவர்களை எழுப்பிவிடுதல் என்கிற பிரமாணத்தின் முதல் எல்லைக்குக்கூட இது விடை பகரவில்லை" என்று அவரை நெருக்கியவர்களிடம் வெஸ்லி கூறினார். "பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது" என்று பவுல் அறிவிக்கிறார். "பாவத்தைப்பற்றிய குற்ற உணர்வு மனிதனுக்கு உண்டாகாதவரை, அவன் கிறிஸ்துவின் பாவநிவாரண இரத்தத்தின் அவசியத்தை உண்மையாக உணரமாட்டான். 'பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே அல்லாமல், சுகமுள்ளவர்களுக்கு வேண்டியது இல்லை' என்று கர்த்தரே கூறுகிறார். எனவே, சுகமுள்ளவர்களுக்கோ அல்லது குறைந்தபட்சம் நாங்கள் சுகமாக இருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கோ ஒரு வைத்தியன்

தேவையென்பது கேலியானது. பிணியாளிகளாக இருக்கிறார்கள் என்று முதலில் அவர்களுக்கு உணர்த்தவேண்டும். அப்படியில்லாவிட்டால், அவர்கள் உங்களது ஊழியத்திற்கு நன்றி கூறமாட்டார்கள். ஒருபோதும் நொறுங்காத இதயத்தையுடையவர்களுக்கு கிறிஸ்துவைக் கொடுப்பதும் பொருத்தமில்லாததுதான்" என்று வெஸ்லி கூறினார்.—Ibid., sermon 35. (59)

இவ்வாறாக சுவிசேஷத்தின் கிருபையைப் பிரசங்கித்தபோதே, வெஸ்லி அவரது எஜமானரான கிறிஸ்துவைப் போலவே, வேதத்தை முக்கியப்படுத்தி, அதை மகிமையுள்ளதாக்குவதற்குச் செயலாற்றினார். தேவனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை அவர் விசுவாசத்துடன் நிறைவேற்றினார். அவர் காணும்படி அனுமதிக்கப்பட்ட அதன் விளைவுகள் மகிமைமிக்கவைகளாக இருந்தன. எண்பது வருடங்களுக்கு மேலான, நீண்ட அவரது வாழ்க்கையில், ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் ஊர்ஊராகச் செல்லும் ஊழியத்தில் செலவிடப்பட்டது. வெளிப்படையாக அவரைப் பின்பற்றினவர்களின் எண்ணிக்கை ஐந்து லட்சம் ஆத்துமாக்களுக்கும் அதிகமாக இருந்தது. ஆனால் அவரது ஊழியத்தினால் அழிவிலிருந்தும் பாவத்தினாலான கீழான நிலையிலிருந்தும் மேலான தூய்மைமிக்க ஒரு அனுபவத்தைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை, அவரது போதனையினால் ஆழமான செல்வமிக்க அனுபவத்தை அடைந்தவர்களின் எண்ணிக்கை, மீட்கப்பட்ட முழுகுடும்பமும் தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்படும்வரை ஒருபோதும் அறியப்படமாட்டாது. விலைமதிக்கமுடியாத மதிப்புள்ள ஒரு பாடத்தை அவரது வாழ்க்கை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் வைத்திருக்கிறது. தேவனுடைய ஊழியக்காரனிடமிருந்த அப்படிப்பட்ட விசுவாசமும் தாழ்மையும், களைப்படையாத வைராக்கியமும் தன்னைத்தான் தியாகம் செய்தலும், பக்தியும் இக்காலத்திலுள்ள சபைகளிலும் காணப்படுவதாக. (60) ★

# 15

# போப்புவின் கொடுமைகளும் புரட்சியின் சிறுமைகளும்...!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 265–288)**

சீர்திருத்தம் பதினாறாம் நூற்றாண்டில், திறந்த வேதாகமத்தை மக்கள் அனைவர் முன்பும் வைத்து, ஐரோப்பாவிலுள்ள அனைத்து நாடுகளும் அதனிடம் வந்துசேர வகைதேடியது. சில நாடுகள் அதனைப் பரலோகத்திலிருந்து வந்த ஒரு தூதராகக் கருதி, மகிழ்ச்சியுடன் வரவேற்றன. மற்ற நாடுகளில் அது நுழைவதைத் தடுப்பதில் போப்புமார்க்கம் வெற்றியடைந்து, அதனால் வேதாகமத்தைப் பற்றிய அறிவின் ஒளியும் மேம்படுத்தும் அதன் செல்வாக்கும் கிட்டத்தட்ட முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டது. ஒரு நாட்டில், ஒளி அதன் நுழைவைக் கண்டபோதிலும், இருளினால் அதனை அறிந்துகொள்ள இயலவில்லை. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக சத்தியமும் தவறும் ஒன்றையொன்று மேற்கொள்ளப் போராடிக்கொண்டிருந்தன. இறுதியில் தீமை வெற்றியடையவே, பரலோகத்தின் சத்தியம் வெளித்தள்ளப்பட்டது. “ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது”–யோவான் 3:19. அந்த நாடு அது தேர்ந்துகொண்ட செயலின் விளைவை அறுவடை செய்யும்படி விட்டுவிடப்பட்டது. அவரது கிருபையின் ஈவை நிந்தித்த மக்களிடமிருந்து தேவ ஆவியின் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. தீமை முதிரும்படி அனுமதிக்கப்பட்டது. ஒளியை மனதார நிராகரித்ததினால் உண்டான பலனை முழு உலகமும் கண்டது. (1)

அநேக நூற்றாண்டுகளாக பிரான்ஸில் நடத்தப்பட்ட வேதாகமத் திற்கெதிரான போர், புரட்சியின் காட்சிகளில் முடிவடைந்தது. வேத

வசனங்களை ரோம் ஒடுக்கியது, இந்தப் பயங்கரமான கலகத்திற்கு நியாயமான காரணமாகும். போப்புமார்க்கத்தின் கொள்கைகளை, ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ரோமசபை போதித்துவந்தவைகளை செயல்படுத்தினதால், உலகம் இதுவரை கண்டிராத கண்கூடான காட்சிகளை இந்தப் புரட்சி முன்வைத்தது. (2)

ரோமமார்க்கத்தின் மேலாண்மையின் காலத்தில் வேதவாக்கியங்கள் ஒடுக்கப்பட இருந்தது, தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டிருந்தது. பாவமனிதனுடைய ஆளுகையில் நிகழக்கூடிய பயங்கரமான விளைவுகளை, குறிப்பாக பிரான்ஸில் நிகழக்கூடியவைகளை, வெளிப்படுத்தின விசேஷித்தை எழுதினவர் சுட்டிக்காட்டுகிறார். (3)

"ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிராகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால் அதை அளவாமல் புறம்பாக்கிப்போடு; பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள். என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக் கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன். பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே. ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்; அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்படவேண்டும். அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லி வருகிற நாட்களிலே மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு. அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும். அவர்களுடைய உடல்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார். ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரைநாள் வரைக்கும் பார்ப்பார்கள், அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள். அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினபடியால் அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை

அனுப்புவார்கள். மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது, அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்; அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று" (வெளி. 11:2–11) என்று தேவதூதன் கூறினான். (4)

நாற்பத்திரண்டு மாதங்கள்—ஆயிரத்திருநூற்று அறுபது நாட்கள் (1260)—என்று இங்கு குறிக்கப்பட்டுள்ள காலங்கள், ரோமினால் கிறிஸ்துவின் சபை ஒடுக்கப்பட இருந்த அதே காலத்தைக் குறிப்பதாகும். கி.பி.538–ல் துவங்கின 1260 வருட போப்புமார்க்கத்தின் மேலாதிக்கம், கி.பி. 1798–ல் முடிவடையும். அந்தக் காலத்தில், ஒரு பிரெஞ்சு சேனை ரோம் நகரில் நுழைந்து, போப்புவை கைதியாக்கியது. அவர் நாடுகடத்தப்பட்ட இடத்தில் இறந்தார். அதன் பின் விரைவில் ஒரு புதிய போப்பு தேர்ந்தெடுக்கப்பட்டபோதிலும் அதற்குப்பின் ஒருபோதும் அதன் தலைவர்களால் முன்னிருந்த வல்லமையை பெறமுடியவில்லை. (5)

1260 வருடங்கள் நெடுகிலும் சபையின் உபத்திரவங்கள் தொடரவில்லை. தேவன் தமது பிள்ளைகள்மேல் கொண்ட கிருபையினால், அந்த பயங்கரமான சோதனைக்காலத்தைக் குறைத்தார். சபைக்கு நிகழ விருந்த பெரிய உபத்திரவத்தைக்குறித்து முன்சொல்லியபோது, "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்" (மத்தேயு 24:22) என்று இரட்சகர் கூறியிருந்தார். சீர்திருத்தத்தின் செல்வாக்கினால் உபத்திரவம் 1798–க்கு முன்பாகவே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. (6)

அவ்விரண்டு சாட்சிகளைக் குறித்து, "பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே." "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்று தீர்க்கதரிசியும் சங்கீதக்காரனும் அறிவித்தார்கள். இந்த இரண்டு சாட்சிகளும் வேதத்தின் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளாம். தேவனுடைய கட்டளைகளின் துவக்கத்திற்கும், நித்தியத்திற்கும் இவ்விரண்டு சாட்சிகளும் முக்கியமான சாட்சிகளாம். இரட்சிப்பின் திட்டத்திற்கும் இவ்விரண்டும் சாட்சிகளாம். பழைய ஏற்பாட்டின் நிழலான பலிகளும் தீர்க்கதரிசனங்களும், வரப்போகும் இரட்சகரைச் சுட்டிக்காட்டின. புதிய ஏற்பாட்டின் சுவிசேஷங்களும் நிருபங்களும், நிழலாலும் தீர்க்கதரிசனங்களாலும் சொல்லப்பட்டபடியே மிகச்சரியாக வந்திருந்த இரட்சகரைக்குறித்துச் சொல்லுகின்றன. (7)

"இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திரு நூற்றறுபது நாளளவும்" தீர்க்கதரிசனஞ்சொன்ன இந்தக்காலத்தில்

தேவனுடைய சாட்சிகள் வெளிப்படையாக அன்றி மறைவாகவே இருந்தனர். போப்புமார்க்கம் சத்தியவசனத்தை மக்களிடமிருந்து மறைக்கப் பார்த்து, அதன் சாட்சிக்கு முரண்பாடான சாட்சிகளை அவர்கள்முன் வைக்கப் பார்த்தது. மதம் மற்றும் உலக அதிகாரங்களால் வேதாகமம் தடை செய்யப்பட்டபோது, அதன் பிரமாணங்கள் திரித்துக்கூறப்பட்டபோது, அதனிடமிருந்து மக்களுடைய மனதை திருப்புவதற்ககேதுவாக, மனிதர்களாலும் பிசாசுகளாலும் கண்டுபிடிக்க முடிந்த ஒவ்வொரு முயற்சியும் செய்யப்பட்டது. அதன் புனிதமான சத்தியங்களை அறிவிக்க துணிந்தவர்கள் வேட்டையாடப்பட்டபோது, காட்டிக்கொடுக்கப்பட்டு, உபத்திரவப்படுத்தப் பட்டு, நிலவறைகளில் புதைக்கப்பட்டு தங்கள் விசுவாசத்திற்கு இரத்த சாட்சிகளாக்கப்பட்டனர். அல்லது மலைகளின் மறைவிடங்களுக்கும் பூமியின் குகைகளுக்கும் ஓடிப்போகும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அப்போது இந்த உண்மையான சாட்சிகள் இரட்டு உடுத்தியிருந்து தீர்க்கதரிசனம் உரைத்தனர். அப்படியிருந்தும் அவர்கள் 1260 வருடங்கள் முழுவதும் சாட்சி பகர்ந்தனர். அந்த காரிருளான காலங்களில், தேவனுடைய வார்த்தைகளை நேசித்த, அவருடைய கனத்தைக்குறித்து வைராக்கியமாயிருந்த விசுவாசமான மனிதர்கள் இருந்தனர். இந்த உண்மையான ஊழியக்காரர்களுக்கு அவரது சத்தியத்தை அந்தக் காலங்கள் முழுவதும் அறிவிக்க ஞானமும், வல்லமையும் அதிகாரமும் கொடுக்கப்பட்டது. (8)

"ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர் களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக் களைப் பட்சிக்கும்; அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்பட வேண்டும்." மனிதன் தனக்கு தீங்கு இல்லாமல் தேவனுடைய வசனத்தை மிதிக்க இயலாது. இந்த பயங்கரமான தண்டனையின் பொருள் வெளிப்படுத்தின புத்தகத்தின் கடைசி அதிகாரங்களில் வைக்கப்பட்டிருக்கிறது. "இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்தி லிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்" வெளி. 22 :18,19. (9)

தேவன் வெளிப்படுத்தியிருக்கிற, அல்லது கட்டளையிட்டிருக்கிற எதையும் எவ்விதத்திலும் மாற்றுவதற்கு எதிராக அவர் கொடுத்திருக்கிற

எச்சரிப்புகள் இவைகள். இந்த பவித்திரமான கண்டிப்பு, தங்களுடைய செல்வாக்கினால் தேவனுடைய கட்டளையை அற்பகாரியமாக எண்ணும்படி மற்றவர்களை நடத்தும் அனைவருக்கும் பொருந்தும். தேவனுடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிந்தாலும் கீழ்ப்படியாவிட்டாலும் அது ஒன்றும் பெரிய காரியமல்ல என்று கவனக்குறைவாகச் சொல்லுகிறவர்களை அவைகள் பயந்து நடுங்கச்செய்யவேண்டும். தெய்வீக வெளிப்பாடுகளுக்கு மேலாக தங்கள் கருத்துக்களை உயர்த்துகிறவர்கள், தங்களுடைய வசதிக் கேற்ப அல்லது உலகத்துடன் ஒத்துப்போவதற்காக வேதவார்த்தைகளின் எளிமையான பொருளை மாற்றுகிறவர்கள் தங்கள்மீது பயப்படத்தக்க பொறுப்பை எடுத்துக்கொள்ளுகிறார்கள். எழுதப்பட்டிருக்கிற வார்த்தை தேவனுடைய கட்டளை, அது ஒவ்வொரு மனுஷனுடைய குணத்தையும் அளந்து, தவறாத அச்சோதனையால் குறையக்காணப்பட்டதாகக் குறிக்கப் படுகிற அனைவரையும் கண்டிக்கும். (10)

"அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லிமுடித்திருக்கும்போது" (முடித்தபோது), இந்த இருசாட்சிகளும் இரட்டுடுத்தினவர்களாக தீர்க்கதரிசனம் உரைத்தது கி.பி.1798—ல் முடியவேண்டியதாக இருந்தது. அவைகள் தங்கள் பணியை முடிக்கும் நேரத்தை நெருங்கியபோது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வல்லமை இவைகளுடன் யுத்தம்செய்ய வேண்டியதாக இருந்தது. ஐரோப்பாவிலிருந்த அநேக நாடுகளில், சபையிலும் நாட்டிலும் ஆட்சிசெய்திருந்த வல்லமைகள் நூற்றாண்டுகளாகப் போப்புமார்க்கத்தின் வழியாக சாத்தானால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் இங்கு சாத்தானுடைய வல்லமையின் ஒரு புதிய வெளிப்பாடு காட்சிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. (11)

வேதாகமத்தின்மேல் பக்தியாக இருப்பதுபோல் பாவித்து அறியப்படாத மொழியில் அதைப் பூட்டிவைப்பதும், மக்களிடம் இருந்து மறைத்துவைப்பதும் ரோம மார்க்கத்தின் கொள்கையாக இருந்தது. (அவர்களது வேதவாசிப்பும் ஆராதனையும் ஜெபங்களும் நம்நாட்டு மக்கள் அறியாத லத்தீன் அல்லது சீரியமொழிகளில் சமீபகாலம்வரை வழக்கத்தில் இருந்தன என்பதை ரோமன் கத்தோலிக்கர்களே ஒப்புக்கொள்ளுவார்கள்). அதன் ஆளுகையில் சாட்சிகள் இரட்டு உடுத்தினவர்களாக தீர்க்கதரிசனம் உரைத்தனர். ஆனால் வேறொரு வல்லமை—பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம்—தேவனுடைய வார்த்தைக்கு எதிராக வெளிப்படையாக பகிரங்கமான யுத்தம்செய்ய எழும்பவேண்டியதாக இருந்தது. (12)

அந்த சாட்சிகள் கொலைசெய்யப்பட்ட, அவர்களது உடல்கள் கிடந்த "மகா நகரம்", "எகிப்து என்று ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்."

வேதாகம வரலாற்றில் காணப்படும் சகல நகரங்களிலும், எகிப்து தேசமானது ஜீவனுள்ள தேவனுடைய சமூகத்தை மிகத் தைரியத்துடன் மறுத்து, அவரது கட்டளைகளைத் தடுத்தது. எகிப்தின் அரசன் செய்ததுபோல, வேறெந்த அரசனும் ஒருபோதும் பரலோகத்தின் அதிகாரத்திற்கு எதிராக பகிரங்கமாகவும், அக்கிரமமாகவும் கலகம்செய்யத் துணியவில்லை. மோசேயினால் கர்த்தரின் பெயரில் பார்வோனுக்குத் தூது கொடுக்கப்பட்டபோது, பார்வோன்: "நான் கர்த்தரை அறியேன். நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை" (யாத். 5:2) என்று பெருமையாக பதில் கூறினான். இதுதான் கடவுள் இல்லை என்கிற நாத்திகவாதம். எகிப்து என்று குறிப்பிடப்படும் அந்த நாடு(பிரான்ஸ் நாடு), அதைப்போன்றே ஜீவனுள்ள தேவனின் உரிமைகளை மறுக்கும் குரலை எழுப்பி, அதைப்போன்றே நம்பிக்கையின்மையின் ஆவியையும், கீழ்ப்படியாமையையும் வெளிக்காட்டும். அந்தப் பெரிய நகரம், ஆவிக்குரிய விதத்தில் சோதோமுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. தேவப்பிரமாணங்களை மீறும் செயல்களினால், குறிப்பாக விபசாரம் செய்வதினால், அதன் துன்மார்க்கம் வெளிக்காட்டப்பட்டது. வேத வசனத்தில் காணப்படும் தீர்க்கதரிசனக்குறிப்புகளை நிறைவேற்றுவதற்கு, இந்தப் பாவமும் அந்த நாட்டின் குறிப்பான தனித்தன்மையாக இருக்கவேண்டும். (13)

தீர்க்கதரிசியின் வார்த்தைகளின்படி, கி.பி.1798–கு சற்றுமுன், சாத்தானால் உண்டாகி, அவனுடைய சுபாவத்தை உடைய ஒரு வல்லமை வேதாகமத்துடன் போரிட எழும்பும். தேவனுடைய இரண்டு சாட்சிகளின் சாட்சியங்களும் மௌனப்படுத்தப்படவேண்டிய அந்த நாட்டில், பார்வோனின் நாத்திகமும், சோதோமின் விபசாரமும் காணப்பட்டிருக்கும். (14)

இந்தத் தீர்க்கதரிசனத்தின் மிகச் சரியான, குறிப்பான நிறைவேறுதலை பிரான்ஸ் நாட்டின் வரலாற்றில் காணலாம். நாகரீகத்தில் பிறந்து கற்றறிந்த ஒரு கூட்டம், ஐரோப்பாவின் நகரங்களில் மிகச் சிறந்த நாடுகளில் ஒன்றை ஆளும் உரிமையை அனுமானித்துக்கொண்டு, மனிதனின் ஆத்துமா பெற்றுக்கொள்ளுகின்ற மிகவும் பக்திவிநயமான சத்தியத்தை, ஒன்றுபட்ட தனது சத்தத்தை உயர்த்தி, மறுத்து, தெய்வத்தையும் அவரை ஆராதிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஏகமனதாக மறுத்ததை உலகம் முதல் தடவையாக கேள்விப்பட்டது.—Sir Walter Scott, Life of Napoleon, vol. 1, ch. 17. (15)

பிரபஞ்சத்தை படைத்தவருக்கெதிராகப் பகிரங்கமாகக் கலகம்செய்ய தன் தரத்தை உயர்த்தின ஒரே நாடு—பிரான்ஸ்தான் என்பதற்கான ஆதாரப்பூர்வமான ஆவணங்கள் உயிருள்ளவையாக உள்ளன. இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்பெயினிலும் இன்னும் மற்ற இடங்களிலும் தேவதூஷணம்

சொல்லும் ஏராளமானவர்களும் கடவுள் நம்பிக்கையற்ற ஏராளமானவர்களும் இருந்திருக்கிறார்கள். இன்றும் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் தனது சட்டமன்றத்தின் தீர்மானத்தினால், கடவுள் இல்லை என்று அறிவித்ததாலும், அதன் தலைநகரிலிருந்த குடிமக்கள் அனைவரும் வேறிடங்களில் இருந்த மிகப்பெரும்பான்மையினரும், ஆண்களைப்போலவே பெண்களும் அவ்வறிவிப்பை ஏற்றுக்கொண்டதன் அடையாளமாக மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடினதாலும் உலகவரலாற்றில் பிரான்ஸ் மட்டும் ஒரு தனி நாடாக விலகி நிற்கிறது. —Blackwood's Magazine, November, 1870. (16)

சோதோமை குறிப்பிட்டுக்காட்டிய தனித்தன்மையையும் பிரான்ஸ் வெளிக்காட்டினது. சமவெளியில் இருந்த நகரங்களின்மீது (சோதோம், கொமோரா) அழிவைக் கொண்டுவந்த சன்மார்க்க நெறிகளின் கீழான தன்மையும் கறைகளும் கொண்ட ஒரு சீர்கேடு புரட்சியின்போது பிரான்ஸில் காணப்பட்டது. தீர்க்கதரிசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளபடியே, பிரான்ஸிலிருந்த நாத்திகத்தையும் விபசாரத்தையும் ஒருமித்து: "மதத்தைப் பாதிக்கும் இந்தச் சட்டங்கள், மனிதர்களால் ஏற்படுத்தப்படக்கூடிய மிகப் பரிசுத்த அமைப்பான திருமண ஐக்கியத்தை—சமுதாயத்தை மிகப்பலமாக ஒருங்கிணைக்க வழிநடத்துகிற நிரந்தரத் திருமண ஐக்கியத்தை—ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தங்களின் விருப்பத்திற்குத் தக்கபடி எந்த நேரத்திலும் இணையவும் பிரிந்துபோகவும்தக்கதான சாதாரண சமூக ஒப்பந்தமாக குறைத்துப்போட்ட சட்டங்களுடன் மிகவும் நெருக்கமாக இணைந்திருந்தது.... குடும்ப வாழ்க்கையின் அழகிய நேர்த்தியான நிரந்தரமானவைகளை அழித்து, தலைமுறை தலைமுறைக்கும் அதைத் தொடரச்செய்யும்படியான திட்டந்தீட்டும் பணியில் பிசாசுகள் ஈடுபட்டால், திருமண உறவைக் கீழான நிலைக்குக் கொண்டுவருவதைவிட அதிகப் பலன் தரும் ஒரு திட்டத்தைக் கண்டுபிடித்திருந்திருக்க முடியாது.... விகடமான பேச்சுக்களுக்காக புகழ்பெற்றிருந்த சோபி அர்னால்ட் என்னும் நடிகை, குடியரசு திருமணத்தை 'விபசாரத்தின் திவ்ய நற்கருணை' என்று விவரித்தார்" என்று வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.—Scott, vol. 1, ch. 17. (17)

"அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையில் அறையப்பட்டார்." தீர்க்கதரிசனத்தின் இந்தக்குறிப்பும் பிரான்ஸ் நாட்டினால் நிறைவேற்றப்பட்டது. கிறிஸ்துவிற்கு எதிரான பகைமையின் ஆவி இவ்வளவு தெளிவாக வேறு எந்த நாட்டிலும் வெளிக்காட்டப்படவில்லை. கசப்பும் கொடூரமுமிக்க எதிர்ப்பை வேறு எந்த நாட்டிலும், சத்தியம் சந்திக்கவில்லை. சுவிசேஷத்தை

அறிக்கை செய்தவர்களின்மீது பிரான்ஸ் நடத்திய உபத்திரவத்தில், கிறிஸ்து அவரது பின்னடியார்களின் வடிவில் சிலுவையில் அறையப்பட்டார். (18)

மீண்டும் மீண்டும்பல நூற்றாண்டுகளாக பரிசுத்தவான்களின் இரத்தம் சிந்தப்பட்டது. தேவனுடைய வார்த்தைகளுக்காகவும் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சிக்காகவும், வால்மென்னியர்கள், விட்மோண்ட் மலையின்மீது அவர்களது உயிர்களைவிட்டபோது, பிரான்ஸ் நாட்டின் அல்பீஜென்சஸ் என்னும் அவர்களது சகோதரர்களால், சத்தியத்திற்காக அதேபோன்ற சாட்சி பகரப்பட்டது. சீர்திருத்தத்தின் நாட்களில் அதன் சீடர்கள் பயங்கரமான சித்திரவதையுடன் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டனர். அரசன், மேன்மக்கள், உயர்குலப் பெண்கள், மென்மையான கன்னியர்கள், நாட்டின் பெருமையும் வீரமுமிக்கவர்கள் ஆகியவர்களின் கண்களுக்கு விருந்தாக, இயேசுவின் இரத்தசாட்கிகள் தங்களது வேதனைகளைச் சகித்தனர். மனித இருதயம், மிகவும் பரிசுத்தமானது என்று பற்றிக்கொண்டிருக்கும் உரிமைகளுக்காகப் போராடிய தைரியமிக்க ஹுக்நாட்டுகள் தீவிரமான பல போர்க்களங்களில் தங்களது இரத்தத்தைச் சிந்தி இருந்தனர். புரொட்டஸ்டாண்டுகள் சட்ட விரோதிகளாக எண்ணப்பட்டு, அவர்களது தலைக்கு ஒரு விலை நிச்சயிக்கப்பட்டு, அவர்கள் வனவிலங்குகளைப்போல வேட்டையாடப்பட்டிருந்தனர். (19)

வனாந்திரத்திலுள்ள சபை எனப்பட்ட பண்டைய கிறிஸ்தவர்களின் பின்சந்ததியினரில் சிலர், பதினெட்டாம் நூற்றாண்டில் இன்னும் பிரான்ஸின் தென்பகுதியிலுள்ள மலைகளில் மறைந்து வாழ்ந்திருந்து, முற்பிதாக்களின் விசுவாசத்தை காத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் இரவுநேரங்களில் மலைச்சரிவுகளிலோ தரிசுநிலங்களிலோ ஒன்றுசேர முயன்றபோது குதிரைப்படை வீரர்களால் துரத்தப்பட்டனர். அல்லது வாழ்க்கை முழுவதிலும் பாய்மரக் கலங்களில் அடிமைகளாக இருக்கும்படி இழுத்துச்செல்லப் பட்டிருந்தனர். பிரெஞ்சு நாட்டின் மிகத் தூய்மையானவர்களும் மிகவும் பண்பட்டவர்களும் மிகுந்த நுண்ணறிவுள்ளவர்களும், கொள்ளைக்காரருடனும் கொலைகாரருடனும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, பயங்கரமான உபத்திரவத்திற்குள்ளானார்கள். (See Wylie, b. 22, ch. 6.) மற்றவர்கள் ஆயுதமற்றவர்களாக உதவியற்றவர்களாக முழங்காலில் நின்று ஜெபித்துக் கொண்டிருந்தபோது, கொடூரமாகச் சுடப்பட்டு (ஒருவிதத்தில் இரக்கமாக) நடத்தப்பட்டனர். நூற்றுக்கணக்கான முதியவர்களும் தற்காப்பில்லாத பெண்களும் சிறுபிள்ளைகளும் அவர்கள் கூடியிருந்த இடத்தில் கொல்லப்பட்டனர். அவர்கள் கூடியிருந்த மலைப்பகுதிகளையும் காடுகளையும் கடக்கும்போது, நான்கு அடிக்கு ஒன்று என்னும் வீதத்தில்,

புல்வெளிகளில் இறந்தவர்களின உடல்கள் சுருண்டு கிடந்ததையும், மரங்களில் தூக்கப்பட்டவர்களின் உடல்கள் தொங்கிக் கொண்டிருந்ததையும் காண்பது அபூர்வமாயிருக்கவில்லை. பட்டயத்தினாலும் கோடரியினாலும் விறகுக்கட்டைகளினாலும் பாழாக்கப்பட்டுப்போன அவர்களது நாட்டுப்புறம் விசாலமான துயரமிக்க வனாந்திரமாக மாற்றப்பட்டது. இந்த அக்கிரமங்கள் இருண்ட காலங்களில் நிகழ்த்தப்படாமல், விஞ்ஞானம் பயிற்றுவிக்கப்பட்டிருந்த போது, எழுத்துக்கள் பரவியிருந்தபோது, மிகச்சிறந்தவர்களால் நீதிமன்றமும், தெய்வீக அன்பையும் சாந்தகுணத்தையும் ஏற்றுக்கொண்டிருந்த கற்றறிந்த சொல்வன்மைமிக்க மனிதர்களால் தலைநகரமும் நிறைந்திருந்த பிரகாசமான காலத்தில் நிகழ்ந்தது.—Ibid., b. 13, ch. 6. (20)

பயங்கரமான நூற்றாண்டுகளில் நிகழ்ந்த பேய்த்தனமான செயல்களின் நடுவில், குற்றங்களின் கறுப்புப்பட்டியலில் மிகவும் கறுப்பான தும் சகிக்க முடியாததுமான நிகழ்ச்சி, பரிசுத்த பர்த்தலோமியோவின் படுகொலையாகும். கோழைத்தனமும், கொடுமையுமிக்க இந்த மனித கொலையின் காட்சியை பயம்நிறைந்த நடுக்கத்துடன் உலகம் இன்றும் ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறது. ரோமன் கத்தோலிக்கக் குருமார்களாலும் சந்நியாசிகளாலும்ஏவிவிடப்பட்ட பிரான்ஸ்நாட்டின்அரசன், அந்தப்பயங்கரமான வேலைக்குக் கைகொடுத்தான். அரண்மனையிலிருந்த பெரிய மணியிலிருந்து நடு இரவில் உண்டான ஓசை அந்தப் படுகொலையின் குறியாக இருந்தது. தங்களது அரசரின் மேன்மையில் நிச்சயமான நம்பிக்கையுடன் தங்கள் வீடுகளில் அமைதியாக நித்திரை செய்துகொண்டிருந்த ஆயிரக்கணக்கான புரொட்டஸ்டா:ண்டுகள் ஒரு எச்சரிப்புமின்றி இழுத்துக்கொண்டுவரப்பட்டு, மிகக் கடுமையாகக் கொலைசெய்யப்பட்டனர். (21)

ரோமன் கத்தோலிக்க வெறியர்களின் உருவில் சாத்தான் அந்த சேனையை நடத்தினான். கிறிஸ்து எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து தமது மக்களை நடத்திச்சென்றதுபோலவே இரத்தசாட்சிகளைப் பெருக்கும் இந்த பயங்கரமான பணியில், அவனுக்குக் கீழானவர்களின் காணமுடியாத தலைவனாக சாத்தான் இருந்தான். பாரிஸ் நகரில் இந்தக் கொலைபாதகம் ஏழு நாட்கள் தொடர்ந்தது. அதின் முதல்மூன்று நாட்கள் கற்பனைக்கடங்காத பயங்கரமான ஆவேசத்துடன் நிகழ்ந்தது. அவை பாரிஸ் நகருக்குள் மட்டும் அடங்காமல், அரசனின் விசேஷமான கட்டளையினால், புரொட்டஸ்டாண்டுகள் காணப்பட்ட அனைத்து மாநிலங்களுக்கும் நகரங்களுக்கும் பரவியது. வயதும், ஆண்பெண் என்ற பாகுபாடும் மதிக்கப்படவில்லை. குற்றமற்ற பச்சிளங் குழந்தைகளையும் முடிநரைத்த முதியவர்களையும் ஒருவரையும் விட்டுவைக்கவில்லை. மேலானவர்களும் விசவசாயிகளும், வயதானவர்களும்,

வாலிபர்களும், தாயும் சேயும் ஒன்றாகச் சேர்த்து வெட்டி வீழ்த்தப்பட்டனர். இந்தச் சங்காரம் பிரான்ஸ் முழுவதிலும் இரண்டு மாதங்கள் தொடர்ந்தது. அந்த நாட்டின் மலர்களாயிருந்த எழுபதினாயிரம்பேர் அழிந்தனர். (22)

“இந்தப் படுகொலையின் செய்திகள் ரோமை அடைந்தபோது குருமார்களின் களிப்பிற்கு எல்லையே இருக்கவில்லை. செய்தியைக் கொண்டுவந்த தூதுவனுக்கு லோரைனுடைய கர்தினால் ஆயிரம் காசுகளை பரிசளித்தார். பரிசுத்த ஏஞ்சலோவின் கோட்டையின் பீரங்கிகள் மகிழ்ச்சிமிக்க வீர வணக்கம் செலுத்தின. ஒவ்வொரு கோபுரத்திலிருந்தும் மணிகள் முழங்கின. இரவு முழுவதும் சொக்கப்பானைகள் கொளுத்தப்பட்டன. போப்பு கிரகோரி, தனது கர்தினால்களும் குருமார்களும் புடைசூழ பரிசுத்த லுயிஸ ின் ஆலயத்தை நோக்கி காட்சிதரும் ஒரு பெரும் ஊர்வலத்தை நடத்தினார். அங்கு லோரைன் என்னும் கர்தினால் ‘தெ தீயம்’ (Te Deum) என்கிற மந்திரத்தை ஓதினார். பிரான்ஸில் செத்துக்கொண்டு இருந்தவர்களின் குரல், ரோம் நகரமன்றத்தின் மேன்மைக்கு இசைவாக இருந்தது. மகிமைமிக்க இந்த கொலைபாதகத்தை நினைவூட்டும் ஓர் பதக்கம் அடிக்கப்பட்டது. பரிசுத்த பர்த்தலோமியாவின் முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் வண்ணம் தீட்டப்பட்ட ஓவியம் இன்றும் வாட்டிக்கனில் உள்ளது. சார்லஸ் மன்னனின் கடமை உணர்வுமிக்க நடத்தைக்கான நன்றியைக்காட்டுவதில் ஆர்வமிக்க போப்பு, அவருக்கு ஒரு தங்க ரோஜா மலரை அனுப்பினார். இப்படுகொலை நடந்து நான்கு மாதங்களுக்குப் பிறகு, மிகவும் பரிசுத்தமான தந்தை அந்தச் செய்தியைப் பெற்றுக்கொண்டு கடவுளுக்கும் பரிசுத்த லூயிஸுக்கும் நன்றி சொன்ன—முழுவதும் ஆனந்தத்தினாலும் மகிழ்ச்சியினாலும் நிறைந்திருந்த அந்த நாளைக்குறித்து ஒரு பிரெஞ்சு பாதிரியார் பிரசங்கித்த பிரசங்கத்தை கிரகரி அமைதியாகக் கேட்டார்.”—ர்நசெல றூாவைநஇ ஆயளளயஉசந ழுக ளுவ. டீயசவாழடழஅநற, ch. 14, par. 34. (23)

“போப்பு பதிமூன்றாவது கிரகரி ஹுகிநாட்டுகளின் விதியைக்குறித்தச் செய்தியை எல்லையற்ற மகிழ்ச்சியுடன் பெற்றார். அவரது மனதின் விருப்பம் நிறைவேறிற்று. ஒன்பதாம் சார்லஸ் அவருக்குப் பிடித்தமான மகன். ரோம் சந்தோஷத்தால் களிகூர்ந்தது. புனித ஏஞ்சலோ கோட்டையின் பீரங்கிகள் மகிழ்ச்சியான வணக்கம் செலுத்தின. எல்லா கோபுரங்களிலிருந்தும் மணிகள் ஒலித்தன. இரவு முழுவதும் தீ எரிந்துகொண்டிருந்தது. கர்தினால்களோடும் குருக்களோடும் போப் கிரகரி புனித லூயிஸ் ஆலயத்திற்கு சிறப்பான வரிசையில் சென்றார். அங்கே லொரைனுடைய கர்தினால் ‘தெ தீயம்’ (Te Deum) ஓதினார். இந்த மகிமையான அழிவை நினைவில் கொள்ளும்படி ஒரு பதக்கம் செய்யப்பட்டது. புனித பர்த்தொலோமியாவின் முக்கிய சம்பவங்களை

குறிக்கும்படி ஒரு படம் வரையப்பட்டு இன்றைக்கும் வாட்டிகனில் இருக்கிறது. சார்லஸின் கடமைநிரம்பிய செயலுக்கான நன்றியைக் காட்டும்வகையில் போப்பு அவனுக்கு ஒரு தங்க ரோஜாவை அனுப்பினார். ரோமின் பிரசங்க பீடங்களிலிருந்து திறமைமிக்க பேச்சாளர்கள் சார்லஸ் காத்தரைன் மற்றும் அவர்களுடன் ஒத்துழைத்தவர்களை போப்பு மார்க்க சபையின் புதிய ஸ்தாபகர்கள் என்று கொண்டாடிப் பேசினார்கள்.” (24)

பரிசுத்த பர்த்தொலோமியாவின் கொலைபாதகத்தை ஏவின அதே தலைமையான ஆவி, புரட்சியின் காட்சிகளையும் நடத்தினது. இயேசு கிறிஸ்து ஒரு மோசடிக்காரர் என அறிவிக்கப்பட்டார். கிறிஸ்துவைப் பொருள்படும்படி “அந்த மோசமானவனை நசுக்குங்கள்” என்று ஊர்வலம்சென்ற நாத்திகர்கள் குரல் எழுப்பினர். பரலோகத்திற் கெதிரான துணிவான தேவதூஷணமும் அக்கிரமமிக்க கெட்ட செயல்களும் கைகோர்த்துச் சென்றன. மனிதர்களில் மிகவும் கீழானவர்களும், கொடூரமான தீய பழக்கங்களினால் மிகவும் தூரமாகத் தள்ளிவைக்கப்பட்டிருந்த இராட்சத குணமுடையவர்களும் மிகவும் உயர்த்தப்பட்டனர். இவை அனைத்தினாலும் சாத்தானுக்கு மேலான வணக்கம் செலுத்தப்பட்டது. கிறிஸ்து அவரது குணங்களான சத்தியம், தூய்மை, சுயநலமற்ற அன்பு ஆகியவைகளோடு சிலுவையில் அறையப்பட்டார். (25)

“பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயித்து அவர்களைக் கொன்றுபோடும்” (வெளி. 11:7). புரட்சியின்போது, பிரான்ஸ் நாட்டை ஆண்ட பயங்கரத்தின் ஆட்சி—நாத்திக வல்லமை—வேதாகமத்திற்கு எதிராக உலகம் ஒருபோதும் கண்டிராத ஒரு போரை நடத்தியது! தேசிய மன்றத்தினால் தேவனுடைய வார்த்தை தடைசெய்யப்பட்டது! வேதாகமங்கள் சேகரிக்கப்பட்டு, பொது இடங்களில் மிகுந்த பரிகாசத்துடன் எரிக்கப்பட்டன! தேவப்பிரமாணம் காலின்கீழிட்டு மிதிக்கப்பட்டது! வேதாகம அமைப்புகள் நீக்கம்செய்யப்பட்டன! வாராந்திர ஓய்வுநாள் ஒருபக்கமாக நீக்கிவைக்கப்பட்டு, ஒவ்வொரு பத்தாவது நாளும் வெறியாட்டத்திற்கென்றும் தேவதூஷணத்திற்கென்றும் அதற்குப் பதிலாக அர்ப்பணிக்கப்பட்டது. திருமுழுக்கும் திருவிருந்தும் தடைசெய்யப்பட்டன! இறந்தவர்களை புதைக்குமிடங்களில் ஒட்டப்பட்ட தெளிவாகக் காணக்கூடிய அறிவிப்புகள் மரணம் ஒரு நித்தியமான உறக்கம் என்று அறிவித்தன. (26)

தேவனுக்குப் பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம் அல்ல—தவறின் ஆரம்பம் என்று சொல்லப்பட்டது. சுதந்திரம், நாடு என்பவை தவிர மற்ற சமயசம்பந்தமான தொழுகைகள் யாவும் தடைசெய்யப்பட்டன. பாரிஸ் நகரின் பேராயர் ஆணவமாக, இகழ்ச்சியான, கேலிக்கூத்தான, இதுவரை

தேசிய பிரதிநிதித்துவத்திற்கு கொண்டுவராத முக்கியமான பகுதியை செயலாற்றுவதற்காக முன்கொண்டுவரப்பட்டார். அவர் இதுவரை அநேக வருடங்களாகக் கற்பித்திருந்த மதம், எல்லாவகைகளிலும் குருமார்களின் உபாயமே, அதற்கான அஸ்திவாரம் வரலாற்றிலோ, பரிசுத்த சத்தியத்திலோ இல்லை என்று அந்தக் கூட்டத்தின் முன் அறிக்கை செய்யும்படி ஒரு பெரும் ஊர்வலத்தில் கொண்டுவரப்பட்டார். தேவ ஆராதனைக்கென்று தன்னைப்பிரதிஷ்டை செய்த கடவுள் இருக்கிறார் என்பதை, பக்திவிநயத்துடனும் மிகத் தெளிவாகவும் இல்லையென்று அறிவித்து, சுதந்திரம், சமத்துவம், கண்ணியம், சன்மார்க்கம் ஆகியவைகளுக்கு மரியாதை செலுத்த தனது எதிர்காலம் முழுவதையும் அர்ப்பணிப்பதாகக் கூறினார். அதன் பின், தனது சமயப்பதவி சம்பந்தமான அலங்காரங்கள் அனைத்தையும் கழற்றி, ஒரு மேஜையின்மீது வைத்துவிட்டு, சகோதரத்தன்மையைக் காட்டும் தழுவலை அந்த மாநாட்டின் தலைவரிடமிருந்து பெற்றுக்கொண்டார். இந்தக் குருவானவரின் முன்மாதிரியை, அநேக மருளவிழுந்த குருமார்களும் பின்பற்றினர்.—Scott, vol. 1, ch. 17. (27)

“அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப் படுத்தினபடியால், அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள்” (வெளி. 11:10). கடவுள் இல்லையென்னும் பிரான்ஸ், கடிந்துகொள்ளும் தேவனுடைய இரு சாட்சிகளின் குரலையும் மௌனப் படுத்தியிருந்தது. அதன் தெருக்களில் சத்தியவார்த்தை செத்துக்கிடந்தது. தேவப்பிரமாணம் அவசியப்படுத்தியிருந்த கட்டுப்பாடுகளை வெறுத்தவர்கள் வெற்றியடைந்தவர்களாயிருந்தனர். மனிதர்கள் பரலோகத்தின் அரசரை பகிரங்கமாக அவமதித்தனர். கடவுளுக்கு எப்படித் தெரியும், உன்னதமான வரிடம் அறிவு இருக்கிறதா? என்ற பண்டைய பாவிகள் கூறியதுபோல் அவர்களும் குரரெலமுப்பினார்கள்! (28)

புதிய ஒழுங்கின் குருமார்களில் ஒருவர் நம்பமுடியாத அளவிற்கு, அதிகமான தேவதூஷணமான துணிச்சலுடன், “தேவனே நீர் இருப்பது உண்மையானால், காயப்பட்ட உமது பெயருக்காக பழிவாங்கும். நான் எதிர்ப்பைச் சவாலாக்குகிறேன். நீர் மௌனமாயிருக்கிறீர். உமது இடிமுழக்கங்களை அனுப்ப உமக்குத் துணிவில்லை. இதற்குப்பின்பும் நீர் இருக்கிறீர் என்பதை யார் நம்புவார்கள்? என்றார்?”—Lacretelle, History, vol. 11, p. 309. “அவருடைய சத்தத்திற்கு நான் கீழ்ப்படிவதற்கு யெகோவா யார்? நான் யேகேவாவை அறியேன்” என்ற பார்வோனின் எதிரொலியாகவே அது ஒலித்தது! (29)

“தேவன் இல்லையென்று மதிகெட்டவன் தன் இதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்”–சங்கீதம் 14:1. சத்தியத்தைத் திரித்துக் கூறுபவர் களைப்பற்றிக் கர்த்தர்: “அவர்களுடைய மதிகேடு எல்லோருக்கும் வெளிப்படும்” ( 2 தீமோ. 3:9) என்று அறிவிக்கிறார். நித்திய காலமாயிருக்கும் உன்னதமானவரை ஜீவனுள்ள தேவனை ஆராதிக்க பிரான்ஸ் மறுத்த கொஞ்ச காலத்தில் ஒரு பெண்ணின் உருவில் அறிவு என்னும் தேவதையை வணங்கும் கீழ்த்தரமான விக்கிரக ஆராதனையைச் செய்ய அது கீழிறங்கினது. அதுவும் அந்த நாட்டின் பிரதிநிதிகளின் மன்றத்தில் மிக உயர்ந்த சமூகச் சட்டநிபுணர்களால் நடந்தது. பைத்தியக்காரத்தனமான இந்தக் காலத்தில் நிகழ்ந்த சடங்குகளில் ஒன்று, அர்த்தமற்ற தன்மையுடன் சொந்த பக்தியின்மைக்குப் போட்டியில்லாத சான்றாக இருக்கிறது. நகர சபை அங்கத்தினர்கள் முன்செல்ல, அதற்குப்பின் ஒரு இசைக்குழு பக்திவிநயத்துடன் சுதந்திர கீதத்தைப் பாடியவாறு அவர்களுக்குப் பின்செல்ல, அவர்களது தொழுகையின் பொருளாக, அறிவுத்தேவதை என்னும் முகத்திரையிட்ட ஒரு பெண் கொண்டுவரப்பட்டாள். மேடைக்குக் கொண்டுவரப்பட்டு, பெரும் சடங்காச்சாரங்களுடன் அவளுக்கிடப்பட்டிருந்த முகத்திரை நீக்கப்பட்டு, (நடன மன்றத்தில் நடனமாடியிருந்த நாட்டியக்காரி என்று பொதுவாகக் கருதப்பட்டிருந்த அந்தப் பெண்) தலைவரின் வலதுபுறத்தில் அமர்த்தப்பட்டாள். அவர்கள் வணங்கிய பகுத்தறிவைக் குறிப்பிட்டுக்காட்டும் மிகப்பொருத்தமான இந்தப் பெண்ணுக்கு பிரான்ஸ் நாட்டின் அந்த தேசிய மாநாடு பொது ஆராதனை செலுத்தியது!? (குறிப்பு: பகுத்தறிவுதான் கடவுள் என்று கூறி, அந்தப் பெண்ணைப் பகுத்தறிவின் தேவதை என்று அடையாளப்படுத்தி, இவ்விதமாக அறிவுதான் கடவுள் என்று கூறி, அவர்கள் அறிவைத் தொழுதனர்). (30)

பக்தியற்ற பரிகாசத்திற்குரிய இந்த நடிப்பானது ஒரு வடிவை கொண்டிருந்தது. புரட்சியின் சகல விதமான உயர்வுகளுக்கும் அந்த நாட்டுமக்கள் சமமாக உள்ளனர் எனக்காட்ட, அந்த நாட்டில் அவர்கள் விரும்பிய பொது இடங்களில் அறிவுத்தேவதையின் மாற்றுருவை நிறுவினார்கள்.—Scott, vol. 1, ch. 17. (31)

“சட்டமன்ற மதவெறிக்கோட்பாடு அதன் பிடியை இழந்துவிட்டது. அது பகுத்தறிவிற்கு இடம்கொடுத்துவிட்டது. நாம் அதன் ஆலயங்களை விட்டுவிட்டு அவைகளைப் புதிதாக வடிவமைத்து இருக்கிறோம். இன்று அதன் கோதிக்கூரையின் கீழ் (கிழக்கு ஜெர்மனிக் கலாச்சாரக் கூரையின்கீழ்) மிகத் திரள்கூட்டமான மக்களாகக் கூடியிருக்கிறோம். அது முதன்முதலாக சத்தியத்தின் குரலை, திரும்ப எதிரொலிக்கச் செய்யும். அங்கு பிரான்ஸ் நாடு, சுதந்திரம் பகுத்தறிவு ஆகியவைகளின் உண்மையான ஆராதனையை

நடத்தும். அங்கு குடியரசின் படைக்குப் புதிய முன்னேற்றத்தை வடிவமைக்கும் புதிய தீர்மானத்தை நாம் செய்வோம். அங்கு நாம் பகுத்தறிவிற்குப் பொருந்தாத அசையமாட்டாத சிலைகளை ஆராதிப்பதை நீக்கிவிட்டு, இந்த அசையும் உருவை சிருஷ்டிப்பின் உன்னத வடிவை தொழுவோம்" என்று பகுத்தறிவு ஆராதனையை அறிமுகம் செய்த பேச்சாளர் கூறினார்.—M. A. Thiers, History of the French Revolution, vol. 2, pp. 370, 371. (32)

அந்த மாநாட்டிற்குள் அந்த தேவதை கொண்டுவரப்பட்டபோது, அப்பெண்ணை அப்பேச்சாளர் கரம்பிடித்து, அந்த மன்றத்தை நோக்கித்திரும்பி, "சாகும் தன்மை உள்ளவர்களே, உங்களுடைய பயத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட வல்லமையற்ற ஒரு கடவுளின் இடி முழக்கங்களுக்குமுன் அஞ்சுவதை நிறுத்துங்கள். இனிமேல் பகுத்தறிவைத்தவிர தெய்வத்தை அறிக்கையிடாதீர்கள். அதன் மேன்மையும் தூய்மையுமிக்க உருவை உங்கள் முன் நான் சமர்ப்பிக்கிறேன். விக்கிரகங்களை வைத்துக்கொள்ளவேண்டும் என்றால், இதைப்போன்றதன் முன் பலிசெலுத்துங்கள்... அறிவுக்கு இடப்பட்டிருந்த திரையை நீக்கிய, சுதந்தரத்தின் கம்பீரமான பேரவையின்முன் பணிந்துகொள்ளுங்கள்" என்றார். (33)

தலைவரால் தழுவப்பட்டபின், அந்தத் தேவதை(பெண்) அழகிய ஒரு சப்பரத்தில் ஏற்றி நிறுத்தப்பட்டு, நெருக்கமான கூட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டு, தெய்வ ஸ்தானத்தில் அமர்த்தப்படும்படி, நாட்டர்டேம் தேவாலயத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டாள். அதன்பின், அவள் பீடத்தின்மேல் உயர்த்தப்பட்டு, அங்கு குழுமியிருந்த அனைவருடைய போற்றுதலையும் ஏற்றுக்கொண்டாள்.—Alison, vol. 1, ch. 10. (34)

இதற்குப்பின் சற்று காலத்தில் வேதாகமம் பொது இடத்தில் எரிக்கப்பட்டது. பெயர்பெற்ற அருங்காட்சியகத்துக் கூட்டத்தினர், ஒரு கோலின் நுனியில் அரைகுறையாக எரிந்திருந்த பல பத்தகங்களுடன் எரிக்கப்பட்டு மீந்திருந்த பழைய—புதிய ஏற்பாடுகளாகிய திருமறை நூல்களையும், பாடல் புத்தகங்களின் மீதங்களையும் நெருப்பிலிட்ட போது, "மனித இனம் நடைமுறைப்படுத்தும்படி செய்யப்பட்ட சகலவிதமான முட்டாள்தனங்கள்தான் இவைகள்" என்று அந்தத் தலைவர் கூறினார்.—Journal of Paris, 1793, No. 318. Quoted in Buchez-Roux, Collection of Parliamentary History, vol. 30, pp. 200, 201. (35)

இந்தப்பணியைப் போப்புமார்க்கமானது ஆரம்பித்தது. அதை நாத்திகம் பூர்த்திசெய்துகொண்டிருந்தது. சமூக, அரசியல் சமய நிலைமைகளை உண்டுபண்ணிய ரோம மார்க்கத்தின் கொள்கைகள் பிரான்ஸ் நாட்டை, அதன் அழிவை நோக்கி விரைவுபடுத்தியது. அத்துமீறிய இந்தச்செயல்களுக்கான

குற்றச்சாட்டானது, உண்மையில் அரியணையின்மீதும் சபையின்மீதும் சுமத்தப்படவேண்டும் என்று புரட்சியின் கொடுமைகளைப்பற்றி ஒரு எழுத்தாளர் கூறுகிறார். மிகவும் சரியான நியாயத்தீர்ப்பின்படி அவை சபையின்மீது சுமத்தப்பட வேண்டும். போப்புமார்க்கம் அரசர்களின் மனங்களில், "சீர்திருத்தம் கிரீடத்தின் எதிரி நாட்டின் சமாதானத்திற்கும் இசைவிற்கும் சாவைக்கொண்டுவரும் வேற்றுமையின் மூலக்கூறு" என்று விஷமுட்டியது. ரோமின் யுகம்தான் இப்படிப்பட்ட வழிகளில் சிங்காசனத்திலிருந்து புறப்பட்ட கசப்புமிக்க ஒடுக்குதலையும் மிகத்துணிகரமான கொடுமைகளையும் தூண்டிவிட்டது. (36)

சுதந்திரத்தின் ஆவி வேதாகமத்துடன் சென்றது. எங்கெல்லாம் சுவிசேஷம் ஏற்றுக்கொள்ளப்பட்டதோ, அங்கெல்லாம் மக்களின் மனங்கள் விழித்தெழுந்தன. அறியாமை, தீயபழக்கங்கள், மூட நம்பிக்கைகளால் தங்களை அடிமைகளாக வைத்திருந்த விலங்குகளை, அவர்கள் தூக்கியெறியத் தொடங்கினர். மனிதர்களைப்போல் சிந்திக்கவும் செலாற்றவும் தொடங்கினர். அரசர்கள் அதைக்கண்டு, அவர்களது எதேச்சாதிகாரத் தன்மைக்காக நடுங்கினர். (37)

பொறாமையின் பயங்கரங்களை எரியச்செய்வதில் ரோமன் கத்தோலிக்க சபை நிதானமாக இருக்கவில்லை. 1525–ம் வருடத்தில் பிரான்ஸ் நாட்டின் அரசப் பிரதிநிதியைப்பார்த்து போப்: "புரொட்டஸ்டாண்டுமார்க்கத்தின் இந்தப் பயித்தியக்காரத்தனம் மதத்தைமட்டும் அழிப்பதோடு, சகல கர்த்தத் துவங்களையும் மேன்மைகளையும் சட்டங்களையும் ஒழுக்கங்களையும் அவைகளின் அருகிலுள்ள பதவிகளையுங்கூட அழித்து விடும்" என்றார். —G. de Felice, History of the Protestants of France, b. 1, ch. 2, par. 8.(38)

சில வருடங்களுக்குப்பின் அந்தஸ்துமிக்க ஒரு போப்புமார்க்கவாதி: "உங்களுடைய அரச மேன்மையைத் தக்கவைத்துக்கொள்ள நீங்கள் விரும்பினால், நாடு அமைதியுடன் உங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாப்பதற்காக ஆண்மையுடன் நின்று, உங்களது ஆயுதங்களினால் அதன் எதிரிகள் அனைவரையும் கீழடக்குங்கள்" என்று அரசனை எச்சரித்தார். "புரொட்டஸ்டாண்டு கோட்பாடு, புதுமைகளையும் தவறுகளையும் தழுவும்படி மக்களை நயப்படுத்தி, அரசனின்மீதுள்ள மக்களின் பக்திமிக்க தன்மையைக் கொள்ளையிட்டு, சபை நாடு ஆகிய இரண்டையும் பாழ்படுத்தும்" என்று பொதுமக்களுடைய தவறான எண்ணத்தைத் தூண்டிவிடும்படி, ஓர் இறையியல் வல்லுநர் அறிவித்தார்.—D'Aubigne, b. 2, ch. 36. இவ்விதமாக சீர்திருத்தத்திற்கு எதிராக, பிரான்ஸ் நாட்டை அணிவகுத்து

நிற்கச்செய்வதில், ரோமன் கத்தோலிக்கசபை வெற்றியடைந்தது. சிங்காசனத்தை நிலைநிறுத்தவும் மேன்மக்களைக் காக்கவும் சட்டத்தை நிலைநிறுத்தவும் பிரான்ஸ் நாடு உபத்திரவம் என்னும் வாளை அதன் உறையிலிருந்து வெளியில் எடுத்தது.—Wylie, b. 13, ch. 4. (39)

பயங்கரமான நிலையை—அந்தக் கொள்கையினால் ஏற்படவுள்ள பலன்களை, அந்தநாட்டின் அதிபதிகள் முன்னதாகக் கண்டறியவில்லை. நாட்டின் செழுமைக்கு மூலைக்கல்லாக இருக்கும் நீதி, புலனடக்கம், சத்தியம், தூய்மை, அனுதாபம் ஆகிய கொள்கைகளை வேதாகம போதனைகள் மக்களின் மனங்களிலும் இதயங்களிலும் நட்டிருந்திருக்கும். “நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.” “அநியாயஞ்செய்வது ராஜாக்களுக்கு அருவருப்பு நீதியினால் சிங்காசனம் உறுதிப்படும்.” (நீதி. 14:34, 16:12). தெய்வீகப் பிரமாணங்களுக்கு எவனொருவன் கீழ்ப்படிவானோ, அவன் மிக உண்மையாக நாட்டின் சட்டத்தையும் மதிப்பான். எவனொருவன் தேவனை மதிக்கிறானோ, அவன் நீதியையும் சட்டப்பூர்வமான அதிகாரத்தையும் மதிப்பான். ஆனால் மகிழ்ச்சியற்ற பிரான்ஸ் நாடு வேதாகமத்தைத் தடைசெய்து, அதன் சீடர்களை விரட்டியது. தங்களது மன உணர்த்துதலின்படி நடக்கும் தைரியம் பெற்றிருந்த கொள்கையும் நேர்மையுமிக்க மனிதர்கள், தீவிரமான நுண்ணறிவையும், சன்மார்க்க பலத்தையும் கொண்டிருந்த மனிதர்கள், நூற்றாண்டுகளாக சத்தியத்திற்காகப் பாடனுபவித்த விசுவாசிகள் பாய்மரக்கப்பல்களில் கேவலமான அடிமைகளாக உழைத்து, நெருப்பில் அழிந்தனர்; நிலவறைகளில் அழுகிப்போயினர்; ஓடிப்போவதில் ஆயிரமானோர் பாதுகாப்பைக் கண்டனர். சீர்திருத்தத்தின் ஆரம்பத்திற்குப்பின், இந்நிலைமை இருநூற்றைம்பது ஆண்டுகள் தொடர்ந்தது. (40)

உபத்திரவப்படுத்துகிறவர்களின் பயித்தியக்காரத்தனமான கோபத்திற்கு ஆளாகி, தங்கள் முன்னிருந்து ஓடிப்போன சுவிசேஷத்தின் சீடர்களைக் காணாத ஒரு தலைமுறையினர்கூட இருக்கவில்லை. பிரான்ஸ் நாட்டில் அப்படி ஓடிப்போனவர்கள் தாங்கள் அடைக்கலம் புகுந்த இடங்களைச் செழுமைப்படுத்த அவர்களது நுண்ணறிவு, கலைகள், தொழில்கள் மற்றும் அவர்களை மிகச் சிறந்தவர்களாக்கி இருந்த ஒழுக்கம் ஆகியவைகளையும், தங்களுடன் கொண்டு சென்றிருந்தனர். இந்த ஈவுகளினால், அவர்கள் புகலிடமாகச்சென்ற மற்ற நாடுகளைச் செழிப்படையச் செய்தபோது, அவர்களது சொந்த நாட்டை வெறுமையாக்கினர். அந்த நாட்டிலிருந்து விரட்டப்பட்டவர்கள் பிரான்சிலேயே இருந்திருந்தால், இந்த முந்நூறு ஆண்டுகளில் அவர்களது கலைத்திறன்கள் அவர்களுடைய உற்பத்தியாளர்களை முன்னேற்ற பயன்படுத்தப்பட்டிருந்தால், அவர்களது உற்பத்தி செய்யும் அறிவின்

மேன்மையும் பிரித்தறியும் திறனும் இலக்கியங்களைச் செழுமையடையச் செய்து விஞ்ஞானத்தைப் பயிற்றுவித்திருந்தால், அதன் ஆலோசனை மன்றங்களுக்கு அவர்களது ஞானம் வழிகாட்டியிருந்தால், போர்செய்வதில் அவர்களது தைரியம் வெளிக்காட்டப்பட்டிருந்தால், அவர்களது நேர்மை சட்டங்களை உருவாக்கியிருந்தால், வேதாகமம் தந்த சமயக் கோட்பாடு மக்களின் நுண்ணறிவைப் பலப்படுத்தி மனசாட்சியை ஆளுகைசெய்திருந்தால், எப்படிப்பட்டமகிமை இன்று பிரான்ஸ் நாட்டைச் சூழ்ந்திருந்திருக்கும்! நாடுகளுக்கு முன்மாதிரியான எப்படிப்பட்ட ஒரு பெரும் செழுமைமிக்க மகிழ்ச்சிமிக்க நாடாக அது இருந்திருக்கும்! (41)

ஆனால் சிறப்பான ஒவ்வொரு ஆசிரியரையும், ஒழுக்கத்தின் வீரர்கள் ஒவ்வொருவரையும், சிங்காசனத்தைப் பாதுகாக்க நேர்மையுடன் நின்றிருந்த ஒவ்வொருவரையும், குருட்டுத்தனமான இணங்காத மதவெறி, தனது நாட்டைவிட்டு விரட்டச்செய்தது. அந்த நாட்டைப் புகழும் மகிமையுமிக்கதாகச் செய்திருந்திருக்கக் கூடியவர்களை நோக்கி : "கம்பங்களில் கட்டி எரிக்கப்படுதல் அல்லது நாடு கடத்தப்படுதல், இதில் எதைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுகிறீர்கள் என்று கேட்டது. இறுதியில் அந்த நாட்டின் சீரழிவு முழுமை அடைந்தது. அதன்பின் தடைசெய்ய மனசாட்சி இருக்கவில்லை. கட்டிவைத்து எரிப்பதற்கு இழுத்துச்செல்ல மதமும் இருக்கவில்லை. ஒழித்துக்கட்ட தேசபக்தியும் இல்லை."—Wylie, b. 13, ch. 20. அதன் பலன் கொடுமைகள் நிரம்பின புரட்சியே! (42)

ஹுக்நாட் இனத்தவர்கள் ஓடிப்போனவுடன் பிரான்ஸ் நாட்டின்மீது ஒரு சரிவு—ஒரு பொதுவான சரிவு உண்டானது. நன்றாக உற்பத்திசெய்து முன்னேறிக்கொண்டிருந்த நகரங்கள் அழிவில் வீழ்ந்தன. வளமிக்க மாவட்டங்கள் அவைகளின் பழைய வனாந்திர நிலையை அடைந்தன. வழக்கமில்லாத முன்னேற்றத்தின் ஒரு காலத்தை நுண்ணறிவின் மந்த நிலையும் சன்மார்க்கவீழ்ச்சியும் பின்தொடர்ந்தன. பாரிஸ் நகரம் ஒரு விசாலமான பிச்சைக்காரர்களின் வீடாயிற்று. புரட்சி வெடித்தபோது, அரசனிடம் பிச்சை கேட்பவர்களாக இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட ஒன்றுமில்லாதவர்கள் இருந்தனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அழிந்துகொண்டிருந்த அந்த நாட்டில், ரோமசபையைச் சேர்ந்த ஜெசுவைட் (கத்தோலிக்க மார்க்கத்திலுள்ள ஒரு குழுவின் பெயர்) மட்டும் செழுமையடைந்து கொண்டிருந்தனர். சபைகள் பள்ளிகள் சிறைச்சாலைகள் அடிமைக் கப்பல்களை அவர்கள் தங்களது பயங்கரமான கொடுங்கோன்மையுடன் ஆட்சிசெய்து கொண்டிருந்தனர். (43)

மதகுருக்கள், அரசன், சட்டசபை அங்கத்தினர்களுடைய திறமை களைத் திக்குமுக்காடச்செய்து, பிரான்ஸ் நாட்டை அராஜகம் வீழ்ச்சி

ஆகியவைகளுக்குள் மூழ்கடித்த அரசியல் சமூகப் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை சுவிசேஷம் கொண்டு வந்திருக்கும். ஆனால் ரோமசபையின் மேலாதிக்கத்தில் இரட்சகரின் ஆசீர்வாதமான பாடங்களையும் இரட்சகரால் கற்பிக்கப்பட்டிருந்த தற்தியாகம், சுயநலமற்ற அன்பு என்னும் ஆசீர்வாதமான பாடங்களையும் மக்கள் இழந்தனர். மற்றவர்களின் நன்மைக்காக சுயநலத்தை மறுத்தல் என்னும் பழக்கத்திலிருந்து அவர்கள் விலகிச் சென்றிருந்தனர். செல்வந்தர்கள் ஏழைகளை ஒடுக்குவது கண்டிக்கப்படாமலிருந்ததோடு ஏழைகளின் வேலைகளுக்கும் கீழான நிலைமைக்கும் உதவியும் கிடைக்காமலிருந்தது. செல்வந்தர்கள் மற்றும் வல்லமைமிக்கவர்களின் சுயநலம் அதிகமதிகமான வெளிப்படையானதாகவும் ஒடுக்கக்கூடியதாகவும் வளர்ந்தது. பேராசையும், ஊதாரித்தனமும், ஏழைக் கூலிக்காரர்களிடமிருந்து பணத்தை நெருக்கி வசூல்செய்யும் நிலையை நூற்றாண்டுகளாக உண்டுபண்ணியது. செல்வந்தர்கள் ஏழைகளுக்குத் தீங்கிழைத்தனர். ஏழைகள் செல்வந்தர்களை வெறுத்தனர். (45)

அநேக மாநிலங்களில் பண்ணைகள் மேன்மக்களுக்குச் சொந்தமானவையாக இருந்தன. வேலைசெய்பவர்கள் வாடகை வீடுகளில் இருந்தனர். அவர்கள் நில உடைமையாளர்களின் இரக்கத்தைச் சார்ந்தவர் களாக இருந்து, அவர்களது அளவிற்குமீறிய கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படியும்படி வற்புறுத்தப்பட்டிருந்தனர். சபையையும் நாட்டையும் ஆதரிக்கவேண்டிய சுமை மத்தியதர மக்களின்மீதும் ஏழைகளின்மீதும் விழுந்தது. இவர்கள் அரசாங்க அதிகாரிகளினாலும், குருமார்களாலும் பாரமான விதத்தில் வசூலிக்கப்பட்டனர். மேன்மக்களின் மகிழ்ச்சி மேலான சட்டமாகக் கருதப்பட்டிருந்தது. விவசாயிகளும் பண்ணைக் கூலியாட்களும் பட்டினி கிடந்தாலும், ஒடுக்குபவர்கள் அவர்களை கவனிக்கவில்லை. ஒவ்வொரு காரியத்திற்கும் நில உடைமையாளர்களின் விருப்பங்களை முற்றுமாக ஆலோசிக்கவேண்டியிருந்தது. விவசாயத்தொழிலாளர்களின் வாழ்க்கை தீராத வேலையுள்ளதாகவும், விடுதலைபெறமுடியாத துன்பம் மிகுந்ததாகவும் இருந்தது. எப்போதாவது தைரியமாகக் குறை கூறினால், கீழ்த்தரமான அவமதிப்புடன் நடத்தப்பட்டனர். நீதிமன்றங்கள் கூலிக்காரருக்கு எதிராக மேன்மகன் சொல்லுவதையே எப்போதும் கவனித்தது. நீதிபதிகள் அவப்பெயரை உண்டுபண்ணும் விதத்தில் லஞ்சம் வாங்கிக்கொண்டிருந்தனர். முற்றிலும் நேர்மையற்ற அமைப்பால் ஆட்சியாளர்களின் கீழ்த்தரமான சலனபுத்தி சட்டத்தைக் கையில் வைத்திருந்தது. மதச்சார்புடையவர்கள் ஒருபக்கத்திலும் மதச்சார்பற்ற வலிமைமிக்கவர்கள் மறுபக்கத்திலுமாக இருந்து, பொது மக்களைக் கசக்கிப்பிழிந்து வசூலித்த வரிகளில் பாதிகூட அரசின் கருவூலத்திற்கோ சபையின் கருவூலத்திற்கோ செல்லவில்லை.

மீதமாக இருந்ததும் ஊதாரித்தனமான மகிழ்ச்சிக்கென்று வீணாக்கப்பட்டது. இவ்விதமாகத் தங்களுக்குக்கீழ் இருந்தவர்களை ஒடுக்கினவர்கள் வரிகொடுப்பதிலிருந்து விலக்கப்பட்டு, சட்டத்தினால் அல்லது பழக்கத்தினால் அரசுப்பணியில் வேலைசெய்யத் தகுதியுடையவர்களாக இருந்தனர். சுமார் ஒன்றரை இலட்சம்பேர், இச்சலுகைகளைப்பெறும் வகுப்பினர்களாக இருந்தனர். அவர்களது சந்தோஷங்களுக்காகப் பல இலட்சக்கணக்கானவர்கள் நம்பிக்கையற்ற படுமோசமான வாழ்க்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். (45)

நீதிமன்றம் டாம்பீகத்திலும் வீண்செலவிலும் இயங்கிக் கொண்டிருந்தது. மக்களுக்கும் அதிபதிகளுக்கும் இடையில் நம்பிக்கை இல்லாமல் இருந்தது. அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளின்மீதும் அவை உள்நோக்கமும் சுயநலமும் உடையவை என்னும் சந்தேகம் பற்றிக்கொண்டிருந்தது. புரட்சிக்கும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன், பதினான்காம் லூயி என்பவன் அரியணையை அடைந்தான். அவன் மோசமான அந்த நேரங்களிலுங்கூட மூடத்தனமான—கேலிக்குரிய இன்பங்களில் ஈடுபட்டவன் என்று குறிப்பிடப்பட்டவனாக இருந்தான். மேன்மக்களின் சீர்கெட்ட கொடுமையான ஆட்சியோடு, ஏழ்மையான அறியாமையிலிருந்த மக்களோடு, அந்த நாட்டில் ஒரு பயங்கரமான கலகம் உண்டாக இருக்கிறது என்பதை முன்னதாகக் காண்பதற்கு ஒரு தீர்க்கதரிசியின் கண் தேவையாக இருக்கவில்லை. “நான் உயிரோடிருக்குமளவும் எவ்விதமாகச்செல்லுமோ அவ்விதமாக நடத்த முயலுங்கள் எனது மரணத்திற்குப்பின் அது எப்படி நடக்குமோ அப்படி நடக்கட்டும்” என்பது ஆலோசகர்களின் எச்சரிப்பிற்கு அரசனின் வழக்கமான பதிலாக இருந்தது. சீர்திருத்தம் செய்யப்படவேண்டியது அவசியம் என்று வீணாக வற்புறுத்தப்பட்டிருந்தது. தீங்குகள் நிகழ்வதை அவன் கண்டான். ஆனால் அவைகளைச் சந்திக்கும் தைரியமோ அல்லது வல்லமையோ அவனிடம் இருக்கவில்லை. எனக்குப்பின் ஜலப்பிரளயம்! என்னும் அவனது சோம்பலான சுயநலம் மிக்க பதில் விழுகைக்காகக் காத்திருந்த பிரான்ஸை ப்பற்றிய உண்மையான சித்திரமாக இருந்தது. (46)

நாடு பலவீனமடையும் என்பதை நன்கு அறிந்திருந்தும் அரசர்கள், அதிபதிகள் ஆகியோரின் பொறாமையை பயன்படுத்தி, மக்களை அடிமைத்தனத்திற்குள் வைப்பதற்கு ரோம சபை அவர்களை வசீகரித்தது. அதிபதிகளையும் மக்களையும் தனது அடிமைகளாகக் கட்டிவைக்கும் நோக்கத்தில், மனிதர்களைப் பலனுள்ள விதத்தில் வைத்துக்கொள்வதற்கு, அவர்களது ஆத்துமாவின்மீது விலங்குகள் பூட்டப்படவேண்டும் என்ற நெடுந்தூரப்பார்வை கொள்கையோடு, அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து

தப்பிவிடாமலிருப்பதற்கு நிச்சயமான வழி, அவர்களைச் சுதந்திரம்பெற தகுதியற்றவர்களாக்குவதுதான் என்பதை அது உணர்ந்திருந்தது. உடலில் உண்டாகக்கூடிய துன்பங்களைவிட, ஆயிரம்மடங்கு அதிபயங்கரமான சன்மார்க்கவீழ்ச்சி இந்தக் கொள்கையின் விளைவாக உண்டாயிற்று. வேதாகமத்தை இழந்து, மதவிரோதம் சுயநலம் ஆகியவைகளின் போதனை களுக்கு விடப்பட்டு, அறியாமை, மூடநம்பிக்கை ஆகியவைகளுக்கு ஆளாக்கப்பட்டு, தீயபழக்கங்களுக்குள் மூழ்கடிக்கப்பட்டு, மக்கள் தங்களைச் சுயமாக ஆளும் தன்மையே அற்றவர்களாக்கப்பட்டிருந்தனர். (47)

ஆனால் இந்தச் செயல்களனைத்தும் ரோம சபையின் நோக்கத்திற்கு மாறுபட்டதாக இருந்தது. அதன் பிடிவாதமான கோட்பாடுகளுக்கு இணங்கி, திருப்பலிப்பூசைகளை நடத்துவதற்குப் பதிலாக, அதன் செயல்கள் அவர்களை நாத்திகர்களாகவும், புரட்சிக்காரர்களாகவும் ஆக்கிற்று. ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தை குருமார்களின் கைவேலை என்று அவர்கள் நிந்தித்தனர். குருமார்களை ஒடுக்குதலின் கூட்டாளிகள் என்றே நோக்கினர். அவர்கள் அறிந்திருந்த ஒரே தெய்வம் ரோம் நாட்டுக் கடவுள்தான் அதன் போதனைகள் ஒன்று மட்டும்தான் அவர்கள் மதமாக இருந்தது. அதன் பேராசையும், கொடூரத்தையும் அவர்கள் வேதாகமத்தின் சட்டரீதியான கனியாகக் கருதி, அதில் ஒன்றையும் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. (48)

ரோமன் கத்தோலிக்க சபை தேவனுடைய தன்மைகளை தவறான விதத்தில் எடுத்துக்காட்டி, அவருடைய எதிர்பார்ப்புகளைத் திரித்திருந்தது. எனவே மனிதர்கள் இப்பொழுது, வேதாகமத்தையும் அதன் ஆசிரியரையும் நிராகரித்தனர். வேதவாக்கியங்களால் அனுமதிக்கப்பட்டவை என்று போலியாகக்கூறி, அதன் பிடிவாதமான கோட்பாடுகளை குருட்டுத்தனமாக விசுவாசிப்பது அவசியம் என்றது. அதன் எதிர்விளைவாக, வால்டேரும் அவரது சகாக்களும் தேவனுடைய வார்த்தையை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்து, நாத்தியவாதத்தின் விஷத்தை எங்கும் பரப்பியிருந்தனர். ரோமசபை அதன் இரும்புக் குதிகாலின்கீழ் மக்களை நசுக்கியது. இப்பொழுது திரள்கூட்டமானவர்களும், கீழ்த்தரமானவர்களும் முரடர்களாகி, அதன் கொடுங்கோன்மைக்கு எதிர் நடவடிக்கையாக சகல கட்டுப்பாடு களையும் தூரவீசி எறிந்தனர். அதன் பளபளக்கும் வஞ்சகத்துக்கு இதுவரை செலுத்தியிருந்த தொழுகையினால் கோபமடைந்த அவர்கள், சத்தியத்தையும் அசத்தியத்தையும் ஒன்றாக நிராகரித்து, தீய பழக்கங்களுக்கு அடிமையாக இருந்தவர்கள் சுயாதீனத்தைத் தவறாக எடுத்துக்கொண்டு அவர்களது கற்பனையான சுதந்திரத்திற்காக களிகூர்ந்தர். (49)

புரட்சியின் ஆரம்பத்தில் மேன்மக்கள், மதகுருமார்கள் ஆகிய இருசாராரையும்விட, இம்மக்களுக்கு பிரதிநிதித்துவம்செய்யும் சலுகை அரசனால் அனுமதிக்கப்பட்டது. இவ்விதமாக அதிகாரத்தை நடுநிலைப்படுத்தும் வலிமை மக்களிடம் இருந்தது. ஆனால் அதை ஞானத்துடனும் சீராகவும் பயன்படுத்த அவர்கள் ஆயத்தமற்றவர்களாக இருந்தனர். நாங்கள் அனுபவித்த தவறுகளை சரிசெய்யும் வாஞ்சைமிக்கவர்களாக சமுதாயத்தைத் திரும்ப நிர்மாணிக்கத் தீர்மானித்தனர். தங்களுக்கு இழைக்கப்பட்டிருந்த தவறுகளைப்பற்றிய கசப்பை அதிக காலம் ஞாபகத்தில் வைத்திருந்த அம்மக்கள் தாங்கமுடியாத துயர்நிலையை புரட்சிகரமாகமாற்ற தீர்மானித்து, தங்களது துன்பங்களுக்குக் காரணமானவர்களாக கருதியிருந்தவர்கள்மீது பழிவாங்கும் செயலில் ஈடுபடவும் தீர்மானித்திருந்தனர். கொடுங்கோன்மையின்கீழ் ஒடுக்கப்பட்டவர்கள் கற்றிருந்த பாடங்களை வெளிக்காட்டி, தங்களை ஒடுக்கினவர்களின்மீது ஒடுக்குபவர்களாக மாறினார்கள். (50)

மகிழ்ச்சியற்ற பிரான்ஸ் நாடு, அது விதைத்திருந்த விதையை இரத்தத்தில் அறுவடை செய்தது. ரோம சபையின் கட்டுப்படுத்தும் வல்லமைக்குக் கீழ்படிந்து இருந்ததினால், அந்த நாட்டில் உண்டான விளைவுகள் மிகப்பயங்கரமானவையாக இருந்தன. சீர்திருத்தத்தின் ஆரம்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையின் செல்வாக்கின்கீழ், அது எங்கு முதலாவதாக கம்பத்தில் கட்டிவைத்து எரித்ததோ, அதே இடத்தில் புரட்சியானது, அதன் முதல் கில்லட்டின் என்னும் (கழுத்தை வெட்டிக் கொலை செய்யும்)கருவியை அமைத்தது. பதினாறாம் நூற்றாண்டில் புரொட்டஸ்டாண்டு விசுவாசத்திற்காக இரையாக்கப்பட்டவர்கள் எந்த இடத்தில் எரிக்கப்பட்டார்களோ, அதே இடத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் முதல்பலியாட்கள் கில்லட் என்ற கருவியால் வெட்டப்பட்டனர். ஆரோக்கியத்தைக் கொண்டுவந்திருக்கக்கூடிய சுவிசேஷத்தை விரட்டியதன் விளைவாக, பிரான்ஸ் நாடு நாத்திகத்திற்கும் பாழாவதற்குமான பாதையைத் திறந்தது. தேவப் பிரமாணத்தின் கட்டுப்பாடு நீக்கப்பட்டபோது, மனிதவெறிகள் என்னும் அலையின் வல்லமையைத் தடுத்து நிறுத்த மனிதச் சட்டங்களின் வல்லமைகள் போதாது என்று காணப்பட்டது. அந்த நாடு கலகத்திலும் அராஜகத்திலும் அடித்துச்செல்லப்பட்டது. வேதாகமத்திற்கு எதிரான யுத்தம் "பயங்கரத்தின் ஆளுகையின் காலம்" என்று உலக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சகாப்தத்தைத் துவக்கியது. மனிதர்களின் வீடுகளிலும் இதயங்களிலுமிருந்து சமாதானமும் சந்தோஷ மும் அகற்றப்பட்டது. ஒருவருக்கும் பாதுகாப்பு இருக்க வில்லை. இன்று வெற்றியடைந்தவன் சந்தேகத்திற்கு உள்ளானவனாகி, மறுநாள் குற்றவாளியாக்கப்பட்டிருந்தான். பலாத்காரமும் ஆசைவெறி களும் தடுக்கமுடியாத விதத்தில் நிகழ்ந்துகொண்டிருந்தன. (51)

அரசன், குருமார்கள், மேன்மக்கள் ஆகியோர் உணர்ச்சியால் கொந்தளித்துப் பைத்தியமாகியிருந்த மக்களின் அக்கிரமங்களுக்குக் கீழ்ப்படியும்படி வற்புறுத்தப்பட்டிருந்தனர்.. அரசனின் மரணதண்டனை அவர்களது பழிவாங்கும் தாகத்தை அதிகரித்தது. அரசனுக்கு மரணதண்டனை விதித்தவர்கள் விரைவில் அவனைப் பின்பற்றித் தூக்கு மேடைக்குச் சென்றனர். புரட்சிக்கு எதிரானவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட அனைவர்மீதும், ஒரு பொதுவான படுகொலை தீர்மானிக்கப்பட்டது. ஒருசமயத்தில் இரண்டு இலட்சம் கைதிகளை கொண்டிருந்தது சிறைச்சாலை. அந்த நாட்டின் நகரங்கள் பயங்கர நிகழ்ச்சிகள் நிறைந்தவையாக இருந்தன. புரட்சிக்காரர்களின் ஒரு கட்சி, மற்றொரு கட்சிக்கு எதிராக இருந்தது. பிரான்ஸ் நாடு ஒருவரையொருவர் எதிர்த்துச் சண்டையிடும் தங்களுடைய வெறிகளினால் அடித்துச்செல்லப்பட்ட மூர்க்கமானவர்களின் பெரும் யுத்தகளமாயிற்று. பாரிஸில் அமளிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன. அந்த நகர மக்கள் ஒருவரை ஒருவர் கொலைசெய்வதைத்தவிர, வேறு நோக்கம் எதுவுமற்ற, தாறுமாறான கட்சிகளாகப் பிரிந்திருந்தனர். இந்தத் துன்பத்தை மேலும் அதிகப்படுத்தும் விதத்தில், அந்த நாடு நீண்டகாலமாக நாசத்தை உண்டுபண்ணும் விதத்தில், ஐரோப்பாவின் பெரும் வல்லமைகளுடன் யுத்தத்திலிருந்தது. அந்த நாடு ஏறத்தாழ திவாலாகி, சம்பளப்பாக்கிக்காக இராணுவத்தினர் சச்சரவு செய்துகொண்டிருந்தனர். பாரிஸ் நகர மக்கள் பட்டினியில் இருந்தனர். வழிப்பறிக்காரர்களால் மாநிலங்கள் பாழாக்கப்பட்டிருந்தன. அராஜகத்தினாலும் தீய செயல்களினாலும் சமூக மக்கள் ஏறத்தாழ ஒன்றும் இல்லாதவர்களாக்கப்பட்டிருந்தனர். (52)

ரோமன் கத்தோலிக்க சபை மிகுந்த அக்கரையுடன் போதித்த கொடூரம் சித்திரவதை ஆகியவைகளின் பாடங்களை மக்களனைவரும் நன்கு கற்றுக்கொண்டனர். தேவகோபமாகிய தண்டனையின் நாள் முடிவில் வந்தது. இப்பொழுது நிலவறைகளுக்கும் சிதைகளுக்கும் இழுத்துச்சென்று தள்ளப்பட்டவர்கள் இயேசுவின் சீடர்களல்ல. வெகுகாலத்திற்கு முன்பே அவர்கள் அழிந்துபோயிருந்தனர் அல்லது நாடுகடத்தப்பட்டிருந்தனர். எதையும் விட்டுவைக்காமலிருந்த ரோமசபை, இரத்தம் சிந்தும் செயல்களில் மகிழ்ச்சிகாணும்படி பயிற்சி அளித்தவர்களின் மரண அபாயமிக்க வல்ல மையை உணர்ந்தது. அநேக காலங்களாக பிரான்ஸ் நாட்டின் குருமார்கள் வெளிக்காட்டியிருந்த உபத்திரவத்தின் முன்மாதிரி, நன்கு தெரியும் படியான உக்கிரத்துடன் இப்பொழுது அதன்மீதே திரும்பினது. குருமார்களின் இரத்தம் தூக்குமேடைகளில் சிவப்பாக வழிந்தோடியது. ஒரு சமயத்தில் ஹுக்நாட் மக்களால் நெருக்கமாக இருந்த அடிமைக் கப்பல்களும் சிறைச்சாலைகளும் இப்பொழுது அவர்களை உபத்திரவப்படுத்தியிருந்தவர்களால் நிறைந்

திருந்தது. பெஞ்சுகளில் சங்கிலிகளால் கட்டப் பட்டு, துடுப்புகளை ஓயாமல் வலித்து உடைத்திருந்த சாதுவான மதவிரோதிகளாக எண்ணப்பட்டவர்கள்மீது, ரோமசபை மிகத்தாராளமாக இழைத்திருந்த கொடுமைகள் அனைத்தையும் இப்பொழுது அதன்குருமார்கள் அனுபவித்தனர். (53)

அதற்குப்பின் அநாகரிகமான நீதிமன்றங்களின் மிக மோசமான மனிதர்களால் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான நாட்கள் வந்தன. இந்தச் சமயத்தில் தண்டனை இல்லாமல் ஒருவராலும் தனது அயலானை வாழ்த்த முடியாது அல்லது தனது ஜெபத்தைக் கூறமுடியாது என்னும் நிலைமை உண்டானது. மூலைமுடுக்குகள் எங்கும் ஒற்றர்கள் பதிவிருந்தனர். கழுத்தை வெட்டும் இயந்திரம் ஒவ்வொரு நாள் காலையிலும் கடினமாக வேலைசெய்தது. அடிமைக் கப்பலில் அடிமைகள் நெருக்கமாக வைக்கப்படுவதுபோல, சிறைச்சாலைகள் நெருக்கமாக நிரம்பியிருந்தன. இரத்தம் நுரையுடன் சாக்கடைக்கால்வாய்களில் ஓடியது. விழுகைக்கு ஆளாக்கப்பட்டவர்கள், வண்டிகள் நிறைய பாரிஸ் நகர சாலைகளில் கொண்டுசெல்லப்பட்டனர். தலைமைக்குழுவினால் அனுப்பப்பட்டிருந்த முன் ஆலோசனைக்குழு, தலைநகரிலும் அறியப்பட்டிராத விதத்தில் கொடுமைமிக்க வெறியாட்டங்களை அளவிற்கும் மிஞ்சிய விதத்தில் செய்தது. மரணக்கருவியின் கத்தி, வெட்டும் வேலையைச்செய்ய மெதுவாக மேலும் கீழும் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருந்தது. தட்டையான அடிப்பாகமுள்ள பெரும்படகுகளில் நெருக்கமாக மக்கள் ஏற்றிச்செல்லப்பட்டு (நடுக்கடலில்) அந்தப் படகுகளின் அடிப்பாகத்தில் துளைகள் இடப்பட்டன. லையான் நகரம் ஒரு பாலைவனமாக மாறியது. அர்ராஸ் என்னுமிடத்தில் சிறைக்கைதிகளுக்கு விரைவான மரணம் என்னும் கொடூரமான இரக்கங்கூட மறுக்கப்பட்டிருந்தது. லாயிர் என்னுமிடத்தில் சௌமூரிலிருந்து கடற்கரைவரை, ஒருவரையொருவர் காமலீலை செய்யும்விதமாக ஒன்றாகச்சேர்த்துக் கட்டப்பட்டிருந்த நிர்வாணப் பிரேதங்களின்மீது, பெரும் காக்கைக் கூட்டங்களும் கழுகுக்கூட்டங்களும் விருந்துண்டன. ஆண் பெண் வயதானோர் என்று இரக்கம் காட்டப்படவில்லை. கேடுகெட்ட அரசினால் கொலை செய்யப்பட்டிருந்த வாலிபர்கள், பதினேழு வயதிலிருந்த பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை, நூற்றுக்கணக்கானவர்கள் என்று கணக்கிடப்பட வேண்டியதாக இருந்தது. தாய்மார்களிலிருந்து பறித்தெடுக்கப்பட்ட குழந்தைகள் ஈட்டியிலிருந்து ஈட்டிக்கு மாறிமாறிப் புரட்டிக் குத்திவீசப்பட்டனர். குறைந்தகால பத்து வருட இடைவெளியில், இலட்சக்கணக்கான மனிதர்கள் அழிந்தனர். (54)

இவை அனைத்தும் சாத்தான் விரும்பியபடி நடத்தப்பட்டன. இப்படி நடக்கவேண்டும் என்பதற்காகத்தான் அவன் யுகங்கள் நெடுகிலும்

செயலாற்றியிருந்தான். ஆரம்பமுதல் இறுதிவரை, மனிதர்களை ஏமாற்றுவதுதான் அவனது கொள்கையாக இருக்கிறது. மனிதர்களின் மீது துன்பத்தையும், துர்ப்பாக்கியத்தையும் கொண்டுவருவது, தேவனுடைய கரத்தின் கிரியைகளை அலங்கோலப்படுத்தித் தீட்டுப்படுத்துவது, தெய்வீக நோக்கங்களாகிய அனுதாபம், அன்பு ஆகியவைகளைக் களங்கப்படுத்தி, இவ்விதமாகப் பரலோகத்தில் துயரம் உண்டாகச்செய்வது, அவனது உறுதியான நோக்கமாக உள்ளது. அதன்பின் தனது வஞ்சகமிக்க தந்திரங்களினால், மனிதர்களின் மனங்களைக் குருடாக்கி, சிருஷ்டிகரின் திட்டங்களின் பலன்தான் இந்தத் துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்பதுபோல் தனது குற்றச்சாட்டுகளை தேவனின்மீது திருப்பி வீசுவதற்கு அவர்களை நடத்துகிறான். இதேவிதமாக அவனது கொடூரமான வல்லமையினால் கீழ்த்தரமானவர்களாக மிருகத்தனமாக்கப்பட்டவர்கள், அவர்களது சுதந்திரத்தை அடைந்துகொள்ளும்போது, அத்துமீறிச் செல்லவும் அக்கிரமங்களைச் செய்யவும் அவர்களை வற்புறுத்துகிறான். அதன்பின் கடிவாளம் இடப்படாத இந்த உரிமத்தின் சித்திரம் கொடுங்கோலர்களாலும், ஒடுக்குபவர்களாலும் "இவைகள்தான் சுதந்திரத்தின் பலன்கள்" என்று சுட்டிக்காட்டப்படுகின்றன. (55)

ஒரு உடையில் மறைத்துவைக்கப்பட்டுள்ள தவறு கண்டுபிடிக்கப் படும்போது, சாத்தான் அதை வேறுவிதமான உடைக்குள் மூடி மறைக்கிறான். திரள்கூட்டமானவர்கள் முதல் தவறை எவ்விதமாகப் பெற்றுக்கொண்டார்களோ, இதையும் அதேவிதமாகப் பெற்றுக் கொள்ளுகின்றனர். ரோமன் கத்தோலிக்கமார்க்கம் ஒரு வஞ்சகம் என்பதை மக்கள் கண்டுகொண்டபோது, இந்த ஏதுகரத்தின்மூலமாக தேவப்பிரமாணத்தை மீறும்படி அவர்களை நடத்துமுடியாது என்பதை அவன் கண்டான். எனவே "சகல மதங்களும் ஏமாற்றுபவைகளே," "வேதாகமமும் ஒரு கட்டுக்கதையே" என்று கருதும்படி அவர்களை வற்புறுத்தினான். தெய்வீகப் பிரமாணங்களை ஒரு பக்கமாக நீக்கிவிடச் செய்வதால், கடிவாளமிடப்படாத அக்கிரமங்களுக்கு அவர்கள் தங்களைத் தாங்களே விட்டுக்கொடுக்கின்றனர். (56)

தேவப்பிரமாணத்தால் தடைசெய்யப்பட்டவைகளுக்கு விலகுவதில் தான் உண்மையான சுதந்திரம் இருக்கிறது என்னும் பெரும் சத்தியத்தை அறியாமல் இருந்த பெரும் தவறுதான் பிரான்ஸின் குடிமக்களுக்கு இந்தத் துயரங்கள் உண்டாவதற்குக் காரணமாக இருந்தது. "ஆ, என் கற்பனை களைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும்." "துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்."

“எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம் பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்”—ஏசாயா 48:28,22 நீதி. 1:33. (57)

கடவுள் இல்லை என்பவர்களும், கடவுள் நம்பிக்கை இல்லாத வர்களும், மருள விழுந்தவர்களும், தேவப்பிரமாணத்தின்மீது பகிரங்க மாகக் குற்றம்சாட்டுகின்றனர். ஆனால் தெய்வீகப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதுடன்தான் மனிதனின் நல்ல வாழ்க்கை பிணைத்துக்கட்டப் பட்டிருக்கிறது என்பது அவர்களது செல்வாக்கின் பலன்களால் மெய்ப்பிக்கப் படுகின்றது. தேவனுடைய புத்தகத்தில் இருந்து அந்தப் பாடங்களை வாசிக்காமல் இருப்பவர்கள், நாடுகளின் வரலாறுகளில் அவைகளை வாசித்து அறிந்துகொள்ளும்படியாக அழைக்கப்படுகின்றனர்! (58)

மனிதர்களைக் கீழ்ப்படிவதிலிருந்து விலகிச்செல்லும்படி ரோமன் கத்தோலிக்க சபையின் மூலமாக சாத்தான் செயலாற்றியபோது, அவனது ஏதுகரங்கள் மறைத்துவைக்கப்பட்டன. அவனது செயல்களின் பலனாக உண்டான கீழானநிலையும் துன்பங்களும்—மீறுதலின் கனிகள் என்று காணப்படாதபடி மூடிமறைக்கப்பட்டன. இதுவரை அவனது வல்லமைக்கு எதிராக தேவ ஆவி செயலாற்றி இருந்தது. அதனால் அவனது நோக்கங்களின் முழுப்பலனையும் அடைவது தடுக்கப்பட்டிருந்தது. நிகழ்ந்துபோன விளைவுகளின் காரணத்தையும், துன்பங்களின் மூலகாரணத்தையும் மக்கள் ஆராயவில்லை. ஆனால் புரட்சியின்போது, தேசியக்கவுன்சிலினால் தேவப்பிரமாணம் பகிரங்கமாக புறம்பே நீக்கிவைக்கப்பட்டது. அதைப் பின்தொடர்ந்த பயங்கரத்தின் ஆளுகையில் காரணங்களையும் அதன் விளைவுகளையும் காணமுடிந்தது. (59)

பிரான்ஸ் நாடு வேதாகமத்தைப் பொதுமக்களின்முன் பகிரங்கமாகத் தடைசெய்தபோது, துன்மார்க்கரும் அந்தகார ஆவிகளும் தாங்கள் இதுவரை வாஞ்சித்திருந்த நோக்கத்தை அடைந்துவிட்டதற்காக, தேவப்பிரமாணத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலையான சுதந்திரமான ஒரு இராஜ்ஜியத்தை அடைந்து விட்டதற்காக வெற்றிச்சிரிப்புச் சிரித்தனர். “துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங் கொண்டிருக்கிறது. பாவி நூறுதரம் பொல்லாப்பைச்செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன். துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை; அவன் தேவனுக்கு முன்பாகப் பயப்படாதிருக்கிறபடியால், நிழலைப்போலிருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதுமில்லை”—பிரசங்கி 8:11–13. ஆகையால் நியாயமும்

நீதியுமிக்க ஒரு பிரமாணத்தை மீறுவது தவிர்க்கமுடியாத துன்பத்திலும் பாழாக்குதலிலும் முடியும். நியாயத்தீர்ப்பு உடனடியாக நிகழாமல் இருந்தபோதிலும், மனிதர்களின் துன்மார்க்கச் செயல்கள், அவர்களது அழிவிற்கான வேலையைச் செய்துகொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான வருடங்களான மருளவிழுகையும் குற்றங்களும் தேவ கோபமாகிய தண்டனையின் நாளுக்கென்று சேர்த்துவைக்கப் பட்டுக்கொண்டிருந்தன. அவர்களது அக்கிரமம் நிறைவை அடைந்த போது, தெய்வீக பொறுமையை வருத்தப்படுத்துவது ஒரு பயங்கரமான செயல் என்பதை தேவனை நிந்தித்தவர்கள் மிகவும் தாமதமாக அறிந்துகொண்டனர். சாத்தானின் கொடூரமான வல்லமையின்மீது தடைவிதித்துக் கட்டுப்படுத்தும் தேவனுடைய ஆவி அதிகமாக நீக்கப்படும்போது, மனிதர்களின் துர்ப்பாக்கியமான நிலைமையில் மகிழ்ச்சி உள்ளவன், அவனது சித்தப்படி நடந்துகொள்ள அனுமதிக்கப் பட்டான். எழுதுகோலினால் எழுதப்படமுடியாத அளவிற்குப் பயங்கரமான குற்றங்களினால் அந்த நாடு நிரம்பும்வரை, கலகத்தின் சேவையைத் தேர்ந்துகொண்டிருந்தவர்கள், அதன் பலனை அறுவடை செய்யும்படி விட்டுவிடப்பட்டனர். பாழாக்கப்பட்ட மாநிலங்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் பயங்கரமான அழுகுரல், மிகமோசமான அழுகுரல்கள் கேட்கப்பட்டது. பூகம்பத்தினால் அசைக்கப்பட்டதுபோல் பிரான்ஸ் அசைக்கப் பட்டது. தேவப்பிரமாணத்திற்கு எதிராக உயர்த்தப்பட்ட பக்தியில்லாத காரத்தினால், மதம், சட்டம், சமுதாய ஒழுங்கு, குடும்பம், நாடு, சபை ஆகிய அனைத்தும் அடித்து வீழ்த்தப்பட்டன. “துன்மார்க்கனோ தன் துன்மார்க்கத்தினால் விழுவான்.” “பாவி நூறுதரம் பொல்லாப்பைச்செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன். “துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை.” “அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொள்ளாமறபோனார்கள். ஆகையால் அவர்கள் தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள்; தங்கள் யோசனைகளினால் திருப்தியடைவார்கள்”–நீதி. 11:5 பிர. 8:13 நீதி. 1:29,31. (60)

பாதாளத்திலிருந்து உயர ஏறுகின்ற தேவதூஷணம் செய்யும் வல்லமையினால் கொலைசெய்யப்பட்ட தேவனுடைய விசுவாசமுள்ள சாட்சிகள், அதிகக்காலம் மௌனமாக இருக்கவேண்டியதில்லை. “மூன்றரை நாளைக்குப் பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது, அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள் அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று”–வெளி. 11:11. 1793–ல் பிரான்ஸ் நாட்டின் சட்டசபை வேதாகமத்தைத் தடைசெய்து கட்டளை பிறப்பித்தது. மூன்றரை வருடங்களுக்குப்பின் அந்தக் கட்டளையை நீக்கி,

வேதாகமத்தை அனுமதிக்கலாம் என்னும் புதிய தீர்மானத்தை அதே சட்டசபை நிறைவேற்றியது. பரிசுத்தமான தேவப்பிரமாணங்களை நிராகரித்திதன் பலனான குற்றங்களின் அளவற்ற தன்மையைக் கண்டு உலகம் திகிலடைந்தது. நீதி நெறிகளுக்கும் சன்மார்க்கத்திற்கும் அஸ்திவாரம்—தேவன்மீதும் அவரது வார்த்தைகளின் மேலும் உள்ள விசுவாசம்தான் என்பதை மனிதர்கள் அங்கீகரித்தனர். “யாரை நிந்தித்துத் தூஷித்தாய்? யாருக்கு விரோதமாய் உன் சத்தத்தை உயர்த்தினாய்? நீ இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாய் அல்லவோ உன் கண்களை மேட்டிமையாய் ஏறெடுத்தாய். ஆதலால், இதோ, இப்பொழுது நான் அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன்; என் கரத்தையும் என் பெலத்தையுமே அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன்; என் நாமம் யேகோவா என்று அறிந்துகொள்வார்கள்” (ஏசாயா 37:23 எரேமியா 16:21) என்பது தேவனின் எச்சரிப்பு! (61)

இந்த இரண்டு சாட்சிகளைப்பற்றி தீர்க்கதரிசி, “மேலும் இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள்; அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள்” (வெளி. 11:12) என்று அறிவிக்கிறார். பிரான்ஸ் நாடு தேவனுடைய இரண்டு சாட்சிகளுடனும் யுத்தஞ்செய்ததினால், அவைகள் (வேதாகமம்) இதற்குமுன் ஒருபோதும் இராதவிதத்தில் மேன்மைப்படுத்தப்பட்டுள்ளன. 1804–ல் பிரிட்டன் மற்றும் வெளிநாட்டு வேதாகமச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அதைப் பின்தொடர்ந்து, ஐரோப்பாக் கண்டத்தில், இதைப்போன்ற பல அமைப்புகள் அவைகளின் கிளைகளுடன் ஏற்படுத்தப்பட்டன. 1816–ல் அமெரிக்க வேதாகமச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் வேதாகமச் சங்கம் ஏற்படுத்தப்பட்டபோது, ஐம்பது மொழிகளில் வேதாகமங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப் பட்டன. அப்போதிலிருந்து அது நூற்றுக்கணக்கான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. (62)

1792–கு முந்திய ஐம்பது வருடங்களில் அயல்நாட்டு மிஷனரி ஊழியர்களின்மீது சொற்பமான கவனம் இருந்தது. புதிய சங்கங்கள் ஏற்படுத்தப்படவில்லை. ஒருசில சபைகள் மட்டுமே அஞ்ஞான நாடுகளில் கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்குச் சரியான முயற்சியை மேற்கொண்டிருந்தன. ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில், ஒரு பெரும்மாறுதல் நிகழ்ந்தது. பகுத்தறிவு வாதத்தின் பலன்களினால் மனிதர்கள் அதிருப்தி யடைந்து, தெய்வீக வெளிப்படுத்தல், பரீட்சார்த்தமான மதம் ஆகியவை களின் அவசியத்தை உணர்ந்தனர். 1793–ல் முதல் இங்கிலாந்து மிஷனரியாக இந்தியாவுக்கு வந்த, பக்திமிக்க கேரி என்பவர் மிஷனரி

ஊழியத்தின் நெருப்பைப் புதிதாக இங்கிலாந்தில் கொளுத்தினார். இருபது வருடங்களுக்குப்பின், அமெரிக்காவிலிருந்த ஒரு மாணவர் குழுவின் வைராக்கியம், அமெரிக்காவின் மிஷன் குழுமம் என்ற ஒன்றினை அமைத்தது. இந்தக் குழுமத்தின் மங்களகரமான செயலாக, அமெரிக்க நாட்டிலிருந்து ஜட்சன் பர்மாவுக்கு மிஷனரியாகச் சென்றார். இந்த நேரத்திலிருந்து அயல்நாட்டு மிஷனரிமார்களின் ஊழியம் சற்றும் எதிர்பாராத அளவை எட்டியது. (63)

அச்சசுக் கலையில் உண்டான முன்னேற்றம் வேதாகம விநியோகத்தில் ஒரு தீவிர முன்னேற்றத்தை உண்டுபண்ணியது. பல்வேறு நாடுகளுக்கு இடையேயான தொலைத்தொடர்பு வசதிகளின் அதிகரிப்பு, பண்டைக் காலத்தில் நாட்டுக்கெதிராக நாடு கொண்டிருந்த (தவறான) எண்ணங்கள் தகர்த்தெறியப்பட்டிருப்பது, ரோமன் கத்தோலிக்கப் போப்புவின் அரசியல் அதிகார இழப்பு ஆகியவை தேவனுடைய வார்த்தையின் நுழைவிற்குப் பாதையைத் திறந்திருக்கிறது. கட்டுப்பாடு எதுவுமின்றி சில வருடங்கள் வேதாகமம் ரோம் நகரத் தெருக்களில் விற்கப்பட்டன. இப்பொழுது உலகில் மனிதர்கள் இருக்குமிடங்களுக்கெல்லாம் அது கொண்டுசெல்லப் படுகிறது. (64)

கடவுள் இல்லை என்ற வால்ட்டேர் என்பவர் ஒரு சமயம் “பன்னிரண்டு மனிதர்கள் கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபித்தனர் என்று மக்கள் திரும்பத்திரும்பக் கூறுவதைக் கேட்பதில் நான் களைப்புற்றிருக்கிறேன். அதைக் கவிழ்க்க ஒரு மனிதன் போதுமானவன் என்பதை நான் மெய்ப்பிப்பேன்” என்று பெருமையுடன் கூறினார். அவர் இறந்து நூறு வருடங்கள் கடந்துவிட்டன. வேதாகமத்திற்கு எதிரான போரில் இலட்சக்கணக்கானவர்கள் ஒன்று சேர்ந்துள்ளனர். ஆனால் அது அழிக்கப்படுவதற்குப்பதிலாக, வால்ட்டேரின் காலத்தில் எங்கு நூற்றுக்கணக்கானவைகள் மட்டும் இருந்தனவோ, அங்கு இப்பொழுது பத்தாயிரங்கள். ஆம்! இலட்சக்கணக்கான (கோடிக்கணக்கான) தேவனுடைய புத்தகத்தின் பிரதிகள் உள்ளன. கிறிஸ்தவ சபையைப்பற்றி ஒரு ஆரம்பகால சீர்திருத்தக்காரர் “வேதாகமம் ஒரு கொல்லனின் உலைக்களமாக இருந்து, அநேக சம்மட்டிகளை உடைத்துள்ளது” என்றார். “உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்”—ஏசா. 54:17. (65)

“நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்” (ஏசா. 40:8) “அவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள்; அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள். அவைகள்

என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்கும் உறுதியானவைகள், அவைகள் உண்மையும் செம்மையுமாய்ச் செய்யப்பட்டவைகள்"–சங்கீதம் 111:7,8. மனித அதிகாரத்தின்மீது கட்டப்பட்டுள்ளவைகள் அனைத்தும் கவிழ்க்கப்பட்டுப்போகும். ஆனால் ஒருபோதும் மாறாத கன்மலையின்மீது அஸ்திவாரப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தைகளோ என்றென்றும் நிலைத்து நிற்கும். (66) ★

# 16

# ஒரு புதிய தேசத்தில் புகலிடம் தேடியவர்கள்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 289–298)**

ஆங்கில சீர்திருத்தக்காரர்கள் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் கோட்பாடுகளை மறுத்திருந்தபோதிலும், அதன் அநேக வடிவங்களை அவர்களுக்கிடையில் கைக்கொண்டிருந்தனர். இவ்வாறாக, ரோமாபுரியின் அதிகாரமும், கொள்கையும், அவர்களால் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், இங்கிலாந்து சபையின் ஆராதனையில் ஏற்படுத்தப்பட்டிருந்த அதன் சம்பிரதாயங்கள் ஒரு சிலதாக மட்டும் இருக்கவில்லை. அவை மனசாட்சி சம்பந்தப்பட்ட காரியங்கள் இல்லை என்று குரல் எழுப்பப்பட்டது. வேத வார்த்தைகள் அவைகளை கட்டளையிடாதிருந்தாலும், அதனால் அவை அவசியமற்றதாயிருந்தாலும், தடுக்கப்படாததால் அவைகள் தீமைகளல்ல என்று கோரப்பட்டது. அவைகளைக் கைக்கொண்டது, ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திற்கும் சீர்திருத்த சபைகளுக்கும் இடையிலிருந்த அகலமான இடைவெளியை குறுகச்செய்தது. கூடவே புரொட்டஸ்டாண்டுமார்க்க விசுவாசத்தை ரோமன் கத்தோலிக்க மார்க்கம் ஏற்றுக்கொள்ள இது வகைசெய்யும் என்றும் வற்புறுத்தப்பட்டது. (1)

பழமைவாதிகளுக்கும் சமரசத்தை நாடினவர்களுக்கும் இந்த வாதங்கள் முடிவானவையாக இருந்தன. ஆனால் இவ்விதமாக நிதானிக்காத வேறொரு வகுப்பினர் இருந்தனர். இந்த சம்பிரதாயங்கள் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்திற்கும் சீர்திருத்தசபைகளுக்கும் இடையிலிருந்த பெரும் பிரிவை இணைக்கும் பாலமாக இருக்கின்றன என்பதே அவர்களுடைய பார்வையில், அவைகளைச் செய்வதற்கு எதிராக முடிவான வாதமாக இருந்தது. எவைகளில் இருந்து அவர்கள் விடுதலைசெய்யப்பட்டு திரும்பிச்செல்ல மனமற்றிருந்தனரோ அந்த அடிமைத்தனத்தின் அடையாள அட்டைதான்

(Badge Identity Card) அது என்று அதனை அவர்கள் பாத்திருந்தனர். தேவன், அவருக்குச் செலுத்தப்படும் தொழுகை முறைகளின் நியமங்களனைத்தையும் அவரது வார்த்தைகளில் ஏற்படுத்தியிருக்கிறார் என்பதையும், அவைகளோடு எதையும் கூட்டுவதற்கோ அல்லது அவைகளிலிருந்து குறைப்பதற்கோ அவர்களுக்குச் சுதந்திரமில்லையென்ற நியாயத்தையும் அவர்கள் கண்டனர். பெரிய மருளவிழுகையின் துவக்கமே, தேவனுடைய அதிகாரத்திற்குப் பதிலாக சபையின் அதிகாரத்தை வைக்கத் தேடியதில்தான் இருந்தது. ரோமமார்க்கம், தேவன் தடைசெய்யாமலிருந்தவைகளை சேர்ப்பதில் துவக்கி, அவர் எவைகளைச் செய்யவேண்டுமென்று தெளிவாகக் கூறியிருந்தாரோ, அவைகளைச் செய்யக்கூடாதென்று தடைசெய்வதில் முடித்தது. (2)

பழங்கால சபையில் காணப்பட்டிருந்த தூய்மைக்கும், எளிமைக்கும் திரும்புவதற்கு, அநேகர் ஆர்வத்துடன் வாஞ்சித்தனர். ஆங்கில சபையில் ஏற்படுத்தப்பட்டிருந்த அநேக சம்பிரதாயங்களை அவர்கள் உருவ வழிபாட்டின் நினைவுச்சின்னங்கள் என்று பாவித்து, மனசாட்சியுடன் அதன் ஆராதனையில் ஐக்கியப்படமுடியாதவர்களாக இருந்தனர். அரசியல் அதிகாரத்தால் அந்தச் சபை ஆதரிக்கப்பட்டிருந்ததினால், அதன் படிவத்தில் எவ்விதமான இணங்காமையையும் அது அனுமதிக்கவில்லை. அதன் ஆராதனைக்கு வருகை தரவேண்டுமென்பது சட்டப்பூர்வமாக்கப்பட்டு, அதிகாரப் பூர்வமற்ற சமய ஆராதனைகள், சிறைவாசம், நாடுகடத்தப்படுதல், மரணம் ஆகிய தண்டனைகளினால் தடைசெய்யப்பட்டன. (3)

பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், அப்போதுதான் இங்கிலாந்து தேசத்தின் அரியணையில் ஏறியிருந்த அரசன், "தூய்மையாளர்கள் இசையவேண்டும் அல்லது அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறும்படி துன்புறுத்தப்படவேண்டும் அல்லது மோசமான நிலைமையை அடைய வேண்டும்." (George Bancroft, History of the United States of America, pt. 1, ch. 12, par. 6.) என்னும் அறிவிப்பை வெளியிடுவதில் தீர்மானமிக்கவனாக இருந்தான். வேட்டையாடப்பட்டு, உபத்திரவப்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டவர்கள், எதிர்காலத்தில் நல்ல நாட்களைப்பற்றிய நம்பிக் கையை அறியக்கூடாதிருந்தனர். தங்களுடைய மனசாட்சியின்படி தேவனைச் சேவிக்க விரும்புகிறவர்களுக்கு, "இங்கிலாந்து வாழுவதற்கு ஏற்ற இடமில்லை" (J.G.. Palfrey, History of New England, ch. 3, par. 43.) என்ற உணர்விற்கு வந்தனர். கடைசியாக சிலர் ஹாலந்து நாட்டில் தஞ்சம்புகத் தீர்மானித்தனர். துன்பங்கள், இழப்புகள், சிறைவாசங்கள் ஆகியவைகளை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. அவர்களது நோக்கங்கள் முறியடிக்கப்பட்டு, விரோதிகளின் கரங்களில் காட்டிக்கொடுக்கப்பட்டனர்.

ஆனால் நிலைகுலையாத விடாமுயற்சி வெற்றியடையவே, அவர்கள் நட்புமிக்க டச்சுக் குடியரசின் கரைகளில் புகலிடம் கண்டனர். (4)

வீடுகளையும் பொருட்களையும் அவர்களது வாழ்விற்கு ஆதாரமாயிருந்தவைகளையும் அவர்கள் தங்களது வெளியேற்றத்தின் போது விட்டுவிட்டனர். மாறுபட்ட மொழியையும், சம்பிரதாயங்களையும் உடைய ஒரு அந்நிய தேசத்தில் அவர்கள் அந்நியர்களாக இருந்தனர். தங்களது உணவைச் சம்பாதிப்பதற்காக, அவர்களுக்குத் தெரியாததும் புதிதுமாயிருந்த தொழில்களைச் செய்யும்படி வற்புறுத்தப்பட்டனர். இதுவரை தங்களது நிலங்களில் வேலைசெய்திருந்த மத்திய வயது மனிதர்கள், இப்பொழுது இயந்திரத் தொழில்களைக் கற்கவேண்டியவர் களானார்கள். ஆனால் அவர்கள் சோம்பேறித்தனத்திலும் அதிருப்தியிலும் காலத்தை வீணாக்காமல், அந்த நிலைமையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் அடிக்கடி வறுமையினால் கிள்ளப்பட்டிருந்தபோதிலும், தங்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்த ஆசீர்வாதங்களுக்காக தேவனுக்கு நன்றிகூறி, அவருடனுள்ள கறையற்ற ஆவிக்குரிய தொடர்பில் மகிழ்ச்சியைக் கண்டனர். தாங்கள் மோட்சப்பயணம் செய்பவர்கள் என்பதை அறிந்து கஷ்டங்களில் அதிக கவனம் வைக்காமல், தங்களது மிக அருமையான நாடான பரலோகத்தை நோக்கித் தங்களது பார்வையை உயர்த்தி, தங்களது மனங்களை அமைதிப்படுத்திக்கொண்டனர்.—Bancroft, Pt. 1, ch. 12, par. 15. (5)

நாடுகடத்தப்பட்டதற்கும் துன்பங்களுக்கும் நடுவில் அவர்களது அன்பும் விசுவாசமும் உறுதியாக வளர்ந்தது. அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பினார்கள். அவர் அவர்களுக்குத் தேவையான நேரத்தில், அவர்களைக் கைவிடவில்லை. அவர்களை தைரியப்படுத்தவும், தாங்கவும் அவரது தூதர்கள் அவர்களருகில் இருந்தனர். அவர்களுக்கென்று ஒரு நாட்டைக் காணவும், அவர்களது பிள்ளைகளுக்கு மதச்சுதந்திரத்தைப் பிறப்புரிமையாகக் கொடுக்கவும், தேவனுடைய கரம் கடலுக்கப்பாலிருந்த ஒரு நாட்டைக் காட்டுவதுபோலத் தோன்றியபொழுது, பின்வாங்காதபடி தெய்வீக ஏற்பாட்டின் பாதையில் அவர்கள் முன்சென்றனர். (6)

தேவன் அவரது மக்களுக்கான கிருபையின் நோக்கத்தை நிறைவேற்ற, அவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக அவர்கள்மீது சோதனைகளை அனுமதித்தார். உயர்த்தப்படவேண்டும் என்பதற்காக சபை தாழ்த்தப்பட்டது. அவரை விசுவாசிக்கிறவர்களை கைவிடமாட்டார் என்பதற்கான மற்றொரு சாட்சியை உலகத்திற்குக் கொடுப்பதற்காக அதன் சார்பாக வல்லமையை தேவன் வெளிக்காட்ட இருந்தார். தமது மக்களை பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுவரும்படியும், அவரது மகிமையை முன்கொண்டுசெல்லும்படியும்,

சாத்தானின் கோபத்தையும் துன்மார்க்கரின் திட்டங்களையும் அவர் மாற்றியமைக்கிறார். உபத்திரவமும் நாடுகடத்தப்படுதலும் சுதந்திரத்திற்கான பாதையை திறந்துகொண்டிருந்தன. (7)

தூய்மையாளர்கள் ஆங்கில சபையிலிருந்து பிரிந்துசெல்ல முதலில் நெருக்கப்பட்டபோது, "அறிவிக்கப்பட்டுள்ள சகல பாதைகளிலும் அல்லது அறிவிக்கப்படவுள்ள சகல பாதைகளிலும் ஒன்றுசேர்ந்து நடப்போம்" (J. Brown, The Pilgrims Fathers, Page 74.) என்ற ஒரு பக்திவிநயமான உடன்படிக்கையுடன் கர்த்தரின் சுதந்திரமான மக்களாக ஒன்றுசேர்ந்தனர். சீர்திருத்தத்தின் உண்மையான ஆவியும், புரொட்டஸ்டாண்டு மார்க்கத்தின் உயிரோட்டமான கொள்கையும், இங்குதான் இருந்தன. அந்த மோட்சப்பயணிகள், இந்த நோக்கத்துடன் புதியஉலகில் ஒருஇடத்தைக் கண்டிட, ஹாலந்தைவிட்டுப் புறப்பட்டுச்சென்றனர். அவர்களுடன் பயணம் செய்வதிலிருந்து தெய்வீக ஏற்பாட்டினால் தடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய போதகர் ஜான் ராபின்சன், நாட்டைவிட்டுச்செல்லும் அவர்களுக்குக் கொடுத்த பிரியாவிடையில்: (8)

"சகோதரரே! இதுமுதல் நாம் பிரிந்துசெல்லக் கூடியவர்களாக இருக்கிறோம். இதன்பின் நான் உங்கள் முகங்களைக் காண்பேனா என்பதைக் கர்த்தர்தான் அறிந்திருக்கிறார். ஆனால் கர்த்தர் அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறாரா இல்லையோ, நான் தேவனுக்கு முன்பாகவும் அவரது ஆசீர்வதிக்கப்பட்டுள்ள தூதர்களுக்கு முன்பாகவும் உங்களிடம் மன்றாடுவது என்னவெனில், நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கும் அதிகமாக நீங்கள் என்னைப் பின்பற்றாதிருங்கள். எனது ஊழியத்தினால் கிடைத்த சத்தியங்களை எவ்வளவு ஆவலாக பெற்றுக்கொண்டீர்களோ, அதேபோல் தேவன் அவருடைய வேறு கருவியின் மூலமாக எதையாவது உங்களுக்கு வெளிப்படுத்தினால் அதைப் பெற்றுக்கொள்ள எப்போதும் ஆயத்தமாயிருங்கள். ஏனெனில், அவரது பரிசுத்தமான வார்த்தையிலிருந்து மேலும் வெளிவரக்கூடிய அதிகமான சத்தியத்தையும் ஒளியையும் அவர் வைத்திருக்கிறார் என்பதில் நான் மிகவும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்."— Martyn vol. 5, p. 70. (9)

"சீர்திருத்தத்திற்கான கருவியாக இருந்தவர்கள் போதித்ததற்கும் அதிகமாக வளராமல், மதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த சீர்திருத்த சபைகளின் நிலைமைக்காக, என்னால் போதுமான அளவில் அழ இயலவில்லை. லுத்தர் கண்டவைகளுக்கும் அதிகமாகச் செல்லும்படி இழுக்கப்பட முடியாதவர்களாக லுத்தரன்கள் உள்ளனர். கால்வினிஸ்டுகளைப் பாருங்கள். எல்லாவற்றையும் இன்னும் காணாதவராயிருந்த, தேவனுடைய

அந்தப் பெரிய மனிதன் அவர்களை விட்டுச்சென்ற இடத்திலேயே, அவர்கள் பிடிவாதமாக நின்றுகொண்டிருக்கின்றனர். இது அதிகமாக புலம்பவேண்டிய துன்பமாக இருக்கிறது. அவர்கள் தங்களது காலத்தில் எரிந்து பிரகாசித்த விளக்குகளாக இருந்திருந்தபோதிலும், தேவனுடைய ஆலோசனையில் அவர்கள் முழுமையாக நுழையவில்லை. ஆனால் இப்பொழுது அவர்கள் வாழ்ந்திருந்தார்களானால், முதலில் கொடுக்கப்பட்டிருந்த ஒளியை அவர்கள் பெற்றுக்கொண்டதுபோலவே இப்பொழுதும் அதிகமான ஒளியைத் தழுவிக்கொள்ளுவதற்கு அவர்கள் விருப்பமுள்ளவர்களாக இருந்திருப்பார்கள்.”—D. Neal, History of the Puritans, vol. 1, p. 269. (10)

“உங்களுக்கு அறிவிக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்படவிருக்கிற கர்த்தருடைய பாதையில் நடப்பீர்கள் என்று நீங்கள் ஒப்புக்கொண்ட சபை உடன்படிக்கையை நினையுங்கள். எழுதப்பட்டுள்ள அவருடைய வார்த்தையிலிருந்து உங்களுக்குக் கொடுக்கப்படும் எவ்வகையான ஒளியையும் சத்தியத்தையும் பெற்றுக்கொள்ளுவோமென்று தேவனுடனும் ஒருவரோடொருவரும் நீங்கள் செய்துகொண்ட உடன்படிக்கையை நினையுங்கள். ஆனால் சத்தியமென்று நீங்கள் எதைப் பெறுகிறீர்களோ அதை எச்சரிப்புடன் பெற்றுக்கொள்ளுமுன் சத்தியத்தின் மற்ற வசனங்களுடன் ஒப்பிட்டு நிறுத்திப் பாருங்கள். ஏனெனில், இப்படிப்பட்ட அந்திக்கிறிஸ்துவின் கனத்த இருளில் இருந்து கிறிஸ்தவ உலகம் சீக்கிரமாக வெளிவருவதும், உடனடியாகப் பூரணமான அறிவு தோன்றுவதும் இயலாததாகும்.—Martyn vol. 5, pp. 70–71. (11)

வனாந்தரத்தின் துன்பங்களையும் அபாயங்களையும் சகிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதத்துடன் அமெரிக்கக் கடற்கரையில் வல்லமை மிக்க ஒரு நாட்டின் அஸ்திவாரத்தைப் போடவும், கடலுக்குக் குறுக்கே நீண்ட பயணத்தில் இருந்த ஆபத்தைத் தைரியத்துடன் எதிர்நோக்கிச் செல்லவும் அந்தப் பரதேசப் பயணிகள் ஏவப்பட்டதற்கு, “மனசாட்சிக்கு சுதந்திரம்” என்பதன் மீதிருந்த வாஞ்சையே காரணமாக இருந்தது. நேர்மையும் கடவுள் பயமும் உள்ளவர்களாக இருந்தபோதிலும் அந்தப் பரதேசப் பயணிகள் இதுவரை சமயச் சுதந்திரம் என்ற பெரும் கொள்கையைப் புரிந்துகொள்ளவில்லை. அநேகத் தியாகங்கள் செய்து பெற்றுக்கொண்ட அச்சுதந்திரத்தை பிறருக்கும் சமமாகக் கொடுக்க அவர்கள் தயாராயிருக்கவில்லை. புதிய ஏற்பாட்டின் வெளிவளர்ச்சியான, தேவன் மட்டுமே மனிதனுடைய நம்பிக்கையின் நீதிபதி என்ற உயரிய கொள்கையைப்பற்றிய சரியான புரிந்துகொள்ளுதலை பதினேழாம் நூற்றாண்டில் முன்னணியிலிருந்த சிந்தனையாளர்களிலும் சன்மார்க்க வாதிகளிலும் வெகுசிலரே பெற்றிருந்தனர்.—Ibid., vol. 5, p.

297. "மனசாட்சியைக் கட்டுப்படுத்தும் உரிமையையும், மதவிரோதத்தை தண்டிக்கும் உரிமையையும் தேவன் சபையிடம் விட்டுவைத்திருக்கிறார்" என்னும் கோட்பாடு, மிக ஆழமாக வேரூன்றி உள்ள போப்புமார்க்கத்தின் தவறுகளில் ஒன்றாகும். சீர்திருத்தவாதிகள் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் மத அதிகாரத்தை நிராகரித்தபோதிலும் அதின் சகிப்புத்தன்மையின்மை என்னும் ஆவியிலிருந்து முற்றிலுமாக விடுதலையடையவில்லை. போப்பு மார்க்கத்தின் நீண்டகால ஆளுகையினால், கிறிஸ்தவமார்க்கம் முழுவதையும் மூடியிருந்த கடுமையான இருள், இதுவரை முற்றிலும் விலக்கப்படவில்லை. மசாசூசெட்ஸ் குடியிருப்பில் இருந்த ஊழியக்காரர்களில் ஒருவர், "சகிப்புத்தன்மைதான் உலகத்தை அந்திக் கிறிஸ்து மார்க்கமாக்கியது. மதவிரோதிகளை தண்டிப்பதால் சபை ஒருபோதும் பாதிக்கப்படவில்லை" என்று கூறினார்.—Ibid., vol. 5, p. 335. அரசாங்கத்தில் பேசும் உரிமை சபை அங்கத்தினர்களிடம் மட்டும்தான் இருக்கவேண்டும் என்ற ஒழுங்குமுறையை இந்தக் குடியிருப்பினர் ஏற்றுக்கொண்டிருந்தனர். ஒருவகையான அரசாங்க சபை அமைக்கப்பட்டு, பாதிரிமார்களின் தேவைகளை சந்திக்கும்படி மக்களனைவரும் வற்புறுத்தப்பட்டனர். மதவிரோத்தை ஒடுக்க நீதிபதிகள் அதிகாரம் பெற்றனர். இவ்வாறான வல்லமை சபையின் கரங்களில் இருந்தது. இச்செயல்களின் தவிர்க்க முடியாத விளைவுகளினால் உபத்திரம் ஏற்பட வெகுகாலம் செல்லவில்லை. (12)

முதலாவது குடியிருப்பை ஏற்படுத்தியதற்குப் பதினொரு வருடங்களுக்குப் பின்னர், புதிய உலகத்திற்கு ரோஜர் வில்லியம்ஸ் வந்தார். ஆரம்பகாலப் பரதேசப் பயணிகளைப்போல, மதச் சுதந்திரத்தை அனுபவிக்கவே இவர் வந்தார். ஆனால் அவர்களைப்போல் இல்லாமல், தனது காலத்தில் வெகு சிலர் மட்டுமே புரிந்திருந்த "மதச்சுதந்திரம் எச்சமயத்தாருக்கும் உரிய மாற்றமுடியாத உரிமை" என்கிற உண்மையை அவர் கண்டார். தேவவார்த்தையிலிருக்கும் எல்லா ஒளியும் இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்ற ராபின்சனின் கருத்தைப் பற்றிக்கொண்டிருந்த அவர், ஆர்வத்தோடு சத்தியத்தைத் தேடினார். "மனசாட்சியின் சுதந்திரம், கருத்துக்கள்– இவை சட்டத்தின் முன் சமத்துவம் என்கிற கொள்கையின் முழுமையை நவீன கிறிஸ்தவ உலகத்தில் முதலில் புரிந்துகொண்ட நபர் இவர்தான்."—Bancroft, Pt. 1, ch. 15, par. 16. குற்றங்களை அடக்குவது நீதிபதிகளின் கடமை, ஆனால் ஒருபோதும் மனசாட்சியை கட்டுப்படுத்துவது அல்ல என்று அவர் அறிவித்தார். "மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் நடைபெறவேண்டியது என்ன என்பதைப் பொதுமக்களோ அல்லது நீதிபதியோ முடிவுசெய்யலாம். ஆனால் ஒரு மனிதன் தேவனுக்குச் செய்யவேண்டிய கடமையைக் குறிப்பிட

அவர்கள் முயலும்போது, அவர்களுக்கு அதில் இடமில்லை. அதில் பாதுகாப்பும் இருக்காது. ஏனெனில் நீதிபதிக்கு அதிகாரம் இருக்குமானால், அவர் இங்கிலாந்து நாட்டிலிருந்த பல அரசர்களையும் அரசிகளையும் போலவும், ரோமன் கத்தோலிக்க சபைக்குழுக்களைப் போலவும் இன்று ஒருவகைக் கருத்துக்களையும், நாளை வேறு ஒருவகை கருத்துக்களையும் நம்பிக்கையையும், கட்டளையிடுவார். அப்படியிருக்கும்போது, நம்பிக்கை என்பது குழப்பங்களின் ஒரு குவியலாகிவிடும்" என்றார். (13)

அமைக்கப்பட்டிருந்த சபையின் ஆராதனைகளுக்கு வருகை தர வேண்டும் என்பது அபராதம், சிறைவாசம் ஆகியவைகளின் மூலமாக வற்புறுத்தப்பட்டிருந்தது. தங்களது சபைக்கு ஒவ்வொருவரும் தவறாது வரவேண்டும் என்று வற்புறுத்தும் சட்டம், ஆங்கிலேயர்களின் சம்பிரதாயத்தில் மிகவும் மோசமானதாக இருந்தது. வில்லியம்ஸ் அந்தச் சட்டத்தைக் கண்டனம் செய்தார். மாறுபட்ட மத நம்பிக்கை உள்ளவர்களை ஐக்கியப்படும்படி வற்புறுத்தல் என்பது அவர்களது இயற்கையான உரிமையை பகிரங்கமாக மீறுவதாகும் என்று அவர் கருதினார். மத நம்பிக்கையற்றவர்களையும், விருப்பமற்றவர்களையும் பொது ஆராதனைக்கு இழுத்துச்செல்லுதல் என்பது மாய்மாலத்தை வற்புறுத்துவதுபோலத் தோன்றுகிறது. எந்த ஒருவனும் அவனது சுயவிருப்பத்திற்கு எதிராக ஆராதிக்கவேண்டும் அல்லது ஒரு ஆராதனைமுறையைப் பின்பற்றவேண்டும் என்று கட்டுப்படுத்தப்படக் கூடாது என்று அவர் கூறினார். அவரது எதிரிகள் அவரது அபிப்பிராயத்தில் வியந்து: "என்ன? வேலைக்காரன் கூலிக்குப் பாத்திரவான் இல்லையா" என்றனர். அவர் மறுமொழியாக: "ஆம்! எவர்கள் அவனை வேலைக்கு வைத்துக்கொள்ளுகிறார்களோ, அவர்களிடமிருந்து கூலிபெற பாத்திரவானா யிருக்கிறான்" என்றார்.—Bancroft, Pt. 1, ch. 15, par. 2. (14)

அபூர்வமான வரங்களையும் வளையாத நேர்மையையும் உண்மையான அனுதாபத்தையும் உடைய ஒரு விசுவாசமிக்க ஊழியர் ரோஜர் வில்லியம்ஸ் என்று மதிக்கப்பட்டும், நேசிக்கப்பட்டும் இருந்தார். அப்படியிருந்தும் சபைக் காரியங்களில் சமூக நீதிபதிகளுக்குள்ள அதிகாரத்தை, அவர் மறுத்ததும், மதச்சுதந்திரம் வேண்டும் என்ற அவரது கோரிக்கையும் சகிக்கமுடியாததாக இருந்தது. இந்தப் புதிய கோட்பாட்டை நடைமுறைப்படுத்தினால், அது அரசாங்கத்தின் அடிப்படை நிலைமையைக் கவிழ்த்துவிடும் என்று கூறப்பட்டது.—Ibid., pt. 1, ch. 15, par. 10. அவர் குடியிருப்பில் இருந்து நீக்கப்படும் தண்டனை அடைந்ததால், முடிவில் கைதாவதைத் தவிர்க்க, பனிக்காலத்தின் குளிர் காற்றில் மனிதர்கள் உட்புகமுடியாத காட்டிற்குள் ஓடி ஒளியும்படி வற்புறுத்தப்பட்டார். (15)

“உணவு, படுக்கை என்றால் என்ன? என்பதை அறியாதவனாக நான் பதினான்கு வாரங்கள் கடுமையான குளிர்காலத்தில் அலைக்கழிக்கப்பட்டேன். ஆனால் வனாந்திரத்தில் பறவைகள் என்னைப் போஷித்தன. ஒரு மரப்பொந்து அடிக்கடி எனது புகலிடமாக இருந்தது.”—Ibid., pt. 1, ch. 15, par. 349-350. ஒரு சிவப்பு இந்திய கூட்டத்தைக் கண்டு, அவர்களுக்கு சுவிசேஷத்தின் சத்தியங்களை அறிவிக்கும்படி செய்த முயற்சிகளில், அவர்களுடைய நம்பிக்கையையும் அன்பையும் பெறும்வரை, அவர் தனது வேதனைமிக்க ஓட்டத்தை பனிநிறைந்த பாதையற்ற காட்டிற்கு ஊடாகத் தொடர்ந்தார். (16)

கடைசியாக, அவர் நாரசன்செட் என்னும் வளைகுடாவை அடையும்வரை, மாறிமாறி மாதக்கணக்காக அவரது பாதையில் அலைந்து திரிந்து, நவீனகாலத்தில் மதச்சுதந்திரம் என்னும் உரிமையைப் பூரணமாக அங்கீகரிக்கும் மாநிலத்திற்கு அஸ்திவார மிட்டார். ஒவ்வொரு மனிதனும் அவனது சொந்த மனசாட்சியின் வெளிச்சத்தின்படி தேவனை ஆராதிக்கும் சுதந்திமுடையவனாக இருக்கவேண்டும் என்பது ரோஜர் வில்லியம்ஸின் குடியிருப்பின் அடிப்படைக்கொள்கையாக இருந்தது.—Ibid., vol. 5, p. 534. ரோட்ஐலண்டு எனப்படும் சிறிய மாநிலம் ஒடுக்கப்பட்டவர்களின் புகலிடமானது. சமூக, சமய சுதந்திரம் என்னும் அதன் கொள்கை, அமெரிக்கக் குடியரசின் மூலைக்கல்லாகும்வரை, அது வளர்ந்து செழுமை அடைந்தது. (17)

நமது முற்பிதாக்கள் உண்டுபண்ணி முன்வைத்த—உரிமைகளின் சட்டம்—என்னும் பழம்பெரும்ஆவணத்தில், சுதந்திரப் பிரகடனத்தில்: “எல்லா மனிதர்களும் சமமாகப் படைக்கப்பட்டுள்ளனர் தேவன் கொடுத்திருக்கிற மாற்ற இயலாத குறிப்பிட்ட உரிமைகளை உடையவர்களாக இருக்கின்றனர் இவைகளுக்குள் வாழ்க்கை, சுதந்திரம், மகிழ்ச்சியாய் இருப்பது ஆகிய இந்த உண்மைகள் சுயசான்றைக் கொண்டிருக்கின்றன” என்று அவர்கள் அறிவித்தது, மனசாட்சி மீறப்படக்கூடாது என்பதை உறுதி செய்ய, மிக வெளிப்படையான விதத்தில், “மத சம்பந்தமான தேர்வுகள் ஐக்கிய நாடுகளில் உள்ள எந்தப் பொது நிறுவனத்திலும் வேலைக்கான தகுதியாக இருக்கக்கூடாது” என்பதையும், “எந்த ஒரு மதஅமைப்பையும் மதிக்கின்ற அல்லது அதன் சுதந்திரமான செயல்பாட்டைத் தடைசெய்கின்ற சட்டத்தைக் காங்கிரஸ் இயற்றக்கூடாது” என்பதையும் அரசியல் அமைப்பு உத்தரவாதம் செய்கிறது. (18)

“தேவனுடனுள்ள மனிதனின் உறவு, மனிதச் சட்டங்களுக்கு அப்பாற்பட்டது, அவனது மனசாட்சியின் உரிமைகள், மாற்றப்படமுடியாதது என்கிற நித்தியமான கொள்கைகளை அரசியல் அமைப்பை ஏற்படுத்தினவர்கள் அங்கீகரித்திருந்தனர். இந்த சத்தியத்தை நிலைப்படுத்துவதற்கு காரணம்

தேவையில்லை. நமது இதயங்களில் நாம் இதைப்பற்றிய உணர்வைப் பெற்றிருக்கிறோம். மனிதச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய மறுத்த இந்த உணர்வுதான் சித்திரவதைகளிலும் நெருப்பு ஜுவாலைகளிலும் ஏராளமான இரத்தசாட்சிகளைத் தாங்கியிருக்கின்றது. தேவனுடனுள்ள அவர்களது கடமை, மனிதச் சட்டங்களின் இயற்றுதலுக்கு மேலானதாக இருக்கிறதென்றும், அவர்களது மனசாட்சிக்கும் மேலாக மனிதன் அதிகாரம் செலுத்தக்கூடாது என்றும் அவர்கள் உணர்ந்தனர். ஒருவராலும் அழித்து நீக்கமுடியாத உடன்பிறந்த கொள்கையாக இது உள்ளது."—Congressional Documents (U.S.A), serial No. 200, document No. 271. (19)

ஒவ்வொரு மனிதனும் அவனது உழைப்பின் பலனை அனுபவிக்கவும், அவனது மனசாட்சியின் உணர்த்துதலுக்குக் கீழ்ப்படியவும் அனுமதிக்கிற ஒரு நாடு இருக்கின்றது என்கிற செய்தி, ஐரோப்பிய நாடுகளெங்கிலும் பரவியபோது, அந்தப் புது உலகின் கரைகளுக்கு ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டனர். குடியிருப்புகள் விரைவாகப் பெருகின. யுத்தங்களிலும் அல்லது பஞ்சங்களிலும் அல்லது தங்களை ஒடுக்குபவரிடத்திலும் இருந்து தப்புவதற்காக, அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து வரக்கூடிய எந்த நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கும், தாராளமான வரவேற்பையும் உதவியையும், பொதுச்செயலிலிருந்து செய்ய ஒரு சிறப்புச் சட்டத்தை மசாசூசெட்ஸ் மாநிலம் இயற்றியது. இவ்வாறாக தப்பி ஓடினவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும் அந்தச் சுதந்திர அரசாங்க நாடுகளின் ஐக்கியத்தில் சட்டத்தின்மூலமாக விருந்தினர்களாக்கப்பட்டனர். —Martyn, vol. 5, p. 417. பிளைமவுத் என்கிற இடத்திற்கு முதலில் வந்ததிலிருந்து இருபது வருடங்களுக்குள், பல்லாயிரக்கணக்கான பரதேசப் பயணிகள் புதிய இங்கிலாந்து என்னுமிடத்தில் வந்து தங்கினர். (20)

அவர்கள் விரும்பிய நோக்கத்தை அடைந்துகொள்ளுவதற்கு, சிக்கனத்தினாலும் உழைப்பினாலும் உண்டாகக்கூடிய, பொருள்களற்ற, சாதாரண வாழ்க்கைக்கென்று சம்பாதித்தால்போதும் என்ற திருப்தி உடையவர்களாக அவர்கள் இருந்தனர். அவர்களது உழைப்பிற்கான நியாயமான பலனையன்றி வேறொன்றையும் அந்த பூமியிலிருந்து அவர்கள் எதிர்பார்க்கவில்லை. வஞ்சிக்கிற மாயையான பொன்மயக் காட்சிகள் எதுவும் அவர்களது பாதையில் இருக்கவில்லை. அவர்களது சமுதாய உறவில் மெதுவாகவும் சீராகவும் முன்னேறுவதில் அவர்கள் திருப்தி அடைந்தனர். சுதந்திரம் என்கிற மரம் அந்த நாட்டில் ஆழமாக வேரூன்றும்வரை, அவர்களது கண்ணீரையும் நெற்றியின் வியர்வையையும் அதற்கு நீராக ஊற்றி வளர்த்து, வனாந்தரத்தின் தனிமையை அவர்கள் பொறுமையுடன் சகித்திருந்தனர். (21)

விசுவாசத்தின் அஸ்திவாரமாகவும், ஞானத்தின் ஆதாரமாகவும் சுதந்திரத்தின் பண்பாகவும் வேதாகமம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. வீட்டிலும், பள்ளியிலும், ஆலயத்திலும் அதன் கொள்கைகள் அக்கரையுடன் கற்பிக்கப்பட்டு, அதன் பலன்களாகிய சிக்கனம், நுண்ணறிவு, தூய்மை, இச்சையடக்கம் ஆகியவைகளில் வெளிக்காட்டப் பட்டிருந்தது. ஒருவர் வருடக்கணக்கில் இந்தக் குடியிருப்பில் வாழ்ந்திருந் தாலும், அங்கு ஒரு குடிகாரனைக் காணாமலும், அல்லது ஒரு ஆணையிடுதலைக் கேட்காமலும், அல்லது ஒரு பிச்சைக்காரனைச் சந்திக்காமலும் இருக்கலாம்.—Bancroft, Pt. 1, ch. 19, par. 25. நாட்டின் மேன்மைக்கு நிச்சயமான பாதுகாப்பு வேதாகமக் கொள்கைகள்தான் என்பது உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டது. பலவீனமானவை யாகவும், பிரிந்தும் இருந்த அந்தக் குடியிருப்புக்கள், வல்லமைமிக்க கூட்டாட்சி உள்ள மாநிலமாக மாறவே, போப்பு இல்லாத ஒரு சபையையும், அரசன் இல்லாத ஒரு நாட்டையும் அதன் சமாதானத்தையும் செழுமையையும் அது ஆச்சரியத்துடன் கண்டது! (22)

முதலாவது வந்த பரதேசப் பயணிகளின் இலட்சியத்திலிருந்து விசாலமாக மாறுபட்ட நோக்கங்களால் கவரப்பட்டவர்களின் எண்ணிக்கை, அமெரிக்க கடற்கரையில் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டிருந்தது. உருவாக்கும் தன்மையை உடையவைகளாகப் பண்டையகால விசுவாசமும் தூய்மையும் இருந்திருந்தபோதிலும், அந்த எண்ணிக்கை அதிகரிக்கவே, உலக ஆதாயங்களை மட்டுமே தேடியிருந்தவர்களின் காரணாக, அதன் செல்வாக்கு குறையத் தெடங்கியது. (23)

சமூக, அரசியலில் ஓட்டளிக்கவோ அல்லது பதவி வகிக்கவோ, சபை அங்கத்தினர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவேண்டும் என்று ஆரம்பகால குடியிருப்புகளில் இருந்தவர்கள் பின்பற்றியிருந்த ஒழுங்குமுறைகள் கெடுதலுண்டாக்கும் விளைவுகளுக்கு வழிநடத்தின. மாநிலத்தின் தூய்மையைப்பாதுகாக்கும் ஒரு உபாயமாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அது சபையில் ஊழலை விளைவித்தது. ஓட்டுரிமையையும், பதவியையும் பெறுவதற்கு, மதச்சார்புடையவன் என்கிற அறிவிப்பு ஒரு நிபந்தனையாக இருக்கவே, உலகக் கொள்கைகளினால்மட்டுமே தூண்டப்பட்டு, இதய மாற்றமில்லாத அநேகர் சபையுடன் ஐக்கியப்பட்டனர். இவ்வாறாகக் குறிப்பிடும் அளவிற்கு சபைகள், மனமாற்றமடையாதவர்களை உள்ளடக்கியவையாக ஆயின. ஊழியத்திலிருந்தவர்களுங்கூட கோட்பாடுகளில் உள்ள தவறுகளைப் பற்றிக்கொண்டிருந்தது மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியானவரால் உண்டாகும் புதுப்பிக்கும் வல்லமையைப் பற்றிய அறிவற்றவர்களாகவே இருந்தனர். "என்னுடைய ராஜ்ஜியம் இந்த

உலகத்திற்குரியதல்ல” (யோவான் 18:36) என்று அறிவித்தவரின் சுவிசேஷத்திற்கு ஆதரவு தரும்படி மதச்சார்பற்ற வல்லமைகளுக்கு வேண்டுகோள் விடுத்து, அரசின் உதவியுடன் சபையைக்கூட்ட முயன்ற காண்ஸ்டன்டைனின் நாட்கள் முதல் இப்பொழுதுவரை உள்ள சபையின் வரலாற்றில், அடிக்கடி காணப்பட்ட தீயவிளைவுகள் இவ்வாறாகவே மறுபடியும் உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டன. அரசுடன் சபை ஐக்கியப்படுவது, அதன் அளவு எவ்வளவு குறைந்ததாகக் காணப்பட்டாலும், அது உலகத்தை சபைக்கு அருகில் கொண்டுவருவதுபோல் காணப்பட்டாலும், உண்மையில் சபையை உலகத்திற்கு அருகில் கொண்டுவருகிறது! (24)

சத்தியம் முன்னேறக்கூடியது. தேவனுடைய வார்த்தையில் இருந்து வெளிப்படும் ஒளி அனைத்தையும் ஏற்றுக்கொள்ள கிறிஸ்தவர்கள் தயாராக நிற்கவேண்டும் என்று ராபின்சனும், ரோஜர் வில்லியம்சும் மேன்மையாகப் பரிந்துரை செய்திருந்த பெரும் கொள்கையைப்பற்றிய நோக்கத்தை, அவர்களுக்குப் பின்தோன்றிய வர்கள் கைவிட்டனர். சீர்திருத்தத்தின் ஆசீர்வாதங்களால் மிகவும்உயர்வான அனுகூலங்களை அடைந்திருந்த அமெரிக்கப் புரொட்டஸ்டாண்டு சபைகளும், அதைப்போலவே ஐரோப்பிய சபைகளும் சீர்திருத்தம் என்கிறப் பாதையில் முன்செல்லத் தவறிவிட்டன. புதிய சத்தியத்தை அறிவிக்கவும், நீண்டகாலமாகப் போற்றப்பட்டிருந்த தவறுகளை எடுத்துக்காட்டவும், அவ்வப்போது சில விசுவாசமிக்க மனிதர்கள் எழும்பியிருந்தபோதிலும், பெரும்பான்மையினர், கிறிஸ்துவின் காலத்திலிருந்த யூதர்களைப்போலவும், லுத்தரின் காலத்தில் இருந்த போப்புமார்க்கவாதிகளைப் போலவும் அவர்களது தகப்பன்மார்கள் கொண்டிருந்த நம்பிக்கையில் நம்பிக்கை உள்ளவர்களாகவும், அவர்கள் வாழ்ந்ததைப்போலவே வாழ்வதில் திருப்தி உள்ளவர்களாகவும் இருந்திருந்தனர். தேவனுடைய வார்த்தையின் ஒளியில் தொடர்ந்து நடந்திருந்தால், அதைப் பாதுகாத்துப் போற்றியிருந்தால், தவறுகளும் மூடநம்பிக்கைகளும் நீக்கப்பட்டிருந்திருக்கும். அப்படியிராததால் சபை மறுபடியும் சீர்கெட்டு, சம்பிரதாயத்திற்குள்ளானது. இவ்வாறாக லுத்தரின் காலத்தில் ரோமசபையில் சீர்திருத்தத்தின் ஆவி எவ்வளவு அவசியமாயிருந்ததோ, அதே அளவு அவசியப்படும்படியாக புரொட்டஸ்டாண்டு சபையிலும் சீர்திருத்தத்தின் ஆவி கொஞ்சங்கொஞ்சமாக மறைந்து போயிருந்தது. அதேபோன்ற உலகப்பிரகாரமான தன்மையும் ஆவிக்குரிய மயக்கமும், மனிதர்களுடைய கருத்துக்களின்மீது பக்தியும், தேவனுடைய வார்த்தைகளுக்குப்பதிலாக மனிதக் கொள்கைகளைப் போதிப்பதும் இருந்தன. (25)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பரவலான வேதாகம விநியோகத்திற்கும், அதனால் உலகத்திற்குக் கிடைத்த வெளிச்சத்திற்கும்

இணையான முன்னேற்றம், அதற்குப்பின், வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியத்தின் அறிவிலும் மத அனுபவத்திலும் ஏற்படவில்லை. தேவனுடைய வார்த்தை எல்லோருக்கும் எட்டக்கூடிய இடத்தில் வைக்கப்பட்டது. எனவே மனிதர்களிடமிருந்து அதை நீக்கிவிட முற்காலத்தைப்போல சாத்தானால் முடியவில்லை. ஆனால் இன்னும் அவனது நோக்கத்தை நிறைவேற்ற, அதை மதிப்பற்ற சாதாரணமானதாகக் கருதும்படி அவன் அநேகரை நடத்தினான். வேதவாக்கியங்களை ஆராய்வதை மனிதர்கள் அலட்சியப்படுத்தினர். இப்படியாக அவர்கள் தவறான விளக்கங்களை ஏற்றுக்கொள்வதில் தொடர்ந்து, வேதாகம ஆதாரமில்லாத கோட்பாடுகளைப் போற்றுபவர்களாகவே இருந்தனர். (26)

உபத்திரவத்தின்மூலமாக சத்தியத்தை நசுக்கும் முயற்சியில் தோல்வியைக் கண்ட சாத்தான், மறுபடியும் பெரும் மருளவிழுகைக்கும் ரோமன் கத்தோலிக்க சபை அமைக்கப்படுவதற்கும் வழிகோலுகின்ற சமரசம் என்கிற திட்டத்தைக் கையாளத் தொடங்கினான். இப்பொழுது அவன் கிறிஸ்தவர்களை அஞ்ஞானிகளுடன் கூட்டுச்சேரும்படி ஈர்க்காமல், சிலைவணக்கத்திற்கு நிகரான, உலகப் பொருள்களின்மீது பக்தி வைத்ததினால் விக்கிரக ஆராதனை செய்தவர்களுடன் இணைத்தான். இந்த ஐக்கியத்தின் விளைவு கடந்த காலத்தில் நிகழ்ந்த கேட்டினைவிடக் குறைவாக இருக்கவில்லை. மதம் என்கிறப் போர்வையில் அகந்தையும், ஊதாரித்தனங்களும் போஷிக்கப் பட்டிருந்தன. சபைகள் கறைபடிந்தவைகளாயின. வேதாகமக் கோட்பாடுகளை சாத்தான் தொடர்ந்து திரித்து, இலட்சக்கணக்கான மக்களைப் பாழாக்கும்வண்ணம் பாரம்பரியங்களை ஆழமாக வேரூன்றச் செய்தான். "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காகப்" போராடுவதற்குப் பதிலாக, சபை இந்தப் பாரம்பரியங்களை ஆதரித்து நின்று, அவைகளை உயர்த்திப் பிடித்தது. இவ்விதமாக சீர்திருத்தவாதிகள் அதிகப்பாடுபட்டுப் போதித்த கொள்கைகள் அனைத்தும் தரக்குறைவாக்கப்பட்டன. (27) ★

17

# தீர்க்கதரிசனங்களில் இயேசுவின் இரண்டாம் வருகை!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 299–316)**

பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மிக மேலானதும், பக்திவிநயமானதும், மகிமையும் உள்ள சத்தியங்களில் ஒன்று, மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தின் பணியைப் பூர்த்திசெய்ய நிகழ உள்ள கிறிஸ்துவின் இரண்டாம் வருகையாகும்! மரண இருளின் பள்ளத்தாக்கில் பரதேசிகளாக அலைந்து திரியும் தேவனுடைய மோட்சப்பிரயாணிகளுக்கு துரத்தப்பட்ட தம்முடையவர்களை வீட்டிற்குக் கொண்டுவரும்படியான விலைமதிப்புமிக்க நம்பிக்கையைத் தூண்டும் மகிழ்ச்சிமிக்கசெய்தி உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருப்பவருடைய வருகையைக்குறித்த வாக்குத்தத்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் வருகையைப்பற்றிய கோட்பாடுதான் பரிசுத்த வேதவாக்கியங்களின் திறப்புரையாக உள்ளது. முதலாவது தம்பதிகள் ஏதேனிலிருந்து தங்களது துயரமிக்க அடிச்சுவடுகளை எடுத்துவைத்து, வெளியே சென்ற அந்த நாள் முதல், அழிப்பவனின் வல்லமையைத் தகர்த்து மீண்டும் பரலோகத்தை ஸ்தாபிப்பார் என்று வாக்குத்தத்தம் செய்திருந்த ஒருவரின் வருகைக்காக விசுவாசமிக்கவர்கள் காத்திருந்தனர். பழங்கால பரிசுத்த மனிதர்கள் தங்களது நம்பிக்கையின் நிறைவேறுதலாக, மேசியாவின் மகிமைமிக்க வருகையை எதிர்நோக்கி இருந்தனர். ஏதேனில் வாழ்ந்திருந்தவர்களுக்கு ஏழாவது தலைமுறை யிலிருந்த ஏனோக்கு—முந்நூறு ஆண்டுகள் தேவனுடன் சஞ்சரித்திருந்த அவன், விடுதலை வழங்குபவரின் வருகையை வெகு தூரத்திலிருந்து காணும்படி அனுமதிக்கப்பட்டிருந்தான். “இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கு ... ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார்” (யூதா 14,15) என்று முன்னறிவித்தான். முற்பிதாவாகிய

யோபு, தனது துன்பத்தின் இரவில், அசையாத நம்பிக்கையுடன்: "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் ... அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்" (யோபு 19:25–27) என்றும் ஆனந்தமாகக் கூறினான். (1)

நீதியின் அரசை ஆரம்பிக்க கிறிஸ்து வருகிறார் என்பது, வேத எழுத்தாளர்களை கம்பீரமான உணர்ச்சிமிக்க வார்த்தைகளைக் கூறச்செய்திருக்கிறது. வானுலக நெருப்பினால் பிரகாசிக்கின்ற வார்த்தைகளினால், கவிஞர்களும் தீர்க்கதரிசிகளும் இந்தப் பொருள்பற்றி விவரித்திருக்கின்றனர். இஸ்ரவேலுடைய அரசரின் வல்லமையையும் மகத்துவத்தையும்பற்றி: "பூரணவடிவுள்ள சீயோனிலிருந்து தேவன் பிரகாசிக்கிறார். நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவர் தம்முடைய ஜனத்தை நியாயந் தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் கூப்பிடுவார்"– சங்கீதம் 50:2–4. "வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி ... கர்த்தருக்கு முன்பாக காட்டுவிருட்சங்களெல்லாம் கெம்பீரிக்கும். அவர் வருகிறார், அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந் தீர்ப்பார்" (சங்கீதம் 96:11–13) என்று சங்கீதக்காரன் பாடினான். (2)

ஏசாயா: "மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள் மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள் உம்முடைய பனி பூண்டுகளின்மேல் பெய்யும் பனிபோல் இருக்கும் மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும்." "அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார் கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து ... நீக்கிவிடுவார் கர்த்தரே இதைச் சொன்னார். அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன் இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார் இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம் இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்" (ஏசாயா 26:19 25:8,9) என்றார். (3)

பரிசுத்த தரிசனத்தில் மெய்மறந்த ஆபகூக் அவரது வருகையைப் பார்த்தார். "தேவன் தேமானிலிருந்தும், பரிசுத்தர் பாரான் பர்வதத்திலிருந்தும் வந்தார் சேலா. அவருடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது; அவர் துதியினால் பூமி நிறைந்தது. அவருடைய பிரகாசம் சூரியனைப் போலிருந்தது.... அவர் நின்று பூமியை அளந்தார் அவர் பார்த்துப் புறஜாதிகளைக் கரையப்பண்ணினார் பூர்வ பர்வதங்கள் சிதறடிக்கப்பட்டது, என்றுமுள்ள மலைகள் தாழ்ந்தது. அவருடைய நடைகள் நித்திய நடைகளாயிருந்தது.... உம்முடைய குதிரைகளின்மேலும்

இரட்சிப்புண்டாக்குகிற உம்முடை இரதங்களின் மேலும் ஏறிவருகிறபோது,... பர்வதங்கள் உம்மைக் கண்டு நடுங்கின் ஜலம் பிரவாகித்துக் கடந்து போயிற்று; ஆழி இரைந்தது, அதின் கைகளை உயர எடுத்தது. சந்திரனும் சூரியனும் தன்தன் மண்டலத்தில் நின்றன் உமது அம்புகளின் ஜோதியிலும், உமது ஈட்டியினுடைய மின்னல் பிரகாசத்திலும் நடந்தன.... உமது ஜனத்தின் இரட்சிப்புக்காகவும் நீர் அபிஷேகம் பண்ணுவித்தவனின் இரட்சிப்புக்காகவுமே நீர் புறப்பட்டீர்" (ஆபகூக் 3:3,4,6,8,10,11,13) என்று கூறினார். (4)

இரட்சகர் தமது சீடர்களைவிட்டுப் பிரியவேண்டிய நேரம் வந்தபோது, மீண்டும்வருவேன் என்கிற நிச்சயத்தினால் துயரடைந்த அவர்களை ஆறுதல்படுத்தினார். "உங்கள் இருதயம் கலங்கா திருப்பதாக் என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு ...ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். .. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு... நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:1–3) என்றார். "அன்றியும் மனுஷ குமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்"– மத்தேயு 25:31,32. (5)

கிறிஸ்து பரலோகத்திற்கு எழுந்தருளிச்சென்றபின்பு ஒலிவ மலையின்மீது தரித்து நின்ற தேவதூதர்கள் அவர் திரும்பி வருவதைப் பற்றிய வாக்குத்தத்தத்தை சீஷர்களுக்கு மீண்டும் கூறினார்கள். "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்"–அப்போஸ்தலர் 1:11. ஆவியானவரால் ஏவப்பட்ட பவுல் அப்போஸ்தலன்: கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்" (1தெசலோனிக்கேயர் 4:16) என்று சாட்சி பகர்ந்தார். பத்மு தீவின் தீர்க்கதரிசி, "இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்" (வெளிப்படுத்தல் 1:7) என்கிறார். (6)

"உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்கதரிசிக ளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீரும்" (அப்போஸ்தலர் 3:21) என்பது அவருடைய வருகையின் மகிமையைச் சார்ந்து இருக்கிறது. அப்பொழுது நீண்டகாலமாகத் தொடர்ந்திருந்த தீமையின் ஆளுகை நீக்கப்பட்டுப்போகும். "அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய

ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார்”– வெளிப்படுத்தல் 11:5. “கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், … கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார்.” “அக்காலத்திலே சேனைகளின் கர்த்தர் தமது ஜனத்தில் மீதியானவர்களுக்கு மகிமையான கிரீடமாகவும், அலங்காரமான முடியாகவும் … இருப்பார்”– ஏசா. 40:5 61:11 28:5. (7)

அதன்பின் சமாதானமிகுந்த, வெகுகாலம் விரும்பியிருந்த மேசியாவின் இராஜ்யம் வானத்தின் கீழெங்கும் ஏற்படுத்தப்படும். “லீபனோனின் மகிமையும், கர்மேல் சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்;” “கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச்செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்.” “நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும், உன் தேசம் இனிப்பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்; கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப்படும். மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பதுபோல, உன் தேவன் உன் மேல் மகிழ்ச்சியாயிருப்பார்”–ஏசாயா 35:2 51:3 62:4,5. (8)

கர்த்தரின் வருகை யுகங்கள் நெடுகிலும் அவரது உண்மையான அடியார்களின் நம்பிக்கையாக இருந்திருக்கிறது. ஒலிவ மலையின்மீது இரட்சகர் பிரிந்துசெல்லும்போது கொடுத்த “அவர் மறுபடியும் வருவார்” என்ற வாக்குத்தத்தம், துயரம் அணைத்து விடாமலும், சோதனை மங்கச்செய்யாமலும் இருக்கும்படியாக சீஷர்களின் எதிர்காலத்தைப் பிரகாசமாக்கி, அவர்களது இருதயங்களை மகிழ்ச்சியாலும் நம்பிக்கையாலும் நிரப்பினது. பாடுகளுக்கும் உபத்திரவங்களுக்கும் இடையில் “மகா தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் மகிமையின் பிரசன்னமாகுதல்” அவர்களது பாக்கியமான நம்பிக்கையாயிருந்தது. கர்த்தருடைய வருகையைக் காண்பதற்கு உயிருடன் இருப்பார்கள் என்று நம்பியிருந்த பிரியமானவர்களை கல்லறைகளில் வைத்ததால் துயரடைந்திருந்த தெசலோனிக்கேயாவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர்களது ஆசிரியரான பவுல் இரட்சகரின் வருகையின்போது நிகழ இருக்கும் உயிர்த்தெழுதலை “இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்” (1 தெசலோனிக்கேயர் 4:16–18) என்று சுட்டிக்காட்டினார். (9)

பத்முவின் பாறைகளில் கைதியாயிருந்த அன்பான சீடன்: “இதோ, நான் சீக்கிரமாய் வருகிறேன்” என்ற வாக்குத்தத்தத்தைக் கேட்டார். “கர்த்தராகிய இயேசுவே, வாரும்” (வெளிப்படுத்தல் 22:20) என்று அவன் ஏக்கத்துடன் கூறிய பதில் யுகங்கள் நெடுகிலும் பரலோகப் பயணத்தில் இருக்கிற சபையின் ஜெபக்குரலாக இருக்கிறது. (10)

பரிசுத்தவான்களும் இரத்தசாட்சிகளும் சத்தியத்திற்குச் சாட்சிபகர்ந்திருந்த இருட்டறை, கட்டப்பட்டு எரிக்கப்பட்ட கம்பம், கழுமரம் ஆகிய இடங்களில் இருந்து நூற்றாண்டுகளாக அவர்களது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் குறித்த வார்த்தைகள் வருகின்றன. ஒரு கிறிஸ்தவர்: “கிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலின் நிச்சயத்தை உடையவர்களாய், அதன் பலனாக அவரது வருகையில் தங்களுடைய உயிர்த்தெழுதலில் நிச்சயத்தைக்கொண்டிருந்த காரணத்தால், அவர்கள் மரணத்திற்கு மேற்பட்டவர்களாக இருந்து, மரணத்தை நிந்தித்தனர்” என்கிறார்.—Daniel T. Taylor,The Reign of Christ on Earth: or,The Voice of the Church in All Ages, page 33. சுதந்திரமடைந்தவர்களாக எழும்புவதற்கு ஏதுவாக அவர்கள் கல்லறைக்குள் செல்ல விருப்பமுள்ளவர்களாக இருந்தனர்.—Ibid., page 54. கர்த்தர் தமது பிதாவின் மகிமையுடன் வானத்தின் மேகங்களின்மீது தமது இராஜ்யத்தைக் கொண்டுவரும் காலத்தை அவர்கள் எதிர்பார்த்து இருந்தனர். வால்டென்னியர்கள் இதே விசுவாசத்தைப் பேணியிருந்தனர்.—Ibid., pages 129-132. மீட்பரின் வருகை சபையின் நம்பிக்கையாக இருக்கிறதென்று விக்ளிப் அதை எதிர்பார்த்தார்.—Ibid., pages 132-134. (11)

“நியாயத்தீர்ப்பின் நாள் நிகழ்வதற்கு, முந்நூறு வருடங்களுக்கு மேல் செல்லாது” என்று என்னை நானே தேற்றிக்கொள்கிறேன். “இந்தத் துன்மார்க்கமான உலகம் அதற்குமேல் நீடித்திருப்பதை தேவன் அனுமதிக்க மாட்டார் அவரால் அனுமதிக்கவும் முடியாது. அருவருப்பு களின் இராஜ்யம் நிச்சயமாகக் கவிழ்க்கப்படும். அந்தப் பெரியநாள் சமீபித்துக்கொண்டிருக்கிறது” என்று லுத்தர் அறிவித்தார்.—Ibid., pages 158, 134. (12)

“வயதான இந்த உலகம் அதன் முடிவிற்கு வெகுதூரத்தில் இல்லை” என்று மெலாங்தன் கூறினார். “சகல நிகழ்ச்சிகளிலும் மிகவும் மங்களகர மானதாக இருக்கும் கிறிஸ்துவின் வருகையின் நாளை, தயக்கமின்றி, ஆர்வத்துடன் கிறிஸ்தவர்கள் வாஞ்சிக்கவேண்டும்” என்று கால்வின் அழைத்து, “அந்த நாளை விசுவாசக் குடும்பம் முழுவதும் பார்வையில் வைக்கவேண்டும். நமது கர்த்தர் அவரது இராஜ்யத்தின் மகிமையைப் பூரணமாக வெளிக்காட்டும் அந்தப் பெரிய நாள் உதயமாகும்வரை,

நாம் கிறிஸ்துவின்மீது ஏக்கம்கொண்டவர்களாக இருந்து, அதைத் தியானிக்கவேண்டும்” என்று கூறுகிறார்.—Ibid., pages 158,134. (13)

ஸ்காட்லாந்து சீர்திருத்தக்காரரான நாக்ஸ்: “நமது கர்த்தராகிய இயேசு நமது மாமிசத்தைப் பரலோகத்திற்குள் கொண்டுசெல்ல வில்லையா? அவர் திரும்ப வரமாட்டாரா? அவர் வருவார். மிக விரைவில் திரும்பவருவார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்” என்று கூறினார். சத்தியத்திற்காகத் தங்கள் உயிரை இழந்த ரிட்லியும், லாட்டிமரும், கர்த்தரின் வருகையை விசுவாசத்துடன் நோக்கி இருந்தனர். “இந்த உலகம், ‘நான் இதை நம்புகிறேன். எனவே சொல்லுகிறேன்’ சந்தேகத்திற்கிடமின்றி அதன் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. தேவனுடைய ஊழியக்காரரான யோவானுடன் சேர்ந்து, இரட்சகராயிருக்கும் கிறிஸ்துவை நோக்கி: ‘கர்த்தராகிய இயேசுவே வாரும்’ என்று நமது இருதயங்களில் கூறுவோமாக” என்று ரிட்லி எழுதினார்.—Ibid., pages 151,145. (14)

“கர்த்தரின் வருகையைக் குறித்த எண்ணங்கள் எனக்கு மிகவும் இனிமையாகவும், மகிழ்ச்சிமிக்கதாகவும் இருக்கிறது” என்று பாக்ஸ்டர் கூறினார்.—Richard Baxter, Works, vol. 17, p. 555. “அவரது வருகையை நேசிப்பதும், அந்த நம்பிக்கையை நோக்கி இருப்பதும் பரிசுத்தவான்களின் குணமும் விசுவாசத்தின் செய்கையுமாயிருக்கிறது.” “உயிர்த்தெழுதலின்போது அழிக்கப்பட உள்ள கடைசி எதிரி மரணமாக இருக்குமானால், இந்தப் பூரணமும் இறுதியுமான வெற்றியை அடையும் நேரமாகிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக விசுவாசிகள் எவ்வளவு ஏங்கியிருந்து ஜெபிக்கவேண்டும்.”—Ibid., vol. 17, p. 500. “சகல விசுவாசிகளும் அவர்களது மீட்பின் சாதனையாகவும், ஆத்துமாக்களின் அனைத்து வாஞ்சைகளாகவும் முயற்சிகளாகவும் நம்பி, ஏங்கி, காத்திருக்கவேண்டிய நாள் இதுதான்.” “இந்த நாளை விரைவுபடுத்தும் ஆண்டவரே” என்பதுதான் அப்போஸ்தல சபையின் வனாந்தரத்திலிருந்த சபையின் சீர்திருத்தக் காரர்களின் நம்பிக்கையாக இருந்தது.—Ibid., vol. 17, pp. 182, 183. (15)

தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் வருகையின் விதத்தைப்பற்றி மட்டும் முன்னுரைப்பதோடல்லாமல், அது எவ்வளவு சமீபமாக இருக்கிறது என்பதை மனிதர்கள் அறிந்துகொள்ளவேண்டிய அடையாளங்களையும் முன்வைக்கிறது. “சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்;... பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்”–லூக்கா 21:25. “அந்நாட்களிலே, அந்த உபத்திரவத்திற்குப் பின்பு, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்; வானத்தின் நட்சத்திரங்கள் விழும்,

வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும். அப்பொழுது மனுஷ குமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள்”–மாற்கு 13:24–26. இரண்டாம் வருகைக்குமுன், நிகழ உள்ள அடையாளங்களில் முதலாவதை, வெளிப்படுத்தின விசேஷ க்காரர்: “பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று” (வெளிப்படுத்தல் 6:12) என்று விவரிக்கிறார். (16)

இந்த அடையாளங்கள் 19–ம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்னரே சாட்சியாகக் காணப்பட்டன. இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக, கி.பி.1755–ல் இதுவரை பதிவாகியுள்ள பூகம்பங்களில் மிகவும் பயங்கரமான பூமி அதிர்ச்சி நிகழ்ந்தது. பொதுவாக “லிஸ்பன் பூமி அதிர்ச்சி” என்று அறியப்பட்டிருந்தபோதிலும், அது ஐரோப்பாவின் பெரும்பகுதியிலும், ஆப்பிரிக்கா, அமெரிக்க வரையிலும் பரவியது. கிரீன்லாந்து, வெஸ்ட் இண்டீஸ், மடேரிய தீவுகள், நார்வே, சுவீடன், பிரிட்டன், அயர்லாந்து ஆகிய இடங்களிலும் ஊடுருவியது. ஏறத்தாழ நாற்பது லட்சம் சதுரமைல் பரப்பளவை அது பாதித்தது. ஐரோப்பாவில் இருந்ததைப் போலவே ஏறத்தாழ ஆப்பிரிக்காவிலும் அதன் அதிர்ச்சி இருந்தது. அல்ஜியர்சின் ஒரு பெரும்பகுதி அழிந்தது. மொரோக்கோ விற்குச் சற்று தொலைவில், எட்டு முதல் பத்தாயிரம் மக்கள் குடியிருந்த ஒரு கிராமம் அப்படியே விழுங்கப்பட்டது. ஒரு இராட்சத அலை ஸ்பெயின், ஆப்பிரிக்கா, ஆகிய நாடுகளின் கடற்கரையில் அடித்து, நகரங்களைச் சூழ்ந்து பெரும் அழிவை உண்டாக்கியது. (17)

ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய இடங்களில்தான் அதன் கடுமை மிக அதிகமாக வெளிக்காட்டப்பட்டது. காதிஸ் என்னுமிடத்தில் மோதிய அலையின் உயரம் அறுபது அடியாக இருந்ததென்று சொல்லப்பட்டது. போர்ச்சுக்கல்லின் பெரிய மலைகளில் சில “அஸ்திவாரத்திலிருந்தே அசைவது போல பயங்கரமாக, சடிதியாக ஆடின.” அதிசயமான விதத்தில் சில சிகரங்கள் உச்சிமுதல் அடிவரையிலும் இரண்டாகப் பிளவுண்டன. பெரும் பாறைகள், அருகில் இருந்த பள்ளத்தாக்குகளுக்கு வீசி எறியப்பட்டன. இந்த மலைகளில் இருந்து தீக்கதிர்கள் உண்டாயின என்றும் கூறப்பட்டது.— Sir Charles Lyell,Principles of Geology,page 495. (18)

லிஸ்பனில் பூமிக்கடியில் ஒரு இடிமுழக்கம் கேட்டது. அதைத் தொடர்ந்து உடனே பயங்கரமான அதிர்ச்சி அந்த நகரின் பெரும் பகுதியை கவிழச்செய்தது. சுமார் ஆறு நிமிடங்களில் ஏறத்தாழ அறுபதினாயிரம்பேர் மாண்டனர். முதலில், கடல்நீர் அதன் வெட்டாந் தரையைக் காட்டும்

விதத்தில் கடலுக்குள்ளாகப் பின்நோக்கிச் சென்று, அதன்பின் சாதாரணமாக வீசும் அலைகளின் உயரத்தைவிட, ஐம்பத்தைந்து அடி உயரத்திற்கு எழுந்தது. லிஸ்பனில் உண்டான அழிவின் மிக அசாதாரணமான சூழ்நிலை என்னவெனில் மிகுந்த செலவில், முழுவதும் சலவைக் கற்களினால் கட்டப்பட்டிருந்த ஒரு புதியமேடை நீரில் அமிழ்ந்துபோயிற்று. அழிவுண்டாகாமல் பாதுகாப்பாக இருக்கலாம் என்று திரள்கூட்டத்தினர் அங்கு கூடியிருந்தனர். ஆனால் திடீரென்று அந்த மேடை அதன்மீதிருந்த மனிதர்களுடன் நீருக்குள் மூழ்கியது. அங்கிருந்தவர்களில் ஒருவரது உடல்கூட நீர்மட்டத்தில் மிதக்கவில்லை!—Ibid., page 495. (19)

“அந்த பூமி அதிர்ச்சியைத் தொடர்ந்து ஆலயங்களும், மடங்களும், ஏறத்தாழப் எல்லாப் பெரிய கட்டிடங்களும், மொத்த வீடுகளில் கால்பகுதியும் விழுந்தன. அதற்கு இரண்டு மணிநேரத்திற்குப் பின் பல இடங்களிலும் நெருப்புபற்றி, ஏறத்தாழ மூன்று நாட்கள் மிகுந்த உக்கிரத்துடன் எரிந்தது. அந்த நகரம் முற்றிலும் அழிந்துபோயிற்று. ஆலயங்களிலும் மடங்களிலும் மக்கள் நிறைந்திருந்த ஒரு பரிசுத்த நாளில் அந்தப் பூமி அதிர்ச்சி நிகழ்ந்ததால், அவர்களில் மிகச் சிலரே தப்பினர்.—Encyclopedia Americana, art. “Lisbon,” note (ed. 1831). (20)

மக்களின் திகில் வர்ணனைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. ஒருவரும் அழவில்லை. அது அழுகைக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. அவர்கள் கட்டுக்கடங்காத திகிலுடனும் மலைப்புடனும் தங்களது முகத்திலும் மார்பிலும் அடித்தவர்களாக ‘உலகத்திற்கு முடிவு வந்துவிட்டது’ என்று கூறிக்கொண்டு, அங்கு மிங்கும் ஓடினர். தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை மறந்து, சிலுவையிலறையப்பட்ட இயேசுவின் சொரூபங்களைச் சுமந்துகொண்டு ஓடினர். துரதிர்ஷ்டவசமாக அநேகர் பாதுகாப்புக்காக ஆலயங்களுக்குள் ஓடினர். ஆனால் நற்கருணை வீணாகக் காட்டப்பட்டுக்கொண்டிருந்தது. (ரோமன் கத்தோலிக்க குருமார்கள் ஏறெடுக்கும் அப்பத்திற்குள் கர்த்தர் தமது சரீரத்துடனும் இரத்தத்துடனும் எழுந்தருளி வருகிறார் என்பது கத்தோலிக்கமார்க்கத்தின் பொய்ப் போதகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட அப்பத்தையும், துணிக்கைகளையும் அவர்கள் நற்கருணை என்று அழைக்கின்றனர். அவர்களது சில விசேஷமான சமயச்சடங்குகளின் போது, திருப்பலிப் பூசைசெய்யும் பீடத்தின்மீதோ அல்லது உயரமான வேறு இடத்திலோ சூரியனும், சிலுவையும் கலந்த வடிவிலான ஒரு பொன் முலாம் பூசப்பட்ட அழகிய கவர்ச்சிமிக்க கூட்டின் நடுவில், வெளியில் நன்கு தெரியக்கூடிய, பெரிய அளவுள்ள ஒரு அப்பம் வைக்கப்பட்டு, ஆராதிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட ஆராதனையின் நடுவில், குருவானவர் அதனை உயர்த்திப்பிடித்து,

மக்களுக்குக் காண்பித்து, அதனாலேயே அவர்களை ஆசீர்வதிப்பார். இச்சடங்கு நற்கருணை ஆராதனை என்னப்படுகிறது). பரிதாபத்திற்குரிய மக்கள் வீணாகவே திருப்பலியின் பீடங்களைப் பற்றிக்கொண்டிருந்தனர். சிலைகளும் குருமார்களும் மக்களுமாக அனைவரும் ஒரு பொதுவான அழிவால் புதையுண்டனர். அந்தநாளின் சாவில் தொண்ணூராயிரம் பேர் மடிந்திருப்பார்கள் என்று எண்ணப்படுகிறது! (21)

தீர்க்கதரிசனத்தில் சூரியனும் சந்திரனும் இருளடைவதற்கு அடுத்ததாக குறிப்பிடப்பட்டிருந்த அடையாளம், இருபத்தைந்து வருடங்களுக்குப்பின்பு நிகழ்ந்தது. ஆச்சரியப்படத்தக்கது என்னவெனில், அது நிறைவேறும் காலம் மிகக்குறிப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இரட்சகர் ஒலிவமலையின் மீதிருந்து, அவரது சீடர்களுடன் நிகழ்த்திய அந்த உரையாடலில், சபைக்குப் போப்புமார்க்கத்தினால் உண்டாக இருக்கிற, அதே சமயம் குறைக்கப்படும் என்றும் அவர் வாக்குத்தத்தம் செய்திருந்த 1260 வருட நீண்டகால உபத்திரவத்தைப் பற்றி விவரித்தபிறகு, அவரது வருகைக்கு முன் நிகழக்கூடிய குறிப்பான சம்பவங்களைக் குறிப்பிட்டு, அதிலுள்ள முதலாவது அடையாளம் காணப்படும் நேரத்தையும் குறிப்பிட்டார். "அந்நாட்களிலே, அந்த உபத்திரவத்திற்குப் பின்பு, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்"—மாற்கு 13:24. 1260 வருடங்கள் கி.பி.1798—ல் முடிவடைந்தன. அதற்கு இருபத்தைந்து வருடங்களுக்குமுன், உபத்திரவம் ஏறத்தாழ முற்றிலுமாக நின்றிருந்தது. கிறிஸ்துவின் வார்த்தையின்படி இந்த இரண்டு காலக்கட்டங்களுக்கு இடையில் சூரியன் இருளடையவேண்டும்! 1780—ம் வருடம் மேமாதம் 19—ம் நாள் இந்தத் தீர்க்கதரிசனமும் நிறைவேறியது. (22)

ஒட்டுமொத்தமாக இல்லாவிட்டாலும், ஏறத்தாழ இதுவரை விளக்கம் கொடுக்கப்படாத ஒரு புதிரான காட்சியாக இருண்ட நாளான 1780—ம் வருடம் மே மாதம், 19—ம் நாள் இருக்கிறது. காரணம் காட்டப்படமுடியாத விதத்தில், புதிய இங்கிலாந்தில் கண்ணுக்கெட்டக் கூடிய வானவீதி முழுவதும் இருளடைந்திருந்தது.—R. M. Devens, Our First Century, page 89. (23)

மசாசூசெட் என்னும் இடத்தில் வசித்து இதை நேரில் கண்ட ஒருவர் இப்படியாக கூறுகிறார்: (24)

"காலையில் சூரியன் உதயம் தெளிவாக இருந்தது. ஆனால் விரைவில் மந்தாரமாக மாறிற்று. மேகங்கள் கீழிறங்கின. பயங்கரமாக கருத்திருந்த அம்மேகங்களிலிருந்து மின்னல்கள் மின்னின. இடி முழங்கிற்று. மழை பெய்தது. ஒன்பது மணியவில் மேகங்கள் மெலிந்து வெண்கல அல்லது செப்பு நிறம்போல தோன்றின. பூமி, பாறைகள், மரங்கள், கட்டிடங்கள்,

தண்ணீர் மற்றும் மனிதர்கள் அனைத்தும் பூமிக்கு அந்நியமான ஒளியால் மாற்றப்பட்டன. சில நிமிடங்களுக்குப் பிறகு ஒரு கனத்த கார்மேகம், அடிவானத்திலிருந்த ஒரு மெல்லிய கோட்டைத் தவிர முழு வானத்தையும் மூடிற்று. கோடை இரவு ஒன்பது மணியளவிலிருக்கும் இருளைப்போன்று வானம் இருளாயிருந்தது....” (25)

“பயமும் பதட்டமும் பிரம்மிப்பும் மக்களின் மனதை மெல்ல நிரப்பியது. பெண்கள் கதவருகே நின்று இருள்பரம்பிய நிலப்பரப்பை பார்த்தனர். ஆண்கள் வயல்களிலிருந்து வேலையைவிட்டுத் திரும்பினர். தச்சன் தனது கருவிகளையும் கொல்லன் தனது உலையையும் வியாபாரி தனது கடையையும் விட்டுத் திரும்பினர். பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன. பிள்ளைகள் நடுக்கத்துடன் வீடு நோக்கி விரைந்தனர். பயணிகள் அருகிலிருந்து பண்ணைவீடுகளில் குடியேறினர். ‘என்ன வருகிறது?’ என்று ஒவ்வொரு உதடும் இதயமும் கேள்வி எழுப்பிற்று. சூறாவளி ஒன்று நிலத்தை இடிப்பதுபோன்று இருந்தது. அல்லது எல்லாம் முடிவுக்கு வருவதுபோலத் தோன்றியது.” (26)

“மெழுகுவர்த்திகள் கொளுத்தப்பட்டன. அடுப்புக்களில் நெருப்பு இலையுதிர் காலத்தின் நிலவற்ற இரவில் எரிவதுபோல வெளிச்சமாக எரிந்தது.... கோழிகள் கூடுகளுக்குத் திரும்பின. மந்தைகள் முன்னனை களுக்குத் திரும்பி கதறின. தவளைகள் ஒலி எழுப்பின. பறவைகள் மாலை பாடல்களைப் பாடின. வெளவால்கள் பறக்கத் துவங்கின. ஆனால் இரவு இன்னும் வந்தாகவில்லை என்று மனிதன் அறிந்திருந்தான்....” (27)

“சாலேமிலிருந்த கூடார சபை போதகர் டாக்டர் நத்தானியேல் வைட்டேகர்: ஆராதனை வீட்டில் மத ஆராதனை நடத்தினார். இந்த இருள் இயற்கைக்கு அப்பாற்பட்டது என்று பிரசங்கத்தில் குறிப்பிட்டார். பல இடங்களில் சபைகள் கூடின. அவசரப் பிரசங்கங்களின் மைய வசனங்கள் வேத வாக்கியங்களின் தீர்க்கதரிசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இருள்தான் இது என்று குறிப்பிட்டன.... பதினோரு மணிக்கு சற்றுபின் இருள் அடர்த்தி உச்சத்தில் இருந்தது.”—The Essex Antiquarian, April, 1899, vol. 3, No. 4, pp. 53, 54. “நாட்டின் அதிகப்படியான இடங்களில் இருள் மிகுந்திருந்ததால் விளக்கின் ஒளியில்லாமல் மக்களால் சாப்பிடவோ வேலை செய்யவோ அல்லது கை கடிகாரத்திலிருந்தும் சுவர் கடிகாரத்திலிருந்தும் மணிக்கணக்கைக் காணவோ கூடாதிருந்தது....” (28)

“இவ்விருளின் பரப்பளவு விசித்திரமாயிருந்தது. கிழக்கில் பால்மவுதிலிருந்து காணப்பட்டது. மேற்கில் கனக்டிகட்-ன் தூர பகுதிவரையும் அல்பானி வரையும் இருந்தது. தெற்கில் கடல் எல்லைவரை இருந்தது.

வடக்கில் அமெரிக்க குடியிருப்புவரை இருந்தது.—William Gordon,History of the Rise,Progress,and Establishment of the Independence of the U.S.A.,vol. 3, p. 57. (29)

அந்த நாளின் கடுமையான இருள் மாலைவேளைக்கு ஒன்று அல்லது இரண்டு மணிநேரத்திற்குமுன் பாதி தெளிந்தது. கனத்த மேகமூட்டத்தினால் மறைக்கப்பட்டிருந்தபோதிலும் சூரியன் காணப்பட்டது. ஆனால் அந்த இடைவேளையைத் தொடர்ந்து மிக அடர்த்தியான இருள் உண்டாயிற்று. அந்நாளின் பகலின் பயங்கரத்தையும் அசாத்தியத்தையும் விட அது சற்றும் குறைந்திருக்கவில்லை. அன்று இரவு முழு நிலவு இருந்திருந்தபோதிலும் செயற்கை ஒளி இல்லாமல் எந்த பொருளையும் காணமுடியவில்லை. தூரத்திலிருந்த வீடுகளிலும் இடங்களிலுமிருந்து பார்த்தபோது, அது ஒருவிதத்தில் எகிப்திய இருளைப்போன்றே இருந்தது. அது இருளின் கருமை என்று கூறப்பட்டது.—Isaiah Thomas,Massachusetts Spy; or,American Oracle of Liberty,vol. 10, No. 472 (May 25,1780). அந்தக் காட்சியைக் கண்ணாரக்கண்ட ஒரு சாட்சி: “அந்த நேரத்தில் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு ஒளிதரும்பொருளும் கடக்கமுடியாத இருளினால் போர்த்துக் கொள்ளப்பட்டுவிட்டதா? அல்ல இல்லாமலாகிவிட்டதா? என்பதை நிதானிக்க முடியவில்லை” என்றார். அந்த இரவில் நிலவு முழுநிலவாக எழுந்தபோதிலும், மரணத்தைப் போன்ற நிழலை நீக்க அதற்கு வலிமை இல்லாதிருந்தது.—Letter by Dr. Samuel Tenney,of Exeter,New Hampshire,December,1785 (in Massachusetts Historical Society Collections,1792,1st series,vol. 1, p. 97). ஒன்பது மணியளவில் நிலவு காணப்பட்டபோதும் மரணத்தைப் போன்ற இருளை விலக்குவதற்கு அதனால் இயலவில்லை. நடு இரவிற்குப்பின் இருள் மறைந்தது நிலவு முதலில் தோன்றியபோது இரத்தத்தைப்போன்ற தோற்றத்தில் இருந்தது. (30)

விட்டியர் என்ற கவிஞர் அந்த நினைவு நாளைக்குறித்து இவ்வாறு எழுதுகிறார்: (31)

“1780–ம் வருடத்தின் மேதினம் அது. வசந்தகாலத்தின் இனிமையின்மேலும், மலர்ச்சியின்மேலும், புத்துயிர் பெற்றிருந்த பூமியின்மேலும், மதிய வானின்மேலும் பயங்கர இருளின் பயம் விழுந்தது. ஆண்கள் ஜெபிக்க, பெண்கள் அழ, இருண்ட வானத்தை சிதறடிக்கும்—முடிவை அறிவிக்கும் எக்காள தொனியைக் கேட்க காதுகள் கூர்மையடைந்தன.” (32)

வரலாற்றில் 1780–ம் வருடம், மே மாதம் 19–ம் தேதி “இருண்ட நாள்” என்றழைக்கப்படுகிறது. மோசேயின் காலத்திலிருந்து அதற்குச் சமமான அடர்த்தி, விசாலம், கால அளவோடு கூடிய இருட்டான நேரம் ஒருபோதும்

பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. கவிஞர்கள் சரித்திர எழுத்தாளர்கள் கொடுத்திருக்கும் விளக்கங்கள், அவைகளின் நிறைவேறுதலுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன், “கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்” (யோவேல் 2:31) என்று யோவேல் தீர்க்கதரிசியினால் எழுதப்பட்ட வார்த்தைகளின் எதிரொலியே. (33)

கிறிஸ்து அவரது மக்களிடம் அவரது வருகையின் அடையாளங்களைக் கவனித்திருக்கும்படி அழைத்து, வரப்போகும் அவர்களது அரசரின் வருகைக்கான அடையாளங்களைக்கண்டு சந்தோஷப்படும்படி கூறி யிருந்தார். “இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார்.” (லூக்கா 21:28). இயேசு வசந்தகாலத்தில் துளிர்த்துக்கொண்டிருந்த மரங்களைச் சுட்டிக்காட்டி, “அவைகள் துளிர்க் கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள். அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்” (லூக்கா 21:30,31) என்றார். (34)

ஆனால் சபையில் தாழ்மையின் ஆவியும் பக்தியும் இருந்த இடத்தை, அகந்தையும் சம்பிரதாயமும் பற்றிக்கொண்டபோது, கிறிஸ்துவின்மீதுள்ள அன்பும், அவரது வருகையின்மீதான விசுவாசமும் குளிர்ந்துபோயிற்று. உலகப்பிரகாரமாக இருப்பதிலும் இன்பங்களைத் தேடுவதிலும் மூழ்கி, தேவனுடைய மக்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இரட்சகருடைய வருகையின் அடையாளங்களைப்பற்றிய போதனைகளுக்குக் குருடர்களாக இருந்தனர். இரண்டாம் வருகையின் கோட்பாடு அலட்சியப்படுத்தப்பட்டிருந்தது. அது சம்பந்தப்பட்ட வேதவாக்கியங்கள் பெருமளவிற்கு தவிர்க்கப்பட்டு, மறக்கப்படும்வரை தவறான விளக்கங்களினால் மறைக்கப்பட்டிருந்தது. குறிப்பாக, அமெரிக்க சபைகளில் இந்தநிலை இருந்தது. சமுதாயத்திலிருந்த சகல வகுப்பினரும் அனுபவித்திருந்த சுதந்திரமும் வசதிகளும், சொத்துக்கள் ஆடம்பரங்களின் மீதிருந்த மோகமும், பணம் சம்பாதிப்பதற்கான வழி வகைகளைக் காணும் நாட்டமும், அனைவருக்கும் எட்டும் தூரத்தில் இருப்பதுபோல் காணப்பட்ட புகழ் வல்லமைகளைத் தேடி விரையும் ஆவலும், தங்களது விருப்பங்களையும் நம்பிக்கையையும் இந்த வாழ்க்கைக்குரிய வைகளில் வைக்கும்படி நடத்தி, வெகு தூரத்திலுள்ள ஒரு நாளுக்கு, இந்த வாழ்க்கையின் பக்திவிநயமான முடிவு நாளை தள்ளி வைத்தது. (35)

இரட்சகர் தமது இரண்டாம் வருகையின் அடையாளங்களை தமது அடியார்களுக்குச் சுட்டிக்காட்டியபோது, அவரது வருகைக்குச் சற்றுமுன்

இருக்கக்கூடிய பின்னிட்டு விழுதலின் நிலையை முன்னுரைத்தார். உலக தொழில்களின் வேகமும், இன்பமும் தேடுதலும், வாங்குதலும் விற்றலும், நடுதலும், கட்டுதலும், பெண்கொடுத்தலும் பெண் கொள்ளுதலும், தேவனையும் எதிர்கால நித்திய வாழ்க்கையையும் மறுத்தலும் நோவாவின் காலத்தில் இருந்ததைப்போலவே இருக்கும் என்றார். இந்தக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு கிறிஸ்துவின் எச்சரிப்பு: "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும். ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" என்பதே—லூக்கா 21:34–36. (36)

இந்தக்காலக்கட்டத்தில் சபையின் நிலைமையைப்பற்றி வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள இரட்சகரின் வார்த்தைகள்: "நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்" – வெளிப்படுத்தல் 3:1. தங்களின் கவலையற்ற பாதுகாப்பிலிருந்து விழித்தெழ மறுப்பவர்களுக்கு பக்திவிநயமான இந்த எச்சரிப்பு: "நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்"– வெளிப்படுத்தல் 3:3. (37)

தவணையின் காலத்தின் முடிவிலுள்ள பக்திவிநயமான சம்பவங்களுக்கென்று ஆயத்தமாகும்படி, வரவிருக்கும் ஆபத்தை உணரும்படி மனிதர்களை விழிக்கச்செய்வது அவசியமாக இருந்தது. "கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிக்கிறவன் யார்?" "தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே; பின்னை துரோகிகளை நீர் நோக்கிக் கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன் தன்னைப்பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன?"—யோவேல் 2:11 ஆபகூக் 1:13. "எங்கள் தேவனே, உம்மை அறிந்திருக்கிறோம்" என்று சொல்லி "அவர்கள் என் உடன்படிக்கையை மீறி, என் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகத் துரோகம்பண்ணினபடியினால்"—ஓசியா 8:2. "அந்நியதேவனை நாடிப் பின்பற்றினார்கள்"—சங்கீதம் 16:4. தங்கள் இருதயங்களில் அக்கிரமத்தை மறைத்துவைத்து, அநீதியின் பாதைகளின்மீது பிரியமாயிருப்பவர்களுக்கு,

கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல், இருளும் பிரகாசமற்ற அந்தகாரமுமாயிருக்குமல்லவோ?"–ஆமோஸ் 5:20. "அக்காலத்திலே நான் எருசலேமை விளக்குக்கொளுத்திச் சோதித்து, வண்டல்போல குழம்பியிருக்கிறவர்களும், கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை தீமைசெய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரைத் தண்டிப்பேன்" (செப்பனியா 1:12) என்பது அப்பொழுது நடைபெறும். "பாவத்தினிமித்தம் உலகத்தையும், அக்கிரமத்தினிமித்தம் துன்மார்க்கரையும் நான் தண்டித்து, அகங்காரரின் பெருமையை ஒழியப்பண்ணி, கொடியரின் இடும்பைத் தாழ்த்துவேன்"– ஏசாயா 13:11. "கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம்பண்ணுவார். அவர்களுடைய ஆஸ்தி கொள்ளையாகும்; அவர்களுடைய வீடுகள் பாழாய்ப்போகும்" (செப். 1:18,13) என்று தேவனுடைய தீர்க்கதரிசிகள் அறிவிக்கின்றனர். (38)

பயங்கரமான இந்தக் காலத்தைப் பார்த்த எரேமியா தீர்க்கதரிசி திகைத்து, "என் குடல்கள், என் குடல்களே நோகிறது; என் உள்ளம் வேதனைப்படுகிறது, என் இருதயம் என்னில் கதறுகிறது; நான் பேசாமல் அமர்ந்திருக்கக்கூடாது; என் ஆத்துமாவே, எக்காளத்தின் சத்தத்தையும், யுத்தத்தின் ஆர்ப்பரிப்பையும் கேட்டாயே. நாசத்துக்குமேல் நாசம் வருகிறதாகக் கூறப்படுகிறது; தேசமெல்லாம் பாழாகிறது; அசுப்பிலே என் கூடாரங்களும், ஒரு நிமிஷத்திலே என் திரைகளும் பாழாக்கப்படுகிறது" (எரேமியா 4:19,20) என்று கூறினார். (39)

"அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள். அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள்"–செப். 1:15,16. "இதோ, தேசத்தைப் பாழாக்கி, அதின் பாவிகளை அதிலிருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது"–ஏசாயா 13:9. (40)

அந்த மகத்தான நாளைக்குறித்து, தேவனுடைய மக்கள் அவர்களது ஆவிக்குரிய சொரணையற்ற நிலையை விட்டொழிக்கவும், மனந்திரும்புதலுடனும் தாழ்மையுடனும் அவருடைய முகத்தைத் தேடவும், மிகவும் பக்திவிநயமாகவும் உள்ளத்தைத்தொடும் மொழி

மொழியிலும் தேவனுடைய வார்த்தையானது அழைக்கிறது. "சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின்

சத்தமிடுங்கள்; தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்; ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது, அது சமீபமாயிருக்கிறது." "சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக. கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது: கர்த்தாவே, நீர் உமது ஜனத்தைத் தப்பவிட்டுப் புறஜாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கு உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும்; உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக." "ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்"–யோவேல் 2:1,15–17,12,13. (41)

தேவனுடைய நாளில் நிற்பதற்கு ஒரு ஜனத்தை ஆயத்தம் செய்ய ஒரு பெரும் சீர்திருத்தம்செய்து முடிக்கப்படவேண்டியதாக இருந்தது. தங்களைத் தேவனுடையவர்கள் என்று கூறிக்கொண்டு இருக்கும் மக்களில் அநேகர் நித்தியகாலத்திற்கென்று கட்டுமானம் செய்யாதவர்களாக இருப்பதை தேவன் கண்டார். எனவே அவர் தமது இரக்கத்தினால் அவர்களுடைய மயக்கத்திலிருந்து அவர்களை எழுப்புவதற்காகவும், அவர்கள் கர்த்தருடைய வருகைக்கென்று ஆயத்தமாகும்படி நடத்தவும் ஒரு எச்சரிப்பின் தூதை அனுப்பி இருந்தார். (42)

இந்த எச்சரிப்பு வெளிப்படுத்தல் 14–ம் அதிகாரத்தில் காட்சிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இங்கே மூன்று வகையான தூதுகள், பரலோகவாசிகளால் அறிவிக்கப்படுவதுபோல் காட்டப்பட்டு, அதைத் தொடர்ந்து, பூமியை அறுவடை செய்ய மனுஷகுமாரன் வருவதாகவும் இருக்கிறது. இந்த எச்சரிப்புகள், சமீபித்துக்கொண்டிருக்கும் நியாயத்தீர்ப்பைப்பற்றி முதலாவது அறிவிக்கிறது. தீர்க்கதரிசி வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்ட தூதன், "பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப்

பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது: வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான்"– வெளிப்படுத்தல் 14:7. (43)

இந்தத் தூது, "நித்திய சுவிசேஷத்தின்" ஒரு பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுவிசேஷத்தை அறிவிக்கும் பணி தூதர்களிடம் ஒப்படைக்கப்படாமல், மனிதர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களின் இரட்சிப்பிற்கான இந்த மாபெரும் பணியை இயக்கும் வேலையில், தேவதூதர்கள் பொறுப்புள்ளவர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர். ஆனால் சுவிசேஷத்தை அறிவிக்கும் பணி, பூமியிலுள்ள கிறிஸ்துவின் ஊழியக்காரர்களால் செய்யப்படுகிறது. (44)

தேவஆவியின் தூண்டுதலுக்கும் அவரது வார்த்தைகளின் போதனைகளுக்கும் கீழ்ப்படிந்த விசுவாசமிக்க மனிதர்கள், இந்த எச்சரிப்பை உலகத்திற்கு அறிவிக்கவேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்திற்கும்" "பொழுது விடிந்து விடிவெள்ளி ... இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்திற்கும்" (2 பேதுரு 1:19) செவிசாய்த்திருந்தனர். மறைத்துவைக்கப்பட்டிருந்த பொக்கிஷங்கள் அனைத்தையும்விட, தேவனைக் குறித்த அறிவை, "அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது" (நீதி. 3:14) என்று அறிந்து, அதிகமாக தேடிக்கொண்டிருந்தனர். கர்த்தர் அவர்களுக்கு இராஜ்யத்தின் மேன்மையின் காரியங்களை வெளிப்படுத்தினார். "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்"– சங்கீதம் 25:14. (45)

சத்தியத்தைப் புரிந்துகொண்டு, அதை அறிவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சபையின் தலைவர்களை அல்ல. ஜெபத்துடனும் அக்கறையுடனும் வேதவாக்கியங்களை ஆராய்ந்திருந்த விசுவாசமிக்க காவல்காரர்களாக அவர்கள் இருந்திருந்தால், இரவின் நேரத்தை அறிந்திருப்பார்கள். நிகழ இருக்கின்ற சம்பவங்களை தீர்க்கதரிசனங்கள் அவர்களுக்குத் திறந்து காட்டியிருந்திருக்கும். அவர்கள் இந்தப் பதவியில் அமர்த்தப்படவில்லை. அந்தத் தூது வேறொரு வகுப்பினரால் கொடுக்கப்பட்டது. "இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்" (யோவான் 12:35) என்று இயேசு கூறினார். தேவன் கொடுத்திருக்கும் ஒளியிலிருந்து விலகிச் செல்லுபவர்கள் அல்லது அவர்கள் அடைந்துகொள்ளும் தூரத்தில் ஒளி இருக்கும்போது, அதைத் தேடாமல் அலட்சியம் செய்பவர்கள் இருளில்

விட்டுவிடப்படுகின்றனர். ஆனால் "என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்." (யோவான் 8:12). தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல் என்கிற ஒரே நோக்கத்தோடு, ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள ஒளியை வாஞ்சையுடன் கவனித்திருந்தவர்கள் எவர்களோ அவர்கள் அதிகமான ஒளியைப் பெறுவார்கள். அப்படிப்பட்ட ஒரு ஆத்துமாவை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த பரலோக ஒளியை உடைய ஏதாவதொரு நட்சத்திரம் அனுப்பிவைக்கப்படும். (46)

கிறிஸ்துவின் முதலாம் வருகையின் காலத்தில், தேவனுடைய கற்பனைகள் (ஜீவ வார்த்தைகள்) அந்தப் பரிசுத்த நகரத்திலிருந்த எந்த ஆசாரியர்களிடமும், வேதபாரகர்களிடமும் ஒப்புவிக்கப் பட்டிருந்ததோ, அவர்கள், வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த ஒருவரின் வருகைக்கான காலங்களின் அடையாளங்களை அறிந்து, அதை அறிவித்திருக்கவேண்டும். மீகாவின் தீர்க்கதரிசனம் இயேசு பிறக்கப்போகும் இடத்தைச் சுட்டிக்காட்டி யிருந்தது (மீகா 5:2). அவரது வருகையின் நேரத்தை தானியேல் குறிப்பிட்டிருந்தான். (தானி. 9:25). தேவன் இந்தத் தீர்க்கதரிசனங்களை யூதத் தலைவர்களிடம் ஒப்படைத்திருந்தார். மேசியாவின் வருகை சமீபமாக இருக்கிறது என்பதை அறியாதவர்களாக, அதை மக்களுக்கு அறிவிக்காமல் இருந்ததற்கு அவர்கள் சாக்குபோக்குக்கூறமுடியாதவர்களாக இருந்தனர். அவர்களுடைய அறியாமைக்கு, அவர்களது பாவகரமான அலட்சியம்தான் காரணமாக இருந்தது. கொலைசெய்யப்பட்ட தேவனுடைய தீர்க்கதரிசிகளுக்கு, யூதர்கள் நினைவுச்சின்னங்களைக் கட்டிக்கொண்டிருந்தனர். அதே நேரம் பூமியிலிருந்த பெரிய மனிதர்களை மதித்ததால் சாத்தானின் வேலைக்காரர்களுக்கு மரியாதை செலுத்திக் கொண்டிருந்தார்கள். மனிதர்களுக்கிடையில் தங்களுக்கு முக்கியமான இடமும் வல்லமையும் வேண்டுமென்ற ஆசைமிக்க குழப்பங்களில் மூழ்கி, பரலோக அரசரால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட யோசனை களையும் தெய்வீக மேன்மையைப்பற்றிய பார்வையையும் இழந்திருந்தார்கள். (47)

மனிதனின் இரட்சிப்பை நிறைவேற்ற தேவகுமாரன் வருகிற உலக வரலாற்றின் மிகப்பெரிய நிகழ்ச்சியை, அது நடைபெற இருக்கின்ற இடம், நேரம், சூழ்நிலைகள் ஆகிவைகளை இஸ்ரவேலின் தலைவர்கள் மிகுந்த ஆழமும் பக்தியுமிக்க வாஞ்சையுடன் ஆராய்ந்திருக்கவேண்டும். உலக மீட்பரை வரவேற்பவர்களில் முதல் நபர்களாக இருக்கவேண்டும் என்று மக்கள் அனைவரும் விழித்திருந்து காத்திருந்திருக்க வேண்டும். ஆனால் இதோ, நாசரேத்தின் குன்றுகளிலிருந்து, பெத்லகேம் ஊரின் கிழக்கு ஓரத்தைநோக்கி, அதன் இடுக்கமான தெருக்களின் வழியாக,

களைப்படைந்த பயணிகள் இருவர் இரவுநேரத்தில் தங்கி இளைப்பாற கிடைக்காத ஒரு இடத்தைத் தேடிச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களை ஏற்றுக்கொள்ள எந்தக் கதவும் திறக்கப்படவில்லை. துர்ப்பாக்கியமான ஒரு மாட்டுத்தொழுவத்தில் கடைசியாக தஞ்சம் புகுந்தனர். அங்குதான் உலகத்தின் இரட்சகர் பிறந்திருக்கிறார்! (48)

உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவனுடைய மகிமையில் அவரது குமாரன் பெற்றிருந்த மகிமையின் பங்கை பரலோக தூதர்கள் கண்டிருந்தனர். சகல மக்களுக்கும் மாபெரும் மகிழ்ச்சியைக் கொண்டுவரக்கூடிய அவரது வருகையை அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தனர். அதைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்தவர்களுக்கும், அதைப் பூமியின் குடிகளுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிப்பவர்களுக்கும், அந்த நற்செய்தியை எடுத்துச்செல்லும்படி தேவதூதர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மானிடத்தன்மையைத்தம்மீது ஏற்றுக்கொள்ளக்கிறிஸ்து கீழே இறங்கியிருந்தார். அவர் தமது ஆத்துமாவைப் பாவநிவாரண பலியாகச் செலுத்துவதற்கு, முடிவில்லாத ஆபத்தின் பாரத்தை சுமக்கவேண்டியிருந்தது. என்றாலும் அந்தத் தாழ்மையிலும் அவருக்குப் பொருத்தமான தன்மையில், மதிப்புடனும் மகிமையுடனும் உன்னதமானவருடைய குமாரன் மனிதர்களின்முன் தோன்றவேண்டும் என்று தேவதூதர்கள் வாஞ்சித்தனர். பூமியிலுள்ள பெரிய மனிதர்கள் அவரது வருகையை வரவேற்க இஸ்ரவேலின் தலைநகரில் கூடுவார்களா? அவரை எதிர்பார்த்திருக்கும் கூட்டத்தினருக்குமுன் அவர் வெளிப்படும்போது லேகியோன்களான தேவதூதர்கள் உடன் வருவார்களா? (49)

இயேசுவை வரவேற்க யாரெல்லாம் ஆயத்தமாக இருக்கின்றனர் என்பதைக் காண, ஒரு தேவதூதன் பூமிக்கு வருகிறான். ஆனால் எதிர்பார்ப்பின் அடையாளம் எதையும் அவனால் காண முடியவில்லை. மேசியாவின் வருகை சமீபமாக இருக்கிறது என்பதை அறிவிக்கும் துதியையோ வெற்றி முழக்கத்தையோ அவனால் கேட்கமுடியவில்லை. காலங்கள் நெடுகிலும் தெய்வீகப் பிரசன்னம் எங்கு வெளிக்காட்டப்பட்டிருந்ததோ, அந்தத் தெரிந்துகொள்ளப்பட்ட நகரத்தின்மீதும் ஆலயத்தின்மீதும் மேலாகப்பறந்து வட்டமிடுகிறான். ஆனால் இங்குங்கூட அதே வேற்றுமைதான் காணப்படுகிறது. ஆசாரியர்கள் தங்களுடைய ஆடம்பரத்திலும், அகந்தையிலும், மாசுள்ள பலிகளை ஆலயத்திற்குள் செலுத்திக்கொண்டிருக்கின்றனர். பரிசேயர்கள் உரத்த சத்தத்துடன் மக்களுக்குப் போதித்துக்கொண்டிருக்கின்றனர். அல்லது தெருக்களின் முனைகளில் நின்று, பெருமையான தங்கள் ஜெபங்களைக் கூறிக்கொண்டிருக் கின்றனர். பரலோகம் முழுவதையும் மகிழ்ச்சியால்

நிரப்பியிருக்கிற "மனிதர்களின் மீட்பர் பூமியில் தோன்றப்போகிறார்" என்ற ஆச்சரியமான உண்மையைப்பற்றி, அரண்மனைகளிலுள்ள அரசர்களும், தத்துவ சாஸ்திரிகளின் மன்றங்களிலும் ரபிமார்களின் பள்ளிகளிலும் உள்ள அனைவரும் எண்ணமற்றவர்களாக இருந்தனர்! (50)

கிறிஸ்து எதிர்பார்க்கப்படுகிறார் என்பதற்கான சான்று எதுவும் இருக்கவில்லை. ஜீவாதிபதியை வரவேற்பதற்கான எந்த ஆயத்தமும் இருக்கவில்லை. அந்த பரலோகத் தூதன் இந்த வெட்கமிக்க செய்தியுடன் பரலோகத்தை நோக்கித் திரும்பப்போகும்வேளையில், இரவுநேரத்தில் தங்கள் மந்தையைக் காவல்காத்துக்கொண்டிருந்த மேய்ப்பர்களின் ஒரு கூட்டம், வானத்தை அண்ணாந்து பார்த்து, மேசியா என்கிற ஒருவர் பூமிக்கு வரவிருப்பதைத் தியானித்து, உலக மீட்பரின்வருகைக்காக ஏங்கிக்கொண்டிருப்பதைக்கண்டான். பரலோகத்தின் தூதைப் பெற்றுக்கொள்ள இங்கே ஒரு கூட்டம் ஆயத்தமாக இருக்கிறது! மாபெரும் மகிழ்ச்சியின் செய்தியை அறிவித்துக்கொண்டு கர்த்தருடைய தூதன் திடீரெனத் தோன்றினான். வானுலக மகிமை அந்தப் பிரதேசம் முழுவதையும் நிரப்பியது. மகிழ்ச்சி மிக்க அந்தச்செய்தியை பரலோகத்திலிருக்கிற ஒரு தூதனால் மட்டும் கொண்டுவரமுடியாது என்பதுபோல், எண்ணிலடங்காத தூதர்களின் கூட்டம் வெளிப்பட்டு, மீட்கப்பட்ட சகல ஜாதிகளும் ஒரு நாளில் பாடக்கூடிய பாடலாகிய "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" (லூக்கா 2:14) என்ற பாடலைப்பாடி தேவனைத் துதித்தார்கள். (51)

ஓ! பெத்லகேமின் இந்தக் கதை எவ்வளவு ஆச்சரியமானதாக இருக்கிறது! நமது நம்பிக்கையின்மை, நமது அகந்தை, நமது சுயநிறைவு ஆகியவைகளை அது எப்படிக் கடிந்துகொள்ளுகிறது! நமது குற்றமுள்ள அலட்சியத்தினால், நாமும் காலங்களின் அடையாளங்களையும் அவர் நம்மைச் சந்திக்கும் நேரத்தையும் அறிந்துகொள்ளத் தவறிவிடாமல் எச்சரிக்கையாக இருக்கும்படி, அது நம்மை எவ்விதமாக எச்சரிக்கிறது! (52)

இயேசுவின் வருகையை கவனித்திருந்தவர்களை யுதேயாவின் குன்றுகளில்மட்டும், தாழ்மையான மேய்ப்பர்களுக்கிடையில் மட்டும் தேவதூதர்கள் காணவில்லை. அஞ்ஞானிகளின் தேசத்திலும் அவரை எதிர்பார்த்திருந்தவர்கள் இருந்தனர். அவரை எதிர்பார்த்திருந்த அந்த மனிதர்கள், ஞானமும், செல்வமும், மேன்மையுமிக்க கீழ்த்திசையின் தத்துவ சாஸ்திரிகளாக இருந்தனர். இயற்கையின் மாணவர்களாக இருந்த அந்த ஞானிகள், தேவனை அவரது கரத்தின் கிரியைகளில் கண்டிருந்தனர். "யாக்கோபிலிருந்து ஒரு நட்சத்திரம் உதிக்கும்" என்று எபிரெய

வேதவாக்கியங்களிலிருந்து அறிந்து, "இஸ்ரவேலுக்கு ஆறுதலாகவும், பூமியின் கடைசிபரியந்தம் ஜாதிகளுக்கு ஒளியாகவும் இரட்சிப்பாகவும்" இருக்கக்கூடியவரின் வருகைக்காக ஆர்வமிக்க வாஞ்சையுடன் அவர்கள் காத்திருந்தனர். அவர்கள் ஒளியைத்தேடினவர் களாக இருந்ததினால், தேவ சிங்காசனத்திலிருந்து ஒளி அவர்களது கால்களின் பாதைக்கு வெளிச்சம் தந்தது. சத்தியத்தின் பாதுகாவலர்களாகவும், அதற்கு விளக்கம் கொடுப்பவர்களாகவும் இருக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருந்த எருசலேமின் ஆசாரியர்களும் ரபிமார்களும் இருளால் மூடப்பட்டிருந்தபோது, பரலோகம் அனுப்பிய நட்சத்திரம் இந்தப் புறஜாதியார்களாக இருந்த அந்நியர்களை, புதிதாகப் பிறந்திருக்கும் அரசரின் பிறப்பிடத்திற்கு வழிநடத்தினது! (53)

"கிறிஸ்துவும் ... தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்"– எபிரெயர் 9:28. இரட்சகருடைய பிறப்பின் தூதைப் போலவே இரண்டாம் வருகையின் தூதும், மதத்தலைவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. அவர்கள் தேவனுடனுள்ள தொடர்பை பாதுகாத்துக்கொள்ளத் தவறி இருந்ததால் பரலோகத்தின் ஒளியை நிராகரித்தனர். அப்போஸ்தலனால் விவரிக்கப்பட்ட கூட்டத்தில் அவர்கள் இருக்கவில்லை. "சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே"–1 தெசலோனிக்கேயர் 5:4,5. (54)

சீயோனின் சுவர்களின் மீதிருந்த, காவல்காரர்கள்தான் இரட்சகருடைய வருகையின் செய்தியை முதலாவதாகப் பற்றிக்கொள்பவர்களாகவும், அவருடைய வருகையின் சமீபத்தை அறிவிப்பதில் முதலாவது தங்கள் குரலை உயர்த்துபவர்களாகவும், அவரது வருகைக்கென்று ஆயத்தமாகும்படி மக்களை முதலாவது எச்சரிப்பவர்களாகவும் இருந்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் சமாதானத்தையும் பாதுகாப்பையும் பற்றிக் கனவுகண்டு இளைப்பாறிக் கொண்டிருந்தனர். மக்கள் அவர்களது பாவங்களில் நித்திரை செய்துகொண்டிருந்தனர். இயேசு தமது சபையை, செழுமையான இலைகளைக் கொண்டிருந்தும் விலைமதிப்பான கனிகொடாத அத்திமரமாகக் கண்டார். தேவனுடைய சேவைக்கு ஏற்ற உண்மையான தாழ்மையின் ஆவியும், பாவத்திற்கான வருத்தமும் விசுவாசமும் இல்லாமல், மதச்சடங்குகளை பெருமையாகச் செய்துகொண்டு இருந்தனர். ஆவியின் கனியை விடுத்து, பெருமை சம்பிரதாயம் வீண்மகிமை சுயநலம், ஒடுக்குதல் ஆகியவை வெளிக்காட்டப்பட்டுக்கொண்டிருந்தன. பின்னிட்டு

விழுந்துபோன ஒரு சபை காலங்களின் அடையாளங்களுக்கு அதன் கண்களை மூடிக்கொண்டது. தேவன் அவர்களை கைவிடவோ அல்லது விசுவாசிகள் தோல்வியடையவோ விட்டுவிடவில்லை. ஆனால் அவர்கள் தாங்களாகவே அவரைவிட்டு விலகிச்சென்று, அவரது அன்பிலிருந்து தங்களைப் பிரித்துக்கொண்டிருந்தனர். நிபந்தனைகளுக்கு உடன்பட அவர்கள் மறுத்தபோது, அவரது வாக்குத்தத்தங்கள் அவர்களுக்கு நிறைவேறவில்லை. (55)

தேவன் அருளும் ஒளியையும், சலுகைகளையும் வரவேற்று பெருகும்படிச் செய்யாமல், அலட்சியப்படுத்துவதன் நிச்சயமான பலன் அப்படிப்பட்டதாக உள்ளது. சபை அவரது ஆரம்ப தெய்வீகப் பாதுகாப்பைப் பின்பற்றி, ஒளியின் ஒவ்வொரு கீற்றையும் ஏற்றுக்கொண்டு, வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு கடமையையும் செய்யாவிட்டால், மதம் என்பது சடங்குகளைக் கடைப்பிடிப்பதாகி, ஜீவாதாரமான தெய்வபக்தி மறைந்து, தடுக்கமுடியாத விதத்தில் சீரழிந்துபோகும். சபையின் வரலாற்றில் இந்த உண்மை திரும்பத்திரும்ப சித்தரிக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள், சலுகைகள் ஆகியவைகளுக்குத் தக்கதாக தேவன் அவரது மக்களிடமிருந்து விசுவாசத்தின் கிரியைகளையும் கீழ்ப்படிதலையும் எதிர்பார்க்கிறார். கீழ்ப்படிதலானது தியாகத்தையும் சிலுவையையும் உள்ளடக்கி இருக்கிறது. இதனால் தங்களை கிறிஸ்துவின் அடியார்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களில் அநேகர் பரலோகத்திலிருந்து வந்த ஒளியைப் பெற்றுக்கொள்ள மறுத்து, பண்டைய யூதர்களைப்போல, அவர்களைச் சந்திக்கும் காலத்தை அறியாதவர்களாக இருந்தனர். அவர்களது பெருமை, நம்பிக்கை யின்மையினால் கர்த்தர் அவர்களைக் கடந்துசென்று, கொடுக்கப்பட்ட ஒளி அனைத்தையும் கவனித்திருந்த பெத்லகேமின் மேய்ப்பர்கள் கீழ்த்திசை ஞானிகள் போன்றோருக்கு அவரது சத்தியத்தை வெளிப்படுத்தினார். (56) ★

# 18

# வில்லியம் மில்லர் வெளிப்படுத்திய விளக்கம்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 317–342)**

வேத வாக்கியங்களின் தெய்வீக அதிகாரத்தை சந்தேகிக்கும்படி நடத்தப்பட்டிருந்த, ஆனாலும் சத்தியத்தை அறியவேண்டுமென்று உண்மையாக விரும்பியிருந்த, நேர்மைமிக்க இருதயத்தைக் கொண்டிருந்த ஒரு விவசாயி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை அறிவிக்கும் பணியை முன்னின்று நடத்த தேவனால் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்ற அநேக சீர்திருத்தக்காரர்களைப் போலவே, **வில்லியம் மில்லரும்** ஆரம்பகால வாழ்க்கையில் வறுமையுடன் போரிட்டதால், உழைப்பு சுயமறுப்பு போன்ற பெரும் பாடங்களைக் கற்றறிந்தார். அவர் தோன்றியிருந்த குடும்பத்தின் அங்கத்தினர்கள், அவரது சுபாவத்தில் மேலோங்கியிருந்த சுதந்திர மனப்பான்மையையும், சுதந்திரத்தை விரும்பும் ஆவியையும், உழைக்கும் திறமையையும், உறுதியான நாட்டுப்பற்றையும் இயல்பாகக் கொண்டவர்களாக இருந்தனர். அவரது தந்தை புரட்சிப் படையில் ஒரு கேப்டனாக இருந்தார். போர்ப்புயல்மிக்க அக்காலத்தில் நிகழ்ந்த போராட்டங்களிலும் பாடுகளிலும் அவர் செய்த தியாகங்களை மில்லரின் ஆரம்பகால வாழ்க்கையை உருவாக்கிய சூழ்நிலைகளில் காணலாம். (1)

அவர் நல்ல உடல்வாகு உடைய மனிதராக இருந்தார். சிறு பிராயத்திலேயே அசாதாரணமான நுண்ணறிவுபலத்தை கொண்டிருந்ததற்கு சான்று பகர்ந்தார். பெரியவனாக வளர்ந்தபோது, அது அதிகமாகத் தெரிந்தது. அவரது மனம் செயலாற்றல் மிக்கதாகவும், நன்கு வளர்ச்சி அடைந்ததாகவும் இருந்தது. அதிகமான அறிவுத் தாகமுடையவராகவும் இருந்தார். அவர் கல்லூரிப் படிப்பின் வாய்ப்பை அனுபவிக்காமலிருந்த போதிலும், ஆராய்ச்சியின் மேலிருந்த ஆர்வமும், கவனமாகச் சிந்திக்கும் பழக்கமும்,

நெருக்கமான விமரிசனமும், சிறப்பாக நிதானித்துப் புரிந்துகொள்ளக்கூடிய பார்வை உடையவராக அவரை மாற்றின. நேர்மை, சிக்கனம், அனுதாபம் ஆகியவைகளினால் பொதுவாக மதிக்கப்பட்டு, பழிப்புக்கிடமற்ற சன்மார்க்கப் பண்பையும், பொறாமையூட்டும் புகழையும் உடையவராக இருந்தார். அவரது ஆராய்ச்சிசெய்யும் பழக்கம் தொடர்ந்துகொண்டிருந்தபோதே, செயலாற்றி, செயல்படுத்தும் திறமைகளினால் இளமையிலேயே ஆற்றல் பெற்றவரானார். பலவிதமான அரசியல் இராணுவப் பதவிகளையும் கௌரவத்துடன் வகித்துவந்ததால் செல்வமும் புகழும் உண்டாகக்கூடிய பாதைகள் அவருக்கு விசாலமாகத் திறக்கப்பட்டதுபோல் காணப்பட்டன. (2)

அவரது அன்னை உத்தமமான பக்தி உடையவராயிருந்ததால், அவர் குழந்தைப் பருவத்திலேயே மத சம்பந்தமான உணர்த்துதல் களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருந்தார். அப்படியிருந்தாலும் அவர் தமது வாலிபப்பருவத்தின் ஆரம்பகாலத்தில் இயற்கைச் சமயவாதிகளுக்குள் வீசப்பட்டார். அவர்கள் ஏறத்தாழ நல்ல நகரமக்களாகவும், மனிதத்தன்மையும் அனுதாபமும் கொண்டிருந்தார்களென்பதால் அவர்களது செல்வாக்கு அதிக பலமுள்ளதாக இருந்தது. கிறிஸ்தவ அமைப்புகளுக்கிடையில் எப்போதும்போல வாழ்ந்திருந்தாலும், அவர்களது குணம் ஓரளவிற்குச் சுற்றுப்புறங்களினால் உருவாக்கப்பட்டதாக இருந்தது. அவர்களுக்கு மரியாதையையும் நம்பிக்கையையும் சம்பாதித்துத்தந்த மேன்மைகள் வேதாகமத்தால் கிடைத்திருந்தன என்றபோதும் இந்த நல்ல ஈவுகள் தேவனுடைய வார்த்தைக்கு எதிரான செல்வாக்கை உண்டுபண்ணும்படி மாறுபடுத்தப்பட்டிருந்தன. இந்த மனிதர்களின் கூட்டுறவினால் மில்லர் அவர்களது உணர்ச்சிக்கருத்துக்களைத் தழுவும்படி நடத்தப்பட்டார். வழக்கத்திலிருந்த வேதாகம விளக்கங்கள், கடக்கமுடியாததுபோல் காணப்பட்ட நெருக்கங்களை கொடுத்தது. கூடவே வேதாகமத்தை ஒதுக்கிவைத்த புதிய நம்பிக்கையும், அதன் இடத்தை எடுத்துக்கொள்ளும்படியான மேன்மையான எதையும் தராமலிருக்கவே, அவர் மனநிறைவில்லாதவராகவே இருந்தார். எப்படியிருந்தாலும், இந்த நோக்கத்தில் அவர் பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்தார். ஆனால் அவரது 34–வது வயதில், பாவியென்ற அவருடைய நிலையைக் குறித்த ஒரு உணர்வை பரிசுத்த ஆவியானவர் அவரது இருதயத்தில் பதித்தார். அவரது பழைய நம்பிக்கையில் கல்லறைக்கப்பாலுள்ள மகிழ்ச்சியைப்பற்றிய நிச்சயத்தை அவர் காணவில்லை. எதிர்காலம் இருளாகவும் துயரமிக்கதாகவும் இருந்தது. அக்காலத்தில் அவரிலிருந்த உணர்ச்சிகளைப்பற்றிப் பின்னர்: (3)

“முற்றிலுமான அழிவு என்பது நடுங்க வைக்கும் குளிரான எண்ணமாகவும், கணக்குக் கொடுக்கவேண்டும் என்பது அனைவரது

அழிவின் நிச்சயமாகவும் இருந்தது. வானம் எனது தலைக்குமேல் பித்தளையைப்போலவும், பூமி என் கால்களுக்குக்கீழ் இரும்பைப்போலவும் இருந்தது. நித்தியம்—அது என்ன? மரணம்—அது ஏன்? அதிகமாக அதைக் காரணப்படுத்தினபோது, அதன் விளக்கத்திலிருந்து அதிகமான தூரத்தில் இருந்தேன். அதிகமாகச் சிந்தித்தபோது, என் முடிவுகள் அதிகமாகச் சிதறியது. சிந்திப்பதை நான் நிறுத்த முயன்றேன். ஆனால் எனது சிந்தனைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நான் மிகவும் துர்ப்பாக்கியமான நிலைமையில் இருந்தேன், ஆனாலும் அதன் காரணத்தை நான் புரிந்துகொள்ளவேயில்லை. முறுமுறுத்துக் குறைகூறினேன், ஆனால் யாரைக்குறித்து என்று அறியாம லிருந்தேன். அங்கே ஒரு தவறு இருப்பதை அறிந்தேன், ஆனால் சரியானதை எப்படி எங்கு கண்டுபிடிப்பது என்பதை அறியாமலிருந்தேன். நம்பிக்கையில்லாதவனாக துக்கப்பட்டுக்கொண்டிருந்தேன்" என்றார். (4)

இந்த நிலையில் அவர் சில மாதங்களைத் தொடர்ந்தார். "திடீரென்று ஒரு இரட்சகரின் பண்பு என் மனதில் மிகத் தெளிவாக உணர்த்தப்பட்டது. நமது மீறுதல்களுக்காக தம்மையே பரிகாரமாகத் தந்து, அதன் மூலமாகப் பாடுகளிலிருந்தும் பாவத்தின் தண்டனை களிலிருந்தும் நம்மை இரட்சிக்கக்கூடிய நல்லவரும் மனஉருக்கம் மிகுந்தவருமான ஒருவர் இருந்தாகவேண்டும் என்று காணப்பட்டது. அப்படிப்பட்ட நபர் எவ்வளவு விரும்பப்படத்தக்கவராக இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து, அவருடைய கரங்களில் என்னைக் கொடுத்து அவருடைய இரக்கத்தின்மீது நம்பிக்கை வைக்க முடிந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்தேன். ஆனால் அப்படி ஒருவர் இருக்கிறார் என்பதை எப்படி மெய்ப்பிக்க முடியும் என்ற கேள்வி எழுந்தது. அவ்வாறு ஒரு இரட்சகர் இருக்கிறார் அல்லது ஒரு எதிர்காலம் உள்ளது என்பதைக்குறித்த சான்றினை வேதாகமத்திற்கு வெளியே அடையமுடியாது என்பதை நான் கண்டேன்." (5)

"எனக்குத் தேவையாக இருந்த அப்படிப்பட்ட ஒரு இரட்சகரை வேதாகமம் காட்சிக்குக் கொண்டுவந்ததை நான் கண்டேன். விழுந்துபோன உலகத்தின் தேவைகளை சந்திக்கக்கூடிய கொள்கைகளை ஆவியின் ஏவுதலற்ற ஒரு நூலினால் எவ்விதமாக உண்டுபண்ண இயலும் என்று நான் குழம்பியிருந்தேன். வேதவாக்கியங்கள் தேவனிடமிருந்து வந்த ஒரு வெளிப்படுத்துதலாகத்தான் இருக்குமென்று ஒத்துக்கொள்ள நான் நெருக்கி ஏவப்பட்டேன். அது எனது மகிழ்ச்சியானது. இயேசுவில் ஒரு நண்பரைக் கண்டேன். இயேசு எனக்கு பதினாயிரம் பேர்களில் சிறந்தவராக ஆனார். இதற்குமுன் இருளும் முரண்பாடுகளுமாயிருந்த வேத வாக்கியங்கள் இப்பொழுது என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமும் ஆயிற்று. எனது மனம் அமர்ந்து திருப்தியடைந்தது. வாழ்க்கை என்னும்

பெரும்கடலின் நடுவில் கர்த்தராகிய தேவன் ஒரு கன்மலையாக இருப்பதை நான் கண்டேன். வேதாகமமே எனது சிறப்பு ஆராய்ச்சியாக மாறி, நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் அதனை ஆராய்ந்தேன் என்று என்னால் உண்மையாகவே சொல்லமுடியும். அதில் பாதிகூட எனக்குச் சொல்லப்பட வில்லை என்பதைக் கண்டேன். அதன் அழகையும் மகிமையையும் இதற்குமுன் நான் ஏன் காணவில்லை என்று ஆச்சரியப்பட்டேன். கண்டிருந்தால் நான் அதை நிராகரித்திருப்பேனா என்று வியந்தேன், எனது இருதயம் வாஞ்சித்த அனைத்தும் அதில் வெளிப்படுத்தப் பட்டிருந்ததையும், என் ஆத்துமாவின் ஒவ்வொரு நோய்க்கான மருந்தையும் கண்டேன். மற்ற புத்தகங்களின் மேலிருந்த சுவையை இழந்து, தேவனிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்ள எனது மனதைச் செலுத்தினேன்."—S. Bliss,Memoirs of Wm. Miller,pages 65–67. (6)

இகழ்ந்திருந்த மதத்தின் மீதான விசுவாசத்தை இப்போது அவர் பகிரங்கமாக அறிக்கைசெய்தார். ஆனால் நேர்மையற்ற அவரது கூட்டாளிகள் அவர்தாமே அடிக்கடி வேதவாக்கியங்களின் தெய்வீக அதிகாரம்பற்றிச் சொல்லியிருந்த வாதங்களனைத்தையும் முன்வைப்பதில் வேகமாயிருந்தனர். அவர்களுக்குப் பதில் கூற அப்போது அவர் ஆயத்தமா யிருக்கவில்லை. ஆனால் வேதாகமம் தேவனுடைய வெளிப்படுத்தலாக இருந்திருந்தால், அது அதற்குள்ளாக இசைந்திருக்கவேண்டும் என்றும், அது மனிதனின் போதனைக்கென்று கொடுக்கப்பட்டிருப்பதால், அவனது புரிந்துகொள்ளுதலுக்கு பொருந்தவேண்டுமென்றும் அவர் காரணம் சொன்னார். வேதவாக்கியங்களைத் தனக்கென்று வாசிக்கவும், வெளிப்படையாகக் காணக்கூடிய முரண்பாடுகள் அனைத்தையும் இசைவுபடுத்தமுடியாதா என்பதை உறுதிப்படுத்தவும் தீர்மானித்தார். (7)

முன்னதாகக்கொண்டிருந்த கருத்துக்கள் அனைத்தையும் ஒருபக்கமாக வைத்துவிட்டு, அவைகளின் விளக்கங்களையும் ஒதுக்கிவிட்டு, ஒத்துவாக்கிய அகராதி, குறிப்புகள் ஆகியவைகளின் உதவியுடன் அவர் வேதவசனத்தை வேதவசனத்துடன் ஒப்பிட முயற்சித்தார். இவ்வாறாக, ஆதியாகமத்தில் தொடங்கி, வசனம் வசனமாக, தடுமாற்றமடைய ஏதுவிராதபடி வசனங்களின் பொருள் புரியும்வரை மெதுவாகவும் முறையாகவும் தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். ஏதாகிலும் புரியக்கூடாதிருந்ததால், அதை, அதைக்குறித்த மற்ற ஒவ்வொரு வசனத்துடனம் ஒப்பிட்டுப்பார்ப்பதென்பது அவரது வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு வசனமும் அதன் கருத்தில் முறையான ஆதாரங்கிடைக்கும்படி அனுமதிக்கப்பட்டு, அதைப்பற்றிய அவரது நோக்கு அதனுடன் சம்பந்தப்பட்ட வசனப்பகுதிகளுடன் பொருந்தினால்,

அது இலகுவானதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்படியாகப் புரிந்து கொள்ளுவதற்குக் கடினமாகக் காணப்பட்ட பகுதிகளைச் சந்தித்த போதெல்லாம் அதன் விளக்கத்தை வேதவாக்கியங்களின் வேறு ஏதாவதொரு பகுதியில் அவர் கண்டார். தெய்வீக வெளிச்சத்திற்காக அக்கரையுடன் ஜெபித்து, ஆராய்ந்தபோது, அவரது புரிந்துகொள்ளுதலுக்கு இருளாகத் தோன்றியிருந்தவைகள் தெளிவாக்கப்பட்டன. "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்" (சங். 119:130) என்னும் சங்கீதக்காரனின் வார்த்தைகளில் உள்ள உண்மையை அவர் அனுபவித்தார். (8)

மற்ற வசனங்களில் பயன்படுத்தியிருந்த அதே கொள்கையைப் பயன்படுத்தி, மிகவும் ஆழ்ந்த ஆர்வத்துடன் தானியேலின் தீர்க்கதரிசன புத்தகத்தையும் வெளிப்படுத்தின விசேஷத்தையும் விளங்கிக்கொள்ளுவதற்கு முயன்றபோது, தீர்க்கதரிசன உருவகங்களைப் புரிந்துகொள்ளமுடியும் என்பதைக்கண்டு மிகுந்த மகிழ்ச்சிகொண்டார். இதுவரையில் நிறைவேறியிருந்த தீர்க்கதரிசனங்கள் எழுத்துப்படியே நிறைவேறியிருந்ததையும், பலவிதமான எண்ணிக்கைகளின் உருவகங்கள், உவமைகள், சாயல் அனைத்தும், தொடர்ச்சியாக வந்த வசனங்களில் விளக்கப்பட்டிருந்ததையும், அல்லது அதற்காக உபயோகிக்கப்பட்ட வார்த்தைகள் மற்ற வேதவாக்கியங்களால் விளக்கப்பட்டதையும், இப்படி விளக்கப்பட்டவைகள் எழுத்துப்பூர்வமாக நிறைவேற வேண்டியதிருந்ததையும் கண்டார். இவ்விதமாக "அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போக அவசியமில்லாதபடி தெளிவாகவும் எளிமையாகவும் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களின் அமைப்பாக வேதாகமம் இருப்பதைக்கண்டு நான் திருப்தியடைந்தேன்" என்றார்.—Bliss,page 70. தீர்க்கதரிசனங்களின் பெரும் பாதைகளைப் படிப்படியாக அவர் கண்டுபிடித்தபோது, சத்தியம் என்னும் சங்கிலியின் வளையங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவரது முயற்சிக்குப் பரிசாகக் கிடைத்தன. தேவதூதர்கள் அவரது மனதிற்கு வழிகாட்டி, புரிந்துகொள்ளும் வண்ணம் வேத வசனங்களைத் திறந்தனர். (9)

எதிர்காலத்தில் நிறைவேற உள்ள தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொள்ள, கடந்தகாலத்தில் அவைகள் நிறைவேறியிருந்த வகையை விதியாகக்கொண்டு படித்ததால், கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆட்சி—உலகமுடிவிற்கு முன்பாக உலகப்பிரகாரமான ஆயிரவருட ஆட்சி—வேதவார்த்தைகளால் தாங்கப்படவில்லை என்பதைக் கண்டு திருப்தியடைந்தார். கர்த்தரின் நேரடியான இரண்டாம் வருகைக்குமுன், நீதியும் சமாதானமும் உள்ள ஒரு ஆயிரம் வருடத்தைக்குறித்த இந்த கோட்பாடு,

தேவனுடைய நாளைப்பற்றிய பயத்தைத் தூரமாக நீக்கி வைக்கின்றது. அவை மகிழ்ச்சிதருவதாக இருந்தாலும் "அறுவடைக் காலம் (உலகத்தின் முடிவு) வரைக்கும் கோதுமையும் களையும் ஒன்றாக வளரட்டும்" (மத்தேயு 13:30,38–41) என்ற கிறிஸ்துவின் போதனைக்கும், "பொல்லாதவர்களும் எத்தர்களு மானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர் களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்"–2 தீமோத்தேயு 3:13. "கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வரும்"–2 தீமோத்தேயு 3:1. இருளின் ராஜ்யம் கர்த்தரின் வருகைமட்டும் தொடர்ந்து, "அவரது வாயின் சுவாசத்தினாலும் வருகையின் பிரசன்னத்தினாலும்" அழிக்கப்படும் (2 தெச. 2:8) என்கிற அவரது சீடர்களின் போதனைக்கும் முரண்பட்டதாக உள்ளது. உலகத்தின் மனமாற்றம் கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆளுகை என்னும் கோட்பாடுகள் ஆதி அப்போஸ்தலர்களின் சபையில் இருக்கவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்வரை அது கிறிஸ்தவர்களால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மற்ற ஒவ்வொரு தவறின் விளைவைப்போலவே, இதன் விளைவுகளும் தீமையானதாகவே இருந்தது. அது கர்த்தரின் வருகையை வெகு தொலைவில் எதிர்பார்க்கச்செய்து, அவரது வருகையை முன்னறிவிக்கும் அடையாளங்களைக் கவனிப்பதிலிருந்து தடைசெய்திருந்தது. நன்றாக அஸ்திவாரமிடப்படாத நம்பிக்கை பாதுகாப்பு ஆகிய ஒரு உணர்வினைத் தூண்டி, தங்கள் ஆண்டவரைச் சந்திக்கத் தேவையான ஆயத்தம் செய்வதை அலட்சியம் செய்யும்படி அநேகரை வழிநடத்தினது. (10)

கிறிஸ்துவின் எழுத்துப்படியான சரீரப்பிரகாரமான வருகையை வேதவாக்கியங்கள் தெளிவாகக் கூறுவதை மில்லர் கண்டார். "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்" (1 தெச. 4:16) என்று பவுல் கூறுகிறார். "அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்"–மத்தேயு 24:30. "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்" (மத்தேயு 24:27) என்று இரட்சகர் கூறுகிறார். அவர் பரலோகத்தின் சேனைகளனைத்துடனும் சேர்ந்து வரவேண்டியதிருக்கிறது. "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்"–மத்தேயு 25:31. "வலுவாய்த் தொனிக்கும் எக்காளசத்தத்தோடே அவர் தமதுதூதர்களை

அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்"–மத்தேயு 24:31. (11)

அவரது வருகையின்போது, மரித்த பரிசுத்தவான்கள் எழுப்பப்பட்டு, உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்படுவார்கள். "நாமெல்லாரும் நித்தியரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்" (1கொரி. 15:51–53) என்று பவுல் கூறுகிறார். தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபத்தில் கர்த்தருடைய வருகையைப்பற்றி விவரித்தபின், "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1தெச. 4:16–17) என்று கூறினார். (12)

கிறிஸ்துவின் பிரத்தியட்சமான வருகை நிகழும்வரைக்கும் அவருடைய மக்கள் ராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" (மத்தேயு 25:31–34) என்று அழைக்கவிருப்பதை இரட்சகர் கூறினார். இதுவரை கொடுக்கப்பட்ட வேதவாக்கியங்களிலிருந்து, மனுஷகுமாரன் வரும்போது, மரித்தவர்கள் அழியாமை உள்ளவர்களாக எழுப்பப்படுவார்கள் என்பதையும் உயிரோடிருப்பவர்கள் மறுரூபமாக்கப்படுவார்கள் என்பதையும் நாம் கண்டிருக்கிறோம். இந்த மாபெரும் மாற்றத்தின் மூலமாக, இராஜ்யத்தைப்

பெற்றுக்கொள்ளும்படி அவர்கள் ஆயத்தமாக்கப்படுகின்றனர். ஏனெனில் “மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை” (1கொரி. 15:50) என்று பவுலார் சொல்லுகிறார். மனிதன் இப்போதுள்ள நிலையில் தேவனுடைய ராஜ்யத்திற்குள் நுழையமுடியாது. ஆனால் இயேசு வரும்போது, அவர் தம் மக்களுக்குச் சாவாமையை வழங்குகிறார். அதன்பின் இதுவரை வாரிசாகமட்டுமே இருந்த அவர்களை இராஜ்யத்தைச் சுதந்தரிக்கும்படி அழைக்கவிருக்கிறார். (13)

கிறிஸ்துவின் வருகைக்குமுன் நிகழும் என்று எதிர்பார்க்கப்பட்ட சமாதானத்தின் ஆளுகை, பூமியின்மீது தேவனுடைய ராஜ்ஜியத்தை ஏற்படுத்துதல் ஆகியவை, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்பின் நிகழவேண்டியவை என்பதை இவ்வசனங்களும் மற்ற வேதவாக்கியங்களும் மில்லரின் மனதிற்குத் தெளிவாக நிரூபித்தன. அதற்கும் மேலாக, காலங்களின் அடையாளங்கள் அனைத்தும், உலகத்தின் நிலைமையும், கடைசிநாட்களைப்பற்றிய தீர்க்கதரிசன விளக்கங்களுடன் சம்பந்தப் பட்டிருக்கின்றன என்பதையும் காட்டின. உலகம் அதன் தற்போதுள்ள நிலைமையில் தொடரும்படி அதற்குக் கொடுக்கப்பட்ட காலம் ஏறத்தாழ முடிவடையவுள்ளது என்கிற முடிவிற்கு வேதவாக்கிய ஆராய்ச்சியால் அவர் நிர்பந்திக்கப்பட்டார். (14)

“எனது மனதை முக்கியமாகப் பாதித்த வேறொரு வகையான சான்று: வேதவாக்கியங்களிலிருந்த காலவரிசையாகும். முன்கூறப்பட்டு கடந்தகாலத்தில் நிறைவேறியிருந்த நிகழ்ச்சிகள், கொடுக்கப்பட்டிருந்த காலத்திற்குள் நிறைவேறியிருந்தன. ஜலப்பிரளயத்திற்கு முன்னான நூற்று இருபது வருடங்கள் (ஆதி. 6:3), அதற்கு முந்திய ஏழு நாட்கள் மற்றும் முன்சொல்லப்பட்டிருந்த நாற்பது நாட்கள் மழை (ஆதி. 7:4), ஆபிரகாமின் சந்ததியினர் நானூறு வருடங்கள் அலைந்துதிரிதல் (ஆதி. 15:13), பானபாத்திரக்காரன் சுயம்பாகியின் கனவுகளிலிருந்த மூன்று நாட்கள் (ஆதி. 40:12–20), பார்வோனின் ஏழு வருடங்கள் (ஆதி. 41:28–54), வனாந்தரத்தின் நாற்பது வருடங்கள் (எண். 14:34), மூன்றரை வருடப்பஞ்சம் (1ராஜா. 17:1 லூக்கா 4:25), எழுபது வருட அடிமைத்தனம் (தானியேல் 4:13–16), யூதர்களின்மீது விதிக்கப்பட்ட எழுபது வாரங்களைக்கொண்ட ஏழு வாரங்களும் அறுபத்திரண்டு வாரங்களும் ஒருவாரமும் (தானியேல் 9:24–27) போன்ற கால அளவிற்குட்பட்டிருந்த இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்தின் தீர்க்கதரிசனமாயிருந்தன, முன்னுரைக்கப்பட்டபடியே நிறைவேறியிருந்தன” என்று மில்லர் கூறுகிறார்.—Bliss,page 74,75. (15)

வேதாகம ஆராய்ச்சியில் அவரது புரிந்துகொள்ளுதலின்படி, வரிசையான கால அளவுகள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டும் தொடர்ந்ததால், தேவன் தமது ஊழியக்காரருக்கு வெளிப்படுத்தின அவைகளை, "முன்குறிக்கப்பட்ட காலங்களாகவே" கருதினார். "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின் படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" (உபா. 29:29) என்று மோசே கூறுகிறான். "கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்" (ஆமோஸ் 3:7) என்று கர்த்தர் அவரது தீர்க்கதரிசியாகிய ஆமோஸின் மூலமாக அறிவிக்கிறார். அப்படியானால் சத்திய வேதவாக்கியங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கும் மனித வரலாற்றில் நிகழவுள்ள மிகப்பிரம்மாண்டமான நிகழ்ச்சியை வேதமாணவர்கள் நிச்சயத்துடன் எதிர்பார்க்கலாம். (16)

"தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களெல்லாம் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2தீமோத். 3:16). அது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேதுரு 1:21), "தேவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர் களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4) என்று நான் பூரணமாக உணர்த்தப்பட்டபோது, வேதாகமத்திலுள்ள காலக்கணக்கின் அளவுப்பகுதிகளானது மற்ற எந்த வேதாகமப்பகுதியையும்போலவே, முக்கியமானதாக கருதப்படுவதற்கு தகுதிவாய்ந்தவை என்று என்னால் உணரமுடிந்தது. எனவே தேவன் தமது இரக்கத்தினால், வெளிப்படுத்தத் தகுதியானவைகள் என்று கண்டவைகளை, நான் அறிந்துகொள்ள முயற்சிக்கும்போது, தீர்க்கதரிசனக் காலஅளவுகளைக் கடந்துசெல்லும் உரிமை எனக்கில்லை என்பதை உணர்ந்தேன்."—Bliss,page 75. (17)

இயேசுவின் இரண்டாம் வருகையின் நேரத்தை மிகத்தெளிவாக வெளிப்படுத்துவதுபோல் காணப்பட்ட தீர்க்கதரிசனம் "இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும், பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்" (தானியேல் 8:14) என்பதே. ஒரு வேதவாக்கியத்திற்கு அதன் அடுத்த வாக்கியம் தானாக விளக்கம் தரும் என்ற அவரது விதியைப் பின்பற்றி, உருவகமான தீர்க்கதரிசனத்தில் ஒருநாள் ஒரு வருடத்தைக் குறிக்கும் என்பதை மில்லர் அறிந்தார்.–எண். 14:34; எசே. 4:6. இரண்டாயிரத்து

முந்நூறு நாட்கள் என்ற காலஅளவு அல்லது எழுத்தின்படியான வருடங்கள் யூதசபையின் நிர்வாக காலத்திற்கு அப்பால் வெகுதூரம் கடந்துசெல்லும் என்பதையும் அது யூதசமய அமைப்பிலிருந்த ஆசரிப்புக்கூடாரம் அல்ல என்பதையும் அவர் கண்டார். கிறிஸ்தவர்களின் காலத்தில் இந்த உலகம்தான் ஆசரிப்புக்கூடாரம் என்கிற பொதுவான பார்வையை மில்லர் ஏற்றிருந்தார். எனவே, தானியேல் 8:14–ல் முன்னறிவிக்கப்பட்டிருந்த பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்பது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இந்த உலகம் அக்கினியால் சுத்திகரிக்கப்பட இருப்பதைக் குறிக்கிறது என்று புரிந்துகொண்டார். அந்தக் கருத்து சரியானது என்றால், 2300 நாட்களுக்கான சரியான ஆரம்ப இடத்தைக் கண்டுபிடித்துவிட்டால், இரண்டாம்வருகையின் நேரத்தை எளிதாகவே உறுதிப்படுத்திவிடலாம் என்று முடிவுசெய்தார். இப்போதிருக்கும் நிலை, அதனுடைய பெருமை, வல்லமை, ஆடம்பரம், மாயை, துன்மார்க்கம், ஒடுக்கப்படுதல் ஆகியவைகளோடு முடிவுக்கு வரும்போது,... சாபம் பூமியைவிட்டு நீக்கப்படும்போது, மரணம் அழிக்கப்படும்போது, தேவனுடைய ஊழியக்காரர்களுக்கும், தீர்க்கதரிசிகள், பரிசுத்தவான்கள், அவரது நாமத்துக்குப் பயப்படுகிற அனைவருக்கும் உரிய பலன் வழங்கப்படும்போது, பூமியைக் கெடுத்தவர்கள் அழிக்கப்படும்போது, இப்படி அந்த முடிவுகாலத்தின் நேரம் வெளிப்படும்.—Bliss,page 76. (18)

ஒரு புதிய ஆழமான ஆர்வத்துடன் ஒரு பிரம்மாண்டமான முக்கியத்துவம் வாய்ந்த, கவனம் முழுவதையும் ஈர்க்கக்கூடியதாக இருந்த தீர்க்கதரிசனங்களை ஆராய்வதில் இரவும்பகலுமாக மில்லர் ஈடுபட்டார். தானியேல் எட்டாம் அதிகாரத்தில் 2300 நாட்களின் துவக்கத்திற்கான குறிப்பு எதையும் அவரால் காணமுடியவில்லை. காபிரியேல் தூதன் தானியேலுக்கு தரிசனத்தைப் புரியவைக்கும் கட்டளையைப் பெற்றிருந்தபோதும், ஒரு பகுதி விளக்கத்தை மட்டுமே கொடுத்திருந்தான். சபைக்கு நேரிடவுள்ள பயங்கரமான உபத்திரவத்தை தீர்க்கதரிசி தரிசித்தபோது, தனது சரீரபலத்தை இழந்தான். அதற்குமேல் அவனால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. எனவே தூதன் சற்று நேரம் அவனை விட்டுச்சென்றார். "நான் சோர்வடைந்து சிலநாள் வியாதிப்பட்டிருந்தேன் ஒருவரும் அதை அறியவில்லை" (தானியேல் 8:27) என்று தானியேல் கூறினான். (19)

"இவனுக்குத் தரிசனத்தை விளங்கப்பண்ணு" என்று தேவன் அவரது தூதனுக்குக் கட்டளையிட்டிருந்தார். அது நிறைவேற்றப்படவேண்டும். அதற்குக் கீழ்ப்படிந்து, சற்று காலம் கழித்து அந்தத் தூதன் தானியேலிடம் திரும்பி வந்து, "தானியேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டுவந்தேன். நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத்

தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்கவந்தேன்; இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள்" (தானியேல் 9:22,23) என்றான். எட்டாம் அதிகாரத்திலுள்ள தரிசனத்தின் ஒரே ஒரு காரியம்தான்—அதாவது 2300 நாட்கள் என்கிற காலஅளவுதான் விளக்கப்படாமலிருந்தது. எனவே, அதன் விளக்கத்தைத் தெடர்ந்த தூதன்: (20)

"உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் நீ அறிந்து உணர்ந்துகொள்ளவேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும். அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள்; அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும்; முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது. அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்" (தானியேல் 9:24–27) என்று குறிப்பிடத்தகுந்த விதத்தில் காலஅளவுபற்றிய காரியத்தை விளக்கினான். (21)

தானியேல் புரிந்துகொள்ளத்தவறிய, எட்டாம் அதிகாரத்தின் தரிசனமாகிய, காலஅளவைக் குறித்த—"2300 இராப்பகல் செல்லும், பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும்" என்பதை விளக்கிக்கூறும்படிக்கே அந்த தேவதூதன் தானியேலிடத்திற்கு அனுப்பப்பட்டிருந்தான். "இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்டே்டு, தரிசனத்தை அறிந்துகொள்" என்று தானியேலை அழைத்தபின், அடுத்த வார்த்தையாக தேவதூதன்: "உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது" என்றான். "குறிக்கப்பட்டிருக்கிறது" என்ற வார்த்தை எழுத்தின்படி "வெட்டப்பட்டிருக்கிறது" என்றே பொருள்படும். வெட்டப்படும் என்று அந்த தூதன் அறிவித்த 490 வருடத்தைக் குறிக்கும் 70 வாரம் குறிப்பாக யூத ஜாதியுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது. ஆனால் அவை எதிலிருந்து வெட்டப்படும்? எட்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருந்த

ஒரே கால அளவு 2300 நாட்களாக இருந்ததால், இந்தக் கால அளவிலிருந்துதான் எழுபது வாரங்கள் வெட்டப்பட்டாக வேண்டும். எனவே, அந்த எழுபது வாரங்கள் 2300 நாட்களின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். இந்த இரண்டு கால அளவுகளும் ஒன்றாக ஆரம்பமாக வேண்டும். அந்த எழுபது வாரங்கள் எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதிலிருந்து ஆரம்பமாக வேண்டும் என்று தேவதூதன் அறிவித்தான். அந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட தேதியைக் காண முடிந்தால், அதன்பின் 2300 நாட்கள் என்கிற பெரிய கால அளவின் ஆரம்பத்தை ஆராய்ந்து அறிந்துகொள்ளலாம். (22)

இந்தக் கட்டளை எஸ்றா புத்தகத்தின் ஏழாம் அதிகாரத்தில் காணப்படுகிறது. எஸ்றா 7:12–26. பெரிய அரசனான அர்தசஷ்டாவினால் அது கி.மு.457–ல் கொடுக்கப்பட்டது. ஆனால் எஸ்றா 6:14–ல் “கோரேஸ், தரியு, பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா என்பவர்களுடைய கட்டளையின்படி” எருசலேமிலிருந்த கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்த மூன்று அரசர்களும், அதை ஆரம்பிக்கவும் மீண்டும் உறுதிப்படுத்தவும் பின்பு முழுமைப்படுத்தவும் பிறப்பித்த கட்டளைகளினால், 2300 நாட்களின் ஆரம்பத்தை, தீர்க்கதரிசி எதிர்பார்த்த முழுமைக்குக் கொண்டுவந்தனர். அந்தக் கட்டளை முழுமையடைந்த காலமாக—கட்டளையின் காலமாக கி.மு.457–ஐ எடுத்துக்கொண்டபோது, எழுபதுவாரம்பற்றிய தீர்க்கதரிசனத்தின் ஒவ்வொரு குறிப்பும் நிறைவேறியிருந்ததைக் காணமுடிந்தது. (23)

“எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்” என்பது அறுபத்தொன்பது வாரங்கள் அல்லது 483 வருடங்கள். அர்தசஷ்டாவின் கட்டளை கி.பி.457–ன் இலையுதிர் காலத்தில் பிறப்பிக்கப்பட்டது. இந்தத் தேதியிலிருந்து 483 வருடங்கள் கி.பி. 27–ன் இலையுதிர் காலம்வரை நீண்டுசென்றது. அந்தக்காலத்தில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியது. “மேசியா” என்கிற சொல், “அபிஷேகம் பண்ணப்பட்டவர்” என்பதைக் குறிக்கிறது. கி.பி. 27–ம் வருடத்தின் இலையுதிர் காலத்தில், கிறிஸ்து யோவானால் ஞான ஸ்நானம்பெற்று, ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார். “நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்” (அப். 10:38) என்று பேதுரு அப்போஸ்தலன் சாட்சி கொடுக்கிறார். “கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்,

சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்" (லூக்கா 4:18) என்று இரட்சகர் தாமே அறிவித்தார். ஞானஸ்நானத்திற்குப் பிறகு இயேசு கலிலேயாவிலே வந்து, "காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று" என்று "தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை" பிரசங்கித்தார்—மாற்கு 1:14,15. (24)

"அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி"—இங்கு "வாரம்" என்று பார்வைக்குக் கொண்டுவரப் பட்டிருப்பது யூதர்களுக்கென்று கொடுக்கப்பட்ட எழுபது வாரங்களின் கடைசி வாரமாகும். கி.பி.27 முதல் கி.பி.34 வரையிலான இந்த ஒருவார காலத்தில் முதலாவது தாமேயும், அதன்பின் தமது சீடர்களின் மூலமாகவும், கிறிஸ்து சுவிசேஷ அழைப்பை, மிகக் குறிப்பாக யூதர்களுக்குக் கொடுத்தார். இராஜ்யத்தின் நற்செய்தியுடன் அப்போஸ்தலர்கள் சென்றபோது: "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத்தேயு 10:5,6) என்று இரட்சகர் வழிகாட்டினார். (25)

"அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்;" அவருடைய ஞானஸ்நானத்திற்கு மூன்றரை வருடங்களுக்குப்பின், கி.பி.31–ல் நம்முடைய ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்டார். கல்வாரியின்மீது செலுத்தப்பட்ட அந்த மாபெரும் பலியுடன் நாலாயிரம் ஆண்டுகளாக தேவ ஆட்டுக்குட்டியை முன்குறித்துக்காட்டியிருந்த பலிகளும் காணிக்கை முறைகளும் முடிவடைந்தன. நிஜம் அதன் நிழலைச் சந்தித்தது, பலிகளும், சடங்காச்சாரங்களுமாகிய அனைத்தும் அங்கு முடிவடைய வேண்டியதாக இருந்தது. (பார்க்க: லேவி. 2:1–3 எண். 7:2,3,12,19,25). (26)

நாம் ஏற்கனவே பர்த்ததுபோல யூதர்களுக்கென்று குறிப்பாகக் கொடுக்கப்பட்டிருந்த எழுபது வாரங்கள் அல்லது 490 வருடங்கள் கி.பி. 34–ல் முடிவடைந்தன. அந்த நேரத்தில், ஸ்தேவானை இரத்தசாட்சியாக கொலைசெய்து, கிறிஸ்துவின் பின்னடியார்களை உபத்திரவப்படுத்திய யூதர்களின் சனகரீப் சங்கத்தின் நடவடிக்கையின்மூலமாக, யூதஜாதி சுவிசேஷத்தை நிராகரித்ததை முத்திரித்து உறுதிப்படுத்தியது. அதன்பின் இரட்சிப்பின் தூது தெரிந்துகொள்ளப்பட்டிருந்த மக்களுக்கென்று மட்டுமல்லாது உலகம் முழுவதற்கும் கொடுக்கப்பட்டது. உபத்திரவத்தின் மூலமாக எருசலேமைவிட்டு ஓடிப்போக நேர்ந்த சீடர்கள், "எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்." "பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு

பட்டணத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான்”—அப். 8:4,5. பேதுரு தெய்வீக நடத்துதலினால், செசரியா பட்டணத்து தெய்வபயமிக்க நூற்றுக்கு அதிபதியாயிருந்த கொர்நேலியுவிற்கு சுவிசேஷத்தைக் கூறினான். கிறிஸ்துவின் விசுவாசத்திற்கு ஜெயிக்கப்பட்ட வைராக்கியமிக்க பவுல், சந்தோஷமிக்க நற்செய்தியை தூரமாய் புறஜாதிகளிடத்திலே அறிவிக்கும்படி ஏற்படுத்தப்பட்டான்—அப். 8:4,22,21. (27)

இதுவரை தீர்க்கதரிசனத்தின் விவரங்கள் ஒவ்வொன்றும் குறிப்படும்படி நிறைவேறியது. எழுபது வாரங்களின் ஆரம்பம் கி.மு.457—கும் முடிவு கி.பி.34—கும் கேள்விக்கிடமின்றி குறிக்கப்பட்டது. இந்தக் கணக்கினால், 2300 நாட்களின் முடிவைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கவில்லை. எழுபது வாரங்கள்—490 நாட்கள், இந்த 2300 வருடங்களில் இருந்து வெட்டப்பட்டபின் 1810 நாட்கள் மீதியிருந்தது. 490 வருடங்களுக்குப் பிறகு 1810 நாட்கள் இன்னும் நிறைவேறவேண்டியதிருந்தது. கி.பி.34—ல் இருந்து 1810 வருடங்கள் 1844—குச் சென்றது. அதன் விளைவாக தானியேல் 8:14—ல் கூறப்பட்ட 2300 நாட்களானது கி.பி.1844—ல் முடிவடைகிறது. இப்பெரும் தீர்க்கதரிசனக் காலஅளவின் முடிவில், அந்த தேவதூதன் சாட்சிகொடுத்தபடி “பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்.” இவ்வாறாக, பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்காலம்—இரண்டாம் வருகையின்போது நிகழும் என்று எல்லோராலும் நம்பப்பட்ட காலம்—நிச்சயமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (28)

மில்லரும் அவரது சகாக்களும் 2300 நாட்கள் அல்லது வருடங்கள் கி.பி.1844—ன் வசந்தகாலத்தில் முடியும் என்று முதலில் நம்பினார்கள். ஆனால் தீர்க்கதரிசனம் அந்த வருடத்து இலையுதிர்காலத்தைச் சுட்டிக்காட்டியது. கர்த்தரின் இரண்டாம் வருகைக்காக முதலில் குறிக்கப்பட்ட தேதியை நம்பியிருந்தவர்களுக்கு இந்தத் தவறான புரிந்துகொள்ளுதல் ஏமாற்றத்தையும் குழப்பத்தையும் தந்தது. ஆனபோதிலும் 2300 நாட்கள் 1844—ல் முடிவடைந்தது என்பதையும், பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்பதால் குறிக்கப்பட்டிருந்த மாபெரும் நிகழ்ச்சி அப்பொழுது நடைபெற்றாகவேண்டும் என்பதையும் சார்ந்த வாதத்தின் பலத்தை இது பாதிக்கவேயில்லை. (29)

வேதவாக்கியங்கள் தேவனிடமிருந்து வந்த வெளிப்பாடு என்பதை மெய்ப்பிக்க, இதுவரை செய்திருந்ததைப்போலவே, வேதஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த மில்லரால், இப்பொழுது வந்துசேர்ந்த முடிவைக் குறித்த எந்த எதிர்பார்ப்பும் இருந்திருக்கவில்லை. அவரது ஆராய்ச்சியின் பலன்களை அவருக்கே நம்புவது கடினமாக இருந்தது. ஆனால் அவைகளை ஒதுக்கிவிடமுடியாதபடி வேதவாக்கியச் சான்றுகள் மிகத்தெளிவாகவும் வலிமைமிக்கதாகவும் இருந்தது. (30)

இரண்டு வருடகாலம் வேதாகம ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது, 1818–ல், கிறிஸ்து அவரது ஜனங்களை மீட்கும்படியாக இன்னமும் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்குள் தோன்றிவிடுவார் என்ற பக்திவிநயமான உணர்த்துதலைப் பெற்றார். "மகிழ்ச்சியான அந்த வாய்ப்பைப் பார்த்ததால் உண்டான ஆனந்தத்தையும் மீட்கப்பட்டவர்களின் மகிழ்ச்சியில் கலந்துகொள்ளும் என் ஆத்துமாவின் உற்சாகமான ஏக்கத்தையும் நான் கூறவேண்டிய அவசியம் இல்லை" என்று மில்லர் கூறுகிறார். இப்பொழுது வேதாகமம் எனக்கு ஒரு புதிய புத்தகமாகிவிட்டது. அது என் அறிவுக்கு உண்மையிலேயே விருந்தாக இருக்கிறது. அதன் போதனைகளில் இருளாகவும் புதிராகவும் இருந்த அனைத்தும் அதன் பக்கங்களிலிருந்து உதித்த தெளிவான வெளிச்சத்தினால் விலகிப்போயின. ஓ! சத்தியம் எவ்வளவு பிரகாசமாகவும் மகிமையானதாகவும் தோன்றியது. அந்த வார்த்தையில் இதற்கு முன் காணப்பட்டிருந்த முரண்பாடுகளும் இசைவின்மையும் நீங்கிவிட்டன. எல்லாவற்றையம் புரிந்துகொண்டேன் என்று என்னால் திருப்திப்படமுடியாமலிருந்த அநேக பகுதிகள் அதில் இருந்தபோதிலும், முன்பு இருண்டிருந்த மனதை வெளிச்சமாக்க அதிகமான ஒளி அதிலிருந்து வீசியது. இதற்குமுன் அதன் போதனைகளிலிருந்து புரியாதவைகள்போல் இருந்தவைகளை ஆராய்வதில் நான் ஒரு மகிழ்ச்சியை உணர்ந்தேன்.— Bliss,pages 76,77. (31)

வேதவாக்கியங்களில் முன்னறிவிக்கப்பட்டுள்ள இவ்வளவு முக்கியமான நிகழ்ச்சிகள், மிகக்குறைவான காலத்தில் நிறைவேறவுள்ளது என்னும் பக்திவிநயமான உணர்த்துதல் என் மனதைப் பாதித்ததினால் இந்த உலகத்திற்கு நான் செய்யவேண்டிய கடமையைப் பற்றிய கேள்வி என்னுள்ளத்தில் மிகுந்த வல்லமையுடன் வந்தது.—Ibid., page 81. தான் பெற்றுக்கொண்ட வெளிச்சத்தை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டியது தனது கடமை என்பதை அவரால் உணராமலிருக்க முடியவில்லை. பக்தி இல்லாதவர்களிடமிருந்து எதிர்ப்பை எதிர்பார்த்தாலும், சகல கிறிஸ்தவர்களும் தாங்கள் நேசிப்பதாகக் கூறிக்கொள்ளும் இரட்சகரை சந்திக்கும் நம்பிக்கையில் மகிழ்ச்சியடைவார்கள் என்று நிச்சயமாயிருந்தார். அவரது ஒரே பயம், மிகவிரைவில் நிகழவிருக்கும் இந்த மகிமைமிக்க விடுதலை வாய்ப்பின் மகிழ்ச்சியால், அநேகர், சத்தியத்தை விளக்கும் வேதாகமச் சான்றுகளை போதுமான அளவு சோதிக்காமல் இந்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளுவார்களே என்பதுதான். ஆகையால், தான் தவறாக இருந்து, தனது போதனைகள் அநேகமான மற்றவர்களையும் தவறுக்குள் நடத்திவிடக்கூடாது என்று எண்ணி, அதைப் பிறர்முன் வைப்பதற்குத் தயங்கினார். இவ்விதமாக, இந்த முடிவிற்கு அவரை

கொண்டுவந்த சான்றுகளை திருப்பிப்பார்க்கவும், அவரது மனதுக்குக் கடினமாகத் தோன்றிய ஒவ்வொன்றையும் ஜாக்கிரதையாகக் கவனிக்கவும் நடத்தப்பட்டார். சூரிய ஒளிக்கதிரின்முன் பனிப்படலம் நீங்குவதுபோல், தேவனுடைய வார்த்தையின் ஒளியின்முன் மறுப்புகள் நீங்குவதை கண்டார். இப்படியாகச் செலவிடப்பட்ட ஐந்து வருடங்கள் அவரது நிலை சரியானது என்கிற முழுமையான திடநம்பிக்கையைத் தந்தது. (32)

வேதவாக்கியங்களால் தெளிவாகப் போதிக்கப்பட்டுள்ளதாக தான் நம்பியிருந்ததை பிறருக்கு அறிவிக்கவேண்டியது தனது கடமை என்ற உணர்வு, புதிய வலிமையுடன் அவரை வற்புறுத்தியது. "நான் எனது தொழிலில் ஈடுபட்டிருந்தபோது, 'போய் வரவிருக்கும் ஆபத்தைப்பற்றி உலகுக்குச் சொல்' என்று எனது செவிகளில் ஓயாமல் ஒலித்துக்கொண்டிருந்தது. 'நான் துன்மார்க்கனை நோக்கி: துன்மார்க்கனே, நீ சாகவே சாவாய் என்று சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கத்தில் இராதபடி எச்சரிக்கத்தக்கதாக அதை அவனுக்குச் சொல்லாமற்போனால், அந்தத் துன்மார்க்கன் தன் அக்கிரமத்திலே சாவான்; ஆனாலும் அவன் இரத்தப்பழியை உன் கையிலே கேட்பேன். துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பும்படி நீ அவனை எச்சரித்தும், அவன் தன் வழியைவிட்டுத் திரும்பாமற்போனால், அவன் தன் அக்கிரமத்திலே சாவான்; நீயோ உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்' (எசே. 33:8,9) என்ற வசனங்கள் தொடர்ந்து எனக்குள் வந்துகொண்டிருந்தன. துன்மார்க்கரைத் திறமையாக எச்சரித்தால், அவர்களில் திரள்கூட்டமானவர்கள் மனம் திருந்துவார்கள். எச்சரிக்காமல் விட்டுவிட்டால், அவர்களது இரத்தப்பழி என்னிடத்தில் கேட்கப்படும் என்பதை நான் உணர்ந்தேன்" என்று கூறினார்.—Bliss,page 92. (33)

ஏதாவது ஊழியக்காரர் அவைகளின் வலிமையை உணர்ந்து, அவைகளை அறிவிக்கத் தன்னை ஈடுபடுத்துவார் என்கிற ஜெபத்துடன் அவருக்கு வாய்ப்புக் கிடைத்தபோது அவரது கருத்தை தனிப்பட்ட முறையில் அறிவிக்கத் தொடங்கினார். ஆனால் அந்த எச்சரிப்பைத் தானே கொடுக்கவேண்டிய ஒரு கடமை தனக்கிருந்தது என்கிற உணர்த்துதலை அவரால் நீக்க இயலவில்லை. "போய் இதை உலகத்துக்குச் சொல்லு. அவர்கள் இரத்தப்பழியை உன் கையிலே கேட்பேன்" என்ற வார்த்தைகள் அவரது மனதில் எப்போதும் தோன்றிக்கொண்டே இருந்தன. 1831–ம் வருடம், அவரது விசுவாசத்தின் காரணத்தை முதன்முதலாக பொது இடத்தில் அறிவிக்கும்வரை, அந்த பாரம் அவரை அழுத்திக்கொண்டிருக்க, ஒன்பது வருடங்கள் அவர் காத்திருந்தார். (34)

வயலிலிருந்த தனது எருதுகளுக்குப் பின்செல்லுவதிலிருந்து தீர்க்கதரிசனப் பணிக்கான சால்வையைப் பெற்றுக்கொள்ளும்படி எலிசா அழைக்கப்பட்டதுபோல, தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை மக்களுக்குத் திறந்துகாட்டுவதற்காக தனது கலப்பையை விட்டுவிட்டுவரும்படி வில்லியம் மில்லரும் அழைக்கப்பட்டார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலுமுள்ள தீர்க்கதரிசன காலத்தை படிப்படியாக, அவரைக் கேட்டிருந்தவர்களுக்குப் புரியவைக்கும் அவரது பணியில், நடுக்கத்துடன் அவர் பிரவேசித்தார். அவரது வார்த்தைகளினால் உண்டான பரவலான ஆர்வத்தைக் கண்டபோது, ஒவ்வொரு முயற்சியிலும் பலத்தையும் தைரியத்தையும் அடைந்தார். (35)

விசுவாச சகோதரர்களின் அழைப்பில், தேவனுடைய அழைப்பை அவர் கேட்டதினால்தான் மில்லர் அவரது கருத்துக்களைப் பொதுமக்கள் முன் வைக்க இணங்கினார். பொது இடங்களில் பேசும் பழக்கமற்றவராக தனக்கு முன்னுள்ள ஊழியத்திற்காக தகுதியின்மையை பாரமாக உணர்ந்த ஐம்பது வயதான மனிதராயிருந்தார் இப்போது அவர். ஆனால் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக ஆரம்பத்திலிருந்தே அவரது உழைப்புகள் குறிப்பிட்ட விதத்தில் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தன. அவரது முதல்சொற்பொழிவே ஒரு எழுப்புதலைக் கொண்டுவந்தது. அதில் இரண்டு நபர்களைத்தவிர முப்பது குடும்பத்தினர் ஆவிக்குரிய விழிப்படைந்தனர். உடனே வேறு இடங்களில் பேசும்படி அவர் வற்புறுத்தப்பட்டதுடன், கிட்டத்தட்ட அவர் ஊழியம் செய்த ஒவ்வொரு இடத்திலும் ஒரு எழுப்புதல் விளைந்தது. பாவிகள் மனந்திரும்பினார்கள். கிறிஸ்தவர்கள் பெருமளவில் பிரதிஷ்டைக்கென்று எழுப்பப்பட்டனர். இயற்கை சமயவாதிகளும் கடவுள் நம்பிக்கை அற்றவர்களும் வேதாகம சத்தியத்தையும் கிறிஸ்தவ மதத்தையும் ஒப்புக்கொள்ளும்படி நடத்தப்பட்டனர். “பிற மனிதர்களுடைய செல்வாக்கிற்கு உட்படாதவர்களாக இருந்த ஒருபிரிவு மக்களின் உள்ளங்களையும் அவரது செய்தி அடைந்துள்ளது” என்ற சாட்சி அவர் ஊழியம் செய்த மக்களிடமிருந்து வந்தது.—Ibid., page 138. அக்காலத்தில் அதிகரித்துக்கொண்டிருந்த உலகப்பிரகாரமான நிலையையும் சிற்றின்பங்களையும் தடுத்து, மக்களின் மனதை மார்க்கத்திலிருந்த பெரும் காரியங்களை நோக்கி எழுப்பும்படியாக அவரது போதனைகள் திட்டமிடப்பட்டிருந்தன. (36)

அவரது சொற்பொழிவின் பயனாக ஒவ்வொரு நகரத்திலும் ஏறத்தாழ இருபது முதல் சில இடங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் மனமாற்றம் அடைந்தனர். அநேக இடங்களில் அனைத்துப் புரொட்டஸ்டாண்டு சபைகளைச் சார்ந்த ஆலயங்களும் அவருக்கென்று திறக்கப்பட்டதுடன்,

பல்வேறுபட்ட சபை ஊழியக்காரர்களிடமிருந்தும் அவருக்கு அழைப்புகள் வந்தன. அழைக்கப்படாத எந்த இடத்திலும் ஊழைப்பதில்லை என்பது அவரது மாறுபடாத நியதியாக இருந்தபோதும், அவருக்கு வந்த வேண்டுகோள்களில் பாதியைக்கூட அவரால் நிறைவேற்ற முடியவில்லை எனபதைக் கண்டார். (37)

இயேசுவின் இரண்டாம் வருகையின் மிகச்சரியான வேளையைப்பற்றிய அவரது நோக்கினை ஏற்றுக்கொள்ளாமலிருந்த அநேகருங்கூட, கிறிஸ்துவுடைய வருகையின் நிச்சயத்தையும், சமீபத்தையும், அவர்கள் ஆயத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் குறித்த உணர்வை அடைந்தார்கள். சில பெரிய நகரங்களில் அவரது ஊழியம் குறிப்படும்படியான ஒரு உணர்த்துதலை உண்டுபண்ணியது. மதுபான விற்பனையாளர்கள் தங்களது வியாபாரத்தை விட்டுவிட்டு, அவர்களுடைய கடைகளை மக்கள் கூடுமிடமாக மாற்றினார்கள். சூதாடும் குகைகள் தகர்க்கப்பட்டன. நாத்திகர்களும், இயற்கை சமயவாதிகளும் ஊதாரித்தனமாயிருந்தவர்களில் சிலரும், வருடக்கணக்காக ஆலயத்திற்குச் செல்லாமலிருந்தவர்களுங்கூட, சீர்திருத்தமடைந்தனர். ஜெபக்கூட்டங்கள் பல்வேறுபட்ட சபையினராலும் பல்வேறு இடங்களிலும் ஏறத்தாழ ஒவ்வொரு மணிநேரமும் ஏற்படுத்தப்பட்டு, தொழில் வர்த்தகர்கள் நண்பகலில் ஜெபிக்கவும் துதிக்கவும் கூடினார்கள். வீணான உணர்ச்சிக் கொந்தளிப்புகள் இருக்கவில்லை. ஆனால் அனைவரது மனங்களிலும் ஒருமுகமான பக்திவிநயம் காணப்பட்டிருந்தது. ஆரம்பகால சீர்திருத்தவாதிகளின் ஊழியத்தைப்போலவே, அவரது ஊழியமும் உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவதைவிட, புரிந்துகொள்ளுதலை அறிவுறுத்துவதாகவும் மனச்சாட்சியை எழுப்புவதாகவும் இருந்தது. (38)

1833–ல் உறுப்பினராயிருந்த பாப்டிஸ்டு சபையிலிருந்து பிரசங்கம் செய்வதற்கான உரிமம் (லைசன்ஸ்) பெற்றார். அவரது சபையிலிருந்த அநேக ஊழியர்கள் அவரது ஊழியத்தை அங்கீகரித்தார்கள். அவர்களது முறையான அனுமதியுடன் அவர் தனது ஊழியத்தைத் தொடர்ந்தார். (39)

அவருடைய நேரடியான ஊழியம் முக்கியமாக நியூ இங்கிலாந்திற்குள்ளும், மத்திய மாகாணங்களுக்குள்ளும் அடங்கியிருந்த போதிலும், ஓய்வின்றி அவர் பயணம் செய்து பிரசங்கம் செய்தார். அநேக வருடங்களாக அவரது செலவுகளை அவரது சொந்தப் பணத்திலேயே பார்த்துக்கொண்டார். அதற்குப்பின்னும் ஒருபோதும் அழைக்கப்பட்ட இடங்களுக்குச் செல்லுமளவு போதுமான பணம் பெற்றுக்கொள்ளவில்லை. இவ்விதமாக, குறைந்த வருமானத்திலிருந்து அவர் செய்திருந்த பொது ஊழியம், அவரது சொத்துக்களைப் பாதித்தது. பின்னர் அவரது வாழ்நாளில்

அது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தும்போனது. அவர் ஒரு பெரிய குடும்பத்தின் தந்தையாக இருந்தார். ஆனால் அவர்கள் சிக்கனமும் உழைப்பும் உள்ளவர்களாக இருந்ததினால், அவர்களது குடும்பப் பராமரிப்பையும் அவரது செலவையும் சமாளிப்பதற்கு அவரது பண்ணையின் வருமானம் போதுமானதாக இருந்தது. (40)

கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையைப்பற்றி மில்லர் பொது இடங்களில் பிரசங்கிக்கத் தொடங்கிய இரண்டு வருடங்களுக்குப்பின், இரட்சகர், அவரது இரண்டாம் வருகையின் அடையாளமாகக் கூறியிருந்த கடைசி அடையாளம் காணப்பட்டது. "வானத்திலிருந்து நட்சத்திரங்கள் விழும்" (மத்தேயு 24:29) என்று இயேசு சொன்னார். "அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது" (வெளி. 6:13) என்று யோவான் வெளிப்படுத்துதலில், தேவனுடைய நாளை அறிவிக்கும் காட்சிகளைத் தரிசனத்தில் கண்டபோது கூறினார். நவம்பர் 13–ம் நாள், 1833–ம் வருடம் நிகழ்ந்த விண்வெளிக் கற்களின் வீழ்ச்சியால், இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் மக்களிடத்தில் குறிப்பான உணர்த்துதலைப் பெற்றது. ஒருபோதும் பதிவுசெய்யப்படாதவிதத்தில் மிகவும் விசாலமானதும் ஆச்சரியமானதுமான நட்சத்திர விழ்ச்சியின் காட்சி அது. "அமெரிக்க ஐக்கிய நாடெங்கிலுமிருந்த ஆகாயம் முழுவதும், மணிக்கணக்கில், நெருப்பின் ஒளியால், அமைதியற்றதாக இருந்தது. அந்த நாடு அமைக்கப்பட்டதுமுதல், சமுதாயத்தின் ஒரு பகுதியினரால் தீவிரமான வரவேற்புடனும் வேறொரு பகுதியினரால் பயத்துடனும் அபாயக்குரலுடனும் பார்க்கப்பட்ட இவ்விதமான விண்வெளிக்காட்சி, இந்த நாட்டில் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை." "அதன் மாட்சிமையும், பயங்கரமுமான அழகும், இன்னும் அநேகரது மனங்களில் தங்கி நிற்கிறது.... அந்த விண்வெளிக்கற்கள் பூமியின்மீது, கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் வீழ்ந்த அடர்த்தியளவிற்கு, மழைகூட ஒருபோதும் பெய்ததில்லை.... எப்பக்கமும் ஒரேமாதிரியாக இருந்தது. வார்த்தையில் கூறுவதானால், வானம் முழுவதும் அசைவதுபோல் இருந்தது.... பேராசிரியர் சில்லிமோனின் பத்திரிக்கையில் விவரிக்கப்பட்டதுபோல், அந்தக் காட்சி வட அமெரிக்கா எங்கிலும் காணப்பட்டது.... இரவு இரண்டு மணிமுதல் காலைஒளி பரவும்வரை, வானம் முற்றிலுமாக அமைதியாகவும் மேகங்கள் இல்லாமலும் இருந்தது, வானம் முழுவதிலும் ஓய்வின்றி ஒளிப்பிழம்புகள் விளையாடிக்கொண்டு இருந்தன."—R. M. Devens,American Progress; or,The Great Events of the Greatest Century, ch. 28,pars. 1–5. (41)

"அந்த பிரம்மாண்டமான காட்சியின் வர்ணணையை எந்த மொழியினாலும் விவரிக்கமுடியாது. நேரில் கண்டிராத ஒருவராலும் அதன்

மகிமையை போதுமான அளவில் எண்ணிப்பார்க்க முடியாது. உச்சியில் ஒரு இடத்தில் விண்மீன் மண்டலம் முழுவதும் ஒன்றுதிரண்டு, மின்னலின் வேகத்தில் ஒரே நேரத்தில், அடிவானத்தின் எல்லாத் திசையிலும் விண்கற்களை வீசியதுபோல இருந்தது. அப்படியிருந்தும், அவை தீர்ந்துபோகாததுபோலக் காணப்பட்டது. இந்த சந்தர்ப்பத்திற்கென்றே படைக்கப்பட்டவைபோல், ஆயிரக்கணக்கானவைகளை, ஆயிரக்கணக் கானவைகள் அதனதன் பாதைகளில் விரைவாகப் பின்தொடர்ந்தன."—F. Reed,in the Christian Advocate and Journal,Dec. 13,1833. (42)

"அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது" என்ற வர்ணணையைவிட மிகச்சரியான ஒன்றைக் கொடுக்க இயலாது."வூாந ழூடன ஊழரவெசலஅயஇெ" ைெீழசவடயனெ நுளநஎைெ யுனஎநசவளைநச,ழேஎ. 26,1833. (43)

நியூயார்க் நகரில், 1833–ம் வருடம் நவம்பர் 14–ம் தேதி வெளியான Journal of Commerce என்கிற வர்த்தகப் பத்திரிக்கையில்: "நேற்றுக் காலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியைப்போன்ற ஒன்றினை எந்த ஒரு தத்துவ சாஸ்திரியும், மூதறிஞனும் இதுவரை கூறியதுமில்லை எழுதினதுமில்லை என்று நான் உத்தேசிக்கிறேன். ஒரு தீர்க்கதரிசி பதினெட்டு நூற்றாண்டுகளுக்குமுன் இதை மிகச் சரியாக முன்னறிவித்தார். இங்கு கூறப்பட்டுள்ள நட்சத்திரங்கள் விழுவதை எழுத்தின்படி எரிகற்களாகப் புரிந்துகொள்ளமுடியாவிட்டால்— எழுத்தின்படி அதைத்தவிர வேறு எதுவும் இருக்கமுடியாது" என்று ஆச்சரியமான இந்தக் காட்சியைப்பற்றி நீண்ட அறிக்கை வெளியிடப்பட்டது. (44)

"அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" (மத்தேயு 24:33) என்று இயேசு அவரது சீடர்களுக்குக்கூறி எச்சரித்திருந்த அவரது வருகையைப்பற்றிய கடைசி அடையாளம் இவ்விதமாக வெளிக்காட்டப்பட்டது. இந்த அடையாளங்களுக்குப்பின், வரவிருக்கும் பெரிய நிகழ்ச்சியாக, வானம் சுருட்டப்பட்ட புத்தகம்போலாகி விலகிப்போவதையும், பூமி அதிர்வதையும், மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோவதையும், துன்மார்க்கர் பயத்தினால் மனுஷகுமாரனுடைய சமூகத்திலிருந்து ஓடிப்போக வகை தேடினதையும் யோவான் கண்டான் (வெளி. 6:12–17). (45)

நட்சத்திரங்களின் (விண்கற்களின்) விழுகையைக் கண்ட அநேகர், வரவிருக்கும் நியாயத்தீர்ப்பின் முன்னறிவிப்பாக அதைக் கண்டனர். "பெரிதும் பயங்கரமுமான நாளின் ஒரு பயங்கரமான நிழலாக, நிச்சயமான

முன்னோடியாக, ஒரு இரக்கமான அடையாளமாக, அதைக் கண்டனர்.— “The Old Countryman,” in Portland Evening Advertiser, Nov. 26,1833. இவ்வாறாக, தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை நோக்கி, மக்களின் கவனம் திரும்பியது. அநேகர் இரண்டாம் வருகையைப்பற்றிய எச்சரிப்பிற்கு செவிகொடுக்கும்படி நடத்தப்பட்டனர். (46)

1840–ல் மற்றுமொரு தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் பரவலான ஆர்வத்தை எழுப்பியது. இரண்டாம் வருகையைப்பற்றிப் பிரசங்கித்தவர்களில் ஒருவரான **ஜோசியா லிட்ச்**, இரண்டு வருடத்திற்கு முன்னரே, ஒட்டோமன் பேரரசுடைய விழுகையைக் குறித்த வெளிப்படுத்தின விசேஷம் ஒன்பதாம் அதிகாரத்தின் விளக்கத்தை வெளிக்காட்டியிருந்தார். அவரது காலக்கணக்கின்படி அந்த வல்லமை, “கி.பி.1840–ன் ஆகஸ்ட் மாதத்தில் கவிழ்க்கப்பட்டுப் போகவேண்டியதிருந்தது.” அந்தச் சம்பவம் நிறைவேறுவதற்குச் சில நாட்களுக்குமுன் “துருக்கியின் அனுமதியுடன் டிகோசஸ் என்பவன் அரியணை ஏறுவதற்குமுன், முதல் பகுதியான 150 வருடங்கள் மிகச் சரியாக நிறைவேறியாக வேண்டும். அந்த 301 வருடங்களும், பதினைந்து நாட்களும், முதலாம் பகுதியின் முடிவில் ஆரம்பமாகி, கான்ஸ்டாண்டிநோபிளில் உள்ள ஒட்டோமனின் வல்லமை உடைந்துபோகும் என்று எதிர்பார்க்கப்பட்ட காலமான 1840–ம் வருடம், ஆகஸ்ட் 11–ம் தேதியில் முடிவடையும். இதுதான் நடக்கவுள்ளது என்று நான் நம்புகிறேன்” என்று அவர் எழுதினார்.—Josiah Litch,in Signs of the Times,and Expositor of Prophecy,Aug. 1,1840. (47)

குறிப்பிடப்பட்டிருந்த அதே நேரத்தில், துருக்கி தனது தூதர்களின் மூலமாக ஐரோப்பாவிலிருந்த கூட்டணி வல்லமைகளின் பாதுகாப்பை ஏற்று, இவ்வாறாக அது தன்னை கிறிஸ்தவ நாடுகளின் கட்டுப்பாடுகளின் கீழ் வைத்தது. முன்கூறப்பட்டிருந்த இந்தச் சம்பவம் மிகச்சரியாக நிறைவேறியது. இது அறியப்பட்டபோது, மில்லராலும் அவரது கூட்டாளிகளாலும் பின்பற்றப்பட்டிருந்த தீர்க்கதரிசன விளக்கக் கோட்பாடுகளின் உண்மையைக் குறித்து திரளானவர்கள் உணர்வடைந்தனர். அதனால் திருவருகையின் இயக்கத்தில் ஒரு ஆச்சரியமான உத்வேகமே ஏற்பட்டது. கற்றறிந்தவர்களும் பதவிகளில் இருந்த மனிதர்களும் மில்லரின் நோக்குகளைப் பிரசங்கிப்பதிலும் செய்திகளாக வெளியிடுவதிலும் அவருடன் ஒருமைப்பட்டதினால் இந்தப் பணியானது 1840 முதல் 1844 வரை விரைவாகப் பரவியது. (48)

சிந்தனையினாலும் ஆராய்ச்சியினாலும் ஒழுக்கப்படுத்தப் பட்டிருந்த மில்லர், மனோவலிமை உடையவராக இருந்தார். இவைகளுடன் ஞானத்தின் ஆதாரமாக உள்ளவருடன் தன்னைப் பிணைத்துக் கொண்டதினால், பரத்தின்

ஞானத்தையும் சேர்த்துக்கொண்டார். எங்கெல்லாம் மரியாதை, உயர்வு, பண்பின் நேர்மை, சன்மார்க்க உயர்வு ஆகியவை மதிக்கப்பட்டிருந்ததோ, அங்கெல்லாம் அவர் போற்றத்தகுந்த குணங்களை உடையவராக இருந்தார். கிறிஸ்தவத் தாழ்மையுடனும், சுயக்கட்டுப்பாட்டுடனும் இருதயத்தில் மெய்யான இரக்கம் கொண்டிருந்த அவர், எல்லோரிடமும் சகஜமாகப் பேசக்கூடியவராகவும் பிறருடைய கருத்துக்களைக் கவனிக்கத் தயாராக இருந்து, அவர்களது வாதங்களை நிறுத்துப்பார்க்கக்கூடியவராகவும் இருந்தார். விருப்பமும் உணர்ச்சியின் எழுப்புதலுமின்றி எல்லாக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் தேவனுடைய வார்த்தையினால் சோதித்தார். அவரது பலமிக்க பகுத்தாயும் திறனும் பூரணமான வேத அறிவும் தவறுகளை மறுக்கவும் பொய்களை வெளிக்காட்டவும் அவரைத் தகுதிப்படுத்தியிருந்தது. (49)

அப்படியிருந்தும் கசப்புமிக்க எதிர்ப்பில்லாமல் அவரால் அவரது ஊழியத்தை முன்கொண்டுசெல்ல இயலவில்லை. ஆரம்பகால சீர்திருத்தவாதிகளுக்கு நேரிட்டது போலவே, இவரும் சத்தியத்தை முன்வைத்தபோது, பிரபலமான சமய போதகர்கள் அதை ஆதரவுடன் ஏற்றுக்கொள்ளவில்லை. வேதவாக்கியங்களைக்கொண்டு அவர்கள் தங்கள் நிலையைத் தாங்க முடியாதவர்களாக இருந்ததால், மனிதர்களின் கோட்பாடுகளையும் போதனைகளையும், முற்பிதாக்களின் பாரம்பரியங்களையும் பற்றிக்கொள்ளத் தேடினர். ஆனால் திருவருகையின் சத்தியத்தைப் பிரசங்கித்தவர்களால் தேவனுடைய வார்த்தை ஒன்று மட்டுமே சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. “வேதாகமம்! வேதாகமம் ஒன்று மட்டுமே” என்பதே அவர்களது ஒரே வார்த்தையாக இருந்தது. எதிர்தரப்பினரிடம் வாதத்திற்கு வேதவாக்கியங்கள் இல்லாமலிருந்தபோது, பரிகசித்துப் பேசவும், அவமதிக்கவும் செய்தனர். கர்த்தரின் இரண்டாம் வருகைக்காக மகிழ்ச்சியுடன் பார்த்திருந்து, பரிசுத்தமான ஒரு வாழ்க்கை வாழவும், அவரது பிரசன்னத்திற்காக ஆயத்தப்படும்படி மற்றவர்களுக்கு புத்திமதிகூறவும் முயன்றதை அவர்களது ஒரே எதிர்பார்ப்பாக எடுத்துக்கொண்டு, அதை அவதூறுபடுத்த காலம், பொருட்கள், தாலந்துகள் ஆகிய அனைத்தும் பயன்படுத்தப்பட்டன. (50)

இரண்டாம் வருகை என்கிற விஷயத்திலிருந்து மக்களின் மனதைத் திருப்புவதற்கு ஊக்கமான முயற்சிகள் செய்யப்பட்டன. கிறிஸ்துவின் வருகையையும் உலகத்தின் முடிவையும் பற்றிய தீர்க்கதரிசனங்களை ஆராய்வது பாவமாகவும், மனிதர்கள் வெட்கப்படவேண்டிய காரியமாகவும் தோன்றும்படி செய்யப்பட்டது. இவ்வாறாகப் பெரும்பான்மை மக்களாலான ஊழியம், தேவனது வார்த்தையின்மீதிருந்த விசுவாசத்தைக் கெடுத்தது.

அவர்களது போதனைகள் மனிதர்களை நாத்திகர்களாக்கியது. அநேகர் தங்களது சுயமான பக்தியற்ற இச்சைகளின்படியே நடப்பதற்கு உரிமை எடுத்துக்கொண்டனர். அதன்பின் தீமைக்குக் காரணமானவர்கள், அந்தத் தீமைகளையெல்லாம் அட்வென்டிஸ்டுகளின்மீது சுமத்தினர். (51)

நுண்ணறிவுள்ளவர்களையும், கவனமாகக் கேட்கக் கூடியவர்களையும் இழுத்தபோதும், பரிகாசமும் பகிரங்கமாகக் குற்றங்கூறுதல் இல்லாமல் சமய அச்சகத்தில் மில்லரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. கவனமற்றவர்களும் பக்தியற்றவர்களும் சமய ஆசிரியர்களின் நிலைகளால் தைரியமடைந்து, அவர்மீதும் அவரது பணியின்மீதும் அவமதிப்பைக் குவிக்கும் நோக்கத்துடன் மானக்கேடான பட்டப்பெயர்களைச் சூட்டுவதிலும், கீழ்த்தரமான, தேவ தூஷணங்களைப் பேசுவதிலும் ஈடுபட்டனர். நெருங்கிக்கொண்டிருக்கும் நியாயத்தீர்ப்பைப்பற்றி, இந்த உலகத்திற்கு பக்திவிநயமான எச்சரிப்பைக் கொடுப்பதற்காக நகரத்திலிருந்து—நகரத்திற்கும், ஊர்களிலிருந்து—ஊர்களுக்கும், ஓய்வு ஒழிச்சல் இன்றித் தனது வசதிகள் நிறைந்த வீட்டைவிட்டு, தனது சொந்தச் செலவில் பயணம் செய்திருந்த அந்த நரைத்த தலையை உடைய மனிதன் மதவெறியன், பொய்யன், யூகித்துக்கூறும் வஞ்சகன் என்று உறுமலுடன் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். (52)

அவர்மேல்குவிக்கப்பட்ட பரிகாசம், தவறு, ஏச்சு ஆகியவைகட்கு எதிராக சமயச்சார்பற்ற அச்சகத்திலிருந்துங்கூட கோபமிக்க எதிர்ப்பு உண்டானது: “இந்த அளவு திகைக்கவைக்கும் மகத்துவத்தையும் பயங்கரமான விளைவுகளையும் உள்ள அப்படிப்பட்ட ஒரு காரியத்தை விளையாட்டுப்போல சாதாரணமாகப் பேசுவது, அதைப் பிரச்சாரம் செய்பவர்கள், அதற்காகப் பரிந்துபேசுபவர்கள் ஆகியோரின் உணர்வுகளுடன் விளையாடுவதாக மட்டுமன்றி, நியாயத்தீர்ப்பு நாளைக் கேலிசெய்வதாகவும் தெய்வத்துவத்தையே ஊனப்படுத்துவதாகவும், அவரது நியாயச்சங்கத்தின் பயங்கரத்தை இகழ்வதாகவும் இருக்கிறது” என்று உலகப்பிரகாரமான மனிதர்களால் அறிவிக்கப்பட்டது.—Bliss,page 183. (53)

தீமைகளையெல்லாம் தூண்டிவிடுபவன் திருவருகையின் தூதின் விளைவுக்கு எதிரான போலியைச் செயல்படுத்த வகைதேடினது மட்டுமன்றி, அந்தச் செய்தியினை அறிவித்துவந்த செய்தியாளனையே அழிக்க வகைதேடியிருந்தான். மில்லரின் வார்த்தைகள் அதைக் கேட்டிருந்தவர்களின் பாவங்களைக் கடிந்து, அவர்களது சுயதிருப்திக்கு இடையூறு செய்யக்கூடிய விதத்தில் நடைமுறை வேதாகம சத்தியங்களாக இருந்ததினால், அந்தத் தெளிவான வெட்டும் வார்த்தைகள் அவர்களிடத்தில் பகைமையை உண்டாக்கியது. அவரது செய்திக்கு நேராக சபை

அங்கத்தினர்களால் வெளிக்காட்டப்பட்ட எதிர்ப்பு கீழ்த்தரமானவர்களை மேலும் மோசமான விதத்தில் நடந்துகொள்ள தைரியப்படுத்தவே, அவர் கூட்டம் நடத்திய இடத்தை விட்டுச்செல்லும்போது பகைவர்கள் அவரது உயிரை எடுக்கத் திட்டமிட்டனர். ஆனால் அந்தக்கூட்ட நெரிசலில் பரிசுத்த தேவதூதர்கள் இருந்தனர். மனித உருவிலிருந்த அவர்களில் ஒருவன் கர்த்தருடைய ஊழியக்காரனின் கரத்தைப்பிடித்து அந்தக் கோபாவேசமான கூட்டத்தினருக்கிடையிலிருந்து பாதுகாப்பான இடத்திற்கு நடத்திச்சென்றான். மில்லரது ஊழியம் இன்னமும் நடந்து முடியவில்லை. சாத்தானும் அவனது அணியினரும் அவர்களுடைய நோக்கத்தில் தோல்வியடைந்தனர். (54)

எல்லா எதிர்ப்புகளையும் கடந்து, திருவருகையின் இயக்கத்திலிருந்த ஆர்வம் தொடர்ந்து அதிகரித்தது. இருபது, நூறிலிருந்து பல ஆயிரங்களாக சபையினர் பெருகினர். பல்வேறுபட்ட ஆலயங்களில் அநேகர் சேர்ந்தனர். ஆனால் சிறிது காலத்திற்குப்பின், இந்த சபை மாறினவர்களுக்கு விரோதமாக எதிர்ப்பின் ஆவி செயல்பட்டது. மில்லரின் நோக்கினைத் தழுவினவர்களின்மீது சபைகள் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தன. இந்த நடவடிக்கைக்கு பதிலாக அவரது கோட்பாடுகளில் தவறு இருக்குமானால், அதை அவருக்கு வேதவாக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டவேண்டுமென்று அவர் அனைத்துக் கிறிஸ்தவ சபைகளையும் சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதினார். (55)

"எங்களது விசுவாசத்திற்கும் நடைமுறைக்கும் ஒரு சட்டமாக ஒரே ஒரு சட்டமாக வேத வாக்கியங்களை மட்டுமே நம்புகிறோம் என்று நீங்கள் கூறுகிறீர்கள். வேதவாக்கியங்களை அல்லாமல் நாங்கள் வேறு எதை நம்புகிறோம்? பிரசங்க மேடையிலிருந்தும், அச்சகங்கள் மூலமாகவும் எங்களை மிகவும் கடுமையாக, பகிரங்கமாக குற்றம்சாட்டுவதற்கு நாங்கள் செய்தது என்ன? எங்களை (அட்வென்டிஸ்டுகளை) சபைகளில் இருந்தும் ஐக்கியத்திலிருந்தும் நீக்குவதற்கு என்ன நியாயமான காரணம் இருக்கிறது? நாங்கள் தவறானவர்களாக இருந்தால், எங்களது தவறு எங்கே இருகிறது என்று காட்டுங்கள் என்று நாங்கள் மன்றாடுகிறோம். நாங்கள் போதுமான அளவு கேலிசெய்யப்பட்டிருக்கிறோம் அது நாங்கள் தவறில் இருக்கிறோம் என்று எங்களை ஒருபோதும் நம்பச்செய்யாது. தேவனுடைய வார்த்தை ஒன்றுமட்டுமே எங்களுடைய நோக்கினை மாற்ற வல்லது. வேதவாக்கியங்களில் சான்றுகளைக் கண்டதால், எங்களுடைய முடிவுகள் ஆராய்ந்து ஜெபத்தோடு செய்யப்பட்டிருக்கின்றன"என்று எழுதினார்.—Ibid., pages 250,252. (56)

யுகங்கள் நெடுகிலும் தேவன் அவரது ஊழியக்காரர்களின் மூலமாக உலகத்திற்குக் கொடுத்த எச்சரிப்புகள் இவ்விதமான அவ நம்பிக்கையுடனும்

அவிசுவாசத்துடனும்தான் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த மக்களுடைய அக்கிரமங்கள் பூமியின் மேல் வெள்ளத்தை அனுப்பும்படி அவரை ஏவினபோது, தங்களுடைய துன்மார்க்கமான வழிகளை விட்டுத் திரும்பும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும்படி, அவர் தமது நோக்கத்தை அவர்களுக்கு முதலில் அறிவித்தார். அவர்களை அழிப்பதன் வாயிலாக தேவ கோபம் வெளிப்படாதபடிக்கு, 120 வருடங்கள் மனந்திரும்பும்படியான எச்சரிப்பு அவர்களது செவிகளில் ஒலித்தது. ஆனால் அந்தத் தூது அவர்களுக்கு ஒரு கட்டுக்கதைபோலக் காணப்பட்டது, அவர்கள் அதை நம்பவில்லை. துன்மார்க்கத்தினால் தைரியம் அடைந்த அவர்கள், தேவனுடைய தூதைப் பரிகசித்தனர், அவனது மன்றாட்டுக்களை லேசாகக் கருதி, அவன் யூகித்து கூறுகிறான் என்றுங்கூட அவரைக் குற்றப்படுத்தினர். பூமியின் பெரியமனிதர்கள் அனைவருக்கும் எதிராக ஒரு மனிதன் நின்றது எப்படிப்பட்ட துணிகரம்? நோவாவின் தூது உண்மையானதாக இருந்திருந்தால், ஏன் உலகம் முழுவதும் அதைப் பார்க்கவில்லை? நம்பவில்லை? ஆயிரக்கணக்கானவர்களின் ஞானத்திற்கு எதிராக ஒரு மனிதனின் வலியுறுத்தல் இருந்தது! அவர்கள் அந்த எச்சரிப்பை மதிக்கமாட்டார்கள் அந்த பேழைக்குள் அடைக்கலம்புகவும்மாட்டார்கள். (57)

மாறாமல் வந்துகொண்டிருக்கின்ற பருவகாலங்கள், ஒரு போதும் மழையைப் பொழியச்செய்திராத நீலவானம், இரவில் மென்மையாகப் பெய்யும் பனியினால் புத்துணர்வடைந்த பசுமையான வயல்வெளிகளாகிய இயற்கையின் பொருட்களை, ஏளனம் செய்தவர்கள் சுட்டிக்காட்டி, "இவன் உவமைகளைத்தானே கூறுகிறான்" என்று குரல் எழுப்பினார்கள். குற்றப்படுத்துவதில் அவர்கள் அந்த நீதியின் பிரசங்கியைக் காட்டுத்தனமான வெறியன் என்று கூறி, தாங்கள் அனுபவித்திருந்த காரியங்களில், இதற்கு முன்னிருந்ததைவிட அதிகமாக ஈடுபட அதிகமான ஆவலுடன் சென்றனர். ஆனால் அவர்களது அவநம்பிக்கை முன்னறிவிக்கப்பட்டிருந்த சம்பவத்தைத் தடுக்கவில்லை. மனந்திரும்புவதற்குப் போதுமான வாய்ப்பினை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களது துன்மார்க்கத்தை தேவன் நீண்ட காலமாகப் பொறுமையுடன் சகித்தார். ஆனால் குறிக்கப்பட்டிருந்த நேரத்தில், அவரது இரக்கத்தை நிராகரித்தவர்களை அவரது நியாயத்தீர்ப்புகள் சந்தித்தன! (58)

தமது இரண்டாம் வருகையைப்பற்றி அதேபோன்ற நம்பிக்கையின்மை இருக்கும் என்று கிறிஸ்து அறிவிக்கிறார். நோவாவின் காலத்தில் "ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்." "அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும்

நடக்கும்” (மத்தேயு 24:39) என்கிறது நமது இரட்சகரின் வார்த்தை. தேவனுடைய ஜனங்கள் என்று கூறிக்கொள்ளுபவர்கள், உலகத்துடன் ஒன்றுபட்டு, அவர்களைப் போலவே வாழ்ந்து, தடைசெய்யப்பட்டுள்ள சந்தோஷங்களில் அவர்களுடன் கலக்கும்போது, உலகத்தின் ஆடம்பரம் சபையின் ஆடம்பரமாகும்போது, திருமணமணிகள் ஒலிக்கும்போது, அநேக வருட உலகச்செழுமையை அநேகர் எதிர்நோக்கி இருக்கும்போது, வானத்தில் மின்னல் திடீரென்று தோன்றி மறைவதுபோல், அவர்களது பிரகாசமான தரிசனங்களும் மாயத்தோற்றமான நம்பிக்கைகளும் முடிவுக்குவரும். (59)

வரவிருந்த ஜலப்பிரளயத்தைப்பற்றி உலகை எச்சரிக்கும்படி, தேவன் தமது ஊழியக்காரனை அனுப்பினதுபோல, அவரது கடைசி நியாயத்தீர்ப்பின் சமீபத்தைப்பற்றி அறியச்செய்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியக்காரர்களை அவர் அனுப்பினார். நோவாவின் நாட்களிலிருந்தவர்கள் நீதியைப் பிரசங்கித்தவனின் செய்தியைப் பரிகசித்துச் சிரித்ததுபோலவே, மில்லரின் நாட்களிலும், தேவனுடைய மக்கள் என்று தங்களைச் சொல்லிக்கொண்டவர்களிலும் அநேகர், எச்சரிக்கையின் வார்த்தைகளைப் பரிகசித்தனர். (60)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிய கோட்பாட்டின் பிரசங்கம் சபைகளுக்கு ஏன் வரவேற்கப்படாததாக இருந்தது? துன்மார்க்கருக்கு கர்த்தருடைய வருகை ஆபத்தையும் பாழ்க்கடிப்பையும் கொண்டுவரும்போது, நீதிமான்களுக்கு அது மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் கொண்டுவருகிறது. யுகங்கள் நெடுகிலும் இந்த மாபெரும் சத்தியம் தேவனுடைய விசுவாசமிக்கவர்களுக்கு ஆறுதலாக இருந்தது. ஏன் அது அவருடைய ஜனங்கள் என்று சொல்லிக்கொண்டவர்களுக்கு, அதன் ஆசிரியரைப்போலவே, “இடறுதற்கேதுவான கல்லும் விழுவதற்கேதுவான கன்மலையுமாயிற்று”? “நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, … மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்” (யோவான் 14:3) என்கிற வாக்குத்தத்தத்தை ஆண்டவர்தாமே தமது சீடர்களுக்குக் கொடுத்தார். மன உருக்கமிக்க நமது இரட்சகர்தான், அவர் பரலோகத்திற்குச் சென்றபோது, தமது பின்னடியார்களின் தனிமையையும் துயரையும் எதிர்பார்த்து, நேரடியாக மறுபடியும் வருவார் என்னும் வாக்குறுதியினால் அவர்களை ஆறுதல்படுத்தும்படி தமது தூதர்களை ஏற்படுத்தினார். தாங்கள் நேசித்தவரின் கடைசி சாயலைக் காணும்படியான நோக்கத்துடன் மேல்நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்த சீடர்களின் கவனம், “கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட

இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" (அப். 1:11) என்ற வார்த்தைகளினால் திருப்பப்பட்டது. அந்த தேவதூதர்களின் தூதினால் நம்பிக்கை புதிதாகச் சுடர்விட்டது. "அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பிவந்து, நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள்"-—லூக். 24:52,53. இயேசு அவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டதினாலும், இந்த உலகத்தின் போராட்டங்களுடனும், சோதனைகளுடனும் அவர்கள் விட்டுவிடப்பட்டனர் என்பதற்காக அவர்கள் மகிழ்ச்சியடையாமல், அவர் மறுபடியும் வருவார் என்கிற அந்த தேவதூதர்களின் வாக்குறுதியினால் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். (61)

பெத்லெகேமின் மேய்ப்பர்களுக்கு தேவதூதனால் கொடுக்கப்பட்டது மகிழ்ச்சியான நற்செய்தியாக இருந்ததைப்போன்று, கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய அறிவிப்பும் இருந்திருக்க வேண்டும். இரட்சகரை உண்மையாகவே நேசிப்பவர்கள், தங்களது நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கைகள் எவரை மையமாகக் கொண்டுள்ளதோ, அவர் மறுபடியும் வருகிறார்—கேவலப்படவும் நிந்திக்கப்படவும், முதலாம் வருகையைப் போன்று நிராகரிக்கப்படவுமல்ல் வல்லமையுடனும், மகிமையுடனும் அவரது மக்களை மீட்க வருகிறார்—என்கிற தேவனுடைய வார்த்தையின்மீது கட்டப்பட்ட அறிவிப்பை மகிழ்ச்சியுடன் போற்றியிருக்கவேண்டும். இரட்சகரை நேசிக்காதவர்கள்தான் அவர் தூரமாக இருக்கட்டும் என்று விரும்புவர். இந்தச் சபைகள் தேவனைவிட்டு விலகிச் சென்றுவிட்டன என்பதற்கு பரலோகம் அனுப்பின அந்தத் தூதினால் எரிச்சலும் விரோத மனப்பான்மையும் எழும்பினது என்பதைவிட முடிவான சான்று வேறு ஒன்றுமில்லை. (62)

திருவருகையின் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டவர்கள், தேவனுக்கு முன்பாக மனந்திரும்பவும் தாழ்மைப்படவும் வேண்டிய அவசியத்தை அறிந்தனர். நெடுநாட்களாகக் கிறிஸ்துவிற்கும் உலகத்திற்கும் இடையில் நின்றுகொண்டிருந்த அநேகர், "ஒரு தீர்மானம் எடுக்கவேண்டிய வேளை இப்பொழுது வந்துவிட்டது என்பதை உணர்ந்தனர். நித்தியகாரியங்கள் அவர்களுக்கு ஒரு அபூர்வமானதாகக் கணக்கிடப்பட்டது. பரலோகம் சமீபமாகக் கொண்டுவரப்பட்டது. தேவனுக்கு முன்பாக தாங்கள் குற்றவாளிகளாக இருப்பதை அவர்கள் உணர்ந்தனர். கிறிஸ்தவர்கள் புதிய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உயிர்ப்பிக்கப்பட்டனர். காலம் மிகக் குறைவாக உள்ளது என்றும் மனிதர்களுக்காக என்ன செய்யவேண்டுமோ அவைகள் விரைவாகச் செய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் உணர்ந்தனர். பூமி

பின்சென்றது. நித்தியம், அது சம்பந்தப்பட்ட இன்பம் அல்லது துன்பம் அனைத்தோடும், அவர்கள்முன் திறக்கப்படுவதுபோல் காணப்பட்டது. அநித்தியமான அனைத்தும் விழுங்கப்பட்டதுபோல் ஆத்துமா உணர்ந்தது.” தேவ ஆவியானவர் அவர்கள்மீது தங்கி, தங்களது சகோதரர்களுக்கும், அதைப்போலவே பாவிகளுக்கும் தேவனுடைய நாளுக்கு என்று ஆயத்தமாகும்படி, வாஞ்சைமிக்க வேண்டுகோளைக் கொடுக்கத்தக்கதாக, அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்தார். அர்ப்பணிக்காத சடங்கின் படியான சபை விசுவாசிகளுக்கு, மௌனமான அவர்களுடைய அன்றாட வாழ்க்கை ஒரு தொடர்ச்சியான கடிந்துகொள்ளுதலாக இருந்தது. இன்பம் தேடி அலைவதிலிருந்தும், பணம் சம்பாதிக்கும் ஈடுபாட்டிலிருந்தும், உலக மேன்மைக்கான அவர்களது ஆசைகளிலிருந்தும், தடுக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. எனவே, திருவருகை விசுவாசத்திற்கும், அதைப் பறைசாற்றியவர்களுக்கும் எதிராகப் பகையும் எதிர்ப்பும் எழும்பியது. (63)

தீர்க்கதரிசன காலக்கணக்கிலிருந்த வாதங்கள் தகர்க்கமுடியாததாகக் காணப்பட்டதினால், அந்த பொருளைப்பற்றி ஆராய்பவர்களை, எதிரிகள் இந்தத் தீர்க்கதரிசனங்கள் முத்திரிக்கப்பட்டவை என்று போதித்து, அதைரியப்படுத்த முயன்றனர். இப்படியாகப் புரொட்டஸ்டாண்டுகள் ரோமன் கத்தோலிக்கர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினர். போப்புமார்க்க சபை மக்களிடமிருந்து வேதாகமத்தைத் தடுத்துவைத்திருந்த அதே நேரம், பரிசுத்த வார்த்தைகளின் முக்கியமான பகுதிகள், குறிப்பாக நமது காலத்திற்குப் பொருந்தக்கூடியவைகள், புரிந்துகொள்ளமுடியாதவைகள் என புரொட்டஸ்டாண்டு சபைகள் கூறிக்கொண்டன. (64)

தானியேலின் தீர்க்கதரிசனங்களிலும், வெளிப்படுத்தின விசேஷத்திலும் உள்ள தீர்க்கதரிசனங்கள் புரிந்துகொள்ளமுடியாத தேவ இரகசியங்கள் என்று ஊழியக்காரர்களும் மக்களும் அறிவித்தனர். ஆனால் கிறிஸ்து அவரது சீடர்களை அவர்களுடைய காலத்தில் நிகழ உள்ள சம்பவங்களைப்பற்றி தானியேல் தீர்க்கதரிசியின் வார்த்தைகளினிடத்திற்கு நடத்தி, “வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்” (மத்தேயு 24:15) என்று கூறினார். வெளிப்படுத்தின விசேஷம்—புரிந்துகொள்ளமுடியாத தேவ இரகசியம் என்கிற பிடிவாதமான கூற்று, “சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக் காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். … தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்”

(வெளி. 1:1–3) என்று அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயரினாலேயே அந்தக் கருத்துடன் முரண்பட்டுள்ளது. “காலம் சமீபமாயிருக்கிறது” என்பதே தேவனின் வாக்கு! (65)

அதை வாசிக்கிறவன் பாக்கியவான் என்று தீர்க்கதரிசி கூறுகிறான்—அதை வாசிக்காதவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு ஆசீர்வாதம் இல்லை. அதைக் கேட்கிறவர்கள் பாக்கியவான்கள்—ஆம், அதைப்போலவே அந்தத் தீர்க்கதரிசனங்களைப்பற்றி எதையும் கேட்க மறுப்பவர்களும் உள்ளனர். அந்த ஆசீர்வாதங்கள் அந்த வகுப்பினருக்கு இல்லை. இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்—வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள எச்சரிப்புகளுக்கும் போதனைகளுக்கும் செவிசாய்க்க அநேகர் மறுக்கின்றனர். அவர்களில் ஒருவராலும் இதில் வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ள ஆசீர்வாதங்களின்மீது உரிமைபாராட்ட முடியாது. இதில் கொடுக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களை பரிகாசித்து சிரித்து, பக்திவிநயத்துடன் கொடுக்கப்பட்டுள்ள அடையாளங்களைப் பரிகசிக்கும் அனைவரும், தங்களது வாழ்க்கையைச் சீர்திருத்தி, மனுஷ குமாரனுடைய வருகைக்கென்று தங்களை ஆயத்தம்செய்ய மறுக்கும் அனைவரும், ஆசீர்வதிக்கப்படாதவர்களாக இருப்பார்கள். (66)

ஆவியானவரின் ஏவுதலினால் அருளப்பட்டுள்ள சாட்சி, காணக் கூடியதாக இருந்தும், வெளிப்படுத்தின விசேஷம் மனிதனின் புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்ட தேவ இரகசியம் என்று மனிதர்கள் எவ்வளவு துணிவாக போதிக்கின்றனர்? அது வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒரு தேவ இரகசியம்! திறக்கப்பட்டுள்ள ஒரு புத்தகம்!! வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆராய்ச்சி தானியேலின் தீர்க்கதரிசனத்திற்கு மனதை நடத்துகிறது. அவை இரண்டும் தேவனால் மனிதர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள—இந்த உலக வரலாற்றின் முடிவில் நிகழ உள்ள சம்பவங்களைப்பற்றிய முக்கியமான போதனைகளை முன் வைக்கிறது. (67)

ஆழமானதும், மயிர்க்கூச்செரியச் செய்வதுமான சபையின் அனுபவத்திலுள்ள காரியங்களின் காட்சிகள் யோவானுக்குத் திறக்கப்பட்டன. தேவனுடைய மக்களின் நிலைமைகள், அபாயங்கள், போராட்டங்கள், இறுதி விடுதலை ஆகியவைகளை யோவான் கண்டான். பரலோகக் களஞ்சியத்திற்கான கதிர்களாகவோ அல்லது அழிவின் நெருப்பிற்கான விறகுகளாகவோ அறுவடையை முற்றச்செய்வதற்கான முடிவுச் செய்திகளை அவன் பதிவுசெய்கிறான். தவறிலிருந்து சத்தியத்திற்குத் திரும்புகிறவர்கள் அவர்களுக்கு முன்னுள்ள ஆபத்துக்களையும் போராட்டங்களையுங்குறித்து அறிவுறுத்தப்படுவதற்காக மிக முக்கியமான, குறிப்பாக கடைசிகாலச்

சபைக்கான விஷயங்கள் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டன. இந்த உலகத்தின் மீது வருகிறவைகளைக்குறித்து ஒருவரும் இருளில் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. (68)

அப்படியானால் ஏன் பரிசுத்த எழுத்துக்களின் முக்கியமான ஒரு பகுதியைப்பற்றிய இந்தப் பரந்த அறியாமை இருந்து வருகிறது? அதன் போதனைகளை ஆராய்ந்து பார்ப்பதில் பொதுவான விருப்பமின்மை ஏன்? அந்தகார லோகாதிபதியின் வஞ்சகங்கள் மனிதர்களுக்கு வெளிக்காட்டப்படுவதை மறைக்கும்படி, அவனது திட்டமிடப்பட்ட முயற்சியின் விளைவே அது. வெளிப்படுத்தின விசேஷத்தை ஆராய்வதற்கு எதிராக நடத்தப்படவுள்ள போரை முன்னதாகவே கண்டு, வெளிப்படுத்தல்காரரான இயேசு கிறிஸ்து, அதை வாசிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும், அந்தத் தீர்க்கதரிசனத்தின் வார்த்தைகளைக் கைக்கொள்ளுபவர்களுக்கும் ஒரு ஆசீர்வாதத்தை அறிவித்திருக்கிறார். (69) ★

# 19

# இனிப்பான ஒரு எதிர்பார்ப்பு!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 343–354)**

இந்த பூமியில் யுகங்கள்தோறும் நடந்த ஒவ்வொரு சமய இயக்கத்திலும் அல்லது பெரும் சீர்திருத்தத்திலும் குறிப்பிடத்தகுந்த ஒற்றுமை இருப்பதை தேவனுடைய செயல்கள் காட்டுகின்றன. மனிதர்களுடன் தேவன் ஈடுபடும் கொள்கைகள் எப்போதும் ஒரேவிதமாகவே உள்ளன. நிகழ்காலத்தில் உள்ள முக்கியமான இயக்கங்களுக்கு இணையான சம்பவங்கள், முற்காலங்களில் இருந்தன. கடந்தகாலங்களிலிருந்த சபையின் அனுபவம் நமது காலத்திற்குறிய பெருமதிப்புள்ள பாடங்களைக் கொண்டுள்ளன. (1)

இரட்சிப்பின் ஊழியத்தை முன்கொண்டு செல்லும் பூமியின் மீதுள்ள பெரும் இயக்கங்களை, தேவன் தமது பரிசுத்த ஆவியானவரின் மூலமாக அவரது ஊழியக்காரர்களைக்கொண்டு நடத்துகிறார் என்பதைவிட அதிகமாக எந்த சத்தியமும் வேதாகமத்தில் மிகத்தெளிவாகப் போதிக்கப்படவில்லை. தேவனுடைய கிருபை, இரக்கம் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதில், தேவனுடைய கரத்தில் கருவிகளாக இருக்கும்படி, மனிதர்கள் அவரால் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்யவேண்டிய வேலையின் பகுதி உள்ளது. கொடுக்கப்பட்டுள்ள பணியைச் செய்ய அவனைத் தகுதிப்படுத்தும்படிக்கும், அந்தக் காலத்தின் தேவைக்கேற்பவும் ஒரு குறிப்பிட்ட அளவு வெளிச்சம் கொடுக்கப்படுகிறது. ஆனால் எந்த ஒரு மனிதனும் அவன் எந்த அளவிற்குப் பரலோகத்தால் கௌரவிக்கப்பட்டவனாக இருந்தபோதிலும், மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தைப்பற்றிய முழுமையான புரிந்துகொள்ளுதலை அடையவில்லை அல்லது தன் காலத்தின் பணியில் தெய்வீக நோக்கத்தைப்பற்றிய பூரணமான போற்றுதலையும் உணரவில்லை. செய்யும்படி அவர் தங்களிடம் கொடுக்கும்

பணியினால், தேவன் எதை நிறைவேற்றக்கூடும் என்பதை மனிதர்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளுவதில்லை. அவரது பெயரால் அவர்கள் கூறும் தூதில் அடங்கியிருக்கிற செய்தியையும் அவர்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளுவதில்லை. (2)

"தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வ வல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ?"–யோபு 11:7. "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது"– ஏசாயா 55:8,9. "நானே தேவன், வேறொருவரும் இல்லை; அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும்செய்யப்படாத வைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்"–ஏசாயா 46:9,10. (3)

ஆவியின் சிறப்பான ஒளியினால் அனுகூலம் பெற்றிருந்த தீர்க்கதரிசிகளுங்கூட, தங்களிடம்ஒப்படைக்கப்பட்டிருந்த வெளிப்படுத்தல்களின் முக்கியத்துவம்பற்றி, முழுமையாக அறிந்திருக்கவில்லை. தேவனுடைய மக்களுக்கு அதில் அடங்கியிருந்த போதனையின் அவசியத்திற்குத்தக்கபடி, ஒவ்வொரு காலத்திலும் அதன் பொருள் விவரிக்கப்படவேண்டியதாக இருந்தது. (4)

சுவிசேஷத்தின் மூலமாக வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள இரட்சிப்பைப்பற்றி எழுதும்போது, "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையா யிருக்கிறார்கள்" (1பேதுரு 1:10–12) என்று பேதுரு கூறுகிறார். (5)

ஆண்டவரால் தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்த காரியங்கள் அனைத்தையும் முழுமையாகப் புரிந்துகொள்ள அவர்களுக்கு

கொடுக்கப்படாதிருந்தும், தேவன் வெளிப்படுத்த விரும்பியிருந்த அத்தனை வெளிச்சத்தையும் அடைந்துகொள்வதற்கு அவர்கள் அக்கரையுடன் வகைதேடினார்கள். அவர்கள் "இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும்" "கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்." கிறிஸ்தவ காலத்திலுள்ள தேவனுடைய ஜனங்களுக்கு அவர்களுடைய நன்மைக்கென்று அவரது ஊழியக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் எப்படிப்பட்ட ஒரு பாடமாக உள்ளது! "தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது." இன்னும் பிறக்காமல்இருந்த தலைமுறையினருக்கென்று வெளிப்படுத்தப்பட்டவைகளைப் பற்றி "கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினதால்" அந்த தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் சாட்சிகளாயிருக்கிறார்கள். அவர்களின் இந்த பரிசுத்தமான வாஞ்சையோடு, பிற்காலங்களில் உள்ளவர்களது—பரலோகத்தின் இந்த ஈவைப்பற்றின அக்கரையின்மையுடனும் சம்பந்தமற்ற விதத்துடனும் ஒப்பிட்டுப் பாருங்கள்! சௌகரியமாக இருப்பதை விரும்பி, உலகை நேசித்து, தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொள்ளமுடியாதவைகள் என்று அறிவித்து, மந்தமாகவும், திருப்தியாகவும் இருப்பவர்களுக்கு இது எப்படிப்பட்ட ஒரு கடிந்துகொள்ளுதலாக இருக்கிறது! (6)

எல்லையில்லாத ஒருவரின் ஆலோசனைக்குள் நுழைவதற்கு, எல்லைக்குட்பட்ட மனிதர்களின் மனங்கள் போதுமானதாக இல்லாமலிருந்தாலும், அல்லது அவரது நோக்கங்களை அவர் செயல்படுத்தும் விதத்தை முழுவதுமாக அறிந்துகொள்ள அவர்களால் முடியாமலிருந்தாலும், அவர்களிடமுள்ள சில தவறுகளாலும் அலட்சியங்களாலும்தான், பரலோகத்தின் தூதை அவர்கள் மங்கலாகப் புரிந்துகொள்ளுகின்றனர். மக்களின் மனங்கள்—தேவனுடைய ஊழியக்காரர்களின் மனங்கள்கூட, மனிதர்களின் கருத்துக்கள், பாரம்பரியங்கள், தவறான போதனைகளினால் அடிக்கடி குருடாகிவிடுவதனால், தேவன் அவரது வார்த்தையில் வெளிப்படுத்தியுள்ள பெரும் காரியங்களின் ஒருபகுதியை மட்டுமே அவர்களால் அறிந்துகொள்ள முடிகிறது. கிறிஸ்துவின் சீடர்களிடமும், இரட்சகர் அவர்களுடன் நேரடியாக இருந்தபோதுங்கூட இப்படியே இருந்தது. இஸ்ரவேலை உலகளாவிய பேரரசின் அரியணைக்கு உயர்த்தும் உலகப்பிரகாரமான ஒரு இளவரசராக மேசியா வருவார் என்ற பெரும்பான்மையினரின் எண்ணத்தினால், சீடர்களின் மனங்களும் நிரப்பப்பட்டிருந்ததினால், அவரது பாடுகளையும் மரணத்தையுங்குறித்து அவர் முன்னறிவித்த வார்த்தைகளின் பொருளை அவர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. (7)

"காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1:15) என்ற தூதுடன் கிறிஸ்துதாமே அவர்களை அனுப்பிவைத்தார். அந்தத் தூது தானியேல் ஒன்பதாம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பிரபுவாகிய மேசியா வரும்வரைக்கும் அறுபத்தொன்பது வாரங்கள் செல்லும் என்று தேவதூதனால் அறிவிக்கப்பட்டிருந்தது. உலகம் முழுவதையும் ஆட்சி செய்யும் மேசியாவின் ராஜ்யம் எருசலேமில் அமைக்கப்பட இருப்பதை மேலான நம்பிக்கையுடனும், மகிழ்ச்சிமிக்க எதிர்பார்ப்புடனும் சீடர்கள் எதிர்நோக்கி இருந்தனர். (8)

கிறிஸ்து அவர்களுக்கு ஒப்புவித்த தூதின் பொருளை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருந்தபோதிலும் அத்தூதைப் பிரசங்கித்தனர். அவர்களது அறிவிப்பு, தானியேல் 9:25–ஐ அஸ்திவாரமாகக் கொண்டிருந்தபோதிலும், அதே அதிகாரத்தின் அடுத்த வசனத்தில், மேசியா சங்கரிக்கப்படுவார் என்றிருந்ததை அவர்கள் காணவில்லை. அவர்களது பிறப்பிலிருந்தே, அவர்களது இருதயங்கள் எதிர்பார்க்கப்பட்டிருந்த பூமிக்குரிய அரசின் மகிமையின்மீது பதிந்திருந்தது. அது தீர்க்கதரிசனக் குறிப்புகளையும் கிறிஸ்துவின் வார்த்தைகளையும் புரிந்துகொள்ளுவதை ஒரேயடியாகக் குருடாக்கியிருந்தது. (9)

யூதஇனத்திற்கு இரக்கத்தின் அழைப்பை முன்வைக்கும் பணியை செய்து, அதே நேரத்தில், அவர் தாவீதின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்படுவதை அவர்கள் எதிர்பார்த்திருந்தபோது, அவர் ஒரு குற்றவாளியாகப் பிடிக்கப்பட்டு, சவுக்கால் அடிக்கப்பட்டு, கேவலமாக நடத்தப்பட்டு, பழிக்கப்பட்டு, கல்வாரி சிலுவையின்மீது உயர்த்தப்பட்டதைக் கண்டனர். அவர்களது கர்த்தர், கல்லறையில் நித்திரை செய்திருந்த நாட்களின்போது, எப்படிப்பட்ட மனத்துயரமும் மனவேதனையும் சீடர்களின் இருதயங்களைக் கிழித்திருந்தது? (10)

தீர்க்கதரிசனத்தால் குறிக்கப்பட்டிருந்த மிகச்சரியான நேரத்திலும் விதத்திலும் கிறிஸ்து வந்தார். அவரது ஊழியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் வேத வாக்கியங்களின் சாட்சிகள் நிறைவேறின. அவர் இரட்சிப்பின்தூதைப் பிரசங்கித்தார். "அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தது." அதைக் கேட்டவர்களின் இருதயங்கள் அது பரலோகத்தினுடையது என்று சாட்சி பகர்ந்தன. தமது குமாரனின் தெய்வீக ஏற்படுத்துதலுக்கு வசனமும் தேவ ஆவியும் சாட்சிகொடுத்தன. (11)

சீடர்கள் இன்னமும் அழியாத அன்போடு அவர்களது அன்பான ஆண்டவரைப் பிடித்துக்கொண்டிருந்தனர். அப்படியிருந்தும் அவர்களது

மனங்கள் நிச்சயமின்மை, சந்தேகம் ஆகியவைகளால் சூழ்ந்துகொள்ளப் பட்டிருந்தன. அவர்களது மனவேதனையில், கிறிஸ்து அவரது பாடுகளையும், மரணத்தையும் குறித்து முன்னதாகவே சுட்டிக்காட்டியிருந்த வார்த்தைகளை நினைவுக்குக்கொண்டுவர அவர்கள் தவறியிருந்தனர். நசரேயனாகிய இயேசு மெய்யான மேசியாவாக இருந்திருந்தால், அவர்கள் இப்படிப்பட்ட துயரிலும் மனமடிவிலும் மூழ்கி இருந்திருப்பார்களா? இந்தக் கேள்விதான், அவரது மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் குறுக்கிட்டிருந்த நம்பிக்கையற்ற அந்த ஓய்வுநாளின் மணிநேரங்களில் இரட்சகர் நித்திரை செய்திருந்தபோது, அவர்களைச் சித்திரவதை செய்திருந்தது. (12)

துயர இரவின் இருள், இயேசுவின் அந்த அடியார்களைச் சுற்றிலும் கனமாக இருந்திருந்தபோதிலும், அவர்கள் கைவிடப்படவில்லை. “நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்.... அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டுவருவார், அவருடைய நீதியைப் பார்ப்பேன்”—மீகா 7:8–9. “உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப் படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி” (சங். 139:12) என்று தீர்க்கதரிசி சொல்லுகிறார். “செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்”—சங். 112:4. “குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்” (ஏசாயா 42:16) என்று தேவன் கூறியிருக்கிறார். (13)

கர்த்தருடைய நாமத்தினால் சீடர்கள் கொடுத்த அறிவிப்பு, குறிப்பிட்ட ஒவ்வொன்றிலும் சரியாக இருந்து, அவைகள் சுட்டிக்காட்டியிருந்த நிகழ்ச்சிகளும் நடந்துகொண்டிருந்தன. “காலம் நிறைவேறிற்று தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிருக்கிறது” என்பது அவர்களது தூதாக இருந்தது. “காலம்”—தானியேல் ஒன்பதாம் அதிகாரத்தின் கிறிஸ்து மேசியாவாக அபிஷேகம்பண்ணப்படும்வரை நீண்டிருந்த அறுபத்து ஒன்பது வாரங்கள் முடிந்தபோது, கிறிஸ்து யோர்தானில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றபின், ஆவியானவரால் அபிஷேகம்பண்ணப்பட்டார். “சமீபமாயிருக்கிறது” என்று அவர்கள் அறிவித்த “தேவனுடைய இராஜயம்” கிறிஸ்துவின் மரணத்தினால் ஏற்படுத்தப்பட்டது. இந்த இராஜ்யம் நம்பும்படி அவர்கள் போதிக்கப்பட்டிருந்ததுபோல பூமிக்குரிய இராஜயமல்ல. அல்லது “வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய

ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்;...சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்"–தானியேல் 7:27. காலத்தில் ஸ்தாபிக்கப்படவிருக்கிற எதிர்கால நித்திய இராஜ்யமும் அல்ல. வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதுபோல, தேவனுடைய இராஜ்யம் என்பது கிருபையின் இராஜ்யம், மகிமையின் இராஜ்யம் ஆகிய இரண்டையும் குறிப்பிடுகிறது. எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் கிருபையின் இராஜ்யம் பவுலினால் காட்சிக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதவிக்கக் கூடியவராக, நமக்காகப் பரிந்துபேசும் மனஉருக்கமுள்ளவராகக் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டியபின், "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபி. 4:15,16) என்று அப்போஸ்தலன் பவுல் கூறுகிறான். கிருபையின் சிங்காசனம் கிருபையின் இராஜ்யத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஏனெனில் ஒரு சிங்காசனம் இருக்கிறது என்பது, ஒரு இராஜ்யம் இருக்கிறது என்பதை பொருள்படுத்துகிறது. மனிதர்களின் இருதயங்களில் தெய்வீகக் கிருபை செயல்படுவதை எடுத்துக்காட்ட, கிறிஸ்து அவரது அநேக உவமைகளில் தேவனுடைய இராஜ்யம் என்கிற சொல்லைப் பயன்படுத்துகிறார். (14)

அப்படியே மகிமையின் சிங்காசனம் என்பது மகிமையின் இராஜ்யத்தைக் குறிக்கிறது. இந்த இராஜ்யம் இரட்சகரின் கீழ்க்காணும் வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்"–மத்தேயு 25:31,32. இந்த இராஜ்யம் இன்னமும் எதிர்காலத்தில் இருக்கிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிகழும்வரை, இது ஏற்படுத்தப்படக்கூடாததாக இருக்கிறது. (15)

மனிதன் பாவத்தில் விழுந்த உடனேயே குற்றமுள்ள இனத்திற்காக மீட்பின் திட்டம் வடிவமைக்கப்பட்டபோதே, கிருபையின் இராஜ்யம் ஏற்படுத்தப்பட்டது. அது தேவனுடைய நோக்கத்திலும், அவருடைய வாக்குத்தத்தத்திலும் இருந்தது. விசுவாசத்தின்மூலமாக மனிதர்கள் அதன் பிரஜைகளாகமுடியும். அப்படியிருந்தும் கிறிஸ்துவின் மரணம் நிகழும்வரை, அது உண்மையாக ஏற்படுத்தப்படவில்லை. இரட்சகர் பூமிக்குரிய அவரது ஊழியத்தில் பிரவேசித்தபின்னருங்கூட, மனிதர்களின் பிடிவாதத்தினாலும், நன்றியறியாமையினாலும் களைப்புற்றிருந்ததால், கல்வாரியின் தியாக பலியிலிருந்து பின்வாங்கியிருந்திருக்கலாம். கெத்செமனேயில் தத்தளிப்பின்

பாத்திரம் அவரது கரத்தில் நடுங்கியது. அந்த நேரத்திலுங்கூட அவர் தனது புருவத்திலிருந்த இரத்த வேர்வையைத் துடைத்துவிட்டு, குற்றமுள்ள இனம் அதன் அக்கிரமத்தில் அழியும்படி விட்டுச் சென்றிருக்கலாம். அவர் இதைச் செய்திருந்தால், விழுந்துபோன மனிதர்களுக்கு மீட்பு இருந்திருக்காது. ஆனால் இரட்சகர் அவரது ஜீவனை விடச் சம்மதித்து, "எல்லாம் முடிந்தது" என்று கதறினபோது, மீட்பின் திட்டத்தின் நிறைவேறுதல் உறுதிசெய்யப்பட்டது. ஏதேனிலிருந்த பாவிகளுக்குக் கொடுக்கப்பட்ட இரட்சிப்பின் வாக்குத்தத்தம் அங்கீகரிக்கப்பட்டது. அதற்குமுன் இருந்த தேவனுடைய வாக்குத்தத்தத்தினாலாகிய கிருபையின் இராஜ்யம் அப்போது அமைக்கப்பட்டது. (16)

இவ்வாறாக, கிறிஸ்துவின் மரணம்—தங்களுடைய நம்பிக்கையின் இறுதி அழிவு என்று சீடர்கள் நோக்கியிருந்த அந்தச் சம்பவமே—அவ்வாக்குத்தத்தத்தை என்றென்றைக்குமாக நிச்சயப்படுத்தியது. கொடுமை யான மனமடிவை அவர்களுக்குக் கொண்டுவந்திருந்தபோதே, அவர்களுடைய நம்பிக்கை சரியானதானதே என்கிற சான்றின் உச்சக்கட்டமாக அது இருந்தது. துக்கங்கொண்டாடுதலினாலும் மனத்துயரினாலும் அவர்களை நிரப்பிய, யுகங்கள் நெடுகிலும் தேவனுடைய விசுவாசமிக்கவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கும், நித்திய மகிழ்ச்சிக்கும் நடுநாயகமாக இருந்த அந்த நிகழ்ச்சி, ஆதாமின் ஒவ்வொரு பிள்ளைக்கும் திறக்கப்பட்டிருந்த நம்பிக்கையின் கதவாகவும் இருந்தது. (17)

முடிவற்ற இரக்கத்தின் நோக்கங்கள், சீடர்களின் மன ஏமாற்றத்தின் வழியாகவுங்கூட, நிறைவேறிக்கொண்டிருந்தன. ஒருபோதும் மனிதன் பேசியிராதவிதத்தில் பேசினவருடைய போதனையின் தெய்வீகக் கிருபையினாலும் வல்லமையினாலும் அவர்களுடைய இருதயங்கள் வெற்றி கொள்ளப்பட்டிருந்தபோதிலும், இயேசுவின் மேலிருந்த சுத்தத்தங்கம் போன்ற அவர்களுடைய அன்புடன், உலகப்பிரகாரமான பெருமையும், சுயநலமிக்க ஆசைகளும், கீழ்த்தரமான உலோகமாகக் கலந்திருந்தன. பஸ்கா பண்டிகை யின் அறையிலுங்கூட, அவர்களுடைய ஆண்டவர் கெத்செமனேயின் நிழலுக்குள் ஏற்கனவே நுழைந்து கொண்டிருந்த பக்திவிநயமான நேரத்திலும், "தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று"—லூக். 22:24. அவர்களுக்குமுன் அவமானம், கெத்சமனே தோட்டத்தின் வேதனை, நியாயத்தீர்ப்பு மன்றம், கல்வாரிச் சிலுவை, ஆகியவை வைக்கப்பட்டிருந்தபோது, அவர்களது பார்வை அரியணை, கிரீடம், மகிமை ஆகியவைகளால் நிறைந்திருந்தன. அவர் களுடைய இருதயத்தின் பெருமையும், உலக மகிமையின்மீதிருந்த தாகமும்,

அவர்களின் காலத்திலிருந்த தவறான போதனைகளை விடாப்பிடியாகப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கவும், அவரது இராஜ்யத்தின் மெய்யான தன்மையோடு அவரது வேதனையையும் மரணத்தையும் முன்சுட்டிக் காட்டியிருந்த இரட்சகரது வார்த்தைகளுக்குச் செவிசாய்க்காமல் விட்டுவிடவும், அவர்களை நடத்தின. இந்தத் தவறுகள், கூர்மையான—ஆனால் அவசியமான—அவர்களை சீர்திருத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட—சோதனையில் முடிவடைந்தன. சீடர்கள் தங்களது தூதின் பொருளைத் தவறாக எண்ணியிருந்தபோதும், எதிர்பார்ப்பை உணரத்தவறியிருந்தபோதும் தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த எச்சரிப்பை அவர்கள் பிரசங்கித்திருந்தனர். கர்த்தர் அவர்களுடைய விசுவாசத்திற்குப் பலனளித்து, அவர்களுடைய கீழ்ப்படிதலை சிறப்பிப்பார். உயிர்த்தெழுந்த கர்த்தரைப்பற்றிய மகிமையான சுவிசேஷத்தை சகல ஜனத்திற்கும் முன்னறிவிக்கும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்படவிருந்தது. இந்த ஊழியத்திற்கென்று அவர்களை ஆயத்தப்படுத்துவதற்காகவே, இவ்வளவு கசப்பாகக் காணப்பட்ட அந்த அனுபவம் அனுமதிக்கப்பட்டது. (18)

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின், எம்மாவுக்குப் போகும் வழியில் அவரது சீடர்களுக்குக் காணப்பட்டு, “மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண் பித்தார்”–லூக்கா 24:27. சீடர்களின் இருதயங்கள் தூண்டப்பட்டது. விசுவாசம் கொழுந்துவிட்டெரிந்தது. இயேசு தம்மை அவர்களுக்கு வெளிக்காட்டுமுன்பே, அவர்கள் மறுபடியும் உயிருள்ள நம்பிக்கை உடையவர்களாக பிறப்பிக்கப்பட்டனர். அவர்களுடைய புரிந்துகொள்ளுதலை தெளிவாக்கி, “உறுதியான தீர்க்கதரிசன வசனத்தின்” மீது அவர்களது நம்பிக்கையைப் பிணைக்கச்செய்வது, அவரது நோக்கமாக இருந்தது. அவரது நேரடியான சாட்சியால் மட்டுமல்லாமல், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் மற்றும் பிரமாணத்தில் இருந்த அடையாளங்கள், பொருட்பாடங்கள் கொடுத்த கேள்விக்கிடமில்லாத சான்றுகளினாலும் ஆதரவு பெற்றிருந்த சத்தியம் அவர்களுடைய உள்ளங்களில் வேரூன்ற வேண்டுமென்று அவர் விரும்பினார். கிறிஸ்துவின் பின்னடியார்களுக்கு, தங்களுக்காக மட்டுமன்றி, கிறிஸ்துவைப்பற்றிய அறிவை உலகத்திற்கு எடுத்துச் செல்லுவதற்காகவும், நுண்ணறிவுமிக்க விசுவாசம் அவசியமாக இருந்தது. இந்த அறிவைப் புகட்டும் முதல்படியாக, இயேசு அவரது சீடர்களை மோசேயினிடத்திற்கும், தீர்க்கதரிசிகளிடத்திற்கும் நடத்தினார். பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களின் மதிப்பிற்கும் முக்கியத்திற்கும் உயிர்த்தெழுந்த இரட்சகர் கொடுத்த சாட்சி அப்படிப்பட்டதாக இருந்தது. (19)

தாங்கள் நேசித்த ஆண்டவரின் முகத்தை அவர்கள் மறுபடியும் பார்த்தபோது, சீடர்களின் உள்ளத்தில் உண்டான மாறுதல் எப்படிப்பட்டதாக இருந்தது! இதற்குமுன் ஒருபோதும் இருந்திராத அதிகமான முழுமையும் பூரணமுமான உணர்வுடன், நியாயப்பிரமாணத்தில் மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருந்த அவரை, அவர்கள் கண்டனர். நிச்சயமின்மை, வேதனை, மனத்துயர் ஆகியவை பூரணமான வாக்குறுதிக்கும் மூடலற்ற விசுவாசத்திற்கும் இடம்கொடுத்தன. அவர் பரமேறிச்சென்றபின், அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்தில் அனுதினமும் தரித்திருந்து தேவனைத் துதித்தது எப்படிப்பட்ட ஆச்சரியமாக இருந்திருக்கும்! இரட்சகரின் நிந்தைமிக்க மரணத்தை மட்டுமே அறிந்திருந்த மக்கள், சீடர்களின் முகங்களில் துக்கம், குழப்பம், தோல்வி ஆகிய உணர்வுகளை மட்டுமே காணபதற்கு நோக்கினார்கள். ஆனால் மகிழ்ச்சியையும் வெற்றியையும் கண்டனர். அவர்களுக்குமுன் இருந்த ஊழியத்திற்காக எப்படிப்பட்ட ஒரு ஆயத்தத்தை இந்த சீடர்கள் பெற்றிருந்தனர்! அவர்களால் அனுபவிக்கமுடிந்த மிக ஆழமான சோதனைகளின் வழியாக, மனிதப்பார்வையில் எல்லாம் இழக்கப்பட்டதாகத் தோன்றியபோது, தேவனுடைய வார்த்தை வெற்றிகரமாக நிறைவேறியதைக் கண்டனர். அதற்குமேல் அவர்களுடைய விசுவாசத்தை எதினால் அசைக்க முடியும்? அல்லது அவர்களது அன்பின் அனலை எதினால் குளிரச்செய்ய முடியும்? அவர்களது கடினமான துக்கத்தில் “நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாக” இருந்த “பலத்த ஆறுதலைப்” பெற்றனர். தேவனுடைய ஞானத்திற்கும், வல்லமைக்கும் அவர்கள் சாட்சிகளாக இருந்தனர். “கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்”–ரோமர் 8:36–39. “கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்”– 1பேதுரு 1:25. “ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே” (ரோமர் 8:34) என்று அவர்கள் கூறினர். (20)

"என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை"– யோவேல் 2:26. "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" (சங்கீதம் 30:5) என்று கர்த்தர் கூறுகிறார். இரட்சகர் உயிர்த்தெழுந்த நாளில், அவரது சீடர்கள் அவரைச் சந்தித்தபோது, அவரது வார்த்தைகளைக் கேட்டபோது, அவர்களுடைய இருதயங்கள் கொழுந்துவிட்டு எரிந்தபோது, அவர்களுக்காகக் காயப்பட்ட அவரது கைகளையும் கால்களையும் பார்த்தபோது, அவர் பரத்திற்கு எழுந்தருளிச் செல்லுமுன், அவர்களைப் பெத்தானிவரை நடத்திச்சென்று, கரங்களை உயர்த்தி ஆசீர்வதித்து: "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." "சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மாற்கு 16:15 மத்தேயு 28:20) என்று கூறியபோது, பெந்தேகொஸ்தே நாளில் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த ஆவியானவர் இறங்கி, வல்லமை பரத்திலிருந்து கொடுக்கப்பட்டு, எழுந்தருளிச்சென்ற கர்த்தரின் உணரக்கூடிய பிரசன்னத்தினால் விசுவாசிகளின் ஆத்துமாக்கள் சிலிர்த்தபோது—அப்போது, அவர்கள், அவரது பாதையைப்போன்றே அவர்களுடைய பாதையும் தியாகம், இரத்தசாட்சியாகும் நிலைமை ஆகியவைகளின் ஊடாக சென்றபோதிலும், அவருடைய கிருபையைக் குறித்த நற்செய்தி ஊழியத்தை அவரது வருகையின்போது பெற்றுக்கொள்ளும் "நீதியின் கிரீடத்தோடு"கூட, ஆதியில் சீஷர்களானபோது நம்பியிருந்த உலக சிங்காசனத்திற்காக மாற்றியிருப்பார்கள். "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் ... நமக்குச் செய்ய வல்லவராகிய" அவர், அவருடைய பாடுகளுக்குப் பங்காளிகளாவதோடு அவருடைய உறவினால் உண்டாகும் மகிழ்ச்சியையும்—"அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கும்" மகிழ்ச்சியை, சொல்லமுடியாத மகிழ்ச்சியை, "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவத்தோடு" "ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" என்று பவுல் கூறின "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையையும்" அவர்களுக்குக் கொடுத்தார். (21)

இயேசுவின் முதலாம் வருகையின்போது, இராஜ்யத்தினுடைய சுவிசேஷத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்திருந்த சீடர்களுடைய அனுபவத்தின் மறுபக்கம், அவரது இரண்டாம் வருகையின் தூதை அறிவித்தவர்களின் அனுபவத்தில் இருந்தது. "காலம்நிறைவேறிற்று, தேவனுடைய இராஜ்யம் சமீபமாய் இருக்கிறது" என்று சீடர்கள் பிரசங்கித்துக்கொண்டு சென்றது போல, மில்லரும் அவரது சகாக்களும், வேதாகமத்தில் காட்சிக்குக் கொண்டுவரப்பட்டுள்ள மிக நீண்டதும் கடைசியுமான தீர்க்கதரிசன காலம் முடிவடையவுள்ளது,நியாயத்தீர்ப்பு சமீபமாக இருக்கிறது, நித்திய இராஜ்யம்

உதயமாக உள்ளது என்று அறிவித்தனர். காலம் சம்பந்தப்பட்ட சீடர்களின் பிரசங்கம், தானியேல் ஒன்பதாம் அதிகாரத்திலுள்ள எழுபது வாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. மில்லரும் அவரது சகாக்களும் கொடுத்திருந்த தூது, தானியேல் 8:14–ல் உள்ள 2300 நாட்களின் முடிவை அறிவித்தது. எழுபது வாரங்கள் இதன் ஒருபகுதியாகும். இந்தப் பிரசங்கம் ஒவ்வொன்றும் அதே பெரிய தீர்க்கதரிசன காலத்தின் பல்வேறு பகுதிகளுடைய நிறைவேறுதலின் அடிப்படையின்மீது இருந்தது. (22)

முதலில் இருந்த சீடர்களைப்போலவே, வில்லியம் மில்லரும் அவரது சகாக்களும் தாங்கள் கொடுத்த தூதின் முழுமையை அறியாதிருந்தனர். வெகுகாலமாக சபையில் நிலவியிருந்த தவறுகள், இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஒரு முக்கியமான பகுதியின் சரியான விளக்கத்தை அடையமுடியாதபடி அவர்களைத் தடுத்தது. எனவே உலகத்திற்குத் தரும்படி தேவன் தங்களிடம் ஒப்படைத்திருந்த தூதை அவர்கள் கொடுத்திருந்தபோதிலும், அதன் பொருளைத் தவறாகப் புரிந்திருந்ததினால் ஏமாற்றம் அடைந்தனர். (23)

“இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்” (தானி. 8:14) என்கிற வசனத்திற்கு விளக்கம் கொடுத்தபோது, “பூமிதான் பரிசுத்தஸ்தலம் என்று பொதுவான விளக்கத்தை, ஏற்கனவே குறிப்பிட்டபடி மில்லர் பின்பற்றினார். எனவே கர்த்தரின் இரண்டாம் வருகையின்போது, உலகம் அக்கினியால் தூய்மையாக்கப்படுவதுதான் பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படுதல் என அவர் நம்பினார். அதோடு 2300 நாட்களின் முடிவு திட்டவட்டமாக முன்னரைக்கப்பட்டிருந்ததால், அதன்படியே அது இரண்டாம் வருகையின் காலத்தை வெளிப்படுத்துகிறது என அவர் முடிவுசெய்தார்.” பரிசுத்தஸ்தலம் எது என்பதைக் குறித்த ஒரு பெரும்பான்மை நோக்கு இருந்தது. மில்லர் அந்த நோக்கினை ஒப்புக்கொண்டது அவரது தவறாக இருந்தது. (24)

கிறிஸ்துவின் பலியையும், ஆசாரியத்துவத்தையும் நிழலாகக் கொண்டிருந்த—வழக்கமான அமைப்பில், பிரதான ஆசாரியனால் வருடம் முழுவதும் செய்யப்பட்ட ஊழியத்தின் கடைசிப்பகுதியாக பரிசுத்தஸ்தலத்தை சுத்திகரிப்பது இருந்தது. அது பாவ நிவாரணத்தின்—இஸ்ரவேலில் பாவத்தை அகற்றும் முடிவான பணியாக இருந்தது. நமது பிரதான ஆசாரியர் பரலோகத்தில் செய்யும் ஊழியத்தில், பரலோக ஆவணங்களிலிருந்து தமது ஜனங்களின் பாவங்களை துடைத்து நீக்கும் முன்னடையாளமாக அது இருந்தது. இந்த ஊழியம் நுட்ப நியாய விசாரணை, நியாயத்தீர்ப்பு ஆகியவைகளை உள்ளடக்கியதாகவும், வானமேகங்களின்மீது மிகுந்த வல்லமையுடனும் மிகந்த மகிமையுடனும் கிறிஸ்து வருவதற்குமுன் நடக்க

இருந்தது. “அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது” (வெளி. 22:12) என்று இயேசு சொன்னார். இரண்டாம் வருகைக்கு முன்னுள்ள இந்த நியாயத்தீர்ப்பின் வேலைதான் “தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது” (வெளி. 14:7) என்கிற முதலாம் தூதனின் தூதினால் அறிவிக்கப்பட்டது. (25)

இந்த எச்சரிப்பை அறிவித்தவர்கள் சரியான தூதைச் சரியான வேளையில் கொடுத்தனர். ஆரம்பகால சீடர்கள், தானியேல் ஒன்பதின் அடிப்படையில் “காலம் நிறைவேறிற்று, தேவனுடைய இராஜ்யம் சமீபமாய் இருக்கிறது” என்ற செய்தியைக் கொடுத்தபோதும், அதே வாக்கியத்தில் முன்கூறப்பட்டிருந்த மேசியாவின் சங்காரத்தைப்பற்றி உணர்ந்துகொள்ளவில்லை. அதைப்போலவே, மில்லரும் அவரது சகாக்களும், தானி. 8:14 மற்றும் வெளி. 14:7 ஆகிய வசனங்களை அடிப்படையாகக்கொண்ட தூதைக்கொடுத்தும், வெளி. 14–ல் பார்வைக்குக் கொண்டுவரப்பட்ட, கர்த்தரின் வருகைக்குமுன் கொடுக்கப்படவேண்டிய மற்ற செய்திகளைக் காணத் தவறினர். எழுபது வாரங்களின் முடிவில் இராஜ்யம் ஸ்தாபிக்கபபடும் என்று சீடர்கள் தவறாகக் கருதினதைப்போலவே, 2300 நாட்களின் முடிவில் நிகழவேண்டிய சம்பவத்தை, அட்வென்டிஸ்டுகளும் தவறாக எண்ணி இருந்தனர். இந்த இரு சம்பவங்களிலும், சத்தியத்திற்கு கண்களை குருடாக்கும் பிரபலமான தவறுகள் அங்கீகரிக்கப்பட்டும் பற்றிக்கொள்ளப்பட்டும் இருந்தன. கொடுக்கவேண்டும் என்று தேவன் விரும்பின தூதைக் கொடுத்ததின்மூலம் அந்த இரு சாராரும் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றினார்கள். அதேசமயம், தங்கள் தூதுகளைத் தவறாகப் புரிந்திருந்ததால் அந்த இருசாராரும் ஏமாற்றம் அடைந்தனர். (26)

அப்படியிருந்தும், நியாயத்தீர்ப்பைப்பற்றிய எச்சரிப்பை, அது இருந்த விதமாகவே கொடுக்க அனுமதித்ததன் மூலம் தேவன் தமது இரக்கமிக்க நோக்கத்தை நிறைவேற்றினார். பெரும்நாள் சமீபித்திருந்தது. தங்களது இருதயங்களில்இருப்பதைமக்கள்அறியும்படி,ஒருகுறிப்பிட்டகாலசோதனைக்கு தேவ திட்டத்தால் அவர்கள் உட்படுத்தப்பட்டனர். சபையைச் சோதிக்கவும், தூய்மைப்படுத்தவும் அந்தத்தூது வடிவமைக்கப்பட்டிருந்தது, அவர்களது பற்று உலகத்தின்மீதா அல்லது பரலோகத்தின்மீதும் கிறிஸ்துவின்மீதும் வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அவர்கள் காணும்படி நடத்தப்படவிருந்தனர். அவர்கள் தங்களது இரட்சகரை நேசிப்பதாகக் கூறிக்கொண்டிருந்தனர். இப்பொழுது அவர்கள் தங்களது அன்பை மெய்ப்பிக்கவேண்டியிருந்தது. அவர்கள் தங்களுடைய உலக நம்பிக்கைகளையும் ஆசைகளையும்

மறுத்து, தங்களது கர்த்தரின் வருகையை மகிழ்ச்சியுடன் வரவேற்க ஆயத்தமாக இருந்தனரா? அவர்களது மெய்யான ஆவிக்குரிய நிலையை அவர்கள் அறிந்துகொள்ளும்படி அந்தத் தூது வடிவமைக்கப்பட்டிருந்தது. மனந்திரும்புதலுடனும் தாழ்மையுடனும் கர்த்தரைத் தேடும்படி அவர்களை எழுப்ப, இரக்கத்தினால் அது அனுப்பப்பட்டது. (27)

அந்த ஏமாற்றம், தாங்கள் கொடுத்த செய்தியைத் தவறாக புரிந்துகொண்டதினால் விளைந்திருந்தும், அது அவர்களுக்கு நன்மையாக மாற்றப்பட இருந்தது. அந்த எச்சரிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறோம் என்று கூறிக்கொள்ளுகிறவர்களின் இதயங்களை அது சோதிக்கும். அவர்களது ஏமாற்றத்தின்முன் அவசரகோலமாக தங்களுடைய அனுபவத்தை விட்டுவிட்டு, தேவனுடைய வார்த்தையின்மீதுள்ள நம்பிக்கையை எறிந்து விடுவார்களா? அல்லது ஜெபத்தினாலும் தாழ்மையினாலும் தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவத்தை எங்கு புரிந்துகொள்ளத் தவறினார்கள் என்பதை அறிந்துகொள்ள வகைதேடுவார்களா? பயத்தினாலும் உணர்ச்சியினாலும், உணர்ச்சியின் கொந்தளிப்பினாலும் அசைக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? எத்தனை பேர் முழு இருதயமற்றும் விசுவாசமற்றும் இருந்தனர்? திரள்கூட்டமானவர்கள், கர்த்தர் தோன்றுவதை நேசிப்பதாகக் கூறினர். உலகத்தின் பரிகாசங்களையும் நிந்தைகளையும், தாமதம், ஏமாற்றம் என்னும் சோதனைகளையும் சகிக்க அழைக்கப்படும்போது, அவர்கள் தங்கள் விசுவாசத்தை மறுதலிப்பார்களா? அவர்களுடனுள்ள தேவனின் ஈடுபாடுகளைப்பற்றி அவர்கள் உடனடியாக புரிந்துகொள்ளாததினால், அவரது வார்த்தையிலுள்ள தெளிவான சாட்சியினால் தாங்கப்படும் சத்தியங்களை அவர்கள் எறிந்துவிடுவார்களா? (28)

தேவஆவியும் வேதவார்த்தையும் போதித்ததாக தாங்கள் நம்பினவைகளுக்கு, உண்மையான விசுவாசத்தோடு கீழ்ப்படிகிறவர்களின் பலத்தை இச்சோதனை வெளிப்படுத்தும். வேதத்தையே அதை விளக்கவுரையாக எடுத்துக்கொள்ளாமல், மனிதர்களின் தத்துவங்களையும், விளக்கங்களையும் ஏற்றுக்கொள்ளுவதில் உள்ள ஆபத்தை, அனுபவம் மட்டுமே கற்றுத்தரும் விதத்தில் இச்சோதனை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும். விசுவாசத்தின் பிள்ளைகளுக்கு, அவர்களது தவறுகளினால் உண்டாகும் குழப்பமும், வருத்தமும், தேவையான திருத்தத்தை உண்டுபண்ணும். தீர்க்கதரிசன வசனங்களை ஆழமாக ஆராயும்படி அவர்கள் நடத்தப்படுவார்கள். தங்களது விசுவாசத்தின் அஸ்திவாரத்தை மிகுந்த கவனத்துடன் சோதித்துப்பார்க்கவும், கிறிஸ்துவ உலகத்தினால் எவ்வளவு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும்,

சத்தியமாகிய வேதவாக்கியத்தின்மீது கட்டப்படாத அனைத்தையும் நிராகரிக்கவும் அவர்கள் போதிக்கப்பட்டிருப்பார்கள். (29)

முதலில் இருந்த சீடர்களைப்போலவே இவ்விசுவாசிகளுக்கும், சோதனைவேளையில் தங்களுடைய புரிந்துகொள்ளுதலுக்கு இருளாகக் காணப்பட்டது பின்னர் தெளிவாக்கப்படும். கர்த்தருடைய முடிவை அவர்கள் பார்க்கும்போது, தங்களின் தவறுகளினால் சோதனை உண்டானபோதிலும் அவர்கள்மீதான அவரது அன்பின் நோக்கங்கள் சீராக நிறைவேறிக்கொண்டிருப்பதை அவர்கள் அறிந்துகொள்ளுவார்கள். “கர்த்தருடைய உடன்படிக்கையையும் அவருடைய சாட்சிகளையும் கைக்கொள்ளுகிறவர் களுக்கு, அவருடைய பாதைகளெல்லாம் கிருபையும் சத்தியமுமானவைகள்” என்பதையும், “கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவர்” என்பதையும் அறிந்துகொள்ளுவார்கள். (30) ★

20

# கசப்பான ஒரு ஏமாற்றம்...!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 355–374)**

கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையின்கீழ் நிகழவுள்ள ஒரு பெரிய சமய எழுப்புதல் வெளிப்படுத்தின விசேஷம் 14–ம் அதிகாரத்தில் உள்ள முதலாம் தூதனின் தூதாகிய தீர்க்கதரிசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு தூதன் வானத்தின் மத்தியில் பறப்பதுபோல் காணப்பட்டு, "அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது: வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான்." வெளி. 14:6,7. (1)

இந்த எச்சரிப்பை ஒரு தூதன் அறிவிப்பதாகக் கூறப்படும் அந்த உண்மை குறிப்பிடத்தக்கது. இந்தத் தூதினால் நிறைவேற்றப்பட உள்ள ஊழியத்தின் உயர்ந்த தன்மையையும், அதற்கு துணைசெய்யும் வல்லமையையும் மகிமையையும், பரலோக தூதனுடைய சுத்தம் வல்லமை, மகிமையினால் குறிப்பிட்டுக்காட்டுவது தெய்வீக ஞானத்திற்குப் பிரியமாக இருந்தது. அந்தத் தூதன் வானத்தின் மத்தியில் பறப்பதும், மிகுந்த சத்தமிட்டு அந்த எச்சரிப்பைக்கொடுப்பதும், பூமியின்மேல் வாசம்செய்யும் அனைவருக்கும்—சகல ஜனங்களுக்கும் பறைசாற்றுவதும்—இந்த இயக்கத்தின் விரைவிற்கும் உலகளாவிய தன்மைக்கும் சான்று பகருகிறது. (2)

இந்த இயக்கம் நிகழ உள்ள காலத்தைப்பற்றிய ஒளியை அந்தத் தூதுதானே கொடுக்கிறது. அது நித்திய சுவிசேஷத்தின் ஒரு பகுதியாக உள்ளது என்று அறிவிக்கப்பட்டு, நியாயத்தீர்ப்பின் ஆரம்பத்தை அறிவிக்கிறது.

இரட்சிப்பின் தூது யுகங்கள் நெடுகிலும் பிரசங்கிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்தத் தூது, கடைசிநாட்களில் மட்டுமே அறிவிக்கப்படகூடிய சுவிசேஷத்தின் ஒருபகுதியாக இருக்கும். ஏனெனில் அப்போதுதான் நியாயத்தீர்ப்பின் வேளை வந்தது என்பது உண்மையாக இருக்கமுடியும். நியாயத்தீர்பபின் ஆரம்பத்தை நோக்கிச் செல்லும் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளை தீர்கக்தரிசனங்கள் வரிசைப்படுத்திக் காட்டுகின்றன. இது தானியேலின் புத்தகத்தைப் பற்றிய மிகச் சிறப்பான உண்மை. ஆனால் கடைசிக்காலம் சம்பந்தப்பட்ட தீர்கக்தரிசனத்தை முடிவுகாலமட்டும் புதைபொருளாக முத்திரையிட்டு வைக்கும்படி தானியேல் கட்டளையிடப்பட்டான். தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலை அடிப்படையாகக்கொண்ட இந்தக் காலத்தை நாம் எட்டும்வரை, நியாயத்தீர்ப்பைப்பற்றிய ஒரு தூது அறிவிக்கப்பட முடியாமலிருந்தது. அதனால் கடைசி காலத்தில், “அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்”– தானியேல் 12:4. (3)

அப்போஸ்தலனாகிய பவுல், தனது காலத்தில் கிறிஸ்துவின் வருகை நிகழும் என்று எதிர்பார்க்கவேண்டாம் என்று சபையை எச்சரித்தான். “எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.” 2 தெச. 2:3. பெரும் மருளவிழுகைக்குப் பின்னும், பாவமனிதன் நீண்டகால ஆளுகை முடியும்வரை, நமது கர்த்தரின் வருகையை நம்மால் எதிர்பார்க்க இயலாது. “அக்கிரமத்தின் இரகசியம்”,“கேட்டின் மகன்”,“அந்தத் துன்மார்க்கன்” என்று அழைக்கப்படும் போப்புமார்க்கத்தைக் குறிக்கும் “பாவமனுஷன்” தீர்க்கதரிசனத்தில் முன்னரைக்கப்பட்டபடி, 1260 வருடங்கள் தனது மேலாதிக்கத்தை கொண்டிருக்கவேண்டியதாக இருந்தது. இந்தக் காலம் கி.பி.1798–ல் முடிவடைந்தது. அதற்கு முன்னான காலத்தில் கிறிஸ்துவின் வருகை நடக்கமுடியாது. இந்த எச்சரிக்கையுடன் பவுல் 1798 வரையிலுமுள்ள கிறிஸ்தவ உலகத்தை எச்சரிக்கிறார். அந்த நாளுக்குப் பின்னுள்ள இந்தக் காலப்பகுதியில்தான், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிய தூது அறிவிக்கப்படவேண்டும். (4)

கடந்த காலங்களில் இப்படிப்பட்ட தூது, ஒருபோதும் கொடுக்கப்படவில்லை. நாம் கண்டிருப்பதைப்போல, பவுல் அதைப்பற்றி பிரசங்கிக்கவில்லை. அவன் கிறிஸ்துவின் வருகை, எதிர்காலத்தில் மிகவும் தூரத்தில் உள்ளது என்பதைத் தனது சகோதரர்களுக்குச் சுட்டிக்காட்டினான். சீர்திருத்தவாதிகள் அதை அறிவிக்கவில்லை. மார்ட்டின் லுத்தர் அவரது

காலத்திற்கு முந்நூறு வருடங்களுக்குப்பின் நியாயத்தீர்ப்பபு நிகழும் என்று கூறினார். ஆனால் கி.பி.1798–ல் இருந்து தானியேலின் புத்தகத்தின் முத்திரை உடைக்கப்பட்டு, தீர்க்கதரிசனங்களைப்பற்றிய அறிவு அதிகரித்து, நியாயத்தீர்ப்பு சமீபமாயிருக்கிறது என்கிற பக்திவிநயமான செய்தியை அநேகர் அறிவித்திருக்கின்றனர். (5)

பதினாறாம் நூற்றாண்டின் சீர்திருத்தத்தைப்போலவே, ஒரேசமயத்தில் பல கிறிஸ்தவ நாடுகளில் அட்வெந்து (திருவருகை) இயக்கம் தோன்றியது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், விசுவாசமும் ஜெபமுமுள்ள மனிதர்கள் தீர்க்கதரிசனங்களை ஆராயும்படி நடத்தப்பட்டு, ஆவியானவரின் ஏவுதலினால் எழுதப்பட்ட ஆதாரங்களில், எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருக்கிறது என்று உணர்த்தும் சான்றுகள் இருப்பதைக் கண்டனர். பல்வேறு நாடுகளிலும், தனித்தனியான கிறிஸ்தவ அமைப்புகள் வேதவாக்கியங்களை முழுமையாக ஆராய்ந்ததினால், இரட்சகரின் திருவருகை சமீபமாக இருக்கிறது என்கிற நம்பிக்கைக்கு வந்தனர். (6)

கி.பி.1821–ல் நியாயத்தீர்ப்பின் வேளையைச் சுட்டிக்காட்டும் தீர்க்கதரிசனங்களை மில்லர் விளக்கிக்காட்டிய மூன்று வருடங்களுக்குப்பின் “உலகத்தின் மிஷனரி” என்றழைக்கப்படும் **டாக்டர் ஜோசப் உல்ஃப்** என்பவர், கர்த்தரின் அதிசீக்கிர வருகையை அறிவிக்கத் தொடங்கினார். உல்ஃப் ஜெர்மனியில் பிறந்த எபிரெய பெற்றோரின் மரபு வழியைப் பெற்றிருந்தார். அவரது தந்தை ஒரு யூத ரபி. மிக இளமையிலேயே அவர் கிறிஸ்தவ மதத்தைப்பற்றிய மனஉணர்த்துதலைக் கொண்டிருந்தார். மிகுந்த செயலாக்கமும், உண்மையைக்கண்டறியும் மனமும்கொண்டிருந்த அவர், பக்திமிக்க எபிரெயர்கள் நாள்தோறும் அவரது தந்தையின் வீட்டில்கூடி ,அவர்களுடைய மக்களின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்புக்களையும் வரவிருக்கும் மேசியாவின் மகிமையையும், இஸ்ரவேல் எடுத்துக் கட்டப்படுவதையும்பற்றிய உரையாடல்களைக் கவனிப்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவராக இருந்தார். ஒரு நாள் நசரேயனாகிய இயேசுவைப்பற்றிக் குறிப்பிடப்பட்டதைக்கேட்ட அந்தச் சிறுவன், அவர் யார் என்று விசாரித்தார். “நிகரில்லாத் திறமை வாய்ந்த ஒரு யூதர்” என்பது அதற்கான பதிலாக இருந்தது. “ஆனால் அவர் தம்மை மேசியா என்று கூறிக்கொண்டதினால், யூத விசாரணை மன்றம் அவருக்கு மரணதண்டனை விதித்தது” என்றும் கூறப்பட்டது. “எருசலேம் ஏன் அழிக்கப்பட்டது? நாம் ஏன் அடிமைத்தனத்தில் இருக்கிறோம்?” என்று அச்சிறுவன் கேட்டான். “துயரம்! துயரம்! ஏனெனில் யூதர்கள் தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்தனர்” என்று அவர் தந்தை பதில் தந்தார். “ஒருவேளை இயேசுவும் ஒரு தீர்க்கதரிசியாக

இருந்திருக்கவேண்டும்; யூதர்கள் அவர் குற்றமற்றவராயிருந்தபோது அவரையும் கொலை செய்திருக்கின்றனர்" என்ற எண்ணம், அச்சிறுவனுக்கு உடனே உண்டானது.—Travels and Adventures of the Rev. Joseph Wolff, vol. 1, p. 6. அந்த உணர்வுகள் மிகவும் பலமாக இருந்ததினால், கிறிஸ்தவ ஆலயத்திற்குள் செல்வதற்கு அவர் தடைசெய்யப்பட்டிருந்த போதிலும், பிரசங்கங்களை கேட்பதற்காக அடிக்கடி அவ்வாலயங்களின் வெளியே நின்றிருக்கிறார். (7)

அவருக்கு ஏழே வயது ஆகியிருந்தபோது, மேசியாவின் வருகையில் இஸ்ரவேலரின் எதிர்கால வெற்றி எப்படியிருக்கும் என்று, வயதுசென்ற ஒரு கிறிஸ்தவ அண்டை வீட்டு மனிதனிடம் பெருமையாக பேசியிருக்கிறார். அந்த வயதானவர்: "அன்பான சிறுவனே! உண்மையான மேசியா யார் என்பதை நான் உனக்குச் சொல்லுகிறேன். பண்டைய தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்தபோது, உங்களுடைய முன்னோர்கள் சிலுவையில் அறைந்து கொன்ற நசரேயனாகிய இயேசு தான் அவர். வீட்டிற்குப்போய் ஏசாயாவின் ஐம்பத்துமூன்றாம் அதிகாரத்தைப் படித்துப்பார். இயேசுகிறிஸ்துதான் தேவனுடைய குமாரன் என்பதை உணர்வாய்" என்றார்.—Ibid., vol. 1. உடனே அவர் மனம் உணர்வடைந்தது. வீட்டிற்குச் சென்று, நசரேயனாகிய இயேசுவில் அது எப்படி மிகச்சரியாக நிறைவேறியிருக்கும் என்பதைக் காண ஆச்சரியத்துடன் அந்த வேதவாக்கியத்தை வாசித்தார். அந்தக் கிறிஸ்தவரின் வார்த்தைகள் உண்மையா? அந்தத் தீர்க்கதரிசனத்தின் விளக்கத்தை அச்சிறுவன் அவனது தந்தையிடம் கேட்டான். ஆனால் அவனது தந்தையின் பதில் கடுமையான மௌனமாக இருக்கவே, அந்த விஷயத்தைப்பற்றி மீண்டும் குறிப்பிட அவருக்குத் துணிவு இருக்கவில்லை என்றாலும் அது கிறிஸ்தவ மதத்தைப்பற்றி மேலும் அதிகமாக அறிந்துகொள்ளவேண்டும் என்ற அவருடைய ஆசையை அதிகரிக்கவே செய்தது. (8)

அவர் தேடிய அறிவு அந்த யுத இல்லத்தில் அவரிடமிருந்து மிகக் கடுமையாக விலக்கப்பட்டிருந்தது. ஆனால் பதினோறு வயதே ஆனபோது, அவருக்கென்று கல்வியைப் பெற்றுக்கொள்ளவும் தனது மதத்தையும் வாழ்க்கைத் தொழிலையும் தெரிந்துகொள்ளவும், தகப்பனின் வீட்டைவிட்டு வெளியேறி உலகத்துக்குள் சென்றார். அவரது இனத்தாரிடம் சில காலம் அவருக்கு அடைக்கலம் கிடைத்தது. ஆனால் மருளவிழுந்தவன் என்று எண்ணப்பட்டு அங்கிருந்து விரைவில் விரட்டப்பட்டார். தனித்தவராகவும் கையில் காசில்லாதவராகவும் அந்நியர்களுக்கிடையிலும் அவரது சொந்தப் பாதையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டியதாயிற்று. அக்கரையுடன் ஆராய்வதோடு, எபிரெய மொழியைக் கற்றுக்கொடுப்பதின்மூலமாகத் தனது

வாழ்க்கையை நடத்தினவராக இடம்விட்டு இடம் சென்றார். ஒரு ரோமன் கத்தோலிக்கப் போதனையாளரின் (உபதேசியார்) செல்வாக்கின்மூலமாக, ரோம விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு, தமது சொந்த ஜனங்களுக்கு ஒரு மிஷனரியாக இருக்கும் நோக்கத்தை ஏற்படுத்தினார். இந்த நோக்கத்துடன் சில வருடங்களுக்குப்பின் ரோம் நகரிலுள்ள பிரச்சாரக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடருவதற்காகச் சென்றார். இங்கு அவரது சுதந்திரமாகச் சிந்திக்கும் பழக்கமும், யதார்த்தமான பேச்சும் அவருக்கு மதவிரோதி என்ற பெயரைச் சுமத்திற்று. சபையின் தகாத செயல்களை அவர் பகிரங்கமாகத் தாக்கி, சீர்திருத்தத்தின் அவசியத்தை வற்புறுத்தினார். ஆரம்பத்தில் கத்தோலிக்க உயர் அதிகாரிகளால் சிறப்பான ஆதரவுடன் நடத்தப்பட்டிருந்போதிலும், சிறிது காலத்திற்குப்பின் அவர் ரோம் நகரிலிருந்து நீக்கப்பட்டார். ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் அடிமைத்தனத்திற்கு அவரை மீண்டும் திருப்பிக்கொண்டுவர முடியாது என்று தெரியும்வரை, சபையின் கண்காணிப்பின்கீழ் இடம்விட்டு இடம்மாறிச் சென்றார். திருத்தப்படமுடியாதவர் என்று அறிவிக்கப்பட்டு, அவர் விரும்பிய இடத்திற்குப் போகும்படி விட்டுவிடப்பட்டார். இப்போது இங்கிலாந்து சென்று, புரொட்டஸ்டாண்டு விசுவாசத்தை அறிக்கைசெய்து, ஆங்கில சபையில் ஐக்கியப்பட்டார். இரண்டு வருடக் கல்விக்குப்பின் 1821–ல் அவர் தனது ஊழியத்தைத் தொடங்கினார். (9)

கிறிஸ்து அவரது முதலாம் வருகையின்போது, துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவராகவும் இருந்தார் என்கிற மாபெரும் சத்தியத்தை உல்ஃப் ஏற்றுக்கொண்ட அதே சமயத்தில், வல்லமையோடும் மகிமையோடும் அவர் இரண்டாம்முறை வருவதை, தீர்க்கதரிசனங்கள் அதே தெளிவுடன் காட்சிக்குக் கொண்டுவருவதையும் கண்டார். நசரேயனாகிய இயேசுதான் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவர் என்பதையும், தாழ்மையான அவருடைய முதலாம் வருகை மனிதர்களின் பாவங்களுக்காகப் பலியாகும்படிக்கே என்பதையும் காண்பிக்க வகைதேடிய அதே வேளையில், அரசராகவும் விடுதலை வழங்குபவராகவும் இரண்டாம் வருகையில் வரவிருப்பதையும் அவர் போதித்தார். (10)

“கரங்களும் பாதங்களும் துளைக்கப்பட்டு, அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலிருந்து, துக்கம் நிறைந்த வரும், பாடுகளை அனுபவித்தவருமாயிருந்து, செங்கோல் யூதாவை விட்டு நீங்கினபின்பு, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களைவிட்டு ஒழிந்த பின்பு, முதல்தடவையாக வந்த மெய்யான மேசியாவாகிய நசரேயனாகிய இயேசுவே—இரண்டாம் விசை வான மேகங்களின்மீதும், பிரதான தூதனுடைய

சத்தத்துடனும் வருவார்" என்று அவர் கூறினார். (Joseph Wolff,Researches and Missionary Labors,page 62). அவர் ஒலிவமலையின்மீது நிற்பார். படைப்பின்போது ஆதாமுக்கு ஒரு தடவை கொடுக்கப்பட்டு, அவனால் இழக்கப்பட்டுப்போன ஆளுகை இயேசுவிற்குக் கொடுக்கப்படும். (ஆதி. 1:26 3:17). அவர் சர்வபூமிக்கும் அரசராக இருப்பார். படைப்பில் காணப்படும் அலறுதலும் புலம்பலும் இல்லாமற்போகும். ஆனால் துதியின் பாடல்களும் நன்றிகூறுதலும் கேட்கப்படும்.... இயேசு அவருடைய பிதாவின் மகிமையுடனும் பரிசுத்த தூதர்களுடனும் வரும்போது.... இறந்துபோன விசுவாசிகள் முதலாவதாக எழும்புவார்கள். (1தெச. 4:16; 1 கொரி. 15:32). இதைத்தான் கிறிஸ்தவர் களாகிய நாம் முதலாம் உயிர்த்தெழுதல் என்கிறோம். அதன்பின் விலங்கினங்களின் தன்மை மாற, அவை இயேசுவிற்குக் கீழ்ப்படியும் (ஏசா. 11:6–9 சங்கீதம் 8). பிரபஞ்சமெங்கும் சமாதானம் நிலவும்"—Journal of the Rev. Joseph Wolff, pages 378,379. "கர்த்தர் மறுபடியும் பூமியைப்பார்த்து: 'அது மிகவும் நன்றாயிருந்தது' என்பார்."—Ibid., page 294. (11)

கர்த்தரின் வருகை மிகவும் சமீபம் என்று உல்ஃப் நம்பினார். அவரது தீர்க்கதரிசன காலங்களின் விளக்கங்கள் மில்லரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த கால அளவின்படி கர்த்தரின் வருகை சில வருடங்களுக்குள் இருப்பதுபோல் இருந்தது. "அந்த நாளையும் நாழிகையையும் ஒருவனும் அறியான்",அவரது வருகையின் சமீபத்தைப்பற்றி மனிதர்கள் ஒன்றையும் அறியக்கூடாதவர்களாக இருக்கின்றனர் என்று வேதவாக்கியங்களை முன்வைத்துக் கேட்டவர் களுக்கு உல்ஃப்: "அந்த நாளும் நாழிகையும் ஒருபோதும் அறியப்படக்கூடாது என்று நமது கர்த்தர் கூறினாரா? அத்திமரத்தில் இளந்தளிர்கள் தோன்றும்போது வசந்தகாலம் சமீபமாயிருக்கிறதென்று ஒருவர் அறிந்துகொள்ளுவதுபோல் அவரது வருகையின் சமீபத்தை நாம் அறிந்துகொள்ளுவதற்காக காலங்களின் அடையாளங்களை அவர் நமக்குத் தரவில்லையா?—(மத்தேயு 24:32). அவர் தாமே தானியேலின் தீர்க்கதரிசனப் புத்தகத்தை வாசிப்பது மட்டுமன்றி, அதைப் புரிந்துகொள்ளவும் வேண்டும் என்று உபதேசித்திருக்க, நாம் அந்தக் காலத்தை ஒருபோதும் அறியாதவர்களாக இருக்கவேண்டுமா? அதே தானியேலின் புத்தகத்தில், முடிவுகாலத்திற்கென்று (அவனது காலத்தில் அக்காலம் அப்படி இருந்தது) அவை மூடிவைக்கப்பட்டுள்ளன என்றும் 'அநேகர் அங்கும் இங்கும் ஓடி ஆராய்வார்கள்' (காலத்தைக் கவனிப்பதும் அதைப்பற்றிச் சிந்திப்பதும் ஆகியவைபற்றிய ஒரு எபிரெய வழக்குச்செல்) 'அறிவும் பெருகிப்போம்' (காலத்தைப்பற்றிய) என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே—(தானியேல்12:4). இதைத்தவிர, காலத்தின் சமீபம் அறியப்படாததாக இருக்குமென்று அல்ல, மிகச்சரியான 'அந்தநாளையும் நாழிகையையும் ஒருவனும் அறியான்' என்றுதான் நமது கர்த்தர் இதன்மூலம்

கூறவிரும்புகிறார். நோவா பேழையை ஆயத்தம் செய்ததுபோல், அவரது வருகைக்கென்று ஆயத்தம்செய்ய நம்மைத் தூண்டும்படி, காலங்களின் அடையாளங்களால் போதுமான அளவிற்கு அறியப்படும் என்று அவர் கூறுகிறார்" என்று பதில் கூறினார்.—Wolff,Researches and Missionary Labors, pages 404, 405. (12)

உல்ஃப் வேதவாக்கியங்களைச் சரியாகவோ அல்லது தவறாகவோ விளக்குவதுபற்றிய பெரும்பான்மையினரின் வழக்கத்தைப்பற்றி: "கிறிஸ்தவ சபையின் பெரும்பகுதி வேதவாக்கியத்திலுள்ள தெளிவான அர்த்தத்தை விட்டுவிட்டு, புத்தர்களின் கற்பனை அமைப்பிற்கு திரும்பியிருக்கின்றனர். அவர்கள், மனித இனத்தின் எதிர்கால மகிழ்ச்சி ஆகாயத்தில் சஞ்சரிப்பதில் இருக்கும் என்று நம்புகிறார்கள். யூதர்கள் என்று வாசிக்கும்போது அஞ்ஞானிகள் என்றும், எருசலேம் என்று வாசிக்கும்போது அதை சபை என்றும், பூமி என்றால் அதன் பொருள் வானம் என்றும், ஆண்டவரின் வருகையை மிஷனரி சொசைட்டிகளின் முன்னேற்றம் என்றும், தேவனுடைய வீடாகிய பர்வதத்திற்குச் செல்லுதல் என்றால் அது மெதடிஸ்டுகளின் மிகச்சிறந்த பெருங்கூட்டம் என்றும் புரிந்துகொள்ளுகின்றனர்" என்றார்.—Journal of the Rev. Joseph Wolff,page 96. (13)

கி.பி.1821 முதல் 1845 வரையிலான இந்த இருபத்து நான்கு வருட காலத்தில் ஆப்பிரிக்கா, எகிப்து, அபிசீனியா போன்ற இடங்களுக்கும், ஆசியாவில் பாலஸ்தீனத்தைக் கடந்து சிரியா, பெர்சியா, பொக்காரா, இந்தியா ஆகிய விசாலமான இடங்களுக்கும் உல்ஃப் பயணம் செய்தார். அவர் அமெரிக்க ஐக்கிய நாட்டையும் சந்தித்து, செயின்ட் ஹெலீனா தீவிலும் பிரசங்கம் செய்தார். 1837–ம் வருடம் ஆகஸ்டு மாதத்தில் நியூயார்க் வந்து சேர்ந்தார். அந்த நகரில் பேசியபின், பிலதெல்பியா, பால்டிமோர் ஆகிய இடங்களில் பிரசங்கித்தபின் வாஷிங்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். "ஜான் குன்சி ஆடம்ஸ் என்னும் முன்னாள் குடியரசுத் தலைவர் செய்த முயற்சியினால், காங்கிரஸ் மகாசபை கூடுகின்ற ஒரு அரங்கத்தைப் பயன்படுத்திக்கெள்ள ஏகமனதான அனுமதி கிடைத்தது. ஒரு சனிக்கிழமையில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் அனைவரது வருகையினாலும், வெர்ஜீனிய பிஷப்பின் வருகையினாலும், போதகர்கள், வாஷிங்டன் நகர மக்கள் ஆகியோரின் வருகையினாலும் கனப்படுத்தப்பட்டேன். இதே விதமான கௌரவத்தை நியூ ஜெர்சி, பென்சில்வேனியா ஆகிய அரசுகளிடமிருந்தும் பெற்று, நான் ஆசியாவில் நிகழ்த்திய எனது ஆராய்ச்சிகளைப்பற்றியும், கிறிஸ்துவின் நேரடியான ஆளுகையைப்பற்றியும், அந்த நாடுகளில் சொற்பொழிவாற்றினேன்" என்றும் கூறினார்.—Ibid., pages 398,399. (14)

டாக்டர் உல்ஃப் எவ்வித ஐரோப்பிய அதிகாரிகளின் பாதுகாப்புமின்றி, துன்பங்களைச் சகித்துக்கொண்டு, எண்ணிலடங்கா ஆபத்துக்கள் சூழ, மிகப் பயங்கரமான காட்டுமிராண்டிகளின் நாட்டுப்புறங்களில் பயணம்செய்தார். அவர் சிறைப்பிடிக்கப்பட்டும் பட்டினியாகவும் அடிமையாக விற்கப்பட்டும், மூன்றுமுறை மரண தண்டனை விதிக்கப்பட்டவராகவும் இருந்தார். கொள்ளைக் கூட்டத்தினரால் சூழப்பட்டு, சில சமயங்களில் தாகத்தால் கிட்டத்தட்ட சாகும் நிலையை அடைந்தார். ஒரு சமயம் உடமைகளனைத்தும் பறிக்கப்பட்டவராக, மலைகளின் வழியாக, நூற்றுக்கணக்கான மைல்கள், பனிக்காற்று முகத்தில்வீச, வெறும்கால்கள் பனியால் உறைந்துபோயிருந்த நிலத்தைத் தொட்டதினால் மரத்துப்போக, நடந்துசெல்லும்படி விட்டுவிடப்பட்டார். (15)

காட்டுமிராண்டிகளுக்கும், துன்பம் தரும் மலை ஜாதியினருக்கும் நடுவில், ஆயத்தமில்லாமல் செல்லுவதைப்பற்றி எச்சரிக்கப்பட்டபோது, "ஜெபம், கிறிஸ்துவின் மேலுள்ள வைராக்கியம், அவருடைய உதவியின் மீதுள்ள நம்பிக்கை" ஆகியவை தனக்கு ஆயுதங்களாக வழங்கப்பட்டுள்ளன என்று அவர் அறிவித்தார். "தேவ அன்பும், எனது இருதயத்தில் எனது அயல்வாசியும், எனது கரத்தில் வேதாகமமும் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார்.—W.H.D. Adams,In Perils Oft,page 192. அவர் சென்ற இடங்களிலெல்லாம் தன்னுடன் எபிரெய, ஆங்கில வேதாகமங்களைக் கொண்டுசென்றார். பிற்கால பயணம் ஒன்றைக் குறித்து: "நான் எனது வேதாகமத்தை எனது கரத்தில் திறந்து வைத்திருந்தேன். எனது வல்லமை இந்தப் புத்தகத்தில் உள்ளது என்றும், அதன் வல்லமை என்னைத் தாங்கும் என்றும் நான் உணர்ந்தேன்" என்று கூறினார்.—Ibid., page 201. (16)

இவ்வாறாக, நியாயத்தீர்ப்பின் தூது உலகின் பெரும்பகுதியில் வாழ்ந்த மக்களுக்குச் செல்லும்வரை அவரது ஊழியத்தின் முயற்சியைத் தொடர்ந்தார். யூதர்கள், துருக்கியர்கள், இந்துக்கள் இன்னும் அநேக இனத்தவருக்கு மத்தியிலும் தேவனுடைய வார்த்தைகளை அவர் இந்த மாறுபட்ட மொழிகளில் பகிர்ந்தளித்து, எல்லா இடங்களிலும் சமீபித்துக்கொண்டிருக்கும் மேசியாவின் ஆளுகையை முன்னறிவிப்பவராக இருந்தார். (17)

அவரது பொக்காரோ பயணத்தின்போது, ஒரு தூரமான இடத்தில் தனித்திருந்த மக்கள், கர்த்தரின் அதிசீக்கிர வருகையைப் பற்றிய கோட்பாட்டைப் பற்றியிருந்ததை அவர் கண்டார். "ஏமன் நாட்டிலுள்ள அராபியர்கள் சீரா என்கிற ஒரு புத்தகத்தை வைத்திருக்கிறார்கள். அது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் அவருடைய மகிமைமிக்க

ஆட்சியையும் அறிவிக்கிறது. 1840–ல் பெரும் சம்பவங்கள் நிகழும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்" என்றும் அவர் கூறுகிறார்.—Journal of the Rev. Joseph Wolff,page 377. "ஏமன் நாட்டில் ரேகாபியர்களின் பிள்ளைகளுடன் நான் ஆறு நாட்கள் தங்கினேன். அவர்கள் திராட்சைரசம் குடிப்பதில்லை. திராட்சைத் தோட்டத்தைப் பயிரிடுவதும் இல்லை. விதை விதைப்பதில்லை. கூடாரங்களில் வாழுகின்றனர். ரேகாபின் மகனான யோனத்தானின் வார்த்தைகளை நினைவில் வைத்திருக்கிறார்கள். அவர்களோடு தாண் கோத்திரத்தைச் சேர்ந்த இஸ்ரவேலின் பிள்ளைகளை கண்டேன்.... அவர்களும் ரேகாபியரின் பிள்ளைகளுடன் சேர்ந்து, வான மேகங்களின்மேல் மேசியாவின் அதிசீக்கிர வருகையை எதிர்நோக்கி இருக்கின்றனர்."—Ibid., page 389. (18)

இதே போன்ற விசுவாசம், டாட்டாரி என்கிற இடத்திலிருப்பது, வேறொரு மிஷனரியால் கண்டறியப்பட்டது. கிறிஸ்து இரண்டாவது தடவையாக எப்போது வருவார்? என்னும் கேள்வியை ஒரு டாட்டாரிய ஆசாரியன் இந்த மிஷனரியிடம் கேட்டான். அந்த மிஷனரி தனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று கூறியபோது, தன்னை ஒரு வேதாகம ஆசிரியர் என்று கூறிக்கொள்பவரின் அறியாமையைக் குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டு, தீர்க்கதரிசனத்தின்மேலிருந்த தனது சொந்த நம்பிக்கையை கிறிஸ்து 1844–ல் வருவார் என்று அறிவித்தான். (19)

கி.பி.1826–ம் ஆண்டுக்கும் முன்னரே வருகையின் தூது இங்கிலாந்தில் பிரசங்கிக்கப்பட ஆரம்பித்தது. இந்த இயக்கம் அமெரிக்காவில் இருந்ததைப்போன்று ஒரு குறிப்பான அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. வருகையின் மிகச்சரியான நேரம் பொதுவாகப் போதிக்கப்படாமல், வல்லமையுடனும், மகிமையுடனும் இருக்கும் கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையின் பெரும் சத்தியம் பரவலாக அறிவிக்கப்பட்டிருந்தது. பிரிவினைவாதிகளுக்கும் இசைவற்றவர் களுக்கும் மத்தியிலுங்கூட அந்த நம்பிக்கை இருந்தது. ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷத்தை அறிவிப்பதில், இங்கிலாந்து சபையைச் சேர்ந்த ஏறத்தாழ 700 ஊழியக்காரர்கள் ஈடுபட்டிருந்தனர் என்று மௌரான்ட் நப்ராக் என்னும் ஆங்கில எழுத்தாளர் கூறுகிறார். கிரேட் பிரிட்டனிலும் கர்த்தரின் வருகை 1844–ல் நிகழும் என்பதைச் சுட்டிக்காட்டும் தூது கொடுக்கப்பட்டிருந்தது. ஐக்கிய மாநிலங்களிலிருந்து வந்த வருகையின் வெளியீடுகள் பரவலாக எங்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருந்தன. புத்தகங்களும் பத்திரிக்கைகளும் இங்கிலாந்தில் மீண்டும் வெளியிடப்பட்டன. அமெரிக்காவிலிருந்தபோது வருகையின் விசுவாசத்தைப் பெற்றுக்கொண்ட, பிறப்பினால் ஆங்கிலேயராயிருந்த

ராபர்ட் வின்டா என்பவர், கர்த்தரின் வருகையை முன்னறிவிப்பதற்கென்று தனது பிறந்த ஊருக்குத் திரும்பிவந்தார். இப்பணியில் அநேகர் அவருடன் ஐக்கியப்படவே, இங்கிலாந்தின் பல பகுதியிலும் நியாயத்தீர்ப்பின் தூது அறிவிக்கப்பட்டது. (20)

காட்டுமிரண்டித்தனங்களுக்கும், பூசாரித்தனங்களுக்குமிடையில், தென்அமெரிக்காவிலிருந்த ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவரான லகுன்சா என்னும் ஜெஸுய்ட் குரு, வேத வசனங்களுக்கு நடத்தப்பட்டு, கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையின் சத்தியத்தைப் பெற்றுக்கொண்டார். அந்த எச்சரிப்பைக் கொடுக்கும்படி ஏவப்பட்ட அவர், ரோமன் கத்தோலிக்க சபையின் கண்டனத்திலிருந்து தப்புவதற்காக, அவரது கருத்துக்களை "ரபி பென்–இஸ்ரவேல்" என்னும் மதம்மாறின யூதனாகக் காட்டும் புனைப்பெயரால் வெளியிட்டார். லகுன்சா பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஆனால் 1825–ல் இந்தப் புத்தகம் லண்டனுக்குத் தன்வழியைக் கண்டு, அங்கு சென்றபின்னர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இரண்டாம் வருகை என்னும் பொருள்பற்றி ஏற்கனவே அங்கு நிலவியிருந்த ஆர்வத்தை அந்த வெளியீடு அதிகமாக ஆழமாக்க உதவியது. (21)

ஜெர்மனியில் இந்தக் கோட்பாடு பதினெட்டாம் நூற்றாண்டில் **பென்ஜெல்** என்பவரால் ஆதரிக்கப்பட்டது. அவர் ஒரு லுத்தரன் சபைப் போதகராகவும் புகழ்வாய்ந்த வேதாகம அறிஞராகவும் விமர்சகராகவும் இருந்தார். பென்ஜெல் வேதாகம ஆராய்ச்சியில் தன்னை ஈடுபடுத்தியிருந்தார். "ஆரம்பகாலத்தில் கொடுக்கப்பட்ட பயிற்சியினால், அவரது சமய சம்பந்தமான தன்மையிலிருந்த விருப்பத்தை அது ஆழப்படுத்தியிருந்தது. சிந்தனைமிக்க சுபாவத்தை உடையவர்களான மற்ற இளைஞர்களைப்போலவே, அவரும் இதற்கு முன்னரும், இந்நேரத்திலிருந்தும் மத சம்பந்தமான சந்தேகங்களுடனும், கஷ்டங்களுடனும் போராடவேண்டியவராக இருந்தார். 'அவரது பலவீனமான இருதயத்தைத் துளைத்து, அவரது இளமையைக் கடினமாக்கியிருந்த அநேக அம்புகளைப் பற்றி' மிகுந்த உணர்ச்சியுடன் மேற்கோள் காட்டுகிறார். ஊர்ட்டம்பர்க் சபையின் தொடர்அங்கத்தினராகி, மதச் சுதந்திரத்திற்கான காரணத்தை அவர் எடுத்துக்கூறினார். சபைக்குள்ள சலுகைகளையும் உரிமைகளையும் ஆதரித்த அதே நேரத்தில், மனச்சாட்சியின் அடிப்படையில் எவர்கள் சபையின் தொடர்பிலிருந்து பின்வாங்கிச் செல்லவேண்டுமென்ற உணர்வைக் கொண்டுள்ளனரோ, அதற்குக் கட்டுப்பட அவர்களது அறிவுமிக்க சுதந்திரத்திற்காக அவர் வாதாடினார்."—Encyclopaedia Britannica,9th ed.,art. அவரது செந்த மாநிலத்தில் இதன் நல்ல பலன்கள் இன்றும் உணரப்படுகின்றன. (22)

“அட்வெந்து ஞாயிற்றுக்கிழமை” பிரசங்கத்திற்காக அவர் வெளிப்படுத்தின விசேஷம் 21–ம் அதிகாரத்திலிருந்து ஆயத்தம்செய்து கொண்டிருந்தபோது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிய ஒளியானது பென்ஜெலின் மனதில் உதித்தது. இதுவரை ஒருபோதும் இல்லாதவிதத்தில் வெளிப்படுத்தின விசேஷத்தின் தீர்க்கதரிசனங்கள் அவரது புரிந்துகொள்ளுதலுக்கு விரிவடைந்தது. தீர்க்கதரிசியினால் முன்வைக்கப்பட்ட பிரமிப்பூட்டுகின்ற முக்கியத்துவம் வாய்ந்ததும் எல்லையில்லா மகிமைமிக்கதுமான காட்சிகளினால் மேற்கொள்ளப்பட்டு, அவர் சிறிது நேரம் அவரது பிரசங்கப் பொருள்பற்றியத் தியானத்திலிருந்து திரும்பினார். அவர் பிரசங்க பீடத்திலிருந்துபோது, அந்த விஷயம் மறுபடியும் அவருக்கு, அதன் தெளிவுடனும் வல்லமையுடனும் காட்டப்பட்டது. அந்த நேரத்திலிருந்து, அவர் தீர்க்கதரிசனங்களை ஆராய்வதில் ஈடுபட்டு, விரைவில் அவைகள் கிறிஸ்துவின் வருகையின் சமீபத்தைச் சுட்டிக்காட்டுகின்றன என்னும் நம்பிக்கைக்கு வந்துசேர்ந்தார். இரண்டாம் வருகையைப்பற்றி அவர் நிச்சயித்திருந்த தேதி, பின்னர் மில்லரால் பற்றிக்கொள்ளப்பட்ட தேதிக்கு சில வருடங்களுக்குள் இருந்தன. (23)

கிறிஸ்தவ உலகம் முழுவதற்கும் பென்ஜெல் அவர்களின் எழுத்துக்கள் பரவிக்கொண்டிருந்தன. அவரது சொந்த மாநிலமான ஊட்டம்பர்க்கிலும், ஓரளவிற்கு ஜெர்மனியின் இதர பாகங்களிலும், அவரது தீர்க்கதரிசன நோக்குகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவரது மரணத்திற்குப் பின்னரும் அந்த இயக்கம் தொடர்ந்து, வருகையின் தூது ஜெர்மனியில் கேட்கப்பட்ட அதே சமயத்தில், மற்றநாடுகளின் கவனத்தையும் அது கவர்ந்துகொண்டிருந்தது. ஆரம்பநாட்களில் சில விசுவாசிகள் ரஷ்யாவுக்குச்சென்று, அங்கு காலனிகளை அமைத்தனர். அந்த நாட்டிலுள்ள ஜெர்மன் ஆலயங்களில், இன்றைக்கும் கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையைப்பற்றிய விசுவாசம் இருக்கிறது. (24)

பிரான்சிலும், சுவிட்சர்லாந்திலுங்கூட ஒளி பரவியது. பாரலும், கால்வினும் சீர்திருத்தத்தின் சத்தியத்தைப் பரப்பியிருந்த ஜெனீவாவில் இரண்டாம் வருகையின் தூதை கசேன் என்பவர் பிரசங்கித்தார். கசேன் என்பவர் ஒரு மாணவராக இருந்தபோது, பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், ஐரோப்பா எங்கும் பரவியிருந்த பகுத்தறிவுவாதத்தின் ஆவியைச் சந்தித்து, அவர் ஊழியத்திற்குள் பிரவேசித்தபோது, மெய்யான விசுவாசத்தைப்பற்றிய அறியாமை உள்ளவராக இருந்ததோடுமட்டுமின்றி, சந்தேகவாதத்தில் விருப்பமுள்ளவராகவு மிருந்தார். “ரோலின்ஸ்–ன் பண்டைய வரலாறு” என்கிற

நூலை வாசித்தபின், அவரது கவனம் தானியேல் இரண்டாம் அதிகாரத்திற்குச் சென்றது. அந்த வரலாற்று ஆசிரியர் எழுதியிருந்தபடி, ஆச்சரியமான விதத்தில் மிகச் சரியாக அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியதைக்கண்டு வியந்தார்! வேதவாக்கியங்கள் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டவை என்கிற இந்தச் சாட்சி, பிற்காலத்தில் உண்டான ஆபத்துகளுக்கு நடுவில் அவருக்கு ஒரு நங்கூரமாக இருந்தது. பகுத்தறிவுவாதத்தின் போதனையால் திருப்தியடைய முடியவில்லை. வேதாகமத்தைப் படித்து, தெளிவான வெளிச்சத்திற்காக ஆராய்ந்ததால், சிறிது காலத்திற்குப்பின், அது அவரைச் சரியான விசுவாசத்திற்குள் நடத்தினது. (25)

தீர்க்கதரிசனங்களை தொடர்ந்து ஆராய்ந்தபோது, கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது என்னும் நம்பிக்கைக்கு அவர் வந்துசேர்ந்தார். இந்த மாபெரும் சத்தியத்தின் பக்திவிநயத்தையும் முக்கித்துவத்தையும் உணர்ந்த அவர், அதை மக்கள்முன் கொண்டுவர வாஞ்சித்தார். ஆனால் தானியேலின் தீர்க்கதரிசனங்கள் தேவ இரகசியமானவையும் புரிந்துகொள்ள முடியாதவையாகவும் உள்ளன என்னும் பிரபலமான நம்பிக்கை, அவரதுபாதையில் மோசமான ஒரு தடையாகவிருந்தது. ஜெனீவாவிற்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக அவருக்கு முன்பாகவே பாரல் செய்ததுபோல—சிறுவர்களிடம் தொடங்கி, அவர்கள் மூலமாக பெற்றோரின் ஆர்வத்தைத் தூண்டலாமென இறுதியில் தீர்மானித்தார். (26)

இந்தக் காரியத்தைச் செய்வதில் அவரது நோக்கத்தைப்பற்றிப் பின்னர் அவர்: "இது புரிந்துகொள்ளப்படவேண்டும் என்று விரும்புகிறேன். அதன் சிறிய முக்கியத்துவத்தின் காரணமாக அல்ல. அதற்குமாறாக, அதன் பெருமதிப்பின் காரணமாக, நான் பழக்கப்பட்டமுறையில் அதை முன்வைக்க விரும்பி, அதைச் சிறுவர்களுக்குக் கூறினேன். அது கேட்கப்படவேண்டும் என நான் விரும்பினேன். ஆனால் பெரியவர்களிடம் முதலில் நேரடியாகக் கூறியிருந்தால், கேட்கப்பட்டிருக்கமாட்டேன். எனவே, சிறுவர்களிடம் சொல்லத் தீர்மானித்தேன். நான் கூறுவதை கேட்கக்கூடியவர்களான ஒரு சிறுவர்கூட்டத்தைச் சேர்க்கிறேன். அந்தஅணி பெரியதானால், அவர்கள் கவனிப்பதுபோல் காணப்பட்டால், சந்தோஷமுள்ளவர்களாக இருந்தால், ஆர்வம் உள்ளவர்களாக இருந்தால், அவர்களால் அந்தப் பொருளைப் புரிந்து விளக்கமுடிந்தால், இரண்டாவது அணியை நிச்சயமாகத் திரட்டலாமென்றிருந்தேன். அப்படிச்செய்தால், அமர்ந்து ஆராய்வது மதிப்புடையது என்று பெரியவர்களும் காண்பார்கள். அப்படிச்செய்யும்போது அதன் நோக்கம் வெற்றியடைகிறது" என்றார்.—L. Gaussen,Daniel the Prophet,vol. 2,Preface. (27)

அந்த முயற்சியானது வெற்றிகரமானதாக இருந்தது. அவர் சிறுவர்களுக்குப் பிரசங்கித்தபோது பெரியவர்களும் கவனிப்பதற்கு வந்தனர். அவரது ஆலயத்தின் ஆசனங்கள் அனைத்தும் கவனமாகக் கேட்பவர்களால் நிறைந்தன. அவர்களில் உயர்ந்த அந்தஸ்தை உடையவர்களும், கற்றோரும், அந்நியர்களும், வெளிநாட்டிலிருந்து ஜெனீவாவிற்கு பார்வையாளர் களாக வந்திருந்தவர்களும் இருந்தனர். இவ்விதமாக அந்தத் தூது மற்ற பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. (28)

இதன் வெற்றியினால் தைரியமடைந்த கசேன், பிரெஞ்ச்மொழி பேசிய மக்களிருந்த சபைகளில், தீர்க்கதரிசன ஆராய்ச்சியை மேம்படுத்தும் நம்பிக்கையுடன், அவரது பாடங்களை வெளியிட்டார். “சிறுவர்களுக்கான போதனைகளை வெளியிடுவது, ‘அந்தப் புத்தகங்கள் புரிந்துகொள்ள முடியாதவை’ என்கிற தவறான நோக்கத்தில் அவைகளை வாசிக்காமல், அடிக்கடி அலட்சியம் செய்யும் பெரியவர்களிடம் ‘உங்கள் பிள்ளைகள் அவைகளைப் புரிந்துகொண்டிருக்கும்போது, அவைகள் இருளானவை என உங்களால் எப்படிக் கூறவியலும்?’ என்று பேசுவதாக இருந்தது.” “கூடுமானால் நமது கூட்டத்தில் இருப்பவர்களில் புகழ்வாய்ந்தவர்களுக்கு தீர்க்கதரிசன அறிவைக் கொடுக்க எனக்கு ஒரு பெரும் வாஞ்சை இருந்தது.” “அக்காலத்தின் தேவைகளுக்கு பதில் தருவதாக எனக்குக் காணப்பட்ட வேறு ஆராய்ச்சி உண்மையில் இருக்கவில்லை.” “இதன் வழியாகத்தான் சமீபத்திலுள்ள உபத்திரவத்திற்கென்று நாம்ஆயத்தம் செய்து, இயேசு கிறிஸ்துவிற்காக விழித்துக் காத்திருக்கவேண்டும்.” (29)

பிரெஞ்சு மொழியில் பிரசங்கித்த ஊழியர்களில், மிகச்சிறப்பு வாய்ந்தவர்களில் ஒருவராக **கசேன்** இருந்தபோதிலும், சிறிது காலத்திற்குப்பின் அவர் ஊழியத்தில் இருந்து தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். அவர் செய்த தலையாய குற்றம்... இளைஞர்களுக்குப் போதிப்பதற்கு விசுவாசத்திற்கு வழிநடத்தாத, பழக்கப்பட்ட, பகுத்தறிவார்ந்த சபைக்கொள்கை புத்தகத்தை உபயோகிக்காமல், வேதாகமத்தைப் பயன்படுத்தினார் என்பதே! பின்னர் அவர் வேறொரு சமயத்துறைப் பள்ளியில் ஆசிரியரானார். ஞாயிற்றுக்கிழமையில் உபதேசியாராகத் தனது பணியை தொடர்ந்து, சிறுவர்களுக்கு வேத வாக்கியங்களிலிருந்து போதித்தார். தீர்க்கதரிசனங்களின்மீதான அவரது புத்தகங்கள் பெரும் ஆர்வத்தை எழுப்பியது. பேராசிரியருடைய ஆசனத்திலிருந்தும், அச்சகத்தின் மூலமாகவும், சிறுவர்களுக்கான உபதேசியார் என்னும் அவருக்குப் பிடித்தமான வேலைமூலமாகவும், அதிகக் காலம் பரவலான செல்வாக்கை ஏற்படுத்தி, கர்த்தருடைய வருகை சமீபமாக இருக்கிறது என்பதைக்

காட்டியிருந்த தீர்க்கதரிசன ஆராய்ச்சிக்கு ஏராளமானவர்களின் கவனத்தை அழைக்கும் கருவியாக இருந்தார். (30)

ஸ்காண்டிநேவியாவிலும் வருகையின் தூது அறிவிக்கப்பட்டு, பரவலான ஆர்வம் எழுப்பப்பட்டது. அநேகர் அஜாக்கிரதையான பாதுகாப்பிலிருந்து, தங்கள் பாவங்களை அறிக்கையிடவும், விட்டுவிடவும், கிறிஸ்துவின் பெயரால் பாவமன்னிப்பைத் தேடவும் எழுப்பப்பட்டனர். ஆனால், அரசுசபைப் போதகர்கள் இந்த இயக்கத்தை எதிர்த்தனர். அவர்களது செல்வாக்கினால் இந்தத் தூதைப் பிரசங்கித்த சிலர், சிறையில் தள்ளப்பட்டனர். கர்த்தரின் அதிசீக்கிர வருகையைப்பற்றி அறிவித்த பிரசங்கிமார்கள் பல இடங்களிலும் இவ்விதமாக மௌனப்படுத்தப்பட்டபோது, அதிசயமான விதத்தில், சிறுவர்களின் மூலமாக இந்தத் தூதை அனுப்புவது தேவனுக்குப் பிரியமாக இருந்தது. அவர்கள் வயதில் குறைந்தவர்களாக இருந்ததினால், நாட்டின்சட்டம் அவர்களைத் தடைசெய்யமுடியாது இருக்கவே, அவர்கள் தடையின்றிப் பேச அனுமதிக்கப்பட்டனர். (31)

இந்த இயக்கம் முக்கியமாக சமுதாயத்தின் கீழான நிலைமையில் இருந்தவர்களுக்கிடையில் இருந்தது. தாழ்மையான கூலிக்காரர்களின் இல்லங்களில், எச்சரிப்பைக் கேட்க மக்கள் கூடினர். குழந்தைப் பிரசங்கிகளும், பெரும்பாலும் ஏழைக்குடிசைவாசிகளாக இருந்தனர். அவர்களில் சிலர் ஆறு அல்லது எட்டு வயதிற்கும் குறைவானவர்களாக இருந்தனர். அவர்கள் இரட்சகரை நேசித்திருந்ததற்கு, அவர்களது வாழ்க்கை சாட்சிபகர்ந்திருந்த போதும், தேவனுடைய பரிசுத்த நியமங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க அவர்கள் முயன்றிருந்தபோதும், சாதாரணமான அந்த வயதையொத்த சிறுவர்களிடம் வழக்கமாகக் காணப்படும் நுண்ணறிவையும் திறமையையுமே வெளிக்காட்டினர். ஆனாலும், மக்கள்முன் நின்றபோது, அவர்களுடைய இயற்கையான ஈவுகளுக்கும் மேலான ஒரு செல்வாக்கினால் இயக்கப்பட்டிருந்தனர் என்பது தெளிவாக தெரிந்தது. அவர்களது குரலின் தன்மையும் விதமும் மாறி, பக்தி விநயமிக்க வல்லமையுடன்: “தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள் அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது” என்னும் அதே வாக்கியங்களைப் பயன்படுத்தி, நியாயத்தீர்ப்பைப்பற்றின எச்சரிப்பைக் கொடுத்தனர். மக்களின் பாவங்களைக் கடிந்துகொண்டு, சன்மார்க்கக் கேடு, தீய பழக்கங்கள், உலகப்பிரகாரமான தன்மை, பின்வாங்கிச் செல்லுதல் ஆகியவைகளையும் கடிந்துகொண்டு, வரவிருக்கும் கோபத்திலிருந்து தப்பியோடும்படி, கேட்டவர்களை எச்சரித்தனர். (32)

மக்கள் நடுக்கத்துடன் கேட்டனர். குற்றத்தை அறிவுறுத்தும் தேவ ஆவியானவர், அவர்களது இருதயங்களில் பேசினார். புதியதும்

ஆழமிக்கதுமான ஆர்வத்துடன் அநேகர் வேதவாக்கியங்களைத் தேட நடத்தப்பட்டனர். புலனடக்கமற்றவர்களும், சன்மார்க்கமற்றவர்களும் சீர்திருந்தினர். மற்றவர்கள் அவர்களது நேர்மையற்ற பழக்கங்களை விட்டொழித்தனர். இந்த இயக்கத்தில் தேவனுடைய கரம் இருக்கிறது என்று அரசுசபைப் போதகர்களுங்கூட அறிக்கைசெய்ய நெருக்கப்படும் விதத்தில் குறிப்பாக அந்த ஊழியம் நடந்தது. (33)

ஸ்காண்டிநேவியா நாடுகளில் இரட்சகரின் வருகையைப்பற்றிய செய்தி கொடுக்கப்படவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாக இருந்தது. அவரது ஊழியக்காரர்களின் சத்தங்கள் மௌனப்படுத்தப்பட்டபோது, அந்த ஊழியம் நிறைவேறும்படியாக, சிறுவர்களின் மீது அவர் தமது ஆவியை வைத்தார். வெற்றி முழக்கத்தோடு குருத்தோலைகளை அசைத்து, அவரைத் தாவீதின் குமாரன் என்று முன்னறிவித்த திரள்கூட்டமானவர்கள் சூழ இயேசு எருசலேமை நெருங்கினபோது, பொறாமைமிக்க பரிசேயர்கள் அவர்களை மௌனப்படுத்தும்படி இயேசுவைக் கேட்டுக்கொண்டனர். ஆனால் இவை அனைத்தும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல். இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று இயேசு கூறினார். ஆசாரியர்கள் அதிபதிகளின் பயமுறுத்தல்களினால், பயந்துபோன மக்கள், எருசலேமின் வாசலுக்குள் நுழைந்தபோது, அவர்களது மகிழ்ச்சியின் அறிவிப்பை நிறுத்திவிட்டனர். ஆனால் அதன்பின் ஆலயப் பிராகாரத்தில் இருந்த சிறுவர்கள், விட்டுவிடப்பட்ட அந்தத் துதியை எடுத்து, குருத்தோலைகளை அசைத்து, “தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா” என்று முழங்கினர். மிகவும் வெறுப்படைந்த பரிசேயர்கள் அவரை நோக்கி: “இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள். அதற்கு இயேசு: ஆம், கேட்கிறேன். குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்” மத்தேயு 21:8–17. கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது, தேவன் பாலகர்களின் மூலமாகச் செயலாற்றியது போலவே, இரண்டாம் வருகையின் தூதைக் கொடுக்கவும் அவர்கள் மூலமாகச் செயலாற்றினார். இரட்சகரின் வருகையைப் பற்றிய அறிவிப்பு, சகல ஜனங்களுக்கும் பாஷைக்காரர்களுக்கும் ஜாதியினருக்கும் கொடுக்கப்பட்டாகவேண்டும் என்கிற தேவனுடைய வார்த்தை நிறைவேறவேண்டும். (34)

அமெரிக்காவில் இந்த எச்சரிப்பின் ஊழியத்தைச் செய்யும் பணி, வில்லியம் மில்லருக்கும், அவரது உடன் ஊழியக்காரர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. மாபெரும் அட்வெந்து இயக்கத்திற்கு இந்த நாடு மையமாக அமைந்தது. இங்குதான் முதலாம் தூதனுடைய தூதைப்பற்றிய தீர்க்கதரிசனம் நேரடியாக நிறைவேறியது. மில்லரும் அவரது உடன்

ஊழியர்களும் எழுதியவைகள் தூர தேசங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டன. மிஷனரிமார்கள் உலகம் முழுவதிலும் எங்கெல்லாம் நுழைந்தனரோ, அங்கெல்லாம் கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையைப்பற்றிய நற்செய்தி கொண்டுசெல்லப்பட்டது. “தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள் அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது” என்னும் நித்திய சுவிசேஷத்தின் தூது தூரமாகவும் விசாலமாகவும் பரவியது. (35)

கிறிஸ்துவின் வருகை 1844–ம் ஆண்டின் வசந்த காலத்தில் இருக்கும் என்பதுபோல் சுட்டிக்காட்டின தீர்க்கதரிசனச் சான்றுகள், மக்களின் மனங்களை ஆழமாகப் பற்றிக்கொண்டது. அத்தூது ஒரு மாநிலத்திலிருந்து அடுத்த மாநிலத்திற்குச் சென்றபோது, எங்கும் மிகப்பரவலான ஆர்வம் எழுப்பப்பட்டது. தீர்க்கதரிசன காலத்தின் அடிப்படையிலிருந்து உண்டான வாதங்கள் சரியானவை என்னும் மன உணர்த்துதல் அநேகரில் உண்டாக, அவர்களது சொந்தக்கருத்தின் பெருமையை விட்டுவிட்டு, சத்தியத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். சில ஊழியர்கள் தங்களது சபைப் பாகுபாடு என்கிற உணர்ச்சிகளையும் நோக்குகளையும் ஒரு பக்கமாக வைத்துவிட்டு, தங்களது சம்பளங்களையும் சபைகளையும் தள்ளிவிட்டு, இயேசுவின் வருகையை அறிவிப்பதில் ஒன்றுபட்டனர். இத்தூதை ஏற்றுக்கொண்ட ஊழியக்காரர்கள் ஒப்பிட்டுப்பார்க்கும்போது சிலராக இருந்தபடியால், பெருமளவிற்கு தாழ்மையான சுயாதீன ஊழியர்களிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டது. விவசாயிகள் தங்களது நிலங்களை விட்டுவிட்டனர். மெக்கானிக்குகள் தங்கள் கருவிகளையும், வியாபாரிகள் அவர்களது வியாபாரங்களையும், தொழில் நுணுக்கமிக்கவர்கள் தங்கள் தொழில்களையும் விட்டுவிட்டனர். அப்படியிருந்தும் நிறைவேற்றி முடிக்கவேண்டிய ஊழியத்துடன் ஒப்பிடப்பட்டபோது, அவர்களது எண்ணிக்கை மிக்குறைவாகவே இருந்தது. சபையின் தெய்வபக்தியற்ற நிலையும், துன்மார்க்கத்தில் கிடக்கும் ஒரு உலகமும் மெய்யான காவலாளிகளின் ஆத்துமாக்களைப் பாரப்படுத்தியது. இரட்சிப்புக்கேதுவாக மனந்திரும்பும்படி மனிதர்களை அழைப்பதற்காக அவர்கள் உழைப்பையும், தனிமையையும், பாடுகளையும் விருப்பத்துடன் சகித்தனர். சாத்தானால் எதிர்க்கப்பட்டபோதிலும் அந்த ஊழியம் சீராக முன்சென்றது. வருகையின் சத்தியம் ஆயிரக்கணக்கானவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (36)

உலகப்பிரகாரமானவர்கள், சபை அங்கத்தினர் ஆகிய இருவகுப்பு பாவிகளையும் வரும் கோபத்திற்குத் தப்பிக்கொள்ளும்படியாக எச்சரித்த இருதயங்களை ஆராயும் சாட்சி எங்கும் கேட்கப்பட்டது. கிறிஸ்துவிற்கு முன்சென்ற யோவான் ஸ்நானகனைப் போல, பிரசங்கிமார்கள் மரத்தின் வேர்

அருகே கோடாரிகளை வைத்து, மனந்திரும்புதலுக்கேதுவான கனிகளை கொடுக்கும்படி அனைவரையும் மன்றாடினர். பிரபலமான மேடைகளிலிருந்து சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிச்சயித்திருந்த செய்திகளுக்கு எதிரிடையாக அவர்களுடைய இருதயங்களைக் தூண்டும் வேண்டுகோள்கள் இருந்தன. ஆவியானவரின் வல்லமையோடு வேத வாக்கியங்களில் இருந்த மிக எளிமையான, நேரடியான சாட்சிகள் ஆழமான உணர்த்துதலைக் கொண்டுவர, வெகு சிலரால் மட்டுமே அதை முழுமையாக தடுக்கமுடிந்தது. சமயவாதிகள் அவர்களது பொய்யான பாதுகாப்பிலிருந்து எழுப்பப்பட்டனர். அவர்கள் தங்களுடைய பின்வாங்குதலையும், உலகப்பிரகாரமான வாழ்க்கையையும், அவநம்பிக்கை, பெருமை, சுயநலம் ஆகியவைகளையும் கண்டனர். அநேகர் மனந்திரும்புதலுடனும், தாழ்மையுடனும் கர்த்தரைத் தேடினர். இதுவரை உலகப் பொருட்களின்மீது வைக்கப்பட்டிருந்த பற்று இப்போது பரலோகத்தின் மீது பதிக்கப்பட்டது. தேவ ஆவியானவர் அவர்களின்மீது தங்கினார். அவர்கள் மென்மையாக்கப்பட்ட—சாந்தமடைந்த இருதயங்களுடன் "தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள் அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது" என்னும் குரலை எழுப்பிட இணைந்தனர். (37)

"இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று பாவிகள் அழுகையுடன் விசாரித்தனர். நேர்மையற்ற வாழ்க்கையினால் குறித்துக்காட்டப்பட்டிருந்தவர்கள், திரும்ப அதை எடுத்துக்கட்ட அக்கரை உள்ளவர்களானார்கள். கிறிஸ்துவில் சமாதானத்தைக் கண்ட அனைவரும் பிறரும் அந்த ஆசீர்வாதத்தில் பங்குபெறுவதைக் காண ஏங்கினர். பிதாக்களின் இருதயங்கள் பிள்ளைகளிடத்திற்கும் பிள்ளைகளின் இருதயங்கள் பிதாக்க ளிடத்திற்கும் திருப்பப்பட்டன. அகந்தை, ஒதுங்கியிருந்த தடைகள் அடித்து நீக்கப்பட்டன. இருதயப்பூர்வமான பாவஅறிக்கைகள் செய்யப்பட்டு, வீட்டின் அங்கத்தினர்கள் யாவரும் தங்களுக்கு அருகிலிருந்தவர்கள், அன்பானவர் களுடைய இரட்சிப்பிற்காக உழைத்தனர். அக்கரையோடு பரிந்துபேசின சத்தம் அடிக்கடி கேட்கப்பட்டது. மிகுந்த மனத்துயருடன் தேவனை நோக்கிக் கெஞ்சி மன்றாடும் ஆத்துமாக்கள் எங்கும் காணப்பட்டன. தங்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்கிற நிச்சயத்தைப்பெறவோ அல்லது தங்களது உறவினர்கள், அயலார்கள் ஆகியோரின் மாற்றத்திற்காகவோ அநேகர் இரவு முழுவதும் ஜெபத்தில் போராடினர். (38)

அட்வெண்டிஸ்டுகளின் கூட்டங்களுக்கு எல்லா வகுப்பினரும் கூடினர். செல்வந்தர்—வறியோர், உயர்ந்தோர்—தாழ்ந்தோர் ஆகிய பல்வேறு வகைப்பட்டவர்கள் தங்களுக்கென்று இரண்டாம் வருகையின்

கோட்பாட்டைக் கேட்க ஆவலுள்ளவர்களாக இருந்தனர். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவர்களுடைய விசுவாசத்திற்கான காரணங்களை விளக்கிக்கொண்டிருந்தபோது, எதிர்ப்பின் ஆவியைக் கர்த்தர் தடுத்து நிறுத்தியிருந்தார். சில சமயங்களில் இதைச்செய்த கருவி பலவீனமானதாக இருந்தது. ஆனால் தேவ ஆவியானவர் அவரது சத்தியத்திற்கு வல்லமை கொடுத்தார். இந்தக் கூட்டங்களில் பரிசுத்த தேவ தூதர்களின் பிரசன்னம் இருப்பது உணரப்பட்டு, தினந்தோறும் அநேகர் விசுவாசிகளின் கூட்டத்தில் சேர்க்கப்பட்டனர். கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகைக்கான சான்றுகள் திரும்பத்திரும்பக் கூறப்பட்டபோது, மிகத்திரளான கூட்டமானவர்கள் பக்திவிநயமான இந்தச் சத்தியத்தை மௌனமாகக் கவனித்தனர். பரலோகமும் பூலோகமும் ஒன்றையொன்று நெருங்கியது போல் காணப்பட்டது. முதியோர், இளைஞர், மத்திய வயதுடையோர் ஆகியோரின்மீது தேவனுடைய வல்லமை உணர்த்தப்பட்டிருந்தது. மனிதர்கள் உதடுகளில் துதியுடன் தங்களது வீடுகளைத் தேடித் திரும்பிச்சென்றனர். அமைதிமிக்க இரவில், மகிழ்ச்சிகரமான அந்த சத்தம் மணியோசையாக ஒலித்தது. அந்தக் கூட்டங்களில் பங்குபெற்ற எவராலும் மிகுந்த ஆழமிக்க ஆர்வத்தின் காட்சிகளை ஒருபோதும் மறக்க இயலாது. (39)

கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய குறிப்பான நேரத்தின் அறிவிப்பு, பிரசங்க மேடையிலிருந்த ஊழியரிலிருந்து, மோசமான உணர்வற்ற, பரலோகத்தை எதிர்க்கத் துணியும் பாவி வரை, பல வகுப்பைச் சேர்ந்த ஏராளமானவர்களிடமிருந்து எதிர்ப்பைக் கொண்டுவந்தது. “முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்” (2பேதுரு 3:3,4) என்கிற தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறின. இரட்சகரை நேசிக்கிறோம் என்று கூறிக்கொண்டிருந்த அநேகர், இரண்டாம் வருகையின் கோட்பாட்டை அல்ல, அதன் குறிப்பான நேரத்தையே மறுப்பதாக அறிவித்தனர். ஆனால் சகலத்தையும் காணும் தேவனுடைய கண்கள், அவர்களது இருதயங்களை ஆராய்ந்தது. உலகத்தை நீதியாக நியாயம் தீர்க்க கிறிஸ்து வருகிறார் என்பதைக் கேட்க அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் உண்மையற்ற வேலைக்காரர்களாக இருந்தனர். அவர்களது செயல்கள் இருதயங்களை ஆராயும் தேவனுடைய சோதனையைத் தாங்கிக்கொள்ளாது. எனவே, அவர்கள் கர்த்தரைச் சந்திக்கப் பயந்தனர். இயேசுவின் முதலாம் வருகையின்போது இருந்த யூதர்களைப்போலவே, இவர்களும் கிறிஸ்துவை வரவேற்க ஆயத்தமில்லாதவர்களாக இருந்தனர்.

வேதாகமத்திலிருந்த தெளிவான வாதங்களைக் கவனிப்பதற்கு மறுத்தது மட்டுமின்றி, கர்த்தருக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்களையும் அவர்கள் பரிகசித்துச் சிரித்தனர். சாத்தானும் அவனது தூதர்களும் வெற்றியுடன் எக்களித்து, அவருடையவர்கள் என்று கூறிக்கொள்ளும் மக்கள், அவர்மீது மிகக் குறைவான அன்பு வைத்திருப்பதால் அவருடைய வருகையை விரும்பாமலிருக்கின்றனர் என்கிற நிந்தனையைக் கிறிஸ்துவின் முகத்திலும் அவரது தூதர்கள் முகத்திலும் வீசினர். (40)

"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்" என்பது வருகையின் விசுவாசத்தை நிராகரித்தவர்களால் அடிக்கடி முன்வைக்கப்பட்ட எதிர்வாதமாக இருந்தது. வேதாகமம் "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத்தேயு 24:36) என்கிறது. கர்த்தரை எதிர்நோக்கி காத்திருந்தவர்களால் இந்த விசுவாசத்தைப்பற்றிய தெளிவான இசைவான விளக்கம் கொடுக்கப்பட்டு, அவர்களது எதிர்ப்பாளர்களால் அது தவறாகப் பயன்படுத்தப்பட்டவிதம் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. இந்த வார்த்தைகள், கிறிஸ்து கடைசித்தடவையாக தேவாலயத்தைவிட்டுப் புறப்பட்டுச்சென்றபின், ஒலிவமலையின்மீதிருந்து, அவரது சீடர்களுடன் நடத்திய, நினைவில் நிற்கக்கூடிய உரையாடலின்போது கூறப்பட்டிருந்தன. "உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" என்று சீடர்கள் கேள்விகேட்டனர். இயேசு அவர்களுக்கு அடையாளங்கள் கொடுத்து, "அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" (மத்தேயு 24:3,33) என்றார். இரட்சகரின் ஒரு வார்த்தை, அவருடைய மற்றொரு வார்த்தையை அழிக்கும்படிச் செய்யக்கூடாது. அவரது வருகையின் நாளையும் நாழிகையையும் ஒருவனும் அறியாமலிருந்தாலும், அது எப்பொழுது சமீபமாக இருக்கிறது என்பதை அறிய நாம் கற்பிக்கப்பட்டிருக்கிறோம். நோவாவின் காலத்திலிருந்தவர்கள் ஜலப்பிரளயம் வருகிறது என்பதை அறியமறுத்த காரணத்தால் சாவுக்கேதுவாக இருந்ததுபோல, அவரது எச்சரிப்பைக் கவனிக்காது விடுவதும், அவரது வருகை எப்போது சமீபம் என்பதை அறிய மறுப்பதும், அலட்சியப்படுத்துவதும், நமக்கும் இருக்கும் என்று நாம் மேலும் போதிக்கப்பட்டிருக்கிறோம். அதே அதிகாரத்தில் விசுவாசமுள்ள வேலைக்காரனையும் விசுவாசமில்லாத வேலைக்காரனையும் ஒப்பிட்டு, "என் ஆண்டவன் வர நாள் செல்லும்" என்று தன் இருதயத்தில் கூறிக்கொண்ட வேலைக்காரனுக்குத் தண்டனையைக் கொடுக்கிற உவமை, அவரது வருகையைப்பற்றி விழித்திருந்து போதிப்பவர்களையும் அதனை

மறுப்பவர்களையும் எப்படிப்பட்ட வெளிச்சத்தில் கிறிஸ்து கருதிப் பரிசளிப்பார் என்பதைக் காட்டுகிறது. எனவே “விழித்திருங்கள்” ... “எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான்”– மத்தேயு 24:42,46. “நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்” (வெளி 3:3) என்று கூறுகிறார். (41)

கிறிஸ்துவின் வருகை எந்த வகுப்பினருக்குத் தெரியாத நிலையில் இருக்குமோ அவர்களைப் பற்றி “இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை. சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர் களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளான வர்களல்லவே” (1தெச. 5:2–5) என்று பவுல் கூறுகிறான் (42)

இவ்வாறாக, கிறிஸ்துவின் வருகையின் சமீபத்தைப்பற்றி, மனிதர்கள் அறியாமலிருக்க வேண்டுமென்ற அனுமதி கொடுக்கப்படவில்லை என்பது காட்டப்பட்டது. ஆனால் இந்த விளக்கத்திற்குச் செவிகளை மூடி, சத்தியத்தை நிராகரிப்பதற்கு ஒரு சாக்குப்போக்கை விரும்பினவர்களுக்கு, “அந்த நாளையும் நாழிகையையும் ஒருவனும் அறியான்” என்கிற வசனங்கள் தைரியமிக்க பரியாசக்காரர்களாலும், கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்பவர்களாலுங்கூட, தொடர்ந்து கூறப்பட்டு எதிரொலித்தது. மக்கள் எழுப்பப்பட்டு இரட்சிப்பின் பாதையைப்பற்றி விசாரிக்கத் தொடங்கிய போது, தேவனுடைய வார்த்தைகளுக்குத் தவறான விளக்கம் கூறுவதன்மூலம், மத சம்பந்தமாக ஆசிரியர்கள், அவர்களது பயத்தை அமைதிப்படுத்த வகைதேடி, அவர்களுக்கும் சத்தியத்திற்கும் இடையில் குறுக்கிட்டனர். விசுவாசமில்லாத காவல்காரர்களும் பெரும் வஞ்சகனுடைய பணியில் ஒன்று சேர்ந்து, தேவன் சமாதானத்தைப்பற்றி பேசாதபோது, “சமாதானம், சமாதானம்” என்று குரலெழுப்பினர். கிறிஸ்துவின் நாட்களில் இருந்த பரிசேயர்களைப்போல், அநேகர் தாங்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மறுத்ததோடு, பிரவேசிக்கின்ற மற்றவர்களுக்கும் இடையூறு செய்தனர். அந்த ஆத்துமாக்களின் இரத்தம் அவர்களது கரங்களிலிருந்து கோரப்படும். (43)

மிகவும் தாழ்மையான பக்தியான சபை மக்கள் தான் வழக்கமாக இந்தத்தூதைப் பெறுவதில் முதன்மையாக இருந்தனர். தங்களுக்கென்று வேதவாக்கியங்களை ஆராய்ந்தவர்களால், தீர்க்கதரிசனத்தைப் பற்றிய வேதவாக்கிய ஆதாரமற்ற பிரபலமான நோக்கினைக் காணமுடிந்தது. போதகர்களின் செல்வாக்கினால் எங்கெல்லாம் மக்கள் சமயகுருமார்களின் செல்வாக்கினால் கட்டப்படாதவர்களாக இருந்தார்களோ, எங்கெல்லாம் எங்கெல்லாம் தேவனுடைய வார்த்தைகளைத் தங்களுக்கென்று ஆராய முடிந்ததோ, அங்கெல்லாம் திருவருகையைக் குறித்த கோட்பாடு, அதின் தெய்வீக அதிகாரத்தை நிலைப்படுத்துவதற்கு, வேத வாக்கியங்களுடன் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அவசியம் இருந்தது. (44)

விசுவாசமில்லாத தங்களது சகோதரர்களால் அநேகர் உபத்திரவப்படுத்தப்பட்டனர். சபையில் தங்களுக்கிருந்த அந்தஸ்தைத் தக்கவைத்துக் கொள்ளுவதற்காக சிலர் தங்களுடைய நம்பிக்கையைப்பற்றி மௌனம் சாதிக்கச் சம்மதித்தனர். ஆனால் மற்றவர்கள் தங்களது நம்பிக்கைக்கு ஒப்படைக்கப்பட்ட சத்தியங்களை மறைத்து வைப்பதை தேவனுக்கு உண்மையாக இருப்பது தடுப்பதை உணர்ந்தனர். வேறு எந்த ஒரு காரணமுமின்றி, கிறிஸ்துவின் வருகையின் மீதிருந்த தங்களுடைய நம்பிக்கையை வெளிக்காட்டிய ஒரே காரணத்திற்காக சபையின் ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள், ஒரு சிலர் அல்ல. “உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே” (ஏசா. 66:5) என்ற தீர்க்கதரிசன வார்த்தைகள் தங்களது விசுவாசச் சோதனையைத் தாங்கிக்கொண்ட மக்களுக்கு மிகவும் விலைமதிப்புள்ளதாக இருந்தன. (45)

அந்த எச்சரிப்பின் விளைவுகளை தேவதூதர்கள் ஆழ்ந்த ஆர்வத்துடன் கவனித்தனர். சபைகளால் இந்தத் தூது பொதுவாக நிரா கரிக்கப்பட்டபோது, தூதர்கள் வருத்தத்துடன் திரும்பினர். என்றாலும் வருகையின் சத்தியம் தொடர்பாக இதுவரை சோதிக்கப்படாதவர்கள் ஏராளமானோர் இருந்தனர். அட்வெண்டிஸ்டுகள் போதிப்பதைப்போன்ற மதப்புரட்டுகளைக் கவனிப்பதுங்கூட பாவம் என்று நம்பும்படி அநேகர் கணவர் களாலும், மனைவிகளாலும், பெற்றோர்களாலும், பிள்ளைகளாலும் தவறாக நடத்தப்பட்டனர். இந்த ஆத்துமாக்களை உன்னிப்பாகக் கவனிக்கும்படி தூதர்கள் கட்டளை பெற்றிருந்தனர். வேறொரு வெளிச்சம் தேவனுடைய சிங்காசனத்திலிருந்து இன்னமும் அவர்கள்மீது வீசவேண்டியதிருந்தது. (46)

அந்தத் தூதைப் பெற்றுக்கொண்டவர்கள் சொல்லிமுடியாத வாஞ்சையுடன் அவர்களது இரட்சகரின் வருகைக்காக விழித்துக்

கொண்டிருந்தனர். அவரைச் சந்திக்க அவர்கள் எதிர்பார்த்திருந்த நேரம் சமீபமாக இருந்தது. பக்திவிநயமான அமைதியுடன் அவர்கள் அந்த நேரத்தை நெருங்கினர். ஒளிமயமான எதிர்காலத்தில் அவர்களுடையதாக இருந்த ஊக்கமான சமாதானத்தோடு, தேவனுடனுள்ள இன்பமான உறவில் அவர்கள் இளைப்பாறினார்கள். இந்த நம்பிக்கையை அனுபவித்திருந்த ஒருவரும், காத்திருந்த விலைமதிப்புமிக்க அந்த நேரத்தை மறக்கமுடியாது. ஏனெனில், அந்த நேரத்திற்கு முந்தின சில வாரங்களில் உலகப்பிரகாரமான தொழில்கள் அதிகமாக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தன. உண்மையான விசுவாசிகள் தாங்கள் மரணப்படுக்கையில் கிடப்பதுபோலவும், ஒருசில மணிநேரங்களுக்குள் உலகப்பிரகாரமான காட்சிகளிலிருந்து தங்கள் கண்களை மூடப்போவதாகவும் எண்ணி, தங்கள் இருதயங்களின் ஒவ்வொரு சிந்தனையையும், உணர்வுகளையும் கவனமாகச் சோதித்தனர். “எழுந்தருளிச்செல்லும் உடைகள்” செய்யப்படவில்லை. ஆனால் இரட்சகரைச் சந்திப்பதற்கான ஆயத்தமாக உள்ளனர் என்கிற உள்ளான சான்றின் தேவையை அவர்கள் அனைவரும் உணர்ந்தனர். அவர்களது வெண்ணங்கிகள் ஆத்துமத்தின் தூய்மையாக—பாவநிவாரணம் அருளும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்ட குணங்களாக இருந்தன. தேவனுடைய ஜனங்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களிடம் இருதயத்தை ஆராயும் அதே ஆவி, அதே ஆவல், தீர்மானமான விசுவாசம் ஆகிவைகள் இருக்கவேண்டும். இவ்விதமாகத் தங்களைக் கர்த்தருக்குமுன் தாழ்த்துவதில் அவர்கள் தொடர்ந்திருந்து, கிருபாசனத்தில் தங்கள் மன்றாட்டுக்களை அடுக்கி இருந்திருந்தால், இப்பொழுது அவர்களிடம் இருப்பதைவிட, அதிகமான ஐசுவரியமிக்க அனுபவத்தை உடையவர்களாக இருந்திருப்பார்கள். மிகமிகக் குறைவான ஜெபமும், குறைவான குற்ற உணர்வும், ஜீவனுள்ள விசுவாசமின்மையும் நமது மீட்பரால் தாராளமாக ஏற்படுத்தப்பட்டுள்ள கிருபையற்றவர்களாக அநேகரை விட்டுவிடுகிறது. (47)

தமது பிள்ளைகளை நிரூபிக்கத் தேவன் திட்டம் செய்தார். தீர்க்கதரிசனக் காலங்களைக் கணக்கிடுவதில் உள்ள ஒரு தவறை, அவரது கரம் மறைத்தது. அட்வெந்துக்கள் அந்தத் தவறைக் கண்டுபிடிக்கவில்லை. அவர்களது எதிராளிகளாக இருந்த மிகவும் கற்றவர்களாலும் அது கண்டுபிடிக்கப்படவில்லை. “உங்களது தீர்க்கதரிசனக் கணக்கிடுதல் சரியானது. ஏதோ ஒரு பெரிய சம்பவம் நிகழ உள்ளது. ஆனால் அது மில்லர் முன்னறிவிப்பது அல்ல. அது உலகத்தின் மாற்றத்தைப் பற்றினது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றினது அல்ல” என்று இரண்டாமவர்கள் கூறினார்கள். (48)

எதிர்பார்த்திருந்த நேரம் கடந்து சென்றது. தமது மக்களின் விடுதலைக்காக கிறிஸ்து தோன்றவில்லை. உண்மையான அன்புடனும் விசுவாசத்துடனும் தங்களது இரட்சகருக்காக பார்த்திருந்தவர்கள் கசப்பான ஏமாற்றத்தை அனுபவித்தனர். என்றாலும் தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறின. அவரது தோற்றத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம் என்று கூறிக்கொண்டிருந்தவர்களின் இருதயங்களை அவர் சோதித்துக்கொண்டு இருந்தார். எந்த மேலான நோக்கத்தினாலுமன்றி, பயத்தினால் மட்டுமே செயலாற்றியிருந்த அநேகர், அவர்களுக்கிடையில் இருந்திருந்தனர். அவர்களது விசுவாச அறிக்கை அவர்களது இருதயங்களையோ அல்லது வாழ்க்கைகளையோ பாதித்திருக்கவில்லை. எதிர்பார்த்த நிகழ்ச்சி நடைபெறத் தவறியபோது, இந்த மனிதர்கள் தாங்கள் ஏமாற்றமடையவில்லையென்று அறிவித்தனர். கிறிஸ்து வரக்கூடுமென்று தாங்கள் ஒருபோதும் நம்பியிருக்கவில்லையென்றும் அறிவித்தனர். உண்மையான விசுவாசிகளின் துயரைப் பரிகசிப்பதில் அவர்கள் முதலானவர்களாக இருந்தனர். (49)

ஆனால் சோதிக்கப்பட்டு, உண்மையுள்ளவர்களாயிருந்தும் ஏமாற்றமடைந்திருந்தவர்களை இயேசுவும் பரலோக சேனை முழுவதும் அன்புடனும் அனுதாபத்துடனும் நோக்கினர். பார்க்கக்கூடியதிலிருந்து பார்க்கக்கூடாமலிருப்பதைப் பிரித்துவைத்திருக்கும் திரை பின்தள்ளப் படுமானால், தேவதூதர்கள், இந்த நிலைகுலையாத ஆத்துமாக்களுக்கு அருகில் வந்து, சாத்தானின் பட்டயத்திலிருந்து அவர்களை மறைப்பது காணப்பட்டிருந்திருக்கும். (50) ★

21

# ஒரு எச்சரிக்கை நிராகரிக்கப்பட்டது!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 375–390)**

இரண்டாம் வருகையைப்பற்றிய செய்தியைக் கொடுத்ததில் வில்லியம் மில்லரும் அவரது சகாக்களும், நியாயத்தீர்ப்பிற்கென்று மனிதர்களை ஆயத்தப்படுத்த எழும்பும் ஒரே நோக்கத்துடன் உழைத்தனர். தங்களை மதச்சார்புடையவர்கள் என்று கூறிக்கொண்டிருந்தவர்களை, சபையின் உண்மையான நம்பிக்கைக்காகவும், ஒரு ஆழமான கிறிஸ்தவ அனுபவத்தின் தேவையை உணரவும் எழுப்பும்படி அவர்கள் வகைதேடினர். மனம் மாறாதவர்கள் உடனடியாக மனம் வருந்தி தேவனிடத்திற்கு திரும்பவேண்டிய அவர்களது கடமைக்கு அவர்களை எழுப்பிவிடவும் உழைத்தனர். “மனிதர்களை மதத்தின் ஒரு பிரிவிற்கோ அல்லது கட்சிக்கோ மாற்றுவதற்கு அவர்கள் முயலவில்லை. எனவே, அவர்கள் அனைத்துக் கட்சிக்காரர்களுக்கும், பிரிவினர்களுக்கும் இடையில், அவர்களது நிர்வாக அமைப்பிலும் ஒழுக்கத்திலும் குறுக்கிடாமல் பணியாற்றினர்.” (1)

“எனது ஊழியத்திலெல்லாம், இப்போதுள்ள சபைகளிலிருந்து வேறுபட்ட ஒரு சபையை அமைக்கும் விருப்பமோ, அல்லதுஒருவரின் செலவில் வேறொருவருக்கு இலாபத்தை உண்டுபண்ணும் விருப்பமோ, ஒருபோதும் எனக்கு இருந்ததில்லை. எல்லோருக்கும் நன்மை உண்டாகவேண்டும் என்று நான் நினைத்தேன். கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய நல்ல நம்பிக்கையில் அனைத்து கிறிஸ்தவர்களும் சந்தோஷப்படுவார்கள் என்று வைத்துக்கொண்டால், நான் பார்க்கிறதுபோல பார்க்கமுடியாவிட்டாலும், இந்தக் கோட்பாட்டைத் தழுவுகிறவர்களை எவ்விதத்திலும் குறைவாக நேசிக்கமாட்டார்கள். இதற்கென்று தனிப்பட்ட கூட்டங்கள் தேவையாக இருக்கும் என்னும் கருத்து ஒருபோதும் எனக்குள் உண்டாகவில்லை. எனது

முழு நோக்கமும், ஆத்துமாக்களை தேவனிடம் மனம்மாறச்செய்வதும், வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைப் பற்றி உலகத்திற்கு அறிவிப்பதும், தேவனை சமாதானத்துடன் சந்திக்க தகுதிப்படுத்தும் இருதய ஆயத்தம் செய்திட எனது உடன் மனிதர்களைத் தூண்டும் விருப்பமாகவே இருந்தது. எனது ஊழியத்தின் கீழ் மனம்மாறின பெரும்பான்மையினர், இப்போது உள்ள பல்வேறுபட்ட சபைகளில் ஐக்கியப்பட்டிருந்தனர்" என்று மில்லர் கூறினார்.— Bliss,page 328. (2)

அவரது ஊழியம் சபைகளை வளர்க்க வழிகோலியபோது, சிறிது காலத்திற்கே அது ஆதரவாகக் கருதப்பட்டிருந்தது. ஆனால் போதகர்களும் மதத்தலைவர்களும், திருவருகையின் கோட்பாட்டிற்கு எதிராக தீர்மானமெடுத்து, அந்த விஷயத்தைப்பற்றிய அனைத்து கிளர்ச்சியையும் அமர்த்த விரும்பினபோது, அவர்கள் அதைப் பிரசங்கமேடையில் இருந்துமட்டும் எதிர்க்காமல், சபை உறுப்பினர்கள் இரண்டாம் வருகையைப் பற்றின சொற்பொழிவைக் கேட்பதற்குச் செல்லும் வாய்ப்பகளையும் மறுத்தனர். அல்லது சபையின் சமூகக் கூட்டங்களில் தங்களது நம்பிக்கையைப்பற்றிப் பேசுவதையுங்கூட மறுத்தனர். இவ்வாறாக, விசுவாசிகள் பெரும் சோதனையும் குழப்பமுமிக்க நிலையில் தாங்கள் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். அவர்கள் தங்களது சபையை நேசித்தனர். அதிலிருந்து பிரிந்து செல்லுவதை விரும்பவில்லை. ஆனால் தேவனுடைய வார்த்தையின் சாட்சி அடக்கப்படுவதை அவர்கள் கண்டபோது, தீர்க்கதரிசனங்களை ஆராயும் அவர்களது உரிமை மறுக்கப்பட்டபோது, சபைக்குக் கீழ்ப்படிவதைத் தேவனுக்கு பக்திவிசுவாசமாக இருப்பது தடுக்கிறதை உணர்ந்தனர். தேவனுடைய வார்த்தையின் சாட்சியை மூடிவைத்துவிட வகைதேடினவர்களை, "சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமான" கிறிஸ்துவின் சபையைச் சார்ந்தவர்களாக அவர்களால் கருதமுடியவில்லை. எனவே, அவர்களது முந்திய பிணைப்பிலிருந்து பிரிந்துசெல்லுவது நியாயமானது என அவர்கள் தாங்களாகவே உணர்ந்தனர். 1844–ம் ஆண்டின் கோடைகாலத்தில் ஏறக்குறைய 50,000 பேர் தங்கள் சபைகளிலிருந்து பின்வாங்கினர். (3)

இந்த நேரத்தில் ஐக்கிய நாடுகள் முழுவதிலுமிருந்த பெரும்பான்மையான சபைகளில் குறிப்பிடப்பட்ட வெளிப்படையான மாறுதல் காணப்பட்டது. அநேக வருடங்களாக, உலக நடத்தைகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் இசைவான மாற்றம், சீராக ஆனால் நிலையாக அதிகரித்துக்கொண்டிருந்தது. அதற்குச்சமமாக உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கையின் சரிவும் நிகழ்ந்துகொண்டிருந்தது. ஆனால் அந்த வருடத்தில், அந்த நாட்டிலிருந்த ஏறத்தாழ அனைத்து சபைகளிலும் சடிதியான குறிப்பான சரிவின் சான்றுகள் காணப்பட்டன. அதற்கான காரணத்தை

ஒருவராலும் தெரிவிக்க முடியாதென்று காணப்பட்டபோது, அச்சகங்கள் பிரசங்க மேடைகளிலிருந்து இந்த உண்மை விரிவாகக் குறிக்கப்பட்டு விவரிக்கப்பட்டிருந்தது. (4)

பிலதெல்பியாவிலிருந்த பிரிஸ்பிட்டேரியன் சபைக்கூட்டம் ஒன்றில், பரவலாகப் பயன்படுத்தப்பட்டிருந்த வேதாகம விளக்க நூலின் ஆசிரியராகவும், அந்த நகரத்தின் தலையாய சபைகளில் ஒன்றின் போதகருமாயிருந்த திரு.பார்ன்ஸ் என்பவர்: "தான் இந்த ஊழியத்தில் இருபது வருடங்களாக இருந்திருப்பதாகவும், அவர் நடத்திய கடந்த திருவிருந்து ஆராதனைவரை, அதைப் பெற்றுக்கொள்ளாதவர்களாக சபையில் அதிகமானவர்களும் இருந்தனர். ஆனால் இப்பொழுது எழுப்புதல்கள் இல்லை. மனம் மாறுதல்கள் இல்லை. தங்களை விசுவாசிகள் என அறிவிப்பவர்களில் கிருபையின் வளர்ச்சி காணக்கூடியதாக இல்லை. அவருடைய ஆராய்ச்சிக்கு தங்களுடைய ஆத்தும இரட்சிப்பைப் பற்றி உரையாட ஒருவரும் வருவதில்லை. தொழில்களின் அதிகரிப்போடும் வியாபாரம் உற்பத்தியாளர்களின் பிரகாசமான வாய்ப்புகளோடும் உலகப் பிரகாரமான எண்ணங்கள் அதிகரித்துள்ளன. எல்லாச் சபைகளிலும் இப்படித்தான் உள்ளது" என்று அறிவித்தார்.—Congregational Journal,May 23,1844. (5)

அதே வருடம் பிப்ரவரி மாதத்தில் ஓபெர்லின் கல்லூரிப் பேராசிரியரான பின்னே என்பவர்: "பொதுவாக நமது நாட்டிலுள்ள புரொட்டஸ்டாண்டு சபைகள், காலத்தின் சன்மார்க்க சீர்திருத்தத்தில் ஒன்று ஆர்வமில்லாதவையாக அல்லது எதிர்க்கிறவையாக உள்ளன என்கிற உண்மையை நமது மனங்களுக்கு முன் நாம் பெற்றிருக்கிறோம். இதில் ஒரு பகுதி விதிவிலக்கும் இருக்கிறது. இருந்தபோதிலும் பொதுவான உண்மையைத்தவிர வேறுவிதமாக இருப்பதற்கு அவை போதுமானவையாக இல்லை. இணையான வேறொரு உண்மையும்—சபைகளில் எழுப்புதலின் செல்வாக்கு, ஏறத்தாழ உலகிலெங்குமே இல்லை என்பதும் இருக்கிறது. ஆவிக்குரிய ஆர்வமின்மை ஏறத்தாழ எங்கும் பரவி, பயங்கரமான விதத்தில் ஆழமாகவும் இருக்கிறது. இப்படித்தான் நாடு முழுவதற்குமான மத அச்சகம் சாட்சிபகருகிறது. மிகவும் பரவலான அளவிற்கு, சபை அங்கத்தினர்கள் நாகரீகத்தின் பக்தர்களாகவும், நாட்டியங்களிலும் விழாக்கொண்டாட்டங்களிலும் களியாட்டக்கூடங்களிலும் பக்தியில்லாதவர்களுடன் கரம்கோர்த்துச் செல்லுபவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால் வேதனையாக இந்தக் காரியத்தை நாம் விரிவுபடுத்தவேண்டிய அவசியம் இல்லை. சபைகள் பொதுவாக வருந்தத்தக்கவிதத்தில் சீரழிந்துகொண்டிருக்கின்றன என்பதைக் காட்டுவதற்குப் போதுமான சான்றுகள் பெருகி நம்மீது பாரமாகச்

சுமருகின்றது. அவர்கள் கர்த்தரைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டனர். அவர் அவர்களைவிட்டு தம்மை விலக்கிக்கொண்டார்" என்று கூறினார்.(6)

Religious Telescope–ன் ஒரு எழுத்தாளர்: "இன்று உள்ளதுபோன்ற ஒரு பொதுச் சரிவை நாம் ஒருபோதும் சாட்சியாகக் கண்டதில்லை. சபை நிச்சயமாகத் துயிலெழுந்து, இந்தத் துன்பத்திற்கான காரணத்தைத் தேடவேண்டும். சீயோனை நேசிக்கும் ஒவ்வொருவரும் அதைத் துன்பமாகப் பார்க்கவேண்டும். உண்மையான மனமாற்றங்கள் எத்தனை சிலதாயும், ஒன்றுக்கொன்று தூரமாயும் இருக்கிறது என்பதையும், ஒப்பிடமுடியாத மனஸ்தாபத்தையும் பாவிகளின் இருதயக்கடினத்தையும், நாம் மனதில் எண்ணிப்பார்க்கும்போது, 'தேவன் கிருபையாக இருப்பதை மறந்துவிட்டாரா? அல்லது கிருபையின் கதவு அடைக்கப்பட்டதா?' என்று ஏறத்தாழ நம்மையும் அறியாமலேயே நாம் வியக்கிறோம்" என்று சாட்சிபகர்ந்தார். (7)

சபையிலும் காரணமில்லாமல் அப்படிப்பட்ட ஒரு நிலைமை எப்போதும் உண்டாயிருக்கவில்லை. நாடுகள், சபைகள், தனிப்பட்டவர்களின்மீது படியும் ஆவிக்குரிய இருள், ஒத்தாசையாக இருக்கும் தேவ கிருபையை விலக்கிக்கொள்ளும் தேவனின் ஒருதலைப்பட்சமான செயலினால் இல்லாமல், தெய்வீக ஒளியை மனிதர்கள் அவர்களது பங்காக அலட்சியம் செய்வதால் அல்லது நிராகரிப்பதால் உண்டாகிறது. இந்த சத்தியத்தைப்பற்றிய தெளிவான உதாரணம், கிறிஸ்துவின் காலத்திலிருந்த யூதர்களின் வரலாற்றினால் முன்வைக்கப்பட்டுள்ளது. உலகின்மீதுள்ள அவர்களது நாட்டத்தினாலும், தேவனையும் அவரது வார்த்தையையும் மறந்ததினாலும், அவர்களது புரிந்துகொள்ளும் தன்மை இருளடைந்தது. அவர்களது இருதயங்கள் பூமிக்குரியதாகவும் சிற்றின்பங்களை நாடுவதாகவும் இருந்தன. இவ்விதமாக அவர்கள் மேசியாவின் வருகையைப்பற்றிய விஷயத்தில் அறியாமை உள்ளவர்களாக இருந்து, அவர்களது அகந்தையினாலும், நம்பிக்கையின்மையினாலும் அவர்கள் மீட்பரை நிராகரித்தனர். அவ்வாறிருந்த பின்னரும், சத்தியத்தைப்பற்றிய அறிவிலிருந்தும், அல்லது இரட்சிப்பின் ஆசீர்வதங்களில் பங்கு பெறுவதிலிருந்தும் யூத இனத்தை அவர் நீக்கவில்லை. ஆனால் சத்தியத்தை நிராகரித்தவர்கள், பரலோக ஈவின்மீதிருந்த வாஞ்சைகள் அனைத்தையும் இழந்தனர். அவர்கள் தங்களிலிருந்த ஒளி இருளாகும்வரை "ஒளியை இருளாகவும் இருளை ஒளியாகவும்" பாவித்தனர். அந்த இருள் எவ்வளவு அடர்த்தியாக இருந்தது. (8)

முக்கியமான தெய்வபக்தியின் ஆவி இல்லாதிருந்தும், பக்தியின் தோற்றங்களை மனிதர்கள் தக்கவைத்துக்கொள்ளவேண்டும் என்பது, சாத்தானின் கொள்கைக்குப் பொருந்துகிறது. யூதர்கள் சுவிசேஷத்தை

நிராகரித்தபின், தங்களுடைய பண்டைய மதச்சடங்குகளை அனுசரிப்பதில் வைராக்கியமாகத் தொடர்ந்திருந்தனர். தேவப்பிரசன்னத்தின் வெளிக்காட்டுதல் இப்போது அவர்களுக்குள் இல்லை என்பதை தாங்களாகவே ஒப்புக்கொண்டிருந்தபோதும், தங்களது இனத்தின் தனித்தன்மையை அவர்கள் வைராக்கியமாகப் பாதுகாத்திருந்தனர். மேசியாவின் வருகையின் காலத்தை தானியேலின் தீர்க்கதரிசனம் தவறில்லாமல் சுட்டிக்காட்டியிருந்தது. அவரது மரணத்தைப்பற்றியும் அது நேரடியாக முன்னறிவித்திருந்தது. ஆனால், அதை ஆராய்வதை அவர்கள் அதைரியப்படுத்தி, முடிவில் அந்தக் காலத்தைப்பற்றிக் கணக்கிட முயல்பவர்களின்மீது ரபிமார்கள் ஒரு சாபத்தைக் கூறியிருந்தனர். குருட்டுத்தனத்திலும் பாவத்தைக்குறித்த மனஸ்தாபமின்றியும், இஸ்ரவேல் மக்கள் 1800 ஆண்டுகளாக, இரட்சிப்பின் கிருபைமிக்க ஈவைக்குறித்து அலட்சியத்தோடு, சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களையும்,பரலோகத்திலிருந்து வரும் ஒளியை நிராகரிப்பதன் ஆபத்தைப்பற்றிய பக்கிவிநயமான எச்சரிப்பையும் குறித்த எண்ணமற்றவர்களாகவும் இருந்தனர். (9)

காரணம் இருக்கும்போதெல்லாம் அதன் விளைவுகள் பின்தொடரும். கடமையைக்குறித்த மனஉணர்த்துதலை, அது தனது ஆசைகளுக்கு இடையூறாக இருக்கிறது என்பதற்காக வேண்டுமென்றே அழித்துவிடுபவன், இறுதியில் சத்தியத்திற்கும் தவறுக்கும் இடையிலுள்ள வேற்றுமையைப் பிரித்தறியும் வல்லமையை இழந்துவிடுவான். புரிந்துகொள்ளும்தன்மை இருளடைகிறது, மனச்சாட்சி தழும்பாகிறது, இருதயம் கடினமாகிறது. அந்த ஆத்துமா தேவனிடமிருந்து பிரிந்துசெல்லுகிறது. எங்கு தெய்வீகத்தூது அவமதிக்கப்படுகிறதோ அல்லது அலட்சியப்படுத்தப்படுகிறதோ, அங்கு சபை இருளால் மூடப்பட்டிருக்கும் விசுவாசமும் அன்பும் குளிர்ந்து போகும் விலகிச்செல்லுதலும் பிரிவினைகளும் நுழையும் சபை அங்கத்தினர்கள் தங்கள் விருப்பங்களையும் சக்திகளையும் உலகத்தைத் தேடுவதற்கு அர்ப்பணிப்பர் பாவிகள் தங்களது பாவத்திற்காக வருந்தாமல், கடினமுள்ளவர்களாகிவிடுவர். (10)

தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வேளையை அறிவித்து, அவருக்குப் பயந்து, அவரைத் தொழுதுகொள்ளும்படி அழைக்கும் வெளி.14–லிலுள்ள முதலாம் தூதனின் தூது, தங்களைத் தேவனுடைய மக்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களை, கறைப்படுத்தும் உலகச் செல்வாக்கிலிருந்து பிரிக்கவும், அவர்களுடைய உலகப்பிரகாரமான, பின்னிட்டு விழுந்திருக்கும் உண்மையான நிலையைப் பார்ப்பதற்கு அவர்களை எழுப்புவதற்குமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. ஏற்றுக்கொண்டிருந்தால், தேவனைவிட்டு அவர்களை விலக்கியிருக்கும் தீமைகளை சீர்செய்திருந்திருக்கும் ஒரு எச்சரிப்பை, தேவன் இந்தத் தூதில் சபைக்கு அனுப்பியிருந்தார்.

பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட தூதைப் பெற்றிருந்தால், கர்த்தருக்கு முன்பாகத் தங்கள் இருதயங்களைத் தாழ்த்தி, அவருடைய சமூகத்தில் நிற்பதற்கான ஒரு ஆயத்தத்தை உண்மையாகத் தேடி இருந்தால், தேவனுடைய ஆவியும் அவரது வல்லமையும் அவர்களுக்கிடையில் வெளிப் பட்டிருக்கும். சபை மீண்டும் ஐக்கியம் விசுவாசம், அன்பு என்று அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்த, “ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்” “தேவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்” “இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்” (அப். 4:32 2:47) என்ற அந்த ஆசீர்வாதமான நிலையை அடைந்திருந்திருக்கும். (11)

தங்களைத் தேவனுடையவர்கள் என்று கூறிக்கொள்ளும் மக்கள், தேவனுடைய வார்த்தையிலிருந்து பிரகாசிக்கும் ஒளியைப் பெற்றுக் கொள்வார்களானால், கிறிஸ்து ஜெபித்த—அப்போஸ்தலர் விவரித்த “சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமை” “உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்” (எபே. 4:3–5) என்கிற அதே ஐக்கியத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். (12)

வருகையின் தூதைப் பெற்றுக்கொண்டவர்கள் அனுபவித்த ஆசீர்வாதமிக்க பலன்கள் அப்படிப்பட்டவையாக இருந்தன. “அவர்கள் வேறுபட்ட பல சபைகளிலிருந்து வந்திருந்தனர். அவர்களது சபை வேறுபாடுகள் என்னும் தடைகள் தரைமட்டமாயின. ஒன்றையொன்று மோதும் கொள்கைகள் அணுக்களாகச் சிதறிப்போயின. ஆயிரவருட உலக அரசாட்சி என்னும் வேத வாக்கிய ஆதாரமற்ற நம்பிக்கை கைவிடப்பட்டது. இரண்டாம் வருகையைப்பற்றிய தவறான நோக்குகள் சரிசெய்யப்பட்டன. அகந்தையும் உலகோடு இணைந்திருப்பதும் அடித்துச் செல்லப்பட்டன. தவறுகள் சரிசெய்யப்பட்டன. இனிமையான சகோதரத்துவத்திற்குள் இருதயங்கள் பிணைக்கப்பட்டன. அன்பும் சந்தோஷமும் மேலாக ஆட்சி செய்தன. இந்தக்கொள்கை, இதை ஏற்றுக்கொண்ட சிலருக்கு இப்படிச் செய்திருந்தால், அனைவரும் இதை ஏற்றுக்கொண்டிருப்பார்களானால், அத்தனைபேருக்கும் அதையே செய்திருந்திருக்கும்.” (13)

ஆனால் பொதுவாக சபைகள் அந்த எச்சரிப்பை ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களின் ஊழியக்காரர்கள், இஸ்ரவேல் வீட்டாருக்குக் காவல்காரர்களாக, இயேசுவின் வருகையின் அடையாளத்தை முதலாவதாக அறிந்திருக்கவேண்டும். ஆனால் தீர்க்கதரிசன சாட்சியங்களிலிருந்தாவது

அல்லது காலங்களின் அடையாளங்களிலிருந்தாவது அந்த சத்தியத்தை அறிந்துகொள்ள அவர்கள் தவறியிருந்தனர். உலகப்பிரகாரமான நம்பிக்கை களும், மேலான ஆசைகளும் இருதயத்தை நிரப்பினபோது, தேவன்மீதுள்ள அன்பும், அவரது வார்த்தையின்மீதுள்ள விசுவாசமும் குளிர்ந்துவிடவே, வருகையின் கோட்பாடு பிரசங்கிக்கப்பட்டபோது, அது அவர்களது அவநம்பிக்கையையும் தவறான எண்ணத்தையுமே எழுப்பினது. அந்தத் தூது சபை விசுவாசிகளால் பெருமளவிற்குப் பிரசங்கிக்கப்பட்டிருந்தது என்பது, அதற்கு எதிரான வாதமாக கொண்டுவரப்பட்டது. பழங்காலத்தைப் போலவே, தேவனுடைய வார்த்தையின் தெளிவான சாட்சி: "அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?" என்ற பதிலையே சந்தித்தது. தீர்க்கதரிசன காலங்களில் இருந்து கொண்டுவரப் பட்டிருந்த வாதத்தை மறுப்பது என்பது எவ்வளவு கடினமான ஒரு காரியம் என்பதைக் கண்டு, அவைகள் முத்திரிக்கப்பட்டிருக்கின்றன் அவைகள் புரிந்துகொள்ளப்பட வேண்டாதவை என்று போதித்து, தீர்க்கதரிசன நூல்களை ஆராய்வதை அநேகர் அதைரியப்படுத்தினர். திரளானவர்கள் அவர்களது போதகர்களை மனதார (மறைமுகமாக?) நம்பி, அந்த எச்சரிப்பைக் கவனிக்க மறுத்துவிட்டனர். மற்றவர்கள் சத்தியத்தைப்பற்றிய உணர்வடைந்திருந்தபோதும், "ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப் படுவோம்" என்ற பயத்தால் அதை அறிக்கை செய்யத் துணியவில்லை. சபையைச் சோதிக்கவும், தூய்மைப்படுத்தவும் தேவன் அனுப்பி இருந்த தூது, எவ்வளவு அதிகமானவர்கள் தங்களுடைய நேசத்தை கிறிஸ்துவின்மீது வைப்பதைவிட, உலகத்தின்மீது நிச்சயமாக வைத்திருந்தனர் என்பதை வெளிக்காட்டியது. உலகத்துடன் அவர்களைக் கட்டியிருந்த பிணைப்புகள் பரலோகத்தை நோக்கிய கவர்ச்சிகளைவிட மிகவும் பலமிக்கதாக இருந்து, உலகஞானத்தின் சத்தத்தைக் கவனிப்பதை தெரிந்துகொண்டு, இருதயத்தை ஆராயும் சத்தியத்தின் தூதைவிட்டுத் திரும்பினர். (14)

முதலாம் தூதனின் எச்சரிப்பை மறுத்ததால், அவர்களைத் திரும்ப எடுத்துக்கட்டுவதற்காக, பரலோகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உபாத்தியை அவர்கள் நிராகரித்தனர். தேவனைவிட்டு அவர்களைப் பிரித்திருந்த தீமைகளை சீர்படுத்தியிருக்கக்கூடிய கிருபையின் தூதனை அவர்கள் அவமரியாதையாக நடத்தி, உலகத்தின் நட்பைத் தேட மிகுந்த ஆர்வத்துடன் திரும்பிச்சென்றனர். 1844–ல் சபைகளில் இருந்த உலகப்பற்று, பின்வாங்கிச்செல்லுதல், ஆவிக்குரிய மரணம் ஆகியவைக்கு காரணம் இங்கிருந்தது. (15)

வெளி 14–ம் அதிகாரத்தில் முதலாம் தூதனை "பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன்வேசித்தனமாகிய உக்கிரமான மதுவை

சகல ஜாதிகளுக்கும் குடிக்கக்கொடுத்தாளே" என்று அறிவிக்கும் இரண்டாம் தூதன் பின்தொடர்ந்தான். பாபிலோன் என்னும் சொல் பாபேல் என்கிற சொல்லிலிருந்து வந்து, குழப்பத்தைக் குறிக்கிறது. அது பலவிதமான தவறான அமைப்புகளையும் அல்லது மருள விழுந்த மதத்தையும் சுட்டிக்காட்ட வேதவாக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வெளி. 17–ம் அதிகாரத்தில் பாபிலோன் ஒரு பெண்ணாக—வேதாகமத்தில் சபையை அடையாளப்படுத்தும் உருவகமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கற்புடைய ஒரு பெண் தூய்மையான சபையையும், இழிவான பெண் மருளவிழுந்த சபையையும் சுட்டிக்காட்டுகிறது. (16)

வேதாகமத்தில் கிறிஸ்துவிற்கும் அவரது சபைக்கும் இடையில் உள்ள பரிசுத்தமானதும், நிலையானதுமான உறவு, திருமண ஐக்கியத்தால் குறிப்பிடப்படுகின்றன. பக்திவிநயமான ஒரு உடன்படிக்கையின்மூலமாகக் கர்த்தர் அவரது மக்களைத் தம்முடன் சேர்த்துக்கொண்டார். அவர் அவர்களது தேவனாக இருப்பாரென்று வாக்குத்தத்தம் செய்ய, அவர்கள் அவருடையவர்களாக, அவருடையவர்களாகமட்டுமே இருப்பார்கள் என்று உறுதிமொழி கூறினர். "நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்" (ஓசியா 2:19) என்று அவர் அறிவிக்கிறார். "நான் உங்கள் நாயகர்" (எரே. 3:14) என்று மறுபடியும் அவர் அறிவிக்கிறார். "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால்" (2 கொரி. 11:2) என்று கூறும் போது, பவுல் அதே உருவகத்தைப் பயன்படுத்தி இருக்கிறார். (17)

தனது நம்பிக்கையையும் அன்பையும் அவரைவிட்டு விலக அனுமதித்து, உலகப்பொருள்களைப்பற்றிய ஆசையை ஆத்துமாவை ஆக்கிரமித்துக்கொள்ள அனுமதிக்கும் சபையின் உண்மையின்மை, திருமணப் பொருத்தனையை மீறுதலுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. கர்த்தரைவிட்டு விலகிச்சென்ற இஸ்ரவேலின் பாவம் இதே உருவகத்தில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் வெறுத்த தேவனுடைய அதிசயமான அன்பு, இதயத்தைத் தொடும்வண்ணம்: "உனக்கு ஆணையிட்டுக்கொடுத்து, உன்னோடு உடன்படிக்கைபண்ணினேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; இவ்விதமாய் நீ என்னுடையவளானாய்"—எசே. 16:8. "நீ மிகவும் அழகுள்ளவளாகி, ராஜ்யத்தைச் சுதந்தரிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றாய். உன் அழகினாலே உன் கீர்த்தி புறஜாதிகளுக்குள்ளே பிரசித்தமாயிற்று; நான் உன்மேல் வைத்த என் மகிமையினாலே அது குறைவற்றதாய் இருந்ததென்று … நீயோ வென்றால் உன் அழகை நம்பி, உன் கீர்த்தியினால் சோரமார்க்கமாய் நடந்து,"—எசே. 16:13–15…

"ஒரு மனைவி தன் புருஷனுக்குத் துரோகம் செய்வதுபோல, இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்குத் துரோகம்செய்தது மெய் என்று கர்த்தர் சொல்லுகிறார்"—எரே 3:20. "தன் புருஷனுக்குப் பதிலாக அந்நியரைச் சேர்த்துக்கொள்ளுகிற விபசார ஸ்திரீயைப் போல இருக்கிறாய்" (எசே. 16:32) என்று வருணிக்கப்பட்டிருக்கிறது. (18)

புதிய ஏற்பாட்டில், தேவனுடைய ஆதரவைவிட உலகத்தின் நட்பைத் தேடும் கிறிஸ்தவர்களைப் பார்த்து, அதே விதமான மொழியில்: "விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" (யாக். 4:4) என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகிறார். (19)

வெளிப்படுத்தின விசேஷம் 17–ம் அதிகாரத்தில் பாபிலோன் எனப்படும் ஸ்திரீ "இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள். மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது.அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதை" (வெளி. 17:3) யோவான் கண்டார். "நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரமேயாம்" (வெளி 17:18) என்றும் பாபிலோனைப்பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. அநேக நூற்றாண்டுகளாக கிறிஸ்தவ உலகிலிருந்த அரசர்களின்மீது எதேச்சாதிகாரம் செலுத்தியிருந்த வல்லமை ரோமன் கத்தோலிக்க சபையாக உள்ளது. இரத்தாம்பரமும் சிவப்பான நிறமும், பொன்னும் இரத்தினங்களும் முத்துக்களும், ரோமின் சிறப்பையும், அரசர்களுக்கும் மேலான ஆடம்பரத்தையும் தெளிவாகச் சித்திரிக்கிறது. கிறிஸ்துவின் பின்னடியார்களை கொடூரமாக உபத்திரவப்படுத்தினதால் அந்தச் சபையைப்போல வேறு எந்த வல்லமையையும், பரிசுத்தவான்களின் இரத்தத்தினால் வெறித்திருந்ததென்று அவ்வளவு உண்மையாக அறிவிக்கமுடியாது. பூமியிலுள்ள ராஜாக்களுடன் தகாத விதத்தில் வேசித்தனம் செய்தாள் என்னும் பாவம் பாபிலோன்மீது சுமத்தப்பட்டுள்ளது. கர்த்தரிடத்திலிருந்து பிரிந்துசென்று, அஞ்ஞான மார்க்கங்களுடன் உறவுகொண்டதினால், யூதரின் சபை ஒரு வேசியாயிற்று. ரோமும் உலக வல்லமைகளின் ஆதரவைத் தேடினதால் அதே விதமாகத் தன்னைக் கறைப்படுத்தி, அதைப்போன்ற பழியைப் பெறுகிறது. (20)

பாபிலோன் வேசிகளின் தாயாக இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன் கோட்பாடுகளையும் பாரம்பரியங்களையும் பிடித்துக்கொண்டு, உலகத்துடன் சட்ட விரோதமான ஒரு உறவை ஏற்படுத்திக் கொள்ளுவதற்காக சத்தியத்தையும் தேவனுடைய அங்கீகாரத்தையும் பலியிடுகிற அதன் உதாரணத்தைப் பின்பற்றும் சபைகள், அதன் குமாரத்திகளாக அடையாளப்படுத்தப்படவேண்டும். பாபிலோனின் விழுகையைப்பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 14–ம் அதிகாரத்தில் அறிவிக்கப்படும் தூது, ஒரு காலத்தில் தூய்மையாக இருந்து, பின்னர் கறைபட்டவைகளாகிவிட்ட சபைகளுக்குப் பொருந்தியாகவேண்டும். இந்த தூதை நியாயத்தீர்ப்புபற்றிய எச்சரிப்புப் பின்தொடர்வதால், அது கடைசி நாட்களில் கொடுக்கப்படவேண்டும். எனவே, அது ரோமன்கத்தோலிக்க சபையை மட்டும் குறிப்பதாக இருக்காது. ஏனெனில் அந்த சபை நூற்றாண்டுகளாக விழுந்துபோன நிலையில் உள்ளது. அதற்கும் மேலாக, வெளிப்படுத்தின விசேஷம் 18–ம் அதிகாரத்தில், இன்னமும் எதிர்காலத்தில் கொடுக்கப்பட இருக்கும் ஒரு தூதில், தேவனுடைய ஜனங்கள் பாபிலோனைவிட்டு வெளியே வரும்படி அழைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த வேதவாக்கியங்களின்படி, தேவனுடைய மக்களில் அநேகர், இன்னும் பாபிலோனில் இருந்தாகவேண்டும். எந்த மத அமைப்புக்களில் கிறிஸ்துவின் அடியார்களில் பெரும்பகுதியினர் இப்பொழுது காணப்படுகின்றனர்? சந்தேகத்திற்கிடமின்றி அவை புரொட்டஸ்டாண்டு விசுவாசத்தை அறிக்கைபண்ணும் பலவேறுபட்ட சபைகளில்தான். அவைகளின் தோற்றத்தின்போது இந்த சபைகள் தேவனுக்காவும் சத்தியத்திற்காகவும் மேலானவையாக நின்றன. அவரது ஆசீர்வாதங்கள் அவைகளின் மீதிருந்தன. அவநம்பிக்கை உள்ள உலகமுங்கூட, சுவிசேஷத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டதைப் பின்தொடர்ந்த நன்மையான பலன்களை அறிக்கை செய்யும்படி நெருக்கி ஏவப்பட்டது. இஸ்ரவேலுக்கான தீர்க்கதரிசியின் தூதில்: “உன் அழகினாலே உன் கீர்த்தி புறஜாதிகளுக்குள்ளே பிரசித்தமாயிற்று; நான் உன்மேல் வைத்த என் மகிமையினாலே அது குறைவற்றதாய் இருந்ததென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்” என்றார். ஆனால் இஸ்ரவேலுக்கு சாபமாகவும் அழிவாகவும் இருந்த அதே ஆசையினால்— பக்தியில்லாதவர்களின் பழக்கங்களை பிரதிபலித்து, அவர்களின் நட்பை விரும்பினதால், அவர்களும் விழுந்தார்கள். “நீயோவென்றால் உன் அழகை நம்பி, உன் கீர்த்தியினால் சோரமார்க்கமாய் நடந்து” (எசே. 16:14,15) என்கிறார். (21)

அநேக புரொட்டஸ்டாண்டு சபைகள் பூமியின் ராஜாக்களோடு ரோம் வைத்திருந்த அநீதியான தொடர்பை பின்பற்றுகின்றன. மதச்சார்பற்ற அரசாங்கங்களுடனும் மற்ற சபைகளுடனும் உள்ள தனது உறவினாலும்,

உலகத்தின் ஆதரவைத் தேடுவதினாலும், பூமியின் ராஜாக்களுடன் அக்கிரமமான உறவை உடையதாக உள்ளது. தங்களுடைய கோட்பாடுகளை வேதாகமத்திலிருந்து பெற்றுக்கொள்ளுவதாகக் கூறிக்கொள்ளும் இந்த அமைப்புகள் அனைத்தும், மிக அதிகமான ஒன்றையொன்று எதிர்க்கும் மதநம்பிக்கைகளையும் தத்துவ விளக்கங்களையும் உடையவைகளாக, எண்ணிலடங்காத பிரிவுகளாகப் பிரிந்திருப்பதினால், இந்த அமைப்புகள் அனைத்திற்கும் (பாபிலோன்) குழப்பம் என்னும் பெயர் மிகச்சரியாகப் பொருந்தக்கூடியதாக உள்ளது. (22)

உலகத்துடன் பாவ உறவு வைத்திருப்பதைத்தவிர, ரோமன்கத்தோலிக்க சபையிலிருந்து பிரிந்துசென்ற சபைகள் அதனுடைய மற்ற குணங்களையும் கொண்டுள்ளன. (23)

"கத்தோலிக்க கிறிஸ்தவனுக்குப் போதனை" என்ற ஒரு ரோமன்கத்தோலிக்க நூல், கீழ்க்காணும் குற்றத்தைச் சாட்டுகிறது. பரிசுத்தவான்கள் சம்பந்தப்பட்ட காரியத்தில், ரோம சபை எப்போதாவது விக்கிரக ஆராதனை என்னும் குற்றத்தை உடையதாக இருந்திருந்தால், அதன் மகளான, பத்து சபையை மரியாளுக்கும் ஒன்றை கிறிஸ்துவிற்கும் பிரதிஷ்டை செய்திருக்கிற இங்கிலாந்து சபையும் அதே குற்றத்தையே உடையதாக இருக்கிறது.—Richard Challoner,The Catholic Christian Instructed,Preface, pages 21,22. (24)

மேலும் ஆயிரவருட ஆளுகையைப்பற்றிய ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையில் ஹாப்கின்ஸ் என்பவர்: "அந்திக் கிறிஸ்துவின் ஆவியும் பழக்கங்களும் ரோமன் கத்தோலிக்க சபையில் மட்டும்தான் அடங்கியிருக்கிறது என்று கருதுவதற்கான காரணம் எதுவும் இல்லை. புரொட்டஸ்டாண்டு சபைகளும் அதிகமான அந்திக் கிறிஸ்துக்களை கொண்டுள்ளன. மேலும், கறைகள், துன்மார்க்கம் ஆகியவைகளில் இருந்து சீர்திருத்தம் அடைவது வெகுதூரத்தில் உள்ளது" என்கிறார்.—Samuel Hopkins,Works, vol. 2, p. 328. (25)

பிரிஸ்பிட்டேரியன் சபை ரோமிலிருந்து பிரிந்துசென்றதைப்பற்றி டாக்டர் குத்ரீ என்பவர்: "முந்நூறு வருடங்களுக்குமுன், நமது சபை, தன் கொடியில் திறந்த வேதாகமத்துடன், 'வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்' என்ற இலட்சியத்தைக் கொண்ட தனது புத்தச்சுருளுடனும் ரோமின் வாசலிலிருந்து வெளியே வந்தது. ஆனால் அவர்கள் பாபிலோனைவிட்டுச் சுத்தமாக முற்றிலுமாக வெளியே வந்துவிட்டார்களா?" என்ற முக்கியமான கேள்வியைக் கேட்கிறார். —Thomas Guthrie,The Gospel in Ezekiel,page 237. (26)

“நற்கருணைக் கோட்பாட்டின் மூலமாக, இங்கிலாந்து சபை விழுங்கப்பட்டுவிட்டதுபோல் காணப்படுகிறது. ஆனால் அதன் இசைவற்ற தன்மை தத்துவத் துரோகத்தினால் மிகவும் மோசமாக துளைக்கப்பட்டு உள்ளதாகக் காணப்படுகிறது. நாம் எவர்களைப்பற்றி நல்லவிதமாக எண்ணியிருந்தோமோ, அவர்களனைவரும் ஒருவர்பின் ஒருவராக அடிப்படையான விசுவாசத்திலிருந்து வேறு பக்கமாகத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். குறைகூறத்தக்க நாத்திகவாதத்தினால் இங்கிலாந்தின் இருதயமானது தேன்கூட்டைப்போல் அரிக்கப் பட்டிருக்கிறதென்று நான் நம்புகிறேன். அது பிரசங்க மேடைக்கும் சென்று, தன்னை கிறிஸ்தவன் என்று அழைத்துக்கொள்ளும் துணிவுள்ளதாகவும் இருக்கிறது” என்று இங்கிலாந்து சபையைப்பற்றி ஸ்பர்ஜன் கூறுகிறார். (27)

பெரும் மருளவிழுகையின் தொடக்கம் என்ன? சுவிசேஷ த்தின் எளிமையிலிருந்து சபை முதலில் விலகிச்சென்றது எப்படி? கிறிஸ்தவ மார்க்கத்தை அஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ளுவதற்கு வசதி செய்துகொடுப்பதற்காக, பிற சமயங்களின் பழக்கங்களுடன் இசைந்ததினால் இது நிகழ்ந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய நாளிலேயே: “அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது” (2 தெச. 2:7) என்றார். அப்போஸ்தலர்களின் காலத்தில், சபை தூய்மையானதாக இருந்தது. ஆனால் “இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெரும்பான்மையான சபைகள் ஒரு புது வடிவை ஏற்றுக்கொண்டன. ஆரம்பத்திலிருந்த எளிமை மறைந்துவிட்டது. முதிர்வயதான சீடர்கள் தங்கள் கல்லறைகளில் ஓய்ந்தபோது, உணர்ந்துகொள்ளாதவிதத்தில், அவர்களது பிள்ளைகள் புதிதாக மதம் மாறினவர்களுடன் சேர்ந்துகொண்டு, ... நோக்கத்திற்குப் புது வடிவம் கொடுத்தனர்.”—Robert Robinson,Ecclesiastical Researches, ch. 6, par. 17, p. 51. மத மாற்றத்தினால் அங்கத்தினர்களைச் சேர்க்க, கிறிஸ்தவ விசுவாசத்தின் உயர்ந்த தரம் தாழ்த்தப்பட்டது. அதன் விளைவாக, “அஞ்ஞான வெள்ளம், அதன் சம்பிரதாயங்கள், பழக்கங்கள், விக்கிரகங்கள் ஆகியவற்றுடன் சபைக்குள் புகுந்தது.”—Gavazzi,Lectures,page 278. மதச்சார்பற்றவர்களின் ஆதரவையும் துணையையும் கிறிஸ்தவ மதம் பெற்றுக்கொண்டபோது, திரளானவர்களால் அது பெயரளவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் தோற்றத்தில் கிறிஸ்தவர்களாக இருந்த அநேகர், தங்கள் நடத்தையில் இரகசியமாக விக்கிரகங்களை ஆராதனை செய்வதில் அஞ்ஞானிகளாகவே இருந்தனர்.—Ibid., page 278. (28)

தன்னைப் புரொட்டஸ்டாண்டு என்று கூறிக்கொள்ளும் ஒவ்வொரு சபையிலும் இதே செயல் மறுபடியும் செய்யப்பட்டிருக்கவில்லையா?

உண்மையான ஆவியையும் அல்லது சீர்திருத்தத்தையும் கொண்டிருந்த அதன் ஸ்தாபகர்கள் மறைந்தபோது, அவர்களுக்குப் பின்னர் தோன்றினவர்கள் முன்வந்து நோக்கத்திற்குப் (உயரளந) புது வடிவம் கொடுக்கின்றனர். தங்களுடைய முற்பிதாக்களின் மதநம்பிக்கையை குருட்டுத்தனமாகப் பற்றிக்கொண்டிருந்து, அவர்கள் அறிந்ததைக் காட்டிலும் அதிகமான எந்த சத்தியத்தையும் ஒப்புக்கொள்ள மறுத்து, சீர்திருத்தக்காரர்களின் முன்மாதிரியான தாழ்மை, சுயமறுப்பு, உலகத்தை மறுத்துவிடுதல் ஆகியவைகளிலிருந்து பெரிய அளவில் விலகிச்செல்லுகின்றனர். இவ்வாறாக, முதலில் இருந்த எளிமை மறைகிறது. சபைக்குள் பாய்கிற உலகம் என்கிற வெள்ளம், அதனுடன் அதன் சம்பிரதாயங்களையும், பழக்கங்களையும், விக்கிரகங்களையும் கொண்டுவருகிறது. (29)

ஐயோ! கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களுக்கிடையில் பேணப்படும் தேவனுக்கு விரோதமான பகையாகிய உலகநேசம் எவ்வளவு பயங்கரமான அளவிற்குப் பரவியிருக்கிறது! கிறிஸ்தவ உலகம் முழுவதிலுமுள்ள பிரபலமான சபைகள் எவ்வளவு அதிகமாக வேதாகமத்தின் தரமாகிய தாழ்மை, சுயமறுப்பு, எளிமை, தெய்வபக்தி ஆகியவைகளில் இருந்து விலகிச்சென்றிருக்கின்றன. “விலைமதிப்பு வாய்ந்த தாலந்தாக இருக்கக்கூடிய பணத்தின் எந்தப் பகுதியையும் அதிக விலையுள்ள ஆடைகளுக்காவும், தேவையற்ற அணிகலன்களுக்காவும் கண்களின் இச்சையைத் திருப்திப்படுத்தவும் வீணாகச் செலவுசெய்துவிடாதீர்கள். அதன் எந்த பகுதியையும், அதிக விலைமிக்க பகட்டான ஆசனங்கள், படங்கள், வண்ணச்சித்திரங்கள் ஆகியவைகளால் உங்கள் வீடுகளை அலங்கரிக்க வீணாகச் செலவுசெய்யாதீர்கள்.” “ஜீவனத்தின் பெருமையைத் திருப்திப்படுத்துவதற்காக, பிறர்முன் நல்லவர்களாகக் காணப்படும்படியாக, அல்லது மனிதர் உங்களைப் புகழவேண்டும் என்பதற்காக எதையும் செய்யாதீர்கள்.” “நீங்கள் நன்றாக இருக்கும்வரை அவர்கள் உங்களைப்பற்றி நல்லவிதமாக பேசுவார்கள். நீங்கள் இரத்தாம்பரத்தையும் மெல்லிய உடைகளையும் அணிந்திருக்கும்வரை, நாள்தோறும் தாராளமாகச் செலவுசெய்யும்வரை, உங்களது சுவையின் உயர்வைக்குறித்தும், தர்ம குணத்தையும், விரும்தோம்பலையும் அநேகர் பாராட்டுவார்கள். ஆனால் அவர்களது பாராட்டலை சம்பாதிக்காதீர்கள் எனக்கு அருமையானவர்களே. மாறாக, தேவனிடத்திலிருந்து வரக்கூடிய மேன்மையில் திருப்தி உடையவர்களாக இருங்கள்” என்று பணத்தைச் சரியான விதத்தில் பயன்படுத்துவதைப்பற்றி ஜான் வெஸ்லி கூறினார்.—Wesley,Works,Sermon 50. ஆனால் நமது காலத்திலுள்ள அநேக சபைகளில் அப்படிப்பட்ட போதனைகள் மதிக்கப்படுவதில்லை. (30)

மதப்பற்று உள்ளதுபோல் பாசாங்குசெய்யும் தன்மை, உலகில் புகழ்மிக்கதாகிவிட்டது. சமுதாயத்தின் மதிப்பையும் நம்பிக்கையையும் பெறவும், தங்களுடைய உலகப்பிரகாரமான நன்மைகளை மேற்கொண்டு வளரச்செய்யவும், அதிபதிகள், அரசியல்வாதிகள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், வியாபாரிகள் ஆகியோர் சபைகளில் சேருகின்றனர். இவ்வாறாக அவர்கள் தங்களது அநீதிமிக்க கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் கிறிஸ்தவம் என்னும் பெயரின்கீழ் மூடிக்கொள்ள வகைதேடுகின்றனர். ஞானமுழுக்கெடுத்த இந்த உலகத்தாரின் செல்வத்தினாலும் செல்வாக்கினாலும், தங்களை வலிமைப்படுத்திக்கொண்டுள்ள பல்வேறுபட்ட சபை அமைப்புக்கள், அதனால் மேலான புகழையும் ஆதரவையும் அடைந்துகொள்ள இன்னும் உயர்ந்த அழைப்புக்களை விடுக்கின்றன. மிகச்சிறந்த, ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்ட ஆலயங்கள், பிரபலமான சாலைகளில் கட்டப்படுகின்றன. ஆராதனைசெய்ய வருபவர்கள் விலைமதிப்புமிக்க நாகரீகமான ஆடைகளையும் அணிகலன்களையும் அணிந்தவர்களாக வருகின்றனர். அந்த மக்களை மகிழ்விக்கவும் ஈர்த்திடவும் திறமைமிக்க ஒரு ஊழியருக்கு மிக அதிகமான சம்பளம் தரப்படுகிறது. அவரது பிரசங்கங்கள் மக்கள் விரும்புகிற பாவங்களைத் தொடாமல், நாகரீகமிக்க செவிகளுக்கு மென்மையாகவும் இனிமையாகவும் இருக்கவேண்டும். இவ்வாறாக, நாகரீகமான பாவிகள் சபை அங்கத்தினர்களாகச் சேர்க்கப்படுகின்றனர். தெய்வபக்தி என்னும் பாசாங்கின்கீழ் நாகரீகமான பாவங்கள் மறைக்கப்படுகின்றன. (31)

தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களின் உலகத்தைக் குறித்த சுபாவத்தைப்பற்றிய வர்ணனையில், முன்னணியிலுள்ள ஒரு சமயச்சார்பற்ற பத்திரிகை: "உணர்வில்லாமல் சபை காலத்தின் ஆவிக்கு இணங்கி, நவீன தேவகைளுக்கேற்ப தன் ஆராதனையின் வடிவைப் பொருத்தியிருக்கிறது." "உண்மையாகவே மதத்தைக் கவர்ச்சிமிக்கதாக ஆக்குவதற்கு உதவும் அனைத்தையும், சபை அதன் கருவிகளாகப் பயன்படுத்துகிறது" என்று கூறுகிறது. மெதடிசம் அது இருக்கும் விதத்தைக்குறித்து, நியூயார்க் ஐனெநிநனெநவெ பத்திரிக்கையில் ஒரு எழுத்தாளர்: "பக்தி உள்ளவர்களையும் இல்லாதவர்களையும் பிரிக்கும் கோடு, மங்கிய நிழலாக மறைந்துகொண்டிருக்கிறது. அவர்களது செயல்முறைகளிலும், சந்தோஷ அனுபவங்களிலுமுள்ள அனைத்து வேற்றுமைகளையும் அழிப்பதற்கு, இரு பகுதியிலுமுள்ள வைராக்கியமான மனிதர்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்." "மதத்தின் பிரபல்யம், மக்கள் அதன் கடமைகளை முழுமையாகச் செய்யாமலே, அதன் நன்மைகளை அடைந்துகொள்ளுபவர்களை அதிகமாகப் பெருக்கும்படிக்கு பெரும்பாலும் முனைகிறது" என்கிறார். (32)

"தேவனுடைய சபை இன்று உலகத்துடன் உறவு வைத்துக்கொண்டிருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் அதனை தெய்வ பக்தியற்றவர்களின் நிலைக்குக் கீழே கொண்டுவர முயன்று கொண்டிருக்கின்றனர். நடனங்கள், அரங்குகள், நிர்வாணம், காமவெறியூட்டும் கலை, ஆடம்பரங்கள், தளர்ந்துபோன சன்மார்க்க நெறிகள் ஆகியவை சபையின் புனிதமான மறைவிற்குள் வர பாதையை அமைத்துக்கொண்டிருக்கின்றன. மேலும், உலகப்பிரகாரமான இந்தத்காரியங்கள் அனைத்திலும் ஒரு திருப்திக்காக கிறிஸ்தவர்கள் லெந்து நாட்களையும், ஈஸ்டரையும் சபை அலங்காரங்களையும் ஆசரித்துக்கொண்டிருக்கின்றனர். இது சாத்தானின் பழைய தந்திரம். யூத சபை அந்தப் பாறையின்மீதுதான் மோதியது. ரோமசபை அதில்தான் நொறுங்கியது. புரொட்டஸ்டாண்டு சபை அதே வீழ்ச்சியை வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கிறது" என்று ஹோவார்டு கிராஸ்பி என்பவர் கூறியுள்ளார்.—The Healthy Christian: An Appeal to the Church, pages 141,142. (33)

உலகப்பிரகாரமான தன்மை, இன்பங்களைத் தேடுதல் என்னும் அலையில், கிறிஸ்துவிற்காகச் செய்யப்படவேண்டிய சுயமறுப்பு தற்தியாகம் ஆகியவை ஏறத்தாழ முழுவதுமாக இழக்கப்பட்டுள்ளன. "இன்று நமது சபையில் செயலாற்றிக்கொண்டிருக்கும் சில ஆண்களும் பெண்களும் சிறுவர்களாக இருந்தபோதே தியாகம் செய்து கிறிஸ்துவிற்காகக் கொடுக்கவும் எதையாவது செய்யவும் கற்பிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இப்பொழுது நிதி தேவையானால் ... கொடுப்பதற்கு ஒருவரும் அழைக்கப்படலாகாது! இல்லை இல்லை. ஒரு விசேஷ நிகழ்ச்சியை நடத்துங்கள், கேலி விளையாட்டுகள் நடத்துங்கள், பழங்கால உணவு வகைகள் உள்ள விருந்து நடத்துங்கள் அல்லது உண்பதற்கு எதையாவது செய்யுங்கள் அல்லது மக்களை மகிழ்ச்சிப்படுத்த வேடிக்கையாக—பொழுதுபோக்காக எதையாவது செய்யுங்கள். அதன் மூலமாகத் தேவைகளைச் சந்தியுங்கள் என்ற நிலை!" (34)

விஸ்கன்சின் மாநிலத்தின் ஆளுநரான வாஷ்பர்ன் என்பவர் தனது வருடாந்திரத் தூதில்: சூதாட்டக்காரர்களை உருவாக்கும் பள்ளிகளை நிறுத்த சில சட்டங்கள் தேவையானது போல காணப்படுகிறது. இவைகள் எல்லா இடங்களிலுமுள்ளன. சபையுங்கூட (அறியாமல் அதில் சந்தேகமில்லை) சிலநேரங்களில் பிசாசின் செயலை செய்வதாக காணப்படுகிறது. பரிசளிக்கும் கச்சேரிகள், நிதி சேகரிப்பிற்கான அதிர்ஷ்டச்சீட்டு விற்பனைகள், சமயசம்பந்தமான அல்லது நல்ல காரியங்களுக்காக, ஆனால் அநேக சமயங்களில் மதிப்பில்லாத நோக்கங்களுக்காக, அதிர்ஷ்ட சீட்டுக்கள்,

பரிசுப்பொட்டலங்கள், ... இவை அனைத்தும் மதிப்பில்லாத காரியத்திற்காக பணம் பெறுவதற்காக. உழைப்பில்லாமல் பணத்தையோ அல்லது உடமையையோ அடைவதுபோன்று மக்களை—குறிப்பாக வாலிபர்களை சீரழிப்பது அல்லது போதையேற்றுவது வேறு எதுவும் இருக்காது. இந்த சந்தர்ப்ப நிறுவனங்களில் மரியாதைக்குரிய மனிதர்கள் ஈடுபடுவதும், இந்தப் பணம் ஒரு நல்ல நோக்கத்திற்காகவே போகப்போகிறது என்று தங்கள் மனச்சாட்சியை எளிதாக்கிவிடுவதும் ... ஆபத்தான இந்த விளையாட்டுகளின் கிளர்ச்சி நிச்சயமாக உண்டாக்கும் பழக்கங்களில், வாலிபர்கள் அடிக்கடி விழுந்துவிடுவது விசித்திரமல்ல” என்று அறிவித்தார். (35)

உலகத்துடன் இசைந்திருக்கும் ஆவி, கிறிஸ்தவ உலகம் முழுவதிலுமுள்ள சபைகளில் எல்லைமீறி நுழைந்துகொண்டிருக்கிறது. ராபர்ட் அட்கின் என்பவர் லண்டனில் பேசிய ஒரு பிரசங்கத்தில்: “மெய்யான நீதிமான்கள் பூமியிலிருந்து குறைந்துபோகிறார்கள். ஆனால் அதை ஒருவரும் மனதில் வைப்பதில்லை. இந்நாளின் எல்லா சபைகளிலும் உள்ள கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள், உலகத்தை நேசிப்பவர்களாகவும் உலகத்துடன் இசைந்துள்ளவர்களாகவும், சுக சௌகரியங்களின்மீது நாட்டமுள்ளவர்களாகவும் மரியாதையை வாஞ்சிக்கிறவர்களாகவும் இருக்கின்றனர். கிறிஸ்துவுடன்கூடப் பாடுகளை அனுபவிக்கும்படி அவர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் நிந்திக்கப்படுவதிலிருந்துங்கூடப் பின்வாங்குகின்றனர். மருள விழுகை! மருள விழுகை!! மருள விழுகை!!! என்பது ஒவ்வொரு ஆலயத்தின் முன்னும் பொறிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதை அறிவார்களானால், அவர்கள் அதை உணர்வார்களானால், நம்பிக்கை இருக்கும். ஆனால் ஐயோ! ‘நாங்கள் ஐசுவரியவான்களென்றும், எங்களுக்கு ஒரு குறைவும் இல்லை என்றும்’ அவர்கள் சத்தமிடுகின்றனர்” என்று இங்கிலாந்தில் நிலவியிருந்த ஆவிக்குரிய விழுகையைக் குறித்த ஒரு இருண்ட படத்தை வரைகிறார்.—Second Advent Library,tract No. 39. (36)

பாபிலோனுக்கு எதிராகக் கூறப்படும் பெரும் குற்றச்சாட்டு—அவள் “தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே” என்பதுதான். அவள் உலகத்திற்குக் கொடுக்கும் இந்தப் போதையூட்டும் பாத்திரம் என்பது, பூமியில் பெரியவர்களாக இருந்தவர்களுடன் சட்டவிரோதமாக அவள் கொண்டிருந்த தொடர்பின் பலனாக, அவள் ஏற்றுக்கொண்ட தவறான கோட்பாடுகளைக் குறிக்கிறது. உலகத்துடனுள்ள அவளது நட்பு அவளது விசுவாசத்தைக் கெடுக்கிறது. அவள் தன் பங்காக, பரிசுத்த எழுத்துக்களின் தெளிவான அறிக்கைகளுக்கு

எதிரான கோட்பாடுகளைப் போதிப்பதனால் கறைப்படுத்தும் தன் செல்வாக்கை உலகத்தின்மீது செயல்படுத்துகிறாள். (37)

ரோம சபை வேதாகமத்தை மக்களிடமிருந்து தடைசெய்து, அந்த இடத்தில் மனிதர்கள் அனைவரும் தன்னுடைய போதனைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தியது. சீர்திருத்தத்தின் பணி, தேவனுடைய வார்த்தைகளை மனிதர்களுக்கு மீண்டும் கிடைக்கச்செய்வதே. ஆனால் நமது காலத்திலுள்ள சபைகளில், மனிதர்கள் தங்களுடைய விசுவாசத்தை வேத வாக்கியங்களின்மீது வைப்பதைவிட, சபை நம்பிக்கைகளின்மீதும் போதனைகளின்மீதும் வைக்கும்படி போதிக்கப்படுகின்றனர் என்பது பெரிய உண்மையாக இருக்கவில்லையா? சார்லஸ் பீச்சர் புரொட்டஸ்டாண்டு சபைகளைக்குறித்துப் பேசும்போது: “தாங்கள் வளர்த்துவந்த பரிசுத்தவான்களையும் இரத்தசாட்சிகளையும் வணங்கும் வழக்கத்திற்கு எதிரான கடுமையான வார்த்தையைச்சொல்ல பரிசுத்த தந்தைகள் எவ்விதமாகத் தயங்கியிருந்திருப்பார்களோ, அதே விதமான உணர்வுடன் அவர்கள் சபை நம்பிக்கைக்கு எதிரான எந்தக் கடுமையான வார்த்தையையும் கூறுவதற்குத் தயங்கினர்.... எந்த ஒரு மனிதனும் வேதாகமம் மட்டுமன்றி வேறு புத்தகத்தை ஒப்புக்கொள்ளாத பட்சத்தில், ஒரு பிரசங்கியாக உட்புக முடியாது என்னும் விதத்தில் புரொட்டஸ்டாண்டு சுவிசேஷ சபைகள் ஒருவருடன் ஒருவர் கரத்தையும், தங்களது சொந்தக் கரங்களையும் கட்டியிருந்தன. ரோம சபை வேதாகமத்தைத் தடைசெய்ததைப்போல, இப்பொழுதுள்ள சபை நம்பிக்கையின் வல்லமை அதைவிட இன்னமும் தந்திரமான விதத்தில் வேதாகமத்தைத் தடைசெய்ய ஆரம்பித்திருக்கிறது என்னும் அறிக்கையில் கற்பனையாக எதுவும் இல்லை” என்று கூறினார்.—Sermon on “The Bible a Sufficient Creed,” delivered at Fort Wayne,Indiana, Feb. 22,1846. (38)

விசுவாசமிக்க ஆசிரியர்கள் தேவனுடைய வார்த்தைக்கு விளக்கம் கொடுக்கும்போது, சரியான கோட்பாடுகளை மதப்புரட்டு என்று பகிரங்கமாகக் குற்றம்சாட்டி, இவ்வாறாக சத்தியத்தைப்பற்றி விசாரிப்பவர்களை திசைதிருப்பிவிடக் கற்றிறிந்த மனிதர்களும் வேதவாக்கியங்களைப் புரிந்திருப்பதாகக் கூறிக்கொள்ளும் ஊழியர்களும் எழுகின்றனர். பாபிலோனின் மதுவினால், நம்பிக்கையற்ற விதத்தில் உலகம் போதையூட்டப்படாமல் இருந்திருந்தால், தேவனுடைய வார்த்தையின் தெளிவான கூர்மையான சத்தியங்களால், திரள்கூட்டமானவர்களின் மனம் உணர்த்தப்பட்டு மதமாற்றம் அடைந்திருப்பார்கள். ஆனால் மதவிசுவாசம் குழப்பமிக்கதாகவும் இசைவற்றதாகவும் தோன்றுவதால், சத்தியமென்று

எதை நம்புவது என்று மக்கள் அறியாமலிருக்கிறார்கள். பாவத்திற்காக வருந்தாத நிலையிலிருக்கும் உலகத்தின் பாவம், சபைகளின் வாசற்படிகளில் படுத்துக்கிடக்கிறது! (39)

வெளிப்படுத்தின விசேஷம் 14–ம் அதிகாரத்திலுள்ள இரண்டாம் தூதனின் தூது, முதலில் 1844–ம் ஆண்டின் கோடைகாலத்தில் பிரசங்கிக்கப்பட்டது. அது அப்போது, நியாயத்தீர்ப்பின் தூது மிகப் பரந்த அளவிற்கு அறிவிக்கப்பட்டு, பொதுவாக மிக அதிகமாக நிராகரிக்கப்பட்ட, சபைகளின் சரிவு மிக விரைவானதாக இருந்த, அமெரிக்க ஐக்கிய நாட்டு சபைகளின்மீது நேரடியாகப் பொருந்தக்கூடியதாக இருந்தது. ஆனால் இரண்டாம் தூதனின் தூது 1844–ல் அதன் முழுமையான நிறைவேறுதலை அடையவில்லை. வருகையின் தூதைப்பற்றிய ஒளியை மறுத்ததின் பலனால், சபைகள் சன்மார்க்க விழுகை அடைந்தன. ஆனால் அந்த விழுகை முழுமையானதாக இருக்கவில்லை. இந்தக்காலத்திற்குரிய விசேஷமான சத்தியங்களை அவர்கள் தொடர்ந்து நிராகரித்தபோது, அவைகள் மேலும் மேலும் கீழ்நோக்கி விழுந்தன. இருந்தபோதிலும், “தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே!” என்று கூற முடியாது. ஏனெனில் அவள் இன்னும் சகல ஜாதிகளையும் குடிக்கச் செய்யவில்லை. உலகத்துடன் இசைந்திருக்கும் ஆவியும், நமது காலத்திற்குரிய சோதிக்கும் சத்தியங்களுக்கு வித்தியாசமற்ற வகையில் இருப்பதுமாகிய ஆவியும் இருந்துகொண்டிருக்கிறது. கிறிஸ்தவ உலகில் புரொட்டஸ்டாண்டு விசுவாசத்தை உடைய சகல சபைகளிலும் இடம் பிடித்துக்கொண்டும் வருகிறது. இரண்டாம் தூதனின் பக்திவிநயமும் பயங்கரமுமான கண்டிப்பிற்கு இந்தச் சபைகள் உட்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் மருளவிழுகையின் செயல் அதன் உச்ச கட்டத்தை இன்னும் அடையவில்லை. (40)

கர்த்தருடைய வருகைக்கு முன்பாக சாத்தான், “சகல வல்லமை யோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்.... அநீதி யினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும்” செயலாற்றுவான் என்று வேதாகமம் சொல்லுகிறது. “இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனடியால் ... பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்”–2 தெச. 2:9–11. இந்த நிலையை எட்டும்வரை, சபை உலகத்தோடு முற்றிலும் ஒன்றுபடுவது கிறிஸ்தவ உலகம் முழுவதிலும் முழுமையாக நிறைவேறாதவரை, பாபிலோனின்விழுகை முடிவடையாது. இந்த மாறுதல் படிப்படியாக முன்னேறக்கூடிய ஒன்று. வெளிப்படுத்தின

விசேஷம் 14:8—ன் பூரணமான நிறைவேறுதல் இன்னும் எதிர்காலத்தில் உள்ளது. (41)

பாபிலோனை உருவாக்கியிருக்கிற, சபைகளிலே இருக்கிற ஆவிக்குரிய இருள், தேவனை விட்டு விலகிச்செல்லுதல் போன்ற நிலைகளையும் தாண்டி, கிறிஸ்துவின் உண்மையான அடியார்களின் பெரும் கூட்டத்தை அவர்களுடைய சபைகளிலிருந்து கண்டுபிடிக்கப படவேண்டியதாயிருக்கிறது. இவர்களில் அநேகர் இந்தக் காலத்திற்குரிய சிறப்பான சத்தியங்களை ஒருபோதும் கண்டிருக்கவில்லை. தங்களுடைய நிகழ்கால நிலைமையில் அதிருப்தி உள்ளவர்களாக இருந்து, தெளிவான வெளிச்சத்திற்காக ஏங்கிக்கொண்டிருப்பவர்கள் ஒருசிலர் மட்டுமல்ல. அவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் சபைகளில் கிறிஸ்துவின் உருவத்தைக்காண அவர்கள் வீணாக நோக்கிக்கொண்டிருக்கின்றனர். இந்த அமைப்புகள் சத்தியத்தை விட்டுத் தூரம் தூரமாக விலகிச்சென்று, உலகத்துடன் தங்களை நெருக்கமாகப் பிணைத்துக்கொள்ளும்போது, இந்த இரண்டு வகையினருக்கும் இடையில் உள்ள பிளவு மிக அகலமாகி, கடைசியில் பிரிவினையில் முடியும். தேவனை அதிகமாக நேசிப்பவர்கள், "தேவப்பிரியராயிராமல், சுகபோகப்பிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாகவும்" இருப்பவர்களுடன் இனிமேலும் இணைந்திருக்க முடியாத காலம் வரும். (42)

வெளிப்படுத்தின விசேஷம் 14:6—12—ல் உள்ள முப்பெரும் எச்சரிப்புகளை நிராகரிப்பதின் விளைவாக, இரண்டாம் தூதனால் முன்னுரைக்கப்பட்ட நிலையை சபை முழுமையாக அடையும்போது, இன்னமும் பாபிலோனிலுள்ள தேவனுடைய ஜனங்கள், அவளுடனுள்ள உறவைவிட்டுப் பிரிந்துவரும்படி அழைக்கப்படும் நேரத்தை, வெளி. 18—ம் அதிகாரம் சுட்டிக்காட்டுகிறது. உலகத்திற்கு கொடுக்கப்படவுள்ள தூதுகளில் இதுவே கடைசியானதாக இருந்து, அதன் பணியை நிறைவேற்றி முடிக்கும். "சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும்"— (2தெச. 2:12) பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தில் விட்டுவிடப்படுவர். அப்போது சத்திய ஒளி, அதை ஏற்றுக்கொள்ளத் தங்கள் இருதயங்களைத் திறந்திருக்கும் அனைவர்மீதும் பிரகாசிக்கும். அப்பொழுது பாபிலோனிலுள்ள தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் "என் ஜனங்களே அவளை விட்டு வெளியே வாருங்கள்"— வெளி. 18:4 என்கிற அழைப்பிற்குச் செவிசாய்ப்பார்கள். (43) ★

# 22

# நிறைவேறின தீர்க்கதரிசனங்கள்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 391–408)**

முதல்முறையாக கர்த்தரின் வருகையை எதிர்பார்த்திருந்த காலம்—கி.பி.1844–ம் ஆண்டின் வசந்தகாலம் கடந்து சென்றபோது, விசுவாசத்தோடு அவரது வருகையை எதிர்பார்த்து இருந்தவர்கள், சிறிது காலம் சந்தேகத்தோடும் நிச்சயமில்லாமலும் இருந்தனர். உலகம் அவர்களை முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டவர்கள் என்றும், அவர்கள் மாயையைப் போற்றியிருந்தது மெய்ப்பிக்கப்பட்டது என்றும் கருதினபோது, தேவனுடைய வார்த்தை மட்டுமே அவர்களது ஆறுதலின் ஆதாரமாக இருந்தது. மேற்கொண்டு அதிகமான வெளிச்சத்தைப் பெற, தங்களது விசுவாசத்திற்கான சான்றுகளை மீண்டும் தேடியும், தீர்க்கதரிசனங்களை கவனமாக ஆராய்ந்தும் வேதவாக்கியங்களை தொடர்ந்து படித்தனர். அவர்களது நிலைக்கு ஆதரவான வேதாகம சாட்சி தெளிவானதாகவும், முடிவானதாகவும் காணப்பட்டது. தவறாகக் கருதமுடியாத அடையாளங்கள் கிறிஸ்துவின் வருகை சமீபமாக இருக்கிறது என்றுச் சுட்டிக்காட்டின. கிறிஸ்தவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியிலும் பாவிகளின் மனந்திரும்புதலிலும் இருந்த ஆண்டவரின் விசேஷமான ஆசீர்வாதம், அந்தத் தூது பரலோகத்தினுடையது என்று சாட்சி பகர்ந்தது. விசுவாசிகளால் அவர்களது ஏமாற்றத்திற்கான காரணத்தை விளக்க முடியாமலிருந்தாலும் அவர்களது கடந்தகால அனுபவத்தில் தேவன் அவர்களை நடத்தியிருந்தார் என்று நிச்சயமாக உணர்ந்தனர். (1)

இரண்டாம் வருகையின் காலத்திற்குப் பொருந்துவதாக அவர்கள் கருதியிருந்த தீர்க்கதரிசனங்கள், அவர்களது நிச்சயமற்ற நிலையிலும், சந்தேகத்திலும், இப்பொழுது புரிந்துகொள்ளுதலுக்கு இருளாக இருக்கிறவைகள் சரியான நேரத்தில் தெளிவாக்கப்படும் என்ற விசுவாசத்தில் பொறுமையுடன் காத்திருக்கும்படி அவர்களைத்

தைரியப்படுத்தும் போதனைகளோடு இணைந்திருந்தன. அவை அனைத்தும் வருகையின் காலத்திற்குப் பொருந்தியிருந்த தீர்க்கதரிசனங்களின் ஊடாக நெய்யப்பட்டிருந்தன. (2)

இந்தத் தீர்க்கதரிசனங்களுக்கிடையில், "நான் என் காவலிலே தரித்து, அரணிலே நிலைகொண்டிருந்து, அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும், அவர் என்னைக் கண்டிக்கும்போது நான் என்ன உத்தரவு சொல்லுவேனென்றும் கவனித்துப் பார்ப்பேன் என்றேன். அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக: நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை. குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை. இதோ, அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ஆபகூக் 2:1–4) என்ற தீர்க்கதரிசனமும் இருந்தது. (3)

"நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை" என்று இந்தத் தீர்க்கதரிசனத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற ஆலோசனை, தானியேல், வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவைகளில் உள்ள தீர்க்கதரிசனங்களை விளக்கிட தீர்க்கதரிசன விளக்கப்படத்தை ஆயத்தம்செய்ய, சார்லஸ் பிட்ச்–ஐ 1842–ம் ஆண்டின் துவக்கத்திலேயே உணர்த்தியது. இந்த விளக்கப்படத்தின் வெளியிடு, ஆபகூக் கொடுத்திருந்த கட்டளையின் நிறைவேறுதல் என்று கருதப்பட்டது. அதன் நிறைவேறுதலில் வெளிப்படையாகக் காணப்பட்ட தாமதத்தை—ஒரு காத்திருக்கும் காலத்தை—அதே தீர்க்கதரிசனத்தில் இருந்த அதை ஒருவரும் கவனிக்கவில்லை. ஏமாற்றம் நிகழ்ந்தபின், "குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை ... தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்ற வேதவாக்கியம் மிக முக்கியமானதாகத் தோன்றியது. (4)

"பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: மனுபுத்திரனே, நாட்கள் நீடிக்கும், தரிசனம் எல்லா அவமாகும் என்று இஸ்ரவேல் தேசத்திலே வழங்கும் பழமொழி என்ன? ஆகையால் நீ அவர்களை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ... நாட்களும் எல்லாத் தரிசனத்தின் பொருளும் சமீபித்து வந்தன என்று

அவர்களோடே சொல்லு.... நான் கர்த்தர், நான் சொல்லுவேன், நான் சொல்லும் வார்த்தை நிறைவேறும்; இனித் தாமதியாது;" "மனுபுத்திரனே, இதோ, இஸ்ரவேல் வம்சத்தார்: இவன் காண்கிற தரிசனம் நிறைவேற அநேகநாள் செல்லும்; தூரமாயிருக்கிற காலங்களைக்குறித்து இவன் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான் என்கிறார்கள். ஆகையால் என் வார்த்தைகளில் ஒன்றாகிலும் இனித் தாமதிப்பதில்லையென்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்; நான் சொன்ன வார்த்தை நிறைவேறும் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று அவர்களோடே சொல் என்றார்" (எசே. 12:21–25,27,28) என்கிற எசேக்கியேல் தீர்க்கதரிசியின் ஒரு பகுதியும் விசுவாசிகளை பலப்படுத்தி ஆறுதல்படுத்தின ஆதாரமாகவிருந்தது. (5)

ஆரம்பத்திலேயே முடிவைப்பார்க்கிறவர், யுகங்கள் நெடுகிலும் நடைபெற உள்ளவைகளைப் பார்த்து, அவர்களது ஏமாற்றத்தையும் முன்கண்டு, தைரியத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கக்கூடிய வார்த்தைகளை கொடுத்திருந்தார்—என்று நம்பி காத்திருந்தவர்கள் மகிழ்ந்தனர். பொறுமையுடன் காத்திருக்கவும், தேவனுடைய வார்த்தையில் தங்களது நம்பிக்கையை உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கவும் அறிவுரை கொடுக்கின்ற வேதாகமப்பகுதிகள் இருந்திருக்காவிட்டால், அந்தச் சோதனையான மணி நேரத்தில் அவர்களது விசுவாசம் தோல்வி அடைந்திருக்கும். (6)

அட்வெந்து மக்களின் அனுபவத்தை, மத்தேயு 25–ம் அதிகாரத்திலுள்ள பத்துக் கன்னிகைகளின் உவமையுங்கூட விளக்குகிறது. மத்தேயு 24–ம் அதிகாரத்தில், அவரது வருகைக்கும் உலக முடிவிற்குமான அடையாளம்பற்றிய சீஷர்களின் கேள்விக்கான அவரது பதிலில், எருசலேமின்அழிவு, அஞ்ஞானப் போப்புமார்க்கங்களினால் சபைக்கு உண்டாகும் பெரும் உபத்திரவங்கள், சூரியனும் சந்திரனும் இருளடைவது, நட்சத்திரங்களின் விழுகை போன்ற—அவரது முதலாம் வருகையிலிருந்து இரண்டாம்வருகை வரை நடக்கவுள்ள—உலக வரலாற்றிலும், சபையின் வரலாற்றிலும் மிகமுக்கியமாக இருந்த சில சம்பவங்களைக் கிறிஸ்து சுட்டிக்காட்டினார். அதற்குப்பின், அவரது ராஜ்யத்தில் அவர் வருவதைக்குறித்துப் பேசி, அவர் தோன்றுவதை எதிர்பார்த்திருந்த இரண்டு வகையான வேலைக்காரர்களைப் பற்றிய உவமையோடு தொடர்புபடுத்தினார். மத்தேயு 25–ம் அதிகாரம், "அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்" என்ற வார்த்தைகளில் துவங்குகிறது. மத்தேயு 24–ம் அதிகாரத்தின் முடிவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததைப் போலவே,

கடைசி நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் சபை, கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. கிழக்கத்திய நாட்டுத் திருமணத்தின் வாயிலாக இந்த உவமையில் அவர்களது அனுபவங்கள் விளக்கப்பட்டுள்ளது. (7)

"அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று." (8)

மணவாளன் வருகிறார் என்பது, முதலாம் தூதனால் அறிவிக்கப்பட்ட கிறிஸ்துவின் வருகையைக் குறித்தது புரிந்துகொள்ளப் பட்டது. அவரது அதிவிரைவான வருகையின் அறிவிப்பின்கீழ் நிகழ்ந்த பரவலான சீர்திருத்தம், கன்னிகைகள் புறப்பட்டுச்சென்றனர் என்பதன் மறுமொழியாக இருந்தது. மத்தேயு 24–ம் அதிகாரத்தில் உள்ளதைப்போலவே, இந்த உவமையிலும், இரு வகுப்பினர் எடுத்துக்காட்டப்படுகின்றனர். அனைவரும் வேதாகமமான தீவட்டிகளை எடுத்துக்கொண்டு, அதன் வெளிச்சத்தில் மணவாளனைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றனர். ஆனால், புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு எண்ணெயை கொண்டுபோகாதபோது, புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூட தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். பின்சொல்லப்பட்ட வகுப்பினர், தேவனுடைய கிருபையை, புதுப்பித்து ஒளிரச்செய்யும் அவருடைய வசனத்தை, கால்களுக்குத் தீபமாகவும் பாதைக்கு வெளிச்சமாகவும் ஆக்குகிற ஆவியின் வல்லமையை பெற்றிருந்தனர். தேவனின்மீதுள்ள பயத்தினால், சத்தியத்தை அறிவதற்காக வேதவாக்கியங்களை ஆராய்ந்து, இருதயத்திலும் வாழ்க்கையிலும் தூய்மையடைய மிகுந்த அக்கறையுடன் வகைதேடினார்கள். தனிப்பட்ட அனுபவம் உள்ளவர்களாக, ஏமாற்றத்தாலும் தாமதத்தாலும் வீழ்த்தப்பட முடியாத விசுவாசத்தை, தேவனிலும் அவரது வார்த்தையிலும் வைத்திருந்தனர். "தீவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை"—இவர்கள் உணர்ச்சிகளினால் உந்தப்பட்டவர்களாக இருந்தனர். பக்திவிநயமான

தூதினால், அவர்கள் பயம் தூண்டப்பட்டிருந்தது. இருந்தபோதும், அவர்களுடைய சகோதரரின் விசுவாசத்தைச் சார்ந்திருந்து, ஒளிர்கின்ற நல்ல உணர்வுகளினால் திருப்தி அடைந்தவர்களாக, சத்தியத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளாமலும், இருதயத்தில் மெய்யான கிருபையின் செயல் இல்லாமலும் இவர்கள் இருந்தனர். உடனடியாகப் பலன் கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையுடன் அவர்கள் கர்த்தரைச் சந்திக்கச் சென்றனர். ஆனால் தாமதத்தையும் ஏமாற்றத்தையும் சந்திக்க ஆயத்தமாக இல்லை. சோதனை வந்தபோது அவர்களது விசுவாசம் தோற்று, அவர்களது தீவட்டிகள் மங்கியெரிந்தன. (9)

"மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்." மணவாளனுடைய வருகையின் தாமதத்தினால்—கர்த்தரின் வருகையை எதிர்பார்த்திருந்தபோது கடந்து சென்ற காலமும், உண்டான ஏமாற்றமும், தாமதமும் குறித்துக் காட்டப்பட்டிருந்தது. நிச்சமற்றதாக இருந்த இந்த நேரத்தில், மேலோட்டமான அரைமனமுள்ளவர்களின் ஆர்வம் குறையவும், முயற்ச்சி தளரவும் தொடங்கியது. ஆனால் எவர்களது விசுவாசம் வேதாகமத்தின் மீதான நேரடியான அறிவின் அடிப்படையில் இருந்ததோ, அவர்கள் தங்களுடைய பாதங்களின் கீழ், ஏமாற்றம் என்னும் அலைகளினால் அடித்துச்செல்லப்பட முடியாத கன்மலையைக் கொண்டிருந்தனர். "அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்." ஒரு வகுப்பினர் அக்கறையற்று தங்களுடைய விசுவாசத்தைக் கைவிட்டவர்களாகவும், அடுத்த வகுப்பினர் தெளிவான வெளிச்சம் கிடைக்கும்வரை பொறுமையுடன் காத்துக்கொண்டிருந்தவர்களாகவும் இருந்தனர். சோதனையின் அந்த இரவில் பின்சொல்லப்பட்ட வகுப்பினர், அவர்களது ஈடுபாட்டையும் வைராக்கியத்தையும் (ஓரளவு) இழந்துவிட்டவர்கள்போல் காணப்பட்டனர். அரைமனமுள்ள மேலோட்டமானவர்களாக இருந்தவர்கள், அதற்குமேல் அவர்களது சகோதரர்களின் விசுவாசத்தைச் சார்ந்து நிற்கமுடியவில்லை. ஒவ்வொருவரும் தனக்காகவே நிற்க வேண்டும் அல்லது தனக்காகவே விழவேண்டும். (10)

இந்த நேரத்தில் மதவாதம் தோன்றத் தொடங்கியது. இந்தத் தூதில் வைராக்கியமான நம்பிக்கை உடையவர்கள் என்று கூறிக்கொண்டிருந்த சிலர், தவறாத வழிகாட்டி தேவனுடைய வசனம் மட்டுமே என்பதை நிராகரித்து, தேவ ஆவியானவரால் நடத்தப்படுவதாக உரிமைபாராட்டிக்கொண்டு, தங்களது சுய உணர்வுகள் உணர்த்துதல்கள் கற்பனைகளின் கட்டுப்பாட்டிற்குத் தங்களை விட்டுக்கொடுத்தனர். சிலர் குருட்டுத்தனமாக பக்தியினால்

தங்களுடைய வழியை ஏற்றுக்கொள்ளாதவர்களை கண்டனம் செய்தனர். அவர்களது மதவாக போதனைகளும் செயல்களும் பெரிய அட்வெந்து கூட்டத்தினரின் அனுதாபத்தைப் பெறவில்லை. அப்படியிருந்தும் சத்தியத்தின் வேலைக்கு நிந்தையை வரவழைக்க அவர்கள் பணியாற்றினர். (11)

இந்த உபாத்தியின் மூலமாக தேவனுடைய பணியை எதிர்க்கவும் அழிக்கவும் சாத்தான் வகைதேடிக்கொண்டிருந்தான். அட்வெந்து இயக்கத்தினால், மக்கள் பெருமளவிற்குக் தூண்டப்பட்டிருந்தனர். ஆயிரக்கணக்கான பாவிகள் மனமாற்றம் அடைந்தனர். விசுவாசமிக்க மக்கள் சத்தியத்தை அறிவிக்கும் ஊழியத்தில் காத்திருப்பின் வேளையில்கூட தாங்களாகவே ஈடுபட்டிருந்தனர். துன்மார்க்கப் பிரபு தனக்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களை இழந்துகொண்டிருந்தான். தேவனுடைய காரியத்தின்மீது பழியைக் கொண்டுவருவதற்காக, விசுவாசத்தை அறிக்கைசெய்தவர்களில் சிலரை வஞ்சித்து, அவர்களை அளவிற்கு மீறிச்செல்ல நடத்தினான். அவனது (ஏஜண்டுகள்) எடுபிடிகள் ஒவ்வொரு தவறையும், தோல்வியையும், தகாத செயலையும் பற்றிக்கொண்டு, அவைகளை மிகைப்படுத்தும் ஒளியில் மக்களிடம் காட்டிட தூக்கிப்பிடித்து, அட்வெந்துக்களையும் அவர்களது விசுவாசத்தையும் பழிக்க ஆயத்தமாக நின்றனர். இவ்வாறாக, தனது வல்லமையினால் இருதயம் கட்டுப்படுத்தப்பட்ட எத்தனைபேர்களை இரண்டாம் வருகையை விசுவாசிப்பவர்களின் கூட்டத்தில் சேர்க்கமுடியுமோ, அத்தனை பெரிய ஆதாயத்தை, அக்கூட்டம்தான் விசுவாசிகளின் முழு அமைப்பின் பிரதிநிதிகளென்று அவர்கள்மீது கவனத்தைத் திருப்புவதால் பெற்றுக்கொள்ளுவான். (12)

சாத்தான் சகோதரரைக் குற்றஞ்சாட்டுகிறவனாக இருக்கிறான். கர்த்தருடைய ஜனங்களின் நற்செயல்கள் கவனிக்கப்படாதவைகளாக விடப்பட்டன. அதே சமயத்தில் கர்த்தருடைய ஜனங்களின் தவறுகளையும் குறைபாடுகளையும் கவனித்து, அவைகளை உயர்த்திப்பிடிக்கும்படி அவனுடைய ஆவி மனிதர்களை ஏவுகிறது. ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக தேவன் பணியாற்றும்நேரத்தில், அவன் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கிறான். தேவபுத்திரர்கள் கர்த்தருடைய சமுகத்தில் கூடிவரும்போது, சாத்தானும் அவர்களுக்கு மத்தியில் வருகிறான். இவர்கள் சத்தியத்தின் சில பகுதிகளை ஏற்றுக்கொண்டு, விசுவாசிகளுடன் ஒரு இடத்தைப் பிடித்துக்கொள்ளுகின்றனர். இவர்கள் மூலமாக அஜாக்கிரதையாக இருக்கக்கூடியவர்களை வஞ்சிக்கக்கூடிய கொள்கைகளை அறிமுகம் செய்ய, அவன் செயலாற்றுகிறான். தேவனுடைய கூட்டத்தில் காணப்படுவதி னாலேயோ, ஆராதனை செய்யும் சபையிலும் கர்த்தரின் பந்தியிலும்

காணப்படுவதினாலேயோ ஒருவனும் உண்மையான கிறிஸ்தவன் என்று மெய்ப்பிக்கப்பட முடியாது. பக்திவிநயமான சந்தர்ப்பங்களில் தனது முகவர்களாக (ஏஜெண்டுகளாக) எவர்களைப் பயன்படுத்தமுடியுமோ, அவர்களுடைய வடிவில் சாத்தான் அடிக்கடி அங்கு இருக்கிறான். (13)

பரலோக நகரத்தை நோக்கிய பயணத்தில், தேவனுடைய பிள்ளைகள் முன்னேறும் ஒவ்வொரு அங்குல இடத்திலும் தீமையின் பிரபு போராடுகிறான். சபையின் வரலாறு முழுவதிலும், கடுமையான தடைகள் இல்லாமல் எந்தச் சீர்திருத்தமும் செயல்படவில்லை! பவுலின் நாட்களிலும் இவ்விதமாகவே இருந்தது. விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டவர்களாக இருக்கிறோம் என்று பவுலின் காலத்தில் சிலர் கூறிக்கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் மதப்புரட்டுகளை சபைக்குள் கொண்டுவந்தனர். அவைகளை ஏற்றுக்கொண்டிருந்தால், காலப்போக்கில் சத்தியத்தின் மீதுள்ள அன்பு நீங்கியிருந்திருக்கும். பவுல் அப்போஸ்தலன் எங்கெல்லாம் சபைகளை எழுப்பினாரோ, அங்கெல்லாம் இப்படிப்பட்டவர்கள் இருந்தனர். தேவன் தங்கள் மூலமாகப் பேசியிருந்தார் என்று கூறும் பல மதவாதிகள் இருந்தனர். அவர்கள் தங்களுடைய சொந்த யோசனைகளையும் கருத்துக்களையும் வேதவாக்கியங்களுக்கும் மேலாக வைத்தனர். இப்படிப்பட்டவர்களால் உண்டான பெரும் குழப்பங்களையும் துன்பத்தையும் லுத்தர் சகித்தார். விசுவாசமும் அனுபவமும் இல்லாத சிலர் இருந்தனர். அவர்கள் சுயநிறைவை உடையவர்களாக இருந்தனர். அவர்கள், தங்களைப் புதிய ஆசிரியர்கள் என்னும் கற்பனையான போர்வையில் மறைத்துக்கொண்டு, சில புதிய காரியங்களைப் பேசவும் கேட்கவும் விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். எவைகளைக் கட்டுவதற்கென்று தேவன் லுத்தரை ஏற்படுத்தியிருந்தாரோ, அவைகளை அந்த அநேகர் இடித்துக் கீழே விழச்செய்யும் பணியிலே சாத்தானுடன் அவனது முகவர்களாகச் சேர்ந்துகொண்டனர். வெஸ்லியும் மற்றவர்களும் இப்படிப்பட்ட பரிசுத்தமற்றவர்களை அகற்றும் பணியிலே, தங்களுடைய ஊழியத்தின் ஒவ்வொரு அடியிலும் போராடினார்கள். (14)

மதவெறிக்குள் நடத்தியிருந்த செல்வாக்குகளின்மீது வில்லியம் மில்லர் அனுதாபமற்றவராக இருந்தார். அவர் லுத்தரைப் போலவே ஒவ்வொரு ஆவியும் தேவனுடைய வார்த்தையினால் சோதிக்கப்படவேண்டும் என்று அறிவித்தார். இந்த நாட்களில் சிலரின் மனங்களின்மீது பிசாசு பெரும் வல்லமை உடையவனாக இருக்கிறான் என்று மில்லர் கூறினார். அவைகள் எப்படிப்பட்ட ஆவிகள் என்று நம்மால் எப்படி அறியமுடியும்? அவர்களது கனிகளினால் அவர்களை அறிவீர்கள் என்று வேதாகமம் பதில்கூறுகிறது. இந்த உலகத்திற்குள் அநேக ஆவிகள் சென்றுள்ளன. நாம் இந்த ஆவிகளைச்

சோதித்து அறிந்தாகவேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம். நம்மை நிதானபுத்தி உள்ளவர்களாகவும், நீதியாகவும் தெய்வபக்தியுடனும் இப்போதுள்ள உலகத்தில் வாழ அனுமதிக்காத ஆவி கிறிஸ்துவின் ஆவி அல்ல. இந்தக் காட்டுத்தனமான இயக்கங்களில் அதிகமாகச் செயலாற்றக் கூடியவனாக சாத்தான் இருக்கிறான் என்னும் எண்ணத்தை உடையவனாக நான் இருக்கிறேன். முற்றிலுமாகப் பரிசுத்தமடைந்துவிட்டதாகக் கூறிக்கொள்ளும் நம்மில் அநேகர் மனிதர்களின் பாரம்பரியங்களைப் பின்பற்றி, இவ்விதமாக பாவனை செய்யாத சத்தியத்தைப்பற்றிய அறியாமை உள்ளவர்களைப் போலவே வெளிப்படையாக உள்ளனர்.—Bliss, pages 236,237. தவறின் ஆவியானது நம்மைச் சத்தியத்திலிருந்து வேறுபடுத்தி நடத்தும். சத்தியத்தின் ஆவியோ நம்மை சத்தியத்திற்கு உள்ளாகவே நடத்தும். ஒரு மனிதன் தவறில் இருக்கும்போதே அவன் சத்தியத்தை உடையவனாக இருப்பதாக எண்ணலாம் என்று நீங்கள் கூறுகிறீர்களா? அப்படியானால் என்ன? ஆவியும் வசனமும் ஒத்திருக்கின்றன என்று நாம் மறுமொழி கூறுகிறோம். ஒரு மனிதன் தன்னைத் தேவனுடைய வார்த்தையினால் நியாயந்தீர்த்தால், முழு வேதவாக்கியம் மூலமாக பூரணமான இசைவைக் கண்டால், அப்பொழுது அவன் சத்தியத்தை உடையவனாக இருப்பதாக அவனை நம்பவேண்டும். ஆனால் அவன் நடத்தப்படும் ஆவியினால் தேவப்பிரமாணத்திற்கோ அல்லது வேதாகமத்திற்கோ முற்றிலுமாக இசைவில்லாமல் நடத்தப்பட்டால், அவன் சாத்தானின் கண்ணியில் விழுந்துவிடாமல் இருக்கும்படி ஜாக்கிரதையாக நடப்பானாக.—The Advent Herald and Signs of the Times Reporter,vol. 8, No. 23 (Jan. 15,1845). எரியும் கண்களில் இருந்தும், நனைந்த கன்னங்களில் இருந்தும் அடைத்துக்கொண்ட தொண்டையிலிருந்தும் உண்டான வார்த்தைகளில் இருந்து, கிறிஸ்தவ உலகத்தில் காணப்படும் சத்தங்கள் அனைத்தையும்விட, உள்ளான பக்தியின் அதிகமான சாட்சியை நான் பெற்றிருக்கிறேன்.—Bliss, page 282. (15)

சீர்திருத்தத்தின் காலத்தில் மதவெறிக்கு எதிராக மிகுந்த வாஞ்சையுடன் பாடுபட்டவர்களுக்கு எதிராக அந்த எதிரிகள் மதவெறியின் தீமைகள் அனைத்தையும் அவர்கள் மீதே குற்றப்படுத்தினர். அட்வெந்து இயக்கத்தின்மீதும் இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தீவிரவாதிகளுடனும் மதவெறியர்களுடனும் அட்வெந்துக்களையும் சேர்த்து, திரித்தும் மிகைப்படுத்தியும் கூறி திருப்தி அடையாதவர்கள், சத்தியத்தின் மிக லேசான சாயலும் இல்லாத பிரதிகூலமான அறிக்கைகளை சுற்றுக்கு விட்டிருந்தனர். இந்த நபர்கள், தவறான எண்ணத்தினாலும் வெறுப்பினாலும் தூண்டப்பட்டுச் செயலாற்றினர். கிறிஸ்து வாசலருகில் வந்திருக்கிறார் என்ற அறிவிப்பு அவர்களது அமைதியைச் சீர்குலைத்தது. அது உண்மையாக

இருக்கக்கூடும் என்று அவர்கள் பயந்தனர். இதுவே அட்வெந்துக்களுக்கும் அவர்களது விசுவாசத்திற்கும் எதிராக அவர்கள் நடத்திய போருக்குக் காரணமாக இருந்தது. (16)

மதவெறியர்களும், ஏமாற்றுக்காரர்களும் பவுலின் காலத்திலும் லுத்தரின் காலத்திலும் சபையில் இருந்தனர். அவர்களது ஊழியத்தைக் குற்றப்படுத்திக் கூறுவதற்குப் போதுமான சாக்குப்போக்காக அது இருந்தது. அதைவிட சில மதவெறியினர் அட்வெந்துக்களின் பதவியைப் பெற்றுக்கொள்ளச் செயலாற்றினர் என்பது உண்மையாக இருந்தது. இதன் காரணமாக அந்த இயக்கமே தேவனுடையது அல்ல என்று முடிவுசெய்வதற்கு அது காரணமாகாது. (அறுவடையின் நாள்வரை வயலில் கோதுமையுடன் களைகள் இருக்கத்தான் செய்யும்). மனந்திரும்புதல், சீர்திருத்தம் ஆகியவைகளின் பணியைத் தொடங்கிட, தேவனுடைய மக்கள் மிகுந்த அக்கரையுடன் உறக்கத்திலிருந்து விழித்து எழுவார்களாக! இயேசுவிற்குள் சத்தியம் இருப்பதுபோல, சத்தியத்தை அறிந்துகொள்ள அவர்கள் வேத வாக்கியங்களை ஆராய்வார்களாக. சாத்தான் இன்னும் செயலாக்கமும் விழிப்பும் உடையவனாக இருக்கிறான் என்னும் சான்று (வேதவாக்கியங்களை நன்கு ஆராயாதபோது) கிடைக்காமல் போகும். இதைத் தவிர்ப்பதற்காக, அவர்கள் தங்களை முற்றிலுமாக தேவனுக்கென்று அர்ப்பணம் செய்வார்களாக. சாத்தான் அவனது உதவிக்கு அவனது எல்லைக்குட்பட்டிருக்கும் வீழ்ந்துபோன தூதர்கள் அனைவரையும் அழைத்துக்கொள்ளுவான். முடிந்தவரை அவன் சகலவிதமான வஞ்சகங்களுடனும் தன்னுடைய வல்லமையை வெளிக்காட்டுவான். (17)

மதவாதத்தையும், பிரிவினையையும் இரண்டாம் வருகையின் அறிவிப்பு உண்டுபண்ணவில்லை. கி.பி.1844–ம் ஆண்டின் வசந்த காலத்தில் அட்வெந்துக்கள் அவர்களது உண்மையான நிலைமையைப் பற்றி சந்தேகமும் குழப்பமுமிக்க நிலையில் இருந்தபோது, இவை தோன்றின. முதலாம் தூதனின் தூதின் பிரசங்கமும், நடுஇராத்திரியின் சத்தமும் மதவெறியையும் பிரிவினையையும் பின்னடையச்செய்திட நேரடியாக வகைசெய்தன. பக்திவிநயமான இந்த இயக்கத்தில் பங்கு வகித்தவர்களின் இருதயங்கள் இசைவுள்ளவையாக இருந்தன. அவர்களது இருதயங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளதாகவும் இருந்தன. அவர்களது சகலவிதமான மனித செல்வாக்கிலிருந்தும் உயர்த்தின. சாத்தானின் தாக்குதலுக்கு எதிரான கவசங்களாக அவர்கள் இருந்தனர். என்பது மெய்ப்பிக்கப்பட்டிருந்தது. (18)

“மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். நடுராத்திரியிலே: இதோ, மணவாளன்

வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது, அந்தச் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.” கி.பி.1844–ம் வருடத்தின் மத்தியில், வசந்தகாலத்தில் 2300 நாட்கள் முடிவடையும் என்பதாக முதலில் எண்ணப்பட்டது. பின்னர் அவை நீடித்திருந்தது காணப்பட்டது. அந்த நேரம் “இதோ, மணவாளன் வருகிறார்” என்ற வேதவாக்கியத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. (19)

எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக்கட்டும் கட்டளை கி.மு.457–ன் இலையுதிர் காலத்தில் நடப்பிற்கு வந்தது. இந்தக் காலம்தான் 2300 நாட்களின் ஆரம்பமாக இருந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இதுதான் இந்த இயக்கம் தொடங்குவதை நடப்பித்தது. அப்படி இல்லாமல், முன்னர் நம்பி இருந்ததுபோல, வருடத்தின் ஆரம்பத்தில் இருக்கவில்லை. கி.மு. 457–ம் இலையுதிர்காலத்திலிருந்து கணக்கிடப்பட்டபோது, 2300 வருடங்கள் 1844–ன் இலையுதிர்காலத்தில் முடிவடைந்திருந்தது. (20)

பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படுதல் என்பதால் குறிப்பிடப்பட்டிருந்த சம்பவம் நடைபெறவேண்டியது காலம், இலையுதிர்காலம் என்பதை பழைய ஏற்பாட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட பொருட்பாடங்கள் சுட்டிக்காட்டி யிருந்தன. கிறிஸ்துவின் முதல் வருகை சம்பந்தப்பட்ட மாதிரிகள் நிறைவேறி யிருந்தவிதத்தை கவனித்தபோது, இது நன்றாகத் தெளிவாகியது. (21)

பஸ்கா ஆட்டுக்குட்டி வெட்டப்பட்ட நிகழ்ச்சியானது கிறிஸ்துவின் மரணத்தின் நிழலாக இருந்தது. “நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே” (1கொரி. 5:7) என்று பவுல் கூறுகிறார். பஸ்கா பண்டிகையின்போது, கர்த்தருடைய சமூகத்தில் கதிர்கட்டு அசைவாட்டப்பட்டதானது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு மாதிரியாக இருந்தது. “முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்” (1கொரி. 15:23) என்று கர்த்தருடைய உயிர்த்தெழுதலையும், அவருடைய மக்கள் அனைவரது உயிர்த்தெழுதலையும்பற்றிக் பவுல் கூறுகிறார். அறுவடைக்கு முன்பாகச் சேகரிக்கப்படும் நீதிமான்களின் அழிவுக்குரிய சரீரம் அவரது மகிமைமிக்க சரீரத்தைப்போல உருவமைக்கப்படுவதற்கு மாதிரியாக, மீட்கப்பட்டவர்கள் தேவனுடைய களஞ்சியத்தில் சேர்க்கப்பட உள்ளனர். இது எதிர்காலத்தில் நடைபெற உள்ள சாவாமையை உடைய உயிர்த்தெழுதலாக இருக்கிறது. இந்த அறுவடையின் முதற்பலனாகக் கிறிஸ்து இருக்கிறார். (22)

இந்த நிழலானவை சம்பவத்தில் மாத்திரமல்ல, காலத்திலும் சரியாக நிறைவேறின. யூதர்களின் முதலாம் மாதத்தின் பத்தாம் நாளில்,

15 நூற்றாண்டுகளாக பஸ்கா ஆடு அடிக்கப்பட்ட அதே மாதம் அதே நாள், கிறிஸ்து தமது சீஷர்களுடன் பஸ்காவைப் புசித்தபின், "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று சுட்டிக்காட்டப்பட்ட தமது மரணத்தை நினைவுபடுத்தும் பண்டிகையை ஏற்படுத்தினார். அதே இரவில் சிலுவையில் கொல்லப்படும்படி துன்மார்க்கரால் பிடிக்கப்பட்டார். அசைவாட்டப்படும் காணிக்கையின் நிஜமாக, உயிர்த்தெழும் அனைத்து நீதிமான்களின் மாதிரியாக, "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப். 3:21) என்பதன் அடையாளமாக, "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" (1 கொரி. 15:20) என்றதன்படி, நமது ஆண்டவர் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். (23)

அதே விதமாக, அவரது இரண்டாம் வருகையின் மாதிரியாக, ஆராதனை முறைகள் சுட்டிக்காட்டியிருந்தவைகளெல்லாம் அவைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நேரத்தில் நிறைவேறியாகவேண்டும். மோசேயின் அமைப்பின்கீழ், ஆசரிப்புக்கூடாரம் சுத்திகரிக்கப்படுதல் அல்லது பாவநிவாரணநாள் என்பது யூதர்களின் ஏழாம் மாதம், பத்தாம் தேதியில் நிகழ்ந்தது. அன்று பிரதான ஆசாரியன் அனைத்து இஸ்ரவேலருக்காகவும் பாவநிவாரணம் செய்தான். அவ்விதமாக அவர்களது பாவங்களை ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து நீக்கியபின், வெளியில் வந்து மக்களை ஆசீர்வதித்தான். அதைப்போலவே நமது பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவும் பாவத்தையும் பாவிகளையும் அழிப்பதன் மூலமாக, பூமியைத் தூய்மைப்படுத்தவும் அவரது மக்களை அழியாமையினால் ஆசீர்வதிக்கவும் தோன்றுவார் என்று நம்பப்பட்டது. பாவநிவாரணப் பெரும்நாளாகிய ஏழாம்மாதம் பத்தாம்தேதி, ஆசரிப்புக்கூடாரம் சுத்திகரிக்கப்படும் காலம், 1844–ம் வருடம் அக்டோபர் மாதம் 22–ம் நாள் நிகழ்ந்தது. அந்த நாள் கர்த்தரின் வருகையின் நாள் என்று கருதப்பட்டிருந்தது. அந்த 2300 நாட்கள் (1844) இலையுதிர் காலத்தில் முடிவடையும் என்பது ஏற்கனவே முன்வைக்கப்பட்ட சான்றுகளுக்கு இசைவாக இருந்து, முடிவானதாகவும் தடுக்கமுடியாததைப் போலவும் காணப்பட்டது. (24)

மத்தேயு 25–ம் அதிகாரத்தில் உள்ள உவமையில், காத்திருந்ததையும் நித்திரை மயக்கமடைந்திருந்ததையும் பின்தொடர்ந்து, மணவாளனின் வருகை இருந்தது. அது தீர்க்கதரிசனங்கள், சாயல்கள் ஆகிய இரண்டிலிருந்தும் இப்பொழுது முன்வைக்கப்பட்ட வாதங்களுக்கு இசைவாகவும் இருந்தது. அவைகள் அவர்களது சத்தியமுள்ள தன்மையைப் பற்றிய பலத்த உணர்த்துதலைச் சுமந்தன. நடு இராத்திரியின் சத்தம் ஆயிரக்கணக்கான விசுவாசிகளால் பறை சாற்றப்பட்டது. (25)

ஒரு பேரலையைப்போல, அது தேசம் முழுவதையும் அடித்துச் சென்றது. காத்திருந்த தேவனுடைய ஜனங்கள் முழுவதுமாக எழுப்பப்படும்வரை அது நகரத்திலிருந்து நகரத்திற்கும் கிராமங்களில் இருந்து கிராமங்களுக்கும் மூலை முடுக்கிலிருந்து நாட்டுப்புறங்களுக்குமாக எங்கும் சென்றது. அதிகாலைச் சூரிய ஒளியின் முன் பனி மறைவது போன்று, மதவாதம் இந்த அறிவிப்பின் முன்பாக மறைந்தது. விசுவாசிகள் அவர்களது சந்தேகமும் குழப்பமும் நீக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். அதனால் நம்பிக்கையும் தைரியமும் அவர்களது இருதயங்களுக்கு உயிரூட்டின. தேவனுடைய வார்த்தை, ஆவி ஆகியவற்றின் கட்டுப்படுத்தும் செல்வாக்கில்லாத மனித எழுச்சிகள் எங்கு இருந்ததோ, அங்கு அந்த ஊழியம் வரம்பு கடந்தவையாக இல்லாமல் இருந்தன. பண்டைய இஸ்ரவேலர்கள் தாழ்மையான நிலைமையில் இருந்த காலங்களில் கர்த்தரின் ஊழியக்காரர்கள் அவர்களுக்குக் கொடுத்த கடிந்துகொண்ட தூதுகளைப் பின்பற்றினர். அவர்கள் கர்த்தரிடத்திற்குத் திரும்பினர். அந்த ஊழியம் அதே தன்மையை உடையதாக இருந்தது. அது காலங்கள் ஒவ்வொன்றிலுமிருந்த தேவனுடைய செயலின் அடையாளத்தைத் தாங்கி இருந்தது. அது மிக மகிழ்ச்சியாக இராமல், இருதயத்தை ஆழமாக ஆராய்தல், பாவத்தை அறிக்கைசெய்தல், உலகத்தை மறுத்துவிடுதல் ஆகியவை உள்ளதாக இருந்தது. கர்த்தரைச் சந்திக்க ஆயத்தப்படுதல் என்பது வேதனைமிக்க ஆவிகளுக்குப் பாரமாக இருந்தது. முயற்சிமிக்க ஜெபமும், தேவனுக்கென்று பூரணமான அர்ப்பணமும் தேவையாக இருந்தன. (26)

அந்த ஊழியத்தைப்பற்றி மில்லர்: "இப்போது இருக்கவேண்டிய விதத்தில் மகிழ்ச்சியின் பெரும் உணர்த்துதல் இல்லை. பரலோகமும் பூலோகமும் முழுமையாக ஒன்றுபட்டு, சொல்லமுடியாத மகிழ்ச்சியுடனும் நிறைவான மகிமையுடனும் மகிழும் ஒரு எதிர்கால சந்தர்ப்பத்திற்காக அது அடக்கிவைக்கப்பட்டுள்ளது. ஆரவாரம் எதுவும் இல்லை. அதுவும் பரலோகத்திலிருந்து உண்டாகக்கூடிய ஆரவாரத்திற்காக தனித்து வைக்கப்பட்டுள்ளது. பாடகர்கள் மௌனமாக உள்ளனர். பரலோகத்திலிருந்து பாடக்கூடிய தேவதூதர்களின் பாடல் குழுவினருடன் சேர்ந்துகொள்ள அவர்கள் காத்திருக்கின்றனர். நுண்ணுணர்வுகளின் மோதல்கள் இல்லை. அனைவரும் ஒரே இருதயமும் ஒரே மனமும் உடையவர்களாக உள்ளனர்" என்று கூறினார்.—Bliss, pages 270,271. (27)

இந்த இயக்கத்தில் கலந்துகொண்ட வேறொருவர் இவ்விதமாகக் கூறினார். :"அது இருதயத்தை ஆராய்தலையும் ஆத்துமாவில் தாழ்மை யையும் மிக அதிகமாக எங்கும் உருவாக்கியிருந்தது. உலகப் பிரகாரமான

பொருள்களின்மீதுள்ள பற்றுகள் தேய்ந்துபோகும்படி அது நடத்தினது. எதிர்வாதங்களும் பகைகளும் குணப்படவும், தவறுகளை அறிக்கைசெய்யவும், தேவனுக்கு முன்பாக அழவும், குற்றத்தை உணர்ந்து மன்னிப்பையும் அங்கீகாரத்தையும் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் அது நடத்தினது. இதுவரை நாம் கண்டிராத விதத்தில் ஆத்துமா தன்னைத்தான் தாழ்த்திப் பணிந்து கிடக்கவும் அது வழிசெய்தது. கர்த்தருடைய பெரிதான நாள் சமீபிக்கும்போது, அது உடையைக் கிழிக்காமல், இருதயத்தைக் கிழிப்பதை உண்டுபண்ணி, உபவாசத்துடனும் அழுகையுடனும் துக்கம் கொண்டாடுதலுடனும் கர்த்தரிடத்திற்குத் திரும்பும்படி யோவேல் தீர்க்கதரிசியினால் கர்த்தரால் கட்டளையிடப்பட்டிருந்ததுபோல் இருந்தது. கிருபையின் ஆவியும் மன்றாட்டின் ஆவியும் அவரது மக்களின் மீது ஊற்றப்பட்டிருந்தது என்ற கர்த்தர் சகரியாவினால் கூறியிருந்தார். எவர்கள் அவரை உருவக்குத்தியிருந்தனரோ, அவரை அவர்கள் நோக்கிப் பார்த்தனர். தேசத்தில் பெரும் துக்கம்கொண்டாடுதல் இருந்தது. கர்த்தருக்காகக் காத்திருந்தவர்கள் அவருக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தினர்.—Bliss,in Advent Shield and Review,vol. I, p. 271 (January,1845). (28)

அப்போஸ்தல்களின் காலத்திற்குப்பின் பெரும் சமய இயக்கங்கள் உண்டாயின. அவைகளில் மானிடப் பூரணமின்மையும், சாத்தானின் மோசம்போக்கும் தந்திரங்களும் இருந்தன. அவை 1844–ன் இலையுதிர் காலத்தில் நிகழ்ந்த இயக்கத்தில் இருந்ததைவிட, அதிகமாக ஒருபோதும் இருக்கவில்லை. இப்போதுங்கூட அந்த இயக்கத்தில் அநேகர் பங்கு கொண்டனர். அவர்கள் அனைவரும் சத்தியமாகிய மேடையின்மீது உறுதியாக நின்றனர். அவர்கள் அனைவரும் ஆசீர்வாதமிக்க அந்த ஊழியத்தின் பரிசுத்தமான செல்வாக்கின்மீது நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தனர். அது தேவனுடையதாக இருந்தது என்பதற்கான சாட்சியையும் உடையவர்களாக இருந்தனர். (29)

“இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள்” என்ற சத்தத்தில், வேதவாக்கியங்ககளை அறியாதவர்கள் முன்பாக மிகுந்த ஆர்வத்துடன் அதை ஆராய்ந்து காத்திருந்தவர்கள் எழுந்திருந்து தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். அதைரிய மடைந்திருந்தவர்களை எழுப்பவும், அத்தூதைப் பெற்றுக்கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்தவும், பரலோகத்திலிருந்து தூதர்கள் அனுப்பப்பட்டனர். அந்தப் பணி மனிதர்களின் ஞானத்தினாலும் கல்வி அறிவினாலும் உண்டாக வில்லை. தேவனுடைய வல்லமையினால் உண்டாயிருந்தது. அந்த அழைப்பை முதலாவதாகக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிந்தவர்கள் அதிக

திறமைவாய்ந்தவர்களாக இருக்கவில்லை. அவர்கள் மிகுந்த தாழ்மையும் பக்தியும் உள்ளவர்களாகவும் இருந்தனர். அந்த எச்சரிப்பைக் கொடுப்பதற்கு, விவசாயிகள் கண்ணீருடனும் மகிழ்ச்சியுடனும் அவர்களது விவசாயத்தை விட்டுச்சென்றனர். அதேபோல இயந்திரத்தொழிலாளர்கள் தங்களுடைய கருவிகளைக் கீழே வைத்துவிட்டுச் சென்றனர். இந்தக் காரியத்தில் பலர் முன்நடத்தப்பட்டனர். இந்த இயக்கத்தில் கலந்துகொள்ளுவதில் இவர்கள் கடைசியானவர்களுக்கு இடையில் இருந்தனர். சபைகள் பொதுவாக இந்தத் தூதுக்கு எதிராகத் தங்கள் கதவுகளை மூடிக்கொண்டன. அதைப் பெற்றுக்கொண்ட பெரும் கூட்டத்தினர் அவர்களது தொடர்புகளில் இருந்து பின்வாங்கினர். தேவ ஏற்பாட்டினால், இந்த அறிவிப்பானது இரண்டாம் தூதுடன் இணைந்து, அந்த ஊழியத்திற்கு வல்லமையைக் கொடுத்தது. (30)

வேதவாக்கியச் சான்றுகள் தெளிவானவையாகவும் முடிவானவையாகவும் இருந்தன. அவ்வாறு இருந்தபோதிலும், “இதோ, மணவாளன் வருகிறார்” என்னும் அத்தூது, வாதங்களடங்கிய பெரும் விஷயமாக இருக்கவில்லை. ஆத்துமாவை முன்தள்ளி அசைத்த வல்லமை அதனுடன் சென்றது. சந்தேகமும், கேள்விகேட்டலும் அதில் இருக்கவில்லை. கிறிஸ்து எருசலேமிற்குள் வெற்றிகரமாக நுழைந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் பண்டிகையை ஆசரிப்பதற்காக, தேசத்தின் சகல பகுதிகளிலிருந்தும் மக்கள் எருசலேமிற்கு வந்து கூடியிருந்தனர். அவர்கள் ஒலிவமலையின் மீது திரளாகக் கூடினர். அவர்கள் இயேசுவிற்குப் பாதுகாப்பாகச் சென்றிருந்த கூட்ட நெரிசலுடன் சேர்ந்து கொண்டனர். அவர்கள் அந்த நேரத்திற்குரிய ஆவியின் தூண்டுதலை அடைந்து, “கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்” (மத்தேயு 21:9) என்ற முழக்கத்தால் நிறைக்க உதவினர். இதே விதமாக, அட்வெந்து கூட்டங்களில் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தினாலும், சிலர் பரிகசிப்பதற்கென்றும் மட்டுமே கலந்திருந்தனர். நம்பிக்கையற்ற இவர்கள் “இதோ, மணவாளன் வருகிறார்” என்னும் தூதில் அடங்கியுள்ள மன உணர்த்துதலை உண்டுபண்ணும் வல்லமையை உணருகின்றனர். (31)

அந்த நேரத்தில் ஜெபத்திற்கு விடையைக் கொண்டுவந்திருந்த விசுவாசம் இருந்தது. பரிசைப் பரிகாரமாகத் தரும் மதிப்புடைய விசுவாசம் இருந்தது. வறண்ட நிலத்தின்மீது பொழிந்த மழைநீர் போல வாஞ்சையுடன் தேடினவர்களின்மீது, கிருபையின் ஆவி இறங்கியது. தங்களது மீட்பரின் முன் விரைவில் முகமுகமாக நிற்பதை அநேகர் எதிர்பார்த்து இருந்தனர். இவர்களது பக்திவிநயமான மகிழ்சி, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாததாக

இருந்தது. பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதம், விசுவாசமும் நம்பிக்கையும் உள்ளவர்களின்மீது அதிகமான அளவில் சொரிந்தது. அப்போது அதன் சாந்தப்படுத்தும் வல்லமையினால் இருதயங்கள் கரைந்தன. (32)

அத்தூதைக் கவனமாகவும் பக்திவிநயத்துடனும் கேட்டவர்கள் தங்களது கர்த்தரைச் சந்திப்போம் என நம்பினர். அவர்கள் அந்த நேரத்திற்குத் தக்கவண்ணம் எழுந்தனர். தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோம் என்னும் சான்றினைப் பெறுவதே அவர்களது முதல் கடமை என்பதை அவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் உணர்ந்தனர். அவர்களது இருதயங்கள் ஒருமைப் பட்டவையாக இருந்தன. அவர்கள் ஒருவருக்காக ஒருவர் அதிகமாக ஜெபித்தனர். தேவனுடன் தொடர்புகொள்ள அவர்கள் தனிமையான இடங்களில் அடிக்கடிச் சந்தித்தனர். வயல்வெளிகளிலும் தோப்புகளிலும் இருந்து ஆண்டவருடன் பேசும் சத்தம் பரலோகத்தை நோக்கி உயர்ந்தது. இரட்சகர் அவர்களை அங்கிகரித்திருக்கிறார் என்னும் நிச்சயம், அவர்களுக்கு அவர்களுடைய அன்றாட உணவைவிட அதிக அவசியமாக இருந்தது. ஒரு மேகம் அவர்களது மனங்களை இருளாக்கினால், அது துடைத்து நீக்கப்படும் வரை அவர்கள் ஓய்வில்லாதவர்களாக இருந்தனர். அவரது மன்னிக்கும் கிருபையை அவர்கள் உணர்ந்தபோது, அவர்களது ஆத்துமாக்கள் நேசித்திருந்தவரைக் காண, அவர்கள் ஏங்கி இருந்தனர். (33)

ஆனால் அவர்கள் மறுபடியும் ஏமாற்றம் அடைவதற்கு விட்டுவிடப்பட்டனர். எதிர்பார்த்திருந்த காலம் கடந்துசென்றது. இரட்சகர் தோன்றவில்லை. அவர்கள் அசையாத நம்பிக்கையுடன் அவரது வருகையை எதிர்பார்த்திருந்தனர். இப்பொழுது மரியாள் இரட்சகரின் கல்லறைக்கு வந்து, அது காலியாக இருப்பதைக்கண்டு, "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை" (யோவான் 20:13) என்று சத்தமிட்டு அழுததைப்போல, அவர்கள் இப்பொழுது உணர்ந்தனர். (34)

இந்தத் தூது உண்மையானதாக இருக்கலாமென்ற ஒரு பய உணர்வை நம்பிக்கையில்லாமலிருந்த உலகின்மீது அது கொண்டுவந்தது. அது சிறிது காலத்திற்கு கட்டுப்பாட்டை உண்டுபண்ணி இருந்தது. அந்தநேரம் கடந்துசென்றபின், இந்த உணர்வு உடனே மறைந்துவிடவில்லை. முதலில், அவர்கள் ஏமாற்றமடைந்தவர்களை மேற்கொள்ளத் துணியவில்லை. ஆனால் தேவகோபத்தின் அடையாளம் காணப்படாமல் ஆனபோது, அவர்கள் பயத்திலிருந்து மீண்டனர். மீண்டும் நிந்திக்கவும் பரிகசிக்கவும் தொடங்கினர். ஒரு பெரும் கூட்டத்தினர் தங்களைக் கர்த்தரின் விரைவான வருகையின்மீது

நம்பிக்கைகொண்டவர்கள் என்று கூறிக்கொண்டிருந்தனர். இவர்கள் தங்களுடைய விசுவாசத்தை இப்போது மறுத்தனர். சிலர் மிக அதிகமான நம்பிக்கை கொண்டிருந்தனர். இவர்கள் அகந்தையினால் காயப்பட்டு உலகத்தைவிட்டே ஓடிவிடவேண்டும் என்பதுபோல உணர்ந்தனர். அவர்கள் யோனாவைப்போல தேவன்மீது குறைகூறி, ஜீவனைவிட மரணத்தைத் தெரிந்துகொண்டனர். அநேகர் தேவனுடைய வார்த்தையைச் சார்ந்திராமல், பிறரது அபிப்பிராயங்களைத் தங்களது விசுவாசத்திற்கு அடிப்படை யாகக்கொண்டிருந்தனர். அவர்கள் இப்பொழுது தங்கள் நோக்கத்தை மறுபடியும் மாற்றிக்கொள்ள ஆயத்தமானவர்களைப்போல இருந்தனர். பலவீனமானவர்களையும் கோழைகளையும் பரியாசக்காரர்களையும் தங்களுடைய அணியில் சேர்த்துக்கொண்டனர். இதற்குமேல் பயங்கள் எதுவுமில்லை. அல்லது எதிர்பார்ப்புகள் இப்பொழுது இல்லை என அறிவிப்பதில் ஒன்றுபட்டனர். கர்த்தர் வரவில்லை, உலகம் இருந்த நிலைமையிலேயே இருப்பதற்காக, ஆயிரக்கணக்கான வருடகாலம் கடந்துசெல்வது போலிருந்தது.... (35)

வாஞ்சையும் உண்மையுமிக்க விசுவாசிகள் கிறிஸ்துவிற்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டனர். அவர்கள் முன்னர் ஒருபோதும் இருந்திராதவிதத்தில் அவரது பிரசன்னத்தில் பங்குகொண்டிருந்தனர். அவர்கள் நம்பி இருந்தபடி தங்களது தெய்வீக எஜமானரின் சமுகத்துடனும் தேவதூதர்களுடனும் ஏற்றுக்கொள்ளப்பட இருப்பதை எதிர்பார்த்தனர். இந்த உலகத்திற்கு அவர்களுடைய கடைசி எச்சரிப்பைக் கொடுத்தனர். அந்தத் தூதை ஏற்றுக்கொள்ளாத சமூகத்தினரைவிட்டு அவர்கள் விலகி இருந்தனர். கர்த்தராகிய இயேசுவே வாரும் சீக்கிரமாக வாரும் என்று மிகுந்த வல்லமையுடன் அவர்கள் ஜெபித்தனர். ஆனால், அவர் வரவில்லை. இப்பொழுது வாழ்க்கையின் பாரமான சுமைகள், கவலைகள், குழப்பங்கள் ஆகியவைகளை, மீண்டும் சுமப்பதும், பரியாச உலகின் இகழ்ச்சியையும் நிந்தையையும் சகிப்பது அவர்களுடைய விசுவாசத்திற்கும் பொறுமைக்கும் பயங்கரமான சோதனையாக இருந்தது. (36)

ஆனாலும் கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது அவருடைய சீஷர்கள் அனுபவித்திருந்த ஏமாற்றத்தைப்போன்று இது மிகப் பெரியதாக இருக்கவில்லை. கிறிஸ்து வெற்றியாக எருசலேமிற்குள் நுழைந்தபோது, அவர் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து, இஸ்ரவேலை அவளை ஒடுக்குகிறவர்களின் கைகளிலிருந்து விடுவிக்கப்போகிறார் என்று நம்பியிருந்தார்கள். உயர்ந்த நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியான எதிர்பார்ப்புடனும் அவருக்கு எப்படி மரியாதை செலுத்தப்போகிறார்கள் என்பதை ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டனர்.

அவருடைய வழியில் அநேகர் தங்களுடைய மேலங்கியை அல்லது குருத்தோலைகளை விரித்தனர். உற்சாகமான சந்தோஷத்தில் "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று அறிவிப்பதில் அவர்கள் ஒன்றுசேர்ந்தனர். இந்த மகிழ்ச்சின் வெளிப்பாட்டினால் தொந்தரவடைந்து கோபப்பட்டு, அவரது சீஷர்களை கண்டிக்கும்படி கேட்ட பரிசேயர்களுக்கு, "இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்" (லூக்கா 19:40) என்று அவர் பதிலளித்தார். தீர்க்கதரிசனம் நிறைவேறவேண்டும். என்றாலும் மிகக் கசப்பான ஏமாற்றத்திற்கு அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். சில நாட்களே கடந்திருந்தது, இரட்சகரின் வேதனை மரணத்தைக்கண்டு, அவரை கல்லரையில் வைத்தனர். அவர்களுடைய எதிர்பார்ப்பு ஒரு காரியத்திலும் உணரப்படவில்லை. அவர்களுடைய நம்பிக்கை இயேசுவுடன் மடிந்தது. ஆண்டவர் கல்லறையிலிருந்து வெற்றியுள்ளவராக வரும் வரை இவைகளெல்லாம் "கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்று" தீர்க்கதரிசனங்களால் முன்னுரைக்கப்பட்டிருந்தன என்பதை அவர்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை—அப். 17:3. (37)

"சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்" (சக. 9:9) என்று ஐநூறு வருடங்களுக்கு முன்பே, கர்த்தர் அறிவித்திருந்தார். கிறிஸ்து நியாயம் தீர்க்கப்படவும் மரிக்கவும் போகிறார் என்பதை அவரது சீடர்கள் உணர்ந்திருந்தார்களானால், அவர்கள் இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியிருக்கமாட்டார்கள். (38)

அதைப்போலவே, இந்த உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டும் என்று ஆவியானவர் முன்கூறியிருந்த தூதை, மில்லரும் அவரது சகாக்களும் கொடுத்து, தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினர். ஆனால் அவர்களது ஏமாற்றத்தைச் சுட்டிக்காட்டியிருந்த தீர்க்கதரிசனங்களை அவர்கள் முழுவதுமாகப் புரிந்துகொள்ளவில்லை. புரிந்து கொண்டிருந்தார்களானால், கர்த்தரின் வருகைக்குமுன் சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படவேண்டிய வேறொரு தூதை அறிந்திருந்தார்களானால், முதலாவதை அவர்களால் கொடுக்கமுடியாமல் இருந்திருக்கக்கூடும். முதலாம் இரண்டாம் தூதர்களின் தூதுகள் மிகச்சரியான நேரத்தில் கொடுக்கப்பட்டு, அவர்களால் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தேவன் வடிவமைத்திருந்த ஊழியத்தை அது நிறைவேற்றியது. (39)

கிறிஸ்து தோன்றாமல் காலம் கடந்துசெல்லுமானால்

அட்வெந்துக்களின் அமைப்பு முழுவதும் முற்றிலுமாகக் கைவிடப்படும் என்று உலகம் பார்த்தும் எதிர்பார்த்துக்கொண்டும் இருந்தது. ஆனால் அநேகர் பலத்த சோதனையின்கீழ் தங்களுடைய விசுவாசத்தை விட்டுவிட்டனர். அப்போதும் சிலர் உறுதியாக நின்றனர். தாழ்மை, இருதயத்தை ஆராய்தல், உலகத்தை மறுத்துவிடுதல், வாழ்க்கையில் சீர்திருத்தம்,என்று அட்வெந்து இயக்கத்தில் காணப்பட்ட இந்த ஆவியின் கனிகள், அது தேவனுடைய இயக்கம் என்று சாட்சி பகர்ந்திருந்தன. இரண்டாம் வருகையைப்பற்றிய பிரசங்கத்திற்கு, பரிசுத்த ஆவியின் வல்லமை சாட்சி பகர்ந்திருந்தது என்பதை அவர்கள் மறுக்கத் துணியவில்லை. அவர்களது தீர்க்கதரிசன காலக்கணக்குகளில் அவர்களால் எந்தத் தவறையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களது தீர்க்கதரிசன விளக்கமுறையைக் கவிழ்ப்பதில் அவர்களது எதிரிகளில் மிகத்திறமை வாய்ந்தவர்களாலுங்கூட பெற்றிபெற முடியவில்லை. தேவ ஆவியினால் மனங்கள் பிரகாசித்து, ஜீவனுள்ள வல்லமையால், இருதயங்கள் எரிந்துகொண்டிருந்தன. இவர்களது ஆர்வமிக்க ஜெபத்துடன்கூடிய வேத ஆராய்ச்சியினால் அடைந்த நிலைகளை வேதாகமச் சான்று இல்லாமல் மறுப்பதற்கு இவர்களால் முடியவில்லை. மிக அதிகமாக ஆராயும் விமர்சகர்கள், சமய ஆசிரியர்கள், உலகப்பிரகாரமான ஞானவான்கள் ஆகியவர்களிடமிருந்து மிகக் கசப்பான நிலை உண்டாகி இருந்தது. இந்த நிலை அவர்களைச் சமாளித்து நின்றது. நன்கு கற்றவர்கள், பேச்சாளர்கள், மேலானோர், கீழானோர் இணைந்த அணியானது அனைத்திலும் உள்ளவர்களால் ஏற்பட்ட ஏளனங்களுக்கும் ஏச்சுக்களுக்கும் எதிராக நிலையான உறுதியுடன் நின்றது. (40)

எதிர்பார்த்திருந்த நிகழ்ச்சியில் ஒரு தோல்வி உண்டானது மெய்தான். ஆனால் அதனால் அவர்கள் தேவனுடைய வார்த்தையின் மீது கொண்டிருந்த விசுவாசத்தை அசைக்க முடியவில்லை. இன்னும் நாற்பது நாட்களில் நினிவே நகரம் கவிழ்க்கப்பட்டுப் போகுமென்று அதன் தெருக்களில் யோனா அறிவித்தபோது, நினிவே மக்களின் தாழ்மையைக் கர்த்தர் ஏற்றுக்கொண்டு, அவர்களது தவணையின் காலத்தை நீட்டித்தார். அப்படியிருந்தும் யோனாவின் தூது, கர்த்தரால் அனுப்பப்பட்டு, அவரது சித்தத்தின்படி நினிவே சோதிக்கப்பட்டது. அதேவிதமாக, நியாயத்தீர்ப்புப்பற்றிய எச்சரிப்பைக் கொடுக்கும்படி தேவன் அவர்களை நடத்தினார் என்று அட்வெந்துக்கள் நம்பினர். "அதைக்கேட்ட அனைவரது இருதயங்களையும் சோதித்து, கர்த்தரின் வருகைக்கான விருப்பத்தை அவர்களுக்குள் எழுப்பியிருக்கிறது அல்லது அவரது வருகையைப்பற்றி தேவனுக்கு மட்டுமே தெரிந்துள்ள காரியத்தில் கூடக்குறைய உணரும் விதத்திலான ஒரு வெறுப்பை அது அழைத்துள்ளது. கர்த்தர் அப்போது

வந்திருந்தால், அவர்கள் எந்தப் பகுதியில் காணப்பட்டிருந்திருப்பார்கள்? ‘இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்’ என்று வியந்து கூறியிருந்திருப்பார்களா? அல்லது ‘பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்’ என்று கூறி இருப்பார்களா? என்பதை அறியும்படி ஒரு கோட்டினை வரைந்திருக்கிறது. இப்படி நாம் நம்புவதுபோல், அவரது ஜனங்களை சோதித்து, அவர்களது விசுவாசத்தைச் சோதித்து, அவர்களை மெய்ப்பிக்கிறார். சோதனையின் வேளைக்குள் அவர்களை வைப்பதை அவர் தகுதியாகக் கண்டு, வைத்திருந்த இடத்திலிருந்து அவர்கள் பின்வாங்குவார்களா? அல்லது இந்த உலகத்தை விட்டுவிலகி, தேவனுடைய செயலின்மீது முழு நம்பிக்கையுடன் சார்ந்திருப்பார்களா? என்று அவரது ஜனங்களைச் சோதிக்கிறார்” என்றனர்.—The Advent Herald and Signs of the Times Reporter,vol. 8, No. 14 (Nov 13,1844). (41)

தங்களது கடந்தகால அனுபவத்தில் தேவன் அவர்களை நடத்தியிருந்தார் என்று இன்னும் நம்பினவர்களின் உணர்ச்சிகள் வில்லியம் மில்லரின் வார்த்தைகளால் வெளிக்காட்டப்பட்டுள்ளன. “நான் மீண்டும் வாழும்படி நேரிட்டிருந்தால், தேவனிடத்திலும் மனிதர்களிடத்திலும் நேர்மை உள்ளவனாக இருக்கவேண்டும் என்று முன்னர் செயலாற்றியிருந்த, அதே சான்றை உடையவனாக செயலாற்றியாகவேண்டும். ஆத்துமாக்களின் இரத்தக்கறையிலிருந்து எனது ஆடையை நான் சுத்திகரித்திருக்கிறேன் என்று நான் நம்புகிறேன். அவர்களுடைய குற்றத்தினாலுள்ள பழியிலிருந்து முடிந்தவரை விடுபட்டிருக்கிறேன் என்று நான் உணருகிறேன். நான் இரண்டு தடவைகள் ஏமாற்றமடைந்தவனாக இருந்தபோதிலும், நான் இன்னும் கீழே விழுந்துவிடவோ அல்லது அதைரியமடைந்துவிடவோ இல்லை. கிறிஸ்துவின் வருகையின்மீதுள்ள எனது நம்பிக்கை எப்பொழுதும் இருந்ததைப்போல, பலமிக்கதாகவே உள்ளது. வருடக்கணக்கான எனது நிதானமான ஆலோசனைக்குப்பின், எதைச் செய்வது பக்திவிநயமான எனது கடமை என்று உணர்ந்தேனோ அதைச் செய்திருக்கிறேன். நான் தவறி இருந்தால், அது உதாரணத்தின் பகுதியில் உடன் மனிதனுடனுள்ள எனது அன்பு, தேவனுக்குச் செய்யவேண்டிய ஊழியத்தின்மீதான எனது கடமை உணர்வு, ஆகியவைகளின் பக்கத்தில் உள்ளது. நான் எதை நம்பியிருந்தேனோ அதையன்றி, வேறெதையும் பிரசங்கிக்கவில்லை என்னும் ஒன்றினை நான் அறிந்திருக்கிறேன். தேவன் என்னுடன் இருந்திருக்கிறார். அவரது வல்லமை அந்த ஊழியத்தில் வெளிக்காட்டப்பட்டிருக்கிறது. நல்ல

நன்மைகள் உண்டாயிருக்கின்றன. எல்லா மனிதர்களுக்கும் விளங்கும் விதத்தில், காலத்தைப்பற்றிய பிரசங்கத்தினால், அந்த உபாத்தியினால் விசுவாசத்தினாலும் கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுதலினாலும் அநேகமாயிரமானவர்கள் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டிருக்கின்றனர்."—Bliss, pages 256,255,277,280,281. "அகந்தை உள்ளவர்களின் புன்னகையை நான் ஒருபோதும் தழுவவில்லை. உலகம் கோபம் கொண்டபோது, நான் தைரியத்தை இழக்கவில்லை. நான் அவர்களது ஆதரவை இப்பொழுது விலைக்கு வாங்கமாட்டேன். அல்லது அவர்களது வெறுப்பைத் தூண்டும்படி எனது கடமையைக் கடந்துசெல்லவும் மாட்டேன். எனது ஜீவனை நான் ஒருபோதும் அவர்களது கரங்களில் தேடமாட்டேன். தேவன் அவரது தெய்வீக ஏற்பாட்டினால், அவ்விதமாகக் கட்டளையிட்டால், நான் அதை இழப்பதிலிருந்து பின்வாங்கமாட்டேன் என்று நம்புகிறேன்" என்றார். —J. White,Life of Wm. Miller,page 315. (42)

தேவன் அவரது ஜனங்களைக் கைவிடவில்லை. பெற்றுக்கொண்ட ஒளியை அவசரகோலமாக மறுக்காமலிருந்து, அட்வெந்து இயக்கத்தைப் பகிரங்கமாகக் குற்றப்படுத்தாமல் இருந்தவர்களிடம் அவரது ஆவி இன்னமும் தங்கி இருந்தது. இந்த நெருக்கடியில் பரீட்சிக்கப்பட்டுக் காத்திருப்பவர்களுக்கான தைரியமூட்டுதலும் எச்சரிக்கையுமிக்க வார்த்தைகள், எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் உள்ளன. "ஆகையால், மிகுந்த பலனுக் கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும் படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்"—எபி. 10:35–39. (43)

"வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்" என்று கடைசி காலத்திலுள்ள சபைக்குக் கொடுக்கப்பட்ட எச்சரிப்பின் வார்த்தைகள் கர்த்தரின் வருகை சமீபமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன என்பதற்குச் சான்றாக உள்ளது. தாமதம்போல் காணப்படும் ஒன்றும், கர்த்தர் வருவதற்குத் தாமதிப்பார் என்பதும் இதில் தெளிவாகப் பொருள்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு கொடுக்கப்பட்டுள்ள போதனை இந்தக் காலத்திலுள்ள அட்வெண்டிஸ்டுகளின் அனுபவத்திற்குப் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. இங்கு போதிக்கப்பட்ட மக்கள், விசுவாசக் கப்பலை உடைக்கும் ஆபத்தில் இருந்தனர். அவர்கள் அவருடைய ஆவியின் வழிகாட்டுதலையும் அவருடைய வார்த்தைகளைப் பின்பற்றுவதிலும் தேவனுடைய சித்தத்தைச் செயல்படுத்தி இருந்தனர். அப்படியிருந்தும் அவர்களது கடந்தகால அனுபவத்திலிருந்த அவரது நோக்கத்தை

அவர்கள் அறியமுடியாதவர்களாக இருந்தனர். அவர்களுக்குமுன் இருந்த பாதையையும் அவர்கள் அறியவில்லை. உண்மையாகவே தேவன்தான் அவர்களை நடத்திக்கொண்டிருந்தாரா? என்று சந்தேகிக்கும்படி அவர்கள் சோதிக்கப்பட்டனர். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்னும் வார்த்தைகள் இந்த நேரத்தில் பொருந்தக்கூடியதாக இருந்தது. நடுஇராத்திரியின் சத்தம் என்னும் பிரகாசமிக்க ஒளி, அவர்களது பாதையில் வீசியபோது, தீர்க்கதரிசனங்கள் முத்திரை நீக்கம் செய்யப்பட்டிருப்பதை அவர்கள் கண்டபோது, விரைவாக நிறைவேறிவரும் அடையாளங்கள் கிறிஸ்துவின் வருகை சமீபம் என்று கூறிக்கொண்டிருந்தபோது, அவர்கள் பார்வை உள்ளவர்கள் நடப்பதுபோல் நடந்தனர். ஆனால் இப்பொழுது ஏமாற்றத்தினால் நம்பிக்கை இழந்து மனம் கவிழ்ந்த அவர்களால், தேவனின் மீதுள்ள விசுவாசத்தினாலும் அவரது வார்த்தையினாலும்மட்டுமே நிற்கமுடிந்தது. நீங்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய விசுவாசத்தை விட்டுவிட்டு அட்வெந்துக்களின் இயக்கம் சாத்தானுடையது என்று கூறுங்கள் என்று ஏளனமாக உலகம் கூறிக்கொண்டிருந்தது. எவனாவது பின்வாங்கிப்போவானானால், அவன்மேல் நான் பிரியமாய் இருக்கமாட்டேன் என்று தேவனுடைய வார்த்தை அறிவித்தது. இப்பொழுது அவர்களுடைய விசுவாசத்தை மறுதலிப்பதும், அந்தத் தூதில் இருந்த பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை மறுப்பதும், அழிவை நோக்கிப் பின்னிழுத்துச் செல்லுவதாக இருக்கும். ஆகையால் உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். பொறுமை உங்களுக்கு வேண்டியதாக இருக்கிறது. வருகிறவர் இன்னுங்கொஞ்சங்காலத்தில் வருவார். தாமதம்பண்ணார் என்னும் பவுலின் வார்த்தைகளினால், உறுதியாக நிற்கும்படி அவர்கள் தைரியமூட்டப்பட்டனர். ஏற்கனவே தேவனைப்பற்றி அவர்கள்பெற்றிருந்த ஒளியைப் போற்றுவது மட்டுமே அவர்களது பாதுபாப்பான ஒரு பாதையாக இருந்தது. (44) ★

# 23

# பரிசுத்தஸ்தலம் என்றால் என்ன?

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 409–422)**

"இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்"–தானி. 8:14 என்னும் வேதவாக்கியம் மற்றனைத்தையும்விட அட்வெந்துக்களின் விசுவாசத்திற்கு அஸ்திவாரமாகவும் மையத் தூணாகவும் உள்ளது. கர்த்தரின் அதிசீக்கிர வருகையைப்பற்றிய நம்பிக்கையை உடையவர்களாயிருந்த அனைத்து விசுவாசிகளுக்கும் இவை பழக்கப்பட்ட வார்த்தைகளாக இருந்தன. இந்தத் தீர்க்கதரிசனம் ஆயிரக்கணக்கானவர்களின் உதடுகளில் இருந்து அவர்களது விசுவாசத்தின் கோட்பாட்டுச் சொற்களாகத் திரும்பத் திரும்பக் கூறப்பட்டன. அவர்களது ஒளிமிக்க எதிர்பார்ப்புக்களும், மிகவும் அதிகமாகப் போற்றப்பட்டிருந்த நம்பிக்கைகளும் அதில் முன்னுரைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிகளைத்தான் சார்ந்திருந்தன என அனைவரும் உணர்ந்தனர். இந்தத் தீர்க்கதரிசன நாட்கள் 1844–ம் வருடம் இலையுதிர்காலத்தில் முடிவடையும் என்று காட்டப்பட்டிருந்தது. மற்ற கிறிஸ்தவ உலகத்தினருடன், வருகைக்காரர்களும் பொதுவாகச் சேர்ந்து, பூமியோ அல்லது அதன் ஏதோ ஒரு பகுதியோ பரிசுத்தஸ்தலமாக இருந்தது என்று நம்பியிருந்தனர். கடைசி நாட்களில் அக்கினியால் பூமி தூய்மைப்படுத்தப்படுவதுதான் பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படுதல் என்ற அவர்கள் புரிந்துகொண்டிருந்தனர். எனவே 1844–ல் கிறிஸ்து திரும்பிவரும்போது அது நிகழும் என்பது அவர்களின் முடிவாக இருந்தது. (1)

ஆனால் குறிக்கப்பட்டிருந்த நேரம் கடந்துசென்றது. கர்த்தர் வரவில்லை. தேவனுடைய வார்த்தைகள் தவறக்கூடியவை அல்ல என்பதை அந்த விசுவாசிகள் அறிந்திருந்தனர். எனவே தீர்க்கதரிசனத்தைப்பற்றிய அவர்களது விளக்கம் தவறானதாக இருக்கக்கூடும் என எண்ணவேண்டியதாயிற்று. ஆனால்

அந்தத் தவறு எங்கே இருந்தது? 2300 நாட்கள் 1844—ல் முடிவடைந்தன என்பதை மறுப்பதினால் அந்தச் சிக்கலின் முடிச்சை அவிழ்க்க அநேகர் அவசரப்பட்டனர். அவர்கள் எதிர்பார்த்திருந்த நேரத்தில் கிறிஸ்து வரவில்லை என்பதைத்தவிர, இதற்கு வேறு காரணம் கொடுக்கமுடியவில்லை. தீர்க்கதரிசன நாட்கள் 1844—ல் முடிவடைந்திருந்தால், உலகத்தை அக்கினியால் தூய்மைப்படுத்துவதன் மூலமாக, பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிக்க கிறிஸ்து வந்திருந்திருக்கவேண்டும். அவர் வராததால், அந்த நாட்கள் முடிவடைந்திருக்காது என்று அநேகர் வாதம்செய்தனர். (2)

இந்த முடிவை ஏற்பதானது, முன்னர் எடுக்கப்பட்ட தீர்க்கதரிசன காலங்களின் கணிப்பை மறுப்பதாக இருந்தது. எருசலேமைத் திரும்ப எடுத்துக்கட்டும் கட்டளை அர்தசஷ்டாவினால் பிறப்பிக்கப்பட்டது. இந்தப்பணி கி.மு.457—ம் வருடம் இலையுதிர்காலத்தில் ஆரம்பமாயிற்று. அதுமுதல் 2300 நாட்கள் ஆரம்பமானதாகக் காணப்பட்டது. இந்த தீர்க்கதரிசனத்தின் ஆரம்ப இடமாக இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டபோது, தானி. 9:25—27—ல் முன்னுரைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிகளின் கால விளக்கங்கள் அனைத்துடனும் அது பூரணமான இசைவுள்ளதாக இருந்தது. மேலும் 2300 நாட்களின் பகுதியான அறுபத்தொன்பது வாரங்கள்முதல் (69*7= 483 நாட்கள்), அபிஷேகம்பண்ணப்பட்ட மேசியாவரை எட்டவேண்டியதாக இருந்தது. கிறிஸ்துவின் ஞானஸ்நானமும், ஆவியினால் அபிஷேகம் செய்யப்படுதலும், குறிப்பிட்டிருந்தபடி மிகச்சரியாக கி.பி.27—ல் நிறைவேறியது. எழுபதாவது வாரத்தின் நடுவில் மேசியா சங்கரிக்கப்பட்டாகவேண்டும். கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்ற மூன்றரை வருடங்களுக்குப்பின், கி.பி. 31—ல் வசந்தகாலத்தில், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். எழுபது வாரங்கள் அல்லது 70*7 = 490 வருடங்கள் மிகக்குறிப்பாக யூதர்களுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தது. இந்தக்காலத்தின் முடிவில், அந்த ஜாதி கிறிஸ்துவின் சீடர்களை உபத்திரவப்படுத்தியதால், கிறிஸ்துவை நிராகரிக்கும் செயலின்மீது முத்திரையைப் பதித்தது. எனவே கி.பி.34—ல் அப்போஸ்தலர்கள் புறஜாதிகளிடத்திற்குத் திரும்பினார்கள். இவ்வாறாக 2300 நாட்களின் (வருடங்களின்) முதல் பகுதியான 490 வருடங்கள் முடிவடைந்தன. அதனால் 1810 வருடங்கள் இன்னும் மீதமாக இருந்ததாகவேண்டும் (2300—490 = 1810). கி.பி.34—ல் இருந்து 1810 வருடங்கள் 1844வரை நீள்கிறது. பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்று தேவதூதன் கூறினான். குறிக்கப்பட்டிருந்த நேரத்தில் தீர்க்கதரிசனத்தின் முன்னிருந்த குறிப்புகள் அனைத்தும், கேள்விக்கிடமற்றவகையில் நிறைவேறியிருந்தன. பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் நிகழ்ச்சி 1844—ல் நடைபெறும் என்பதற்கான விடையைத்தவிர, இந்தக் கணக்கிடுதலின் அனைத்தும் தெளிவும் இசைவும்

உள்ளதாக இருந்தன. அந்த நாட்கள் அந்தக் காலத்தில் முடிவடைந்தன என்பதை மறுப்பது, அந்தக் கேள்வி முழுவதையும் குழப்பத்திற்குள்ளாக்கிவிடும். தவறாத விதத்தில் நிறைவேறின தீர்க்கதரிசனங்களினால் ஸ்திரப்படுத்தப்பட்ட நிலைகளை அது மறுப்பதாகவும் இருக்கும். (3)

ஆனால் மாபெரும் அட்வெந்து இயக்கத்தில் தேவன் தமது பிள்ளைகளை நடத்தினார். அவரது வல்லமையும் மகிமையும் அந்தப் பணியில் இருந்தது. அது தவறானது—மதவாதத்தின் எழுச்சியினால் உண்டானது என்று நிந்திக்கும்படி, அதை இருளிலும் ஏமாற்றத்திலும் முடிவடைய அவர் அனுமதிக்கப்பட்டார். சந்தேகத்திலும் நிச்சயம் இன்மையிலும் இருக்கும்படி தேவன் அவரது வார்த்தையை விட்டு விடமாட்டார். முன்னர் கணக்கிடப்பட்டிருந்த தீர்க்கதரிசனக் காலக்கணிப்புகளை அநேகர் கைவிட்டுவிட்டு, அதன் அடிப்படையிலிருந்த அந்த இணக்கத்தின் சரியான தன்மையை மறுத்தனர். மற்றவர்கள் வேத வாக்கியங்களினாலும், தேவ ஆவியின் சாட்சியினாலும் தாங்கப்பட்டிருந்த விசுவாசம், அனுபவம் ஆகியவைகளின் குறிப்புகளை மறுக்க மனமற்றவர்களாக இருந்தனர். தீர்க்கதரிசனங்களைப்பற்றிய ஆராய்ச்சிகளின்போது, அவர்கள் பின்பற்றிய விளக்கங்கள் சரியான கொள்கையை உடையதாயிருந்தன என அவர்கள் நம்பினர். ஏற்கனவே கண்டறியப்பட்டிருந்த உண்மைகளை உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கவேண்டியது அவர்களது கடமை என்றும், அவர்களது வேதாகம ஆராய்ச்சியின்போது அதே கொள்கையை அவர்கள் தொடரவேண்டுமென்றும் அவர்கள் நம்பினார்கள். வாஞ்சைமிக்க ஜெபத்துடன் தங்கள் நிலையை அவர்கள் திரும்பிப்பார்த்து, தவறு எங்கே இருக்கிறது என்பதைக் கண்டறிய வேதவாக்கியங்களை ஆராய்ந்தனர். அவர்களது தீர்க்கதரிசனக் காலக்கணக்குகளில் தவறைக் காணமுடியாதவர்களாக அவர்கள் இருந்தபோது, பரிசுத்த ஸ்தலம் என்னும் பொருள்பற்றி மிக அதிகமாக சோதித்தறியும்படி அவர்கள் நடத்தப்பட்டனர். (4)

அவர்களது சோதனையில், பூமிதான் பரிசுத்தஸ்தலம் என்னும் பிரபலமான நோக்கினைத் தாங்கும் சான்று எதுவும் வேதவாக்கியத்தில் இருக்கவில்லை என்பதை அவர்கள் கற்றுக்கொண்டனர். ஆனால் அவர்கள் வேதாகமத்தில் பரிசுத்தஸ்தலம் என்னும் பொருள் பற்றிய முழுவிளக்கத்தில், அதன் தன்மை, இருப்பிடம், ஆராதனை முறைகள் ஆகியவைகளைக் கண்டனர். பரிசுத்த எழுத்தாளர்களின் சாட்சி சகலவிதமான கேள்விகளுக்கும் அப்பாற்பட்டவையாக இந்தப் பொருளை மிகத் தெளிவாகவும் போதுமானதாகவும் வைத்தன. அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் இப்படிக் கூறுகிறார். “அன்றியும்,

முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது. எப்படியெனில், ஒரு கூடாரம் உண்டாக்கப்பட்டடிருந்தது; அதின் முந்தின பாகத்தில் குத்துவிளக்கும், மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் இருந்தன; அது பரிசுத்த ஸ்தலமென்னப்படும். இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது. அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன. அதற்கு மேலே மகிமையுள்ள கேருபீன்கள் வைக்கப்பட்டுக் கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன; இவைகளைக்குறித்து விவரமாய்ப்பேச இப்பொழுது சமயமில்லை"—எபி. 9:1–5. (5)

பவுல் இங்கு குறிப்பிடும் பரிசுத்தஸ்தலமும் தேவனுடைய கட்டளையின்படி மோசேயினால் அமைக்கப்பட்டதாகும். "அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக"—யாத். 25:8. இந்தக் கட்டளை மேசே மலையின் மீதிருந்தபோது தேவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. இஸ்ரவேலர்கள் வனாந்திர வழியாகப் பயணம் செய்ததால், ஆசரிப்புக் கூடாரமானது ஓரிடத்திலிருந்து வேறொரிடத்திற்குப் பெயர்த்துக்கொண்டு செல்லப்படும் விதத்தில் கட்டப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், அது மிகச்சிறப்பான தோற்றம் உடையதாக இருந்தது. அதன் சுவர்கள் பொன் தகடுகள் போர்த்தப்பட்ட நேரான பலகைகளினால் ஆனதாக இருந்தது! அவை வெள்ளிக் குழிகளுக்குள் நிறுத்தப்பட்டிருந்தன. அதன் கூரை பலவரிசைத் திரைச்சீலைகளால் அல்லது மூடுதிரைகளால் அமைக்கப்பட்டிருந்தன. வெளிப்பகுதி தோலினாலும், மீந்த உட்பகுதி, பட்டு நூலினாலும் அழகிய கேருபீன்களின் உருவங்களுடன் வடிவமைக்கப்பட்டிருந்தன. வெளிப் பிராகாரத்தில் தகனபலிசெலுத்தும் பலிபீடத்துடன் அந்த ஆசரிப்புக் கூடாரம் ஒரு அழகிய திரைச்சீலையினால் பிரிக்கப்பட்ட, பரிசுத்த ஸ்தலம், மகாபரிசுத்த ஸ்தலம் என்னும் இரு பகுதிகளாக இருந்தன. அதைப்போன்றே அதன் முதலாம் பகுதியின் வாசலையும் ஒரு திரைச்சீலை மூடியிருந்தது. (6)

பரிசுத்தஸ்தலத்தின் தென்புறத்தில் பகலிலும் இரவிலும் பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளிச்சம் கொடுக்கும்படி ஏழு கிளைகளையுடைய ஒரு குத்துவிளக்கும், வடபுறத்தில் தேவசமுகத்து அப்பங்களை வைக்கும் மேசையும் பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்தஸ்தலத்தையும் பிரித்திருந்த திரைச்சீலைக்கு முன்பாக இஸ்ரவேலரின் ஜெபங்களுடன்

தேவனுக்கு முன்பாக உயர எழும்பியிருந்த தூப மேகத்தை எழுப்பி இருந்த பொன்னாலான தூபபீடமும் இருந்தன. (7)

மகா பரிசுத்தஸ்தலத்தில் மிகஉயர்ந்த மரப்பலகையால் செய்யப்பட்டு, பொன்தகட்டினால் மூடப்பட்டிருந்த உடன்படிக்கைப்பெட்டி இருந்தது. இந்தப் பெட்டிக்குள் தேவனால் எழுதப்பட்ட பத்துக்கற்பனைகள் அடங்கிய இரு கற்பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. உடன்படிக்கைப் பெட்டிக்கு மேலாகவும் அந்தப் பரிசுத்தமான பெட்டியை மூடும்படியாகவும், பொன் தகட்டினால் மிகச்சிறப்பான வகையில் பொதியப்பட்டிருந்த கிருபாசனம் இருந்தது. அதன் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாக சுத்தப்பொன்னினாலான இரு கேருபீன்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்தப் பகுதியில் கேருபீன்களுக்கிடையில் மகிமையின் மேகத்தில் தேவப் பிரசன்னம் வெளிக்காட்டப்பட்டிருந்தது. (8)

எபிரெயர்கள் கானான் தேசத்தில் நிலையாகத் தங்கியபின் ஆசரிப்புக்கூடாரத்திற்குப் பதிலாக சாலொமோனின் தேவாலயம் அமைக்கப்பட்டது. அது ஆசரிப்புக்கூடாரத்தைவிடப் பெரிய அளவில் இருந்தபோதிலும், அதைப்போன்ற அமைப்புகளை உடையதாகவே இருந்தது. அதைப்போன்றே அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. தானியேலின் நாட்களில் அது பாழாக்கப்பட்டு, கி.பி.70–ல் ரோமர்களால் அது அழிக்கப்படும்வரை, அந்த நிலையிலேயே இருந்தது. (9)

வேதாகமம் தகவல் தரும் இந்த ஒரு பரிசுத்தஸ்தலம் மட்டும் தான் பூமியில் எப்போதும் இருந்திருந்தது. இது முதலாம் உடன்படிக்கையின் பரிசுத்தஸ்தலம் என்று பவுலினால் அறிவிக்கப்பட்டது. ஆனால் புதிய உடன்படிக்கையில் பரிசுத்தஸ்தலம் இல்லையா? (10)

சத்தியத்தைத் தேடினவர்கள் எபிரெயரின் புத்தகத்தை மறுபடியும் புரட்டிப் பார்த்தபோது, பவுலின் வார்த்தைகளில் ஏற்கனவே அடக்கமாயிருந்த இரண்டாவது பரிசுத்தஸ்தலத்தை அல்லது புதிய உடன்படிக்கையின் பரிசுத்தஸ்தலம் இருப்பதை இவ்வாறு கண்டனர். “அன்றியும், முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது”–

எபி. 9:1. அன்றியும் என்று பவுல் பயன்படுத்திய வார்த்தையானது, இதற்குமுன் இருந்த பரிசுத்தஸ்தலத்தைப்பற்றி அவன் குறிப்பிட்டிருந்தான் என்பதைக் காட்டுகிறது. எனவே, அவர்கள் அதற்கு முந்திய அதிகாரத்தின் ஆரம்பத்திற்கு திரும்பி, இப்படி வாசித்தனர். “மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில். பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், பரிசுத்த

ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு"—எபி. 8:1,2. (11)

புதிய உடன்படிக்கையின் பரிசுத்தஸ்தலம் இங்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. முதலாம் உடன்படிக்கையின் பரிசுத்தஸ்தலம் மனிதனால் ஏற்படுத்தப்பட்டு, மோசேயினால் கட்டப்பட்டிருந்தது. ஆனால் இரண்டாவது பரிசுத்தஸ்தலம் மனிதனால் கட்டப்படாமல், கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அந்தப் பரிசுத்தஸ்தலத்தில் பூமிக்குரிய ஆசாரியர்கள் அவர்களது ஆசாரிய ஊழியங்களைச் செய்தனர். இந்தப் பரிசுத்தஸ்தலத்தில் நமது பிரதான ஆசாரியராயிருக்கும் கிறிஸ்து, தேவனுடைய வலதுபக்கத்தில் ஊழியம் செய்கிறார். ஒரு பரிசுத்தஸ்தலம் பூமியில் இருந்தது. மற்றது பரலோகத்தில் இருக்கிறது. (12)

மேலும், மேசேயினால் கட்டப்பட்ட பரிசுத்தஸ்தலம் ஒரு மாதிரியைப் பின்பற்றியதாக இருந்தது. "நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக." "மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு" (யாத்திராகமம் 25:9,40) என்று கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருந்தார். "அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவ னுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம்" "பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளி னாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே." "இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும்ஒத்திருக்கிறது;" "மெய்யான பரிசுத்தஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்தஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" –எபி. 9:9,23; 8:5; 9:24. (13)

இயேசு நமக்காக ஊழியம் செய்யும் பரலோகத்திலுள்ள பரிசுத்தஸ்தலம் பெரும் மாதிரியாக இருக்கிறது. மோசே அமைத்த பரிசுத்தஸ்தலம் இதன் நகலாக இருக்கிறது. பூமிக்குரிய பரிசுத்தஸ்தலத்தைக் கட்டினவர்களின்மீது தேவன் தமது ஆவியை வைத்தார். அதன் கட்டுமானத்தில் காணப்படும் கலைத்திறன் தெய்வீக ஞானத்தின் வெளிக்காட்டலாக உள்ளது. அதன் சுவர்கள் கெட்டியான பொன்னின் தோற்றமுடையதாக இருந்து, விளக்குத்

தண்டின் ஏழு விளக்குகளின் ஒளியை எப்பக்கமும் பிரதிபலிப்பிக்கக் கூடியவையாக இருந்தன. சமூகத்தப்பங்களின் மேஜையும் தூபபீடமும் சுடப்பட்ட பொன்னைப்போல ஒளிப்பிழம்பாயிருந்தன. மேற்கூரையாக அமைந்திருந்த அழகும் ஆடம்பரமுமிக்க திரைச்சீலைகளின்மீது இளநீல நூலாலும் கேருபீன்களின் வடிவங்கள் விசித்திரமான விதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்த அந்தக் காட்சி, அழகை அதிகப்படுத்தியிருந்த இரண்டாவது திரைச்சீலைக்கு அப்பால் தேவனின் மகிமையைக் காணக்கூடிய விதத்தில் வெளிக்காட்டியிருந்த பரிசுத்த ஷெகீனா இருந்தது. அதற்கு முன்பாகப் பிரதான ஆசாரியன் தவிர, வேறொருவரும் உட்பிரவேசித்தால் உயிர்வாழ முடியாத நிலை இருந்தது. பூமிக்குரிய ஆசாரிப்புக்கூடாரத்தின் ஈடு இணையற்ற அழகு, நமது முன்னோடியாக விளங்கும் கிறிஸ்து தேவ சிங்காசனத்தின் முன் நின்று நமக்காக ஊழியம் செய்யும் பரலோக தேவாலயத்தின் மகிமைகளை மனிதக் காட்சிக்குப் பிரதிபலித்துக் காட்டினது. ஆயிரமாயிரம்பேர் சேவித்து, கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நிற்கும், அரசர்களுக்கெல்லாம் அரசரான அவர் வாழுமிடமாகிய தேவாலயம், நித்திய சிங்காசனத்திலிருந்து புறப்படும் மகிமையினால் நிறைந்ததாக இருந்தது. அதன் பாதுகாவலர்களாயிருக்கும் ஒளிமிக்க சேராபீன்கள் அவர்களது முகங்களை மறைத்துத் துதித்துக் கொண்டிருந்தனர். புமிக்குரிய கூடாரம், மனிதக் கரங்களால் அதுபோன்று ஒருபோதும் கட்டப்பட்டிராத மிகச்சிறந்த அமைப்பை உடையதாக இருந்த பரலோக தேவாலயத்தின் விசாலம், மகிமை ஆகியவைகளின் மங்கலான பிரதிபலிப்பாக இருந்தது. அப்படியிருந்தும் பரலோக பரிசுத்த ஸ்தலத்தைப்பற்றிய முக்கியமான சத்தியங்களும் மனித மீட்பிற்கு என்று செய்யப்பட்டிருந்த பெருங்காரியங்களும் பூமிக்குரிய பரிசுத்தஸ்தலத்திலும், அதில் செய்யப்பட்டிருந்த ஆராதனை முறைகளிலும் பொதிந்திருந்தன. (14)

பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த பரிசுத்தமான இடங்கள் பூலோக ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த இரு பகுதிகளில் எடுத்துக்காட்டப்பட்டிருந்தன. அப்போஸ்தலனாகிய யோவானுக்கு பரலோக தேவாலயத்தின் ஒரு காட்சி காணும்படியாக அனுமதிக்கப்பட்டபோது, "ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன"– வெளி. 4:5. அவன் கண்ட தரிசனத்தின் மாதிரியாக அது இருந்தது. "வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்; சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது"–வெளி. 8:3. இங்கு அந்த தீர்க்கதரிசி பரலோகத்திலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தின் முதலாம் பகுதியைக்

காணும்படி அனுமதிக்கப்பட்டான். அங்கு ஏழு அக்கினி தீபங்களையும் தூபபீடத்தையும் அவன் கண்டான். பூமிக்குரிய ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த பொன் குத்துவிளக்கும் தூபபீடமும் அவைகளை எடுத்துக்காட்டியிருந்தன. "அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது;"—வெளி 11:19. அவன் திரைச்சீலைக்கு உள்ளாக மகா பரிசுத்தஸ்தலத்தைக் கண்டான். மோசேயினால் நிர்மாணிக்கப்பட்ட தேவனுடைய கற்பனைகளை உள்ளடக்கியிருந்த பரிசுத்தமான பெட்டகம் இதனால் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. (15)

இவ்வாறாக, இப்பொருள்பற்றி ஆராய்ந்தவர்கள், பரலோகத்தில் ஒரு பரிசுத்த ஸ்தலம் இருப்பதன் சான்றை வாக்குவாதம் செய்வதற்கு இடமின்றிக் கண்டனர். மோசே அவனுக்குக் காட்டப்பட்டதின் மாதிரியின்படியே பூமிக்குரிய ஆசரிப்புக்கூடாரத்தை உண்டு பண்ணினான். அதன் உண்மையான வடிவு, பரலோகத்திலுள்ள மெய்யான பரிசுத்தஸ்தலம் என்று பவுல் அறிவிக்கிறான். அதை பரலோகத்தில் கண்டதாக யோவான் சாட்சி பகருகிறான். (16)

தேவன் வாழுமிடமாகிய பரலோக தேவாலயத்தில், நீதியினாலும் நியாயத்தினாலும் அவரது சிங்காசனம் அமைக்கப்பட்டுள்ளது. மனித இனம் முழுவதையும் சோதிக்கின்ற பெரும் ஆட்சியின் உரிமையாக மகா பரிசுத்தஸ்தலத்தில் அவரது கற்பனை உள்ளது. கற்பனைகளுள்ள கற்பலகைகளை புனிதமாக உள்ளடக்கியுள்ள உடன்படிக்கைப்பெட்டி, கிருபாசனத்தால் மூடப்பட்டுள்ளது. இதன்முன் கிறிஸ்து அவரது இரத்தத்துடன் பாவியின் சார்பில் பரிந்து பேசுகிறார். இவ்வாறாக, மனித மீட்பின் திட்டத்தில் நீதியும் இரக்கமும் ஐக்கியமானது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்த ஐக்கியம் எல்லையற்ற ஞானம் ஒன்றினால் மட்டுமே திட்டமிடவும், எல்லயற்ற வல்லமை ஒன்றினால் மட்டுமே நிறைவேற்றக்கூடியதாகவும் உள்ளது. பரலோகம் முழுவதையும் வியப்பினாலும் போற்றுதலினாலும் நிறைப்பதாக இந்த ஐக்கியம் இருக்கிறது. பூமிக்குரிய ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள கேருபீன்கள் கிருபாசனத்தை பக்தியுடன் நோக்குவது, பரலோக சேனைகள் இரட்சிப்பின் பணியை தியானிக்கும் வாஞ்சையை எடுத்துக்காட்டுகின்றது. தேவ தூதர்களும் உற்றுப்பார்க்க வாஞ்சையாக உள்ள இரக்கத்தின் இரகசியமாக இது உள்ளது. மனந்திரும்புகின்ற பாவியை நீதிமானாக்கும்போது, அதாவது விழுந்துபோன இனத்துடனுள்ள உறவை அவர் புதுப்பிக்கும்போது, எண்ணிலடங்கா திரள்கூட்டமானவர்களைப் பாழ்க்கடிப்பின் குழியிலிருந்து உயர்த்துவதற்காக குனியும்போது, கறையற்ற அவரது வஸ்திரத்தினால் அவர்களைப் போர்த்தும்போது, ஒருபோதும் விழுந்து போகாத தேவ தூதர்களுடன் அவர்களை ஐக்கியப்படுத்தும்போது,

தேவனுடைய சமூகத்தில் என்றென்றும் வாழச்செய்யும்போது, தேவனை நீதியுள்ளவராகக் காண இயலும். (17)

"அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்; அவர் மகிமைபொருந்தினவராய், தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்; தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராயும் இருப்பார்; இவ்விரண்டின் நடுவாகச் சமாதானத்தின் ஆலோசனை விளங்கும்" (சக. 6:13) என்று மனிதனுக்காகக் கிறிஸ்துவின் பரிந்துபேசும் ஊழியம்பற்றி, அந்த அழகிய தீர்க்கதரிசனத்தில் காட்டப்பட்டுள்ளது. (18)

அவர் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். கிறிஸ்து தமது தியாகபலி, மத்தியஸ்தம் ஆகிய இரண்டிலும் தேவனுடைய சபையின் அஸ்திவாரமாகவும், அதைக் கட்டுபவராகவும் இருக்கிறார். "அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே. 2:20–22) என்று அப்போஸ்தலனாகிய பவுல் அவரைச் சுட்டிக்காட்டுகிறார். (19)

அவர் மகிமையுடையவராக இருப்பார். விழுந்துபோன இனத்தை மீட்டதின் மகிமை கிறிஸ்துவிற்குரியது. "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களறநம்மைக் கழுவி, ... அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (வெளி. 1:6) என்பது யுகங்கள் நெடுகிலும் மீட்கப்பட்டவர்களின் பாடலாக இருக்கும். (20)

அவர் தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார். தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராயும் இருப்பார். அவரது மகிமையின் சிங்காசனத்தின்மீது இப்பொழுது அல்ல, அவரது மகிமையின் ராஜ்யம் இன்னும் தோன்றவில்லை. அவரது மத்தியஸ்த ஊழியம் முடிவடையும்போது, கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது. இப்பொழுது கிறிஸ்து அவரது பிதாவாகிய தேவனுடைய சிங்காசனத்தில் அவருடன் ஆசாரியராக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்த அவர், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற அவர், சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். ஒருவன் பாவஞ்செய்வானானால், நமக்காகப் பிதாவினிடத்தில் பேசும் ஒருவர் இருக்கிறார். குத்தப்பட்டதும் நொறுக்கப்பட்டதுமான கறைதிரையற்ற அவரது

சரீரம் பரிந்துபேசக்கூடியதாக இருக்கிறது. காயப்பட்ட கரங்கள், குத்தப்பட்ட விலா, சிதைக்கப்பட்ட பாதங்கள், ஆகியவை இப்படிப்பட்ட எல்லையில்லா விலையால் வாங்கப்பட்ட மனிதனுக்காகப் பரிந்து பேசுகின்றன. (21)

அந்த இரண்டிற்கும் நடுவில், சமாதானத்தின் ஆலோசனை விளங்கும். இழக்கப்பட்டுப்போன இனத்திற்கு இரட்சிப்பின் ஊற்றாக உள்ள பிதாவின் அன்பு, குமாரனின் அன்பைவிடக் குறைந்ததல்ல. உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்ளுவேன். பிதா தாமே உங்களை நேசிக்கிறார். தேவன், இயேசு கிறிஸ்துவைக்கொண்டு, உலகத்தை ஒப்புரவாக்கியிருந்தார். உயரே உள்ள பரிசுத்தஸ்தலத்தில் உள்ள ஊழியத்தில் அவர்களிருவருக்கும் இடையில் சமாதானத்தின் ஆலோசனை விளங்கும். “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்”—ஏசாயா 53:4; எபி. 4:15; 2:18; யோவான் 2:1; 16:26,27; 2 கொரி. 5:19; யோவான் 3:16. (22)

பரிசுத்தஸ்தலம் என்றால் என்ன? என்னும் கேள்விக்கு வேதாகமத்தில் தெளிவான பதில் உள்ளது. வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பரிசுத்தஸ்தலம் என்னும் செல்லானது, முதலாவதாக மோசேயினால் கட்டப்பட்ட ஆசரிப்புக்கூடாரத்தைக் குறிக்கிறது. இது பரலோகத்தில் இருந்ததின் மாதிரியாக இருந்தது. இரண்டாவதாகப் பரலோகத்திலுள்ள மெய்யான ஆசரிப்புக்கூடாரத்தை பூமியிலிருந்த பரிசுத்தஸ்தலம் சுட்டிக்காட்டியது. கிறிஸ்துவின் மரணத்தின் சாயலாக இருந்த ஆராதனை முறைகள் முடிவடைந்தன. பரலோகத்திலுள்ள மெய்யான ஆசரிப்புக்கூடாரம் புதிய உடன்படிக்கையின் ஆசரிப்புக்கூடாரமாக உள்ளது. இந்த அமைப்பில், தானியேல்8:14–ல் உள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறினது. அது குறிப்பிடும் பரிசுத்தஸ்தலம், புதிய உடன்படிக்கையின் பரிசுத்தஸ்தலமாகத்தான் இருக்கவேண்டும். 1844–ல் 2300 நாட்களின் முடிவில், அநேக நூற்றாண்டுகளாக, பூமியில் பரிசுத்தஸ்தலம் இருக்கவில்லை. இவ்வாறாக, “இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்” (தானி. 8:14) என்பது கேள்விக்கிடமற்ற விதத்தில் பரலோகத்திலுள்ள பரிசுத்தஸ்தலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. (23)

ஆனாலும், பரிசுத்தஸ்தலம் சுத்தகரிக்கப்படும் என்றால் என்ன? என்னும் மிகமுக்கியமான கேள்விக்கு, விடையைக் காணவேண்டியதாக இருக்கிறது. அதாவது பூமிக்குரிய பரிசுத்தஸ்தலத்தில் அது தொடர்பான ஆராதனை முறைகள் நிகழ்ந்தன என்று பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்கள் கூறுகின்றன. சுத்திகரிக்கப்படவேண்டியது ஏதாவது பரலோகத்தில் இருக்கமுடியுமா? எபி.

9-ம் அதிகாரத்தில், பூமிக்குரிய பரிசுத்தஸ்தலம், பரலோக பரிசுத்தஸ்தலம் ஆகிய இரண்டும் சுத்திகரிக்கப்படுதல் மிகத் தெளிவாகப் போதிக்கப்பட்டுள்ளது. நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாயிருந்தது. பரலோகத்தில் உள்ளவைகளோ, இவைகளிலும் விசேஷித்த பலிகளினாலே—விலைமதிப்புவாய்ந்த கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படவேண்டியதாமே—எபி. 9:22,23. சாயலும் உண்மையுமாயிருந்த இரு ஆராதனை முறைகளிலும், சுத்திகரிப்பு இரத்தத்தினால் நிறைவேறியது. முதலாவதில், மிருகங்களின் இரத்தத்தினாலும், பின்னானதில் கிறிஸ்துவின் இரத்தத்தினாலும் சுத்திகரிக்கப் பட்டன. "இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது" என்னும் காரணத்தினால்தான் இந்த சுத்திகரிக்கப்படுதல் ஏன் செயல்படுத்தப்பட வேண்டும் என்று பவுல்கூறுகிறார். மன்னிப்பு அல்லது பாவத்தை தூரமாக விலக்குதல் என்பதுதான் நிறைவேற்றப்பட வேண்டிய ஊழியமாகும். ஆனால் பரலோகத்திலோ அல்லது பூமியிலோ பரிசுத்த ஸ்தலத்துடன் சம்பந்தப்பட்டதாகப் பாவம் எப்படி இருக்கமுடியும்? இதனை அடையாளமாக இருந்த ஆராதனை முறைகளில் இருந்து கற்றுக்கொள்ளலாம். ஏனெனில், பூமியில் ஊழியம்செய்த ஆசாரியர்களின் ஆராதனை பரலோகத்தில் உள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது (எபி. 8:5) என்பதைக் கவனிக்கவும். (24)

பூலோக ஆசரிப்புக்கூடார ஊழியமானது, இருபகுதிகளை உடையதாக இருந்தது. ஆசாரியர்கள் பரிசுத்தஸ்தலத்தில் நாள்தோறும் ஊழியம்செய்தனர். ஆனால் பிரதான ஆசாரியன் பாவநிவாரணம் செய்தல் என்னும் சிறப்பான ஒரு ஆராதனையை, பரிசுத்தஸ்தலத்தைச் சுத்திகரிக்கும் ஒரு ஊழியத்தை, வருடத்திற்கு ஒரு தடவை மகா பரிசுத்தஸ்தலத்தில் செய்தான். பாவத்திற்காக மனம் வருந்தின பாவி, நாள்தோறும் தனது காணிக்கையை (பலியை) ஆசரிப்புக்கூடார வாசலுக்குக் கொண்டுவந்தான். அங்கு பலியிடப்படும் மிருகத்தின் தலையின்மீது அவன் தன் கையை வைத்து, பாவத்தை அறிக்கை செய்து, இவ்வாறாக, உருவகமாக, தன் பாவங்களை அவன் தன்னிடம் இருந்து குற்றமில்லாத அந்த மிருகத்தின்மீது சுமத்துவான், அதன்பின் அந்த மிருகம் அடிக்கப்படும். இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்று அப்போஸ்தலன் கூறுகிறான். மாமிசத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது.—லேவி. 17:11. மீறப்பட்ட தேவனுடைய பிரமாணம் மீறினவனின் உயிரைக் கேட்டது. இழக்கப்பட்டுப்போன பாவியின் உயிரைச் சுட்டிக்காட்டி, அவனது குற்றத்தை சுமந்த பலிமிருகத்தின் இரத்தம், ஆசாரியனால் எடுத்துச்செல்லப்பட்டது. பரிசுத்த ஸ்தலத்திலிருந்த திரைச்சீலைக்குப் பின்னால், உள்ளே பாவியினால் மீறப்பட்ட கற்பனைகள்

வைக்கப்பட்டிருந்த பெட்டி இருந்தது. இந்தச் சடங்கினால், அந்த இரத்தத்தின் மூலமாக அந்தப் பாவம் பாவனையாக பரிசுத்தஸ்தலத்திற்கு மாற்றப்படுகிறது. சில காரியங்களில், அந்த இரத்தம் பரிசுத்தஸ்தலத்திற்குள் எடுத்துச்செல்லப்படாமலிருந்தது. ஆனால் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சபையின் அக்கிரமத்தைச் சுமந்து தீர்ப்பதற்கு... அதை உங்களுக்குக் கொடுத்தாரே! (லேவி. 10:17) என்று மோசே ஆரோனின் குமாரருக்குக் கட்டளையிட்டிருந்தபடி, அந்த மாமிசம் சாப்பிடப்படவேண்டியதாக இருந்தது. இந்த இரண்டு சடங்குகளும் குற்றம் புரிந்தவனிடமிருந்து பாவமானது பரிசுத்தஸ்தலத்திற்கு மாற்றப்பட்டதை அடையாளப்படுத்தியது. (25)

இப்படிப்பட்ட ஊழியம் வருடம் முழுவதிலும் நாள்தோறும் நடைபெற்றது. இவ்விதமாக இஸ்ரவேலர்களின் பாவங்கள் பரிசுத்தஸ்தலத்திற்கு மாற்றப்படுவதினால், அவைகளை நீக்குவதற்கு ஒரு விசேஷமான ஊழியம் தேவையாக இருந்தது. பரிசுத்தஸ்தலத்தின் ஒவ்வொரு பகுதிக்காகவும் ஒரு பாவ நிவாரணம்செய்யும்படி தேவன் கட்டளையிட்டார். “இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற்காகவும் அப்படியே செய்யக்கடவன்.” “ தன் விரலினால் அந்த இரத்தத்தில் எடுத்து, ஏழுதரம் அதின்மேல் தெளித்து, அதை இஸ்ரவேல் புத்திரரின் தீட்டுக்கள் நீங்கச் சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தக்கடவன்” – லேவி. 16:16,19. (26)

வருடத்தில் ஒரு தடவை பாவநிவாரணநாள் என்னும் பெரிய நாளில், பிரதான ஆசாரியன் பரிசுத்தஸ்தலத்தை சுத்திகரிப்பதற்காக மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிப்பான். ஆண்டு முழுவதிலும் நடைபெற்ற ஊழியத்தை இந்த ஊழியம் நிறைவுபடுத்தியது. பாவநிவாரண நாளில் இரண்டு வெள்ளாடுகள் ஆசரிப்புக்கூடாரத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அவைகளின் பேரில் கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காட்டுக்காக ஒரு சீட்டுமாக சீட்டுப்போடப்பட்டன. எந்த வெள்ளாட்டின்மீது கர்த்தருக்கான சீட்டு விழுந்ததோ, அந்த ஆடு மக்களுக்காகப் பாவநிவாரண பலியாக அடிக்கப்பட்டது. ஆசாரியன் அதன் இரத்தத்தை திரைச்சீலைக்குள் கொண்டுவந்து, அதைக் கிருபாசனத்தின்மேலும், கிருபாசனத்திற்கு முன்பாகவும் தெளிக்கவேண்டும். அந்த இரத்தம் திரைச்சீலைக்கு முன்னால் இருந்த தூபபீடத்தின்மீதும் தெளிக்கப்படவேண்டும். (27)

“அவன் இப்படிப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் பிராயச்சித்தஞ்செய்து தீர்ந்தபின்பு, உயிரோடிருக்கிற

வெள்ளாட்டுக்கடாவைச் சேரப்பண்ணி, அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடக்கடவன். அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்துகொண்டு, குடியில்லாத தேசத்துக்குப் போவதாக"—லேவி. 16:8,21,22. போக்காடாக விடப்பட்ட அந்த வெள்ளாட்டுக்கடா இஸ்ரவேலரின் பாளயத்திற்குள் இனி ஒருபோதும் வராது. அதை வனாந்திரத்திற்குள் நடத்திச்சென்ற மனிதன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து ஸ்நானம்செய்து பின்பு பாளயத்திற்குத் திரும்புவான். (28)

இந்தச் சடங்காச்சாரங்கள் அனைத்தும் தேவனுடைய பரிசுத்தத்தையும் அவர் பாவத்தை வெறுப்பதையும் இஸ்ரவேலர்களுக்கு உணர்த்தும்படி நியமிக்கப்பட்டது. மேலும் அவர்களால் தங்களைக் கறைப்படுத்தாமல் பாவத்துடன் தொடர்புகொள்ளமுடியாது என்பதையும் உணர்த்தியது. இந்தப் பாவநிவாரண ஊழியம் நடைபெறும்போது, ஒவ்வொரு ஆத்துமாவும் தன்னைத் தாழ்த்தியாக வேண்டும். சகலவிதமான அலுவல்களையும் ஒதுக்கிவைத்துவிட்டு, இஸ்ரவேல் சபை முழுவதும் அந்த நாளை தேவனுக்கு முன்பாக பக்திவிநயமான தாழ்மையிலும், ஜெபத்துடனும் விசுவாசத்துடனும் இருதயத்தை ஆழமாகச் சோதிப்பதிலும் செலவிடவேண்டும். (29)

சாயலாக இருந்த அந்த ஆராதனை முறையினால், முக்கியமான சத்தியங்கள் போதிக்கப்பட்டன. பாவிக்குப் பதிலாக ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அந்த பலிப்பொருளின் இரத்தத்தினால் பாவம் நீக்கப்படவில்லை. இவ்விதமாக அது பரிசுத்தஸ்தலத்திற்கு மாற்றப்படும் ஒரு உபாத்தியாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. இரத்தத்தைச் செலுத்துவதின்மூலமாகப் பாவி கற்பனையின் அதிகாரத்தை ஒப்புக்கொண்டு, மீறுதலினால் உண்டான அவனுடைய குற்றத்தை அறிக்கை செய்து, வரவிருக்கும் மீட்பரின் மீதுள்ள விசுவாசத்தின்மூலமாக தனக்குப் பாவமன்னிப்பு வேண்டும் என்ற அவனது விருப்பத்தை வெளிக்காட்டினான். ஆனால் அவன் இன்னும் பாவத்தின் பழியிலிருந்து பூரணமான விடுதலை பெறாதவனாகவே இருந்தான். பாவநிவாரணநாளில் பிரதான ஆசாரியன் சபைக்கான ஒரு பலியை எடுத்துக்கொண்டு, மகா பரிசுத்தஸ்தலத்திற்குள், பலியின் இரத்தத்துடன் சென்று, கற்பனைக்கு மேலாக உள்ள கிருபாசனத்தின்மீது அதன் உரிமைகளைத் திருப்திப்படுத்துவதற்காகத் தெளிப்பான். அதன்பின்,

மத்தியஸ்தன் என்னும் அவனது தன்மையில், பாவங்களைத் தன்மீது எடுத்துக்கொண்டு, பரிசுத்தஸ்தலத்தில் இருந்து செல்லுவான். போக்காட்டின் தலையின்மீது தன் கையை வைத்து, அந்தப் பாவங்கள் அனைத்தையும் அதன்மீது அறிக்கை செய்து, இவ்வாறான பாவனையினால், அவன் அந்தப் பாவங்களைத் தன்மீதிருந்து அந்த வெள்ளாட்டுக்கடாவின் (சாத்தான்) மீது மாற்றுவான். பின்பு, அந்த வெள்ளாட்டுக்கடா அவைகளைச் சுமந்து, தூரமாகச் செல்லும். அவை மக்களிடமிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டன என்று கருதப்பட்டது. (30)

அப்படிச் செய்யப்பட்டிருந்த ஆராதனை முறைகள் பரலோகத்தில் உள்ளவைகளுக்குச் சாயலானவைகளாக இருந்தன. (எபி. 9:23). எவைகள் பூலோக பரிசுத்தஸ்தல ஊழியத்தில் சாயலாக இருந்தனவோ அவைகள் பரலோக பரிசுத்தஸ்தல ஊழியத்தில் நிஜமானவையாகச் செய்யப்படுகின்றன. நமது இரட்சகர் பரலோகத்திற்கு எழுந்தருளிச்சென்றபின், நமது பிரதான ஆசாரியராக இருக்கும் ஊழியத்தைத் தொடங்கினார். "அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" (எபி. 9:24) என்று பவுல்கூறுகிறார். (31)

திரைச்சீலைக்கு முன்பாக உள்ள பரிசுத்தஸ்தலத்தின் முதல் பகுதியில் வருடம் முழுவதிலுமாக ஆசாரியன் செய்த ஊழியமானது வெளிப்பிராகாரத்திலிருந்து பரிசுத்தஸ்தலத்தை வேறுபடுத்தும் வாசலாக அமைந்திருந்து, கிறிஸ்து அவரது பரமேறுதலைத் தொடர்ந்து ஊழியத்தில் பிரவேசித்ததை எடுத்துக்காட்டுகிறது. பாவநிவாரண பலியாக தேவனுக்குமுன் இரத்தத்தைப் படைப்பதும், இஸ்ரவேலர்களின் ஜெபங்களுடன் சேர்ந்து எழுந்த தூபம் காட்டுதல் ஆகியவை, ஆசாரியன் தன் அன்றாட ஊழியத்தில் செய்யும் பணியாக இருந்தது. அப்படியே கிறிஸ்துவும் பாவிகளின் சார்பாகத் தமது இரத்தத்துடன் பிதாவின் சமுகத்தில் பரிந்துபேசுவதுடன், குற்ற உணர்வினை உடைய விசுவாசிகளின் ஜெபங்களுடன் தமது விலைமதிப்புமிக்க நீதியான சுதந்த வாசனையை அவரது சமுகத்தில் படைக்கிறார். பரலோக பரிசுத்தஸ்தலத்தின் முதலாம் பகுதியில் நடைபெற்ற ஊழியம் இதுவே. (32)

கிறிஸ்து அவரது சீடர்களின் பார்வையிலிருந்து உயரே எழுந்தருளினபோது, கிறிஸ்துவின் சீடர்களின் விசுவாசமும்அங்கு அவரைப் பின்தொடர்ந்தது. "அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. நமக்கு

முன்னோடினவராகிய இயேசு ... நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.” “வெள்ளாட்டுக்கடா, இளங் காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்” (எபி. 6:19,20 9:12) என்று பவுல் கூறியபடி அவர்களது நம்பிக்கை இதை மையமாகக் கொண்டிருந்தது. (33)

பரிசுத்தஸ்தலத்தின் முதலாம்பகுதியில், பதினெட்டு நூற்றாண்டுகளாக இந்த ஊழியம் தொடர்ந்து நடைபெற்றது. பாவத்திற்காக வருந்தும் பாவியின் சார்பில் பரிந்துபேசின கிறிஸ்துவின் இரத்தம் அவர்களது பாவத்திற்கு மன்னிப்பையும் பிதாவின் அங்கிகரிப்பையும் பெற்றிருந்தபோதிலும், அவர்களது பாவங்கள் இன்னும் ஆவணங்களாகிய புத்தகங்களிலேயே இருந்தன. சாயலாக இருந்த ஆராதனை முறையில் வருடத்தின் முடிவில் ஒரு பாவநிவாரணப் பணி இருந்ததுபோல, மனிதர்களின் மீட்பிற்கான கிறிஸ்துவின் ஊழியம் முடிவடைவதற்குமுன், பரிசுத்தஸ்தலத்திலிருந்து பாவத்தை நீக்குகின்ற ஒரு பாவநிவாரணப் பணி உள்ளது. இந்த ஆராதனை 2300 நாட்கள் முடிவடைந்தபோது ஆரம்பமாயிற்று. தானியேல் தீர்க்கதரிசியால் முன்னுரைக்கப்பட்டதுபோல், இந்த நேரத்தில் நமது பிரதான ஆசாரியர் அவரது பக்திவிநயமான ஊழியத்தின் கடைசிப்பகுதியைச் செய்வதற்கு –பரிசுத்தஸ்தலத்தை சுத்திகரிப்பதற்கு, மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்தார். (34)

பண்டைய காலத்தில் ஜனங்களின் பாவங்கள் விசுவாசத்தினால் பாவநிவாரண பலியின்மீது வைக்கப்பட்டு, அதன் இரத்தத்தின் மூலமாக பரிசுத்தஸ்தலத்திற்குள் மாற்றப்பட்ட சாயலைப்போல, புதிய உடன்படிக்கையின்படி பாவங்களுக்காக வருந்துபவர்களின் பாவங்கள், விசுவாசத்தினால் கிறிஸ்துவின்மீது வைக்கப்பட்டு, உண்மையில் பரிசுத்தஸ்தலத்திற்குள் மாற்றப்படுகிறது. பாவத்தினால் கறைப்பட்டிருந்த பரிசுத்தஸ்தலத்திலிருந்து அவைகளை நீக்குவதினால், சாயலாயிருந்த பூமிக்குரிய பரிசுத்தஸ்தலத்தின் சுத்திகரிக்கப்படுதல் நிறைவேறினதுபோல, உண்மையாகவே பரலோக பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படுதல், அங்கு பதிவுசெய்யப்பட்ட பாவங்களை நீக்குவதினால் அல்லது துடைத்து அழிப்பதினால் நிறைவேற்றப்பட்டாக வேண்டும். ஆனால் இது நிறைவேற்றப் படுவதற்குமுன், பாவத்தின் மீதுள்ள மனஸ்தாபத்தினாலும் நன்மைகளுக்குத் தகுதி உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்க அங்குள்ள புத்தகங்களில் உள்ள ஆதாரங்கள் சோதிக்கப்பட்டாக வேண்டும். எனவே, பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படுதல் என்பது ஒரு விசாரணையை

உள்ளடக்கியதாக—ஒரு நியாயத்தீர்ப்பை உடையதாக உள்ளது. கிறிஸ்து அவரது ஜனங்களை மீட்டுக்கொள்ள வருவதற்கு முன்பாக, இந்த வேலை செய்யப்பட்டாகவேண்டும். ஏனெனில் அவர் வரும்போது அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாக அவர் அளிக்கும் பலன் அவரோடே கூட வருகிறது. (35)

இவ்வாறாக, தீர்க்கதரிசன வார்த்தையின் ஒளியை பின் பற்றியவர்கள், 2300 நாட்களின் முடிவில் –1844 –ல், கிறிஸ்து பூமிக்கு வருவதற்குப் பதிலாக அவரது வருகையின் ஆயத்தத்திற்கென்று பாவநிவாரண ஊழியத்தின் கடைசிப்பகுதியை நிறைவேற்ற பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்தார் என்பதைக் கண்டனர். (36)

பாவநிவாரணபலியானது கிறிஸ்துவை ஒரு பலியாகச் சுட்டிக்காட்டியதுபோல, கிறிஸ்து மத்தியஸ்தராக இருப்பதைப் பிரதான ஆசாரியன் எடுத்துக்காட்டியதுபோல, போக்காடு சாத்தானைச் சாயலாக எடுத்துக்காட்டியதுபோல, உண்மையாக பவத்திற்காக வருந்துபவர் களின் பாவங்கள் முடிவில், அதின் ஆக்கியோனான சாத்தான்மீது சுமத்தப்படும். பாவநிவாரணபலியின் புண்ணியத்தினால் பிரதான ஆசாரியன் பரிசுத்தஸ்தலத்திலிருந்த பாவங்களை நீக்கியபோது, அவன் அவைகளைப் போக்காட்டின்மீது சுமத்தினான். கிறிஸ்து அவரது ஊழியத்தின் முடிவில் அவரது சொந்த இரத்தத்தின் புண்ணியத்தினால் பரலோக பரிசுத்தஸ்தலத்திலிருந்து பாவங்களை நீக்கும்போது, இறுதி நியாயத்தீர்ப்பு நடத்தப்படும்போது, அதற்கான முடிவான தண்டனையைச் சுமக்கவேண்டியவனான சாத்தானின்மீது அவைகளை வைப்பார். போக்காடானது ஒருவரும் குடியிராத பாழான இடத்திற்கு, இஸ்ரவேல் சபைக்கு மறுபடியும் வரமுடியாத விதத்தில், வெகுதொலைவில் விடப்பட்டது. அதைப்போலவே சாத்தானும் என்றென்றைக்குமாக, தேவ சமுகத்தில் இருந்தும், அவரது ஜனங்களிடத்திலிருந்தும் அகற்றப்படுவான். பாவமும் பாவிகளும் இறுதியாக அழிக்கப்படும்போது, அவன் இல்லாதவனாக அழித்தொழிக்கப்பட்டு நித்தியமாக நீக்கப்படுவான். (37) ★

# 24

# இயேசு கிறிஸ்துவே நமது மத்தியஸ்தர்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 423–432)**

கி.பி. 1844 –ல் நிகழ்ந்த ஏமாற்றத்தின் இரகசியத்தை திறந்துவைக்கும் திறவுகோலாகப் பரிசுத்தஸ்தலம் என்னும் பொருள் இருந்தது. அது தேவனுடைய ஜனங்கள் ஆற்றவேண்டிய நிகழ்காலப் பணியையும், நிலையையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து வெளிக்காட்டியதினால், இசைவும் தொடர்புமுள்ள பூரணமான ஒரு சத்தியத்தின் அமைப்பை காட்சிக்குத் திறந்து, அட்வெந்து இயக்கத்தை தேவனுடைய கரம் இயக்கியது என்பதைக் காட்டிக்கொண்டிருக்கிறது. இயேசுவின் சீடர்கள் வேதனையும் ஏமாற்றமும் நிறைந்த பயங்கரமான இரவிற்குப்பின் கர்த்தரைக் கண்டபோது, மகிழ்ச்சியடைந்ததைப்போன்று, அவரது வருகைக்காக விசுவாசத்துடன் நோக்கினவர்கள் இப்போது மகிழ்ந்தனர். அவரது ஊழியக்காரர்களுக்குப் பரிசளிப்பதாக அவர் மகிமையில் வருவதை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். அவர்களது நம்பிக்கையில் ஏமாற்றம் உண்டானபோது, இயேசுவைப்பற்றிய பார்வையை இழந்தனர். கல்லறையின் அருகில் மரியாளுடன் “கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டுபோய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை” என்றனர். பிரதான ஆசாரியராகவும் அவர்களது அரசராகவும் விடுதலை வழங்குபவராகவும் விரைவில் தோன்ற இருக்கும் அவரை, இப்பொழுது அவர்கள் மகா பரிசுத்தஸ்தலத்தில் மறுபடியும் கண்டனர். கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகியவைகளை பரிசுத்தஸ்தலத்திலிருந்து உண்டான ஒளி வெளிச்சமாக்கியது. கர்த்தர் தமது தவறாத தெய்வீக ஏற்பாட்டினால் அவர்களை நடத்தினார் என்பதை அவர்கள் அறிந்தனர். சீடர்களைப் போலவே அவர்களும் அவர்கள் எடுத்துச்சென்ற தூதைப் புரிந்துகொள்ளாமலிருந்தபோதிலும், அது எல்லா

வகையிலும் சரியானதாக இருந்தது. அந்தத் தூதை அறிவித்ததினால் அவர்கள் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றினார். கர்த்தருக்குள் அவர்களது ஊழியம் வீணாக இருக்கவில்லை. அவர்கள் மறுபடியும் ஒரு ஜீவனுள்ள விசுவாசத்திற்குள் பிறந்து, சொல்லிமுடியாததும் முழுவதுமாக மகிமையை உடையதுமான சந்தோஷத்தில் களிகூர்ந்தனர். (1)

“இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்” “தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது:” (தானி. 8:14; வெளி. 14:6) என்கிற இரண்டு தீர்க்கதரிசனங்களும் கிறிஸ்து தம்முடைய ஜனங்களின் மீட்பிற்காகவும் துன்மார்க்கரை அழிப்பதற்காகவும் வருவதைக் காட்டாமல், பரலோக மகா பரிசுத்தஸ்தலத்தில் நுட்ப நியாயவிசாரணையில் கிறிஸ்து செய்யும் ஊழியத்தைச் சுட்டிக்காட்டினது. தீர்க்கதரிசனக் காலக்கணக்குகளில் தவறு இல்லை. ஆனால் 2300 நாட்களின் முடிவில் நடைபெற இருந்த நிகழ்ச்சியை அறிவதில் தவறு இருந்தது. அந்தத் தவறின் மூலமாக, விசுவாசிகள் ஏமாற்றத்தை அனுபவித்தனர். ஆனாலும் தீர்க்கதரிசனத்தினால் முன்னுரைக்கப்பட்டிருந்த அனைத்தும், அவர்கள் எதிர்பார்க்க வேண்டியவைகளாயிருந்த வேதவாக்கியங்கள் அனைத்தும் நிறைவேறின. அவர்களது நம்பிக்கையின் தோல்வியைப்பற்றி, அவர்கள் புலம்பிக்கொண்டிருந்த அதே நேரத்தில், அந்தத் தூதின் மூலமாக முன்னறிவிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி நடந்தது. அது கர்த்தர் அவரது வேலைக்காரர்களுக்குப் பரிசளிக்கும்படி தோன்றுவதற்கு முன்பாக நிறைவேறியாக வேண்டும். (2)

அவர்கள் எதிர்பார்த்ததுபோல் கிறிஸ்து பூமிக்கு வராமல், பொருட்பாடங்களின் மூலமாகக் காட்டப்படும்படி பரலோக தேவாலயத்திலுள்ள மகா பரிசுத்தஸ்தலத்திற்கு வந்தார். “இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்” (தானி. 7:13) என்ற அந்த நேரத்தில் சம்பவிப்பது தானியேல் தீர்க்கதரிசியால் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. (3)

“நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்”—மல்கியா 3:1. இதோ

வருகிறார் என்று இந்த வருகையைப்பற்றி மல்கியா தீர்க்கதரிசியினாலும் முன்னுரைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் அவரது ஆலயத்திற்கு வருவது அவரது ஜனங்களுக்கு எதிர்பாராததாகவும் திடீரென்றுமாக இருந்தது. “தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்” (2 தெச. 1:7,8) என்றபடி பூமிக்கு வருவதை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். (4)

ஆனால் ஜனங்கள் தங்களுடைய கர்த்தரைச் சந்திக்க இன்னும் ஆயத்தமாக இல்லை. அவர்களுக்காக இன்னும் நிறைவேற்றப்படவேண்டிய ஒரு ஆயத்தம் என்னும் பணி இருந்தது. பரலோக தேவ ஆலயத்திற்கு அவர்களது மனங்களை நடத்தும் ஒளி கொடுக்கப்படவேண்டியதாக இருந்தது. விசுவாசத்தினால் அவர்கள் தங்களது பிரதான ஆசாரியருடன் ஊழியத்தில் அவரைப் பின்தொடரவேண்டியதாக இருந்தபோது, புதிய கடமைகள் வெளிப்படுத்தப்பட்டாக வேண்டும். வேறொரு எச்சரிப்பு, போதனை சபைக்குக் கொடுக்கப்படவேண்டியதாக இருந்தது. (5)

“அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும் படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்” (—மல். 3:2,3) என்று தீர்க்கதரிசி கூறுகிறான். பரலோக பரிசுத்த ஸ்தலத்திலுள்ள கிறிஸ்துவின் பரிந்துபேசுதல் நின்றுவிடும்போது, பரிசுத்தமான ஒரு தேவனின் பார்வையில் நின்றாகவேண்டும். இரத்தம் தெளிக்கப்படுதலினால் பாவத்திலிருந்து தூய்மை அடைந்தவையாகவும் மாறிட வேண்டும். தீமையுடனுள்ள போராட்டத்தில் அவர்கள் தேவனுடைய கிருபையினாலும் தங்களது அக்கறைமிக்க சுயமுயற்சியினாலும் வெற்றியடைந்தவர்களாக இருக்கவேண்டும். நுட்ப நியாய விசாரணை பரலோகத்தில் நடந்துகொண்டிருக்கும்போது, பாவத்திற்காக வருந்துகின்ற விசுவாசிகளின் பாவங்களானது பரிசுத்தஸ்தலத்திலிருந்து நீக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது, விலகுதல் என்னும் தூய்மைப்படுத்துதல் என்பதான ஒரு முக்கியமான பணி உள்ளது. வெளி. 14 —ம் அதிகாரத்தில் அந்தப் பணி என்னவென்று மிகத் தெளிவாக நமக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. (6)

அந்தப் பணி நிறைவேறும்போது, கிறிஸ்துவின் அடியார்கள் அவரது வருகைக்கு ஆயத்தமாக இருப்பார்கள். “அப்பொழுது பூர்வநாட்களிலும் முந்தின வருஷங்களிலும் இருந்ததுபோல, யூதாவின் காணிக்கையும், எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்”–மல்3:4. அப்பொழுது கர்த்தர் தமது வருகையின்போது தாம் ஏற்றுக்கொள்ள இருக்கும் சபையானது “கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக” இருக்கும்–எபே 5:27. “அப்பொழுது அவள் சந்திரனைப்போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமுள்ளவளாய், அருணோதயம்போல்” இருப்பாள்–உன்னதப்பாட்டு 6:10. (7)

கர்த்தர் தமது ஆலயத்திற்கு வருவதைப்பற்றி மட்டுமன்றி, அவரது இரண்டாம் வருகையைப்பற்றியும் அவர் நியாயத்தீர்ப்பை நடத்துவதற்காக வருவதைப்பற்றியும் மல்கியாவும் இவ்விதமாக முன்னுரைக்கின்றான். “நான் நியாயத்தீர்ப்புச் செய்யும்படி உங்களிடத்தில் வந்து, சூனியக்காரருக்கும் விபச்சாரருக்கும் பொய்யாணை இடுகிறவர்களுக்கும், எனக்குப் பயப்படாமல் விதைவைகளும் திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக்கொள்ளுகிறவர்களுக்கும், பரதேசிக்கு அநியாயஞ்செய்கிறவர்களுக்கும் விரோதமாய்த் தீவிரமான சாட்சியாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” –மல். 3:5. இதே காட்சியைப்பற்றிக் குறிப்பிடும்போது, யூதா இவ்விதமாகக் கூறுகிறான். “இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்க ளோடுங்கூடக் கர்த்தர் வருகிறார்” – யூதா 14,15. இந்த வருகையும் கர்த்தர் தமது ஆலயத்திற்கு வருவதும் இரு வேறுபட்ட தெளிவான நிகழ்ச்சிகளாகும். (8)

தானி. 8:14; 7:13 –ல் நமது பிரதான ஆசாரியராகக் கிறிஸ்து பரிசுத்தஸ்தலத்தை சுத்திகரிப்பதற்காக மகா பரிசுத்தஸ்தலத்திற்கு வருவது காட்சிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுபோல், மனுஷகுமாரன் நீண்ட ஆயுசுள்ளவர் மட்டுமாக வருவதும் கர்த்தர் தமது ஆலயத்திற்கு வருவதைப்பற்றி மல்கியாவினால் முன்னுரைக்கப்பட்டுள்ளதும், அதே நிகழ்ச்சியை விளக்குபவையாக உள்ளன. கல்யாணத்திற்கு மணவாளன் வருவதாக மத்தேயு 25 –ம் அதிகாரத்திலுள்ள பத்துக் கன்னிகைகளைப் பற்றிய கிறிஸ்துவின் உவமையில் கூறப்பட்டுள்ளதுங்கூட இதையே எடுத்துக்காட்டுகின்றன. (9)

இதோ, மணவாளன் வருகிறார் என்னும் அறிவிப்பு 1844 –ம் ஆண்டின் கோடைகாலத்திலும் இலையுதிர்காலத்திலும் கொடுக்கப்பட்டது. அப்பொழுது புத்தியுள்ளவர்களும் புத்தியில்லாதவர்களுமாகிய இரு வகுப்பினர் உருவானார்கள். மணவாளனைச் சந்திப்பதற்கு அக்கரையுடன் ஆயத்தம் செய்துகொண்டிருந்து, மகிழ்ச்சியுடன் ஒரு வகுப்பினர் நோக்கிக்கொண்டிருந்தனர். பயத்தினால் ஆட்கொள்ளப்பட்டு, உணர்ச்சி களினால் செயல்பட்டு, சத்தியத்தைப்பற்றிய தத்துவ விளக்கத்தினால் திருப்தி அடைந்தவர்களாக இருந்து, ஆனால் தேவனுடைய கிருபை இல்லாத அநாதைகளாக மற்றொரு பிரிவினர் இருந்தனர். அந்த உவமையில் ஆயத்தமாயிருந்தவர்கள் அவருடன் கல்யாண வீட்டிற்குள் சென்றனர். இங்கு காட்சிக்குக் கொண்டுவரப்படும் மணவாளனின் வருகை திருமணத்திற்குமுன் நிகழுகிறது. கிறிஸ்து தமது இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளுவதை இந்தக் கலியாணம் எடுத்துக்காட்டுகிறது. அந்த இராஜ்யத்தின் தலைநகரமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள பரிசுத்த நகரமாகிய எருசலேம் மணவாட்டி— ஆட்டுக்குட்டியானவரின் மனைவி என்று அழைக்கப்படுகிறாள். (10)

“நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி, பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான்”–வெளி. 21:9,10 அப்படியானால் பரிசுத்த நகரம் மணவாட்டியையும், மணவாளனைச் சந்திக்கச்செல்லும் கன்னிகைகள் சபையையும், அடையாளமாகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. வெளி.19:9. அவர்கள் விருந்தினர்களாக இருந்திருந்தால், அவர்களை மணவாட்டி என்று எடுத்துக்காட்டுவதாகக் கூறிட இயலாது. தானியேல் தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டுள்ளபடி, கிறிஸ்து பரலோகத்தில் உள்ள நீண்ட ஆயுசுள்ளவரிடமிருந்து கர்த்தத்துவத்தையும் மகிமையையும் ராஜரீகத்தையும் பெற்றுக்கொள்ளுவார். தானி. 7:14. மணவாளனுக்காக அலங்காரம்செய்யப்பட்ட மணவாட்டியைப் போன்றே அவருடைய இராஜ்யதின் தலைநகரமாகிய புதிய எருசலேமை அவர் பெற்றுக்கொள்ளுவார். (வெளி. 21:2; தானி 7:14). இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டபின், அவர் ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் அவரது மகிமையுடன் அவரது மக்களின் மீட்பிற்காக வருவார். அவர்கள் அவருடைய பந்தியில் போஜபானம் பண்ணும்படி ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருக்கும்படி(லூக்கா 22:30; மத்தேயு 8:11) ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்குகொள்ள வருவார்கள். (10)

கி.பி.1844–ம்ஆண்டின் கோடைகாலத்தில் இதோ, மணவாளன் வருகிறார் என்று கொடுக்கப்பட்ட அறிவிப்பு , கர்த்தருடைய விரைவான வருகையை எதிர்பார்க்கும்படி ஆயிரக்கணக்கானவர்களை நடத்தினது. குறிக்கப்பட்ட நேரத்தில், மக்கள் எதிர்பார்த்திருந்தபடி மணவாளன் பூமிக்கு வராமல், அவரது கலியாணத்திற்காக–அவருடைய இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்காக, பரலோகத்தில் உள்ள நீண்ட ஆயுசுள்ளவர் இடத்திற்கு வந்தார். “ ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது”–மத்தேயு 25:10. அந்தக் கலியாணத்தில் அவர்கள் நேரடியாக இருக்க முடியவில்லை. ஏனெனில் அவர்கள் பூமியிலிருக்கும்போது, அது பரலோகத்தில் நடைபெறுகிறது! கிறிஸ்துவின் அடியார்கள் தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் (லூக். 12:36) என்று காத்திருக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர் தேவனுக்கு முன்பாகச் செல்லும் போது, அவர்கள் அவரது ஊழியத்தைப் புரிந்துகொண்டு, விசுவாசத்தினால் அவரைப் பின்பற்றவேண்டியவர்களாக இருக்கின்றனர் என்பதைத்தான் இவ்விதமான அர்த்தத்தில் அவர்கள் கலியாணத்திற்குள் செல்லுவதாகக் கூறப்பட்டுள்ளது. (11)

அந்த உவமையில் தீவட்டிகளுடன் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் உடையவர்களாக இருந்தவர்கள் கலியாணத்திற்குள் சென்றனர். வேதவாக்கியங்களில் உள்ள சத்தியத்தைப்பற்றிய அறிவை உடையவர்களாயிருந்தவர்கள் தேவனுடைய ஆவியையும் கிருபையையும் உடையவர்களாக இருந்து, அவர்களது கசப்பான சோதனைமிக்க இரவில், தெளிவான வெளிச்சத்திற்காக வேதாகமத்தை ஆராய்ந்தனர். இவர்கள் பரலோக பரிசுத்தஸ்தலத்தைப்பற்றிய சத்தியத்தையும், இரட்சகரின் ஊழியத்திலுள்ள மாற்றத்தையும் கண்டு, பரலோக பரிசுத்தஸ்தலத்திலுள்ள அவரது ஊழியத்திற்கு விசுவாசத்தினால் அவரைப் பின்தொடர்ந்தனர். கவியாணத்திற்குள் செல்லுவது என்பது, வேதவாக்கியங்களிலுள்ள சாட்சியின் மூலமாக, அதே சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் அனைவரும் மத்தியஸ்த ஊழியத்தின் கடைசிப் பகுதியைச் செய்யும்படிக்கு கிறிஸ்து தேவனுக்கு முன்பாகப் பிரவேசித்து, அதன் முடிவில் இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, விசுவாசத்தினால் கிறிஸ்துவைப் பின்தொடர்வது ஆகிய அனைத்தையும் எடுத்துக்காட்டுகின்றன. (12)

மத்தேயு 22–ம் அதிகாரத்திலுள்ள கலியாணத்தில் இதே சாயல் அறிமுகப்படுத்தப்பட்டு, நுட்ப நியாய விசாரணை கலியாணத்திற்கு முன்னர் நடைபெறுவதாகத் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கலியாணத்திற்கு முன்னர், அனைவரும் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் தோய்த்து

வெளுக்கப்பட்ட, கரையற்ற சுபாவமாகிய வஸ்திரமான கலியாண வஸ்திரம் தரித்திருக்கிறார்களா என்பதைக் காண அரசர் வருகிறார். (மத்தேயு 22:11 வெளி. 7:14). கலியாண வஸ்திரம் இல்லாதவனாகக் காணப்பட்டவன் புறம்பாகத் தள்ளப்படுகிறான். ஆனால் சோதனையின்போது கலியாண வஸ்திரம் தரித்திருப்பவர்களாகக் காணப்படும் அனைவரும், தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, அவருடைய இராஜ்யத்திலும் அவருடைய சிங்காசனத்திலும் அமர்ந்திடத் தகுதி உள்ளவர்களாகக் கணக்கிடப்படுகின்றனர். தேவனுடைய இராஜ்யத்திற்கு ஆயத்தமாக உள்ளவர்கள் யாரென்று முடிவுசெய்திட சுபாவத்தைச் சோதிக்கும் இந்த ஊழியம் பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் நடைபெறும் நுட்ப நியாய விசாரணையின் முடிவில் நிகழும். (13)

நுட்ப நியாயவிசாரணையின் பணி முடிவடையும்வரை, யகங்கள் நெடுகிலுமாகத் தங்களைக் கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று கூறிக்கொண்டிருந்தவர்களின் காரியங்கள் சோதிக்கப்பட்டு, முடிவுசெய்யப்படும்வரை, முடிவடையாமலிருந்த தவணையின் காலமானது அதன் பின்னர் முடிவடையும். அப்போது இரக்கத்தின் கதவு மூடப்படும். இவ்விதமாக சுருக்கமான ஒரு வார்த்தையில் ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது. இரட்சகரின் ஊழியத்தின் கடைசிப்பகுதி வரையில், மனித இரட்சிப்பு என்னும் பெரும் ஊழியமானது நிறைவடையும் காலம் வரையிலும் நாம் எடுத்துச் செல்லப்படுகிறோம். (14)

நாம் கண்டதுபோல, பரலோக ஆராதனையின் சாயலாக இருந்த, பூமிக்குரிய பரிசுத்தஸ்தலத்திலுள்ள ஆராதனைகளில் பிரதான ஆசாரியன் பாவநிவாரண நாளில் மகா பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசித்தபோது, முதலாம் பகுதியின் ஊழியம் முடிவடைந்தது. பாவநிவர்த்தி செய்யும்படி அவன் பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்து, தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும், இஸ்ரவேல் சபையார் அனைவருக்காகவும் பாவநிவிர்த்திசெய்து வெளியே வருமளவும், ஆசரிப்புக்கூடாரத்தில் ஒருவரும் இருக்கலாகாது (லேவி. 16:17) என்று தேவன் கட்டளையிட்டிருந்தார். அப்படியே பாவ நிவிர்த்தி செய்யும் ஊழியத்தின் கடைசிப்பகுதியைச் செய்யும்படி கிறிஸ்து மகா பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசித்தார். முதலாம் பகுதியின் அவரது ஊழியத்தை நிறுத்தினார். ஆனால் முதலாம் பகுதியின் ஊழியம் முடிவடைந்தவுடன், இரண்டாம் பகுதியின் ஊழியம் ஆரம்பமாயிற்று. சாயலாயிருந்த ஆராதனையில், பாவநிவாரண நாளில் பிரதான ஆசாரியன் பரிசுத்தஸ்தலத்தைவிட்டு பாவங்களுக்காக உண்மையாகவே மனஸ்தாபப்பட்ட அனைத்து இஸ்ரவேலர்களுக்காகவும் செய்யப்பட்ட பாவநிவாரண பலியின் இரத்தத்தைப் படைக்க,தேவனுக்கு முன் மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்தான். அப்படியே கிறிஸ்துவும், நமது

பரிந்துபேசுபவராக, தமது ஊழியத்தின் ஒரு பகுதியை நிறைவேற்ற, தமது ஊழியத்தின் மற்றொரு பகுதியில், பாவிகளின் சார்பாக பிதாவின் சமூகத்தில் தமது இரத்தத்துடன் பிரவேசித்து, பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். (15)

கி.பி.1844 –ல் இந்தப் பொருளை அட்வெந்துக்கள் அறியாதவர்களாக இருந்தனர். இரட்சகரை எதிர்பார்த்திருந்த நேரம் கடந்து சென்ற பின்னும், அவர்கள் தொடர்ந்து அவரது வருகை சமீபம் என்று நம்பி இருந்தனர். மேலும் ஒரு முக்கியமான நெருக்கடியை அடைந்து விட்டதாகவும், தேவனுக்கு முன்பாக மனிதனின் பரிந்துபேசுபவராகச் செயல்படும் கிறிஸ்துவின் ஊழியம் முடிந்துவிட்டது என்றும் அவர்கள் கருதினார்கள். உண்மையாகவே கர்த்தர் வானமேகங்களின்மீது வருவதற்குச் சிறிது காலத்திற்குமுன் மனிதனின் தவணையின் காலம் முடிவடையவேண்டும் என்று வேதாகமத்திலிருந்து போதிக்கப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. மனிதன் இரக்கத்தின் கதவைத் தேடி, அதைத் தட்டி அழும்போது, அது திறக்கப்படமாட்டாது என்னும் காலத்தைக் குறித்த வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டும் சான்றுகளில் காணப்பட்டன. அவர்கள் கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்திருந்த காலம், ஒருவேளை அவரது வருகைக்கு முன்னர் உடனடியாக ஆரம்பமாகக்கூடிய , இந்தக் காலத்தைக் குறித்ததாக இருக்கிறதோ? என்பது அவ்களிடமிருந்த ஒருகேள்வியாக இருந்தது. பக்தியற்றவர்களின் தேவதூஷணமான பரிகாசங்கள் அவரது இரக்கத்தை நிராகரித்தவர்களிடமிருந்து தேவனுடைய ஆவி நீக்கப்பட்டதற்கான மற்றொரு சான்றுபோல் காணப்பட்டபோது, நியாயத்தீர்ப்பு சமீபம் என்னும் எச்சரிப்பைக் கொடுத்து முடித்தபின், உலகத்திற்கான அவர்களது ஊழியம் முடிவடைந்துவிட்டதென்று அவர்கள் உணர்ந்து, பாவிகளின் இரட்சிப்பிற்கான, ஆத்துமாக்களின் மீதிருந்த பாரத்தை அவர்கள் இழந்துவிட்டனர். இவை அனைத்தும், தவணையின் காலம் முடிவடைந்துவிட்டது அல்லது இரக்கத்தின் கதவு மூடப்பட்டுவிட்டது என்ற நம்பிக்கையை அவர்களுக்கு உறுதிசெய்தது. (16)

ஆனால் பரிசுத்தஸ்தலம் என்னும் கேள்விபற்றிய விசாரணையுடன் அதிகத் தெளிவான ஒளி வந்தது. கி.பி.1844 –ல் முடிவடையும் 2300 நாட்கள் மிக முக்கியமான ஒரு நெருக்கடியைக் குறிப்பிடுகிறது என்று அவர்கள் நம்பினது சரியானது என்பதைக் கண்டனர். ஆனால் 1800 ஆண்டுகளாக மனிதனைத் தேவனிடத்திற்கு நடத்துவதற்கான மார்க்கமாகக் காணப்பட்ட நம்பிக்கை, இரக்கம் ஆகியவைகளின் வாசல் அடைக்கப்பட்டுவிட்டது. அதே சமயத்தில் மற்றொரு கதவு திறக்கப்பட்டு, மகா பரிசுத்தஸ்தலத்திலுள்ள கிறிஸ்துவின் ஊழியத்தின் மூலமாக பாவங்களுக்கான மன்னிப்பு மனிதருக்கு அருளப்பட்டது மற்றொன்றிற்கு இடம் கொடுக்கும்படி அவரது ஊழியத்தின்

ஒரு பகுதி மூடப்பட்டது. பாவிகளின் சார்பில் கிறிஸ்து ஊழியம் செய்யும் பரலோக பரிசுத்தஸ்தலத்தில் திறக்கப்பட்ட ஒரு வாசல் இன்னும் இருந்தது. (17)

" பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" (வெளி. 3:7–8) என்று அதே நேரத்தில் வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்ட வார்த்தைகள் கிறிஸ்தவ சபைக்குப் பொருந்தக்கூடியதாகக் காணப்பட்டன. (18)

தங்களுக்காகச் செய்யப்படும் ஊழியத்தைக் காட்சிக்குக் கொண்டுவரும் ஒளியை நிராகரிப்பவர்கள், நன்மையை அடைந்து கொள்ளாதபோது, தங்கள் சார்பாகச் செய்யப்படும் கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியமாகிய மாபெரும் பாவ நிவாரண ஊழியத்தில், விசுவாசத்தினால் கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களே நன்மையைப் பெறுவார்கள். கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது, யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒளியை அவர்கள் நிராகரித்து, அவர் உலகத்தின் இரட்சகராக இருக்கிறார் என்பதை நம்ப மறுத்தவர்களால், அவர் மூலமாக மன்னிப்பைப் பெறமுடியவில்லை. தமது மத்தியஸ்த ஊழியத்தினால் உண்டாகக்கூடிய ஆசீர்வாதங்களைத் தமது சீடர்களின்மீது பொழியும்படி பரலோக பரிசுத்த ஸ்தலதிற்குள் தமது சொந்த இரத்தத்துடன் இயேசு பிரவேசித்தபோது, யூதர்கள் தங்களுடைய பயனற்ற பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்துவதில் தொடரும்படி முழுமையான இருளுக்குள் விடப்பட்டனர். சாயலும் நிழலுமாக இருந்த ஊழியங்கள் முடிவடைந்து இல்லாமலாயின. மனிதன் தேவனை நெருங்க எந்த வாசல் திறக்கப்பட்டதாகக் காணப்பட்டிருந்ததோ, அது அதற்கும் மேலாகத் திறந்து வைக்கப்பட்டு இருக்கவில்லை. பரலோக பரிசுத்தஸ்தலத்தில் நிகழ்ந்த அவரது ஊழியமாகிய எந்த ஒரே வழியினால் மட்டும் அவர் காணப்படக்கூடியவராக இருந்தாரோ, அந்த ஒரே வழியில் அவரைத் தேடுவதற்கு யூதர்கள் மறுத்தனர். ஆகையால் அவர்கள் தேவனுடனுள்ள தொடர்பைக் காணாதவர்களாக இருந்தனர். அந்த வாசல் அவர்களுக்கு அடைக்கப்பட்டிருந்தது. மெய்யான பலியாகவும், தேவனுக்கு முன்பாக உள்ள ஒரே மத்தியஸ்தராகவும் கிறஸ்து இருக்கிறார் என்பதைப் பற்றிய அறிவில்லாதவர்களாகவும் இருந்தனர். எனவே, அவரது மத்தியஸ்த

ஊழியத்தினாலுண்டாகும் நன்மைகளை அவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. (19)

விசுவாசமில்லாத யூதர்களின் நிலை, கவனமும் விசுவாசமும் இல்லா கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டிருப்பவர்களின் நிலையைச் சித்தரிக்கிறது. அவர்கள் நமது இரக்கமுள்ள பிரதான ஆசாரியரின் ஊழியத்தைப்பற்றி வேண்டுமென்றே அறியாமை உள்ளவர்களாக இருக்கின்றனர். சாயலயிருந்த ஆராதனையில், பிரதான ஆசாரியன் மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்தபோது, அனைத்து இஸ்ரவேலர்களும் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவும், சபையில் இருந்து அறுப்புண்டு போகமலிருக்கவும், ஆசரிப்புக் கூடாரத்தைச்சேர்ந்து, பக்திவிநயமான விதத்தில் தங்களது ஆத்துமாக்களை தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தவேண்டியது அவசியமாக்கப்பட்டிருக்கிறது. சாயலற்றதாக இல்லாத உண்மையான பாவநிவாரண நாளில் உள்ள நமது பிரதான ஆசாரியரின் ஊழியத்தையும், நம்மிடம் அவசியப்படுத்தப்பட்டுள்ள கடமைகள் என்ன என்பதுபற்றியும், நாம் அறிந்துகொள்ளவேண்டியது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது. (20)

தேவன் தமது இரக்கத்தினால் அனுப்பும் எச்சரிக்கைகளை மனிதர் தீமை உண்டாகும் என்கிற பயமில்லாமல் நிராகரிக்கக்கூடாது. நோவாவின் காலத்தில் பரலோகத்திலிருந்து ஒரு தூது இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டது. அவர்களது இரட்சிப்பு அந்தத் தூதை அவர்கள் சார்ந்திருந்த விதத்தை அனுசரித்ததாக இருந்தது. அவர்கள் அந்த எச்சரிப்பை நிராகரித்தினால், பாவமுள்ள இடத்திலிருந்து தேவஆவி விலக்கிக்கொள்ளப்படவே, ஜலப்பிரளயத்தினால் அழிந்தனர். ஆபிரகாமின் காலத்தில் குற்றமிக்க சோதோமின் குடிமக்களிடம் பரிந்துபேசுவதிலிருந்து இரக்கம் நின்றுபோனபோது, பரலோகத்தில் இருந்து அனுப்பப்பட்ட அக்கினியால் லோத்தும், அவனது இரண்டு குமாரத்திகளும் தவிர மற்றனைவரும் பட்சிக்கப்பட்டுப்போனார்கள். அப்படியே கிறிஸ்துவின் நாட்களிலும் நடக்கும். “இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்” (மத்தேயு 23:38) என்று அந்தத் தலைமுறையில் விசுவாசமில்லாதவர்களாக இருந்த யூதர்களை நோக்கி தேவகுமாரன் அறிவித்தார். “கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமறபோனடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்” (2 தெச. 2:10 –12) என்று அவர்களைப்பற்றி

எல்லையில்லாத வல்லமை அறிவிக்கிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தையின் போதனையை நிராகரிக்கும்போது, அவர்கள் நேசிக்கும் வஞ்சகங்களுக்குள் அவர்களை விட்டுவிட்டு, தேவன் தமது ஆவியை விலக்கிக்கொள்ளுகிறார். (21)

ஆனால் கிறிஸ்து இன்னும் மனிதனின் சார்பாகப் பரிந்துபேசிக் கொண்டிருப்பதினால் ஒளியைத் தேடுபவர்களுக்கு அது கொடுக்கப்படும். அவரது வருகையை எதிர்பார்ப்பவர்களுக்கு அது ஆரம்பத்தில் தெரியாமல் போனாலும் பின்னர், வேதவாக்கியங்கள் மூலம் அவர்களது உண்மையான நிலைமை அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. (22)

கி.பி.1844–ஐ கடந்துசென்ற காலத்திற்குப் பின்வந்த காலம் அட்வெந்து விசுவாசத்தை தொடர்ந்து பற்றிக்கொண்டிருந்தவர்களுக்கு பெரும் சோதனையாக இருந்தது. அவர்களது உண்மையான நிலைமையைப் பற்றி அவர்கள் ஆராய்ந்து கண்டறிந்தது சம்பந்தமாக அவர்களுக்கு உண்டான ஒரே தெளிவு, மேலே உள்ள பரிசுத்தஸ்தலத்தை நோக்கி, அவர்களது உள்ளங்களை நடத்திய ஒளி ஒன்றே இருந்தது. முந்திய தீர்க்கதரிசன காலக்கணக்குகளின் கணிப்பின்மீதிருந்த தங்களது விசுவாசத்தைச் சிலர் மறுத்து, அட்வெந்து இயக்கத்தில் காணப்பட்டிருந்த பரிசுத்த ஆவியின் வல்லமைமிக்க செல்வாக்கை, மனிதர்களாலும் சாத்தானின் ஏதுகரங்களினாலும் ஆனவை என்றனர். மற்றொரு வகுப்பினர் தங்களுடைய கடந்தகால அனுபவங்களில் கர்த்தர் அவர்களை நடத்தினார் என்பதை உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தனர். அவர்கள் காத்திருந்து—விழித்திருந்து தேவனுடைய சித்தத்தை அறிவதற்காக ஜெபித்தபோது, அவர்களது பிரதான ஆசாரியர் வேறொரு ஊழியத்தைச் செய்யும் பணியில் பிரவேசித்திருக்கிறார் என்பதைக் கண்டு விசுவாசத்தினால் அவரைப் பின்தொடர்ந்து, சபையின் முடிவான ஊழியத்தைக் காணும்படி அவர்கள் நடத்தப்பட்டனர். முதலாம் இரண்டாம் தூதர்களின் தூதைப்பற்றிய தெளிவான அறிவை உடையவர்களாக இருந்து, வெளி. 14–ம் அதிகாரத்திலுள்ள மூன்றாம் தூதனின் பக்திவிநயமான எச்சரிப்பைப் பெற்றுக்கொள்ளவும் அதை உலகத்திற்குக் கொடுக்கவும் அவர்கள் ஆயத்தமடைந்தனர். (23) ★

# 25

# தேவனுடைய கற்பனைகள் மாற்றப்படமுடியாதவைகள்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 433–450)**

“பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது;”–வெளி. 11:19. பரிசுத்தஸ்தலத்தின் இரண்டாவது அறையான மகா பரிசுத்தஸ்தலத்தில் தேவனுடைய உடன்படிக்கையின் பெட்டி இருக்கிறது. பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலாக உள்ளவைகளாக பூமியின் ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்குப் பயன்பட்டிருந்த இந்த அறை, பரிசுத்தஸ்தலத்தைச் சுத்திகரிக்கும் பாவநிவாரண நாள் ஒன்றில் மட்டுமே திறக்கப்பட்டிருந்தது. எனவே, பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது என்னும் அறிவிப்பானது பாவநிவாரணப்பணியைச் செயல்படுத்தும்படி கிறிஸ்து பரலோக மகா பரிசுத்தஸ்தலத்தில் கி.பி-1844–ல் பிரவேசித்ததைச் சுட்டிக்காட்டுகிறது. பிரதான ஆசாரியர், அவரது ஊழியத்தைச் செய்வதற்காக மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்தபோது, விசுவாசதினால் தங்களின் பிரதான ஆசாரியரைப் பின்தொடர்ந்தவர்கள், அங்கு அவரது உடன்படிக்கையின் பெட்டியைக் கண்டனர். பரிசுத்தஸ்தலம் என்னும் பொருள்பற்றி அவர்கள் ஆராய்ந்து, இரட்சகரின் ஊழியத்திலுள்ள மாற்றத்தைப் புரிந்துகொண்டதினால், தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டிக்கு முன்பாக பாவிகளின் சார்பாகத் தமது இரக்கத்துடன் அவர் பரிந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்டனர். (1)

பூமியின் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த உடன்படிக்கையின் பெட்டியில் இரண்டு கற்பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளின் மீது தேவனுடைய பிரமாணங்களாகிய கற்பனைகள் எழுதப்பட்டிருந்தன. உடன்படிக்கைப் பெட்டியானது கற்பனைகள் எழுதப்பட்டிருந்த கற்பலகைகளைக்

கொண்டிருந்த சாதாரணமானதாக இருந்தது. அதனுள் வைக்கப்பட்டிருந்த தெய்வீகப் பிரமாணங்களின் பிரசன்னம் அதற்கு மதிப்பையும் பரிசுத்தத்தையும் கொடுத்து, பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டபோது, அவரது உடன்படிக்கையின்பெட்டி காணப்பட்டது. பரலோக ஆலயத்தில் இருக்கும் மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் சீனாய் மலையின்மீது இடிமுழக்கங்களுக்கிடையில் தேவனுடைய சொந்த விரலினால் கற்பலகைகளின்மீது எழுதப்பட்ட கற்பனை தெய்வீகக்கற்பனை, பரிசுத்தமான இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. (2)

பரலோக பரிசுத்தஸ்தலத்தில் உள்ள தேவனுடைய கற்பனை பெரும் மூலப்படிவமாக உள்ளது. கற்பலகைகளில் எழுதப்பட்டு, மோசேயால் பதிக்கப்பட்ட அது, பிழையில்லாத அதன் மறுபதிப்பாக இருந்தது. இந்த மிக முக்கியமான பொருள்பற்றிப் புரிந்துகொண்டவர்கள் இவ்வாறாக தெய்வீகப்பிரமாணத்தின் பரிசுத்தமிக்க மாறாத தன்மையைக் காணும்படி நடத்தப்பட்டனர். "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத் திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது" (மத்தேயு 5:18) என்ற இரட்சகரின் வார்த்தைகளின் வல்லமையை, அதற்குமுன் ஒருபோதும் இல்லாதவிதத்தில் அவர்கள் கண்டனர். தேவனுடைய கற்பனை அவரது சுபாவத்தின் வெளிப்படுத்தலாகவும், மறுபதிப்பாகவும் இருந்தது. பரலோகத்திலுள்ள உண்மையான சாட்சியாக என்றென்றும் நிலைத்து நின்றாக வேண்டும். எந்த ஒரு கற்பனையும் பயனற்றதென்றோ செல்லாததென்றோ அவற்றுள் இல்லை. ஒரு எழுத்தோ அல்லது எழுத்தின் உறுப்போ மாற்றப்படவில்லை. "கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது." "அவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள்; அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள். அவைகள் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்கும் உறுதியானவைகள், அவைகள் உண்மையும் செம்மையுமாய்ச் செய்யப்பட்டவைகள்"–சங். 119:89; 111:7,8. (3)

அந்தப் பிரமாணங்களின் இதயம் போன்ற இடத்தில் நான்காவது பிரமாணம், "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பா யாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவ னானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும்

பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (யாத். 20:8–11) என்று முதலில் அறிவிக்கப்பட்டதுபோலவே உள்ளது. (4)

தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்த வேத மாணாக்கர்களின் இருதயங்களை தேவனுடைய ஆவி உணர்த்தியது. சிருஷ்டிகளின் இளைப்பாறும் நாளைக் கவனிக்காமல் விட்டுவிட்டதினால், அவர்கள் அறியாமையின் காரணமாக இந்தக் கற்பனையை மீறியிருந்தனர் என்னும் மன உணர்த்துதல் அவர்கள்மீது வந்தது. தேவன் பரிசுத்தப்படுத்தியிருந்த நாளுக்குப்பதிலாக, வாரத்தின் முதல்நாளை ஆசரிப்பதற்கான காரணத்தை அவர்கள் சோதிக்கத் தொடங்கினர். நான்காவது கற்பனை நீக்கப்பட்டதற்கான ஆதாரத்தை வேதவாக்கியத்திலிருந்து அவர்களால் காணமுடியவில்லை. ஏழாம் நாளைப் பரிசுத்தமாக்கியிருந்த முதல் ஆசீர்வாதம் ஒருபோதும் நீக்கப்படவில்லை. தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதின்படி நடக்க அவர்கள் நேர்மையுடன் தேடினார்கள். இப்பொழுது அவர்கள் தாங்களே அவரது பிரமாணத்தை மீறியிருப்பதைக் கண்டபோது துயரம் அவர்களது இருதயங்களை நிரப்பிற்று. அவரது ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிப்பதினால் தேவனுக்கு உண்மையாக இருப்பதை வெளிக்காட்டினார்கள். (5)

அவர்களுடைய விசுவாசத்தைக் கவிழ்க்கும்படிச் செய்யப்பட்ட முயற்சிகள் ஏராளமானதாகவும் ஆர்வமிக்கதாகவும் இருந்தன. பூமிக்குரிய பரிசுத்தஸ்தலம் பரலோக பரிசுத்தஸ்தலத்தின் சாயலாக இருந்தது என்பதையும், உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த கற்பனையின் மிகச்சரியான மறுபதிப்பாக இருந்தது என்பதையும் ஒருவராலும் காணாமலிருக்க முடியவில்லை. பரலோக பரிசுத்தஸ்தலத்தைப்பற்றிய உண்மையை ஏற்றுக்கொள்வது என்பது தேவனுடைய கற்பனையின் உரிமைகளையும் நான்காவது கற்பனையில் உள்ள ஓய்வுநாள் பிரமாணத்திலுள்ள கடமைகளையும் அங்கீகரிப்பதில் சம்பந்தப்பட்டுள்ளது. பரலோக பரிசுத்தஸ்தலத்தில் நடைபெறும் கிறிஸ்துவின் ஊழியத்தை இசைவாக வெளிப்படுத்தும் வேதவாக்கியத்திற்கெதிரான கசப்பான எதிர்ப்பின் இரகசியம் இங்குதான் உள்ளது. தேவன் திறந்த கதவை அடைக்கவும், அடைத்த கதவைத் திறக்கவும் மனிதர்கள் வகைதேடினார்கள். "ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது; … இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்"–வெளி. 3:7,8. கிறிஸ்து கதவைத் திறந்திருந்தார். அல்லது மகா பரிசுத்தஸ்தலத்திலுள்ள

ஊழியத்தை ஆரம்பித்தார். பரலோக பரிசுத்தஸ்தலத்தின் திறக்கப்பட்டிருந்த வாசல் வழியாக ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது. அங்கு புனிதமாக வைக்கப்பட்டிருந்த கற்பனைகளுள், நான்காவது கற்னையும் பேணிப் பாதுகாக்கப்பட்டிருப்பதானது எனக்குக் காட்டப்பட்டது. தேவன் எதை நிலை நாட்டியிருந்தாரோ, அதை எந்த மனிதனாலும் தூக்கியெறிந்து வீசிவிட முடியாது. (6)

கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியம் பற்றிய கற்பனையின் நித்தியத்துவ சத்தியத்தை ஏற்றிருந்தவர்கள் இவை வெளி 14–ம் அதிகாரத்தில் வெளிக்காட்டப்பட்ட சத்தியங்கள் என்று அறிந்து கொண்டனர். இந்த அதிகாரத்தில் அமைந்துள்ள தூதுதான், கர்த்தரின் இரண்டாம் வருகைக்கென்று பூமியில் குடியிருப்பவர்களை ஆயத்தப்படுத்தும் மூன்றுவிதமான எச்சரிப்புகளை உடையதாக இருந்தது. அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது என்னும் அறிவிப்பு, மனிதனுடைய இரட்சிப்பிற்கான கிறிஸ்துவின் ஊழியத்தின் முடிவைச் சுட்டிக்காட்டுகிறது. இரட்சகரின் பரிந்துபேசுதல் நிறுத்தப்பட்டு, தமது மக்களைத் தம்முடன் எடுத்துக்கொள்ள அவர் திரும்ப வரும்வரைக்கும் பறைசாற்றவேண்டிய ஒரு சத்தியமாக அது உள்ளது. கி.பி.1844–ல் ஆரம்பமான நியாயத்தீர்ப்பின் பணி உயிருள்ளவர்கள், மரித்தவர்கள் ஆகிய அனைவரது வழக்குகளும் முடியும்வரை தொடர்ந்து செல்லவேண்டியதாக உள்ளது. எனவே, மனிதனின் தவணையின் காலம் முடிவடையும்வரை அது தொடரும். மனிதர்கள் நியாயத்தீர்ப்பில் நிற்பதற்கென்று ஆயத்தப்படும்படி அந்தத் தூது, தேவனுக்குப்பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள் என்று அவர்களுக்குக் கட்டளை கொடுக்கிறது. இந்தத் தூதுகளை ஏற்றுக்கொண்டதின் விளைவுகள், தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிற பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்ற வார்த்தையால் கொடுக்கப்பட்டது. நியாயத் தீர்ப்பிற்கு ஆயத்தமாக இருப்பதற்கு மனிதர்கள் தேவனுடைய கற்பனை களைக் காத்துக்கொள்ளவேண்டியது அவசியமாக உள்ளது. நியாயத் தீர்ப்பில் பண்பை நிர்ணயம் செய்யும் சட்டமாகக் கற்பனை இருக்கும். “எவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப்போவார்கள்; எவர்கள் நியாயப்பிரமாணத் துக்குட்பட்டவர்களாய்ப் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப் பிரமாணத்தினாலே ஆக்கினைத்தீர்ப்படைவார்கள்.” “தேவன் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக்குறித்து நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாளிலே இது விளங்கும்” (ரோமர் 2:12,16) என்று அப்போஸ்தலனாகிய பவுல் அறிவிக்கிறார். தேவனுடைய கற்பனைகளைக்

கைக்கொள்ளுகிறதற்கு விசுவாசம் அத்தியாவசியமாக உள்ளது. ஏனெனில் "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்." "விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே"–எபி. 11:6; ரோமர் 14:23. (7)

தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்தி, அவரை வானத்தையும் பூமியையும் படைத்தவர் என்ற தொழும்படி, முதலாம் தூதனால் மனிதர்கள் அழைக்கப்படுகிறார்கள். இதைச்செய்வதற்கு அவர்கள் "அவரது கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே" (பிர.12:13) என்று ஞானி கூறுகிறான். தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியாத தொழுகை அவருக்குப் பிரியமானதாக இருக்காது. நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாகும். "வேதத்தைக் (கற்பனையை) கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" –1யோவான் 5:3; நீதி. 28:9. (8)

தேவன் சிருஷ்டிகராக இருக்கிறார் என்பதும் மற்ற உயிரினங்கள் அனைத்தும், அவருக்குக் கடமைப்பட்டவைகளாக உள்ளன என்பதும், அவரைத் தொழுகின்ற கடமைக்கு அடிப்படையாக உள்ளன. வேதாகமத்தில் எங்கெல்லாம் அஞ்ஞானிகளின் தெய்வங்களுக்கு மேலாக அவருக்கு பக்தியும் தொழுகையும் செலுத்தப்படவேண்டும் என்ற அவரது உரிமைபாராட்டுதல் முன்வைக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் அவரது படைக்கும் வல்லமை அத்தாட்சியாக எடுத்துக்காட்டப்படுகிறது. "சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே; கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர்." "இப்படியிருக்க, என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எனக்கு யாரை நிகராக்குவீர்கள்? என்று பரிசுத்தர் சொல்லுகிறார். உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத்திட்டமாகப் புறப்படப்பண்ணி, அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது." "வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை." "கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்." "நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்." "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும்

வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார் கள்'' (சங். 96:5; ஏசாயா 40:25,26; 45:18; சங். 100:3; 95:6; வெளி. 4:11) என்று பரலோகத்தில் தேவனைத் தொழுதுகொள்ளும் பரிசுத்தவான்கள் அவர்களது தொழுகை ஏன் அவருக்கு உரித்தானது என்கிற காரணத்தையும் கூறுகின்றனர். (9)

வெளி. 14–ம் அதிகாரத்தில் சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளும்படி மனிதர்கள் அழைக்கப்படுகின்றனர். முத்தூதின் பலனாக ஒரு மக்கள் கூட்டம் தேவனுடைய கற்பனைகளைக் காத்துக்கொள்ளுவதை தீர்க்கதரிசனம் காட்சிக்குக் கொண்டுவருகிறது. இந்தக் கற்பனைகளில் ஒன்று தேவன்தான் சிருஷ்டிகர் என்று சுட்டிக்காட்டுகிறது. "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லா வற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்'' (யாத். 20:8–11) என்று நான்காவது கற்பனை அறிவிக்கிறது. "என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு, அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும் என்றேன்'' (எசே. 20:20) என்று மேலும் கர்த்தர் ஓய்வுநாளைப்பற்றிக் கூறுகிறார். இதற்கான காரணம் என்னவெனில், "அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்'' (யாத். 31:17) என்பதாகும். (10)

ஓய்வுநாள் சிருஷ்டிப்பின் நினைவுச்சின்னம் என்பதின் முக்கியத்துவம் என்னவெனில், தொழுகை தேவனுக்குரியது என்பதற்கான உண்மையான காரணத்தை அது எப்பொழுதும் முன்வைக்கிறது. ஏனெனில் அவர் நமது சிருஷ்டிகரும் நாம் அவரது சிருஷ்டிகளுமாக இருக்கிறோம். எனவே, தெய்வீகத் தொழுகையின் அஸ்திவாரத்திலேயே ஓய்வுநாள் வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், அது இந்தப் பெரும் சத்தியத்தை

உணர்த்தக்கூடிய விதத்தில் போதிக்கிறது. வேறு எந்த அமைப்புகளும் இதைச் செய்வதில்லை. தெய்வீகத்தைத் தொழுவதற்கான உண்மையான அடிப்படை ஏழாம்நாளில் தொழுவதில் மட்டுமாக இல்லாமல், சகலவிதமான தொழுகைகளும் சிருஷ்டிகருக்கும் சிருஷ்டிகளுக்கும் இடையில் உள்ள மேலான (உறவின்) மேன்மையில் காணப்படுகிறது. இது ஒருபோதும் வழக்கில் இல்லாமல் நீங்கிப்போகமுடியாததாகவும் ஒருபோதும் மறக்க முடியாததாகவும் உள்ளது.—J.N. Andrews History of the Sabbath,Chapter 27. மனிதர்களின் மனங்களின் முன் இந்த சத்தியத்தை எப்பொழுதும் வைப்பதற்காகவே, தேவன் ஏதேனில் ஓய்வுநாளை ஏற்படுத்தினார். நாம் ஏன் அவரைத் தொழவேண்டும் என்பதற்கான காரணமானது யாதெனில், அவர் நமது சிருஷ்டிகராக இருக்கிறார் என்பது தொடரும்வரை, ஓய்வுநாள் அவரது நினைவுச்சின்னமாகத் தொடரும். ஓய்வுநாள் உலகம் முழுவதிலும் அனைவராலும் ஆசரிக்கப்பட்டிருந்தால், பக்திக்கும் தொழுகைக்கும் உரியவராகக் கிறிஸ்து இருக்கிறார் என்று மனிதர்களின் எண்ணங்களும் பற்றுகளும் சிருஷ்டிகரின்பால் நடத்தப்பட்டிருந்தால், ஒரு விக்கிரக ஆராதனைக்காரனோ ஒரு நாத்திகனோ ஒரு கடவுள் நம்பிக்கை அற்றவனோ ஒருபோதும் இருந்திருக்கமாட்டான். ஓய்வுநாளை ஆசரிப்பது வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுக்களையும் உண்டாக்கின மெய் தேவனின் மீதுள்ள உண்மையான விசுவாசத்தின் அடையாளமாக இருக்கிறது. மனிதர்கள் தேவனைத் தொழுது அவரது கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்று கட்டளையிடும் தூது, சிறப்பாக நான்காவது கற்பனையைக் கைக்கொள்ளும்படி அவர்களை அழைக்கிறது. (11)

தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களுடன் ஒப்பிடும்படியாக மூன்றாம் தூதன் வேறொரு வகுப்பினர்களிடம் அவர்களது தவறுகளைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு எதிரான பக்திவிநயமான ஒரு எச்சரிப்பை இவ்விதமாகக் கூறியிருக்கிறான். “மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்”–வெளி. 14:9,10. இந்தத் தூதைப் புரிந்துகொள்ளுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்களைப்பற்றிய ஒரு சரியான விளக்கம் அவசியமாக உள்ளது. மிருகம், அதன் சொரூபம் அதன் அடையாளம் ஆகியவையால், என்ன எடுத்துக்காட்டப்படுகிறது? (12)

இந்த அடையாளங்களை எடுத்துக்காட்டும் தீர்க்கதரிசனத்தின் பாதை வெளி. 12–ம் அதிகாரத்தில், கிறிஸ்துவை அவரது பிறப்பின்போது அழிக்க வகைதேடின வலுசர்ப்பத்துடன் ஆரம்பமாவது காணப்படுகிறது. வலுசர்ப்பம் என்பது சாத்தான் என்று கூறப்பட்டுள்ளது. வெளி. 12:9. ஆனால் முதல் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ சகாப்தத்தின் போது, கிறிஸ்துவுடனும் அவரது ஜனங்களுடனும் போர்செய்து கொண்டிருக்கும் சாத்தானின் பிரதிநிதியாக ரோமப் பேரரசு இருந்தது. அப்போது அஞ்ஞான மார்க்கம் நிலவியிருந்தது. இப்படியாக வலுசர்ப்பமானது முதலாவது சாத்தானை எடுத்துக்காட்டும்போது, இரண்டாவது அர்த்தத்தில் அஞ்ஞான ரோம அரசின் அடையாளமாக உள்ளது. (13)

வெளி. 13–ம் அதிகாரத்தில் (1–10) வேறொரு மிருகம் விவரிக்கப்பட்டுள்ளது. அது சிறுத்தையைப்போல் இருந்தது. வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது. பெரும்பாலான புரொட்டஸ்டாண்டுகள் நம்பியிருந்ததுபோல மிருகம், ஒரு காலத்தில் பழங்கால ரோமப் பேரரசு வைத்திருந்த வல்லமையையும் சிங்காசனத்தையும், அதிகாரத்தையும், போப்புமார்க்கம் பிற்காலத்தில் அடைந்துகொண்டது என்பதை இந்த அடையாளம் எடுத்துக்காட்டுகிறது. சிறுத்தையைப் போலிருந்த மிருகம்பற்றி இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது: “பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. அது தேவனைத் தூஷிக்கும்படி தன்வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது. மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது”–வெளி. 13:5–7. தானியேலின் தீர்க்கதரிசனம் ஏழாம் அதிகாரத்தில் காணப்படும் சின்னக்கொம்பைப் பற்றிய வர்ணனைக்கு ஏறத்தாழ இசைவாக இருக்கும் இந்தத் தீர்க்கதரிசனம் கேள்விக்கிடமின்றி போப்பு மார்க்கத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. (14)

“நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது” என்பது காலமும் காலங்களும் அரைக்காலமுமாகிய மூன்றரை வருடங்கள் அல்லது 1260 நாட்கள் என்று தானியேல் 7–ம் அதிகாரத்தில் கூறப்பட்டிருப்பது, ரோமன் கத்தோலிக்க வல்லமை தேவனுடைய மக்களை ஒடுக்கவேண்டிய அதே காலமாக இருந்தது.

முந்தின அதிகாரங்களில் கூறப்பட்டதுபோல, போப்புமார்க்கம் கி.பி.538–ல் ஆரம்பமாகி, கி.பி.1798–ல் முடிவடைந்தது. போப்புமார்க்கம் நீக்கப்பட்டு, பிரெஞ்சு இராணுவத்தினால் போப்பு சிறையாக்கப்பட்டபோது, போப்புமார்க்கம் சாவுக்கேதுவான அதன் காயத்தை அடையவே, சிறைப்படுத்திக் கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான் என்னும் திட்டமான தெய்வீக முன்னறிவிப்பு நிறைவேறியது! (15)

இந்தக் கட்டத்தில் வேறொரு அடையாளம் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. "பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது"–வெளி. 13:11. அந்த மிருகத்தின் தோற்றம் அது எழும்பிய விதம் ஆகிய இரண்டும் சேர்ந்து அது எந்த நாட்டை எடுத்துக்காட்டுகிறதோ அது, இதற்கு முன் எடுத்துக்காட்டியிருந்த அடையாளங்களைப்போல இல்லாததாக இருந்தது. உலகத்தை ஆட்சிசெய்த பெரும் ராஜ்யங்கள் தானியேல் தீர்க்கதரிசிக்கு, கொல்லும் தன்மையுடைய மிருகங்களாகவும், வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தில் அடித்தபோது (தானி. 7:2) எழும்பினதாகவும் காட்டப்பட்டது. வெளி. 17–ம் அதிகாரத்தில் தண்ணீர்கள் என்பது ஜனங்களையும், கூட்டங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும் குறிப்பிடுகின்றது என்று தேவதூதன் விளக்கினான். (வெளி. 17:15). காற்றுகள் என்பது யுத்தத்தின் ஒரு அடையாளமாக உள்ளது. பெரிய சமுத்திரத்தின்மீது வீசியது என்பது, இராஜ்யங்கள் அவைகளின் வல்லமையைப் போரினாலும் புரட்சியினாலும் அடைந்துகொண்டதை எடுத்துக்காட்டுகிறது. (16)

ஆனால் ஆட்டுக்குட்டியைப் போன்ற கொம்புகளை உடையதாக இருந்த மிருகம், பூமியின்மீதிருந்து எழும்பிவருவதாகக் காணப்பட்டது. தன்னை அமைத்துக்கொள்ளுவதற்காக, மற்ற வல்லமைகளைக் கவிழ்ப்பதற்குப்பதிலாக, இதற்குமுன் குடியேற்றமில்லாத இடத்தில் இருந்து இவ்விதமாகக் குறிப்பிடப்பட்டிருந்த இந்த நாடு, மெதுவாகவும் சமாதானமாகவும் எழும்பியாக வேண்டும். அப்படியானால், ஒன்றுக் கொன்று சண்டையிட்டுக்கொண்டிருந்த கூட்டமான, பழையஉலகத்தின் நாடுகளுக்கிடையிலிருந்து ஜனங்கள், கூட்டங்கள், ஜாதிகள்? பாஷைக்காரர் களாகிய கலங்கும் சமுத்திரத்திலிருந்து அது தோன்றியிருந்திருக்கமுடியாது. அது மேற்குக் கண்டத்தில் தேடப்படவேண்டும் (ஏனைய கண்டங்கள் ஏற்கனவே பல்வேறு நாடுகளால் ஆளப்பட்டிருந்தன). (17)

உலகின் கவனத்தைக் கவர்ந்து, பலம், பெரிய தன்மை ஆகியவைகளை வாக்குத்தத்தம் செய்துகொண்டு, உலகத்தின் எந்த நாடு

கி.பி.1798–ல் வல்லமையானதாக எழுந்தது? எந்த ஒரு நாட்டின் இந்த அடையாளமானது கேள்விக்கிடமின்றிப் பொருந்தக்கூடியதாக உள்ளது? தீர்க்கதரிசனத்தில் உள்ள குறிப்புகளுடன் ஒரே ஒரு நாடு தான். ஆம். அது தவறில்லாதவிதத்தில் அமெரிக்க நாட்டைச் சுட்டிக்காட்டுகிறது! பரிசுத்த வேதவாக்கியங்களை எழுதினவரின் அதே எண்ணங்கள் மறுபடியும் மறுபடியும் தோன்றினதால், ஏறத்தாழ அதே வார்த்தைகளை இந்த நாட்டின் எழுச்சியையும் வளர்ச்சியையும் பற்றி விவரிக்கும்போது புகழ்பெற்ற பேச்சாளரும் வரலாற்று ஆசிரியருமான ஒருவர் கீழ்க்கண்ட வார்த்தைகளால் வர்ணித்தார். “அந்த மிருகம் பூமியிலிருந்து எழும்பி வருவதாகக் காணப்பட்டது.” மொழிபெயர்ப்பாளர்களின் கருத்துப்படி எழும்பியிருத்தல் என்று இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள சொல், எழுத்தின்படி ஒரு செடி வளர்வது அல்லது உயர எழுவது என்பதாக அடையாளப்படுத்துகிறது. இந்த நாடு இதற்குமுன், மக்கள் குடியில்லாமலிருந்த இடத்திலிருந்து எழும்பியாக வேண்டும் என்பதை நாம் கண்டிருக்கிறோம், ஐக்கிய அமெரிக்க நாட்டின் வளர்ச்சியைப்பற்றி ஒரு முன்னணி எழுத்தாளர் விவரிக்கும்போது, : “இல்லாமையிலிருந்து மேலுயர்ந்துவரும் அதன் மர்மம் என்றும், பேசாத ஒரு விதையைப் போல நாம் ஒரு பேரரசாக வளர்ந்தோம்” என்றும் கூறுகிறார்.—Townsend,The New World Compared With The Old,Page 162. “பூமியின் மௌனத்திற்கிடையில் அதன் வல்லமையையும், பெருமையையும் சேர்த்துக்கொண்டு உயரும் ஒரு ஆச்சரியமான நாடாக அது உள்ளது” என்று ஐக்கிய அமெரிக்காவைப்பற்றி 1850 –ல் ஒரு ஐரோப்பியப் பத்திரிக்கை எழுத்தாளர் கூறினார்.—The Dublin Nation. லெய்டன் என்னும் ஒரு சிறு சபையினர் “மனச்சாட்சியின் சதந்திரத்தை அனுபவிப்பதற்காக இருளின் எதிர்ப்பு இல்லாத—எதேச்சாதிகார ஆவியின் நடமாட்டமில்லாத இடத்தில், தூரமாக—பாதுகாப்பாக இருப்பதற்காக ஒரு இளைப்பாறும் இடத்தைக் கண்டார்களா? இதோ சமாதானமான, வெற்றி உள்ள, வலிமைமிக்க இடத்தைப் பாருங்கள்.... அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக் கொடிகளைத் தாங்கி இருந்தனர்” என்பதாக தமது பரதேசப் பயண அமைப்பாளர்களைப்பற்றிய சொற்பொழிவில் எட்வர்ட் எவரெட் என்பவர் கூறினார்.—Speech delivered at Plymouth,Massachusetts,Dec. 22,1824, page 11. (18)

அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக, இரண்டு கொம்புகளை உடையதாக இருந்தது. ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான கொம்புகள், இளமை களங்கமின்மை—சாதுவான தன்மை ஆகிய ஐக்கிய அமெரிக்காவின் சுபாவத்துக்குப் பொருத்தமான தன்மைகளை உடையதாக, 1798–ல் எழும்பிவருவதாக தீர்க்கதரிசிக்கு எடுத்துக்காட்டப்பட்டது. தங்கள் நாட்டை

விட்டு வெளியேற்றப்பட்டு, அரசாங்கத்தின் ஒடுக்குதல், குருமார்களின் சகிப்புத்தன்மையற்ற தன்மை (பலாத்காரம்) ஆகியவைகளிலுமிருந்து ஒரு புகலிடம் கண்டடைந்து, அவர்கள் சமூக சுதந்திரம், சமயச் சுதந்திரம் என்னும் பரந்த அஸ்திவாரத்தின்மீது ஒரு அரசாங்கத்தை அமைக்கத் தீர்மானித்தனர். சகல மனிதர்களும் சமமாகப் படைக்கப்பட்டுள்ளனர். வாழ்க்கை, சுதந்திரம், மகிழ்ச்சியில் நாட்டம் ஆகியவைகளில் வேறுபடுத்தமுடியாத உரிமைகளைப் பெற்றவர்களாக உள்ளனர். ஓட்டெடுப்பின் மூலமாகத் தெரிந்தெடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகள், சட்டங்களை இயற்றி, அவைகளை நடைமுறைப்படுத்தலாம் என்கிற சுயஅரசு என்னும் உரிமையை மக்களுக்கு அரசியலமைப்பு உத்தரவாதம் செய்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது மனச்சாட்சியின் விருப்பப்படி தேவனைத் தொழும் உரிமையாகிய சமயச் சுதந்திரமும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. குடியரசுக் கோட்பாடும், புரொட்டஸ்டாண்டு கோட்பாடும் அந்த நாட்டின் அடிப்படைக் கொள்கைகள் ஆயின. இந்தக் கொள்கைகள் அந்த நாட்டின் வல்லமை, செழுமை ஆகியவைகளின் இரகசியமாக இருக்கின்றன. கிறிஸ்தவ உலகம் முழுவதிலும் உள்ள ஒடுக்கப்பட்டவர்களும் காலின் கீழிட்டு மிதிக்கப்பட்ட வர்களுமாயிருந்தவர்கள், ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும் இந்த நாட்டை நோக்கித் திரும்பினர். லட்சக்கணக்கானவர்கள் அதன் கரைகளைத் தேடி வந்தடைந்தனர். பூமியின் மிகுந்த வல்லமையுள்ள நாடுகளில் ஒன்று என்ற இடத்தைப் பற்றும்படி ஐக்கிய அமெரிக்க உயர்ந்தெழுந்திருக்கிறது. (19)

ஆனால் ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாகக் கொம்புகளை உடையதாக இருந்த அந்த மிருகம் வலுசர்ப்பத்தைப்போல் பேசினது. “அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது. அன்றியும், அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின்முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று”– வெளி. 13:11–14. (20)

ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான கொம்பும், வலுசர்ப்பத்தைப் போன்ற பேச்சும் ஆகிய அடையாளங்கள், இவ்வாறாகக் குறிப்பிடப்படும் நாட்டின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் நன்கு தெரியக்கூடிய முரண்பாடு இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. அந்த சட்டமன்றங்கள், நீதித் துறை

ஆதிகாரிகள் ஆகியவர்களின் செயல்கள்தான் பேச்சு என்று உள்ளது. ஆனால் அப்படிப்பட்ட செயல்கள், அந்த நாட்டின் அஸ்திவாரமாக முன்வைக்கப்பட்டுள்ள சுதந்திரம், சமாதானம் ஆகிய கொள்கைகளுக்கெதிரான பொய்யாகிவிடும். வலுசர்ப்பத்தையும் சிறுத்தையையும் போன்றவைகளால் குறிக்கப்பட்ட நாடுகளால் வெளிக்காட்டப்பட்ட சகிப்புத்தன்மையின்மை, உபத்திரவம் செய்தல் ஆகிய ஆவியின் முன்னேற்றத்தை அது வலுசர்ப்பத்தைப்போல் பேசி, முந்தின மிருகத்தின் வல்லமை முழுவதையும் நடப்பிக்கும் என்னும் முன்அறிவிப்பு தெளிவாக அறிவிக்கிறது. இரண்டு கொம்புள்ள மிருகம், முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படிச் செய்தது என்னும் அறிக்கை, அந்த நாட்டின் அதிகாரம் போப்பு மார்க்கத்திற்கு வணக்கத்தைச் செலுத்த சில காரியங்களைக் கடைப்பிடிக்க வற்புறுத்தவிருப்பதை அடையாளப்படுத்துகிறது. (21)

அப்படிப்பட்ட செயல் அந்த நாட்டின் அரசாங்கத்தின் கொள்கை களுக்கும் அதன் சுதந்திர அமைப்பின் அறிவிற்கும் சுதந்திரப் பிரகடனத்திலுள்ள பக்திவிநயமான பிரதிக்கினைகளுக்கும் அரசியலமைப் பிற்கும் நேர் எதிரானதாக உள்ளது. சபை, மதச்சார்பற்ற வல்லமையைத் தனதாக எடுத்துக்கொள்ளும்போது, சகிப்புத்தன்மை யின்மை, உபத்திரவம் ஆகியவை தவிர்க்க முடியாததாகிவிடும். இதைத் தவிர்ப்பதற்கான பாதுகாப்புச்செய்ய, அந்த நாட்டிற்கு அஸ்திவரமிட்டவர்கள் ஞானமாக வகைதேடினர். மத அமைப்பு எதற்கும் மதிப்புக் கொடுக்கவும் அல்லது அது சுதந்திரமாக இயங்குவதைத் தடைசெய்யாமலிருக்கவும் அமெரிக்கச் சட்டமாமன்றம் சட்டம் இயற்றியது. ஐக்கிய மாகாணங்களில் உள்ள எந்தப் பொது வேலைக்குமான தகுதியைச் சோதிப்பதற்கு, எந்த விதமாக மத சம்பந்தப்பட்ட தேர்வும் ஒருபோதும் அவசியமாக்கப்படக்கூடாது என்று அரசியலமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. நாட்டின் சுதந்திரத்திற்கும், வெளிப்படையான கேட்டிற்கும் சமூகப்பாதுகாப்பையும் மீறினால் மட்டுமே, மதசம்பந்தமான எந்தக் கடைப்பிடிப்பையும் சமூக அதிகாரத்தால் கண்டிக்கமுடியும், ஆனால் பொருத்தமற்ற அப்படிப்பட்ட நடவடிக்கை அதன் அடையாளமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைவிட, எந்த வகையிலும் பெரிதல்ல. ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான கொம்புகளை உடைய மிருகம், செயலில் தூய்மையானதாகவும் சாதுவானதாகவும் தீங்கு செய்யாததாகவும் இருந்த மிருகம், இப்பொழுது வலுசர்ப்பத்தைப் போல் பேசுகிறது! (22)

மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. சட்டமியற்றும் வல்லமை மக்களிடம் உள்ளது என்னும் ஒரு அரசாங்க அமைப்பு இங்கு தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

தீர்க்கதரிசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நாடு—ஐக்கிய அமெரிக்க நாடு தான் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டான சான்றாக உள்ளது. (23)

ஆனால் மிருகத்தின் சொரூபம் என்றால் என்ன? அது எவ்வாறு அமைய இருக்கிறது? அந்த சொரூபம் இரண்டு கொம்புள்ள மிருகத்தால் செய்யப்பட்டு, அது முதலாம் மிருகத்தின் சொரூபமாக உள்ளது. அது மிருகத்தின் சொரூபம் என்றும் அழைக்கப்படுகிறது. அப்படியானால், அந்த சொரூபம் எதைப்போன்று இருக்கிறது என்பதை அறிய நாம் மிருகத்தின் குணலட்சணங்களையே—போப்பு மார்க்கத்தையே ஆராய வேண்டும். ஆரம்பகால சபை சுவிசேஷத்தின் எளிமையைவிட்டுப்பிரிந்துசென்று, அஞ்ஞானச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் ஏற்றுக்கொண்டு, அது தன்னிடமிருந்த தேவனுடைய ஆவியையும், வல்லமையையும் இழந்துவிட்டபோது, கறைப்பட்டுப்போயிற்று. மக்களின் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்துவதற்காக அது மதச்சார்பற்ற வல்லமையின் ஆதரவைத் தேடினபோது, அது கறைபட்டுப்போனது. அதன்பலன் நாட்டின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி, தனது நலனை மேம்பாடடையச் செய்வதற்காக அதைச் செயல்படுத்தி, குறிப்பாக (அதற்கு எதிரான) மதவிரோதத்தை தண்டிக்கும் ஒரு சபையாக போப்புமார்க்கம் உருவானது. ஐக்கிய அமெரிக்க நாட்டில், மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டுபண்ணுவதற்காக, மார்க்க வல்லமையானது, சமூகத்தையும் அரசாங்கத்தையும் கட்டுப்படுத்தியாகவேண்டும். சபை தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள, அரசாங்க அதிகாரத்தையுங்கூடப் பயன்படுத்திக்கொள்ளும். (24)

சபைக்கு எப்பொழுதெல்லாம் சமயச் சார்பற்ற வல்லமை கிடைத்ததோ, அப்பொழுதெல்லாம் அது தனது கோட்பாடுகளிலிருந்து வேறுபட்டிருப்பவர்களைத் தண்டிக்க அந்த வல்லமையைப் பயன்படுத்தியது. உலக வல்லமைகளுடன் உறவை ஏற்படுத்திக் கொண்ட புரொட்டஸ்டாண்டு சபைகள், ரோமன் கத்தோலிக்க சபையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அதைப்போலவே மனச்சாட்சியின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வாஞ்சையை வெளிக்காட்டியுள்ளது. இங்கிலாந்து சபையைவிட்டுப் பிரிந்துசென்றவர்களின்மீது செயல்படுத்தப்பட்ட நீண்டநாள் உபத்திரவம் இதற்கு ஒரு உதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்து சபைக்கு இணங்காத ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தங்களது சபையைவிட்டு வெளியேறும்படி வற்புறுத்தப்பட்டு, போதகர்களும் விசுவாசிகளுமாயிருந்த அநேகர் அபராதத்திற்கும், சிறைவாசத்திற்கும், சித்திரவதைக்கும், இரத்தசாட்சிகளாவதற்கும் உள்ளானார்கள். (25)

ஆரம்பகால சபையின் மருள விழுகைதான் சமுக அரசாங்கத்தின் உதவியை நாடும்படி வழிநடத்தினது. அது போப்புமார்க்கம் முன்னேற்றமடைவதற்கான வழியை ஆயத்தப்படுத்தினது. "விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன்" வெளிப்படுவான் (2 தெச. 2:3) என்று பவுல் கூறினார். அதைப்போலவே, சபையின் மருளவிழுகை மிருகத்தின் சொரூபத்திற்கு வழியை ஆயத்தம்செய்யும். (26)

கர்த்தரின் வருகைக்குமுன் முதலாம் நூற்றாண்டில் உண்டானதுபோல, மார்க்கத்தன்மையில் ஒரு வீழ்ச்சி நிலவும் என்று வேதாகமம் கூறுகிறது. "மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர் களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகி களாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியரா யிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு." "ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்." "அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும்" (2 தீமோ. 3:1–5; 1 தீமோ. 4:1,2; 2தெச. 2:9–11) சாத்தான் செயல் ஆற்றுவான். "அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்"–2 தெச. 2:12. இவ்விதமான தெய்வபக்தி இல்லாத நிலைமை உண்டாகும்போது, முதலாம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த அதே பலன்கள் பின்தொடரும். (27)

புரொட்டஸ்டாண்டு சபைகளில் உள்ள வேற்றுமையான நம்பிக்கைகளை சரிப்படுத்த வற்புறுத்தலினால் ஒரு வேற்றுமையை உண்டுபண்ண எந்த ஒரு முயற்சியையும் மேற்கொள்ளமுடியாது என்பதே, முடிவான சான்றாக அநேகரால் கருதப்படுகிறது. ஆனால் புரொட்டஸ்டாண்டு விசுவாசமுடைய சபைகளில் பொதுவான கோட்பாட்டின் அடிப்படையில் உண்டாகக்கூடிய ஒற்றுமைக்கு அனுகூலமான, பலமிக்கதாக வளர்ந்துவரும்

நுண்ணுணர்வுகள் பல ஆண்டுகளாக உள்ளன. இப்படிப்பட்ட ஒரு ஒற்றுமைகள் முக்கியமானவைகளாக இருந்தபோதிலும், எல்லோராலும் ஒத்துக்கொள்ளமுடியாத விஷயங்களின்மீது விவாதம் செய்வதை விட்டுவிடவேண்டியது அவசியமாகும். (28)

கி.பி.1846–ம் வருடத்தில் சார்லஸ் பீச்சர் என்பவர் ஒரு பிரசங்கத்தின்போது, "சுவிசேஷ பரொட்டஸ்டாண்டு சபைகளின் உழியம் வழிநெடுகிலும் மனித பயம் என்னும் நிர்பந்தத்ததினால் அமைக்கப்பட்டது மட்டுமின்றி, அடிப்படையில் ஊழல்மிக்க காரியங்களிலேயே அவர்கள் நகர்ந்து மூச்சுவிட்டு வாழுகின்றனர். சத்தியத்தை மூடி மறைப்பதற்காக அவர்களது கீழ்த்தரமான தன்மைகளுக்கு இறங்கி, மருளவிழுகையின் வல்லமையின்முன் தங்களுடைய முழங்கால்களை மடக்கி மண்டியிடுகின்றனர். ரோமன் கத்தோலிக்கர்களுடனுள்ள காரியங்கள் இப்படிப்பட்டதாக இருந்ததில்லையோ! நாம் மறுபடியும் அதன் வாழ்க்கையின்படியே வாழ்ந்துகொண்டிருப்பதில்லையா! நமக்குச் சற்று முன்னால் நாம் எதைக் காண்பிக்கிறோம்! இன்னொரு பொதுக்குழு! ஒரு உலக மாநாடு! சுவிசேஷ சம்பந்தம்! உலகளாவிய சபை!—Sermon on "The Bible a Sufficient Creed," delivered at Fort Wayne,Indiana,Feb. 22,1846. முழுமையான ஒற்றுமைக்காக இதை அடைந்துகொள்ளும்போது, அது நிர்ப்பந்தத்திற்கு வகைதேடும் ஒருபடியாக அமையும்" என்றார். (29)

ஐக்கிய அமெரிக்க நாட்டிலுள்ள தலையாய சபைகள், தங்களுக்கு இடையிலுள்ள பொதுவான கோட்பாடுகளின் அடிப்படையில் ஒன்றுசேரும்போது, தங்களுடைய அமைப்புகளைத் தாங்குவதற்காக, வற்புறுத்தும் சட்டங்களை இயற்ற அவை அரசை வசீகரிக்கும்போது, புரொட்டஸ்டாண்டு அமெரிக்காவானது, ரோமன் கத்தோலிக்க மதத்தலைமைக்கு ஒரு சொரூபத்தை உண்டுபண்ணும். அப்பொழுது பிரிவினைக்காரர்களின்மீது உபத்திரவங்களும், சமுக தண்டனைகளும் தவிர்க்கமுடியாத பலனாக நிகழும். (30)

இரண்டு கொம்புகளுடைய மிருகம், "சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும் படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது"–வெளி. 13:16–17. "அவர்களுக்குப் பின்னே மூன்றாம்தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது

தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடிப்பான்" (வெளி. 14:9,10) என்பது மூன்றாம் தூதனின் எச்சரிப்பாக உள்ளது. இரண்டுகொம்புள்ள மிருகத்தின் வற்புறுத்துதலினால், தொழுதுகொள்ளப்பட்ட இந்தத் தூதில் உள்ள மிருகம், முதலாம் மிருகமாக அல்லது வெளி. 13–ம் அதிகாரத்தில் காணப்படும் சிறுத்தையைப்போன்ற மிருகமாக—போப்புமார்க்கமாக உள்ளது. மிருகத்தின் சொரூபம் என்பது புரொட்டஸ்டாண்டு சபைகள் தங்களுடைய பிடிவாதமான கோட்பாட்டை வற்புறுத்துவதற்காக அரசு வல்லமையின் உதவியைத் தேடும்போது, உண்டாகக்கூடிய மருளவிழுந்த புரொட்டஸ்டாண்டுமார்க்கத்தின் அமைப்பை எடுத்துக்காட்டுகிறது. மிருகத்தின் அடையாளம் என்பது இனிமேல் விளக்கப்பட உள்ளது. (31)

மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குவதற்கு எதிரான எச்சரிப்பைக் கொடுத்தபின், " தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர் களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்" (வெளி. 14:12) என்று தீர்க்கதரிசனம் அறிவிக்கிறது. தேவனுடைய கற்பனையைக் காத்துக்கொள்ளுகிறவர்கள், மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கி, அதன் அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் இடையிலுள்ள ஒப்பிடும் வேற்றுமையான இடத்தில் வைக்கப்படுவதினால், தேவனுடைய கற்பனைகளைக் காத்துக்கொள்ளுதல் ஒருபக்கத்திலும் அதற்கெதிரான மீறுதல் மறுபக்கத்திலும் இருப்பது தேவனை வணங்குபவர்களுக்கும் மிருகத்தை வணங்குபவர்களுக்கும் இடையில் உள்ள தெளிவான வேற்றுமையை எடுத்துக்காட்டுகிறது. (32)

மிருகத்தின் விசேஷமான குணலட்சணங்களும், அதன் காரணமாக அதன் சொரூபத்தின் தன்மையும் தேவனுடைய கற்பனைகளைத் தகர்ப்பதாக உள்ளது. "காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்" என்று தானியேல் கூறுகிறான். பவுல் அந்த வல்லமைக்கு தன்னைத்தானே தேவனுக்கு மேலாக உயர்த்தும் பாவமனுஷன் என்று பெயரிடுகிறான். ஒரு தீர்க்கதரிசனம் மற்றொரு தீர்க்கதரிசனத்திற்கு வாழ்த்துரையாக உள்ளது. தேவனுடைய கற்பனையை மாற்றும் செயல் ஒன்றினால் மட்டுமே போப்பு மார்க்கத்தால் தன்னை தேவனுக்கு மேலாக உயர்த்தமுடிந்தது. இவ்விதமாக கற்பனை மாற்றப்பட்டுள்ளது என்பதை நன்கு புரிந்துகொண்டும், அதை எவர்கள் கைக்கொள்ளுகிறார்களோ, அவர்கள் அந்த மாற்றத்தை உண்டுபண்ணின வல்லமைக்கு அதிமேன்மையான மேன்மையைக்

கொடுக்கின்றவர்களாக இருப்பார்கள். போப்புமார்க்கத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் அப்படிப்பட்ட செயலானது, தேவனுக்குப் பதிலாக போப்புவுடன் உறவுகொள்ளும் ஒரு அடையாளமாக இருக்கும். (33)

தேவனுடைய கற்பனையை மாற்றுவதற்குப் போப்புமார்க்கம் முயன்றிருக்கிறது. விக்கிரக ஆராதனையைத் தடைசெய்யும் இரண்டாவது கற்பனையை கற்பனைகளிலிருந்து நீக்கிவிட்டது. ஏழாம்நாளை ஓய்வுநாளாக ஆசரிப்பதற்குப்பதிலாக, முதலாம் நாளை ஆசரிக்க அனுமதியைக் கொடுத்தது. நான்காவது கற்பனையையும் மாற்றியமைத்துள்ளது. மேலும் அது முதலாவது கற்பனையிலேயே உள்ளடக்கமாக இருப்பதினால், இரண்டாவது கற்பனை அவசியமற்றது. எனவே, அதனை நீக்குவதற்கு அதுவே காரணமென்று புரிந்துகெள்ளவேண்டும் என்றும், தேவன் அதை வடிவமைத்தவிதத்தில் அவர்கள் அதைக் கொடுத்திருக்கின்றனர் என்றும் போப்பிஸ்டுகள் வற்புறுத்துகின்றனர். தீர்க்கதரிசியினால் முன்னுரைக்கப்பட்ட மாற்றமாக இது இருக்கமுடியாது. வேண்டுமென்றே—திட்டமிட்டே செய்யப்பட்டுள்ள மாற்றமாக இருக்கிறது. அவன் காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான். நான்காம் கற்பனையில் உண்டுபண்ணப்பட்ட மாற்றம், தீர்க்கதரிசனத்தை மிகச்சரியாக நிறைவேற்றுகிறது. ஏனெனில் இதற்கான ஒரே அதிகாரத்தின்மீது உரிமைபாராட்டுதல் சபையினுடையதாக உள்ளது. இங்கு போப்புமார்க்க வல்லமையானது, தன்னை வெளியரங்கமாக தேவனுக்கும் மேலாக வைக்கிறது. (34)

நான்காவது கற்பனையானது, தேவனின் சிருஷ்டிக்கும் வல்லமையின் அடையாளமாக இருக்கிறது. மனிதனின் பக்தி, தொழுகை ஆகியவைகளின்மீதுள்ள அவரது உரிமைக்கு அது சாட்சியாக இருக்கிறது. எனவே, நான்காவது கற்பனையின்மீது வைத்திருக்கும் மதிப்பின் காரணமாக, தேவனைத் தொழுபவர்கள் மிகச்சிறப்பாக குறிப்பிடத்தக்கவர்களாக தெளிவுபடுத்திக் காட்டப்படுகின்றனர். மிருகத்தைத் தொழுபவர்கள் சிருஷ்டிகரின் நினைவுச்சின்னத்தைத் தகர்த்தெறியும் அவர்களது முயற்சியினாலும், ரோமன் கத்தோலிக்க சபை ஏற்படுத்தின அமைப்பை உயர்த்துவதினாலும், தெளிவாக வேறுபடுத்திக் காட்டப்படுவார்கள். போப்புமார்க்கம் தனது தற்பெருமை மிக்க உரிமைகளை ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பில்தான் உறுதிப்படுத்தியது. அது அரசு வல்லமையை முதலாவது கையாண்டது. ஞாயிற்றுக்கிழமையைக் கர்த்தருடைய நாளாக ஆசரிக்க வற்புறுத்தும் செயலில்தான் இருந்தது. ஆனால் வேதாகமம் முதல்நாளை கர்த்தருடைய நாளாகச் சுட்டிக்காட்டாமல், ஏழாவது நாளைத்தான் சுட்டிக்காட்டுகிறது. மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்று கிறிஸ்து கூறினார். ஏழாம்நாள் கர்த்தருடைய ஓய்வுநாள்

என்று நான்காவது கற்பனை அறிவிக்கிறது. கர்த்தர் ஏசாயா தீர்க்தரிசியினால் அந்த நாளை என்னுடைய பரிசுத்தநாள் என வடிவமைத்தார். (மாற்கு 2:28; ஏசாயா 58:13). (35)

கிறிஸ்து ஓய்வுநாளை மாற்றிவிட்டார் என்பதாக அடிக்கடி முன்வைக்கப்படும் உரிமைபாராட்டுதல், அவரது சொந்த வார்த்தைகளினாலேயே தவறு என்பதாக மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிற தற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்" (மத்தேயு 5:17–19) என்று இயேசு அவரது மலைப்பிரசங்கத்தில் கூறினார். (36)

ஓய்வுநாளின் மாற்றத்திற்கான அதிகாரத்தை வேதவாக்கியங்கள் கொடுப்பதில்லை என்பது புரொட்டஸ்டாண்டுகளால் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். அமெரிக்கன் டிராக்ட் சொசைட்டி, அமெரிக்கன் சண்டே ஸ்கூல் யூனியன் ஆகியவைகளின் வெளியீடுகளில் இது தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை (வாரத்தின் முதல் நாள்) ஓய்வுநாள் என்பதைப்பற்றிய ஏதாவது தெளிவான கட்டளை அல்லது சம்பந்தப்பட்ட காரியத்தில் புதிய ஏற்பாட்டின் முழுமையான மௌனத்தை இந்த வெளியீடுகளில் ஒன்று ஒப்புக்கொள்ளுகிறது.—George Elliott,The Abiding Sabbath,page 184. (37)

கிறிஸ்துவின் மரணம்வரை அந்தநாளில் மாற்றம் செய்யப்படவில்லை. ஆவணங்கள் காட்டும்வரை, அவர்கள் (அப்போஸ்தலர்கள்) ஏழாம்நாளை நீக்கம்செய்து, அதற்குப்பதிலாக வாரத்தின் முதலாம்நாளை ஆசரிக்கவேண்டும் என்ற தெளிவான கட்டளை எதையும் கொடுக்கவில்லை.—A. E. Waffle,The Lord's Day,pages 186–188. (38)

ஓய்வுநாள் தங்களது சபையால்தான் மாற்றப்பட்டது என்று ரோமன் கத்தோலிக்கர்கள் ஒப்புக்கொண்ட ஞாயிற்றுக்கிழமையை புரொட்டஸ்டாண்டுகள் ஆசரிப்பதின்மூலம், அவர்கள் அதன் வல்லமையை அங்கீகரிக்கின்றனர் என்று அறிவிக்கின்றனர். கிறிஸ்தவ மதத்தின் கத்தோலிக்க

வேதபாடம் என்னும் நூலில், நான்காம் கற்பனைக்குக் கீழ்ப்படிந்து ஆசரிக்கப்படவேண்டிய நாளைப்பற்றிய ஒரு கேள்விக்குப் பதிலாக, பழைய சட்டத்தின் காலத்தில் சனிக்கிழமை பரிசுத்தமாக்கப்பட்ட நாளாக இருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்துவினால் போதிக்கப்பட்டு, தேவ ஆவியினால் இயக்கப்பட்ட சபை, சனிக்கிழமைக்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமையை ஏற்படுத்தினது. எனவே, இப்பொழுது நாங்கள் ஏழாம்நாளுக்குப் பதிலாக, முதல்நாளைப் பரிசுத்தப்படுத்துகிறோம் என்று கூறுகிறது. (39)

ஓய்வுநாளை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றிய அதே நடவடிக்கையை புரொட்டஸ்டாண்டுகள் அனுமதித்து, ஞாயிற்றுக்கிழமையை ஆசரிப்பதினால், பண்டிகை நாட்களை ஏற்படுத்தவும் பாவத்தின்கீழ் நடத்தவும் உள்ள கத்தோலிக்கசபையின் வல்லமையை ஏற்கச்செய்வது கத்தோலிக்கசபையின் அதிகாரத்தின் அடையாளமாக உள்ளது என்று போப்புமார்க்க எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர்.—Henry Tuberville,An Abridgment of the Christian Doctrine,page 58. அப்படியானால் ஓய்வுநாள் மாற்றம் என்பது, ரோமன் கத்தோலிக்க சபையின் அதிகாரத்தின் அடையாளம் தான் என்றால், மிருகத்தின் முத்திரை என்பது அல்லாமல் வேறு என்ன? (40)

ரோமன் கத்தோலிக்க சபையின் மேலாதிக்கத்தின்மீதுள்ள அதன் உரிமையை விட்டுவிலகவில்லை. புரொட்டஸ்டாண்டு சபைகள் வேதாகம ஓய்வுநாளை ஏற்றுக்கொள்ளுவதினால், அவைகள் இந்த அனுமானத்தை ஒத்துக்கொள்கின்றனர். அவர்கள், இந்த மாற்றத்திற்கு பாரம்பரியம், முற்பிதாக்கள் ஆகியோரின் அதிகாரத்தின்மீது உரிமைபாராட்டலாம். இப்படிச்செய்வதினால், அவர்களை ரோமன் கத்தோலிக்கச் சபையிலிருந்து வேறுபடுத்தும் அதே கொள்கைகளை—வேதாகமம்! வேதாகமம் ஒன்றுதான் புரொட்டஸ்டாண்டு மக்களின் மதமாக இருக்கிறது என்பதை அவர்கள் கவனிக்காமல் விட்டுவிடுகின்றனர். இந்தக் காரியத்தில் உள்ள உண்மைகளுக்குத் தங்கள் கண்களை வேண்டுமென்றே மூடிக்கொள்ளுவதன் மூலமாக, போப்பு மார்க்கவாதிகள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொண்டிருப்பதை அவர்களால் காணமுடியும், ஞாயிறு ஆசரிப்பை வற்புறுத்தும் இயக்கம் ஆதரவைப் பெறும்போது, அது காலப்போக்கில் புரொட்டஸ்டாண்டு உலகம் முழுவதையும் தனது துகில் கொடியின்கீழ் கொண்டுவரமுடியும் என்ற நிச்சயத்தில் மகிழ்ச்சி அடைகிறது. (41)

புரொட்டஸ்டாண்டுகள் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிப்பது என்பதானது ரோமன்கத்தோலிக்க மார்க்கத்தின் அதிகாரத்திற்கு அவர்களாகவே வணக்கம் செலுத்துவதாகும் என்று ரோமன் கத்தோலிக்க சபையினர்

அறிவிக்கின்றனர்.—Mgr. Segur, Plain Talk About the Protestantism of Today,page 213. புரொட்டஸ்டாண்டுகள் தங்கள் பங்காக ஞாயிற்றுக் கிழமையை ஆசரிக்க வற்புறுத்துவது போப்புமார்க்கத்தை வணங்கும்படிச் செய்யும் ஒரு வற்புறுத்தலாக—மிருகத்தை வணங்குவதாக இருக்கிறது. நான்காவது பிரமாணத்தின் உரிமைகளைப் புரிந்துகொண்டு, உண்மையான ஓய்வுநாளுக்குப் பதிலாகத் தவறான ஓய்வுநாளை அனுசரிக்கத் தேர்ந்து கொள்ளுவதினால், எந்த வல்லமையால் அந்தக் கட்டளை உண்டாயிருக்கிறதோ, அதற்கு வணக்கம் செலுத்துகின்றனர். ஆனால் மதச்சார்பற்ற வல்லமை, ஒரு மத சம்பந்தமான கடமையைச் செய்யும்படி வற்புறுத்தும் அதே செயலினால், சபைகள் தாங்களாகவே மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டுபண்ணும். எனவே ஐக்கிய அமெரிக்க நாட்டில் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கவேண்டும் என்னும் ஒரு வற்புறுத்தல் என்பது மிருகத்தையும் அதன் செரூபத்தையும் வணங்குவதற்காகச் செய்யப்படும் ஒரு வற்புறுத்தலாக இருக்ககும். (42)

ஆனால், கடந்த தலைமுறைகளில் இருந்த கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையை ஆசரித்தபோது, அவர்கள் வேதாகம ஓய்வுநாளை ஆசரிப்பதாக எண்ணிக்கொண்டிருந்தனர். ஆனால் இப்போது ரோமன் கத்தோலிக்க உறவைத் தவிர்க்காதவர்களாயும் ஞாயிற்றுக்கிழமைதான் தெய்வீகத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஓய்வுநாள் என்றும், நேர்மையாக நம்பும் உண்மைக் கிறிஸ்தவர்கள் உள்ளனர். தேவன் அவருக்கு முன்னுள்ள அவர்களது நோக்கத்தின் நேர்மையையும், நாணயத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறார். ஆனால் ஞாயிறு ஆசரிப்பு சட்டத்தின் மூலமாக வற்புறுத்தப்படும்போது, உண்மையான ஓய்வுநாள் கோரும் கடமைகள் என்ன என்பதைப்பற்றி உலகம் முழுவதும் ஒளி அடையும்போது, எவர்கள் ரோமன் கத்தோலிக்கச் சபையைவிட மேலான அதிகாரத்தை உடையதாக இராத ஒரு கற்பனைக்குக் கீழ்ப்படிவதற்காக தேவனுடைய கற்பனையை மீறுவார்களோ, அவர்கள் அதன் காரணமாக போப்புமார்க்கத்தை, தேவனைவிட மேன்மையாக மதிப்பார்கள். சபைக்கும், ரோமன்கத்தோலிக்க சபையால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பை வற்புறுத்தும் வல்லமைக்கும் வணக்கம் செலுத்துகின்றனர். தேவனுடைய அதிகாரத்தின் அடையாளம் என்று அறிவித்த அமைப்பை மனிதர்கள் நிராகரித்து, அதற்குப்பதிலாக ரோமன்கத்தோலிக்க மார்க்கத்தின் மேலாதிக்கத்தின் அடையாளமாகத் தேர்ந்தெடுத்திருப்பதை மேன்மைப்படுத்தும்போது, அவர்கள் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்துடன் உறவு கொள்ளும் அடையாளமாகிய மிருகத்தின் முத்திரையை ஏற்றுக்கொள்ளுவார்கள். மக்கள் முன்பாக இந்தப் பிரச்சினை இவ்விதமாகத் தெளிவாக வைக்கப்படாதவரை, அவர்கள் தேவனுடைய

கற்பனைகளுக்கும், மனிதனுடைய கற்பனைகளுக்கும் இடையில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும்படி கொண்டுவரப்படும்போது, எவர்கள் தொடர்ந்து மீறுவார்களோ, அவர்கள் மிருகத்தின் முத்திரையைப் பெறுவார்கள். (43)

அழிவுக்குரிய மக்களுக்கு இதுவரை ஒருபோதும் அறிவிக்கப்பட்டிராதவிதத்தில், மிகப் பயங்கரமான எச்சரிப்பு மூன்றாம் தூதனுடைய தூதில் உள்ளது. இரக்கம் கலவாத தேவனுடைய கோபத்தை அழைக்கின்ற ஒரு பயங்கரமான பாவமாக அது இருந்தாகவேண்டும். இந்த முக்கியமான காரியத்தைப்பற்றி, மனிதர்கள் இருளில் விடப்பட்டவர்களாக இருக்கமாட்டார்கள். அனைவரும் ஏன் துன்பப்படுகின்றனர் என்பதை அறியவும், அவைகளிலிருந்து தப்பிக்கும் வாய்ப்பினை அடையவும், இந்தப் பாவத்திற்கு எதிராக தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிகழுமுன், உலகத்திற்கு அதைப்பற்றிய எச்சரிப்புக் கொடுக்கப்படவேண்டியதுள்ளது. பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும் பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் முதலாம் தூதன் அவனுடைய தூதைக் கொடுத்தாகவேண்டும் என்று தீர்க்கதரிசனம் அறிவிக்கிறது. அதே முத்தூதுகளின் ஒரு பகுதியாக இருக்கும் மூன்றாம் தூதனின் எச்சரிப்பு (முதலாம் தூதனின் தூதைவிட) குறைவான அளவில் வரக்கூடியதாக இருக்கப்போவது இல்லை. வானத்தின் மத்தியில் பறக்கும் ஒரு தூதனால், உரத்த சத்தமாக அறிவிப்பதற்காகத் தீர்க்கதரிசனத்தில் அது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அது உலகத்தின் கவனத்தைக் கவரும். (44)

இந்தப் போட்டியில் உள்ள பிரச்சினையில், கிறிஸ்தவ சமுகம் அனைத்தும் தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுபவர்கள் என்றும், மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கி, அதன் முத்திரையைப் பெற்றுக்கொள்ளுபவர்கள் என்றும் இருபெரும் வகுப்புகளாகப் பிரிந்துபோகும். சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள்—தரித்திரர், சுயாதீனர்—அடிமைகள் யாவரும் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்ளுவதற்கு வற்புறுத்த இணைந்தபோதிலும், தேவனுடைய மக்கள் அதைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். “அன்றியும், அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன். அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியான வருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள்

மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளி. 15:2,3) என்று பாடினதை பத்மு தீவின் தீர்க்கதரிசி காண்கிறான். (45) ★

26

# ஒரு சீர்திருத்தப் பணி!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 451–460)**

கடைசி நாட்களில் நிறைவேற்றப்படவேண்டிய ஓய்வுநாள் சீர்திருத்தப்பணியைப்பற்றி ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் இவ்விதமாக முன்னுரைக்கப்பட்டுள்ளது. "கர்த்தர் சொல்லுகிறார்: நீங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு, நீதியைச் செய்யுங்கள்; என் இரட்சிப்பு வரவும், என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது. இப்படிச் செய்கிற மனுஷனும், இதைப் பற்றிக்கொண்டிருந்து, ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரித்து, ஒரு பொல்லாப்பையும் செய்யாதபடி தன் கையைக் காத்துக்கொண்டிருக்கிற மனுபுத்திரனும் பாக்கியவான்." "கர்த்தரைச் சேவிக்கவும், கர்த்தருடைய நாமத்தை நேசிக்கவும், அவருக்கு ஊழியக்காரராயிருக்கவும், அவரைச் சேர்ந்து, ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரித்து, என் உடன்படிக்கையைப் பற்றிக்கொண்டிருக்கிற அந்நியபுத்திரர் அனைவரையும், நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்கதகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்"—ஏசாயா 56:1,2,6,7. (1)

"இஸ்ரவேலில் தள்ளுண்டவர்களைச் சேர்க்கிற கர்த்தராகிய ஆண்டவர்: அவனிடத்தில் சேர்க்கப்பட்டவர்களையல்லாமல் இன்னும் அவனிடத்தில் சேர்ப்பேன் என்கிறார்" (ஏசா. 56:8) என்பதான வார்த்தைகள் கிறிஸ்தவ காலத்திற்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது. சுவிசேஷத்தினால் புறஜாதியினர் சேர்க்கப்படுவது இதனால் முன்நிழலாகக் காட்டப்பட்டுள்ளது. தேவனுடைய கற்பனையில் முத்திரை நான்காவது கற்பனையில் காணப்படுகிறது. ஓய்வுநாளை மேன்மைப்படுத்துபவர்களின்மீது

ஒரு ஆசீர்வாதம் கூறப்பட்டது. இப்படியாக நான்காவது கற்பனையின் கட்டளையானது, கிறிஸ்துவின் சிலுவை மரணம்,உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகியவற்றுடன் இந்த மகிழ்ச்சி மிக்க செய்தியானது அவருடைய ஊழியக்காரர்களால் தேசங்களனைத்திற்கும் பிரசங்கிக்க வேண்டிய காலம்வரை தொடர்கிறது. (2)

"சாட்சி ஆகமத்தைக் கட்டி, என் சீஷருக்குள்ளே வேதத்தை முத்திரையிடு என்றார்" (ஏசா. 8:16) என்று அதே தீர்க்கதரிசியினால் கர்த்தர் கட்டளையிடுகிறார். தேவனுடைய கற்பனையின் முத்திரை நான்காவது கற்பனையில் காணப்படுகிறது. பத்துக் கற்பனையைக் கொடுப்பவரின் பெயரையும், பதவியையும் பார்வைக்குக் கொண்டுவருகிறது. அவர் வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தவர் என்று அறிவித்து, மற்றெல்லோருக்கும் மேலாக பக்திக்கும் தொழுகைக்கும் உரியவராக அவர் இருக்கிறார் என்னும் அவரது உரிமைபாராட்டுதலை அது அறிவிக்கிறது. இந்தக் கற்பனையைத் தவிர, வேறு எந்தக் கற்பனையினாலும், அவரது அதிகாரத்தினால்கற்பனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக்காட்டமுடியாது. போப்புமார்க்க வல்லமையினால், ஓய்வுநாள் மாற்றப்பட்டபோது, அந்த முத்திரை கற்பனையிலிருந்து நீக்கப்பட்டது. நான்காவது கற்பனையிலுள்ள ஓய்வுநாளை சிருஷ்டிகரின் நினைவுச் சின்னமாகவும் அவரது அதிகாரத்தின் அடையாளமாகவும் உயர்த்தி, எடுத்துக் கட்டுவதற்கு இயேசுவின் சீடர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (3)

முரண்பாடுள்ள கோட்பாடுகளும் தத்துவ விளக்கங்களும் பெருகும் போது, அனைத்துக் கருத்துக்களும், கோட்பாடுகளும், தத்துவ விளக்கங்களும் சோதிக்கப்படுதற்கு தேவனுடைய கற்பனை ஒன்றுதான் தவறாத நியதியாக உள்ளது. "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" (ஏசா. 8:20) என்று தீர்க்கதரிசி கூறுகிறார். (4)

"சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே; எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி" (ஏசா. 58:1) என்ற கட்டளை மறுபடியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது துன்மார்க்கமான உலகத்திற்கு என்று கொடுக்கப்படாமல், என்னுடைய ஜனங்கள் என்று கர்த்தர் எவர்களைக் குறிக்கிறாரோ அவர்களது மீறுதல்களுக்காக, அவர்கள் கடிந்துகொள்ளப்பட வேண்டும். "தங்கள் தேவனுடைய நியாயத்தை விட்டு விலகாமல் நீதியைச் செய்துவருகிற ஜாதியாரைப்போல் அவர்கள் நாடோறும் என்னைத் தேடி, என் வழிகளை அறிய விரும்புகிறார்கள்; நீதி நியாயங்களை

என்னிடத்தில் விசாரித்து, தேவனிடத்தில் சேர விரும்புகிறார்கள்"–ஏசாயா 58:2. இங்கு தங்களைப் பற்றித் தாங்களே நீதியுள்ளவர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கும் ஒரு வகுப்பினர் தேவனுடைய சேவையில் மிகுந்த ஆர்வத்தை வெளிக்காட்டுபவர்களாகத் தோற்றமளிக்கும் ஒரு வகுப்பினர், காட்சிக்குக் கொண்டுவரப்படுகின்றனர். ஆனால் கடுமையாக பக்திவிநயமாக இருதயங்களை ஆராய்ந்து அறிபவரால் உண்டாகும் கடுமையான பக்திவிநயமான கடிந்துகொள்ளுதலானது, அவர்களை தெய்வீகப் பிரமாணங்களைக் காலின் கீழிட்டு மிதிப்பவர்களாக உள்ளனர் என்பதை மெய்ப்பிக்கிறது. (5)

கைவிடப்பட்டு பின்னர் விட்டுவிடப்பட்ட சட்டதிட்டங்களைத் தீர்க்கதரிசி, இவ்விதமாகச் சுட்டிக்காட்டுகிறார். "உன்னிடத்திலிருந்து தோன்றினவர்கள் பூர்வமுதல் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள்; தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய்; திறப்பானதை அடைக்கிறவன் என்றும், குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய். என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று"–ஏசாயா 58:12,14. இந்தத் தீர்க்கதரிசனம் நமது காலத்திற்கும் பொருந்தக்ககூடியதாக இருக்கிறது. ரோமன் கத்தோலிக்க வல்லமையினால் ஓய்வுநாள் மாற்றப்பட்டபோது, கற்பனையில் விரிசல் உண்டாக்கப்பட்டது. ஆனாலும் அந்த தெய்வீக அமைப்பை எடுத்துக்கட்டுவதற்கான வேளை வந்திருக்கிறது. அந்த விரிசல் சரிசெய்யப்பட்டு, தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திவாரங்கள் மீண்டும் உயர எழுப்பப்பட்டாக வேண்டும். (6)

சிருஷ்டிகரின் ஓய்வினாலும், ஆசீர்வாதங்களினாலும், பரிசுத்தப் படுத்தப்பட்டது ஓய்வுநாள். ஆதாமினால் அவனுடைய குற்றமற்ற தன்மையில் ஏதேனிலும், அவன் அந்த தனது மகிழ்ச்சிமிக்க தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னும், விழுந்துபோனவனும் மனம் திரும்பினவனுமான ஆதாமினால் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டிருந்தது. ஆபேல் முதல், நீதிமானான நோவா, ஆபிரகாம், யாக்கோபு ஆகிய முற்பிதாக்கள் அனைவராலும் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டிருந்தது. தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள்

எகிப்தில் அடிமைகளாக இருந்தபோது, விக்கிரக ஆராதனைக்கு நடுவில், அநேகர் தேவனுடைய கற்பனையைப்பற்றிய அறிவை இழந்திருந்தனர். ஆனால் இஸ்ரவேலர்களைக் கர்த்தர் விடுவித்தபோது, அவர்கள் அவருடைய சித்தத்தை அறிந்து, அவருக்குப்பயந்து, அவருக்கு எப்பொழுதும் கீழ்ப்படியவேண்டும் என்பதற்காக, அவர் திரள்கூட்டத்திற்கு முன்பாக நடுங்கவைக்கும் கம்பீரத்துடன், அவர் தமது கற்பனையை அறிவித்தார். (7)

அந்த நாள் தொடங்கி இந்த நாள்வரை, பூமியில் தேவனுடைய கற்பனையைப் பற்றிய அறிவு பாதுகாக்கப்பட்டு, நான்காவது கற்பனையில் உள்ள ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டுவருகிறது. தேவனுடைய பரிசுத்த நாளைக் காலின்கீழே மிதிப்பதில் பாவமனிதன் வெற்றியடைந்த போதிலும், அப்படிப்பட்ட அவனது மேலாதிக்கத்தின் காலத்திலுங்கூட, அதற்கு மேன்மையைச் செலுத்தியிருந்த, விசுவாசமுள்ள மக்கள் இரகசியமான இடங்களில் மறைந்திருந்திருந்தனர். சீர்திருத்தம் ஆரம்பமானதிலிருந்து, ஒவ்வொரு தலைமுறையிலும் அதைக் கடைபிடிப்பதிலும் ஆசரிப்பதிலும் தொடர்ச்சியாகச் சிலர் இருந்தனர். அடிக்கடி நிந்தைகளுக்கும் உபத்திரவங்களுக்கும் நடுவில் அவர்கள் இருந்த போதிலும், தேவனுடைய கற்பனையின் நித்தியத்துவத்திற்கும், சிருஷ்டிப்பின் ஓய்வில் உள்ள பரிசுத்தமான கடமைக்கும், தொடர்ச்சியான ஒரு சாட்சி தாங்கி நின்றது. (8)

வெளி. 14–ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுவரும் நித்திய சுவிசேஷம் சம்பந்தமாக இந்த சத்தியங்கள் கிறிஸ்துவின் வருகையின் போது, அவரது சபையை விசேஷப்படுத்திக்காட்டும். ஏனெனில் “தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக் கொள்ளுகிற பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்” (வெளி. 14:12) என்பது இந்த முத்தூதுகளின் பலன் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கர்த்தருடைய வருகைக்குமுன் கடைசியாகக் கொடுக்கப்படவேண்டியதாக இந்தத்தூது இருக்கிறது. இதன் அறிவிப்பைத் தொடர்ந்து, மனிதகுமாரன் பூமியின் விளைச்சலை அறுவடை செய்யும்படி வருவது தீர்க்கதரிசியால் காணப்பட்டது. (9)

பரிசுத்தஸ்தலம் பற்றியும் தேவனுடைய கற்பனையின் மாறாத தன்மைபற்றியும் ஒளியைப்பெற்றுக்கொண்டவர்களுக்கு சத்தியத்தின் அமைப்பிலுள்ள அழகும், இசைவும் அவர்களது புரிந்துகொள்ளுதலுக் கென்று திறக்கப்பட்டபோது, அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியினாலும் ஆச்சரியத்தினாலும் நிரப்பப்பட்டனர். இவ்வளவு விலையேறப்பெற்றதாக அவர்களுக்குத் தோன்றின ஒளியானது, மற்ற கிறிஸ்தவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அது மகிழ்ச்சியுடன்

ஏற்றுக்கொள்ளப்படுவதைத் தவிர வேறு விதத்தில் இருக்காதென்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் தங்களைக் கிறிஸ்துவின் அடியார்கள் என்று உரிமைபாராட்டின அநேகருக்கு, உலகத்திலிருந்து அவர்களை வேறுபடுத்திவைக்கக்கூடிய சத்தியங்கள் வரவேற்கப்படத்தக்கவையாக இல்லை. நான்காவது கற்பனைக்குக் கீழ்ப்படிவது ஒரு தியாகத்தை கட்டாயப்படுத்துகிறது. எனவே அதிலிருந்து பெரும்பான்மையினர் பின்வாங்கினர். (10)

ஓய்வுநாளின் உரிமைகள் முன்வைக்கப்பட்டபோது, அநேகர் உலகப்பிரகாரமான பார்வையுடன் காரணம் கண்டனர். நாங்கள் எப்பொழுதும் ஞாயிற்றுக்கிழமையை ஆசரித்துவந்திருக்கிறோம். எங்களது பிதாக்களும் அதையே ஆசரித்திருக்கின்றனர். அநேக நல்லவர்களும் பக்திமிக்கவர்களுமான மனிதர்கள் அதை ஆசரித்திருந்தே மகிழ்ச்சியுடன் இறந்துபோனார்கள். அவர்கள் சரியானவர்களாக இருந்திருந்தால், நாங்களும் சரியானவர்களாகத்தான் இருக்கிறோம். இந்தப் புதிய ஓய்வுநாளை ஆசரிப்பது எங்களை உலகத்திடமிருந்து இசைவற்றவர்களாக்கி, வெளியே வீசி எறிந்துவிடும். அப்போது அவர்கள்மீது எங்களுக்குச் செல்வாக்கு இருக்காது. ஞாயிற்றுக்கிழமையை ஆசரித்துவரும் உலகமனைத்திற்கும் எதிராக, ஏழாம்நாளை ஆசரிக்கும் ஒரு சிறு கூட்டத்தினரால் எதைச் சாதித்துவிடமுடியும்? இவ்விதமான வாதங்களினால்தான் யூதர்கள் கிறிஸ்துவை நிராகரித்தை நியாயப்படுத்த முயன்றனர். பலிமுறைகளைச் செலுத்தியதால் அவர்களது பிதாக்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்களாக இருந்தனர். அப்படியிருக்க அதே பாதையைப் பின்பற்றுவதனால் பிள்ளைகள் ஏன் இரட்சிப்பைக் காணமுடியாது? அப்படியே லுத்தரின் காலத்தில் உண்மையான கிறிஸ்தவர்கள் கத்தோலிக்க விசுவாசத்தில் மரித்தனர். எனவே, அந்த (கத்தோலிக்க)மதம் இரட்சிப்புக்குப் போதுமானது என்று போப்புமார்க்கத்தினர் காரணம் காட்டினர். அப்படிப்பட்ட காரணம் காணுதல், சகலவிதமான சமய விசுவாசம் அல்லது பழக்கம் ஆகியவைகளின் முன்னேற்றத்திற்கும், வலிமைமிக்க தடையாக இருக்கும் என்பதை மெய்ப்பிக்கும், (11)

ஞாயிறு ஆசரிப்பு என்பது சபையால் ஏற்படுத்தப்பட்ட கொள்கையாகவும், உலகெங்கும் பரவியுள்ள வழக்கமாகவும், நூற்றாண்டுகளாக உள்ளது என்றும் அநேகர் வற்புறுத்தினர். இந்த வாதத்திற்கு எதிராக ஓய்வுநாளும் அதன் ஆசரிப்பும் மிகப் பழமையானதும் அதிகமாகப் பரவினதுமாக இருந்து, அது பூமி எந்த அளவிற்கு மூப்புடையதாக உள்ளதோ, அந்த அளவிற்கு தேவனுடையதாகவும் தேவதூதர்களினுடையதாகவும், அங்கீகரிப்பை உடையதாகவும் உள்ளது என்று காட்டப்பட்டது. பூமிக்கு அஸ்திவாரமிட்டபோது, விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடினபோது,

தேவபுத்திரர் எல்லோரும் கெம்பீரித்தபோது, ஓய்வுநாளின் அஸ்திவாரம் இடப்பட்டது. இந்த அமைப்பு நமது பக்தியை நன்கு கோரலாம். அது மனித அதிகாரத்தினால் அபிஷேகம் பண்ணப்படாமலும், மனித பாரம்பரியங்களைச் சாராமலும் உள்ளது. அது நீண்ட ஆயுசுள்ளவரால் ஏற்படுத்தப்பட்டு, அவரது நித்திய வார்த்தையினால் கட்டளையிடப்பட்டிருந்தது. (12)

ஓய்வுநாள் சீர்திருத்தம்பற்றி மக்களின் கவனம் அழைக்கப்பட்டபோது, புகழ்பெற்ற ஊழியக்காரர்கள் தேவனுடைய வார்த்தையைமாற்றி, அதைப்பற்றி விசாரிப்பவர்களின் மனங்களை அமைதிப்படுத்துவதற்கு மிகச் சிறப்பாகப் பொருந்தக்கூடிய விதத்தில், விளக்கங்களை அதன் சாட்சியின்மீது வைத்தனர். தங்களுக்கென்று வேதவாக்கியங்களை ஆராயாதவர்கள், தங்களது விருப்பங்களுக்கு இசைவாக இருந்த முடிவுகளை ஏற்றுக்கொள்வதில் திருப்தி உள்ளவர்களாக இருந்தனர். வாதம், குதர்க்கம், பிதாக்களின் பாரம்பரியங்கள், சபையின் அதிகாரம் ஆகியவைகளினால் சத்தியத்தைக் கவிழ்க்க அநேகர் முயன்றனர். நான்காவது கற்பனையின் சொல்லுகிற தன்மையைப் பாதுகாக்க, அதற்காகப் பரிந்துபேசுபவர்கள் அவர்களது வேதாகமங்களுக்கு ஏவப்பட்டனர். சத்திய வார்த்தையை மட்டுமே ஆயுதமாகக் கொண்டிருந்த தாழ்மையான மனிதர்கள், கற்றறிந்த மனிதர்களின் தாக்குதல்களைச் சமாளித்து நிற்கவே, தங்களுடைய நூதனமான பேச்சுத் திறமை, பள்ளிகளில் இருந்த தந்திரம் ஆகியவைகள் வேத வாக்கியங்களில் தேர்ந்திருந்த நேர்மையும், எளிமையுமிக்க மனிதர்களுக்கு எதிராக வல்லமை அற்றதாக இருந்ததை அவர்கள் ஆச்சரியத்துடனும் கோபத்துடனும் கண்டனர். (13)

அவர்களுக்குச் சாதகமாக வேதாகமச் சான்று இல்லாமலிருந்தபோது, அநேகர் தங்களது களைப்பில்லாத பிடிவாதத்துடன் ... இதே காரணத்தால், கிறிஸ்துவிற்கும் அவரது சீடர்களுக்கும் எதிராக எவ்விதமாகச் செயல்படுத்தப்பட்டது என்பதை மறந்தவர்களாக, நமது பெரிய மனிதர்கள் இந்த ஓய்வுநாள் கேள்வியை ஏன் புரிந்துகொள்ளவில்லை? என்று கேட்டனர். ஆனால் நீங்கள் நம்புவதுபோலச் சிலர் நம்புகின்றனர். அதனாலேயே உலகத்திலுள்ள கற்றறிந்த மனிதர்கள் அனைவரும் தவறாகவா உள்ளனர். நீங்கள் மட்டும் சரியானவர்களா அப்படி இருக்கமுடியாது என்றனர். (14)

இப்படிப்பட்ட வாதங்கள் அனைத்தையும் மறுப்பதற்கு வேதவாக்கியங்களின் போதனைகளையும் எல்லாக்காலங்களிலும் கர்த்தர் தமது மக்களுடன் ஈடுபாடுகொண்டிருந்த வரலாற்றையும் குறிப்படுவது மட்டுமே அவசியமாக இருந்தது. எவர்கள் தேவனுடைய சத்தத்தைக்கேட்டு, அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறார்களோ, அவர்கள் மூலமாக தேவன்

பேசிச்செயலாற்றுகிறார். தேவைப்பட்டால், பலரும் அறிந்த பாவங்களைக் கடிந்துகொள்ள அஞ்சாதவர்கள் மூலமாக சுவையற்ற வார்த்தைகளில் பேசுகிறார். கற்றறிந்த மனிதர்களையும் மேலான பதவியில் உள்ளவர்களையும் சீர்திருத்த இயக்கங்களை நடத்துவதற்குத் தெரிந்துகொள்ளாத காரணம் என்னவெனில், அப்படிப்பட்டவர்கள், அவர்களது மன நம்பிக்கைகள், கோட்பாடுகள், இறையியல் மறைகள் ஆகியவைகளை நம்பி, தேவனால் போதிக்கப்படவேண்டிய அவசியம் இல்லை என்று உணருகின்றனர். ஞானத்தின் ஆதாரமாயிருப்பவருடன் உள்ள ஒரு நேரடியான உறவுமட்டுமே வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ளவும் விளக்கவும் தகுதி உடையதாக இருக்கின்றன. குறைவான பள்ளிக்கல்வியை உடையவர்கள் சில சமயங்களில் சத்தியத்தை அறிவிக்கும்படி அழைக்கப்படுகின்றனர். அவர்கள் கல்வி அறிவற்றவர்களாக இருப்பதினாலும் அல்லாமல், அவர்கள் போதிக்கப்படமுடியாத அளவிற்குச் சுயநிறைவு இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் பள்ளியில் பயிலுகின்றனர். அவர்களது பணிவும், கீழ்ப்படிதலும் அவர்களைப் பெரியவர்களாக்குகிறது. தேவனுடைய சத்தியத்தைப் பற்றிய அறிவை அவர்களிடம் ஒப்படைப்பதில் ஒரு மேன்மையை தேவன் அவர்கள்மீது வைக்கிறார். அதை ஒப்படைக்கும்போது, உலகப்பிரகாரமான மேன்மையும் பெரிய மனிதன் என்னும் தன்மையும் அடையாளம் தெரியாதவைகளாக மூழ்கிவிடுகின்றன. (15)

பரிசுத்தஸ்தலம், தேவனுடைய கற்பனை ஆகியவைகளைப் பற்றிய சத்தியங்களை அட்வென்டிஸ்டுகளில் பெரும்பான்மை யானவர்கள் நிராகரித்து, அட்வெந்து இயக்கத்தின் மீதிருந்த அவர்களது விசுவாசத்தை அநேகர் மறுதலித்து, அந்த ஊழியத்துடன் சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங்களில் சரியற்றதும் முரண்பட்டதுமான நோக்குகளைப் பொருத்தினர். கிறிஸ்துவின் வருகைக்கான ஒரு குறிப்பிட்ட நேரத்தைத் திரும்பத்திரும்பக் குறிக்கும் தவறுகளுக்குள் சிலர் நடத்தப்பட்டனர். இரண்டாம் வருகையைக் குறிக்கும் தவறுகளுக்குள் சிலர் நடத்தப்பட்டனர். இரண்டாம் வருகையைக் குறிக்கும் தீர்க்கதரிசன காலம் இருக்கவில்லை என்பதைப் பரிசுத்தஸ்தலம் என்னும் பொருளின்மீது இப்போது வீசிக்கொண்டிருக்கும் ஒளி அவர்களுக்குக் காட்டியிருந்திருக்கும். ஆனால் அவர்கள் அந்த ஒளியை விட்டு விலகி, கர்த்தரின் வருகையை எதிர்நோக்கி, அதற்கான நேரத்தைக் குறித்து ஒவ்வொரு தடவையிலும் ஏமாற்றமடைந்தனர். (16)

தெசலோனிக்கேயசபை கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய தவறான நோக்கினைப் பெற்றுக்கொண்டபோது, அவர்களுடைய நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் தேவனுடைய வார்த்தையினால் கவனமாகச் சோதிக்கும்படி அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுக்கு ஆலோசனை

கூறினார். கிறிஸ்துவின் வருகைக்குமுன் நடைபெறவேண்டிய தீர்க்கதரிசன நிகழ்ச்சிகளை அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவருடைய நாளில் அவரை எதிர்பார்ப்பதற்கான ஆதாரம் எதுவும் அவர்களுக்கு இல்லை என்பதை அவர் அவர்களுக்குக் காட்டினார். "எவ்விதத்தினாலும்" என்பது அவரது எச்சரிப்பின் வார்த்தையாக இருந்தது. வேதவாக்கியங்கள் அனுமதிக்காத எதிர்பார்ப்பை அவர்கள் வழக்கப்படுத்தினால், தவறான ஒரு செயலைப் பின்பற்றும்படி அவர்கள் நடத்தப்படவேண்டிய நிலை உண்டாகும். அவிசுவாசிகளினால் உண்டாகும் ஏளனத்திற்கும், ஏமாற்றத்திற்கும் ஆளாக நேரிடும். அதனால் அதைரியத்திற்கு இடமுண்டாக்கக்கூடிய அபாயத்திற்குள்ளாக நேரிடும். அவர்களது இரட்சிப்பிற்கு அத்தியாவசியமான சத்தியங்களின்மீது சந்தேகம் அடையக்கூடிய சோதனைகளுக்கு உள்ளாவார்கள். தெசலோனிக்கேயருக்கு அப்போஸ்தலன் கொடுத்த எச்சரிப்பில் கடைசிக் காலத்தில் வாழுபவர்களுக்கான முக்கியமான பாடம் அடங்கியிருந்தது. கர்த்தருடைய வருகையின் ஒரு குறிப்பான நேரத்தின்மீது தங்களுடைய விசுவாசத்தை வைக்காதவரை, அவர்களால் ஆயத்தம்செய்யும் பணியும் வைராக்கியமும் அக்கறையும் உள்ளவர்களாக இருக்கமுடியாது என்று அநேக அட்வென்டிஸ்டு இயக்கத்தினர் உணர்ந்தனர். ஆனால் அவர்களது நம்பிக்கைகள் அழிக்கப்படுவதற்கென்று மறுபடியும் மறுபடியும் உணர்ச்சியால் தூண்டப்படும்போது, தீர்க்கதரிசனங்களின் பெரும் சத்தியங்களால் நன்கு உணர்த்தப்படமுடியாத அளவிற்கு அவர்களது விசுவாசம் அப்படிப்பட்ட அதிர்ச்சியைப் பெறுகிறது. (17)

முதலாம் தூதைக் கொடுக்கும் பணியில், நியாயத்தீர்ப்பிற்கான ஒரு குறிப்பிட்ட நேரம்பற்றிய, அந்தத் தூதை அடிப்படையாகக்கொண்டு, கணிக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசன காலங்கள் 1844–ம் வருடம் இலையுதிர் காலம் 2300 நாட்களின் முடிவை வைத்திருந்ததானது, கண்டன மற்றதாக இருக்கிறது. அந்தத் தீர்க்கதரிசன காலங்களின் ஆரம்பம், முடிவு ஆகியவைகளைப்பற்றிய புதிய தேதிகளைக் கண்டறிவதற்காகத் திரும்பத் திரும்பச் செய்யப்பட்ட முயற்சிகளும், இந்த நிலைகளைத் தாங்குவதற்குத் தேவையாக இருந்த சரியற்ற காரணம் காட்டுதலும், மனங்களை நிகழ்கால சத்தியங்களில் இருந்து தூரமாக நடத்துவது மட்டுமின்றி, அந்தத் தீர்க்கதரிசனங்களை விளக்கும் எல்லா முயற்சிகளின்மீதும் கண்டனத்தை வீசுகிறது. இரண்டாம் வருகைக்கென்று எந்த அளவிற்கு அதிகமாக ஒரு நேரம் குறிக்கப்படுகிறதோ, அந்த அளவிற்கு அதிகமாக அது சாத்தானின் நோக்கங்களுக்குச் சாதகமாக அமைகிறது. அந்த நேரம் கடந்துசென்றபின் அதற்காகப் பரிந்து பேசுபவர்களுக்கெதிராக, அவன் பரிகாசத்தையும் கண்டனத்தையும் தூண்டிவிட்டு, இப்படியாக 1843, 1844–ல் நிகழ்ந்த பெரும்

அட்வெந்து இயக்கத்தின்மீது நிந்தையைச் சுமத்துகிறான். இந்தத் தவறில் பிடிவாதமாக இருப்பவர்கள் இறுதியில் கிறிஸ்துவின் வருகைக்கென்று மிகவும் அதிக தூரமான ஒரு நாளைக் குறிப்படுகின்றனர். இப்படியாக அவர்கள் ஒரு தவறான பாதுகாப்பில் இளைப்பாறும்படி நடத்தப்பட்டு, அது காலம் கடந்துவிட்டது என்கிற வரை, அநேகர் வஞ்சிக்கப்படாதவர்களாக இருக்கமாட்டார்கள். (18)

பண்டைய இஸ்ரவேலர்களின் வரலாறானது அட்வெந்து அமைப்பின் கடந்தகால அனுபவத்திற்கு எடுத்துக்காட்டான ஒரு உதாரணமாக உள்ளது. இஸ்ரவேல் மக்களை தேவன் எகிப்திலிருந்து நடத்தியதைப் போலவே மிகவும் பெரிய அட்வெந்து இயக்கத்திலும் நடத்தினார். எபிரெயர்களின் விசுவாசமானது செங்கடலில் சோதிக்கப்பட்டதுபோலவே, மிகவும் பெரிய அந்த ஏமாற்றத்தினால் அட்வெண்டிஸ்டுகளின் விசுவாசமும் சோதிக்கப்பட்டது. அவர்களது கடந்த கால அனுபவத்தில் அவர்களுக்கு வழிகாட்டியிருந்த கரத்தின் மீது அவர்கள் இன்னும் நம்பிக்கை உடையவர்களாக இருந்திருந்தார்களானால், தேவனால் உண்டாகக்கூடிய இரட்சிப்பை அவர்களால் கண்டிருந்திருக்கமுடியும். அந்தப்பணியில் அனைவரும் ஐக்கியப்பட்டவர்களாக இருந்து, 1844–ல் பெற்றுக்கொண்ட முத்தூதை, பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அறிவித்திருந்தால், அவர்களது முயற்சிகளுடன் சேர்ந்து கர்த்தரும் பலமாகக் கிரியை செய்திருந்திருப்பார். உலகத்தின்மீது ஒரு ஒளிவெள்ளம் பாய்ந்திருக்கும். பல வருடங்களுக்கு முன்பாகவே பூமியின் குடிகள் எச்சரிக்கப்பட்டிருந்திருப்பார்கள். இறுதிப்பணி முடிவடைந்திருக்கும். இயேசு கிறிஸ்துவும் அவருடைய மக்களின் மீட்பிற்காக வந்திருந்திருப்பார்! (19)

இஸ்ரவேல் மக்கள் நாற்பது வருடங்கள் வனாந்திரத்தில் அலைந்து திரியவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாக இருக்கவில்லை. அவர்களை நேரடியாகக் கானான் தேசத்திற்குள் நடத்தி, ஒரு பரிசுத்தமான மகிழ்ச்சிமிக்க மக்களாக மாற்றியமைக்க அவர் விரும்பினார். ஆனால் அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமற்போயிற்று. (எபி. 3:19). மருளவிழுகையினால் அவர்கள் வனாந்தரத்தில் அழிந்தார்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த தேசத்தில் பிரவேசிக்கும்படி மற்றவர்கள் எழுப்பப்பட்டனர். அதேவிதமாகக் கர்த்தருடைய வருகையும் நீண்ட காலம் தாமதிக்கப்படவேண்டும் என்பதும், பாவமும் வருத்தமுமிக்க இந்த உலகில் அவரது ஜனங்கள் அநேக வருடங்கள் இருக்கவேண்டும் என்பதும், தேவனுடைய சித்தமாக இருக்கவில்லை. ஆனால் அவநம்பிக்கை தேவனிடமிருந்து அவர்களைப் பிரித்தது. அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்த பணியை அவர்கள் செய்ய மறுத்ததினால், அந்தத் தூதை அறிவிக்க

மற்றவர்கள் எழுப்பப்பட்டனர். எச்சரிப்பைக் கேட்பதற்குப் பாவிகளுக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கவேண்டும் என்பதற்காகவும், தேவனுடைய வாதை ஊற்றப்படுவதற்குமுன் அவருக்குள் ஒரு அடைக்கலத்தைக் காணவும் வேண்டி, இந்த உலகத்தின்மீதுள்ள இரக்கத்தினால், இயேசு அவரது வருகையைத் தாமதப்படுத்திக்கொண்டிருக்கிறார். (20)

கடந்துபோன காலங்களில் இருந்தபடியே அந்தக் காலங்களில் உள்ள பாவங்களையும் தவறுகளையும் கண்டிக்கும் ஒரு சத்தியம் முன்வைக்கப்படுவது எதிர்ப்பை எழும்பச்செய்யும். “பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்”—யோவான் 3:20. மனிதர்கள் தங்களின் நிலை வேதவாக்கியத்திற்கு இசைவானதாக இல்லை என்பதைக் காணும்போது, தங்களது அனைத்துத் தவறான வழிகளின் நிலைமையையும் தொடர அநேகர் தீர்மானம்செய்து, பெரும்பான்மை இல்லாத சத்தியத்தின் சார்பில் நிற்பவர்களின் சுபாவத்தையும் நோக்கத்தையும் தீய ஆவியுடன் தீவிரமாகத் தாக்குகின்றனர். யுகங்கள் நெடுகிலும் இதே கொள்கை தொடரப்பட்டுள்ளது. இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் எலியா என்று அறிவிக்கப்பட்டது. எரேமியா ராஜ துரோகி என்னப்பட்டான். அந்தநாள்முதல் இந்தநாள்வரை சத்தியத்திற்கு உண்மையான பக்தி உள்ளவர்களாக இருந்தவர்கள் துரோகம் செய்பவர்கள் என்றும், மதவிரோதிகள் என்றும், பிரிந்துசெல்லும் குணமுடையவர்கள் என்றும், பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றனர். மேலும் அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனங்களை ஏற்றுக்கொள்ள நம்பிக்கையில்லாத திரள்கூட்டமானவர்கள் நாகரிகமான பாவங்களைக் கண்டிப்பதற்குத் துணிபவர்களுக்கெதிராக கேள்விக்கிடமற்ற—எளிதில் நம்பக்கூடிய குற்றச்சாட்டுகளைப் பெறுவார்கள். இப்படிப்பட்ட ஆவியானது மேலும்மேலும் அதிகரிக்கும். நாட்டின் சட்டங்கள் தேவனுடைய கற்பனைகளுடன் முரண்படும்போது, தேவனுடைய கற்பனைகள் அனைத்திற்கும் எவர்கள் கீழ்ப்படிகிறார்களோ அவர்கள் தீங்குசெய்பவர்களாக எண்ணப்பட்டு, நிந்தையையும் தண்டனையையும் சந்திக்கத் துணியவேண்டிய காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதை வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. (21)

இதன் காரணமாக சத்தியத்தின் ஊழியக்காரனின் கடமை என்ன? அதன் உரிமைகளிலிருந்து விலகிச்செல்லுவதற்கும் அல்லது தடுப்பதற்கும் மனிதர்களை எழுப்புவதே அதன் விளைவாக இருப்பதினால், சத்தியம் பிரசங்கிக்கப்படக்கூடாததாக உள்ளது என்று அவன் தீர்மானிக்கலாமா? அப்படி அல்ல! அது முந்திய சீர்திருத்தக்காரர்கள் அடைந்திருந்ததைவிட அதிகமான எதிர்ப்பை நிறுத்திவைப்பதற்கு அதிகப்படியான எவ்விதமான

காரணமும் அவனிடம் இல்லை. பின்வரும் தலைமுறையினரின் நன்மைக்காக பரிசுத்தமானவர்கள், இரத்தசாட்சிகள் ஆகியோரின் விசுவாச அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது. தேவனுக்குச் சாட்சியாக நிற்கும்படி அழைக்கப்பட்டுள்ளவரின் தைரியத்தைத் தூண்டிவிடுவதற்காக பரிசுத்தத்திற்கான அந்த உயிருள்ள உதாரணங்களும் அசையாத நேர்மையும் இறங்கி வந்துள்ளன. அவர்கள் தங்களுக்கு மட்டுமென்று கிருபையையும் சத்தியத்தையும் பெற்றுக்கொள்ளாமல், அவர்கள் மூலமாக உலகம் தேவனைப்பற்றிய அறிவினால் ஒளியடையவேண்டும் என்பதற்காக அவைகளைப் பெற்றிருந்தனர். இந்தத் தலைமுறையிலுள்ள தேவனுடைய ஊழியக்காரர்களுக்காக அவர் ஒளியைக் கொடுத்திருக்கிறாரா? அப்படியானால் அவர்கள் அந்த ஒளியை உலகத்தில் பிரகாசிப்பதற்காகச் செயலாற்றவேண்டும். (22)

“இஸ்ரவேல் வீட்டாரோவெனில், உனக்குச் செவிகொடுக்கமாட்டார்கள்; எனக்கே செவிகொடுக்கமாட்டோம் என்கிறார்களே; இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும் கடினமான நெற்றியும் முரட்டாட்டமுள்ள இருதயமும் உள்ளவர்கள்.” “மனுபுத்திரனே, நீ அந்தக் கலகவீட்டாரைப்போலக் கலகக்காரனாயிராமல், நான் உன்னோடே சொல்லுகிறதைக் கேள்; உன் வாயைத் திறந்து நான் உனக்குக் கொடுக்கிறதைப் புசி என்றார்”—எசே. 3:7 2:7. “சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே; எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி” (ஏசா. 58:1) என்பது இந்த நேரத்தில் தேவனுடைய ஊழியக்காரனுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாக உள்ளது. (23)

“மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன். நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்” (எசே. 3:17–19) என்று கூறும் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கும் பக்திவிநயமும், பயங்கரமுமிக்க பொறுப்பு—இஸ்ரவேலின்

தீர்க்கதரிசிக்கு இருந்ததுபோன்ற பொறுப்பு—சத்தியத்தின் ஒளியைப் பெற்றுக் கொண்டவனுக்கு அவனது வாய்ப்பு பிரிவடைந்துசெல்லும் தூரமெங்கிலும் அறிவிக்கின்ற பக்திவிநயமும், பயங்கரமுமிக்க பொறுப்பாக உள்ளது. (24)

சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுவதும் அதைப் பறைசாற்றுவது மாகிய இரு காரியங்களிலும் உள்ள பெரும் தடை என்னவென்றால், அதில் வசதியின்மையும் அவமானமும் சம்பந்தப்பட்டுள்ளது என்னும் உண்மை ஆகும். சத்தியத்திற்கு எதிராக உள்ள இந்த ஒரே ஒரு வாதம் மட்டும் அதன் பரிந்துபேசுபவர்களால் ஒதுபோதும் மறுக்கமுடியாததாக உள்ளது. ஆனால் கிறிஸ்துவின் உண்மையான அடியார்களை இது அதைரியப்படுத்துவதில்லை. அவர்கள் கூறும் சத்தியம் மக்களால் விரும்பப்படுவதற்காகக் காத்திருப்பதில்லை. அவர்களது கடமையைப்பற்றி மனதிருப்தி அடைந்தவர்களாக அவர்கள் நன்கு யோசித்து சிலுவையை ஏற்றுக்கொண்டு, "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது"–2 கொரி. 4:17. "இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷ ங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்"–என்று பண்டைய முதியவரான பவுல் அப்போஸ்தலனுடன் சேர்ந்து எண்ணுகின்றார். (25)

மத சம்பந்தமான காரியங்களில், கொள்கைகளைவிட சட்டங்களின்படிச் செயல்படுபவர்கள், அவர்களது தொழில் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அவர்கள் தங்களுடைய இருதயத்தில் உலகத்தை சேவிக்கிறவர்களாகவே உள்ளனர் என்பது சரியாக இருக்கிறது என்பதினாலேயே நாம் சரியானதைத் தெரிந்துகொண்டு விளைவுகளைத் தேவனிடத்தில் விட்டுவிடவேண்டும். கொள்கை, விசுவாசம், துணிவு ஆகியவை உள்ள மனிதர்களுக்கு உலகம் அதன் பெரும் சீர்திருத்தத்திற்காக கடமைப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட மனிதர்களால் இந்தக் காலத்திற்குரிய சீர்திருத்தங்களின் ஊழியம் முன்சென்றாக வேண்டும். "நீதியை அறிந்தவர்களே, என் வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்களே, எனக்குச் செவி கொடுங்கள்; மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இருங்கள். பொட்டுப்பூச்சி அவர்களை வஸ்திரத்தைப்போல் அரித்து, புழு அவர்களை ஆட்டுமயிரைப்போல் தின்னும்; என்னுடைய நீதியோ என்றென்றைக்கும் நிலைக்கும், என் இரட்சிப்புத் தலைமுறை தலைமுறைதோறும் இருக்கும்" (ஏசா. 51:7,8) என்கிறார் ஆண்டவர். (26)

★

27

# நவீன எழுப்புதல்கள்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 461–478)**

எங்கெல்லாம் தேவனுடைய வார்த்தை விசுவாசத்துடன் பிரசங் கிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் தெய்வீக ஆதி (Origin)க்கு அத்தாட்சி தரும் பலன்கள் அதனைப் பின்தொடர்ந்துள்ளன. தேவஆவியானவர் அவரது ஊழியக்காரரின் தூதுடன் சேர்ந்துசெல்லவே, அந்த வார்த்தை வல்லமையுடன் இருந்தது. பாவிகள் தங்களது மனச்சாட்சிகள் எழுப்பப்பட்டதை உணர்ந்தனர். உலகத்திலே வந்து, எந்த ஆத்துமாவையும் பிரகாசிப்பிக்கிற அந்த ஒளி ஆத்துமாக்களின் இருதய அறைகளை ஒளிப்படுத்தியது. இருளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த காரியங்கள் வெளியரங்கமாயின. அவர்களது மனங்கள் இருதயங்கள் ஆகியவைகளை ஆழ்ந்த மன உணர்த்துதல்கள் பற்றிக்கொண்டன. பாவம்—நீதி—வரவிருக்கும் நியாயத் தீர்ப்பு ஆகியவைபற்றிய நம்பிக்கையை அடைந்தனர். யேகோவாவின் நீதியைப்பற்றிய புலனுணர்வை அடைந்து, இருதயங்களை ஆராய்பவருக்குமுன் தங்களுடைய குற்றங்களுடனும் அசுத்தத்தன்மையுடனும் தோன்றவேண்டியிருப்பதை உணர்ந்தனர். “நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?” (ரோமர் 7:24) என்று வேதனையுடன் அழுதனர். மனிதர்களின் பாவத்திற்காக முடிவற்ற விதத்தில் செலுத்தப்பட்ட தியாகபலியுடன் கல்வாரிச் சிலுவை வெளிப்படுத்தப்பட்டது. அவர்களுடைய மீறுதல்களுக்கான பாவநிவாரண மாக, மனிதனைத் தேவனுடன் ஒப்பபுரவாக்கக்கூடிய கிறிஸ்துவின் புண்ணியங்கள் மட்டுமே இருக்கிறதை அவர்கள் கண்டனர். உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை அவர்கள் விசுவாசத்துடனும் தாழ்மையுடனும் ஏற்றுக்கொண்டனர். கடந்தகாலப் பாவங்களுக்கான பாவமன்னிப்பை அவர்கள் இயேசுவின் இரத்தத்தின் மூலமாகப் பெற்றிருந்தனர். (1)

இந்த ஆத்துமாக்கள் மனந்திரும்புதலுக்குத் தேவையான கனியைக் கொண்டுவந்தன. அவர்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுப் புதிய வாழ்க்கையை நடத்துவதற்கென்று எழுந்தனர். கிறிஸ்து இயேசுவிற்குள் புதியவர்களாக இருந்தார்கள். கடந்தகால பழைய இச்சையின்படியான வேஷத்தை அணிந்துகொண்டவர்களாக அவர்கள் இருக்கவில்லை. தேவகுமாரனின்மீதுள்ள விசுவாசத்தினால் அவரது சுபாவத்தைப் பிரதிபலித்துக்காட்டவும், அவர் தூய்மையானவராக இருப்பதுபோல், அவர்களும் தூய்மையானவர்களாக இருக்கவும், அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களாக இருந்தனர். ஒரு சமயத்தில் அவர்கள் எவைகளை வெறுத்திருந்தார்களோ அவைகளை அவர்கள் இப்பொழுது நேசித்தனர். ஒரு நேரத்தில் அவர்கள் எவைகளை நேசித்திருந்தார்களோ அவைகளை அவர்கள் இப்போது வெறுத்தனர். அகந்தையுடன் தன்னைத்தான் பெரியவன் என்று எண்ணியிருந்தவர்கள், தாழ்மையுடன் எளிமையும் உள்ளவர்க ளானார்கள். வீணரும் கர்வமுள்ளவர்களுமாக இருந்தவர்கள், அக்கரை உள்ளவர்களும், துடுக்குத்தனம் இல்லாதவர்களுமானார்கள். தேவ நிந்தனையாளர்களாக இருந்தவர்கள் பக்தியுள்ளவர்களானார்கள். மதுபானப்பிரியர் அதை விட்டுவிட்டனர். அசுத்தமானவர்கள் தூய்மை உள்ளவர்களானார்கள். வீணான உலக அலங்காரங்கள் அனைத்தும் ஒதுக்கிவைக்கப்பட்டன. “மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது”–1பேதுரு 3:3–4. (2)

இருதயத்தை ஆழமாக ஆராய்வதுடன் தாழ்மையையும் எழுப்புதலையும் அது கொண்டுவந்தது. கிறிஸ்துவின் இரத்தத்தைக் கிரையமாகப் பெற்றுக்கொள்ளும்படி பாவிக்குக் கொடுக்கப்பட்ட அக்கரைமிக்க பக்திவிநயமான வேண்டுகோளினால், அவை எடுத்துக்காட்டப்பட்டன. ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக ஆண்களும் பெண்களும், தேவனிடம் ஜெபித்துப் போராடினர். சுயமறுப்பு—தியாகம் ஆகியவைகளை விட்டுப் பின்வாங்காமல், கிறிஸ்துவிற்காக நிந்தையையும் சோதனையையும் அனுபவிக்கத் தகுதி உடையவர்களாக எண்ணப்பட்டதற்காக மகிழ்ந்த ஆத்துமாக்களில், அப்படிப்பட்ட எழுப்புதல்களின் கனிகள் காணப்பட்டன. கிறிஸ்துவின் பெயரை அறிக்கை செய்துகொண்டிருந்தவர்களின் வாழ்க்கையில் உண்டான மாற்றத்தை மனிதர்கள் கண்டனர். அவர்களது செல்வாக்கினால் அந்தச் சமுதாயம் நன்மை அடைந்தது. அவர்கள் கிறிஸ்துவுடன் சேர்ந்து,

நித்திய ஜீவனுக்கான அறுவடைக்கென்று ஆவிக்கானவைகளுக்காக விதைத்தனர். (3)

“இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று. இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள்”–2 கொரி. 7:9–11. (4)

இதுதான் தேவஆவியின் செயலின் பலனாக உள்ளது! சீர்திருத்தம் செயல்படாதவரை உண்மையான மனந்திரும்புதலுக்கேதுவான சான்று இருக்காது. அவன்தான் ஆணையிட்டதைத் திரும்ப நடப்பித்து அவன் கொள்ளையடித்ததைத் திரும்பக்கொடுத்து, அவனுடைய பாவங்களை அறிக்கைசெய்து, தேவனையும் உடன் மனிதர்களையும் நேசிக்கும்போது, அந்தப் பாவியானவன் தான் தேவனுடன் சமாதானத்தைக் கண்டுவிட்டதாக நிச்சயித்துக்கொள்ளலாம். கடந்துபோன வருடங்களில் சமய எழுப்புதலின் காலங்களைப் பின்தொடர்ந்த விளைவுகள், அப்படிப்பட்டவைகளாக இருந்தன. அவர்களது கனிகளினால் நிதானிக்கப்பட்டபோது, அவர்கள் மனிதர்களின் இரட்சிப்பு, மனித இனத்தை உயர்த்துதல் என்னும் செயல்களுக்காக தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என அறியப்பட்டிருந்தனர். (5)

ஆனால் ஆரம்ப நாட்களில் தேவனுடைய ஊழியக்காரர்களுடன் தொடர்ந்து சென்ற தெய்வீகக் கிருபையின் வெளிக்காட்டுதலுக்கும், தற்காலத்திலுள்ள அநேக எழுப்புதல்களுக்குமிடையில், தெரியக்கூடிய அளவிற்கு வேற்றுமை காணப்பட்டது. பரந்த அளவிலான ஆர்வம் எழுப்பப் பட்டுள்ளது என்பது மெய்தான். அநேகர் மனமாறயியிருக்கின்றனர். ஏராளமானவர்கள் ஆலயங்களுக்குச் செல்லுகின்றனர். அப்படியிருந்தாலும் அவைகளின் விளைவுகள் அதற்கு இசைவான உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கையை அதிகரித்திருக்கிறது என்னும் நம்பிக்கையை அளிக்கவில்லை. சற்று நேரத்திற்குப் பிரகாசித்து எரியும் ஒளி, முன்னிருந்த இருளைவிட, அதிகமான இருளுக்குள் அணைந்துவிடுகிறது. (6)

கற்பனைகளைத் தூண்டும் வேண்டுகோள்கள், உணர்ச்சிகளைத் தூண்டிவிடுதல், புதிதும் திடுக்கிச்செய்யக்கூடியவைகளுமானவைகளை அனுபவிக்கும் ஆசையைத் தூண்டுதல் ஆகியவைகளால், மக்களால் விரும்பப்படும் எழுப்புதல்கள் நடத்தப்படுகின்றன. இவ்விதமாக மாறினவர்கள் வேதாகம சத்தியங்களைக் கவனிப்பதில் விருப்பமற்றவர்களாக உள்ளனர். இவர்கள் தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் ஆகியவர்களின் சாட்சிகளில் விருப்பமற்றவர்களாக உள்ளனர். ஒரு தெய்வீக ஆராதனையில் ஏதாவதொரு வகையில் உணர்ச்சிகளின் கொந்தளிப்பு இல்லாதபோது, அது அவர்களுக்குக் கவர்ச்சி இல்லாததாக உள்ளது. உணர்ச்சியைத் தட்டி எழுப்பாத விவேகமிக்க விளக்கத்துடன் முன்வைக்கப்படும் ஒரு தூதானது, பிரதிபலிப்பை எழுப்புவதில்லை. தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்டாகும், அவர்களது நித்தியஜீவன் சம்பந்தப்பட்ட தெளிவான எச்சரிப்புகள் செவிசாய்க்கப்படாதவைகளாக உள்ளன. (7)

உண்மையான மதம்மாறின ஒவ்வொரு ஆத்துமாவிற்கும், தேவனுடனுள்ள உறவும் நித்தியகாரியங்களும் வாழ்க்கையின் பெரும் காரியமாக இருக்கும். தேவனுக்குத் தங்களை அர்ப்பணிக்கும் ஆவி, மக்களால் விரும்பப்படும் சபைகளில் இன்று எங்கே காணப்படுகிறது? மதம்மாறினவர்கள் அவர்களுடைய அகந்தையையும் உலக நேசத்தையும்விட்டு விலகவில்லை. அவர்கள் அவர்களது மதமாற்றத்திற்குமுன், சுயத்தை மறுக்கவும் சிலுவை யைச் சுமக்கவும் தாழ்மையும் எளிமையுமான இயேசுவைப் பின்பற்றவும் விருப்பமற்றவர்களாக இருந்ததைப்போலவே இப்போதும் உள்ளனர். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் சந்தேகப்படுபவர்களுக்கும் மதம் என்பது ஒரு விளையாட்டாகிவிட்டது. ஏனெனில் அதன் பெயரைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஏராளமானவர்கள், அதன் கொள்கைகளை அறியாதவர் களாக உள்ளனர். அநேக சபைகளில் இருந்து தெய்வபக்தியின் வல்லமை கிட்டத்தட்ட நீங்கியுள்ளது. வனபோஜனங்கள், சபை நாடகங்கள், சபை விழாக்கள், சிறந்த வீடுகள் தன்னை வெளிக்காட்டுதல் ஆகியவை தேவன் என்னும் நினைப்பை விரட்டி, நிலங்கள், பொருள்கள், உலகப்பிரகாரமான தொழில்கள் மனதைப் பற்றிக்கொள்ளவே, நித்தியமான காரியங்களின்மீதுள்ள ஆர்வம் அபூர்வமாக மனதின் கவனத்திற்கு வருகின்றன. (8)

விசுவாசமும் பக்தியும், கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போதும், இந்த சபைகளில் கிறிஸ்துவின் மெய்யான அடியார்கள் உள்ளனர். இந்த பூமியை தேவனின் இறுதி நியாயத்தீர்ப்பு சந்திக்க உள்ளது. அதற்குமுன் கர்த்தருடைய ஜனங்களுக்கிடையில், அப்போஸ்தலர்களின் காலத்திற்குப்பின் இதுவரை காணப்பட்டிராத விதத்திலுள்ள பண்டைய கால பக்தியை உடையதுபோன்ற எழுப்புதல் உண்டாகும். தேவனுடைய

ஆவியும் வல்லமையும் அவரது ஜனங்களின்மீது ஊற்றப்படும். அப்படிப்பட்ட நேரத்தில், தேவனுடைய அன்பு, அவருடைய வார்த்தை ஆகியவைகளுக்குப் பதிலாக இந்த உலகத்தின்மீதுள்ள ஆசையால் நிரப்பப்பட்டிருக்கும் சபைகளைவிட அநேகர் தங்களைத் தாங்களாகவே வேறுபடுத்திக்கொள்ளுவார்கள். கர்த்தரின் இரண்டாம் வருகைக்கு என்று ஒரு ஜனங்கள் ஆயத்தப்படுத்தப்பட உள்ளனர். இதற்கென்று தேவனால் ஏற்படுத்தப்பட்ட மாபெரும் சத்தியங்கள் அறிவிக்கப்படும். அந்த நேரத்தில் போதகரும், ஜனங்களுமாகிய இரு சாராருமான அநேகர் அவைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுவார்கள். இந்த உழியத்திற்கு இடையூறு செய்ய ஆத்துமாக்களின் எதிரி விரும்புகிறான். அப்படிப்பட்ட ஒரு இயக்கத்திற்கான நேரம் வருமுன்பாக, ஒரு போலியான இயக்கத்தை அறிமுகம்செய்து, அதைத் தடைசெய்ய அவன் முயலுவான். வஞ்சகமிக்க அவனது வல்லமைக்குள் கொண்டுவரக்கூடிய சபைகளில் தேவனுடைய விசேஷமான ஆசீர்வாதம் பொழியப்பட்டுள்ளது என்று தோன்றும்படிச்செய்வான். பெரும் சமய ஆர்வம் என்று எண்ணும்படியானவைகள் வெளிக்காட்டப்படும். அந்த ஊழியம் வேறொரு ஆவியினுடையதாக இருக்கும்போது, தேவன் அவர்களுக்காக ஆச்சரியமான விதத்தில் செயலாற்றுகிறார் என்று திரள்கூட்டமானவர்கள் வெற்றிச்சிரிப்புச் சிரிப்பார்கள். கிறிஸ்தவ உலகத்தின்மீதுள்ள செல்வாக்கை மதம் என்னும் வெளிவேஷத்தினால் விரிவடையச்செய்ய சாத்தான் வகைதேடுவான். (9)

கடந்த அரை நூற்றாண்டுகளில் நடந்துள்ள அநேக எழுப்புதல்களில், அதே செல்வாக்குகள்தான் செயலில் ஈடுபட்டிருக்கின்றன. அதைவிட அதிகமான அல்லது குறைவான அளவில் எதிர்காலத்திலுள்ள விசாலமான இயக்கங்களில் அது வெளிக்காட்டப்படும். தவறான வழியில் நடத்துவதற்குச் சரியாகப் பொருந்தக்கூடிய விதத்தில், சத்தியத்துடன் தவறும் கலக்கப்பட ஒரு உணர்ச்சிகளின் கொந்தளிப்பு உள்ளது. அப்படி இருந்தாலும் ஒருவரும் வஞ்சிக்கப்படவேண்டிய அவசியம் இல்லை. இந்த இயக்கங்களின் தன்மையை தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் தீர்மானிப்பது கடினமாயிருக்காது. வேதாகம சாட்சிகளை எங்கெல்லாம் மனிதர்கள் அலட்சியப்படுத்தி, சுயமறுப்பையும், உலகப்பிரகாரமான தன்மையை மறுப்பதையும் அவசிய மானதாக்குகின்ற ஆத்துமாவைச் சோதிக்கும் உண்மைகளை விட்டு விலகிச்செல்லுகிறார்களோ, அங்கெல்லாம் தேவனுடைய ஆசீர்வாதம் அருளப்படவில்லை என்று நாம் நிச்சயமுள்ளவர்களாக இருக்கலாம். அவர்களது கனிகளினால் அவர்களை அறிவீர்கள் என்று கிறிஸ்துதாமே கொடுத்திருக்கும் நியதி, இந்த இயக்கங்கள் தேவனுடைய ஆவியின் செயலினால் ஆனவை அல்ல என்பதற்குச் சான்றாக உள்ளது. (10)

தேவன் அவரது வார்த்தையிலுள்ள சத்தியங்களில் தம்மைப் பற்றிய ஒரு வெளிப்படுத்துதலை மனிதர்களுக்குக் கொடுத்திருக்கிறார். அவைகளை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் அவை சாத்தானின் வஞ்சகங்களிலிருந்து தடுக்கும் ஒரு கேடயமாக உள்ளது. இந்தச் சத்தியங்களை அலட்சியம்செய்வதுதான் இப்பொழுது சமய உலகில் விசாலமாகப் பரவிக்கொண்டிருக்கும் தீமைகளுக்கான கதவைத் திறந்துகொண்டிருக்கிறது. தேவனுடைய கற்பனையின் இயல்பு அதன் முக்கியத்துவம் ஆகியவைபற்றிய பார்வை பெருமளவிற்கு இழக்கப்பட்டுள்ளது. தெய்வீகப்பிரமாணத்தின் சுபாவம், நித்தியத்துவம், அது கோரும் கடமைகள் ஆகியவைபற்றிய தவறான எண்ணம், மதமாற்றம் பரிசுத்தமாக்கப்படுதல் ஆகிவைகளில் தவறை நடப்பித்து, அதனால் சபையின் பக்தியின் தரம் தாழ்வடையும் விளைவை உண்டுபண்ணியிருக்கிறது. நமது காலத்திலுள்ள எழுப்புதல்களில், தேவனுடைய ஆவியும் வல்லமையும் காணப்படாமல் இருப்பதற்கான இரகசியம் இங்கு காணப்படவேண்டியதாக உள்ளது. (11)

பலவேறுபட்ட சபைகளிலும் பக்திக்குப் பெயர் சிறந்தவர்கள் உள்ளனர். அவர்களால் இந்த உண்மை ஏற்கப்பட்டு, புலம்பப்பட்டுள்ளது. இப்போதுள்ள மத சம்பந்தமான அபாயங்களை பேராசிரியர் எட்வர்ட்ஸ் பார்க் என்பவர் திறமையுடன் முன்வைத்து இப்படிக் கூறுகிறார். “தெய்வீகப் பிரமாணத்தைப் பிரசங்கபீடம் வற்புறுத்தாமலிருப்பது ஆபத்துக்கு ஒரு ஆதாரமாக உள்ளது. கடந்துபோன நாட்களில் பிரசங்கபீடம் மனச்சாட்சியின் சத்தத்தின் எதிரொலியாக இருந்தது. நமது மிகச் சிறந்த பிரசங்கிமார்கள் தங்களது ஆண்டவரின் முன்மாதிரியைப் பின்பற்றி, பிரமாணத்திற்கும் அதன் கற்பனைகளுக்கும் பயமுறுத்தல்களுக்கும், முக்கியத்துவத்தைக் கொடுத்ததினால், அவர்களது பிரசங்கங்களுக்கும் ஒரு ஆச்சரியமான மகத்துவத்தைக் கொடுத்திருந்தனர். கற்பனை தெய்வீகப் பரிபூரணங்களின் மறுபடிவமாக உள்ளது. எந்த ஒரு மனிதன் கற்பனையை நேசிக்கவில்லையோ, அவன் சுவிசேஷத்தையும் நேசிக்காதவனாக இருக்கிறான். ஏனெனில் கற்பனையும், அதைப்போலவே சுவிசேஷமும், தேவனுடைய உண்மையான சுபாவத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்கிறது என்னும் இரு பெரும் வழக்குச்சொற்களை அவர்கள் திரும்பத்திரும்பக் கூறி இருந்தனர். இந்த அபாயம் அதன் அளவிற்கும் மதிப்புக்குறைவிற்கும் தக்கதாக பாவத்தில் உள்ள தீமையைக் குறைவாகக் கணக்கிடும் மற்றொன்றுக்கு வழி நடத்துகிறது. (12)

ஏற்கனவே பெயரிடப்பட்டுள்ள அபாயங்களுடன் இணைக்கப்பட்ட அபாயமாக தேவனுடைய நியாயத்தைக் குறைவாக மதிப்பிடுதல் உள்ளது. தெய்வீக நியாயத்தைத் தெய்வீக அனுதாபத்திலிருந்து வடிகட்டிப்

பிரித்து, அனுதாபத்தை ஒரு கொள்கையாக உயர்த்துவதைவிட, அதை நுண்ணுணர்வாக மூழ்கடிப்பது நவீன காலப் பிரசங்கபீடத்தின் தன்மையாக இருக்கிறது. புதிய தேவயியல் சம அளவுக் கண்ணாடி(சளைழ), தேவன் எவைகளை இணைத்திருக்கிறாரோ, அவைகளைக் கீழே போட்டுவிடுகிறது. தெய்வீகக் கற்பனை நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ எப்படி இருக்கிறது? அது நன்மையானதாகவே இருக்கிறது. அப்படியானால் நியாயம் நல்லது. அது கற்பனையை நடப்பிக்கும் ஒரு இயல்பாக இருக்கிறது. மனிதக் கீழ்ப்படியாமை பரந்தும் கீழ்த்தரமானதாகவும் இருக்கும். அளவை அனுசரித்து, தெய்வீக நியாயத்தையும் கற்பனையையும் தரக்குறைவாகக் கணக்கிடுதல் செய்யும் பழக்கத்தில் இருந்து, பாவநிவாரணத்தை ஏற்படுத்தியிருக்கும் கிருபையைத் தரக்குறைவாக மதிப்படும் பழக்கத்திற்குள், மனிதர்கள் எளிதில் சருக்கி விழுகின்றனர். இவ்வாறாக சுவிசேஷம் அதன் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் மனித மனங்களில் இழந்து, விரைவில் அவர்கள் வேதாகமத்தையே நடைமுறையில் ஒருபக்கமாக ஒதுக்கிவைத்துவிட ஆயத்தமாகின்றர். (13)

கிறிஸ்து தமது மரணத்தினால் நியாயப்பிரமாணத்தை அழித்துவிட்டார் எனவே மனிதர்கள் அதற்குக் கீழ்ப்படியும் கட்டாயத்திலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கின்றனர் என்று அநேக மத போதகர்கள் உறுதிபடுத்துகின்றனர். சிலர் அதை பாரமான நுகமாகவே காண்பிக்கின்றனர். கட்டளைகளுக்கு அடிமைப் பட்டிருக்கிறபோது அதற்கு எதிராக அனுபவிக்கும்படி சுவிசேஷ த்தின்கீழ் விடுதலையை கொடுக்கிறார்கள். (14)

ஆனால் தேவனுடைய பரிசுத்தமான கற்பனையைப்பற்றித் தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் அப்படிக் கருதவில்லை. "நான் உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறபடியால், விசாலத்திலே நடப்பேன்"– சங். 119:45. கிறிஸ்துவின் மரணத்திற்குப்பின் எழுதின அப்போஸ்தலனாகிய யாக்கோபு, நியாயப்பிரமாணத்தை "ராஜரீகப்பிரமாணம்" என்றும் "சுயாதீனப் பிரமாணம்" என்றும் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு அரை நூற்றாண்டிற்குப் பின்னர் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதின யோவான்: "ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி. 22:14) என்றார். (15)

கிறிஸ்து அவரது மரணத்தின் மூலமாக அவரது பிதாவின் கற்பனையை நீக்கிவிட்டார் என்பதான உரிமைபாராட்டுதலானது அஸ்திவார மில்லாததாக உள்ளது. கற்பனையை மாற்றுவதோ அல்லது ஒருபுறமாக நீக்கிவைப்பதோ சாத்தியமானதாக இருந்திருந்தால், அப்போது பாவத்தின்

தண்டனையிலிருந்து மனிதனைக் காப்பாற்றுவதற்காகக் கிறிஸ்து மரித்திருக்க வேண்டிய அவசியமும் இருந்திருக்காது. கற்பனையை நீக்குவதற்குப் பதிலாகக் கிறிஸ்து மரித்தது, கற்பனை மாற்றப்படமுடியாதது என்பதற்குச் சான்றாக உள்ளது. “நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களை யானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளா தேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்தி லுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்தேயு 5:17,18) என்று அவர் கூறினார். “என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது” (சங். 40:8) என்று அவர் தம்மைப்பற்றி அறிவிக்கிறார். (16)

தேவனுடைய கற்பனை அதன் இயல்பிலிருந்தே மாற்றமுடியாததாக உள்ளது. அதுவே அதன் வடிவமைப்பாளரின் சித்தம், சுபாவம் ஆகியவைகளின் ஒரு வெளிப்படுத்தலாக உள்ளது. தேவனிடம் அன்புகூருதல், மனிதரிடம் அன்புகூருதல் என்பது அதன் இரு பெரும் கொள்கைகளாக உள்ளன. “அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது”—ரோமர் 13:10. தேவனுடைய சுபாவம் நீதியும் சத்தியமுமாக உள்ளது. அவரது பிரமாணமும் அதே இயல்பை உடையதாக உள்ளது. “உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம். உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்;” (சங். 119:142,172) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். “நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது” (ரோமர் 7:12) என்று பவுல்அப்போஸ்தலன் கூறுகிறார். (17)

கற்பனைகளின் கொள்கைக்கு இசைவாக மனிதர்களைக் கொண்டுவந்து, அவர்களை தேவனுடன் ஒப்புரவாக்குதல் என்பது மதமாற்றம் பரிசுத்தமாக்கப்படுதல் ஆகியவைகளின் செயலாகும். ஆதியில் கற்பனையுடனும் இயற்கையுடனும் பூரணமான இசைவு உள்ளவனாக இருந்தான். நீதியின் கொள்கைகள் அவனது இருதயத்தின்மீது எழுதப் பட்டிருந்தன. ஆனால் பாவம் அவனைப் படைத்தவரிடத்திலிருந்து வேறு படுத்தியது. அதற்குமேல் அவன் தெய்வீக ரூபத்தைப் பிரதிபலிக்கவில்லை. அவனுடைய இருதயம் தேவனுடைய பிரமாணத்தின் கொள்கையுடன் போர் செய்துகொண்டிருந்தன. “மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை: அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக்கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது”—ரோமர் 8:7. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். கிறிஸ்துவின் புண்ணியங்களின்மூலமாக, அவன் தன்னைச் சிருஷ்டித்தவருடன் சீர்பொருந்த

இயலும். தெய்வீகக்கிருபையினால், அவனது இருதயம் புதுப்பிக்கப் படவேண்டும். இந்த மாறுதலே புதிய பிறப்பாகும் அது இல்லாமல், அவன் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று இயேசு கூறுகிறார். (18)

தேவனுடன் ஒப்புரவாகுதலில் உள்ள முதல்படி பாவத்தைப்பற்றிய உணர்வாகும். "நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம்"–1யோவான் 3:4. "பாவத்தை அறிகிற அறிவு நியாயப் பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை"–ரோமர் 3:20. பாவி தன் குற்றத்தைப் பார்ப்பதற்காக தேவனுடைய பெரும் நீதியின் தரத்துடன் (பத்துக்கற்பனைகள்) தன் சுபாவத்தை ஒப்பிட்டுச் சோதித்துப் பார்க்கவேண்டும். நீதியான ஒரு சுபாவத்தின் பூரணத்தைக் காட்டும் ஒரு கண்ணாடியாக அது இருக்கிறது. தன்னிலுள்ள அதிகமான குறைபாடுகளை அறிந்துகொள்ள அது அவனைத் தகுதிப்படுத்துகிறது. (19)

மனிதனில் உள்ள பாவங்களை கற்பனை வெளிக்காட்டுகிறது. ஆனால் அது அதற்கான பரிகாரத்தை ஏற்பாடு செய்வதில்லை. கீழ்ப்படிபவர்களுக்கு அது ஜீவனை வாக்குத்தத்தம் செய்யும். அதே சமயத்தில் மீறுபவர்களின் பங்கு மரணம் என்று அது அறிவிக்கிறது. பாவத்தினாலுண்டாகும் பழியிலிருந்தும், தீட்டிலிருந்தும் கிறிஸ்துவின் சுவிசேஷம்மட்டுமே அவனை விடுதலைசெய்யும், அவன் தேவனுடைய கற்பனைகளை மீறியிருப்பதற்காக கிறிஸ்துவின்மீதும், அவரது பாவநிவாரண பலியின்மீதும் உள்ள விசுவாசத்துடன் தேவனிடத்திற்கு மனம்திரும்ப வேண்டும். இப்படியாக, அவன் கடந்தகாலப் பாவங்களுக்கு பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு தேவனுடைய பிள்ளையாகிவிட்டதினால், அப்பா பிதாவே என்று கதறுகிறான். (20)

அவன் இப்பொழுது தேவனுடைய கற்பனையை மீறும் சுதந்திரத்தை உடையவனாக இருக்கிறானா? "அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல; நியாயப் பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே"– ரோமர்3:31. "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" (ரோமர் 6:2) என்று பவுல் கூறுகிறார். "அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல"–1 யோவான் 5:3. புதிய பிறப்பில் இருதயம் தேவனுடைய கற்பனைக்கு இசைவுள்ளதாக கொண்டுவரப்படுகிறது. இந்த பலத்த மாறுதல் பாவிக்குள் உண்டாயிருக்கும்போது, அவன் மரணத்திலிருந்து ஜீவனுக்கும், பாவத்திலிருந்து பரிசுத்தத்திற்கும், மீறுதல், கலகம் ஆகியவைகளில் இருந்து கீழ்ப்படிதல் உண்மையான விசுவாசம் ஆகியவைகளுக்கும் கடந்துவந்திருக்கிறான். தேவனிடமிருந்து விலகிச்சென்றிருந்த பழைய வாழ்க்கையானது முடிவுற்று,

விசவாசம், அன்பு ஆகியவை உள்ள ஒப்பரவாகுதலின் புதிய வாழ்க்கை ஆரம்பமாகிறது. அப்பொழுது ஆத்துமாவின் மொழியானது: “உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள்முழுதும் அது என் தியானம்” (சங். 119:97) என்பதாக இருக்கிறது. (21)

“கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது;”–சங். 19:7. கற்பனை இல்லாதபோது, தேவனுடைய தூய்மை, பரிசுத்தம் ஆகியவைபற்றி அல்லது தங்களுடைய குற்றம், அசுத்தமான தன்மை ஆகியவைபற்றி, சரியான எண்ணத்தை உடையவர்களாக மனிதர்கள் இருக்கமாட்டார்கள். பாவத்தைப்பற்றிய உண்மையான குற்றஉணர்வு அவர்களுக்கு இல்லாததால், மனந்திரும்ப வேண்டிய அவசியம் தேவை இல்லாதது என்ற உணர்வுள்ளவர்களாக இருக்கின்றனர். தேவனுடைய கற்பனையை மீறுபவர்கள் என்ற தங்களுடைய நிலையைக் காணாமல், பாவநிவாரணமளிக்கும் கிறிஸ்துவின் இரத்தத்தின் அவசியத்தை உணராமல் உள்ளனர். இருதயத்தில் சரியான மாற்றம் இல்லாமல், அல்லது வாழ்க்கையில் சீர்திருத்தம் இல்லாமல், இரட்சிப்பைப்பற்றிய நம்பிக்கை (வீணாக) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறாக, மேலெழுந்தவாரியான மனமாற்றங்கள் பெருகுகின்றன. கிறிஸ்துவுடன் ஒருபோதும் பிணைக்கப்பட்டவர்களாக இராத, திரள் கூட்டமானவர்கள் சபையில் சேர்ந்துள்ளனர். (22)

தெய்வீகப்பிரமாணத்தை அலட்சியப்படுத்துதல், அல்லது நிராகரித்தல் ஆகிய குதித்தெழுதலில் இருந்து உண்டான பரிசுத்தமடைதலைப்பற்றிய தவறான தத்துவ விளக்கங்கள், அந்த நாளின் சமய இயக்கங்களில் ஒரு முன்னணியான இடத்தைப் பிடித்திருக்கிறது. இந்தத் தத்துவ விளக்கங்களானது கோட்பாட்டில் தவறானதாகவும், நடைமுறை விளைவுகளில் ஆபத்தானதாகவும் உள்ளன. இவை பொதுவாக அனுகூலத்தைக் கண்டுகொண்டுள்ளன என்பது இந்தக் காரியம் குறித்து வேதவாக்கியங்கள் பேதிப்பவை என்ன என்பதைப்பற்றித் தெளிவான புரிந்துகொள்ளுதலை உடையதாக இருப்பதும் இருமடங்கு முக்கியமானதாக உள்ளது. (23)

மெய்யான பரிசுத்தமடைதல் என்பது ஒரு வேதாகமக் கோட்பாடாகும். “நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமா யிருக்கிறது” (1 தெச. 4:3) என்று அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேய சபைக்கு எழுதின அவருடைய நிருபத்தில் அறிவிக்கிறார். “ சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக” (1 தெச. 5:23) என்று அவர் ஜெபிக்கிறார். பரிசுத்தமடைதல் என்றால் என்ன? அதை எவ்விதமாக அடைந்துகொள்ளவேண்டும் என்பதை வேதாகமம் மிகத் தெளிவாகப்

போதிக்கிறது. "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17) என்று இரட்சகர் அவரது சீடர்களுக்காக ஜெபித்தார். விசுவாசிகள் பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக வேண்டும். "அப்படியிருந்தும், சகோதரரே, புறஜாதியாராகிய பலி பரிசுத்தஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு" (ரோமர் 15:15) என்று பவுல் போதித்தார். பரிசுத்த ஆவியானவரின் செயல் என்ன? "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்;" (யோவான் 16:13) என்று இயேசு அவருடைய சீடர்களிடம் கூறினார். உம்முடைய கற்பனை சத்தியமானது என்று சங்கீதக்காரன் கூறுகிறான். தேவனடைய கற்பனையில் அடங்கியுள்ள நீதியின் பெரும் கொள்கைகள் தேவனுடைய வார்த்தையினாலும், அவரது ஆவியினாலும் மனிதர்களுக்குத் திறக்கப்பட்டுள்ளன. தேவனுடைய கற்பனை பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் தெய்வீகப் பரிபூரணத்தின் மறுபடிவமாகவும் இருப்பதினால், கற்பனைக்குக் கீட்ப்படிவதினால் உண்டாகும் ஒரு சுபாவம் பரிசத்தமானதாக இருக்கும் என்பது தெரியவருகிறது. அப்படிப்பட்ட ஒரு சுபாவத்திற்குக் கிறிஸ்து ஒரு பூரணமான உதாரணமாக இருக்கிறார். "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு" "பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன்" (யோவான் 15:10 8:29) என்று அவர் கூறுகிறார். தேவனுடைய கிருபையினால், அவருடைய பரிசுத்த கற்பனையின் கொள்கைகளுக்கு இசைவான சுபாவத்தை அமைத்துக்கொள்ளுவதற்கு கிறிஸ்துவின் அடியார்கள் அவரைப் போன்றவர்களாக வேண்டும். இதுதான் வேதாகமம் கூறுகின்ற பரிசுத்தமடைதல் என்பதாகும். (24)

உள்ளத்துள் வாசம்செய்யும் தேவ ஆவியின் வல்லமையினால் மட்டுமே, கிறிஸ்துவின்மீதுள்ள விசவாசத்தின்மூலமாக இந்தப் பணி நிறைவேற்றப்படக்கூடியதாக உள்ளது. "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலிப். 2:12,13) என்று பவுல் விசுவாசிகளை எச்சரிக்கிறார். பாவத்தின் தூண்டுதல்களை கிறிஸ்தவன் உணருவான். ஆனால் அதற்கு எதிரான ஒரு போராட்டத்தை அவன் நடத்திக்கொண்டே இருப்பான். இங்குதான் கிறிஸ்துவின் உதவி தேவையாக உள்ளது. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரி. 15:57) என்று தெய்வீக பலத்துடன் பிணைக்கப்பட்ட மனித பலவீனமும் விசவாசமும் வியந்து கூறுகின்றன. (25)

பரிசுத்தமடைதல் என்னும் பணி தொடர்ந்து செல்லக்கூடியது என்று வேதவாக்கியங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. மதமாற்றத்தினால் பாவி பாவநிவாரண இரத்தத்தின் மூலமாக, தேவனுடன் சமாதானத்தைக்

காணும்போது, கிறிஸ்தவ வாழ்க்கை ஆரம்பமாகிறது. இப்பொழுது "கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்" (எபே. 4:11) அவன் முன்னோக்கிச் செல்ல வேண்டியவனாக இருக்கிறான். "ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலிப். 3:13,14) என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். வேதாகமம் கூறும் பரிசுத்தமடைதலை அடைந்துகொள்ளும் படிக்கட்டுகளை இவ்விதமாகப் பேதுரு நம்முன்பாக வைக்கிறார். "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமை யையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை"–2 பேதுரு 1:5–10. (26)

வேதாகமம் கூறும் பரிசுத்தமடைதலை அனுபவிக்கிறவர்கள் தாழ்மையின் ஆவியை வெளிக்காட்டுவார்கள். பரிசுத்தத்தின் பயங்கரமான மகத்துவத்தையும், நித்தியமானவரின் தூய்மையையும் உயர்ந்த பரிபூரணத் தையும், அதற்கு எதிரிடையான தங்களுடைய தகுதியின்மையையும் மோசேயைப்போல அவர்கள் கண்டிருக்கிறார்கள். (27)

வேதாகமம் கூறும் பரிசுத்தமடைதலுக்கு தீர்க்கதரிசியான தானியேல் ஒரு உதாரணமாக இருந்தார். அவரது எஜமானருக்கான மேலான சேவையில் நிறைந்ததாக அவரது நீண்ட கால வாழ்க்கை இருந்தது. பரலோகத்தால் அவர் மிகவும் பிரியமாக நேசிக்கப்பட்டவராக இருந்தார் (தானியேல் 19:11). அப்படியிருந்தும் தூய்மையும் பரிசுத்தமும் உள்ளவனாக இருக்கிறேன் என்று உரிமைபாராட்டுவதற்குப் பதிலாக இஸ்ரவேலர்களுக்காக அவர் தேவனிடத்தில் வேண்டுதல் செய்தபோது, (பரலோகத்தால்) சிறப்பிக்கப்பட்ட இந்த தீர்க்கதரிசி, உண்மையாகவே

பாவமுள்ள இஸ்ரவேலர்களுடன் தம்மையும் அடையாளப்படுத்திக் கொண்டு "நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்.... நாங்கள் பாவஞ்செய்து, துன்மார்க்கராய் நடந்தோம். இப்படி நான் சொல்லி, ஜெபம்பண்ணி, என் பாவத்தையும் என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு, ... என் பெலனெல்லாம் போயிற்று; என் உருவம் மாறி வாடிப்போயிற்று; திடனற்றுப்போனேன்" (தானியேல் 9:18,15,20 10:8) என்று அறிவிக்கிறார். (28)

பெருங்காற்றிலிருந்து கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டபோது, யோபு: "ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்" (யோபு 42:6) என்றான். கர்த்தருடைய மகிமையை ஏசாயா கண்டபோது: "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், ... என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்" (ஏசாயா 6:3,5) என்று சத்தமிட்டான். மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டு மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டிருந்தவருமான பவுல் "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான்" (எபே. 3:8) என்று தன்னைப்பற்றிக் கூறினார். இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்து, அவரால் மிகவும் நேசிக்கப்பட்டவராயிருந்த யோவான், அவரது மகிமையைக் கண்டபோது, " யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன். நான் கேட்டுக் கண்டபோது, இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன்" (வெளி 22:8) என்கிறார். (29)

கல்வாரிச் சிலுவையின் நிழலில் நடப்பவர்களின் பங்கில் பாவத்திலிருந்து விடுதலை அடைந்துவிட்டோம் என்னும் சுயத்தை உயர்த்துதலும் பெருமையான உரிமையும் இருக்கமுடியாது. தேவகுமாரனுடைய இருதயத்தை உடைக்கும் வேதனைக்கு, அவர்களுடைய பாவங்கள் காரணமாக இருந்தது என்று அவர்கள் உணருகின்றனர். இந்த எண்ணம் தங்களைச் சுயமாகத் தாழ்த்துவதற்கு அவர்களை நடத்துகிறது. இயேசுவிற்கு அருகில் வாழுபவர்கள் மானிடத்தின் குற்றங்குறைகள் பாவத்தன்மை ஆகியவைகளை மிகத் தெளிவாக அறிந்துகொள்ளுவதால், சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகரின் புண்ணியம் மட்டுமே அவர்களது ஒரே நம்பிக்கையாக உள்ளது. (30)

இப்பொழுது மத உலகில் முக்கியத்துவத்தை ஆதாயப்படுத்தி வரும் பரிசுத்தமடைதல் என்பது, வேதாகமம் காட்டும் மதத்திற்குப்

புறம்பானது என்று குறித்துக்காட்டும் தன்னை உயர்த்தும் ஆவியையும் தேவனுடைய கற்பனைக்கு மதிப்பைத் தராத தன்மையையும், தன்னுடன் எடுத்துச் சென்றுகொண்டிருக்கிறது. பரிசுத்தமடைதல் என்பது உடனடியாக நடைபெறும் ஒருபணி என்று அதற்காகப் பரிந்துபேசுபவர்கள் போதிக்கின்றனர். அதனால் விசுவாசத்தின் மூலமாக மட்டும் பரிசுத்தமடைதலில் அவர்கள் பூரணமடைகின்றனர் என்றும் போதிக்கின்றனர். விசுவாசித்தால் மட்டும் போதும், ஆசீர்வாதம் உன்னுடையதாக இருக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர். அதற்குமேல் எந்த முயற்சியும் அதைப் பெற்றுக்கொள்ளுபவன் பகுதியாக அவசியமுள்ளதுபோல் தெரியவில்லை. அதேசமயம், அவர்கள் தேவனுடைய கற்பனையின் அதிகாரத்தை மறுத்து, பிரமாணங்களைக் கைக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தும் கடமையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறிக்கொள்ளுகின்றனர். ஆனால் தேவனுடைய கொள்கைகளால் அவரது இயல்பு, சித்தம் ஆகியவைகளின் வெளிக்காட்டுதலாகவே அவரது பிரமாணங்கள் உள்ளன. அவருக்கு மிகவும் பிரியமானவைகள் எவை என்று அவைகள் காட்டுகின்றன. அதற்கு இசைவாக வராமல், மனிதர்களால் பரிசுத்தமாக இருக்க இயலுமா? (31)

சுயமறுப்பு இல்லாத, உலகத்தின் பொய்களிலிருந்து விலகாத, ஒரு வசதியான, முயற்சிகள் எதையும் அவசியப்படுத்தாத, ஒரு மதத்தின்மீதுள்ள விருப்பம்தான் விசுவாசம் என்ற ஒன்றை மட்டுமே மனிதர்களால் மதிக்கப்படுகின்ற கோட்பாடு உண்டாக்கி இருக்கிறது? ஆனால் தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது? "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?... வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசுவாம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே... மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே" (யாக். 2:14–24) என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகிறார். (32)

கிரியை இல்லாத விசுவாசம் என்னும் கோட்பாடு, கண்ணியில் அகப்படுத்துவதாக உள்ளது. தேவனுடைய வார்த்தை இதற்கு எதிரான சாட்சியாக உள்ளது. இரக்கம் அனுமதிக்கப்படுவதற்கான நிபந்தனையை நிறைவேற்றாமல், பரலோகத்தின் அனுகூலத்தின்மீது உரிமைபாராட்டுவது

விசுவாசமாகாது. அது இறுமாப்பு ஆகும். ஏனெனில், உண்மையான விசுவாசம் அதன் அஸ்திவாரத்தையும் ஏற்பாடுகளையும் தேவனுடைய வாக்குத்தத்தங்களிலும் வேதவாக்கிய ஏற்பாடுகளிலும் சார்ந்து உள்ளது. (33)

தேவனுடைய கற்பனைகளில் ஒன்றின் அவசியத்தை வேண்டுமென்றே மீறிக்கொண்டு, அவர்கள் பரிசுத்தமானவர்களாக இருக்கலாம் என்று ஒருவரும் தங்களை வஞ்சித்துக்கொள்ளவேண்டாம். அறியப்பட்ட ஒரு பாவத்தின் செயல், சாட்சிகூறும் ஆவியின் சத்தத்தை மௌனப்படுத்தி, அந்த ஆத்துமாவை தேவனிடத்திலிருந்து பிரித்துவிடுகிறது. "நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்." "பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை"–1 யோவான் 3:4,6. பரிசுத்தமடைந்திருப்பதாக உரிமைபாராட்டுகின்ற வகுப்பினரின் உண்மையான சுபாவத்தை வெளிக்காட்டத் தயங்கவில்லை. மேலும் "அவரை அறிந்திருக்கிறே னென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்"–1 யோவான் 2:4,5. பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள தேவனுடைய பரிசுத்தத்தின் ஒரே அளவுள்ள (சம அளவுள்ள) தரத்திற்கு ஒரு மனிதனைக் கொண்டுவராமல், அவனுக்கு நம்மால் பரிசுத்தத்தை அணிவிக்கமுடியாது. சன்மார்க்கப் பிரமாணத்தின் பாரத்தை மனிதர்கள் உணராமல், தேவப்பிரமாணத்தை சிறிதாக்கிக் குறைவாக எடைபோடுவார்களானால், அந்தக் கற்பனைகளில் மிகவும் சிறிதான ஒன்றையாகிலும் அவர்கள்மீறி, அவ்விதமாக மனிதர்களுக்குப் போதிப்பார்களானால், அவர்கள் பரலோகத்தின் பார்வையில் மேன்மை யானவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்கள் பாராட்டும் உரிமை அஸ்திவாரமற்றதாக உள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். (34)

பாவம் இல்லாததாக இருப்பதாகப் பாராட்டும் உரிமையானது அது தனக்குள்ளேயே இந்த உரிமையைப் பாராட்டுபவன் பரிசுத்தமான தன்மையிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறான் என்பதற்குச் சான்றாக உள்ளது. ஏனெனில் தேவனுடைய முடிவில்லாத தூய்மை, பரிசுத்தம் ஆகியவைபற்றிய உண்மையான அறிவு அவனுக்கு இல்லாமலிருப்பதே அதற்குக் காரணமாக உள்ளது. அவருடைய சுபாவத்திற்கு இசைவான வர்களாக ஆகவேண்டியவர்கள் எப்படிப்பட்டவர்களாகவேண்டும் என்பதும் அவனுக்குத் தெரியாது. ஏனெனில், அவனுக்கு இயேசுவின் தூய்மை,

மேலான அழகிய தன்மை, ஆகியவை பற்றிய உண்மையான அறிவு இல்லை. மனிதன் தன்னைத்தான் பரிசுத்தமுள்ளவன் என்று கருதுவதற்குக் காரணம் பாவத்தின் கொடூரம் தீயதன்மை ஆகியவைபற்றிய அறிவும் அவனுக்கில்லை. அவனுக்கும் கிறிஸ்துவிற்கும் இடையிலுள்ள தூரம் எந்த அளவிற்கு அதிகமாகிறதோ, அந்த அளவிற்கு தெய்வீக சுபாவத்தைப்பற்றிய அவனுடைய அறிவும் குறைவானதாக இருந்து, அவன் தனது சொந்தக் கண்களுக்குமட்டுமே அதிக நீதியுள்ளவனாகத் தோன்றுகிறான். (35)

வேத வாக்கியங்கள் முன்வைக்கும் பரிசுத்தமடைதல் என்பதானது, ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய முழு மனிதனையும் தழுவுவதாக உள்ளது. எனவேதான் "உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (1 தெச. 5:23) என்று தெசலோனிக்கேயர்களுக்காகப் பவுல் ஜெபித்தார். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12:1) என்று அவர் மறுபடியும் விசுவாசிகளுக்கு எழுதுகிறார். பண்டைய இஸ்ரவேலரின் காலத்தில், தேவனுக்குப் பலிசெலுத்தும்படியாக கொண்டுவரப்பட்டிருந்த ஒவ்வொரு பலியும், மிகக் கவனமாக சோதிக்கப்பட்டது. அர்ப்பணிக்கப்பட்ட மிருகத்தில் ஏதாவது குறைபாடு காணப்பட்டால், அது மறுக்கப்பட்டது. ஏனெனில் பலியிடப்படும் மிருகம் பழுதற்றதாக இருக்கவேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருந்தார். அப்படியே கிறிஸ்தவர்களும் தங்களுடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கவேண்டும். இதைச் செய்வதற்கு அவர்கள் தங்களுடைய வல்லமைகள் அனைத்தையும் தங்களால் முடிந்த அளவிற்கு மிகச்சிறந்த நிலையில் பாதுகாத்து வைத்திருக்கவேண்டும். சரீர, மன நலன்களைப் பலவீனப்படுத்தும் ஒவ்வொரு பழக்கமும், சிருஷ்டிகரின் சேவைக்கு மனிதனைத் தகுதியற்றவனாக்குகிறது. நம்மால் செலுத்தமுடிந்த மிகச் சிறந்ததற்குக் குறைவான எதினாலாவது தேவன் பிரியப்படுவாரா? உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் அன்புகூருவாயாக என்று கிறிஸ்து கூறினார். தங்களுடைய முழு இருதயத்துடனும் தேவனை நேசிக்க விரும்புகிறவர்களே, தங்கள் வாழ்க்கையின் மிகச்சிறந்த சேவையை அவருக்குச் செலுத்துவார்கள். அவர்கள் தங்களிடமுள்ள ஒவ்வொரு வல்லமையையும் அவருடைய சித்தத்தை மேன்மைப்படுத்துவதற்காக, கற்பனைக்கு இசைவாகக் கொண்டுவருவதற்கு வகைதேடிக்கொண்டிருப்பார்கள். உணவுப்பழக்கம்,

அல்லது ஆசை ஆகியவைகளினால் தங்களுடைய பரலோகத் தந்தைக்குப் படைக்கும் காணிக்கையைத் தீட்டுப்படுத்தமாட்டார்கள். (36)

ஆத்துமாவிற்கு எதிராகப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டுவிலகுங்கள் (1பேதுரு 2:11) என்று பேதுரு கூறுகிறார். ஒவ்வொரு பாவப் பழக்கமும் அறிவை மரத்துப்போகச் செய்து, மனதின் ஆவிக்குரிய உணரும் சக்திகளைச் சாகடிக்கிறது. அதனால் தேவனுடைய வார்த்தை அல்லது தேவனுடைய ஆவியால் இருதயத்தில் பலவீனமான உணர்த்துதலை மட்டுமே உண்டாக்கவதற்குமுடிகிறது. “ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,
23. சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.” “இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்”–கலா. 5:22,23; 2 கொரி. 7:1. மேலும் அவர் இச்சையடக்கத்தையும் இதில் உட்படுத்துகிறார். (37)

ஆவியினால் ஏவப்பட்டு இந்த அறிவிப்புகளுக்கு அப்பாற்பட்டு தங்களது வல்லமைகளை லாபம் சம்பாதிக்கவும், நாகரிகத்தைவணங்கவும் பலவீனப்படுத்திக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள் எத்தனை பேர்? அமித உணவுப் பழக்கம், மது அருந்துதல், தடைசெய்யப்பட்டுள்ள இன்பங்களை அனுபவித்தல் ஆகிய பழக்கங்களினால் தேவசாயலில் உள்ள தங்களது மேன்மையைத் தரம் தாழ்த்திக்கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? சபை இவைகளைக் கடிந்துகொள்ளுவதற்குப் பதிலாக, உணவின்மீதுள்ள விருப்பத்தை அதிகரிக்கும் பணியில் அறைகூவியும், லாபத்தின்மீதுள்ள விருப்பம் அல்லது தனது கருவூலத்தை வளப்படுத்திக் கொள்ளும் ஆசையின்மீதுள்ள நாட்டம் இவைகளினால், கிறிஸ்துவின்மீதுள்ள அன்பை வழங்குவதற்கு அதிக பலவீனமுள்ளதாக இருக்கும் தீமைகளைச் செய்ய தைரியமூட்டுகிறது. இன்று இயேசு ஆலயங்களுக்குள் பிரவேசிப்பாரானால், மதத்தின் பெயரால் அங்கு நடைபெறும் விருந்துகளையும் பரிசுத்தமற்ற வியாபாரங்களையும் கண்டு, அவ்விதமாகப் பரிசுத்தகுலைச்சலாக்குபவர்களை, முன்னர் காசுக்காரர்களை ஆலயத்திலிருந்து விரட்டினதுபோல் விரட்டமாட்டாரா? (38)

“பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும்,” என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகிறார். புகையிலையினால் தீட்டுப்படுத்தப்பட்டு, அதன் துர்வாடையினால் உதடுகளும் மனிதனும் கறைப்பட்டுப் போகும்படிச் செய்து, ஆகாய மண்டலத்திலுள்ள காற்றை

மாசுபடுத்தி, தங்களைச் சுற்றிலுமுள்ள அனைவரையும் அந்த நஞ்சை சுவாசிக்கும்படி வற்புறுத்திக்கொண்டு, இயேசுவின் விலைமதிப்புள்ள பெயரைக் கூறிக்கொண்டிருப்பவர்களை இயேசு சந்திக்க நேர்ந்தால், சுவிசேஷத்தின் தூய்மைக்கு எதிரான அப்படிப்பட்ட பழக்கத்துடன் தொடர்புகொள்ள அந்த அப்போஸ்தலனுக்கு நேர்ந்திருந்தால், அதை உலகப்பிரகாரமான உணர்வுகளினால் உண்டாகும் தீமையானவை என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருக்கமாட்டாரா? புகையிலைக்கு அடிமையாக இருந்துகொண்டு, முற்றிலுமாக பரிசுத்தம் அடைதலின்மீது உரிமைபாராட்டுபவர்கள், பரலோகத்தின்மீது தங்களுடைய நம்பிக்கையைப்பற்றிப் பேசுகின்றனர். ஆனால் "தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை;" (வெளி 21:27) என்று தேவனுடைய வார்த்தை மிகத் தெளிவாகக் கூறுகிறது. (39)

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்"–1 கொரி. 6:19,20. எந்த ஒருவனுடைய சரீரம் தேவ ஆவியானவருடைய ஆலயமாக இருக்கிறதோ, அவன் கேடு உண்டாக்கும் பழக்கங்களினால் அடிமைப்படுத்தப்படமாட்டான். அவனுடைய வல்லமைகள் அவனைத் தமது இரத்தத்தினால் கிரயத்திற்கு வாங்கின கிறிஸ்துவின் உடைமையாக உள்ளது. அவனது சொத்துக்கள் கர்த்தரின் சொத்தாக உள்ளன. அவனிடம் மூலதனமாக ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதை, விரயம் செய்ததற்கு அவன் எப்படிக் குற்றமற்றவனாக இருப்பான்? தேவனுடைய வார்த்தைகள் கிடைக்காமல் ஆத்துமாக்கள் அழிந்து கொண்டிருக்கும்போது, தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்கள் வருடந்தோறும் பெரும் தொகையை பயனற்றதும் நாசகரமானதுமான பழக்கங்களில் செலவிடுகின்றனர். ஏழைகளின் மீட்பிற்கென்றும் அல்லது சுவிசேஷத்தை தாங்குவதற்கென்றும் செலவிடுவதைவிடவும் அதிகமாக, தங்களை அழிக்கும் இச்சைகளாகிய பலிபீடத்தின்மீது அவர்கள் எரிக்கும்போது, தசமபாகங்களிலும் காணிக்கைகளிலும் தேவன் கொள்ளையிடப்படுகிறார். தங்களைக் கிறிஸ்துவின் அடியார்கள் என்று கூறிக்கொண்டிருக்கும் அனைவரும் பரிசுத்தமடைந்தவர்களாக இருந்திருந்தால், தங்களுடைய செல்வங்கள் அனைத்தையும் தேவையற்றவைகளிலும், தீமைபயக்கும் காரியங்களிலும் செலவிடும் பழக்கத்திற்குப் பதிலாக, அவைகள் கர்த்தரின் கருவூலத்திற்குள் திருப்பிவிடப்பட்டிருந்திருக்கும். இப்படியாகக்

கிறிஸ்தவர்கள் இச்சையடக்கம், சுயமறுப்பு, தற்தியாகம் ஆகியவைகளுக்கு ஒரு உதாரணத்தை அமைத்திருந்திருப்பார்கள். அப்போது அவர்களால் உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கமுடியும். (40)

இஷ்டப்படி நடந்துகொள்ள உலகம் விடப்பட்டுள்ளது. கண்களின் இச்சை, மாமிசத்தின் இச்சை, ஜீவனத்தின்பெருமை ஆகியவை திரள் கூட்டமான மக்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் கிறிஸ்துவின் அடியார்கள் ஒரு பரிசுத்தமான அழைப்பை உடையவர்களாக உள்ளனர்–2 கொரி. 6:17. பாவகரமான தொழில்களையும், உலகப்பிரகாரமான இந்த ஆசைகளையும் முற்றிலுமாக மறுக்கும் செயலை, செயல்படுத்தாதது, உண்மையான பரிசத்தமாக்கப்படுதலாக இருக்கமுடியாது என்று அறிவிப்பதினால், நாம் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் நீதிகரிக்கப்படுகின்றோம். (41)

“நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்” என்னும் நிபந்தனைக்கு இணங்குபவர்களுக்கு “அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்தி களுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்” (2 கொரி. 6:18) என்று வாக்குத்தத்தம் உள்ளது. தேவனுடைய காரியங்களில் ஏராளமாக மிகுந்த அனுபவமுடையவனாக இருக்கவேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உள்ள சலுகையும் கடமையுமாக உள்ளது. “நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்று கிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்” “நீதிமான் களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்”–யோவான் 8:12; நீதி 4:18. விசவாசம், கீழ்ப்படிதல் ஆகியவைகளின் ஒவ்வொரு அடியும் ஆத்துமாவை (எவருக்குள் இருள் இல்லாமல் இருக்கிறதோ அவருக்குள்) உலகத்திற்கு ஒளியாய் இருப்பவருடனுள்ள நெருங்கிய உறவிற்குள் கொண்டுவருகிறது. தேவனுடைய ஊழியக்காரர்களின்மீது நீதியின் சூரியனின் ஒளிமிக்க கதிர்கள் வீசுகின்றன. பரலோகத்தில் ஒரு மாபெரும் ஒளி உள்ளது. அதன் மகிமையினால் விண்மீன்கள் ஒளிப்படுத்தப்படுகின்றன என்பதை அவை நமக்குக் கூறுவதுபோல் அவர்கள் அவரது கதிர்களைப் பிரதிபலிக்கவேண்டும். அப்படியே பிரபஞ்ச சிங்காசனத்தின்மீது ஒரு தேவன் இருக்கிறார். அவரது சுபாவம் துதிக்கப்படுவதற்கும் பின்பற்றிப்படுவதற்கும் தகுதிமிக்கதாக உள்ளது என்பதனைக் கிறிஸ்தவர்கள் வெளிக்காட்டவேண்டும். அவரது சாட்சிகளிடம் அவரது ஆவியின் கிருபைகள், தூய்மை, சுபாவத்தில் பரிசுத்தம் ஆகியவை வெளிக்காட்டப்படும். (42)

தேவனுடைய பிள்ளைகளின் மீது அபரிமிதமாகப் பொழியப்பட்டுள்ள ஆசீர்வதங்களை கொலோசெயர்களுக்கு பவுல் எழுதின நிருபத்தில் அவர்கள்முன் வைக்கிறார். “நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், சந்தோஷத்தோடேகூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல்செய்கிறோம்”–கொலோ. 1:9–12. (43)

கிறிஸ்தவர்களுக்கு அருளப்பட்டுள்ள சலுகையின் உயர்வை எபேசு சபை சகோதரர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்ற அவரது விருப்பத்தை அவர் மறுபடியும் எழுதுகிறார். உன்னதமானவருடைய குமாரர்களாகவும், குமாரத்திகளாகவும் அவர்கள் அடைந்துகொள்ளும் ஆச்சரியமான வல்லமையையும் அறிவையும்பற்றி மிக நன்றாக விளக்கக்கூடிய மொழியில் அவர்கள் முன் திறக்கிறார். (44)

“நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,... நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும்” (எபே. 3:16–19) வேண்டும் என்று ஜெபிக்கும்போது, அப்போஸ்தலனின் ஜெபம் அதன் சலுகையின் உச்சக்கட்டத்தை எட்டுகிறது. அவரது அவசியங்களை எதிர்பார்ப்புகளை நாம் நிறைவேற்றும்போது, நமது பரலோகத் தந்தையின் வாக்குத்தத்தங்களின்மீதுள்ள விசுவாசத்தின் மூலமாக நாம் அடைந்துகொள்ள வேண்டிய உயரங்கள் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் புண்ணியங்களின்மூலமாக, முடிவில்லாத வல்லமையின் சிங்காசனத்திற்குரிய பாதையை நாம் அடைந்திருக்கிறோம். “தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?” –ரோமர் 8:32. “என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.” –யோவான் 14:14. “இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.” –யோவான் 16:24. (45)

கிறிஸ்தவ வாழ்க்கை தாழ்மையினால் எடுத்துக்காட்டப்பட வேண்டியதாக இருக்கும்போது, அது வருத்தத்தினாலும் தன்னைத்தான் இழிவுபடுத்திக் கொள்ளுதலினாலும் அடையாளப்படுத்தப்படக்கூடாது. தேவன் அங்கீகரித்து ஆசீர்வதிக்கும் விதத்தில் வாழ்வது ஒவ்வொருவருக்கும் உள்ள சலுகையாகும். பழியிலும் இருளிலும் நாம் எப்போதும் இருக்கவேண்டும் என்பது பிதாவின் சித்தமல்ல. தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு, சுயத்தைப் பற்றிய நினைவினால், இருதயமானது நிறைந்ததாக இருக்கும்படி உண்மையான தாழ்மையின் சான்று இல்லை. நாம் இயேசுவிடம் சென்று சுத்தப்படுத்தப் பட்டவர்களாக பிரமாணத்திற்கு முன்னால் குற்ற உணர்வினால் உண்டாகும் வருத்தம் இல்லாதவர்களாக நிற்கலாம். "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவிற்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை"—ரோமர் 8:1. (46)

விழுந்துபோன ஆதாமின் குமாரர்கள் இயேசுவின் மூலமாக தேவனுடைய குமாரர்களாகின்றனர். "பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப் படாமல்:"—எபி. 2:11. கிறிஸ்தவனின் வாழ்க்கையானது விசுவாசம், வெற்றி, தேவனிலுள்ள மகிழ்ச்சி ஆகியவைகளை உடைய ஒன்றாக இருக்கவேண்டும். "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்"—1 யோவான் 5:4. "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்"— நெகே. 8:10. கர்த்தருக்குள் "எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது"—1 தெச. 5:16–18. (47)

வேதாகம மதமாற்றம், பரிசுத்தமாக்கப்படுதல் ஆகியவைகளின் கனிகளானது அப்படிப்பட்டவைகளாக உள்ளன. தேவனுடைய கற்பனையால் முன்வைக்கப்பட்டுள்ள பெரும் நீதியின் கொள்கைகள் கிறிஸ்தவ உலகத்தினால் வித்தியாசம் இல்லாத வகையில் கருதப்பட்டுவருவதினால், இந்தக் கனிகள் மிக அபூர்வமாக சாட்சியளிக்கின்றன. இந்தக் காரணமாகத்தான், கடந்த காலங்களில் நிகழ்ந்த எழுப்புதல்களில் காணப்பட்டிருந்த தேவ ஆவி ஆற்றிய செயல், இப்பொழுது அந்த அளவிற்கு ஆழமற்றதாகவும். மிகக் குறைவானதாகவும் இருக்கிறது. (48)

நாம் எவைகளை நோக்கிக்கொண்டிருக்கிறோமோ, அவைகளைப் போன்றே மாற்றமடைகிறோம். தேவன் தமது பூரணத்துவத்தையும்

அவரது சுபாவத்தின் பரிசுத்தத்தையும் மனிதர்களுக்குத் தமது பரிசுத்த கற்பனையினால் திறந்துகாட்டியிருந்தார். அதை மனிதர்கள் அலட்சியம் செய்தபோது, மனிதர்களின் மனங்கள் மனிதர்களின் போதனைகளினாலும் தத்துவ விளக்கங்களினாலும் கவரப்பட்டபோது, ஜீவனுள்ள பக்தி சபையில் கீழிறங்கத் தொடங்கியதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? "என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்"—எரே. 2:13. (49)

"துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்"—சங். 1:1–3. தேவனுடைய கற்பனை அதன் சரியான—ஆதிநிலைக்கு எடுத்து நிறுத்தப்படும்போதுமட்டுமே, அவருடைய ஜனங்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களிடம் பழைய கால விசுவாசமும் தெய்வபக்தியும் மிக்க எழுப்புதலும் உண்டாகமுடியும். " வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்"—எரே. 6:16. (50) ★

# 28

# உன் மீது வழக்கு இருக்கிறது...!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 479–491)**

"நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போலத் துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினிஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது"—தானியேல் 7:9–10. (1)

இப்படியாக, பெரிதும் பக்திவிநயமுமான அந்தநாள் தீர்க்கதரிசிக்குத் தரிசனத்தில் காட்டப்பட்டது. பூமி முழுவதற்கும் நீதிபதியாக இருப்பவருக்குமுன், மனிதர்களின் சுபாவங்களும் வாழ்க்கை முறைகளும், திருப்பிப்பார்க்கும்படி அவர்முன் கடந்துசெல்லவேண்டும். அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்க பலன் அவனவனுக்குக் கிடைத்தாகவேண்டும். பிதாவாகிய தேவன்தான் நீண்ட ஆயுசுள்ளவர். "பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்"—சங். 90:2. சகல ஜீவன்களுக்கும் சகல பிரமாணங்களுக்கும் ஆதாரமாகவும் ஊற்றாகவும் இருக்கும் அவர்தான், நியாயவிசாரணையில் தலைமை தாங்குபவர். ஆயிரமாயிரமாகவும் கோடானகோடியாகவும் இருக்கும் பரிசுத்த தேவதூதர்கள், சாட்சிகளாகவும் ஊழியக்காரர்களாகவும் இதில் பங்கு கொள்ளுகின்றனர். (2)

"இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்"—தானி. 7:13,14. இங்கு விவரிக்கப்படும் கிறிஸ்துவின் வருகை, பூமிக்கு வரும் அவரது இரண்டாம் வருகை அல்ல. தமது மத்தியஸ்த ஊழியத்தின் முடிவில் தமக்குக் கொடுக்கப்பட உள்ள ஆளுகையையும் மகிமையையும் ராஜ்யத்தையும் பெற்றுக்கொள்ள அவர் பரலோகத்தில் நீண்ட ஆயுசுள்ளவரிடம் வருகிறார். 2300 நாட்களின் முடிவில், கி.பி.1844—ல் நடைபெறுமென்று தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டிருந்த வருகை இந்த வருகைதான், இரண்டாம் வருகை அல்ல. மனிதனின் சார்பாக அவர் செய்யும் ஊழியத்தின் கடைசிப் பகுதியில் ஈடுபட—நுட்ப நியாயவிசாரணையை நடத்த, அதன் நன்மைக்குத் தகுதியானவர்கள் எனக்காட்டப்படும் அனைவருக்காகவும் பாவ நிவர்த்தி செய்ய, தேவதூதர்கள் புடைசூழ நமது பிரதான ஆசாரியர் (பரலோக) மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிதாவின் சமூகத்தில் தோன்றுகிறார். (3)

சாயலாக இருந்த ஆராதனையில், பாவ அறிக்கையுடனும் மனந்திரும்புதலுடனும் தேவனுக்கு முன்பாக வந்து, பாவப்பரிகார பலியின் இரத்தத்தின் மூலமாக தங்களுடைய பாவங்களை பரிசுத்தஸ்தலத்திற்குள் மாற்றியிருந்தவர்களுக்கு மாத்திரமே பாவநிவாரண நாளின் ஆராதனையில் பங்கு இருந்தது. அப்படியே இறுதிப் பாவநிவாரண, நுட்பநியாயவிசாரணை என்னும் பெரும் நாளில், தேவனுடைய ஜனங்களின் வழக்குகள் மட்டுமே ஆலோசிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. துன்மார்க்கரின் நியாயத் தீர்ப்பு குறிப்பிட்ட வேறொரு பணியாக இருந்து, பின்னொரு சமயத்தில் நடைபெறவிருக்கிறது. "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங் காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?"—1 பேதுரு 4:17. (4)

மனிதர்களின் பெயர்களும் செயல்களும் எழுதப்பட்டுள்ள பரலோகத்திலுள்ள புத்தகங்கள்தான் நியாயத்தீர்ப்பின் தீர்மானத்தை தீர்மானிக்கும். தானியேல் தீர்க்கன், "புஸ்தகங்கள் திறக்கப்பட்டது" என்கிறார். இதே காட்சியை விவரிக்கும் வெளிப்படுத்துபவர், "மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்;

அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்" (வெளி 20:12) என்கிறார். (5)

தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட்டிருந்த அனைவரது பெயர்களையும் ஜீவ புஸ்தகம் கொண்டுள்ளது. "உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" (லூக்கா 10:20) என்று இயேசு தமது சீடர்களிடம் கூறினார். பவுல் விசுவாசமிக்க அவரது உடன் வேலைக்காரர்களைப்பற்றி, "அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது" (பிலிப் 4:3) என்றார். "யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம்" வருவதை தானியேல் பார்த்து, "புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்" (தானி. 12:1) என்றார். "ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்" (வெளி. 21:27) என்று யோவானாகிய வெளிப்படுத்தல்காரரும் கூறுகிறார். (6)

"கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது"—மல்கியா 3:16. அவர்களுடைய விசுவாச வார்த்தைகள், அவர்களது அன்பின் செயல்கள் ஆகியவை பரலோகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. நெகேமியா இதைக் குறிப்பிட்டு: "என் தேவனே, நான் என் தேவனுடைய ஆலயத்துக்காகவும் அதின் முறைமைகளுக்காகவும் செய்த நற்கிரியைகளைக் குலைத்துப்போடாமல், இந்தக் காரியத்திலே என்னை நினைத்தருளும்" (நெகேமியா 13:14) என்று கூறினார். நீதியான செயல்கள் ஒவ்வொன்றும் தேவனுடைய ஞாபகப் புஸ்தகத்தில் அழியாதவைகளாக உள்ளன. தடுக்கப்பட்ட ஒவ்வொரு சோதனையும், மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு தீமையும், மென்னைமிக்க இரக்கத்துடன் கூறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும், உண்மையாக காலக்கிரமமாக அதில் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு தியாகச்செயலும், கிறிஸ்துவினிமித்தம் தாங்கிக்கொண்ட ஒவ்வொரு பாடும் துயரமும் அதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. "என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?" (சங். 56:8) என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். (7)

மனிதர்களின் பாவங்களைப்பற்றிய ஒரு பதிவேடும் உள்ளது. "ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும்,

நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்"—பிர. 12:14. "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும்.... உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" (மத்தேயு 12:36,37) என்று இரட்சகர் கூறினார். தவறு இல்லாத அந்தப் பதிவேட்டில் இரகசியமான நோக்கங்களும் உள்ளெண்ணங்களும் காணப்படுகின்றன. ஏனெனில் "இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்"—1 கொரி. 4:5. உங்கள் அக்கிரமங்களும் ... பிதாக்களுடைய அக்கிரமங்களும் ..."இதோ, அது எனக்கு முன்பாக எழுதியிருக்கிறது;"—ஏசாயா 65:6,7. (8)

ஒவ்வொரு மனிதனுடைய செயலும் தேவனுக்கு முன்பாகத் திரும்பிப்பார்ப்பதற்கென்று கடந்துசென்று, அது நம்பிக்கைக்குரியதாயிருந்தாலும் நம்பிக்கையற்றதாயிருந்தாலும் பதிவுசெய்யப்படுகிறது. பரலோகப் புத்தகங்களில் ஒவ்வொருவருடைய பெயருக்கும் எதிராக, அவர்களது ஒவ்வொரு தவறான வார்த்தையும், சுயநலமிக்க ஒவ்வொரு செயலும், நிறைவேற்றப்படாமல் விட்டுவிடப்பட்ட ஒவ்வொரு கடமையும், இரகசியமான ஒவ்வொரு பாவமும், சாமர்த்தியத்துடன் மறைக்கப்பட்ட ஒவ்வொன்றும் மிகப் பயங்கரமான விதத்தில், மிகச் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. பரலோகம் அனுப்பின எச்சரிப்புக்கள் அல்லது அலட்சியப்படுத்தப்பட்ட கடிந்துகொள்ளுதல்கள், வீணாக்கப்பட்ட வினாடிகள், முன்னேற்றம் அடையச்செய்யாமல் விட்டுவிடப்பட்ட வாய்ப்புகள், நன்மைக்கானாலும் தீமைக்கானாலும் செயல்படுத்தப்பட்ட செல்வாக்குகள் ஆகிய அனைத்தும் பதிவு செய்யும் தேவதூதனால் காலக்கிரமமாகப் பதிவு செய்யப்படுகின்றன. (9)

நியாயத்தீர்ப்பில் தேவனுடைய கற்பனையே மனிதர்களின் சுபாவங்கள், வாழ்க்கை முறைகளைச் சோதிக்கும் தரமாக இருக்கிறது. "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; ... ஒவ்வொரு கிரியையையும், ... தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" (பிர. 12:13,14) என்று ஞானி சொல்லுகிறான். அப்போஸ்தலனாகிய யாக்கோபு "சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்" (யாக். 2:12) என்று அவரது சகோதரர்களை எச்சரிக்கிறார். (10)

நியாயத்தீர்ப்பில் தகுதியானவர்களாகக் கணக்கிடப்படுபவர்கள், நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள். "மறுமையையும்

மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப்பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ ... உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்" (லூக்கா 20: 35,36) என்று இயேசு கூறினார். மீண்டும் "அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், ... புறப்படுவார்கள்" (யோவன் 5:29) என்றார். மரித்த நீதிமான்கள், உயிர்த்தெழுதலுக்குத் தகுதியானவர்கள் என்று நியாயத்தீர்ப்பின் முடிவில் தீர்மானிக்கப்படும் வரை எழுப்பப்படமாட்டார்கள். எனவே, அவர்களைப்பற்றிய பதிவேடுகள் சோதிக்கப்பட்டு, அவர்களது வழக்குகள் முடிவுசெய்யப்படும்போது, அவர்கள் நியாயவிசாரணைச்சங்கத்தில் பிரத்தியட்சமாகமாட்டார்கள். (11)

அவர்கள் சார்பாக தேவனுக்குமுன் பேசுவதற்காக, பரிந்து பேசுபவரான இயேசு தோன்றுவார். "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்"–1 யோவான் 2:1. "அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" –எபி. 9:24. "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்"–எபி. 7:25. (12)

நியாயத்தீர்ப்பில் புத்தகங்கள் திறக்கப்படும்போது, இயேசுவின் மீது விசவாசம் வைத்த அனைவரது வாழ்க்கையும், திரும்பிப் பார்க்கப்படும்படி தேவனுக்குமுன் வருகிறது. இந்த உலகத்தில் முதலில் வாழ்ந்திருந்தவர்களிடத்திலிருந்து ஆரம்பித்து, பின்னர் அடுத்தடுத்து வந்த ஒவ்வொரு தலைமுறையினரின் வாழ்க்கையையும், நமக்காகப் பரிந்து பேசுபவர் (பிதாவின்) முன் கொண்டுவந்து, உயிருள்ளவர்களுடன் முடிக்கிறார். ஒவ்வொரு பெயரும் குறிப்படப்படுகிறது. ஒவ்வொரு வழக்கும் திட்டமாக விசாரிக்கப்படுகிறது. பெயர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, பெயர்கள் நிராகரிக்கப்படுகிறது. எவருடைய புத்தகத்திலாவது மனம் வருந்தாத, மன்னிக்கப்பட்டிராத பாவங்கள் இருக்குமானால், அவர்களுடைய பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து நீக்கப்படும். அவர்களது நற்செயல்களின் பதிவுகளும் தேவனுடைய ஞாபகப் புத்தகத்திலிருந்து அழித்து நீக்கப்படும். "கர்த்தர் மோசேயை நோக்கி: எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன்" (யாத்.

32:33) என்றார். எசேக்கியேல் தீர்க்கதரிசி: "நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி செய்து, துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில், ... அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவதில்லை; அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான்" (எசே. 18:24) என்கிறார். (13)

யாரெல்லாம் பாவத்தைப்பற்றி உண்மையாக மனம் வருந்தி விசுவாசத்தினால் தங்களுடைய பாவநிவாரணமாகக் கிறிஸ்துவின் இரத்தத்தின்மீது உரிமைபாராட்டினரோ, அவர்கள் பரலோகப் புத்தகத்தில் அவர்களது பெயர்களுக்கு எதிராக மன்னிப்பு என்று எழுதப்பட்டிருக்கின்றனர். அவர்கள் கிறிஸ்துவின் நீதியில் பங்கு பெறுபவர்களாக இருப்பதால், அவர்களுடைய சுபாவங்கள் தேவனுடைய கற்பனைக்கு இசைவுள்ளதாகக் காணப்பட்டதால், அவர்களது பாவங்கள் துடைத்து நீக்கப்படும். அவர்கள் மட்டுமே நித்திய ஜீவனுக்குத் தகுதி உள்ளவர்களென்று கணக்கிடப்படுவார்கள். "நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்" (ஏசாயா 43:25) என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் கர்த்தர் அறிவிக்கிறார். "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்" (வெளி. 3:5) "மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" (மத்தேயு 10:32,33) என்று இயேசு சொன்னார். (14)

பூமியிலுள்ள நியாய சங்கங்களில் உண்டாகும் முடிவுகளின் மீது மனிதர்களுக்கிடையில் காட்டப்படும் மிக ஆழமான ஆர்வம், சர்வபூமிக்கும் நியாதிபதியாக இருப்பவருக்குமுன், பரலோக நீதிமன்றத்தில் ஜீவபுஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டவர்களின் வாழ்க்கை திருப்பிப்பார்க்கப்படுவதற்காக வரும்போது மங்கலாகவே இருக்கிறது. தமது இரத்தத்தின் மூலமாக வெற்றி பெறும் அனைவருக்கும், மீறுதல்களிலிருந்து மன்னிப்பு அருளப்பட்டு, அவர்களுடைய ஏதேன் தோட்டத்தில் மீண்டும் குடிவைக்கப்பட்டு, அவருடன் புத்திரசுவீகாரமுள்ளவர்களாக முந்தின ஆளுகைக்கு முடிசூட்டப்படுவர் என்ற மன்றாட்டை தெய்வீகப் பரிந்துரையாளர் முன்வைக்கிறார். நமது இனத்தை வஞ்சிக்கவும் சோதிக்கவும் செய்யும் முயற்சிகளில் மனிதப்படைப்பில் இருந்த

தெய்வீகத் திட்டத்தை தொய்ந்துபோகச்செய்ய சாத்தான் எண்ணியிருந்தான். ஆனால், மனிதன் ஒருபோதும் வீழ்ச்சியடையவேயில்லை என்பதைப்போல அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவேண்டும் என்று கிறிஸ்து இப்போது கேட்கிறார். அவர் தமது மக்களுக்காக முழுமையான—நிறைவான மன்னிப்பையும், நீதியையும் மட்டும் கேட்காமல், அவரது மகிமையில் ஒரு பங்கும், அவருடைய சிங்காசனத்தில் இடமும் கேட்கிறார்! (15)

இயேசு அவரது கிருபையின் கீழ்ப்பட்டவர்களுக்காகப் பரிந்து பேசும்போது, சாத்தான் அவர்களை மீறுதல்காரர்கள் என்று தேவனுக்கு முன்பாக குற்றப்படுத்துகிறான். அவர்களைக் கடவுள் நம்பிக்கையற்ற கோட்பாட்டில் நடத்தி, தேவன்மீதுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்து, அவரது அன்பிலிருந்து பிரித்து, அவரது பிரமாணத்தை மீறச்செய்ய பெரும் வஞ்சகனாகிய அவன் வகைதேடியிருந்தான். இப்பொழுது, அவர்களது வாழ்க்கையின் பதிவேடுகளையும், சுபாவத்திலுள்ள குறைகளையும், மீட்பருக்கு அவமதிப்பைக் கொண்டுவந்த கிறிஸ்துவற்ற குணத்தின்படி செய்யும்படியாக அவர்களைத் தூண்டிவிட்ட எல்லாப் பாவங்களையும் சுட்டிக்காட்டி, இதன் காரணமாக அவர்கள் தனக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்று அவன் உரிமைபாராட்டுகிறான். (16)

இயேசு அவர்களது பாவங்களை தவிர்க்காமல், பாவத்திற்கான அவர்களது மனம் வருந்துதலையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறார். அவர்களுடைய மன்னிப்பை உரிமைகோருகிறார். பிதாவுக்கும் தூதர்களுக்கும் முன்பாக, தமது காயம்பட்ட கரங்களை உயர்த்திக்காட்டி, “அவர்களை பேர்பேராக நான் அறிந்திருக்கிறேன். அவர்களை என்னுடைய உள்ளங்கையில் நான் வரைந்திருக்கிறேன். ‘தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்’” (சங். 51:17) என்கிறார். சாத்தானை நோக்கி: “கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; இவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி அல்லவா” (சகரியா 3:2) என்று அறிவிக்கிறார். கிறிஸ்து தமது உண்மையானவர்களை “கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக” (எபே. 5:27) பிதாவின் சமூகத்தில் நிறுத்தும்படி, அவரது நீதியின் ஆடையால் போர்த்துகிறார். அவர்களது பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அவர்களைக்குறித்து, “அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்” (வெளி. 3:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. (17)

இப்படியாக, “நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்” “அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும்; யூதாவின் பாவங்கள் தேடப்பட்டாலும் அவைகள் கிடையாதிருக்கும்” (எரேமியா 31:34 50:20) “இஸ்ரவேலில் தப்பினவர்களுக்கு அந்நாளிலே கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையுமாயிருக்கும்; பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும்... சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்டவனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படுவான்” (ஏசாயா 4:2–4) என்கிற புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தம் பூரணமான நிறைவேறும். (18)

நுட்பநியாயவிசாரணை, பாவங்களைத் துடைத்து நீக்கிவிடுதல் ஆகிய பணிகள் கர்த்தரின் இரண்டாம்வருகைக்கு முன் நிறைவேற்றப்படவேண்டியுள்ளது. புத்தகத்தில் எழுதப்பட்டவைகளில் இருந்து மரித்தோர் நியாயந்தீர்க்கப்படவேண்டியதிருப்பதால், வழக்குகளை விசாரிக்கும் நியாயத்தீர்ப்பு நடந்து முடியும்வரை, மனிதர்களின் பாவங்களைத் துடைத்து நீக்குவது முடியாது. ஆனால் கர்த்தருடைய சந்திதானத்திலிருந்த இளைப்பாறுதலின் காலங்கள் வரும.போதும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்போதும் (அப். 3:19,20) விசுவாசிகளின் பாவங்கள் நீக்கப்படும் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பாகச் சொல்லுகிறார். நுட்ப நியாயவிசாரணை முடிவடையும்போது, கிறிஸ்து வருவார். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனுடைய கிரியைக்குத் தக்கதாக அளிக்கும் பலன் அவருடன் வருகிறது. (19)

சாயலாக இருந்த ஆராதனையில், பிரதான ஆசாரியன் இஸ்ரவேலர்களுக்குப் பாவநிவாரணம் செய்தபின், வெளியே வந்து, சபையை ஆசீர்வதித்தான். அப்படியே கிறிஸ்துவும் அவரது மத்தியஸ்த ஊழியத்தின் முடிவில் அவருக்காகக் காத்திருக்கும் அவருடைய மக்களை நித்தியஜீவனைக் கொடுத்து ஆசீர்வதிக்கும்படி, “பாவமில்லாமல் தரிசனமாவார்” (எபி. 9:28). ஆசாரியன் பரிசுத்தஸ்தலத்திலிருந்து பாவத்தை நீக்குவதில், பாவங்களைப் போக்காட்டின் தலையில் சுமத்தினதுபோல, கிறிஸ்து இந்தப் பாவங்கள் அனைத்தையும் பாவத்திற்குக் காரணமாகவும் பாவங்களைச் செய்ய தூண்டுபவனாகவும் இருந்த சாத்தான்மேல் சுமத்துவார். இஸ்ரவேலின் பாவங்களைச் சுமந்து கொண்டு அந்த போக்காடு குடியில்லாத தேசத்துக்கு அனுப்பப்பட்டது (லேவி. 16:22). அப்படியே தேவனுடைய மக்களைப் பாவம் செய்யும்படிச் செய்த குற்றங்கள் அனைத்தையும் சாத்தான் தன்மீது சுமந்துகொண்டு, குடிமக்கள் ஒருவரும்

இல்லாமல் பாழாகியிருக்கும் இந்தப் பூமியில் சிறைப்பட்டவனாக இருப்பான். இறுதியில் துன்மார்க்கர்கள் அனைவரையும் அழிக்கும் அக்கினியில், முழுமையான பாவத்தின் தண்டனையை அனுபவிப்பான். இவ்வாறாக, பாவத்தை முற்றிலுமாக நீக்குவதிலும், தீமையைவிட்டு விலக விரும்பியிருந்த அனைவரது விடுதலையிலும், மாபெரும் இரட்சிப்பின் திட்டம் நிறைவேறும். (20)

நியாயத்தீர்ப்புக்கென்று குறிப்பிடப்பட்டிருந்த வேளையில்—1844—ல்—2300 நாட்களின் முடிவில், பாவங்களைப்பற்றி விசாரணையும் அவைகளைத் துடைத்து நீக்கும் பணியும் ஆரம்பமாயிற்று. கிறிஸ்துவின் பெயரை அணிந்துகொண்ட அனைவரும், அதன் நுட்பமான ஆராய்ச்சியில் தேற வேண்டும். உயிருள்ளவர்களும், மரித்தவர்களும் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக, அந்தப் புத்தகங்களில் எழுதப்பட்டபடியே, நியாயத்தீர்ப்படைய வேண்டும். (21)

மனம் வருந்தாத, விட்டுவிடப்படாத பாவங்கள் மன்னிக்கப்படாமல், புத்தகங்களிலிருந்தும் அழித்து நீக்கப்படாமல், தேவனுடைய நாளில் பாவிக்கு எதிரான சாட்சியாக நிற்கும். ஒருவன் தனது தீய செயல்களைப் பகலின் வெளிச்சத்திலோ அல்லது இரவின் இருளிலோ செய்திருக்கலாம். ஆனால் அவைகள் நாம் சந்திக்க வேண்டிய அவருக்குமுன் திறக்கப்பட்டு வெளிக்காட்டப்பட்டிருக்கிறது. தேவதூதர்கள் ஒவ்வொரு பாவத்திற்கும் சாட்சியாக இருந்து, தவறில்லாத ஆவணங்களில் அவைகளைப் பதிவு செய்துள்ளனர். அன்னை, மனைவி, மக்கள் உடனுள்ளவர்கள் ஆகியோரிடமிருந்து பாவம் மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்டிருக்கலாம். குற்றம்செய்தவரைத் தவிர, வேறு ஒருவரும் அந்தத் தவறைப்பற்றி சந்தேகப்படமுடியாத விதத்தில் நடந்துகொள்ளலாம். ஆனால், பரலோகத்தின் நுண்ணறிவின்முன், அது திறக்கப்பட்டதாக வைக்கப்பட்டுள்ளது. மிகுந்த இருண்ட இரவின் இருளும், சாமர்த்தியமிக்க அனைத்து வஞ்சகச் செயல்களின் இரகசியமும், நித்தியகாலமாக உள்ளவரின் அறிவிலிருந்து, ஒரே ஒரு எண்ணத்தைக்கூடத் திரையிட்டு மறைக்கப் போதுமானதாக இல்லை. நியாயமற்ற கணக்கு, முறைதவறிய கொடுக்கல் வாங்கல்கள், ஆகியவைபற்றிய மிகச் சரியான பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் தேவனிடம் உள்ளது. பக்தியின் வெளிவேஷத்தினால், அவர் ஏமாற்றப்படுவதில்லை. சுபாவத்தை அளவிடுதலில் அவர் தவறு செய்வதில்லை. ஊழல் மலிந்த இருதயம் உள்ளவர்களால் மனிதர்கள் வஞ்சிக்கப்படலாம். ஆனால் மறைக்கப்பட்டுள்ள அனைத்தையும் ஊடுருவி, நமது உள்ளான வாழ்க்கையை அவர் வாசிக்கிறார். (22)

இந்த எண்ணம் எவ்விதம் பக்திவிநயமாக உள்ளது! நித்திய காலத்திற்குள்ளாக ஒன்றன்பின் ஒன்றாகக் கடந்துசெல்லும் நாட்கள் பரலோகப் புத்தகத்தின் பதிவுகளைத் தாங்கியவையாக உள்ளன. ஒரு தடவை பேசப்பட்ட பேச்சு, ஒருமுறை செய்யப்பட்ட செயல் ஆகியவைகளை ஒருபோதும் திரும்பிப் பெற இயலாது. நன்மை தீமை ஆகிய இரண்டையும் தேவதூதர்கள் பதிவு செய்துள்ளனர். பூமியின் மீதுள்ள அனைவரிலும், மிகவும் பலமிக்க வெற்றி வீரனாலுங்கூட, ஒரே ஒரு நாளின் பதிவைக் கூட பின் அழைக்க இயலாது. நமது செயல்கள், சொற்கள், இரகசியமான நோக்கங்களுங்கூட, நன்மைக்கோ அல்லது தீமைக்கோ முடிவுசெய்யும் மதிப்பைக் கொண்டிருக்கின்றன. அவைகள் நம்மால் மறக்கப்படலாம். ஆனால் நியாயப்படுத்தவோ அல்லது குற்றப்படுத்தவோ, அவைகள் சாட்சிபகரும். (23)

கலைஞனின் மெருகேற்றப்பட்ட தட்டினைப் பார்க்கும்போது, பார்ப்பவரது முகத்தோற்றம் அவர் இருக்கிற வண்ணமாகவே வெளிப்படுத்தப்படும். அதே விதத்தில், மேலே உள்ள புத்தகங்களில், சுபாவம் இருக்கிறவண்ணமாகவே வரையப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் பரலோகவாசிகளின் பார்வையை சந்திக்கவேண்டியதாக இருக்கும் இந்த ஆதாரங்களைப் பற்றிய வரவேற்பு எந்த அளவிற்கு அற்பமாக உணரப்பட்டுள்ளது! காணக்கூடியதிலிருந்து காணமுடியாததைப் பிரிக்கும் திரையானது பின்னிழுக்கப்படுமானால், நியாயத்தீர்ப்பில் சந்திக்க வேண்டிய ஒவ்வொரு வார்த்தையையும் செயலையும் ஒரு தேவதூதன் பதிவுசெய்வதை மக்கள் அனைவரும் காணக்கூடுமானால், நாள்தோறும் பேசப்படுபவைகளில் எத்தனை வார்த்தைகள் பேசப்படாதவைகளாக இருந்திருக்கும்! எத்தனை செயல்கள் செயலாற்றப்படாதவைகளாக இருந்திருக்கும். (24)

பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு திறமையும் நியாயத்தீர்ப்பில் நுணுக்கமாக சோதிக்கப்படும். பரலோகத்தினால் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மூலதனத்தை நாம் எப்படிப் பயன்படுத்தியிருக்கிறோம்? கர்த்தர் அவரது வருகையின்போது, அவருக்குச் சொந்தமானதை அதிக வட்டியுடன் பெற்றுக்கொள்வாரா? நமது கரத்திலும் இருதயத்திலும் மூளையிலுமாக நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வல்லமைகளை தேவனுடைய மகிமைக்கென்றும், இந்த உலகத்தின் ஆசீர்வாதத்திற்கென்றும் நாம் முன்னேற்றமடையச் செய்திருக்கிறோமா? நமது நேரம், நமது எழுதுகோல், நமது பேச்சு, நமது செல்வாக்கு ஆகியவைகளை நாம் எவ்விதமாகப் பயன்படுத்தியிருக்கிறோம்? ஏழை, துன்பப்பட்டவர், அநாதை, விதவை ஆகியவர்களின் வடிவில் இருந்த கிறிஸ்துவிற்கு நாம் என்ன செய்திருக்கிறோம்? தேவன் அவரது வார்த்தையின்

கருவூலமாக இருக்கும்படி நம்மை இந்த உலகில் ஏற்படுத்தியிருக்கிறார். இரட்சிக்கப்படும்படி மனிதர்களை ஞானமுள்ளவர்களாக்குவதற்காக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒளியையும், சத்தியத்தையும்கொண்டு, நாம் என்ன செய்திருக்கிறோம்? கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பெயரளவில் அறிவிப்பதில் எவ்விதமான மதிப்பும் இல்லை. செயலின் மூலமாகக் காட்டப்பட்ட அன்பு ஒன்று மட்டுமே, எந்தச் செயலையும் மதிப்புள்ளதாக்குகிறது. மனிதர்களின் அனுமானத்தில் எவ்வளவுதான் சிறிதாகத் தோன்றினாலும், அன்பினால் செய்யப்பட்ட அனைத்தும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பலன் அளிக்கப்படுகிறது. (25)

மனிதர்களின் மறைத்துவைக்கப்பட்டுள்ள சுயநலம், பரலோகப் புஸ்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டதாக நிற்கிறது. உடன் மனிதர்களுக்காக நிறைவேற்றப்படாமல் விட்டுவிடப்பட்ட கடமைகள், இரட்சகரின் உரிமைகளைப்பற்றிய மறதி, ஆகியவைபற்றிய ஒரு பதிவுப்பட்டியல் உள்ளது. கிறிஸ்துவிற்குச் சொந்தமான காலம், சிந்தனை, பலம் ஆகியவை எவ்விதமாக சாத்தானுக்குக் கொடுக்கப்பட்டன என்பதை அவர்கள் காண்பார்கள். தேவதூதர்கள் பரலோகத்திற்கு எடுத்துச்செல்லும் இந்தக் குறிப்பு வருத்தம் தருபவையாக உள்ளது. நுண்ணறிவு மிக்கவர்களும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களுங்கூட உலகப்பிரகாரமான உடைமைகளை சம்பாதிப்பதில், அல்லது பூமிக்குரிய இன்பங்களை அனுபவிப்பதில் ஈடுபட்டுள்ளனர். தன்னை வெளிக்காட்டும் அலங்காரம், சுயவிருப்பங்களைப் பூர்த்திசெய்கின்ற பழக்கங்கள் ஆகியவைகளுக்காக செல்வம், காலம், பலம் ஆகியவை செலவிடப்படுகின்றன. ஜெபம் செய்வதற்கும், வேதவாக்கியங்களை ஆராய்வதற்கும், ஆத்துமாவைத் தாழ்த்துவதற்கும், பாவத்தை அறிக்கைசெய்வதற்கும் செலவிடப்படும் நேரங்கள் மிகக் குறைவாக உள்ளன. (26)

நாம் ஏதாவது பணியின்மேல் ஈடுபாடு உள்ளவர்களாகும்படி, நமது மனங்களை வேறு காரியங்களில் ஈடுபடச்செய்வதற்காக, எண்ணிலடங்காத திட்டங்களை சாத்தான் கண்டுபிடித்துக்கொண்டே இருக்கிறான். பாவநிவாரணம் செய்யும் ஒரு பலியையும் சர்வவல்லமையுள்ள ஒரு மத்தியஸ்தரையும் காட்சிக்குக் கொண்டுவரும் பெரும் சத்தியங்களைத் தலைமை வஞ்சகன் வெறுக்கிறான். மனங்களை இயேசுவிடமிருந்தும் அவரது சத்தியத்தில் இருந்தும் திசைதிருப்பிவிடுவதைச் சார்ந்துதான் அவனுடைய காரியங்கள் அனைத்தும் உள்ளன என்பதை அவன் அறிந்திருக்கிறான். (27)

இரட்சகரின் மத்தியஸ்தத்தினால் உண்டாகும் நன்மைகளில் பங்குபெறுபவர்கள், பூரணமான பரிசுத்தத் தன்மையை அடைய, தேவனுக்குப்

பயந்து, செய்யவேண்டிய தங்களது கடமைகளில் வேறு எதுவும் குறுக்கிட அனுமதிக்கக்கூடாது. இன்பங்கள், அலங்கரிப்புகள் அல்லது இலாபம்தேடுதல் ஆகியவைகளுக்காக விலையேறப்பெற்ற நேரத்தைச் செலவிடுவதற்குப் பதிலாக, ஆர்வத்துடனும், ஜெபத்துடனும் சத்திய வார்த்தைகளை ஆராய்வதில் ஈடுபடவேண்டும். தேவனுடைய ஜனங்கள், பரிசுத்தஸ்தலம், நுட்ப நியாயவிசாரணை என்னும் பொருள்களைப்பற்றித் தெளிவாகப் புரிந்தவர்களாக இருக்கவேண்டும். தங்களுடைய பிரதான ஆசாரியரின் நிலை, அவரது பணி, ஆகியவை பற்றிய ஒரு அறிவு அனைவருக்கும் அவசியமானதாக உள்ளது. அப்படி இல்லாவிட்டால், இந்த நேரத்திற்கு மிகவும் அவசியமான விசுவாசத்தைச் செயல்படுத்துவது அவர்களால் இயலாததாகிவிடும். அல்லது அவர்களை நிரப்பும்படி தேவன் நியமிக்கும் நிலையை பற்றிக்கொள்ள அவர்களால் இயலாமலாகிவிடும். காக்கவோ இழக்கவோ வேண்டிய ஒரு ஆத்துமா ஒவ்வொருவரிடமும் உள்ளது! மேன்மையான நீதிபதியை ஒவ்வொருவரும் முகமுகமாகச் சந்தித்தாக வேண்டும்! அப்படியிருக்க, தானியேலுடன் தனது வீதத்திற்கென்று ஒவ்வொரு தனி நபரையும் எழுந்து நிற்கச்செய்கிற, நியாயசங்கம் உட்காருவதும் புத்தகங்கள் திறக்கப்படுவதுமாகிய பக்திவிநயமான காட்சியைப்பற்றி ஒவ்வொரு மனமும் அடிக்கடி தியானிக்கவேண்டியது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது! (28)

இந்தப் பொருட்பாடங்களின் ஒளியை அடைந்துள்ள அனைவரும் தேவன் அவர்களிடம் ஒப்படைத்துள்ள பெரும் சத்தியங்களுக்குச் சாட்சிபகரவேண்டியவர்களாக உள்ளனர். மனிதனின் சார்பில் கிறிஸ்து ஆற்றும் பணியின் முக்கிய மையமாக, பரலோக பரிசுத்தஸ்தலம் உள்ளது. பூமியின்மீது வாழும் ஒவ்வொரு ஆத்துமாவுடனும், அது சம்பந்தப்பட்டதாக உள்ளது. இரட்சிப்பின் திட்டத்தை அது நமது காட்சிக்குக் கொண்டுவந்து, நீதிக்கும்— பாவத்திற்கும் இடையே நிகழ்ந்துகொண்டிருக்கும் போட்டியில் உள்ள வெற்றிகரமான பலன்களை வெளிப்படுத்துகிறது. இந்தப் பொருள்களைப்பற்றி அனைவரும் பூரணமாக ஆராய்ந்தறிந்து, தங்களிலுள்ள நம்பிக்கையைக்குறித்து விசாரித்துக் கேட்கும் யாவருக்கும் பதில் தரும்படி தகுதி உள்ளவர்களாக இருக்கவேண்டியதை, எல்லாவற்றையும்விட மிக முக்கியமானதாக்கவேண்டும். (29)

இரட்சிப்பின் திட்டத்தில், கிறிஸ்துவின் சிலுவை மரணம் எவ்வளவு முக்கியமானதாக இருந்ததோ, அதைப்போலவே, மனிதனின் சார்பில் பரலோகப் பரிசுத்தஸ்தலத்தில், அவர் மத்தியஸ்தம் செய்வதும் அவ்வளவு முக்கியமானதாக உள்ளது. உயிர்த்தெழுந்தபின், பரலோகத்தில் செய்து

முடிக்கும்படி எழுந்தருளிச்சென்ற அவரது ஊழியத்தை அவர் தமது மரணத்தினால் ஆரம்பித்தார். நமது முன்னோடியாக உள்ளவர் நமக்காக எங்கு பிரவேசித்திருக்கிறாரோ, அந்தத் திரைக்குள் விசுவாசத்தினால் நாமும் பிரவேசிக்கவேண்டும். (எபி. 6:20). கல்வாரிச் சிலுவையிலிருந்து அங்கு ஒளி பிரதிபலிக்கிறது. மீட்பின் தேவ இரகசியம்பற்றித் தெளிவான உட்பார்வையால் நாம் ஆதாயமடையலாம். பரலோகத்தின் எண்ணமுடியாத செலவினால், மனிதனின் இரட்சிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட அந்தத் தியாகபலியானது, உடைக்கப்பட்ட தேவ கற்பனையின் மிக விசாலமான கோரிக்கைகளுக்குச் சமமாக உள்ளது. பிதாவின் சிங்காசனத்திற்கான பாதையை இயேசு திறந்திருக்கிறார். விசுவாசத்தினால் அவரிடம் வரும் அனைவரின் உண்மையான வாஞ்சையும் அவரது மத்தியஸ்த ஊழியத்தின் மூலமாக தேவ சமுகத்தில் வைக்கப்படவிருக்கிறது. (30)

“தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்” நீதி. 28:13. தங்களுடைய பாவங்களை மறைத்து, அவைகளுக்குச் சாக்குப்போக்கு கூறுபவர்கள்மீது சாத்தான் எவ்விதமாக வெற்றிச் சிரிப்பு சிரிக்கிறான் என்பதையும், அவர்களது நடத்தை காரணமாகக் கிறிஸ்துவையும் பரிசுத்த தூதர்களையும் அவன் எவ்விதமாக ஏளனம் செய்கிறான் என்பதையும் அவர்கள் காண்பார்களானால், தங்கள் பாவங்களை அறிக்கைசெய்து அவைகளைத் தூரமாக விட்டுவிட அவர்கள் விரைவார்கள். சுபாவத்தில் உள்ள குறைபாடுகளின் மூலமாக, மனம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள சாத்தான் செயலாற்றுகிறான். இந்தக் குறைபாடுகள் போற்றி வளர்க்கப்படுமானால், அவன் வெற்றி அடைவான் என்பதை அவன் அறிந்திருக்கிறான். எனவே, கிறிஸ்துவின் அடியார்களை அவர்களால் மேற்கொள்ளமுடியாத சாவுக்கேதுவான ஏமாற்றும் பேச்சினால் வஞ்சிப்பதற்கென்றுத் தொடர்ந்து முயன்றுகொண்டிருக்கிறான். ஆனால் இயேசு பெருமான் காயப்பட்ட அவரது கரங்களினாலும், சிதைக்கப்பட்ட அவரது சரீரத்தினாலும் அவர்கள் சார்பாகப் பரிந்துபேசி, அவரைப் பின்பற்றும் அனைவருக்கும் “என் கிருபை உனக்குப் போதும்” என்கிறார். “என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது” (மத்தேயு 11:29,30) என்கிறார். எனவே, ஒருவரும் தங்களுடைய குறைபாடுகள் நலமடையமுடியாதவை என்று எண்ணாமலிருப்பார்களாக. அவைகளை மேற்கொள்ள தேவன் விசுவாசத்தையும் கிருபையையும் தருவார். (31)

இப்பொழுது நாம் பாவநிவாரண நாள் என்னும் மிக முக்கியமான நாளில் (நாளைச் சுட்டிக்காட்டும் காலத்தில்) இருக்கிறோம். சாயலாக இருந்த ஆராதனையில், பிரதான ஆசாரியன் இஸ்ரவேலருக்காக பாவநிவர்த்திசெய்த அந்தநேரத்தில், இஸ்ரவேலர் ஜனங்களில் இருந்து அறுப்புண்டு போகாமலிருப்பதற்காக—பாவத்திற்காக மனம் வருந்தி, கர்த்தருக்கு முன்பாகத் தங்களது ஆத்துமாக்களைத் தாழ்த்தவேண்டியது அனைவருக்கும் அவசியமாக இருந்தது. அதேவிதமாகத் தங்களது பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று விரும்பும் அனைவரும் இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சில நாட்களாகிய தவணையின் காலத்தில், பாவத்திற்கான வருத்தத்துடனும், உண்மையான மனந்திரும்புதலுடனும், ஆத்துமாக்களை தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தவேண்டும். விசுவாசத்துடன் இருதயத்தை ஆழமாக ஆராய்தல் வேண்டும். கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளுபவர்களிடம் உள்ள லேசான, வேடிக்கையாக எண்ணும் ஆவி தூரமாக நீக்கப்படவேண்டும். மேலாதிக்கம் செய்வதற்கென்று முயலும் தீய சுபாவத்தைக் கீழ்ப்படுத்த விரும்பும் அனைவர் முன்பும் அக்கரைமிக்க போராட்டம் உள்ளது. ஆயத்தம் செய்யும் பணி தனிப்பட்டவருடைய பணியாக உள்ளது. நாம் கூட்டங்களாக இரட்சிக்கப்படுவதில்லை. ஒருவரில் உள்ள தூய்மையும் பக்தியும், அடுத்தவர்களில் இல்லாத இந்தத் தன்மைகளை ஈடுசெய்யாது. உலக மக்களனைவரும் தேவனுக்கு முன்பாக நியாயத்தீர்ப்பில் கடந்துசெல்ல வேண்டியதிருந்தபோதிலும், உலகத்தில் வேறொருவரும் இல்லை என்பதுபோல், ஒவ்வொரு தனிப்பட்டவருடைய வழக்கினையும் மிக நெருக்கமாக உற்று விசாரிப்பார். ஒவ்வொருவரும் சோதிக்கப்பட்டு கறைதிரை இல்லதவர்களாக காணப்படவேண்டும். (32)

பாவநிவாரண ஊழியத்தின் முடிவுப் பகுதியின் காட்சிகள் பக்திவிநயமானவை. அதிலுள்ள ஆர்வங்கள் மிகவும் முக்கியமானவையாக உள்ளன. உன்னதத்திலுள்ள பரிசுத்தஸ்தலத்தில் இப்பொழுது நியாயத்தீர்ப்பு நடந்துகொண்டிருக்கிறது. அநேக வருடங்களாக இந்தப் பணி தொடர்ந்துகொண்டிருக்கிறது. விரைவில்—எவ்வளவு விரைவில் உயிருள்ளவர்களின் வழக்குகளை விசாரிக்கும் என்று ஒருவருக்கும் தெரியாது. பயங்கரமிக்க தேவ சமுகத்திற்கு முன்பாகத் திருப்பிப் பார்க்கும்படி நமது வாழ்க்கை வர உள்ளது. “அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்”—மாற்கு 13:33. “ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்”

(வெளி. 3:3) என்றபடி, இந்த நேரத்தில், எல்லாவற்றிற்கும் மேலாக, இரட்சகரின் எச்சரிப்பிற்குச் செவிசாய்ப்பதே நமக்கு அனுகூலமாயிருக்கிறது. (33)

நுட்ப நியாய விசாரணையின் பணி முடியும்போது, அனைவரது வாழ்வும் ஜீவனுக்கென்றோ மரணத்திற்கென்றோ முடிவு செய்யப்பட்டிருக்கும். கர்த்தர் வானத்தின் மேகங்களின்மீது தோன்றுவதற்குச் சற்று நேரத்திற்குமுன் தவணையின் காலம் முடிவடைகிறது. "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" (வெளி. 22:11,12) என்று அந்த நேரத்தை எதிர்பார்த்திருக்கும் கர்த்தர் கூறுகிறார். (34)

நீதிமான்களும் துன்மார்க்கரும் இன்னும் தங்களது அழிவுக்குரிய நிலையில் பூமியின்மீது வாழ்ந்துகொண்டிருப்பார்கள். மனிதர்கள் நட்டுக்கொண்டும், கட்டிக்கொண்டும், குடித்துக்கொண்டும், புசித்துக்கொண்டும் இருப்பார்கள். பின்னிழுக்கப்படமுடியாத இறுதியான முடிவு உன்னதத்தில் உள்ள பரிசுத்தஸ்தலத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிய உணர்வில்லாதவர்களாக அனைவரும் இருப்பார்கள். ஜலப்பிரளயத்திற்குமுன், நோவா பேழைக்குள் பிரவேசித்தபின், அவனை உள்ளே வைத்தும், தெய்வபக்தி இல்லாதவர்களை வெளியே வைத்தும் கர்த்தர் கதவை அடைத்தார். ஆனால் தங்களது தண்டனை குறிக்கப்பட்டாகிவிட்டது என்பதை அறியாது, கவலையற்று, இன்பங்களை அனுபவிக்கும் தங்களுடைய வாழ்க்கையைத் தொடர்ந்து, வரவிருக்கும் தவிர்க்கமுடியாத நியாயத்தீர்ப்பின் எச்சரிக்கையை ஏழு நாட்களாக மக்கள் பரிகசித்துக்கொண்டிருந்தனர். "ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷ குமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" (மத்தேயு 24:39) என்று இரட்சகர் கூறுகிறார். கவனமற்றிருக்கும் நடு இரவில் வரும் திருடனைப்போல, மௌனமாக ஒவ்வொரு மனிதனுடைய முடிவையும் அந்த மணிநேரம் குறிக்கும். குற்றமுள்ள மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த இரக்கத்தின் ஈவின் பின்வாங்குதலை முடிவுசெய்யும் நேரமாக அது இருக்கும். (35)

"அப்படியே நீங்களும் விழித்திருங்கள்; ஏனெனில், வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள்

நினையாதவேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள்"—மாற்கு 13:35,36. விழித்திருப்பதைவிட்டு, அசதியாக இருந்து, உலகத்தின் கவர்ச்சிகளின்மீது கவனம் செலுத்தத் திரும்புபவர்களின் நிலைமை அபாயகரமானது. வியாபாரம் செய்யும் மனிதன் இலாபத்தின்மீது நோக்கமாயிருக்கும்போது, இன்பம் அனுபவிப்பவன் அதில் ஈடுபட வகைதேடி இருக்கும்போது, நாகரிகம் என்னும் மகளானவள் அவளது அலங்காரத்தைச் செய்துகொண்டிருக்கும்போது, அந்த நேரத்தில் பூமி முழுவதற்கும் நீதிபதியாக இருப்பவர் "நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறைவாகக் காணப்பட்டாய்" என்னும் தீர்ப்பைக் கூறுவார். (36) ★

# 29

# பாவத்திற்கு காரணன் யார்?

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 492–504)**

பாவத்தின் தோற்றமும் அது இருப்பதன் காரணமும் அநேக மனங்களுக்கு ஒரு பெரும் குழப்பத்தின் உற்பத்திஸ்தானமாகவே உள்ளது. தீமையின் செயலை அதன் பயங்கர விளைவுகளான ஆபத்துக்களுடனும் பாழ்க்கடிப்புகளுடனும் அவர்கள் காண்கிறார்கள். ஞானத்திலும் வல்லமையிலும் அன்பிலும் முடிவில்லாதவராக இருக்கும் ஒருவரின் மேலாண்மையின்கீழ், இவை எப்படி இருக்கமுடியும்? என்று அவர்கள் கேள்விகேட்கின்றனர். விளக்கம் கண்டிராத ஒரு இரகசியம் இது. அவர்களது நிச்சயமின்மை சந்தேகத்தின் காரணமாக, தேவனுடைய வார்த்தையில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள, இரட்சிப்பிற்கு அவசியமான சத்தியங்களுக்கு, அவர்கள் குருடாக்கப்பட்டிருக்கின்றனர். பாவம் இருப்பதைப்பற்றிய விசாரணைகளில், தேவன் ஒருபோதும் வெளிப்படுத்தாதவைகளை ஆராய்வதற்கு முயன்று, இதனால் தங்களுடைய கஷ்டங்களுக்கு விடை காணாமல் உள்ளனர். சந்தேகத்தினாலும், அற்பமான ஆட்சேபணைகளினாலும் வெல்லப்படும் சுபாவமுள்ளவர்கள், பரிசுத்த எழுத்துக்களை நிராகரிப்பதற்கு அதையே ஒரு காரணமாகவும் பற்றிக் கொள்ளுகின்றனர். எப்படியானாலும், தேவனுடைய சுபாவம் பற்றியும், அவரது அரசாங்கத்தின் தன்மைபற்றியும், பாவத்தை அவர் கையாளும் கொள்கைகள் பற்றியும் வேதம் போதிக்கிறவைகளை, பாரம்பரியமும், தவறான வேதவிளக்கங்களும் இருளடையச் செய்துள்ளதால், தீமையைப் பற்றிய பிரச்சினையை மனநிறைவாகப் புரிந்துகொள்ளுவதில் மற்றவர்கள் தோல்வி அடைகின்றனர். (1)

பாவத்தின் தோற்றத்தை விளக்கமுடியாததுபோல், அது நிலைத்திருப்பதையும் விளக்குவது இயலாததாக உள்ளது. என்றாலும் பாவம் சம்பந்தப்பட்ட அவரது நடவடிக்கைகளில் உள்ள நீதியும், அனுதாபத்தையும் முழுமையாக வெளிக்காட்டுவதற்கு, பாவத்தின் பிறப்பையும் முடிவையும்பற்றிப் போதுமான அளவிற்கு அறிந்துகொள்ளமுடியும். பாவத்தின் உட்புகுதலுக்கு தேவன் எந்த வகையிலும் பொறுப்பானவர் அல்ல என்பதையும், தெய்வீகக் கிருபை ஒருதலைப்பட்சமாக பின்னிழுத்துக்கொள்ளப்படவில்லை என்பதையும், கலகம் உண்டாவதற்கு வாய்ப்பைக் கொடுக்க தெய்வீக அரசாங்கத்தில் குறைபாடு இருக்கவில்லை என்பதையும்விட, வேதவாக்கியங்களினால் வேறெதுவும் அதிகத் தெளிவாகப் போதிக்கப்படவில்லை. அத்துமீறி நுழைந்த ஒன்றுதான் பாவம். அது இருப்பதற்கு எவ்விதமான காரணமும் கொடுக்க இயலாது. அது மர்மமானது. கணக்குகள் இல்லாதது. அதற்குச் சாக்குப்போக்கு கூறுவதும் அல்லது அது இருப்பதற்கு ஒரு காரணம் காட்டுவதும் கூடுமானால், அது பாவம் இல்லை என்றாகிவிடும். பாவத்திற்கு நம்மால் கொடுக்கக்கூடிய ஒரே விளக்கம், தேவனுடைய வார்த்தையில் கொடுக்கப்பட்டுள்ள “நியாயப்பிரமாணத்தை மீறுவதே” ஆகும். தெய்வீக அரசாங்கத்தின் அஸ்திவாரமாக இருக்கும் பெரும் அன்பின் பிரமாணத்திற்கு எதிராகச் செயல்படும் கொள்கையாக அது உள்ளது. (2)

பாவத்தின் உட்புகுதலுக்குமுன் பிரபஞ்சமெங்கும் சமாதானமும் மகிழ்ச்சியும் நிலவி இருந்தது. அனைத்தும் சிருஷ்டிகரின் சித்தத்துடன் பூரணமான இசைவுள்ளவையாக இருந்தன. தேவனிடம் அன்பு செலுத்துதல் எல்லாவற்றிற்கும் மேலானதாக இருந்தது. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துதல் பாரபட்சமற்றதாக இருந்தது. தேவனுடைய ஒரே பேறான வார்த்தையாகிய கிறிஸ்து, இயல்பிலும் சுபாவத்திலும் நோக்கத்திலும் நித்திய பிதாவுடன் ஒருமித்தவராக, பிரபஞ்சம் அனைத்திலும் தேவனுடைய ஆலோசனைகள் நோக்கங்கள் அனைத்திலும் பிரவேசிக்கக்கூடிய ஒரே ஒருவராக இருந்தார். பரலோகத்திலுள்ள அனைத்தையும், பிதா, கிறிஸ்துவின் மூலமாகப் படைத்தார். “அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் ... சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது”– கொலோ. 1:16. பரலோகம் முழுவதும் பிதாவுக்கு இணையான உரிமையாளருக்கான பக்தியை கிறிஸ்துவிற்குச் செலுத்தியது. (3)

தேவ அரசாங்கத்தின் அஸ்திவாரமாக அன்பின் பிரமாணம் இருந்ததால், படைக்கப்பட்ட உயிரினங்களின் மகிழ்ச்சி தேவப் பிரமாணத்தின் பெரும் நீதியின் கொள்கையைப் பூரணமாகச் சார்ந்திருப்பதில் மட்டுமே

இருந்தது. தேவன் அவரது படைப்புக்கள் அனைத்திடமிருந்தும் அன்பின் சேவையை—அவரது பண்பை அறிவுப்பூர்வமாக போற்றுவதினால் எழும் தொழுகையையே விரும்புகிறார். வற்புறுத்தலினால் உண்டாகும் ஒரு உறவில் அவர் மகிழ்வதில்லை. தாங்களாகவே மனமுவந்து, அவருக்குச் சேவைசெய்யும் சுயாதீன சித்தத்தை அவர் அனைவருக்கும் தருகிறார். (4)

இந்தச் சுதந்திரத்தை வேண்டாத விதத்தில் மாற்றுவதைத் தெரிந்துகொண்ட ஒருவன் இருந்தான். அவனுக்குள் பாவம் தோன்றியது. அவன் கிறிஸ்துவிற்கு அடுத்தபடியாக, தேவனால் அதிகமாக உயர்விக்கப்பட்டிருந்தான். பரலோகவாசிகளுக்கு நடுவில் அவன் வல்லமையிலும், மகிமையிலும் மிகவும் உயர்ந்தவனாக இருந்தான். அவனது பெயர் லூசிபர்! அவனது வீழ்ச்சிக்குமுன், காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூபினாக, குற்றமற்ற பரிசுத்தம் உள்ளவனாக இருந்தான். “கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரைமோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன். நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; ... சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது;” ... “நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணுப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமானகற்களின் நடுவே உலாவினாய். நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள்துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்”–எசே. 28:12–15. (5)

பிறரை ஆசீர்வதிக்கவும், தன்னைப் படைத்தவரை மகிமைப்படுத்தவும், லூசிபர் தனது மேன்மைமிக்க வல்லமையைப் பயன்படுத்துவதால், தேவனுடைய தயவிலும், பரலோக தூதர் சேனைகளின் நேசத்திலும் மதிப்பிலும் இருந்திருக்கலாம். ஆனால் “உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்” (எசே. 28:6) என்று தீர்க்கதரிசி சொல்லுகிறான். கொஞ்சம் கொஞ்சமாக அவன் சுயத்தை உயர்த்த விருப்பங்கொண்டான். “நீ உன் இருதயத்தைத் தேவனின் இருதயத்தைப்போல ஆக்குகிறபடியினால்” எசே. 28:6. நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் ... நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே”–ஏசாயா 14:13,14. தேவனால் படைக்கப்பட்டவைகள் பற்று வைப்பதிலும் உறவுகொள்ளுவதிலும், தேவனை முதன்மைபடுத்துவதை விடுத்து, தங்களது சேவையையும் வணக்கத்தையும் தனதாக்க வேண்டும்

என்று லூசிபர் முயற்சி செய்தான். முடிவற்றவராக பிதா, அவரது குமாரனுக்குச் சூட்டியிருந்த மேன்மையை அவன் இச்சித்து, அந்த தேவதூதர்களின் பிரபு, கிறிஸ்து ஒருவருக்கு மட்டுமே உரித்தாயிருந்த வல்லமையைத் தனதாகக் கொள்வதைக் குறிக்கோளாகக் கொண்டான். (6)

பரலோகம் முழுவதும் சிருஷ்டிகரின் மகிமையை பிரதிபலிப்பதிலும், அவருக்குத் துதிசெலுத்துவதிலும் மகிழ்ந்திருந்தது. இவ்விதமாக தேவன் மேன்மைப்படுத்தப்பட்டிருந்தபோது, அனைத்தும் சமாதானமும், சந்தோஷமும் மிக்கவையாக இருந்தன. ஒரு அபஸ்வரம் உண்டாகி, அது வானுலக இசைவுகளைச் சீர்குலைத்தது. சிருஷ்டிகரின் திட்டத்திற்கு எதிரான, சுயத்தை ஆராதித்தல், உயர்த்துதல் ஆகியவை உண்டாகி, தேவனுடைய மகிமையை மேலானதாகக் கொண்டிருந்தவர்களின் உள்ளங்களில், தீமையின் கெடுதலை அறிவிக்கும் குறிகள் தேன்றின. பரலோக தூதர் குழுக்கள் லூசிபருடன் மன்றாடின. சிருஷ்டிகரின் பெரிய தன்மை, நல்லகுணம், நீதி ஆகியவைகளையும், அவரது பிரமாணத்தின் பரிசுத்தமிக்க மாறாத தன்மையையும், தேவகுமாரன் அவன் முன்பாக எடுத்துக்காட்டினார். பரலோகத்தின் ஒழுங்கை தேவன் தாமே ஏற்படுத்தியிருந்தார். அதிலிருந்து விலகிச் சென்றதினால், லூசிபர், தன்னைப் படைத்தவரை கனவீனப்படுத்தி, தன்மீது அழிவைக் கொண்டுவந்தான். முடிவற்ற அன்பினாலும், இரக்கத்தினாலும் கொடுக்கப்பட்ட எச்சரிப்பு, அதைத் தடுக்கும் ஒரு ஆவியை மட்டுமே எழுப்பினது. லூசிபர் எந்த அளவிற்குக் கிறிஸ்துவிற்கு எதிரான தீர்மானமுள்ளவனாக ஆனானனோ, அந்த அளவிற்கு அதிகமாகப் பொறாமை அவனை மேற்கொண்டது. (7)

அவனது சொந்த மகிமையிலிருந்த அகந்தை, அவனை உயர்பதவியை விரும்பச்செய்தது. லூசிபருக்கு வழங்கப்பட்டிருந்த உன்னதமான மேன்மைகள் தேவனுடைய ஈவு என்று போற்றப்படவில்லை, சிருஷ்டிகரிடம் நன்றியையும் காண்பிக்கவில்லை. அவன் தன்னுடைய ஒளியிலும், உயர்விலும் மகிமைப்பட்டு, தேவனுக்குச் சமமாக ஆகவேண்டும் என்ற குறிக்கோள் உடையவனானான். பரலோகத்தின் சேனையினால் அவன் நேசிக்கப்பட்டு, மரியாதை செலுத்தப்பட்டிருந்தான். அவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதில் தேவதூதர்கள் மகிழ்ச்சி உள்ளவர்களாக இருந்தனர். அவர்களனைவருக்கும் மேலாக ஞானத்தாலும், மகிமையாலும் அவன் அணிவிக்கப்பட்டிருந்தான். இருந்தாலும் பரலோகத்தில் தேவயாண்மை உடையவராக, பிதாவோடுகூட அதிகாரமும் வல்லமையும் கொண்டவராக தேவகுமாரன் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தார். தேவனுடைய ஆலோசனைகள் அனைத்திலும் கிறிஸ்து கலந்துகொண்டபோது, லூசிபர் அவ்விதமாக

தெய்வீக நோக்கங்களில் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. “ஏன்? கிறிஸ்து மட்டும்தான் மேலாதிக்கம் உடையவராக இருக்கவேண்டுமா? அவர் ஏன் இவ்விதமாக தனக்கும் மேலாக மேன்மைப்படுத்தப்பட்டிருக்கிறார்? என்று அந்த வலிமைமிக்க தேவதூதன் கேள்வி கேட்டான். (8)

தேவசமுகத்திலிருந்து உடனே வெளியேறி, தேவதூதர்களுக்கிடையில் அதிருப்தியின் ஆவியைப் பரப்புவதற்காக லூசிபர் சென்றான். இரகசியமாக வேலைசெய்து, தேவனிடம் பயபக்தியாக இருப்பதைப்போல நடித்து, ஒரு காலம்வரை தனது உண்மையான நோக்கத்தை மறைத்துவைத்து, பரலோகவாசிகளை ஆட்சிசெய்திருந்த சட்டங்களில் அதிருப்தியைத் தூண்ட முயன்று, அவை தேவையற்ற கட்டுப்பாட்டைத் திணிக்கின்றன என்று கூறினான். தேவதூதர்களின் இயல்புகள் பரிசுத்தமானவையாக இருந்ததினால், அவர்கள் தங்கள் சுயசித்தம் சொல்லுவதற்குக் கீழ்ப்படியவேண்டும் என்றான். கிறிஸ்துவிற்கு மிகவும் மேலான மேன்மையை அளித்ததினால், தேவன் அவனிடம் அநீதியாக நடந்துகொண்டார் என்று எடுத்துக்காட்டுவதினால் தன்மேல் அனுதாபத்தை ஏற்படுத்த வகைதேடினான். இப்போதுள்ளதைவிட, அதிகமான வல்லமையும் மேன்மையும் வேண்டும் என்று உரிமைபாராட்டுவதினால் தன்னை உயர்த்த உத்தேசிக்காமல், பரலோகவாசிகள் அனைவருக்கும் சுயாதீனம் கிடைக்கவும், அதன் காரணமாக அவர்கள் இப்போது உள்ளதைவிட மேலான நிலையை அடைவதற்கு வகைதேடுவதாகவும் அவன் உரிமைபாராட்டினான். (9)

தேவன் அவரது பெரும் இரக்கத்தினால், லூசிபரிடம் மிகப்பொறுமை உள்ளவராக நீண்டகாலம் சகித்திருந்தார். முதலில் அதிருப்தியின் ஆவியைச் செயல்படுத்தின உடனேயே அவனது உயர்ந்த நிலையிலிருந்து தாழ்த்தப்படவில்லை. விசுவாசமிக்க தேவதூதர்களுக்குமுன், தன்னுடைய தவறான உரிமைகளை எடுத்துக்காட்டின சமயத்திலுங்கூட தாழ்த்தப்படவில்லை. அவன் அதிகக் காலம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருந்தான். மனந்திரும்புதல், கீழ்ப்படிதல் ஆகிய நிபந்தனைகளின்மீது அவனுக்கு மறுபடியும் மறுபடியும் மன்னிப்பு வழங்கப்பட்டிருந்தது. முடிவற்ற அன்பும், ஞானமும் மட்டுமே வகுக்கக்கூடியதாயிருந்த அப்படிப்பட்ட முயற்சிகள், அவனுடைய தவறுகளை அவன் உணரும்படி மேற்கொள்ளப்பட்டன. இதற்கு முன் பரலோகத்தில் அதிருப்தியின் ஆவி ஒருபோதும் அறியப்படாததாக இருந்தது. ஆரம்பத்தில் லூசிபர் எங்கே நழுவிச் சென்றுகொண்டிருக்கிறான் என்பதை அவனே காணாமலிருந்தான். அவனது உணர்சிகளின் உண்மையான தன்மையை அவன் புரியாமலிருந்தான். அவனுக்கு அவனது அதிருப்தி அர்த்தமில்லாதது என்று மெய்ப்பிக்கப்பட்டபோது, தான் தவறில் இருப்பதையும், தெய்வீக

உரிமைகள் நியாயமானவை என்பதையும், அதனால் அவைகளைப் பரலோகம் அனைத்திற்கும் முன்பாக அறிக்கைசெய்யவேண்டுமென்ற மன உணர்வினையும் அடைந்தான். அவன் அதைச் செய்திருந்தால், தன்னையும் மற்ற அநேக தேவ தூதர்களையும் அவனால் காப்பாற்றியிருக்கமுடியும், அந்தச் சமயத்தில், அவன் தேவனிடமுள்ள உறவிலிருந்து நீங்கவில்லை. காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப் என்னும் தன்னுடைய பதவியை அவன் கைவிட்டிருந்தபோதிலும், தேவனிடத்திற்குத் திரும்பவும் வர விருப்பமுடையவனாக இருந்திருந்தால், சிருஷ்டிகரின் ஞானத்தை ஒப்புக்கொண்டிருந்தால், தேவனுடைய பெரும் திட்டத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த இடத்தில் திருப்திப்பட்டிருந்தால், அவன் முன்பு வகித்த பதவியில் மீண்டும் அமர்த்தப்பட்டிருந்திருப்பான். ஆனால் அவனது பெருமை அவனைப் பணியவிடாமல் தடுத்துவிட்டது. தனது பாதையில், தான் மனந்திரும்பவேண்டிய அவசியமில்லை என்று தீர்மானித்து, தன்னைப் படைத்தவருக்கு எதிரான மாபெரும் எதிர்வாதத்தில் ஈடுபட்டான். (10)

அதுமுதல் அவனது திறமைமிக்க மனதின் வல்லமைகள் அனைத்தும் வஞ்சகம் செய்வதிலும், அவனது ஆணைக்குக் கீழ்ப்படிட்டிருந்த தேவதூதர்களின் அனுதாபத்தைப் பெறுவதற்காகப் பணிசெய்வதிலும் தீர்மானமுடையதாக இருந்தது. கிறிஸ்து அவனை எச்சரித்து அவனுக்கு ஆலோசனை வழங்கினதுங்கூட, அவனது ராஜத் துரோகமான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென்று திரித்துக் கூறப்பட்டது. அவன்மீதிருந்த அன்புமிக்க நம்பிக்கையினால் அவனுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தவர்களிடம், அவனது பதவி மதிக்கப்படவில்லை என்றும், அவனது சுதந்திரம் குறைக்கப்பட்டு விட்டதென்றும் சாத்தான் எடுத்துக்கூறினான். கிறிஸ்துவின் வார்த்தைகளைத் தவறாக எடுத்துக்காட்டுவதிலிருந்து, அவை புரட்டானவை என்றும் தவறானவை என்றும் நேரடியாகக் கூறமுன்வந்து, பரலோகவாசிகளுக்குமுன் தன்னைக் கேவலப்படுத்தும் நோக்கம் உடையவராக தேவகுமாரன் இருக்கிறாரென்றும் குற்றம்சாட்டினான். அவனுக்கும் உண்மையான விசுவாசமுள்ள தேவதூதர்களுக்குமிடையில் ஒரு தவறான பிரச்சினையை உண்டுபண்ண அவன் வகை தேடினான். அவனுக்குக் கீழ்ப்படியச்செய்து, அவனது பக்கத்திற்குக் கொண்டுவர முடியாத அனைவரையும், பரலோகவாசிகளின் நன்மையின்மீது கவலையற்றவர்கள் என்று குற்றம்சாட்டினான். அவன் செய்துகொண்டிருந்த அதே வேலையை தேவனுக்கு உண்மையாக இருந்தவர்களின்மீது குற்றமாகக் கூறினான். தேவன் அவனுக்கு அநீதிசெய்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டை மேலும் நிலைநிறுத்துவதற்காக, சிருஷ்கருடைய வார்த்தைகளையும் செயல்களையும் தவறாகவே எடுத்துக்காட்டினான். தேவனுடைய நோக்கங்களைப்பற்றிய

தந்திரமான வாதங்களினால், தேவதூதர்களைக் குழப்பமடையச் செய்வதே அவனது கொள்கையாக இருந்தது. மிகத் தெளிவாக இருந்த அனைத்தையும் அவன் மூடி மறைத்து, இரகசியங்களாக்கினான். அவனது சாமர்த்தியமான திரித்துக் கூறுதலினால், யேகோவாவின் தெளிவான அறிவிப்புகளின்மீது சந்தேகத்தை வைத்தான். தெய்வீக நிர்வாகத்துடன் அவனது பதவி மிக நெருக்கமான தொடர்பை உடையதாக இருந்தது. ஆகையால் அவன் எடுத்துக்கூறியவைகளுக்கு அது வலுவூட்டியது. அதனால் பரலோக அதிகாரத்திற்கு எதிராகக் கலகம் செய்வதில், அநேகர் அவனுடன் ஒற்றுமைப்படும்படி ஈர்க்கப்பட்டனர். (11)

தேவன் அவரது ஞானத்தினால், அதிருப்தியின் ஆவி நேரடியான கலகச் செயலாக முற்றும்வரை, சாத்தானை அவனுடைய வேலையை தொடர்ந்து நடத்திச்செல்ல அனுமதித்தார். அவனது திட்டங்களின் உண்மையான இயல்பையும் அவனது சுபாவத்தையும் அனைவரும் காணும்படி அவைகளை முழுமையாக முன்னேற அனுமதிக்க வேண்டியது அவசியமாக இருந்தது. அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூபாக, லூசிபர் மிக மேலானவனாக உயர்த்தப்பட்டிருந்தான். பரலோகவாசிகளால் மிகவும் விரும்பப்பட்டிருந்தான். அவர்கள்மீதிருந்த அவனது செல்வாக்கு பலம் உள்ளதாக இருந்தது. தேவ அரசாங்கம் பரலோகத்திற்குள்ளாகமட்டும் அடங்காமல், அவர் படைத்த அனைத்து உலகங்களையும் ஆண்டது. பரலோகத்திலுள்ள தேவதூதர்களைக் கலகத்தில் சேர்த்துக்கொண்டால் மற்ற உலகங்களையுங்கூட அவ்விதமாகச் சேர்த்துக்கொள்ளலாம் என்று சாத்தான் எண்ணினான். அவனது நோக்கத்தை நிறைவேற்றிட, புரட்டு, ஏமாற்றுதல் ஆகியவைகளைச் செயல்படுத்தி, அவனது பங்கான கேள்வியை சாமர்த்தியமாக முன்வைத்தான். அவனது வஞ்சிக்கும் வல்லமை மிகப் பெரிதாக இருந்தது. தன்னை அவனது தவறுள்ள உடைக்குள் மறைத்துக்கொண்டு, அனுகூலங்களை ஆதாயப்படுத்திக்கொண்டான். பக்திவிசுவாசமான தேவதூதர்களாலுங்கூட அவனது குணத்தை முற்றிலுமாக அறிந்துகொள்ளவோ, அல்லது அவனது செயல் எதை நடப்பிக்கிறது என்பதைக் கண்டுகொள்ளவோ முடியவில்லை. (12)

அப்படிப்பட்ட மிகமேன்மையானவனாக சாத்தான் இருந்தான். அவனது செயல்களனைத்தும் இரகசியம் என்னும் ஆடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. எனவே, அவனது செயலின் உண்மையான தன்மையைத் தேவதூதர்களுக்கு வெளிப்படுத்தவது கடினமானதாக இருந்தது. பாவம் முழுமையாக வளர்ச்சி அடையும்வரை அது தீமைமிக்கது என்று தோன்றாது. இதற்குமுன் தேவனுடைய பிரபஞ்சத்தில் அதற்கு இடம் இருக்கவில்லை. பரிசுத்தர்கள் அதன் இயல்பையும் கொடூரத்தையும்

அறியாதவர்களாக இருந்தனர். தெய்வீகப் பிரமாணத்தை ஒருபக்கமாக ஒதுக்கிவைப்பதினால் உண்டாகும் பயங்கரமான விளைவுகளை அவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. முதலில் தேவனுக்குப் பக்திவிசுவாசமாக இருப்பதாகப் பாவனை செய்துகொண்டு, சாத்தான் தனது செயல்களை மறைத்துவைத்தான். தேவனுடைய கனத்தையும், அவரது அரசின் உறுதியையும், பரலோகவாசிகள் அனைவரின் நன்மையையும் மேம்படுத்த முனைவதாக அவன் உரிமைபாராட்டிக்கொண்டான். தேவதூதர்களின் மனங்களுக்குள் அதிருப்தியைப் பதியச்செய்துகொண்டிருந்த அதே நேரத்தில், சந்தேகத்தை நீக்குவதற்காக வகைதேடிக்கொண்டிருப்பதாகவும் சாமர்த்தியமாகத் தோன்றச்செய்தான். தேவ அரசாங்கத்திலுள்ள ஒழுங்குகளிலும் பிரமாணங்களிலும் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்று அவன் வற்புறுத்தியபோது, பரலோகத்திலுள்ள இசைவைப் பாதுகாக்க அம்மாற்றம் அவசியம் என்ற பாவனையில் அது இருந்தது. (13)

பாவத்தைக் கையாள்வதில், நீதியையும் சத்தியத்தையும் மட்டுமே தேவனால் உபயோகிக்க முடியும். தேவனால் பயன்படுத்தப்படமுடியாத முகஸ்துதி, சூது ஆகியவைகளை சாத்தானால் பயன்படுத்தமுடிந்தது. தேவனுடைய வார்த்தையைக் குற்றப்படுத்த அவன் வகைதேடினான். பரலோகவாசிகளுக்கான சட்டதிட்டங்களை வரையறுப்பதில் தேவன் நீதியுள்ளவராக இருக்கவில்லை என்றுகூறி, அவரது அரசாங்கத்தின் அமைப்பைத் தேவதூதர்களின் முன் தவறாக எடுத்துக்காட்டினான். தேவன் அவரால் படைக்கப்பட்டவர்களிடமிருந்து பணிவையும், தாழ்மையையும் அவசியப்படுத்தும் செயலில் அவர் தம்மைத் தாமே உயர்த்த வகைதேடுகிறார் என்றும் அவன் கூறினான். எனவே, தேவ அரசாங்கம் நீதியானது என்றும், அவரது பிரமாணம் பரிபூரணமானது என்றும் பரலோகவாசிகளுக்கும் சகல உலகங்களுக்கும் நடைமுறை விளக்கம் செய்துகாட்டப்படவேண்டும் என்றும், பிரபஞ்சத்தின் நன்மையை மேன்மைப்படுத்த அவன்மட்டும்தான் வகைதேடிக்கொண்டிருக்கிறான் என்பதாகவும் தோன்றும்படிச்செய்தான். அபகரிப்பவனின் உண்மையான சுபாவம்—அவனது உண்மையான நோக்கம் அனைவராலும் புரிந்து கொள்ளப்படவேண்டும். மேலும் அவனது தீயசெயல்களினால், அவன் தன்னை வெளிக்காட்ட அவனுக்குக் காலம் கொடுக்கப்படவேண்டும் (14)

பரலோகத்தில் அவனது சொந்த நடத்தையினால் உண்டான குழப்பத் துக்கான காரணத்தை, தேவனுடைய பிரமாணத்தின்மீதும் அவருடைய அரசாங்கத்தின்மீதும் சாட்டினான். தெய்வீக ஆட்சியின் பலன்தான் சகல தீமைகளுக்கும் காரணம் என்று அவன் அறிவித்தான். யேகோவாவின்

சட்டங்களை மேன்மைப்படுத்துவது தான் அவனது நோக்கம் என்றும் அவன் உரிமைபாராட்டினான். ஆகவே, அவன் உரிமைபாராட்டுகின்றவைகளின் இயல்பையும், தெய்வீகப்பிரமாணத்தில் செய்ய உத்தேசித்துள்ள மாறுதல் களின் பலனையும் குறித்த செயல் விளக்கத்தை அவன் காட்டியாகவேண்டும். அவனது சொந்தச்செயலே அவனைக் குற்றப்படுத்த வேண்டும். தான் கலகம் செய்வில்லையென்று சாத்தான் ஆரம்ப முதல் சாதித்தான். பிரபஞ்சம் முழுவதும் அவனை முகமூடி அகற்றப்பட்டவனாக காணவேண்டும்! (15)

இதற்குமேலும் அவனைப் பரலோகத்தில் வைத்திருக்க முடியாது என்று முடிவு செய்யப்பட்டபோதும், முடிவில்லாத ஞானமுடையவர் சாத்தானை அழிக்கவில்லை. அன்பினால் உண்டாகக்கூடிய சேவை ஒன்றுமட்டுமே தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதால், அவருடனுள்ள அவரது படைப்புக்களின் உறவு, அவரது நீதி இரக்கம் ஆகியவைபற்றிய மன உணர்த்துதலைச் சார்ந்ததாக இருக்கவேண்டும். பரலோகவாசிகளும் மற்ற உலகங்களில் உள்ளவர்களும் பாவத்தின் தன்மையையும் அதன் பலனையும் அறிந்துகொள்ள ஆயத்தமற்றவர்களாக இருந்த நிலையில், சாத்தானை அழிப்பதில் உள்ள தேவனின் நீதியையும் இரக்கத்தையும் அப்போது கண்டிருந்திருக்க மாட்டார்கள். அவன் உடனே அழிக்கப் பட்டிருந்தால், அன்பினால் தேவனுக்குச் சேவைசெய்வதைவிட, பயத்தினால் அவர்கள் சேவை செய்திருப்பார்கள். வஞ்சகனின் செல்வாக்கை முற்றிலுமாக அழித்திருக்கமுடியாது. பாவம் அதன் முதிர்ந்த நிலைக்கு வந்தாக வேண்டும். முடிவில்லாத யுகங்கள் நெடுகிலுமாக, பிரபஞ்சத்தின் நன்மைக்காக, சாத்தான் அவனது கொள்கைகளை பூரணமாக முன்னேற்றமடையச் செய்தாகவேண்டும். படைக்கப்பட்ட ஜீவராசிகள் அனைத்தினாலும், தெய்வீக அரசாங்கத்திற்கெதிரான அவனது குற்றச்சாட்டுகள், அவைகளின் உண்மையான வெளிச்சத்தில் காணப்படவேண்டும். சகலவிதமான கேள்விகளுக்கும் அப்பாற்பட்டதாக தேவனுடைய நீதி, இரக்கம், அவரது பிரமாணங்களின் மாறாத தன்மை ஆகியவை என்றென்றைக்குமாக வைக்கப்படவேண்டும். (16)

சாத்தானின் கலகம் பிரபஞ்சம் முழுவதற்கும், வரவிருக்கும் காலங்கள் நெடுகிலும் ஒரு பாடமாகவும், பாவத்தின் தன்மைக்கும் அதன் பயங்கரமான பலன்களுக்கும் நித்தியமான சாட்சியாகவும் காணப்படவேண்டியதாக இருந்தது. சாத்தானின் நியதிகளைச் செல்படுத்தியதின் பலனும், மனிதர்கள் மேலும் தூதர்கள் மேலும் உண்டான பாதிப்புகளும், தெய்வீக அதிகாரத்தை ஒதுக்கிவைப்பதினால் உண்டாகும் பலன்களைக் காட்டும். தேவனுடைய அரசாங்கத்தோடும் அதனுடைய பிரமாணத்தோடும், தேவன் படைத்திருக்கும்

சகல ஜீவன்களின் நன்மைமிக்க வாழ்வும் கட்டப்பட்டிருக்கிறது என்று அது சாட்சிபகரும். இவ்விதம், இந்த மீறுதலின் பயங்கரமான அனுபவத்தினுடைய வரலாறு, பரிசுத்தமிக்க ஜீவன்களுக்கு, மீறுதலின் தன்மையைகுறித்து வஞ்சிக்கப்பட்டுவிடாதபடி அவர்களை தடுக்கவும், பாவம் செய்வதிலிருந்தும் அதன் தண்டனையின் பாடுகளிலிருந்தும் காக்கப்படுவதற்கும், ஒரு நித்தியமான பாதுகாப்பாக இருக்கும். (17)

பரலேகத்தில் நிகழ்ந்த இந்த மாபெரும் எதிர்வாதத்தின் முடிவில் அந்த ஆக்கிரமிப்புக்காரன் தன்னை நியாயப்படுத்துவதில் தொடர்ந்தான். மேலான மகிழ்ச்சியின் உறைவிடத்திலிருந்து அவனும் அவனது அனுதாபிகளும் வெளியேற்றப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டபோது அந்தக் கலகக்காரர்களின் தலைவன் சிருஷ்டிகரின் பிரமாணத்தின்மீது தைரியமாக பகிரங்கமாக பழிசாற்றினான். தேவதூதர்களுக்குக் கட்டுப்பாடு அவசியம் இல்லை, அவர்களது சுயசித்தம் அவர்களை எப்போதும் சரியாகவே நடத்தும், அவர்கள் அதைப் பின்பற்ற விட்டுவிடப்படவேண்டும் என்ற அவனது நிலையில் சாத்தான் தரித்துநின்றான். தெய்வீகப்பிரமாணம் அவர்களது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாகவும், அந்தப் பிரமாணத்தை நீக்குவதில் வெற்றி அடைவதே அவனது நோக்கம் என்றும், இந்தக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலையடைந்தால், பரலோக சேனை மிக உயர்ந்த மகிமையான நிலையில் பிரவேசிக்கும் என்றும் அவன் அறிவித்தான். (18)

சாத்தானும் அவனது சேனையும் ஒரே இசைவாக, அவர்களது கலகத்திற்கான குற்றச்சாட்டைக் கிறிஸ்துவின்மீது போட்டு, அவர்கள் கண்டிக்கப்பட்டிருக்காவிட்டால் ஒருபோதும் கலகம் செய்திருக்கமாட்டார்கள் என்றனர். இவ்விதமாக அவர்களது விசுவாசமின்மையிலும் கீழ்ப்படியாமை யிலும் உறுதியாக நின்றனர். தேவ அரசாங்கத்தைக் கவிழ்க்க அவர்கள் வீணாக வகை தேடினர். அப்படியிருந்தும் ஒடுக்கும் வல்லமையின் கீழ் குற்றமற்ற அப்பாவிகளாக இருக்கிறோம் என்றும் தேவ தூஷணம் கூறினர். இறுதியில் கலகக்காரர்களின் தலைவனும் அவனது அனுதாபிகளும் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். (19)

பரலோகத்தில் கலகத்தை தூண்டிவிட்ட அதே ஆவி, இன்றும் பூமியிலும் கலகத்தைத் தூண்டிவிடுகிறது. சாத்தான் தேவதூதர்களிடம் எந்தக் கொள்கையைப் பின்பற்றினானோ, அதே கொள்கையை மனிதர்களிடத்திலும் பின்பற்றுகிறான். இப்பொழுது கீழ்ப்படியாமையின் பிள்ளைகளை அவனது ஆவி ஆளுகிறது. அவனைப்போலவே அவர்களும் தேவப்பிரமாணத்திலுள்ள கட்டுப்பாடுகளைத் தகர்க்க வகைதேடுகின்றனர். அவருடைய கற்பனையை மீறுவதின் மூலமாக சுயாதீனம் உண்டாகும் என்று

வாக்குத்தத்தம் செய்கின்றனர். பாவத்தைக் கடிந்துகொள்ளுதல் இப்போதும் வெறுப்பையும் தடைசெய்யும் ஆவியையும் எழுப்புகிறது. தேவனுடைய எச்சரிப்பின் தூது மனச்சாட்சிக்குள் கொண்டுவரப்படும்போது, மனிதர்கள் தங்களைத் தாங்களே நீதிமான்களாக்கி, தங்களது பாவப்பாதையில் மற்றவர்களின் அனுதாபத்தையும் தேட சாத்தான் அவர்களை நடத்துகிறான். அவர்களது தவறுகளைச் சீர்திருத்துவதற்குப் பதிலாக, அவர்களைக் கடிந்துகொள்ளுபவர்களின்மீது, இவர்கள் தான் துன்பங்களுக்கு முழுக்காரணமானவர்கள் என்பதுபோல் கோபப்படுகின்றனர். நீதிமானான ஆபேலின் காலம்முதல் நமது காலம்வரை, பாவத்தைப் பழிப்பவர்களின்மீது வெளிக்காட்டப்படும் ஆவியானது அப்படிப்பட்டதாகவே இருக்கிறது! (20)

தேவனை கொடுமைமிக்கவர் என்றும் பயங்கரவாதி என்றும் எண்ணச்செய்ய, பரலோகத்தில் அவருடைய குணத்தை திரித்துக்கூறிய அதேவிதத்தில் அவன் மனிதர்களையும் பாவம் செய்யத் தூண்டினான். இதுவரை வெற்றியடைந்து, தேவனுடைய அநீதியான கட்டுப்பாடுகள் தனது சொந்தக் கலகத்திற்கு தன்னை நடத்தினதுபோலவே மனிதர்களையும் அவர்களது விழுகைக்கு நடத்தினது என்றும் அறிவித்தான். (21)

ஆனால் நித்தியவாசியான அவர் அவரது சுபாவத்தைப்பற்றி "கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், விசாரிக்கிறவர்" (யாத். 34:6,7) என்று அறிவிக்கிறார். (22)

சாத்தானைப் பரலோகத்திலிருந்து விரட்டியடித்ததினால் தேவன் அவரது நீதியை அறிவித்து, அவரது சிங்காசனத்தின் மேன்மையை நிலைவரப்படுத்தினார். ஆனால் மருளவிழுந்த இந்த ஆவியின் வஞ்சகத் திற்குக் கீழ்ப்படிந்து மனிதன் பாவம் செய்தபோது, தேவன் விழுந்தபோன இனத்திற்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை மரிக்கும்படி கொடுத்ததன்மூலமாக, அவரது அன்பிற்கான சான்றைக் கொடுத்தார். பாவநிவாரணத்தில், தேவனுடைய சுபாவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. லூசிபர் தெரிந்துகொண்ட பாவமார்க்கத்தில் உள்ள குற்றச்சாட்டை எந்த விதத்திலும் தேவ அரசாங்கத்தின்மீது சுமத்த முடியாது என்பதற்கு பலம் பொருந்திய சிலுவையின் வாதம் பிரபஞ்சம் முழுவதற்குமான செயல்முறை விளக்கத்தைக் கொடுக்கிறது. (23)

பூமியில் இரட்சகர் ஊழியம் செய்தபோது, கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையில் நிகழ்ந்த போட்டியில், பெரும் வஞ்சகனின்

முகத்திரை கிழிக்கப்பட்டது. பரலோக தேவதூதர்களும் பக்திவிசுவாசம்மிக்க பிரபஞ்சமும் அவன்மீது வைத்திருந்த பற்றை வல்லமையாக வேருடன் அகற்ற, உலகமீட்பரின்மீது அவன் நடத்தின கொடூரமான போரால்தவிர வேறெதுவாலும் முடிந்திருக்காது. கிறிஸ்து அவனைத் தொழவேண்டும் என்று அவன் துணிகரமாகக் கூறிய தேவதூஷணமிக்க கோரிக்கை , மலைச்சிகரத்திற்கும், ஆலயத்தின் கோபுரத்திற்கும், அவரைத் தூக்கிச்சென்ற இறுமாப்புமிக்க தைரியம், கண்ணைச் சுழற்றும் உயரத்திலிருந்து அவரைக் கீழே குதிக்கும்படிக் கூறிய கெட்ட எண்ணம், இடத்திற்கு இடம் அவரை வேட்டையாட விரட்டின உறங்காத கெட்ட செயல், அவரது அன்பை நிராகரிக்கும்படி ஆசாரியர்கள் மக்கள் ஆகியோரது மனங்களை ஏவினது, கடைசியாக "அவனைச் சிலுவையில் அறையுங்கள்", "அவனைச் சிலுவையில் அறையுங்கள்" என்று கூக்குரலிட்டது ஆகிய இவைகள் அனைத்தும் பிரபஞ்சத்தின் வியப்பையும் கோபத்தையும் தூண்டியது. (24)

கிறிஸ்துவை நிராகரிக்கும்படி உலகத்தை எழுப்பிவிட்டவன் சாத்தான்தான். இயேசுவை அழிக்கத் தீமையின் பிரபு அவனது வல்லமை அனைத்தையும், தந்திரத்தையும் செயல்படுத்தினான். ஏனெனில் இரட்சகரின் இரக்கம், அன்பு, அவரது மன உருக்கம், மென்மைமிக்க தயவு ஆகியவை தேவனின் சுபாவத்தை உலகத்திற்கு எடுத்துக் காட்டின. தேவகுமாரன் முன்வைத்த உரிமை ஒவ்வொன்றின்மீதும் போட்டியிட்டு, இரட்சகரின் வாழ்க்கையைப் பாடுகளினாலும் துயரத்தினாலும் நிரப்ப அவன் மனிதர்களை அவனது முகவர்களாக அமர்த்தினான். இயேசுவின் ஊழியத்திற்கு இடையூறு செய்யும்படி அவன் பிரயோகித்த ஏமாற்றும் பொய்களும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின் மூலமாக வெளிக்காட்டப்பட்ட வெறுப்பும், உதாரணம் கூறமுடியாத அவரது நன்மைமிக்க வாழ்க்கைக்கு எதிராக அவர்மீது கூறப்பட்ட கொடூரமான குற்றச்சாட்டுகளும் மிகவும் ஆழமாகப் பதிந்திருந்த பழி வாங்கும் குணத்திலிருந்து எழும்பியிருந்தது. தேவகுமாரனுக்கு எதிராக அடக்கிவைக்கப்பட்டிருந்த பொறாமை, விரோதம், வெறுப்பு, பழிவாங்குதல் ஆகிய அனைத்தும் கல்வாரியில் வெடித்தன. பரலோகம் முழுவதும் இந்தக் காட்சியை மௌனமான திகிலுடன் உற்று நோக்கிக்கொண்டிருந்தது! (25)

அந்த மாபெரும் தியாகபலி நிறைவேற்றப்பட்டபின், கிறிஸ்து உயரே எழுந்தருளினபோது, "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் (நீர் எனக்குத் தந்தவர்களும்) என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" (யோவான். 17:24) என்னும் அவரது மன்றாட்டை (பிதாவின் முன்) வைக்கும்வரை, தேவதூதர்களின் தொழுகையை ஏற்க மறுத்தார். அப்பொழுது விவரிக்கமுடியாத அன்புடனும், வல்லமையுடனும் தேவனுடைய சிங்காசனத்திலிருந்து, "தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுது

கொள்ளக்கடவர்கள்" (எபி. 1:6) என்று பதில் வந்தது. இயேசுவின்மீது ஒரு கறையும் இருக்கவில்லை. அவரது தாழ்மை முடிவடைந்தது. அவரது தியாகபலி பூரணமாயிற்று. சகல நாமங்களுக்கும் மேலான ஒரு நாமம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. (26)

இப்பொழுது சாக்குப்போக்குக் கூறிட இயலாதவிதத்தில் சாத்தானின் குற்றம் தெளிவாக நின்றது. பொய்யனும், கொலைகாரனுமான அவனுடைய உண்மையான சுபாவத்தை அவன் வெளிப்படுத்தினான். அவனது வல்லமையின் கீழிருந்த மனுப்புத்திரரை எந்த ஆவியினால் அவன் ஆண்டானோ, அதே ஆவியை, பரலோகவாசிகளைக் கட்டுப்படுத்த அவன் அனுமதிக்கப்பட்டிருந்தால் வெளிக்காட்டி இருந்திருப்பான் என்பது காணப்பட்டது. தேவனுடைய பிரமாணத்தை மீறுவது சுயாதீனத்தையும், உயர்வையும் கொண்டுவரும் என்று அவன் உரிமை பாராட்டினான். ஆனால், அது அடிமைத்தனத்தையும், கீழான நிலைமையையும் பலனாகக் கொண்டுவந்ததாகக் காணப்பட்டது. (27)

தெய்வீக சுபாவம், அரசாங்கம் ஆகியவைகளுக்கெதிரான சாத்தானின் குற்றச்சாட்டுகள், அதன் உண்மையான வெளிச்சத்தில் தோன்றின. தேவன் அவரது படைப்புகளிடமிருந்து பணிவையும், கீழ்ப்படிதலையும் கட்டாயப்படுத்துவதன் மூலமாக, தம்மைத்தாமே உயர்த்துவதற்கு வகை தேடுகிறாரென்றும், சிருஷ்டிகளிடத்திலிருந்து சுயமறுப்பை கட்டாயப்படுத்திப் பெற்றிருந்த அதே நேரத்தில், அவர்தாமே சுயமறுப்பை நடைமுறைப்படுத்தாதவராக எந்தத் தியாகமும் செய்யாதவராக இருந்தார் என்றும் அறிவித்தான். ஆனால் விழுந்துபோன பாவமிக்க ஒரு இனத்தின் இரட்சிப்பிற்காக, அன்பு செய்யக்கூடிய மாபெரும் தியாகபலியை, பிரபஞ்சத்தின் அதிபதி செய்தார் என்பது இப்பொழுது காணப்பட்டுவிட்டது. ஏனெனில் "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார்" 2 கொரி. 5:19. லூசிபர் மேன்மைப்படுத்தப்படுதலையும் மேலாதிக்கத்தையும் வாஞ்சித்துப் பாவம் நுழைவதற்கான வாசலைத் திறந்தபோது, பாவத்தை அழிப்பதற்காக கிறிஸ்து தம்மைத்தாமே தாழ்த்தி, மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவரானார்! (28)

கலகத்தின் கொள்கைகளின்மீதுள்ள தேவனுடைய வெறுப்பை அவர் வெளிக்காட்டினார். சாத்தானைக் குற்றப்படுத்துவதிலும் மனிதனை மீட்பதிலும் இருந்த அவரது நீதியை பரலோகம் முழுவதும் கண்டது. தேவனுடைய பிரமாணம் மாறக்கூடாததெனில், அதை மீறுவதற்கான தண்டனை மன்னிக்கப்படக்கூடாததெனில், மீறுகிற ஒவ்வொருவனும் சிருஷ்டிகரின் ஆதரவிலிருந்து நிரந்தரமாகத் தடைசெய்யப்படவேண்டும் என்று லூசிபர்

அறிவித்திருந்தான். பாவ இனம் மீட்பிற்கு அப்பால் வைக்கப்பட்டிருப்பதால், அது அவனது உரிமைமிக்க இரை என்று அவன் கூறியிருந்தான். ஆனால் மனிதனின் சார்பில் இருக்கும் கிறிஸ்துவின் மரணம் தோற்கடிக்கப்படமுடியாத வாதமாக இருந்தது. பாவத்தின் தண்டனை தேவனுக்குச் சமமாக இருந்த ஒருவரின்மீது விழுந்தது. மனிதன் அந்தநீதியை ஏற்றுக்கொள்ள சுதந்திரமுள்ளவனாக இருந்தான். மனுஷகுமாரன் சாத்தானின் வல்லமையின்மீது வெற்றியடைந்ததுபோல, மனிதர்களும் பாவத்திற்காக வருந்தும் தாழ்மைமிக்க ஒரு வாழ்க்கையினால் வெற்றியடையக்கூடியவனாக இருந்தான். இவ்வாறாக தேவன் நீதியுள்ளவராகவும், கிறிஸ்துவை விசுவாசிக்கும் அனைவரையும் நீதிமான்களாக்குகிறவராகவும் இருக்கிறார். (29)

ஆனால், மனிதனுடைய மீட்பை நிறைவேற்றுவதற்காகப் பாடுபடவும் மரிக்கவும் மட்டும் கிறிஸ்து பூமிக்கு வராமல், அவர் "வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார்" (ஏசாயா 42:21). இந்த உலக மக்கள் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளவேண்டியவிதத்தில் அதைக் கைக்கொள்ளவேண்டும் என்பதற்காக மட்டுமல்லாமல், தேவனுடைய நியாயப்பிரமாணம் மாறாதது என்பதற்கான ஒரு நடைமுறை விளக்கத்தை, பிரபஞ்சத்தில் உள்ள உலகங்கள் அனைத்திற்கும் கொடுப்பதற்காகவும் அவர் வந்தார். அதன் உரிமைகள் ஒருபக்கமாக நீக்கிவைக்கக்கூடியவைகளாக இருந்திருந்தால், அதன் மீறுதலுக்காகப் பாவநிவாரணம்செய்ய, தேவகுமாரன் அவருடைய ஜீவனை விட்டிருந்திருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. அது மாற்றப்படமுடியாதது என்பதைக் கிறிஸ்துவின் மரணம் மெய்ப்பிக்கிறது. பாவிகள் மீட்கப்படும்படிக்கு செய்யப்பட்ட, அநாதி அன்புள்ள பிதாவையும் குமாரனையும் நெருக்கிய இந்தத் தியாகம், பிரபஞ்சம் முழுவதிற்கும்—இந்தப் பாவநிவாரணத் திட்டத்திற்குக் குறைவான வேறு எதுவும், நீதியும் இரக்கமும் தேவனுடைய அரசாங்கத்திற்கும் பிரமாணத்திற்கும் அஸ்திவாரம் என்பதை காண்பிக்கப் போதுமானதாக இருக்காது என்பதை செய்முறையில் விவரிக்கிறது. (30)

இறுதி நியாயத்தீர்ப்பு செயல்படுத்தப்படும்போது, பாவம் இருப்பதற்கு எந்தவிதமாக காரணமும் இல்லை என்பது காணப்படும். எனக்கு எதிராக நீ ஏன் கலகம்செய்தாய்? என்னுடைய ராஜ்யத்திற்கு உள்ளானவர்களை நீ ஏன் என்னிடமிருந்து கொள்ளையிட்டாய் என்று பூமி முழுவதற்கும் நீதிபதியாக இருப்பவர் சாத்தானிடம் கேட்கும்போது, தீமைக்குப் பிறப்பிடமானவன் கூறுவதற்குச் சாக்குப்போக்கு எதுவும் இருக்காது. வாய்கள் யாவும் மூடும். கலகத்தின் சேனைகள் அனைத்தும் பேச்சற்றதாக இருக்கும். (31)

நியாயப்பிரமாணம் மாறாதது என்று அறிவிக்கும் அதே நேரத்தில்,

பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை பிரபஞ்சத்திற்குக் கல்வாரிச் சிலுவை அறிவிக்கிறது. "முடிந்தது" என்ற இரட்சகரின் மரிக்கும் குரலில் சாத்தானுக்கான சாவுமணி ஒலித்தது. நீண்டகாலமாகத் தொடர்ந்திருந்த மாபெரும் போராட்டம் அப்போது முடிவுசெய்யப்பட்டு, கடைசியாகத் தீமையை ஒழிப்பது நிச்சயமாக்கப்பட்டது. "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்" (எபி. 2:14) தேவகுமாரன் கல்லறையின் வாசல்கள் வழியாகக் கடந்துசென்றார். தன் உயர்வின் மீதுள்ள விருப்பம் லூசிபரை, "தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; ... உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும்" (ஏசாயா 14: 13,14) கூறும்படி நடத்தினது. "உன்னைப் பூமியின்மேல் சாம்பலாக்குவேன்.... இனி ஒருபோதும் இருக்கமாட்டாய்" (எசேக். 28:18, 19), "இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும்" (மல்கியா 4:1) என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (32)

பாவத்தின் தன்மைக்கும், அதன் விளைவுகளுக்கும் முழுப் பிரபஞ்சமும் சாட்சியாயிருக்கும். ஆரம்பத்தில் தேவதூதர்களுக்குப் பயத்தையும், தேவனுக்குக் கௌரவக் குறைவையும் கொண்டுவந்த அதன் பூரணமான அழிவு, அவருடைய சித்தத்தின்படி செய்ய விருப்பங்கொண்டிருந்து, தங்களுடைய உள்ளங்களில் அவருடைய பிரமாணத்தை வைத்திருக்கிற பிரபஞ்சத்தின் முன்பு, இப்போது அவருடைய அன்பை நிரூபித்து, அவருடைய கனத்தை நிலைநிறுத்தும். தீமை இனி ஒருபோதும் காணப்படாது. "இடுக்கம் மறுபடியும் உண்டாகாது" (நாகூம் 1:9) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. அடிமைத்தனத்தின் நுகம் என்று சாத்தானால் நிந்திக்கப்பட்ட நியாயப்பிரமாணம், சுயாதீனப்பிரமாணம் என்று மேன்மைப்படுத்தப்படும். ஆழம்காணமுடியாத அன்பும் முடிவில்லாத ஞானமும் கொண்டவராக முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட அவர்மேலிருக்கிற பற்றிலிருந்து சோதிக்கப்பட்டு மெய்ப்பிக்கப்பட்ட ஒரு படைப்பு இனி ஒருபோதும் திரும்பிச் செல்லாது. (33) ★

30

# மனிதனுக்கும் சாத்தானுக்கும் இடையே உள்ள பகை!

(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 505–510)

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்"–ஆதி. 3:15. மனிதனின் விழுகைக்குப்பின் சாத்தானுக்கு எதிராகக் கூறப்பட்ட தெய்வீகத் தண்டனை ஒரு தீர்க்கதரிசனமாகவும், காலத்தின் முடிவுவரை யுகங்கள் அனைத்தையும் தழுவி, பூமியின்மீது வாழும் மனித இனம் முழுவதையும் ஈடுபடுத்தும் பெரும் போராட்டத்தை முன்குறிக்கும் நிழலாட்டமாகவும் இருந்தது. (1)

"பகை உண்டாக்குவேன்" என்று தேவன் அறிவிக்கிறார். இந்தப் பகை இயற்கையாக வரவேற்கப்படக்கூடியதல்ல. மனிதன் தெய்வீகப் பிரமாணத்தை மீறினபோது, தீமை அவனது இயல்பாகியது. அவன் சாத்தானிடமிருந்து வேறுபட்டவனாக இராமல், அவனுக்கு இசைவானவனானான். பாவமுள்ள மனிதனுக்கும் அதன் உற்பத்தியாளனுக்கும் இடையில், இயற்கையாகவே பகை இருப்பதில்லை. மருள விழுகையின் மூலமாகவே இருவரும் கெட்டவர்களானார்கள். மருளவிழுந்தவன், அவனுடைய உதாரணத்தைப் பின்பற்றும்படி மற்றவர்களை தூண்டுவதன்மூலம், அவனுக்கு அனுதாபமும் ஆதரவும் கிடைக்காதவரை ஒருபோதும் ஓய்ந்திருப்பதில்லை. இந்தக் காரணத்திற்காகவே, விழுந்துபோன தேவதூதர்களும், துன்மார்க்கமான மனிதர்களும் ஆபத்தைப் பொருட்படுத்தாத உறவில் ஒன்று சேருகின்றனர். தேவன் சிறப்பான விதத்தில் குறுக்கிடாமல் இருந்திருந்தாரானால், சாத்தானும் மனிதர்களும்பரலோகத்திற்கெதிரான ஒரு கூட்டணியை ஏற்படுத்தியிருப்பார்கள். சாத்தானுக்கு எதிரான பகையை போற்றுவதற்குப் பதிலாக, மனித குடும்பம் முழுவதும் தேவனை எதிர்ப்பதில் ஒன்றுசேர்ந்திருக்கும். (2)

கலகம் செய்யும்படி தேவதூதர்களைத் தூண்டியதைப் போலவே, பாவம்செய்யும்படி சாத்தான் மனிதனைத் தூண்டினான். அதன் மூலமாக பரலோகத்திற்கெதிரான அவனது போரில், ஒத்துழைப்பு பெற எண்ணினான். அவனுக்கும் விழுந்துபோன தூதர்களுக்குமிடையில், கிறிஸ்துவின்மீதான வெறுப்பைப்பற்றி சண்டை இருக்கவில்லை. மற்ற அனைத்துக் காரியங் களிலும் வேற்றுமையிருந்தபோதும், பிரபஞ்சத்தின் அதிபதியின் அதிகாரத்தை எதிர்ப்பதில் அவர்கள் உறுதியுடன் ஒற்றுமைப்பட்டிருந்தனர். ஸ்திரீக்கும் அவனுக்கும், அவன் வித்துக்கும் அவள் வித்துக்குமிடையில் பகை இருக்கவேண்டும் என்ற அறிவிப்பை சாத்தான் கேட்டபோது, மனித இயல்பைக் கீழானதாக்க எடுக்கும் அவனது முயற்சியில் குறுக்கீடு உண்டாகும் என்பதையும், ஏதோ ஒரு வகையில் அவனது வல்லமையைத் தடுக்கும்படி மனிதன் தகுதிப்படுத்தப்படவிருக்கிறான் என்பதையும் அறிந்தான். (3)

மனித இனம் கிறிஸ்துவின் மூலமாக, தேவனுடைய அன்பு, இரக்கம் ஆகியவைகளின் இலக்காக இருப்பதினால், மனித இனத்திற்கு எதிரான சாத்தானின் பகை தூண்டப்பட்டிருக்கிறது. அவரது கரத்தின் செயல்களின் அழகைக் கெடுத்துத் தீட்டுப்படுத்துவதன் வழியாக, மனிதனை மீட்கும் தெய்வீகத் திட்டத்தைத் தடைசெய்யவும், தேவனின்மீது மதிப்புக் குறைவை உண்டுபண்ணவும் அவன் விரும்புகிறான். பரலோகத்தில் வருத்தம் உண்டாகச்செய்து, பூமியைத் துன்பங்களினாலும், பாழ்க்கடிப்பினாலும் நிரப்புவான். பின்னர் இந்தத் தீங்குகளெல்லாம் தேவன் மனிதனைப் படைத்ததின் விளைவு என்று அவன் சுட்டிக்காட்டுகிறான். (4)

மனித ஆத்துமாவில் கிறிஸ்து தரும் கிருபைதான், சாத்தானுக்கு எதிரான பகையை மனிதனுக்குள் உண்டுபண்ணுகிறது. இவ்விதமாக மாற்றத்தை உண்டுபண்ணும் கிருபையும் புதுப்பிக்கும் வல்லமையும் இல்லாதபோது, மனிதன் தொடர்ந்து சாத்தானின் அடிமையாக இருந்து, அவன் கட்டளையிடுவதை எல்லாம் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கும் வேலைக்காரனாக இருந்திருப்பான். ஆனால் ஆத்துமாவில் இருக்கும் புதிய கொள்கைகள் இதுவரை சமாதானமிருந்த இடத்தில் ஒரு சண்டையை உண்டுபண்ணுகின்றன. கிறிஸ்துவால் தரப்படும் வல்லமை, கொடுங்கோலனும் ஆதிக்கவாதியுமானவனைத் தடுக்க மனிதனைத் தகுதிப்படுத்துகிறது. பாவத்தை நேசிப்பதற்குப் பதிலாக அதனை வெறுக்கும் எவனும், முற்றிலுமாக உன்னத்திலிருந்து உண்டாகும் ஒரு கொள்கையின் செயல்பாட்டை வெளிக்காட்டுகிறான். (5)

இந்த உலகம் இயேசுவை வரவேற்றதின் மூலமாக, கிறிஸ்துவின் ஆவிக்கும் சாத்தானின் ஆவிக்கும் இடையில் உள்ள பகை மிகத் தெளிவாக

எடுத்துக்காட்டப்பட்டது. உலகப்பிரகாரமான செல்வமும், ஆடம்பரமும், மகத்துவமும் இல்லாதவராகக் காணப்பட்டதினால் மட்டுமே, யூதர்கள் அவரை நிராகரிக்கவில்லை. இந்த வெளிப்பிரகாரமான அனுகூலங்களின் இல்லாமையை ஈடுசெய்ய, அவர் அதிகமான வல்லமையை உடையவராக இருந்ததை அவர்கள் கண்டனர். ஆனால் கிறிஸ்துவிடமிருந்த தூய்மையும் பரிசுத்த தன்மையும் தெய்வபக்தி இல்லதவர்களிடம் அவருக்கு எதிரான வெறுப்பைக்கொண்டுவந்தன. அகந்தை மிகுந்தவர்களாயும், புலனடக்கமில்லாதவர்களாயும் இருந்த மக்களுக்கு, அவரது சுயமறுப்பும் பக்தியும் தொடர்ச்சியான கடிந்துகொள்ளுதலாக இருந்தது. அதுதான் தேவகுமாரனுக்கு எதிரான பகையை எழுப்பியது. கெட்ட மனிதர்களுடன் சாத்தானும் கெட்டுப்போன தேவதூதர்களும் சேர்ந்துகொண்டனர். சத்தியத்தின் வீரருக்கு எதிராக, மருள விழுந்த சக்திகள் அனைத்தும் சதியாலோசனை செய்தன. (6)

கிறிஸ்துவிற்கு எதிராக வெளிக்காட்டப்பட்ட அதே போன்ற பகைமை, கிறிஸ்துவின் அடியார்களுக்கு நேராகவும் காட்டப்பட்டிருக்கிறது. பாவத்தின் வெறுக்கத்தக்க சுபாவத்தைக் கண்டு உன்னதத்திலிருந்துள்ள பலத்தினால் எவர்கள் சோதனையைத் தடுக்கிறார்களோ, அவர்கள் நிச்சயமாகவே சாத்தானின் கோபத்தையும் அவனது ஆளுகையின் கீழுள்ளவர்களின் கோபத்தையும் எழுப்பிவிடுவார்கள். சத்தியத்தின் தூய்மையான கொள்கைகளின்மீது உண்டாகும் நிந்தனையும் உபத்திரவமும், பாவமும் பாவிகளும் இருக்கும்வரை இருந்தே தீரும். கிறிஸ்துவின் அடியார்களும் சாத்தானின் வேலைக்காரர்களும் இசைந்திருக்க முடியாது. சிலுவையின் பேரில் உள்ள எதிர்ப்பானது நிறுத்தப்படவில்லை. “அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்”–2 தீமோத்தேயு 3:12. (7)

தேவ அரசாங்கத்திற்கு எதிராக சாத்தானின் அதிகாரத்தை அமைக்கவும், அவனுடைய ராஜ்யத்தை கட்டவும், சாத்தானும் அவனது பிரதிநிதிகளும் அவனது இயக்குதலின்கீழ் தொடர்ந்து செயலாற்றிக்கொண்டிருக்கின்றனர். இந்த நோக்கத்தை அடைந்துகொள்ள அவர்கள் கிறிஸ்துவின் அடியார்களை வஞ்சிக்க வகைதேடி, அவர்களது தொடர்பிலிருந்து அவர்களைக் கவர்ந்திழுக்கின்றனர். தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்ற அவர்களுடைய தலைவனைப் போலவே அவர்களும் வேதவாக்கியங்களைத் தவறான பொருள்கொள்ளும்படி திரித்துக் கூறுகின்றனர். தேவன்மீது நிந்தையை வைக்கும்படி, சாத்தான் முயன்றதைப் போலவே, அவனது பிரதிநிதிகளும் தேவனுடைய ஜனங்களின் பெயரைக்

கெடுக்க வகைதேடுகின்றனர். கிறிஸ்துவை மரணத்திற்குள்ளாக்கிய ஆவி, அவரது அடியார்களை அழிக்கும்படி துன்மார்க்கரை ஏவுகிறது. “உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்;” என்னும் தீர்க்கதரிசனத்தில் இவை அனைத்தும் முன்னடையாளமாக்கப்பட்டுள்ளன. காலத்தின் முடிவுவரை இது தொடரும். (8)

சாத்தான் அவனது படைகள் அனைத்தையும் அழைத்து, இந்தப் போரில் அவனது வல்லமைகள் அனைத்தையும் செலவிடுகிறான். ஏன் அவன் பெரிய தடைகள் எதையும் சந்திக்காதிருக்கிறான்? ஏன் கிறிஸ்துவின் வீரர்கள் இப்படி உறங்குபவர்களாகவும் அசிரத்தையாகவும் இருக்கிறார்கள்?—காரணம் அவர்கள் கிறிஸ்துவுடன் உண்மையான தொடர்பு இல்லாதவர்களாக இருப்பதுதான். அவர்கள் அவருடைய ஆவியைக் கொண்டிருக்கவில்லை. அவர்களது ஆண்டவருக்கு இருந்ததுபோல், பாவம் விலக்கப்படவேண்டியதாகவும் வெறுப்பானதாகவும் அவர்களுக்கு இல்லை! முடிவான, தீர்மானமிக்க தடுப்புடன் கிறிஸ்து அதைச் சந்தித்ததுபோல, அவர்கள் அதைச் சந்திக்கவில்லை. பாவத்தின் அதிகமான தீமையையும் கொடூரத்தையும் அவர்கள் உணரவில்லை. அந்தகாரப் பிரபுவின் சுபாவத்திற்கும் வல்லமைக்கும் அவர்கள் குருடாக்கப்பட்டிருக்கின்றனர். சாத்தானுக்கும் அவனது வேலைகளுக்கும் எதிரான பகை மிகக் குறைவாகவே உள்ளது. அவனது வல்லமை, தீய நோக்கங்கள் கிறிஸ்துவிற்கும் அவரது சபைக்கும் எதிரான அவனது போர், மிகவும் பரந்த அளவிலானது என்பதுபற்றிய அறியாமை மிகப் பெரியதாக உள்ளது. இங்கு திராளானவர்கள் தவறான நம்பிக்கையினால் ஏமாற்றப்பட்டுள்ளனர். அவர்களுடைய எதிரி பலம் பொருந்திய ஒரு தளபதி என்பதை அவர்கள் அறியாமலிருக்கின்றனர். அவன் தீய தூதர்களின் மனங்களைக் கட்டுப்படுத்துகிறான் என்பதையும், ஆத்துமாக்களின் இரட்சிப்பைத் தடுப்பதற்காக மேலான திட்டங்களுடனும் திறமையான இயக்கங்களுடனும் கிறிஸ்துவுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறான் என்பதையும் அவர்கள் அறியவில்லை. கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளுபவர்களுக்கிடையிலும் சுவிசேஷத்தின் ஊழியக்காரர்களுக்கிடையிலுங்கூட தற்செயலாகப் பிரசங்க பீடத்திலிருந்து குறிப்பிடுவதைத் தவிர, சாத்தானைப்பற்றிக் குறிப்பிடுவது அபூர்வமாகவே கேட்கப்படுகிறது. அவனது தொடர்ச்சியான செயல்களையும் வெற்றிகளையும் அவர்கள் பார்க்காமல் விட்டுவிடுகின்றனர். அவனது தந்திரம்பற்றிய எச்சரிப்புகளை, அவர்கள் அலட்சியம் செய்கின்றனர். அவன் இருப்பதை அறியாதவர்களாக இருப்பதுபோல் அவர்கள் காணப்படுகின்றனர். (9)

சாத்தானது உபாயங்களைப்பற்றி மனிதர்கள் அறியாமல் இருக்கும்போது, விழித்திருக்கும் இந்த விரோதி அவர்களது பாதையில்

ஒவ்வொரு விநாடியிலும் இருக்கிறான். இல்லத்தில் உள்ள ஒவ்வொரு வேலைப்பகுதியிலும், நமது நகரின் ஒவ்வொரு வீதியிலும், சபைகளிலும், தேசிய மன்றங்களிலும், நீதிமன்றங்களிலும் நுழைந்து, குழப்பம், வஞ்சனை, மயக்குதல் ஆகியவைகளைச் செய்து, எங்கும் ஆண்கள், பெண்கள், சிறுவர்களுடைய ஆத்துமாக்களையும் சரீரங்களையும் அழித்து, குடும்பங்களைத் தகர்த்து, வெறுப்பையும் போட்டியையும் சச்சரவுகளையும், துர்ப்போதனை, கொலைகளையும் விதைக்கிறான். கிறிஸ்தவ உலகமோ, இவைகளையெல்லாம் தேவன்தான் ஏற்படுத்தி இருக்கிறார். ஆகையால் இவை இருக்கவேண்டும் என்று கருதுவதாகக் காணப்படுகிறது. (10)

தேவனுடைய ஜனங்களை உலகத்தைவிட்டுப் பிரிக்கும் தடுப்பைத் தகர்த்து விழச்செய்து, அதனால் அவர்களை மேற்கொள்வதற்கு சாத்தான் தொடர்ந்து வகைதேடிக்கொண்டிருக்கிறான். பழங்கால இஸ்ரவேலர்கள் தடைசெய்யப்பட்ட அஞ்ஞானிகளுடன் திருமண உறவில் ஈடுபட முயன்றபோது, பாவத்திற்குள் கெட்டவழியில் இழுத்துச் செல்லப்பட்டனர். அதேவிதமாக இன்றைய இஸ்ரவேலர்களும் வழிவிலகிச் செல்லுகின்றனர். “தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்” –2 கொரி. 4:4. தீர்மானத்துடன் கிறிஸ்துவைப் பின்பற்றாத அனைவரும், சாத்தானின் வேலைக்காரர்களாகவே உள்ளனர். புத்துயிர் அடையாத இருதயத்தில் பாவத்தின்மீது விருப்பமும், அதைப் போற்றி வளர்க்கும் தன்மையும், சாக்குப்போக்கு கூறுவதும் உள்ளது. புதுப்பிக்கப்பட்ட இருதயத்தில் பாவத்தின்மீது வெறுப்பும், அதன்மீது தீர்மானமான வெறுப்பும் உள்ளது. தெய்வபக்தியும் நம்பிக்கையும் இல்லாத சமுதாயத்தைக் கிறிஸ்தவர்கள் தெரிந்துகொள்ளும்போது, சோதனைக்குள் தாங்களாகவே விழுகின்றனர். சாத்தான் தன்னைப் பார்வையிலிருந்து மறைத்துக்கொண்டு, திருட்டுத்தனமாக அவர்களது கண்களின்மீது அவனது வஞ்சகத் திரையை மூடுகிறான். அப்படிப்பட்ட கூட்டங்கள் தங்களுக்குக் கெடுதலை உண்டுபண்ணுவதற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை அவர்களால் காணமுடியவில்லை. காலங்கள் முழுவதும் சுபாவத்தால்—வார்த்தைகளால்—செயல்களால் உலகத்துடன் இசைந்திருக்கும் அவர்கள் அதிகமதிகமாக குருடாக்கப்படுகின்றனர். (11)

உலகப்பிரகாரமான சம்பிரதாயங்களுக்கு இசைவதே சபையை உலகத்திற்கு மாறச்செய்கிறது. அது ஒருபோதும் உலகத்தைக் கிறிஸ்துவிற்கு மாற்றம் செய்வதில்லை. பாவத்துடனுள்ள பழக்கம், தவிர்க்கமுடியாத

விதத்தில் அதை வெறுப்பற்றதாகத் தோன்றச்செய்யும். சாத்தானின்வேலைக் காரர்களுடன் இணைந்திருக்க விரும்புபவன் வெகு விரைவில் அவனது ஆண்டவருக்குப் பயப்படாதுபோகிறான். கடமைகளைச் செய்யும்போது சோதனைகளுக்குட்பட்டால், அரச சபையில் தானியேல் இருந்தது போல, தேவன் நம்மைப் பாதுகாப்பார் என்று நாம் நிச்சயமாயிருக்கலாம். ஆனால் நம்மை நாமே சோதனைக்குக் கீழாக வைப்போமானால், விரைவிலோ அல்லது தாமதித்தோ விழுந்துவிடுவோம். (12)

சோதனைக்காரனின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதாகக் கொஞ்சங்கூட சந்தேகிக்காமல் இருப்பவர்கள் மூலமாக, அவன் மிக வெற்றிகரமாகச் செயலாற்றுகிறான். தாலந்துகளையும் கல்வியையும் உடையவர்களின் தெய்வபயமில்லாத தன்மைகள் இம்மேன்மைகளினால் நிவர்த்தி செய்யப்படுமென்றும், அவர்கள் தேவனுடைய அனுகூலத்தைப் பெறுவதற்கு தகுதியான மனிதர்கள் என்றும் பாராட்டப்பட்டு, சிறப்பிக்கப்படுகின்றனர். தாலந்துகளும் பண்புகளும் தேவனுடைய ஈவுகள். ஆனால் இவை தெய்வபக்தியின் இடத்தை நிரப்பும்படி வழங்கப்படும்போது, ஆத்துமாவை தேவனுக்கு அருகில் கொண்டுவருவதற்குப் பதிலாக அவரைவிட்டுத் தூரமாக நடத்தும்போது, சாபமும் கண்ணியுமாகின்றன. உபசரணையும் நற்பண்புகளும் போலத் தோன்றும் அனைத்தும் ஒருவகையில் கிறிஸ்துவுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளன என்னும் கருத்து அநேகருக்கிடையில் இருக்கிறது. இதைப்போன்ற பெரும் தவறு ஒருபோதும் இருந்ததில்லை. இந்தத் தன்மைகள் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் அலங்கரிக்க வேண்டியதுதான். ஆனால் அவர்கள் தேவனுக்கு அர்ப்பணம் செய்தவர்களாக இருக்கவேண்டும். அப்படியிருக்குமானால், அவைகள் உண்மையான மதத்திற்கு ஆதரவாக வல்லமைமிக்க செல்வாக்கைச் செயல்படுத்துபவையாக இருக்கும். ஆனால் அவை தேவனுக்கென்று அர்ப்பணம் செய்யப்படவேண்டும். இல்லாவிட்டால், தீமையின் வல்லமையாகிவிடும். பொதுவாக சன்மார்க்க நெறிக்கு எதிரானவை என்னும் செயல்களைச் செய்யக் கீழிறங்காத பண்பும், நுண்ணறிவும், இனிய பழக்கங்களும் உள்ள அநேக மனிதர்கள், சாத்தானின் கரங்களில் மெருகேற்றப்பட்ட கருவிகளாக உள்ளனர். அவனது துரோகமும் வஞ்சிக்கும் சுபாவமும் செல்வாக்கும் உதாரணமும், அறியாமையும் பண்பும் இல்லாதவர்களையும்விட அவனைக் கிறிஸ்துவின் காரியத்திற்கு எதிரான ஆபத்தான எதிரியாக்குகிறது. (13)

ஊக்கமான ஜெபத்தினாலும் தேவனைச் சார்ந்திருத்தலினாலும் சாலொமோன் உலகத்தின் வியப்பையும் பாராட்டுதலையும் தூண்டக்கூடிய ஞானத்தைப் பெற்றான். ஆனால் அவன், அவனது பலத்திற்கு

ஆதாரமாய் இருந்தவரை விட்டுத்திரும்பி, தன்னைச்சார்ந்து சென்றபோது, சோதனைக்கு இரையாகி விழுந்தான். அதன்பின் மிகுந்த ஞானமிக்க அந்த அரசனுக்கு அருளப்பட்ட ஆச்சரியமான வல்லமைகள் ஆத்துமாக்களுக்கு எதிராளியானவனின் அதிகத் திறமைவாய்ந்த ஏவலனாக இருப்பதற்குப் பயன்பட்டது. (14)

உண்மையைக் காணாமலிருக்கும்படி அவர்களது மனங்களைக் குருடாக்க, சாத்தான் தொடர்ந்து வகைதேடிக்கொண்டிருக்கும்போது, கிறிஸ்தவர்களுக்கு "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங் களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதி பதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனை களோடும் ... போராட்டம் உண்டு" (எபே. 6:12) என்பதை மறந்துவிடா திருப்பார்களாக. "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1 பேதுரு 5:8) என்று ஆவியினால் ஏவப்பட்ட எச்சரிக்கை நமது காலம்வரை—நூற்றாண்டுகளாக எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. (15)

ஆதாமின் நாட்களில் இருந்து நமது காலம்வரை, நமது பெரும் எதிரி, ஒடுக்கவும், அழிக்கவும் அவனது வல்லமைகளை செயல்படுத்திக்கொண்டிருக்கிறான். சபைக்கு எதிரான அவனது கடைசி நடவடிக்கைக்காக அவன் இப்போது ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறான். இயேசுவைப் பின்பற்ற வகைதேடும் அனைவரும் இந்த இரக்கமற்ற எதிரியுடன் போருக்குக் கொண்டுவரப்படுவார்கள். கிறிஸ்தவன் எந்த அளவிற்கு அதிகமாக தெய்வீக சாயலைப் பிரதிபலிக்கின்றானோ, அந்த அளவிற்கு அதிகமாக நிச்சயமாகத் தன்னை சாத்தானின் தாக்குதலுக்கு இலக்காக்கிக்கொள்ளுவான். தீமையின் வஞ்சகத்தைத் திரைநீக்கம் செய்து, கிறிஸ்துவை மக்கள் முன் காட்டச்செய்ய வகைதேடி, தேவனுடைய காரியத்தில் ஆக்கப்பூர்வமாக ஈடுபடும் அனைவரும், மனத்தாழ்மையுடனும் ஏராளமான கண்ணீரோடும், சோதனைகளுடனும் கர்த்தரைச் சேவிப்பதைப்பற்றி பவுல் கூறியுள்ள சாட்சியில் சேர்ந்துகொள்ளத் தகுதி உள்ளவர்களாக இருப்பார்கள். (16)

சாத்தான் அவனுடைய பயங்கரமான தந்திரமான சோதனைகளுடன் கிறிஸ்துவைப் பயங்கரமாகத் தாக்கினான். ஆனால் ஒவ்வொரு போரிலும் அவன் வீழ்த்தப்பட்டான். அந்த யுத்தங்கள் நமது சார்பாக நடத்தப்பட்டன. அந்த வெற்றிகள் நம்மை வெற்றிவீரர்களாக்கத் தகுதிப்படுத்துகின்றன. பலத்தைத் தேடும் அனைவருக்கும் கிறிஸ்து பலம் தருவார். எந்த ஒரு மனிதனும்

அவனது சம்மதமில்லாமல் சாத்தானால் மேற்கொள்ளப்படமாட்டான். பாவம்செய்யும்படி சித்தத்தைக் கட்டுப்படுத்தவோ அல்லது ஆத்துமாவை வற்புறுத்தவோ சாத்தானால் முடியாது. அவனால் வேதனையை உண்டுபண்ணமுடியும். ஆனால் அவனால் தீட்டுப்படுத்த முடியாது. கிறிஸ்து வெற்றியடைந்திருக்கிறார் என்னும் உண்மை, அவரது அடியார்களை பாவத்திற்கும் சாத்தானுக்கும் எதிரான அவர்களது போரில் தைரியத்துடனும் ஆண்மையுடனும் நின்று போரிட ஊக்குவிக்கவேண்டும். (17) ★

# 31

# தீய ஆவிகளின் அட்டகாசங்கள்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 511–517)**

காணமுடியாத உலகத்துடனுள்ள காணக்கூடியவற்றின் இணைப்பு, தேவனுடைய தேவதூதர்களின் ஊழியம், தீய ஆவிகளின் கூட்டங்கள் ஆகியவை வேதவாக்கியங்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டு, மனித வரலாற்றுடன் பிரிக்கமுடியாத விதமாக கலந்து பின்னப்பட்டுள்ளது. தீய ஆவிகள் உள்ளன என்ற கருத்தின்மீது அவநம்பிக்கை வளர்ந்துவரும் நேரம், "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்" (எபி. 1:14) பரிசுத்த தூதர்கள் மரித்தவர்களின் ஆவிகளாக கருதப்படுகின்றனர். ஆனால் வேதவாக்கியங்கள் நல்ல தீய தூதர்கள் இருக்கிறார்கள் என்பதை மட்டுமல்ல, அவர்கள் மரித்தவர்களின் ஆவிகளல்ல என்பதையும் கேள்விக்கிடமற்ற வகையில் போதிக்கிறது. (1)

மனிதனைப் படைப்பதற்கு முன்னரே தேவதூதர்கள் இருந்தனர். எப்படியென்றால், பூமியின் அஸ்திவாரம் போடப்பட்டபோது, "விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே"– யோபு 38:7. மனிதனுடைய விழுகைக்குப்பின் ஜீவவிருட்சத்தைக் காவல் செய்யும்படி தேவதூதர்கள் அனுப்பப்பட்டனர். அந்த நிகழ்ச்சி, எந்த ஒரு மனிதனும் மரிப்பதற்கு முன்பே நிகழ்ந்தது. தேவதூதர்கள் இயற்கையில் மனிதர்களைவிட மேலானவர்கள். ஏனெனில், "நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்" (சங். 8:5) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். (2)

பரலோகவாசிகளின் எண்ணிக்கை, வல்லமை, மகிமை, தேவ அரசாங்கத்துடனுள்ள அவர்களது தொடர்பு, அத்துடன் மீட்பின் பணியில் உள்ள அவர்களது சம்பந்தம் ஆகியவைபற்றி வேதவாக்கியங்களினால் நாம் தெரிவிக்கப்பட்டிருக்கிறோம். "கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை

ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.” “சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக்கேட்டேன்;” “கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே” (சங். 103: 19–21 வெளி. 5:11) என்று தீர்க்கதரிசி சொல்லுகிறார். ராஜாதி ராஜாவின் சமுகத்தில் பலத்த சவுரியவான்களாகிய தூதர்கள் கர்த்தருக்குப் பிரியமானதைச்செய்ய, அவருடைய சத்தத்தைக் கேட்க காத்திருக்கின்றனர். “ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்”–தானி. 7:10. “நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்” (எபி. 12:22) என்று அப்போஸ்தலனாகிய பவுல் அறிவித்தார். தேவனுடைய தூதர்களாகிய அவர்கள், “அந்த ஜீவன்கள் மின்னலின் தோற்றம்போல் ஓடித்திரிந்தன”–எசே. 1:14. அவர்களது மகிமை அப்படி ஜுவாலிப்பதாகவும் அவர்களது போக்கு அவ்வளவு விரைவானதாகவும் இருந்தது. இரட்சகரின் கல்லறையில் தோன்றின அந்த தேவதூதனின் முகம் எப்படி இருந்தது? “அவனுடைய ரூபம் மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள்போலானார்கள்”– மத்தேயு 28: 3–4. அகந்தைமிக்க அசீரியனான சனகெரிப், தேவனை நிந்தித்துத் தேவதூஷணம் கூறி, இஸ்ரவேலை அழிக்கப்போவதாக பயமுறுத்தியபோது, “அன்று இராத்திரியில் ... கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம்பேரைச் சங்கரித்தான்; அதிகாலமே எழுந்திருக்கும்போது, இதோ, அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள்” –2 இரா. 19:35. “அவன் அசீரியருடைய ராஜாவின் பாளயத்திலுள்ள சகல பராக்கிரமசாலிகளையும், தலைவரையும், சேனாபதிகளையும் அதம்பண்ணினான்; அப்படியே சனகெரிப் செத்தமுகமாய்த் தன் தேசத்திற்குத் திரும்பினான்;” –2 நாளா 32:21. (3)

தேவனுடைய பிள்ளைகளுக்கான இரக்கத்தின் பணியில் தூதர்கள் அனுப்பப்படுகின்றனர். ஆபிரகாமுக்கு—ஆசீர்வாதங்களின் வாக்குத்தத்தத்துடனும், அக்கினியினாலான அழிவிலிருந்து நீதிமானாயிருந்த லோத்தைக் காப்பதற்காக சோதோமின் வாசலுக்கும், வனாந்தரத்தில் களைப்பினாலும் பசியினாலும் மடிந்துபோகாதபடிக்கு எலியாவினிடத்திற்கும், எலிசாவிற்கு—எதிரிகளால் சூழப்பட்டிருந்த சிறிய ஊருக்கு அக்கினியுமான இரதங்களாலும் குதிரைகளாலும், தானியேலுக்கு—அஞ்ஞான அரசனின் சபையில் ஞானத்தைத் தேடியிருந்தபோதும் சிங்கத்திற்கு இரையாகும்படி

கைவிடப்பட்டபோதும், ஏரோதின் நிலவறையில் சாகும்படி விடப்பட்டிருந்த பேதுருவிற்கும், பிலிப்பியிலிருந்த கைதிகளுக்கும், நடுக்கடலில் புயல்காற்றில் அகப்பட்டிருந்த பவுலுக்கும் அவனது கூட்டாளிகளுக்கும், அந்நிய புறஜாதியானாயிருந்த கொர்நேலியுவுக்கு இரட்சிப்பின் தூதுடனும், இவ்விதமாகக் காலங்கள் நெடுகிலும் பரிசுத்த தேவதூதர்கள் தேவனுடைய ஜனங்களுக்கு ஊழியம் செய்துள்ளனர். (4)

கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் ஒரு காவல் தூதன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறான். இந்தப் பரலோகக் கண்காணிப்பாளர்கள் நீதிமான்களைத் துன்மார்க்கரின் வல்லமையிலிருந்து கேடயமாக இருந்து காக்கின்றனர். “அதற்குச் சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்? நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ?” (யோபு 1:9,10) என்று யோபுவைப்பற்றி சொன்னபோது சாத்தானே உணர்ந்திருந்தான். “கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்” (சங். 34:7) என்னும் சங்கீதக்காரனின் வார்த்தைகளில் தேவன் அவரது மக்களை எந்த ஏதுகரத்தினால் பாதுகாக்கிறார் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. “இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்தேயு 18:10) என்று இரட்சகர் அவரை நம்புகிறவர்களைப்பற்றிப் பேசும்போது கூறினார். தேவனுடைய பிள்ளை களுக்கு ஊழியம் செய்யும்படியாக ஏற்படுத்தப்பட்டுள்ள தூதர்கள், எந்த நேரத்திலும் அவருடைய சமுகத்திற்குச் செல்லக்கூடியவர்கள். (5)

இவ்வாறாக, அந்தகாரப்பிரபுவின் வஞ்சிக்கும் வல்லமைக்கும் கண்ணயராத விரோதங்களுக்கும் தீமையின் சேனைகள் அனைத்துடனும் உள்ள போராட்டத்திற்கும் ஆளாகி உள்ள தேவனுடைய ஜனங்களுக்கு பரலோக தேவதூதர்களின் ஓய்வில்லாத பாதுகாப்பு நிச்சயிக்கப்பட்டுள்ளது. தேவையில்லாமல் அப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்படவில்லை. வல்லமைமிக்க தீமையின் ஏதுகரங்களை தமது பிள்ளைகள் சந்திக்கவேண்டியதிருப்பதால், கிருபையையும் பாதுகாப்பையும் தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தங்களாகக் கொடுத்திருக்கிறார். இந்த ஏதுகரங்கள் எண்ணிக்கையில் அதிகமானவைகளாக—தீர்மானமுடைய களைப்படையாதவைகளாக உள்ளன. இவைகளின் பயங்கரத்தையும் வல்லமையையும் அறியாதவர்களாக—கேட்காதவர்களாக எவரும் பாதுகாப்புடன் இருக்க இயலாது. (6)

ஆதியில் பாவமற்றவர்களாகப் படைக்கப்பட்டிருந்த தீய ஆவிகள் இப்பொழுது தேவனின் தூதர்களாக உள்ள பரிசுத்த தூதர்களுடன் இயல்பிலும் வல்லமையிலும் மகிமையிலும் சமமாக இருந்தனர். ஆனால் பாவத்தின் மூலமாக விழுந்துபோன அவர்கள், தேவனுக்கு கனவீனத்தை உண்டுபண்ணவும், மனிதர்களை அழிக்கவும் ஒரு கூட்டமைப்பாக ஒன்றுசேர்ந்துள்ளனர். சாத்தானின் கலகத்தில் அவனுடன் இணைந்து பரலோகத்திலிருந்து துரத்திவிடப்பட்ட அவர்கள், அதன் பின்னான காலங்கள் நெடுகிலும், தெய்வீக அதிகாரத்திற்கு எதிராகப் போர் செய்வதில் சாத்தானுடன் ஒத்துழைத்துள்ளனர். அவர்களது கூட்டம், அரசாங்கம், பலவித நிலைகள் நுண்ணறிவு, தந்திரம், மனிதர்களின் சமாதானம், மகிழ்ச்சி ஆகியவைகளுக்கெதிரான அவர்களது தீய திட்டங்கள் அனைத்தையும்பற்றி வேதவாக்கியங்களில் நாம் கூறப்பட்டுள்ளோம். (7)

பழைய ஏற்பாட்டு வரலாறு, அவர்களைப்பற்றியும் அவர்களது பிரதிநிதிகளைப்பற்றியும் இங்குமங்குமாக எடுத்துக்காட்டுகின்றது. ஆனால் கிறிஸ்து பூமியில் இருந்த காலத்தில்தான், தீய ஆவிகள் அவைகளின் வல்லமைகளை மிக நன்றாகக் காணும் வகையில் வெளிக்காட்டின. மனிதனின் மீட்பிற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த திட்டத்தில் பிரவேசிப்பதற்காக கிறிஸ்து வந்திருந்தார். சாத்தான் உலகினைக் கட்டுப்படுத்தும் அவனது உரிமையை வலியுறுத்தத் தீர்மானித்திருந்தான். பாலஸ்தீன நாட்டைத் தவிர, பூமியெங்கிலும் அதன் ஒவ்வொரு பகுதியிலும் உருவ வழிபாட்டை ஏற்படுத்துவதில் அவன் வெற்றி அடைந்திருந்தான். சோதனைக்காரனின் அதிகாரத்திற்கு இணங்காமலிருந்த அந்த ஒரே நாட்டு மக்களின்மீது பரலோகத்தின் ஒளியை வீசச்செய்யக் கிறிஸ்து வந்தார். இங்கு ஒன்றை ஒன்று எதிர்க்கின்ற இரு வல்லமைகள் மேலாதிக்கத்தை உரிமைபாராட்டின. இயேசு கிறிஸ்து மன்னிப்பையும் சமாதானத்தையும் காண விரும்பிய அனைவரையும் அவரது அன்பின் கரங்களை நீட்டிவிரித்து, அழைத்துக்கொண்டிருந்தார். இருளின் சேனைகள் தங்களிடம் அளவில்லாத கட்டுப்படுத்தும் வல்லமை இல்லை என்பதைக் கண்டன. கிறிஸ்துவின் ஊழியம் வெற்றியடையுமானால் தங்களின் ஆளுகை (பிசாசுகளின்) முடிவடையும் என்பதை அவைகள் புரிந்துகொண்டன. சங்கிலியால் கட்டப்பட்ட ஒரு சிங்கத்தைப் போல சாத்தான் அடங்காதவனாக, மனிதர்களின் ஆத்துமா சரீரத்தின்மீது தனக்குள்ள வல்லமையை கடுங்கோபத்துடன் வெளிக்காட்டினான். (8)

மனிதர்கள் பிசாசுபிடித்தவர்களாக இருந்தனர் என்னும் உண்மை புதிய ஏற்பாட்டில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விதமாகத் துன்பப்பட்டவர்கள், இயற்கையான காரணங்களினால் உண்டாகும்

நோய்களினால் மட்டும் பாடனுபவிப்பவர்களாக இருக்கவில்லை. கிறிஸ்து எவைகளுடன் இடைப்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பதைப்பற்றிய தெளிவாகப் புரிந்திருந்தார். தீய ஆவிகளின் நேரடியான பிரசன்னத்தையும் அவைகளின் பிரதிநிதிகளையும் இனம் கண்டவராக இருந்தார். (9)

கதரேனருடைய நாட்டில், பிசாசுகள் பிடித்திருந்தவனை சுகப்படுத்தியதில், அவைகளின் எண்ணிக்கை, வல்லமை, கொடூரம் ஆகியவைகளைப்பற்றியும் கிறிஸ்துவின் வல்லமை, இரக்கம் ஆகியவைகளைப்பற்றியும் உள்ள தெளிவான உதாரணத்தையும் விபரத்தையும் வேதவாக்கியங்களில் காணலாம். அந்த துர்ப்பாக்கியமான பிசாசுபிடித்தவர்கள், எல்லாவிதமான கட்டுப்பாடுகளையும் மீறிக்கொண்டு, உடலை முறுக்கிக்கொண்டு, நுரை தள்ளிக்கொண்டு, கடுங்கோபத்துடன் இருந்தனர். தங்களுடைய உரத்த சத்தத்தினால் ஆகாயத்தை நிரப்பி, தங்களுக்குத் தாங்களே கொடுமை செய்துகொண்டு, அவர்களை நெருங்கும் யாவருக்கும் ஆபத்தை விளைவித்துக்கொண்டும் இருந்தனர். அவர்களது இரத்தம் சொட்டிய உருவழிந்த உடல்கள், நிலைதடுமாறிய மனங்கள் அந்தகாரப் பிரபுவிற்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்ற காட்சியைக் கொண்டு வந்தது. துன்பப்பட்டவர்களைக் கட்டுப்படுத்தியிருந்த பிசாசுகளில் ஒன்று, நாங்கள் அநேகராக இருக்கிறபடியால் என் பேர் லேகியோன் என்றது (மாற்கு 5:9). ரோமர்களின் இராணுவத்தில் லேகியோன் என்பது மூவாயிரத்திலிருந்து ஐயாயிரம்வரையுள்ள வீரர்களின் காலாட்படைகளாகும். சாத்தானின் சேனைகளும் கூட்டங்களாக அணிவகுக்கின்றன. இந்த ஒரு படையிலிருந்த பிசாசுகள் ஐயாயிரத்திற்கும் குறைவற்றவைகளாக இருந்தன. (10)

இயேசுவின் கட்டளையால் அந்த தீய ஆவிகள் தாங்கள் பிடித்துக்கொண்டிருந்தவர்களை இரட்சகரின் பாதத்தில் அமைதி அடைந்தவர்களாக—நுண்ணறிவுடையவர்களாக—சாதுவானவர்களாக இருக்கும்படி விட்டு விலகிச்சென்றன. ஆனால் இந்தப் பிசாசுக்கள் ஒரு பன்றிக்கூட்டத்தை கடலுக்குள் அடித்துச்செல்ல அனுமதிக்கப்பட்டன. கதரேன் ஊர் மக்களுக்கு கிறிஸ்து அருளின ஆசீர்வாதத்தைவிட, இந்தப்பன்றிகளின் இழப்பினால் உண்டான நஷ்டம் அதிகமாகத் தோன்றவே, அவர்கள் அந்தத் தெய்வீக சுகமளிப்பவரைத் தங்களுடைய ஊரைவிட்டுச்செல்லும்படி வேண்டினர். இப்படிப்பட்ட பலனை அடைந்துகொள்வதற்குத்தான் சாத்தான் திட்டமிட்டிருந்தான். அவர்களது நஷ்டத்திற்கான காரணத்தை இயேசுவின்மேல் சுமத்தி, அந்த மக்களின் சுயநலத்தினால் உண்டான பயத்தை எழுப்பி, அவருடைய வார்த்தைகளை அவர்கள் கவனிப்பதைத் தடுத்தான். நஷ்டங்கள், நல்வாய்ப்புகளின் இழப்புகள், பாடுகள் ஆகியவைகள்

சாத்தானுக்கும் அவனது பிரதிநிதிகளுக்கும் காரணமாயிருக்கும்போது, இவைகளுக்குங்கூட கிறிஸ்தவர்கள்தான் காரணம் என்று தொடர்ச்சியாக அவர்களைக் குற்றம்சாட்டிக்கொண்டே இருக்கிறான். (11)

ஆனால் கிறிஸ்துவின் நோக்கங்களைத் தோற்கடிக்க முடியவில்லை. இலாப நோக்கத்திற்காக இந்த அசுத்தமான மிருகங்களை வளர்த்து வந்த யூதர்களுக்கெதிரான ஒரு கடிந்துகொள்ளுதலாக, அந்தத் தீய ஆவிகள் அந்தப் பன்றிக்கூட்டங்களை மட்டும் கடலில் அமிழ்த்தினதோடல்லாமல், அவைகளை மேய்த்திருந்தவர்களையும் உரிமையாளர்களையுங்கூடக் கடலில் மூழ்கடித்திருக்கும். அந்த உரிமையாளர்களையும் பன்றி மேய்ப்பவர் களையும் பாதுகாத்தது, அவர்களது விடுதலைக்காக இரக்கத்துடன் செயலாற்றிய அவரது வல்லமைக்கே உரியது. அதற்கும் மேலாக, மனிதர்களின்மீதும் மிருகங்களின்மீதும் சாத்தான் செயலாற்றிய அவனது கொடுமைமிக்க வல்லமைகளைச் சீடர்கள் சாட்சியாகக் காணும்படி இந்த நிகழ்ச்சி அனுமதிக்கப்பட்டது. அவரது அடியார்கள் சந்திக்க வேண்டியதாக இருந்த எதிராளியைப்பற்றிய அறிவை அடைந்து, அவனால் வஞ்சிக்கப்படாதபடிக்கும், அவனது உபாயங்களால் மேற்கொள்ளப்படாத படிக்கும் இருக்கவேண்டுமென்று இரட்சகர் விரும்பினார். சாத்தானால் உண்டாயிருக்கும் அடிமைத்தளையைத் தகர்த்து, அடிமைப்பட்டவர்களாக இருப்பவர்களுக்கு, விடுதலையை வழங்கக்கூடிய இயேசுவின் வல்லமை யையும் அந்தப் பிரதேசத்து ஜனங்கள் காணவேண்டும் என்பது அவரது சித்தமாக இருந்தது. இயேசு அந்த இடத்தைவிட்டுச் சென்றபோதிலும் ஆச்சரியமான விதத்தில் விடுதலையாக்கப்பட்ட அந்த மனிதர்கள் தங்களுக்கு நன்மை செய்தவரின் இரக்கத்தை அறிவிக்க அங்கு தங்கியிருந்தனர். (12)

இப்படிப்பட்ட வேறு பல நிகழ்ச்சிகளும் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிரோபோனிக்கேயா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீ, தன் மகளைப் பிடித்திருந்த பிசாசைத் துரத்திவிடவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டாள். (மாற்கு 7:26–30). “அப்பொழுது, பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான்” (மத்தேயு 12:22). “ஊமையான ஒரு ஆவி பிடித்த… இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று” (மாற்கு 9:17–27). “ஜெபஆலயத்திலே அசுத்த ஆவிபிடித்திருந்த ஒரு மனுஷன் இருந்தான்” (லூக்கா 4:33–36). கப்பர்நகூம் ஜெப ஆலயத்தில் ஓய்வுநாளின் அமைதிக்கு இவன் இடையூறு செய்தான். இவர்களெல்லாம் மன உருக்கமிக்க இரட்சகரால் சுகப்படுத்தப்பட்டனர். கிட்டத்தட் ஒவ்வொரு சம்பவத்திலும் கிறிஸ்து அந்தப் பிசாசை நுண்ணறிவுமிக்க ஒரு தனி நபராகவே பாவித்து, அவன் பிடித்திருந்த மனிதனை இனிமேல் உபத்திரவிக்காதபடி, அவனை விட்டு வெளியே

வரும்படிக்கு கட்டளையிட்டார். கப்பர்நகூமில் ஆராதனை செய்திருந்தவர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு: "இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்"- —லூக்கா 4: 33–36. (13)

பொதுவாக, பிசாசு பிடித்தவர்கள் மிகுந்த பாடுள்ள நிலையில் இருப்பதாக எடுத்துக்காட்டப்படுகின்றனர். அப்படியிருந்தாலும் இந்த நியதிக்கு தவிர்ப்புகளும் இருந்தன. இயற்கைக்கு மேலான வல்லமையை அடைந்துகொள்ளுவதற்காகச் சிலர், சாத்தானின் செல்வாக்கை வரவேற்றனர். மாயவித்தைக்காரனான சீமோன், குறிசொல்லுகிறவனான எலிமா, பிலிப்பு பட்டணத்தில் பவுலையும் சீலாவையும் பின்தொடர்ந்த பெண், ஆகிய இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள், குறிசொல்லும் ஆவியை உடையவர்களாக இருந்தனர். (14)

நேரடியான, போதுமான வேதவாக்கியங்களின் சாட்சிகளைக் கொண்டிருந்தும் பிசாசும் அவனுடைய தீய தூதர்களும் இருப்பதை மறுப்பவர்களைவிட வேறு எவரும் தீய ஆவிகளின் செல்வாக்கினால் ஏற்படும் பெரும் ஆபத்தில் இல்லை. அவைகளின் தந்திரமாக ஏமாற்றும் தன்மைபற்றி நாம் அறியாமல் இருக்கும்வரை, அவைகள் நம்மால் ஏறத்தாழ புரிந்துகொள்ளமுடியாத அனுகூலத்தை உடையவைகளாக உள்ளன. தங்களுடைய சுயஞானத்தைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு இருக்கும்போது, அநேகர் இந்தத் தீய ஆவிகளின் கருத்துக்களுக்குச் செவிசாய்க்கின்றனர். இதனாலேயே நாம் காலத்தின் முடிவைச் சமீபிக்கும்போது, வஞ்சிக்கவும் அழிக்கவும் சாத்தான் மிக அதிகமான வல்லமையுடன் செயல்பட இருக்கும்போது, சாத்தான் என்று ஒருவன் இல்லை என்னும் நம்பிக்கையை எங்கும் பரப்புகிறான். தன்னையும் தான் செயல்படும் விதத்தையும் மறைத்துக்கொள்ளுவது அவனது கொள்கையாக உள்ளது. (15)

அவனது உபாயங்களுடன் நாம் அறிமுகமாகிவிடுவோம் என்பதைவிட, அந்தப் பெரும் வஞ்சகன் அதிகமாகப் பயப்படுகின்ற காரியம் வேறு எதுவும் இல்லை. அவனது உண்மையான சுபாவத்தையும் நோக்கங்களையும் மறைப்பதை மேன்மைப்படுத்த, கேலிச் சிரிப்பையும் கண்டனத்தையும்விட, பலத்த உணர்ச்சிகளை எழுப்புவதில்லை. சாத்தானை சிரிக்கத்தக்க விநோத மான அருவருப்பான பொருளாக, உண்மை உருவமைப்புள்ளவனாக, பாதி மிருகம் பாதி மனிதன் என்றெல்லாம் வண்ணம் தீட்டும்போது, அவன் மிகுந்த மகிழ்ச்சியை அடைகிறான். மேலும் விளையாட்டுகளிலும் கேலிப்பேச்சுகளிலும்

தங்களை நுண்ணறிவுள்ளவர்களும், நன்கு தெரிந்தவர்களுமாக எண்ணிக் கொள்ளுபவர்களால் அவனது பெயர் பயன்படுத்தப்படுவதைக் கேட்பதில் அவன் மிகுந்த மகிழ்ச்சியடைகிறான். (16)

இப்படிப்பட்ட ஒருவன் இருக்கிறானா என்னும் கேள்வி, அவன் தன்னை அடையாளங்கண்டுகொள்ளமுடியாதபடி, திறமையாக மறைத்துக் கொண்டிருப்பதினால் பரவலாகப் பேசப்படுகிறது. மத உலகில் வேதவாக்கியங்களின் மிகத் தெளிவான சாட்சியங்களுக்குப் பொய்யான தத்துவ விளக்கங்கள் கொடுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளுவது அவனது வெற்றிக்கான ஒரு சான்றாக உள்ளது. சாத்தானுடைய செல்வாக் கைப்பற்றிய உணர்வே இல்லாதவர்களின் மனங்களை, சாத்தானால் உடனடியாகக் கட்டுப்படுத்தமுடியும் என்பதால்தான் தேவனுடைய வார்த்தை அவனது அநீதியான செயல்களைப்பற்றிய அநேக உதாரணங்களைத்தந்து, அவனது இரகசியமான படைகளை, நமக்கு முன்பாகத் திரைநீக்கம்செய்து, இப்படியாக அவனது தாக்குதலுக்கெதிராக நம்மைக் காக்கிறது. (17)

நமது மீட்பரின் மேலான வல்லமையில் அடைக்கலமும், விடுதலையும் இல்லாதவர்களாக இருந்தோமானால், சாத்தானின்—அவனது சேனைகளின் வல்லமையும் விரோதமும் நம்மை பயப்படச்செய்வது சரியாக இருக்கும். கெட்ட மனிதர்களிடமிருந்து நமது சொத்துக்களையும் உயிர்களையும் காத்துக்கொள்ள, நாம் மிகக் கவனமாக நமது வீடுகளைத் தாழ்ப்பாள்களினாலும் பூட்டுகளினாலும் காக்கிறோம். ஆனால் நம்மிடம் தொடர்ச்சியாக வருவதற்கு வகைதேடிக்கொண்டிருக்கும் தீய தூதர்களையும் அவர்களால் நமக்குள்ள தாக்குதல்களையும் நமது சுயபலத்தால் பாதுகாக்க நாம் வகையற்று இருப்பதைப்பற்றியும் மிகக் குறைவாகவே சிந்திக்கிறோம். அனுமதிக்கப்பட்டால், அவர்களால் நமது மனங்களை வேறு பக்கமாகத் திருப்பவும், ஒழுக்கக்கேட்டை உண்டுபண்ணவும், நமது சரீரத்தை சித்திரவதை செய்யவும், நமது உடமைகளையும் உயிர்களையும் அழிக்கவும் முடியும். துன்பங்களும் அழிவும் மட்டுமே அவர்களது மகிழ்ச்சியாக உள்ளது. தேவன் அவர்களைத் தீய ஆவிகளின் கட்டுப்பாட்டிற்குள் விட்டுவிடுமளவிற்கு, தெய்வீக உரிமைகளைத் தடுத்து, சாத்தானின் சோதனைகளுக்கு இணங்குபவர்களின் நிலைமை மிகவும் பயங்கரமானது. ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அவரது கவனத்தில் எப்பொழுதும் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களைப் பாதுகாப்பதற்காக வெல்லும் திறனுள்ள, பலமிக்க தேவதூதர்கள் பரலோகத்திலிருந்து அனுப்பப்படுகின்றனர். தேவன் அவரது மக்களைச் சுற்றிப் பாதுகாப்பாக நிறுத்தி வைத்திருக்கும் காவலை உடைத்துச்செல்ல தீமையாளனான சாத்தானால் முடியாது. (18) ★

# 32

# சாத்தானின் கண்ணிகள்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 518–530)**

ஏறத்தாழ ஆறாயிரம் வருடங்களாகக் கிறிஸ்துவிற்கும் சாத்தானுக்கும் இடையில் நிகழ்ந்துகொண்டிருக்கும் இந்த மாபெரும் போராட்டம் விரைவில் முடிவடைய உள்ளது. எனவே மனிதனின் சார்பாகக் கிறிஸ்து செய்யும் வேலையைத் தோற்கடிக்கவும் ஆத்துமாக்களைக் கண்ணிகளில் பிடித்து வைக்கவும், பொல்லாங்கன் தன் முயற்சிகளை இரண்டு மடங்காக்குகிறான். இதற்குமேல் பாவத்திற்கான பலி இல்லை என்றாகும்வரை—இரட்சகரின் மத்தியஸ்த ஊழியம் முடிவடையும்வரை ஜனங்களை இருளிலும், பாவத்திற்காக மனம் வருந்தாதவர்களாகவும் வைத்திருப்பதுதான் அவன் நிறைவேற்றவிரும்பும் அவனது நோக்கமாக உள்ளது. (1)

அவனது வல்லமையைத் தடுக்க விசேஷமான முயற்சிகள் செய்யப்படாதபோதும், சபையிலும் உலகத்திலும் மந்தமான நிலைமை காணப்படும்போதும் சாத்தான் கவலைப்படாதவனாக இருக்கிறான். ஏனெனில் அவனுடைய சித்தத்தின்படி அடிமைகளாக நடந்துகொண்டிருப்பவர்களை இழக்கும் அபாயத்தில் அவன் இல்லை. ஆனால், நித்தியமான காரியங்களைப்பற்றிய கவனம் தேவை என்று அழைக்கப்படும்போது, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்? என்று ஆத்துமாக்கள் விசாரிக்கும்போது, அவன் தன்னுடைய வல்லமையை கிறிஸ்துவின் வல்லமைக்கு ஈடாக்க வகைதேடி, பரிசுத்த ஆவியின் செல்வாக்கிற்கு எதிரான போலிச்செல்வாக்கை நடைமுறைப்படுத்த களத்தில் நிற்கிறான். (2)

ஒரு சமயம் தேவபுத்திரர் கர்த்தருடைய சமுகத்திற்குமுன் கூடிவந்த சமயத்தில், அவர்களுக்கிடையில் சாத்தானும் வந்தான் என்று வேதவாக்கியங்கள் அறிவிக்கின்றன. (யோபு 1:6) அவன் நித்திய அரசரைப் பணிந்துகொள்ளுவதற்கு வராமல், நீதிமான்களுக்கு எதிரான விரோதமான

திட்டங்களை முன்வைப்பதற்காகவே வந்தான். தேவனை ஆராதிப்பதற்காக மக்கள் கூடும்போது, அவன் அதே நோக்கத்துடன் அவர்கள் நடுவில் தோன்றி இருக்கிறான். பார்வையில் காணமுடியாதபடி அவன் தன்னை மறைத்துக்கொண்டாலும், ஆராதிப்பவர்களின் மனங்களைக் கட்டுப்படுத்த சகலவிதமான அக்கரையுடனும் செயலாற்றுகிறான். திறமைமிக்க ஒரு படைத்தலைவனைப்போல, அவன் தனது திட்டங்களை முன்னதாகவே தீட்டுகிறான். தேவனுடைய ஊழியக்காரன் வேதவாக்கியங்களைத் தேடுவதை அவன் காணும்போது, மக்கள்முன் வைக்கப்படவுள்ள வேதாகமப் பொருள்பற்றி அவன் குறிப்பெடுத்துக்கொள்ளுகிறான். அதன்பின் அவன் யாரை எந்த வேதாகமப்பொருளின்மீது வஞ்சித்துக்கொண்டிருக்கிறானோ, அவருக்கு அந்தத்தூது சென்றடையாதவண்ணம், சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த தனது தந்திரங்கள் அனைத்தையும் மதிநுட்பத்தையும் பயன்படுத்துகிறான். அந்த எச்சரிக்கை எந்த ஒருவருக்கு அதிகமாக தேவைப்படுகிறதோ அவரை ஏதாவது ஒரு தொழிலில் அவரது நேர்முக ஈடுபாட்டை அவசரப்படுத்தி, அல்லது அப்படிப்பட்டவருக்கு உயிரூட்டும் சுவையாக இருக்கும் அந்த வார்த்தைகளைக் கேட்பதிலிருந்து வேறு ஏதாவது ஒரு உபாயத்தினால் தடுத்துவிடுகிறான். (3)

மறுபடியும் ஜனங்களைச் சூழ்ந்துகொண்டிருக்கும் ஆவிக்குரிய இருளைப்பற்றி கர்த்தருடைய வேலைக்காரர்கள் பாரமுள்ளவர்களாக இருப்பதை அவன் பார்க்கிறான். மந்தமான நிலை, கவலையின்மை, சோம்பேறித்தனம் ஆகிய அலைகளைத் தகர்ப்பதற்குத் தேவையான தெய்வீக கிருபைக்காகவும், வல்லமைக்காகவும் ஆர்வத்துடன் அவர்கள் ஜெபிப்பதை அவன் கேட்கிறான். அப்பொழுது புதுப்பிக்கப்பட்ட வைராக்கியத்துடன் அவன் தனது யுக்திகளைச் செயல்படுத்துகிறான். அமித உணவில் ஈடுபட, அல்லது சுயதிருப்திக்கான வேறு கரியங்களில் ஈடுபட, அவர்களைச் சோதிக்கிறான். இவ்வாறாக அவர்களது புலன்கள் மரத்துப்போகின்றன. அப்படிச்செய்து, அதன் காரணமாக அவர்கள் மிகவும் அவசியமாகக் கற்றுக்கொள்ளவேண்டிய காரியங்களைக் கேட்பதிலிருந்து தவறிவிடச் செய்கிறான். (4)

ஜெபத்தையும் வேதவாக்கிய ஆராய்ச்சியையும் அலட்சியம் செய்யும்படி சாத்தானால் நடத்தப்படக்கூடிய அனைவரும் அவனது தாக்குதலினால் மேற்கொள்ளப்படுவார்கள் என்பதை அவன் நன்கு அறிந்திருக்கிறான். எனவே, மனதை ஆட்கொள்ளமுடிகின்ற சகலவித உபாயங்களையும் அவன் கண்டுபிடிக்கிறான். தெய்வ பக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டிருக்கும் ஒரு சாரார் எப்போதுமே இருக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தைப் பின்பற்ற அறிவதற்குப் பதிலாக, தங்களுடன் ஒத்துப்போகாதவர்களிடம் சுபாவத்திலும் விசுவாசத்திலும் உள்ள தவறைத் தேடுவதை தங்களுடைய மதமாகச்

செய்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் சாத்தானுக்கு வலதுகரமாக உள்ளனர். தேவன் செயலாற்றிக்கொண்டிருக்கிறபோதும், அவரது ஊழியக்காரர்கள் அவருக்கு உண்மையான வணக்கத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும்போதும், சகோதரர்கள்மீது குறைகூறி, அவ்வாறு எப்போதும் தீவிரமாகச் செயல் படுகிறவர்கள் சிலர் அல்ல, ஏராளமானவர்களாக உள்ளனர். சத்தியத்தை நேசித்து, அதற்குக் கீழ்ப்படிகிறவர்களின் வார்த்தைகளின்மீதும், செயல் களின்மீதும் அவர்கள் தவறான வர்ணம் பூசுவார்கள். மிகுந்த ஆர்வமும் அக்கறையும் சுறுசுறுப்பும் உள்ள கிறிஸ்தவர்களை அவர்கள் வஞ்சிக்கப் பட்டவர்கள் என்றும், வஞ்சகர்கள் என்றும் எடுத்துக்காட்டுவார்கள். ஒவ்வொரு உண்மையான மேன்மைமிக்க நோக்கத்தையும் தவறான செயல் என்று எடுத்துக்காட்டி, தவறான எண்ணங்களைப் பரப்புவதும் அனுபவமில்லாத மனங்களில் சந்தேகத்தை எழுப்புவதும் அவர்களது பணியாக உள்ளது. தூய்மையும் நீதியுமாக உள்ளதை தவறும் வஞ்சகமும் மிக்கது என்று பொருந்தக்கூடிய ஒவ்வொரு விதத்திலும் கருதச்செய்வார்கள். (5)

ஆனால் அவர்கள் நிமித்தம் ஒருவரும் வஞ்சிக்கப்படவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் யாருடைய பிள்ளைகள், யாருடைய உதாரணத்தைப் பின்பற்றுகின்றனர், யாருடைய வேலையைச் செய்கின்றனர் என்பது எளிதில் காணப்படும். "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்"—மத்தேயு 7:16. அவர்களது நடத்தை விஷமிக்க அவதூறு செய்து சகோதரர்மேல் குற்றஞ்சாட்டும் சாத்தானுடையதைப் போன்று உள்ளது. (வெளி. 12:10). (6) ஆத்துமாக்களைக் கண்ணியில் அகப்படுத்த, ஏதாவது அல்லது சகலவிதமான தவறுகளையும் முன்வைக்கக்கூடிய ஏராளமான ஆதரவாளர்களை உடையவனாக அந்தப் பெரும் வஞ்சகன் இருக்கிறான். அவனால் கெடுக்கப்படக்கூடியவர்களாக இருப்பவர்களின் மாறுபட்ட சுவைகளுக்கும் தகுதிகளுக்கும் பொருந்தக்கூடிய மதப்புரட்டுக்களை ஆயத்தம் செய்துவைத்திருக்கும் ஆதரவாளர்களை உடையவனாகவும் இருக்கிறான். உண்மையற்றவர்களையும் மறுபடியும் பிறவாதவர்களையும் சபைக்குள் கொண்டுவருவது அவனது திட்டமாக உள்ளது. இவர்கள் தேவனுடைய ஊழியம் முன்னேறுவதையும், முன்னேற்றமடையச்செய்வதையும் காண விரும்பும் அனைவருக்கும் இடையூறு செய்யும்படியாக சந்தேகத்தையும், நம்பிக்கையின்மையையும் உற்சாகப்படுத்துகிறவர்களாக இருப்பார்கள். தேவனிலும், அவரது வசனத்திலும் உண்மையான விசுவாசம் இல்லாத அநேகர், சத்தியத்தின் சில கொள்கைகளுக்கு இணங்கி, கிறிஸ்தவர்களாகத் தேர்வடைகின்றனர். இவ்விதமாக அவர்கள் தங்களுடைய தவறுகளை வேதவாக்கியக் கொள்கைகளாக அறிமுகம்செய்யத் தகுதி அடைகின்றனர். (7)

மனிதன் எதை நம்பினாலும் ஒன்றுமாகாது என்னும் நிலை சாத்தானின் மிக வெற்றிகரமான வஞ்சகங்களில் ஒன்று. சத்தியத்தின் மீதுள்ள அன்புடன் அதைப் பெற்றுக்கொள்ளுபவரின் ஆத்துமாவை அது பரிசுத்தப்படுத்துகிறது என்பதை அவன் அறிந்திருக்கிறான். எனவே தவறான தத்துவ விளக்கங்களையும், கட்டுக்கதைகளையும் வேறொரு சுவிசேஷத்தையும் பதிலாக வைக்க அவன் தொடர்ந்து வகைதேடுகிறான். ஆரம்பகாலத்திலிருந்தே கெட்டமனிதர்கள் என்று மட்டும் கூறாமல், ஆத்துமாவிற்கு மரணத்தை உண்டுபண்ணக்கூடிய தவறுகளை உபதேசிப்பவர்கள் என்றும் அவர்களுக்கெதிராகப் போரிட்டுள்ளான். எலியா, எரேமியா, பவுல் ஆகியோர் தேவனுடைய வார்த்தையிலிருந்து மனிதர்களைத் திருப்பினவர்களை உறுதியுடனும், அச்சமின்றியும் எதிர்த்தனர். ஒருசரியான மதவிசுவாசம் முக்கியமானது அல்ல என்று கருதும் அந்தச் சுயாதீனமானது, சத்தியத்தின் பரிசுத்தமான பாதுகாவலர்களாக இருந்த இவர்களின் ஆதரவைக் காணவில்லை. (8)

தெளிவற்றதும் கவர்ச்சிமிக்கதுமான வேதவாக்கிய விளக்கங்கள் கிறிஸ்தவ உலகில் காணப்படும் மதவிசுவாசம்பற்றிய முரண்பட்ட அநேக தத்துவ விளக்கங்கள், மற்றும் சத்தியத்தை அறிந்துகொள்ளமுடியாதபடி மனதைக் குழப்பும் செயல்கள் அனைத்தும், நமது பெரும் எதிராளியினுடையதாக உள்ளன! ஒரு சாதகமான தத்துவ விளக்கத்தை வேதவாக்கியங்கள் ஆதரிக்கவேண்டும் என்ற, வழக்கத்தில் உள்ள சம்பிரதாயம், கிறிஸ்தவ உலகில் சபைகளுக்கிடையில் நிலவிவரும் அதிருப்திக்கும் பிரிவினைகளுக்கும் பெரும் அளவிற்குக் காரணமாக உள்ளது. தேவனுடைய சித்தத்தைப்பற்றிய அறிவை அடைந்துகொள்ளுவதற்காக, மனத் தாழ்மையுடன் வேத வாக்கியங்களை ஆராய்வதற்குப் பதிலாக, அநேகர் வழக்கமாக இல்லாத, தாறுமாறான, அல்லது அடிப்படை ஆதாரமாக உள்ள சிலவற்றைக் கண்டுபிடிக்க மட்டுமே வகை தேடுகின்றனர். (9)

தவறான கோட்பாடுகளையும் கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தாத பழக்கங்களையும் தாங்குவதற்காக சிலர் முழுமையான விஷயத்திலிருந்து விலகிச் சென்று, வேதவாக்கியத்தின் பகுதிகளை எடுத்துக்கொள்ளுவார்கள். தங்கள் கருத்தை நிரூபிக்க எடுத்துக்கொள்ளும் ஒரு வசனத்தின் மறுபாதி நேர் எதிரான கருத்தைக் காட்டிக்கொண்டிருக்கும். சர்ப்பத்தின் தந்திரத்துடன் அவர்கள் தங்களது மாமிசத்திற்குரிய விருப்பங்களுக்குப் பொருத்தமாகப் பொருள்கொள்ளக்கூடிய சம்பந்தமற்ற வார்த்தைகளுக்குப் பின்னால், தங்களைப் பாதுகாப்புக் குழிகளுக்குள் மறைத்துக்கொள்ளுகின்றனர். இப்படியாக அநேகர் தேவனுடைய வார்த்தையை வேண்டுமென்றே குதர்க்கம் செய்கின்றனர். செயலாற்றல்மிக்க, கற்பனை சக்தியுடைய

மற்றவர்கள் பரிசுத்த எழுத்துக்களில் உள்ள அடையாளங்களையும் உருவகங்களையும் எடுத்து, வேதாகமமே அதற்கு விளக்கம் என்பதைக் கருதாமல், தங்களது கற்பனைகளுக்குப் பொருந்தக்கூடியவிதத்தில் விளக்கம் கொடுத்து, தங்களுடைய தடுமாற்றங்களை வேதாகமப் போதனை என்றும் காட்டுகின்றனர். (10)

ஜெபம், தாழ்மை, போதிக்கும்ஆவி ஆகியவைகள் இல்லாமல் வேதவாக்கியங்களை ஆராயத்தொடங்கும்போது, மிகத் தெளிவானதும் எளிமையானதுமானவைகளைப் போலவே கடினமான பகுதிகளும் அவைகளின் உண்மையான அர்த்தத்திலிருந்த தப்பான அர்த்தங்களை உண்டுபண்ணும். வேதாகமத்தை வாசிக்கவும், தங்களுக்கென்று அவைகளின் பரிசுத்தமான சத்தியங்களைப் புரிந்துகொள்ளவும் கூடிய சலுகைகளைப் போப்புமார்க்கத் தலைவர்கள் மக்களுக்கு மறுக்கும் அதே சமயத்தில், அவர்களது நோக்கங்களுக்கு பயன்படக்கூடிய வேதவாக்கியப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பொருந்தக்கூடியவிதத்தில் அவர்களாகவே மக்களுக்கு விளக்கம் கொடுக்கின்றனர். வேதாகமம் வேதாகமமாகவே மக்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். தவறாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள போதனைகளைக் கொண்டிருப்பதைவிட வேதாகமம் இல்லாதிருப்பதே அவர்களுக்கு அதிக நன்மையாக இருக்கும். (11)

தங்களைப் படைத்தவருடைய சித்தத்துடன் அறிமுகமானவர்களாக இருக்க விரும்பும் அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கும்படி வேதாகமம் வடிவமைக்கப்பட்டது. அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்தை தேவன் மனிதர்களுக்குக் கொடுத்தார். சீக்கிரத்தில் சம்பவிக்க இருப்பவைகளைத் தானியேலுக்கும் யோவானுக்கும் அறிவிக்க தேவதூதர்களும் கிறிஸ்துவுங்கூட வந்தன. நமது இரட்சிப்பு சம்பந்தப்பட்ட அந்த முக்கியமான காரியங்கள் இரகசியமானவைகளாக வைக்கப்படவில்லை. சத்தியத்தை நேர்மையுடன் தேடுபவர்களை குழப்பவும் வழிவிலகிச் செல்லுவதற்கேதுவாகவும் அவை வெளிப்படுத்தப்படவில்லை. “தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை” (ஆபகூக் 2:2) என்று ஆபகூக் தீர்க்கதிரிசியால் கர்த்தர் உரைத்தார். ஜெபிக்கும் இருதயத்துடன் வாசிக்கும் அனைவருக்கும் தேவனுடைய வார்த்தை தெளிவாக உள்ளது. உண்மையான—நேர்மைமிக்க ஒவ்வொரு ஆத்துமாவிற்காகவும், சத்தியத்தின் ஒளியிடத்திற்கு வரும் நீதிமானுக்காகவும் வெளிச்சம் விதைக்கப்பட்டிருக்கிறது (சங். 97:11). மறைந்துள்ள பொக்கிஷத்தைத் தேடுவதுபோல ஆர்வத்துடன் தேடாதவரை, எந்தச் சபையாலும் பரிசுத்தத்தில் முன்னேறமுடியாது. (12)

சாத்தான் அவனது நோக்கத்தை நிறைவேற்ற எப்பொழுதும் சீராக

வேலைசெய்துகொண்டிருக்கும்போது, தாராளம் என்னும் குரலினால் தங்களுடைய எதிராளியின் உபாயங்களுக்கு மனிதர்கள் குருடாக்கப்பட்டு உள்ளனர். மனித உத்தேசங்களை, வேதாகமத்திற்குப் பதிலாக வைப்பதில் அவன் வெற்றி அடையும்போது, தேவப்பிரமாணம் ஒரு ஓரமாக வைக்கப்படவே, சபைகள் தாங்கள் விடுதலையானவையாக அறிவிக்கும் வேளையிலும், அவைகள் பாவத்தின் அடிமைத்தளையில் தான் உள்ளன. விஞ்ஞான ஆராய்ச்சி அநேகருக்கு ஒரு சாபமாக உள்ளது. விஞ்ஞானம், கலை ஆகியவைகளின் கண்டுபிடிப்புகளில், ஒளியானது உலகத்தின் மீது வெள்ளமாகப் பாய்வதற்கு தேவன் அனுமதிக்கிறார். ஆனால் மிகப்பெரிய மனமுங்கூட, ஆராய்ச்சியில் தேவனால் வழிநடத்தப்படாவிட்டால், விஞ்ஞானம் வெளிப்படுத்தல் ஆகிய இரண்டிற்கும் உள்ள உறவை ஆராயும் அவர்களது முயற்சியில் குழப்பமடைவார்கள். (14)

உலகப் பொருள்கள், ஆவிக்குரியவைகள் ஆகிய இரண்டையும் பற்றிய மனித அறிவு, அரைகுறையானதும் பூரணமற்றதாகவும் உள்ளது. எனவே, அநேகர் தங்களின் விஞ்ஞான நோக்குகளை, வேத வாக்கிய அறிவிப்புகளுடன் இசையச்செய்ய முடியாதவர்களாக உள்னனர். அநேக சாதாரணமான தத்துவ விளக்கங்களையும் உத்தேசங்களையும் விஞ்ஞான ரீதியான உண்மைகள் என்று ஏற்றுக்கொண்டு, விஞ்ஞானம் என்று தவறாகக் கூறப்படும் ஒன்றினால், தேவனுடைய வார்த்தைகள் சோதிக்கப்படவேண்டுமென்றும் எண்ணுகின்றனர் (1 தீமோத்தேயு 6:20). சிருஷ்டிகரும் அவரது செயல்களும் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டவையாக உள்ளன. அவைகளை இயற்கையின் பிரமாணங்களால் விளக்கமுடியாததினால், வேதாகம வரலாறு நம்ப முடியாததாக உள்ளது என்று கருதுகின்றனர். பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஆகியவைகளில் உள்ள ஆதாரங்களின் நம்பக்கூடிய தன்மையை சந்தேகிப்பவர்கள், அடிக்கடி மேலும் ஒரு அடி கடந்து சென்று தேவன் இருப்பதையும் சந்தேகித்து, முடிவில்லாத வல்லமையை இயற்கைக்குச் சூட்டுகின்றனர். நங்கூரத்தை இழந்த அவர்கள், கடவுள் இல்லை என்னும் வாதமாகிய பாறையின்மீது மோதும்படி விட்டுவிடப்படுகின்றனர். (15)

இவ்வாறாக, அநேகர் விசுவாசத்திலிருந்து தவறி, சாத்தானால் வஞ்சிக்கப்படும்படிக்கு விட்டுவிடப்படுகின்றனர். மனிதர்கள் அவர்களுடைய சிருஷ்டிகரைவிட அதிக ஞானமுள்ளவர்களாக இருப்பதற்கு முயல்கின்றனர். ஒருபோதும் வெளிப்படுத்தப்பட முடியாததாக இருக்கின்ற இரகசியங்களைத் தேடி விளக்கம் கொடுக்க, நித்திய காலங்களினூடாக மனிதத்துவம் முயன்றிருக்கிறது. தேவன் அவரைப்பற்றியும் அவருடைய நோக்கங்களைப்பற்றியும் அறிவித்திருக்கின்றவைகளைப் புரிந்துகொள்ளும்படி

மனிதர்கள் தேடுவார்களானால், யேகோவாவின் மகிமை, மகத்துவம், வல்லமை ஆகியவைபற்றிய நோக்கினை அடைந்து, தங்களது குறைகளை உணர்ந்து, அவர்களுக்காகவும் அவர்களது பிள்ளகளுக்காகவும் எவைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவோ அவைகளில் திருப்தி அடைவார்கள். (16)

அறியப்படாதவைகளாக தேவன் வைத்திருப்பவைகளையும் நாம் புரிந்துகொள்ளவேண்டியதில்லை என்று அவர் நினைக்கிறவைகளையும் அறிந்துகொள்ளத் தேடுவதற்கும் யூகம் செய்வதற்கும் மனிதமனங்களை ஈடுபடச்செய்வது, சாத்தானின் வஞ்சகங்களில் மிகச்சிறந்த ஒரு சாதனையாக உள்ளது. இப்படித்தான் லூசிபர் பரலோகத்தில் அவனுக்கிருந்த இடத்தை இழந்தான். தேவனுடைய நோக்கங்களின் இரகசியங்களனைத்தும், அவனுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்த உயர்ந்த நிலையில், அவனுடைய வேலையைப்பற்றி அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டு இருந்தவைகளை முற்றிலுமாகக் கருதாமலிருந்துவிட்டான். அதே அதிருப்தியை அவனது அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாக இருந்த தேவதூதர்களுக்குள்ளும் எழுப்பி, அவர்களது விழுகைக்குக் காரணத்தை உண்டுபண்ணினான். இப்பொழுதும் அதே ஆவியை மனிதர்களின் மனங்களில் நிரப்பி, தேவனுடைய நேரடியான கட்டளைகளை அவர்கள் மதிக்காமலிருக்கும்படி நடத்த வகைதேடுகிறான். (17)

வேதாகமத்திலுள்ள தெளிவான பிரித்துக்காட்டும் சத்தியங்களை ஏற்றுக்கெள்ள விரும்பாதவர்கள் தங்களுடைய மனச்சாட்சியை அமைதிப்படுத்தும் மகிழ்ச்சிமிக்கக் கட்டுக்கதைகளைத் தொடர்ச்சியாகத் தேடிக்கொண்டிருக்கின்றனர். சுயத்தை மறுக்கும், தாழ்மைப்படுத்தும் கோட்பாடுகளை முன்வைக்கும்போது, எந்த அளவிற்கு ஆவிக்குரிய தன்மை குறைவாக உள்ளதோ, அந்த அளவிற்கு அவைகள் மிகுந்த அனுகூலத்துடன் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த மனிதர்கள் தங்களுடைய நுண்ணறிவின் வல்லமைகளைத் தரம் தாழ்த்துகின்றனர். தெய்வீக நடத்துதலுக்காக, நொறுங்குண்ட இருதயத்துடனும் ஆர்வமிக்க ஜெபத்துடனும் வேதவாக்கியங்களை ஆராயமுடியாதபடிக்கு அவர்களது சொந்த—விசித்திரமான எண்ணங்களில் அதிக ஞானமுள்ளவர்களாக உள்ளனர். மாயையில் இருந்து காக்கப்பட அவர்களிடம் கேடயம் இல்லை. இருதயத்தின் வாஞ்சைகளை நிறைவேற்றிக்கொடுப்பதற்கு சாத்தான் தயாராக இருந்து, சத்தியத்தின் இடத்தில் வஞ்சகங்களைக் கையடக்கமாக வைக்கிறான். இவ்விதமாகத்தான் போப்புமார்க்கம் மனிதர்களின் மனங்களின்மீது அதன் வல்லமையை பெற்றுக்கொண்டது. சத்தியத்தில் சிலுவை அடங்கியுள்ளதால், அதை நிராகரிப்பதின் வாயிலாக, புரொட்டஸ்டாண்டுகளும் அதே பாதையைப் பின்பற்றுகின்றனர். இந்த உலகத்திலிருந்து மாறுபட்டவர்களாக

இல்லாமல் இருப்பதற்கான சௌகரியத்திற்காகவும் கொள்கைக்காகவும், தேவனுடைய வார்த்தையை வாசிப்பதை அலட்சியம் செய்யும் அனைவரும், சத்தியத்திற்குப் பதிலாக அழிவுக்குரிய மதப்புரட்டைப் பெற்றுக்கொள்ளும்படி விட்டுவிடப்படுவார்கள். சத்தியத்தை மனப்பூர்வமாக நிராகரிப்பவர்களால் மனதில் தோன்றக்கூடிய தவறுகள் ஒவ்வொன்றும் ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு வஞ்சகத்தை அச்சத்துடன் நோக்கும் ஒருவன் உடனடியாக மற்றொன்றையும் பெறுவான். இரட்சிக்கப்படும்படியாக சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கீகரியாமல்போன, ஒரு வகுப்பினரைப்பற்றிப் பவுல்: "சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" (2 தெச. 2:10–12) என்று அறிவிக்கிறார். அப்படிப்பட்ட ஒரு எச்சரிப்பு நமக்குமுன் இருக்கும்போது, எந்தக் கோட்பாடுகளை பெற்றுக்கொள்கிறோமென்பதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். (18)

பெரும் வஞ்சகனின் மிகுந்த வெற்றிகரமான ஏதுகரங்களுக்கிடையில் ஆவிமார்க்கத்தின் மாயையான போதனைகளும் பொய்யான அற்புதங்களும் உள்ளன. ஒளியின் தூதனின் ஆடையில் தன்னை மறைத்துக்கொண்டு, கொஞ்சங்கூட சந்தேகம் உண்டாகாதவிதத்தில் அவன் தனது வலையை விரிக்கிறான். தேவனுடைய புத்தகத்தைப் புரிந்துகொள்ளும்படி மனிதர்கள் ஆர்வமிக்க ஜெபத்துடன் அதை வாசிப்பார்களானால், இருளில் விடப்படாமல் அல்லது தவறான கோட்பாடுகளைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பார்கள். ஆனால் அவர்கள் சத்தியத்தை நிராகரிக்கும்போது, வஞ்சகத்திற்கு ஒரு இரையாக விழுகின்றனர். (19)

அபாயகரமான வேறொரு தவறு கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுக்கின்ற, இந்த உலகத்தில் பிறப்பதற்குமுன், அவர் இருக்கவில்லை என்ற கோட்பாடாகும். வேதாகமத்தை நம்புவதாகக் கூறிக்கொள்ளும் ஒரு பெரும் கூட்டமான மக்களால், இந்தத் தத்துவ விளக்கம் ஆதரவுடன் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனாலும் பிதாவுடன் உள்ள தமது உறவைப்பற்றி இரட்சகர் தருகின்ற தெளிவான அறிக்கைகள் அவரது தெய்வீக சுபாவம், அவரது முந்தின நிலை (மனிதனாகத் தோன்றுவதற்குமுன் அநாதி காலமாக இருந்த நிலை) ஆகியவைகளுடன் அது நேரடியாக முரண்படுகிறது. வேதவாக்கியங்களுடன் தேவையற்ற விதத்தில் தர்க்கிக்காமல் அதை வரவேற்க இயலாது. மீட்பரின் பணியைப்பற்றிய மனிதனின் இருதயத்து எண்ணங்களை அது கீழ்த்தரமாக்குவதோடல்லாமல், வேதாகமம் தேவனுடைய வெளிப்படுத்துதல் என்ற விசுவாசத்தின் அஸ்திவாரத்தையும்

அழிக்கிறது. இந்த நிலை அதிகமான ஆபத்துள்ளதாகும். அதே நேரத்தில், அதைச் சந்திப்பதையும் கடினமாக்குகிறது. கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் குறித்து ஆவியின் ஏவுதலினால் உள்ள வேதவாக்கிய சாட்சியை மனிதர்கள் நிராகரித்தினால் அப்படிப்பட்டவர்களுடன் விவாதம்செய்வது வீணாயிருக்கும். ஏனெனில் முடிவுள்ள எப்படிப்பட்ட வாதமும் அவர்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தாது. "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்"–1 கொரி. 2:14. இந்தத் தவறைப் பற்றிக்கொண்டிருக்கும் ஒருவராலும் கிறிஸ்துவின் சுபாவத்தையோ அல்லது அவரது ஊழியத்தைப்பற்றியோ உண்மையான அறிவை உடையவராக இருக்கமுடியாது. (20)

மேலும் தந்திரமும் கேடுவிளைவிப்பதுமான ஒரு தவறு என்னவென்றால், சாத்தான் என்னும் ஒருவன் ஒரு தனிநபராக இல்லை என்றும், இந்தப் பெயர் மனிதர்களின் தீய சிந்தனைகளையும் விருப்பங்களையும் எடுத்துக்காட்டுவதற்காக வேதாகமத்தில் மிகவும் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் எண்ணுகின்ற தவறான நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கை வேகமாகப் பரவிவருகின்றது! (21)

தனிப்பட்ட ஒவ்வொருவரும் இறக்கும்போது அவர்களிடம் கிறிஸ்து வருவதுதான், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்று புகழ் வாய்ந்த பிரசங்க மேடைகளில் இருந்து பரவலாக எதிரொலிக்கும் போதனை, வான மேகங்களின்மீது வரும் கிறிஸ்துவின் ஆள்தத்துவமான (இரண்டாம்) வருகையிலிருந்து மனிதர்களின் மனங்களைத் திசைதிருப்பச் செய்யப்பட்டுள்ள ஒரு கருவியாகும். இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சாத்தான் கூறிக்கொண்டிருக்கும் இந்த வஞ்சகத்தை ஏற்றுக்கொள்ளுவதினால், அநேக ஆத்துமாக்கள் அழிவிற்குள்ளாக்கப்பட்டுள்ளனர். (22)

உலக ஞானமானது, ஜெபம் முக்கியமானதல்ல என்று மறுபடியும் போதிக்கிறது. விஞ்ஞான மனிதர்கள் ஜெபங்களுக்கு உண்மையான பதில் பெற்றுக்கொள்ளமுடியாது என்றும், அற்புதங்கள் இயற்கையின் நியதியை மீறுகின்றதாக உள்ளதால், அப்படி ஒன்றும் இல்லை என்றும் சாதிக்கின்றனர். இந்தப் பிரபஞ்சமானது, குறிப்பிடப்படும் நியதிகளால் இயக்கப்படுகிறது. தேவனுங்கூட இந்த நியதிகளுக்கெதிராக எதையும் செய்வதில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். இவ்விதமாக தேவன் அவரது சொந்த நியதிகளுக்குக் கட்டுப்பட்டவர். தெய்வீகப்பிரமாணங்களின் ஆளுகை, தெய்வீக சுதந்திரத்தைத் தவிர்க்கக்கூடியது என்பதுபோல்

அவர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். இப்படிப்பட்ட போதனைகள் வேத வாக்கியங்களுக்கும் அவைகளின் சான்றுகளுக்கும் எதிரானவைகளாக உள்ளன. கிறிஸ்துவினாலும் அவரது சீடர்களினாலும் அற்புதங்கள் செய்யப்படவில்லையா? மனிதர்களுக்கிடையில் நடந்துசென்றபோது, விசுவாசத்தினால் உண்டான ஜெபங்களைக் கேட்க விரும்பியிருந்த அதே மன உருக்கமுள்ள இரட்சகர் இன்றும் உயிருடனிருந்து, அன்றுபோல் இன்றும் விசுவாசமிக்க ஜெபங்களைக் கேட்பதற்கு விருப்பமிக்கவராக இருக்கிறார். இயற்கையானது இயற்கைக்கும் மேலானவருடன் ஒத்துழைக்கிறது. நாம் கேட்காவிட்டால் நமக்கு அருளாமலிருக்கக்கூடியவைகளை, விசுவாசமிக்க நமது ஜெபத்திற்கு மறுமொழியாக நமக்கு அருளுவது தேவனுடைய திட்டத்தில் ஒரு பகுதியாகும். (23)

கிறிஸ்தவ உலகத்தின் சபைகளுக்கிடையில் பெற்றுக்கொள்ளப் படுகின்ற தவறான கோட்பாடுகளும் விநோதமான எண்ணங்களும் எண்ணிலடங்காதவையாக உள்ளன. தேவனுடைய வார்த்தையினால் நடப்பட்ட எல்லை அடையாளங்களில் ஒன்றினைக்கூட நீக்குவதினால் உண்டாகும் தீய விளைவுகளை அனுமானிப்பது முடியாததாக உள்ளது. இதைச் செய்வதற்கு முயல்பவர்களில் சிலர் ஒரு சத்தியத்தை (கோட்பாடுகளில் ஒன்றை) நிராகரித்து, அத்துடன் நின்றுவிடுகின்றனர். பெரும் பான்மையினர் உண்மையாகவே தேவன் என்பவர் இல்லை என்று கூறுபவர்களாகும்வரை, சத்தியத்தின் கொள்கைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஒதுக்கிவைத்துவிடுகின்றனர். (24)

பலரும் அறிந்த தேவயியலின் குறைகள் அநேக ஆத்துமாக்களை கடவுள் இல்லை என்னும் வாதத்திற்கு விரட்டியிருக்கிறது. அப்படி இல்லாமல் இருந்திருந்தால், அவர்கள் வேதவாக்கியங்களில் நம்பிக்கை உள்ளவராக இருந்திருப்பார்கள். அவரது உணர்வுகளான நீதி, இரக்கம், அனுதாபம் ஆகியவைகளை கொதிக்கவைக்கும் கோட்பாட்டை ஒப்புக்கொள்ளுவது அவரால் முடியாததாக உள்ளது. இவைகள் வேதாகமத்தின் போதனைகள் என்று எடுத்துக்காட்டப்படுவதால், அவர் அவைகளை தேவனுடைய வார்த்தையென்று ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். (25)

சாத்தான் நிறைவேற்ற விரும்பும் நோக்கம் இதுதான். தேவன் மீதும் அவரது வார்த்தையின்மீதும் உள்ள நம்பிக்கையை அழிப்பதைவிட வேறு எதையும் அவன் அதிகமாக விரும்புவதில்லை. சந்தேகப்படுபவர்களின் சேனையின் தலைவனாக அவன் நின்று, ஆத்துமாக்களை அவனது அணியில் சேர்த்துக்கெள்ள தந்திரமாக ஏமாற்றுகிறான். சந்தேகப்படுவது கண்ணியமானதாகவுள்ளது. தேவனுடைய வார்த்தை பாவத்தைக் கடிந்து

குற்றப்படுத்துகிறது. அதனால் பாவத்திற்குக் காரணமாக இருப்பவனைப் போலவே, ஒரு பெரும் வகுப்பினராலும் தேவனுடைய வார்த்தை நம்பிக்கையின்றி நோக்கப்படுகிறது. அது கோரும் அவசியங்களுக்குக் கீழ்ப்படிவதற்கு விருப்பமற்றவர்கள் அதன் அதிகாரத்தைத் தூக்கி எறிவதற்கு முயலுகின்றனர். அவர்கள் வேத வாக்கியங்களிலோ அல்லது பிரசங்கத்திலோ தவறு கண்டுபிடிப்பதற்காக மட்டுமே வேதாகமத்தை வாசிக்கின்றனர். அல்லது பரிசுத்தமான மேடையிலிருந்து முன்வைக்கப்படும் அதன் போதனைகளைக் கவனிக்கின்றனர். கடமையில் உள்ள அலட்சியத்தை தாங்களாகவே நியாயப்படுத்திக் கொள்ளுவதற்காக அல்லது சாக்குப்போக்கிற்காக கடவுள் இல்லை என்று கூறி நாத்திகர்களானவர்கள் ஒரு சிலர் மட்டுமல்ல. மற்றவர்கள் அகந்தையினாலும் சோம்பேறித்தனத்தினாலும் கடவுள் இல்லை என்கிற கொள்கைகளைப் பின்பற்றுகின்றனர். மேன்மையை உண்டுபண்ணும் மதிப்புமிக்க காரியம் எதையாவது செய்வதற்கு முயற்சியும் சுயமறுப்பும் தேவையாக உள்ளது. இப்படிச் செய்து, தங்களைச் சிறப்பித்துக் காட்டும் நோக்கமின்றி, அதிக சுகபோகத்தை விரும்பி இருந்து, அதே சமயம் தங்களிடம் மேலான ஞானம் உள்ளது என்னும் புகழை அடைந்துகொள்வதற்காகவே, இப்படிப்பட்டவர்கள் வேதாகமத்தை விமர்சிக்கின்றனர். அளவிற்குட்பட்ட மனம், தெய்வீக ஞானத்தால் ஒளிப்படுத்தப்படாதபோது, புரிந்துகொள்ள முடியாதது ஏராளமாயிருக்கிறது. இவ்விதமாக, விமரிசனம் செய்வதற்கு அவர்கள் சந்தர்ப்பம் காணுகின்றனர். நம்பிக்கையின்மை, சந்தேகிக்கும்தன்மை, கடவுள் இல்லை என்னும் விவாதம் ஆகியவைகளின் கட்சியில் நிற்பது ஒரு மேலான பண்பு என உணர்வதுபோல் பலர் காணப்படுகின்றனர். கபடமின்மை என்னும் தோற்றத்திற்கடியில் அப்படிப்பட்டவர்கள் சுயநம்பிக்கையினாலும் அகந்தையினாலும் ஏவப்பட்டிருப்பது தெளிவாகக் காணப்படும். வேதவாக்கியத்தினால் மற்றவர்களுடைய மனங்களைத் திகைக்க வைப்பதில் அநேகர் மகிழ்ச்சியைக் காண்கின்றனர். எதிர்வாதத்தின்மீதுள்ள ஆசையினால், முதலில் தவறான வழியில் விமர்சனமும் காரணமும் காட்டுபவர்களாக சிலர் உள்ளனர். இவ்விதமாக அவர்கள் தங்களைத் தாங்களே வேடனின் கண்ணிக்கு உட்படுத்துகிறதை உணராமல் உள்ளனர். அவர்களது நம்பிக்கையின்மையைப் பகிரங்கமாக அறிவித்துவிட்டபின், அவர்கள் அதே நிலையில் தொடரவேண்டாம் என்று உணருகின்றனர். இவ்விதமாக அவர்கள் தெய்வபக்தி இல்லாதவர்களுடன் ஒன்றுசேர்ந்து, அவர்களுக்கான பரத்தின் வாசல்களை அவர்களாகவே மூடிக்கொள்ளுகின்றனர். (26)

தேவன் அவரது வார்த்தையின் தெய்வீக சுபாவத்திற்குப் போதுமான சான்றினை வைத்திருக்கிறார். நமது மீட்பு சம்பந்தப்பட்ட பெரும் சத்தியங்கள் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளன. பரிசுத்த ஆவியினை

உண்மையுடன் தேடும் அனைவருக்கும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ள அவரது உதவியினால், ஒவ்வொரு மனிதனாலும் இந்த சத்தியங்களை தனக்கென்று புரிந்துகொள்ளமுடியும். பலமிக்க அஸ்திவாரத்தின்மீது மனிதர்கள் அவர்களுடைய விசுவாசத்தை வைக்கும்படி தேவன் அனுமதித்திருக்கிறார். இருந்தபோதிலும், மனிதர்களின் அளவுக்குட்பட்ட மனங்கள், முடிவில்லாத ஒருவருடைய திட்டங்களையும் நோக்கங்களையும் பூரணமாக அறிந்துகொள்ளப் போதுமானவையாக இல்லை. அவைகளைத் தேடுவதினால், நம்மால் ஒருபோதும் தேவனைக் கண்டுபிடிக்கமுடியாது. தேவன் அவரது மகத்துவத்தை மறைத்து வைத்திருக்கும் திரையை நாம் நமது இறுமாப்புள்ள கரத்தினால் நீக்க முயலக்கூடாது. “ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!” (ரோமர் 11:33) என்று அப்போஸ்தலன் வியந்து கூறுகிறார். எல்லையற்ற அன்பும் இரக்கமும் முடிவில்லாத வல்லமையுடன் ஒன்றித்திருப்பதை அறிந்துகொள்ளும் அளவிற்கே, நம்மோடு அவர் வைத்துள்ள உறவையும், அவரைச் செயலாற்றத் தூண்டும் நோக்கங்களையும் நம்மால் அறியமுடியும். பரலோகத்திலிருக்கும் நமது பிதா, ஒவ்வொன்றுக்கும் ஞானத்துடனும் நீதியுடனும் உத்தரவிடுகிறார். நாம் திருப்தியற்றவர்களாகவும் நம்பிக்கையில்லாதவர்களாகவும் இருக்காமல் பக்திமிக்க பணிவுடன் தொழவேண்டும். அவர்களது நோக்கங்களை நாம் இந்த அளவிற்கு அறிந்திருந்தால் நமது நன்மைக்குப் போதுமானது என்னும் அளவிற்கு அவர் நமக்கு வெளிப்படுத்துவார். அதற்கும் அப்பால் சர்வ வல்லமையுள்ள அவரது கரத்தையும் அன்பினால் நிறைந்துள்ள அவரது இருதயத்தையும் நாம் நம்பவேண்டும். (28)

விசுவாசிப்பதற்குப் போதுமான சான்றுகளைக் கொடுத்திருக்கும் தேவன், நம்பிக்கையின்மைக்கான சாக்குப்போக்குகள் அனைத்தையும் ஒருபோதும் நீக்கமாட்டார். தங்களுடைய சந்தேகங்களைத் தொங்க விடுவதற்குக் கொக்கிகளைத் தேடும் அனைவரும் அவைகளைக் காண்பார்கள். ஒவ்வொரு மறுப்பும் நீக்கப்படும்வரை, சந்தேகத்திற்கு இனி இடமில்லையென்னும்வரை, தேவனுடைய வார்த்தையை ஏற்று, அதற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் ஒருபோதும் ஒளியினிடத்திற்கு வரமாட்டார்கள். (29)

தேவன்மீதுள்ள அவநம்பிக்கை, அவருடன் பகையாக இருக்கும் புதுப்பிக்கப்படாத இருதயத்தில் இயல்பாக உண்டாகும் வேண்டாத வளர்ச்சியாகும். ஆனால் விசுவாசம் என்பது பரிசுத்த ஆவியினால் தூண்டப்பட்டு, இருதயத்தில் வைத்துப் போற்றப்படும்போது மட்டுமே செழிக்கிறது. தீர்மானமான முயற்சி இல்லாமல், எந்த மனிதனாலும் விசுவாசத்தில்

பலப்படவே முடியாது. நம்பிக்கையின்மை அதற்குத் தைரியமூட்டும்போது பலப்படுகிறது. மனிதர்கள் அவர்களுடைய விசுவாசத்தைத் தாங்கும்படி தேவன் கொடுத்திருக்கும் சான்றுகளின்மீது வாழாமல், கேள்விகளுக்கும் அற்பமான மறுப்புகளுக்கும் தங்களை அனுமதிக்கும்போது, அவர்களது சந்தேகங்கள் தொடர்ந்து அதிகமாக உறுதியடைவதைக் காண்பார்கள்! (30)

ஆனால் தேவனுடைய வார்த்தைகளில் சந்தேகம்கொண்டு, அவரது கிருபையைப்பற்றிய வாக்குறுதியின்மீது அவநம்பிக்கை கொள்ளுகிறவர்கள் தேவனை அவமதிக்கின்றனர். அவர்களுடைய செல்வாக்கு மற்றவர்களைக் கிறிஸ்துவிடம் இழுப்பதற்குப்பதிலாக, அவரைவிட்டு விலகிச்செல்ல நடத்துகிறது. அவர்கள் தங்களின் இருண்ட கிளைகளை விசாலமாகப் பரப்பி, இலைகள் மிகுந்து, மற்ற செடிகளுக்கான சூரிய ஒளியை தடுத்து நிறுத்தி, மிகக் குளிரான நிழலின் கீழ் இலைகள் தொங்கிச் சாகும்படிச் செய்யக் காரணமாக உள்ள கனிகொடாத மரங்களாக உள்ளனர். இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கைச் செயல்கள் ஒருபோதும் முடிவடையாத அவர்களுக்கு எதிரான சாட்சியாகக் காணப்படும். தவறாமல் அறுவடையைத் தருகின்ற, சந்தேகமான, கடவுள் இல்லை என்னும் கொள்கைகளை அவர்கள் விதைக்கின்றனர். (31)

சந்தேகத்திலிருந்து விடுதலை அடையவேண்டும் என்று நேர்மையாக விரும்புபவர்கள், பின்தொடரக்கூடிய ஒரு பாதை உள்ளது. அவர்களுக்குப் புரியாதவைகளைப்பற்றிக் கேள்விகள் கேட்டுக்கொண்டும் அற்பமான மறுப்புகளைக் கூறிக்கொண்டும் இருப்பதற்குப்பதிலாக, அவர்களின்மீது ஏற்கனவே பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஒளிக்கு அவர்கள் கீழ்ப்படியட்டும். அப்பொழுது அவர்கள் அதிகமான ஒளியைப் பெறுவார்கள். அவர்களது புரிந்துகொள்ளுதலுக்குத் தெளிவாக்கப்பட்ட ஒவ்வொரு கடமையையும் அவர்கள் செய்வார்களாக. அப்பொழுது அவர்கள், சந்தேகத்திற்குள்ளாக இருப்பவைகளைப் புரிந்துகொள்ளவும் செயலாற்றவும் தகுதிப்படுத்தப்படுவார்கள். (32)

சத்தியத்தைப் போல் நெருக்கமாகத் தோன்றும் போலியான ஒன்றை நமக்கு முன்வைக்க சாத்தானால் முடியும். சத்தியத்தினால் கோரப்பட்ட சுயமறுப்பையும் தியாகத்தையும் தவிர்க்க விரும்புவதினால், வஞ்சிக்கப்பட விரும்புபவர்கள் மட்டுமே வஞ்சிக்கப்பட்டுப்போவார்கள். ஆனால் என்ன விலை கொடுத்தாகிலும் சத்தியத்தை அறிந்துகொள்ளவேண்டும் என்று நேர்மையாக விரும்பும் ஒரு ஆத்துமாவைக்கூடத் தன் வல்லமையின் அடியில் கட்டுப்படுத்தி வைக்கச் சாத்தானால் முடியாது. கிறிஸ்துவே

சத்தியமானவர். “உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி”–யோவான் 1:9. மனிதர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த தேவ ஆவியானவர் அனுப்பப்பட்டிருக்கிறார். “தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்” –மத்தேயு 7:7. “அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, ... என்று அறிந்துகொள்ளுவான்”–யோவான் 7:17. (33)

கிறிஸ்துவின் அடியார்கள் தங்களுக்கு எதிராக, சாத்தானும் அவனது சேனைகளும் அமைத்துக்கொண்டிருக்கின்ற திட்டங்களைப்பற்றிக் குறைவாகவே அறிந்திருக்கின்றனர். ஆனால் வானங்களுக்கு மேலாக அமர்ந்திருக்கும் ஒருவர், அவரது ஆழ்ந்த திட்டங்களை நிறைவேற்ற, இந்த உபாயங்களனைத்தையும் தமது அதிகாரத்தால் நீக்குவார். சோதனை என்னும் பயங்கரமான நெருப்பின்கீழாக, கர்த்தர் அவரது மக்களை அனுமதிக்கிறார். அவர்களது துன்பங்களிலும் துயரங்களிலும் அவர் மகிழ்ச்சி அடைவதற்காக அல்லாமல், அது அவர்களது இறுதி வெற்றிக்கு முக்கியமான செய்முறை என்பதனாலேயே அதனை அனுமதிக்கிறார். அந்தச் சோதனையின் முக்கியமான நோக்கமே, ஆசைகாட்டி சிக்கவைக்கும் கவர்ச்சியைத் தடுத்து, அவர்களை ஆயத்தப்படுத்துவது என்பது மட்டுமே ஆகும். (34)

தேவனுடைய மக்கள் தாழ்மையுடனும், நொறுங்குண்ட இருதயங் களுடனும் பாவ அறிக்கை செய்து, விசுவாசத்தினால் அவரது வாக்குத் தத்தங்களின்மீது உரிமைபாராட்ட விரும்புவார்களானால், தேவனுடைய வேலைக்கு இடையூறு செய்யவோ அல்லது அவரது பிரசன்னத்தை அவரது மக்களிடமிருந்து மூடித் தடுக்கவோ துன்மார்க்கர்களாலும் பிசாசினாலும் முடியாது. பகிரங்கமானதோ அல்லது இரகசியமானதோ ஒவ்வொரு சோதனையும் ஒவ்வொரு எதிரிடையான செல்வாக்கும் வெற்றிகரமாகத் தடுக்கப்படலாம். “பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்”–சகரியா 4:6. (35)

“கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள்வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமை செய்கிறவன் யார்?”–1 பேதுரு 3:12,13. விலைமதிப்புமிக்க வெகுமானங் களினால் பிலேயாம் கவரப்பட்டு, இஸ்ரவேலுக்கு எதிராக பிரார்த்தனை செய்தபோது, கர்த்தருக்கு பலிகளைச் செலுத்தி இஸ்ரவேலின்மீது சாபத்தைக் கொண்டுவர முயன்றபோது, அவன் கூறிட விரும்பிய சாபத்தை

கூறவிடாமல் தேவனுடைய ஆவியானவர் அவனைத் தடுத்தார். பிலேயாம்: "தேவன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி? நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக" என்றான். மறுபடியும் பலிசெலுத்தப்பட்டபோது, தெய்வ பக்தியற்ற அந்தத் தீர்க்கதரிசி :"இதோ, ஆசீர்வதிக்கக் கட்டளைபெற்றேன்; அவர் ஆசீர்வதிக்கிறார், அதை நான் திருப்பக்கூடாது. அவர் யாக்கோபிலே அக்கிரமத்தைக் காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை; அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார்; ராஜாவின் ஜயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது. யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை; தேவன் என்னென்ன செய்தார் என்று கொஞ்சக்காலத்திலே யாக்கோபையும் இஸ்ரவேலையும் குறித்துச் சொல்லப்படும்"—எண். 23:8,10,20,21,23. இருந்தபோதிலும் மறுபடியும் மூன்றாவது தடவையாக பலிபீடங்கள் கட்டப்பட்டன. மறுபடியும் ஒரு சாபத்தை வரவழைக்க பிலேயாம் பேசினான். ஆனால் விருப்பமற்ற அந்தத் தீர்க்கதரிசியின் உதட்டிலிருந்து, தேவனுடைய ஆவியானவர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் செழுமையை அறிவித்து அவர்களது பகைஞரின் பொய்யையும் கெட்ட எண்ணங்களையும் கண்டித்தார். "உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், உங்களைச் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன்" (எண். 24:9) என்றான். (36)

இந்தச் சமயத்தில் இஸ்ரவேல் மக்கள் தேவனுக்குப் பக்திவிசுவாசமிக்கவர்களாக இருந்தனர். அவர்கள் அவரது கற்பனைக்குத் தொடர்ந்து கீழ்ப்படிந்தவரை, பூமியிலிருந்த எந்த வல்லமைகளினாலும் அந்தகாரத்திலிருந்த எந்த வல்லமைகளினாலும் அவர்களை மேற்கொள்ளவே முடியவில்லை. எனவே தேவனுடைய ஜனங்களுக்கு எதிராகக் கூறும்படி பிலேயாம் அனுமதிக்கப்படாத சாபத்தை, அவர்கள்மீது கொண்டுவருவதில் பாவம் செய்யும் கெட்ட வழியில் அவர்களை வசீகரித்ததின் மூலமாக வெற்றியடைந்தான். தேவனுடைய பிரமாணங்களை அவர்கள் மீறினபோது, அவர்கள் அவரைவிட்டு தாங்களாகவே பிரிந்துசென்று, அழிப்பவனின் வல்லமையை உணரும்படியாக விட்டுவிடப்பட்டனர். (37)

கிறிஸ்துவில் தங்கியிருக்கும் பலவீனமான ஆத்துமாவுங்கூட, அந்தகாரச் சேனைக்குச் சமமாக இருப்பதைவிடவும் மேலானது. அவன் தானாகவே வெளிப்படையாகத் தன்னை வெளிக்காட்டினால், அவனை நேராகச் சந்தித்து தடுக்கப்படுவான் என்வதை சாத்தான் நன்கு அறிந்திருக்கிறான். எனவேதான், அவனது கோட்டைக்குள் நுழைய முயலும் அனைவரையும்

அழிக்கும் ஆயத்தத்துடன் தனது படைகளோடு பதுங்கி இருந்து, சிலுவையின் வீரர்களை அவர்களது பாதுகாப்பான அரணுக்குள்ளிருந்து வெளியே இழுக்க வகைதேடுகிறான். பணிவுடன் தேவனைச் சார்ந்திருந்து, அவரது பிரமாணங்கள் அனைத்திற்கும் கீழ்ப்படிவதினால் மட்டுமே நாம் பாதுகாப்பாக இருக்கமுடியும். ஒரு நாளோ அல்லது ஒருமணி நேரமோ ஜெபமின்றி ஒருவராலும் பாதுகாப்பாக இருக்கமுடியாது. மிக முக்கியமாக தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளும் ஞானத்திற்காகக் கெஞ்சி மன்றாடவேண்டும். அந்த சோதனைக்காரனின் தந்திரங்களும், அவனை வெற்றிகரமாகத் தடுக்கக்கூடிய உபாயங்களும் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. வேத வாக்கியங்களை மேற்கோள் காட்டுவதில் அவன் நிபுணன். நம்மை இடறிவிழச் செய்ய வேதவாசகப் பகுதியில் தனது சுயமான விளக்கங்களை வைப்பதில் சாத்தான் மிகுந்த சாமர்த்தியசாலியாக இருக்கிறான். தேவனைச் சார்ந்திருக்கிறோம் என்னும் நமது பார்வையை நாம் ஒருபோதும் இழந்துவிடாமல், தாழ்மையான இருதயத்துடன் வேதாகமத்தை வாசிக்கவேண்டும். சாத்தானின் உபாயங்களில் இருந்து நம்மை தொடர்ச்சியாக காவல்செய்யும் அதே நேரத்தில், எங்களை சோதனைக்குட்படப்பண்ணாதிரும் என்றும் விசுவாசத்தோடு தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். (38) ★

# 33

# மரணமே...! உன் ஜெயம் எங்கே?

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 531–550)**

மனித வரலாற்றின் ஆரம்பகாலத்திலிருந்தே சாத்தான் நமது இனத்தை வஞ்சிக்கும் அவனது முயற்சியைத் தொடங்கினான். பரலோகத்தில் கலகத்தைத் தூண்டிய—தேவ அரசாங்கத்திற்கு எதிரான அவனது போரில், புமியின் குடிகளையும், தன்னுடன் சேர்த்துக்கொள்ள விரும்பினான். தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படிந்த ஆதாமும் ஏவாளும் பூரணமான மகிழ்ச்சியுள்ளவர்களாக இருந்தனர். இந்த உண்மை, தேவனுடைய கற்பனை ஒடுக்கும் தன்மை உடையது, அவரது படைப்புக்களின் நன்மைக்கு எதிரானது என்று சாத்தான் பரலோகத்தில் வற்புறுத்திக்கொண்டிருந்த அவனுடைய வாதத்திற்கு எதிரான தொடர் சாட்சியாக இருந்தது. அதற்கும் மேலாக, பாவமில்லாத அந்தத் தம்பதிகளுக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருந்த அந்த அழகிய வீட்டை அவன் பார்த்தபோது, அவனது பொறாமை அதிகரித்தது. அவர்களைப் பாவத்தில் விழச்செய்து, தேவனிடமிருந்து பிரித்து, தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதின்மூலம் இந்த உலகத்தின் உடைமையை ஆதாயப்படுத்தி, உன்னதமானவருக்கு எதிராக, பூமியில் தனது ஆளுகையை அமைக்கலாம் என்று அவன் தீர்மானித்தான். (1)

சாத்தான் தன்னை அவனது உண்மையான சுபாவத்தில் வெளிக்காட்டியிருந்தால் அப்பொழுதே எதிர்க்கப்பட்டிருந்திருப்பான். ஏனெனில் அபாயகரமான இந்த எதிரியைப்பற்றி ஆதாமும் ஏவாளும் ஏற்கனவே எச்சரிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவனது நோக்கத்தை மிகத்திறமையாக நிறைவேற்றுவதற்காக, தன்னை மறைத்துக்கொண்டு, இருளில் செயலாற்றினான். அதற்காக கவர்ச்சியான சர்ப்பத்தைத் தனது

கருவியாக ஏற்படுத்திக்கொண்டு, அவன் ஏவாளிடம் பேசினான். "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ" (ஆதி. 3:1) என்றான். சோதனைக்காரனுடன் வாதம்செய்வதில் ஈடுபடுவதை ஏவாள் தவிர்த்திருந்தால், அவள் பாதுகாப்பாக இருந்திருப்பாள். ஆனால் அவளோ அவனுக்குப் பதிலளித்துப் பேசமுயன்றதால், அவனது தந்திரத்திற்குப் பலியாக விழுந்தாள். இப்பொழுதும் அநேகர் இவ்விதமாகத்தான் மேற்கொள்ளப்படுகின்றனர். தெய்வீகக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக அவர்கள் தேவனின் கோரிக்கைகளின்மீது சந்தேகம்கொண்டு, வாதம்செய்து, சாத்தானின் மூடிமறைக்கப்பட்ட கருவிகளாக இருக்கும் மனித தத்துவ விளக்கங்களை ஒப்புக்கொள்ளுகின்றனர். (2)

"ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது"–ஆதி. 3:2–5. இதுவரை இருந்ததைவிட அவர்கள் பெரும் ஞானத்தையும் ஒரு மேலான வாழ்வுநிலையை அடையும் தகுதியையும் அடைந்து, தேவனைப் போலாவார்கள் என்று அவன் அறிவித்தான். ஏவாள் சோதனைக்கு இணங்கினாள். அவளது செல்வாக்கின் மூலமாக ஆதாமும் பாவத்திற்குள் நடத்தப்பட்டான். தேவன் கூறியது அந்த அர்த்தத்தில் இல்லை என்ற சர்ப்பத்தின் வார்த்தைகளை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். தேவனுடைய கற்பனையை மீறுவதின் மூலமாக, பெரும் ஞானத்தையும் உயர்வான நிலையையும் அடையக்கூடிய அவர்களது சுயாதீனத்தை தேவன் கட்டுப்படுத்துகிறார் என்று அவர்கள் கற்பனை செய்து, தங்களுடைய சிருஷ்டிகரின்மீது அவநம்பிக்கை கொண்டனர். (3)

ஆனால் "அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" என்ற வார்த்தைகளின் பொருளைப்பற்றி ஆதாம் அவனது பாவத்திற்குப்பின் கண்டது என்ன? அவர்களை நம்பும்படி சாத்தான் நடத்தியிருந்த அர்த்தத்தை—அதாவது ஒரு மேலான வாழ்வுநிலையைத் தொடங்கவேண்டி வந்ததை அவன் கண்டானா? அவ்விதமாக நிழ்ந்திருந்தால், மீறுதலினால் பெரும் நன்மை ஆதாயமாகியிருக்கும். சாத்தான் மனித இனத்திற்கு நன்மை செய்பவன் என்பதும் மெய்ப்பிக்கப்பட்டிருந்திருக்கும்.

ஆனால் தெய்வீக வார்த்தையின் அர்த்தம் இதுதான் என்பதை ஆதாம் காணவில்லை. நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்பதை ஆதாம் காணவில்லை. அவனது பாவத்திற்குரிய ஒரு தண்டனையாக, அவன் எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டானோ அதற்குத் திரும்பவேண்டும் என்று தேவன் அறிவித்தார். "உங்கள் கண்கள் திறக்கப்படும்" என்ற சாத்தானின் வார்த்தைகள் உண்மை என்பது இந்த அர்த்தத்தில் மட்டும் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது. ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் செயல்பட்டபோது, அவர்களது தவறுகளை அறிந்து கொள்ளும்படி, அவர்களது கண்கள் திறக்கப்பட்டன. தீமையை அவர்கள் அறிந்துகொண்டனர். மிறுதலின் கசப்புமிக்க கனியை அவர்கள் ருசித்தனர். (4)

நித்திய ஜீவனைத் தரக்கூடிய ஜீவ விருட்சம் ஏதேன் தோட்டத்தின் நடுவில் வளர்ந்திருந்தது. ஆதாம் தேவனுக்குக் கீழ்ப்படிபவனாக இருந்திருந்தால், இந்த மரத்தை அடையும் வழியைத் தாராளமாக அடைந்து என்றென்றைக்கும் வாழ்ந்திருந்திருப்பான். ஆனால், அவன் பாவம்செய்தபோது, ஜீவவிருட்சத்தில் பங்கு பெறுவதிலிருந்து அவன் தடுக்கப்பட்டு, மரணத்திற்குக் கீழ்ப்பட்டவனானான். "நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத்திரும்புவாய்" என்னும் தெய்வீக வாசகம், ஜீவன் முற்றிலுமாக இல்லாமல் போவதையே சுட்டிக்காட்டுகிறது. (5)

கீழ்ப்படிதல் என்னும் நிபந்தனையின்மீது மனிதனுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த அழியாமை, மீறுதலின் காரணமாக மறுக்கப்பட்டது. தன்னிடத்தில் இல்லாததை, ஆதாமினால் அவனது பின்சந்ததியினருக்கு மாற்றம் செய்து கொடுக்கமுடியவில்லை. தேவன் அவருடைய குமாரனின் தியாகபலியினால், அவர்கள் அடைந்துகொள்ளும் சமீபத்திற்கு அழியாமையைக் கொண்டுவந்திருக்காவிட்டால், விழுந்துபோன இனத்திற்கு நம்பிக்கை இருந்திருக்கமுடியாது. "எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும்"—ரோமர் 5:12. "ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்"—2 தீமோத்தேயு 1:10. இயேசு கிறிஸ்து ஒருவரின் மூலமாக மட்டுமே அழியாமையை அடையமுடியும். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை"—யோவான் 3:36 என்று இயேசு பெருமான் கூறினார். விலையேறப்பட்ட இந்த ஆசீர்வாதத்தை, அதின் நிபந்தனைக்கு இணங்கி நடக்கும் ஒவ்வொரு மனிதரும் உடைமையாக பெற்றுக்கொள்ளலாம். "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்"—ரோமர் 2:7. (6)

கீழ்ப்படியாமையில் நித்திய ஜீவனை ஆதாமுக்கு வாக்குத்தத்தம் செய்த ஒரே ஒருவன்—பெரும் வஞ்சகன்—சாத்தான் மட்டும்தான்! நீங்கள் நிச்சமாகவே சாவதில்லை என்று ஏதேன் தோட்டத்தில் ஏவாளுக்கு சர்ப்பத்தின் மூலமாக சாத்தான் கொடுத்த போலியான வாக்குத்தத்தமே ஆத்துமாவின் அழியாமையைப் பற்றி இதுவரை பேசப்பட்டதில் முதல் மதப் பிரசங்கமான உள்ளது. அப்படியிருந்தும், சாத்தானின் தனிப்பட்ட அதிகாரத்தைச் சார்ந்திருக்கும் இந்த அறிக்கை, கிறிஸ்தவ மேடைகளிலிருந்து எதிலொலித்து, நமது முதல் பெற்றோர்கள் அதை ஏற்றுக்கொண்ட அதேவிதமாக, மனித இனத்தின் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. “பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்” (எசே. 18:20) என்னும் அறிவிப்பு, பாவம் செய்கிற ஆத்துமா சாகாமல் நித்தியகாலமான வாழும் என்று (தவறாக) எண்ணும் விதத்தில் பொருட்படச் செய்யப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளாமல், சாத்தானின் வார்த்தைகளில் சந்தேகம் கொள்ளாமல் இருக்கும்படி, மனிதர்களை நடத்தும் மாறுபட்ட சித்தப்பிரமையைப் பற்றி நம்மால் ஆச்சரியப்படாமல் இருக்கமுடியாது. (7)

மனிதனின் விழுகைக்குப்பின், அவனுக்கு ஜீவ விருட்சத்தை அடையும் வழி அனுமதிக்கப்பட்டிருந்தால், அவனால் நித்தியகாலமாக வாழ்ந்திருக்க முடிந்து, பாவம் அழியாமை உள்ளதாகியிருந்திருக்கும். ஆனால் ஜீவ விருட்சத்திற்குச் செல்லும்பாதை கேரூபீன்களினாலும் (ஆதி. 3:24) வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப்பட்டயத்தினாலும் காவல் செய்யப்பட்டது. ஆதாமின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவன்கூட அந்தத் தடையைக் கடந்துசென்று, ஜீவனைத் தருகிற அந்தக் கனியில் பங்குபெற அனுமதிக்கப்படவில்லை. எனவேதான் அழியாமையை உடைய ஒரு பாவிகூட இன்று இல்லை. (8)

ஜலப்பிரளயத்திற்கு சற்றுமுன், ஜீவ விருட்சத்தையுடைய ஏதேன் தோட்டம் பரதீசிற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. ()

ஆனால் விழுகைக்குப்பின், அழியாமை இயற்கையானது என்னும் நம்பிக்கையை மனிதனுக்குள் பதியச்செய்ய விசேஷமாக முயற்சி செய்யும்படி சாத்தான் அவனது தூதர்களுக்குக் கட்டளை இட்டான். இந்தத் தவறை ஏற்றுக்கொள்ளும்படி மக்களைத் தூண்டியபின், பாவி நித்திய காலமாக துன்பத்தில் வாழுவான் என்று முடிவு செய்யும்படி அத்தீயதூதர்கள் அவர்களை நடத்தவேண்டும். இப்பொழுது அந்தகாரப்பிரபு அவனது பிரதிநிதிகள் மூலமாக செயலாற்றி, தேவனை, ஒரு பழிவாங்கும் கொடுங்கோலனாகவும், அவருக்குப் பிடித்தமில்லாத அனைவரையும் நரகத்திற்குள் மூழ்கடித்து, எப்பொழுதும் அவரது கோபத்தை உணரும்படிச்

செய்கிறவர் என்றும் அவர்கள் சொல்லிமுடியாத வேதனையில் பாடுபட்டு, நித்திய அக்கினியின் ஜுவாலையில் நெளிந்துகொண்டிருக்கும்போது, அவர்களுடைய சிருஷ்டிகர் திருப்தியுடன் அவர்களை நோக்கிப் பார்க்கிறார் என்றும் அறிவிக்கிறான். (9)

இவ்விதமாக, மனித இனத்தின் சிருஷ்டிகரும் நன்மை செய்கிறவரின்மீது தலைமைப்பிசாசானவன் தனது சொந்த சுபாவங்களைச் சுமத்துகிறான். கொடுமை என்பது சாத்தானின் தன்மையாகும். தேவன் அன்பாய் இருக்கிறார். முதல்பெரும் கலகக்காரனால் பாவம் இந்த பூவுலகில் கொண்டுவரப்படும்வரை, அவர் படைத்த அனைத்தும் தூய்மையாகவும் பரிசுத்தமாகவும் வசீகரமானதாகவும் இருந்தன. மனிதனைப் பாவம் செய்யும்படி சோதிக்கிறவன் சாத்தானே. அதன்பின், கூடுமானால் அவனை அழிக்கிறான். அவனது இரையைப்பற்றி அவன் நிச்சயமடைந்தபின், அவன் உண்டுபண்ணின அழிவைப்பறறி அவன் வெற்றிச்சிரிப்பு சிரிக்கிறான். அனுமதிக்கப்பட்டால் அவன் மனித இனம் முழுவதையும் அவனுடைய வலைக்குள் இழுத்துச் செல்லுவான். தெய்வீக வல்லமை குறுக்கிடாமல் இருந்திருந்தால், ஆதாமின் ஒரு மகனும் மகளும் கூட தப்பியிருக்கமாட்டார்கள். (10)

நமது முதல் பெற்றோர் சிருஷ்டிகரின்மீது கொண்டிருந்த நம்பிக்கையை அசைத்து, அவரது அரசாங்கத்தில் இருந்த ஞானத்தையும் அவரது கற்பனைகளின் நீதியையும் சந்தேகிக்கும்படி நடத்தி, அவர்களை மேற்கொண்டதைப்போல், அவன் இன்றும் மனிதர்களை மேற்கொள்ளுவதற்கு வகை தேடிக்கொண்டிருக்கிறான். தங்களுக்குச் சொந்தமான அபவாதங்களையும் கலகத்தையும் நியாயப்படுத்த சாத்தானும் அவனது இரகசிய தூதர்களும் அவர்களைவிட தேவன் மோசமானவர் என்பதாக எடுத்துக்காட்டுகின்றனர். அநீதியான ஒரு ஆளுநருக்குக் கீழ்ப்படிய மறுத்ததின் காரணமாகத்தான் அவன் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டானென்றும், பெரிய அளவில் தவறு செய்தவராக தேவனைத் தோன்றச்செய்யவும் , பெரும் வஞ்சகன் தனது பயங்கரமான கொடூரமிக்க சுபாவத்தை நமது பரமபிதாவின்மீது சுமத்த முயலுகிறான். யேகோவாவின் கடினமான கட்டளைகளினால் திணிக்கப்பட்டிருக்கும் அடிமைத்தனத்தை, அவனது மென்மையான ஆட்சியின்கீழ் மனிதர்கள் அனுபவிக்கக்கூடிய சுயாதீனத்துடன், உலகத்திற்குமுன் ஒப்பிட்டுக்காட்டுகிறான். இவ்வாறாக, தேவனுடைய உறவிலிருந்து ஆத்துமாக்களை ஆசைகாட்டிப் பிடிப்பதில் அவன் வெற்றியடைகிறான். (11)

அன்பு, இரக்கம் ஆகியவைகளின் ஒவ்வொரு உணர்ச்சிக்கும், நியாயம் என்று தோன்றும் நமது புலன் உணர்வுகட்குங்கூட, ஒரு

குறுகிய கால உலக வாழ்க்கையில் செய்த பாவத்திற்காக, உயிருடன் இருக்கும்வரை அவர்கள் சித்திரவதை அனுபவித்தாகவேண்டும் என்பதும், மரித்த துன்மார்க்கர் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் நித்தியகாலமாக வேதனை அடைந்தாக வேண்டும் என்பதும் தேவனின் குணத்திற்கு மாறான, எப்படிப்பட்ட அவல நிலையாக உள்ளது? அப்படியிருந்தும் இந்தக் கோட்பாடு பரவலாகப் போதிக்கப்பட்டும், கிறிஸ்தவ உலகின் பல பிரிவுகளில் பதிக்கப்பட்டும் உள்ளது. இறையியல் பயின்ற ஒரு அறிஞர்: "நரகாக்கினையின் வேதனை பரிசுத்தவான்களின் மகிழ்ச்சியை என்றென்றைக்கும் உயர்த்தும். தங்களைப் போன்ற தன்மையும் அதேபோன்ற சூழ்நிலையிலும் பிறந்த மற்றவர்கள், அப்படிப்பட்ட துன்பத்திற்குள் மூழ்கடிக்கப்பட்டதையும், தாங்கள் வேறுபடுத்தப்பட்டதையும் காணும்போது, எத்தனை மகிழ்ச்சியோடு இருக்கிறோம் என்பதை உணருவார்கள்." வேறொருவர்: "கோபாக்கினை பாத்திரங்களின்மீது, தேவகோபமாகிய நித்திய தண்டனை நடைமுறைப்படுத்தப்படும்போது, இந்தப் பரிதாபமான ஜீவன்களோடு பங்கடையாமல், ஆமென், அல்லேலூயா! கர்த்தரைத் துதியுங்கள்! என்று கூறும் கிருபாபாத்திரங்களின் பார்வையில் அவர்களது வாதையின் புகை என்றென்றுமாக எழுந்து கொண்டிருக்கும்" என்கிறார். (12)

தேவனுடைய வார்த்தையின் எந்தப்பக்கங்களில் இப்படிப்பட்ட போதனைகள் காணப்படுகிறது? பரலோகத்திலுள்ள மீட்கப்பட்டவர்கள் இரக்கமும், மன உருக்கமும், பொதுவான மானிட உணர்வுகளையும் இழந்திருப்பார்களா? சுக துக்கங்களைப் பொருட்படுத்தாதவர்களின் வேற்றுமையின்மைக்கும் காட்டுமிராண்டித்தனத்தின் கொடூரங்களுக்கும் இக்குணங்கள் மாற்றம் செய்யப்படவேண்டியவைகளா? அல்ல, அப்படி அல்ல, தேவனுடைய புத்தகத்தின் போதனை அப்படிப்பட்டதேயல்ல. மேலே கொடுக்கப்பட்ட மேற்கோள்களில் வெளிக்காட்டப்படும் காட்சிகளை முன்வைப்பவர்கள், சமுதாயத்திலுள்ள மிகவும் கற்றவர்களாகவும், நேர்மைமிக்கவர்களாகவும் கூட இருக்கலாம். ஆனால் அவர்கள் சாத்தானின் தந்திரங்களினால் மாயத் தோற்றமுடையவர்களாகவே உள்ளனர். வேதவாக்கியங்களில் உள்ள கடுமையான உணர்த்துதல்களைத் தப்பார்த்தம் கொள்ளும்படி அவன் அவர்களை நடத்தி, சிருஷ்டிகளுக்குச் சொந்தமல்லாத, அவனுக்குச் சொந்தமான, கசப்பும், அபவாதமுமிக்க வர்ணத்தை அந்த மொழிக்குக் கொடுக்கிறான். "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல்

வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறார்" –எசே. 33:11. (13)

முடிவில்லாத சித்திரவதைகளைக் காண்பதில் அவர் மகிழ்கிறார் என்றும், அவர் நரக அக்கினி ஜுவாலையில் பிடித்து வைத்திருக்கும் அவரது படைப்புகளின் கதறல்களையும், கூக்குரல்களையும் சாபங்களின் பாடுகளையும் பார்த்து மகிழ்கிறார் என்றும் நாம் ஒத்துக்கொள்ளுவோமானால், அதனால் தேவனுக்கு உண்டாகக்கூடிய நன்மை என்ன? முடிவில்லாத அன்புள்ளவர்களின் செவிகளில் வெறுப்பூட்டும் சத்தங்கள் இசையாக இருக்குமா? துன்மார்க்கரின்மீது செலுத்தப்படும் பாடுகள், பிரபஞ்சத்தின் சமாதானத்திற்கும் ஒழுக்கத்திற்கும் கேடு விளைவிக்கும் பாவ தீமையின் மீதுள்ள தேவனுடைய வெறுப்பைக் காட்டும் என்று கூறப்படுகிறது. ஆ, எத்தனை பயங்கரமான தேவதூஷணம்! பாவத்தின்மீதுள்ள தேவனின் வெறுப்புதான், அவர் பாவத்தை என்றும் நிலையாக வைத்திருப்பதற்குக் காரணம் என்பதுபோலத் தோன்றுகிறது. ஏனெனில் இப்படிப்பட்ட இறையியல் வல்லுனர்களின் போதனைகள், இரக்கம் என்கிற நம்பிக்கையற்ற தொடர் சித்திரவதை, துர்ப்பாக்கியமான பலியாட்களை வேதனைப்படுத்துகிறது. அவர்கள் தங்களுடைய கடுங்கோபத்தை சபிப்பதிலும் தேவ தூஷணம் கூறுவதிலுமாக ஊற்றும்போது, அவர்கள் என்றென்றைக்குமாக, அவர்களது குற்றத்தின் பாரத்தை அதிகரிக்கச்செய்கிறார்கள். இவ்விதமாகப் பாவத்தை நித்தியமாக முடிவில்லாத யுகங்களின் ஊடாக அதிகரிக்கச் செய்வதால் தேவனுடைய மகிமை அதிகரிப்பதில்லை. (14)

நித்தியகால வேதனை என்னும் மதப்புரட்டினால் உண்டுபண்ணப்பட்டுள்ள தீமையின் தன்மையை அனுமானிப்பது மனித மனதின் வல்லமைக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. நிறைவான அன்பு, நன்மை, மன உருக்கத்தின் பெருக்கம் அகியவைகளாக உள்ள வேதாகமக் கோட்பாடு, மூடநம்பிக்கை திகில் ஆகிய ஆடைகளினால் போர்த்தப்பட்டு இருளாக்கப்பட்டுள்ளது. தேவனுடைய சுபாவத்தின்மீது சாத்தான் எப்படிப்பட்ட தவறான வர்ணம் பூசியிருக்கிறான் என்பதை பார்க்கும்போது, இரக்கமிக்க நமது சிருஷ்டிகரை ஏன் பயப்படுத்துகிறவராகவும், பயங்கரமானவராகவும், வெறுக்கத்தக்கவராகவுங்கூட பார்க்கிறார்கள் என்பதில் நாம் ஆச்சரியப்படமுடியுமா? பிரசங்க மேடைகளிலிருந்து தேவனைப்பற்றித் திடுக்கிடக்கூடிய நோக்குகளில் செய்யப்பட்ட போதனைகள், ஆயிரக்கணக்கானவர்களை, பல்லாயிரக்கணக்கானவர்களை, சந்தேகவாதிகளாகவும் கடவுள் இல்லை என்பவர்களாகவும் மாறச்செய்துள்ளது. (15)

நித்திய வேதனை என்னும் தவறான தத்துவ விளக்கம், பாபிலோனின் அருவருப்புகளினால் ஏற்படுத்தப்பட்டு, சகல ஜாதிகளையும் குடிக்கும்படி அவள் செய்துள்ள தவறான கோட்பாடுகளில் ஒன்றாகும். (வெளி 14: 8 17:2). இந்த மதப் புரட்டுகளை கிறிஸ்துவின் ஊழியக்காரர்களும் ஒப்புக்கொண்டு, பரிசுத்தமான மேடையிலிருந்து அறிவிப்புச் செய்தாகவேண்டும் என்பது உண்மையில் மனிதப் புத்திக்கு எட்டாத ஒரு மறைபொருளாக உள்ளது. அவர்கள் போலியான ஓய்வுநாளை ரோம சபையிடமிருந்து பெற்றுக்கொண்டதுபோலவே, இதையும் அங்கிருந்தே பெற்றுக்கொண்டனர். பெரிய மனிதர்களாலும், நல்லவர்களாலும் இது போதிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அந்த ஒளி நம்மிடத்திற்கு வந்திருப்பதைப்போல, அவர்களிடத்திற்கு வரவில்லை. அவர்களுடைய காலத்தில் வீசியிருந்த ஒளிக்கு மட்டும் அவர்கள் பொறுப்பானவர்களாக இருந்தனர். நமது காலத்தில் வீசும் ஒளிக்கு நாம் கணக்குக் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். தேவனுடைய வார்த்தையிலுள்ள சாட்சியிலிருந்து திரும்பி, நமது பிதாக்கள் நமக்குப் போதித்தார்கள் என்பதற்காக தவறான கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளுவோமானால், பாபிலோனின் மீது கூறப்பட்டுள்ள தண்டனைக்கு நாமும் உட்படுகிறோம். அவளது அருவருப்பின் மதுவை நாமும் பருகிக்கொண்டிருக்கிறோம். (16)

நித்திய வேதனை என்னும் கோட்பாட்டினால் எதிர்ப்பில் ஈடுபட்டிருக்கும் ஒரு வகுப்பினர், அதற்கு நேர் எதிரான தவறுக்கு விரட்டப்பட்டுள்ளனர். வேதவாக்கியம் தேவனை அன்பும் மன உருக்கமும் மிக்க ஒருவராக எடுத்துக்காட்டுவதை அவர்கள் காண்கின்றனர். எனவே அவரது படைப்புகளை நித்தியகாலமாக எரிந்துகொண்டிருக்கும் நரக அக்கினிக்குள் அவர் அனுப்புவார் என்பதை அவர்களால் நம்பமுடியாது. ஆனால் ஆத்துமா இயற்கையாகவே அழியாமை உடையது என்று பிடித்துக்கொண்டு, அதற்கு வேறு ஒரு மாற்றுவழியையும் காணாமல், மனிதஇனம் முழுவதும் கடைசியாக இரட்சிக்கப்படும் என்று முடிவுசெய்கின்றனர். வேதாகமத்தில் காணப்படும் பயமுறுத்தல்கள், மனிதர்களைக் கீழ்ப்படியச் செய்வதற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும், மற்றபடி அவைகள் எழுத்தின்படி நிறைவேற்றக்கூடியவை அல்ல என்றும் அநேகர் கருதுகின்றனர். இவ்விதமாக பாவியானவன் தேவனுடைய நியமங்களை எண்ணாமல், சுயநலமிக்க இன்பங்களில் வாழ்ந்தாலும், முடிவில் அவருடைய அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கிறான். தேவனுடைய நீதியை புறக்கணித்து, அவருடைய இரக்கத்தின் மீதுள்ள யூகத்தால் வரும் கோட்பாடு, மாம்ச சிந்தையை மகிழ்வித்து, துன்மார்க்கரை அவர்களுடைய அக்கிரமங்களில் துணிகரமாக்குகிறது. (17)

எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள் என்னும் நம்பிக்கை உள்ளவர்கள், தங்கள் ஆத்துமாக்களை அழிக்கும் பிடிவாதமாக கோட்பாட்டைத் தாங்குவதற்காக வேதவாக்கியங்களைத் தங்களுக்கு சாதகமாக பொருள்கொள்கின்றனர் என்பதைக் காட்டும்படி, அவர்களுடைய சொந்த வார்த்தைகளை குறிப்பிடவேண்டிய அவசியம் உள்ளது. விபத்தினால் கொல்லப்பட்ட மதச்சார்பற்ற ஒரு இளைஞனின் இறுதிச்சடங்கில், ஒரு யுனிவர்கலிஸ்ட போதகர் (பிரபஞ்ச முழுவதற்கும் ஒரே தேவன் எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள் என்னும் போதனையை உடைய ஒரு கிறிஸ்தவப்பிரிவின் போதகர்) தாவீதைப்பற்றிய: "தாவீதுராஜா அம்னோன் செத்தபடியினால், அவனுக்காக ... ஆறுதல் அடைந்தபோது" (2 சாமுவேல் 13:39) என்ற வேதவாக்கியத்தை அவரது செய்தியின் வாசகமாகத் தெரிந்துகொண்டார். (18)

"பாவத்துடன் மரிக்கிற, ஒருவேளை குடிபோதையில், குற்றங்களின் சிவப்புக்கறை கழுவப்படாத உடைகளுடன் மரிக்கிற, அல்லது இந்த இளைஞனைப்போல மதத்தை ஒருபோதும் அறிக்கை செய்திராது, அல்லது மதத்தைப்பற்றி அனுபவம் இல்லாது இந்த உலகத்தை விட்டுப் பிரிந்துசெல்லுவர்களின் முடிவு எப்படி இருக்கும் என்று நான் அடிக்கடி விசாரிக்கப்படுகிறேன். வேதவாக்கியங்களில் நாம் திருப்தி உள்ளவர்களாக இருக்கிறோம். பயங்கரமான அந்தப் பிரச்சினைக்கு அவைகளின் பதில் பரிகாரம் செய்யும். அம்னோன் மிகுந்த பாவமுடையவனாக இருந்தான். அவன் மனந்திரும்பவில்லை. மது அருந்தும்படி நிர்பந்திக்கப்பட்டு, போதையில் இருந்தபோது கொலைசெய்யப்பட்டான். தாவீது தேவனுடைய ஒரு தீர்க்கதரிசி. வரப்போகும் உலகில் அம்னோனுக்கு நல்லது நடக்குமோ அல்லது கெட்டது நடக்குமா என்பது அவனுக்கு தெரிந்திருக்கும். அவனுடைய இருதயத்தின் வெளிப்பாடு என்ன?—"தாவீதுராஜா அம்னோன் செத்தபடியினால், அவனுக்காக ... ஆறுதல் அடைந்தபோது அப்சலோமைப் பின்தொடரும் நினைவை விட்டுவிட்டான்." (19)

"இந்த அறிவிப்பிலிருந்து, அனுமானிக்கக்கூடிய நியாயமான முடிவு என்ன? முடிவற்ற அந்தத் துன்பம் அவனது மத நம்பிக்கையின் ஒரு பகுதியாக இல்லாமல் இருப்பதில்லையா?—அப்படித்தான் நாம் கருதுகிறோம். முடிவில் எங்கும் தூய்மையும் சமாதானமும் நிலவும் என்கிற மிகுந்த மகிழ்ச்சியையும் மிகுந்தஞானத்தையும் தாராளத்தையுமுடைய அனுமானத்திற்கு ஆதரவான வெற்றிகரமான வாதத்தை நாம் இங்கு கண்டுபிடிக்கிறோம். ஏன் அப்படி?— ஏனென்றால், அவனதுமகன் சகலவிதமாக சோதனைகளிலிருந்தும் அகற்றப்பட்டு, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு,

பாவத்தின் அழிவிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, போதுமான அளவிற்குப் பரிசுத்தத்தையும் தெளிவையும் அடைந்தபின், உயரே சென்று மகிழ்ச்சியிலிருக்கும் ஆவிகளின் கூட்டத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டான் என்பதை, ஒரு மகிமைமிக்க எதிர்காலத்தை தீர்க்கதரிசனக் கண்ணினால் அவனால் காணமுடிந்தது. இப்போதுள்ள பாவமும் பாடுகளும் நிறைந்த நிலையிலிருந்து நீக்கப்பட்ட அவனுடைய மகன், இருளடைந்த அவனுடைய ஆத்துமாவின்மீது மிக உயர்வான பரிசுத்த ஆவி பொழியும் இடத்திற்கும், பரலோக ஞானத்திற்கும் அழியாத அன்பின் இனிய பரவசத்துக்கும், பரலோக சுதந்திரத்திலிருக்கும் சமுதாயத்தின் இளைப்பாறுதலை அனுபவிக்கும் பரிசுத்த இயல்புக்கு ஆயத்தமாக்கப்படும்படி போயிருக்கிறான் என்பது ஒன்று மட்டும்தான் அவனது ஆறுதலாக இருந்தது. (20)

“பரலோக இரட்சிப்பு, இந்த வாழ்க்கையில் நாம் செய்யும் எதையும் சார்ந்து இல்லை என்பதையும், இப்பொழுது இருதயத்தில் உண்டாகும் மாறுதலிலோ அல்லது நிகழ்கால நம்பிக்கையிலோ அல்லது நிகழ்கால மத சம்பந்தமான அறிக்கையிலோ இல்லை என்பதையும் இந்தக் கருத்துக்களின் வழியாக நாம் நம்பும்படியாக புரிந்துகொள்ளப்படுகிறோம்” என்றார். (21)

“நீங்கள் சாகவே சாவதில்லை” “நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும்” “நீங்கள் நன்மை தீமை அறிந்து, தேவர்களைப்போல் இருப்பீர்கள்” என்றும் ஏதேனில் சர்ப்பம் கூறிய பொய்யை, இவ்விதமாக கிறிஸ்தவ ஊழியக்காரன் உறுதிப்படுத்துகிறான். படுமோசமான பாவிகள்—கொலைகாரன், திருடன், விபசாரக்காரன் ஆகியோருங்கூட மரணத்திற்குப்பின் அழியாமையாகிய பேரின்பத்தின் உயர்நிலைக்குள் பிரவேசிக்க ஆயத்தம் செய்யப்படுவார்கள் என்றும் அவன் அறிவிக்கிறான்!? (22)

வேதவாக்கியங்களைப் புரட்டுபவன் அவனது முடிவுகளை எதிலிருந்து எடுக்கிறான்? தெய்வீக ஏற்பாட்டிற்கு தாவீது ஒப்புக்கொடுத்ததை வெளிக்காட்டும் ஒரு வாக்கியத்திலிருந்து எடுத்துக்காட்டுகிறான். “அம்னோன் செத்தபடியினால், அவனுக்காகத் துக்கித்து ஆறுதல் அடைந்தபோது அப்சலோமைப் பின்தொடரும் நினைவை விட்டுவிட்டான்.” காலத்தினால் அவனது துயரத்தின் வேதனை மென்மையடைந்தபோது, அவனது எண்ணங்கள் இறந்துபோனவனிடத்திலிருந்து தனக்குள்ள நியாயமான தண்டனையின் பயத்தினால் தானாகவே தூரமாகச் சென்றுவிட்ட, உயிருள்ள மகனிடத்திற்குத் திரும்பியது. ஆனால் தகாத பாலுறவில் ஈடுபட்டு வெறித்திருந்த அம்னோன், மரணத்தினால், உடனே பேரின்பத்தின் வாசஸ்தலத்திற்குள், பாவமற்ற தேவதூதர்களின் தோழமைக்காகத்

தூய்மைப்படுத்தப்படவும் ஆயத்தப்படுத்தப்படவும் கொண்டு செல்லப்பட்டான் என்று கருதும்படி இந்த வசனம் காட்டப்பட்டுள்ளது! மாம்ச இருதயத்தை திருப்திப்படுத்தும்—நன்கு பொருந்தக்கூடிய—ஒரு கட்டுக்கதைதான். இது சாத்தானின் சொந்தக் கோட்பாடாக இருக்கிறது! அது அதன் வேலையைப் பயன்தரும் விதத்தில் செய்கிறது. இப்படிப்பட்ட உபதேசத்தினால், தீமை பெருகுகிறது என்பதில் நாம் ஆச்சரியப்படவேண்டுமா? (23)

இந்த ஒரு தவறான ஆசிரியனால் பின்பற்றப்படும் நடவடிக்கை, மற்ற அநேகரையும் படம்பிடித்துக் காட்டுகிறது. முழுமையான உள்ளடக்கத்திலிருந்து, அநேக விஷயங்களில், அவைகளின்மீது வைக்கப்பட்டுள்ள விளக்கத்திற்கு நேர் எதிரான அர்த்தம் காட்டக்கூடிய விதத்தில், வேதவாக்கியங்களின் சில வார்த்தைகள் பிரிக்கப்படுகின்றன. இவ்விதமாக இணைக்கப்பட்ட வாசகப்பகுதிகள், தேவனுடைய வார்த்தையினால் அஸ்திவாரமில்லாத கோட்பாடுகளாக மாற்றப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. குடிவெறியனாயிருந்த அம்னோன் பரலோகத்தில் இருக்கிறான் என்பதற்குச் சாட்சியாக எடுத்துக்காட்டப்படும் ஒரு அனுமானம், வேதவாக்கியத்தின் தெளிவான நிச்சயமான அறிவிப்புடன் நேரடியாக முரண்பட்டுள்ளது. "திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை"–1 கொரி. 6:10. இவ்விதமாகச் சந்தேகப்படுபவர்கள், நம்பிக்கையில்லதவர்கள், கடவுள் இல்லை என்பவர்கள் சத்தியத்தைப் பொய்யாக மாற்றுகிறார்கள். அவர்களுடைய தந்திரத்தினால் திரள் கூட்டமானவர்கள் வஞ்சிக்கப்பட்டு, மாம்சத்திற்குரிய பாதுகாப்பு என்னும் தொட்டிலில் உறங்கும்படியாகத் தாலாட்டப்படுகின்றனர். (24)

உடலும் உயிரும் பிரியும்போது, அனைவரது ஆத்துமாக்களும் நேராகப் பரலோகத்திற்குக் கடந்துசெல்லுகின்றன என்பது உண்மையாக இருந்திருந்தால், நாம் வாழ்வைவிட சாவையே நன்கு விரும்பலாம்! இந்த நம்பிக்கையினால், அநேகர் தங்களுடைய வாழ்க்கையை முடிக்க நடத்தப்படுகின்றனர். துன்பம், குழப்பம், ஏமாற்றங்கள் ஆகியவைகளால் மேற்கொள்ளப்படும்போது, அறுந்துபோகக்கூடிய உயிரென்னும் நூலை அறுத்துக்கொண்டு, நித்தியமான உலகத்தின் பேரின்பத்திற்கு—தூரமாக—உயரே செல்லுவது எளிதான காரியம்போல் காணப்படுகிறது. (25)

தேவனுடைய கற்பனைகளை மீறுபவர்களை அவர் தண்டிப்பார் என்னும் முடிவான சாட்சியை அவரது வார்த்தையில் கொடுத்திருக்கிறார். பாவியின்மீது நியாயத்தீர்ப்பை நடத்தமுடியாத அளவிற்கு அவர் மிக அதிகமான இரக்கமுடையவர் என்று முகஸ்துதி கூறுபவர்கள், கல்வாரிச்

சிலுவையை மட்டும் நோக்கினால் போதும். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதற்கு குறைவற்ற தேவகுமாரனின் மரணம் சாட்சி பகருகிறது. தேவனுடைய கற்பனையை மீறும்போது, நீதியான தெய்வ தண்டனையைப் பெற்றாகவேண்டும் என்பதே! பாவமில்லாத கிறிஸ்து மனிதனுக்காகப் பாவமானார். அவரது இருதயம் உடைக்கப்படும்வரை, அவரது ஜீவன் நசுக்கப்படும்வரை, மீறுதலின் குற்றத்தைத் தாங்கி, அவரது பிதாவின் முகம் அவருக்கு மறைக்கப்பட்டவராக இருந்தார். பாவிகள் மீட்கப்படவேண்டும் என்பதற்காக இந்தத் தியாகபலி அனைத்தும் செயல்படுத்தப்பட்டது. பாவத்தின் தண்டனையிலிருந்து மனிதனை விடுவிப்பது வேறு எந்த வழியிலும் முடியாததாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு கிரயத்தினால் ஏற்படுத்தப்பட்ட பாவநிவாரணத்தில் பங்காளியாவதற்கு மறுக்கின்ற ஒவ்வொரு ஆத்துமாவும், தனது சொந்த சரீரத்தில் மீறுதலின் குற்றத்தையும் தண்டனையையும் சுமந்தாக வேண்டும். (26)

மேலும் யுனிவர்சலிஸ்டுகளின் போதகத்தின்படி பரிசுத்தமும் மகிழ்ச்சியுமிக்க தேவதூதர்களாகப் பரலோகத்தில் வைக்கப்படடுள்ள பக்தி அற்றவர்களையும் மனந்திரும்பாதவர்களையும் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்றும் நாம் ஆலோசிப்போம். (27)

“தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்” வெளி. 21:6. தாகமாயிருப்பவர்களுக்கு மட்டும்தான் இந்த வாக்குத்தத்தம் உள்ளது. வேறு எவருக்கும் இல்லாமல், ஜீவத் தண்ணீர் வேண்டும் என்னும் தங்களுடைய அவசியத்தை உணர்ந்து, மற்றெல்லாப் பொருள்களின் இழப்பினாலும் அதைத் தேடுபவர்களுக்கு மட்டுமே, அது வழங்கப்படும். “ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்”—வெளி. 21:6,7. இங்குங்கூட நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ள, நாம் பாவத்தை ஜெயித்து மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. (28)

“உங்களுக்கு நன்மையுண்டாகும் என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள் … துன்மார்க்கனுக்கு ஐயோ! அவனுக்குக் கேடு உண்டாகும்; அவன் கைகளின் பலன் அவனுக்குக் கிடைக்கும்” (ஏசா. 3:10,11) என்று ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக கர்த்தர் சொல்லுகிறார். “பாவி நூறுதரம் பொல்லாப்பைச்செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன். துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை; அவன்

தேவனுக்கு முன்பாகப் பயப்படாதிருக்கிறபடியால், நிழலைப்போலிருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதுமில்லை" (பிர. 8:12,13) என்று ஞானி சொல்லுகிறான். "உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினைநாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறாயே. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்.... முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்குசெய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும்" (ரோமர் 2:5,6,9)—துன்மார்க்கன் ஆக்கினையை அவன்மேல் குவித்துக்கொள்ளுகிறான் என்று பவுல் சாட்சி பகருகிறார். (29)

"விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே"—எபே. 5:5. "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே"—எபி. 12:14. "ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்"—வெளி. 22:14,15. (30)

தேவன் அவரது சுபாவத்தைப்பற்றியும் பாவத்தின் மீதுள்ள நடவடிக்கையிலுள்ள அவரது முறையைப்பற்றியும் மனிதர்களுக்கு ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். "கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்"—யாத். 34:6,7. "கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்"—சங். 145:20. "அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள்; அறுப்புண்டுபோவதே துன்மார்க்கரின் முடிவு"—சங். 37:38. கலகத்தை ஒடுக்குவதற்காக தெய்வீக அரசாங்கத்தின் வல்லமையும் அதிகாரமும் செயல்படுத்தப்படும். இருந்தபோதிலும்,

தேவகோபத்தின் நீதியின் வெளிக்காட்டல் அனைத்தும், இரக்கமும், நீடிய பொறுமையும், அனுதாபமும் உள்ளவரான அவரது தேவ சுபாவத்திற்குப் பூரணமாகப் பொருந்தக்கூடியதாக இருக்கும். (31)

ஒருவருடைய சித்தத்தை அல்லது நிதானிக்கும் தன்மையை தேவன் வற்புறுத்தவில்லை. அடிமை மனப்பான்மை உள்ள ஒரு கீழ்ப்படிதலில் அவர் மகிழ்ச்சி அடைவதில்லை. அன்பு செலுத்தப்படுவதற்குப் பாத்திரராக இருக்கிறார் என்றறிந்து, அவரது கரத்தின் படைப்புகள் அனைத்தும் அவரிடம் அன்பு செலுத்துவதை அவர் விரும்புகிறார். அவரது ஞானம் நீதி, கருணை ஆகியவைகளை வரவேற்கும் நுண்ணறிவை உடையவர்களாக இருந்து, அவருக்குக் கீழ்ப்படிபவர்களை அவர் தம்முடையவர்களாக வைப்பார். இந்தப் பண்புகளைப்பற்றி ஒத்த கருத்துள்ள அனைவரும் அவரை நேசிப்பார்கள். ஏனெனில், அவரது நிறந்த குணங்களினால் வியப்படைந்து, அனைவரும் அவரிடம் இழுக்கப்பட்டுள்ளனர். (32)

நமது இரட்சகரால் போதிக்கப்பட்டும் உதாரணம்காட்டி விளக்கப்பட்டும் உள்ள கொள்கைகளான உதாரத்துவம், இரக்கம், அன்பு ஆகியவை, தேவனுடைய சித்தம், பண்பு ஆகியவைகளின் மறுவடிவமாக உள்ளன. இயேசு பெருமான் தம்முடைய பிதாவிடம் இருந்து பெற்றுக்கொண்டவைகளையன்றி வேறு எந்த உபதேசங்களையும் போதிக்கவில்லையென்று அறிவித்தார். உங்கள் விரோதிகளை நேசியுங்கள் என்னும் இரட்சகரின் பிரமாணத்துடன் தெய்வீக அரசாங்கத்தின் கொள்கைகள் பூரணமான இசைவுள்ளவையாக உள்ளன. பிரபஞ்சத்தின் நன்மைக்காகவும் அவரது நியாயத்தீர்ப்பு எவர்களைச் சந்திக்க உள்ளதோ அவர்களது நன்மைக்காகவுங்கூட தேவன் துன்மார்க்கரின்மீது நியாயத்தீர்ப்பைச் செலுத்துகிறார். அவரது அரசாங்கத்தின் சட்டங்களின்படியும் அவரது சுபாவத்திலுள்ள நீதியின்படியும் அவர்களை மகிழ்ச்சியானவர்களாக இருக்கச் செய்ய முடியுமானால், அவர் அப்படியே செய்வார். அவரது அன்பின் அடையாளங்களின் மூலமாக, அவர் அவர்களைச் சூழ்ந்து, அவரது கற்பனையைப் பற்றிய ஒரு அறிவை அவர்களுக்கு அனுமதித்து, அவரது இரக்கத்தின் ஈவுடன் அவர்களைப் பின்தொடர்கிறார். ஆனால் அவர்கள் அவரது அன்பை அவமதித்து, அவரது கற்பனையில் பிளவை உண்டாக்கி, அவரது இரக்கத்தை நிராகரிக்கின்றனர். அவரது ஈவைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொண்டிருக்கும்போதே, அதைக் கொடுப்பவரை கனவீனப்படுத்துகின்றனர். தேவன் அவர்களது பாவத்தை வெறுக்கிறார் என்பதை அவர்கள் அறிந்திருப்பதினால், அவர்கள் அவரை வெறுக்கின்றனர். அவர்களது பலனைப்பற்றி முடிவுசெய்யவேண்டிய முடிவான நேரம் இறுதியில் வரும். அதன்பின் இந்தக் கலகக்காரர்களை

அவர் தன் பக்கத்தில் கட்டிவைப்பாரா? அவருடைய சித்தத்தின்படி செய்ய இந்தக் கலகக்காரர்களை வற்புறுத்துவாரா? (33)

சாத்தானைத் தங்களது தலைவனாகக்கொண்டு, அவனது வல்லமையினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளவர்கள், தேவனுடைய சமுகத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமற்றவர்களாக உள்ளனர். பெருமை, வஞ்சகம், காமவிகாரம், கொடூரம் ஆகியவை அவர்களுடைய சுபாவத்தில் பதிக்கப்பட்டுள்ளன. பூமியில் நிந்தித்து வெறுத்தவர்களுடன் பரலோகத்தில் சேர்ந்து வாழ, அவர்களால் அதில் பிரவேசிக்கமுடியுமா? சத்தியம் பொய்யனுக்கு ஒருபோதும் ஒத்துவராத ஒன்றாகும். சுயமேன்மையையும் பெருமையையும், எளிமை திருப்திப்படுத்தாது. கறைபடிந்தவர்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாகத் தூய்மையின் தன்மை இருக்காது. சுயநலமுள்ளவனுக்கு எதிர்பார்ப்பு இல்லாத அன்பு, கவர்ச்சியுள்ளதாக இருக்காது. உலகப்பிரகாரமானதும் சுயநலமிக்கதுமான விருப்புக்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மகிழ்ச்சிக்கான எந்த ஆதாரத்தைத்தான் பரலோகத்தால் வழங்கமுடியும்? (34)

பரலோகத்திலுள்ள ஒவ்வொரு ஆத்துமாவும் அன்பினால் நிரப்பப்பட்டுள்ளதாக உள்ளது. ஒவ்வொரு முகமும் மகிழ்ச்சியால் ஒளி விட்டுக்கொண்டுள்ளது. தேவனுடைய ஆட்டுக்குட்டியானவருடைய மேன்மைக்காக உள்ளத்தை ஈர்க்கும் இனிய இசை உயர எழுந்து கொண்டுள்ளது. சிங்காசனத்தில் அமர்ந்திருப்பவரின் முகத்திலிருந்து முடிவற்ற விதமாகச் செல்லும் ஒளிக்கதிர்கள், மீட்கப்பட்டவர்களின் முகத்தில் வீசிக்கொண்டுள்ளன. தேவனுக்கு விரோதமான கலகத்தில் தங்களுடைய வாழ்க்கையைச் செலவிட்டவர்கள், பரிசுத்தமும் பூரணமுமான நிலையைக் காணும்படி திடீரென்று பரலோகத்திற்கு மாற்றப்பட்டால், தேவன்மீதும் சத்தியத்தின்மீதும் பரிசுத்தத்தின்மீதும் இருக்கும் வெறுப்பினால் இருதயம் நிரப்பப்பட்டவர்கள், பரலோகக்கூட்டத்தினருடன் கலந்து, அவர்களது துதியின் பாடல்களுடன் சேர்ந்துகொள்ளுவார்களா? தேவனுடையதும் ஆட்டுக்குட்டியானவருடையதுமான மகிமையை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியுமா? அல்ல. முடியாது! பரலோகத்தின் சுபாவத்தை அடைந்துகொள்ள அவர்களுக்கு வருடக்கணக்காகத் தவணையின் காலம் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால் தூய்மையை அடைந்துகொள்ள அவர்கள் ஒரு போதும் அவர்களது மனதிற்குப் பயிற்சி கொடுக்கவில்லை. இப்பொழுது காலம் மிகவும் பிந்திவிட்டது. தேவனுக்கு எதிரான ஒரு கலகமிக்க வாழ்க்கை, அவர்களைப் பரலோகத்திற்குத் தகுதியில்லாமல் ஆக்கிவிட்டது. அதன் தூய்மை, பரிசுத்தம், சமாதானம்

ஆகியவை அவர்களுக்குச் சித்திரவதையாகவும், தேவனுடைய மகிமை எரிக்கும் நெருப்பாகவும் இருக்கும். அந்தப் பரிசுத்தமான இடத்திலிருந்து ஓடிப்போக அவர்கள் ஏங்குவார்கள். அவர்களை மீட்பதற்காக மரித்தவரின் முகத்திற்கு முன்னிருந்து தங்களை மறைத்துக்கொள்ள அவர்கள் அழிவை வரவேற்பார்கள். துன்மார்க்கருடைய வழி, அவர்கள் தெரிந்துகொண்டபடியே குறிக்கப்பட்டுள்ளது. பரலோகத்திற்குத் தகுதியற்றவர்களாக செய்யப்படுதல், அவர்கள் தாங்களாகவே செய்துகொண்டதும் தேவனுடைய பக்கம் நீதியும் இரக்கமும் உள்ளதாயிருக்கிறது. (35)

துன்மார்க்கர்கள் குணப்படுத்தப்படமுடியாதவர்கள் என்னும் தேவனுடைய தீர்ப்பை ஜலப்பிரளயத்தின் வெள்ளத்தைப்போல், பெரும் நாளின் அக்கினி அறிவிக்கிறது. தெய்வீக அதிகாரத்திற்குக் கீழ்ப்படியும் தன்மை அவர்களிடம் இல்லை. அவர்களது வாழ்க்கை முடியும்போது அவர்கள் மனம் கலகத்தையே செயலாற்றி, எண்ணத்தின் ஓட்டத்தை எதிர்த்திசையில் திருப்புவதற்கும், மீறுதலிலிருந்து கீழ்ப்படிதலுக்கும் வெறுப்பிலிருந்து அன்பிற்கும் திரும்புவதற்கும் மிகவும் பிந்திவிட்டது. (36)

கொலைகாரனான காயீனின் உயிரை விட்டுவைத்ததின் மூலம் பாவியை உயிர்வாழ அனுமதித்தால், அதன் பலன் என்னவாக இருக்கும்? அது கடிவாளமிடப்படாத அக்கிரமமிக்க நடத்தையைத் தொடர்வதாக இருக்கும் என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கொடுத்தார். "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,... இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்"–ஆதி. 6:5,12. இவ்விதமாக காயீனின் போதனைகளினாலும் உதாரணத்தினாலும், திரள்கூட்டமான அவனுடைய பின்சந்ததியினர் பாவத்திற்குள் நடத்தப்பட்டிருந்தனர். (37)

உலகத்தின்மீதிருந்த இரக்கத்தினால், நோவாவின் காலத்திலிருந்த துன்மார்க்கமான பூமியின் குடிகளை தேவன் அழித்தார். அக்கிரமக்காரர்களாயிருந்த சோதோமின் குடிகளை இரக்கத்தினால் அவர் அழித்தார். அக்கிரமச் செய்கைக்காரர்கள் சாத்தானின் வஞ்சிக்கும் வல்லமையின் மூலமாக அனுதாபத்தையும் போற்றப்படுதலையும் பெற்று, பிறரையும் தொடர்ச்சியாக கலகம் செய்யும்படி நடத்துகின்றனர். காயீனின் நாட்களிலும் நோவாவின் நாட்களிலும் ஆபிரகாம், லோத்து ஆகியோரின் நாட்களிலும் அப்படியே இருந்தன. நமது காலத்திலும் அது அப்படியே உள்ளது. பிரபஞ்சத்தின்மீதுள்ள இரக்கத்தினால், அவரது கிருபையை நிராகரிப்பவர்களை, தேவன் கடைசியில் அழிப்பார். (38)

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"–ரோமர் 6:23. நீதிமானின் பிறப்புரிமையாக ஜீவன் உள்ளபோது, மரணம் துன்மார்க்கர்களின் பங்காக உள்ளது. "இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்" (உபா. 30:15) என்று இஸ்ரவேலருக்கு மோசே அறிவித்தான். இந்த வேத வாக்கியங்களில் குறிப்பிடப்படும் மரணம் ஆதாமின்மீது கூறப்பட்டது அல்ல. ஏனென்றால் மனித இனம் முழுவதும் அவனது மீறுதலின் தண்டனையை அனுபவிக்கிறது. அது நித்திய ஜீவனுடன் ஒப்பிட்டு, எதிரானதாக வைக்கப்பட்டுள்ள இரண்டாம் (நித்திய) மரணமாகும். (39)

ஆதாமின் பாவத்தின் பலனாக மனித இனம் முழுவதின்மீதும் மரணம் கடந்துவந்து, எல்லோரும் மற்றவரைப்போலவே கல்லறைக்குச் செல்லுகின்றனர். இரட்சிப்பின் திட்டத்திலுள்ள ஏற்பாட்டின் மூலமாக, அனைவரும் தங்களுடைய கல்லறைகளிலிருந்து எழுப்பப்பட உள்ளனர். "நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்றும்"–அப். 24:15, "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி. 15:22) என்றும் இங்கு காட்டப்பட்டுள்ள இரு வகுப்பினருக்கும் இடையில் ஒரு வேற்றுமை காட்டப்பட்டுள்ளது. "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்"–யோவான் 5:28,29. "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை"–வெளி. 20:6. மனந்திரும்புதலினாலும் விசுவாசத்தினாலும் மன்னிப்பைப் றொதவர்கள், மீறுதலின் தண்டனையை—பாவத்தின் சம்பளத்தைப் பெற்றாகவேண்டும். அவர்கள் அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதான தண்டனையை வெவ்வேறு கால அளவிலும், கடுமையிலும், அனுபவித்து, கடைசியாக இரண்டாம் மரணத்தில் முடிவடைகின்றனர். பாவத்திற்குள் இருந்துகொண்டே இருக்கும் பாவியை இரட்சிப்பது, தேவனுடைய நீதி, இரக்கம் ஆகியவைகளுக்கு இசைவானதாக இல்லாததினால், அவரால் அப்படிச் செய்யமுடியாததாக உள்ளது. பாவியின் மீறுதல் அவனது வாழ்வை மறுத்துள்ளது. ஜீவனுக்கு அவன் தகுதி அற்றவன் என்பதை அவன் தானாகவே மெய்ப்பித்திருக்கிறான். எனவே, தேவன் அவனது உயிர்வாழும் தன்மையை அவனிலிருந்து நீக்குகிறார். "இன்னுங் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன்

ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை” (சங். 37:10) என்று ஒருவரும், “இராதவர்களைப்போல் இருப்பார்கள்” (ஒபதியா 16) என்று மற்றொருவரும், ஆவியானவரால் ஏவப்பட்டு அறிவிக்கின்றனர். அவர்கள் இகழ்ச்சியினால் மூடப்பட்டு, நம்பிக்கையின்மையில் மூழ்கி, நித்தியமாக மறக்கப்பட்டிருப்பார்கள். (40)

இப்படியாக பாவத்திற்கு அதன் சகலவிதமாக ஆபத்துக்களுடனும் அதன் பலனான பாழ்க்கடிப்புகளுடனும் முடிவு உண்டுபண்ணப்படும். “துன்மார்க்கரை அழித்து, அவர்கள் நாமத்தை என்றென்றைக்கும் இல்லாதபடி குலைத்துப்போட்டீர்” (சங். 9:5,6) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். நித்திய நிலையை எதிர்நோக்கியிருந்த யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தில், அபஸ்வரத்தால் குலைக்கப்படாத துதியின் பாடலை பிரபஞ்சம் முழுவதும் சேர்ந்துபாடக் கேட்கிறார். வானத்திலும் பூமியிலும் உள்ள படைப்புகள் அனைத்தும் தேவனை மகிமைப்படுத்துவது கேட்கப்பட்டது. முடிவில்லாத ஆக்கினையில் நெளிந்துகொண்டு தேவனைத் தூஷிக்கும் எந்த இழக்கப்பட்டுப்போன ஆத்துமாவும் இருக்காது. இரட்சிக்கப்பட்டவர்களின் பாடலுடன் தங்களுடைய கதறல்களைக் கலப்பதற்கு நரகத்திலுள்ள எந்தத் துர்ப்பாக்கியமானவர்களும் அங்கே இருக்கமாட்டார்கள். (41)

வேதவாக்கியங்களின் போதனைகளுக்கும், கராணங்களை அறியும் திறனுக்கும், நமது மானிட உணர்வுகளுக்கும் எதிரான, நித்திய ஆக்கினை போன்ற மரணத்தில், உணர்வு உண்டு என்னும் கோட்பாடு, இயற்கை அழியாதது என்னும் தவறான அடிப்படையின்மீது அமைந்துள்ளது. பிரபலமான நம்பிக்கையின்படி, பரலோகத்திலிருக்கும் மீட்கப்பட்டவர்கள் பூமியில் நடைபெறும் அனைத்துடனும் அறிமுகமானவர்களாக உள்ளனர். குறிப்பாக தாங்கள் பின்விட்டுச்சென்ற நண்பர்களின் வாழ்க்கைகளைப்பற்றி, நன்கு அறிந்தவர்களாக உள்ளனர். ஆனால் உயிரோடிருப்பவர்களின் துன்பங்களை அறிவதும் தாங்கள் நேசித்தவர்களால் செய்யப்பட்ட பாவங்களுக்குச் சாட்சியாக இருப்பதும், வாழ்க்கையின் துயரங்களையும், ஏமாற்றங்களையும், வேதனைகளையும் அவர்கள் அனுபவிப்பதைப் பார்ப்பதும், மரித்தவர்களின் மகிழ்ச்சிக்கு எப்படி ஆதாரமாக இருக்கமுடியும்? பூமியிலுள்ள தங்களின் நண்பர்களுக்கு மேலாக வட்டமிட்டுக் கொண்டிருப்பவர்களால், பரலோகத்தின் பேரின்பத்தை எந்த அளவு அனுபவிக்க முடியும்? சுவாசம் சரீரத்தைவிட்டு நீங்கிய உடனேயே, பாவத்திற்கு மன்னிப்புப் பெறாதவரின் ஆத்துமா, நரகத்தின் அக்கினி ஜுவாலைக்கு அனுப்பப்படுகிறது என்னும் நம்பிக்கை, எந்த அளவிற்கு முற்றிலும் மாறான கருத்தாக இருக்கிறது! நித்திய காலமாக துன்பத்திற்குள்ளும் பாவத்திற்குள்ளும் பிரவேசிப்பதற்குத்

தங்களுடைய நண்பர்கள் ஆயத்தமற்றவர்களாகக் கல்லறைகளுக்குக் கடந்துசெல்லுவதைக் காண்பது, அவர்களை எந்த அளவிற்கு ஆழமான வேதனைக்குள் மூழ்கடிக்கும்? இந்தத் திகிலூட்டும் சிந்தனையினால், அநேகர் பைத்தியகாரர்களாகும்படி விரட்டப்பட்டுள்ளனர். (42)

இவைகளைப்பற்றி வேதவாக்கியங்கள் என்ன கூறுகின்றன? "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்"–சங். 146:4. மரணத்தில் மனிதன் நினைவுள்ளவனாக இருப்பதில்லை என்று தாவீது அறிவிக்கிறார். "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; ... . அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை.... நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" (பிர. 9:5,6,10) என்று சாலொமோனும் அதே சாட்சியைத்தான் கூறுகிறான். (43)

எசேக்கியா அரசனின் ஜெபத்திற்கு மறுமொழியாக அவனது உயிர் பதினைந்து வருடங்கள் நீடிக்கப்பட்டபோது, நன்றிமிக்க அந்த அரசன்: "பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தியானிப்பதில்லை. நான் இன்று செய்கிறதுபோல, உயிரோடிருக்கிறவன், உயிரோடிருக்கிறவனே, உம்மைத் துதிப்பான்" (ஏசாயா 38:18,19) என்று தேவனை அவரது இரக்கத்திற்காகப் புகழ்ந்து ஸ்தோத்திரித்தான். பிரபலமான இறையியல் போதனை, மரித்த நீதிமான் பரலோகப் பேரின்பத்திற்குள் பிரவேசித்து அழியாமையுள்ள ஒரு நாவினால் தேவனைத் துதிப்பான் என்று அறிவிக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு மகிமைமிக்க எதிர்காலப் பலனை எசேக்கியாவினால் மரணத்தில் காணமுடியவில்லை. அவனது வார்த்தைகளுடன் "மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்?" (சங். 6:5) "மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்" (சங். 115:17) என்ற சங்கீதக்காரனின் சாட்சியும் இசைந்திருக்கிறது. (44)

பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு நமது முற்பிதாவாகிய தாவீதைப்பற்றி: "அவன் மரணமடைந்து அடக்கம்பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது.... தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே" (அப். 2:29,34) என்று கூறினார். உயிர்த்தெழுதல்வரை தாவீது கல்லறையில் இருக்கிறான் என்னும் உண்மை,

நீதிமான்கள் மரித்தவுடன் பரலோகத்திற்கு செல்லுவதில்லை என்பதற்குச் சாட்சியாக உள்ளது. கிறிஸ்து எழுந்திருக்கிறார் என்ற உண்மையின் புண்ணியத்தால் மட்டுமே கடைசியாக தாவீதினால் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்காரமுடியும். (45)

“மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே” (1 கொரி. 15:16–18) என்று பவுல் கூறினான். நாலாயிரம் வருடங்களாக மரித்தவுடன் நீதிமான்கள் பரலோகத்திற்குச் சென்றிருந்தால்–உயிர்த்தெழுதலே அவசியப்படாதே! உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால்–கிறிஸ்துவிற்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே என்று பவுல் எப்படிக் கூறியிருந்திருக்கமுடியும்? (46)

இரத்தசாட்சியான திண்டேல் மரித்தவர்களின் நிலையைக் குறித்து: “அந்த ஆத்துமாக்கள் பரலோகத்தில் கிறிஸ்து இப்போது இருக்கிற அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட தேவதூதர்கள் இருக்கிற முழு மகிமையில் ஏற்கனவே இருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை என்பதை வெளிப்படையாக அறிக்கைசெய்கிறேன். அது என்னுடைய விசுவாசத்திற்குட்பட்டதும் அல்ல. அப்படியில்லாதிருந்தால் மரித்தேரின் உயிர்த்தெழுதலைக் குறித்து பிரசங்கிப்பது வீண் என்பதையே காண்கிறேன்” என்று அறிவித்தார்.—William Tyndale,Preface to New Testament (ed. 1534). Reprinted in British Reformers—Tindal,Frith,Barnes,page 349. (47)

மரணத்தில் அழியாமை என்கிற ஆசீர்வாதம் உள்ளது என்னும் (தவறான) நம்பிக்கை, உயிர்த்தெழுதலைப்பற்றிய வேதாகமக் கோட்பாட்டை பரவலாக அலட்சியம் செய்யும்படிக்கு நடத்தியுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாக இருக்கிறது. டாக்டர் ஆதாம் கிளார்க் என்னும் அறிஞர் இந்தப் போக்கைக் குறித்து: “உயிர்த்தெழுதலைக் குறித்த கொள்கை இப்பொழுதுள்ள கிறிஸ்தவர்களைவிட, ஆதிகாலக் கிறிஸ்தவர்களுக்கு இடையில் அதிக விளைவைக் கொண்டிருந்ததாகக் காணப்படுகிறது. இது எப்படி? அப்போஸ்தலர்கள் இதைப்பற்றி தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருந்து, தேவனைப் பின்பற்றினவர்களை அக்கரைகாட்டவும், கீழ்ப்படியவும், உற்சாகங்கொள்ளவும் அதன்மூலம் எழுப்பிக்கொண்டிருந்தனர். இன்றைக்கு இருக்கிற அவர்களுடைய பின்னடியார்கள் அதைப்பற்றி அபூர்வமாகவே குறிப்படுகின்றனர். அப்போஸ்தலர்கள் போதித்தவண்ணமாக ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் நம்பினார்கள். நாம் போதிக்கிறவண்ணமாக நம்மைக்

கேட்பவர்கள் நம்புகின்றனர். சுவிசேஷத்தில் வேறு எந்த கோட்பாட்டிற்கும் இதைவிட அதிகமான அழுத்தம் கொடுக்கப்படவில்லை. இப்பொழுதுள்ள பிரசங்க முறையில் இதைவிட வேறு எந்த கோட்பாடும் அதிகம் அலட்சியப்படுத்தப் படுவதில்லை" என்று குறிப்பிட்டார்.—Commentary,remarks on I Corinthians 15,paragraph 3. (48)

உயிர்த்தெழுதல் என்னும் மகிமைமிக்க சத்தியம், ஏறத்தாழ முற்றிலுமாக இருளடைந்து, கிறிஸ்தவ உலகத்தின் பார்வையிலிருந்து மறைந்துபோகும் வரை இந்நிலை தொடர்ந்திருக்கிறது. ஒரு தலைசிறந்த மத எழுத்தாளர் 1 தெச. 4:13–18–ல் உள்ள பவுலின் வார்த்தைகளைப்பற்றி வர்ணனை செய்யும்போது: "கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்னும் கோட்பாட்டில் சந்தேகம் ஏதாவது இருந்தால், சகலவிதங்களிலும் நமக்கு ஆறுதல் தரும் நடைமுறை நோக்கங்களுக்காக, அந்த இடத்தை நீதிமான்களின் ஆசீர்வாதமிக்க அழியாமை என்னும் கோட்பாடு எடுத்துக் கொள்ளுகிறது. நமது மரணத்தில் நமக்காக கர்த்தர் வருகிறார். அதற்காகத்தான் நாம் காத்து விழித்திருக்கவேண்டும். மரித்தவர்கள் ஏற்கனவே மகிமைக்குள் கடந்து சென்றுள்ளனர். அவர்கள் நியாயத்தீர்ப்புக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும் காத்திருப்பதில்லை" என்கிறார். (49)

ஆனால் இயேசு அவருடைய சீடர்களை விட்டுச்சென்ற சமயத்தில், விரைவில் அவர்கள் அவரிடம் வந்துசேருவார்கள் என்று கூறவில்லை. "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:2,3) என்று கூறினார். பவுல் மேலும்: "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" (1தெச. 4:16–18) என்கிறார். இந்த ஆறுதலின் வார்த்தைகளுக்கும், முன்னர் கோடிட்டுக்காட்டப்பட்ட யுனிவர்சலிஸ்ட் போதகரின் வார்த்தைகளுக்கும் எத்தனை வேற்றுமை! மரித்தவர் எப்படிப்பட்ட பாவியாக இருந்தாலும், அவர் தனது இறுதிமூச்சை இங்கு விடும்போது, தேவதூதர்களுக்கு மத்தியில் ஏற்றுக்கொள்ளப்படுவார் என்ற நிச்சயத்தைக்

கொடுத்து துக்கத்தில் இருந்தவர்களை ஆறுதல்படுத்தியது. பவுலோ, கல்லறையின் விலங்குகள் தறிக்கப்பட்டு, கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் நித்திய ஜீவனுக்கென்று எழுப்பப்பட உள்ள கர்த்தரின் எதிர்கால வருகையை அவரது சகோதரர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார். (50)

ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் வாசஸ்தலத்திற்குள் எவரும் பிரவேசிக்குமுன், அவர்களது வழக்குகள் விசாரணை செய்யப்படவேண்டும், அவர்களது சுபாவங்களும் செயல்களும் திருப்பிப்பார்க்கப்படுவதற்காக தேவனுக்கு முன்பாகச் செல்லவேண்டும். புத்தகங்களில் எழுதப்பட்டுள்ள வைகளின்படி, அனைவரும் நியாயம் தீர்க்கப்பட்டு, அவர்களது கிரியைகளுக்குத்தக்கதாகப் பலனடைய வேண்டும். இந்த நியாயத்தீர்ப்பு மரணத்தில் நடைபெறுவதில்லை. “மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்” (அப். 17:31) என்கிற பவுலின் வார்த்தைகளைக் குறித்துக்கொள்ளுங்கள். இவ்விதமாக எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட நேரம், உலகத்தின் நியாத்தீர்ப்புக்காக குறிக்கப்பட்டிருந்ததை அப்போஸ்தலன் தெளிவாக அறிவித்தார். (51)

“தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்” (யூதா 6), “ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனேக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவ பக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தை களெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிர மான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார்” (யூதா 14,15) என்று யூதாவும் இந்தக் காலத்தை குறிப்பிட்டு ஏனோக்கின் வார்த்தைகளையும் சுட்டிக்காட்டுகிறார். “மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; … அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்” (வெளி. 20:12) என்கிறார் யோவான். (52)

ஆனால் மரித்தவர்கள் ஏற்கனவே பரலோகப் பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்தால், அல்லது நரக அக்கினி ஜுவாலையில்

நெளிந்துகொண்டிருந்தால், ஒரு எதிர்கால நியாத்தீர்ப்புக்கு அவசியம் என்ன? இந்த முக்கியமான விஷயங்களைக்குறித்த தேவனுடைய வார்த்தைகளின் போதனைகள் இருளாகவோ அல்லது முரண்பட்டதாகவோ இல்லை, சாதாரணமானவர்களும் புரிந்துகொள்ளமுடியும். கபடமற்ற மனம் இப்போதுள்ள தத்துவ விளக்கத்தில் ஞானத்தையோ அல்லது நீதியையோ எப்படிக்காணும்? நியாயத்தீர்ப்பில் அவர்களுடைய வாழ்க்கை விசாரணையின் முடிவில் பெறவேண்டிய "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரி யாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத். 25:21) என்கிற புகழ்ச்சியை நீதிமான்கள் நீண்ட காலமாக அவரது சமுகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும்போதே பெறுவார்களா? சர்வபூமிக்கும் நியாயாதிபதியானவரிடமிருந்து "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" (மத்தேயு 25:41) என்கிற இகழ்ச்சியை பெற துன்மார்க்கர் தங்களது ஆக்கினையை அனுபவித்துக்கொண்டிருக்கும் இடத்திலிருந்து அழைக்கப்படுவார்களா? இது பக்திவிநயமான பரியாசம். தேவனுடைய ஞானம், நீதி ஆகியவைகளின்மீதான வெட்கத்திற்குரிய குற்றச்சாட்டு. (53)

ஆத்துமா அழியாதது என்ற தத்துவ விளக்கம், அஞ்ஞான மார்க்கத்திடமிருந்து கடனாகப்பெற்று கிறிஸ்தவ மதத்திற்குள் பதித்த ரோமசபையின் தவறான கோட்பாடுகளில் ஒன்றாகும். "ரோம கட்டளைகளான எருக்களத்தை அமைக்கிற அரக்கத்தனமான கட்டுக்கதைகளில் ஒன்று" என்று மார்ட்டின் லுத்தர் இதைத் தரப்பிரிவு செய்திருக்கிறார்.—E. Petavel,The Problem of Immortality,page 255. "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" என்ற பிரசங்கியின் புத்தகத்திலுள்ள சாலொமோனின் வார்த்தைகளைப்பற்றி விவரிக்கும்போது சீர்திருத்தக்காரர்: "இது மரித்தவர்கள் உணர்வற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் மற்றொரு இடம். அங்கே கடமையும் அறிவும் ஞானமும் இல்லை என்று அவர் சொல்லுகிறார். மரித்தவர்கள் நித்திரையிலிருக்கிறார்கள் எனவும் ஒன்றையும் உணருவதில்லையென்றும் சாலொமோன் நிதானிக்கிறார். அவர்கள் நாட்களையும் வருடங்களையும் கணக்கிடாதவர்களாக படுத்துக்கிடக்கிறார்கள். ஆனால் எழுப்பப்படும்போது, ஒரு நிமிடங்கூட உறங்கியிராதவர்களைப்போல நினைப்பார்கள்."— Martin Luther,Exposition of Solomon's Booke Called Ecclesiastes,page 152. (54)

மரணத்தில் நீதிமான்கள் தங்களுடைய பரிசையும் துன்மார்க்கர் தங்களுடைய தண்டனையையும் அடையச் செல்லுகின்றனர் என்பது

பரிசுத்த வேதவாக்கியங்களில் எங்கும் காணப்படவில்லை. இப்படிப்பட்ட வாக்குறுதியை முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் விட்டுச் செல்லவில்லை. கிறிஸ்துவும் அவரது சீடர்களும் இதைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. மரித்தவர்கள் உடனே பரலோகம் செல்லுவதில்லை என்று வேதாகமம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. உயிர்த்தெழும்வரை நித்திரை செய்து கொண்டிருப்பவர்களாக அவர்கள் காட்டப்பட்டுள்ளனர். 1 தெச. 4:14; யோபு 14:10–12. வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றின் அருகே சால் உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கிப் போகும் (பிர. 12:6) அதே நாளில் அவர்களது யோசனை அழிந்துவிடும். கல்லறைக்குள் செல்லுகிறவர்கள் மௌனத்திலிருக்கின்றனர். சூரியனுக்குக் கீழே செய்யப்படும் ஒன்றிலும் அவர்களுக்கு இனிப் பங்கு இல்லை (யோபு 14:21). களைத்துப்போன நீதிமான்களுக்கு அது ஆசீர்வாதமான இளைப்பாறுதலின் காலம். நீண்டதாயினும் குறுகியதாயினும், அவர்களுக்கு அது ஒரு வினாடியாக மட்டுமே இருக்கும். அவர்கள் நித்திரை செய்கின்றனர். மகிமைமிக்க அழியாமையைத் தரித்துக்கொள்ளும்படி தேவ எக்காளத்தினால் எழுப்பப்படுகின்றனர். “எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; … அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்” (1 கொரி. 15:52–55). ஆழ்ந்த நித்திரையிலிருந்து அவர்கள் அழைக்கப்படும்போது, நிறுத்தின இடத்திலிருந்து சிந்திக்கத் தொடங்குவார்கள். அவர்களுடைய கடைசி உணர்வு மரண வேதனையாக இருந்தது, கடைசி சிந்தனை கல்லறையின் வல்லமைக்குக் கீழே விழுந்துகொண்டிருப்பதைப் பற்றியதாக இருந்தது. கல்லறையிலிருந்து அவர்கள் எழும்பும்போது, வெற்றிமுழக்கத்தில் எதிரொலிக்கப்போகிற அவர்களுடைய மகிழ்ச்சிமிக்க முதல் எண்ணம்: “மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?” என்பதாக இருக்கும். (55) ★

# 34

# அந்தகாரலோகாதிபதியின் தந்திரச் செயல்கள்!

(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 551–562)

பரிசுத்த தேவதூதர்களின் ஊழியம் என்று வேதவாக்கியங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு சத்தியம், கிறிஸ்துவின் அடியார்கள் ஒவ்வொருவருக்கும் மிக அதிகமான ஆறுதலைக் கொண்டுவரும் விலைமதிப்பு உள்ள ஒன்றாகும். ஆனால் பிரபலமான இறையியலின் தவறுகளினால், இதைக் குறித்த வேதபோதனை புரட்டப்பட்டு இருளாக்கப்பட்டுள்ளது. மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் என்று வேதவாக்கியங்களில் மிகத் தெளிவாகப் போதிக்கப்பட்டிருக்கும் உண்மையை, அஞ்ஞான தத்துவத்திலிருந்து முதலில் கடனாகப் பெறப்பட்டு, பெரும் மருளவிழுகையின் இருளில் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் பதிக்கப்பட்ட—அழியாமை இயற்கையானது என்னும் கோட்பாடு நீக்கியிருக்கிறது. மனிதனுடைய மரணத்திற்குமுன்பே தேவதூதர்கள் இருந்தனர் என்பதும், மனித வரலாற்றுடன் அவர்களுக்கிருந்த தொடர்பும் வேதவாக்கியங்களில் மிகவும் தெளிவான சாட்சியாக கொடுக்கப்பட்டிருந்தும், மரித்தவர்களின் ஆவிகளே இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களின் நிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அனுப்பப் படும் பணிவிடை ஆவிகள் என்று திரளானவர்கள் நம்புகின்றனர். (1)

மரணத்தில் மனிதனுக்கு உணர்வுண்டு என்கிற கோட்பாடு, குறிப்பாக மரித்தவர்களின் ஆவிகள் உயிருள்ளவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு திரும்புகின்றன என்னும் நம்பிக்கை நவீன ஆவிமார்க்கத்திற்கான பாதையை ஆயத்தம் செய்திருக்கிறது. மரித்தவர்கள் தேவனுடைய பரிசுத்த தேவதூதர்களுடைய சமுகத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால், அவர்கள் இதற்குமுன் கொண்டிருந்ததைவிட அதிகமான அறிவை உடையவர்களாகும்பபடி சலுகை அளிக்கப்பட்டிருந்தால்,

உயிருள்ளவர்களுக்கு அறிவைக் கொடுக்கவும் போதிக்கவும் அவர்கள் ஏன் பூமிக்குத் திரும்பக்கூடாது? பிரபலமான இறையியல் வல்லுனர்களால் போதிக்கப்பட்டிருப்பதுபோல, மரித்தவர்களின் ஆவிகள் பூமியிலுள்ள அவர்களது நண்பர்களுக்கு மேலாக வட்டமிட்டுக்கொண்டிருந்தால், தீமைக்கு எதிராக அவர்களை எச்சரிக்கவும் அல்லது அவர்களது துயரங்களில் ஆறுதலளிக்கவும் அவைகள் ஏன் அனுமதிக்கப்படக்கூடாது? மரணத்தில் மனிதன் உணர்வுள்ளவனாக இருக்கிறான் என்பதை நம்புகிறவர்களால், மகிமைப்படுத்தப்பட்ட ஆவிகள் வழியாக அவர்களுக்கு கொடுக்கப்படும் தெய்வீக ஒளியை எப்படி நிராகரிக்க முடியும்? சாத்தான் அவனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுவதற்காகச் செயல்படுத்தும் பரிசுத்தமானது என்று கருதப்படுகின்ற ஒரு பாதை இங்கு உள்ளது. அவனுடைய உத்தரவைச் செயல்படுத்தும் விழுந்துபோன தூதர்கள், ஆவி உலகத்திலிருந்து வரும் ஊழியக்காரர்களைப்போலத் தோற்றமளிக்கின்றனர். உயிருள்ளவர்களை மரித்தவர்களுடன் தொடர்பு கொள்ள கொண்டுவருகிறதுபோல சொல்லிக்கொண்டு, மனங்களை அடிமைப்படுத்தும் தனது செல்வாக்கை தீமையின் பிரபு அவர்களது மனங்களில் செயல்படுத்துகிறான். (2)

தங்களிடமிருந்து பிரிந்துசென்றுவிட்ட நண்பர்களின் தோற்றங்களை மனிதர்கள் முன் கொண்டுவரும் வல்லமையை அவன் பெற்றிருக்கிறான். அந்தக் கள்ளச் செயல் குறையற்றிருக்கிறது. பழக்கப்பட்ட பார்வையும் பேச்சும் தொனியும் ஆச்சரியமாக அதேபோன்று இருக்கிறது. தங்களுக்கு அன்பானவர்கள் பரலோக பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்னும் நிச்சயத்தினால் அநேகர் ஆறுதலடைகிறார்கள். ஆபத்தைப்பற்றிய சந்தேகமின்றி, "வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும்" செவிகொடுக்கின்றனர். (3)

மரித்தவர்கள் தங்களுடன் தொடர்புகொள்ளுவதற்காக உண்மையாகவே திரும்பியிருக்கிறார்கள் என்று நம்பும்படி அவர்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது, ஆயத்தமில்லாமல் கல்லறைக்குள் சென்றவர்களை சாத்தான் தோன்றச் செய்கிறான். அவர்கள் பரலோகத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும், மேலான பதவியில் இருப்பதாகவுங்கூடக் கூறுகிறான். இவ்வாறாக அந்தத் தவறு பரவலாகப் போதிக்கப்படுவதினால், நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் இடையில் வேற்றுமை இல்லாமல் செய்யப்படுகிறது. ஆவி உலகிலிருந்து வந்து மரித்தவர்களைப்போன்ற உருவில் நடிக்கும் பார்வையாளர்கள் சில சமயங்களில் எச்சரிப்புகள் கொடுக்கிறார்கள். அவை சரியாக இருப்பதாகவும் மெய்ப்பிக்கப்படுகின்றன. அவ்விதமான நம்பிக்கையை ஆதாயப்படுத்திக்கொண்டபின், வேதவாக்கியங்

களில் உள்ள விசுவாசத்தை நேரடியாக வலுவிழக்கச்செய்கிற கோட்பாடுகளை முன்வைக்கிறான். பூமியிலுள்ள தங்களது நண்பர்களின் நன்மையில் மிகுந்த அக்கறை உள்ளவர்கள் என்கிற தோற்றத்துடன் ஆபத்துமிக்க தவறுகளை அவை நுழைக்கின்றன. சில உண்மைகளை கூறுவதாலும், எதிர்கால சம்பவங்களை சில சமயங்களில் முன்னதாகச் சொல்ல முடிவதாலும், அவைகளின் அறிக்கைகள் நம்பக்கூடியவை என்னும் தோற்றத்தைக் கொடுக்கிறது. இவ்வாறாக, அவைகளின் தவறான போதனைகள் திரளானவர்களால் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவைகள் வேதாகமத்தின் மிகப்பரிசுத்தமான சத்தியங்கள் என்பதுபோல் மிகச் சரியானவை என நம்பப்படுகின்றன. தேவனுடைய கற்பனைகள் ஒரு பக்கமாக நீக்கப்பட்டு, கிருபையின் ஆவி நிந்திக்கப்பட்டு, உடன்படிக்கையின் இரத்தம் பரிசுத்தமற்ற ஒரு பொருளாக எண்ணப்படுகிறது. அந்த ஆவிகள் கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுத்து, சிருஷ்டிகரை தங்களுக்கு சமமான நிலையில் வைக்கின்றன. இவ்வாறாக ஒரு புதிய மாறுவேடத்தில், தேவனுக்கு எதிராக பரலோகத்தில் ஆரம்பித்து, பூமியின்மேல் ஆறாயிரம் வருடங்களாகத் தொடர்ந்துசெய்யும் போராட்டத்தை சாத்தான் முன்கொண்டு செல்லுகிறான். (4)

ஆவியின் வெளிப்படுத்தல்களை ஏமாற்று என்றும், அதைச் செய்பவரின் தைத்திறன் என்றும் கணக்கிட அநேகர் முயலுகின்றனர். ஆனால் தந்திரமான செயல்கள் உண்மையான மந்திரவாதத்தின் வெளிப்படுத்தல்கள் இல்லை என்று மறைக்கப்படும்போது, இயற்கைக்கு மேலான வல்லமையின் குறிப்பிடப்பட்ட வெளிக்காட்டலும் இருந்திருக்கிறது. நவீன ஆவிமார்க்கம் ஆரம்பமாகக் காரணமாயிருந்த இரகசியத் கைதட்டல்கள், மனிதக் கைவித்தைகளின் செயல்கள் அல்ல. மாறாக, ஆத்துமாவை அழிக்க மிகவும் வெற்றிகரமான மாயங்களில் ஒன்றை அறிமுகப்படுத்திய தீய தூதர்களின் நேரடியான வேலையாகும். ஆவிமார்க்கம் என்பது சாதாரணமான ஏமாற்று வேலைதான் என்னும் நம்பிக்கையால், அநேகர் சாத்தானது கண்ணிகளில் அகப்படுத்தப்படுவார்கள். இயற்கைக்கு மேலான வெளிப்படுத்தல்களே அல்லாமல் இவை வேறொன்றுமில்லை என்று கருதவேண்டிய நிலைக்கு நேரடியாகக் கொண்டுவரப்படும்போது, அவர்கள் வஞ்சிக்கப்பட்டு, அவைகளை தேவனின் பெரும் வல்லமை என்று ஏற்றுக்கொள்ளும் படியாக நடத்தப்படுவார்கள். (5)

இந்த மனிதர்கள், சாத்தானாலும் அவனது பிரதிநிதிகளாலும் செய்யப்படும் ஆச்சரியமானவைகளைப்பற்றிய வேதாகம சாட்சியை கவனிக்காமலிருக்கின்றனர். தேவனுடைய செயலுக்கு எதிரான

போலியான ஒன்றைச் சாத்தானின் உதவியுடன் செய்ய, பார்வோனின் மந்திரவாதிகள் தகுதிப்படுத்தப்பட்டனர். அதைப் போன்ற சாத்தானின் வல்லமையின் வெளிக்காட்டல்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னரும் இருக்கும் என்று பவுல் தெளிவான சாட்சிபகருகிறார். "அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்"–2 தெச. 2:9,10. கடைசி நாட்களில் அற்புதங்களைச் செய்யும் வல்லமைகள் வெளிக்காட்டப்படுதலைக் குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் விவரிக்கும்போது: "அன்றியும், அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின்முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி" (வெளி. 13:13–14) என்கிறார். இங்கு வெறும் ஏமாற்று வேலைகளைப்பற்றி மட்டும் முன்னறிவிக்கப்படவில்லை. மனிதர்களால் செய்யப்படும் அற்புதங்களினாலேயே மனிதர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர். (6)

தன் மனத்திறமையின் வல்லமைகளை இதுவரை ஏமாற்று வேலைகளுக்காகச் செயல்படுத்தியிருந்த அந்தகாரப்பிரபு, மனிதர்களில் சகல வகுப்பினருக்கும் சகல நிலைகளில் உள்ளவர்களுக்கும் பொருந்தக்கூடிய விதத்தில் திறமையாக தனது சோதனைகளை அமைக்கிறான். பண்பட்டவர்களுக்கும் தேர்ந்தவர்களுக்கும் தேர்ந்த அறிவுமிக்க விதத்தில் ஆவிமார்க்கத்தை முன்வைத்து, இவ்விதமாக அநேகரை தன் வலையில் அகப்படுத்துவதில் வெற்றியடைகிறான். ஆவிமார்க்கம் கற்பிக்கும் ஞானம் அப்போஸ்தலனாகிய யாக்கோபினால் "இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது" (யாக். 3:15) என்று விவரிக்கப்பட்டுள்ளது. எப்படியிருந்தாலும், மறைத்து வைப்பது அவனது நோக்கத்திற்குச் சிறப்பாகப் பொருந்தக்கூடியதாக இருக்கும்போது, பெரும் வஞ்சகன் தன்னை மறைத்து வைத்துக்கொள்ளுகிறான். சோதனையின்போது, வனாந்தரத்தில் கிறிஸ்துவிற்கு முன்பாக, பரலோக சேராபீன்களின் ஒளிமிக்க உடையை அணிந்தவனாக தோன்றக்கூடியவனாக இருந்தவன், ஒளியின் தூதனுடைய வேஷத்தில் மிகவும் கவரக்கூடிய விதத்தில் மனிதர்களுக்கு முன்பாகவும் வருகிறான். உயர்த்தக்கூடிய விவாத விஷயங்களை முன்வைத்து, காரணங்களைக் காணும்படி அவன் வேண்டுகோள் விடுக்கிறான். அளவுகடந்த ஆனந்தத்தை

உண்டுபண்ணும் விநோதத்தினால் மகிழச்செய்கிறான். அன்பு, உதாரத்துவம் ஆகியவைகளைப்பற்றி, அவனது வாக்குவன்மைமிக்க விளக்கங்களினால் அறிவு புகட்டுகிறான். உன்னதமான ஒருவரைத் தங்களது இருதயத்தில் அவமதிப்பதற்கு மனிதர்களை அவர்களது சொந்த ஞானத்தில் மிகப் பெருமை உள்ளவர்களாக இருக்கும்படி நடப்பித்து, அவர்களது கற்பனைகளை மிகுந்த உயரத்திற்கு எழுப்பிவிடுகிறான். உலக மீட்பரை மிக அதிக உயரமான மலையின் கொடுமுடிக்குத் தூக்கிச்சென்று உலக மகிமை அனைத்தையும் கடந்து செல்லும்படியாகச் செய்யக்கூடியவனாகவும் இருந்த வல்லமைமிக்கவன், மனிதர்களுக்கு முன்பாக, தெய்வீக வல்லமையினால் கேடயமாக மறைக்கப்படாத அனைவரின் புலன்களும் தாறுமாறாகிவிடும் விதத்தில், தனது சோதனையை வைப்பான். (7)

முகஸ்துதியினாலும் தடைசெய்யப்பட்டிருக்கும் அறிவை அடைந்துகொள்ளவேண்டும் என்று ஆசையை தூண்டிவிடுவதினாலும் தன்னை உயர்த்தவேண்டும் என்ற மேலான ஆசையினாலும், சாத்தான் ஏதேனில் ஏவாளை வஞ்சித்ததுபோல, இப்போதும் மனிதர்களை வஞ்சிக்கிறான். இந்தத் தீமைகளை இருதயத்தில் வைத்துப் போற்றியிருந்ததுதான் அவனது விழுகைக்குக் காரணமாக இருந்தது. அவைகளின் மூலமாக மனிதர்களின் பாழ்க்கடிப்பை அவன் வனைந்துகொள்ளக் குறிவைக்கிறான். “நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்” (ஆதி. 3:5) என்று அவன் அறிவிக்கிறான். “முன்னேறிக்கொண்டே செல்லுபவன் மனிதன். பிறப்பு முதல் முன்னேறுவது, நித்தியத்திற்குங்கூட தெய்வத்துவத்தை நோக்கி முன்னேறுவது அவனது விதியாக இருக்கிறது” என்று ஆவிமார்க்கம் போதிக்கிறது. “ஒவ்வொரு மனமும் மற்றதையல்ல தன்னைத்தானே நியாயந்தீர்த்துக்கொள்ளும்” “தனக்குத்தானே நியாயந்தீர்ப்பதால் அத்தீர்ப்புச் சரியானதாக இருக்கும்.... சிங்காசனம் உனக்குள் இருக்கிறது” என்று மறுபடியும் கூறுகிறது. “ஆவிக்குரிய உணர்வு” தனக்குள் எழுந்ததால், “என் உடன் மனிதர்களே , நாம் அனைவரும் வீழ்ச்சியடையாத பாதி தெய்வங்களாக இருக்கிறோம்” என்று ஒரு ஆவிமார்க்க ஆசிரியர் கூறினார். “நீதியும் பூரணமுமுள்ள எவனும் கிறிஸ்துவாக இருக்கிறான்” என்று மற்றொருவர் அறிவிக்கிறார். (8)

இவ்வாறாக, துதிப்பதற்கு இலக்காக உள்ள முடிவில்லாத தேவனுடைய நீதியும் பூரணமும் இருக்கும் இடத்தில், மனிதன் அடைந்தாக வேண்டிய உண்மையான எல்லையான அவரது கற்பனையின் பூரணமாக நீதியிருக்கும் இடத்தில், பாவகரமான, தவறும் மனித இயல்பை, துதிக்கவேண்டிய ஒரே பொருளாக, நியாயத்தீர்ப்பின் ஒரே சட்டமாக, அல்லது

குணத்தில் எல்லையாக சாத்தான் வைத்துவிட்டான். இது முன்னேற்றம் தான், ஆனால் மேல்நோக்கியதல்ல கீழ்நோக்கியது! (9)

பார்ப்பதினால் நாம் மாறுகிறோம் என்பது அறிவிற்கும் ஆவிக்குரிய தன்மைக்கும் ஒரே நியதியாக இருக்கிறது. மனம் எதன்மீது சஞ்சரிக்கும்படி அனுமதிக்கப்படுகிறதோ அந்தப் பொருளுக்கு இசைவாக மெதுவாக அமைந்துவிடுகிறது. நேசிக்கவும், பக்திசெலுத்தவும் எது பழக்கப்படுத்தப்படுகிறதோ, அதை அது ஜீரணித்துக்கொள்ளுகிறது. தன்னிடமுள்ள தூய்மை, நல்ல தன்மை, சத்தியம் ஆகியவைகளைவிட உயரமாக மனிதன் ஒருபோதும் உயரமாட்டான். அவனது மிகவுயர்ந்த லட்சியம் சுயத்தைப்பற்றியதாக மட்டுமிருந்தால், அவன் தொடர்ச்சியாக அதைவிட கீழேயே அமிழ்ந்துகொண்டிருப்பான். மனிதனை மேலே உயர்த்துவதற்கு தேவ கிருபை ஒன்றுக்கு மட்டுமே வல்லமை உள்ளது. தனக்குத்தானே அவன் விட்டுவிடப்படும்போது, அவனது பாதை தவிர்க்கமுடியாத விதத்தில் கீழ்நோக்கிச் செல்லும். (10)

அதிகத் தெளிவுள்ளவர்களையும் அறிவுமிக்கவர்களையும்விட சுயத்தைப் பேணுபவர்களுக்கும், இன்பத்தை நாடுவோருக்கும், புலனுணர்வில் இருப்போருக்கும், ஆவிமார்க்கம் தன்னை மிகவும் தந்திரக்குறைவுள்ளதாக மறைத்துக் காட்டுகிறது. அதன் மொத்த வடிவுகளில் அவர்கள் அதை அவர்களது விருப்பங்களுக்கு இசைவுள்ளதாகக் காணுகின்றனர். மனித இயல்பின் பலவீனங்களின் அடையாளம் ஒவ்வொன்றையும் சாத்தான் ஆராய்கிறான். தனிப்பட்ட ஒவ்வொருவரும் செய்ய விரும்பும் பாவங்கள் ஒவ்வொன்றையும் அவன் குறித்துக்கொண்டு, அதன்பின், தீமை செய்யும் சுபாவத்தைத் திருப்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் இல்லாமல் போகாதபடி கவனித்துக் கொள்ளுகிறான். சரியான காரியங்களில் அளவுகடக்க வைத்து, இச்சையடக்கமின்மையினால் அவர்களது சரீர, மன, ஆவிக்குரிய சக்திகளை பலவீனமடையச் செய்வதற்கேதுவாக சோதிக்கிறான். ஆசைகளில் மூழ்கடிப்பதன் மூலமாக மனிதனின் இயல்பு முழுவதையும் மிருகத்தனமாக்கி, ஆயிரக்கணக்கானவர்களை அவன் அழித்திருக்கிறான், அழித்துக்கொண்டும் இருக்கிறான். தன்னுடைய வேலைகளை முடித்துக் கொள்ளுவதற்காக, ஆவிகளின்மூலமாக, “உண்மையான அறிவு மனிதனை சகல பிரமாணங்களுக்கும் மேலானவனாக வைக்கிறது” “எவை சரியானவையாகத் தோன்றுகின்தோ அவை சரியே” “தேவன் ஒருவரையும் குற்றப்படுத்துவதில்லை” “செய்யப்பட்ட பாவங்களனைத்தும் அறியாமையினால் செய்யப்பட்டவைகள்தான்” என்றும் அறிவிக்கிறான். இவ்விதமாக, ஆசைதான் மிக மேலான பிரமாணம் என்று மனிதர்கள்

நடத்தப்படும்போது, சுயாதீனம் உரிமம் ஆகும்போது, மனிதன் தனக்கு மட்டுமே கணக்குக் கொடுக்கவேண்டியவனாக இருக்கிறான் என்னும்போது, ஊழலும் ஒழுக்கக்கேடும் எல்லாப் பக்கங்களிலும் பெருகுகின்றன என்பதைப்பற்றி எவர்கள் ஆச்சரியப்படுவார்கள்? மாம்சப்பிரகாரமான மனதின் தூண்டுதல்களுக்கு கீழ்ப்படியும் சுதந்திரத்திற்கு அவர்களை நடத்தும் போதனைகளைத் திரளானவர்கள் ஆவலுடன் ஏற்றுக்கொள்ளுகின்றனர். சுயக் கட்டுப்பாட்டின் கடிவாளக்கயிறுகள் இச்சையின் கழுத்தின்மீது வைக்கப்பட்டு, மன, ஆத்துமாவின் வல்லமைகள் மிருகத்தனமான குணங்களுக்குக் கீழாகும்படிச் செய்யப்பட்டு, இவ்விதமாக சாத்தான் வெற்றிச்சிரிப்புடன் தங்களைக் கிறிஸ்துவின் அடியார்கள் என்று கூறிக்கொள்ளும் ஆயிரக்கணக்கானவர்களை அவனுடைய வலைக்குள் இழுத்துக்கொள்ளுகிறான். (11)

ஆனால், ஆவிமார்க்கத்தின் பொய்யான உரிமை பாராட்டுதல்களைக் குறித்து ஒருவரும் வஞ்சிக்கப்படவேண்டிய அவசியம் இல்லை. அந்த கண்ணியைக் கண்டுபிடிக்க மனிதர்கள் தகுதி அடைவதற்குப் போதுமான ஒளியை தேவன் உலகத்திற்குக் கொடுத்திருக்கிறார். ஏற்கனவே காட்டப்பட்டுள்ளபடி ஆவிமார்க்கத்தின் அஸ்திவாரத்தை அமைக்கும் தத்துவ விளக்கம் வேதவாக்கியங்களின் தெளிவான அறிக்கைகளுடன் போரில் ஈடுபட்டுள்ளது. மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள், அவர்களது யோசனைகள் அழிந்துபோயின. சூரியனுக்குக் கீழே செய்யப்படும் யாதொன்றிலும் அவர்களுக்குப் பங்கில்லை. பூமியில் அவர்களுக்கு மிகவும் அருமையானவர்களாக இருந்தவர்களின் சந்தோஷத்தைப்பற்றியோ அல்லது வருத்தத்தைப்பற்றியோ அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று வேதாகமம் அறிவிக்கிறது. (12)

இதற்கும் மேலாக, பிரிந்துசென்ற ஆவிகளுடனுள்ள தொடர்பு போலத் தோன்றக்கூடிய அனைத்தையும் தேவன் வெளிப்படை யாகத் தடை செய்திருக்கிறார். எபிரெயரின் நாட்களில் இன்றுள்ள ஆவிமார்க்கத்தினரைப்போலவே, மரித்தவர்களுடன் தொடர்புள்ளவர்களாக உரிமைபாராட்டியிருந்த ஒருவகை மக்கள் இருந்தனர். ஆனால் இயற்கைக்கு அப்பாற்பட்ட, “பழக்கப்பட்ட ஆவிகள்” என்று அழைக்கப் பட்டிருந்த இவைகளை பிசாசுகளின் ஆவிகள் என்று வேதாகமம் அறிவிக்கிறது. (ஒப்பிடுக: எண். 25:1–3; சங். 106:28; 1 கொரி. 10:20; வெளி 16:14). பழக்கப்பட்ட ஆவிகளுடனுள்ள நடவடிக்கைகள் கர்த்தருக்கு அருவருப்பானது என்று கூறப்பட்டு, மரணதண்டனையின் கீழ் பக்தி விநயமாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. (லேவி. 19:31 20:27). சூனிய

வித்தை என்னும் பெயரே இப்பொழுது கண்டனம் செய்யப்பட்டுள்ளது. மனிதர்களால் தீய ஆவிகளுடன் தொடர்புகொள்ளமுடியும் என்ற கருத்து, இருண்ட காலங்களில் உள்ள ஒரு கட்டுக்கதை என்று கருதப்பட்டிருக்கிறது. ஆனால், ஆயிரக்கணக்கானவர்களை, இலட்சக்கணக்கானவர்களைத் தனது அணிக்குள் மதமாற்றம் செய்யும் ஆவிமார்க்கம், அதன் பாதையை விஞ்ஞான வட்டத்திற்குள் அமைத்ததுடன், சபைகளை ஆக்கிரமிப்புச் செய்ததுடன், சட்ட மன்றங்களின் ஆதரவையும் கண்டுள்ளது. அரசர்களின் ராஜசபைகளிலும் ஆதரவைக் கண்டுள்ளது. இப்பொழுது புதிய உடையில் தோன்றும் சூனிய வித்தையின் ஒரு எழுப்புதலான மிகப்பெரிய வஞ்சகம், முற்காலத்தில் பழிக்கப்பட்டுத் தடைசெய்யப்பட்டிருந்தது. (13)

ஆவி மார்க்கத்தின் உண்மையான சுபாவத்திற்கான வேறு சான்று எதுவும் இல்லாமல் இருந்தாலுங்கூட, நீதிக்கும் பாவத்திற்கும் இடையிலும், மிக மேன்மையும் தூய்மையுமிக்கவர்களான கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கும் மிகவும் கறைபடிந்த சாத்தானின் வேலைக்காரர்களுக்கும் இடையிலும் இந்த ஆவிகள் வேற்றுமை காண்பதில்லை என்பதே கிறிஸ்தவனுக்குப் போதுமான சான்றாக இருக்கவேண்டும். மனிதர்களில் மிகவும் கீழானவனுங்கூட பரலோகத்தில் மிக உயர்நத நிலையில் இருப்பதாக எடுத்துக்காட்டும் சாத்தான், உலகை நேக்கி: “நீங்கள் எப்படிப்பட்ட துன்மார்க்கராக இருந்தாலும் அது காரியமல்ல. நீங்கள் தேவனையும் வேதாகமத்தையும் விசுவாசித்தாலும் விசுவாசிக்காவிட்டாலும் அது ஒரு பொருட்டல்ல. உங்கள் விருப்பப்படி வாழுங்கள். பரலோகம் உங்கள் வீடாக உள்ளது” என்று கூறுகிறான். ஆவிமார்க்கத் தலைவர்கள்: “பொல்லாப்பைச் செய்கிறவனெவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள்பேரில் அவர் பிரியமாயிருக்கிறாரென்றும், நியாயந்தீர்க்கிற தேவன் எங்கேயென்றும்” (மல். 2:17) அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையோ “தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!” (ஏசாயா 5:20) என்கிறது. (14)

அப்போஸ்தலர்களைப் போலத் தோற்றமளிக்கும் இந்தப் பொய்யின் ஆவிகள், அப்போஸ்தலர்கள் பூமியிலிருந்தபோது, பரிசுத்தஆவியின் ஏவுதலினால் எவைகளை எழுதினார்களோ அவைகளுடன் முரண்படுகின்றன. அவைகள் வேதாகமத்தின் தெய்வீகப் பிறப்பை மறுத்து, கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின் அஸ்திவாரத்தை உடைத்தெறிந்து, பரலோகத்திற்கான பாதையை வெளிக்காட்டும் விளக்கை அனைத்துவிடுகின்றன. வேதாகமம்

ஒரு கட்டுக்கதை அல்லது மனித இனத்தின் குழந்தைப் பருவத்திற்குப் பொருத்தமானது, அதை இப்பொழுது சாதாரணமாகத்தான் கருதவேண்டும் அல்லது நடைமுறையில் இல்லாததாகக் கருதி ஒதுக்கிவைக்க வேண்டுமென்று சாத்தான் உலகை நம்பச்செய்துகொண்டிருக்கிறான். தேவனுடைய வார்த்தையின் இடத்தை எடுத்துக்கொள்ளும்படி அவன் ஆவிக்குரிய வெளிக்காட்டல்களை எடுத்துக்காட்டுகிறான். இங்கு முற்றிலுமாக அவனது கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பாதை உள்ளது. இதன் மூலமாக, அவன் எதை விரும்புகிறானோ அதை உலகம் நம்பும்படிச்செய்ய அவனால் முடியும். அவனையும் அவனது அடியார்களையும் நியாயம்தீர்க்கவுள்ள புத்தகத்தை, அது எங்கே இருக்கவேண்டுமென்று விரும்புகிறானோ, அங்கே இருளுக்குள் மறைத்துவைக்கிறான். உலக இரட்சகர் சாதாரண மனிதரைவிட மேலானவரல்ல என்று கருதும்படி அவன் செய்கிறான். இயேசுவின் கல்லறையைக் காவல் காத்திருந்த ரோமப்படையின் காவல்காரனிடம், இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பொய்யென்று கூறும்படி ஆசாரியர்களும் மூப்பர்களும் கற்றுக்கொடுத்தபடி, பொய்யான அறிக்கையை அவன் எங்கும் பரப்பினதுபோல, நமது இரட்சகரின் வாழ்க்கையிலிருந்த சூழ்நிலையில் அற்புதமான எதுவும் இருக்கவில்லை என்று தோன்றும்படிச் செய்ய ஆவிமார்க்க வெளிக்காட்டுதல்களில் நம்பிக்கை உள்ளவர்கள் முயலுகின்றனர். இப்படியாக இயேசுவைக் கீழாக்க வகைதேடியபின் அவர்களுடைய சொந்த அற்புதங்களுக்குக் கவனம் செலுத்தும்படி அழைத்து, அவை கிறிஸ்துவின் செயல்களைவிட மிக மேலானவை என்கின்றனர். (15)

ஆவிமார்க்கம் இப்பொழுது அதற்கு அதிகமான எதிர்ப்புள்ள முக்கியமான பகுதிகளைத் திரையிட்டு மறைத்து, அதன் உருவத்தை மாற்றிக்கொண்டு, கிறிஸ்தவ உடையை அணிந்துகொண்டுள்ளது உண்மைதான். ஆனால் மேடைகளின் மேலிருந்த அதன் பேச்சுகளும் அச்சக வெளியீடுகளும் ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு மேலாக பொதுமக்கள் முன்னர் இருக்கிறது. இவைகளில் அதன் சுபாவம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் போதனைகளை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. (16)

இப்போதுள்ள அதன் வடிவில், முந்தி இருந்ததைவிட சகிக்கக்கூடாமலிருந்தாலும், மிகவும் தந்திரமான வஞ்சகத்தோடு இருப்பதினால் உண்மையில் அது மிகவும் ஆபத்தானதே. முன்னர் அது கிறிஸ்துவையும் வேதாகமத்தையும் பகிரங்கமாகக் குற்றம்சாட்டியிருந்தபோதிலுங்கூட, இப்பொழுது இரண்டையுமே ஒப்புக்கொள்ளுவதாகக் கூறிக்கொள்ளுகிறது. ஆனால் வேதாகமத்திலுள்ள பக்திவிநயமான சத்தியங்களை

பலனற்றவைகளாக்குகின்ற அதே நேரத்தில், புதுப்பிக்கப்படாத இருதயத்திற்கு மகிழ்ச்சி தரக்கூடிய விதத்தில் வேதாகமத்திற்கு விளக்கம் கொடுக்கிறது. அன்புதான் தேவனின் போற்றப்படக்கூடிய பண்பு என்று கூறப்படுகிறது. ஆனால் நன்மைக்கும் தீமைக்கும் இடையில் உள்ள வேற்றுமையை உணரமுடியாத ஒரு பலவீனமான உணர்வு அது என்று கருதப்படுகிறது. தேவனுடைய நீதியும், பாவத்தின் மீதான அவரது பகிரங்கமான குற்றச்சாட்டும், அவரது பரிசுத்த கற்பனைகளின் தேவையும் புறம்பாக்கப்பட்டிருக்கின்றன. கற்பனைகளை உயிரற்ற எழுத்துக்களாகக் கருதும்படி மக்கள் போதிக்கப்பட்டுள்ளனர். சந்தோஷம் கொடுக்கக்கூடியதும், மெய்மறக்கச் செய்யக்கூடியதும் புலன்களை அடிமைப்படுத்தக்கூடியதுமான கட்டுக்கதைகள் அவர்களுடைய விசுவாசத்தின் அஸ்திவாரமாக இருப்பதற்காக, வேதாகமத்தை நிராகரிக்கும்படி மனிதனை நடத்துகிறது. இதற்குமுன் மறுக்கப்பட்டதைப்போலவே, கிறிஸ்து இப்போதும் மறுக்கப்படுகிறார். ஆனால் அந்த வஞ்சகத்தை அறிந்துகொள்ளமுடியாமலிருக்கும்படி, சாத்தான் மக்களின் கண்களைக் குருடாக்கியிருக்கிறான். (17)

ஆவிமார்க்கத்தையும் அதன் செல்வாக்கின்கீழ் வருவதிலுள்ள அபாயத்தைப்பற்றியும், சிலர் மட்டுமே சரியாக புரிந்துகொண்டுள்ளனர். அநேகர் அதை அறிந்துகொள்ள வேண்டுமென்ற அவர்களது ஆவலைத் திருப்திப்படுத்த அதனுடன் வீணாகத் தலையிடுகின்றனர். அதில் அவர்களுக்கு உண்மையான விசுவாசமில்லாமல் இருந்து, ஆவியின் கட்டுப்பாட்டிற்குத் தங்களைக் கீழ்ப்படுத்த வேண்டியதாகிவிடும் என்னும் எண்ணம் அவர்களை பயங்கரத்தால் நிரப்பும். ஆனால் தடைசெய்யப்பட்ட இடத்தில், அவர்கள் நுழைய முயலுகின்றனர். அழிக்கும் வலிமைமிக்கவன், அவர்களது சித்தத்திற்கு எதிராக அவர்கள்மீது அவனது வல்லமையை செயல்படுத்துகிறான். அவனது திசையில் செல்லுவதற்குக் கீழ்ப்படிய ஒரு தடவை தங்கள் மனதை இழக்கும்படி அவர்கள் விட்டுவிடும்போது, அவர்களை அவன் அடிமைகளாகப் பிடித்துக்கொள்ளுகிறான். மனதை மயக்கும் இந்தக் கவர்ச்சி அலையிலிருந்து தங்களுடைய சுயபலத்தால் விடுபடுவது என்பது இயலாததாக உள்ளது. கண்ணியில் பிடிக்கப்பட்டுள்ள இந்த ஆத்துமாக்களை விசுவாசத்துடன் கூடிய ஆர்வமிக்க ஜெபத்திற்கு விடையாக தேவனால் அருளப்படும் வல்லமை ஒன்றினால் மட்டுமேயன்றி வேறு எதினாலும் விடுவிக்க இயலாது. (18)

தீய சுபாவமுடைய செயல்களில் ஈடுபடும் அனைவரும், அல்லது ஒரு பாவத்தை அறிந்து, வேண்டுமென்றே அதைச் சிந்தையில் வைத்துப் போற்றும் அனைவரும், சாத்தானின் சோதனைகளை அழைக்கின்றனர்.

அவர்கள் தேவனிடமிருந்தும் தேவதூதர்களின் காவலிலிருந்தும் தங்களைப் பிரித்துக்கொள்ளுகின்றனர். தீயவன், அவனது வஞ்சகத்திட்டத்தை முன்வைக்கும்போது, அவர்கள் பாதுகாப்பு அற்றவர்களாக இருந்து அவனது எளிதான இரையாக விழுந்து விடுகின்றனர். இவ்விதமாக, அவனது வல்லமைக்குள் தங்களை வைப்பவர்கள் , அவர்களது நடத்தை எங்கு சென்றுமுடியும் என்பதை உணராதவர்களாக உள்ளனர். அவர்களைக் கவிழ்ப்பதில் வெற்றி அடைந்தபின், பிறரைக் கெடுக்க அவர்களைத் தனது பிரதிநிதிகளாக சோதனைக்காரன் இழுத்துக்கொள்ளுகிறான். (19)

“அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டியதல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தை யின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்ச மில்லை” (ஏசா. 8:19,20) என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார். மனிதனுடைய இயல்பையும் மரித்தவர்களின் நிலையையும்பற்றி வேதவாக்கியங்களில் மிகவும் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கும் சத்தியங்களைப் பெற்றுக் கொள்ள மனிதர்கள் விருப்பமுள்ளவர்களாக இருந்திருந்ததால், ஆவிமார்க்கம் பாராட்டும் உரிமைகளிலும், வெளிக்காட்டல்களிலும் பொய்யான அடையாளங்களுடனும் அற்புதங்களுடனும் சாத்தான் செயலாற்றுவதை அவர்களால் காணமுடியும். மாம்ச சிந்தையுடன் ஒத்துப்போகக்கூடிய சுயாதீனத்திற்கு இணங்குவதைவிட, அவர்கள் நேசிக்கும் பாவங்களை விட்டுவிலகுவதைவிட, திரளானவர்கள் வெளிச்சத்திற்குத் தங்கள் கண்களை மூடிக்கொண்டு, எச்சரிக்கைகளை மதிக்காமல் நேராகச் செல்லுகின்றனர். சாத்தான் அவனது வலையை அவர்களைச் சுற்றிப் பின்னுகிறான். அவர்கள் அவனுக்கு எளிதான இரையாகின்றனர். “இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனடியால் ... சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்” –2 தெச. 2:10–12. (20)

ஆவிமார்க்கத்தின் சோதனைகளை எதிர்ப்பவர்கள் மனிதர்களுடன் மட்டும் போரிடாமல், சாத்தானுடனும் அவனது தூதர்களுடனுங்கூடப் போராடுகின்றனர். துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் ... வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் அவர்கள்

போரில் ஈடுபட்டிருக்கின்றனர். பரலோக ஊழியக்காரர்களின் வல்லமையால், பின்நோக்கி விரட்டப்படாதவரை சாத்தான் ஒரு அங்குல இடத்தைக்கூட விட்டுக்கொடுக்கமாட்டான். இப்படி எழுதியிருக்கிறதே என்னும் வார்த்தையினால் நமது இரட்சகர் சாத்தானை சந்தித்ததைப்போல, அவனைச் சந்திப்பதற்கு தேவனுடைய மக்கள் தகுதி உள்ளவர்களாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் நாட்களில், வேத வாக்கியங்களை மேற்கோளாகக் காட்டியதைப் போலவே, சாத்தானால் இப்பொழுதும் செய்யமுடியும். அவனது மாயங்களைத் தாங்கும் விதத்தில், அதன் போதனைகளை அவன் தாறுமாறாக்குவான். ஆபத்தான இப்படிப்பட்ட நேரத்தில் நிற்க விரும்புகிறவர்கள், வேதவாக்கியங்களின் சான்றுகளைத் தங்களுக்கென்று புரிந்திருக்கவேண்டும். (21)

தங்களால் நேசிக்கப்படும் உறவினர்கள் அல்லது நண்பர்களின் வடிவில் தோன்றி, மிகப் பயங்கரமான மதப்புரட்டுகளை அறிவிக்கும் பிசாசுகளின்ஆவிகளை மனிதர்கள் எதிர்கொள்ளவேண்டியதிருக்கும். இந்த ஆவிகள், நமது மென்மையான அனுதாபங்களைத் தூண்டி, அவர்கள் கூறும் போலியானவைகளை ஆதரிப்பதற்காக, அற்புதங்களைச் செய்வார்கள். மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள், இப்படித் தோன்றுபவைகள்—பிசாசுகளின் ஆவிகளே என்கிற வேதாகம சத்தியத்துடன் அவர்களைத் தாக்குப்பிடித்து நிற்பதற்கு நாம் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும். (22)

“பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்கு” (வெளி. 3:10) சற்று முன்பாக நாம் இருக்கிறோம். தேவனுடைய வார்த்தையின்மீது உறுதியாக நிலைநிறுத்தப்படாமலிருக்கும் அனைவரின் விசுவாசமும் வஞ்சிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும். பிள்ளைகளின் மீதுள்ள கட்டுப்பாட்டை ஆதாயப்படுத்திக்கொள்ள, சாத்தான் அநீதியினால் உண்டாகும் சகல வித வஞ்சகத்தோடும் செயலாற்றுகிறான். அவனது வஞ்சகங்கள் தொடர்ந்து அதிகரிக்கும். ஆனால் மனிதர்கள் தாங்களாகவே அவனது சோதனை களுக்கு இணங்கும்போதுமட்டுமே, அவனால் தனது நோக்கத்தில் ஆதாயமடைய முடியும். சத்தியத்தைப்பற்றிய அறிவை ஆவலுடன் தேடி, கீழ்ப்படிதலின் மூலமாகத் தங்களது ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்த முயன்றவர்கள், இவ்விதமான போராட்டத்திற்காக ஆயத்தம்செய்ய முடிந்தவைகளைச் செய்பவர்கள், நிச்சயமாகவே சத்தியத்தின் தேவனில் ஒரு பாதுகாப்பைக் காண்பார்கள். என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், நானும் உன்னைக் காப்பேன் என்பது இரட்சகரின் வாக்குத்தத்தமாக உள்ளது. அவரை நம்புகின்ற ஒரே ஒரு ஆத்துமாகூட, சாத்தானால் மேற்கொள்ளப்படுவதற்கு விட்டுவிடப்படாதபடி,

அவரது மக்களைப் பாதுகாக்க,அவர் பரலோகத்தில் உள்ள ஒவ்வொரு தேவதூதனையும் விரைவாக அனுப்பிவைப்பார். (23)

தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து துன்மார்க்கர் தங்களைக் காத்துக்கொள்ளும்படி, துன்மார்க்கரின்மீது வரவிருக்கும் பயங்கரமான வஞ்சகத்தை ஏசாயா தீர்க்கதரிசி: “நீங்கள்: மரணத்தோடே உடன்படிக்கையும், பாதாளத்தோடே ஒப்பந்தமும் பண்ணினோம்; வாதை பெரு வெள்ளமாய்ப் புரண்டுவந்தாலும் எங்களை அணுகாது; நாங்கள் பொய்யை எங்களுக்கு அடைக்கலமாக்கி, மாயையின் மறைவிலே வந்து அடைந்தோம் என்கிறீர்களே” (ஏசா. 28:15) என்கிறார். பாவிக்குத் தண்டனை இல்லை, அத்தனைபேரும் எத்தனை கறைப்பட்டிருந்தாலும் தேவதூதர்களைப் போலாவதற்காகப் பரலோகத்திற்கு உயர்த்தப்படுவார்கள் என்ற நிச்சயத்தினால் தங்களுக்குத் தாங்களே ஆறுதல் செய்துகொள்ளும் முரட்டாட்டமிக்க, பாவத்திற்கு வருந்தாதவர்கள் இங்கு விவரிக்கப்பட்டுள்ள வகுப்பில் உள்ளனர். இக்கட்டுக்காலத்தில் நீதிமானுக்குப் பாதுகாப்பாக இருக்கும்படி பரலோகம் ஏற்பாடு செய்திருக்கும் சத்தியத்தை மறுத்து, அதற்குப் பதிலாக சாத்தான் தரும் பொய்யை அடைக்கலமாக ஏற்றுக்கொள்ளுபவர்கள்—ஆவிமார்க்கத்தின் வஞ்சகமிக்க போலியை ஏற்றுக்கொள்ளுபவர்கள்—மிக அதிக அழுத்தத்துடன் மரணத்துடனும் பாதாளத்துடனும் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கின்றனர். (24)

இந்தத் தலைமுறையில் உள்ள மக்களின் குருட்டுத்தனம் வெளியில் தெரிவிப்பதற்கும் அப்பாற்பட்ட ஆச்சரியமானதாக இருக் கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் சாத்தானின் வஞ்சகத்தை ஆவலுள்ள நம்பிக்கையுடன் ஏற்று, தேவனுடைய வார்த்தை நம்பக் கூடியதாக இல்லை என நிராகரிக்கின்றனர். சந்தேகவாதிகளும் ஏளனம் செய்பவர் களும் தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர்கள் ஆகியவர்களின் விசுவாசத் திற்காகப் போரிடுபவர்களின் மத வைராக்கியத்தைப் பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டுகின்றனர். கிறிஸ்துவைப்பற்றியும், இரட்சிப்பின் திட்டம்பற்றியும், சத்தியத்தை நிராகரிப்பவர்களின்மீது உண்டாகவுள்ள தேவ கோபமாகிய தண்டனையைப்பற்றியும் உள்ள பக்திவிநயமான அறிவிப்புகளைக் கேலியாகச் சிரிக்கும்படி உயர்த்திப்பிடித்து, அவைகளில் இருந்து அவர்கள் தங்களைத் தாங்களாகவே வேறு திசையில் திருப்பிக்கொள்ளுகின்றனர். தேவனுடைய உரிமைகளை ஒப்புக்கொண்டு அறிக்கைசெய்யவும் அவரது கற்பனைகளின் அவசியங்களுக்குக் கீழ்ப்படியவும் மறுக்கிற இடுக்கமான பலவீனமான மூடநம்பிக்கையுள்ள மனங்களின்மீது அவர்கள் மிகுந்த இரக்கம் பாராட்டுகின்றனர். தேவனுடைய பழிவாங்குதலுக்கும் அவர்களுக்கும்

இடையில், கடக்கமுடியாததும் நுழையமுடியாததுமான ஒரு வேலியை அமைத்துக்கொண்டது போலவும்—மரணத்துடன் ஒரு உடன்படிக்கையையும் நரகத்துடன் ஒரு ஒப்பந்தத்தையும் செய்துகொண்டதுபோலவுமான நிச்சயத்தை உண்மையாகவே அந்த அளவிற்கு வெளிக்காட்டுகின்றனர். எதினாலும் அவர்களது பயத்தைப் போக்கமுடியாது. அவனுடைய கண்ணியிலிருந்து விடுபடும் பெலனும் விருப்பமும் இல்லாத அளவிற்கு சோதனைக்காரனுக்கு முழுமையாக இணங்கி, அவனுடன் மிகநெருக்கமாக ஒற்றுமைப்பட்டிருந்து, அவனுடைய ஆவியினால் முற்றிலுமாக நிரப்பப்பட்டுள்ளனர். (25)

உலகத்தை வஞ்சிக்கும் இறுதிமுயற்சிக்காக சாத்தான் நீண்ட நாட்களாக ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறான். “அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது” (ஆதி. 3:4,5) என்று ஏதேனில் ஏவாளிடம் கூறிய வாக்குறுதியில் அவனது ஏமாற்றுதலின் அஸ்திவாரம் போடப்பட்டிருந்தது. அவனது வஞ்சகத்தின் சிறப்புச் செயலாகிய ஆவிமார்க்கத்தின் முன்னேற்றத்தைச் செய்வதற்கான பாதையில் அவன் கொஞ்சம் கொஞ்சமாக ஆயத்தம் செய்திருக்கிறான். தந்திரமான அவனது திட்டத்தில், பூரணமான நிறைவேறுதலை அவன் இன்னும் அடையவில்லை. ஆனால் மீதியான கடைசி நேரத்தில், அது அந்த நிலையை அடையும். “தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது” (வெளி. 16:13,14) என்று தீர்க்கதரிசி கூறுகிறான். அவருடைய வார்த்தையின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம் தேவ வல்லமையினால் காக்கப்படுகிறவர்களைத் தவிர, உலகம் முழுவதும் இந்த மாயமான ஏமாற்றத்திற்குள்ளாக அடித்துச் செல்லப்படும். தேவனுடைய கோபாக்கினை ஊற்றப்படுவதினால் எழுப்பப்படுவதற்காகவே மக்கள் சாவுக்குரிய பாதுகாப்பினால் உறங்கவைக்கப்பட்டுள்ளனர். (26)

“நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டு போகும். நீங்கள் மரணத்தோடு செய்த உடன்படிக்கை விருதாவாகி, நீங்கள் பாதாளத்தோடு செய்த ஒப்பந்தம் நிற்காதேபோம்; வாதை புரண்டுவரும்போது அதின்கீழ் மிதிக்கப்படுவீர்கள்” (ஏசாயா 28:17,18) என்று கர்த்தர் கூறுகிறார். (27) ★

## 35

# போப்புமார்க்கத்தின் தன்மைகளும் நோக்கங்களும்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 563–581)**

முந்தைய ஆண்டுகளைவிட தற்காலத்தில் ரோமன் கத்தோலிக்க மார்க்கம் புரொட்டஸ்டாண்டுகளால் மிக அதிகமான ஆதரவுடன் கருதப் படுகிறது. கத்தோலிக்கமார்க்கம் ஆட்சிசெய்யாதிருந்த நாடுகளில் அவர்கள் தங்களது செல்வாக்குகளை ஆதாயப்படுத்திக் கொள்ளுவதற்காக ஒப்புரவாகும் நடவடிக்கையில் போப்பு மார்க்கத்திடமிருந்து சீர்திருத்த சபைகளை வேறுபடுத்தியிருந்த கோட்பாடுகளில் ஒரு அலட்சியம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. மிக முக்கியமான விஷயங்களில் நாம் நினைத்துக் கொண்டிருந்ததுபோல, அதிகமாக வேறுபட்டிருக்கவில்லை. கொஞ்சம் விட்டுக்கொடுத்தால் ரோம் நகருடனுள்ள உறவை சற்று நன்றாக புரிந்துகொள்ளமுடியும் என்கிற அபிப்பிராயம், முன்னேற்றமடைந்து வருகிறது. மிக அருமையான விலைகொடுத்து வாங்கப்பட்டிருந்த மனச்சாட்சியின் சுயாதீனத்திற்கு புரொட்டஸ்டாண்டுகள் மதிப்புக் கொடுத்திருந்த காலம் அது. போப்புமார்க்கத்தை வெறுக்கும்படி அவர்கள் அவர்களுடைய பிள்ளை களுக்குக் கற்றுக்கொடுத்து, ரோமுடன் இசைந்துபோவது, தேவனுக்குத் துரோகம் செய்வது என்று கருதியிருந்தனர். ஆனால் இப்பொழுது வெளிக்காட்டப்படும் உணர்வுகள் எவ்வளவு மாறுபட்டிருக்கிறது! (1)

போப்புமார்க்க ஆதரவாளர்கள் சபை அசுத்தமடைந்துள்ளது என்று அறிவிக்கின்றனர். புரொட்டஸ்டாண்டுகள் இந்த அறிவிப்பை ஏற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்களாக உள்ளனர். அறியாமையும் இருளுமிருந்த நூற்றாண்டுகளில் நிகழ்ந்த அருவருப்புக்களையும் கீழானவைகளையும் வைத்து, இன்றுள்ள சபையை நியாயம் தீர்ப்பது அநீதி என்று அநேகர் வலியுறுத்துகின்றனர். அக்காலத்தில் நிகழ்ந்த காட்டுமிராண்டித்தனத்தின்

பலனான பயங்கரமான கொடுமைகளை அவர்கள் மன்னித்து நவீன கால நாகரிகத்தின் செல்வாக்குகள் அதன் உணர்வுகளை மாற்றிவிட்டது என்று மன்றாடுகின்றனர். (2)

இந்த இறுமாப்புள்ள வல்லமை, எட்டு நூறு வருடங்களாக அது தவறாமை உடையது என்னும் அதன் உரிமைபாராட்டுதலை முன்வைத்து வந்துள்ளதை இந்த மனிதர்கள் மறந்துவிட்டார்களா? அதைக் கைவிடுவதற்குப் பதிலாக, இந்த உரிமை இதற்குமுன் ஒருபோதும் இல்லாததைவிட பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிகவும் தீர்மானமாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. ரோமசபை "தான் ஒருபோதும் தவறு செய்யவில்லை. இனிமேலும் தவறு செய்யப்போவதில்லை. வேதவாக்கியங்களின்படி ஒருபோதும் தவறு செய்யாது" என்று உறுதியாக அறிவித்துக்கொண்டிருக்கும்போது, கடந்த காலங்களில் அதன் நடத்தையை ஆளுகை செய்திருந்த கொள்கைகள் அனைத்தையும் அதனால் எப்படி மறுக்க முடியும். (John L. von Mosheim,Institutes of Ecclesiastical History,book 3,century II,part 2,chapter 2,section 9,note 17). (3)

தவறாமை உடையது என்னும் தனது உரிமைபாராட்டுதலை போப்பு சபை ஒருபோதும் விட்டு விலகாது. அதன் பிடிவாதமான கோட்பாடுகளை நிராகரித்தவர்களுக்கு அது செய்துள்ள உபத்திரவம் சரியே என்று அது பற்றிக்கொண்டிருக்கிறது. மீண்டும் வாய்ப்புக் கிடைக்குமானால், அது முன்னர் செய்த செயல்களை திரும்பச் செய்யாமலிருக்குமா? மதச்சார்பற்ற அரசுகளால் புகுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, ரோம சபை அதன் முந்தைய வல்லமையில் மீண்டும் வைக்கப்படட்டும். அப்பொழுது அதன் கொடுங்கோன்மையும் உபத்திரவமும் மீண்டும் விரைவாக எழுப்புதல் அடையும். (4)

மனச்சாட்சியின் சுதந்திரத்தைப்பற்றிய போப்புமார்க்கத் தலைமையின் மனோபாவத்தைப்பற்றியும், அதின் கொள்கையின் வெற்றியினால் குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டைப் பயமுறுத்தும் ஆபத்துக்களைப்பற்றியும், மிகவும் புகழ்வாய்ந்த ஒரு ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார். (5)

"அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ரோம மார்க்கத்தின்மீது சுமத்தப்படும் பயம், குறுகிய மனப்பான்மை அல்லது சிறுபிள்ளைத்தனம் என்று கூறும் ஏராளமானோர் உள்ளனர். அப்படிப்பட்டவர்கள் நமது சுதந்திரமான அமைப்புகளுக்கு விரோதமாக உள்ள எந்த சுபாவத்தையும் அல்லது அதன் வளர்ச்சியில் வரவிருக்கும் தீமை எதையும் ரோமமார்க்கத்தில் காணவில்லை. எனவே நமது அரசின் அடிப்படைக் கொள்கைகள் சிலவற்றுடன் ரோம சபையின் கொள்கைகளில் சிலவற்றை ஒப்பிட்டுப்பார்ப்போமாக. (6)

அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் அமைப்பு மனச்சாட்சியின் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. அதைவிட அருமையானதும் அடிப்படையானதும் வேறெதுவும் இல்லை. 1854–ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15–ம் தேதி, ஒன்பதாவது போப் பயஸ் என்பவர் அவரது சபை நிர்வாகிகளுக்கான சுற்றறிக்கைக் கடிதத்தில்: "மனச்சாட்சியின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகச் செயலாற்றப்பட்ட கீழ்த்தரமான தவறுகள்மிக்க கோட்பாடுகள் அல்லது போதனைகள், பெரும் கொள்ளைநோய் போன்ற தவறாகும்—எல்லா கொள்ளைநோய்களையும்விட மிகவும் அதிகமாகப் பயப்படவேண்டிய பெரிய கொள்ளைநோயாக ஒரு நாட்டில் உள்ளது" என்று குறிப்பிட்டார். அதே போப், 1864–ம் வருடம் டிசம்பர் 8–ம் தேதி எழுதிய அவரது சபை நிர்வாகிகளுக்கான சுற்றறிக்கைக் கடிதத்தில்: "மனச்சாட்சியிலும் தேவனைத் தொழுகின்ற விதத்திலும் இருக்கவேண்டிய சுதந்திரத்தை வலியுறுத்துபவர்களையும், சபை பலாத்காரத்தைச் செயல்படுத்தாது என்றிருப்பவர்களையும் சபித்தார்." (7)

"அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ரோமசபையின் சமாதானப் பிரியமான குரல் அதன் மனமாற்றத்தை அர்த்தப்படுத்தவில்லை. அது உதவியற்றதாக இருக்கும் இடத்தில் சகித்துக்கொண்டிருக்கிறது. 'கத்தோலிக்க உலகத்திற்கு ஆபத்தில்லாதவரை எதிர்ப்பு செயல்படுத்தப்படலாம், மதச் சுதந்திரமும் சாதாரணமாகச் சகித்துக்கொள்ளப்படுகிறது' என்று ஓகோனார் என்னும் ரோம பேராயர் கூறுகிறார். 'மதப்புரட்டும் நம்பிக்கையின்மையும் குற்றங்களாகும். இத்தாலி, ஸ்பெயின் போன்ற கிறிஸ்தவநாடுகளில், உதாரணமாக எங்கு மக்களனைவரும் ரோமன் கத்தோலிக்கர்களாக இருக்கிறார்களோ, எங்கு கத்தோலிக்கமதம் அந்த நாட்டின் முக்கியமான சட்டமாக இருக்கிறதோ, அங்கு, மற்ற குற்றங்களைப் போலவே இதற்கும் அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்' என்று செயின்ட் லூயிசின் தலைமைப் பேராயர் ஒரு தடவை கூறினார்.... (8)

"ரோம சபையிலுள்ள ஒவ்வொரு கர்தினாலும், பேராயரும் போப்புவுடன் உள்ள ராஜபக்திக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கிறார்கள். அதில்: 'நமது கர்த்தராயிருக்கிற போப்புவிற்கும் (Lord Pope) அல்லது அவருக்குப்பின் வரக்கூடியவருக்கும் எதிராகவுள்ள மதப்புரட்டுகளையும் பிரிந்துசெல்லும் தன்மைகளையும், கலகக்காரர்களையும் என்னால் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு நான் உபத்திரவப்படுத்தி எதிர்ப்பேன்' என்றிருக்கிறது."—Josiah Strong,Our Country, ch. 5,pars. 2–4. (9)

ரோமன் கத்தோலிக்க சமுகத்தில் மெய்யான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மையாகும். ஆயிரக்கணக்கானவர்கள்

அவர்களுக்குக் கிடைத்துள்ள மேலான ஒளிக்குத் தக்கதாக தேவனுக்கு ஊழியம் செய்கின்றனர். தேவனுடைய வார்த்தையினிடத்திற்கு நடத்தும் பாதை, அவர்களுக்கு அனுமதிக்கப்படாததினால், அவர்கள் சத்தியத்தை அறியாதவர்களாக உள்ளனர். உயிரோட்டமான—இருதயப்பூர்வமான ஆராதனைக்கும், வீணான சடங்குகளுக்கும் இடையில் உள்ள வேற்றுமை களை அவர்கள் ஒருபோதும் கண்டதில்லை. மாயமும் அதிருப்தியுமிக்க ஒரு விசுவாசத்தில் கற்பிக்கப்பட்டிருக்கும் இந்த ஆத்துமாக்களை, மிகுந்த மென்மையான இரக்கத்ததுடன் தேவன் பார்க்கிறார். இவர்களைச் சூழ்ந்துள்ள கடினமான இருளை ஒளிக்கதிர்கள் ஊடுருவிச் செல்ல தேவன் வகைசெய்வார். சத்தியத்தை இயேசுவில் உள்ளபடி அவர்களுக்கு வெளிப்படுத்துவார். அநேகர் அவருடைய மக்களுடன் சேர்ந்து நிற்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். (10)

ஆனால் ரோமமார்க்கம் ஒரு அமைப்பாக, இதற்குமுன் அதன் வரலாற்றில் இருந்ததைவிட, இப்போது கிறிஸ்துவின் சுவிசேஷத்துடன் அதிக இசைவுள்ளதாக இல்லை. புரொட்டஸ்டாண்டு சபைகள் பெரும் இருளில் உள்ளன. அப்படி இல்லாவிட்டால், அவைகள் காலங்களின் அடையாளங்களை அறிந்திருக்கும். ரோமமார்க்கம் அதன் திட்டங்களிலும் செயல்முறைகளிலும் வெகுதூரம் எட்டக்கூடியதாக இருக்கிறது. உலகத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமையை மீண்டும் பெறவும், உபத்திரவத்தை மறுபடியும் நடைமுறைப்படுத்தவும், புரொட்டஸ்டாண்டு மார்க்கம் செய்துள்ள அனைத்தையும் இல்லாமல்போகச்செய்யவும், பயங்கரமும் தீர்மானமுமுள்ள ஒரு போராட்டத்திற்கு ஆயத்தம்செய்ய, அது தனது ஒவ்வொரு கருவியையும் செயல்படுத்தி, அதன் செல்வாக்கை விரிவுபடுத்தி, அதன் வல்லமையை அதிகப்படுத்திக்கொண்டிருக்கிறது. ரோமமார்க்கம் எல்லா பக்கங்களிலும் அனுகூலம் அடைந்துவருகிறது. புரொட்டஸ்டாண்டு நாடுகளில் அதன் சிறிதும் பெரிதுமான ஆலயங்களின் எண்ணிக்கை, மிகவும் அதிகமாகி வருவதைக் காணுங்கள். அமெரிக்காவில் புரொட்டஸ்டாண்டுகளால் ஆதரிக்கப்படும் அதின் கல்லூரிகளுக்கும் மடாலயங்களுக்கும் கிடைத்துவரும் மதிப்பைப் பாருங்கள். இங்கிலாந்தில் சமயச்சடங்குமுறை வளர்ந்துவருவதையும், ரோமார்க்கத்திற்கு அடிக்கடி மக்கள் சபைமாறிச் செல்லுவதையும் கவனியுங்கள். சுவிசேஷத்தின் தூய்மையான கொள்கைக்கு மதிப்புக் கொடுப்பவர்களின் கவலையை, இப்படிப்பட்ட செயல்கள் துயிலெழச்செய்ய வேண்டும். (11)

பாப்பிஸ்டுகளே கண்டு வியக்குமளவிற்கும், காரணம் புரிந்து கொள்ளமுடியாத அளவிற்கும், புரொட்டஸ்டாண்டுகள் ரோமமார்க்கத்தின்

காரியங்களில் குறுக்கிட்டு அதன் மாதிரியைப் பின்பற்றி, அதனுடன் சமரசங்களையும் விட்டுக்கொடுத்தல்களையும் செய்துள்ளனர். ரோம மார்க்கத்தின் உண்மையான சுபாவத்திற்கும், அதன் மேலாதிக்கத்திலிருந்து உண்டாகக்கூடிய பயப்படக்கூடிய அபாயங்களுக்கும், மனிதர்கள் தங்கள் கண்களை மூடிக்கொண்டுள்ளனர். சமுகம், மதச்சுதந்திரம் ஆகியவைகளுக்கு எதிரான இந்தப் பயங்கரமான எதிரியின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக, மக்கள் எழுப்பப்படவேண்டியது அவசியமாகும். (12)

கத்தோலிக்க மதம் கவர்ச்சியற்றது என்றும், அதன் ஆராதனை முறைகள் மந்தமான—அர்த்தமற்ற சடங்காச்சாரங்கள் என்றும், அநேக புரொட்டஸ்டாண்டுகள் அனுமானித்துக்கொண்டிருக்கின்றனர். இங்கு அவர்கள் தவறுகின்றனர். ரோமமார்க்கம் வஞ்சகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தபோதிலும், அது அவலட்சணமான தோற்றத்தை உடையதல்ல. ரோமசபையின் சமயச்சடங்குகள், ஆழமாக உள்ளத்தைத் தொடக்கூடிய சடங்குகளாகும். அதன் ஆடம்பரமும் பகட்டுமிக்க வெளித்தோற்றமும் பக்திவிநயமான சடங்குகளும் மக்களின் உணர்வுகளை வசீகரித்து, காரணங்களை அறியும் மனச்சாட்சியின் சத்தத்தை மௌனப்படுத்திவிடுகிறது. கண்கள் கவர்ந்திழுக்கப்படுகின்றன. பிரம்மாண்டமான ஆலயங்கள், கம்பீரமான ஊர்வலங்கள், தங்கமயமான பலிபீடங்கள், அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட புண்ணிய ஸ்தலங்கள், சிறப்பான சித்திரங்கள், கண்கவரும் சிற்ப வேலைப்பாடுகள் ஆகியவைகள் அழகின்மீதுள்ள வாஞ்சையைக் கவருகின்றன. செவிகளும் அடிமைப்படுத்தப்படுகின்றன. அதன் இசை மிஞ்சினது. இசைக் கருவிகளின் மிக ஆழமான ஒலி அநேகரது இனியபாடல்களுடன் கலந்து அதன் குவிந்த கூரை மண்டபத்தின் உட்புறங்களிலும், தூண்களின்மீதுள்ள மேடைகளிலும், உயர எழும்பி நிறையும்போது, மனதை வியப்பிலும் பக்தியிலும் நிரப்பத் தவறாது. (13)

இந்தப் பிரகாசமான வெளி அலங்காரமும், ஆடம்பரமான சடங்குகளும் பாவத்தால் நோயுற்றிருக்கும் ஆத்துமாவைக் கேலி மட்டுமே செய்கிறதுமல்லாமல், அதன் உட்புறம் கறைமிக்கதாக உள்ளது என்பதற்கு ஒரு சான்றாகவும் உள்ளது. கிறிஸ்துவின் மார்க்கம், அதற்கு இவ்விதமான கவர்ச்சி அவசியம் என்று சிபாரிசு செய்வதில்லை. சிலுவையிலிருந்து வீசும் ஒளியினால், மெய்யான கிறிஸ்தவம் தூய்மையும், வசீகரமும் உள்ளதாகக் காட்சி அளிக்கிறது. ஆகையால் அதன் உண்மையான மதிப்பைப் புறம்பான அலங்காரங்கள் எதினாலும் அதிகரிக்கமுடியாது. பரிசுத்தத்தினால் உண்டாகும் அழகு, எளிமையும் சாந்தமுமுள்ள ஆவி ஆகியவைதான் தேவனிடம் மதிப்பு உள்ளவையாக உள்ளன. (14)

திறமையான அழகு, தூய்மைக்கும் உயர்ந்த சிந்தனைக்கும் ஒரு அடையாளமாயிருக்கும் என்பது அவசியமல்ல. கலையைப்பற்றிய உயர்ந்த கருத்து, சுவைபற்றிய நுணுக்கம் ஆகியவை அடிக்கடி உலகப் பிரகாரமான புலன்களைச் சார்ந்திருப்பவர்களின் மனங்களில் உள்ளன. ஆத்துமாவின் தேவைகளை மறந்துவிடவும், அழியாமை உள்ள எதிர்கால வாழ்க்கையைப்பற்றிய பார்வையை இழந்துவிடவும், அவர்களது முடிவில்லாத துணைவரிடமிருந்து அவர்களை வேறுபக்கம் திருப்பவும், இந்த உலகத்திற்கென்று வாழவும், மனிதர்களை நடத்திட இப்படிப்பட்ட செயல்கள் அடிக்கடி சாத்தானால் செய்யப்படுகின்றன. (15)

புதுப்பிக்கப்படாத இருதயத்திற்கு புறத்தோற்றங்களாலான ஒரு மதம் கவர்ச்சிமிக்கதாக உள்ளது. கத்தோலிக்க ஆராதனை முறையிலுள்ள தந்திரமிக்க மதிமயக்கும் வல்லமையினால், அநேகர் வஞ்சிக்கப்படுவதினால், ரோமசபையைப் பரலோகத்தின் வாசல் என எண்ணி பார்க்கவருகின்றனர். சத்தியம் என்னும் அஸ்திவாரத்தின்மீது தங்கள் பாதங்களை ஊன்றியிருப்பவர்களும், தேவனுடைய ஆவியினால் எவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றனவோ அவர்களும், அதன் செல்வாக்கிற்கு எதிரான சாட்சிகளாக உள்ளனர். கிறிஸ்துவைப்பற்றிய பரீட்சார்த்தமான அறிவில்லாத ஆயிரக்கணக்கானவர்கள் வல்லமையில்லாத தெய்வபக்தியின் தோற்றத்தை ஏற்றுக்கொள்ளும்படி நடத்தப்படுவார்கள். அப்படிப்பட்ட ஒரு மதத்தைத்தான் திரளானவர்கள் விரும்புகின்றனர். (16)

மன்னிக்கும் அதிகாரம் தனக்கு உண்டு என்னும் அதன் உரிமைபாராட்டுதல் ரோமன் கத்தோலிக்கர்களை பாவம் செய்வதற்குச் சுதந்திரம் உள்ளவர்களாக உணரச்செய்திருக்கிறது. மன்னிப்பு பெற செய்யவேண்டிய பாவ அறிக்கையும் தீமைசெய்வதற்கு உரிமம் வழங்கியிருக்கிறது. விழுந்துபோயிருக்கும் மனிதன்முன், முழங்காலில் நின்று தனது இரகசியமான எண்ணங்களையும் மனோபாவங்களையும் அறிக்கை செய்வதற்காக இருதயத்தைத் திறப்பவன் தனது மனிதத் தன்மையைத் தரம் தாழ்த்தி, ஆத்துமாவின் மேன்மைமிக்க தூண்டுதல்கள் ஒவ்வொன்றையும் தரக்குறைவு செய்கிறான். தனது வாழ்க்கையில் உள்ள பாவங்களை, தவறுசெய்யக்கூடிய சாவுக்கேதுவான மதுபானத்திலும் காமவிகாரங்களிலும் அடிக்கடி ஈடுபடும் ஒரு குருவானவரிடம் விவரிப்பதினால், அவனது சுபாவத்தின் தரம் கீழாக்கப்படுவதுடன், அதன் விளைவாக அவன் தீட்டுள்ளவனுமாகிறான். தேவனைப்பற்றிய அவனது எண்ணங்களும் விழுந்துபோன இனத்தின் சாயலாக கீழாக்கப்படுகிறது. ஏனென்றால் அந்த குருவானவர் தேவனின் பிரதிநிதியாக நிற்கிறார். மனிதனிடமே மனிதன் பாவ

அறிக்கை செய்வது உலகத்தைத் தீட்டுப்படுத்தி, அதன் இறுதி அழிவிற்கு அதனைத் தகுதிப்படுத்தும் தீமையின் இரகசியமான ஊற்றாக இருக்கிறது. அப்படியிருந்தும், சுயவிருப்பத்தின்படி நடக்கப் பிரியப்படும் ஒருவனுக்கு, தேவனிடம் ஆத்துமாவை திறப்பதைவிட சாவுக்குரிய ஒரு உடன் மனிதனிடம் பாவ அறிக்கை செய்வது, மகிழ்ச்சி தருவதாக உள்ளது. பாவத்தைவிட்டு விலகுவதைவிட, பாவப்பரிகாரச் செயல்களைச் செய்வது மானிட இயல்பிற்கு அதிகமான சுவையுள்ளதாக உள்ளது. மாமிசத்தின் இச்சைகளைச் சிலுவையில் அறைவதைவிடுத்து, இரட்டு உடுத்தி, உடலைத் துன்புறுத்தி, பாவப்பரிகாரச் செயல்களைச்செய்வது எளிதாக இருக்கிறது. கிறிஸ்துவின் நுகத்திற்குமுன் அதைச் சுமப்பதற்காகக் குனிவதைவிட மாம்சத்திற்குரிய இருதயம் சுமக்க விரும்பும் நுகம் அதிகப் பாரமானதாக உள்ளது. (17)

ரோம சபைக்கும் யூத சபைக்கும் இடையில், கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது நன்கு தெரியக்கூடிய ஒருமித்த தன்மை இருக்கிறது. யூதமக்கள் இரகசியமாக தேவனுடைய கற்பனையின் கொள்கைகள் ஒவ்வொன்றையும் காலின்கீழிட்டு மிதித்திருந்தபோது, கீழ்ப்படிவதை வேதனை மிக்கதாகவும் பாரமானதாகவும் ஆக்கியிருந்த நிர்பந்தமாகப் பணம் வசூலிப்பதாலும் பரிகாரம் செய்வதாலும் அதன் பிரமாணங்களை வெளியில் தெரியும்படி கைக்கொள்ளுவதில் கடுமையானவர்களாக இருந்தனர். யூதர்கள் கற்பனையின்மீது பக்தி உள்ளவர்களாக கூறிக்கொண்டிருந்ததைப்போல, ரோம கத்தோலிக்கர்கள் சிலுவையிடம் பக்திசெலுத்துவதாகக் கூறிக்கொள்ளுகின்றனர். சிலுவை எவரைச் சுட்டிக்காட்டுகிறதோ, அவரைத் தங்களுடைய வாழ்க்கையில் மறுதலித்துக் கொண்டிருக்கும்போதே கிறிஸ்துவின் பாடுகளின் அடையாளத்தை அவர்கள் உயர்த்துகின்றனர். (18)

போப்புமார்க்கவாதிகள் சிலுவையை அவர்களது ஆலயக் கட்டிடங்களின்மீதும் அவர்களது பீடங்களின்மீதும் அவர்களது உடைகளின்மீதும் வைக்கின்றனர். எல்லா இடங்களிலும் அந்த முத்திரை காணப்படுகிறது. வெளியரங்கமாக அது எங்கும் மேன்மைப்படுத்தப்படுகிறது. ஆனால் புத்தியில்லாத சடங்காச்சாரமாகிய திருப்பலிப் பூசையின்கீழும் தவறான விளக்கங்களிலும் கடுமையான தண்டங்களின்கீழும், கிறிஸ்துவின் போதனைகள் புதைக்கப்பட்டுள்ளன. “சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்” (மத்தேயு 23:4) என்ற மதவிரோதமிக்க யூதர்களைப்பற்றிய இரட்சகரின் வார்த்தைகள் அதைவிட அதிக வலிமையுடன் ரோமன் கத்தோலிக்க தலைவர்களுக்குப் பொருத்தமாக உள்ளன. சபையின் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் சுகபோகத்திலும் புலன்களை மகிழ்விக்கும்

செயல்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, மனச்சாட்சி உளள ஆத்துமாக்கள் எதிர்ப்புக்குள்ளான ஒரு தேவனுடைய கோபத்தைப்பற்றிய தொடர்ச்சியான திகிலில் வைக்கப்பட்டுள்ளனர். (19)

சிலைகளையும் புனிதப்பொருட்களையும் வணங்குதல், பரிசுத்தவான் களிடம் வேண்டுதல்செய்தல், போப்புவை உயர்த்துதல் ஆகியவை மக்களின் மனங்களை தேவனிடமிருந்தும் அவரது குமாரனிடமிருந்தும் வேறுபக்கமாகக் கவர்ந்திடும் சாத்தானின் கருவிகளாக உள்ளன. அவர்கள் பாழாக்கும்படி, எந்த ஒருவரின் மூலமாகமட்டுமே அவர்கள் இரட்சிப்பைக்காணமுடியுமோ அவரைவிட்டு அவர்களது கவனத்தைத் திருப்ப முயலுகிறான். “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” (மத்தேயு 11:28) என்று கூறியவரிடமிருந்து வேறு ஏதாவது பொருளின்மீது கவனம் வைக்கும்படி அவன் அவர்களைத் திசை திருப்பினான். (20)

தேவனுடைய சுபாவம், பாவத்தின் தன்மை, மாபெரும் ஆன்மீக யுத்தத்தில் சிதையின் மீதிருக்கும் உண்மையான பிரச்சனைகள் ஆகியவை களைத் தவறாக எடுத்துக்காட்டுவது சாத்தானின் இடைவிடாத முயற்சியாக உள்ளது. தெய்வீகப் பிரமாணத்திலுள்ள கடமைகளை அவனது தந்திரங்கள் குறைத்துக்காட்டி, மனிதனுக்குப் பாவம் செய்ய உரிமம் வழங்குகிறது. அதே சமயத்தில், தேவனைப்பற்றிய தவறான கருத்துக்களை இருதயத்தில் வைத்துப் போற்றும்படிச் செய்து, அதனால் அவரை அன்புடன் பார்ப்பதைவிட, பயத்துடனும் வெறுப்புடனும் பார்க்கச் செய்கிறான். அவனது சுபாவத்திலிருக்கிற வேறுபடுத்தமுடியாத கொடூரம் சிருஷ்டிகரின்மீது சுமத்தப்படுகிறது. அது மதச்சடங்குகளில் சேர்க்கப்பட்டு, வழிபாட்டுமுறைகளால் மனங்கள் குருடாக்கப்படவே, சாத்தான் அவர்களைத் தேவனுக்கெதிரான போரில், தனது ஏவலர்களாகச் சேர்த்துக்கொள்ளுகிறான். தேவனின் குணநலன்களைத் திரித்ததால், தெய்வத்தின் அருளைப் பெறுவதற்கு நரபலி அவசியம் என்று நம்பும்படி அஞ்ஞான மக்கள் நடத்தப்பட்டனர். அதனால் பலதரப்பட்ட விக்கிரக ஆராதனை முறைகளில் பயங்கரமான கொடூரங்கள் செயல்படுத்தப்பட்டன. ரோமசபை அஞ்ஞான சடங்குகளையும் கிறிஸ்தவத்தையும் இணைத்து, தேவனுடைய குணத்தை திரித்துக்கூறி, அதைவிட குறையாத கொடுமை களையும் கலகங்களையும் செயல்படுத்தியது. ரோம சபையின் மேலாதிக்கத்தின் காலத்தில், அதன் கோட்பாடுகளுக்கு இணங்கும்படி வற்புறுத்துவதற்கென்று சித்திரவதைசெய்யும் கருவிகள் இருந்தன. அதன் உரிமைகளுக்கு இணங்காதவர்களுக்காக அக்கினி கம்பங்கள் இருந்தன. நியாயத்தீர்ப்பு நாளில் வெளிப்படுத்தப்படும்வரை ஒருபோதும் அறியமுடியாத

அளவில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்ட பயங்கரங்கள் நிகழ்ந்தன. சபையின் மேலானவர்கள் அவர்களது எஜமானனான சாத்தானின்கீழ், முடிந்த அளவிற்குப் பெரும் சித்திரவதைகளைச் செய்யவும், அதன் கீழானவர்கள் சாகாமல் வைக்கப்படுவதற்கு உபாயங்களைக் காண ஆராய்ச்சிகள் செய்யவும் முனைந்தனர். அநேக காரியங்களில் இந்தக் கொடுமைகள் மனிதர்களின் தாங்கும் சக்தியின் எல்லைவரை, இயற்கை அந்தப் பேராட்டத்தை விட்டுவிடும்வரை, மரணமே இனிமையான விடுதலை என்று அவர்கள் வாஞ்சிக்கும்வரை, திரும்பத் திரும்பச் செய்யப்பட்டன. (21)

ரோமசபையின் எதிரிகளின் முடிவு அப்படிப்பட்டதாக இருந்தது. கசையடிகள், பஞ்சம் போன்ற பசியுடன் இருத்தல், இருதயத்தை நோயுறச்செய்யும் சகலவிதமான உடலை வருத்தும் முறைகள் போன்றவை அதனைச் சார்ந்தவர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தன. பாவத்திற்காக வருந்தியிருந்தவர்கள், பரலோகத்தின் ஆதரவை அடைந்துகொள்ளுவதற்காக, இயற்கையின் பிரமாணங்களை மீறினதினால் தேவப் பிரமாணத்தை மீறினர். அலைந்து திரியும் பூமிக்குரிய வாழ்க்கையில், மனிதருக்கு ஆசீர்வாதமாகவும் மகிழ்ச்சி தருவதாகவும் இருக்கும்படி தேவன் ஏற்படுத்தியிருந்த உறவுகளைப் பிய்த்தெறியும்படி அவர்கள் போதிக்கப்பட்டிருந்தனர். தங்களது ஆசைகளை நசுக்கி அடக்கும் வீணான முயற்சிகளில் தங்கள் வாழ்க்கையைக்கழித்து பலியான இலட்சக்கணக்கானவர்களின் புதைகுழிகளை உடையவையாக அதன் ஆலய வளாகங்கள் இருந்தன. (22)

நூற்றுக்கணக்கான வருடங்களாக தேவனை அறியாமலிருந்தவர்களுக்கு நடுவில் மட்டுமன்றி, கிறிஸ்தவமார்க்கத்தின் இருதயத்திலும் கிறிஸ்தவ மார்க்கம் முழுவதிலும், சாத்தான் தீர்மானத்துடன் நடத்தி இருந்த கொடூரத்தின் வெளிக்காட்டுதலை நாம் புரிந்துகொள்ள விரும்பினால், ரோம மார்க்கத்தின் வரலாற்றை மட்டுமே பார்த்தால் போதும். தேவனுக்கு கௌரவக்குறைவையும் மனிதனுக்கு துர்பாக்கியமான நிலையையும் கொண்டுவரும் அவனது நோக்கத்தை, இந்தப் பிரம்மாண்டமான வஞ்சக மிக்க கத்தோலிக்க அமைப்பின் மூலமாக தீமையின் பிரபு நிறைவேற்றிக் கொள்ளுகிறான். தன்னை மறைத்துக்கொள்ளுவதில் அவன் எவ்விதமாக வெற்றி பெறுகிறான் என்பதையும், சபைத் தலைவர்களின் மூலமாக அவன் தன் வேலையை நிறைவேற்றுவதையும் நாம் காணும்போது, வேதாகமத்தின்மீது ஏன் இந்த அளவிற்கு வெறுப்புள்ளவனாக இருக்கிறான் என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ளலாம். அந்தப் புத்தகம் வாசிக்கப்பட்டால், ஆண்டவரின் அன்பும் கிருபையும் வெளிப்படுத்தப்பட்டுவிடும். மனிதர்கள்மீது இந்தப்பாரமான சுமைகளை ஒன்றையும் அவர் வைப்பதில்லை என்பது

காணப்பட்டுவிடும். அவர் கேட்பதெல்லாம் நொறுங்குண்ட இருதயமும் தாழ்மையும் கீழ்ப்படிதலுள்ள ஆவியும்தான். (23)

பரலோகத்திற்குப் பொருத்தமானவர்களாவதற்காக ஆண்களும் பெண்களும் மடாலயங்களுக்குள் தங்களை அடைத்துக் கொள்ளவேண்டும் என்று இயேசு பெருமான் அவருடைய வாழ்க்கையில் உதாரணம் கொடுத்ததில்லை. அன்பும் அனுதாபமும் நசுக்கப்படவேண்டும் என்று அவர் ஒருபோதும் போதிக்கவில்லை. இரட்சகரின் இருதயம் அன்பினால் நிறைந்தொழுகிக்கொண்டிருந்தது. சன்மார்க்கத்திற்குரிய பூரணத்தைநோக்கி மனிதன் எந்த அளவிற்கு நெருங்குகிறானோ, அந்த அளவிற்கு அவனது புலன்கள் தெளிவுள்ளவையாகவும் பாவத்தைப்பற்றிய உணர்வு கூர்மையாகவுமாகி, துயரப்படுகிறவர்களின்மீதுள்ள அனுதாபம் மிகுந்த ஆழமாகிறது. போப்பு தன்னைக் கிறிஸ்துவின் பதிலாளி என்று உரிமை பாராட்டிக்கொள்ளுகிறார். ஆனால் இரட்சகரின் சுபாவத்துடன் அவரது சுபாவம் எவ்விதமாக ஒப்பிடக்கூடியதாக இருக்கிறது? கிறிஸ்துவைப் பரலோகத்தின் தேவன் என்று வணங்காததற்காக மனிதர்களைச் சிறைச்சாலைக்கும் சித்திரவதை செய்யும் கருவிக்கும் அவர் அனுப்பியதாக எப்போதாவது அறியப்பட்டுள்ளதா? அவரை ஏற்றுக்கொள்ளாதவர்களை மரணதண்டனைக்கு அவர் உட்படுத்தும் சத்தம் எப்போதாவது கேட்டதுண்டா? ஒரு கிராமத்தில் சமாரிய மக்களால் அவர் ஏற்றுக்கொள்ளப்படாமல் அலட்சியம் செய்யப்பட்டபோது, அப்போஸ்தலனாகிய யோவான் கோபத்தால் நிறைந்து, “ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள்.” இயேசு அவர்களை பரிதாபத்துடன் பார்த்து, அந்த குணத்தை அதட்டி, “மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்” (லூக்கா 9:54–56) என்றார். தன்னைக் கிறிஸ்துவின் பதிலாளி என்று கூறிக்கொள்ளுபவரின் ஆவியிலிருந்து கிறிஸ்து வெளிக்காட்டியிருந்த ஆவி எப்படி வித்தியாசமானதாக இருக்கிறது? (24)

ரோமன் கத்தோலிக்க சபை, அது இழைத்த பயங்கரமான கொடூரங்களின் ஆவணங்களை மன்னிப்புகோரி மறைத்துக்கொண்டு ஒரு அழகான தோற்றத்தை முன்னணியில் வைக்கிறது. அது கிறிஸ்துவைப்போன்ற உடைகளை அணிந்துகொண்டுள்ளது. ஆனால் மாற்றமடையவில்லை. கடந்த காலத்தில் போப்புமார்க்கத்தினிடம் இருந்த கொள்கைகள் இன்றும் இருக்கின்றன. இருண்ட காலங்களில் உருவாக்கப்பட்டிருந்த கோட்பாடுகள் இன்றும் தொடர்ந்து செயலாற்றுகின்றன. ஒருவரும் தங்களைத் தாங்களாகவே வஞ்சித்துக்கொள்ளவேண்டாம். சீர்திருத்த காலத்தில், அக்கிரமங்களை வெளியில் எடுத்துக்காட்டியதால் தங்களுடைய உயிர்களை

ஆபத்துக்குட்படுத்தியிருந்த தேவனுடைய மனிதர்கள் எழுந்த அந்தக் காலத்தில் உலகை ஆண்டிருந்த அதே போப்புமார்க்கத்தைத்தான் மதிக்கும்படி இன்று புரொட்டஸ்டாண்டுகள் விரைவாகத் தயாராகிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள்மீதும் இளவரசர்கள்மீதும் அது கொண்டிருந்த அகந்தையும் கர்வமுமிக்க மேலாதிக்கமான அதே எண்ணங்களையும் தேவனின் சிறப்புரிமையைத் தனது என்று உரிமை பாராட்டுவதையும் தன்னிடம் கொண்டிருக்கிறது. மனித சுயாதீனத்தை நசுக்கி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களைக் கொலைசெய்திருந்தபோது அதனிடமிருந்ததைவிட அதன் ஆவி இப்பொழுது கொடூரத்திலும் எதேச்சாதிகாரத்திலும் குறைவானதாக இல்லை. (25)

கடைசி காலத்தின் மருளவிழுகையாக இருக்கும் என்று தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறதுபோலவே போப்புமார்க்கம் இருக்கும் (2 தெச. 2:3,4). தன்னுடைய நோக்கத்தைச் சிறப்பாக நிறைவேற்ற எந்த சுபாவத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதை எடுத்துக்கொள்ளுவது, அதன் கொள்கையின் ஒரு பகுதியாகும். ஆனால் பச்சோந்தியின் மாறுபட்ட தோற்றங்களுக்கிடையில் மாறுபடாத பாம்பின் விஷத்தை அது மறைத்துவைத்திருக்கிறது. மதப்புரட்டுகளினால் உண்டாயிருக்கும் விசுவாசத்தையும் வாக்குத்தத்தத்தையும் கைக்கொள்ளவேண்டிய அவசியம் நமக்கில்லை என்று அது அறிவிக்கிறது. ஆயிரம் வருடங்களாகப் பரிசுத்தவான்களின் இரத்தத்தினால் ஆவணங்களில் எழுதப்பட்டுள்ள இந்த வல்லமை, இப்பொழுது கிறிஸ்துவினுடைய சபையின் ஒரு பகுதி என்று ஏற்றுக்கொள்ளப்படுமா? (26)

ரோமன் கத்தோலிக்க மார்க்கம் புரொட்டஸ்டாண்டு மார்க்கத்திலிருந்து முற்காலத்தில் இருந்ததைவிட இப்பொழுது குறைவாகவே வேறுபட்டிருக் கிறது என்னும் கருத்தைப் புரொட்டஸ்டாண்டு நாடுகள் காரணமில்லாமல் முன்வைக்கவில்லை. ஒரு மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. ஆனால் அந்த மாற்றம் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தில் அல்ல. இப்போதுள்ள புரொட்டஸ்டாண்டு மார்க்கத்தை ஒத்ததுபோல் ரோம சபை உண்மையாகவே தோன்றுகிறது. ஏனெனில் புரொட்டஸ்டாண்டு மார்க்கம் சீர்திருத்தவாதிகளின் காலத்திலிருந்து அந்த அளவிற்குச் சீரழிந்துள்ளது. (27)

புரொட்டஸ்டாண்டு சபைகள் உலகத்தின் ஆதரவைத் தேடிக்கொண்டிருக்கும்போது, பொய்யான சேவை அவர்களது கண்களைக் குருடாக்கிவிட்டது. தீமைகளனைத்தையும் நன்மைகளாகப் பார்ப்பதின் விளைவாக முடிவில் நல்லவைகளையெல்லாம் தீயவைகளாகப் பார்ப்பார்கள். பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை காப்பதற்குப்

பதிலாக, ரோமசபைக்கு எதிராகக் கொண்டிருந்த அன்பற்ற கருத்திற்காக மனம்வருந்தி அவர்களது மதவெறிக்காக மன்னிப்புக் கேட்பதுபோல இப்பொழுது இருக்கின்றனர். (28)

ரோம மார்க்கத்தின்மீது எவ்விதமான ஆதரவும் காட்டாமல், நோக்குகிறவர்களில் ஒரு பெரும் வகுப்பினர், அதன் வல்லமையையும் அதன் செல்வாக்கினால் உண்டாகும் ஆபத்தையும் பற்றி பயமற்றவர்களாக உள்ளனர். மத்திய காலத்தில் நிலவியிருந்த அறிவின்மையும் சன்மார்க்க இருளும் ரோமமார்க்கத்தின் பிடிவாதமான கொள்கைகளும், மூடநம்பிக்கை களும், ஒடுக்குதல்களும் பரவுவதற்குச் சாதகமாக இருந்தன. ஆனால் நவீன காலத்திலுள்ள பெரும்நுண்ணறிவும், எங்கும் பரவியிருக்கும் பொதுஅறிவும், மத சம்பந்தமான காரியங்களில் அதிகரித்துவரும் சுதந்திர மனப்பான்மையும் சகிப்புத்தன்மையின்மையையும் கொடுங்கோன்மையையும் புத்துயிர் பெறவிடாமல் தடுக்கின்றன என்று அநேகர் கூறுகின்றனர். அறிவொளியை அடைந்துள்ள இக்காலத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கும் என்கிற எண்ணமே சிரிக்கும்படியாக உள்ளது. நுண்ணறிவு, சன்மார்க்கம், மதம் ஆகியவைகளைப்பற்றிய அதிகமான ஒளி இந்தத் தலைமுறைகளின்மீது வீசுகிறது என்பது உண்மைதான். தேவனுடைய பரிசுத்த வார்த்தைகள் அடங்கிய திறந்த பக்கங்களில், பரலோகத்திலிருந்துள்ள ஒளி உலகத்தின் மீது வீசியிருக்கிறது. ஆனால் எந்த அளவிற்கு ஒளி அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவிற்கு புரட்டுகிறவர்களிடம் அல்லது நிராகரிப்பவர்களிடம் இருள் அதிகமாகும். (29)

ஜெபத்துடன் கூடிய வேதாகம ஆராய்ச்சி மட்டுமே புரொட்டஸ் டாண்டுகளுக்குப் போப்புமார்க்கத்தின் உண்மையான சுபாவத்தைக்காட்டி, அதை வெறுக்கவும்—அதைவிட்டு விலகவும் கரணமாக அமையும். அநேகர் தங்களது சொந்த அகந்தையினால் மிகுந்த ஞானமுள்ளவர்களாக இருந்து, சத்தியத்திற்குள் நடத்திச்செல்லப்படுவதற்கு தாழ்மையுடன் தேவனைத் தேடவேண்டிய அவசியம் இல்லை என்ற உணர்வோடு உள்ளனர். தங்களது அறிவின் விசாலத்தில் அவர்கள் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தாலும், வேதவாக்கியங்கள், தேவனுடைய வல்லமை ஆகிய இரண்டைப்பற்றியும் அறிவில்லாதவர்களாக உள்ளனர். அவர்களது மனச்சாட்சியை அமைதிப்படுத்த ஏதாவது ஒரு பொருள் வேண்டுமென்று ஆவிக்குரியதாக இல்லாததையும் கீழ்த்தரமானதையும் தேடிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் விரும்புவது தேவனை நினைக்கும் மார்க்கம் என்னும் பெயரில் உள்ள தேவனை மறக்கும் பாதையின் மார்க்கம்தான்! இப்படிப்பட்டவர்களின் தேவைகள் அனைத்தையும் சந்திப்பதற்குப் போப்புமார்க்கம் நன்கு பொருந்துவதாக உள்ளது. ஏறத்தாழ உலகம் முழுவதையும் தழுவிக்கொண்டிருக்கும் மனித

இனத்தின் வகுப்பினருக்காக, தங்களது சொந்தப் புண்ணியங்களினால் இரட்சிக்கப்படுபவர்கள் என்றும், தங்களது பாவத்தில் இரட்சிக்கப்படுபவர்கள் என்றும் இரு வகுப்பினருக்காக அது ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த வல்லமையின் இரகசியம் இங்குதான் உள்ளது. (30)

போப்புமார்க்கத்தின் வெற்றிக்கு பெரும் அறிவின் அடர்த்தியான இருண்டநாள் மிகச்சாதகமானது என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அப்படியிருந்தபோதிலும் பெரும்அறிவின் ஒளிமிக்க நாளும் அதற்குச் சமமாக அதன் வெற்றிக்குச் சாதகமாக உள்ளது என்பதற்கான நடைமுறை விளக்கம் தரப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மனிதர்கள் தேவனுடைய வார்த்தை இல்லாதவர்களாக இருந்தபோதிலும் அவர்களது கண்கள் குருடானவையாக மூடியிருந்தன. ஆயிரக்கணக்கானவர்கள் அவர்களுடைய கால்களுக்கு வஞ்சக வலைகள் விரிக்கப்பட்டிருப்பதைக் காணாமல், கண்ணியில் விழுந்தனர். விஞ்ஞானம் தவறாக அழைக்கும் மனித யூகங்களின் கண்கூசும் ஒளியினால் கண்கூசிப்போன அநேகர் உள்ளனர். அவர்கள் அந்த வல்லமையை அறியாமல், குருடர்களைப் போலக் கண்களை மூடிக்கொண்டு, அதற்குள் நேராகச் செல்லுகின்றனர். மனிதனுடைய நுண்ணறிவில் வல்லமைகள் அவனுடைய சிருஷ்டிகரிடம் இருந்து அவனுக்குக் கிடைத்துள்ள ஈவாக வைக்கப்பட்டு, சத்தியம், நீதி ஆகியவைகளின் சேவைக்காகப் பயன்படுத்தப்படவேண்டுமென்று தேவன் அவைகளை வடிவமைத்தார். ஆனால் பெருமையும் பேராசையும் இருதயத்தில் பேணப்படும்போதும், தேவனுடைய வார்த்தைக்கு மேலாக மனிதர்கள் தங்களுடைய சொந்த தத்துவ விளக்கங்களை உயர்த்தும்போதும், அது நுண்ணறிவு, அறியாமை ஆகியவைகளைவிட அதிகமான பெரும் ஆபத்தை உண்டுபண்ணும். இருண்ட காலங்களில் போப்புமார்க்கம் அறிவை முடக்கிவைத்து, அது மிகவும் பெரிதாவதற்கான பாதையைத் திறந்தது. அதைப்போலவே, போப்புமார்க்கத்தை அதின் கவர்ச்சிகரமான வெளித்தோற்றங்களுடன் ஏற்றுக்கொள்ளுவதற்கான பாதையை ஆயத்தம் செய்வதில், வேதாகமத்தின்மீதுள்ள விசுவாசத்தை கீழிறக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தவறான விஞ்ஞானம் வெற்றிகரமானது என்பதை மெய்ப்பிக்கும். (31)

ரோமசபைக்கும் அதன் பயனைப்பெறும் அமைப்புகளுக்கும் நாட்டின் (அரசாங்கத்தின்) ஆதரவு தேவை என்று கோரும் இயக்கங்கள், அமெரிக்க ஐக்கிய நாட்டில் முன்னேறி வருகின்றன. இந்தக் காரியங்களில் புரொட்டஸ்டாண்டுகள் போப்புமார்க்கவாதியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றனர். அப்படிஅல்ல. பழைய உலகத்தில் ரோமசபை

இழந்துவிட்ட மேலாதிக்கத்தை புரொட்டஸ்டாண்டு அமெரிக்காவில் மீண்டும் அடைந்துகொள்ளும் கதவை புரொட்டஸ்டாண்டுகள் ரோம சபைக்குத் திறந்துகொண்டிருக்கின்றனர். ஞாயிறு ஆசரிப்பை வற்புறுத்தும் யோசனைதான் இந்த இயக்கத்தின் தலையாய பொருளாக உள்ளது என்பது உண்மையாகும். (அஞ்ஞான) ரோமமார்க்கத்தில் பிறந்த இந்தக் கோட்பாட்டை (ஞாயிறு ஆசரிப்பை) ரோமன் கத்தோலிக்க சபை தனது அதிகாரத்தின் அடையாளம் என்று உரிமைபாராட்டுகிறது. தேவப்பிரமாணங்களுக்கும்மேலாக, மனிதப் பாரம்பரியங்களைத் துதிக்கின்ற உலக சம்பிரதாயங்களுக்கு இசைவான ஆவியாக போப்புமார்க்கத்தின் ஆவி இருக்கிறது. இது புரொட்டஸ்டாண்டு சபைகளில் பரவி, அவைகளுக்கு முன்னமே போப்புமார்க்கம் செய்திருந்த ஞாயிற்றுக் கிழமையை உயர்த்துதல் என்னும் அதே செயலைச் செய்யும்படி அவைகளை (புரொட்டஸ்டாண்டுகளை) நடத்தியிருக்கிறது. (32)

விரைவில் வரவிருக்கும் போட்டியில் அமர்த்தப்படவுள்ள ஏதுகரங் களைப்பற்றி வாசகர் புரிந்துகொள்ளவேண்டுமானால், கடந்த காலத்தில் இதே நோக்கத்திற்காக ரோம சபைகள் பயன்படுத்திய கருவிகளின் ஆவணங்களைத் தேடிப்பார்க்க வேண்டும். போப்புமார்க்கவாதிகளும் புரொட்டஸ்டாண்டுகளும் இணைந்த அவர்களது பிடிவாதமான கோட்பாடுகளை நிராகரிப்பவர்களுடன் அவர்கள் எவ்விதமாக நடந்துகொள்ளுவார்கள் என்பதை வாசகர் அறிய விரும்பினால், ஓய்வுநாளுக்கும் அதைப் பாதுகாப்புச் செய்திருந்தவர்களுக்கும் நேராக ரோமன் கத்தோலிக்க மார்க்கம் வெளிக்காட்டியிருந்த ஆவியை அவர்கள் பார்க்கட்டும். (33)

கிறிஸ்தவ உலகத்தின் மேன்மைமிக்க அந்தஸ்தை, அஞ்ஞானப் பண்டிகை (ஞாயிறு ஆசரிப்பு) அடைந்துகொண்டதற்கு அரச கட்டளைகள் பொதுக்குழுக்கள் மதச்சார்பற்ற வல்லமையால் தாங்கப்பட்ட சபைச் சட்டங்கள் ஆகியவை படிக்கட்டுகளாக இருந்தன. ஞாயிறு ஆசரிப்பை வற்புறுத்தும் முதலாவது பொது நடவடிக்கை, காண்ஸ்டன்டைன் அரசனால் செயல்படுத்தப்பட்ட சட்டமாகும். வணக்கத்திற்குரிய சூரியனின் நாளில் (ஞாயிற்றுக் கிழமையில்) நகர்வாழ் மக்கள் அனைவரும் ஓய்ந்திருக்கவேண்டும் என்று இந்தக்கட்டளை கட்டாயப்படுத்துகிறது. ஆனால் நாட்டுப்புற மக்கள் தங்களுடைய விவசாயப் பணிகளைத் தொடர அது அனுமதித்தது. உண்மையில் இது ஒரு அஞ்ஞானிகளின் சட்டமாக இருந்தபோதிலும் அந்தப் பேரரசன் பெயரளவில் கிறிஸ்தவ மார்க்கத்தைத் தழுவியபோது, அது வலியுறுத்தப்பட்டது. (34)

தெய்வீக அதிகாரத்திற்குப் பதிலாக, இந்த அரச கட்டளை போதுமானதல்ல என்று மெய்ப்பிக்கப்படும்போது, இளவரசர்களின்

ஆதரவைத் தேடி இருந்தவரும், காண்ஸ்டன்டைன் அரசனின் சிறப்பான நண்பனும் முகஸ்துதிக்காரனுமாயிருந்த யூசுபியஸ் என்னும் போராயர், கிறிஸ்து ஓய்வுநாளை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றிவிட்டார் என்னும் கூற்றை முன் நகர்த்தினான். இந்தப் புதிய கோட்பாட்டிற்கு ஆதாரமான சாட்சியாக ஒரு வேத வசனங்கூட அவரால் சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் தவறான தன்மையை யூசுபியசே தன்னையறியாமல் அறிக்கை செய்ததுடன், அந்த மாற்றத்திற்கான உண்மையான ஆசிரியர் யார் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். ஓய்வுநாளில் செய்யப்படவேண்டிய பணிகளாக எவைகள் இருந்தனவோ அவைகளனைத்தையும், அவை எவையாக இருந்தாலும் அவைகளை நாங்கள் கர்த்தருடைய நாளுக்கு (ஞாயிற்றுக்கிழமைக்கு) மாற்றிவிட்டோம்.—Robert Cox,Sabbath Laws and Sabbath Duties,page 538. ஆனால் ஞாயிறு ஆசரிப்பு வாதம் அடிப்படையில்லாததாக இருந்து, கர்த்தருடைய ஓய்வுநாளைக் காலின்கீழ் மிதிப்பதற்கு மனிதர்களைத் தைரியப்படுத்துவதற்கே பயன்பட்டது. உலகத்தால் கௌரவிக்கப்படவேண்டும் என்று விரும்பிய அனைவரும் மக்களின் மதிப்புள்ள அந்தப் பண்டிகை நாளை ஏற்றுக் கொண்டார்கள். (35)

போப்புமார்க்கம் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டபின், ஞாயிற்றுக்கிழமையை உயர்த்தும் பணி தொடர்ந்தது. சில காலத்திற்கு மக்கள் ஆலயத்திற்குச் செல்லாமல் விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, இன்னும் ஏழாம்நாள் ஓய்வுநாளாகவே கருதப்பட்டிருந்தது. ஆனால் ஒரு மாறுதல் சீராக நிகழ்ந்தது. பரிசுத்தமான உத்தியோகங்களில் இருந்தவர்கள், ஞாயிற்றுக் கிழமைகளில் சமுக வழக்குகளில் தீர்ப்பு வழங்குவது தடைசெய்யப்பட்டது. அதன்பின், விரைவில் அனைத்து மனிதர்களும் அவர்கள் எந்த அந்தஸ்தில் இருந்தாலும், பொதுவான வேலைகளைச் செய்வதிலிருந்து தடைசெய்யப்பட்டனர். மீறினால், சுதந்திரமானவர்களுக்கு அபராதம் என்றும் வேலைக்காரர்களுக்கு அடியும் என்று கட்டளையிட்டனர். பின்னர் செல்வந்தர்கள் அவர்களது சொத்துக்களில் பாதியை இழக்கவேண்டும் என்றும், முடிவாக அதற்குமேலும் பிடிவாதமாக இருந்தால், அடிமைகளாக்கப்படவேண்டும் என்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. கீழ் வகுப்பைச் சார்ந்தவர்கள் நிரந்தரமாகப் வெளியேற்றப்பட்டனர். (36)

அற்புதங்களுங்கூட உபயோகப்படுத்தப்பட்டிருந்தன. மற்ற ஆச்சரியங் களுக்கிடையில் ஞாயிற்றுக் கிழமைகளில் நிலத்தை உழுவதற்காகச் சென்ற பண்ணையாள் ஒருவன், தன் கலப்பையை இரும்பினால் சுத்தம் செய்தபோது, அந்த இரும்பு அவனது கரத்தை துளைத்து நின்றது. மிக அதிகமான வேதனையுடனும் வெட்கத்துடனும் அவன் அதை இரண்டு வருடங்களாகச்

சுமந்துகொண்டு திரிந்தான் என்ற செய்தியும் பரப்பப்பட்டது.—Francis West,Historical and Practical Discourse on the Lord's Day,page 174. (37)

அதன்பின், ஞாயிற்றுக்கிழமையை மீறுபவர்களால் அவர்களுக்கும் அயலகத்தாருக்கும் பேராபத்து உண்டாகாமல் இருப்பதற்காக அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயத்திற்குச் சென்று பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று பங்கு குருவானவர் விரும்புகிறார் என்று எச்சரிக்கை செய்யும்படி குருமார்களுக்குப் போப்பு கட்டளையிட்டார். மக்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை செய்துகொண்டிருந்ததால்தான் மின்னலினால் தாக்கப்பட்டனர். எனவே, அது ஓய்வுநாளாகத்தான் இருக்கக்கூடும் என்ற குருமார்களின் ஆலோசனைக்குழு ஒன்று எழுப்பிய பெரிய வாதம் எங்கும் பரவியபோது, அதைப் புரொட்டஸ்டாண்டுகளுங்கூடப் பயன்படுத்தினர். அந்த நாளை அலட்சியப்படுத்துவதால் தேவனுடைய அதிருப்தி எவ்வளவு அதிகமானதாக இருக்கிறது என்பது வெளிப்படையாக இருக்கிறது என்று குருமார்கள் கூறினார்கள். அதற்குப்பின், அந்த நாளுக்கு (ஞாயிறு ஆசரிப்பிற்கு) கொடுக்கப்பட்டிருக்கவேண்டிய மேன்மைக்காகவும், கிறிஸ்தவ மார்க்கத்தின் உயர்விற்காகவும், வரவிருக்கும் காலத்தில் அதிகமான பக்தியுடன் ஆசரிக்கப்படும் படியாகவும் குருமார்களும் ஊழியக்காரர்களும் அரசர்களும் இளவரசர்களும் விசுவாசமுள்ள மக்கள் அனைவரும் அதிகமான முயற்சியை எடுக்கவேண்டுமென்றும் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.—Thomas Morer,Discourse in Six Dialogues on the Name,Notion,and Observation of the Lord's Day,page 271. (38)

ஆலோசனைக் குழுக்களின் சட்டங்கள் ஆதாரமற்றவைகளாக நிரூபிக்கப்பட்டதினால், மக்கள் மனதில் பயத்தை ஏற்படுத்தும் ஒரு கட்டளையை பிறப்பிக்கும்படிக்கும், ஞாயிற்றுக் கிழமையில் வேலையிலிருந்து ஒதுங்க கட்டாயப்படுத்தும்படிக்கும் அரசியல் அதிகாரிகள் கோரப்பட்டனர். ரோமில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் இதற்குமுன் பிறப்பிக்கப்பட்ட அனைத்து தீர்மானங்களும் அதிக பலவந்தத்துடனும் பக்திவிநயத்துடனும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. அவை மத சட்டத்திலும் இணைக்கப்பட்டு சமுதாய அதிகாரிகளால் கிறிஸ்தவம் முழுவதிலும் நிர்பந்திக்கப்பட்டது. (See Heylyn,History of the Sabbath,pt. 2, ch. 5,sec. 7.) (39)

ஆனால் ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பிற்கு வேதவாக்கிய ஆதாரம் இல்லாமல் இருந்ததினால் உண்டான திகைப்பு கொஞ்சமல்ல. சூரியனுடைய நாளை மேன்மைப்படுத்துவதற்காக ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள் என்ற யேகோவாவின் திட்டமான அறிவிப்பை ஒரு பக்கமான ஒதுக்கிவைக்கும் தங்களுடைய ஆசிரியர்களின்

உரிமையைக்குறித்து மக்கள் கேள்விகள் கேட்டனர். வேதாகமச் சான்று இல்லாமலிருந்ததை நிரப்பிட, பிற அவசரச் செயல்கள் தேவையாக இருந்தன. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முடிவில், இங்கிலாந்து சபையைச் சந்தித்த—ஞாயிற்றுக்கிழமைக்காக வைராக்கியமாகப் பரிந்துபேசியிருந்த ஒருவர், சத்தியத்திற்கு விசுவாசமான சாட்சிகளாக இருந்தவர்களால் தடுக்கப்பட்டார். அவருடைய முயற்சிகள் பலன் தராததால் அவரது போதனையை வலுப்படுத்தும் உபாயங்களைத் கண்டுபிடிப்பதற்காக அவர் சிறிது காலத்திற்கு அந்த நாட்டைவிட்டுச் சென்றார். அவர் திரும்பி வந்தபோது, அந்தத் தேவை நிரப்பப்பட்டது. எனவே அவரது பிந்தைய ஊழியத்தில் அவர் பெரும் வெற்றி அடைந்தார். ஞாயிற்றுக் கிழமையை ஆசரிப்பதற்கு வேண்டிய கட்டளையும், அதற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு வரவிருக்கும் திகிலூட்டும் பயங்கரமான பயமுறுத்தல்களும் அடங்கிய தேவனாலேயே எழுதிக் கொடுக்கப்பட்டது என்று தோன்றும் விதமாக இருந்த ஒரு சுருளை அவர் தன்னுடன் கொண்டுவந்தார். அது ஆதரித்திருந்த அமைப்பைப் போன்றே கீழ்த்தரமும் போலியுமாக இருந்த அந்த விலையேறப்பெற்ற ஆதாரம் பரலோகத்திலிருந்து விழுந்து, எருசலேமில் கொல்கதாவிலுள்ள பரிசுத்த சிமியோனின் பீடத்தின்மீது காணப்பட்டது என்றும் செல்லிக் கொள்ளப்பட்டது. ஆனால் உண்மையில் அது புறப்பட்டிருந்த இடம் ரோம் நகரிலுள்ள போப்புவின் அரண்மனைதான். ஏமாற்றுகளும் பொய்க் கையெழுத்துக்களும் எல்லாக் காலங்களிலும் சபையின் வல்லமையையும் செழுமையையும் பெருக்கிக்கொள்ள சட்டரீதியானது என்று போப்புமார்க்கத் தலைவர் உயர்வாக்கினார். (40)

அந்தச் சுருள், ஒன்பதாம் மணி நேரத்திலிருந்து, அதாவது சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணியிலிருந்து திங்கள் கிழமை காலை சூரிய உதயம்வரை வேலைசெய்வதற்குத் தடை விதித்திருக்கிறது. அதன் அதிகாரம் அநேகமான அற்புதங்களினால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குமேல் வேலை செய்தவர்கள் கை—கால் விளங்காத வாத நோயினால் தாக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. ஒரு அரவை ஆலை உரிமையாளர் தானியத்தை அரைக்க முயன்றபோது மாவு வருவதற்குப் பதிலாக இரத்தம் பெருமழைபோல் வருவதையும், அதுவுமல்லாமல் அதை இயக்கியிருந்த பலத்த தண்ணீர் ஓட்டத்திற்கிடையிலும், அந்த அரவை ஆலையின் சக்கரம் நின்றுவிட்டதையும் அவர் கண்டார். ஒரு ஸ்திரீ பிசைந்த மாவை அடுப்பில் வைத்தபின், தீ நன்கு சூடாக எரிந்திருந்தபோதிலும் அந்தப் பிசைந்த மாவு வேகாமல் பச்சையாகவே இருப்பதைக் கண்டார். வேறொரு ஸ்திரீ அதைப் போலவே ரொட்டி சுடுவதற்காக மாவைப் பிசைந்து ஆயத்தம் செய்தபின் (சனிக்கிழமை

பிற்பகல் மூன்று மணியாகி விட்டதினால்) ஒன்பதாம் மணி ஆகிவிட்டதால், அந்தப் பிசைந்த மாவு தெய்வீக வல்லமையால் ரொட்டித் துண்டுகளாக மாறியிருப்பதைக் கண்டாள். சனிக்கிழமை ஒன்பதாம் மணி நேரத்திற்குப்பின், ஒரு மனிதன் ரொட்டி சுட்டு, அதை மறுநாள் காலையில் சாப்பிட்டபோது அதிலிருந்து இரத்தம் புறப்பட்டு வந்தது என்பது போன்ற இப்படிப்பட்ட கீழ்த்தரமான—மூடநம்பிக்கைமிக்க கட்டுக்கதைகளினால் ஞாயிற்றுக் கிழமைக்காகப் பரிந்துபேசினவர்கள், அதன் பரிசுத்தத்தை உறுதிப்படுத்த முயன்றனர்! (See Roger de Hoveden,Annals,vol. 2, pp. 528–530.). (41)

இங்கிலாந்தைப் போலவே ஸ்காட்லாந்திலும் பண்டைய ஓய்வுநாளின் ஒரு பகுதியை ஞாயிற்றுக் கிழமையுடன் பிணைத்ததின் மூலமாக, ஞாயிற்றுக் கிழமை ஒரு மதிப்பை அடைந்தது. ஆனால் பரிசுத்தமாக ஆசரிக்கப்படவேண்டும் என்றிருந்த நேரம் மாறுபட்டது. சனிக்கிழமை நண்பகல் பன்னிரண்டு மணியில் இருந்து பரிசுத்த நேரமாகக் கணக்கிடப்பட்டு, அந்த நேரத்திலிருந்த திங்கள் கிழமை காலைவரை எந்த மனிதனும் உலகப்பிரகாரமான தொழிலில் ஈடுபடக்கூடாது என்று ஸ்காட்லாந்து அரசனிடமிருந்து வந்த கட்டளை அறிவித்தது.—Morer,pages 290,291. (42)

மேலும் அத்துடன் அல்லாமல், ஞாயிற்றுக்கிழமையின் பரிசுத்தத்தை நிலைநிறுத்த, சகலவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, போப்புமார்க்கவாதிகள் அவர்களாகவே ஓய்வுநாளின் தெய்வீக அதிகாரத்தை அதற்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்டுள்ள மனித ஏற்பாட்டின் தோற்றத்தையும் பகிரங்கமாக அறிக்கை செய்தனர். கிறிஸ்தவர்களாகிய நாங்கள் ஓய்வுநாளைக் கர்த்தருடைய நாளுக்கு மாற்றியிருந்தபோதிலும், ஏழாம்நாள்தான் தேவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டு யூதர்களால் மட்டுமே பெற்றுக்கொள்ளப்பட்டு ஆசரிக்கப்பட்டிருந்தது என்பது மட்டுமன்றி, தேவனைத் தொழுகிறோம் என்று கூறிக்கொண்டிருக்கும் மற்ற அனைவராலும் ஆசரிக்கப்பட்டிருந்தது என்பதை அனைத்துக் கிறிஸ்தவர்களும் நினைவில் வைத்துக்கொள்ளுவார்களாக என்று பதினாறாம் நூற்றாண்டிலிருந்த போப்புவின் ஒரு ஆலோசனைக்குழு தெளிவாக அறிவித்தது.—Ibid., pages 281,282. தெய்வீகப் பிரமாணத்தை பொய்யாகத் திருத்தியிருந்தவர்கள் செய்த வேலையின் தன்மையைப்பற்றி, அறியாமை உள்ளவர்களாக அவர்கள் இருக்கவில்லை. அவர்கள் தெரிந்து, வேண்டுமென்றே ஆலோசனை செய்து, தங்களை தேவனுக்கும் மேலாக வைத்துக்கொண்டனர். (43)

ரோமன் கத்தோலிக்க சபையுடன் இணங்காதவர்களுக்கு எதிராக இருந்த அதன் கொள்கையை, நீண்டகாலமாக வால்டேனியர்களுடன் நடத்தியிருந்த இரத்தம் சிந்திய உபத்திரவம் நன்றாகத் தெரியும்படியாக

படம்பிடித்துக் காட்டியது. அந்த வால்டேனியர்களில் சிலர், ஓய்வுநாளை ஆசரிப்பவர்களாக இருந்தனர். மற்றவர்கள் நான்காம் பிரமாணத்தின்மீது கொண்டிருந்த கற்பு நெறிக்காக, அதே விதமாகப் பாடுகளை அனுபவித்தனர். எத்தியோப்பியா, அபிசீனியா ஆகிய சபைகளின் வரலாறு சிறப்பான முக்கியத்துவமுடையவையாக உள்ளன. இருண்ட காலங்களின் துயருக்கிடையில், மத்திய ஆசியாவிலிருந்ததினால் தங்களுடைய விசுவாசத்தைச் செயல்படுத்துவதில் அநேக நூற்றாண்டுகளாக அவர்கள் சுதந்திரத்தை அனுபவித்தனர். இறுதியில் அவர்கள் இருப்பதை ரோமன் கத்தோலிக்க சபை அறியவே, அபிசீனியப் பேரரசன், போப்பு—கிறிஸ்துவின் பதிலாளி என அறிக்கைசெய்யக் கவர்ந்திழுக்கப்பட்டான். ஏனைய சலுகைகள் பின்தொடர்ந்தன. கடுமையான தண்டனையின் கீழ், ஓய்வுநாளை ஆசரிப்பதைத் தடைசெய்யும் ஒரு அரச கட்டளை பிறப்பிக்கப்பட்டது. (See Michael Geddes, Church History of Ethiopia, pages 311, 312.) விரைவில் போப்பு மார்க்கத்தின் கொடுங்கோன்மை வேதனை தரும் நுகமாக ஆனபடியால், அபிசீனியர்கள் அதைத் தங்களது கழுத்திலிருந்து உடைத்துப்போடத் தீர்மானித்தனர். பயங்கரமான ஒரு போராட்டத்திற்குப்பின், ரோமன் கத்தோலிக்கர்கள் அவர்களது ஆளுகையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். பின்னர் பண்டைய விசுவாசம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அந்த சபையினர் தங்களின் சுதந்திரத்தில் மகிழ்ந்தனர். ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து அறிந்துகொண்ட அதன் வஞ்சகம், கொடுங்கோன்மை ஆகியவைகளை அவர்கள் ஒருபோதும் மறக்கவில்லை. அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட ராஜ்யத்திற்குள், ஏனைய கிறிஸ்தவ உலகத்தால் அறியப்படாதவர்களாக இருந்ததில் திருப்தி உள்ளவர்களாக இருந்தனர். (44)

போப்புமார்க்கத்தின் முழுமையான மருள விழுகைக்குமுன் அவை ஓய்வுநாளை ஆசரித்தன. தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் ஏழாம்நாளை ஆசரித்திருந்தபோது, சபையின் சம்பிரதாயத்திற்கு ஒத்தவிதத்தில் ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்வதைத் தவிர்த்திருக்கின்றனர். ரோம சபை அதன் ஏற்பாட்டின் வல்லமையை அடைந்துகொண்டபின், தனது சொந்த நாளை உயர்த்துவதற்காக தேவனுடைய ஓய்வுநாளைக் காலின் கீழிட்டு மிதித்தது. ஆனால் ஆப்பிரிக்க சபைகள் ஏறத்தாழ ஆயிரம் வருடங்கள் இந்த மருள விழுகையில் பங்குபெறாதவையாக இருந்தன. அவைகள் ரோமன் கத்தோலிக்கர்களின் கீழ் கொண்டுவரப்பட்டபோது, மெய்யான ஓய்வுநாளை ஓரமாக வைத்துவிட்டு, தவறான ஓய்வுநாளை ஆசரிக்கும்படி அவர்கள் வற்புறுத்தப்பட்டனர். ஆனால் அவர்கள் தங்களுடைய சுதந்திரத்தை மறுபடியும் அடைந்த உடனேயே நான்காவது கற்பனைக்குக் கீழ்ப்படிவதற்கு மறுபடியும் திரும்பி வந்தனர். (45)

பொய்யான ஓய்வுநாளுக்கும் அதன் தற்காப்பாளர்களுக்கும் நேராக, ரோம சபைக்கு உள்ள பகைமையையும் அது உண்டுபண்ணின அமைப்பை உயர்த்துவதற்காக அது கையாளும் வகைகளையும் கடந்தகால ஆவணங்கள் தெளிவாக வெளிக்காட்டுகின்றன. ஞாயிற்றுக் கிழமையை உயர்த்துவதற்காகப் போப்புமார்க்கத்தினரும் புரொட்டஸ்டாண்டுகளும் ஒற்றுமைப்படும்போது, பழைய செயல்களின் கோரக்காட்சிகள் திரும்பவும் செய்யப்படும் என்பதை தேவனுடைய வார்த்தை போதிக்கிறது. (46)

ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளுடையதாக இருந்த அந்த மிருகமே, பூமியும் அதன் குடிகளும் போப்புமார்க்கத்தை வணங்கும்படிச் செய்யும் வல்லமை படைத்த சிறுத்தையைப் போலிருந்தது என்று வெளி. 13–ம் அதிகாரத்தில் தீர்க்கதரிசனமாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு கொம்புகளை உடைய மிருகம், பூமியின் குடிகளிடம் மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ண வேண்டுமென்று சொல்லவேண்டியதாகவும் இருக்கிறது. மேலும் அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும் (வெளி. 13:16) சொல்லவேண்டியிருக்கிறது. ஆட்டுக்குட்டியைப்போன்ற கொம்புகளைக் கொண்ட மிருகம், அமெரிக்க ஐக்கிய நாட்டை எடுத்துக்காட்டும் வல்லமை என்பது காட்டப்பட்டிருக்கிறது. ரோமசபை அதன் சிறப்பான மேலாதிக்கத்தின் அங்கீகரிப்பு என்று உரிமைபாராட்டும் ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்புச் சட்டத்தை அமெரிக்க ஐக்கிய நாடு வற்புறுத்தும்போது, இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். ஆனால் போப்புமார்க்கத்திற்கு இந்த வணக்கத்தைச் செலுத்துவதில் அமெரிக்க ஐக்கிய நாடு மட்டும் தனியாக இருக்காது. ஒரு காலத்தில் ரோமசபையின் ஆளுகையை அங்கீகரித்திருந்த நாடுகளில், அதன் செல்வாக்கு இன்னும் அழிக்கப்படாததாகவே உள்ளது. அதன் வல்லமை மீண்டும் திரும்பிவரும் என்று தீர்க்கதரிசனம் முன்னறிவிக்கிறது. "அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத் தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி"– வெளி 13:3. போப்பு மார்க்கத்திற்கு கி.பி.1798–ல் உண்டான வீழ்ச்சியை, சாவுக்கோதுவான காயம் என்கிறது இவ்வசனம். ஆனாலும் அதன்பின், சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது என்று தீர்க்கதரிசி கூறுகிறார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரை பாவமனிதன் தொடருவான் என்று பவுல் தெளிவாகக் கூறுகிறார்–2 தெச. 2:8. காலத்தின் முடிவுவரை அவன் தனது வஞ்சகச் செயலை தொடருவான். "ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும்

அதை வணங்குவார்கள்” (வெளி. 13:8) என்று வெளிப்படுத்தல்காரர் போப்புமார்க்கத்தைக் குறிப்பிட்டுக் கூறுகிறார். ரோமசபையின் அதிகாரத்தை முற்றிலுமாகச் சார்ந்திருக்கும் ஞாயிற்றுக்கிழமை ஏற்பாட்டிற்கு கொடுக்கப்படும் மேன்மையினால், போப்புமார்க்கம் பழைய—புதிய உலகம் ஆகிய இரண்டின் வணக்கத்தையும் பெற்றுக்கொள்ளும். (47)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்திலிருந்த அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள தீர்க்கதரிசன மாணவர்கள் இந்த சாட்சியை உலகத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் நிகழ்ச்சியில் இந்த முன்னறிவிப்பின் நிறைவேறுதலை நோக்கிய ஒரு முன்னேற்றம் வேகமாக நிகழ்வது காணப்படுகிறது. போப்புமார்க்கத்தினரிடம் ஞாயிறு ஆசரிப்பிற்கான தெய்வீக அதிகாரத்தின் சான்றுகள் எதுவும் இல்லை. அவர்கள் தேவனுடைய பிரமாணங்களின் இடத்தை நிரப்ப, அற்புதங்களைக் கற்பனை செய்து அமைத்துக்கொண்டார்கள். அதைப்போலவே, புரொட்டஸ்டாண்டு ஆசிரியர்களிடமும் ஞாயிறு ஆசரிப்பிற்கான வேதவாக்கிய ஆதாரம் எதுவும் இல்லாதபோது, தெய்வீக அதிகாரம் இருப்பதாக உரிமைபாராட்டிக்கொண்டிருக்கின்றனர். ஞாயிற்றுக் கிழமை ஓய்வுநாளை மனிதர்கள் மீறினால், அவர்களை தேவனுடைய நியாயத்தீர்ப்பு சந்திக்கும் என்று வற்புறுத்தி திரும்பத்திரும்பக் கூறும் செயல் ஏற்கனவே வற்புறுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஞாயிறு ஆசரிப்பை வற்புறுத்தும் அந்த இயக்கம் மிகவும் விரைவாக முன்னேறிக்கொண்டுமிருக்கிறது. (48)

ரோமசபை அதன் ஞானத்தின் நுட்பமான தந்திரத்திலும் ஆச்சரியப் படக்கூடியதாக இருக்கிறது. என்ன நடக்கவிருக்கிறது என்பதை அவளால் படிக்கமுடியும். புரொட்டஸ்டாண்டு சபைகள் தவறான ஓய்வுநாளை ஏற்றுக்கொள்ளுவதினால் தனக்கு வணக்கம் செலுத்துகின்றன என்பதையும், கடந்துபோன காலத்தில் அதை (ஞாயிறு ஆசரிப்பை) நிர்ப்பந்திப்பதற்காக தான் பயன்படுத்திய அதே உபாயத்தைக் கையாளுவதற்குப் புரொட்டஸ்டாண்டு மார்க்கமும் ஆயத்தம் செய்துகொண்டிருப்பதையும் கண்டு ரோம சபை தனது வேளைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. சத்தியத்தின் ஒளியை நிராகரிப்பவர்கள், தான் தவறாமை உடையது என்ற பாணியை அமைத்துக்கொண்ட வல்லமையின் உதவியை, அதனிடமிருந்து தோன்றிய அமைப்பை உயர்த்துவன்மூலம் நாடுவார்கள். இதில் புரொட்டஸ்டாண்டு களுக்கு உதவ ரோமசபை எவ்விதமாக உடனே வரும் என்பதை, போப்புமார்க்கத் தலைவர்களைவிட யார் நன்கு அறிந்துள்ளனர்? (49)

போப்புவின் கட்டுப்பாட்டின் வல்லமையின்கீழ், அவரது விருப்பங் களுக்கென்று சேவை செய்வதற்காக உலகளாவிய விரிந்து பரந்த

கிளைகளுடன் வடிவமைக்கப்பட்ட ஒரு விசாலமான அமைப்பை ரோமசபை வைத்துள்ளது. உலகின் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள, அதன் பல லட்சக்கணக்கான தொடர்பாளர்கள் தாங்களனைவரும் போப்புவுடன் உள்ள உறவைத் தாங்களாகவே பற்றிக்கொள்ளவேண்டும் என்று திட்டமாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களது தேசியம் அல்லது அரசு எதுவாக இருந்தாலும்சரி, மற்றெல்லாவற்றையும்விடத் தங்களுடைய சபையின் அதிகாரத்தைத்தான் மேலானதாகக் கருதக்கூடியவர்களாக இருந்தாக வேண்டும். தங்களுடைய நாட்டின்மீதுள்ள பக்திவிசுவாசத்திற்காக அவர்கள் சத்தியப் பிரமாணம் செய்திருந்தாலும், ரோமசபைக்கு விரோமாக இருக்கிற ஒவ்வொரு உறுதிமொழிக்கும் பின்னால் அவைகளை பலனற்றதாக்குகின்ற ரோம சபைக்குக் கீழ்ப்படிதல் என்னும் உறுதிமொழியும் உள்ளது. (50)

ஞாயிற்றுக்கிழமையை உயர்த்துதல் என்னும் பணியில் உள்ள ரோமசபையின் உதவியை ஏற்றுக்கெள்ள முன்மொழியும் வேலையை புரொட்டஸ்டாண்டுகள் செய்யும்போது, தாங்கள் செய்வது என்ன என்பதை அவர்கள் அறியாதவர்களாக உள்ளனர். தங்களது நோக்கத்தை நிறைவேற்று வதில் அவர்கள் முனைந்தவர்களாக இருக்கும்போது, ரோமசபை தனது வல்லமையை மீண்டும் ஸ்தாபிக்கவும் இழந்துபோன அதன் மேலாதிக்கத்தை திரும்பவும் அடைந்துகொள்ளுவதையுமே இலக்காகக் கொண்டுள்ளது. ()

தனக்கு ஒரு நிற்குமிடத்தை ஆதாயப்படுத்திக்கொண்டபின்னர் இளவரசர்கள், மக்கள் ஆகியோரின் அழிவிலுங்கூட, தனது இலக்கை நோக்கி முன்னேறிக்கொள்ளுவதற்காக, பிற நாடுகளின் காரியங்களில் மறைமுகமாக உட்புகும் அதன் சாமர்த்தியம், விடாப்பிடியான முயற்சிகளைப்பற்றி வரலாறு சாட்சிபகருகிறது. கி.பி.1204–ல் இன்னசன்ட் என்னும் போப், அரகான் நாட்டின் அரசனாயிருந்த இரண்டாம் பீட்டர் என்பவனிடமிருந்த, கீழ்க்கண்ட அசாதாரணமான வாக்குறுதியைப் பலவந்தமாகவே வாங்கிக்கொண்டார். அந்த வாக்குறுதியில் “அரகான் நாட்டின் அரசனாயிருக்கும் பீட்டராகிய நான், எனது கர்த்தராயிருக்கும் போப் இன்னசன்ட் அவர்களுக்கும் அவரது கத்தோலிக்க வாரிசுகளுக்கும் ரோமன் கத்தோலிக்க சபைக்கும் எப்பொழுதும் விசுவாசமுள்ளவனாக இருப்பதுடன், அவருக்குள்ள கீழ்ப்படிதலில் விசுவாசத்தைப் பாதுகாத்து நிற்கவும், துன்மார்க்கமான மதவிரோதத்தை உபத்திரவப்படுத்தவும் செய்வேன் என்ற எனது வாக்குறுதியை அறிக்கை செய்கிறேன்” என்று இருக்கிறது.—John Dowling,The History of Romanism,b. 5, ch. 6,sec. 55. ஆம். “பேரரசர்களை நீக்குவதும், அநீதியான ஆளுகைக்குக் கீழ்ப்பட்டிருப்பவர்களை விடுதலைசெய்வதும் அவரால் முடியக்கூடிய சட்டத்திற்குட்பட்டதாகவும் உள்ளது” என்ற ரோமநகரின்

பேராயருக்குள்ள வல்லமையைப்பற்றிய உரிமைபாராட்டுதலுக்கு இது இசைவுள்ளதாக இருக்கிறது.—Mosheim,b. 3,cent. 11,pt. 2, ch. 2,sec. 9,note 17. (51)

ரோமன் கத்தோலிக்க சபை ஒருபோதும் மாறுவதில்லை என்ற அதன் பெருமைமிக்க பேச்சு நமது ஞாபகத்தில் இருக்கட்டும். ஏழாம் கிரகோரி, மூன்றாம் இன்னசன்ட் ஆகியோரின் கொள்கைகள்தான் இப்போதும் ரோமசபையின் கொள்கைகளாக உள்ளன. அதற்குப் பழைய வல்லமை இருந்தால், கடந்துபோன நூற்றாண்டுகளில் அவைகள் செயலாற்றியிருந்ததைப் போலவே, அதே பலத்துடன் இப்பொழுதும் செயலாற்றும். நாட்டின் வல்லமையை சபை நடப்பிக்கலாம் அல்லது கட்டுப்படுத்தலாம் என்னும் கொள்கை அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஏற்படுத்தப்படட்டும். சமயச்சார்பற்ற சட்டங்களினால் சமயச்சார்புற்ற ஆசரிப்புகளை வற்புறுத்தலாம் என்னும் நிலைமை உண்டாகட்டும். சுருக்கமாகக் கூறப்போனால், சபையின் அதிகாரமும் அரசும் சேர்ந்து, மனச்சாட்சியின்மீது ஆதிக்கம் செலுத்தலாம் என்னும் நிலை உண்டாகட்டும். அப்போது அந்த நாட்டில் ரோமசபையின் வெற்றி நிச்சயமானதாகிவிடும். (52)

வரவிருக்கும் ஆபத்தைப்பற்றி தேவனுடைய வார்த்தை எச்சரிப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறது. அது செவிசாய்க்கப்படாமல் இருக்குமானால், ரோமசபையின் வஞ்சக வலையிலிருந்து விடுதலை பெறுவதற்கு மிகவும் பிந்திவிட்ட சமயத்தில்தான் ரோமசபையின் உண்மையான நோக்கம் என்ன என்பதை புரொட்டஸ்டாண்டு உலகம் உணர்ந்துகொள்ளும். அது வல்லமையை நோக்கி மௌனமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. சட்டமன்றங்களிலும் சபைகளிலும் மனிதர்களின் இருதயங்களிலும் அதன் கோட்பாடுகள் செல்வாக்கைச் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. அதன் இரகசியமான இடைவேளைகளில், முந்தைய உபத்திரவங்களை மீண்டும் செய்வதற்காக, அது தன் திரண்ட உயரமான உருவத்தை அமைத்துக்கொண்டுவருகிறது. அதன் நேரம் வரும்போது, தாக்குதலை நடத்துவதற்காக, திருட்டளவாகவும் சந்தேகப்படாத விதத்திலும் அது தன் படைகளை பலப்படுத்திவருகிறது. அது விரும்புவதெல்லாம், அதற்குச் சாதகமான இடம்தான். அது அதற்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. ரோமசபையின் உள்ளார்ந்த நோக்கம் என்ன என்பதை நாமனைவரும் விரைவில் காணுவோம். விரைவில் உணருவோம். தேவனுடைய வார்த்தையின்மீது எவர்கள் நம்பிக்கை வைத்து அதற்குக் கீழ்ப்படிவார்களோ, அவர்கள் அதனால் நிந்தனையையும் உபத்திரவத்தையும் அனுபவிப்பார்கள். (53) ★

# 36

# வரவிருக்கும் போராட்டமும் அதன் காரணமும்!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 582–592)**

பரலோகத்தில் ஆரம்பமான மாபெரும் ஆன்மீக யுத்தத்தின் தொடக்கத்திலிருந்தே, தெய்வப்பிரமாணங்களைத் தூக்கி எறியவேண்டும் என்பது சாத்தானின் நோக்கமாக இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்காக, அவன் சிருஷ்டிகருக்கெதிரான கலகத்தில் ஈடுபட்டான். அவன் பரலோகத்திலிருந்து வெளியில் தள்ளப்பட்டபோதிலும், பூமியின்மேல் அவனது யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திவருகிறான். மனிதர்களை வஞ்சித்து அதனால் அவர்களை தேவனுடைய கற்பனையை மீறும்படி நடத்துவதே, அவன் சீராகத் தொடர்ந்திருக்கும் செயலின் நோக்கமாகும். பிரமாணத்தை மொத்தமாக ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்தாலும் அல்லது கற்பனைகளில் ஒன்றைமட்டும் நிராகரித்தாலும் முடிவில் அதன் பலன் ஒன்றாகவே இருக்கும். “எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்”–யாக். 2:10. ஒன்றில் தவறுகிறவன் பிரமாணம் முழுவதிலும் உள்ள அவனது குற்றத்தை வெளிக்காட்டுகிறான். அவனது செல்வாக்கும் உதாரணமும் மீறுதலின் பகுதியில் உள்ளது. அவன் எல்லாவற்றிலும் குற்றவாளி ஆகிறான். (1)

தெய்வீகச்சட்டங்களின்மீது குற்றஞ்சுமத்துவதை தேடுவதற்காக வேதாகமக் கோட்பாடுகளில் சாத்தான் மாற்றங்களைச் செய்தபோதும், வேதவாக்கியங்களை நம்புகிறோம் என்று கூறிக்கொள்ளும் ஆயிரக்கணக்கானவர்களின் விசுவாசத்தில் தவறுகள் பதிக்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாகத் தொடர்ந்து வருகின்ற தேவப்பிரமாணத்திற்கு எதிரான மாபெரும்

போராட்டம்தான், சத்தியத்திற்கும் தவறுக்கும் இடையிலுள்ள பெரும் இறுதிப் போராட்டமாகும். மனிதர்களுடைய சட்டத்திற்கும் யேகோவாவின் பிரமாணங்களுக்கும், வேதாகம மதத்திற்கும் கட்டுக்கதை பாரம்பரியம் ஆகியவற்றின் மதத்திற்கும் இடையிலுள்ள போராட்டத்தில் இப்பொழுது நாம் நுழைந்துகொண்டிருக்கிறோம். (2)

இந்தப் போட்டியில் சத்தியம் நீதி ஆகியவைகளுக்கு எதிராக ஒன்றுபட இருக்கின்ற பிரதிநிதிகள் இப்பொழுது தீவிரமான பணியில் ஈடுபட்டுள்ளனர். பாடுகள், இரத்தம் சிந்துதல் ஆகிய அப்படிப்பட்ட கிரயத்தால் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தை மலிவானதாகக் கருதப்படுகிறது. அனைவருக்கும் கிடைக்கக்கூடிய விதத்தில் வேதாகமம் உள்ளது. ஆனால் அதை உண்மையாகவே வாழ்க்கைக்கு வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் வெகு சிலர் தான் உள்ளனர். உலகத்தில் மட்டுமன்றி சபையிலுங்கூட அச்சம் தரும் அளவில், கடவுள் இல்லை என்னும் தன்மை நிலவிவருகிறது. கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியமான தூண்களாக இருக்கக்கூடிய கோட்பாடுகளை மறுக்க அநேகர் முன்வந்துள்ளனர். ஆவியின் ஏவுதலை உடையவர்களாக இருந்த எழுத்தாளர்களால், முன்வைக்கப்பட்டுள்ள சிருஷ்டிப்பு, மனிதனின் விழுகை, பாவ நிவாரணம், தேவப்பிரமாணத்தின் நித்தியத்துவம் ஆகியவை நடைமுறையில் முற்றிலுமாகவோ அல்லது பகுதியாகவோ கிறிஸ்தவ உலகிலுள்ள பெரும்பான்மையினரால் நிராகரிக்கப்பட்டுள்ளன. தங்களுடைய ஞானம், சுதந்திரம் ஆகியவைகளின்மீது தாங்களாகவே பெருமைகொள்ளும் ஆயிரக்கணக்கானவர்கள் வேதாகமத்தின்மீது உறுதியான விசுவாசம் வைப்பது பலவீனத்தின் சான்று என்று கருதுகின்றனர். வேதவாக்கியங்களின்மீது காரணமில்லாமல் குற்றம் கூறுவதும், அதின் முக்கியமான சத்தியங்களை விபரீதமாக ஆவிக்குரியதாக்கி விளக்குவதுமே, மேலான திறமை, கல்வி ஆகியவைகளின் ஆதாரம் என்றும் எண்ணுகின்றனர். தேவனுடைய கற்பனைகள் மாற்றப்பட்டுள்ளன அல்லது நீக்கப்பட்டுள்ளன. எழுத்தின்படி கீழ்ப்படிவதற்கு அவைகள் அவசியமானவை, தொடர்ந்து மதிப்புள்ளவைதான் என்று கருதுபவர்கள் கேலிச் சிரிப்பிற்கும் கண்டனத்திற்கும் உரியவர்கள் என எண்ணப்படுகின்றனர் என்று அநேக ஊழியக்காரர்களும் அவர்களது மக்களுக்குப் போதிக்கின்றனர். அநேக பேராசிரியர்களும் ஆசிரியர்களும் அவர்களது மாணவர்களுக்கு அவ்வாறே கற்பிக்கின்றனர். (3)

சத்தியத்தை நிராகரிப்பதன்மூலமாக மனிதர்கள் அதன் ஆசிரியரை நிராகரிக்கின்றனர். தேவனுடைய கற்பனையைக் காலின்கீழிட்டு மிதிப்ப தினால், கற்பனையைக் கொடுத்த அதிகாரத்தை மறுக்கின்றனர். மரத்தி னாலோ கல்லினாலோ ஒரு சிலையை உருவாக்குவதைப்போலவே,

தவறான கோட்பாடுகளினாலும் தத்துவ விளக்கங்களினாலும் ஒரு சிலையை உண்டுபண்ணுவது எளிதாக உள்ளது. தேவனுடைய குணநலன் களைத் தவறாக எடுத்துக் காட்டுவதினால், தேவனை தவறான சுபாவம் உள்ள ஒருவராகக் காணும்படிச் சாத்தான் மனிதர்களை நடத்துகிறான். ஜீவனுள்ள தேவன், அவரது வார்த்தையில்—கிறிஸ்துவின் படைப்பின் செயலில் வெளிப்படுத்தப்பட்டு அநேகருக்குத் தத்துவ சிலைகளாக சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார். ஆயிரக்கணக்கானவர்கள் இயற்கையின் தேவனை மறுக்கும்போது, இயற்கையைத் தெய்வமாகக் கருதுகின்றனர். எலியாவின் நாட்களில், பண்டைய இஸ்ரவேலருக்கு மத்தியில், விக்கிரக ஆராதனை இருந்ததுபோல், இன்று கிறிஸ்தவ உலகத்தில் விக்கிரக ஆராதனை வித்தியாசமான வடிவில் உள்ளது. தொழில் ரீதியாக மனிதர்களிலுள்ள ஞானம் என்னும் தெய்வம், தத்துவ சாஸ்திரிகளில் உள்ள தெய்வம், எழுத்தாளர்களில் உள்ள தெய்வம், மென்மையும் நாகரிகமுமிக்க குழாம்களாகிய தெய்வம், அநேக கல்லூரிகளாகிய தெய்வங்கள் போனீஷியாவின் சூரியக்கடவுளான பாகாலைவிடச் சற்று சிறந்ததாக உள்ளது!? (4)

தேவப்பிரமாணம் இனிமேல் மனிதனைக் கட்டுப்படுத்தாது என்னும் தவறை கிறிஸ்தவ உலகம் ஏற்றுக்கொண்டதைவிட, வேறு எதுவும் பரலோகத்தின் அதிகாரத்தை தைரியமாகத் தாக்குவது இல்லை. பகுத்தறிவிற்கு நேர் எதிரான வேறு எதுவும் இல்லை. கெடுதல் மிக்க பலனை ஏற்படுத்துகின்ற வேறு எதுவும் இல்லை. மிக விரைவாக ஆதிக்கமடைந்துவரும் நவீன கோட்பாடுகள் எதுவும் இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் சட்டம் உள்ளது. அது அதற்கு மதிப்புக் கொடுப்பதையும் கீழ்ப்படிதலையும் வரவேற்கிறது. சட்டங்கள் இல்லாமல் எந்த அரசாங்கமும் இருக்கமுடியாது. அப்படியிருக்க, பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சிருஷ்டிகர் அவைகளில் உள்ளவர்களை ஆளுவதற்கென்று சட்டம் இல்லாதவராக இருப்பார் என்பதை எப்படிக் கருத்தில் கொள்ளமுடியும்? முக்கியமான அமைச்சர்கள், தங்களுடைய நாட்டைக் கட்டுப்படுத்தி, மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் கடமைக்குட்பட்டவை அல்ல என்றும், அவை மக்களின் சுயாதீனத்தைக் கட்டுப்படுத்துகின்றன என்றும், அனைவரும் உடனே கீழ்ப்படியவேண்டிய அவசியம் இல்லை என்றும் பொது இடங்களில் போதிப்பதாக வைத்துக்கொண்டால், அப்படிப்பட்ட மனிதர்கள் எவ்வளவு நாட்களுக்கு மேடையில் சகித்துக்கொள்ளப்படுவார்கள்? ஆனால், சகல அரசாங்கங்களுக்கும் அஸ்திவாரமாக இருக்கும் தெய்வீகப் பிரமாணங்களைக் காலின்கீழ் மிதிப்பதைவிட, மாநிலங்கள், நாடுகள் ஆகியவைகளின் சட்டங்களை மதிக்காமலிருப்பது மிகவும் கடுமையான குற்றமாக உள்ளது. (5)

பிரபஞ்சத்தின் பிரமாணங்களை இல்லாமல்போகச்செய்து, குற்றவாளியைக் குற்றப்படுத்தவும், கீழ்ப்படிதல் உள்ளவர்களை நியாயப்படுத்துவதற்கும் ஒரு தரம் இல்லாததாக உலகத்தை விட்டுவிடுவதைவிட, நாடுகள் தங்களுடைய சட்டங்களை நீக்கிவிட்டு, மக்களை அவர்களது விருப்பப்படி நடந்துகொள்ள அனுமதிப்பது அதிக இசைவுள்ளதாக இருக்கும். தேவனுடைய பிரமாணத்தில் பிளவு உண்டாகும்போது, அதன் பலன் எவ்விதமாக இருக்கும் என்பதை நாம்அறிவோமா? அந்தப் பரிசோதனை, சோதித்துப் பார்க்கப்பட்டாகிவிட்டது. கடவுள் இல்லை என்னும் கோட்பாடு பிரான்ஸில் ஆட்சிசெய்த காலத்தில், செயல்படுத்தப்பட்ட காட்சிகள் பயங்கரமானவையாக இருந்தன. தேவன் நடைமுறைப்படுத்தியிருந்த கட்டுப்பாட்டைத் தூரமாக வீசிவிடுவது, கொடுங்கோன்மையின் மிகக் கொடூரமான ஆளுகையை ஏற்றுக்கொள்ளுவதாக இருக்கும் என்பதற்கான நடைமுறை விளக்கம் அங்கு கொடுக்கப்பட்டது. நீதியின் தரம் ஓரமாக நீக்கிவைக்கப்படும்போது, தீமையின் பிரபு அவனது வல்லமையை பூமியில் ஏற்படுத்துவதற்கு வழி திறக்கப்படுகிறது. (6)

தெய்வீகப் பிரமாணம் எங்கெல்லாம் நிராகரிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் பாவம் பாவத்தின் தோற்றம் இல்லாததாகி, அல்லது நீதி விரும்பக்கூடியதாக இல்லாமலாகிவிடுகிறது. தேவனுடைய அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் தங்களைத்தாங்களே ஆளுவதற்கு முற்றிலுமாகத் தகுதியற்றவர்காளகின்றனர். தீய பலன்களைக் கொண்டுவரும் அவர்களது போதனைகளின் மூலமாக, கீழ்ப்படியாமையின் ஆவி இயல்பாகவே கட்டுப்பாட்டில் பொறுமையில்லாத சிறுவர்கள், இளைஞர்களின் இருதயங்களில் நடப்படும்போது ஒரு சட்டம் இல்லாத காமவிகாரமிக்க சமுதாயம் அதன் பலனாக உண்டாகிறது. தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களிடம் உள்ள எளிதில் நம்பும் தன்மையைப் பரிகாசமாகப் பேசும்போது, திரளானவர்கள் சாத்தானின் மாயங்களை ஆவலுடன் ஏற்றுக்கொள்ளுகின்றனர். கடிவாளத்தை அவர்கள் இச்சையிடம் கொடுத்து, அஞ்ஞானிகளின்மீது நியாயத்தீர்ப்பை வரப்பண்ணின பாவங்களைச் செய்கிறார்கள். (7)

தேவனுடைய பிரமாணத்தை மலிவானதாகக் கருதும்படி மக்களுக்குப் போதிப்பவர்கள், கீழ்ப்படியாமையை அறுவடைசெய்திட, கீழ்ப்படியாமையை விதைக்கின்றனர். தெய்வீகப் பிரமாணத்தில் உண்டுபண்ணப்பட்ட கட்டுப்பாடுகள் முற்றிலும் நீக்கப்படட்டும். அப்போது மனிதச் சட்டங்கள் விரைவில் பொருளற்றதாகிவிடும். இச்சித்தல், பொய் சொல்லுதல் ஏமாற்றுதல் போன்ற நேர்மையற்ற செயல்களைத் தேவன் தடைசெய்வதால், தேவனுடைய பிரமாணங்களை அவர்களுடைய உலகப்

பிரகாரமான செழுமைக்கு இடையூறாக இருக்கிறன்றன என்று கருதி, அவைகளைக் காலின்கீழிட்டு மிதிக்க மனிதர்கள் தயாராக உள்ளனர். ஆனால் இந்தப் பிரமாணங்களை நீக்குவதன் பலன்கள், அவர்கள் எதிர்பாராத விதத்திலுள்ளவையாக இருக்கும். கற்பனை கட்டுப்படுத்தாததாக இருந்தால், மீறுவதற்கு எவரும் ஏன் பயப்படவேண்டும்? அதற்குமேல் பொருள்கள் பாதுகாப்பாக இருக்காது. மனிதர்கள் அவர்களது அயலார்களின் உடைமைகளைப் பலாத்காரத்தின் மூலமாகவே எடுத்துக்கொள்ளுவார்கள். அப்பொழுது பலவான்கள் அனைவரும் செல்வந்தர்களாகிவிடுவார்கள். உயிரும் மதிக்கப்படமாட்டாது. குடும்பத்தைப் பாதுகாக்கும் பலத்த கோட்டையாக திருமண உறுதிமொழி இருக்காது. வல்லமை உள்ளவன் விரும்பினால், தனது அயலானின் மனைவியை பலாத்காரத்தினால் தனக்கென்று எடுத்துக்கொள்ளுவான். நான்காவது பிரமாணத்துடன் சேர்ந்து, ஐந்தாவது பிரமாணமும் ஒதுக்கிவைக்கப்படும். பிள்ளைகள் தங்களுடைய கறை மிக்க இருதயங்களின் விருப்பங்களைப் பெற்றோர்களின் உயிரை எடுத்துக்கொள்வதினால் அடைந்துகொள்ளத் தயங்கமாட்டார்கள். இந்த நாகரிக உலகம் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் ஆகியோரின் கூட்டத்தினராலாகி, சமாதானம் இளைப்பாறுதல் மகிழ்ச்சி ஆகியவை பூமியிலிருந்து விரட்டப்பட்டுவிடும். (8)

தேவனுடைய பிரமாணங்களிலிருந்து மனிதர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது, சன்மார்க்கக் கடமைகளின் வலிமையை ஏற்கனவே பலவீனப்படுத்தி, அக்கிரமம் என்னும் பெருவெள்ளத்தின் மதகை உலகத்தின்மீது திறந்துள்ளது. சட்டமின்மை, வீணாக்குதல், பிரிவினைகள், ஊழல் ஆகியவை திகைக்கவைக்கும் அலையாக நம்மீது அடித்துக்கொண்டுள்ளது. குடும்பத்தில் சாத்தான் செயலாற்றிக்கொண்டிருக்கிறான். கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளுபவர்களின் வீட்டுப்பொருள்களிலும் அவனது கொடி அசைந்தாடுகிறது. பொறாமை, கெட்ட யூகங்கள், வெளிவேஷம், ஊதாரித்தனம், போட்டி மனப்பான்மை, சச்சரவு, பரிசுத்தமான நம்பிக்கைக்குத் துரோகம் செய்தல், இச்சைமிக்க வழக்கங்கள் ஆகியவை உள்ளன. சமுதாய வாழ்க்கையின் கூண்டாகவும், அஸ்திவாரமாகவும் இருக்கவேண்டிய மத சம்பந்தமான அனைத்து கொள்கைகளும் கோட்பாடுகளும் அனைத்து முறைமைகளும் விழுந்துபட்டு அழிவதற்குத் தயாராகி தள்ளாடிக்கொண்டிருக்கும் பெரும் பொருள்போல் காணப்படுகின்றன. படுமோசமான குற்றவாளிகள் அவர்களுடைய குற்றங்களுக்காகச் சிறைச்சாலைக்குள் தள்ளப்படும் வேளையில், பொறாமைப்படக்கூடிய விதத்தில் அதன் சிறப்பை அடைந்துவிட்டவர்களைப்போல, பாராட்டலுக்குரிய

பரிசுகளையும் பதக்கங்களையும் பெற்றவர்களைப்போல நடத்தப்படுகின்றனர். அவர்களது சுபாவத்திற்கும் குற்றங்களுக்கும் பெரும் விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் செய்த ஏமாற்றுதல்கள், கொலைகள், கொள்ளைகள் ஆகிய கபடத்தனமான செயல்கள் மற்றவர்களும் செய்யும்படி தூண்டக்கூடிய விதத்தில் அச்சகங்கள் (செய்திகளை) வெளியிடுகின்றன. சாத்தான் தனது நரகத்திட்டங்களின் வெற்றியில் வெற்றிச்சிரிப்புச் சிரிக்கிறான். காமவெறி, வேண்டுமென்றே உயிரை அழித்தல், ஒவ்வொரு வகையிலும் உள்ள இச்சசையடக்கமின்மை, அக்கிரமம் ஆகியவை தேவனுக்குப் பயப்படும் அனைவரையும் தீமையின் அலையை நிறுத்துவதற்கு என்ன செய்யப்படவேண்டும் என்று விசாரிப்பதற்கு எழுப்ப வேண்டும். (9)

நீதியை நடப்பிக்கவேண்டிய நீதிமன்றங்கள் ஊழல் மிக்கவையாக உள்ளன. இலாபத்தின்மீதுள்ள வாஞ்சை புலன்களின் இன்பங்களின் மீதுள்ள நாட்டம் ஆகியவைகளால் அதிபதிகள் செயல்படும்படி தூண்டப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். புலனடக்கமின்மை அநேகருடைய அறிவுத்திறனை இருளடையச் செய்துகொண்டிருக்கும் காரணத்தால், சாத்தான் அவர்கள்மீது ஏறத்தாழ முழுக் கட்டுப்பாட்டையும் உடையவனாக இருக்கிறான். நியாயஆலோசகர்கள் குணம்கெட்டு, வஞ்சகத்திற்கு உள்ளாகி, வஞ்சிக்கப்பட்டுள்ளனர். சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டியவர்கள் குடிகாரத்தன்மை, களியாட்டங்கள், காமவெறிகள், பொறாமை, சகலவிதமான நாணயமின்மை ஆகியவைகளின் பிரதிநிதிகளாகக் காணப்படுகின்றனர். “நியாயம் பின்னிட்டு அகன்றது; நீதி தூரமாய் நின்றது; சத்தியம் வீதியிலே இடறி, யதார்த்தம் வந்து சேரமாட்டாமற்போகிறது”—ஏசாயா 59:14. (10)

ரோமசபையின் மேலாதிக்கத்தில், அக்கிரமமும் ஆவிக்குரிய இருளும் நிலவியிருந்து, வேதவாக்கியங்களை அமர்த்தினதால் உண்டான தவிர்க்க முடியாத பலனாகும். ஆனால் எங்கும் பரவி உள்ள கடவுள் இல்லை என்னும் வாதம், தேவப்பிரமாணங்களை நிராகரித்தல், அதன் பலனால் உண்டான கறைகள், மதச் சுதந்திரம் என்னும் காலக்கட்டத்தின்கீழ் சுவிசேஷத்தின் நெருப்பு முழுமையாக எரிந்துகொண்டிருக்கும்போது, மதச் சுதந்திரம் உண்டாவதற்கான காரணத்தை எங்கே காணமுடியும்? வேதவாக்கியங்களை பிடித்து நிறுத்திக்கொள்ளுவதினால் இதற்குமேல் உலகத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் வைக்கமுடியாது என்பதை சாத்தான் அறிந்து, அதே நோக்கத்தை நிறைவேற்ற, வேறு உபாயங்களைக் கையாளுகிறான். வேதாகமத்தின்மீதுள்ள விசுவாசத்தை அழிப்பது என்பது, வேதாகமத்தையே அழிக்கும் நோக்கத்தைச் செயல்படுத்துவதாகும். தேவனுடைய கற்பனை கட்டுப்படுத்துவதில்லை என்னும் நம்பிக்கையை அறிமுகம் செய்வதினால்,

மனிதர்கள் தேவனுடைய கற்பனைகளைப்பற்றி அறியாதவர்களாக இருந்து அதை மீறும்படி அவன் திறமையாக நடத்துகிறான். கடந்தகாலத்தில் அவன் சபையின் மூலமாகச் செயலாற்றியதைப் போலவே, இப்பொழுதும் தனது திட்டங்களை சபையின் மூலமாகவே செய்துகொண்டு செல்லுகிறான். அந்த நாளில் இருந்த மத அமைப்புகள், வேதவாக்கியங்களால் தெளிவாகக் காட்சிக்குக் கொண்டுவந்த அறியப்படாமலிருந்த சத்தியங்களைக் கவனிக்க மறுத்துவிட்டன. அதை அழிக்கும் செயலில் சந்தேகவாதங்களைப் பரப்பும்படி அவர்கள் விதைத்திருந்த விளக்கங்களையும் நிலைமைகளையும் பற்றிக்கொண்டனர். மனிதனின் இயல்பான சாவாமை, மரணத்திற்குப்பின் மனிதனுக்கு உணர்வு எண்டு என்னும் நிலை ஆகிய போப்புமார்க்கத்தின் தவறைப் பிடித்துத்தொங்கிக்கொண்டு, ஆவிமார்க்கத்தின் வஞ்சகத்திற்கு எதிரான ஒரே பாதுகாப்பை அவர்கள் நிராகரித்தனர். நித்திய ஆக்கினை என்னும் கோட்பாடு அநேகரை வேதாகமத்தின்மீது நம்பிக்கை அற்றவர்களாகும்படி நடத்தியது. நான்காவது பிரமாணம் மக்கள்மீது வற்புறுத்தப்பட்டபோது, ஏழாம்நாள் (ஓய்வுநாள்) சட்டப்படி கீழ்ப்படியவேண்டியதாக உள்ளது என்று காணப்பட்டபோது, அவர்கள் செய்ய விரும்பாத ஒரு கடமையிலிருந்து தங்களை விடுவித்துக்கெள்ளும் ஒரே வழியாக அதைக் கண்டபோது, புகழ்மிக்க ஆசிரியர்கள், தேவனுடைய கற்பனை இனி மனிதனைக் கட்டுப்படுத்தாது என அறிவிக்கின்றனர். இப்படியாக இவர்கள் கற்பனை, ஓய்வுநாள் ஆகிய இரண்டையும் மொத்தமாக—தூரமாக விலக்குகின்றனர். ஓய்வுநாள் ஆசரிப்பின் ஊழியம் விரிவடையும்போது, நான்காவது பிரமாணத்தின் உரிமையைத் தவிர்ப்பதற்காக, தெய்வீகப் பிரமாணத்தை நிராகரிப்பது, மிக விரைவில் உலகளாவியதாக இருக்கும். கடவுள் இல்லை என்னும் வாதம், ஆவிமார்க்கம், தேவனுடைய பரிசுத்த பிரமாணத்தைக் குற்றப்படுத்துதல் ஆகியவைகளுக்கான கதவை மத ஆசிரியர்களின் போதனைகள் திறந்துள்ளது. கிறிஸ்தவ உலகத்தில் காணப்படுகின்ற அக்கிரமங்களுக்கான பயங்கரமான பொறுப்பு, இந்தத் தலைவர்களின்மீதே தங்கியுள்ளது. (11)

அப்படியிருந்தும் விரைவாகப் பரவிவரும் கறைகளுக்கு, கிறிஸ்தவ ஓய்வுநாள் என்று அழைக்கப்படுவதைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவதே பெரும்பாலும் காரணமாக உள்ளது என்றும், ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பை வற்புறுத்துவது, சமுதாயத்தின் சன்மார்க்கங்களை முன்னேற்றமடையச் செய்வதற்காகவே என்றும் கூறப்படும். பொய்யான ஓய்வுநாளைப்பற்றிய கோட்பாடு எங்கு மிக அதிமாகப் பிரசங்கிக்கப்படுகிறதோ, அந்த அமெரிக்காவில் இந்த உரிமைகள் மிக முக்கியமாக வற்புறுத்தப்படுகிறது.

இங்கு மிகச் சிறந்ததும் மிக முக்கியமானதுமான சன்மார்க்கச் சீர்திருத்தமாகிய இச்சையடக்கத்தின் ஊழியம் அடிக்கடி ஞாயிறு ஆசரிப்பு இயக்கத்துடன் இணைந்து செய்யப்படுகிறது. பின்னதற்காகப் பரிந்துபேசுபவர்கள் எனத் தங்களை எடுத்துக்காட்டுபவர்கள் (ஞாயிறு ஆசரிப்பை ஆதரிப்பவர்கள்) சமுதாயத்தின் மேலான நோக்கங்களை முன்னேற்றமடையச் செய்வதற்காக உழைப்பதாகவும், அவர்களுடன் ஒற்றுமைப்பட மறுப்பவர்கள் இச்சையடக்க ஊழியங்களுக்கும் சீர்திருத்தத்திற்கும் எதிரிகள் என்றும் பகிரங்கமாகக் குற்றம்சாட்டப்படுகின்றனர். தவறான உபதேசத்தை அமைப்பதற்காக செயல்படும் ஒரு இயக்கத்துடன், தன்னில்தானே நல்லதாக உள்ள ஒரு ஊழியம் இணைக்கப்பட்டிருக்கிறது என்னும் காரணம், தவறு செய்வதற்கு அனுகூலமான ஒரு வாதமாக இருப்பதில்லை. நல்ல உணவுடன் நாம் நஞ்சைக் கலந்து மறைக்கலாம். ஆனால் அது நஞ்சின் தன்மையை மாற்றுவதில்லை. அதற்கு எதிராக அது தெரியாத விதத்தில் இருப்பதினால், அறியாதவர்களால் உண்ணக்கூடிய நிலையில் அதிக ஆபத்துள்ளதாக இருக்கிறது. சரியானதுபோலத் தோன்றச் செய்வதற்காகத் தவறுடன் அதற்குள் போதுமான அளவில் சத்தியத்தைக் கலப்பது, சாத்தானின் உபாயங்களில் ஒன்றாக உள்ளது. ஞாயிறு ஆசரிப்புத் தலைவர்கள் மக்களுக்குத் தேவையான சீர்திருத்தங்களை, வேதாகமத்திற்கு இசைவாக உள்ள கொள்கைகளோடு பரிந்துபேசலாம் என்றபோதிலும், இந்த அவசியங்களுக்கிடையில், தேவனுடைய கற்பனைக்கு எதிரான ஒரு அவசியப்படுத்துதல் இருக்கும்போது அவரது வேலைக்காரர்களால் அவர்களுடன் (ஞாயிறு ஆசரிப்புக்காரர்களுடன்) ஒற்றுமைப்பட முடியாது. மனிதச்சட்டங்களுக்காக தேவப்பிரமாணத்தை விலக்கிவைக்கும் எதுவும் அவர்களை நியாயப்படுத்தாது. (12)

ஆத்துமாவின் அழியாமை, ஞாயிற்றுக்கிழமையின் பரிசுத்தம் என்னும் இரண்டு பெரிய தவறுகளின் மூலமாக, சாத்தான் மக்களை அவனது வஞ்சகத்தின்கீழ் கொண்டுவருவான். முதலாவதாகக் கூறப்பட்டுள்ளது, ஆவிமார்க்கத்திற்கு அஸ்திவாரமிடுவதற்காக. இரண்டாவது கூறப்பட்டது, ரோமசபையுடனுள்ள பிணைப்பிற்கான அனுதாபத்தை உண்டாக்குவதற்காக. ஆவிமார்க்கத்தின் கரத்தைப் பற்றிக்கொள்ளுவதற்காக, இடைவெளிக்கு எதிராகத் தங்கள் கரங்களை நீட்டுவதில், அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள புரொட்டஸ்டாண்டுகள் மிகவும் முன்னானவர்களாக இருப்பார்கள். ரோம வல்லமையுடன் கரம்பற்றிக்கொள்ள அவர்கள் அந்த இடைவெளியைக் கடந்து செல்லுவார்கள். இந்த மூன்றாவது வழியான இணைந்த செல்வாக்கின்கீழ், இந்த நாடு மனச்சாட்சியின் உரிமைகளைக் காலின்கீழிட்டு மிதிப்பதற்காக ரோமசபையின் அடிச்சவடுகளைப் பின்பற்றும். (13)

தற்காலத்தில் பெயரளவிலான கிறிஸ்துவத்தை ஆவிமார்க்கம் மிகவும் நெருக்கமாக்குவதால், வஞ்சிப்பதற்கும் கண்ணியில் விழச்செய்வதற்கும் அதனிடம் அதிகமான வல்லமை இருக்கிறது. காரியங்களில் நவீன கால மாறுதல் நிகழ்ந்திருப்பதை அனுசரித்து சாத்தானும் தன்னை மாற்றிக்கொண்டிருக்கிறான். அவன் ஒளியின் தூதனின் வேஷத்தில் தோன்றுவான். ஆவிமார்க்கத்தின் பிரதிநிதிகளால் அற்புதங்கள் செய்யப்படும். நோயாளிகள் சுகமடைவார்கள். மறுக்கமுடியாத அநேக ஆச்சரியமிக்க சம்பவங்கள் நிகழ்த்தப்படும். இந்த ஆவிகள் வேதாகமத்திலுள்ள விசுவாசத்தை அறிக்கைசெய்து, சபை அமைப்புகளின்மீது மரியாதையை வெளிக்காட்டும்போது, அவைகளின் வேலை தெய்வீக வல்லமையின் வெளிக்காட்டல் என்றும் ஏற்றுக்கொள்ளப்படும். (14)

இப்படிப்பட்ட சூழ்நிலையில், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களுக்கும், தேவனை மதிக்காதவர்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைப் பிரித்தறிவது கடினமாக உள்ளது. உலகம் எதை நேசிக்கிறதோ அதை சபை அங்கத்தினர்கள் நேசிக்கின்றனர். அவர்கள் அதனுடன் சேர்ந்துகொள்ள ஆயத்தமாக உள்ளனர். சாத்தான் அவர்களை ஒரே சரீரமாக இணைத்து, அதனால் அவனது நோக்கத்தைப் பலப்படுத்தி, அனைவரையும் ஆவிமார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளத் தீர்மானிக்கிறான். உண்மையான சபையின் ஒரு நிச்சயமான அடையாளமாக அற்புதங்கள் உள்ளன என்று பெருமை பாராட்டும் போப்புமார்க்கவாதிகள், இந்த ஆச்சரியமானவைகளைச் செய்யும் வல்லமையினால் வஞ்சிக்கப்படுவார்கள். சத்தியம் என்னும் கேடயத்தை தூரமாக விலக்கிவிட்ட, புரொட்டஸ்டாண்டுகள் உலகப்பிரகாரமானவர்கள் ஆகியோர் தெய்வ பக்தியின் வேஷத்தை அதன் வல்லமை இல்லாமல் ஏற்றுக்கொண்டு, இந்த ஐக்கியத்தில் உலகை மதம்மாறச் செய்யும் ஒரு பெரும் இயக்கத்தையும், வெகுகாலமாக எதிர்நோக்கியிருந்த ஆயிரவருட அரசாட்சி உதயமாவதையும்...! காண்பார்கள். (15)

மக்களின் நோய்களைக் குணப்படுத்தி, ஒரு மிக உயர்வான மத விசுவாசமான அமைப்பைக் கட்டப்போவதாகக் கூறிக்கொண்டு, மனித இனத்திற்கு நன்மை செய்பவனைப்போல ஆவிமார்க்கத்தின் மூலமாக சாத்தான் தோன்றுகிறான். ஆனால் அதே நேரத்தில் அவன் ஒரு அழிப்பவனாகச் செயலாற்றுகிறான். அவனது சோதனைகள் திரளானவர்களைக் கேட்டுக்குள் நடத்திக்கொண்டிருக்கிறது. இச்சையடக்கமின்மை, பகுத்தறிவை சிங்காசனத்திலிருந்து இறக்கி விடுவது, புலன்களுக்கு அடிமைகளாகிவிட்ட பழக்கங்கள், சச்சரவு, இரத்தம் சிந்துதல் ஆகியவை பின்தொடருகின்றன.

யுத்தத்தில் சாத்தான் சந்தோஷப்படுகிறான். ஏனெனில் அது ஆத்துமாவின் மிக மோசமான ஆசைகளைத் தூண்டிவிடுகிறது. அதன்பின், தீய செயல்களிலும் இரத்தத்திலும் மூழ்கிப்போய் அதற்குப் பலியானவர்களை நித்திய நாசத்திற்குள் அடித்துச் செல்லுகிறது. ஒன்றுக்கொன்று எதிராகப் போரிடும்படி நாடுகளை எழுப்பிவிடுவது அவனது குறிக்கோளாக உள்ளது. ஏனெனில் இப்படியாக தேவனுடைய நாளில் நிற்பதற்கென்று ஆயத்தம் செய்யும் பணியிலிருந்து, மக்களின் மனதை அவனால் வேறுபக்கமாகத் திருப்ப முடியும். (16)

ஆயத்தமில்லாத ஆத்துமாக்களை அறுவடைசெய்து, அவனது களஞ்சியத்தில் சேர்த்துக்கொள்ள இயற்கையின் மூலமாகவும் சாத்தான் செயலாற்றுகிறான். இயற்கையின் ஆய்வுக்கூடங்களின் இரகசியங்களை அவன் ஆராய்ந்து. தேவன் அனுமதிக்கின்றவரையிலும் இயற்கையின் மூலக்கூறுகளைக் கட்டுப்படுத்த அவன் தன்னுடைய வல்லமையைப் பயன்படுத்துகிறான். யோபுவைத் துன்புறுத்தும்படி அவன் அனுமதிக்கப்பட்டபோது, எவ்வளவு விரைவாக மிருகங்கள், வேலைக்காரர்கள், வீடுகள், பிள்ளைகள் ஆகியோர் அடித்துச்செல்லப்பட்டு, ஒன்றன்பின் ஒன்றாகத் துன்பங்கள் விநாடி நேரத்தில் நிகழ்ந்தன. உயிரினங்களுக்குக் கேடயமாக இருந்து, அவைகளைச் சுற்றிப் பாதுகாப்பு அமைத்து, அழிப்பவனின் வல்லமையிலிருந்து அவைகளைக் காப்பவர்—தேவன்தான். ஆனால் கிறிஸ்தவ உலகம் யோகோவாவின் பிரமாணத்தின்மீது தனது அவமதிப்பைக் காட்டியிருந்தது. எனவே கர்த்தர் என்ன செய்யப்போவதாகக் கூறுகிறாரோ அதை, தமது ஆசீர்வாதங்களை உலகத்திடமிருந்து புறம்பாக்கி, அவரது பிரமாணத்திற்கு எதிராகக் கலகம் செய்து, அவைகளையே போதித்து, பிறரையும் அவ்வாறாகவே செய்யும்படி வற்புறுத்துபவர்களிடமிருந்த தமது பாதுகாக்கும் கரிசனையையும் நீக்கிவிடுவார். தேவன் விசேஷித்த பிரகாரமாகப் பாதுகாக்காத அனைவர்மீதும், சாத்தான் தனது கட்டுப்பாட்டை உடையவனாக இருக்கிறான். அவனது திட்டங்களை முன்கொண்டுசெல்லுவதற்காக அவன் சிலருக்கு ஆதரவுகாட்டி, சிலரைச் செழுமையடையச் செய்து, மற்றவர்களின்மீது துன்பங்களைக் கொண்டு வந்து, கடவுள்தான் தங்களைத் துன்புறுத்துகிறார் என்று நினைக்கும்படி, அவன் மனிதர்களை நடத்துவான். (17)

மனிதர்களின் முன்பாக மனிதர்களின் நோய்களனைத்தையும் குணப்படுத்தும் மாபெரும் வைத்தியனாக அவன் காட்சிதரும் அதே நேரத்தில், ஜனநெருக்கமான நகரங்கள் இடிந்து பாழாகும்வரை அவன் நோய்களையும் பாழ்க்கடிப்புகளையும் கொண்டுவருவான். இப்பொழுதுங்கூட

வேலைசெய்துகொண்டு வருகிறான். நிலத்திலும் நீரிலும் விபத்துக்கள், பேரழிவுகள், பெரும் தீ விபத்துக்கள், பயங்கரமான சூறாவளிகள், பயங்கரமான பனிப்புயல்கள், புயல்காற்றுகள், பெரு வெள்ளங்கள், பேரலைகள், பூகம்பங்கள் எத்திசையிலும் எவ்வூரிலும் நடைபெற, சாத்தான் தனது வல்லமையால் செயலாற்றிக் கொண்டிருக்கிறான். முதிர்ந்து அறுவடையாக உள்ள பயிர்களை பெரு வெள்ளத்தால் அவன் நாசம் செய்துவிடுவதினால், பஞ்சங்களும் துன்பங்களும் உண்டாகின்றன. மரணத்தை உண்டுபண்ணக்கூடிய விஷங்களினால் ஆகாயத்தை நிறைக்கிறான். அதனால் ஆயிரக்கணக்கானவர்கள் கொள்ளைநோய்களினால் அழிகின்றனர். இந்த அழிவிற்குரிய நிகழ்ச்சிகள் அதிகமதிகமாகவும் அடிக்கடியும் நிகழ உள்ளன. அழிவு மனிதர்களின்மீதும் விலங்கினங்களின்மீதும் வரும். “தேசம் புலம்பி வாடும்; பூமி சத்துவமற்று உலர்ந்துபோகும்; தேசத்து ஜனத்திலே உயர்ந்தவர்கள் தவிப்பார்கள். தேசம் தன் குடிகளின் மூலமாய்த் தீட்டுப்பட்டது; அவர்கள் நியாயப்பிரமாணங்களை மீறி, கட்டளையை மாறுபாடாக்கி, நித்திய உடன்படிக்கையை முறித்தார்கள்”—ஏசாயா 24:4,5. (18)

அதன்பின், தேவனை சேவிப்பவர்கள்தான் (வெளி 14:120—ன்படி நடப்பவர்கள்) இந்த தீமைகளுக்கெல்லாம் காரணமாக இருக்கின்றனர் என்று நினைக்கும்படி, அந்த பெரும் வஞ்சகன் மனிதர்களை எண்ணச்செய்வான். தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அவைகளை மீறுபவர்களுக்கெதிரான, தொடர்ச்சியான கடிந்து கொள்ளுதலுக்கு உள்ளாவார்கள். பரத்தின் கோபத்தைத் தூண்டிவிட்ட வகுப்பினர், தங்களுக்கு உண்டாயிருக்கும் துன்பங்களுக்கெல்லாம் காரணம் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிபவர்கள்தான் என்று அவர்கள்மீது குற்றஞ்சாட்டுவார்கள். ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளை மீறுவதினால் மனிதர்கள் தேவனுக்கு எதிராகக் குற்றம் புரிகின்றனர் என்று அறிவிக்கப்படும். இந்தப் பாவம்தான் பேரழிவுகளைக் கொண்டுவந்துள்ளன என்றும், ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பைக் கட்டாயமாக்காதவரை, அழிவுகள் நிற்காது என்றும் அறிவிக்கப்படும். நான்காம் பிரமாணத்தின் உரிமையை முன்வைப்பவர்கள் இவ்விதமாக ஞாயிற்றுக்கிழமையின் மீதுள்ள பக்தியை அழிக்கின்றனர் என்றும், தெய்வீக ஆதரவையும் உலகப்பிரகாரமான செழுமையையும், திரும்பப் பெறுவதையும் அவர்கள் தடுத்துக்கொண்டிருக்கின்றனர் என்றும் கூறப்படும். இப்படியாக தேவனுடைய ஊழியக்காரர்களின்மீது முன்பு கூறப்பட்ட குற்றச்சாட்டு அதற்குச் சமமாக நன்கு அமைக்கப்பட்டுவிட்ட ஸ்தாபனத்தின் சார்பாகக் கூறப்படும். “ஆகாப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா என்றான். அதற்கு அவன்: இஸ்ரவேலைக்

கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்" (1 இராஜா. 18:17–18) என்றான். தவறான குற்றச்சாட்டுகளினால் மக்களின் கோபம் தூண்டப்பட்டதுபோல, மருளவிழுந்த இஸ்ரவேலர்கள் எலியாவிற்கு விரோதமாகச் செயல்பட்டது போன்ற ஒரு நடவடிக்கை தேவனுடைய தூதுவர்களுக்கு எதிராகச் செயல்படுத்தப்படும். (19)

ஆவிமார்க்கத்தின் மூலமாக வெளிக்காட்டப்படும் அற்புதங்களைச் செய்யும் வல்லமை தேவனைக் காட்டிலும் மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதை தெரிந்துகொள்ளுபவர்களின் ஆசரிப்பை நிராகரிப்பவர்களின் தவறை அவர்களுக்கு எடுத்துக்காட்டி, மன உணர்த்துதலை உண்டுபண்ணவும், நாட்டின் சட்டத்தைத் தேவனுடைய சட்டமாக மதித்து, அதற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்தவும் அவைகளை அனுப்பி வைத்துள்ளதாக ஆவிகளிடமிருந்துள்ள தொடர்புகள் அறிவிக்கும். உலகத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கும் பெரும் தீமைகளுக்காக மத ஆசிரியர்களின் சாட்சிக்கு வழிமொழிந்து சன்மார்க்க நிலையின் சீர்கேட்டிற்கு ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினதுதான் காரணம் என்று அவை புலம்பும். அவைகளின் சாட்சியை ஏற்றுக்கெள்ள மறுப்பவர்களுக்கெதிரான கோபம் மிகப் பெரியதாக இருக்கும். (20)

தேவனுடைய மக்களுக்கு எதிராக சாத்தானின் இறுதிப்போரில் இருக்கக்கூடிய கொள்கை அவன் பரலோகத்தில் ஆரம்பித்த மாபெரும் யுத்தத்தில் பயன்படுத்திய அதே கொள்கையாகத்தான் இருக்கும். தெய்வீக அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகத் தனது ஒவ்வொரு முயற்சியையும் இரகசியமாகச் செய்துகொண்டிருந்த அதே சமயத்தில், தெய்வீக அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மையை மேம்பாடடையச்செய்ய வகை தேடிக்கொண்டிருப்பதாக அவன் கூறிக்கொண்டான். அவன் எவைகளை நிறைவேற்ற முயன்றுகொண்டிருந்தானோ, அதே வேலையை தேவனுக்கு உண்மையான விசுவாசமுடைய தேவதூதர்கள் செய்துகொண்டிருப்பதாக அவர்கள்மீது குற்றம் சுமத்தினான். ரோமசபையின் வரலாற்றில் இதேவிதமான வஞ்சகக் கொள்கை குறிக்கப்பட்டிருந்தது. அது தன்னை தேவனுக்கு மேலாக உயர்த்தி, அவரது பிரமாணத்தை மாற்ற வகைதேடிக்கொண்டிருந்த அதே நேரத்தில், பரலோகத்தின் பதிலாளியாகச் செயல்படுவதாகத் தன்னைப்பற்றிக் கூறிக்கொண்டது. ரோம சபையின் ஆளுகையின்கீழ், சுவிசேஷத்திற்கு விசுவாசம் உள்ளவர்களாக மரண தண்டனையை அனுபவித்தவர்கள், தீமை செய்தவர்கள் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். அவர்கள்

சாத்தானின் அணியுடன் கூட்டுச்சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டனர். நிந்தையால் அவர்களை மூடி மக்களின் கண்களுக்கு முன்னும் தங்களுக்குங்கூட படுமோசமான குற்றவாளிகளாகத் தோன்றச்செய்வதற்கு முடிந்த அளவிற்கு சகலவிதமான உபாயங்களும் கையாளப்பட்டன. இப்போதும் அதைப்போலவே இருக்கும் தேவனுடைய பிரமாணங்களை மேன்மைப்படுத்துபவர்களை அழிப்பதற்குச் சாத்தான் வகைதேடும் அதே நேரத்தில் அவர்களைப் பிரமாணத்தை மீறுபவர்கள் என்றும், தேவனை அவமதிக்கும் மனிதர்கள் என்றும், உலகத்தின்மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருபவர்கள் என்றும் குற்றம் சாட்டப்படக்கூடியவர்களாக்குவான். (21)

மனதையோ அல்லது மனச்சாட்சியையோ தேவன் ஒருபோதும் கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் கட்டாயப்படுத்துதல், கொடுமை செய்தல் ஆகியவைகளைத் தவிர, வேறு உபாயங்களால் ஏமாற்றமுடியாதவர்களைக் கட்டுப்படுத்துவதில் சாத்தான் தொடர்ச்சியாக ஈடுபட்டிருக்கிறான். பயப்படுத்துவதினால் அல்லது பலாத்காரத்தினால் மனச்சாட்சியை ஆளுகை செய்ய—தன்னை வணங்குவதை அடைந்துகொள்ள அவன் முயற்சிக்கிறான். இதை நிறைவேற்றுவதற்காக அவன் மதச்சார்புள்ளதும் மதச்சார்பில்லாததுமான அதிகாரிகளின் மூலமாக, தேவனுடைய பிரமாணங்களை எதிர்க்கும் நோக்கமுள்ள மனிதச் சட்டங்களை வற்புறுத்த அவர்களை ஏவுகிறான். (22)

தேவதாகம ஓய்வுநாளை மேன்மைப்படுத்துபவர்கள் சட்ட ஒழுங்கின் எதிரிகள் என்றும், அராஜகமும் ஊழல்களும் உண்டாகச்செய்து பூமியின்மீது தேவனின் நியாயத்தீர்ப்புகளை வரவழைத்து சமுதாயத்தின் சன்மார்க்கக் கட்டுப்பாடுகளைத் தகர்ப்பவர்கள் என்றும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டப்படுவார்கள். அவர்களது மனச்சாட்சியின்படி பாவம் செய்ய மறுக்கும் தன்மைகள், பிடிவாதம், முரட்டுத்தனம், அதிகாரத்தை அவமதித்தல் என்பதாக அறிவிக்கப்படும். அரசாங்கத்தின்மீது பற்று இல்லாதவர்கள் என்று அவர்கள் குற்றம்சாட்டப்படுவார்கள். தெய்வீகப் பிரமாணம் வற்புறுத்தும் கடமைகளை மறுக்கும் ஊழியக்காரர்கள், அரசாங்கம் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருப்பதினால் அரசாங்கச் சட்டத்திற்குக் கீழ்ப்படிவது தேவனுக்குக் கீழ்ப்படிவதாகும் என்று பிரசங்கமேடைகளில் அறிவிப்பார்கள். சட்ட மற்றும் நீதிமன்றங்களிலும் தேவனுடைய பரிசுத்தமான கற்பனைகளைக் கைக்கொள்ளுபவர்கள் தவறானவர்களாக எடுத்துக்காட்டப்பட்டுக் குற்றஞ்சாட்டப்படுவார்கள். அவர்களது வார்த்தைகளுக்கு ஒரு தவறான வர்ணம் பூசப்பட்டு அவர்களது இலட்சியங்களின்மீது படுமோசமான கற்பனையான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும். (23)

தெய்வீகப் பிரமாணத்தின் பாதுகாப்பாக உள்ள தெளிவான வேதவாக்கிய வாதங்களை புரொட்டஸ்டாண்டு சபைகள் நிராகரிக்கும் போது, வேதாகமத்தின் மூலமாக எவர்களுடைய விசுவாசத்தைக் கவிழ்க்கமுடியாதோ, அவர்களை மௌனப்படுத்த வாஞ்சிப்பார்கள். தங்களுடைய சொந்தக் கண்களை உண்மைக்கு எதிராக மூடிக்கொண்டாலும், கிறிஸ்தவ உலகின் இதர பகுதிகள் செய்துகொண்டிருக்கிறதை மனப்பூர்வமாகச் செய்யவும் போப்புமார்க்க ஓய்வுநாளின் உரிமையை வரவேற்கவும் மறுப்பவர்களை உபத்திரவப்படுத்த நடத்தும் ஒரு பாதையை அவர்கள் இப்பொழுது பற்றிக்கொண்டிருக்கின்றனர். (24)

எல்லா வகுப்பினரும் ஞாயிறு ஆசரிப்பை மேன்மைப்படுத்திட இலஞ்சங்கொடுக்கவும் இணங்கச்செய்யவும் அல்லது வற்புறுத்தவும் சபையின் மேன்மக்களும் அரசும் ஒன்றுசேரும். அடக்குமுறைச் சட்டங்களை அமுலாக்குவதின் மூலமாக, தெய்வீக வல்லமையின்மை என்னும் இடம் நிரப்பப்படும். நீதியின் மேலுள்ள அன்பையும், சத்தியத்தின்மீதுள்ள மதிப்பையும், அரசியல் ஊழல்கள் அழித்துக்கொண்டிருக்கின்றன. சுதந்திர அமெரிக்காவிலுங்கூட அதிபதிகளும் சட்டசபை அங்கத்தினர்களும் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்காக, சட்டத்தின்மூலமாக, ஞாயிறு ஆசரிப்பு வற்புறுத்தப்படவேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்குவார்கள். பெரும் தியாகத்தை விலையாகக் கொடுத்துப்பெற்ற மனச்சாட்சியின் சுதந்திரம் இனிமேல் மதிக்கப்படாது. விரைவாக வந்துகொண்டிருக்கும் மோதலில், “அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று” (வெளி. 12:17) என்கிற தீர்க்கதரிசியின் வார்த்தைகள் உதாரணமாக நடத்திக்காட்டப்பட இருப்பதை நாம் காணலாம். (25) ★

# 37

# சத்தியத்தின் ஒளியால் நித்தியத்தின் வழியில்...!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 593–602)**

“வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை” –ஏசாயா 8:20. தவறான ஆசிரியர்களின் செல்வாக்கிற்கும், அந்தகார ஆவிகளின் வஞ்சிக்கும் வல்லமைக்கும் எதிராக, பாதுகாப்பாக இருக்கும்படி தேவனுடைய மக்கள் வேதவாக்கியங்களினிடத்திற்கு நடத்தப்படுகின்றனர். வேதாகமத்தைப்பற்றிய அறிவை மனிதர்கள் அடைந்து கொள்ளுவதைத் தவிர்ப்பதற்காக தன்னால் முடிந்த ஒவ்வொரு உபாயத் தையும் சாத்தான் செயலாற்றுகிறான். ஏனெனில், அதின் தெளிவான வார்த்தைகள் அவனது வஞ்சகங்களை வெளிப்படுத்துகின்றன. தேவனுடைய ஒவ்வொரு எழுப்புதல் பணியின்போதும், தீமையின் பிரபு உக்கிரமாகச் செயலாற்ற எழும்புகிறான். கிறிஸ்துவிற்கும் அவரது அடியார்களுக்கும் எதிரான இறுதிப் போருக்காக இப்பொழுது அவனது முயற்சிகளனைத்தையும் செயல்படுத்துகிறான். இறுதிப் பெரும் வஞ்சகம் நம்முன் விரைவில் திறக்க உள்ளது. நமது பார்வையில் அந்திக் கிறிஸ்து அவனது ஆச்சரியமான செயல்களைச் செய்ய இருக்கிறான். வேதவாக்கியங்களினால் அல்லாமல் வித்தியாசத்தை வேறுபடுத்தி அறியமுடியாதபடி போலியான அந்த அற்புதங்கள் உண்மையானவைகளுக்கு மிக நெருக்கமாக ஒத்தவை போலிருக்கும். வேதாகம் சாட்சியாகமத்தினுடைய ஆதாரத்தினால் மட்டுமே, ஒவ்வொரு அறிக்கையும் அற்புதமும் சோதிக்கப்பட வேண்டும். (1)

தேவனுடைய கற்பனைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிய முயற்சிப்பவர்கள் எதிர்க்கப்பட்டு ஏளனம் செய்யப்படுவார்கள். தேவனுக்குள்ளாக மட்டுமே

அவர்களால் நிற்கமுடியும். தங்களுக்கு முன்னுள்ள சோதனையைத் தாங்கிக்கெள்ள, தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவரது சித்தத்தை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். அவரது சுபாவம், அரசாங்கம், நோக்கங்கள், அவைகளுக்கு இசைவான செயல்கள் ஆகியவைகளைப்பற்றிய சரியான கருத்து அவர்களிடம் இருந்தால் மட்டுமே அவர்களால் அவரை மேன்மைப்படுத்தமுடியும். வேதாகம சத்தியங்களினால் தங்கள் மனதைப் பலப்படுத்தியிருப்பவர்கள் மட்டுமே மாபெரும் இறுதிப் போருக்கு மத்தியில் நிலைநிற்பார்கள். நான் மனிதனுக்குக் கீழ்ப்படிவதைவிட தேவனுக்குக் கீழ்ப்படிவேனா என்று ஆராயும் சோதனை ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் உண்டாகும். இந்த முடிவான நேரம் இப்போதுங்கூட சமீபித்திருக்கிறது. சிதைவுபடாத தேவனுடைய வார்த்தை என்னும் கற்பாறையின்மீது நமது பாதங்கள் ஊன்றி நடப்பட்டுள்ளனவா? தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் உறுதியாகக் காத்துநிற்க நாம் ஆயத்தமாயிருக்கிறோமா? (2)

இரட்சகர் சிலுவையில் அடிக்கப்படுவதற்குமுன், அவர் மரித்த பின்னர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழ இருக்கிறார் என்பதை அவரது சீடர்களுக்கு அவர் விளக்கினபோது, அவர்களது உள்ளங்களிலும் இருதயங்களிலும் அவரது வார்த்தைகளை உணர்த்திக்காட்ட தேவ தூதர்கள் அங்கு இருந்தனர். ஆனால் சீடர்கள் ரோமர்களின் ஆட்சியாகிய நுகத்தின் கீழிருந்து உலகப்பிரகாரமான விடுதலையை எதிர்பார்த்துக்கொண்டிருந்ததினால், அவர்களது நம்பிக்கைகள் அனைத்திற்கும் மையமாக இருந்தவர் கேவலமான மரணத்தை அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணத்தை அவர்களால் சகிக்கமுடியவில்லை. அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளுவதற்கு அவசியமாக இருந்த அவரது வார்த்தைகள் அவர்களது உள்ளத்திலிருந்து துரத்தப்பட்டிருந்தன. சோதனையின் நேரம் வந்தபோது, அவர்கள் ஆயத்தம் இல்லதவர்களாக இருப்பதை வெளிப்படுத்தியது. இயேசுவின் மரணம் அவர்களை முன்னதாக எச்சரிக்காமலிருந்ததைப் போல அவர்களது நம்பிக்கைகள் முற்றிலுமாக அழிந்ததைப் போலிருந்தது. கிறிஸ்துவின் வார்த்தைகளினால் எதிர்காலம் சீடர்களுக்கு திறக்கப்பட்டிருந்ததுபோல, தீர்க்கதரிசனங்களின் மூலம் எதிர்காலம் நமக்குத் தெளிவாகத் திறக்கப்பட்டிருக்கிறது. தவணையின் காலத்தின் முடிவுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும் இக்கட்டுக்காலத்திற்கென்று ஆயத்தம் செய்யவேண்டிய வேலைகளும் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த முக்கியமான சத்தியங்களைப் பற்றி அவைகள் வெளிப்பபடுத்தப்படாமல் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்குமோ அதைப்போன்றே புரிந்துகொள்ளுதல் இல்லாதவர்களாகவே திரளானவர்கள் உள்ளனர். அவர்களை இரட்சிப்பிற்குரிய

ஞானம் உள்ளவர்களாக்கக்கூடிய ஒவ்வொரு உணர்த்துதலையும் அவர்களை விட்டு நீக்கவும் இக்கட்டுக்காலத்தில் அவர்கள் ஆயத்தமற்ற நிலையில் இருக்கும்படியாகச் செய்வதிலும் சாத்தான கவனமாக இருக்கிறான். (3)

மிகவும் முக்கியமான எச்சரிக்கைகளை தேவன் மனிதர்களுக்கு அனுப்பும்போது, அவை வானத்தின் மத்தியில் பறக்கும் தூதர்களால் அறிவிக்கப்படுவதாக எடுத்துக்காட்டப்பட்டு, பகுத்தறியும் சக்தி உள்ள ஒவ்வொருவரும் அதற்குச் செவிகொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குவதினால் வரவிருக்கும் பயங்கரமான நியாயத்தீர்ப்பைப்பற்றிய பகிரங்கமான குற்றச்சாட்டு, மிருகத்தின் முத்திரை என்றால் என்ன என்பதை அறியவும், அதைப் பெறுவதைத் தவிர்ப்பது எப்படி என்பதை அறியவும் தீர்க்கதரிசனங்களை அக்கரையுடன் ஆராயும்படி அனைவரையும் நடத்தவேண்டும். ஆனால் மக்கள் கூட்டத்தினர் சத்தியத்தைக் கேட்பதிலிருந்த அவர்களது செவிகளைத் திருப்பி, கட்டுக்கதைகளிடத்திற்குத் திரும்பியுள்ளனர். “அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்” (2 தீமோத்தேயு 4:3–4) என்று கடைசி நாட்களைக் கண்டு, பவுல் அப்போஸ்தலன் அறிவித்தார். அந்தநேரம் முழுவதுமாக வந்திருக்கிறது. பாவத்தின்மீது விருப்பமுள்ள—உலகை நேசிக்கும் இருதயத்துடன் இருப்பவர்களை வேதாகம சத்தியங்கள் குறுக்கிடுவதினால் திரளானவர்கள் அதை விரும்புவதில்லை. அவர்கள் நேசிக்கும் வஞ்சகங்களை சாத்தான் அவர்களுக்கு வழங்குகிறான். (4)

சகலவிதமான கோட்பாடுகளையும் தரநிர்ணயம் செய்வதும், சகலவிதமான சீர்திருத்தங்களுக்கும் அடிப்படையானதும்—வேதாகமமே! ஆம்! வேதாகமம் ஒன்றினால் மட்டுமே என்று எண்ணி, அதனைச் செயல்படுத்தும் ஒரு கூட்டம் மக்களை பூமியின்மீது உடையவராக தேவன் இருப்பார். கற்றவர்களின் கணிப்புகள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மதக்கொள்கைகள் அல்லது முடிவுகள் அல்லது அவைகளை முக்கியப்படுத்தும் ஏராளமான அதிருப்திமிக்க சபைகள் ஆகிய இவைகளில் ஒன்றையும் அல்லது இவைகள் முழுவதையும் மதவிசுவாசத்தின் எந்த ஒரு காரியத்திற்கும் சான்றாகக் கருதக்கூடாது. எந்த ஒரு கோட்பாட்டையும் கட்டளையையும் ஏற்றுக்கொள்ளுமுன் அதற்கு ஆதரவாக கர்த்தர் உரைக்கிறார் என்னும் தெளிவான ஆதரவு இருக்கிறதா என்று நாம் கேட்கவேண்டும். (5)

தேவனுக்குப் பதிலாக, மனிதனின்மீது கவனம் வைக்கும்படி சாத்தான் தொடர்ச்சியாகக் கவர்ச்சியான ஈர்ப்பை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறான். அவர்கள் செய்யவேண்டிய அவர்களுடைய கடமையை அறிந்துகொள்ளுவதற்காக, வேதவாக்கியங்களைத் தேடுவதற்குப் பதிலாக, பேராயர்கள், போதகர்கள், இறையியல் பேராசிரியர்கள் ஆகியோரைத் தங்களுடைய வழிகாட்டிகளாகப் பார்க்கும்படி அவன் மக்களை நடத்துகிறான். அதற்குப்பின் இந்தத் தலைவர்களுடைய மனங்களைக் கட்டுப்படுத்துவதினால், தனது விருப்பத்தின்படி திரளானவர்களை அவனது செல்வாக்கிற்குள் அவனால் உட்படுத்தமுடியும். (6)

ஜீவ வார்த்தைகளைப் பேசுவதற்கு கிறிஸ்து வந்தபோது, பொது மக்கள் அவர் பேசியதை மகிழ்ச்சியுடன் கேட்டனர். அநேக ஆசாரியர்களாகவும் அதிபதிகளாகவும் இருந்தவர்களுங்கூட அவரில் நம்பிக்கை வைத்தனர். ஆனால் ஆசாரியர்களுக்குத் தலைவனாக இருந்தவனும் அந்த ஜனத்தின் பெரிய மனிதர்களும் அவரைக் குற்றப்படுத்தி, அவரது போதனைகளை மறுக்கத் தீர்மான முள்ளவர்களாக இருந்தனர். அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் அனைத்திலும் திணறின போதிலும் அவர்கள் தங்களைத் தவறான எண்ணத்திற்குள் வைத்து அடைத்துக்கொண்டிருந்தனர். அவரது சீடர்களாகும்படி வற்புறுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக, மேசியா என்னும் அவரது அந்தஸ்தின் தெளிவான சான்றினை நிராகரித்தனர். இயேசுவின் எதிரிகளாயிருந்த இந்த மனிதர்களிடம் பக்திசெலுத்தும்படி, மக்கள் குழந்தைப்பருவத்திலிருந்தே கற்பிக்கப்பட்டு அவர்களது அதிகாரத்திற்கு முழு மனதுடன் பணியும்படியாக பழக்கப்படுத்தப்பட்டிருந்தனர். நமது அதிபதிகளும் கல்விமான்களான வேதபாரகர்களும் இயேசு பெருமானை நம்பாமலிருக்கிறார்களே இது எப்படி என்று அவர்கள் கேட்டார்கள். இவர் கிறிஸ்துவாக இருந்தால் பக்திமான்களான இந்த மனிதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமலிருப்பார்களா? அப்படிப்பட்ட ஆசாரியர்களின் செல்வாக்குதான் யூதரைத் தங்களது மீட்பரை நிராகரிக்கும்படி வழிநடத்தினது. (7)

அந்த ஆசாரியர்களையும் அதிபதிகளையும் ஏவிவிட்ட அதே ஆவிதான் பக்தியின் உயர்வை அறிவிக்கும் அநேகரால் இப்பொழுதும் வெளிக்காட்டப்படுகிறது. இந்தக் காலத்திற்குரிய சிறப்பான சத்தியங்களைப்பற்றிய வேதவாக்கியங்களின் சாட்சியைப் பரீட்சிக்க அவர்கள் மறுக்கின்றனர். அவர்கள் தங்களுடைய சொந்த எண்ணிக்கை, செல்வம், மக்கள்செல்வாக்கு ஆகியவைகளை சுட்டிக்காட்டி, சிலராக ஏழையாக புகழற்றவர்களாக தங்களை உலகத்திலிருந்த பிரிக்கும் ஒரு விசுவாசத்தை

உடையவர்களாகமட்டுமே இருக்கிறார்கள் என்று சத்தியத்திற்குப் பரிந்துபேசுகிறவர்களை அவமதிப்புடன் பார்க்கின்றனர். (8)

வேதபாரகர்களாலும் பரிசேயர்களாலும் எடுத்துக்கொள்ளப் பட்டிருந்த தகாத அதிகாரங்கள், யூதர்கள் சிதறடிக்கப்படுவதுடன் மட்டும் நிற்காது என்பதைக் கிறிஸ்து முன்னதாகவே கண்டார். மனச்சாட்சியை ஆளுவதற்காக மனித அதிகாரத்தை உயர்த்தும் செயல் காலங்கள் நெடுகிலும் சபைக்கு பயங்கரமான ஒரு சாபமாக இருந்திருக்கிறது என்னும் ஒரு தீர்க்கதரிசியின் பார்வையை உடையவராக அவர் இருந்தார். வேதபாரகர்கள், பரிசேயர்கள் ஆகியோரைப்பற்றிய அவரது பயங்கரமான—பகிரங்கமான குற்றச்சாட்டும் இந்தக் குருட்டுத்தலைவர்களைப் பின்பற்றக்கூடாது என்ற மக்களுக்கான அவரது எச்சரிக்கையும், பின்வரும் தலைமுறையினருக்கு ஒரு எச்சரிப்பாக இருப்பதற்காக, ஆவணங்களில் பதிந்துவைக்கப்பட்டன. (9)

வேதவாக்கியங்களுக்கு விளக்கம் தரும் உரிமையை ரோமசபை அதன் குருமார்களிடம் வைத்திருந்தது. அதன் அடிப்படையில், சபை அதிகாரிகள் மட்டுமே தேவனுடைய வார்த்தைக்கு விளக்கம் கொடுக்கத் தகுதியானவர்களாக்கப்பட்டு, பொதுமக்களிடமிருந்து அது பிடித்து வைக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தம் வேதவாக்கியங்களை அனைவருக்கும் கொடுத்தபோதிலும் ரோமசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த அதேவிதமான கொள்கைகள் புரொட்டஸ்டாண்டு சபைகளில் உள்ள திரளானவர்களைத் தங்களுக்கென்று வேதாகமத்தை ஆராய்வதைத் தடுத்துக்கொண்டிருக்கிறது. அதன் போதனைகளை சபையினால் கொடுக்கப்பட்ட விளக்கங்கள் என்று ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் கற்பிக்கப்பட்டுள்ளனர். தங்களுடைய மதபோதனை அல்லது தங்களது சபையினால் ஏற்படுத்தப்பட்டுள்ளதற்கு எதிரான போதனைகள் வேதவாக்கியங்களினால் எவ்வளவுதான் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் அவைகளில் எதையும் ஏற்பதற்குத் துணியாத ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளனர். (10)

தவறான ஆசாரியர்களுக்கெதிரான எச்சரிக்கைகள் நிறைந்ததாக மட்டும் வேதாகமம் இராமல், தங்களுடைய ஆத்துமாக்களைப் போதகர்களிடம் ஒப்புவிக்கத் தயாராக இருக்கும் அநேகருக்கு எதிரானதாகவும் அது இருக்கிறது. அவர்கள் கடைப்பிடித்துவரும் விசுவாசத்திற்கு அவைகள் தங்களது சமயத்தலைவர்களால் போதிக்கப்பட்டவை என்பதைத்தவிர வேறு எந்தக் காரணங்களையும் காட்டமுடியாதவர்களாக உள்ள ஆயிரக்கணக்கான சமயத்துறைப் பேராசிரியர்கள் இன்றும் உள்ளனர். அவர்கள் இரட்சகரின் போதனைகளைக் கிட்டத்தட்ட கவனிக்காதவர்களாகக்

கடந்துசென்று, ஊழியக்காரர்களின் வார்த்தைகளில் கேள்விக்கிடமில்லாத நம்பிக்கை வைக்கின்றனர். ஆனால் அந்த ஊழியக்காரர்கள் தவறாமையை உடையவர்களா? அவர்கள் ஒளியை சுமக்கிறவர்களா என்பதை தேவனுடைய வார்த்தையிலிருந்து நாம் அறியாதவரை நம்மால் நமது ஆத்துமாக்களை அவர்களது வழி காட்டுதலுக்கு எப்படி ஒப்படைக்க முடியும்? உலகம் நடந்து சென்றுள்ள பாதையிலிருந்து விலகிச் செல்லுவதற்கு சன்மார்க்க தைரியம் இல்லாமை அநேகரைக் கற்றிறிந்த மனிதர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற நடத்துகிறது. அவர்கள் தங்களுக்கென்று தாங்களே விசாரித்துப் பார்க்கவேண்டும் என்ற விருப்பமின்மையால், நம்பிக்கையற்ற விதத்தில் தவறு என்னும் சங்கிலியால் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்தக் காலத்திற்குரிய சத்தியம் வேதாகமத்தில் தெளிவாகப் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதை அவர்கள் பார்க்கின்றனர். அதை அறிவிப்பதிலுள்ள பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்கள் உணருகின்றனர். அப்படியிருந்தும் ஒளியிலிருந்த அவர்களைத் திருப்பும் போதகர்களின் எதிர்ப்பை அவர்கள் அனுமதிக்கின்றனர். பகுத்தறிவும் மனச்சாட்சியும் மனதிருப்தியை அடைந்திருந்தபோதிலும் ஏமாற்றப்பட்ட இந்த ஆத்துமாக்கள் அந்த ஊழியக்காரரிலிருந்து மாறுபட்ட விதத்தில் சிந்திக்கத் துணியாதவர்களாக உள்ளனர். அவர்களது தனிப்பட்ட நியாயத்தீர்ப்பு அவர்களது நித்தியமான ஆசை ஆகியவைகள் மற்றவருடைய அவநம்பிக்கை, பெருமை, தவறான எண்ணங்கள் ஆகியவைகளுக்காகத் தியாகம் செய்யப்படுகின்றன. (11)

மனித செல்வாக்கின் மூலமாகத் தனது அடிமைகளைக் கட்டிவைக்க பல வழிகளிலும் சாத்தான் செயலாற்றுகிறான். கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரிகளாக இருக்கும் திரளானவர்களை ஆசை என்னும் பட்டக்கயிற்றினால் அவன் தன்னுடன் பிணைத்துக் கட்டிக்கொள்ளுகிறான். இந்தப் பிணைப்பு பெற்றோரும் பிள்ளைகளும் கணவனும் மனைவியும் மற்றும் சமுக சம்பந்தமான யாராக இருந்தாலும்சரி, பலன் ஒன்றுதான். சத்தியத்தை எதிர்ப்பவர்கள் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்தத் தங்களுடைய வல்லமையை செயல்படுத்துகின்றனர். இவர்களுக்குக் கீழாக இழுத்துவைக்கப்பட்டுள்ள ஆத்துமாக்கள், தங்களுடைய கடமையைப்பற்றிய சுயமான அல்லது சுதந்திரம் இல்லாதவர்களாகவே உள்ளனர். (12)

சத்தியமும் தேவனுடைய மகிமையும் பிரிக்கமுடியாதவைகள். வேதாகமம் நமக்கு எட்டுமளவிற்கு நமக்கருகில் இருக்கும்போது, தவறான அபிப்பிராயங்களால் தேவனைக் கனப்படுத்துவது நம்மால் முடியாததாக உள்ளது. ஒருவனுடைய வாழ்க்கை சரியானதாக இருக்குமானால் அவன் எதை நம்புகிறான் என்பது காரியமல்ல என்று

அநேகர் உரிமை பாராட்டுகின்றனர். ஆனால் வாழ்க்கை விசுவாசத்தினால் வனையப்படுகிறது. ஒளியும் சத்தியமும் நமக்கு எட்டக்கூடிய அளவில் இருந்தால், அதைக் கேட்கக்கூடியதும் பார்க்கக்கூடியதுமாக உள்ள சலுகைகளை நாம் முன்னேற்றமடையச் செய்யாவிட்டால், நாம் அதை உண்மையில் நிராகரிக்கிறோம். நாம் ஒளியைவிட இருளை அதிகமாகத் தெரிந்துகொள்ளுகிறோம். (13)

"மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்"–நீதி. 14:12. தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளுவதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பமும் இருக்கும்போது, தவறையும் பாவத்தையும் செய்ததற்கு அறியாமை ஒரு சாக்குப்போக்காக இருக்கமுடியாது. ஒரு மனிதன் பயணம் செய்து பல சாலைகள் சந்திக்கும் ஒவ்வொரு சாலையும் எங்கு செல்கிறது என்பதைக் காட்டுகின்ற வழிகாட்டும் பலகைகள் உள்ள ஒரு இடத்திற்கு வருகிறான். அவன் அந்த வழிகாட்டும் பலகையைக் கருத்தில் கொள்ளாமல், அவனுக்கு எந்தச் சாலை சரி என்று தோன்றுகிறதோ அதில் செல்லத் தொடங்கினால், அவன் எந்த அளவிற்கு நேர்மை உள்ளவனாக இருந்தாலும், கிட்டத்தட்ட அவன் தவறான பாதையில் செல்லக்கூடிய ஒரு நிலையில்தான் இருக்கிறான். (14)

நாம் தேவனுடைய போதனைகளுடன் அறிமுகமானவர்களாகும் படியும், அவர் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதை நாம் அறிந்துகொள்ளவும் தேவன் அவரது வார்த்தையை நமக்குக் கொடுத்திருக்கிறார். நியாயசாஸ்திரி ஒருவன் நித்திய ஜீவனை அடைந்துகொள்ள நான் என்ன செய்யவேண்டும்? என்ற விசாரிப்புடன் இயேசுவிடம் வந்தபோது, நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ எப்படி வாசிக்கிறாய்? என்றுகூறி, அவர் வேத வாக்கியங்களைக் குறிப்பிட்டார். தேவனுடைய பிரமாணங்களை மீறினதற்காகக் கிடைக்கக்கூடிய தண்டனையில் இருந்து இளையவர்களையோ அல்லது முதியவர்களையோ அறியாமையின் தன்மை மன்னிக்கவோ அல்லது விடுவிக்கவோ முடியாது. ஏனெனில், அவர்களது கரங்களில் நியாயப்பிரமாணமும் அதன் கொள்கைகளும் அதன் உரிமைகளும் விசுவாசத்துடன் வைக்கப்பட்டுள்ளன. நல்ல விருப்பங்கள் இருப்பது மட்டும் போதுமானதாகாது. ஒருமனிதன் தனக்குச் சரியென்றுதோன்றுவதை செய்வதுமட்டும் போதுமானதல்ல. அல்லது ஊழியக்காரர் அவனிடத்தில் கூறுவது சரி என்றும் ஆகாது. அவனது ஆத்துமாவின் இரட்சிப்பு சிதையின்மேல் உள்ளது. அவன் தனக்காக வேதவாக்கியங்களை ஆராயவேண்டும். அவனது மனஉணர்த்துதல்கள் எவ்வளவு பலமுள்ளதாக இருந்தாலும் சத்தியம் என்ன என்பதைப்பற்றி

அவனது ஊழியக்காரர் அறிந்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை அவன் உடையவனாக இருந்தாலும், அது அவனுடைய அஸ்திவாரமல்ல! அவனது பரலோகப்பயணத்திற்கான ஒரு வரைபடம் அவனது கரத்தில் உள்ளது. அந்த வழியின் அடையாளங்களை எல்லாம் அது சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறது. அவன் எந்தப் பொருளையாவது யூகித்துக்கொண்டிருக்கக்கூடாது. (15)

சத்தியம் என்ன என்பதை வேதாகமத்திலிருந்து அறிந்துகொள்ள வேண்டியதும், பின்னர் அந்த வெளிச்சத்தில் நடக்க வேண்டியதும் தனது உதாரணத்தைப் பின்பற்றும்படி பிறரை தைரியப்படுத்துவதும் அறிவுள்ள ஒவ்வொருவருடைய முதலாவதும் மிக உயர்ந்ததுமான கடமையாக இருக்கிறது. நமது ஒவ்வொரு சிந்தனையையும் எடைபோட்டு, வேதவாக்கியத்துடன் வேதவாக்கியத்தை ஒப்பிட்டு, நாம் நாள்தோறும் வேதாகமத்தை அக்கரையுடன் வாசிக்கவேண்டும் நாம் நமக்காக தேவனிடம் பதில்கூற வேண்டியவர்களாக இருப்பதினால், தெய்வீக ஒத்தாசையுடன் நமக்காக நாமே அபிப்பிராயங்களை அமைத்துக்கொள்ளவேண்டும். (16)

வேதாகமத்தில் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்கள், கற்றறிந்த மனிதர்களால் சந்தேகத்திற்கும் இருட்டடிப்பிற்கும் உட்படுத்தப்பட்டுள்ளதாக எண்ணப்படுகின்றன. இவர்கள் மிகுந்த ஞானமுள்ளவர்களைப் போல பாவனை செய்துகொண்டு, (விவிலியத்தின்) வேதவாக்கியங்கள் புரிந்துகொள்ளமுடியாத—இரகசியமான—ஆவிக்குரிய அர்த்தமுடையவைகள் என்றும் அவைகள் வெளிப்படையாகப் பயன்படுத்தப் பட்டுள்ள பொருளை உடையவைகள் அல்ல என்றும் போதிக்கின்றனர். இந்த மனிதர்கள் தவறான ஆசிரியர்களாக உள்ளனர். “நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததி னாலல்லவா தப்பான எண்ணங் கொள்ளுகிறீர்கள்” (மாற்கு 12:24) என்று இப்படிப்பட்ட வகுப்பினருக்கு இயேசு அறிவித்தார். ஒரு அடையாளமாவது உருவகமாவது பயன்படுத்தப்படாதவரை வேதாகமத்தின் பொருள் அதன் வெளிப்படையான அர்த்தத்தில் விளக்கப்படவேண்டும். “அவருடைய சித்தத்தின்படிச் செய்ய மனதுள்ளவனெவனோ, அவன் இந்த உபதேசத்தை அறிந்துகொள்ளுவான்” (யோவான் 7:17) என்ற வாக்குத்தத்தத்தை கிறிஸ்து கொடுத்திருக்கிறார். மனிதர்கள் வேதாகமத்தை வாசிக்கும்வண்ணம் எடுத்துக்கொண்டால், அவர்களது மனங்களைத் தவறாக நடத்தவும் குழப்பவுங்கூடிய தவறான ஆசிரியர்கள் இல்லாமலிருந்தால், தூதர்களை மகிழ்விக்கக்கூடிய ஒரு பணி நிறைவேறியிருக்கும். இப்பொழுது தவறுக்குள் அலைந்துகொண்டு இருக்கும் ஆயிரமாயிரமானவர்களை அது கிறிஸ்துவின் தொழுவத்திற்குள் கொண்டு வந்திருக்கும். (17)

அழிவுக்குரிய மனிதர்கள் தேவனுடைய ஆழமான காரியங்களை எந்தஅளவிற்கு அறிந்துகொள்ளமுடியுமோ, அந்தஅளவிற்கு அறிந்துகொள்ள நமது மனதின் வல்லமைகள் அனைத்தையும் வேத வாக்கியங்களை ஆராய்வதில் ஈடுபடுத்தி புரிந்துகொள்ளும் சக்தியை தெரிந்துகொள்ளுவதற்காகச் செயல்படுத்தவேண்டும். இருந்தபோதிலும் அறிந்துகொள்ள விரும்புபவரின் உண்மையான ஆவி, ஒரு சிறு பிள்ளையைப்போன்ற சுலபமாகப் பழகும் தன்மையும் கீழ்ப்படிதலும் உள்ளதாக இருக்கவேண்டும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தத்துவப் பிரச்சனைகளைச் சமாளிப்பதற்காகப் பயன்படுத்தும் அதே முறைகளினால், வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளுவதிலுள்ள சிரமங்களை மேற்கொள்ள முடியாது. விஞ்ஞானத்தை அறிந்துகொள்ளுவதற்காக, அநேகர் சுயத்தைச் சார்ந்தவர்களாக அதன் இராஜ்ஜியத்திற்குள் நுழைவதைப் போல, நாம் வேதாகமத்தை ஆராயும் பணிக்குள் ஈடுபடவேண்டும். மகத்தான இருக்கிறவராக இருக்கிறேன் என்பவரிடமிருந்து அறிவைப் பெற்றுக்கொள்ள மிகவும் தாழ்மையுடனும் போதிக்கப்படக்கூடிய ஆவியுடனும் நாம் வரவேண்டும். அப்படியில்லையெனில் நாம் சத்தியத்தால் உணர்த்தப்படாமல் இருக்கும்படி, தீயதூதர்கள் நமது மனங்களைக் குருடாக்கி, நமது இருதயங்களைக் கடினப்படுத்திவிடுவார்கள். (18)

கற்றிந்த மனிதர்கள் இரகசியம் என்று அறிவிக்கின்ற அல்லது முக்கியமில்லாதவை என்று கடந்துசெல்லும் அநேக வேதவாக்கியப்பகுதிகள், கிறிஸ்துவின் பள்ளியில் கற்றறிந்தவர்களுக்கு ஆறுதலையும் உபதேசத்தையும் நிறைய கொண்டிருக்கின்றன. அநேக தேவயியல் வல்லுநர்கள், தேவனுடைய வார்த்தையைப்பற்றி தெளிவான புரிந்துகொள்ளுதல் இல்லாதவர்களாக இருப்பதற்கான ஒரு காரணம் என்னவெனில், அவர்கள் கடைப்பிடிக்க விரும்பாத சத்தியத்திற்கு தங்களுடைய கண்களை மூடிக்கொள்ளுவதாகும். நீதியின் மேலுள்ள ஆர்வமிக்க நமது ஏக்கம் சத்தியத்தைப் புரிந்துகொள்ளுதலினாலும் அதைத் தேடுவதற்காக உள்ள நுண்ணறிவின் வல்லமையைச் சார்ந்ததாகவும் இல்லை. (19)

ஜெபம் செய்யாமல் வேதாகமத்தை ஒருபோதும் வாசிக்கக்கூடாது. புரிந்துகொள்ளுவதற்கு எளிதாக இருக்கக்கூடியவைகளின் முக்கியத்துவத்தை நாம் உணரவும், அல்லது புரிந்துகொள்ளுவதற்குக் கடினமாக இருக்கும் சத்தியங்களைப் புரிந்துகொள்ளுவதற்காக நாம் கஷ்டப்படுவதைத் தவிர்க்கவும், பிசுத்தஆவியால் மட்டுமே உதவ முடியும். தேவனுடைய வார்த்தையிலுள்ள அழகினால் நாம் கவரப்படுவதற்கும் அதின் வாக்குத்தத்தங்களினால் நாம் அசைக்கப்படுவதற்கும் பலப்படுத்தப்படுவதற்கும்

நம் இருதயத்தை தேவனுடைய வார்த்தையை அறிந்துகொள்ளுவதற்கு ஆயத்தப்படுத்துவது பரலோக தேவதூதர்களின் பணியாகும். "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்" (சங். 119:18) என்ற சங்கீதக்காரனின் விண்ணப்பத்தை நாம் நமதாக்கிக்கொள்ளவேண்டும். ஜெபத்தை அலட்சியம் செய்வதின் மூலமாகவும், சோதிக்கப்படுபவர் வேதவாக்கியமாகிய ஆயுதங்களினால் சாத்தானைச் சந்திப்பதற்கு தேவனுடைய வாக்குத்தத்தங்களை உடனே நினைவிற்குக் கொண்டுவரமுடியாதவராகவும் இருப்பதினால், சோதனைகள் அடிக்கடி தடுக்கப்படமுடியாதவைகளாக உள்ளன. ஆனால் தெய்வீகக் காரியங்களில் போதிக்கப்பட விருப்பமுள்ளவர்களைச் சுற்றி தூதர்கள் இருந்து மிக அவசியமான நேரத்தில் அவசியமுள்ள சத்தியங்களை அவர்களது நினைவிற்குக் கொண்டுவருவார்கள். "வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்"– ஏசாயா 59:19. (20)

"என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 14:26) என்று இயேசு சீடர்களுக்கு வாக்குத்தத்தம் கொடுத்தார். ஆனால் ஆபத்தான வேளையில் தேவ ஆவியானவர் நமது ஞாபகத்திற்குக் கொண்டுவருவதற்காகக் கிறிஸ்துவின் உபதேசம் முன்னதாகவே மனதில் சேகரித்துவைக்கப்படவேண்டும். "நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங். 119:11) என்று தாவீது கூறினான். (21)

தங்களுடைய நித்திய வாஞ்சைகளை மதிக்கும் அனைவரும் சந்தேகவாதம் உள்ளே நுழைவதற்கெதிராக காவல்காத்து நிற்கவேண்டும். சத்தியத்தின் மிக முக்கியமான தூண்களின்மீது தாக்குதல் நடத்தப்படும். நவீன நாத்திகத்தின் பரிகாசம் ஏமாற்றும் பேச்சு, கபடமான சாவை உண்டாக்கக்கூடிய போதனைகள் ஆகியவைகளை எட்டாத அளவிற்குத் தூரமாக வைப்பது முடியாததாகும். சாத்தான் அவனது சோதனைகளை சகலவகுப்பினருக்கும் பொருந்தத்தக்கதாகச் செய்கிறான். கல்வி அறிவற்றவர்களை அவன் பரிகாசச் சைகைகளினாலும் உறுமல்களினாலும் தாக்குகிறான். வேதவாக்கியங்களின்மீது அவமதிப்பையும் நம்பிக்கையின்மை யையும் எழுப்புவதற்கென்று கணக்கிடப்பட்டவிதமாக விஞ்ஞானரீதியான மறுப்புக்களுடனும் தத்துவார்த்தமான பகுத்தறிவுடனும் அவன் கற்றவர் களைச் சந்திக்கிறான். கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படைக் கொள்கை

களின்மீது சந்தேகத்தை நுழைக்க அனுபவக்குறைவுமிக்க இளைஞர்களுங்கூட இறுமாப்பு கொள்ளுகின்றனர். மேலெழுந்தவாரியாக இருக்கும் இந்த இளமையிலுள்ள நாத்திகவாதம் அதன் செல்வாக்கை உடையதாக இருக்கிறது. இவ்விதமாக அநேகர் தங்கள் தந்தைமார்களின் நல்விசுவாசத்தைக் கேலி செய்யவும், கிருபையின் ஆவிக்கு எதிராக அப்படிச் செய்யும்படியாகவும் நடத்தப்படுகின்றனர். தேவனுக்கு மேன்மையையும் உலகத்திற்கு ஆசீர்வாதத்தையும் கொண்டுவரக்கூடியவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டவர்கள் நாத்திக வாதத்தின் நச்சுக்காற்றின் சுவாசத்தினால் அழியக்கூடிய நோய்வாய்ப்பட்டவர்களாக உள்ளனர். மனிதனின் பகுத்தறிவு என்னும் பெருமையடிக்கும் முடிவுகளில் நம்பிக்கை வைக்கும் அனைவரும், தெய்வீக இரகசியங்களைத் தங்களால் விளக்கமுடியும் என்று கற்பனை செய்துகொண்டிருக்கும் அனைவரும், தேவஞானத்தின் உதவி இல்லாமல் சத்தியத்தினிடம் வருகின்ற அனைவரும் சாத்தானின் கண்ணியில் சிக்கிக்கொண்டிருக்கின்றனர். (22)

இந்த உலக வரலாற்றின் பக்திவிநயமான காலக்கட்டத்தில் நாம் இருக்கிறோம். பூமியில் பெருகிவரும் திரளானவர்களின் முடிவு நித்திய ஜீவனுக்கென்றோ அல்லது நித்திய அழிவிற்கென்றோ தீர்மானம் செய்யப்படவுள்ளது. நமது எதிர்கால சுகவாழ்வும் மற்ற ஆத்துமாக்களின் இரட்சிப்பும் நாம் இப்பொழுது பின்பற்றும் நடவடிக்கையைச் சார்ந்ததாக உள்ளது. சத்திய ஆவியினால் நாம் வழிகாட்டப்படவேண்டியது அவசியம். ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் வாஞ்சையுடன் கேட்கவேண்டும். உபவாசத்துடனும் ஜெபத்துடனும் அவருடைய வசனத்தைத் தியானம் செய்து கர்த்தருக்கு முன்பாக நம்மை நாம் தாழ்த்துவது அவசியம். தேவனுடைய காரியங்களில் ஒரு ஆழ்ந்த உயிருள்ள அனுபவத்தை நாம் தேடவேண்டும். இழப்பதற்கு நம்மிடம் வினாடி நேரங்கூட இல்லை. மிக முக்கியமான நிகழ்ச்சிகள் நம்மைச் சுற்றிலும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. சாத்தானால் வசியப்படுத்தப்பட்ட களத்தில் நாம் இருக்கிறோம். நீங்கள் அசந்தும் மயங்கியும் இருக்கும்போது, உங்கள்மீது பாய்ந்து உங்களைத் தனது இரையாக்கிக்கொள்ள எந்த விநாடியிலும் ஆயத்தமுள்ளவனாக எதிரி உங்களைச் சுற்றிப் பதிவிருப்பதினால், தேவனுடைய காவற்காரராகிய நீங்கள் உறங்கிவிடாதீர்கள்! (23)

அநேகர் தேவனுக்கு முன்பாக உள்ள தங்களுடைய உண்மையான நிலையைப்பற்றி வஞ்சிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தவறான செய்கைகளைச் செய்யாமல் இருந்ததற்காகத் தங்களைத் தாங்களே வாழ்த்தி, அவர்களைச்

செய்யும்படி தேவன் எதிர்பார்க்கின்ற நல்லதும் மேன்மைமிக்கதுமான செயல்களைச் செய்யாமல் அலட்சியமாயிருந்துவிட்டதைக் கணக்கிட மறந்துவிடுகின்றனர். அவர்கள் தேவனுடைய தோட்டத்தில் மரங்களாக இருப்பதுமட்டும் போதுமானதாகாது. கனிகொடுப்பதின் மூலமாக அவரது எதிர்பார்ப்பிற்கு பதில் கொடுக்கவேண்டும். அவர்களைப் பலப்படுத்தும் அவரது கிருபையின் மூலமாக அவர்கள் செய்திருந்திருக்கக்கூடிய நல்லவைகளனைத்தையும் குறித்து அவர்கள் அவருக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். பரலோக புத்தகங்களில் அவர்களது பெயர்கள் நிலத்தைக் கெடுப்பவர்கள் என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. அப்படி இருந்தபோதிலும் அந்த வகுப்பினரின் விவகாரங்கூட முற்றிலுமாக நம்பிக்கை அற்றதாக இல்லை. தேவனுடைய இரக்கத்தை அலட்சியம் செய்தவர்களுக்கும் அவரது கிருபையை வீணாக்கியவர்களுக்கும் மிகுந்த சகிப்புத்தன்மைமிக்க அவருடைய அன்பின் இருதயம் பரிந்து பேசுகிறது. “ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்.... ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்” –எபே. 5:14–16. (24)

சோதிக்கின்ற நேரம்வரும்போது, தங்களுடைய வாழ்க்கையின் சட்டமாக தேவனுடைய வார்த்தையை ஏற்படுத்திக்கொண்டவர்கள் வெளிப்படுத்தப்படுவார்கள். வசந்த காலத்தில் எப்பொழுதும் பச்சை நிறமாக இருப்பவைகளுக்கும் மற்ற மரங்களுக்கும் காணக்கூடிய வேற்றுமை இருப்பதில்லை. ஆனால் கோடைகாலத்தின் வறட்சி வரும்போது, மற்ற மரங்கள் தங்கள் இலைகளை உதிர்த்துவிடும்போது, எப்பொழுதும் பச்சையாக இருப்பவைகள் மாறாதவையாக இருக்கின்றன. அதைப்போலவே, உண்மையான கிறிஸ்தவனிலிருந்து தன்னைக் கிறிஸ்தவன் என்று கூறிக்கெள்ளும் போலிக் கிறிஸ்தவன் இப்பொழுது பிரித்தறிய முடியாதவனாக இருக்கலாம். ஆனால் வேற்றுமை வெளிப்டையாகத் தெரியக்கூடிய நேரம் நம்மீது விரைவாக வந்துகொண்டிருக்கிறது. எதிர்ப்பு உண்டாகட்டும். உபத்திரவம் என்னும் நெருப்பு எரியட்டும். அப்பொழுது அரைமனதுள்ளவர்களும் மாயக்காரர்களும் தங்களுடைய விசுவாசத்தை விட்டுவிடுவார்கள். ஆனால் உண்மையான கிறிஸ்தவன் செழுமையான நாட்களில் இருந்ததைவிட ஒரு கற்பாறையைப் போல் ஒளிமிக்க நம்பிக்கை உள்ளவனாக—உறுதி உள்ளவனாக நிற்பான். (25)

“உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால், எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன்.” “உமது

கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்"—சங். 119:99,104. (26)

"ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்"—நீதி. 3:13. "அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்"—எரே. 17:8. (27) ★

# 38

# இறுதி எச்சரிப்பு !

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 603–612)**

"இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்தஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று. பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" (வெளி. 18:1,2,4) என்று கூறினான். (1)

வெளி. 14:8–ல் வரும் இரண்டாம் தூதன் அறிவித்தபடி மகா பாபிலோன் விழும் என்கிற அறிவிப்பு எதிர்காலத்தில் மறுபடியும் கொடுக்கப்படும் என்பதையே வேதாகமம் சுட்டிக்காட்டுகிறது. அதனோடு சேர்த்து முதல் தூது கொடுக்கப்பட்ட வருடமாகிய கி.பி.1844–குப்பிறகு பாபிலோனைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகளுக்குள் மேலும் அக்கிரமங்கள் பெருகிவிட்டன என்பதுவும் சுட்டிக்காட்டப்படுகிறது. உலகத்தில் உள்ள ஆன்மீக உண்மைகள் ஒவ்வொன்றையும் புறக்கணிக்கப் புறக்கணிக்க, அவர்களது மனம் இருளடைகிறது. அவர்களது இருதயம் கடினப்படுகிறது. இறுதியில் அவர்கள் கடினமான அவிசுவாசத்திற்குள் சிக்குண்டுபோகிறார்கள். தேவன் கொடுக்கிற எச்சரிப்பையும் மதிக்காமல் தொடர்ந்து பத்துப் பிரமாணங்களில் ஒன்றைக் காலின்கீழிட்டு மிதிக்கிறவர்கள், இறுதியில் அந்தப் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து நடப்பவர்களையும் உபத்திரவப்படுத்தத் தொடங்குவார்கள். இப்படியாகக் கிறிஸ்துவின் பிரமாணத்தையும் அவருக்குக் கீழ்ப்படிகிற

ஜனங்களையும் அருவருப்பதின்மூலம் கிறிஸ்து ஒரு பொருட்டல்ல என்கிறவர்களாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் பிசாசுகளின் பொய்யான மதக் கோட்பாடுகள் சபைகளில் ஏற்றுக்கொள்ளப்படுவதுதான். அப்படி ஏற்றுக்கொள்ளப்படும்போது, பாவ இருதயத்தின் மேலிருந்த கட்டுப்பாடுகள் விலகிப்போய்விடுகின்றன. பிறகு மதம் என்கிற போர்வையில் எந்த மோசமான செயலையும் தயங்காது செய்யும் நிலைக்கு மனிதன் போய்விடுகிறான். ஆவிகளின் சக்தியினால் அற்புதங்கள் செய்யலாம் என்கிற ஆசையில், கிறிஸ்தவர்கள் பிசாசுகளோடு தொடர்புகொள்ளுகிறார்கள். இவ்வாறாக சபைகளுக்குள்ளே பிசாசுகளின் செல்வாக்கு நுழைந்துவிடுகிறது! (2)

பாபிலோனைக் குறித்து வெளி. 18:5–ல் உள்ள தீர்க்கதரிசனம் "அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார்" என்று கூறுகிறது. ஆகவே இந்த பாபிலோனின் பாவப்பாத்திரம் நிரம்பிவிட்டது என்பதும் அதனால் அவளுடைய அழிவு சீக்கிரமே வரக் காத்திருக்கிறது என்பதும் தெளிவாகிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகள் சிலபேர் இன்னமும் அங்கே இருக்கிறார்கள். தேவனின் கடுமையான தீர்ப்புகள் அவள் மேல் வருவதற்குமுன், இந்த விசுவாசப்பிள்ளைகளை வெளியே அழைப்பதற்காகவே தேவன் ஒரு இயக்கத்தை உருவாக்கியிருக்கிறார். இந்த இயக்கமே, வானிலிருந்து பெரும் மகிமையோடு இறங்கிவரும் தேவதூதன் என்று வெளி. 18–ல் உருவகப்படுத்தப்படுகிறது. இந்த தேவதூதன் மகா பலத்த சத்தத்தோடு பாபிலோனின் பாவங்களை அறிவிக்கிறான். அதனோடு சேர்த்து, என் ஜனங்களே! அவளை விட்டு வெளியே வாருங்கள் என்கிற அழைப்பையும் கொடுக்கிறான். இந்த தூதனின் அழைப்பும் வெளி. 14:9–11–ல் கூறப்படும் மூன்றாம் தூதனின் செய்தியும் சேர்ந்து அறிவிக்கப்படும்போது, அதுவே இவ்வுலகில் வாழும் ஜனங்களுக்குக் கொடுக்கப்படும் கடைசி எச்சரிப்பாக ஆகிறது! (3)

ஒரு அதி பயங்கரமான இக்கட்டை நோக்கி இவ்வுலகம் போய்க்கொண்டிருக்கிறது. அது என்ன இக்கட்டு? ஒருபக்கம் தேவனின் நியாயப்பிரமாணங்களுக்கு எதிராக யுத்தம்செய்யும்படி உலக சக்திகள் ஒன்றுபட்டு வந்துகொண்டிருக்கின்றன. ஒன்றுபட்டு எளியவர்—வலியவர், பணக்காரர்—ஏழை, ஆண்டான்—அடிமை என்கிற வித்தியாசமேதுமின்றி, அனைவரும் சபையின் பாரம்பரியத்திற்குக் கீழ்ப்படிந்து போலியான ஓய்வுநாளைக் கைக்கொள்ளவேண்டும் என்று சட்டம் இயற்றப்போகின்றன(வெளி. 13:16). இந்த சட்டத்திற்குக் கீழ்ப்படிய மறுக்கிற அனைவருக்கும் முதலில் சிறைத்தண்டனை வழங்கப்படும். அவர்கள் தொடர்ந்து கீழ்ப்படிய

மறுத்தால், அப்போது மரணதண்டனை விதிக்கப்படும் என்கிற நிலை இருக்கிறது. இது ஒருபுறமிருக்க, மறுபக்கம் தேவன் தாம் நியமித்த ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டும் என்று கடுமையாக எதிர்பார்க்கிறார். இக்கட்டளையை மீறி நடப்போருக்கு தேவனது கோபாக்கினை காத்துநிற்கிறது. இவ்வாறாக உலகத்தால் அனைவரும் இருபுறமும் நெருக்கப்படுவார்கள் என்பதே இவ்வுலகம் எதிர்கொள்ளக் காத்திருக்கும் இக்கட்டு. (4)

தேவன் ஏற்படுத்தின ஓய்வுநாளா, மனிதன் ஏற்படுத்தின ஓய்வுநாளா என்கிற கேள்வி ஒவ்வொரு மனிதனுக்கும் முன்பாகத் தெளிவாக வைக்கப்படுகிறது. தேவன் ஏற்படுத்தின கட்டளையை மீறி மனிதர்கள் ஏற்படுத்தின கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவன்மேல் ஒரு முத்திரை வைக்கப்படுகிறது. இது அவன் தேவனது அதிகாரத்தைவிட, மனிதர்களது அதிகாரத்தையே ஏற்றுக்கொண்டிருக்கிறான் என்பதற்கு அடையாளம் ஆகும். இவனுக்குப் பரலோகத்தின் எச்சரிப்பு: “அவர்களுக்குப் பின்னே மூன்றாம்தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்” (வெளி. 14:9,10) என்பதே. (5)

மேற்படி உண்மைகள் ஒவ்வொரு மனிதனுடைய மனதிற்கும் மனச்சாட்சிக்கும் முன்பாகத் தெளிவாக வைக்கப்படும். தெள்ளத்தெளிவாக வைக்கப்பட்ட உண்மைகளை நிராகரிக்கிறவன்மேல் மட்டுமே தேவனுடைய கோபாக்கினை வரவிருக்கிறது. இந்தக் கடைசி காலத்திற்கே உரிய மேற்படி உண்மைகளைத் தெரிந்துகொள்ள இதுவரையும் வாய்ப்புக் கிடைக்காதவர்கள் அநேகராக இன்னும் இருக்கிறார்கள். நான்காவது பிரமாணத்தின் முக்கியத்துவம் அவர்களுக்குச் சரியான முறையில் விளக்கிச் சொல்லப்படவில்லை. மனித இருதயத்தின் நினைவுகளை வாசிக்கிறவராயும் உள்நோக்கங்களை ஆராய்ந்தறிகிறவராயும் இருப்பவர் தேவன். ஆகவே உண்மை எது என்பதை அறிந்துகொள்ள வாஞ்சிக்கிற எவனும், உண்மையை அறியாமல் இருந்து, அதனால் மேற்படிச் சோதனையில் ஏமாந்துபோகும்படி அவர் விடவேமாட்டார். தங்களது அறியாமையினாலேதான் ஜனங்கள் தங்கள் மீது விதிக்கப்பட்ட போலி ஓய்வுநாள் சட்டத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்கிற நிலைக்கு தேவன் விடமாட்டார். ஒவ்வொருவரும் ஓய்வுநாளைக்குறித்த

காரியம் என்ன என்பதை நன்கு அறிந்துகொள்ள வாய்ப்பும் வசதியும் கொடுக்கப்பட்ட பின்னரே தங்களுக்கு வேண்டியதைத் தெரிந்துகொள்ளும்படி விடப்படுவர். (6)

நான்காம் பிரமாணத்திற்குச் சவால் விடும்படியாக சட்டம் போடப்பட்டிருப்பதால், இந்த ஓய்வுநாள் பிரமாணமே தேவன்மேல் ஒருவனுக்கு விசுவாசம் இருக்கிறதா இல்லையா என்பதைச் சோதிக்கிற சோதனைப் பிரமாணமாக இருக்கும். இந்தச் சோதனையின் அடிப்டையில்தான், தேவன் பக்கம் நிற்கிறவர்கள் யார், தேவன் பக்கம் நில்லாதவர்கள் யார் என்பது பிரித்தறியப்படும். நான்காம் பிரமாணத்திற்கு விரோதமாகச் சட்டம் இயற்றியிருக்கும் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்து ஒருவன் போலியான ஓய்வுநாளைக் கைக்கொள்வானானால், அச்செயலினால் அவன் தேவனுக்கு எதிரியின் பக்கம் நிற்பதாக இருக்கும். அப்படியின்றி, அவன் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து, மெய்யான ஓய்வுநாளைக் கைக்கொள்வானானால், அது தன்னைப் படைத்த தேவன் பக்கம் நிற்பதாக இருக்கும். உலக அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதால் ஒரு சாரார் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொண்டவர்களாகிறார்கள். மற்றும் ஒரு சாரார் தெய்வீக அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்து நடப்பதால், தேவனின் முத்திரையைப் பெற்றுக்கொண்டவர்களாகிறார்கள். (7)

மூன்றாம் தூதனின் தூதில் உள்ள பயங்கரமான அபாய எச்சரிப்பை ஜனங்களுக்குக் கொடுத்தாலும், இதுவரை அதை நம்பியவர்கள் இல்லை. அபாய எச்சரிப்பைக் கொடுத்தவர்களுக்கு பயங்கரவாதிகள் என்கிற பட்டம் கிடைத்ததுதான் மிச்சம். மதச் சகிப்புத்தன்மை அமெரிக்க நாட்டில் வேரூன்றும். மேலும் தேவனின் பிரமாணங்களைக் கைக்கொள்ளுகிறவர்களை உபத்திரவப்படுத்தும்படி அரசாங்கமும் கிறிஸ்தவ மத அமைப்புகளும் ஒன்றுபடும் என்கிற எதிர்பார்ப்புகள் ஆதாரமற்றவை பைத்தியக்காரத்தனமானவை என்று ஒதுக்கப்படுகின்றன. இந்த நாடு இதுவரை இருந்ததுபோல, இனியும் எப்போதுமே மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நாடாகவே இருக்குமேயன்றி மற்றபடி அல்ல என்றே நம்பப்படுகிறது. மூன்றாம் தூதனின் எச்சரிப்பு இதுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் ஞாயிறு ஆசரிப்பைச் சட்டரீதியாக அமல்படுத்தும் பேச்சு பரவலாகப் பேசப்பட்டு விவாதிக்கப்படும்போது, இப்படி வரும் என்று நம்பவோ, எதிர்பார்க்கவோ முடியாத அந்தச் சட்டம், நிறைவேறி வந்துகொண்டிருப்பதைக் காணும்போது, இதுவரை ஏற்பட்டிராத பெரிய விளைவுகளை மூன்றாம் தூதனின் தூது ஏற்படுத்தும். (8)

ஒவ்வொரு தலைமுறையிலும் உலகத்திலும் சபையிலும் உள்ள பாவங்களைக் கண்டிக்கும்படி தமது ஊழியக்காரர்களை அனுப்புகிறவராக

தேவன் இருக்கிறார். ஆனால் தங்களிடம் மென்மையான வார்த்தைகள் பேசப்படுவதைத்தான் ஜனங்கள் விரும்புகிறார்களேயன்றி, சுத்தமான—உறுத்தலான—உண்மைகளைச் சொல்லிக் கண்டிக்கப்படுவதை விரும்புவது இல்லை. அநேக சமய சீர்திருத்தவாதிகள்கூட தங்களுடைய ஊழியத்தைத் தொடங்கும்போது, தங்களது சபையிலும் தேசத்திலும் காணப்படும் பாவங்களைக்குறித்து நேரடியாகக் கண்டித்துப்பேசுவதை விரும்பியதில்லை. ஒரு நேர்மையான கிறிஸ்தவ வாழ்க்கையைத் தாங்களே வாழ்ந்துகாட்டுவதன்மூலம் மட்டுமே ஜனங்களை வேதாகமம் காட்டும் பரிசுத்தமான பாதைக்குத் திருப்பிவிடலாம் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் அது அப்படி நடக்கக்கூடிய காரியமல்ல. ஆகவே தேவனின் ஆவி எலியாவின்மேல் வந்திறங்கியதுபோல இவர்கள் மேலும் வந்திறங்கியது. தேவனின் ஆவி எலியாவை அசைத்ததால் அவன் அக்கிரமம் செய்த அரசனையும் முறைதவறி நடக்கும் ஜனங்களையும் கண்டித்து, அவர்களது பாவங்களை உணர்த்திக்காட்டினான். அதைப்போலவே இவர்களும் தங்கள் விருப்பத்தையும் மீறி, வேதாகமத்தின் தெளிவான வசனங்களை எடுத்துப்பேசி, ஜனங்களின் பாவங்களைக் கண்டித்தார்கள். ஆத்துமாக்களை எதிர்நோக்கியிருக்கும் ஆபத்தையும் அதிலிருந்து இரட்சிக்கப்படுவதற்கான சத்தியத்தையும் மிகுந்த வாஞ்சையோடு எடுத்துரைக்கும்படி ஆவியானவரால் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். விளைவு என்னவாக இருக்கும் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல், தேவன் தங்களுக்குக் கொடுத்த வார்த்தைகளை அப்படியே பேசினார்கள். அவ்வாறாக அவர்கள் கொடுத்த எச்சரிப்பை ஜனங்கள் கவனித்துக் கேட்கிறவர்களாக இருந்தார்கள். (9)

இதைப்போலவேதான் மூன்றாம் தூதனின் எச்சரிப்பும் கொடுக்கப்படும். இந்த எச்சரிப்பின் தூது, மகா வல்லமையாகக் கொடுக்கப்படவேண்டிய காலம் ஒன்று சீக்கிரமே வரவிருக்கிறது. அப்போது தம்மை தேவனுடைய ஊழியத்திற்கென்று ஒப்புக்கொடுக்கும் எளிமையான மனிதர்களை தேவன் எடுத்துப் பயன்படுத்துவார். இந்த எளிமையான ஊழியக்காரர்கள் இந்த வல்லமையான ஊழியத்தைச் செய்வதற்கான தகுதியை எப்படிப் பெறுகிறார்கள்? பரிசுத்த ஆவியானவர் அவர்களை அபிஷேகம் செய்வதாலே இந்தத் தகுதியைப் பெறுகிறார்களேயன்றி, பெரும் கல்விநிலையங்களில் சேர்ந்து தேர்ச்சி பெற்றதால் அல்ல. விசுவாசத்திலும் ஜெபத்திலும் தேர்ச்சிபெற்ற இவ்வூழியர்கள் தெய்வீக உற்சாகத்தோடு சென்று தேவன் தங்களுக்குக் கொடுத்த வார்த்தைகளை அறிவிப்பார்கள். அதன்மூலம் பாபிலோனின் பாவங்கள் வெட்டவெளிச்சமாக்கப்படும். சபையின் பாரம்பரியங்களை அரசின் துணையோடு கட்டாயப்படுத்தித் திணிப்பதால் வரவிருக்கும் பயங்கரமான விளைவுகளையும், ஆவிமார்க்கம் சபைகளில்

நுழைந்துவிட்டிருப்பதையும், போப்புவின் செல்வாக்கு இரகசியமாக ஆனால் வேகமாக வளர்ந்துவருவதையும் இவ்வூழியர்கள் எடுத்து விளக்குவார்கள். ஆயிரமாயிரமானவர்கள் இதைக்கேட்டு, காரியம் இப்படித்தான் இருக்கிறதா என்று ஆராய்வார்கள். பரத்திலிருந்து கொடுக்கப்பட்ட சத்தியங்களைப் புறக்கணித்ததால் கிறிஸ்தவ சபைகள் பொய்யான சத்தியங்களை ஏற்றுக்கொண்டு, பாவத்திற்குள் விழுந்துகிடக்கின்றன என்கிற உண்மையையும், மேலும் தாங்கள் இருக்கும் கிறிஸ்தவ சபைகள் பாபிலோனாக மாறிவிட்டிருக்கின்றன என்கிற சாட்சியையும் கேட்டு ஜனங்கள் திகைத்து நிற்பார்கள். இந்த ஜனங்கள் தங்களது போதர்களிடம் சென்று காரியங்கள் இப்படியா இருக்கிறது என்று தீவிரமாக விசாரிப்பார்கள். அந்த போதகர்களோ பலவற்றை எடுத்துக்கூட்டிப்பேசி, மென்மையான வார்த்தைகளைச் சொல்லி, விழித்தெழுந்துவிட்ட அவர்களது மனச்சாட்சியை மீண்டும் தூங்கவைக்க முயலுவார்கள். ஆனால் பலர் மனித ஞானத்தைக்கொண்டு கொடுக்கப்படும் இந்த விளக்கங்களை ஏற்றுக்கொள்ள மறுத்து, வேதாகமத்தைக்கொண்டு உங்கள் விளக்கங்களை நிரூபியுங்கள் என்று பிடிவாதமாக நிற்பார்கள். மிகவும் புகழ்பெற்று விளங்கும் அந்தப் போதகர்கள் தாங்கள் இதுவரை செலுத்தியிருந்த அதிகாரம் இப்போது செல்லுபடியாகவில்லை என்று கண்டு, அன்று இயேசுவின்மேல் பரிசேயர்கள் கோபப்பட்டதுபோல் கோப்படுவார்கள். கோபப்பட்டு அவர்கள் கேட்டுவந்திருக்கும் செய்தி சாத்தானிடமிருந்து வந்தது என்று கூறுவார்கள். அதுமட்டுமல்ல. அந்தச் செய்திகளை அறிவிக்கும் ஊழியர்களை உபத்திரவப்படுத்தும்படிக்கு பாவத்தில் திளைக்கும் இதர ஜனக்கூட்டத்தாரை ஏவிவிடுவார்கள். (10)

மனிதன் ஆசரிக்கவேண்டிய ஓய்வுநாள் எது என்கிற விவரம் பெரிதாகும்போது, இதுவரை மறக்கப்பட்டிருந்த ஓய்வுநாள் கட்டளையின்மேல் ஜனங்களுடைய கவனமெல்லாம் திரும்பும். இது சாத்தானை மேலும் நன்கு உசுப்பிவிடும். சாத்தானுடைய ஜனங்கள் இதை எதிர்த்து நிற்பர். அதனையும் மீறி செய்தி வரவும் இது எதிராளியாகிய சாத்தானின் பிள்ளைகளை வெறிகொள்ளச்செய்யும். போதகர்கள் இந்த வெளிச்சத்தைத் தமது சபையின் விசுவாசிகள் ஏற்றுக்கொள்ளாதபடி தடுப்பதற்காக, மனித வரம்பை மீறிய சக்தியோடு செயல்படுவர். இந்த மகா முக்கியமான கேள்வியைக் குறித்து எந்தவிதமான விவாதமும் நடைபெறாதபடி தடுக்கத் தம்மால் இயன்ற எல்லாவற்றையும் செய்வர். இப்படித் தடுப்பதற்காகக் கிறிஸ்தவ சபைகள் அரசாங்கச் சட்டத்தின் துணையை நாடும். இந்தச் செயலில் கத்தோலிக்கர்களும் புரொட்டஸ்டாண்டுகளும் மிகுந்த ஒற்றுமையோடு செயல்படுவர். ஞாயிறு ஆசரிப்பை அமுல்படுத்தும் இயக்கம் மேலும் மேலும் அதிக வலிவும் தெளிவும் அடையும். அப்போது

நான்காவது கட்டளையின்படி சனிக்கிழமையை ஆசரிப்போருக்கு எதிராகச் சட்டம் திருப்பப்படும். அவர்களுக்கு அபராதமும் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும். செல்வாக்கான பதவி, பணம் இன்னபிற வெகுமதிகள் மூலம் ஆசைவார்த்தைகள் காட்டி, ஒரு சிலர் தமது விசுவாசத்தைக் கைவிடுமாறு தூண்டப்படுவர். ஆனால் இதற்கெல்லாம் அவர்கள் கூறும் ஒரே பதில்: நாங்கள் செய்யும் தவறு என்ன என்பதை தேவனுடைய வார்த்தையில் இருந்து நிரூபியுங்கள். ஏற்றுக்கொள்ளுகிறோம் என்பதாக இருக்கும். இதேபோன்ற நிலையில் நிறுத்தப்படும்போது, அங்கே அவர்கள் சத்தியம் எது என்பதற்கு பலமான சாட்சி கொடுப்பார்கள். அதைக் கேட்பவர்களில் பலர் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, தேவனின் பிரமாணங்கள் அனைத்திற்கும் கீழ்ப்படிந்து நடக்கத் தீர்மானிப்பார்கள். இப்படியாக சத்தியத்தையே அறிந்திராத ஆயிரக்கணக்கான மக்கள் சத்தியத்திற்குள்ளாக வழிநடத்தப்படுவார்கள். (11)

மனச்சாட்சியின்படி, தேவனின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற செயல் பெருங்குற்றமாகக் கருதப்படும். இப்படிக் கருதும்படி அநேகர் சாத்தானால் கண் குருடாக்கப்படுவார்கள். ஆகவே சத்தியத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் பிள்ளையைப் பெற்றோர்கள் அன்பில்லாமல் கடினமாக நடத்துவார்கள். பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் நல்ல வேலைக்காரனை எஜமானும் எஜமானியும் இரக்கமின்றி கொடுமைப்படுத்துவார்கள். பாசம் நேசம் என்பதெல்லாம் இல்லாமல் போய்விடும். பெற்றோர்களால் சிறுபிள்ளைகள்கூட வீட்டைவிட்டு விரட்டியடிக்கப்படுவார்கள். “அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்” (2 தீமோத்தேயு 3:12) என்று பவுல் சொன்ன வார்த்தைகள் எழுத்துக்கெழுத்து நிறைவேறும். சத்தியத்திற்கு சாட்சிகொடுகிறவர்களாக இருந்து, ஞாயிறு ஓய்வுநாளைக் கனப்படுத்த மறுக்கிறவர்களில் சிலர் சிறையில் தள்ளப்படுவார்கள். சிலர் நாடு கடத்தப்படுவார்கள். சிலர் அடிமைகள் போல் நடத்தப்படுவார்கள். மனித ஞானத்தின்படி பார்க்கும்போது இப்படி எல்லாம் நடக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் மனிதனிடத்தில் உள்ள பாவத்தின் ஆவியை தேவனின் ஆவியானவர் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார் என்பதுதான். ஆனால் இந்த தேவனின் ஆவியானவர் பாவமனிதனை விட்டுவிலகிவிடும் காலம் வரும். அப்போது தேவனுடைய பிரமாணங்களை வெறுக்கிற சாத்தானின் முழுக்கட்டுப்பாட்டிற்குள் மனிதர்கள் வந்துவிடுவார்கள். அதன்பின் நம்பவே முடியாத காரியங்களை மனிதர்கள் செய்வார்கள். ஏனென்றால் மனித இருதயத்தில் தேவனைப்பற்றி அன்போ, பயமோ முற்றிலுமாகவே இல்லையென்றால் அது மகா கொடூரமானதாக ஆகிவிடும். (12)

மூன்றாம் தூதனின் தூதை ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்ளுபவர்களில் மிகப்பலர், சத்தியத்திற்கு முற்றும் கீழ்ப்படிந்து நடக்கும் பரிசுத்தம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். உபத்திரவங்கள் என்கிற புயல் வீச ஆரம்பிக்கும்போது அவர்கள் தங்களது நிலையை மாற்றிக்கொண்டு, எதிரியின் தரப்பில் சாய்ந்துவிடுவார்கள். ஏனென்றால் இவர்கள் உலகத்தின் போக்கிலேயே போய், உலகத்தாரிடம் உள்ள அதே ஆவியைத் தாங்களும் பெற்றுக்கொண்டவர்கள். ஆகவே, இவர்கள் சோதனைகள் வரும்போது சரியானது எது என்று பார்ப்பதைவிட, எளிதானது எதுவோ அதையே தேர்ந்துகொள்ளப் பழகியிருக்கிறவர்கள். இவர்கள் ஒரு காலத்தில் சத்தியத்தை அறிந்து அதில் திளைத்தவர்கள். அரிய திறமைகளும் அருமையாகப் பேசும் ஆற்றலும் உடையவர்கள். ஆனால் இப்போது தங்கள் சக்திகளையெல்லாம் ஆத்துமாக்களை ஏமாற்றவும், சத்தியத்தைவிட்டு வழிவிலக்கி நடத்தவும் செலவளிப்பார்கள். கொஞ்சம் முன்புதான் சத்தியத்தின் பிள்ளைகளுக்கு விசுவாச சகோதரர்களாக இருந்தவர்கள் இப்போது கடும் ஜென்ம விரோதிகளாக ஆகிவிடுவார்கள். பரிசுத்த ஓய்வுநாளை ஆசரிக்கும் பிள்ளைகள் தமது விசுவாசத்தைக் குறித்து விசாரிக்கப்படுவதற்காக நீதிமன்றங்களில் நிறுத்தப்படும்போது அவர்களுக்கு எதிராகக் குற்றம்சாட்டுவதற்கும் பொய்யான தகவல்களைத் தந்திரமாக உள்ளே நுழைத்து அதிகாரிகளை எதிராகத் தூண்டிவிடுவதற்கும் சாத்தானின் மிகச் சிறந்த கருவிகளாக இருப்பவர்கள்—இவர்களே! (13)

இந்த உபத்திரவகாலத்தில் தேவனது பிள்ளைகளின் விசுவாசம் வெகுவாகச் சோதிக்கப்படும். இவர்கள் தேவனையும் அவரது வார்த்தையையும் மட்டுமே நம்பிச்செயல்படுவார்கள். இந்த உலக மக்களை எச்சரிக்கவேண்டிய தங்களது வேலையை நேர்த்தியாய் செய்து முடித்துவிட்டார்கள். இவர்களது இருதயத்தை உலுக்கி, இந்த எச்சரிப்பின் தூதைக் கொடுக்கும்படி உந்தித்தள்ளியது தேவனின் ஆவிதான். தெய்வீக உற்சாகத்தினால் ஆட்கொள்ளப்பட்டவர்களாக, தெய்வீக உந்துதலினால் உந்தப்பட்டவர்களாக, தமது கடமைகளைச் செய்யும்படி இவர்கள் களத்தில் இறங்கினார்கள். இறங்கி, விளைவுகளைப்பற்றி யோசித்துத் தாமதம் செய்யாமல் தேவன் தங்களுக்குக் கொடுத்த எச்சரிப்பின் வார்த்தைகளை அப்படியே ஜனங்களுக்குக் கொடுத்தார்கள். இவர்கள் தங்களது உலக இன்பங்களையோ உலகின் புகழையோ உயிரையோகூடக் காத்துக்கொள்ளவேண்டும் என்று கருதாமல் ஊழியம் செய்த உத்தமர்கள். இருப்பினும் உலகத்தாரின் எதிர்ப்பும் வெறுப்பும் பெரும் புயலாகத் தங்கள்மீது வந்து தாக்கும்போது இவர்களில் சிலர் நிலைகுலைந்து மனம் மருகுகிறவர்களாக ஆகிவிடுவார்கள். அதோடு ஐயோ! நாங்கள் பேசிய

வார்த்தைகளின் விளைவு இப்படியாகும் என்று தெரிந்திருந்தால் பேசாமலேயே இருந்திருப்போமே என்று மனம் மயங்குகிறவர்களாகவும் இருப்பார்கள். ஏனென்றால், தொல்லைகள் அவர்களை எங்கும் சுற்றிவளைத்திருக்கும். தனக்கு இடங்கொடுக்கும்படி சாத்தான் அவர்களைத் தாக்கும் தாக்கானது பெருந்தாக்குதலாக இருக்கும். தாங்கள் ஏற்றுக்கொண்ட ஊழியத்தை வெற்றிகரமாக முடிப்பது என்பது தங்களால் இயலாத காரியம் என்றும் அப்படி முடிக்காமலே தாங்கள் அடியோடு அழிந்துபோகப்போவது நிச்சயம் என்றுமே அவர்களுக்குத் தோன்றும். ஆரம்பத்தில் அவர்களை ஏவி இயக்கிய உற்சாகம் இப்போது தணிந்துபோயிருக்கும். இருப்பினும் இப்போது அவர்கள் பின்வாங்குவதற்கில்லை. ஆகவே தங்களது பரிதாப நிலையை உணர்ந்தவர்களாக எல்லாம் வல்லவரிடத்தில் ஓடி அடைக்கலம் கேட்பர். அப்போது அவர்கள் தாங்கள் பேசிய வார்த்தைகள் தங்களது வார்த்தைகள் அல்ல என்பதையும், எச்சரிப்புக் கொடுத்துப் பேசும்படி தங்களை ஏவிய அந்த தேவனுடைய வார்த்தைகளே என்பதையும் நினைவுகூருவார்கள். தேவன் சத்தியத்தை அவர்களது இருதயத்தில் வைத்துவிட்டார். அவர்கள் அதை அறிவிக்காமல் எப்படி இருக்கமுடியும்? (14)

இதேபோன்ற சோதனைகளைத்தான் கடந்த காலங்களிலும் தேவனுடைய ஜனங்கள் அனுபவித்தார்கள். விக்லிப், ஹஸ், லுத்தர், திண்டேல், பாக்ஸ்டர், வெஸ்லி ஆகிய அனைவருமே மதக்கோட்பாடுகள் அனைத்தும் வேதாகமத்தைக்கொண்டு சோதித்துப் பார்க்கப்படவேண்டும் என்பதையும், வேதாகமத்திற்கு ஒத்துவராத கோட்பாடுகள் அனைத்தும் தூக்கியெறியப்படவேண்டும் என்பதையும் வற்புறுத்தியவர்கள். இவர்களுக்கு எதிராகப் பல உபத்திரவங்கள் தீராத ஆங்காரத்தோடு வந்து மோதின. ஆனாலும் அவர்கள் சத்தியத்தை அறிவிப்பதிலிருந்து ஓயவில்லை. கிறிஸ்தவ சபையின் வரலாற்றின் ஒவ்வொரு காலத்திலும் அந்தந்தக் காலத்தில் இருந்த தேவனின் பிள்ளைகளுடைய தேவைக்கு ஏற்றபடி, விசேஷமான சில சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இப்படி வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் ஒவ்வொன்றும் எதிர்ப்பையும் வெறுப்பையும் கடந்துதான் வந்திருக்கிறது. இந்த வெளிச்சத்தைக் கொண்டுவந்தவர்கள் ஒவ்வொருவரும் சோதிக்கப்பட்டும் பரிசோதிக்கப்பட்டும் தான் இருக்கின்றனர். இரட்சிப்பின் பாதையில் அபாயமான சூழ்நிலைகள் தோன்றும்போதெல்லாம், தேவன் ஜனங்களுக்கு விசேஷமான சத்திய வெளிச்சத்தைக் கொடுக்கிறார். இந்த சத்தியத்தை அறிவிக்கமாட்டேன் என்று யார் கூறக்கூடும்? அவர் தமது ஊழியர்களுக்குக் கட்டளையிடுகிறார். இந்த உலகத்திற்கு இரக்கத்தின் கடைசி அழைப்பினை கொடுக்கும்படி இப்படி தேவன் கட்டளையிடும் நிலையில், அவர்கள் தங்களது ஆத்துமாவை இழக்கத் தயாராக இருந்தால்

ஒழிய அவர்கள் பேசாமல் இருக்க முடியாதே. இந்தத் தூதைச் சொன்னால் அதன் விளைவு என்னவாக இருக்கும் என்று கணக்குப்பார்க்கும் வேலை கிறிஸ்துவின் தூதர்களுக்கும் கிடையாதே. அவர்கள் வேலை, தனது கடமையைச் சரியாகச் செய்துமுடித்தபின் விளைவுகளை தேவனிடம் ஒப்புவித்துவிடவேண்டும் என்பதே. (15)

மூன்றாம் தூதனின் எச்சரிப்புத் தூதை அறிவித்த தேவனின் ஊழியக்காரர்களுக்கு, உலகில் எழும்பும் எதிர்ப்பு வளர்ந்து மேலும் மேலும் கடுமையான எல்லைகளைக் காணும்போது, தேவனுடைய பிள்ளைகள் தாங்கள் செய்ததை எல்லாம் சரியாகத்தான் செய்தோமா என்று சந்தேகப்பட்டுக் குழம்பிப்போகின்றனர். ஏனென்றால் ஒருபுறம் தங்களது வரம்பு மீறிய செய்கையால், வேண்டாத வம்பை விலைக்கு வாங்கிக்கொண்டதுபோலத் தோன்றுகிறது. மறுபக்கம் தேவனுடைய வார்த்தையும் சரி, அவர்களுடைய மனச்சாட்சியும்சரி, அவர்கள் செய்தது சரியே என்று உணர்த்துகின்றன. ஆயினும் சோதனைகள் பெருகும்போது அவற்றைத் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தியும் அவர்களுக்குக் கூடவே கொடுக்கப்படுகிறது. எதிரிக்கும் தேவனது பிள்ளைகளுக்கும் உள்ள இந்தப் போட்டி மேலும் மேலும் நெருக்கமாகவும் முனைப்பாகவும் செயல்படும்போது அதற்கு ஏற்றாற்போல அவர்களுடைய விசுவாசமும் தைரியமும் உயர்வடைந்துகொண்டே போகின்றன. முடிவாக அவர்கள் கொடுக்கும் சாட்சி என்னவாக இருக்குமென்றால் இந்த உலகத்தாரிடம் நல்ல பெயர் வாங்குவதற்காக தேவனின் பிரமாணங்களை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, ஒரு பகுதியை அவசியம் என்றும் மறு பகுதியை அவசியமில்லை என்றும் கூறிக் கண்ணாமூச்சி விளையாடும் வேலை எங்களுக்கு வேண்டாம். நாங்கள் சேவிக்கிற ஆண்டவர் எங்களைத் தப்புவிக்க வல்லவராக இருக்கிறார். ஏனென்றால் கிறிஸ்து ஏற்கனவே இவ்வுலகின் அந்தகார சக்திகளை ஜெயித்தவராக இருக்கிறார். ஏற்கனவே முறியடிக்கப்பட்ட இந்த உலக சக்திகளுக்கு நாங்கள் ஏன் பயப்படவேண்டும்? என்பதுதான். (16)

வெவ்வேறு மாதிரியான உபத்திரவங்கள் எப்போதும் இருந்துகொண்டே இருப்பது இவ்வுலகத்தின் ஒரு அம்சம். சாத்தான் உயிரோடு இருக்கும்வரை இந்தச் சூழ்நிலை இருந்துகொண்டுதானிருக்கும். அந்தகாரச் சக்திகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துக்கொள்ளாமல், யாருமே தேவனுக்கு ஊழியம் செய்யமுடியாது. இப்படிப்பட்ட ஊழியர்களைக் கெட்டுப்போன தூதர்கள் மோதித் தாக்குகிறார்கள். காரணம், அந்த ஊழியக்காரன் தனது ஊழியத்தின்மூலம் தங்கள் கைகளில் மாட்டிக்கொண்ட மனித ஆத்துமாவைத் திரும்பவும் மீட்டுக்கொண்டு போய்விடுவானோ என்கிற அச்சமே. இந்தத்

தாக்குதல் எப்படி வருமென்றால், கெட்டுப்போன மனிதர்கள், பரிசுத்தமான செயல்களின் உதாரணத்தைக் கண்டு, மனதிலே குத்தப்பட்டு அவன்மேல் வெறுப்படைவதால், இவர்கள் கெட்டுப்போன தேவதூதர்களோடு சேர்ந்து அந்த ஊழியக்காரனை தேவனின் பாதையிலிருந்து வழிவிலக்கும்படி பலவிதமான ஆசைகளைக் காட்டி இழுக்கப்பார்க்கிறார்கள். அவன்தானே விரும்பிவராமல், அவனது விருப்பத்திற்கு எதிராகக் கட்டாயப்படுத்தி இழுக்கப்பார்க்கிறார்கள். (17)

ஆனால், இயேசு பரலோகத்தில் உள்ள ஆசரிப்புக்கூடாரத்தில் மனிதர்களுக்குப் பரிந்துபேசிக்கொண்டிருக்கும்வரை, ஆளுகிறவர்கள் முதல் ஆளப்படுகிறவர்கள்வரை, அனைத்து ஜனங்களையுமே பரிசுத்த ஆவியானவர் கட்டுப்படுத்தி, தீமை மிதமிஞ்சிப் பெருகிவிடாமல் தடுத்துவருகிறார். இதேபோல் ஒவ்வொரு நாட்டினுடைய அரசாங்கச் சட்டங்களுங்கூடக் குறிப்பிடத்தக்க அளவிற்குப் பரிசுத்த ஆவியானவரின் கட்டுக்கு உட்பட்டே இயற்றப்படுகின்றன. இந்த அரசாங்கச் சட்டங்கள் மட்டும் இல்லையென்றால், இந்த உலகத்தின் நிலைமை இப்போது உள்ளதைவிட மிகவும் மோசமானதாக இருக்கும். நமது நாட்டின் ஆட்சிப் பதவியில் உள்ள பலர், சாத்தானின் ஏவலர்களாகவே இருக்கிறார்கள். என்றாலும் தேவனுடைய ஏவலர்களும் இருக்கவே செய்கிறார்கள். எதிரியானவன் தன்னுடைய ஆட்கள் மூலமாக தேவனுடைய வேலையைத் தடைசெய்யத் திட்டங்கள் போடுகிறான். ஆனால் உயர்பதவியில் உள்ளவர்களாயும் தேவனுக்குப் பயந்தவர்களாயும் உள்ள பிள்ளைகள் மூலமாகத் தேவதூதர்கள் செயல்பட்டு, அப்படிப்பட்ட திட்டங்களை முறியடிக்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் எண்ணிக்கையில் கொஞ்சமாக இருந்தாலும் தீமையின் வலிமையான ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துகிறார்கள். இப்படியாகச் சத்தியத்திற்கு எதிரானவர்கள் போடும் திட்டங்கள் பலவும் மடங்கடிக்கப்படுகின்றன. காரணம், மூன்றாம் தூதனும் வெளிப்படுத்தல் 18–ன் தூதனும் சேர்ந்து இறுதி எச்சரிப்பைக் கொடுக்கும்போது, அது உயர் பதவியிலுள்ள மேற்படி மனிதர்களின் கவனத்தை ஈர்க்கும். அவர்களிலும் கொஞ்சம் பேர் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, இக்கட்டுக்காலம் வரும்போது, தேவனுடைய ஜனங்களோடு வெளிப்படையாகச் சேர்ந்துகொள்ளுவார்கள். (18)

மூன்றாம் தூதனோடு சேர்ந்து, எச்சரிக்கையின் அழைப்பைக் கொடுக்கும் தூதனின் மகிமையால் இந்த உலகமே பிரகாசமடைந்தது என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம். ஆகவே இத்தூது உலகம் முழுவதும் வல்லமையாகக் கொடுக்கப்படும் என்பதையும் இங்கே காண்கிறோம். கி.பி. 1840–ல் எழும்பிய அட்வெந்து இயக்கம் தேவனின் வல்லமைக்கு ஒரு மகா

மேன்மையான எடுத்துக்காட்டாகும். அப்போது முதலாம் தூதனின் தூது, உலகின் எல்லா இடங்களுக்கும் எடுத்துச்செல்லப்பட்டது. 16 –ம் நூற்றாண்டில் பல நாடுகளில் ஏற்பட்ட புரொட்டஸ்டாண்டு சீர்திருத்த இயக்கத்திற்கு அடுத்தபடியான மிகப் பெரிய சமய எழுச்சியை இது தோற்றுவித்தது. ஆனால் இறுதி எச்சரிப்புக் கொடுக்கப்படும்போது உண்டாகும் சமய எழுச்சி, இவை எல்லாவற்றையும்விடப் பெரியதாக இருக்கும். (19)

வெளி. 14–ன் மூன்றாம் தூதனும் வெளி 18 –ம் தூதனும் சேர்ந்து செய்யும் ஊழியம் பெந்தெகோஸ்தே நாளில் நடந்த ஊழியத்திற்கு இணையாக இருக்கும். இந்த உலகத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட ஆரம்பித்தபோது இந்த அற்புத விதையானது ஊறி, முளைவிட உதவும்படி பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் முன்மாரி என்னும் பெருமழையாகப் பொழியப்பட்டது. அதுபோலவே சுவிசேஷம் முடிக்கப்படும் காலத்தில், அறுவடையின் கதிர்கள் முதிர்ச்சியடைய உதவும்படி பின்மாரி என்னும் பெருமழை பொழியப்படும். இதையே “அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அடையும்படி தொடர்ந்து போவோம்; அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது; அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்” (ஓசியா 6:3) என்றும், “சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார்” (யோவேல் 2:23) என்றும், “கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்; அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்” (அப். 2:17,21) என்றும் வேதாகமம் குறிப்பிடுகிறது. அப்போஸ்தலர்கள் காலத்தில் சுவிசேஷத்தின் உன்னத வேலை ஆரம்பித்தபோது வெளிப்படுத்தப்பட்ட தேவனின் வல்லமையைவிட அவ்வேலை முடியும்போது, வெளிப்படுத்தப்படப்போகிற தேவனின் வல்லமை அதிகமாக இருக்குமேயன்றிக் குறைவாக இருக்கப்போவதில்லை. சுவிசேஷத்தின் தொடக்கத்தில் முன்மாரியின் பொழிதலில் நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் மறுபடியுமாகச் சுவிசேஷத்தின் முடிவில் பின்மாரியின் பொழிதலில் நிறைவேறும். அப்போது: “ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்,

உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" (அப். 3:19,20) என்று பேதுரு எதிர்பார்த்துக் கூறிய இளைப்பாறுதலின் காலங்கள் வரும். (20)

தேவனுடைய ஊழியர்கள், தங்களை தேவனுக்கு ஒப்புவித்துக்கொடுத்த பரிசுத்த ஒப்புவிப்பினால் ஒளிவீசிப் பிரகாசிக்கும் முகங்களை உடையவர்களாக இருப்பார்கள். அப்படியே அவர்கள் எல்லா இடங்களுக்கும் விரைந்துசென்று, பரலோகத்திலிருந்து தங்களுக்குக் கொடுக்கப்பட்ட செய்தியை அறிவிப்பார்கள். இவ்வாறு பூமி முழுவதிலுமாக ஆயிரக்கணக்கானவர்கள் தங்களது குரல்களை எழுப்பி எச்சரிப்பைக் கொடுப்பார்கள். அற்புதங்கள் நடக்கும். நோயாளிகள் குணமடைவார்கள். தேவஊழியர்கள் போகிற வருகிற இடங்களிளெல்லாம் அடையாளங்களும் அதிசயங்களும் நடக்கும். சாத்தானுங்கூட ஜனங்களை ஏமாற்றுகிறதற்காக வானிலிருந்து அக்கினியை இறக்கிக் காட்டுதல் போன்ற பல அற்புதங்களைச் செய்வான் (வெளி. 13:13). இப்படியாக தேவனுடைய காரியங்கள் சாத்தானுடைய காரியங்கள் ஆகிய இரண்டையுமே ஒப்புநோக்கியபின், பூமியிலே குடியிருக்கிற ஒவ்வொருவரும் தாங்கள் யார்பக்கம் சார்ந்து நிற்பது என்பதைத் தெரிந்துகொள்ளுவார்கள். (21)

மேற்படி, கடைசிகாலத்தின் சத்தியத்தை ஏற்றுக்கொள்வது என்பது வாதங்கள் செய்வது அல்ல. தேவாவியானவர் மனித இருதயங்களில் ஆழமாக உணர்த்திக் காட்டுவதாலேயே நடக்கும். ஏனென்றால், செய்யப்படவேண்டிய வாதங்கள் அனைத்தும் செய்து முடித்தாயிற்று. விதைக்கவேண்டிய விதைகளெல்லாம் விதைத்தாயிற்று. இப்போது அது வளரவேண்டும். கனிகொடுக்கவேண்டும். தேவ ஊழியர் களால் விநியோகிக்கப்பட்ட அச்சிட்ட தாள்கள் தங்களது வேலையைச் செவ்வனே செய்துமுடித்துவிட்டன. சத்தியத்தின் ஒளிக்கீற்றுகள் எல்லா இடங்களிலும் பரவிவிட்டன. உண்மை எது என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. உண்மையை ஏற்றுக்கொண்ட தேவனின் பிள்ளைகளைக் கட்டியிருந்த எதுவுமே இப்போது அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது. மற்ற எதையும்விட இப்போது சத்தியமே அவர்களுக்கு முக்கியம். சத்தியத்திற்கு எதிரான சக்திகள் ஒன்றுதிரண்டு இழுத்தாலும், எல்லாவற்றையும் மீறி, தேவன் பக்கம் உறுதியாக நிற்கிறார்கள். ஆனாலும் சத்தியம் எது என்று உணர்த்தப்பட்ட அநேகர், அதனை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாதபடியும் அதற்குக் கீழ்ப்படிய முடியாதபடியும், தடுத்துக்கொண்டிருக்கும் பிசாசுகளுக்கு இடம் கொடுத்துவிட்டார்கள். (22) ★

# 39

# சிறுமந்தையே, பயப்படாதே!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 613–634)**

"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்" –தானியேல் 12:1. (1)

மூன்றாம் தூதனின் தூது கொடுத்து முடிக்கப்பட்டவுடன் பூமியின் மேல் குடியிருக்கும் பாவிகளுக்கான தேவனுடைய இரக்கமும் கிருபையும் பரிந்துபேசுதலும் முடிந்துபோய்விடுகிறது. இவ்வுலகில் இருக்கும் தேவபிள்ளைகள் தாங்கள் இந்த உலகத்தின் மக்களுக்குச் சொல்லவேண்டியதெல்லாம் சொல்லிமுடித்துவிட்டார்கள். அதோடு அவர்கள் பின்மாரியை அதாவது தேவனுடைய சந்திதானத்திலிருந்து வரும் வல்லமையைப் பெற்றுக்கொண்டார்கள். இப்போது அவர்கள் தங்களுக்கு முன்பாக இருக்கிற சோதனையான காலத்தை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். பரலோகத்திலிருந்து தேவதூதர்கள் மிகவும் அவசரத்தோடு பூமிக்கு வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கிறார்கள். பூமியில் இருந்து பரலோகத்திற்கு வருகிற தேவதூதன் ஒருவன் தனது வேலை முடிந்துவிட்டது என்கிறான். அப்பொழுது கடைசியாக இந்த உலகத்திற்கு வரவேண்டிய சோதனை வந்தாயிற்று. தேவனுடைய தெய்வீகப்பிரமாணங்களுக்கு விசுவாசமாக இருப்பவர்கள் எல்லோரும் ஜீவனுள்ள தேவனின் முத்திரையை பெற்றுக்கொண்டுவிட்டார்கள். இப்படி அவர்கள் முத்திரையைப் பெற்றுக்கொண்டதும், இயேசு பரலோகத்தில் உள்ள ஆசரிப்புக்கூடாரத்தில் பரிந்துபேசுவதை நிறுத்திவிடுகிறார். நிறுத்திவிட்டுத் தனது கரங்களை உயர்த்தி, "எல்லாம் முடிந்தது" என்று பலத்த குரலில்

கூறுகிறார். பிறகு "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" (வெளி. 22:1) என்கிற தேவ அறிவிப்பைக் கொடுக்கிறார். அப்பொழுது தேவதூதர் சேனைகள் அனைவரும் தங்களது கிரீடங்களைக்கழற்றி அவரது காலடியில் வைக்கிறார்கள். பூமியில் உள்ள ஒவ்வொருவருடைய காரியமும் வாழ்வா—சாவா என்பது தீர்மானமாகிவிட்டது. கிறிஸ்து தம்முடைய ஜனங்களுக்காகப் பாவ நிவாரணம் செய்து, அவர்களது பாவங்களை அழித்துப்போட்டுவிட்டார். அவரது இராஜ்யத்தின் குடிமக்களின் எண்ணிக்கை பூர்த்தியாகிவிட்டது. பூலோகமெங்கும் உள்ள இராஜ்யங்களும் அவற்றின் அதிகாரங்களும் மேன்மைகளும் இரட்சிப்பைச் சுதந்தரித்துக்கொண்டவர்களுக்கு கொடுக்கப்பட இருக்கின்றன. இயேசு ராஜாதிராஜனாகவும் தேவாதி தேவனாகவும் இருந்து அரசாளுவார். (2)

அவர் ஆசரிப்புக்கூடாரத்தைவிட்டு வெளியே வந்ததும், பூமியிலே குடியிருக்கிறவர்கள்மேல் இருள் கவிழ்ந்துகொள்ளுகிறது. பயங்கரமான இந்த நேரத்தில் நீதிமான்களாக இருக்கிறவர்கள் பரிசுத்த தேவனுக்கு முன்பாக இயேசுவின் பரிந்துபேசுதல் இல்லாமலேயே நீதிமான்களாக நிற்கவேண்டும். அக்கிரமத்தின் ஆதிக்கத்தைக் கட்டுக்குள் வைத்துவந்த பரிசுத்தஆவியானவர் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் மனந்திருந்தாத மனிதர்களின்மேல் சாத்தான் தனது முழு ஆதிக்கத்தையும் செலுத்தத் துவங்குவான். தேவனின் நீடியபொறுமை முடிவடையும் காலம் வந்துவிட்டது. இந்த உலகமானது அவரது அன்பை வெறுத்துவிட்டது. அவரது நியாயப்பிரமாணத்தை அவமானமாக்கிவிட்டது. அக்கிரம் செய்கிறவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கிருபையின் கெடு தாண்டிவிட்டது. பரிசுத்த ஆவியினால் இதுவரையிலும் இருந்துவந்த பாதுகாவல் இனி இருக்கமுடியாது. தீயவனாகிய சாத்தானிடமிருந்து அவர்களுக்கு இனி பாதுகாப்பு கிடையாது. ஆகவே இப்பொழுது சாத்தான் இவ்வுலகில் குடியிருக்கிறவர்களைக் கடைசியானதும் மகாப்பெரியதுமான ஒரு உபத்திரவத்திற்குள் மூழ்கடிக்கக் காத்திருக்கிறான். மனிதனுக்குள் புயல்போல் பொங்கியெழும் உணர்ச்சிகளை அடக்கிக் கட்டுப்படுத்தும் வேலையை இப்பொழுது தேவதூதர்கள் செய்யமாட்டார்கள். ஆகவே மனிதர்களிடையே எல்லாவிதமான கலகங்களும் கட்டவிழ்த்து விடப்படும். எனவே அந்தக் காலத்தில் எருசலேமிற்கு ஏற்பட்ட அழிவைவிடப் பயங்கரமான அழிவு உலகம் முழுவதற்கும் ஏற்படும். (3)

அன்று எகிப்து நாட்டையே துக்கத்தில் ஆழ்த்தும்படி அதன் தலைப்பிள்ளைகள் அனைவரையும் அழித்துவிட்டது ஒரே ஒரு தூதன்தான்.

அன்று தாவீது தேவன் கோபப்படும்படி ஜனங்களைக் கணக்கெடுத்தபோது, அந்தப் பாவத்திற்காகத் தண்டிக்கும்படி இஸ்ரவேலில் பெரிய அழிவை உண்டாக்கியது ஒரே ஒரு தேவதூதன்தான். தேவன் கட்டளையிடும்போது இப்படிப்பட்ட பெரும் அழிவுகளை உண்டாக்கும் வல்லமை பரிசுத்த தூதர்களுக்கு உண்டு. அதேபோல தேவன் மட்டும் அனுமதிப்பாரானால், பிசாசுகளும் இதேபோன்ற அழிவு வேலையைச் செய்ய முடியும். எங்கும் பாழ்க்கடிப்பை உண்டாக்கும்படி தேவ அனுமதிக்காகப் பிசாசுகள் இப்பொழுதே காத்துக்கொண்டுதான் இருக்கின்றன. (4)

மேற்படி பிசாசுகளின் அழிவுச் செயலால் உலகம் முழுவதிலும் இயற்கையின் சீரழிவுகள், மனிதர்களிடையே கலகம், இரத்தஞ்சிந்துதல் ஆகிய பயங்கரங்கள் நிறைந்திருக்கும். தேவனது பிரமாணத்தைக் கனப்படுத்துகிற பிள்ளைகள்தாம் இந்த அழிவிற்கும் தண்டனைக்கும் காரணம் என்று குற்றம்சாட்டப்படுவார்கள். கடைசியாகக் கொடுக்கப்பட்ட வல்லமையான எச்சரிப்பினால், பலர் மனந்திருந்திவிட்டனர். இது சாத்தானின் பிள்ளைகளை மூர்க்கமடையச்செய்யும். அப்படி மனந்திரும்பிய பிள்ளைகள்மேல் அவர்களது கோபம் கனல் போல் மூண்டு எரியும். அவர்களை வெறுத்து உபத்திரவப்படுத்தும் ஆவியை சாத்தான் தனது பிள்ளைகளுக்கு மேலும் மேலும் அதிகமாக ஊட்டிவிடுவான். (5)

தேவனுடைய சமுகம் இறுதியில் யூத தேசத்தின் மத்தியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில், அதை ஆசாரியர்களும் சரி சாதாரண ஜனங்களும்சரி அறியாமலிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் அப்பொழுது சாத்தானின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்தார்கள். மோசமான—பயங்கரமான வெறியுணர்ச்சிகள் அவர்களை ஆட்டிவைத்துக்கொண்டிருந்தன. ஆனால் அந்த நிலையிலுங்கூட, அவர்கள் தங்களை தேவனுக்குச் சொந்தமான விசேஷித்த ஜனமாகவே கருதிக்கொண்டிருந்தனர். ஆகவே எருசலேமில் இருந்த ஆலயத்தில் செய்யப்பட்டுவந்த ஊழியங்கள் தொடர்ந்தன. தீட்டுப்பட்டுப்போயிருந்த அதன் பலிபீடங்களில், பலிகள் இடப்பட்டுவந்தன. இவற்றுக்கும்மேலாக, தேவகுமாரனின் இரத்தத்தைச் சிந்தினது மட்டுமன்றி, அவருடைய ஊழியர்களான அப்போஸ்தலர்களின் இரத்தத்தையும் சிந்தினர். இதில் தீவிரமாயிருந்த ஜனங்கள்மேல், தேவனின் நாமத்தில் தினமும் ஆசீர்வாதங்கள் உரைக்கப்பட்டன. அதுபோலவே, பரலோக ஆசரிப்புக்கூடார ஊழியம் முடிந்ததும், இவ்வுலகின்மேல் நியாயத்தீர்ப்பு வழங்கப்படும். அது முடிவான நியாயத்தீர்ப்பாகவும், அழிவுக்குரிய நியாயத்தீர்ப்பாகவும் இருக்கும். அந்தத் தீர்ப்பு வழங்கப்படும்போது, அதைக்குறித்து இவ்வுலகத்தார் அறியமாட்டார்கள். ஆகவே தேவ ஆவி தங்களிடமிருந்து

எடுக்கப்பட்டுவிட்ட நிலையிலும், அவர்கள் தங்கள் மத அனுஷ்டானங்களைத் தொடர்ந்து செய்துகொண்டு இருப்பார்கள். தீமையின் பிரபுவானவன் இந்த ஜனங்கள்மேல் தன் ஆவியை ஊற்றி, இவர்கள் தங்கள் மார்க்கங்களில் இன்னும் அதிகத் துடிப்போடு செயல்பட உதவுவான். இவர்கள் மூலம் தனது தீய திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முனைவான். இவர்களது செயல்கள் எல்லாம் தேவன்மேல் பக்திவைராக்கியம் கொண்டவர்கள்போல இவர்களைக் காட்டுவனவாக இருக்கும். (6)

பரிசுத்த ஓய்வுநாளைக் குறித்த விஷயம் கிறிஸ்தவ உலகமெங்கும் விவாதத்திற்குரிய விஷயமாக ஆகும்போது மதத் தலைவர்களும் அரசாங்க அதிகாரிகளும் ஒன்றுசேர்ந்து ஞாயிறு ஆசரிப்பைக் கட்டாயமாக்கும்போது ஜனங்களிலே சிறு கூட்டத்தினராகிய ஒரு சாரார் இந்த விஷயத்தில் உலகத்தோடு ஒத்துப்போக மறுக்கும்போது அவர்களை உலகமே ஒட்டுமொத்தமாக சபிக்கும். சபை நிர்ணயித்த காரியத்தை—அரசாங்கம் விதித்த சட்டத்தை எதிர்க்கிறவர்களைச் சகிக்கக்கூடாது என்றும், உலகம் முழுவதும் சட்டம் ஒழுங்கு இல்லாமல் குழப்பத்தில் மூழ்கிவிடுவதைவிட அவர்கள் பாடுபடுவது நல்லது என்றும் நிர்பந்திக்கப்படும். ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும் என்று தீய சிந்தை கொண்ட காய்பாவால் பதினெட்டு நூற்றாண்டுகளுக்குமுன் கிறிஸ்துவிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்டது (யோவான் 11:50). அதைப்போலவே இப்பொழுதும் இந்த வாதம் தீர்க்கமானதாக இருக்கும். முடிவிலே நான்காம் பிரமாணம் உரைக்கும் ஓய்வுநாளை உயர்த்திப் பிடிக்கிறவர்களுக்கு எதிராக ஒரு கட்டளை பிறப்பிக்கப்படும். உலகத்தோடு சேர்ந்து ஞாயிறு ஆசரிப்பை ஏற்றுக்கொள்ளாத எவரும் கடுமையான தண்டனைக்கு உரியவர்கள் என்றும், ஒரு குறிப்பிட்ட நாளுக்குப்பிறகு இவர்களைக் காண்கிறவர்கள் கண்ட இடத்திலேயே கொன்றுவிடவேண்டும் என்றும் அந்தக் கட்டளை கூறும். இப்படியாக நியாயப்பிரமாணங்களை முழுமையாகக் கடைப்பிடிப்போருக்கு எதிராக ஐரோப்பாவின் கத்தோலிக்கர்களும் அமெரிக்க நாட்டின் புரொட்டஸ்டாண்டுகளும் ஒன்றுபட்டுச் செயல்படுவர். (7)

இதன்பிறகு, தேவனுடைய ஜனங்கள் தீர்க்கதரிசிகளால் யாக்கோபின் இக்கட்டுக்காலம் என்று கூறப்பட்ட காலமாகிய துன்பமும் துயரமுமான காலத்திற்குள்ளாகப் பிரவேசிப்பார்கள். இந்த யாக்கோபின் இக்கட்டுக்காலம் குறித்து: “கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தத்தளிப்பின் சத்தத்தைக் கேட்கிறோம்; திகிலுண்டு, சமாதானமில்லை. … முகங்களெல்லாம் மாறி வெளுத்திருக்கிறதையும் … ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த

நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்” (எரே. 30:5–7) என்று கர்த்தர் சொல்லுகிறார். (8)

ஏசாவின் கைகளுக்குத் தன்னை தப்புவிக்கும்படி (ஆதி. 32:24–30) ஜெபத்திலே போராடின யாக்கோபின் சஞ்சலமான இரவானது இந்த உபத்திரவ காலத்தில் தேவனுடைய பிள்ளைகளின் அனுபவத்தை விவரிக்கிறது. ஏசாவிற்கு கிடைக்கவேண்டிய தகப்பனின் ஆசீர்வாதத்தை யாக்கோபு ஏமாற்றி எடுத்துக்கொண்டதினாலே, ஏசா தன் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுவிடப்போவதாக மிரட்டினான். அதனால் யாக்கோபு உயிருக்குப் பயந்து ஓடிப்போனான். பல வருடங்கள் புறதேசத்திலே இருந்துவிட்டு, தேவனின் கட்டளைப்படி அவன் தனது மனைவிகள், குழந்தைகள், ஆடுகள், மாடுகளோடு தன் சொந்த தேசத்திற்குத் திரும்பினான். தேசத்தின் எல்லையை நெருங்கியபோது, ஏசா யுத்தத்திற்கு ஆயத்தமான மனிதர்களோடு புறப்பட்டு வந்துகொண்டிருக்கும் தகவல் எட்டியது. தனக்கு இழைக்கப்பட்ட தீமைக்குப் பழிவாங்கத்தான் ஏசா வருகிறான் என்று அறிந்த யாக்கோபு பயத்தால் மிகவும் நடுங்கிப்போனான். யாக்கோபின் கூட்டத்தில் ஆயுதம் ஏந்திச் சண்டைபோடத்தக்கவர் யாருமில்லை. ஆகவே யாக்கோபின் கூட்டத்தார் காப்பாற்றுவார் யாருமின்றி கொடூரமாக வெட்டிக்கொல்லப்படுவது நிச்சயம் என்றாயிற்று. ஒட்டுமொத்தமாக அழியப்போகிறோம் என்கிற சஞ்சலம் ஒருபக்கம் இருக்க, மறுபக்கம் இதற்கெல்லாம் காரணம் தனது சகோதரனுக்கு எதிராகத் தான் செய்த பாவமே என்கிற உணர்வும் அதற்காக வருந்திய வருத்தமும் யாக்கோபின் இருதயத்தை அழுத்தி நசுக்கின. தேவன் இரக்கங்காட்டி இடைப்பட்டாலொழிய வேறு நம்பிக்கைக்கே இடமில்லை. தனது பாதுகாப்பிற்காக தான் இப்பொழுது செய்யக்கூடிய ஒன்றே ஒன்று, ஜெபம் செய்வதுதான் என்பதை யாக்கோபு உணர்ந்துகொண்டான். அதே சமயத்தில், தனது சகோதரனுக்கு எதிராகச் செய்த பாவத்திற்குத் தன்னால் என்னென்ன பிராயச்சித்தம் செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்தான். அதோடு மட்டுமின்றி, ஒருவேளை தாக்கப்படுவதைத் தடுக்கமுடியாது என்கிற சூழ்நிலை வருமானால், உயிர்தப்ப என்ன செய்யமுடியுமோ அவைகளையும் செய்தான். அவைகளைச் செய்தபின்னர்தான் ஜெபத்திலே அவன் தேவனோடு போராடினான். உபத்திரவகாலம் நெருங்கிவரும்போது, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களும் இப்படித்தான் செய்யவேண்டும். அவர்கள் தாங்கள் உண்மையும் உத்தமுமானவர்கள் என்பதை மற்றவர்கள் புரிந்துகொள்ளுவதற்கு என்னென்ன செய்வேண்டுமோ அவைகளனைத்தையும் செய்யவேண்டும். அதோடு அவர்கள் ஞாயிறு ஆசரிப்புச்சட்டம் வராமல் தடுக்க என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளையும் செய்யவேண்டும்.

இதையெல்லாம் செய்தபின்னர், அதையும்மீறி வரவிருக்கிற உபத்திரவத்தால் தாங்கள் வீழ்ந்துவிடாதபடி, காக்கும் கிருபைக்காக இடைவிடாமல் ஜெபித்துக்கொண்டே இருக்க வேண்டும். (9)

தனது சஞ்சலங்களை தன்னுடைய குடும்பத்தார் அறிந்துகொள்ளவேண்டாம் என்று எண்ணி, யாக்கோபு அவர்களை அனுப்பிவிட்டு, தனிமையாக இருந்து தேவனிடத்தில் தனது வேண்டுதல்களை வைக்கிறான். தனது பாவத்தை அறிக்கையிடுகிறான். தன்மீது இதுகாறும் இரக்கம் பாராட்டி வந்ததற்காக நன்றிகளை ஏறெடுக்கிறான். மிகுந்த மனத்தாழ்மையோடு தேவனுக்கு முன்பாக நின்று, அவர் தமது பிதாக்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைகளையும் பெத்தேலில் இராத்தரிசனத்திலும் அந்நிய தேசங்களில் இருந்த சமயங்களிலும் அவர் தனக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களையும் நினைவுபடுத்தி அவற்றின்படி அவர் தனக்குச் செய்யவேண்டுமென்றும் வேண்டினான். அவனது வாழ்க்கையிலேயே மிகப்பெரிய நெருக்கடி வந்துவிட்டதே. எல்லாமே மோசம்போய்விடும் என்கிற நிலை ஆகிவிட்டதே. அந்த இருளிலும் அந்தத் தனிமையிலும் இருந்து அவன் தொடர்ந்து தேவனுக்குமுன் தன்னைத் தாழ்த்தி ஜெபித்துக்கொண்டு இருந்தான். திடீரென்று அவன் தோளை ஒரு கை தொட்டது. யாரோ ஒரு எதிரி தன்னைக் கொல்ல வந்திருப்பதாக யாக்கோபு எண்ணிக்கொண்டான். மிகவும் பயந்துபோனவனாகத் தனது முழுப்பலத்தோடும் தன்னைத் தாக்கவந்தவரோடு போராடினான். இரவு முழுவதும் போராடிய அந்த நபர், பொழுது விடியத்தொடங்கியபோது தான் சாதாரண மனிதன் அல்ல என்பதை யாக்கோபிற்கு வெளிப்படுத்தினார். அவர் யாக்கோபைத் தொட்டதுமே வலிமையான உடலை உடைய யாக்கோபு கை, கால் விளங்காதவனைப்போலத் தொய்ந்து விழுந்தான். வேறு எதுவும் செய்யமுடியாதவனாக, இனம் புரியாதிருந்த அந்த எதிரியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கெஞ்சி அழத்தொடங்கினான். ஏனென்றால் தான் போராடிய நபர் வேறு யாருமல்ல, தன்னோடு உடன்படிக்கை செய்துகொண்ட தேவனே என்பதை யாக்கோபு இப்பொழுது அறிந்துகொண்டான். உடல் வலுவிழந்து வேதனைப்பட்டுக்கொண்டிருந்த நிலையிலும் அவன் தனது குறிக்கோளை மறந்துவிடவில்லை. எவ்வளவோ காலமாகத் தனது பாவத்தைக் குறித்து உள்ளத்தில் கலக்கமும் மனதில் பெரும் உறுத்தலும் இருதயத்தில் வேதனையும் அனுபவித்துக்கொண்டிருந்தது போதும். இப்பொழுது தான் மன்னிக்கப்பட்டுவிட்டோம் என்கிற உத்தரவாதம் மட்டுமே அவனுக்குத் தேவை. யாக்கோபை வந்து சந்தித்த அந்தத் தேவமனிதர், அவனிடம் விடைபெற்றுக் கொள்வார்போலத் தோன்றியது. ஆனால் யாக்கோபு அவரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, தன்னை ஆசீர்வதிக்கும்படி

கெஞ்சினான். “அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது” என்று வற்புறுத்தினார். ஆனால் நமது முற்பிதாவாகிய யாக்கோபோ “நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்” என்று விடாப்பிடியாக பிடித்துக்கொண்டான். என்ன ஒரு நம்பிக்கையும் உறுதியும் விடாமுயற்சியும் இங்கே வெளிப்படுகின்றன! யாக்கோபின் இந்த வேண்டுதல் பெருமையோடும் துணிகரத்தோடும் இருந்திருக்குமானால், அவன் ஒரே நொடியில் அழிக்கப்பட்டுப் போயிருப்பான். ஆனால் தன்னுடைய தகுதியின்மையையும் பலவீனத்தையும் அறிக்கையிடுகிறபோதிலும் உடன்படிக்கையைக் காக்கும் தேவனுடைய இரக்கத்தின்மேல் நம்பிக்கை வைக்கிறவனுக்கு கிடைக்கும் நிச்சயத்தோடிருந்தான். (10)

“அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான்” என்கிறது வேதாகமம் (ஓசியா 12:4). பாவங்களோடு தவறு செய்து அழியக்கூடியவனான இவன் தன்னைத் தாழ்த்தி மனந்திரும்பி சரணாகதி அடைந்ததின் மூலமாகப் பரலோகத்தின் உன்னதமானவரோடு போராடி வென்றான். பாவியாக இருந்தாலும் தன்னுடைய நடுங்கும் கரங்களால் தேவனுடைய வாக்குத்தத்தங்களை பிடித்துக்கொண்டு நின்றான். வரம்பற்ற அன்புடைய தேவனின் இருதயத்தால் பாவியின் மன்றாட்டை மறுக்கமுடியாது போயிற்று. அவனுடைய வெற்றியின் அடையாளமாகவும், அவனது உதாரணத்தைப் பின்பற்ற மற்றவர்களை ஊக்கப்படுத்தவும் தேவன் அவனது பெயரை மாற்றினார். பாவத்தை நினைவூட்டின அவனது பெயர்(யாக்கோபு) வெற்றியை நினைவூட்டும் பெயராக (இஸ்ரவேல்) மாற்றப்பட்டது. யாக்கோபு தேவனோடு போராடி மேற்கொண்டான் என்கிற உண்மை அவன் மனிதரோடும் போராடி மேற்கொள்வான் என்ற நிச்சயத்தை அவனுக்குத் தந்தது. தேவன் அவனுக்குப் பாதுகாப்பாக இருந்ததால் இப்போது தனது சகோதரனுடைய கோபத்தைக்குறித்து அவன் பயப்படவில்லை. (11)

அவன் செய்த பாவத்தின் நிமித்தம் அவனை அழித்துப்போடத் தனக்கு உரிமையுண்டு என்று சொல்லி சாத்தான் தேவதூதர்களுக்கு முன்பாக யாக்கோபைக் குற்றம் சாட்டினான். யாக்கோபிற்கு எதிராகப் படையொன்றை நடத்திச்செல்ல ஏசாவை ஏவிவிட்டான். நமது முற்பிதாவின் அந்த நீண்ட இரவு போராட்டத்தில் அவனை அதைரியப்படுத்தவும் தேவன்மேல் அவனுக்கிருந்த பிடிப்பை முறிக்கவும் அவனுடைய பாவத்தைக்குறித்த ஒரு குற்ற உணர்வை அவனுக்குள் திணிக்கவும் சாத்தான் முயன்றான். யாக்கோபு கிட்டத்தட்ட நம்பிக்கையை இழந்துவிடும் நிலைக்கு தள்ளப்பட்டான். ஆனால் பரலோகத்திலிருந்து உதவி வந்தாலொழிய தான் அழிந்துபோவது நிச்சயம் என்பதை அவன் அறிந்திருந்தான். தான் செய்த பெரிய பாவத்தைக்

குறித்து மெய்யாகவே மனம் வருந்தி தேவனிடம் விண்ணப்பித்தான். தன் நோக்கத்திலிருந்து அவன் திரும்பப்போவதில்லை. தூதுவரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஊக்கமாக—மனவேதனையோடு—மேற்கொள்ளும்வரை தன் விண்ணப்பத்தை முன்வைத்தான். (12)

சாத்தான் யாக்கோபிற்கு எதிராக படையெடுக்கும்படி ஏசாவைத் தூண்டியதுபோலவே உபத்திரவகாலத்தில் தேவனுடைய ஜனங்களுக்கு எதிராக அக்கிரமக்காரர்களைத் தூண்டிவிடுவான். யாக்கோபைக் குற்றப்படுத்தினதுபோலவே, தேவனுடைய ஜனங்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைக் கூறுவான். உலகத்து ஜனங்களை தன்னுடையவர்களாக எண்ணியிருக்கிறான். ஆனால் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற சிறிய கூட்டம் மேலாதிக்கத்தை எதிர்க்கிறார்கள். அவர்களை இந்தப் பூமியில் இல்லாதபடி அகற்றிவிட்டால், அவனுடைய வெற்றி முழுமையாகிவிடும். பரிசுத்த தூதர்கள் அவர்களைப் பாதுகாப்பதை அவன் காண்கிறான். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டது என்று யூகிக்கிறான். ஆனால் அவர்களுடைய வழக்குகள் பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் முடிவு செய்யப்பட்டுவிட்டது என்பது அவனுக்குத் தெரியாது. செய்யும்படி அவர்களைத் தூண்டின பாவங்களைக் குறித்த சரியான துல்லியமான அறிவு அவனுக்கு இருப்பதால், அவர்களுடைய பாவங்களை தேவனுக்கு முன்பாக மிகவும் பெரிதுபடுத்திக்காட்டி, அவர்களும் தன்னைப்போலவே தேவனுடைய தயவிலிருந்து விலக்கப்படவேண்டியவர்கள் என்று காண்பிக்கிறான். தேவன் தம்முடைய நீதியின்படி தன்னையும் தனது தூதர்களையும் அழிக்கும்போது அவர்களை மன்னிக்க முடியாது என்று அறிவிப்பான். அவர்கள், தன்னுடைய இரை என்று உரிமைகோரி, அவர்களை அழிக்கும்படி தன்னுடைய கரங்களில் கொடுத்துவிடவேண்டும் என்று நிர்ப்பந்திப்பான். (13)

சாத்தான் தேவனுடைய பிள்ளைகளின் பாவங்களைக் குறித்துக் குற்றஞ்சாட்டும்போது, அவர்களை கடைசிமட்டும்—முடிந்தவரையிலும் சோதிக்க ஆண்டவர் அவனை அனுமதிக்கிறார். தேவன்மேல் உள்ள நம்பிக்கையும் அவர்களது விசுவாசமும் உறுதியும் கடுமையாக சோதிக்கப்படும். அவர்கள் தங்களது கடந்தகால வாழ்க்கையைத் திருப்பிப்பார்க்கும்போது அவர்கள் நம்பிக்கை மூழ்குகிறது. அதில் குறைவான நல்லவைகளையே காண்கிறார்கள். அவர்களுடைய பலவீனத்தையும் தகுதியின்மையையும் குறித்து முழுமையாக உணருகிறார்கள். அவர்களது வழக்கு நம்பிக்கையற்றது, அவர்களுடைய பாவக்கறைகள் ஒருபோதும் கழுவப்படாது என்கிற எண்ணங்களினால் அவர்களை பயமுறுத்த சாத்தான் முயற்சிக்கிறான். இப்படியாக, அவர்கள் அவனுடைய தூண்டுதல்களுக்கு

ஒப்புக்கொடுத்து, தேவனுக்கு உண்மையாயிருப்பதிலிருந்து விலகுவதற் கேதுவாக அவர்களுடைய விசுவாசத்தை அழிக்க நம்பிக்கையாயிருக்கிறான். (14)

தங்களை அழித்துவிடும் எதிரிகளால் தேவனுடைய மக்கள் சூழப்பட்டிருந்தாலும் அவர்களது வேதனையெல்லாம் சத்தியத்திற்காக தாங்கள் அனுபவிக்கும் உபத்திரவத்தைப் பற்றியதல்ல. ஒவ்வொரு பாவமும் வருந்தி அறிக்கைபண்ணப்படவில்லையோ என்றும் இப்படி தங்களிலிருக்கும் சில தவறுகளினால் "பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" (வெளி. 3:10) என்கிற இரட்சகரின் வாக்குத்தத்தம் நிறைவேறுவதை உணரமுடியாமல் போய்விடுமோ என்றும் பயப்படுவார்கள். தாங்கள் முற்றிலும் மன்னிக்கப்பட்டுவிட்டோம் என்கிற நிச்சயம் மட்டும் அவர்களுக்கு இருக்குமானால், மரணத்தைக் குறித்தோ சித்திரவதை செய்யப்படுவதைக் குறித்தோ அவர்கள் கவலைப்படமாட்டார்கள். அவர்களுடைய குணத்தில் இருக்கும் ஒரு குறையினால் தகுதியற்றவர்களாக நிரூபிக்கப்பட்டாலோ அல்லது உயிரிழந்தாலோ தேவனுடைய பரிசுத்த நாமம் களங்கப்பட்டுவிடுமே. (15)

எப்பக்கத்திலும் துரோகத் திட்டங்களையே கேள்விப்படுகிறார்கள், மீறுதல்களின் செயல்களையே காண்கிறார்கள். எனவே இந்தப் பெரிய எதிர்ப்பு நிறுத்தப்படவேண்டும் என்றும் துன்மார்க்கரின் அக்கிரமங்கள் முடிவடையவேண்டும் என்றும் ஒரு தீவிர ஆசையும் உண்மையான ஆத்தும ஏக்கமும் அவர்களில் எழும்புகிறது. கலகச்செயல்களைத் தடுத்து நிறுத்தும்படி தேவனிடம் மன்றாடும் அதே வேளையில் இந்தத் தீமையின் அலைகளைத் தடுத்து நிறுத்தவும் பின்னுக்குத் தள்ளவும் தாங்கள் சக்தியற்றவர்களாக இருப்பதற்காக, தங்களையே நொந்துகொள்ளவும் செய்வார்கள். கிறிஸ்துவின் ஊழியத்தில் தங்களது எல்லாத் திறமைகளையும் எல்லா நேரத்திலும் பயன்படுத்தியிருந்தால், பலத்தின்மேல் பலமடைந்திருந்தால், தங்களுக்கு எதிராக செயல்பட சாத்தானின் சேனைகளுக்கு கொஞ்ச பலமே இருந்திருக்கும் என்று உணருவார்கள். (16)

அநேக கடந்தகால பாவங்களக்காக மனம்வருந்தி மன்னிப்புக் கேட்டதைச் சுட்டிக்காட்டி, "அவன் என் பெலனைப் பற்றிக்கொண்டு என்னோடே ஒப்புரவாகட்டும்; அவன் என்னோடே ஒப்புரவாவான்" (ஏசா. 27:5) என்கிற இரட்சகரின் வாக்குத்தத்தத்திற்காக மன்றாடி தேவனுக்கு முன்பாகத் தங்கள் ஆத்துமாவைத் தாழ்த்துவார்கள். தங்களுடைய ஜெபங்கள் உடனே பதிலளிக்கப்படவில்லை என்பதினால் அவர்களது விசுவாசம்

குலைந்துபோவதில்லை. மிகமிகக் கடுமையான சஞ்சலத்தாலும் பயத்தாலும் துயரத்தாலும் அவதிப்பட்டபோதிலும் தங்களுடைய விண்ணப்பங்களை அவர்கள் நிறுத்தமாட்டார்கள். யாக்கோபு தூதனைப் பிடித்துக்கொண்டதைப் போலவே இவர்களும் தேவனுடைய பலத்தைப் பிடித்துக்கொள்ளுவார்கள். அவர்களது ஆத்தும மொழியெல்லாம்: “நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்” என்பதாகவே இருக்கும். (17)

தனது சகோதரனின் சேஷ்டபுத்திரபாகத்தை ஏமாற்றிப் பெற்றுக்கொண்ட பாவத்தைக் குறித்து ஏற்கனவே யாக்கோபு மனம் வருந்தாமல் இருந்திருந்தால் தேவன் அவனுடைய ஜெபத்தைக் கேட்டு இரக்கமாக அவனது உயிரைப் பாதுகாத்திருக்கமாட்டார். அதைப்போலவே, அறிக்கைபண்ணப்படாத பாவங்கள் இக்கட்டுக் காலத்தில் தேவஜனங்களிடம் காணப்படுமானால், பயத்தாலும் சஞ்சலத்தாலும் வாதிக்கப்படுகின்றபோது அவர்கள் மடங்கடிக்கப்பட்டு, விரக்தி அவர்களுடைய விசுவாசத்தை துண்டித்துவிட, விடுதலைக்காக தேவனிடத்தில் மன்றாடும் தைரியத்தை கொண்டிருக்கமாட்டார்கள். தங்களுடைய தகுதியின்மையைக் குறித்த ஆழ்ந்த உணர்வு ஒருபக்கம் இருப்பினும் வெளியே கொண்டுவருவதற்கான மறைத்து வைக்கப்பட்ட பாவங்கள் அவர்களிடம் இருக்காது. அவர்கள் பாவங்கள் முன்னதாகவே நியாயத்தீர்ப்புக்குச் சென்று நீக்கிப்போடப்பட்டன. அவைகளை அவர்கள் நினைவுக்கும் கொண்டுவர இயலாது. (18)

வாழ்க்கையின் சிறுசிறு விஷயங்களில் தங்களின் நேர்மையின்மையை தேவன் கண்டுகொள்ளமாட்டார் என்று நம்பும்படி சாத்தான் அநேகரை நடத்திக்கொண்டிருக்கிறான். ஆனால் தேவன் எக்காரணத்திலும் தீமையை அங்கிகரிக்கவோ அல்லது பொறுத்துக்கொள்ளவோ மாட்டார் என்பதை யாக்கோபோடு நடந்துகொண்டதின் வழியாக அவர் காண்பிக்கிறார். தங்களிடமுள்ள பாவங்களை காரணப்படுத்தவும் மறைக்கவும் முயன்று அறிக்கையிடப்பட்டு மன்னிக்கப்படாத பாவமாக அவைகளைப் பரலோகப் புத்தகத்தில் வைத்திருக்கிறவர்கள் சாத்தானால் மேற்கொள்ளப்படுவார்கள். அவர்கள் எவ்வளவு உன்னதமான தொழில் செய்திருந்தார்களோ எவ்வளவு மதிப்பான பதவியில் இருந்தார்களோ தேவனுடைய பார்வையில் அவர்களது காரியம் அவ்வளவு மோசமானதாக இருக்கும். சாத்தான் அவர்கள் மேல் பெறும் வெற்றியும் அவ்வளவு நிச்சயமாக இருக்கும். கர்த்தரின் நாளுக்கென்று செய்யவேண்டிய ஆயத்தத்தை தாமதிக்கிறவர்கள் உபத்திரவ காலத்திலோ அல்லது அதற்குப் பிந்தைய ஒரு காலத்திலோ அதைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். இப்படிப்பட்ட அனைத்து மக்களின் நிலையும் நம்பிக்கையற்றதேயாகும். (19)

இந்த இறுதியான பயங்கரமான போராட்டத்திற்கு ஆயத்தமின்றி வந்திருக்கிற கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டவர்கள் துன்மார்க்கர் அவர்களுடைய துன்பத்தைப் பார்த்து பேருவகையடைய தங்களுடைய விரக்தியில் கொடிய வேதனை நிறைந்த வார்த்தைகளால் தங்களது பாவத்தை அறிக்கைசெய்வார்கள். ஏசாவும் யூதாசும் செய்த பாவ அறிக்கைகளைப்போன்றவையே இவர்களுடைய பாவ அறிக்கைகளும். அவர்கள் தாங்கள்செய்த பாவத்திற்காக அல்ல மீறுதலின் விளைவைப் பார்த்துப் புலம்புகிறார்கள். தீமைக்காகத் துக்கப்படவும் வெறுக்கவும் இல்லை. தண்டனையைக் குறித்த பயத்தினால் தாங்கள் பாவங்களை ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் தண்டனை நீக்கப்படுமானால், அன்று பார்வோன் செய்ததுபோல இவர்களும் பரலோகத்தை எதிர்க்கவே திரும்புவார்கள். (20)

ஏமாற்றப்பட்டு தூண்டப்பட்டு பாவத்திற்குள் விழுந்திருந்தாலும் உண்மையான மனந்திரும்புதலோடு தன்னிடம் வருகின்ற எவரையும் தேவன் புறம்பே தள்ளிவிடுவதில்லை என்பதை யாக்கோபின் சரித்திரம் நிச்சயிக்கிறது. இவர்களை அழித்துப்போடும்படி சாத்தான் முயலும் அதே சமயம் ஆபத்தான வேளையில் அவர்களை ஆறுதல்படுத்தி பாதுகாக்க தேவன் தமது தூதர்களை அனுப்புவார். சாத்தானுடைய தாக்குதல்கள் கடுமையாகவும் தீர்மானமானதாகவும், அவனது வஞ்சகங்கள் பயங்கரமானவையாகவும் இருக்கும். ஆனால் தேவனுடைய கண்கள் அவரது ஜனங்கள் மேலும் அவரது செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்தும் இருக்கின்றன. அவர்களது வேதனை பெரியது. உலையின் தீச்சுவாலைகள் அவர்களைப் பட்சித்து விடுவதைப் போலத் தோன்றுகின்றன. ஆனால் அவர்களைப் சுத்திகரிப்பவர் அவர்களை நெருப்பில் புடமிடப்பட்ட பொன்னாக கொண்டுவருவார். கடுமையான சோதனையின் காலத்தில் தேவனுடைய ஜனங்கள் மேல் இருக்கும் அவருடைய அன்பு, பிரகாசமாகவும் வளமாகவும் இருந்த காலத்தில் அவர்கள்மேல் இருந்ததைப் போலவே வலிமையாகவும் மென்மையாகவும் இருக்கும். கிறிஸ்துவின் சாயல் அவர்களில் பூரணமாக பிரதிபலிக்கப்படும்படி அவர்களுடைய மாம்சிகம் அழியவேண்டும். (21)

களைப்பையும் தாமதத்தையும் பசியையும் சகிக்கிற—கடுமையாக நெருக்கப்பட்டாலும் விழுந்துபோகாத விசுவாசம் நமக்கு முன்னால் இருக்கிற வருத்தமும் சஞ்சலமுமான இக்கட்டுக்காலத்தில் நமக்குத் தேவைப்படுகிறது. அந்தக் காலத்திற்கு ஆயத்தமாகும்படிக்கே ஒரு கிருபையின் காலம் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. விடாப்பிடியாகவும் தீர்மான மாகவும் இருந்ததாலேயே யாக்கோபு மேற்கொண்டார். விடாப்பிடியாக

ஜெபிக்கிற ஜெபத்தின் வல்லமைக்கு யாக்கோபின் வெற்றி ஒரு சான்று. அவனைப்போலவே தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பிடித்துக் கொள்ளுகிற அனைவரும், அவனைப்போலவே உண்மையாகவும் விடாமுயற்சியோடு இருக்கிற அனைவரும் அவன் வென்றதைப் போலவே வெற்றியடைவார்கள். சுயத்தை மறுக்கவிரும்பாதவர்களும் தேவனுக்கு முன்பாகத் தங்களுக்காக வேதனைப்படமுடியாதவர்களும் அவருடைய ஆசீர்வாதத்திற்காக தொடர்ந்து உண்மையாக ஜெபத்திலே தரித்திராதவர்களும் அதைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். தேவனோடு போராடுவது என்ன என்பதை அறிந்தவர்கள் மிகக் குறைவானவர்களே! அனைத்து வல்லமையும் செயல்படும்வரை ஆழ்ந்த வாஞ்சையோடு ஆண்டவர் முன்பாக தங்கள் ஆத்துமாக்களை ஊற்றிவிடுகிறவர்கள் மிகச் சிலரே! மன்றாடுகிறவர்மேல் விவரிக்கவே இயலாத சஞ்சலம் அலை அலையாக வரும்போது நசித்துப்போகாத விசுவாசத்தோடு தேவனின் வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டிருப்பவர்கள் மிகச் சிலரே. (22)

தங்களது விசுவாசத்தை இன்றைக்கு நடைமுறைப் படுத்தாதவர்கள், சாத்தானின் வஞ்சகங்களிலும் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்தும் சட்டங்களிலும் விழுந்துவிடும் அபாயத்திற்குள்ளாக இருக்கிறார்கள். அப்படியே ஒருவேளை நிலைநின்றாலுங்கூட உபத்திரவ காலத்தில் அதிக ஆழமான விரக்தியிலும் வேதனையிலும் அமிழ்ந்துவிடுவார்கள். காரணம்...? தேவனை நம்பியிருப்பதை ஒருபோதும் அவர்கள் பழக்கப்படுதிக்கொள்ளவில்லை. புறக்கணித்த விசுவாசப் பாடங்களை, தைரியமில்லாத சூழ்நிலைகளின் பயங்கரமான அழுத்தத்தில் கற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தப்படுவர். (23)

தேவனுடைய வாக்குத்தத்தங்களை நிரூபித்துப்பார்ப்பதன்மூலம் இப்போது அவரை அறிந்துகொள்ளவேண்டும். உண்மையாகவும் உள்ளார்ந்த உணர்வோடும் ஏறெடுக்கப்படும் ஒவ்வொரு ஜெபத்தையும் தூதர்கள் குறித்து வைக்கிறார்கள். தேவனோடுள்ள தொடர்பை தவிர்ப்பதற்குப் பதிலாக சுயத்தை திருப்திப்படுத்துவதைப் தவிர்க்கவேண்டும். தேவனுடைய அனுமதியோடு அனுபவிக்கும் கொடிய வறுமையும் கடுந்தியாகமும், அதின்றி கிடைக்கும் செல்வம், மதிப்பு, சுகம், நட்பைக்காட்டிலும் மேலானவைகள். ஜெபிப்பதற்கு நேரம் செலவிடவேண்டும். உலக ஆசைகளால் கவரப்படும்படி நமது மனங்களை அனுமதித்தால், நம்முடைய விக்கிரகங்களாகிய பொன்னையும் வீடுகளையும் செழிப்பான நிலங்களையும் நம்மிடமிருந்து விலக்கினால் ஒருவேளை தேவன் நமக்கு நேரம் கொடுப்பார். (24)

தேவனுடைய ஆசீர்வதித்தை கேட்கமுடியாத எந்த பாதையிலும் நுழைவதற்கு மறுப்பதின் வாயிலாக, இளைஞர்கள் பாவம்செய்யும்

உலகத்திற்கான கடைசி எச்சரிப்பின் தூதைக் கொண்டுசெல்லும் ஊழியர்கள், குளிர்ந்துபோன—கருத்தில்லாத—சோம்பலான விதத்திலல்லாது, ஊக்கமாக விசுவாசத்தோடு தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக யாக்கோபைப்போல ஜெபித்தால் “தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர்தப்பிப்பிழைத்தேன்” (ஆதி. 32:30) என்று சொல்லுவதற்கேதுவான அநேக இடங்களைக் காண்பார்கள். தேவனோடும் மனுஷரோடும் போராடி மேற்கொள்ளும் வல்லமையுள்ள இளவரசர்களாக பரலோகத்தால் மதிக்கப்படுவார்கள். (25)

இதுவரைக்கும் இருந்திராத இக்கட்டுக்காலம் சீக்கிரமே நம்மேல் வரவிருக்கிறது. அதை எதிர்நோக்குவதற்கு இப்போது நாம் பெற்றிராத—பெறுவதற்கு அநேகர் அசதியாயிருக்கிற ஒரு அனுபவத்தை நாம் பெற்றுக்கொள்ளவேண்டியதாக இருக்கிறது. பொதுவாக உண்மையிலேயே துன்பத்தை அனுபவிப்பதைவிட அதை எதிர்பார்க்கிற எதிர்பார்ப்பு அதிகத் துன்பமாக இருக்கும். ஆனால் நமக்கு முன் இருக்கிற இக்கட்டு இதைப் போன்றதல்ல. எவ்வளவு தெளிவான விளக்கமும் அதன் கடுமையின் பரிமாணத்தைத் தொட முடியாது. இந்த சோதனைக் காலத்தில் ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனுக்கு முன்பு தமக்காக நிற்க வேண்டும். “நோவாவும் தானியேலும் யோபும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்களேயல்லாமல், குமாரனையாகிலும், குமாரத்தியையாகிலும் தப்புவிக்கமாட்டார்கள் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்பதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்” எசே. 14:20. (26)

நமது பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து நமக்காகப் பாவநிவாரணம் செய்துகொண்டிருக்கும் இந்தச் சமயத்தில்தானே நாம் கிறிஸ்துவிற்குள் பரிபூரணமாகுவதற்கேற்றவைகளைத் தேடவேண்டும். ஒரு நினைப்பினால்கூட சோதனையின் வல்லமைக்கு நமது இரட்சகரைக் கொண்டுசெல்ல இயலவில்லை. மனித இருதயத்திலே காலூன்றுவதற்கான சில காரியங்களை சாத்தான் காண்கிறான். அவனுடைய சோதனைகள் தனது வல்லமையை ஊன்றக்கூடிய சில பாவ ஆசைகள் போற்றப்படுகின்றன. ஆனால் கிறிஸ்து தம்மைக் குறித்து: “இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை” (யோவான் 14:30) என்றார். சாத்தானுக்கு வெற்றிதர உதவக்கூடிய ஒன்றையும் தேவகுமாரனிடம் அவனால் காணமுடியவில்லை. அவர் தமது பிதாவின் பிரமாணங்களைக் கைக்கொண்டிருந்தார். சாத்தான் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு பாவமும் அவரிடம் இருக்கவில்லை. இக்கட்டுக் காலத்தில் நிற்பவர்கள் இந்த நிலையில் காணப்படவேண்டும். (27)

கிறிஸ்துவின் பாவநிவாரண இரத்தத்தின்மேலுள்ள விசுவாசத்தினால், இந்த வாழ்க்கையில்தானே நம்மைவிட்டு பாவத்தை பிரிக்கவேண்டும். மேன்மை மிகுந்த நமது இரட்சகர் நம்மை அவரோடும், நம்முடைய பலவீனத்தை அவருடைய பலத்தோடும், நம்முடைய அறியாமையை அவரது ஞானத்தோடும், நம்முடைய தகுதியின்மையை அவருடைய தகுதியோடும் இணைத்துக்கொள்ள அழைக்கிறார். அவர் நமக்கு ஏற்படுத்தித் தருகிற சூழ்நிலை, அவருடைய சாந்தத்தையும் தாழ்மையையும் நாம் கற்றுக்கொள்ளுகிற பள்ளிக்கூடமாகும். நாம் தெரிந்துகொள்ளுகிற லகுவான—இன்பமான பாதையை அல்ல, வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை நம் ஆண்டவர் எப்போதும் நம்முன் வைக்கிறார். நமது குணங்களை தேவசாயலாக மாற்றும்படி பரலோகம் அனுப்பும் முகவர்களோடு ஒத்துழைப்பது நமது கையில் இருக்கிறது. தங்கள் ஆத்துமாக்களை மிகப்பெரிய ஆபத்துக்குட்படுத்தாமல் யாரும் இந்த வேலையை புறக்கணிக்கவோ தள்ளிவைக்கவோ முடியாது. (28)

அப்போஸ்தலனாகிய யோவான் தான் கண்ட தரிசனத்திலே “ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும்” (வெளி. 12:12) என்று சொல்லிய பலத்த சத்தத்தைக் கேட்டான். பரலோகத்திலிருந்து திகிலான சத்தத்தை வரவழைக்கக்கூடிய அளவு இந்தக்காட்சிகள் மிகப் பயங்கரமானவை. தனது முடிவிற்கான காலம் சமூபமாகிக்கொண்டிருப்பதை அறிந்து, சாத்தானின் கோபம் அதிகமாகிறது. அவன் செய்கிற வஞ்சகங்களும் அழிவுகளும் இக்கட்டுக் காலத்தில் உச்சநிலையை அடையும். (29)

அற்புதங்களைச் செய்யவல்ல பிசாசுகளின் சக்திக்கு அடையாளமாக இயற்கையாக உண்டாகமுடியாத பயங்கரமான காட்சிகள் சீக்கிரமே வானத்தில் தோன்றும். பிசாசுகளின் ஆவிகள் பூமியின் இராஜாக்களிடமும் உலக மக்களனைவரிடமும் சென்று, வஞ்சகத்தால் அவர்களைக் கட்டி, பரலோக ராஜ்யத்திற்கு எதிராகச் சாத்தான் செய்யும் கடைசிக் கலகத்தில் அவனோடு சேரும்படி அவர்களை வற்புறுத்தும். இவைகளால் ஆளுவோரும் ஆளப்படுவோரும் ஒரே மாதிரியாக ஏமாற்றப்படுவார்கள். தங்களைக் கிறிஸ்துவாகவே சொல்லிக்கொள்ளுகிற நபர்கள் எழும்பி உலக இரட்சகருக்கு மட்டுமே உரிய உரிமையையும் துதியையும் உரிமைபாராட்டுவார்கள். சுகமளிக்கும் ஆச்சரியமான அற்புதங்களைச் செய்து, வேதவாக்கியங்களின் சாட்சிக்கு முரண்பட்ட வெளிப்பாடுகள் பரலோகிலிருந்து தங்களுக்குக் கிடைப்திருப்பதாக சொல்லிக்கொள்ளுவார்கள். (30)

இந்த ஏமாற்று நாடகத்தின் உச்சக்கட்ட காட்சியாக, சாத்தான் தானே கிறிஸ்துவைப்போல வேடமணிந்து வருவான். இரட்சகருடைய வருகையை தங்களுடைய நம்பிக்கையின் முழுமையாக காலங்காலமாக சபை எதிர்பார்த்திருக்கிறது. இப்பொழுது கிறிஸ்துதானே வந்துவிட்டார் என்பதுபோன்று இந்தப் பெரிய ஏமாற்றுக்காரன் காண்பிப்பான். உலகின் வெவ்வேறு பகுதிகளில் கண்களைக் கூசவைக்கும் பிரகாசத்தோடு, கம்பீரத் தோற்றம் உடையவனாக யோவானுக்கு தேவகுமாரனைக் குறித்து வெளிப்படுத்தலில் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கத்தின்படி (வெளி. 1:13–15), மனிதர்களுக்கு நடுவிலே சாத்தான் தன்னை வெளிப்படுத்துவான். அவனைச் சூழ்ந்திருக்கும் மகிமை எதாலும் விஞ்சமுடியாத, இதுவரை மனிதக் கண்கள் கண்டிராததாக இருக்கும். "கிறிஸ்து வந்துவிட்டார்! கிறிஸ்து வந்துவிட்டார்!" என்கிற ஆரவாரத்தொனி காற்றில் எங்கும் தொனிக்கிறது. ஜனங்கள் அவனைப் போற்றி நெடுஞ்சாண்கிடையாக அவன்முன் விழுந்து வணங்குவார்கள். அவன் கிறிஸ்து பூமியில் இருந்த போது தனது சீடர்களை ஆசீர்வதித்ததைப்போலவே தனது கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதிப்பான். அவனது குரல் சாந்தமாகவும் தணிந்ததாகவும் மெல்லிசைபோல் இனிமையாக ஒலிக்கும். மிருதுவான, கருணைமிகுந்த தொனியில் பேசி, இரட்சகர் போதித்த அதே நேர்த்தியான பரலோக சத்தியங்களில் சிலவற்றைப் போதிப்பான். அவன் வியாதிப்பட்ட ஜனங்களைக் குணமாக்குவான். பிறகு கிறிஸ்து அதிகாரத்தோடு பேசியதைப்போலவே பேசி, தான் ஓய்வுநாளை ஞாயிற்றுக் கிழமைக்கு மாற்றிவிட்டதாகக் கூறி, தன்னால் ஆசீர்வதிக்கப்பட்ட நாளை உலக மக்கள் அனைவரும் சிறப்பிக்கும்படி கட்டளையுமிடுவான். ஏழாம்நாளைத்தான் பரிசுத்த நாளாக ஆசரிப்போம் என்று உறுதியாக இருக்கிறவர்கள், வெளிச்சத்தோடும் சத்தியத்தோடும் அனுப்பப்பட்ட தன்னுடைய தூதர்களுக்குச் செவிகொடுக்க மறுத்ததினால் தனது நாமத்தை தூஷிக்கிறார்கள் என்றும் சொல்லுவான். இது வலிமையான அனைத்தையும் அடக்கி ஆளுகிற வஞ்சனை. சீமோனுடைய மாய வித்தையினால் வஞ்சிக்கப்பட்ட சமாரியர்களைப்போல, சிறியவர் முதல் பெரியவர்வரை அனைவரும் இந்த மாயத்திற்கு செவிகொடுத்து, "தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான்" (அப். 8:10) என்பார்கள். (31)

ஆனால் தேவனுடைய ஜனங்கள் ஏமாற மாட்டார்கள். இந்த அந்திக்கிறிஸ்துவின் போதனை வேதவாக்கியங்களுக்கு ஒத்ததாக இல்லை. கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட தேவனுடைய கோபாக்கினை எவர்மேல் ஊற்றப்படும் என்று வேதாகமம் அறிவிக்கிறதோ மிருகத்தையும் அதன் சொருபத்தையும் யார் வணங்குகிறார்களோ அவர்கள்மேல் அவன் ஆசீர்வாதம் கூறப்பட்டிருக்கிறது. (32)

மேலும் கிறிஸ்து வருகிற அதேவிதமாக வருவதற்கு சாத்தான் அனுமதிக்கப்படவில்லை. இந்த காரியத்தில் இரட்சகர் மக்களை எச்சரித்து, தமது இரண்டாம் வருகையைக்குறித்து தெளிவாக முன்னறிவித்தார். “ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்”– மத்தேயு 24:24–27. (இதைக் குறித்து மேலும் மத்தேயு 24:31 25:31 வெளி 1:7 1 தெச. 4:16,17 ஆகிய வசனங்களிலும் காணலாம்). இந்த வருகையைப்போல நடிக்க வாய்ப்பே இல்லை. இது உலகம் முழுவதிலும் அறியப்பட்டு, அனைவரும் பார்க்கக்கூடியதாக இருக்கும். (33)

வேதாகமத்தை தளராது ஊக்கமாகப் படிக்கும் மாணாக்கர்களும், சத்தியத்தின்மேலுள்ள அன்பை ஏற்றுக்கொண்டவர்களும்தான் உலகம் முழுவதையும் சிறைப்பிடிக்கப்போகிற வல்லமையான மாயத்திலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். வேதாகமத்தின் சாட்சியால் மாயக்காரனின் வேடத்தைக் கண்டுபிடிப்பார்கள். அனைவருக்கும் சோதனைக்காலம் வருகிறது. சோதனையின் வழியாக சலிக்கப்படுவதினால் மெய்க்கிறிஸ்தவன் வெளிப்படுவான். உணர்வுகளின் சாட்சிகளால் விழுந்துவிடாதபடிக்கு தேவ ஜனங்கள் அவருடைய வார்த்தையின்மேல் உறுதியாக கட்டப்பட்டிருக்கிறார்களா? அப்படிப்பட்ட இக்கட்டில் அவர்கள் வேதாகமத்தை வேதாகமத்தை மாத்திரமே சார்ந்து இருப்பார்களா? அந்நாளில் நிற்பதற்கேதுவான ஆயத்தத்தை பெற்றுவிடாதபடிக்கு சாத்தான் கூடுமானால் அவர்களை தடுக்கவும் செய்வான். அந்தநாள் திருடனைப்போல அவர்கள்மேல் வரும்படிக்கு அவர்கள் இருதயங்கள் உலகக் கவலைகளினால் பாரமடையும்படி, அவர்கள் வழியை அடைக்கவும், உலக செல்வங்களில் சிக்கவும், பாரமான தளர்ந்துபோகச்செய்கிற பாரங்களை சுமக்கவும்தக்கதாக காரியங்களை அவன் அமைப்பான். (34)

கற்பனையை கைக்கொள்ளுகிறவர்களுக்கு எதிராக கிறிஸ்தவ உலகத்தில் வெவ்வேறு அதிகாரிகளால் வெளியிடப்படும் சட்டங்கள் அரசாங்கத்தின் பாதுகாப்பை விலக்கி, அவர்களை அழிக்க விரும்புகிறவர்களிடம் அவர்களை ஒப்படைக்கும்போது, தேவனுடைய ஜனங்கள் கிராமங்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் ஓடி சிறுசிறு குழுக்களாக மிகவும் வனாந்தரமான தனிமையான இடங்களில் வாசம் பண்ணுவார்கள்.

அநேகர் மலைகளின் மறைவிடங்களில் அடைக்கலம் காணுவார்கள். பிட்மண்ட் பள்ளத்தாக்குகளிலே இருந்த கிறிஸ்தவர்களைப்போல, இவர்கள் பூமியின் உயர்ந்த இடங்களைப் புகலிடமாகக்கொண்டு, அந்த கன்மலையின் அரண்களுக்காக தேவனுக்கு நன்றி சொல்லுவார்கள் (ஏசா. 33:16). ஆனால் பல நாடுகளையும் வகுப்புகளையும் சார்ந்த அநேகர் உயர்ந்தோர்—தாழ்ந்தோர், பணக்காரர்—ஏழை, கருப்பர்—வெள்ளையர் என்கிற பாகுபாடு இல்லாமல், அநீதியாக கொடிய சிறைச்சாலைகளுக்குள் தள்ளப்படுவார்கள். சங்கிலிகளால் கட்டப்பட்டவர்களாகவும், சிறைக்குள் அடைக்கப்பட்டவர்களாகவும், கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களாகவும் தேவனால் நேசிக்கப்படும் இந்த ஜனங்கள் சோர்வான நாட்களைக் கழித்துக்கொண்டிருப்பார்கள். ஒரு சிலர் பட்டினியால் சாகும்படி இருண்ட அருவருப்பான காற்று புகமுடியாத அறைகளுக்குள் தள்ளி அடைக்கப்படுவார்கள். அவர்களுடைய வேதனையின் முனகல்களைக் கேட்பதற்கு எந்த மனித செவியும் இருக்காது. உதவி செய்வதற்கு எந்த மனிதக் கரமும் நீட்டப்பட்டிருக்காது. (35)

இந்தச் சோதனையான நேரத்தில் தேவன் தம் ஜனங்களை மறந்துவிடுவாரா? ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்து மக்கள்மேல் நியாயத்தீர்ப்புகள் விழுந்தபோது விசுவாசமான நோவாவை தேவன் மறந்துவிட்டாரா? சமவெளியின் பட்டணங்களை அழிக்கும்படி வானிலிருந்து அக்கினி வந்தபோது லோத்துவை அவர் மறந்துவிட்டாரா? எகிப்து தேசத்திலே விக்கிரக ஆராதனைக்காரர்களால் சூழப்பட்டிருந்த யோசேப்பை அவர் மறந்துவிட்டாரா? பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு நேர்ந்தகதி உனக்கும் நேரும் என்று யோசபேல் மிரட்டியபோது எலியாவை அவர் மறந்துவிட்டாரா? சிறைவீட்டிற்குள் இருந்த இருண்ட உளையான கிணற்றுக்குள் இறக்கிவிடப்பட்டிருந்த எரேமியாவை அவர் மறந்துவிட்டாரா? சூளையின் நடுவிலிருந்த மூன்று வாலிபரை மறந்துவிட்டாரா அல்லது சிங்கத்தின் கெபிக்குள் போடப்பட்டிருந்த தானியேலைத்தான் அவர் மறந்துவிட்டாரா? (36)

“சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது” ஏசாயா 49: 14–16. “உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்” (சகரியா 2:8) என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார். (37)

எதிரிகள் அவர்களை சிறைக்குள் தள்ளி அடைத்தாலும், அவர்களது ஆத்துமாக்களுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள தொடர்பை சிறையின் சுவர்களால் தடுக்கமுடியாது. அவர்களின் பலவீனங்களை எல்லாம் பார்க்கிறவர், எல்லா சோதனைகளுடனும் அறிமுகம்பெற்றவர் பூலோக வல்லமைகள் எல்லாவற்றையும்விட மேலானவர். வெளிச்சத்தையும் சமாதானத்தையும் எடுத்துக்கொண்டு தனிமையான சிறை அறைகளுக்கு பரலோகத்திலிருந்து தூதர்கள் வருவார்கள். சிறை அவர்களுக்கு அரண்மனையைப்போலாகிவிடும். ஏனெனில் விசுவாசத்தில் ஐசுவரியவான்கள் அங்கே வாசம்செய்கிறார்கள். பிலிப்பியச் சிறையிலே நடு இரவிலே பவுலும் சீலாவும் துதிபாடி ஜெபித்தபோது நடந்ததைப்போலவே இருண்ட சுவர்கள் பரலோக ஒளியினால் வெளிச்சமடையும். (38)

தேவனுடைய ஜனங்களை நெருக்கவும் அழிக்கவும் தேடினவர்கள்மீது தேவனுடையநியாயத்தீர்ப்புகள்வரும். அக்கிரமக்காரர்கள்மீதுள்ள அவருடைய நீடிய பொறுமை மனிதர்களை மீறுதல் செய்ய துணிகரமாக்கியிருக்கிறது. ஆனால் அவர்களுடைய தண்டனை மிகத் தாமதமாக வருவதால் நிச்சயமில்லாததாகவோ அல்லது பயங்கரமற்றதாகவோ போய்விடாது. வராக இருக்கிற். அவர்கள் மனந்திரும்பவேண்டும் என்று ஆனால் அவர்களோ தேவன் நம்மை காணவில்லை என்று தைரியங்கொண்டு. மேலும் அதிகமதிகமாக அக்கிரமம்செய்கிறார்கள். ஆகவே அவர்கள்மீது தண்டனை வரவே செய்யும். எவ்வளவு தாமதமாக தண்டனை வருகிறதோ, அவ்வளவு கடுமையாக இருக்கும். “கர்த்தர் தமது கிரியையாகிய அபூர்வமான கிரியையைச் செய்யவும், தமது வேலையாகிய அபூர்வமான வேலையை நிறைவேற்றவும், அவர் பெராத்சீம் மலையிலே எழும்பினதுபோல எழும்பி, கிபியோனின் பள்ளத்தாக்கில் கோபங்கொண்டதுபோல கோபங்கொள்வார்”—ஏசா. 28:21. இரக்கமுள்ள நமது ஆண்டவருக்கு தண்டிக்கிற செயல் அபூர்வமான செயல்தான். “கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன்” (எசே. 33:11) என்கிறார். “கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர்” யாத். 34:6,7. “. கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர்; அவர்களை ஆக்கினையில்லாமல்

தப்புவிக்கமாட்டார்"—நாகூம் 1:3. மிதிக்கப்பட்ட அவரது கற்பனையின் அதிகாரத்தை நீதியோடுகூடிய பயங்கரமான காரியங்களால் நிரூபிப்பார். மீறினவர்கள்மேல் வரக் காத்திருக்கும் கோரமான பழிவாங்குதலை நீதிசெலுத்தும் ஆண்டவரின் தயக்கத்தை வைத்து நிதானிக்கலாம். அநேக காலமாக அவர் பொறுத்திருக்கிற ஜனம், அவரது கணக்கின்படி தனது அக்கிரமத்தை எட்டும்வரை அவர் தண்டிக்காமல் விட்டிருக்கிற ஜனம் கடைசியாக அவருடைய கிருபை கலக்காமல் வார்க்கப்பட்ட உக்கிரத்தைக் குடிக்கும். (39)

ஆசரிப்புக்கூடாரத்தில் கிறிஸ்து தனது பரிந்து பேசும் ஊழியத்தை முடிக்கும்போது, மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கி, அதின் அடையாளத்தைத் தரித்துக்கொள்ளுகிறவர்மேல், இரக்கம் கலவாத உக்கிரமான கோபம் ஊற்றப்படும் (வெளி. 14:9,10). இஸ்ரவேல் ஜனத்தை விடுதலை செய்யும் முன்னதாக எகிப்தின்மேல் ஊற்றப்பட்ட வாதைகள், தேவனுடைய ஜனங்கள் கடைசியாக விடுதலை பெறுவதற்குச் சற்று முன்னதாக உலகத்தின்மேல் விழவிருக்கும் மிகப் பயங்கரமான விரிவான நியாயத்தீர்ப்புகளுக்கு ஒத்த கடுமையானவையே. இப்பயங்கரமான சவுக்கடிகளைப்பற்றி விவரிக்கும் வெளிப்படுத்தல்காரர், "மிருகத்தின் முத்திரையைத்தரித்தவர்களும்அதின்சொரூபத்தைவணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று. சமுத்திரத்திலே ... அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின. ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான்; உடனே அவைகள் இரத்தமாயின" (வெளி. 16:2–4) என்கிறார். இப்படிப்பட்ட வாதைகள் கடுமையாக இருப்பதைப்போலவே தேவனுடைய நீதி முழுமையாக நிரூபிக்கப்படுகிறது. தேவதூதன்: "இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர். அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்; அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்" (வெளி. 16:5–6) என்று அறிவிக்கிறான். தேவனுடைய ஜனங்களுக்குக் கொலைத்தண்டனை விதித்ததன்மூலம் அவர்கள் தங்களுடைய கைகளாலேயே தேவனுடைய ஜனங்களின் இரத்தத்தைத் சிந்தியது போன்ற குற்றத்திற்கு உள்ளாகிறார்கள். தீர்க்கதரிசிகளைக் கொலை செய்த நபர்கள் கொண்டிருந்த அதே ஆவியோடு அதே கிரியைகளை செய்ய யூதர்கள் தேடினபடியால், அவர்களை ஆபேலின் நாட்கள் முதல் அனைத்துப் பரிசுத்தவான்களின் இரத்தத்தையும் சிந்தினவர்களென்று கிறிஸ்து குற்றஞ்சாட்டினார். (40)

தொடர்ந்தவாதையில் "தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி" சூரியனுக்கு "அதிகாரங் கொடுக்கப்பட்டது." "மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே" தகிக்கப்பட்டனர் (வெளி. 16:8,9). இந்த வாதையின்போது பூமியின் நிலையை " பூமி துக்கங்கொண்டாடுகிறது; ... வயல்வெளியின் அறுப்பு அழிந்துபோயிற்று. ... வெளியின் செடிகள் எல்லாம் வாடிப்போயின; சந்தோஷம் மனுப்புத்திரரைவிட்டு ஒழிந்துபோயிற்று. விதையானது மண்கட்டிகளின்கீழ் மக்கிப்போயிற்று; பயிர் தீய்ந்து போகிறதினால் பண்டசாலைகள் பாழாகிக் களஞ்சியங்கள் இடிந்துபோயின. மிருகங்கள் எவ்வளவாய்த் தவிக்கிறது; மாட்டுமந்தைகள் தங்களுக்கு மேய்ச்சல் இல்லாததினால் கலங்குகிறது; ... நதிகளில் தண்ணீரெல்லாம் வற்றிப்போயிற்று; அக்கினி வனாந்தரத்தின் மேய்ச்சல்களைப் பட்சித்துப்போட்டது" (யோவேல் 1:10–12, 17–20) என்றும் "அந்நாளிலே தேவாலயப்பாட்டுகள் அலறுதலாக மாறும்; எல்லா இடத்திலும் திரளான பிரேதங்கள் புலம்பலில்லாமல் எறிந்துவிடப்படும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (ஆமோஸ் 8:3) என்றும் தீர்க்கதரிசனங்கள் விவரிக்கின்றன. (41)

இந்த வாதைகள் உலகளாவிய வாதைகளல்ல. இல்லாவிட்டால் பூமியின் மனித இனமே பூண்டற்றுப்போகும். என்றாலும் மனிதர்களுக்கு இதுகாலம்வரை அறிந்திருந்த மற்றெந்த வாதையையும்விட மகா பயங்கரமானவைகளாக இருக்கும். கிருபையின் காலமுடிவிற்கு முன் மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகள் எல்லாவற்றிலுமே தேவனின் இரக்கம் கலந்திருந்தது. முழுமையான தண்டனை பெறுவதிலிருந்து பரிந்துபேசும் கிறிஸ்துவின் இரத்தம் பாவிகளை மறைத்துக்கொண்டது. ஆனால் இந்த கடைசி நியாயத்தீர்ப்பில் இரக்கம் கலவாத கோபம் ஊற்றப்படுகிறது. (42)

அந்நாளில் இதுவரை இழிவாகக் கருதிய தேவனுடைய கிருபையின் மறைவிற்காக திரளானவர்கள் ஏங்குவார்கள். "இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்மல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத் தேட ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசை தொடங்கிக் கீழ்த்திசைமட்டும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற் போவார்கள்" ஆமோஸ் 8:11,12. (43)

தேவனுடைய ஜனங்களுக்கும் வேதனைகள் இல்லாமலிராது. ஆனால், உபத்திரவமும் துயரமும் அனுபவிக்கும் அவ்வேளையிலும்

உணவு இல்லாமல் பசியும் பட்டினியும் அனுபவிக்கும் அவ்வேளையிலும், அவர்கள் அழிந்துபோகும்படி விடப்படமாட்டார்கள். எலியாவைப் போஷித்த அந்த தேவன், சுயத்தைத் தியாகம் செய்த தம் பிள்ளைகளில் எவரையும் தாண்டிப்போகமாட்டார். அவர்களுடைய தலையிலுள்ள மயிர்களை எண்ணியிருப்பவர் அவர்களை விசாரிப்பார். பஞ்ச காலத்தில் அவர்கள் திருப்தியடைவார்கள். துன்மார்க்கர் பசியினாலும் வியாதியினாலும் செத்துக்கொண்டிருக்கும்போது, தூதர்கள் நீதிமான்களைச் சூழ இருந்து அவர்களது தேவைகளைச் சந்திப்பார்கள். நீதியாய் நடக்கிறவனுக்கு "அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்"(ஏசா. 33:16) "சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன்" (ஏசா. 41:17) என்று தேவன் வாக்குத்தத்தம் கொடுக்கிறார். (44)

"அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்"–ஆபகூக் 3:17–18. ()

"கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்" (சங். 121:5–7) "அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார். அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்குவரும் பலனைக் காண்பாய். எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு

நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது" (சங். 91:3–10) என்று வேதாகமம் கூறுகிறது. (46)

ஆனாலும் மனிதனின் பார்வையில் தேவனுடைய ஜனங்கள் தங்களுக்கு முன்னிருந்த இரத்தசாட்சிகளைப்போலவே தங்களுடைய சாட்சியை விரைவாக இரத்தத்தினால் முத்திரிக்கப்போவதுபோலத் தோன்றும். எதிரிகளின் கையினால் விழும்படி தேவன் அவர்களை விட்டுவிட்டார் என்று அவர்களேகூட பயப்படுவார்கள். இது ஒரு பயங்கரமான வேதனை நிறைந்த நேரம். விடுதலைக்காக இரவும் பகலும் அவர்கள் தேவனை நோக்கிக் கதறுவார்கள். துன்மார்கள் பேருவகையோடு, இப்பொழுது உங்கள் விசுவாசம் எங்கே? நீங்கள் உண்மையிலேயே அவருடைய பிள்ளைகளாக இருந்தால் அவர் ஏன் எங்கள் கைகளிலிருந்து உங்களை விடுவிக்கவில்லை? என்கிற ஏளனச் சத்தம் கேட்கப்படும். அந்தச் சமயத்தில் காத்திருப்பவர்கள், இயேசு கல்வாரிச் சிலுவையிலே மடிந்துகொண்டிருந்ததையும் அவரைச் சுற்றிலும் ஆசாரியர்களும் அதிகாரிகளும் நின்று உரத்துக் கேலிபேசி "மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்" (மத்தேயு 27:42) என்று கூறியதை நினைவுகூருவார்கள். யாக்கோபைப்போல அனைவரும் தேவனோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது உள்ளத்தின் வியாகுலங்களை அவர்களுடைய முகங்கள் வெளிக்காட்டும். அவர்கள் முகங்கள் வெளிரிப்போயிருக்கின்றன. என்றாலும் தங்களது உள்ளார்ந்த வேண்டுதலை நிறுத்தமாட்டார்கள். (47)

பரலோகப் பார்வையில் மனிதர்கள் பார்த்தார்களானால் கிறிஸ்துவின் பொறுமையின் வார்த்தையைக் காத்துக்கொண்டிருந்தவர்களைச் சுற்றி வலிமை வாய்ந்த தூதர்கள் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டிருந்திருப்பார்கள். உருக்கமான இரக்கத்துடன் அவர்களுடைய வேதனையை தூதர்கள் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் ஜெபங்களைக் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆபத்திலிருந்து அவர்களை விடுவித்துக்கொண்டு போவதற்கான தங்களுடைய அதிபதியின் கட்டளைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்னும் சற்றுநேரம் காத்திருக்கவேண்டும். தேவ ஜனங்கள் குடிக்கவேண்டிய பாத்திரத்தில் குடித்து, பெறவேண்டிய ஞானஸ்நானத்தைப் பெறவேண்டும். மிகவும் வேதனையான அதே தாமதம்தான் அவர்களுடைய விண்ணப்பத்திற்கான சிறந்த பதில். தேவன் கிரியைசெய்யும்படி விசுவாசத்தோடு காத்திருக்க முயற்சிக்கும்போது, தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் சிறிதே

பயின்றிருந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பொறுமையையும் பயில நடத்தப்படுகிறார்கள். என்றாலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தமாக அந்நாட்கள் குறைக்கப்படும். “அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார்”—லூக்கா 18:7,8. மனிதர்கள் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் விரைவாக முடிவு வரும். களஞ்சியத்தில் சேர்க்கப்படும்படி கோதுமை கதிர்களாகக் கட்டப்படும். களைகளோ அழிக்கும் அக்கினிக்காக கட்டப்படும். (48)

பரலோகக் காவலாளிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையில் உண்மையாயிருந்து தொடர்ந்து காவல்காப்பார்கள். கற்பகைகளைக் கைக்கொள்ளுகிறவர்களை கொலைசெய்யும்படியான நேரத்தை ஒரு பொதுவான சட்டம் குறித்திருந்தாலும், அதை எதிர்பார்த்து, அதற்கு முன்பாகவே சிலருடைய உயிரை எடுக்கும்படியாக எதிரிகள் முயற்சிப்பார்கள். ஆனால் உண்மையான இந்த ஆத்துமாக்களைச் சுற்றிலும் வைக்கப்பட்டிருக்கிற வல்லமையான பாதுகாப்பாளர்களை யாராலும் தாண்டமுடியாது. நகரங்களையும் கிராமங்களையும்விட்டு ஓடும்போது சிலர் எதிரிகளால் தாக்கப்படுவர். ஆனால் அவர்களுக்கு எதிராக உயர்த்தப்பட்ட பட்டயங்கள் ஒரு வைக்கோலைப்போல பெலமின்றி உடைந்து கீழே விழும். மற்றவர்கள் போர்வீரர்களின் தோற்றத்திலிருக்கும் தூதர்களால் பாதுகாக்கப்படுவர். (49)

யுகங்கள் நெடுகிலும் தமது ஜனங்களுக்கு உதவவும் விடுவிக்கவும் தூதர்கள் வழியாக தேவன் செயலாற்றியிருக்கிறார். பரலோகவாசிகள் மனிதர்களது காரியங்களில் குறிப்பிடத்தக்க பங்குவகித்திருக்கிறார்கள். மின்னலைப்போலப் பிரகாசித்த ஆடை தரித்தவர்களாக காணப்பட்டிருக்கிறார்கள். வழிப்போக்கர்களின் உடை தரித்தவர்களாக மனிதர்களுக்குத் தோன்றியிருக்கிறார்கள். தேவமனிதர்களுக்கு தேவதூதர்கள் மனித வடிவில் காணப்பட்டிருக்கிறார்கள். களைப்படைந்தவர்களைப்போல மதியவேளையில் கர்வாலி மரங்களின்கீழ் ஓய்வெடுத்திருக்கிறார்கள். மனிதர்களின் உபசரிப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இரவில் தடுமாறித் தத்தளித்த பயணிகளுக்கு வழிகாட்டிகளாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த கைகளினாலே பலிபீடங்களில் நெருப்பு மூட்டியிருக்கிறார்கள். சிறைச்சாலைகளின் கதவுகளைத் திறந்து தேவ ஊழியர்களை விடுதலை செய்திருக்கிறார்கள். பரலோகக் கவசம் அணிந்தவர்களாக இரட்சகரின்

கல்லறையிலிருந்த கல்லை உருட்டித் தள்ளுவதற்காக வந்திருக்கிறார்கள். (50)

மனித உருவங்களில் நீதிமான்களின் சபைகளில் அடிக்கடி தூதர்கள் பங்கேற்கிறார்கள். சோதோமுக்குப் போனதைப்போல, அவர்கள் செய்கைகளை குறிப்பெடுக்கும்படிக்கும், அவர்கள் தேவனுடைய பொறுமையின் எல்லையை தாண்டிவிட்டார்களா என்பதைத் தீர்மானிக்கும்படிக்கும் அக்கிரமக்காரரின் சபைகளிலும் வருகிறார்கள். தேவன் இரக்கத்தில் பிரியப்படுகிறார். அவருக்கு உண்மையாக ஊழியம் செய்யும் ஒரு சிலர் நிமித்தமாக அழிவுகளைத் தடுத்து, திரளானவர்களின் சமாதானத்தை நீட்டிக்கச் செய்கிறார். தாங்கள் பரியாசம்பண்ணி ஒடுக்க விரும்புகிற உண்மையான சிலருக்கு தங்கள் வாழ்க்கையையே கடன்பட்டிருக்கிறார்கள் என்பதை தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்கள் சிறிதளவே உணருகிறார்கள். (51)

இவ்வுலகின் ஆட்சியாளர்கள் அறியாதிருந்தாலும் அவர்களுடைய ஆலோசனை கூட்டங்களில் தேவதூதர்கள் அடிக்கடி பேசியிருக்கிறார்கள். மனிதர்களின் கண்கள் அவர்களைப் பார்த்திருக்கின்றன. மனிதக் காதுகள் அவர்களது விண்ணப்பங்களை கேட்டிருக்கின்றன. மனித உதடுகள் அவர்களுடைய யோசனைகளை எதிர்த்து ஆலோசனைகளை பரிசாசம் செய்திருக்கின்றன. மனிதக் கைகள் அவர்களை அடித்து அவமானப்படுத்தியிருக்கின்றன. ஆலோசனைக் கூடங்களிலும் நியாயஸ்தலங்களிலும் இப்பரலோக தூதர்கள் மனித சரித்திரத்தில் தங்களுக்குள்ள நெருக்கமான அறிமுகத்தை காண்பித்திருக்கின்றனர். ஒடுக்கப்பட்டவர்களுக்காக மிகத் தகுதிவாய்ந்த பேச்சுத் திறமையான பாதுகாவலர்களைவிட மேன்மையாக வாதாடினவர்களாக தங்களை நிரூபித்திருக்கிறார்கள். தேவனுடைய வேலையைத் தாமதப்படுத்தி அவருடைய ஜனங்களுக்கு மிகுந்த வேதனையைக் கொண்டுவந்திருக்கும் தீமைகளை தடுத்து நோக்கங்களை தோற்கடித்திருக்கிறார்கள். ஆபத்தும் துயரமுமான வேளைகளில் "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர் களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" சங். 34:7. (52)

தங்களது ராஜாவின் வருகையின் அடையாளங்களைப் பேராவலோடு உற்றுப்பார்த்துக்கொண்டு, தேவனுடைய ஜனங்கள் காத்திருக்கிறார்கள். இப்பூமியின் ஜாமக்காரர்களை நோக்கி: "ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது? என்று கூப்பிட்டுக் கேட்க அதற்கு ஜாமக்காரன்: விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது" (ஏசாயா 21:11–12) என்கிறான். மலைகளுக்கு மேலாக மேகங்களில் வெளிச்சம் மின்னுகிறது. சீக்கிரமே தேவனுடைய மகிமை வெளிப்படப்போகிறது. நீதியின் சூரியன்

பிரகாசிக்கவிருக்கிறார். விடியற்காலையும் இரவும்—நீதிமான்களுக்கு முடிவில்லாத பகலும் துன்மார்க்கருக்கு நித்திய இரவும் சமீபத்திலிருக்கின்றன. (53)

போராடிக்கொண்டிருப்பவர்கள் தங்களது விண்ணப்பத்தை தேவனிடம் வைத்துக்கொண்டே இருக்கும்போது பார்க்கக் கூடாதவைகளிலிருந்து அவர்களைப் பிரித்திருந்த திரை கிட்டத்தட்ட முற்றிலும் விலக்கப்படுகிறது. நித்தியப் பகலின் விடியற்காலை வெளிச்சத்தில் பரலோகம் பிரகாசிக்க தூதர்களின் பாடல்களின் இனிமையில் “உங்கள் விசுவாசத்தில் உண்மையாக நில்லுங்கள். உதவி வந்துகொண்டிருக்கிறது” என்கிற வார்த்தைகள் அவர்கள் காதுகளில் ஒலிக்கின்றன. வல்லவரும் வெற்றி வீரருமாகிய கிறிஸ்து களைத்துச் சோர்ந்துபோயிருக்கும் தமது வீரர்களுக்கு மங்காத மகிமையான கிரீடத்தை உயர்த்திக் காண்பிக்கிறார். பாதி திறந்திருக்கும் வாசலிலிருந்து: “இதோ நான் உங்களோடு இருக்கிறேன். பயப்படாதேயுங்கள். உங்கள் துக்கங்களோடெல்லாம் அறிமுகமாகியிருக்கிறேன். உங்களது துயரங்களை நான் சுமந்திருக்கிறேன். பரீட்சிக்கப்படாத எதிரிகளோடு நீங்கள் யுத்தம்பண்ணவில்லை. உங்கள் சார்பாக நான் யுத்தம்பண்ணி யிருக்கிறேன். என் நாமத்தில் நீங்கள் முற்றிலும் ஜெயங் கொள்ளுகிறவர்களயிருக்கிறீர்கள்” என்று அவருடைய சத்தம் வருகிறது. (54)

நமக்கு தேவைப்படுகிற நேரத்தில் அருமை இரட்சகர் உதவி அனுப்பித் தருவார். பரலோகத்திற்கான பாதை அவரது அடிச்சுவடுகளால் சுத்தப்படுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய பாதங்களை காயப்படுத்தும் ஒவ்வொரு முள்ளும் அவருடைய பாதத்தை காயப்படுத்தியிருக்கின்றன. சுமக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிற நம்முடைய ஒவ்வொரு சிலுவையையும் அவர் நமக்கு முன்பாகவே சுமந்திருக்கிறார். ஆத்துமாவை சமாதானத்திற்கு ஆயத்தப்படுத்தும்படிக்கே ஆண்டவர் போராட்டங்களை அனுமதிக்கிறார். இக்கட்டுக்காலம் தேவனுடைய ஜனங்களுக்கு பயப்படத்தக்க சோதனை நேரம்தான். ஆனால் உண்மையான விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் தலைகளை உயர்த்தி வாக்குத்தத்தத்தின் வில் அவரைச் சூழ்ந்து இருப்பதை விசுவாசத்தினாலே காண்கிற நேரம். (55)

“அப்படியே கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்பிவருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்; சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின

கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்? இடுக்கண்செய்கிறவன் அழிக்க ஆயத்தமாகிறபோது, நீ அவனுடைய உக்கிரத்துக்கு நித்தம் இடைவிடாமல் பயப்படுகிறதென்ன? இடுக்கண்செய்கிறவனுடைய உக்கிரம் எங்கே? சிறைப்பட்டுப்போனவன் தீவிரமாய் விடுதலையாவான்; அவன் கிடங்கிலே சாவதுமில்லை, அவனுடைய அப்பம் குறைவுபடுவதுமில்லை. உன் தேவனாயிருக்கிற கர்த்தர் நானே, அலைகள் கொந்தளிக்கத்தக்கதாய்ச் சமுத்திரத்தைக் குலுக்குகிற சேனைகளின் கர்த்தர் என்கிற நாமமுள்ளவர். நான் வானத்தை நிலைப்படுத்தி, பூமியை அஸ்திபாரப்படுத்தி, சீயோனை நோக்கி: நீ என் ஜனமென்று சொல்வதற்காக, நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்”—ஏசா. 51:11–16. (56)

“ஆகையால் சிறுமைப்பட்டவளே, மதுபானங்குடியாமல் வெறி கொண்டவளே, நீ கேள். கர்த்தராகிய உன் ஆண்டவரும் தம்முடைய ஜனத்துக்காக வழக்காடப்போகிற உன் தேவனுமானவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, தத்தளிப்பின் பாத்திரத்தை உன் கையிலிருந்து நீக்கிப்போடுகிறேன், இனி என் உக்கிரத்தினுடைய பாத்திரத்தின் வண்டல்களை நீ குடிப்பதில்லை. உன்னை நோக்கி: நாங்கள் கடந்து போகும்படிக்குக் குனியென்றுசொல்லி, கடந்துபோகிறவர்களுக்கு நீ உன் முதுகைத் தரையும் வீதியுமாக்கும்படி, உன்னைச் சஞ்சலப்படுத்தினவர்களின் கையில் அதைக் கொடுப்பேன் என்றார்”—ஏசா. 51:21–23. (57)

தேவனுடைய கண்கள் யுகங்கள் நெடுகிலும் பார்த்தபோது, அவருடைய ஜனங்கள் சந்திக்கவேண்டியிருந்த இக்கட்டின் மேல்— அவர்களுக்கு எதிராக பூலோக வல்லமைகள் அணிவகுத்து நிற்கும் இக்கட்டின் மேல் பதிந்தது. சிறைப்பிடிக்கப்பட்டு கடத்தப்பட்டவர்களைப்போல பட்டினியினாலும் கொடுமையினாலும் அவர்கள் மரணபயத்தில் இருப்பார்கள். ஆனால் இஸ்ரவேலுக்கு முன்பாக செங்கடலைப் பிளந்த பரிசுத்தமானவர் தமது மகா வல்லமையை வெளிக்காட்டி அவர்களுடைய சிறையிருப்பை மாற்றிப்போடுவார். “என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்”— மல். 3:17. கிறிஸ்துவின் உண்மையான சாட்சிகளின் இரத்தம் இப்போது சிந்தப்பட்டால், அது தேவனுக்கு அறுவடையை ஆயத்தம்பண்ணும்படி விதைக்கப்பட்ட இரத்தசாட்சிகளின் இரத்தத்தைப்போலிராது. அவர்களுடைய உறுதி, மற்றவர்களுக்கு சத்தியத்தை உணர்த்தும் சாட்சியாக இருக்காது.

ஏனெனில் மூர்க்கமான இருதயம் மீண்டும் திரும்பி வராத அளவிற்கு கிருபையின் அலைகளை திருப்பி அனுப்பி விட்டது. நீதிமான்கள் இப்போது சத்துருக்களின் கைகளில் இரையாக விழும்படி விட்டுவிடப்பட்டால் அது அந்தகார பிரபுவிற்கு ஒரு வெற்றியாக இருக்கும். "தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்" (சங். 27:5) என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். "என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள். இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுவருவார்" (ஏசா. 26:20, 21) என்று கிறிஸ்து சொல்லுகிறார். அவருடைய வருகைக்காகப் பொறுமையுடன் காத்திருந்த ஜீவப் புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டிருக்கிறவர்களின் விடுதலை மகிமையானதாயிருக்கும். (58) ★

# 40

# விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்...!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 635–652)**

தேவனுடைய கட்டளைகளை கனப்படுத்தினவர்களிடமிருந்து மனித சட்டங்களின் பாதுகாப்பு விலக்கப்படும்பொழுது, உலகின் வெவ்வேறு பகுதிகளிலும் அவர்களை அழித்துப்போடுவதற்கென்ற இயக்கங்கள் தோன்றும். கட்டளையில் குறிக்கப்பட்ட நேரம் நெருங்கிவரும்போது, வெறுக்கப்பட்ட கூட்டத்தினரை அழித்துப்போட மக்கள் சதித்திட்டங்களைத் தீட்டுவார்கள். எப்படி என்று ஆலோசிப்பார்கள். இணங்காததும் கடிந்து கொள்ளுகிறதுமான சத்தத்தை முழுமையாக மௌனப்படுத்திடும் தீர்க்கமான ஒரு அடியை குறிக்கப்பட்ட ஒரே இரவில் அடிக்க தீர்மானிக்கப்படும். (1)

உலகின் ஒவ்வொரு பகுதியிலும் பிசாசுகளால் தூண்டப் பட்ட ஆயுதமணிந்த மனிதர்கள் அழித்துப்போடுவதற்கென்று ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்போது, தேவனுடைய ஜனங்களில் சிலர் சிறைச்சாலைகளிலும் சிலர் காடுகளிலும் மலைகளிலும் மறைவான இடங்களிலுமிருந்து தெய்வீகப் பாதுகாப்பிற்காக இன்னமும் மன்றாடிக்கொண்டிருப்பார்கள். இப்போது, முடிவின் உச்சநிலையான இந்த வேளையில் தான் தெரிந்துகொண்டவர்களின் விடுதலைக்காக இஸ்ரவேலின் தேவன் குறுக்கிடுவார். “பண்டிகை ஆசரிக்கப் படும் இராத்திரியிலே பாடுகிறதுபோலப் பாடுவீர்கள்; கர்த்தருடைய பர்வதமாகிய இஸ்ரவேலின் கன்மலையண்டைக்குப்போக நாகசுரத்தோடே நடந்து வருகிறபோது மகிழுகிறதுபோல மகிழுவீர்கள். கர்த்தர் மகத்துவமானவர்; தமது சத்தத்தைக் கேட்கப்பண்ணி, உக்கிர கோபத்தினாலும், பட்சிக்கிற அக்கினிஜுவாலையினாலும், இடி பெருவெள்ளம் கல்மழையினாலும், தமது புயத்தின் வல்லமையைக் காண்பிப்பார்” (ஏசாயா. 30:29,30) என்று கர்த்தர் கூறுகிறார். (2)

வெற்றிக்கூச்சலோடும் ஏளனப்பேச்சோடும் சாபங்களோடும் தீயவர் களின் கூட்டம் தங்களுடைய இறையின்மேல் பாயும்நேரம், இதோ ஒரு கனத்த இருள், நடு இரவையும் விட ஆழ்ந்த இருள் பூமியின்மேல் வந்து கவியும். பின்னர் தேவனுடைய சிங்காசனத்தின் மகிமையோடு பிரகாசிக்கிற ஒரு வானவில், ஆகாயம் முழுவதையும் வளைத்து நின்று, ஜெபித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு கூட்டத்தையும் சூழ்ந்துகொள்ளும். வெறிபிடித்த கூட்டம் சடுதியாக நிறுத்தப்படுகிறது. அவர்களுடைய ஏளனக்கூச்சல்கள் மறைந்துபோகிறது. அவர்களுடைய கொலைவெறியின் குறிக்கோள்கள் மறந்துபோயின. பயங்கரமான எச்சரிப்புகளோடு தேவனுடைய உடன்படிக்கை யின் அடையாளத்தைக் கூர்ந்துபார்த்து, மிஞ்சின வல்லமையோடிருக்கிற அதன் பிரகாசத்திலிருந்து மறைக்கப்படும்படி ஏங்குவார்கள். (3)

தேவபிள்ளைகளால் "மேலே பார்" என்கிற தெளிவான இனிமையான ஒரு குரல் கேட்கப்படும். தங்கள் கண்களை ஆகாயத்தை நோக்கி உயர்த்தி அங்கே உடன்படிக்கையின் வானவில்லைக் காண்பார்கள். ஆகாயத்தை மூடியிருந்த கருத்துக் குமுறிக்கொண்டிருந்த மேகங்கள் விலகுகின்றன. ஸ்தேவானைப்போல வானத்தை நிலையாகப் பார்த்து, அங்கே ஆண்டவருடைய மகிமையையும் மனுஷகுமாரன் தமது சிங்காசனத்தில் வீற்றிருப்பதையும் காண்கிறார்கள். அவருடைய தெய்வீக உடம்பில் தாழ்மையின் சின்னங்களை கண்டு, அவருடைய உதடுகளிலிருந்து "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" (யோவான் 17:24) என்கிற தமது கோரிக்கையை அவர் பிதாவின் முன்பாகவும் பரிசுத்த தூதர்களின் முன்பாகவும் வைப்பதைக் கேட்கிறார்கள். மறுபடியும் இனிமையான வெற்றித்தொனியில் "பரிசுத்தமும் தீங்கற்ற தீட்டுப்படாதவர்களாகவும் அவர்கள் வருகிறார்கள்! அவர்கள் வருகிறார்கள்! அவர்கள் என்னுடைய பொறுமையின் வார்த்தையைக் காத்துக்கொண்டார்கள். அவர்கள் தூதர்களுக்கு மத்தியிலே நடப்பார்கள்" என்று சொல்லும் ஒரு குரல் கேட்கிறது. தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டவர்களுடைய வெளுத்துப்போன நடுங்கும் உதடுகள் வெற்றித்தொனியை எழுப்புகிறது. (4)

தனது ஜனங்களை விடுவிப்பதற்காக தேவன் தமது வல்லமைகளை நடு இரவில் வெளிப்படுத்துகிறார். சூரியன் தனது முழுவல்லமையோடும் பிரகாசித்துக் காணப்படுகிறது. அடையாளங்களும் அற்புதங்களும் துரிதகதியில் அடுத்தடுத்து பின்தொடருகிறது. நீதிமான்கள் தாங்கள் விடுவிக்கப்படுவதன் அடையாளங்களை பக்தி கலந்த மகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருக்கும்போது, துன்மார்க்கர் இக்காட்சிகளைத் திகிலோடும்

வியப்போடும் காண்பார்கள். இயற்கையின் ஒவ்வொன்றும் வழக்கத்திற்கெதிராக திரும்பினதுபோல காணப்படுகிறது. ஓடிக்கொண்டிருந்த அருவிகள் நின்றுபோகின்றன. கனமான கார்மேகங்கள் மேலெழும்பி ஒன்றோடொன்று மோதுகின்றன. மூர்க்கமான வானத்தின் மத்தியிலே, விவரிக்கமுடியாத மகிமைபொருந்திய ஒரு தெளிவான இடத்திலிருந்து, பெருவெள்ள இரைச்சலைப் போன்று "ஆயிற்று" என்று சொல்லிய தேவனுடைய சத்தம் பிறக்கிறது. (5)

அந்த குரல் வானத்தையும் பூமியையும் அசைக்கிறது. "பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை" –வெளி. 16:18. ஆகாயம் திறப்பதுபோலவும் மூடுவதுபோலவும் தோன்றுகிறது. தேவனுடைய சிங்காசனத்திலிருந்து மகிமை அதன்வழியே பாய்ந்து வருவதுபோலத் தோன்றுகிறது. மலைகள் காற்றில் நாணல் அசைவது போல அசைகின்றன. கரடுமுரடான பாறைகள் எல்லாத் திசைகளிலும் தூக்கியெறியப்படுகின்றன. வரவிருக்கும் புயலின் கர்ஜனையைப் போன்ற குமுறல். கடல் சீறி அடிக்கிறது. அழிவுவேலையில் ஈடுபட்டிருக்கும் பிசாசுகளின் சத்தத்தைப்போல் சூறாவளிக் காற்று கிறீச்சிடுகிறது. கடலின் அலைகளைப்போல பூமி இடம்பெயர்கிறது. அதன் பரப்பு பிளக்கிறது. அதன் அஸ்திபாரங்கள் முதலாய் காணப்படுவதுபோல் தெரிகிறது. தொடர் மலைகள் அமிழ்கின்றன. குடியிருந்த தீவுகள் மறைந்துபோகின்றன. சோதோமைப்போலாகியிருந்த துறைமுகப் பட்டணங்கள் பொங்கியெழும் கடலலைகளால் விழுங்கப்படுகின்றன. "மகாபாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்குமுன்பாக நினைப்பூட்டப்பட்டது"–வெளி. 16:19,21. தாலந்து நிறையாக பெரிய கல்மழையும் தன்னுடைய அழிவுவேலையை நடப்பித்துக்கொண்டிருக்கிறது. பூமியின் பெருமையான பட்டணங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. உலகின் பெரிய மனிதர்கள் தங்களை மகிமைப்படுத்தும்படியாக தமது செல்வங்களையெல்லாம் செலவழித்துக்கட்டிய செருக்கான அரண்மனைகள் அவர்களது கண்களுக்கு முன்பாக நொறுங்கித் தூசியைப்போல விழுகின்றன. சிறைச்சாலைகளின் சுவர்கள் தகர்ந்து விழுகின்றன. அங்கே தங்களது விசுவாசத்திற்காகச் சிறைவைக்கப்பட்டிருந்த தேவனுடைய ஜனங்கள் விடுவிக்கப்படுகிறார்கள். (6)

கல்லறைகள் திறக்கப்படுகின்றன. "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும்" விழித்து எழுந்திருக்கிறார்கள் –

தானி. 12:2. மூன்றாம் தூதனுடைய தூதைக் குறித்த விசுவாசத்தில் மரித்துப்போன அனைவரும், தேவன் தமது பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தவர்களோடு செய்யும் சமாதான உடன்படிக்கையைக் கேட்கும்படி மகிமையடைந்தவர்களாக கல்லறையைவிட்டு வெளியே வருகிறார்கள். "அவரைக் குத்தினவர்களும்"(வெளி. 1:7)—கிறிஸ்துவின் மரண வேதனையை பரியாசம்பண்ணி ஏளனம்பண்ணினவர்களும், சத்தியத்தையும் அவரது பிள்ளைகளையும் தீவிரமாக எதிர்த்தவர்களும் அவருடைய மகிமையில் அவரைக் காணவும், உண்மையாக கீழ்ப்படிந்தவர்கள்மேல் வைக்கப்படும் கனத்தைக் காணவும் எழுப்பப்படுகிறார்கள். (7)

அடர்ந்த மேகங்கள் வானில் இன்னும் இருக்கும். ஆனாலும் சூரியன் அவ்வப்போது வெளிவந்து பழிவாங்கும் யேகோவாவின் கண்களைப் போல தோற்றமளிக்கும். கடும் மின்னல்கள் வானத்திலிருந்து வந்து உலகத்தைத் தீச்சுவாலையில் வளைத்துப்பிடிக்கும். பயங்கரமான இடி முழக்கத்திற்குமேல் மர்மமானதும் கலங்கப்பண்ணுகிறதுமான குரல்கள் எழும்பி துன்மார்க்கரின் கதியை அறிவிக்கும். பேசப்பட்ட அந்த வார்த்தைகள் எல்லோராலும் புரிந்துகொள்ளப்படவில்லை. என்றாலும் கள்ளப்போதகர்களால் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளப்படும். சற்று நேரத்திற்கு முன்பு அலட்சியத் தோடிருந்த, பெருமையோடு இணக்கமற்றிருந்த, தேவனுடைய கற்பனை களைக் கைக்கொள்ளுகிறவர்களுக்குச் செய்த கொடுமையில் பெருமகிழ்ச்சி கொண்டிருந்தவர்கள் இப்பொழுது திகிலால் மூழ்கடிக்கப்பட்டு, பயத்தால் நடுங்குகிறார்கள். அவர்களின் புலம்பல்கள் இயற்கையின் சத்தங்களுக்கும் மேலாகக் கேட்கிறது. மனிதர்கள் கிருபைக்காக விண்ணப்பம்செய்து பரிதாபகரமான பயத்தினால் தாழவிழுந்துகொண்டிருக்க, பிசாசுகள் கிறிஸ்துவின் தெய்வீகத்தை அறிக்கையிட்டு, அவருடைய வல்லமைக்கு முன்பாக நடுங்கிக்கொண்டிருக்கின்றன. (8)

தேவனுடைய நாளை பரிசுத்த தரிசனத்தில் கண்ட அந்தக்காலத் தீர்க்கதரிசிகள்: "அலறுங்கள், கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது; அது சர்வவல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய் வரும்" (ஏசா. 2:10–12) என்றும், "கர்த்தரின் பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, நீ கன்மலையில் ஒதுங்கி, மண்ணில் ஒளித்துக்கொள். நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும், மனுஷரின் வீறாப்பும் தணியும்; கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார். எல்லாம் தாழ்த்தப்படும்பொருட்டுச் சேனைகளுடைய கர்த்தரின் நாளானது பெருமையும் மேட்டிமையுமானவை எல்லாவற்றின்மேலும், உயர்ந்தவை எல்லாவற்றின்மேலும் … வரும்" "பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் அந்நாளிலே, அவருடைய

பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் வெடிப்புகளிலும் குன்றுகளின் சந்துகளிலும் புகுந்துகொள்ளும்படிக்கு, மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன்விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான்" (ஏசா. 2:10–12 20–21) என்றும் சொல்லியிருக்கின்றனர். (9)

இருட்டோடு ஒப்பிடும்போது, நான்குமடங்கு பிரகாசமான ஒரு நட்சத்திரம் மேகங்களிடையே உண்டான ஒரு இடைவெளி வழியாக பிரகாசிக்கிறது. அது உண்மையானவர்களுக்கு நம்பிக்கையையும் மிகிழ்ச்சியையும் கொடுக்க, கடவுளுடைய பிரமாணங்களை மீறினாவர்களுக்கோ கடுமையையும் கோபாக்கினையையும் வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவிற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்தவர்கள் தேவனுடைய கூடாரத்தில் ஒளிக்கப்பட்டவர்களைப்போல பாதுகாப்பாக இருக்கிறார்கள். அவர்கள் சோதிக்கப்பட்டு உலகத்தின் முன்பாகவும் சத்தியத்தை நிராகரித்தவர்கள் முன்பாகவும் தங்களுக்காக மரித்தவருக்கு உறுதியாயிருந்ததை வெளிக்காட்டியிருக்கிறார்கள். மரணத்தின்முன்பும் தங்கள் உண்மையைப் பற்றிக்கொண்டிருந்தவர்கள் மேல் அற்புதமான மாற்றம் வந்திருக்கிறது. பிசாசுகளைப்போல மாறியிருந்த மனிதர்களின் பயங்கரமாக இருண்ட கொடுமையிலிருந்து திடீரென விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். சற்று முன்பு வெளிரியும் ஏக்கத்தோடும் தளர்ந்தும் போயிருந்த அவர்களுடைய முகங்கள் இப்பொழுது அதிசயத்தாலும் விசுவாசத்தாலும் அன்பாலும் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய குரல்கள் "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்" (சங். 46:1–3) என்ற ஜெயகீதத்தினால் உயர்கிறது. (10)

இப்படிப்பட்ட பரிசுத்த நம்பிக்கையை வெளிப்டுத்தும் வார்த்தைகள் மேலே தேவனிடத்திற்குச் செல்லும்போது மேகங்கள் விலகி நட்சத்திரங்கள் நிறைந்த வானம், இருபக்கமும் இருக்கிற கருத்த மூர்க்கமான ஆகாயத்திற்கு நேரெதினான மகிமையோடு காணப்படுகிறது. திறந்திருக்கிற கதவுகளின் வழியாக வானலோக நகரத்தின் மகிமை வருகிறது. அப்பொழுது வானத்திலே ஒன்றாக மடிக்கப்பட்ட இரண்டு கற்பலகைகளைப் பிடித்துகொண்டிருக்கிற ஒரு கை தோன்றுகிறது. "வானங்கள் அவருடைய நீதியை அறிவிக்கும்; தேவனே நியாயாதிபதி" (சங். 50:6) என்று தீர்க்கதரிசி கூறுகிறான்.

இடிமுழக்கத்திற்கும் நெருப்பிற்கும் மத்தியில் வாழ்க்கையின் வழிகாட்டியாக சீனாய் மலையிலிருந்து அறிவிக்கப்பட்ட தேவனுடைய நீதியாகிய அந்த பரிசுத்த பிரமாணங்கள், நியாயத்தீர்ப்பின் சட்டமாக மனிதனுக்கு இப்பொழுது வெளிப்படுத்தப்படுகிறது. அந்தக் கை அந்தப் பலகைகளைத் திறக்கிறது. அங்கே பத்துப்பிரமாணங்கள் நெருப்பால் எழுதப்பட்ட எழுத்துக்களாகத் தெரிகின்றன. அந்த வார்த்தைகள் மிகத் தெளிவாக இருக்கின்றன ... மனம்வருந்தி மாறிக்கொள்ளுவதற்கு தருணம் இருந்தபோதே தங்களுடைய குணங்களை அதோடு ஒப்பிட்டு தங்களின் குறைகளை அறிந்திருக்கலாம். ஆனால் உலகத்தின் தயவைப் பெறுவதற்காக அந்த பிரமாணங்களை தள்ளிவைத்து மீறும்படியாக மற்றவர்களுக்கும் போதித்தார்கள். ஓய்வுநாளை பரிசுத்த குலைச்சலாக்கும்படி தேவனுடைய ஜனங்களையும் கட்டாயப்படுத்த முயற்சித்தார்கள். தாங்கள் புறக்கணித்த அந்த பிரமாணத்தினாலேயே இப்போது கண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். போக்குச்சொல்லக்கூடாத வர்களாக இருப்பதை பயங்கரமான சூழ்நிலையில் தெளிவாகக் காண்கின்றனர். யாருக்கு ஊழியம்செய்து யாரைத் தொழுதுகொள்ளுவோம் என்பதை அவர்கள் தெரிந்துகொண்டார்கள். "அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்"–மல். 3:18. (11)

போதகர்களிலிருந்து கடைசி நபர் வரை தேவனுடைய பிரமாணங் களுக்கு எதிரிகளாக இருந்தவர்கள், சத்தியத்தையும் கடமையையும் குறித்த புதிய அறிவைப் பெறுகின்றனர். நான்காம் பிரமாணத்தின் ஓய்வுநாளே ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை என்கிறதை அவர்கள் மிகவும் காலங்கடந்தபின் காண்கிறார்கள். போலியான ஓய்வுநாளின் உண்மையான தன்மையையும் மணலின்மேல் அஸ்திவாரம் போட்டதையும் அவர்கள் மிகவும் காலங்கடந்து காண்கிறார்கள். தேவனுக்கு எதிராக யுத்தம் செய்துகொண்டிருந்ததை அறிகிறார்கள். பரலோகத்தின் வாசலுக்கு நடத்திச்செல்லுவதாகக் கூறிக்கொண்ட மதபோதகர்கள், ஆத்துமாக்களை அழிவுக்கு நடத்தியிருக்கிறார்கள். பரிசுத்த ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் பொறுப்பு எவ்வளவு பெரியது என்பதையும், அதற்கு உண்மையாயிராதபோது அதன் விளைவுகள் எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்பதையும் கடைசியாகக் கணக்குக்கொடுக்கும்வரை அறிந்துகொள்ளமுடியாது. ஒரு தனிப்பட்ட ஆத்துமாவின் இழப்பு எவ்வளவு என்பதை நித்தியத்தில் தான் நாம் சரியாக நிதானிக்கமுடியும். பொல்லாத ஊழியக்காரனே என்னைவிட்டு அகன்று போ என்று யாரைப்பார்த்து தேவன் சொல்லுவாரோ அவனுடைய கதி மிகவும் பயங்கரமானதாக இருக்கும். (12)

இயேசுவுடைய வருகையின் நாளையும் நேரத்தையும், தமது ஜனங்களுக்கு நித்திய உடன்படிக்கையையும் அறிவிக்கும் தேவனுடைய குரல் பரலோகத்திலிருந்து கேட்கிறது. இடிமுழக்க ஓசையைப்போல அவருடைய வார்த்தைகள் உலகத்தில் உருண்டோடும். தேவனுடைய இஸ்ரவேலர்கள் பார்வையை மேலே பதித்தவர்களாக கவனிக்கிறார்கள். அவர்களது முகங்கள் அவருடைய மகிமையால் ஒளிர்ந்து, சீனாய் மலையிலிருந்து மோசே இறங்கி வந்தபோது அவனுடைய முகம் பிரகாசித்ததைப்போல பிரகாசிக்கும். துன்மார்க்கரால் அவர்களைப் பார்க்கக்கூடாது. ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரித்து அதன்மூலம் அவரை கனப்படுத்தினவர்களை ஆசீர்வதிக்கும் சொல்லப்படும்போது, பலத்த வெற்றி முழக்கம் எழும்புகிறது. (13)

விரைவில் கீழ்த்திசையில் கையளவான சிறிய கறுத்த மேகம் தோன்றுகிறது. அது வெகுதூரத்தில் இருண்டதாக காட்சியளிக்கிற இரட்சகரைச் சூழ்ந்திருக்கும் மேகம்தான். இதுதான் மனுஷகுமாரனுடைய அடையாளம் என்பது தேவனுடைய ஜனங்களுக்குத் தெரியும். பூமிக்கு அருகில் வரவர பிரகாசமாகவும் மிகுந்த மகிமையாகவும் ஆகிக்கொண்டிருக்கிற அது, மிகப்பெரிய வெண்மேகமாகி, அதன் அடிப்பாகம் பட்சிக்கிற அக்கினிக்கு ஒப்பான மகிமையடைந்து, அதற்கு மேல் உடன்படிக்கையின் வில் காணப்படும்வரை அவர்கள் பவித்திரமான அமைதியோடு அதைக் கூர்ந்து கவனிப்பார்கள். இயேசு பராக்கிரமமுள்ள வெற்றிவீரராக பவனி வருகிறார். அவமானமும் ஆபத்தும் நிறைந்த கசப்பான பாத்திரத்திலிருந்து குடிக்கிற துக்கமுள்ளவராக அல்ல, வானத்திலும் பூமியிலும் வெற்றிபெற்றவராக ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க அவர் வருகிறார். உண்மையும் சத்தியமுமுள்ளவராக, நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறவராக அவர் வருகிறார். பரலோகத்திலுள்ள சேனைகள் அவருக்குப் பின்சென்றார்கள் (வெளி. 19:11,14). பரலோக கீதங்களின் இனிமையோடு எண்ணக்கூடாத திரளான பரிசுத்த தூதர்கள் அவருடனேகூட வருகிறார்கள். ஆயிரம்ஆயிரமாகவும் பதினாயிரம் பதினாயிரமாகவும் உள்ள ஒளிமிகுந்த தேவதூதர்களால் வானமே நிறைந்துவிட்டதுபோல் காணப்படுகிறது. எந்த மனித எழுதுகோலும் அக்காட்சியை விவரிக்கமுடியாது. அதன் மாட்சியை அழியக்கூடிய மனிதனின் மனதினால் கற்பனைசெய்துகூடப் பார்க்கமுடியாது. “அவருடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது; அவர் துதியினால் பூமி நிறைந்தது. அவருடைய பிரகாசம் சூரியனைப் போலிருந்தது; அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின; அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்திருந்தது”–ஆபகூக் 3:3,4. அந்த ஜீவனுள்ள மேகம் இன்னும் அருகில் வரும்போது ஜீவாதிபதியானவரை

பூமியிலுள்ள ஒவ்வொரு கண்ணும் காணுகிறது. புனிதமான அவரது தலையைக் இப்பொழுது எந்த முள்முடியும் கெடுக்கவில்லை. மாறாக, ஒரு மகிமையான மகுடம் அவரது புனிதமான நெற்றிக்கு மேலாக இருக்கிறது. அவருடைய முகத்தின் பிரகாசம் கண்ணைக் கூசச்செய்யும் நண்பகல் சூரியனையும் மிஞ்சுவதாக இருக்கிறது. "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது"—வெளி. 19:16. (14)

அவருடைய பிரசன்னத்திற்கு முன்பாக முகங்களெல்லாம் மாறி வெளுத்திருக்கின்றன (எரே. 30:6). தேவனுடைய இரக்கத்தை தள்ளினவர்கள்மேல் நித்திய அழிவைக் குறித்த பயம் விழுகிறது. "மனம் கரைந்து போகிறது; முழங்கால்கள் தள்ளாடுகிறது; எல்லா இடுப்புகளிலும் மிகுந்த வேதனை உண்டு; எல்லாருடைய முகங்களும் கருகிப்போகிறது"—நாகூம் 2:10. நீதிமான்களும் நடுக்கத்தோடு "யார் நிலைநிற்கக்கூடும்" என்று கதருகிறார்கள். தூதர்களின் பாடல் நின்றுபோகிறது. பயங்கரமான அமைதி அங்கே உண்டாகிறது. பின்னர் "என் கிருபை உனக்குப் போதும்" என்கிற இயேசுவின் குரல் கேட்கிறது. நீதிமான்களின் முகங்கள் ஒளிருகிறது. ஒவ்வொரு இருதயத்தையும் மகிழ்ச்சி நிரப்புகிறது. பின்னர் தூதர்கள் அடுத்த ஸ்வரத்தில் பாடத்துவங்கி, பூமியை நெருங்க நெருங்க மீண்டும் பாடுகின்றனர். (15)

ராஜாதி ராஜா மேகத்தின்மேல் அமர்ந்தவராக நெருப்பு ஜுவாலையால் சூழப்பட்டவராக இறங்கிவருகிறார். வானங்கள் புத்தக சுருளைப்போல சுருண்டுபோகின்றன. பூமி அவருக்கு முன்பாக நடுங்குகிறது. "நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும். அவர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் கூப்பிடுவார்"—சங். 50:3,4. (16)

"பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக் கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்"—வெளி. 6:15–17. (17)

இகழ்ச்சியான கேலிகள் நின்றுபோயின. பொய் உதடுகள் அமைதியாயின. ஆயுதங்களின் ஒலிகளும் யுத்த சந்தடிகளும் "அமளியாய் யுத்தம்பண்ணுகிற வீரருடைய ஆயுதவர்க்கங்களும், இரத்தத்தில் புரண்ட உடுப்பும்" அடங்கின. விண்ணப்பங்களின் குரலையும் அழுகையின் புலம்பலையும் தவிர வேறு எதுவும் கேட்கவில்லை. சற்றுமுன்புவரை பரியாசம்செய்த உதடுகளிலிருந்து " அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும்" என்ற புலம்பலே புறப்படுகிறது. தாங்கள் புறக்கணித்து ஒதுக்கினவரின் முகத்தைச் சந்திப்பதற்குப் பதிலாக மலைகளின் கீழாக புதைக்கப்படும்படி துன்மார்க்கர் விண்ணப்பிக்கிறார்கள். (18)

மரித்தோரின் காதுகளை துளைக்கும் குரலை அவர்கள் அறிவார்கள். எத்தனை முறை அதன் தெளிவான இரக்கமான குரல் மனந்திரும்பும்படியாக அவர்களை அழைத்திருக்கிறது. ஒரு நண்பன் ஒரு சகோதரன் ஒரு இரட்சகனுடைய உருக்கமான வேண்டுதல்களில் எத்தனை முறை அந்தக்குரலைக் கேட்டிருக்கிறார்கள்! அவருடைய கிருபையை நிராகரித்தவர்களுக்கு "உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும்" (எசே. 33:11) என்று அதிக காலம் அவர்களிடம் மன்றாடின அந்தக் குரலைப்போல வேறு எதுவும் கண்டிப்பு நிறைந்ததாக—கண்டனத்தால் பாரமடைந்ததாக இருக்காது. ஓ! அது அவர்களுக்கு அந்நியனின் சத்தமாக இருந்தது! "நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள்; நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்துகொள்ளுதலை வெறுத்தீர்கள்" (நீதி. 1:24,25) என்று இயேசு சொல்லுகிறார். நிராகரித்த எச்சரிப்புகள், மறுத்துவிட்ட அழைப்புகள், அற்பமாய் எண்ணப்பட்ட வாய்ப்புகள்—அவர்களால் அழிக்கமுடியாத இவைகளை அக்குரல் அவர்கள் நினைவிற்குக் கொண்டுவரும். (19)

கிறிஸ்துவின் தாழ்மையில் அவரை கேலிபேசியவர்கள் அங்கே இருக்கிறார்கள். பிரதான ஆசாரியனால் நெருக்கப்பட்டபோது "மனுஷ குமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 26:64) என்று வேதனையில் கிறிஸ்து சொன்ன வார்த்தைகள் சிலிர்க்கவைக்கும் வல்லமையோடு அவர்கள் மனதிற்கு வரும். இப்போது அவர்கள் அவரை மகிமையில் காண்கிறார்கள். சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதை இனிமேல்தான் காண்பார்கள். (20)

தாம் தேவகுமாரன் என்று அவர் கூறியதைக் கேட்டு பரிகாசம் செய்தவர்கள் இன்று பேச்சற்று நிற்கிறார்கள். தான் யூதர்களின் ராஜா என்று இயேசு சொன்னதைக் கேட்டு இகழ்ந்து பரிகசித்த சேவகரிடம் அவரை ராஜாவாக முடிசூட்டச் சொன்ன ஏரோது ராஜா அங்கே இருக்கிறான். தெய்வபயம் அற்ற கரங்களால் அவரது உடலில் சிவப்பு அங்கியைப் போர்த்தி, அவரது புனிதமான நெற்றியிலே முள்முடியை வைத்து, எதிர்த்துத் தாக்காத அவரது கரங்களிலே போலியான செங்கோலைத் திணித்து, அவருக்கு முன்னால் தூஷணமான பரியாசத்தினால் பணிந்த மனிதர்கள் அங்கே இருக்கிறார்கள். அவரை அடித்தவர்களும் முகத்தில் துப்பியவர்களும் இன்று அவரது துளைக்கும் பார்வையிலிருந்து திரும்பி, அவருடைய சமுகத்தின் மேற்கொள்ளும் மகிமையினால் ஓடிப்போகத் தேடுகிறார்கள். அவருடைய கைகளிலும் கால்களிலும் ஆணிகளை அடித்தவர்கள், அவருடைய விலாவிலே குத்தின சேவகன், அந்த அடையாளங்களை பயத்தோடும் வாதிக்கப்பட்டவர்களாக காண்கிறார்கள். (21)

துல்லியமான தெளிவோடு ஆசாரியர்களும் அதிகாரிகளும் கல்வாரியின் சம்பவங்களை நினைவுகூர்ந்தனர். நடுங்கும் திகிலோடு "மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணி யில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவை யிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்" (மத்தேயு 27:42,43) என்று தலையை ஆட்டிக்கொண்டு பிசாசின் பேருவகையோடு பேசினதை நினைவுகூர்ந்தனர். (22)

குத்தகைக்கு எடுத்த தோட்டக்காரர்கள் திராட்சைத் தோட்டத்தின் சொந்தக்காரனுக்குக் குத்தகை தர மறுத்து, அவனுடைய வேலைக்காரர்களை அடித்து விரட்டியதுமன்றி, அவனுடைய மகனையும் கொலை செய்தார்கள் என்று இரட்சகர் கூறிய உவமை தெள்ளத்தெளிவாக அவர்களுக்கு நினைவிற்கு வருகிறது. அந்தத் திராட்சைத் தோட்டத்தின் சொந்தக்காரன் அந்த அக்கிரமக்காரர்களைச் சங்கரித்துப்போடுவான் என்று கூறி, அவர்கள் தங்களைத் தாங்களே நியாயந்தீர்த்துக்கொண்டதும் அவர்களுக்குத் தெளிவாக நினைவிற்கு வருகிறது. விசுவாசம் இல்லாத அந்த குத்தகைக்காரர்கள் செய்த பாவத்திலும் அதற்கு அவர்கள் அடைந்த தண்டனையிலும் ஆசாரியர்களும் மூப்பர்களும் தாங்கள் நடந்த பாதையையும் தங்களுடைய நீதியான அழிவையும் காண்கிறார்கள். இப்போது அவர்களிடமிருந்து மரண வேதனையான பெரும் ஓலம்

கேட்கிறது. “அவனைச் சிலுவையில் அறையுங்கள்! அவனைச் சிலுவையில் அறையுங்கள்!” என்று எருசலேம் நகரத் தெருக்களில் கூவினதைவிடவும் பலமாக இப்பொழுது “அவர் தேவகுமாரன்தான்! அவர்தான் உண்மையான மேசியா!” என்று கூறி பயங்கரமாக ஓலமிட்டு அழும் ஒலி எழும்புகிறது. அந்த ராஜாதி ராஜனின் பிரசன்னத்தில் இருந்து தப்பியோட முயலுகிறார்கள். குமுறி வெடித்த இயற்கையால் பூமியில் ஏற்பட்ட வெடிப்புகளுக்குள் போய்ப் பதுங்கி மறைந்திட வீணாக முயற்சி செய்கிறார்கள். (23)

சத்தியத்தை தள்ளிவிடுகிற ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், மாய்மாலமான வாழ்க்கையின் துயர எண்ணங்களை நினைவுகூருவதும் வீணான வருத்தங்களால் ஆத்துமா அலைக்கழிக்கப்படுவதுமான மனச்சாட்சி விழித்தெழும் சமயங்கள் உண்டு. “பயப்படுங்காரியம் புசல்போல் வரும்போதும், ஆபத்து சூறாவளிபோல் … நேரிடும்போதும்” (நீதி. 1:27) என்ற நாளுடன் ஒப்பிடும்போது, இந்த வருத்தம் ஒன்றுமேயில்லை. கிறிஸ்துவையும் அவருடைய விசுவாசமான ஜனங்களையும் அழிக்க வகைதேடினவர்கள் இப்பொழுது அந்த மக்களின் மீதிருக்கும் மகிமையைக் காண்கிறார்கள். அவர்களுடைய திகிலின் மத்தியில் பரிசுத்தவான்களின் குரல் மகிழ்ச்சியான தொனியில்: “இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்” (ஏசா. 25:9) என்று பாடும் பாடலைக் கேட்கிறார்கள். (24)

நடுங்கும் தரை, அடிக்கும் மின்னல், குமுறும் இடி இவைகளுக்கு மத்தியில் தேவகுமாரனின் குரல் தூங்கிக்கொண்டிருக்கும் பரிசுத்தவான்களை அழைக்கிறது. அவர் நீதிமான்களின் கல்லறைகளைப் பார்த்து, தமது கைகளை வானத்துக்கு நேராக உயர்த்தி: “பூமியின் தூளில் உறங்குகிறவர்களே எழுந்திருங்கள், எழுந்திருங்கள், எழுந்திருங்கள்!” என்று சொல்லுகிறார். பூமியின் நீளத்திலும் அகலத்திலும் மரித்தவர்கள் அந்த சத்தத்தைக் கேட்பார்கள் கேட்பவர்கள் பிழைப்பார்கள். சகல ஜாதியாலும், கோத்திரத்தாலும், பாஷைக்காரராலும், ஜனக்கூட்டத்தாராலுமான மகா சேனையின் காலடியால் பூமி அதிர்கிறது. மரணம் என்கிற சிறையிலிருந்து அழிவில்லாத மகிமைபொருந்தினவர்களாக வந்து: “மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?” (1 கொரி. 15:55) என்று ஆர்ப்பரிக்கிறார்கள். உயிரோடு இருக்கும் நீதிமான்களும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் ஒன்றாகச் சேர்ந்து மிகுந்த மகிழ்ச்சிகரமான வெற்றித்தொனியில் ஆர்ப்பரிக்கிறார்கள். (25)

கல்லறையிலிருந்து வெளியேவரும் அனைவரும் அதற்குள் பிரவேசிக்கும்போது கொண்டிருந்த அதே வளர்த்தியில் இருந்தனர்.

உயிர்த்தெழுந்த கூட்டத்தாரிலிருந்த ஆதாம் நல்ல உயரமும் கம்பீரமான தோற்றமுடையவனாகவும், ஆனால் தேவகுமாரனைவிடச் சற்றே சிறியவனாகவும் காணப்படுகிறான். ஆதாமுக்கும் பின்சந்ததி மக்களுக்கும் இடையே இருந்த குறிப்பிடத்தக்க வித்தியாசம் ஒரு வகையில் மனிதகுலத்தின் பெரும் சீரழிவை காண்பித்தது. ஆனால் எல்லோருமே நித்திய இளமையின் புத்துணர்வோடும் உயிர்த்துடிப்போடும் எழும்புகிறார்கள். ஆரம்பத்தில் மனிதன் குணாதிசயத்தில் மட்டுமின்றி வடிவிலும் அமைப்பிலுங்கூட தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருந்தான். பாவம் அந்த தேவசாயலை மழுங்கடித்து கிட்டத்தட்ட அழித்தேவிட்டது. ஆனால் இழந்துபோனதை மீண்டும் கொடுக்கவே கிறிஸ்து வந்தார். நம்முடைய சீர்குலைந்த சரீரத்தை மாற்றி, தம்முடைய மகிமையுள்ள சரீரத்தைப்போன்று வடிவமைப்பார். மரிக்கக்கூடிய, கெட்டுப்போகிற, அழகிழந்த, ஒருகாலத்தில் பாவத்தால் கறைபட்டிருந்த சரீரம் முழுமையானதும் அழகானதும் நித்தியமானதுமாக மாறுகிறது. சரீரத்தில் இருந்த குறைபாடுகள் எல்லாம் உருக்குலைவுகள் எல்லாம் கல்லறையிலேயே விட்டுவிடப்படுகின்றன. வெகுகாலத்திற்குமுன்பு இழந்துவிட்ட ஏதேனின் ஜீவவிருட்சம் திரும்பக் கொடுக்கப்பட்டதால், மீட்கப்பட்டவர்கள் மனித இனத்தின் ஆதிகால மகிமையான முழு உயரத்திற்கு வளருகிறார்கள் (மல்கியா 4:2). கடைசியாக எஞ்சியிருக்கும் பாவசாபத்தின் சின்னங்கள் எல்லாம் நீக்கப்பட்டு, கிறிஸ்துவின் விசுவாசப்பிள்ளைகள், நம்முடைய கர்த்தராகிய ஆண்டவரின் மகிமையில் தோன்றி, மனதிலும் ஆத்துமாவிலும் சரீரத்திலும் தங்கள் ஆண்டவரின் மாசற்ற சாயலைப் பிரதிபலிப்பார்கள். யுகயுகமாகப் பேசப்பட்டு, யுகயுகமாக நம்பிக்காத்திருந்து, மிகுந்த ஆவலோடு எண்ணிப்பார்க்கப்பட்டிருந்தும் ஒருபோதும் முழுமையாக புரிந்துகொள்ளமுடியாததாக இருந்த அற்புதமான மீட்பு ஆகா! (26)

உயிரோடு இருக்கிற நீதிமான்கள் “ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே” மறுரூபமாக்கப்படுகிறார்கள். தேவனுடைய குரல் ஒலியினால் அவர்கள் மகிமையடைந்தார்கள். இப்பொழுது அவர்கள் சாவாமையுள்ளவர்களாக்கப்பட்டு, உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடு சேர்ந்து ஆண்டவரை வானத்திலே சந்திக்கும்படியாக எடுத்துக்கொள்ளப் படுகிறார்கள். தேவதூதர்கள் “அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலு மிருந்து” கூட்டிச் சேர்க்கிறார்கள். சிறுபிள்ளைகள் பரிசுத்த தேவதூதர்களால் அவர்களது அன்னையரின் கரங்களிலே ஒப்படைக்கப்படுகிறார்கள். மரணத்தினால் நெடுநாள் பிரிக்கப்பட்டிருந்த நண்பர்கள் இனி ஒருபோதும் பிரியாதபடி இணைந்து, மகிழ்ச்சியின் கீதங்களைப் பாடிக்கொண்டு தேவ னுடைய பட்டணத்தைநோக்கி ஒன்றாக எழும்பிச் செல்லுகிறார்கள். (27)

மேகரதத்தின் ஒவ்வொரு பக்கமும் செட்டைகள் இருக்கின்றன. அவற்றுக்குக் கீழே ஜீவ சக்கரங்கள் இருக்கின்றன. அந்த ரதம் புதிய எருசலேமை நோக்கி மேலெழும்பும்போது, சக்கரங்கள் பரிசுத்தம் என்று ஒலி எழுப்புகின்றன. அதன் செட்டைகள் அசையும்பொழுது பரிசுத்தம் என்று ஒலி எழுப்புகின்றன. தேவதூதர்களின் பரிவாரம் "சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று கூவுகிறார்கள். மீட்கப்பட்டவர்கள் "அல்லேலூயா" என்கிறார்கள். (28)

தேவ நகரத்திற்குள் நுழையுமுன்பாக இரட்சகர் தன்னைப் பின்பற்றியவர்களுக்கு வெற்றிச் சின்னங்களைக் கொடுத்து, அவர்கள் ராஜ குடும்பத்தினர் என்பதற்கான விருதுகளை அணிவிக்கிறார். சுடர்விட்டுப் பிரகாசிக்கும் கூட்டம், பரிசுத்தவான்களையும் தேவதூதர்களையும்விட கம்பீரமாய் உயர்ந்திருக்கிற, மிகுந்த அன்போடு தங்கள்மேல் பிரகாசிக்கிற முகத்தோடிருக்கிற தங்களுடைய ராஜாவைத் சுற்றி சதுர வடிவில் நிற்கிறது. எண்ணமுடியாத மீட்கப்பட்டவர்களின் சேனை முழுவதிலுமுள்ள ஒவ்வொரு பார்வையும் அவர்மேல் பதிந்து ஒவ்வொரு கண்ணும், மனுஷனைப்பார்க்கிலும் அந்தக்கேடு அடைந்திருந்த முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அந்தக்கேடு அடைந்திருந்த ரூபமும் கொண்டிருந்த அவருடைய மகிமையைக் காண்கிறது. ஜெயங்கொண்டவர்களின் தலைகள் மேல் இயேசு தமது சொந்த வலக்கரத்தினாலே மகிமையின் கிரீடத்தை வைக்கிறார். ஒவ்வொருவருக்கும் அவரவரது புதிய நாமமும் (வெளி. 2:17) "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்றும் எழுதப்பட்ட ஒரு கிரீடம் உண்டு. ஒவ்வொருவருடைய கரத்திலும் வெற்றியோலையும் மின்னுகிற சுரமண்டலமும் கொடுக்கப்படுகின்றன. முன்னிலை வகிக்கும் தேவதூதர்கள் தங்களது சுரமடண்டலத்தை வாசிக்கத் தொடங்க, ஒவ்வொரு கரமும் சுரமண்டலத்தை மிகத் திறமையாக வாசிக்கிறது. பண்பட்ட செறிவு மிகுந்த இனிய இசை ஓங்கி எழுகிறது. விவரிக்கமுடியாத இன்ப அதிர்வுகள் ஒவ்வொருவரது இருதயத்திலும் கிளர்ந்தெழுகின்றன. "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக" (வெளி. 1:6) என்று ஒவ்வொரு குரலும் நன்றியின் துதியோடு எழும்பும். (29)

பணயம் கொடுத்து மீட்கப்பட்ட அந்தக் கூட்டத்தாருக்கு முன்பாகப் பரிசுத்த நகரம் இருக்கிறது. சத்தியத்தைக் கைக்கொண்ட ஜனம் உள்ளே பிரவேசிப்பதற்காக இயேசு முத்துக்களாலான கதவுகளை விரிவாகத் திறக்கிறார். அங்கே அவர்கள் தேவனுடைய பரலோகத்தை

குற்றமில்லாமையிலிருந்த ஆதாமின் வாசஸ்தலத்தைக் காணுகிறார்கள். அப்பொழுது இதுவரை மனிதன் கேட்ட எந்த இசையிலும் இனிமையான அந்தக் குரல் "உங்களுடைய போராட்டம் முடிந்தது." "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்று கூறும். (30)

நான் எங்கே இருக்கிறேனோ அங்கே நீர் எனக்குத் தந்தவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன் என்று இயேசு தமது சீடர்களுக்காக ஏறெடுத்த ஜெபம் இப்பொழுது நிறைவேறுகிறது. "மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே ... மாசற்றவர்களாய்","இதோ நானும் நீர் எனக்குத் தந்தவர்களும்","தேவரீர் எனக்குத் தந்தவர்களை நான் காத்துக்கொண்டேன்" என்று தமது இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்களை கிறிஸ்து பிதாவிடம் சமர்ப்பிக்கிறார். ஆகா மீட்கும் அன்பின் ஆச்சரியம்தான் என்னே! பாவத்தின் இசைவின்மை அகற்றப்பட்டவர்களாக, அதன் கருகல் நீக்கப்பட்டவர்களாக தெய்வீகத்தோடு மீண்டும் இசைவுள்ளதாக்கப்பட்ட மீட்கப்பட்டவர்களில் பிதாவானவர் தமது சாயலைக் காணும் மணிநேரத்தின் மகிமைதான் என்னே! (31)

விவரிக்க இயலாத அன்போடு இயேசு தம்முடைய விசுவாசப் பிள்ளைகளை அவர்களது ஆண்டவரின் சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கும்படி அழைக்கிறார். இரட்சகரின் சந்தோஷமெல்லாம் அவர் அனுபவித்த வேதனைகள் சிறுமைகளின் மூலமாக இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களை மகிமையின் ராஜ்யத்தில் காண்பதில்தான். ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் நடுவிலே தங்களது ஜெபங்களாலும் உழைப்புகளாலும் அன்போடு செய்த தியாகங்களாலும் கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்தப்பட்டவர்களைக் காணும்போது, மீட்கப்பட்டவர்கள் அந்த மகிழ்ச்சிக்குப் பங்காளிகளாகிறார்கள். தேவனுடைய உன்னதமான வெள்ளைச் சிங்காசனத்தைச் சூழ அவர்கள் ஒன்றுசேரும்போது தாங்கள் கிறிஸ்துவிற்காக வெற்றிகொண்டவர்கள் மற்றவர்களையும், அவர்கள் மற்றவர்களையும் ஆதாயப்படுத்தியிருப்பதையும், அவர்களெல்லாரும் இளைப்பாறுதலின் துறைமுகத்திற்குக் கொண்டுவரப்பட்டு, இயேசுவின் பாதத்தில் தங்களுடைய கிரீடங்களை வைத்து, முடிவில்லாத நித்தியத்திற்கும் அவரை துதிக்கிறதையும் காணும்போது, சொல்லமுடியாத களிப்பு அவர்கள் இருதயத்தை நிறைக்கிறது. (32)

மீட்கப்பட்டவர்கள் தேவனுடைய நகரத்திற்குள் வரவேற்கப்படும்போது பெரும்மகிழ்ச்சியுடனான ஆராதனைத் தொனி வானில் ஒலிக்கும். இரண்டு ஆதாம்களும் சந்திக்க இருக்கிறார்கள். தாம் சிருஷ்டித்த, சிருஷ்டித்தவருக்கு

எதிராக பாவம்செய்த, யாருடைய பாவத்தினால் இரட்சகர் சிலுவையின் அடையாளங்களை தம் சரீரத்தில் சுமந்துகொண்டிருக்கிறாரோ அந்த— நமது இனத்தின் முற்பிதாவை ஏற்றுக்கொள்ளும்படி தேவகுமாரன் தம் கரங்களை நீட்டினவராக நிற்கிறார். ஆதாம் கொடிய ஆணிகளின் அச்சடையாளங்களை காணும்போது, ஆண்டவருடைய மார்பில் சாயாமல், தாழ்மையோடு "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார் பாத்திரராயிருக்கிறார்" என்று சொல்லிக்கொண்டே அவரது பாதங்களில் விழுகிறார். இரட்சகர் அவனை இரக்கத்தோடு தூக்கியெடுத்து, அவன் வெகுகாலத்திற்குமுன் வெளியேற்றப்பட்ட ஏதேன் வீட்டைப் பார்க்கும்படி அழைக்கிறார். (33)

ஏதேன் தோட்டத்தைவிட்டு அனுப்பப்பட்டபிறகு பூமியில் ஆதாமின் வாழ்க்கை கவலையால் நிறைந்தது. காய்ந்துவிழும் ஒவ்வொரு இலையும், பலியிடப்படும் ஒவ்வொரு ஆடும், இயற்கையின் அழகிய முகத்தில் தோன்றும் ஒவ்வொரு வாட்டமும், மனிதனுடைய பரிசுத்தத்தில் விழும் ஒவ்வொரு கறையும், ஆதாமிற்கு அவனுடைய பாவத்தை புதிதாக நினைவுபடுத்திக்கொண்டிருந்தன. அக்கிரமம் பெருகிக் கொண்டிருந்ததைக் கண்டபோதும், கொடுத்த எச்சரிப்புகளுக்கு விடையாக பாவத்திற்கு காரணம் அவன்தான் என்று அவன்மேல் விழுந்த நிந்தனைகளைச் சந்தித்தபோதும் அவனது துக்கத்தினாலெழுந்த வேதனை மிகவும் கொடியதாக இருந்தது. பொறுமையோடுகூடிய தாழ்மையுடன் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் மீறுதலின் தண்டனையை அவன் சுமந்தான். அவனது பாவத்திற்காக அவன் உண்மையாகவே மனந்திரும்பி, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட இரட்சகரின் தகுதியை நம்பியிருந்தான். மேலும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு மரித்தான். தேவகுமாரன் மனிதனின் தோல்வியையும் விழுகையையும் மீண்டும் சீர்படுத்தினார். இப்பொழுது பாவநிவாரண ஊழியத்தின் மூலமாக ஆதாம் தன்னுடைய முன்னான ஸ்தானத்தில் மீண்டும் நிலைநிறுத்தப்படுகிறான். (34)

இரட்சகர் அவனை ஜீவவிருட்சத்திற்கு அருகே அழைத்துச்சென்று, மகிமையான அந்தப் பழங்களைப் பறித்து சாப்பிடச்சொல்லி அவனிடம் கொடுக்கிறார். அவன் தன்னைச் சுற்றிலும் பார்க்கிறான். தன் குடும்பத்தைச் சேர்ந்த திரளான ஜனங்கள் மீட்கப்பட்டவர்களாகத் தன்னோடு அந்த பரலோகத்தில் இருப்பதைப் பார்க்கிறான். அப்பொழுது அவன் தனது மின்னுகிற கிரீடத்தை எடுத்து இயேசுவின் காலடியில் வைத்துவிட்டு அவரது மார்பில் விழுந்து அவரை அணைத்துக்கொள்ளுகிறான். பிறகு தனது பொன் சுரமண்டலத்தை எடுத்து வாசிக்கத் தொடங்குகிறான். அது பரலோகம் முழுவதும் எதிரொலிக்கிறது. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்

பாத்திரரே பாத்திரரே பாத்திரரே என்பதாக அந்தப் பாடல் ஒலிக்கிறது. ஆதாமின் குடும்பத்தாரும் சேர்ந்து அந்தப் பாடலைப் பாடுகிறார்கள். பாடிய வண்ணம் தங்களது கிரீடங்களை இரட்சகரின் காலடியில் வைத்து, தாழ்ந்து வணங்கித் துதிக்கிறார்கள். (35)

ஆதாமின் குடும்பமும் தேவனும் இணையும் அந்தக் காட்சியைத் தேவதூதர்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் ஆதாம் பாவத்தில் விழுந்தபோது அதன் நிமித்தமாக அழுதவர்கள். பிறகு இயேசு உயிர்த்தெழுந்து பரமேறி தமது நாமத்தை விசுவாசிக்கிற அனைவரது கல்லறைகளையும் திறந்து அவர்களை விடுவிக்கப்போவதை நிச்சயம் செய்தபொழுது பெரும் மகிழ்ச்சியடைந்தவர்கள். இப்பொழுது அந்த இரட்சிப்பின் வேலைகள் முடிவடைந்து இருப்பதைக் காணுகிறார்கள். கண்டு, பாடப்படும் பாடலுக்கு இசைவாகத் தங்களது குரலையும் இணைத்து அவர்களோடு சேர்ந்து புகழ்ந்து பாடுகிறார்கள். (36)

தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாகக் கண்ணாடிக்கடல் என்கிற ஒன்று இருக்கிறது. அது கண்ணாடியும் தீப்பிழம்புகளும் சேர்ந்திருப்பதுபோல் தோற்றமளிக்கிறது. தேவனுடைய மகிமையினால் சுடர்விட்டுப் பிரகாசிப்பதாக அக்கடல் தோன்றுகிறது. மிருகத்தின்மேலும் அதின் சொரூபத்தின்மேலும் அவனது முத்திரையின்மேலும் வெற்றி கொண்டவர்கள் என்ற தகுதியைப் பெற்ற பரிசுத்தர்கள் அந்த கண்ணாடிக் கடலின்மேல் கூட்டப்படுகிறார்கள். ஆட்டுக்குட்டியானவர் சீயோன் மலையில் அமர்ந்திருக்க, மானிடக் குடும்பங்களிலிருந்து மீட்கப்பட்ட ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் இவர்களே. இவர்கள் தங்களது தேவசுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள். அப்பொழுது திரளான தண்ணீர்களின் இரைச்சல் போலவும், பெரும் இடியின் ஒலியைப்போலவும், சுரமண்டலம் வாசிக்கிறவர்கள் தங்களது சுரமண்டலத்தை வாசிக்கும் ஒலி கேட்கிறது. அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகப் புதியதொரு பாடலையும் பாடுகிறார்கள். அந்தப் பாடலானது அந்த இலட்சத்து நாற்பத்தி நாலாயிரம்பேர்கள் தவிர வேறு எவரும் பாடமுடியாத பாடலாகும். அது மோசேயின் பாடலும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலுமாகிய விடுதலையின் பாடலாகும். அந்தப் பாடல் ஒரு இலட்சத்து நாற்பத்தினாலாயிரம்பேர்கள் தவிர வேறு எவரும் கற்றுக்கொள்ளமுடியாத ஒரு அனுபவத்தின் பாடலாகும். அந்த அனுபவத்தை மற்றவர்கள் எவரும் பெற்றிருக்கவில்லை. ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே என்று வேதாகமம் இவர்களைப்பற்றி மிகவும் சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூறுகிறது. பூமியிலே உயிரோடிருந்தவர்களிடமிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டவர்களாகிய இவர்கள்

பிதாவிற்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்களாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்றும் வேதாகமம் கூறுகிறது.—வெளி. 15:2,3 14:1–5. அவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். அந்தக் காலத்தை யாக்கோபின் இக்கட்டுக்காலம் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. அந்த மகா உபத்திரவ காலத்தின் பரிதவிப்பிலே நிலைநின்றவர்கள், தேவன் அனுமதித்த கடைசியான சோதனைக் காலத்திலே, பரிந்துபேசுபவர் இல்லாமலேயே இறுதிவரை உறுதியாக நின்றவர்கள். ஏனென்றால் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே தோய்த்து வெண்மையாக்கப்பட்ட நீதியின் வஸ்திரங்களை இவர்கள் தரித்திருந்தார்கள். ஆகவே அவர்கள் தேவசிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவரது ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள். சிங்காசனத்திலே அமர்ந்திருக்கிறவர் அவர்களுக்கு மத்தியில் வாசம்செய்வார். இந்த உலகம் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் நாசமாக்கப்பட்டதையும், மனிதர்களை மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்க சூரியனுக்கு வல்லமை இருந்ததையும் பார்த்திருப்பது மட்டுமன்றி, அவர்களேகூட துன்பம், பசி, தாகம் அனைத்தையும் சந்தித்தவர்களுமாக இருந்தவர்கள்.—வெளி. 7:14,15. “இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்”—வெளி. 7:14–17. (37)

இரட்சகராலே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் உபத்திரவமென்கிற பள்ளிக்கூடத்தில் நியாயப்பிரமாணம் என்கிற கல்வியைக் கற்று, கீழ்ப்படிதல் என்கிற அறிவிலே தேறியவர்கள் என்பது எல்லாக் காலங்களிலுமே நிகழ்ந்த உண்மை. இவர்கள் இந்த உலகத்திலே இடுக்கமான பாதை வழியாக நடந்தவர்கள். துன்பம் என்கிற அடுப்பிலே புடமிடப்பட்டுச் சுத்தப்படுத்தப்பட்டவர்கள். இயேசுவின் நிமித்தம் இவர்கள் எதிர்ப்பு வெறுப்பு அவதூறு ஆகியவற்றைச் சகித்தவர்கள். இவர்கள் சாத்தானோடு நடக்கும் போராட்ட வேதனைகளிலே தேவனை விடாமல் பின்பற்றி நடந்தவர்கள். சுயத்தை வெறுத்து கசப்பான ஏமாற்றங்களை அனுபவித்தவர்கள். பாவம் என்பது எவ்வளவு தீமையானது எவ்வளவு அழிவுகளை உண்டாக்கக்கூடியது என்பவற்றைத் தங்களுக்கு ஏற்பட்ட துயரமான அனுபவங்களினாலே கற்றுக்கொண்டவர்கள். இவர்கள் பாவத்தை அருவருக்கிறவர்கள். அதைச் செய்யப் பயப்படுகிறவர்கள். ஒரு தடவை நுழைந்துவிட்ட பாவத்தைக் களைவதற்காக எவ்வளவு பெரிய விலை கொடுக்கப்படவேண்டியதாயிற்று என்பதை எண்ணிப்பார்த்தவர்கள்.

அதனால் தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொண்டவர்கள். இவர்களது இந்த அனுபவம், பாவமே செய்யாதவர்களுக்குக் கிடையாது. இவர்கள் தேவனாலே அதிகம் மன்னிக்கப்பட்டவர்கள். தேவனுடைய துன்பத்தில் பங்கெடுத்தவர்கள் என்பதால் தேவனுடைய மகிமையிலும் பங்கெடுப்பதற்குத் தகுதி பெற்றவர்களும் இவர்களே. (38)

தேவனுடைய சுதந்திரத்திற்குப் பங்காளிகளாக வருகிறவர்கள் பல இடங்களிலிருந்தும் வருவார்கள். அவர்கள் மேலறைகளிலிருந்தும் வருவார்கள். பதாள அறைகளிலிருந்தும் வருவார்கள். சிறைச்சாலைகளிலிருந்தும் தூக்குமேடைகளிலிருந்தும் வருவார்கள். மலைகளிலிருந்தும் வனாந்தரங்களிலிருந்தும் பூமியின் குகைகளிலிருந்தும் வருவார்கள். பூமியிலே அவர்கள் திக்கற்றவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் வாதிக்கப்பட்டவர்களுமாக இருந்தார்கள். சாத்தானின் ஏமாற்று வஞ்சனைகளுக்கு இணங்கிப்போகாததினாலே உலகத்தாரின் நிந்தனைகளாலே நிரப்பப்பட்டுக் கல்லறைகளில் இறங்கிப்போனவர்களான இலட்சக்கணக்கானவர்கள்! இப்பொழுது தேவனே மனிதர்களின் நியாயாதிபதியாக இருக்கிறார் (சங். 50:6). இப்பொழுது உலகத்தின் தீர்ப்புகள் நேர் எதிராக மாறிவிட்டன. தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார் (ஏசா. 25:8). அவர்களைப் பரிசுத்த ஜனமென்றும் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் என்றும் சொல்லுவார்கள் (ஏசா. 62:12). தேவன் அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடைகளையும் (ஏசா. 61:3) கொடுக்க ஒரு நாளை நியமித்திருக்கிறார். அதன்பின் அவர்கள் பலவீனர்களாகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் தாழ்த்தப்பட்டவர்களாகவும் இருப்பதில்லை. இப்படியாக அவர்கள் தேவனோடு என்றென்றும் இருப்பார்கள். உலகிலே மிகவும் கனவான்களாக இருந்தவர்கள் உடுத்தியிருந்த உடைகளை விட மிகச் சிறந்த ஆடைகளைத் தரித்து, தேவசிங்காசனத்தின் முன்பாக நிற்பார்கள். உலகத்திலிருந்த எந்த ராஜாவும் அணிந்திராத அதிக மகிமை உள்ள மகுடங்களினாலே முடிசூட்டப்படுவார்கள். வேதனையும் அழுகையும் நிறைந்திருந்த நாட்கள் இனி அவர்களுக்கு வருவதே இல்லை. மகிமையின் ராஜா அவர்களது கண்ணீரையெல்லாம் அவர்களது முகத்திலிருந்து துடைத்துவிட்டார். துக்கம் உண்டாவதற்கான காரணங்கள் எல்லாம் ஒழிந்துபோயின. வெற்றியின் அடையாளமாகக் குருத்தோலைகளை வீசிக்கொண்டும் இசைவான இனிமையான தெளிவான முறையில் துதியின் பாடல்களைப் பாடிக்கொண்டும் இருப்பார்கள். ஒவ்வொருவரும் அந்தப் பாட்டில் பங்கெடுத்துப் பாடத் துவங்க அந்தப் பாட்டு பரலோகமெங்கும் எதிரொலிக்கும். இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்திலே வீற்றிருக்கும் எங்கள்

தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக... ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக (வெளி. 7:10.12) என்பதாக அந்தப் பாடல் ஒலிக்கும். (39)

மனித இனத்தில் மீட்பு என்கிற தத்துவம் மகா அற்புதமானது. இந்த வாழ்க்கையில் நாம் அதைப்பற்றி அறிந்துகொள்ளுவதெல்லாம் ஒரு ஆரம்பப் புள்ளிதான். சிலுவையிலே அவமானமும் மகிமையும் சந்திக்கின்றன. வாழ்வும் சாவும் சந்திக்கின்றன. இந்தக் காரியங்களை நமக்கிருக்கும் குறைந்த அறிவுத் திறனைக் கொண்டு பெரும் முயற்சியோடு ஆராய்ந்து பார்க்கலாம். ஆனால் என்னதான் நமது மனதின் சக்திகளையெல்லாம் ஒன்றுசேர்த்து சிந்தித்தாலும் மேற்படி காரியங்களின் தன்மைகளையும் முக்கியத்துவத்தையும் நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. மனித மீட்பிற்குப் பின்னால் உள்ள தேவ அன்பின் நீளத்தையும் அகலத்தையும் ஆழத்தையும் உயரத்தையும் குறித்து நாம் புரிந்துகொண்டிருப்பது மிகவும் கொஞ்சமே. பணயம் கொடுத்து மீட்கப்பட்டவர்களின் அறிவுத்திறன் மிக அதிகமாக இருக்கும். ஆகவே தாங்கள் பார்க்கப்படுவதைப்போலவே பார்க்கவும், தாங்கள் அறிந்துகொண்டிருப்பதைப்போலவே அறியவும் அவர்களால் முடியும். ஆயினும் மீட்புத் திட்டத்தின் இரகசியங்கள் அனைத்தையும் அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. ஆனாலும் அவர்கள் தொடர்ந்து ஆராயும்பொழுது, புதிய புதிய உண்மைகளை கோர்வையாக விளங்கிக்கொண்டே வருவார்கள். அது அவர்களுக்கு ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். பூமியில் நிலவிய துயரங்கள் வேதனைகள் சோதனைகள் அனைத்தும் கடந்துபோயின. அவற்றிற்குக் காரணமான பாவமும் ஒழிந்துபோனது. என்றாலும், பாவத்தின் ஒரு காரியத்தைக் குறித்துத் தெளிவான நுட்பமான அறிவு எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கும். ஆம். பாவத்திலிருந்து மீட்கப்படுவதற்கான விலையானது எவ்வளவு பெரிய விலை என்பதே அந்தக் காரியம். (40)

கிறிஸ்துவின் சிலுவை மீட்படைந்த மனிதர்களின் அறிவிற்கும் அன்புக்கும் என்றென்றும் விருந்தளிப்பதாக இருக்கும். கிறிஸ்துவாலே மகிமையடைந்த அவர்கள் கிறிஸ்துவின் மகிமையை அதிகமதிகமாகக் கண்டுகொண்டே இருப்பார்கள். இயேசு தமது படைப்பின் வல்லமையால் எல்லையில்லா அண்டவெளியில் எண்ணில்லாத உலகங்களைப் படைத்தும் தாங்கி நடத்தியும் வருபவர். இயேசு பரலோகத்தின் ராஜாவாக இருந்தார். இயேசு கேருபீன்களாலும் சேராபீன்களாலும் களிப்போடு துதிக்கப்படுபவர். இவ்வளவு உன்னதராகிய இயேசு விழுந்து விட்ட மனிதனைத் தூக்கியெடுப்பதற்காகத்

தன்னை அந்த அளவு உயரத்திலிருந்து தாழ்த்தினாரே! பாவத்தின் நிந்தையையும் அவமானத்தையும் சகித்துக்கொண்டாரே! அதனால் அவரது பிதாவின் முகத்தைக் காணவொட்டாமல் போவதையும் ஏற்றுக்கொண்டாரே! விழுந்துபோன உலகின் வேதனைகள் அவரது இருதயத்தை நசுக்கிக் கல்வாரிச் சிலுவையிலே அவரது உயிரை எடுக்கும்படிக்கு ஒப்புக்கொடுத்தாரே! இந்த உண்மைகளையெல்லாம் மீட்கப்பட்ட மனித இனம் ஒருபோதும் மறக்காது. உலகங்களையெல்லாம் படைத்து எல்லாருடைய முடிவுகளையும் தீர்மானிக்கிற தேவன், மனிதன்மேல் வைத்த அன்பின் நிமித்தம் தனது மகிமைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, இப்படித் தன்னை இழிவிற்குள்ளாக்கிக்கொண்டார் என்கிற அவரைக்குறித்த உண்மை இந்தப் பிரபஞ்சத்திலே அவரைக்குறித்து எழும்பும் ஆச்சரியத்தையும் துதியையும் நித்தியகாலமாக அனல்மூட்டிக்கொண்டே இருக்கும். இரட்சிக்கப்பட்ட தேசத்தார்கள் இரட்சகரைப் பார்க்கும்போது, அவரது முகத்திலே நித்திய பிதாவின் மகிமை பிரகாசித்துக்கொண்டு இருப்பதைக் காணுகிறார்கள். அவரது சிங்காசனத்தைக் காணும்போது அது என்றென்றும் இருந்தது, என்றென்றும் இருக்கப்போகிறது என்பதையும், அவரது ராஜ்யத்திற்கு முடிவே இராது என்பதையும் உணருகிறார்கள். அதனால் மிகுந்த மகிழ்ச்சியோடு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் தனது சொந்த ரத்தத்தைச் சிந்தினவர் நம்மை தேவனுக்கென்று மீட்டுக்கொண்டவர் என்பதால் அவர் பாத்திரரே அவர் பாத்திரரே என்று ஓயாமல் பாடுவார்கள். (41)

தேவன் சிலுவையில் ஏன் மரித்தார் என்கிற இரகசியத்தை புரிந்துகொண்டால் போதும். மற்ற மர்மங்கள் எல்லாமே விளங்கிவிடும். தேவனைக் குறித்த பயமும் பிரமிப்பும் உள்ளவர்கள் அந்த பயத்தையும் பிரமிப்பையும் கல்வாரியிலிருந்து வீசுகின்ற வெளிச்சத்திலே வைத்துப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் அவை அழகாகவும் கண்ணிற்கு இனிமையாகவும் தோன்றும். அங்கே இரக்கம், இசைவு, தந்தை தாயன்பு ஆகியவைகள் பரிசுத்தம், நீதி, வல்லமை ஆகியவற்றோடு இணைந்து நிற்பதைக் காணலாம். அவரது சிங்காசனம் உன்னதத்தில் உயர்த்தப்பட்டு கம்பீரமாக விளங்குவதைக் காணும்போது, அவரது குணாதிசயத்தில் கிருபை மிளிர்வதைப் பார்க்கலாம். அதோடு எங்கள் பிதா என்று அருமையாக அவர் அழைக்கப்படுவதின் உண்மையான அர்த்தத்தையும் உணர்ந்துகொள்ளலாம். (42)

அப்பொழுது நமக்கு ஒன்று தெளிவாக விளங்கும். தேவகுமாரனின் பலியினாலன்றி நமக்கு மீட்பில்லை என்பதே அது. அப்படி தேவகுமாரனைப் பலிகொடுக்காமல் நமது இரட்சிப்பின் திட்டத்தைத் தீட்ட வரம்பெற்ற

பிதாவின் தெய்வ ஞானத்துக்கும் இயலவில்லையே. இப்படி கொடுக்கப்பட்ட பலியின் பயன் என்னவெனில் அந்தப் பணயத்தால் மீட்கப்பட்ட பரிசுத்தமான மகிழ்ச்சியான சாவாமையையுடைய மானிடர்களால் பூமியை நிரப்புகிற மகிழ்ச்சியே. அந்தகார சக்திகளோடு இரட்சகர் நடத்திய யுத்தத்தின் பயன் என்னவெனில், மீட்கப்பட்டவர்களுக்கு மகிழ்ச்சியும் தேவனுக்கு மகா மகிமையும் சேர்ந்தன. அவை நித்திய நித்தியமாகச் சேர்ந்து கொண்டிருக்கும் என்பதுதான். இந்த மனித ஆத்துமாக்களுக்குப் பிதா சம்பாதித்துக் கொடுத்த விலை இதுவே. பிதா மட்டுமல்ல, கிறிஸ்துவுங்கூட சம்பாதித்துக் கொடுத்த விலை இதுவே. தான் செய்த பெரிய தியாகத்தின் இந்தக் கனிகளைக் கண்டு அவர் திருப்தி ஆவார். (43) ★

# 41

# ஆயிரம் வருட அரசாட்சி!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 653–661)**

“அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார். … அவள் உங்களுக்குக் கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள். அவள் தன்னை மகிமைப்படுத்தி, செல்வச்செருக்காய் வாழ்ந்ததெவ்வளவோ அவ்வளவாய் வாதையையும் துக்கத்தையும் அவளுக்குக் கொடுங்கள். நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்; நான் கைம்பெண்ணல்ல, நான் துக்கத்தைக் காண்பதில்லையென்று அவள் தன் இருதயத்திலே எண்ணினாள். ஆகையால் அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும்; அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள்; அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர். அவளுடனே வேசித்தனஞ்செய்து செல்வச்செருக்காய் வாழ்ந்த பூமியின் ராஜாக்களும் … அவளுக்காக அழுது புலம்பி, அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து, தூரத்திலே நின்று: ஐயையோ! பாபிலோன், மகா நகரமே! பலமான பட்டணமே! ஒரே நாழிகையில் உனக்கு ஆக்கினை வந்ததே! என்பார்கள்”—வெளி. 18:5–10. (1)

அவளுடைய செல்வச்செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களாக ஆகிய பூமியின் வர்த்தகர்கள் “அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து, தூரத்திலே நின்று: ஐயையோ! சல்லாவும் இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த மகா நகரமே! ஒரு நாழிகையிலே இவ்வளவு ஐசுவரியமும் அழிந்துபோயிற்றே! என்று சொல்லி, அழுது துக்கிப்பார்கள்” (வெளி.18:3,11,15,16). (2)

தேவனுடைய கோபாக்கினை பாபிலோன்மீது ஊற்றப்படும்பொழுது, அதன்மேல் வரும் வாதைகள் மேலே சொல்லப்பட்ட விதமாகத்தான்

இருக்கும். அவள் தனது பாவப்பாத்திரத்தை நிரப்பிவிட்டாள். அவளது வேளை வந்துவிட்டது. அழிவுக்கு அவள் ஆயத்தமாகிவிட்டாள். (3)

தேவஜனங்களுடைய சிறையிருப்பை மாற்றிப்போடும் தேவனுடைய குரல் ஒலிக்கும்போது, மற்றவர்கள் தங்களுடைய நிர்க்கதியான நிலையைக் குறித்த விழிப்புணர்வை அடைகிறார்கள். இவ்வுணர்வு அவர்களை பயங்கரமாகப் பற்றிப்பிடிக்கும். வாழ்க்கைப் போராட்டத்திலே தாங்கள் அனைத்தையுமே இழந்துவிட்டதை அறிந்து அதிர்ச்சி அடைவார்கள். அவர்கள் மனந்திருந்தி தங்களது பாதையை மாற்றிக்கொள்ளுவதற்காக நிறையத் தருணம் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் சாத்தானுடைய ஏமாற்று வார்த்தைகளையே கேட்டுத் தங்களது பாவமார்க்கத்தை நியாயப்படுத்திக்கொண்டார்கள். செல்வந்தர்களாக இருந்தவர்கள் அதைக்குறித்துப் பெருமைப்பட்டதினால் மற்றவர்களைவிடத் தாங்கள் சிறந்தவர்களே என்று எண்ணிக்கொண்டனர். ஆனால் அந்தச் செல்வம் பாவ வழியில் சம்பாதித்தது என்பதை மறந்துவிட்டனர். பசித்திருப்போருக்கு உணவுகொடுத்தல், ஆடையில்லாதோருக்கு ஆடைகொடுத்தல், எதிலும் நியாயமாக நடத்தல், இரக்கத்தை நேசித்தல் ஆகிய காரியங்களை விட்டுவிட்டவர்களாகவே அவர்கள் வாழ்ந்தனர். அவர்கள் தங்களைத் தாங்களே உயர்த்தி, தங்களைப்போன்ற மனிதர்களின் புகழ்ச்சியை நாடினர். இப்பொழுதோ அவர்கள் தங்களுடைய பெருமைக்குக் காரணமாக இருந்த அனைத்தையும் இழந்து வழியற்றவர்களாயும் போக்கற்றவர்களாயும் நிற்கின்றனர். செல்வம், புகழ் முதலான எந்த விக்கிரகங்கள்மேல் நம்பிக்கைவைத்துப் படைத்தவரைப் புறக்கணித்தார்களோ, அந்த விக்கிரகங்கள் அவர்கள் கண்களுக்குமுன்பாக அழிந்து பாழாவதைப் பிரமை பிடித்தவர்களாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இவ்வுலகச் செல்வங்களுக்காகவும் இவ்வுலக இன்பங்களுக்காகவும் தங்களது ஆத்துமாக்களை விற்று, பரலோகச் செல்வங்களை சேகரிக்க மறுத்துவிட்டார்கள். விளைவு? வெற்றி என்று எண்ணிய வாழ்க்கை தோல்வியாகவும், இனிப்பு என்று எண்ணியிருந்தது கசப்பாகவும், செல்வம் என்று எண்ணியது செல்லரிப்பாகவும் மாறிவிட்டன. வாழ்நாள் முழுவதும் சம்பாதித்தவைகளனைத்தும் ஒரு நொடியில் ஒன்றுமில்லாமல் போய்விட்டன. செல்வந்தர்களாக இருந்தவர்கள் தங்களது பெருமைவாய்ந்த இல்லங்கள் தகர்ந்து விழுவதையும், சேர்த்துவைத்த பொன்னும் வெள்ளியும் சிதறிப்போவதையும் பார்த்துவாய்விட்டு அழ முயற்சிக்கிறார்கள். ஆனால் இந்த விக்கிரகங்களோடு சேர்ந்து அவர்களும் அழியப்போவதை உணர்ந்ததும், அழுகை நின்றுபோகிறது. நடுக்கமெடுக்கிறது. (4)

இந்த அக்கிரமக்காரர்கள் இப்பொழுது அடையும் வருத்தம் பெரியது. ஆனால் அவ்வருத்தம் தாங்கள் மனிதனுக்கும் தெய்வத்திற்கும் பெருந்துரோகம் செய்தோமே என்பதற்காக அல்ல. தங்களது பாவத் துரோகத்தை தேவன் முறியடித்துவிட்டாரே என்பதற்காகத்தான். தங்களுக்கு நேர்ந்துவிட்ட துன்பங்களுக்காகத்தான் வருந்துகிறார்களே யன்றி, தாங்கள் செய்த அக்கிரமங்களுக்காக அல்ல. இப்பொழுதுங்கூட தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை முறியடிக்க இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்குமானால், அதையும் பயன்படுத்தத் தயாராகவேதான் இவர்கள் இருக்கிறார்கள். (5)

தாங்கள் யாரைப் பரிகாசம் செய்தோமோ, யாரை இழிவாகப் பேசினோமோ யாரை அழித்துப்போட்டுவிட முயன்றோமோ அந்தக் கூட்டத்தார் கொள்ளைநோய்களாலும் கொந்தளிப்புகளாலும் பூமி அதிர்ச்சிகளாலும் கொஞ்சமும் சேதப்படாமல் தப்பிப் பிழைத்திருப்பதை காணுவார்கள். தம்முடைய பிரமாணங்களை மீறி நடப்போருக்குப் பட்சிக்கும் அக்கினியாக இருக்கும் தேவன், தம் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியும் தமது ஜனங்களுக்குப் பாதுகாப்பான கூடாரமாக இருக்கிறார் என்பதை அப்பொழுது அவர்கள் உணர்ந்து கொள்ளுவார்கள். (6)

மனிதர்களின் புகழ்ச்சியை வேண்டி, அதற்காகச் சத்தியத்தைப் புறக்கணித்த போதகன், தான் செய்த போதனைகளின் தன்மையையும் அவற்றின் விளைவுகளையும் இப்பொழுது தெளிவாகக் காணுகிறான். எல்லாவற்றையும் பார்க்கிற அந்த தேவனுடைய கண்ணுக்கு தானும் தன்னுடைய செயல்களும் தப்பிவிடவில்லை என்பது தெளிவாக அவனுக்குத் தெரிகிறது. தான் போதக மேடையில் நின்றுகொண்டு இருந்தபோது, தெருக்களில் நடந்துசென்றபோது பலவிதமான சூழ்நிலைகளில் மனிதர்களோடு கலந்த திரிந்தபோது என்று எல்லாச் சமயங்களிலும் தான் கண்காணிக்கப்பட்டது அவனுக்குத் தெரிகிறது. தனது ஆத்துமா வெளிப்படுத்திய ஒவ்வொரு உணர்ச்சியும், தான் எழுதிய ஒவ்வொரு வரியும், தான் சொன்ன ஒவ்வொரு சொல்லும், தான் செய்த ஒவ்வொரு செய்கையும், மனிதர்களைப் பொய்யான புகலிடங்களில் கூட்டிச்சேர்த்தது என்பதையும், அவைகள் விஷமான விதைகளை விதைத்துக்கொண்டிருந்தது என்பதையும் காண்கிறான். இன்று இரட்சிப்பை இழந்துவிட்டுப் பரிதாபமான நிலையில் தன்னைச் சுற்றிலும் நிற்கும் ஆத்துமாக்கள்தாம் தன்னுடைய அறுவடை என்பதை அவன் காண்கிறான். (7)

தேவன்: “சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்” (எரே. 8:11) என்கிறார். “நான் சஞ்சலப்படுத்தாத

நீதிமானின் இருதயத்தை நீங்கள் வீணாய் முறியப்பண்ணினபடியினாலும், துன்மார்க்கன் தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பவும் நான் அவனை உயிரோடே காக்கவுங்கூடாதபடிக்கு நீங்கள் அவனுடைய கைகளைத் திடப்படுத்தினபடியினாலும்"—எசே. 13:22. (8)

"என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் என் ஆடுகளைப் பராமரியாமல், அவைகளைச் சிதறடித்து அவைகளைத் துரத்திவிட்டீர்கள்; இதோ, நான் உங்கள்பேரில் உங்கள் செய்கைகளின் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை உங்கள்மேல் வருவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"—எரே. 23:1–2. "மேய்ப்பர்களே, அலறுங்கள்; மந்தையில் பிரஸ்தாபமானவர்களே, சாம்பலில் புரண்டு கதறுங்கள்; நீங்கள் வெட்டப்படவும் சிதறடிக்கப்படவும் உங்கள் நாட்கள் நிறைவேறின; உச்சிதமான பாத்திரம்போல் விழுந்து நொறுங்குவீர்கள். மேய்ப்பர்கள் ஓடிப்போகிறதற்கும், மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் தப்பித்துக்கொள்ளுகிறதற்கும் இடமிராது"—எரே. 25:34,35. (9)

போதகர்களும் ஊழியர்களும் தாங்கள் தேவனோடு சீரான உறவுகொண்டிருக்கவில்லை என்பதை உணர்கின்றனர். தர்மமும் நீதியுமான பிரமாணங்களைத் தந்தவருக்கு எதிராகக் கலகம் செய்து கொண்டிருந்ததை உணர்கின்றனர். தெய்வீகப்பிரமாணங்களைப் புறக்கணித்து நடந்ததன் மூலம் தீமையின் ஊற்றுகள் ஆயிரக்கணக்கில் உண்டாகவும் வேறுபாடுகளும் வெறுப்பும் பாவமும் நிறைந்து இவ்வுலகம் கலகங்களின் இருப்பிடமாகவும் சீர்கேடுகளின் நிறைவிடமாகவும் ஆகிவிட்டது. இவ்வுண்மைகள் இப்பொழுது தெளிவாகின்றன. நித்திய வாழ்வை அவர்கள் இழந்தேவிட்டார்கள். அதனைத் தாங்கள் இழந்துவிட்டதை எண்ணி, பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியாதவர்களும் தேவன்மேல் விசுவாசம் வைக்காதவர்களும் அடையும் வருத்தத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை. அரிய திறமைகளுக்காவும் வல்லமையான பேச்சிற்காகவும் இந்த உலகம் எத்தனையோ மனிதர்களுக்குத் துதிபாடியிருக்கிறது. அந்த மனிதர்களின் உண்மை நிலை என்ன என்பது இப்பொழுது தெரிகிறது. இந்தப் பெரிய மனிதர்கள் தாங்கள் தேவனின் பிரமாணங்களில் முறைதவறி நடந்திருப்பதையும் அதன் மூலம் அடைந்திருக்கும் பேரிழப்பையும் உணர்கிறார்கள். தேவனுக்கு விசுவாசமாக இருந்ததற்காக எந்த மனிதர்களை வெறுத்துப் பழித்தார்களோ அந்த மனிதர்களினால் இப்பொழுது விழுகிறார்கள். தேவன் தங்களை நேசித்து அறிவுறுத்தியதையும் தாங்கள் அந்த நேசத்தைப் புறக்கணித்ததையும் அறிக்கையிடுகிறார்கள். (10)

உலகத்தார் யாவரும் தாங்கள் ஏமாந்துவிட்டிருப்பதை உணருகிறார்கள். தங்களை அழிவிற்கு வழிநடத்தியதற்காக ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக்கொள்ளுகிறார்கள். ஆனால் எல்லோரும் சேர்ந்து மிகவும் கசப்பான குற்றச்சாட்டுகளைக் குவிப்பது போதகர்கள்மேல்தான். தேவன்மேல் விசுவாசம் இல்லாத போதகர்கள் சமாதானத்தையே தீர்க்கதரிசனமாக உரைத்தார்கள். தங்கள் பேச்சைக் கேட்டவர்கள் தேவப்பிரமாணங்களை ஒன்றுமில்லை என்று சொல்லும்படியும் அப்பிரமாணங்களைப் புனிதமாகக் கருதியவர்களை உபத்திரவப்படுத்தும்படியும் தூண்டிவிட்டார்கள். இனி தப்பவழியில்லை என்கிற நிலையில் தாங்கள் செய்துவந்த வேலைகள் ஏமாற்றுத்தனமானவையே என்பதை அந்தப் போதகர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அதைக்கேட்ட மக்கள் கூட்டம் மிகவும் கொதிப்படைகிறது. நாங்கள் அழியப்போகிறோமே! நீங்கள் அல்லவா அதற்குக் காரணம் என்று கத்திக்கொண்டே அந்த பொய்யான மேய்ப்பர்கள்மேல் பாய்கிறார்கள். அந்தப் போதகர்களை மிகவும் புகழ்ந்து போற்றியவர்கள் எவர்களோ, அவர்களே இப்பொழுது பயங்கரமாக சபிக்கிறார்கள். அவர்களது தலையில் மகுடங்களும் பட்டங்களும் சூட்டிய அதே கரங்கள் அவர்களை அழிக்க ஓங்கி நிற்கின்றன. தேவ ஜனங்களை ஒழிப்பதற்காக உயர்த்தப்பட்ட பட்டயங்கள் அவர்களின் எதிரிகள் மேலேயே விழுகின்றன. எங்கு நோக்கினும் கலகமும் இரத்த ஆறுமாக இருக்கிறது. (11)

“ஆரவாரம் பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும்; ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; மாம்சமான யாவரோடும் அவர் நியாயத்துக்குள் பிரவேசிப்பார்; துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார் என்று கர்த்தர் சொல்லுகிறார்”—எரே 25:31. ஆறாயிரம் ஆண்டுகளாக இந்த ஆன்மீகப் போராட்டம் நடந்துவந்துகொண்டிருக்கிறது. தேவகுமாரனும் அவரது தூதர்களும் தீமையின் அதிபதியோடு யுத்தம்செய்துவருகிறார்கள். மனிதர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு அவர்களை அறிவுறுத்தியும் எச்சரித்தும் வந்திருக்கிறார்கள். இப்பொழுது மனிதர்கள் அனைவரும் தங்களுக்கு யார்வேண்டும் என்பதைத் தெரிவுசெய்துகொண்டார்கள். தேவனுக்கு எதிரான யுத்தத்தில் அக்கிரமக்காரர்களாகிய மனிதர்கள் சாத்தானோடு முற்றுமாகச் சேர்ந்துகொண்டார்கள். தேவனுடைய பிரமாணங்களைக் கீழே போட்டு மிதித்தார்கள். அந்தப் பிரமாணங்களுக்குள்ள அதிகாரம் என்ன என்பதைக் காண்பிக்கவேண்டிய வேளை இப்பொழுது வந்து விட்டது. இப்பொழுது தேவனுக்கு சாத்தானோடு மட்டுமல்ல, மனிதர்களோடும் வழக்கு இருக்கிறது. ஜாதிகளோடு கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது என்றும் அக்கிரமக்காரர்களை அவர் பட்டயத்திற்கு ஒப்புக்கொடுப்பார் என்றும் வேதாகமம் கூறுவது இதனால்தான். (12)

செய்யப்படும் அருவருப்புகளின் நிமித்தம் பெருமூச்சுவிட்டு அழுகிற மனிதர்களின்மேல் இரட்சிக்கப்படுவதற்கான அடையாளம் இடப்படுகிறது. இப்பொழுது எசேக்கியேலின் தரிசனத்தில் காட்டப்பட்ட சங்காரத்தூதன் கொலைக்கருவிகளோடு மனிதர்களுக்கு நடுவிலே பாய்கிறான். முதியோரையும் வாலிபரையும் கன்னிகைகளையும் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் சங்கரித்துக் கொன்றுபோடுங்கள். அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள். (எசே. 9:1–16). மனிதர்களுக்கு ஆன்மீக வழிகாட்டிகள் என்று தங்களைக் குறித்துச் சொல்லிக்கொண்டு, அவர்களை மாறுபாடான வழியில் நடத்தினவர்கள் யாரோ அவர்கள்மீதுதான் முதல் சங்காரம் விழுகிறது. மனித ஆத்துமாக்களுக்குப் பொய்க்காவல் காத்தவர்களே முதலில் விழுவார்கள். இரக்கம் காட்டவோ, தப்புவதற்கு உதவவோ அங்கே யாரும் இருக்கமாட்டார்கள். ஆண்கள் பெண்கள் கன்னிகைகள் சிறு குழந்தைகள் எல்லோருமே ஒருமித்து அழிவார்கள். (13)

“இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுவருவார்; பூமி தன் இரத்தப்பழிகளை வெளிப்படுத்தி, தன்னிடத்தில் கொலைசெய்யப்பட்டவர்களை இனி மூடாதிருக்கும்” – ஏசா. 26:21. “எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணின எல்லா ஜனங்களையும் கர்த்தர் வாதிக்கும் வாதையாவது: அவர்கள் காலூன்றி நிற்கையிலும் அவர்களுடைய சதை அழிந்து போகும்; அவர்கள் கண்கள் தங்கள் குழிகளிலே கெட்டுப்போகும்; அவர்கள் நாவு அவர்கள் வாயிலே அழுகிப்போகும். அந்நாளிலே கர்த்தரால் பெரிய கலக்கம் அவர்களுக்குள் உண்டாகும்; அவனவன் தன் தன் அயலானின் கையைப் பிடிப்பான்; அவனவனுடைய கை அவனவன் அயலானுடைய கைக்கு விரோதமாக எழும்பும்”–சகரியா 14:12,13. தேவன் கலப்பில்லாத தமது கோபாக்கினையை மனிதர்கள்மேல் ஊற்றுகிறார். மனிதர்கள் தங்களுக்குள் எழும்பும் அடக்கமுடியாத வெறியுணர்வோடு ஒருவர்மேல் ஒருவர் பாய்ந்து தாக்குகிறார்கள். இப்படியாகப் பூமியில் குடியிருப்பவர்கள் அனைவரும் அழிகிறார்கள். போதகர்கள், அதிகாரம் உள்ளவர்கள், சாதாரண ஜனங்கள், செல்வந்தர், வறியவர், பெரியவர்கள், சிறியவர்கள் என்கிற வித்தியாசம் இன்றி அனைவரும் மடிகிறார்கள். “அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவக்கிப் பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் அடக்கம்பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்”–எரே. 25:33. (14)

கிறிஸ்துவின் வருகையின்போது தேவனுடைய பிரமாணத்தை வேண்டுமென்றே மீறிநடந்து, தேவனின் பார்வையில் அக்கிரமம்செய்த

அனைவருமே பூமி முழுவதிலுமிருந்து அழித்துப்போடப்படுவார்கள். தன்னுடைய ஜனங்களைக் கிறிஸ்து பரலோகில் உள்ள தேவப்பட்டணத்திற்கு அழைத்துச் செல்லுவார். இப்படியாகக் குடியிருப்போர் யாருமின்றி பூமி வெறுமையாக ஆகிவிடும். “இதோ, கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி, அதைக் கவிழ்த்து, அதின் குடிகளைச் சிதறடிப்பார். தேசம் முழுதும் கொள்ளையாகி, முற்றிலும் வெறுமையாகும்; இது கர்த்தர் சொன்ன வார்த்தை. தேசம் தன் குடிகளின் மூலமாய்த் தீட்டுப்பட்டது; அவர்கள் நியாயப்பிரமாணங்களை மீறி, கட்டளையை மாறுபாடாக்கி, நித்திய உடன்படிக்கையை முறித்தார்கள். இதினிமித்தம் சாபம் தேசத்தைப் பட்சித்தது, அதின் குடிகள் தண்டிக்கப்பட்டார்கள்; தேசத்தார் தகிக்கப்பட்டார்கள், சிலர்மாத்திரம் மீந்திருக்கிறார்கள்”—ஏசா. 24:1,3,5,6. (15)

பூமி முழுவதுமே ஒரு அவாந்தர வெளியைப்போலத் தோன்றுகிறது. பூமியதிர்ச்சியினாலே அழிந்துபோன பட்டணங்கள் கிராமங்கள் சிதிலங்கள் வேரோடு எறிந்துவிடப்பட்ட மரங்கள் கடலிலிருந்து வீசப்பட்டதும் பூமியிலிருந்து பெயர்க்கப்பட்டதுமான கரடுமுரடான பாறைகள் இவைகளெல்லாம் பூமி முழுவதும் சிதறிக்கிடக்கின்றன. மலைகளிருந்த இடங்களெல்லாம் அந்த மலைகள் பெயர்க்கப்பட்டுப்போனதால் பெருங்குழிகளாகக் காணப்படுகின்றன. இப்பொழுது பாவநிவாரணப் பண்டிகையின் சடங்குகள் ஒவ்வொன்றும் இரட்சிப்பின் திட்டத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சுட்டிக்காட்டுபவைகளாக இருக்கின்றன. அதில் கடைசி நிகழ்ச்சி நிறைவேற வேண்டிய வேளை இப்பொழுது வந்துவிட்டது. ஆண்டுமுழுவதும் இஸ்ரவேல் மக்கள் செய்த பாவங்கள் குற்ற நிவாரணபலியின் மூலமாக ஆசரிப்புக் கூடாரத்திலே சேர்க்கப்பட்டுவந்தன. அவ்வாறு சேர்க்கப்பட்டுவந்த அந்தப் பாவங்கள் எல்லாம் பாவநிவாரணப் பண்டிகையன்று மகா பரிசுத்த ஸ்தலத்திலே நடக்கிற ஆசாரிய ஊழியத்தின் மூலமாக ஆசரிப்புக் கூடாரத்திலேயிருந்து களையப்பட்டு, தேவனுக்கு முன்பாகவும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாகவும் போக்காட்டின் மேலே அறிக்கையிடப்படுகின்றன. போக்காட்டினுடைய தலையின்மேல் பிரதான ஆசாரியன் தன் இரண்டு கைகளையும் வைத்து, இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிடுகிறான் (லேவி. 16:21). இது இஸ்ரவேலர்கள் காலத்தில் பூமியிலே ஆசரிப்புக்கூடாரம் இருந்த காலத்தில் நிழலாக நடந்த காரியம். இதைச்சுட்டிக்காட்டும் நிஜமான காரியம் இப்பொழுது நடக்கவேண்டும். அதன்படி பரலோகத்திலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திலே பாவநிவாரணம் நடந்தேறிய பிறகு, தேவ ஜனங்கள் செய்த பாவங்கள் அனைத்தும் தேவனுக்கு முன்பாகவும் பரலோக தூதர்களுக்கு முன்பாகவும்

மீட்கப்பட்ட கூட்டத்தார் முன்பாகவும் சாத்தானின்மேல் வைக்கப்படும். அவர்கள் செய்த எல்லாப் பாவங்களுக்கும் காரணம் அவனே என்பது அறிவிக்கப்படும். போக்காடு மனிதர்கள் வசிக்காத வனாந்தரத்திற்குஅனுப்பி விடப்பட்டது. அதற்கு ஒப்பாகவே இப்பொழுது சாத்தான் மனிதர்களில்லாத அசதிதரும் வனாந்திரம்போன்று விளங்குகிற பூமியிலே விடப்படுவான். (17)

சாத்தான் பூமியிலே விடப்படுவான் என்பதையும், பூமி அழிந்து நாசமடைந்த நிலையிலே இருக்கும் என்பதையும் இந்த நிலை ஆயிரம் ஆண்டுகளுக்கு இருக்கும் என்பதையும் தீர்ககதரிசனங்களை வெளிப்படுத்துவோனாகிய யோவான் அறிவிக்கிறான். தேவனுடைய இரண்டாம் வருகையின் காட்சிகளையும் அக்கிரமக்காரர்களின் அழிவையும் விவரித்த பிறகு தீர்க்கதரிசனம் தொடர்ந்து உரைப்பதாவது: “ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும்”—வெளி. 20:1–3. (18)

மேலே சொல்லப்பட்ட வசனத்தில் பாதாளம் என்கிற வார்த்தை பூமி தனது ஒழுங்கை இழந்து இருண்டுபோய் இருக்கிற நிலையைக் குறிப்பிடுகிறதேயன்றி மற்றபடி அல்ல. இது வேதாகமத்தின் மற்ற வசனங்களைப் பார்க்கும்போது மிகவும் தெளிவாகிறது. உதாரணமாக, பூமி ஆதியிலே இருந்த நிலையை “பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது” (ஆதி. 1:2) எனகிறது. (இதில் வருகிற ஆழம் என்கிற எபிரெய வார்த்தையும் பாதாளம் என்கிற கிரேக்க வார்த்தையும் ஒரே பொருளுள்ளவை என்பதை வேதாகமத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பை வாசித்தால் தெளிவாகத் தெரிகிறது). ஆகவே பூமி முதலில் இருந்த அதே நிலையைத் திரும்பவும் அடையும் என்பதுதான் வெளி. 20:1–3 வசனங்கள் அறிவிக்கும் தீர்க்கதரிசனம். தேவனின் மகா நாளைத் தீர்க்கதரிசனத்தில் பார்த்த எரேமியா, இதே உண்மையை”பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது; வானங்களைப் பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது. பர்வதங்களைப் பார்த்தேன், அவைகள் அதிர்ந்தன; எல்லாக் குன்றுகளும் அசைந்தன. பின்னும் நான் பார்க்கும்போது, மனுஷனில்லை; ஆகாசத்துப் பறவைகளெல்லாம் பறந்துபோயின. பின்னும்

நான் பார்க்கும்போது, கர்த்தராலும், அவருடைய உக்கிரகோபத்தாலும் பயிர்நிலம் வனாந்தரமாயிற்று; அதின் பட்டணங்களெல்லாம் இடிந்துபோயின" (எரே. 4:23–26) என்று அறிவிக்கிறான். (19)

பாழடைந்த இந்தபூமிதான் சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் தங்குமிடமாக ஆயிரம் வருடங்கள் இருக்கும். பூமியோடு கட்டப்பட்டிருப்பதால் பிரபஞ்சத்தில் உள்ள மற்ற உலகங்களுக்குச் செல்லவோ அங்கே பரிசுத்த பிள்ளைகளைப் பாவம்செய்யும்படிக்குத் தூண்டவோ வேறு எந்தத் தொந்தரவும் அவர்களுக்குத் தரவோ அவனுக்கு இயலாது. சாத்தான் சங்கிலியால் கட்டப்பட்டான் என்பதற்கு இதுதான் பொருள். தன்னுடைய வஞ்சகம் செய்யும் வேலையை அவன் யார்மீதும் காட்டமுடியாது என்பதுதான் அது. பலப்பல நூற்றாண்டுகளாக அவன் வஞ்சிப்பதும் ஏமாற்றி நாசம் செய்வதுமாகிய தன்னுடைய தொழிலை மகிழ்ச்சியாகச் செய்துவந்தான். இப்பொழுது அது சற்றும் இயலாதது என்னும்படி அவன் கட்டப்பட்டிருக்கிறான். (20)

சாத்தான் இவ்வாறு தோற்கடிக்கப்படுவான் என்பதை தீர்க்கதரிசனத்தில் பார்த்த ஏசாயா: "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய். உன்னைக் காண்கிறவர்கள் உன்னை உற்றுப்பார்த்து, உன்னைக்குறித்துச் சிந்தித்து: இவன்தானா பூமியைத் தத்தளிக்கவும், ராஜ்யங்களை அதிரவும் செய்து, உலகத்தை வனாந்தரமாக்கி, அதின் நகரங்களை அழித்து, சிறைப்பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாமலிருந்தவன் என்பார்கள்" (ஏசா. 14:12–17) என்று எழுதுகிறார். (21)

ஆறாயிரம் வருடங்களாக சாத்தான் தான் தேவனுக்கு எதிராகச் செய்த கலகங்களினால் பூமியை அதிரவைத்தான். அவன் உலகத்தை வனாந்தரமாக்கி, அதன் நகரங்களை அழித்துப்போட்டான். அதுமட்டுமன்றி, சிறைப்பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாதிருந்தான். ஆறாயிரம் வருடமாக சாத்தான் கட்டுவித்த சிறைகளிலே தேவ ஜனங்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவன் அவர்களை என்றென்றும் தனது கைதிகளாகவே வைத்துக்கொண்டிருந்தான். ஆனால் கிறிஸ்து சாத்தான்

கட்டிவைத்திருந்த தளைகளை அறுத்து, அந்தக் கைதிகளை விடுவித்தார். (22)

அதற்குப்பின் பரிசுத்த ஜனங்கள்மேல் மட்டுமல்ல, பாவிகள் மேலுங்கூட எவ்வித அதிகாரமும் செலுத்தமுடியாதவனாக சாத்தான் இருக்கிறான். அவனும் அவனுடைய தீயவழியைப் பின்பற்றின தூதர்களும் மட்டும் தனியாக இருக்கிறார்கள். பாவத்தினால் வந்த சாபவிளைவுகளைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்க அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தருணமே இது. "ஜாதிகளுடைய சகல ராஜாக்களும், அவரவர் தங்கள் அறையிலே மகிமையோடே கிடத்தப்பட்டிருக்கிறார்கள். நீயோ அழுகிப்போன கிளையைப்போலவும், பட்டயக்குத்தால் கொலையுண்டவர்களின் உடுப்பைப்போலவும், ஒரு குழியின் கற்களுக்குள்ளே கிடக்கிறவர்களைப்போலவும், காலால் மிதிக்கப்பட்ட பிணத்தைப்போலவும், உன் கல்லறைக்குப் புறம்பாய் எறிந்துவிடப்பட்டாய். நீ அவர்களோடே அடக்கம்பண்ணப்படுவதில்லை, நீ உன் தேசத்தைக் கெடுத்து உன் ஜனத்தைக்கொன்றுபோட்டாய்; தீமைசெய்கிறவர்களுடைய சந்ததி ஒருபோதும் பேர்பெறுவதில்லை" (ஏசா. 14:18–20) என்று ஏசாயா கூறுகிறார். (23)

ஆயிரம் ஆண்டுகள் முடியும்வரை, அவன் நாசமாகிப்போன இப்பூமியிலே குறுக்கும் நெடுக்குமாக அலைந்து திரிவான். அப்பொழுது தான் தேவப்பிரமாணங்களுக்கு எதிராகச் செய்த கலகத்தின் விளைவுகளைத் தன் கண்களால் பார்ப்பான். இந்தக் காலத்தில் அவன் அனுபவிக்கும் வேதனை கடுமையாக இருக்கும். அவன் தேவனை விட்டு விலகிவந்த நாளில் இருந்து, இதுவரை அவனது வாழ்க்கை முழுவதும் ஓய்வில்லாத வேலைகளில் ஈடுபட்டிருந்ததால், தான் செய்வது இன்னதென்று சிந்தித்துப்பார்க்க அவனுக்கு நேரம் இருந்ததில்லை. இப்பொழுது அவனது நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டுவிட்டன. ஆதியிலே தான் பரலோக ராஜ்யத்திற்கு எதிராக முதன்முதல் கலகம்செய்த நாள் முதல் இன்றுவரை தான் சாதித்திருப்பது என்ன என்பதைக் குறித்து சிந்தித்துப்பார்க்க இப்பொழுது விடப்பட்டிருக்கிறான். இதுவரை தான் செய்த எல்லாத் தீமைகளுக்கும் மற்ற அனைவரையும் செய்வித்த பாவங்களுக்கும் உரிய தண்டனைகளையும் அவற்றின் வேதனைகளையும் குறித்து எண்ணிப்பார்த்துப் பயந்து நடுங்கும்படியும் பீதியடையும்படியும் இப்பொழுது விடப்பட்டிருக்கிறான். (24)

சாத்தான் சிறைப்படுத்தப்பட்டிருப்பது தேவஜனங்களுக்கு மகிழ்ச்சியையும் பேரானந்தத்தையும் கொடுக்கும். இதைக் குறித்துத் தீர்க்கதரிசி "கர்த்தர் உன் துக்கத்தையும், உன் தத்தளிப்பையும், நீ அடிமையாக்கப்பட்டிருந்த கடினமான அடிமைத்தனத்தையும் நீக்கி, உன்னை இளைப்பாறப்பண்ணும்

அக்காலத்திலே, நீ பாபிலோன் ராஜாவின்மேல் சொல்லும் வாக்கியமாவது: ஒடுக்கினவன் ஒழிந்துபோனானே! பொன்னகரி ஒழிந்துபோயிற்றே! கர்த்தர் துஷ்டரின் தண்டாயுதத்தையும், அரசாண்டவர்களின் செங்கோலையும் முறித்துப்போட்டார். உக்கிரங்கொண்டு ஓயாத அடியாய் ஜனங்களை அடித்து, கோபமாய் ஜாதிகளை அரசாண்டவன், தடுப்பாரில்லாமல் துன்பப்படுத்தப்படுகிறான்" (ஏசா. 14:3–6) என்று கூறுகிறார். (25)

முதலாவது உயிர்த்தெழுதலுக்கும் இரண்டாவது உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட ஆயிரம் வருடகாலத்தில் மனந்திரும்பாத பாவிகளைக் குறித்த நியாயவிசாரணை நடைபெறும். அந்த நியாயவிசாரணை கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பின்னர் இருக்கும் என்பதைப் பவுல் அப்போஸ்தலன்: "ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்" (1 கொரி. 4:5) என்று விவரிக்கிறான். இதைக்குறித்து தானியேல் "நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டாகவும், நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் காலம் வருமட்டாகவும்" (தானி. 7:21) என்கிறார். இந்தக் காலத்தில் நீதிமான்கள் தேவனுடைய ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருந்து அரசாளுவார்கள். வெளிப்படுத்தல் புத்தகத்தில் யோவான் சொல்லுவதாவது: "நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்"–வெளி. 20:4,6. பவுல் 1 கொரி. 6:2–ல் கூறியபடி பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பது இந்தக் காலத்திலேதான். கிறிஸ்துவோடு சேர்ந்து அவர்கள் பாவிகளை நியாயந்தீர்ப்பார்கள். பாவிகள் தங்களது சரீரத்திலே செய்த ஒவ்வொரு செய்கையும் வேதாகமமாகிய

சட்டப்புத்தகத்தோடு ஒப்பிடப்பட்டு அவர்கள் செய்தது அநீதியானதே என்பது தீர்மானிக்கப்படும். பிறகு அவரவர் செய்த பாவக் கிரியைகளுக்கு ஏற்றவாறு அவர்கள் அடையவேண்டிய தண்டனையின் கடுமை தீர்மானிக்கப்படும். இவை யாவும் மரணபுத்தகத்திலே அவரவர் பெயர்களுக்கு நேராக எழுதப்படும். (26)

கிறிஸ்துவும் அவரது ஜனங்களும் பாவம் செய்த மனிதர்களை மட்டுமல்ல, சாத்தானையும் அவனது தூதர்களையுங்கூட நியாயந்தீர்ப்பார்கள். "தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா?" (1 கொரி. 6:3), யூதாவும் "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்" (யூதா 1:6) என்கிறார். (27)

ஆயிரமாண்டு முடியும்பொழுது, இரண்டாவது உயிர்த்தெழுதல் நடைபெறும். அப்பொழுது தங்களுக்கென்று எழுதப்பட்டிருக்கிற தண்டனையைப் பெற்றுக்கொள்ளும்படியாக அக்கிரமக்காரர்கள் உயிர்த் தெழுந்து தேவன் முன்பாக நிற்பார்கள். இதைப்பற்றி ஏசாயா: "அவர்கள் கெபியில் ஏகமாய்க் கட்டுண்டவர்களாகச் சேர்ந்து, காவலில் அடைக்கப்பட்டு, அநேகநாள் சென்றபின்பு விசாரிக்கப்படுவார்கள்" (ஏசாயா 24:22) என்கிறார். (28) ★

# 42

# போராட்டம் முடிவடைகிறது!

**(மூலநூல் : The Great Controversy, பக்கம்: 662–678)**

ஆயிரம் ஆண்டுகள் முடிந்தபிறகு கிறிஸ்து மீண்டும் பூமிக்குத் திரும்புகிறார். மீட்கப்பட்ட பரிசுத்த கூட்டமும் அவரோடுகூட வருகிறது. அவருக்குச் சேவைசெய்யும்படி ஒரு பெரிய தேவதூதர்கள் கூட்டமும் அவரோடுகூட வருகிறது. ஒப்பற்ற கம்பீரத்தோடு இறங்கி வந்துகொண்டிருக்கும்பொழுதே பூமியில் மரித்துப்போய்க்கிடக்கும் அக்கிரமக்காரர்களைக் கிறிஸ்து உயிரோடு எழுப்புகிறார். ஏனென்றால் அவர்கள் தங்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறதே. அவர்கள் ஒரு வல்லமையான சேனையைப்போல கடற்கரை மணலத்தனையாக எழுந்து வருகிறார்கள். முதலாவது உயிர்த்தெழுதலில் உயிர்த்து வந்தவர்களுக்கும் இவர்களுக்கும்தான் எத்தனை வித்தியாசம்! முதலாவது உயிர்த்தவர்கள் உயிர்த்தெழுந்த பொழுது, நித்திய இளமையும் அழகும் அவர்களைப் போர்த்தியிருந்தது. ஆனால் இந்த அக்கிரமக்காரர்களோ பிணி மரணம் ஆகியவற்றின் தடயங்களை அப்படியே தரித்தவர்களாக உயிர்த்தெழுந்திருக்கிறார்கள். (1)

அந்தப் பெருந் திரள் கூட்டத்திலிருக்கும் அனைவருடைய கண்களும் வானிலிருந்து இறங்கிவரும் தேவகுமாரனுடைய மகிமையைக் காணும்படி அவர் பக்கம் திரும்புகின்றன. வியப்பின் மிகுதியால் தெய்வீக நாமத்தோடு வந்திருக்கும் இவர் எத்துணை ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று அவர்கள் எல்லோரும் ஒரே குரலாகக் கூறுகிறார்கள். இயேசுவின்மீது வைத்த அன்பினாலே கூறப்பட்ட வார்த்தைகள் அல்ல இவை. விருப்பமில்லாத உதடுகள் சத்தியத்தின் வல்லமையால் அசைக்கப்பட்டதால் உதிர்க்கும் வார்த்தைகளே இவை. கிறிஸ்துவை பகைக்கும் இருதயத்தோடும் அவருக்கு எதிராகக் கலகஞ்செய்யும் ஆவியோடும் அவர்கள் தங்களது கல்லறைகளுக்குள் இறங்கினார்கள். அதே பகைக்கும் இருதயத்தோடும் கலக ஆவியோடும்

கல்லறையிலிருந்து இப்பொழுது வெளிவந்திருக்கிறார்கள். தங்களுடைய கடந்தகால வாழ்க்கையின் குறைபாடுகளைச் சரிசெய்துகொள்ளும்படியாக இன்னொரு தருணம் அவர்களுக்கு கொடுத்தாலும் அதனால் நன்மை ஏதும் விளையப்போவது இல்லை. தங்களது வாழ்க்கையில் இடைவிடாது அவர்கள் செய்து குவித்த பாவங்கள் அவர்களது இருதயத்தை தேவனுக்கு எதிராக நிரந்தரமாகக் கடினப்படுத்திவிட்டன. ஆகவே இன்னொரு தருணம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டால் அதிலும் அவர்கள் தேவப்பிரமாணத்தைத் மீறிநடக்கவும் அதேபோல் நடக்க மற்றவர்களைத் தூண்டிவிடவும் செய்வார்களேயன்றி மற்றபடி மனந்திரும்பமாட்டார்கள். (2)

கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பின்னர் நாற்பதாம் நாளிலே தமது சீடர்களிடம் கடைசியாக ஒலிவ மலையிலே சந்தித்துப் பேசினார். பிறகு அந்த மலையிலிருந்து மேகங்களாலே வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். சென்ற விதமாகவே அவர் திரும்பவும் வருவார் என்று தேவதூதர்கள் அவரது வருகையின் வாக்குத்தத்தத்தை எடுத்துரைத்தனர். அதே ஒலிவமலையிலே கிறிஸ்து இப்பொழுது மறுபடி வந்திறங்குவார். இதைப்பற்றி: “என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.... அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன்நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்” (சகரியா 14:5,4,9) என்கிறது. புதிய எருசலேம் பரலோகத்தைவிட்டு வரும்பொழுது கண்ணைப் பறிக்கும் அழகுடன் வருகிறது. அதற்கென பரிசுத்தமாக்கி ஆயத்தப்படுத்தப்பட்ட ஸ்தலத்தின்மேல் அமர்கிறது. கிறிஸ்து அவரது ஜனங்களோடும் தேவதூதர்களோடும் பரிசுத்த நகரத்திற்குள்ளே பிரவேசிக்கிறார். (3)

இப்பொழுது சாத்தான் தானே பெரியவன் என்பதைக் காட்டும்படி ஒரு கடைசிப் பெரும் யுத்தத்திற்கு ஆயத்தமாகிறான். கடந்த ஆயிரம் ஆண்டுகளாக தனது வல்லமை பறிக்கப்பட்டவனாக யாரையும் ஏமாற்றமுடியாதவனாக இருந்ததினால் சலிப்படைந்து வெறுத்துப்போன நிலையில் இனி தனக்குத் தோல்வியே என்று இருந்தான். ஆனால் மரித்துப்போயிருந்த பெருந்திரளான அக்கிரமக்காரர்கள் உயிர்த்தெழுந்து தனக்கு ஊழியம் செய்யத் தயாராக நிற்பதைப் பார்த்ததும் அவனுக்கு மீண்டும் ஒரு நம்பிக்கை துளிர்க்கிறது. தான் தொடங்கிய யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தியே தீருவது என்று முடிவு செய்கிறான். இரட்சிப்பை இழந்துவிட்ட அனைவரையும் ஒரு பெரும்படையாகத்

தனது பக்கம் திரட்டி, அவர்களைக்கொண்டு தனது யுத்தத்தை நடத்தத் திட்டம் தீட்டுகிறான். உயிர்த்தெழுந்திருக்கும் அக்கிரமக்காரர்கள் எல்லா வகையிலும் சாத்தானுடையவர்களே. அவர்கள் என்றைக்கு கிறிஸ்துவைத் தங்கள் ராஜாவாக இருக்கக்கூடாது என்று தள்ளிவைத்தார்களோ அன்றே அவர்கள் கலகத் தலைவனாகிய சாத்தானை தங்களது ராஜாவாக ஏற்றுக்கொண்டார்கள். ஆகவே அவர்கள் அவனுடைய ஆலோசனைகளைக் கேட்கவும் அவன் கட்டளைப்படி நடக்கவும் தயாராகவே இருக்கிறார்கள். சாத்தான் எப்பொழுதும் செய்யும் கள்ளத்தனம் அதாவது தேவனின் எதிரியாகக் காட்டிக்கொள்வதில்லை. அதன்படி இப்பொழுதுங்கூடத் தன்னை ஒரு நீதிமானாகவே காட்டிக்கொள்ளுகிறான். இந்தப் பூமியின் நியாயமான அதிபதி தான்தான் என்றும், தன்னுடைய இந்தச் சுதந்திரமானது சட்டத்திற்குப் புறம்பான வகையில் தன்னிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறது என்றும் அறிவிக்கிறான். ஏமாறுவதற்குத் தயாராகத் தன்முன் நின்றுகொண்டிருப்போரைப் பார்த்து: “நானே உங்கள் மீட்பர். உங்களை உங்களது கல்லறைகளிலிருந்து நான்தான் எனது வல்லமையால் உயிரோடு எழுப்பினேன் என்பதை நிச்சயமாக அறியுங்கள். இப்பொழுது இந்த உலகத்தின்மேல் சாத்தானின் கொடுங்கோல் ஆட்சி நடக்கவிருக்கிறது. இதிலிருந்து உங்களை நான் காப்பாற்றுவேன். நீங்கள் என்மீது நம்பிக்கைகொண்டு திடனாயிருங்கள்” என்றுகூறி, அவர்களை ஊக்கப்படுத்துகிறான். கிறிஸ்து இப்பொழுது தன்னை அவர்களிடமிருந்து முற்றிலுமாக விலக்கிக்கொண்டிருக்கிறார். ஆகவே சாத்தான் அவர்களை தனது விருப்பத்திற்கேற்றபடி ஏமாற்றமுடியும். பல அற்பதங்களை அவர்கள்முன் செய்துகாட்டி, தான் சொன்ன யாவற்றையும் அவர்கள் நம்பும்படிச் செய்கிறான். தனது ஆவியை அவர்கள்மேல் ஊற்றி, அவர்களுக்கு வல்லமை கொடுத்து, பலவீனர்களையும் பலவான்கள்போல் ஆக்குகிறான். அதன் பின்னர், தனது தலைமையில் தேவ பட்டணத்திற்குள் இருக்கும் பரிசுத்தவான்களுக்கு எதிராகப் படையெடுத்து, அந்தப் பட்டணத்தைப் பிடிக்கவேண்டும் என்கிற தனது திட்டத்தைக் கூறுகிறான். மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த நபர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையுள்ளவர்களாகத் தன்முன் நிற்பதைப் பிசாசுக்கே உரிய பெருமிதத்தோடு சுட்டிக்காட்டுகிறான். சுட்டிக்காட்டி அவர்களது தலைவன் என்கிற முறையில், தன்னால் அந்தப் பட்டணத்தைக் கைப்பற்றவும் தனது சிங்காசனத்தையும் இராஜ்யத்தையும் திரும்ப அடையவும் முடியும் என்று உறுதி கூறுகிறான். (4)

மிகப்பெருந்திரளான அந்த மனிதக் கூட்டத்தில் ஜலப்பிரளயத்திற்கு முன்னர் நீண்ட காலம் வாழ்ந்த மனிதர்கள் இருக்கிறார்கள். நல்ல உயரமான உருவமும் சிறந்த அறிவு நுட்பமும் உடையவர்கள் அவர்கள். பிசாசுகளின் தூண்டுதலுக்கு இடம் கொடுத்ததினால் தங்களது வல்லமை,

தங்களது அறிவு ஆகிய அனைத்தையும் சுயப் பெருமைக்காகப் பயன்படுத்தியவர்கள் அவர்கள். உலகமே வியந்து போற்றும்படியான அரிய கலைத் திறமை படைத்தவர்கள் அவர்கள். அதே சமயத்தில், கொடுமை செய்வதில் சாதுர்யமும் தீமைசெய்வதில் புத்திசாலித்தனமும் காட்டி, அதனால் பூமியைத் தீட்டுப்படுத்தி, தங்களிலே இருந்த தேவனின் சாயலைக் கலைத்துப்போட்டவர்கள் அவர்கள். அதனால் தேவனாலே இப்பூமியிலிராதபடி துடைத்துப் போடப்பட்டவர்கள். இவர்களைத் தவிர, அந்தப் பெருங்கூட்டத்தில் பெரிய ராஜாக்களும் பெரும் தளபதிகளும் இருந்தார்கள். இவர்கள் ராஜ்யங்கள் பலவற்றை வென்றவர்கள். தோல்வியையே சந்தித்திராத பெரும் யுத்தவீரர்கள். தன்னம்பிக்கையும் வெற்றியில் நோக்கமும் உடைய இவ்வீரர்களைக் கண்டு, ராஜ்யங்கள் நடுநடுங்கின. மரித்து உயிர்த்தெழுந்திருக்கிற இவர்கள் தங்களது சிந்தனைகளிலும் செயல்களிலும் எவ்வித மாற்றமும் இன்றி, இறந்தபொழுது இருந்தவண்ணமே இப்பொழுதும் இருக்கிறார்கள். யுத்தம் செய்யவேண்டும் அதில் வெற்றி பெறவேண்டும் என்ற வெறியுடனே மரித்த இவர்கள் கல்லறையை விட்டு வெளியே வரும்பொழுதும் அதே வெறியுடனே வந்திருக்கிறார்கள். (5)

சாத்தான் முதலில் தனது தூதர்களைக் கலந்தாலோசிக்கிறான். யுத்த வல்லுநர்களையும் கலந்தாலோசிக்கிறான். அவர்கள் தங்களது பலத்தையும் எண்ணிக்கையையும் பார்க்கிறார்கள். பிறகு தேவபட்டணத்திற்கு உள்ளே இருப்பவர்களது எண்ணிக்கை தங்களது எணிணிக்கையைவிட மிகவும் குறைவாக இருப்பதால் அதைப் பிடிப்பது எளிதுதான் என்று முடிவுசெய்கிறார்கள். புதிய எருசலேமின் செல்வங்களையும் மகிமையையும் தங்களுடையதாக ஆக்கிக்கொள்ளத் திட்டம் தீட்டுகிறார்கள். உடனடியாக எல்லோரும் யுத்தத்திற்கு ஆயத்தப்படத் தொடங்குகிறார்கள். தொழில் நுட்பம் தெரிந்த அவர்கள் யுத்த சாதனங்களைத் தயாரிக்கிறார்கள். வெற்றிக்குப் பேர்பெற்ற இராணுவத் தலைவர்கள், போர்த்திறம் நிறைந்த மனிதர்களைக் கொண்டு யுத்த வியூகங்களை வகுக்கிறார்கள். (6)

ஆயத்தங்கள் அனைத்தும் செய்யப்படுகின்றன. தாக்கும்படியாக முன்னேறிச்செல்ல உத்தரவு கொடுக்கப்படுகிறது. சமுத்திரம்போன்ற சேனை நகர ஆரம்பிக்கிறது. இப்பூமியில் முதலாவது யுத்தம் எப்பொழுது நடந்ததோ அப்பொழுது முதல் இப்பொழுது வரை எத்தனையோ சேனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த அத்தனை சேனைகளின் மொத்தத் தொகுப்புதான் இப்போதைய சேனை. இதுவரை எந்தத் தளபதியும் நடத்தியிராத மகாப் பெரிய சேனையாகிய இந்த சேனைக்கு நிகரான சேனை வேறொன்றும் எப்பொழுதும் இருந்ததில்லை. மிகப்பெரிய யுத்தவீரனாகிய

சாத்தான் தானே இந்தப் படையை முன்னின்று நடத்துகிறான். தேவனோடு செய்யும் கடைசி யுத்தமாகிய இதில் சாத்தானுக்குத் துணையாக அவனுடைய தூதர்கள் இணைந்து நிற்கிறார்கள். அவனுடைய அணிவகுப்பிலே ராஜாக்களும் பராக்கிரமசாலிகளும் இருக்கிறார்கள். திரளான சேனை பெரும் பெரும் அணிகளாக அவரவர்க்கு நியமிக்கப்பட்ட தலைவர்களைத் தொடர்ந்து செல்லுகிறது. பூமியின் பரப்பு முழுவதும் உடைந்துபோய் மேடுபள்ளமாக இருந்தபோதிலும், இராணுவத்திற்கே உரிய திட்டமான வகைகளில் இந்தச் சேனை நெருங்கிச் சேர்ந்து தேவபட்டணத்தை நோக்கி முன்னேறுகிறது. புதிய எருசலேமின் வாசல்களை மூடிவிடும்படி இயேசு உத்திரவிடுகிறார். சாத்தானுடைய சேனைகள் பட்டணத்தைச்சுற்றி வளைத்து நின்று தாக்குவதற்குத் ஆயத்தமாக இருக்கிறார்கள். (7)

அப்பொழுது இயேசு மீண்டும் ஒரு முறை தனது எதிரிகள் அனைவருக்கும் முன்பாகத் தோன்றுகிறார். நகரத்திற்கு நேர்மேலாக மிகுந்த உயரத்தில் தங்கத் தளத்தின்மேல் ஓங்கி உயர்ந்ததாக ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருக்கிறது அந்தச் சிங்காசனத்தில்மேல் தேவகுமாரன் அமர்ந்திருக்கிறார். அதிகாரமும் கம்பீரமும் மிகுந்த கிறிஸ்துவின் தோற்றத்தை வருணிக்க வல்லவரும் இல்லை. வார்த்தைகளும் இல்லை. நித்திய பிதாவினுடைய மகிமை அவரது குமாரனைச் சூழ்ந்திருக்கிறது. அவரது பிரசன்னத்தின் பிரகாசம் தேவபட்டணத்தை நிறைத்தது மட்டுமன்றி, அதன் வாசல்களையும் தாண்டி வெளியேறி, பூமி முழுவதையும் ஒளியால் நிறைக்கிறது. (8)

ஒரு காலத்தில் சாத்தானுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதையே தங்களின் இலட்சியமாகக்கொண்டிருந்து, பிறகு எரிகிற நெருப்பில் இருந்து பிடுங்கப்பட்ட உத்திரம் போல அதிலிருந்து தப்பி வந்து, தங்களது இரட்சகரை ஆழமான உறுதியான விசுவாசத்தோடு பின்பற்றின மனிதர்கள் மற்ற எல்லோரையும்விட சிங்காசனத்திற்கு மிக அருகில் இருந்தனர். இவர்களுக்கு அடுத்தபடியாக பொய்யான சத்தியங்களும் அவிசுவாசமும் சூழ்ந்திருந்த நிலையிலுங்கூட தங்களைக் கிறிஸ்தவ குணலட்சணங்களால் நிறைத்துக்கொண்டவர்கள், யுகயுகமாகத் தங்களது விசுவாசத்தினிமித்தம் இரத்தசாட்சியாய் மரித்த இலட்சக்கணக்கான மனிதர்கள் இடம்பெற்றிருந்தனர். இதற்கும் அப்பால் ... “சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து” (வெளி. 7:9) நின்றார்கள். அவர்கள் அனைவரும் யுத்தத்தை முடித்தவர்கள். வெற்றியை அடைந்தவர்கள்.

அவர்கள் பந்தய ஓட்டத்தை முடித்துப் பரிசைப்பெற்றுக்கொண்டவர்கள். அவர்கள் தங்களது கையில் பிடித்திருந்த குருத்தோலைகள் அவர்கள் பாவத்தின்மீது கொண்ட வெற்றியின் சின்னமாகும். அவர்கள் தரித்திருந்த வெள்ளை அங்கிகள் அப்பழுக்கற்ற கிறிஸ்துவின் மாசற்ற நீதியைத் தரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதின் அடையாளமாகும். (9)

மீட்கப்பட்டவர்கள் அனைவரும் கிறிஸ்துவைப் புகழ்ந்து ஒரு பாட்டைப் பாடுகிறார்கள். "இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக" (வெளி. 7:10) என்று அந்தப் பாட்டு ஒலிக்கிறது. அது பரலோகம் முழுவதும் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது. அப்பொழுது தேவதூதர்களும் சேராபீன்களும் இணைந்து குரல்கொடுத்து, புகழ்ந்து பாடுகின்றனர். இப்பொழுது மீட்கப்பட்டிருப்பவர்கள் அனைவரும் சாத்தானது வல்லமையையும் கொடிய குணத்தையும் அனுபவ ரீதியாகப் பார்த்தவர்கள். கிறிஸ்துவின் வல்லமை அல்லாத வேறெந்த வல்லமையும் சாத்தானிடமிருந்து தங்களுக்கு வெற்றியைத் தந்திருக்க முடியாது என்பதை இவர்கள் முன்னெப்போதையும்விட இப்பொழுது மிகத் தெளிவாக அறிந்திருக்கிறார்கள். பிரகாசிக்கிற ஒளியை உடைய அந்தக் கூட்டத்தாரில் தங்களுடைய சொந்த வல்லமையாலும் நற்குணங்களாலும் சாத்தானைத் தோற்கடித்தோம் என்று யாருமே தங்களைத் தாங்களே புகழ்ந்து கூறமாட்டார்கள். அவர்கள் பாடும் அந்தப் பாடல்களில் அவர்கள் செய்த பராக்கிரமங்கள் பற்றியோ அடைந்த இன்னல்கள் பற்றியோ எதுவுமே இராது. அதற்குப்பதிலாக இரட்சிப்பின் மகிமை எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்குமே உரியது என்பதே ஒவ்வொரு பாட்டினுடைய கருத்தாகவும் காவியமாகவும் இருக்கும். (10)

பரலோகத்தில் குடியிருப்போர் பூலோகத்தில் குடியிருப்போர் அனைவருக்கும் முன்பாகத் தேவகுமாரனது முடிசூட்டு விழா நடந்தேறுகிறது. இப்பொழுது முடிசூட்டப்பட்ட இந்த ராஜாதி ராஜா தனக்கு உள்ள ஒப்பில்லா வல்லமையையும் அதிகாரத்தையும் பயன்படுத்தித் தனது இராஜ்யத்திற்கு எதிராகக் கலகம் செய்த அனைவருக்கும் தீர்ப்பு வழங்குகிறார். தன்னுடைய பிரமாணங்களை மீறிநடந்து, தன்னுடைய மக்களைக் கொடுமைப்படுத்தியவர்கள்மேல் நீதியை அமுல்படுத்துகிறார். தீர்க்கதரிசி: "பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம்

என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்” (வெளி. 20:11–12) என்கிறார்.()

பாவங்கள் அனைத்தும் பதிவுசெய்யப்பட்டிருக்கும் புத்தகங்கள் திறக்கப்பட்டபொழுது, இயேசுவின் கண்கள் பூமியில் நிற்கும் அக்கிரமக்காரர்களை நோக்கிப் பார்க்கின்றன. அப்பொழுது அவர்கள் தாங்கள் செய்த ஒவ்வொரு பாவத்தையும் நினைவுகூருகின்றனர். தங்களது வாழ்க்கைப் பாதையில் தங்களது கால்கள் புனிதத்தன்மை பரிசுத்தத்தன்மை ஆகியவற்றைவிட்டு வழிவிலக ஆரம்பித்தது எங்கே என்பதைத் தெளிவாகப் பார்க்கின்றனர். தேவனுக்கு எதிராகத் தாங்கள் கொண்ட கர்வமும் செய்த கலகமும் தேவப்பிரமாணத்தை எந்த அளவிற்கு மீறும்படித் தங்களை நடத்தியிருக்கிறது என்பதை அவர்கள் உணருகிறார்கள். பாவத்திலே மூழ்கி மூழ்கிப் பாவத்தின் வேட்கையைத் தங்களிடம் வளர்த்துக்கொண்டது, தேவனளித்த ஆசீர்வாதங்களை அற்பக் காரியமாக எண்ணியது, தேவ செய்தியைக் கொண்டுவந்தவர்களை ஏளனம் செய்தது, கொடுக்கப்பட்ட எச்சரிப்புகளையெல்லாம் புறக்கணித்தது, தங்களை நோக்கிவந்த இரக்கத்தின் அலைகளை ஏற்றுக்கொள்ளாத பாறைபோல தங்கள் இருதயத்தை வைத்துக்கொண்டது ஆகிய அனைத்து உண்மைகளும் நெருப்பாலான எழுத்துக்களால் எழுதப்பட்டதுபோன்று மிகத்தெளிவாக அவர்களுக்குத் தெரிகின்றது. (12)

சிங்காசனத்திற்கு மேலாகச் சிலுவைக்காட்சி தோன்றுகிறது. அதில் ஆதாம் வஞ்சிக்கப்பட்டுப் பாவம்செய்தது முதலாக இரட்சிப்பின் திட்டத்தில் பல்வேறு படிகள்கொண்ட ஒரு நீண்ட காட்சித் தொடரை அவர்கள் காணுகிறார்கள். இரட்சகரின் இளமை வாழ்க்கை, யோர்தானில் அவர் எடுத்துக்கொண்ட ஞானமுழுக்கு, அவரது வனாந்திர உபவாசம், சோதனை, அனைவருக்கும் தெரியும்படி அவர்செய்த மூன்றரை ஆண்டுகால ஊழியம், அப்பொழுது ஒப்பற்ற பரலோக பாக்கியங்களைக் குறித்து அவர் செய்த போதனைகள், மக்களிடம் அன்பும் இரக்கமும் பாராட்டி அவர் செய்த அற்புதங்கள், மலையில் தனிமையிலே அவர் விழுந்து இரவு முழுவதும் ஏறெடுத்துக்கொண்டிருந்த ஜெபங்கள், அவர்செய்த நன்மைகளுக்குப் பதில்செய்யும்படியாக மனிதர்கள் அவர்மேல் பொறாமை கொண்டு அவரை வெறுத்து கொலைசெய்யத் திட்டம் தீட்டியது, கெத்செமனே தோட்டத்தில் அவர் உலகின் பாவச் சுமைகளால் அழுத்தப்பட்டு, பயங்கரமும் கொடூரமுமாக வேதனைகளை அனுபவித்தது, கொலை வெறிகொண்ட கூட்டத்தாரிடம் அவர்

ஒப்படைக்கப்பட்டது, இயேசுவைக் கைவிட்டு சீடர்கள் ஓடிவிடுவது, எதிர்ப்புத் தெரிவிக்காத கைதியாக இயேசு நடந்துகொள்வது, இரவோடு இரவாக செருக்குமிகுந்த காவலாளிகளால் நடத்தப்பட்டு பிரதான ஆசாரியனது மாளிகையில் அன்னா முன்பாக நிறுத்தப்படுவது, பிலாத்துவின் விசாரணை மன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுவது, கோழையும் கொடியவனுமான ஏரோது முன்பு நிறுத்தப்படுவது, பின்பு கேலிசெய்யப்பட்டு ஏளனம்செய்யப்பட்டு சித்திரவதைசெய்யப்பட்டு கொலைக்கு ஒப்புக்கொடுக்கப்படுவது ஆகிய எல்லாக் காட்சிகளையும் அங்கே அவர்கள் தெளிவாகக் காணுகிறார்கள். (13)

இவையெல்லாவற்றையும் கண்டு அதிர்ந்துபோயிருக்கும் மனிதர்களுக்கு முன்பாக சிலுவையின் கடைசிக் காட்சிகள் தொடர்ந்து காட்டப்படுகின்றன. அத்தனை துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு வாய்பேசாதவராக இயேசு கல்வாரியை நோக்கிச்செல்வது, பரலோகத்தின் பிரபுவாகிய அவர் சிலுவையில் தொங்குவது, திமிர்பிடித்த ஆசாரியர்களும் ஏளனம் செய்யும் குருமார்களும் அவரது மரண வேதனையைக் குறித்துக் கேலிபேசுவது, அதிசயமான இருள் சிலுவையை மூடிநிற்பது, இரட்சகர் மரித்த வேளையில் நிலம் பிளந்து கற்கள் வெடித்துக் கல்லறைகள் திறப்பது ஆகிய காட்சிகளையும் அவர்கள் காண்கிறார்கள். (14)

பெருங்கிலேசத்தை உண்டுபண்ணும் இக்காட்சிகள் அன்று நடந்த அதேவிதமாக அப்படியே காட்டப்படுகின்றன. சாத்தானும் அவனது தூதர்களும் அவனது பிரஜைகளும் தாங்கள் நடத்துவித்த இக்காட்சிகளை கண்கொட்டாமல் பார்க்கின்றனர். இக்காட்சிகளில் பங்கேற்கும் ஒவ்வொருவனும் தான்செய்த பங்கை அப்படியே நினைவு கூருகிறான். இஸ்ரவேலின் ராஜாவைக் கொலைசெய்யத் திட்டமிட்டு பாவமறியாத பெத்லகேமின் குழந்தைகளைக் கொன்று குவித்த ஏரோது ராஜா, யோவானின் இரத்தத்தைச் சிந்திய பாவத்திற்குக் காரணமாக இருந்த கீழ்மகளாகிய ஏரோதியாள், முதுகெலும்பு இல்லாமல் கொலை வெறியர் கூச்சலுக்கு வளைந்து கொடுத்த பிலாத்து, பரிசகாசம் செய்த ரோமவீரர்கள், அவனது இரத்தம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று கத்திய ஆசாரியர்கள், அதிகாரிகள் மற்றும் மதம் பிடித்துப்போயிருந்த மனிதர்கள் ஆகிய அனைவரும் தாங்கள் செய்த செயல்களின் கொடூரமான பாவத்தன்மையை உணருகிறார்கள். அவர்கள் வெறுத்த அந்த நபர், இதோ, தெய்வீகத் தோற்றமாக அமர்ந்திருக்கிறார். அவரது முகம் சூரியனைவிடவும் அதிக மகிமையோடு பிரகாசிக்கிறது. அந்த முகத்தைப் பார்க்காமல் ஒளிந்துகொள்ள அவர்கள் முயலுகிறார்கள்.

ஆனால் மீட்கப்பட்டவர்களோ தங்களது கிரீடங்களை அவரது பாதபடியில் வைத்து, இவர் எங்களுக்காக மரித்தாரே என்று ஆனந்தமகிழ்ச்சியுடன் வியப்படைகிறார்கள். (15)

கிரயம் கொடுத்து மீட்கப்பட்டவர்கள் மத்தியிலே கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள். தீவிரம் மிகுந்த பவுல், பேச்சு சாதுர்யம் மிகுந்த பேதுரு, அதிகமாக அன்புசெய்யப்பட்டவனும் அன்பு செய்தவனுமாகிய யோவான் மற்றும் சத்தியம் நிறைந்த இருதயங்கொண்ட அவனது சகோதரர்கள், அவர்களோடு சேர்ந்து இரத்தசாட்சியாக மரித்த பெருந்தொகையான பாக்கியவான்கள் இவர்கள் அனைவரும் அங்கே இருக்கிறார்கள். ஆனால் அவர்களை உபத்திரவப்படுத்தியவர்கள், சிறையில் தள்ளியவர்கள், கொலை செய்தவர்கள், மற்றும் அனைத்துவிதமான கொடுமையும் தூஷண குணமும் கொண்டவர்கள் எல்லோரும் பட்டணத்திற்கு வெளியே இருக்கிறார்கள். கொடூரமும் தீமையுமே உருவான மிருகம் போன்ற நீரோ இதோ அங்கே இருக்கிறான். அவன் பரிசுத்தவான்களைச் சித்திரவதை செய்தவன். அவர்களை வேதனையின் எல்லைவரை கொண்டுசென்று கொடூர மகிழ்ச்சி கொண்டவன். அவனது தாய் அங்கே இருக்கிறாள். இவளும் தான் விதைத்த விதைகளின் பலனைக் காண்கிறாள். தன்னிடமிருந்து தன் மகனிடத்திற்குச் சென்ற தீய குணங்களும் தன்னால் உருவாக்கி வளர்த்துவிடப்பட்ட வெறிக் குணங்களும்சேர்ந்து பலன்கொடுத்திருப்பதையும் உலகையே திடுக்கிட வைத்த கொடுமைகளை அவன் செய்திருப்பதையும் பார்க்கிறாள். (16)

இதோ, போப்புமார்க்கத்தின் போதகர்களும் தலைவர்களும் அங்கே பட்டணத்திற்கு வெளியே இருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் என்று தங்களைக் கூறிக்கொண்டவர்கள். ஆனால் சித்திரவதை, சிறை, நெருப்புக்கம்பங்கள் ஆகியவற்றிற்குத் தேவ ஜனங்களை உட்படுத்தி, அவர்களது மனச்சாட்சியை அவித்துப்போட முயன்றவர்கள். அங்கே போப்புகள் இருக்கிறார்கள். தேவனுக்கும் மேலாகத் தங்களை உயர்த்தி, உன்னதமானவரின் பிரமாணங்களையும் மாற்றியமைக்கத் தங்களுக்கு அதிகாரம் உண்டு என்று கூறிப் பெருமையடித்துக்கொண்டவர்கள். சபையின் பிதாக்கள் என்று தங்களைக் கூறிக்கொண்ட இவர்கள் தாங்கள் செய்த அக்கிரமங்களுக்கெல்லாம் தேவனிடம் கணக்கு ஒப்புவிக்கத்தான் வேண்டும். எல்லாம் அறிந்த தேவன் தனது பிரமாணங்கள் குறித்துக் கண்டிப்புடையவராக இருக்கிறார் என்பதையும் அதை மீறுகிறவர்களை அவர் தண்டியாமல் விடார் என்பதையும் இப்பொழுது அவர்கள் அறிந்துகொண்டார்கள். ஆனால் இது காலங்கடந்து வந்த அறppt. தன் நிமித்தம் பாடுகளை ஏற்றுக்கொண்ட

ஜனங்களோடு கிறிஸ்து தன்னை ஒன்றாகப் பிணைத்துக்கொண்டிருக்கிறார் என்பதை அவர்கள் இப்பொழுது காண்கிறார்கள். "இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" (மத்தேயு 25:40) என்று இயேசு கூறியதன் முழுமையான பொருளை இன்று அவர்கள் புரிந்துகொண்டார்கள். (17)

அக்கிரம உலகம் இப்பொழுது முழுமையாக தேவனுடைய நியாயஸ்தலத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது. பரலோக ராஜ்யத்திற்கு எதிரான பெரும் துரோகக் குற்றம் அவர்கள்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்காகப் பரிந்துபேசுகிறவர்கள் யாருமே இல்லை. அவர்கள் செய்த துரோகத்தை மன்னிப்பதற்கு வழியே இல்லை. நித்திய மரணம் என்கிற தீர்ப்பு அவர்களுக்கு வழங்கப்படுகிறது. (18)

பாவத்திலே திளைத்தவர்கள் எல்லோருமே தங்களது சுதந்திரமான இயல்பைக்குறித்துப் பெருமைப்பட்டுக்கொண்டவர்கள். அதுவே திவ்ய வாழ்க்கை என்று எண்ணிக்கொண்டவர்கள். ஆனால் அது அப்படியல்ல் பாவம் என்பது அடிமைத்தனத்திற்கும் அழிவிற்கும் மரணத்திற்கும் வழிநடத்துவது என்பது இப்பொழுது தான் அவர்களுக்குப் புரிகிறது. தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தே வாழ்ந்ததின் மூலம் எவ்வளவு பெரிய இழப்பை அடைந்திருக்கிறோம் என்பதை அவர்கள் இப்பொழுது உணருகிறார்கள். கற்பனைக்கு எட்டாத மாபெரும் நித்திய மகிமை அவர்களுக்கு வழங்கப்பட்டபொழுது அவர்கள் அதை அருவருத்தார்கள். அந்த மகிமையை விட்டுவிட்டதற்காக இப்பொழுது எவ்வளவாக ஏங்குகிறார்கள். அழிந்துபோக இருக்கிற அந்த ஆத்துமாக்கள் ஒவ்வொன்றும் இது எல்லாமே எனக்குக் கிடைத்திருக்கமுடியுமே ஆனால் நானே இதை என்னைவிட்டுத் தள்ளிவிட்டேனே, எவ்வளவு பெரிய மதியீனன் நான். சமாதானம் மகிழ்ச்சி மேன்மை இவற்றை விட்டுவிட்டு, பரிதவிப்பு கேவலம் தத்தளிப்பு ஆகியவற்றைப் பற்றிக்கொண்டிருக்கிறேனே என்று இப்பொழுது கதறுகிறார்கள். தங்களுக்கு இந்தப் பெரும் பாக்கியம் கிடைக்காமல் போனது நியாயமானதே என்பதை அக்கிரமக்காரர்கள் தெளிவாகக் காணுகிறார்கள். தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையின்மூலமாக அவர்கள் இந்த இயேசு எங்களை ஆளக்கூடாது என்றுதானே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். (19)

தேவகுமாரன் முடிசூட்டிக்கொள்ளுவதை அக்கிரமக்காரர்கள் அனைவரும் மயக்கத்திலிருப்பவர்களைப் போலக் கண்கொட்டாமல் பார்க்கிறார்கள். தாங்கள் வெறுக்கவும் ஒதுக்கவும் செய்த நியாயப்பிரமாணங்கள் எழுதப்பட்ட கற்பலகைகள் அவரது கரத்தில் இருப்பதை அக்கிரமக்காரர்கள் காண்கிறார்கள். அதுமட்டுமல்ல, இரட்சிக்கப்பட்ட கூட்டத்தாரிடையே நிலவும்

எல்லையற்ற மகிழ்ச்சியின் ஆரவாரம் அவர்கள் தங்களை இரட்சித்தவர்கள் மேல்கொண்டிருக்கும் பெருமதிப்பு ஆகியவற்றையும் காண்கிறார்கள். அவர்கள் பாடுகின்ற பாடலோசை தேவபட்டணத்திற்கு வெளியே இருக்கும் திரளான கூட்டத்தின் நடுவே ஊடுருவி ஒலிக்கும்போது, அவர்கள் உண்மையை உணர்ந்தவர்களாக வியப்புமேலிட: "சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளி. 15:3) என்று ஒரே குரலில் அறிக்கையிடுகிறார்கள். அறிக்கையிட்டு அவருக்குமுன் நெருஞ்சாண்கிடையாக விழுந்து ஜீவாதிபதியாகிய அவருக்கு வணக்கம் செலுத்துகிறார்கள். (20)

கிறிஸ்துவினுடைய மகிமையையும் உன்னதத்தையும் கண்டு சாத்தான் உணர்விழந்தவன்போல ஆகிறான். தேவ சன்னதியில் நிற்கும் கேருபீனாக ஒரு காலத்தில் இருந்த அவன் தான் எப்படிப்பட்ட உயர்ந்த நிலையிலிருந்து விழுந்துவிட்டோம் என்பதை உணருகிறான். பிரகாசமான சேராபீனாக விடிவெள்ளியின் மகனாக இருந்தவன் எப்படி மாறிவிட்டான்! எவ்வளவாகக் கெட்டுப்போனான்! பரலோகத்தின் ஆலோசனைக் கூட்டங்களிலே அவன் கனம்பொருந்தியவனாக இருந்தானே, இப்பொழுது என்றென்றைக்குமாக ஒன்றுமில்லாதவனாகப் போனானே. இதோ, தனது மகிமையை மறைத்து பிதாவே அமர்ந்திருக்கிறார். அவருக்கு அருகில் லூசிபர் இருந்திருக்க வேண்டிய இடத்தில் வேறொருவன் அல்லவா இருக்கிறான். நெடிய உருவமும் கம்பீரமான தோற்றமுமுள்ள தேவதூதன் ஒருவன் வந்து கிரீடத்தை எடுத்து கிறிஸ்துவின் தலையில் வைப்பதை சாத்தான் பார்க்கிறான். அவனுடைய அந்த உன்னத ஸ்தானம் தன்னுடையதாக இருந்திருக்கமுடியும் என்பதையும் அவன் எண்ணிப்பார்க்கிறான். (21)

ஆதியிலே பாவமில்லாத பரிசுத்தவானாகத்தான் சாத்தானாகிய லூசிபர் இருந்தான். ஆதிமுதல் அவன் தேவனுக்கு எதிராக முறுமுறுக்கவும் கிறிஸ்துவிற்கு எதிராகப் பொறாமைப்படவும் தொடங்கின நாள் வரை தன்னில் சமாதானமும் திருப்தியுமே இருந்துவந்ததை சாத்தான் எண்ணிப்பார்க்கிறான். தேவனுக்கு எதிராக தான் குற்றச்சாட்டுகளை அடுக்கியது, அவருக்கு எதிராகக் கலகம் செய்தது, தேவதூதர்களின் அனுசரணையையும் ஆதரவையும் பெறுவதற்காக பல வஞ்சகங்கள் செய்தது ஆகியவையெல்லாம் அவனுக்கு மன்னிப்பை அளித்திருக்கமுடியும் என்கிற காலக்கட்டத்தில் தான் அந்த மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள எந்தவித முயற்சியும் எடுக்காமல் பிடிவாதமாக மறுத்துவிட்டது மிகத் தெளிவாக

அவனுக்குத் தெரிகிறது. தான் மனிதர்களிடத்திலே செய்த கிரியைகளையும் அவற்றின் விளைவுகளையும் குறித்துச் சிந்தித்துப் பார்க்கிறான். மனிதர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவர்மேல் ஒருவர் கொண்டிருந்த பகைகள், அதனால் ஏற்பட்ட பயங்கரமான உயிர்ச்சேதங்கள், இராஜ்யங்கள் தோன்றி மறைதல், சிங்காசனங்கள் கவிழ்க்கப்படுதல் மனித சரித்திரத்தின் தொடர் நெடுகிலும் எப்போதும் குழப்பங்களும் கலகங்களும் புரட்சிகளுமாகவே இருந்தது ஆகிய இவையெல்லாமே தன்னுடைய கைங்காரியங்கள் தான் என்பதை எண்ணிப் பார்க்கிறான். கிறிஸ்துவின் இரட்சிப்பின் வேலையை எதிர்த்து நின்று மனிதனைக் கீழாகவும் இன்னும் பாவக்குழியில் அமிழ்த்துவதற்கும் விடாமுயற்சியோடு செயல்பட்டுவந்திருப்பதைத் திரும்பத் திரும்ப எண்ணிப்பார்க்கிறான். ஆயினும் தங்களது நம்பிக்கையைக் கிறிஸ்துவின்மேல் வைத்துவிட்ட மனிதர்கள் யாரோ அவர்களைப் பொறுத்தவரை அழிவிற்கு உட்படுத்தும்படி தான் தீட்டிய அந்தகார சதித்திட்டங்கள் ஏதும் பலனளிக்கவில்லை என்பதை உணருகிறான். இப்பூமியில் தான் ஸ்தாபித்திருந்த இராஜ்யம் என்னவாயிற்று என்பதைச் சாத்தான் யோசித்துப்பார்த்தபோது, தான் உழைத்த உழைப்பின் பலன் என்ன என்பதைக் கவனித்துப் பார்த்தபோது தோல்வியையும் அழிவையுமே கண்டான். தேவப்பட்டணத்தைக் கைப்பற்றுவது எளிதான காரியம் என்று தன்னுடைய ஆட்களை நம்பவைத்திருந்தான். ஆனால் அது ஏமாற்றும் வேலை என்பது அவனுக்குத் தெரியும். இதுகாறும் நடந்துவந்திருக்கிற ஆன்மீகப் போராட்டத்தில் மீண்டும் மீண்டும் தான் தோற்கடிக்கப்பட்டிருப்பதையும் அந்தத் தோல்வியை ஒத்துக்கொள்ளவேண்டிய நேரம் வந்திருப்பதையும் அவன் அறிவான். நித்தியமான தெய்வத்தின் வல்லமையும் சக்தியும் எப்படிப்பட்டது என்பதையும் அவன் நன்றாகவே அறிந்துகொண்டிருக்கிறான். (22)

ஆதிமுதல் கலகக்காரனாக இருக்கும் சாத்தானின் நோக்கமெல்லாம் தான்செய்த கலகங்களுக்குக்காரணம்பரலோக அரசியல் அமைப்பில் இருக்கிற குறைகள் தான் என்பதை நிரூபித்து அதன் மூலம் தன்னை நியாயப்படுத்துவதே ஆகும். இந்த ஒரு நோக்கத்தை நிறைவேற்றும்படிக்கே அவன் தனது பெரும் ஞானத்தையெல்லாம் பயன்படுத்தி வந்திருக்கிறான். மிகவும் நிதானமாகவும் திட்டமிட்ட முறையிலும் செயல்பட்டு, யுகயுகமாக நடந்துவரும் இந்த ஆன்மீகப் போராட்டத்தில் நியாயம் தன் பக்கமிருக்கிறது என்பதை இப்போது ஒரு பெருந்திரளான கூட்டம் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்துவிட்டிருக்கிறான். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த வெற்றியை அடைந்திருக்கிறான். அவன் எப்படிப்பட்டவன், அவனது கிரியைகள் எப்படிப்பட்டவைகள் என்பதை எல்லாம் எல்லோருக்கும் வெளியரங்கமாக்குவதற்கான வேளை வந்துவிட்டது. கிறிஸ்துவிடமிருந்து சிங்காசனத்தைப் பறிப்பதற்கும் அவரது

ஜனங்களை அழிப்பதற்கும் தேவப்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்கும் இந்தப் பெரும்வஞ்சகன் எடுக்கும் இந்தக் கடைசி முயற்சிகளில் அவனது வஞ்சக நோக்கமெல்லாம் அம்பலமாகிறது. அவனது இராஜ்ஜியம் முற்றுமாகத் தோல்வியடைந்துவிட்டது என்பதை அவனோடு சேர்ந்த அனைவருமே உணருகிறார்கள். தேவராஜ்யத்திற்கு எதிராகச் சாத்தான் செய்துவந்த வஞ்சக வேலைகளின் முழுத்தன்மையையும் கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களும் அவருக்கு விசுவாசமாயிருந்த தேவதூதர்களும் மிக நன்றாக இப்போது அறிந்துகொள்ளுகிறார்கள். பிரபஞ்சத்தில் உள்ள அனைவருக்குமே சாத்தான் எவ்வளவு அருவருக்கத்தக்கவன் என்பது புரிகிறது. (23)

தன் மனம்போன போக்கிலேயே சென்று, தேவனுக்கு எதிராகக் கலகம் செய்ததன் நிமித்தம் பரலோகத்திற்குத் தகுதியில்லாதவனாக தான் ஆகிவிட்டோம் என்பது சாத்தானுக்குத் தெரிகிறது. தன்னிடம் உள்ள எல்லாத் திறமைகளையும் பயன்படுத்தி, தேவனுக்கு எதிராகக் கலகம் செய்வதற்காகவே பயிற்சிகொடுத்துக்கொண்டவன். ஆகவே இப்படிப்பட்ட கலக ஆவியை உடைய அவனுக்குப் பரலோகத்தில் நிலவும் பரிசுத்தம், சமாதானம், அன்னியோன்னியம் ஆகியவை பெரும் சித்திரவதையாக இருக்கும். இரக்கமற்றவர் நீதியில்லாதவர் என்று தேவனைக்குறித்துக் குற்றம்சாட்டிக்கொண்டே இருப்பதை இப்பொழுது விட்டுவிடுகிறான். ஏனெனில் அவன் எவ்வளவு கொடிய நயவஞ்சகன் என்பதை அனைவருமே அறிந்துகொண்டார்கள். தேவனைக்குறித்துத் தான் சொல்லிய தூஷணங்கள் அனைத்தும் தன்மேலேயே வந்துவிடிந்திருப்பதை சாத்தான் காண்கிறான். ஆகவே இப்பொழுது அவன் தலைகுனிந்து வணங்கி, தனக்குக் கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு நீதியானதே என்பதை அறிக்கையிடுகிறான். (24)

“கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின” (வெளி. 15:4) என்கிற வசனம் இப்பொழுது நிறைவேறுகிறது. நீண்டகாலமாக நடைபெற்றுவரும் இந்த மாபெரும் ஆன்மீகப் போராட்டத்தில் சத்தியம் எது, அசத்தியம் எது என்பது எல்லோருக்கும் தெளிவாக்கப்பட்டுவிட்டது. தேவனுடைய அரசாங்கத்திற்கு எதிராக இருக்கிற சாத்தானுடைய சட்டங்களின் வேலைகள் அண்ட சராசரத்தின் முன் வைக்கப்பட்டது. சாத்தானது கிரியைகளே அவனை இப்பொழுது குற்றஞ்சாட்டுகின்றன. தேவன் நல்லவர், நீதியானவர், ஞானமுள்ளவர் என்பதும் முற்றிலுமாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. இந்த

ஆன்மீகப் போராட்டத்தில் தேவன் நடந்துகொண்ட முறைகள், அவர் சுயநலமான வெற்றியை நாடுகிறவர் அல்ல, தான் படைத்த அனைத்து உலகங்கள் அவற்றிலுள்ள தன்னுடைய ஜனங்கள் ஆகியோருடைய நித்திய நன்மையையே நாடுகிறவர் என்பதும் தெளிவாக்கப்பட்டுவிட்டது. ஆகவே: "கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்; உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள்" (சங். 145:10) என்று தாவீது பாடி இருக்கிறான். பிரபஞ்சத்தில் புகுந்துவிட்ட பாவத்தின் சரித்திரம் எழுதி வைக்கப்பட்டிருக்கும். தேவன் படைத்த அனைத்து நபர்களின் நன்மையும் மகிழ்ச்சியும் அவருடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பதிலேதான் இருக்கிறது என்கிற உண்மைக்கு இந்த சரித்திரம் சாட்சியாக இருக்கும். இந்த ஆன்மீகப் போராட்டத்தைக் குறித்த அனைத்து உண்மைகளையும் அனைவருமே அறிவர். இந்த அறிவின் அடிப்படையில் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து நபர்களும் அதாவது தேவனுக்கு விசுவாசமாக இருந்தவர்கள் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தவர்கள் ஆகிய இரு சாராருமே ஒரே தொனியில் பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள் என்று கூறி அறிக்கையிடுவார்கள். (25)

மனிதனைப் பாவத்திலிருந்து மீட்பதற்காக பிதாவும் குமாரனும் செய்த ஈடற்ற தியாகத்தைப் பிரபஞ்சத்திலுள்ள அனைவரும் மிகத்திட்டமாக அறிந்துகொள்ளுகிறார்கள். இந்த அறிவின் அடிப்படையில் அனைவருக்கும் முன்பாகக் கிறிஸ்து அவருக்கு உரிய உன்னதமான ஸ்தானத்திலிருந்து மேலும் உயர்த்தப்பட்டு, எல்லா மகத்துவங்களுக்கும் எல்லா அதிகாரங்களுக்கும் எல்லா நாமங்களுக்கும் மேலாக மகிமைப்படுத்தப்படுகிறார். ஆனால் இதினாலெல்லாம் அவர் சந்தோஷப்படுகிறவர் அல்ல. அவருக்கு முன்னால் இருக்கும் பெரிய சந்தோஷம் தம்முடைய பிள்ளைகளை மகிமைக்குள் கொண்டுவர முடிந்ததே என்பதுதான். அவர் சிலுவையின் கொடிய மரணத்தை ஏற்றுக்கொண்டதற்கும் அதின் நிந்தையைப் பொருட்படுத்தாமலிருந்ததற்கும் காரணமாயிருந்தது அவர் முன்பாக வைக்கப்பட்டிருந்த இந்த சந்தோஷமே. அவர் அனுபவித்த துக்கமும் அவமானமும் கற்பனைக்கே எட்டாதவைகள்தான். ஆனால் அவருடைய பிள்ளைகள் அடையும் மகிமையும் அதனால் அவர் அடையும் மகிழ்ச்சியும் அதையும்விட மிகவும் அதிகமாக இருக்கும். தன்னால் மீட்கப்பட்டவர்களை அவர் பார்க்கிறார். அவர்கள் அவரது சாயலில் புதுப்பிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரது இருதயமும் முழுமையான தெய்வீகத் தன்மை பெற்றதாக விளங்குகிறது. அவர்கள் ஒவ்வொருவரது முகமும் அவர்களது ராஜாவின் முகத்தைப்போலவே பொலிவுள்ளதாக இருக்கிறது. அவர் அவர்களைக் காணும்பொழுது

தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு திருப்தியடைகிறார். பிறகு திரள்கூட்டமாக இருக்கும் நீதிமான்கள் அக்கிரமக்காரர்கள் இருவருக்குமே கேட்கும்படியான குரலில்: என் இரத்தத்தின் விலைக்கிரயமானவர்கள் இவர்களே. இவர்களுக்காகவே நான் பாடுபட்டேன். இவர்களுக்காகவே நான் மரித்தேன். நித்திய நித்திய காலமாக என்னுடனேயே இவர்கள் இருக்கவேண்டும் என்பதற்காகவே இப்படிச் செய்தேன் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார். அப்பொழுது வெள்ளை அங்கிகள் தரித்து சிங்காசனத்தைச் சுற்றி நிற்கும் நீதிமான்களிடமிருந்து: “அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்” (வெளி. 5:12) என்ற இனிமையான பாடல் ஒலிக்கிறது. (26)

தேவன் நீதியுள்ளவரே என்பதை ஒப்புக்கொண்டு கிறிஸ்துவின் மகத்துவத்திற்கு முன்பாக சாத்தான் பணிந்துகொண்டான் என்றாலும் அவனுடைய குணம் மாறிவிடவில்லை. ஆகவே கலகம் செய்யும் ஆவி ஒரு பெரும் வெள்ளம்போல மீண்டும் அவனில் பொங்குகிறது. தனது தோல்வியைக் கண்டு அவன் வெறிபிடித்தவனாகிறான். தான் ஆரம்பித்த ஆன்மீகத்திற்கு எதிரான போராட்டத்தில் பின்வாங்குவதில்லை என்று முடிவுசெய்கிறான். நம்பிக்கையற்ற இந்த நிலையிலும், பரலோகத்தின் ராஜாவிற்கு எதிரான போரில் கடைசிப் போராட்டம் ஒன்றை நடத்திப்பார்த்துவிடுவது என்று முடிவுசெய்கிறான். தனக்கு இதுவரையிலும் ஊழியம் செய்து போருக்கு ஆயத்தமடைந்து சுற்றிலும் நின்றுகொண்டிருக்கிறவர்களிடம் ஓடுகிறான். அவர்கள் மேல் தனது வெறியின் ஆவியை ஊற்றி, உடனடியாகப் போரில் இறங்கும்படி அவர்களைத் தூண்டிவிடுகிறான். ஆனால் அவர்கள் இப்பொழுது சாத்தானைக் குறித்து நன்கு அறிந்துகொண்டார்கள். அவர்கள்மேல் அவன் செலுத்திவந்த ஆதிக்கம் முடிந்துவிட்டது. சாத்தானை நம்பி தேவனுக்கெதிராகக் கலகத்தில் இறங்கின கோடான கோடிமக்கள் அங்கே நின்றுகொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களில் இப்பொழுது அவனைப் பொருட்படுத்துகிறவர்கள் ஒருவரும் இல்லை. சாத்தான் எப்படி தேவனை வெறுக்கிறானோ அப்படியே இந்தக் கலகக்காரர்களும் தேவனை வெறுக்கிறார்கள். ஆயினும் தங்களுடைய நிலைமை நம்பிக்கையற்றது என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகவே பரிசுத்தவான்களைத் தாக்குவதற்குப்பதில் இப்படிப்பட்ட நிலைக்குக் காரணனான சாத்தான்மீதும் அவனது ஏவலர்களாக இருந்த தங்களை வஞ்சகத்தில் இழுத்துப்போட்டவர்கள்மேலும் கடுஞ்சினம்கொண்டு வெறிபிடித்த பிசாசுகளைப்போலப் பாய்ந்து தாக்குகின்றனர். (27)

சாத்தானின் இந்த நிலையை: "உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்து நீ பாவஞ்செய்தாய்; ஆகையால் நான் உன்னைத் தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப்போடுவேன். உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்; உன்னைத் தரையிலே தள்ளிப்போடுவேன்; ராஜாக்கள் உன்னைப் பார்க்கும்படி உன்னை அவர்களுக்கு முன்பாக வேடிக்கையாக்குவேன். உன் அக்கிரமங்களின் ஏராளத்தினாலும், உன் வியாபாரத்தின் அநீதத்தினாலும் உன் பரிசுத்த ஸ்தலங்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினாய்; ஆகையால் உன்னைப் பட்சிப்பதாகிய ஒரு அக்கினியை நான் உன் நடுவிலிருந்து புறப்படப்பண்ணி, உன்னைப்பார்க்கிற எல்லாருடைய கண்களுக்கு முன்பாகவும் உன்னைப் பூமியின்மேல் சாம்பலாக்குவேன். ஜனங்களில் உன்னை அறிந்த அனைவரும் உன்னிமித்தம் திகைப்பார்கள்; மகா பயங்கரமாவாய்; இனி ஒருபோதும் இருக்கமாட்டாய் என்று உரைக்கிறார் என்று சொல் என்றார்" (எசே. 28:16–19) என்கிறது வேதாகமம். (28)

சாத்தானுடைய படைகள் இப்படி ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வதுபற்றி "அமளியாய் யுத்தம்பண்ணுகிற வீரருடைய ஆயுதவர்க்கங்களும், இரத்தத்தில் புரண்ட உடுப்பும் அக்கினிக்கு இரையாகச் சுட்டெரிக்கப்படும்" (ஏசா. 9:5) என்கிறார். "சகல ஜாதிகளின்மேலும் கர்த்தருடைய கடுங்கோபமும், அவைகளுடைய சகல சேனைகளின்மேலும் அவருடைய உக்கிரமும் மூளுகிறது; அவர்களைச் சங்காரத்துக்கு நியமித்து, கொலைக்கு ஒப்புக்கொடுக்கிறார்"–ஏசா. 34:2. "துன்மார்க்கர்மேல் கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார்; அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக் கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு"–சங். 11:6. சாத்தானுடைய படைகள் சாத்தானையும் ஒருவரையொருவரும் தாக்கிச் சண்டையிட்டுக்கொண்டிருக்கும்பொழுது தேவன் ஆகாயத்தில் இருந்து அக்கினியைப் பொழிகிறார். பூமியின் தரைகள் வெடிக்கின்றன. அவற்றின் வழியாகப் பூமியின் வயிற்றிலிருந்த அக்கினிப் பிழம்புகள் சீறிப்பாய்கின்றன. பூமி சூளை எரிவதுபோல எரிகிற நாள் இதுதான். ஆனால் இது விசேஷமான அக்கினி. கற்பாறைகளுங்கூட இந்த அக்கினியில் எரிகின்றன. பூமியின் மூலகங்கள் அனைத்தும் எரிந்து கடுஞ்சூட்டினால் உருகுகின்றன. பூமியுங்கூட உருகுகிறது. அதில் இருந்த பாவத்தீட்டுகள் எல்லாம் எரிந்தழிகின்றன. மல்கியா 4:1 மற்றும் பேதுரு 3:10 வசனங்கள் நிறைவேறுகின்றன. பூமியின் பரப்பு ஒரு பெரும் நெருப்புக் குழம்பாகவும் கொதிக்கிற நெருப்புக் கடலாகவும் ஆகிறது. தேவபயம்

இல்லாத மனிதர்கள்மேல் நியாயத்தீர்ப்பும் பேரழிவும் வரக்கூடிய நாள் இதுவே. “அது கர்த்தர் பழிவாங்கும் நாள், சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம்” (ஏசா. 34:8) என்று கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. (29)

அக்கிரமக்காரர்கள் தங்களுக்குரிய பலனை பூமியிலே அடைந்தாயிற்று. “அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” (மல்கியா 4:1) என்று கூறப்பட்டிருக்கிற நாள் இதுவே. அவர்களில் சிலர் சில நொடிகளிலே அழிந்துபோகிறார்கள். மற்றவர்கள் நாள்கணக்கில் எரிந்துகொண்டிருக்கிறார்கள். எல்லோரும் அவரவருடைய கிரியைகளுக்குத் தக்கபடி தண்டிக்கப்படுகிறார்கள். பரிசுத்தவான்களைப் பாவம் செய்ய வைத்தவன் சாத்தானே. தான் கலகம் செய்த பாவத்தை தன்மேல் சுமத்திக்கொண்டதுமன்றி, மற்றவர்களையும் கலகம்செய்ய வைத்து அதினால் மேலும் அதிகமான பாவத்தைத் தன்மேல் சுமத்திக் கொண்டவன் சாத்தான். ஆகவே சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட யாவரையும்விட, சாத்தான் அடையும் தண்டனை மிகவும் அதிகமாக இருக்கும். அவனுடைய வஞ்சகத்தால் மற்ற அனைவரும் எரிந்து அழிந்துபோனபின் சாத்தான் மேலும் உயிரோடு இருந்து வேதனைப்பட்டுக்கொண்டிருப்பான். அனைவரும் எரிந்து சாம்பலான பின்னர் சாத்தானும் எரிந்தழிந்து சாம்பலாவான். பரிசுத்தப்படுத்தும் இந்த நெருப்பில் பாவிகள் அனைவரும் என்றென்றைக்கும் அழித்தொழிக்கப்படுகிறார்கள். பாவம் என்கிற மரம் வேரும் கொப்பும் இல்லாதபடி முற்றுமாக அழிக்கப்படுகிறது. சாத்தான் வேர், அவனால் விழுந்தவர்களே கொப்புகள். நியாயப்பிரமாணம் விதிக்கும் தண்டனை முழுவதுமாக நிறைவேற்றப்பட்டு, நீதி நிலைநாட்டப்படுகிறது. அதைப்பார்த்து மண்ணுலகிலும் விண்ணுலகிலும் உள்ள அனைவரும் யேகோவா நீதியானவர் என்பதை அறிக்கை செய்கிறார்கள். (30)

சாத்தானுடைய அழிவு வேலைகள் இத்தோடு முடிந்து இனி என்றென்றும் இல்லாமல்போகின்றன. ஆறாயிரம் ஆண்டுகளாகச் சாத்தான் தனக்குச் சித்தமானவைகளைச்செய்து, இந்தப் பூமியைக் கொடுமையால் நிரப்பி, பிரபஞ்சம் முழுவதற்கும் வேதனையை உண்டாக்கிக்கொண்டிருந்தான். ஆகவே சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்துப் பெரும் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தது. இப்போது தேவனால் படைக்கப்பட்ட யாவரும் அவன் தரும் தொந்தரவுகளில் இருந்தும் அவன் உண்டாக்கும் சோதனைகளிலிருந்தும் என்றென்றும் விடுவிக்கப்பட்டுவிட்டார்கள். ஏசாயா 14:7–ல் சொன்னபடி: “பூமிமுழுதும் இளைப்பாறி அமைந்திருக்கிறது;

கெம்பீரமாய் முழங்குகிறார்கள்.” தேவன்மேல் விசுவாசத்தைக் காத்துக்கொண்ட அனைவரும் வெற்றிப் பெருமிதமும் தேவனுக்குப் புகழ்ச்சியும் நிறைந்த சத்தங்களை எழுப்புகிறார்கள். அது பெருந்திரளான கூட்டத்தினர் செய்யும் ஆரவாரம் போலவும் பெருங்கடலின் ஓசையைப்போலவும் பலத்த இடிமுழக்கங்களைப் போலவும் இருந்து, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார் என்று கூறுகிறது. (வெளி. 19:6). (31)

பூமியைச் சுற்றிலும் நெருப்பு வளைத்திருக்கும்போது நீதிமான்கள் மட்டும் பரிசுத்த நகரத்திற்குள் பாதுகாப்பாக இருக்கிறார்கள். “முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை;”–வெளி. 20:6. “தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்;”–சங். 84:11. (32)

“பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று”–வெளி. 21:1. அக்கிரமக்காரர்களைப் பட்சித்த நெருப்பு அவர்களைப் பட்சித்ததோடு நில்லாமல் பூமியின்மேலிருந்த எல்லாப் பாவத்தீட்டுகளையும் எரித்து அழித்துவிட்டது. இவ்வாறாகப் பூமி பரிசுத்தப் படுத்தப்பட்டுவிட்டது. தன் வேலையை முடித்தபின், அந்த நெருப்பும் அவிந்துவிட்டது. பாவத்தின் பயங்கர விளைவுகளை மீட்கப்பட்டவர்களுக்கு உணர்த்தும்படி, நரகத்தின் தீ எப்பொழுதும் எரிந்துகொண்டிருப்பதில்லை. (33)

பாவத்தின் பயங்கர விளைவுகளை உணர்த்தும்படி ஒரேயொரு சின்னம் மட்டுமே இருக்கும்—சிலுவையின் தழும்புகள். நமது மீட்பரின் சரீரத்தில் அவை எப்பொழுதும் இருக்கும். அவரது தலை, விலா, கைகள், கால்கள் இவற்றில் இருக்கும் தழும்புகளைத்தவிர பாவத்தின் மற்றெல்லாச் சின்னங்களும் துடைக்கப்பட்டுவிட்டன. கிறிஸ்துவை அவரது மகிமையில் பார்த்த தீர்க்கதரிசி: “அவருடைய பிரகாசம் சூரியனைப் போலிருந்தது; அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின; அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்திருந்தது” (ஆபகூக் 3:4) என்கிறார். ஆம். அவருடைய பராக்கிரமம் மறைந்திருப்பதும் அதிலேதான். மீட்பின் பலியைச் செலுத்தியதன்மூலம் பாவிகளுக்கு இரக்கங்காட்டி அவர்களை இரட்சிக்க வல்லவராக இருந்தபடியால், தாம் காட்டிய இரக்கத்தை அலட்சியம் செய்தவர்களைத் தண்டிக்கவும் அதிகாரம் பெற்றவராக கிறிஸ்து இருந்தார். அவரது சரீரத்திலே இருக்கும் அவமானச் சின்னங்களே அவரை மகா கனம் பொருந்தியவராகவும் ஆக்குகின்றன. அவரது

அன்பின் வல்லமை எப்படிப்பட்டது, அவர் எவ்வளவாகப் புகழத்தக்கவர் என்பதை யுகயுகமாக நித்திய நித்தியமாக அந்த கல்வாரியின் காயங்கள் அறிவித்துக்கொண்டேயிருக்கும். (34)

"மந்தையின் துருக்கமே, சீயோன் குமாரத்தியின் அரணே, முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்; ராஜரிகம் எருசலேம் குமாரத்தியினிடத்தில் வரும்"—மீகா 4:8. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திற்குள் நுழைய முடியாதபடி சுடரொளிப் பட்டயம் தாங்கிய தூதனால் தடுக்கப்பட்டிருந்தார்கள். அன்று முதலாக இழந்துபோன அந்த சுதந்திரத்தை என்றைக்கு மீட்டுக்கொள்ளுவோமோ என்கிற ஏக்கத்தோடு பரிசுத்தவான்கள் காத்திருக்கிறார்கள். அந்த ஏக்கம் தீரும்நாள் வந்துவிட்டது. ஆதியிலே இந்தப் பூவுலகம் மனிதனுக்கு அவனுடைய ராஜ்யஸ்தலமாக இருக்கும்படிக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் அது நழுவிப்போய் சாத்தானுடைய கரங்களுக்குள் விழுந்துவிட்டது. இத்தனை நாட்களாக அந்த எதிரியிடம் அல்லல்பட்டபின் இப்பொழுது மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தின் மூலம் மீண்டும் மனிதன் கைக்கு வந்திருக்கிறது. பாவத்தினால் மனிதன் இழந்துபோன அனைத்துமே இப்பொழுது திரும்பக் கிடைத்துவிட்டன. "வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து" என்று ஏசா. 45:18 உரைக்கிறது. மீட்கப்பட்ட மக்களின் நித்திய வாசஸ்தலமாக இந்த பூமி மாற்றப்படும்போது, தேவன் இந்தப் பூமியை ஆதியில் என்ன நோக்கத்திற்காகப் படைத்தாரோ அந்த நோக்கம் நிறைவேறுகிறது. "நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்"—சங். 37:29. (35)

எதிர்கால சுதந்திரத்தை பொருட்செல்வமாக பார்த்துவிடுவோமோ என்கிற பயம், அதை நம்முடைய வீடாக பார்க்க நடத்துகிற சத்தியத்தை ஆவிக்குரியதாக அர்த்தப்படுத்தும்படி அநேகரை நடத்தியிருக்கிறது. கிறிஸ்து தமது சீடர்களிடம் தாம் அவர்களுக்கு வாசஸ்தலங்களை ஆயத்தப்படுத்துவதற்காக போயிருப்பதாக நிச்சயப்படுத்தினார். தேவனுடைய வார்த்தை போதிப்பதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள், பரலோக உறைவிடத்தைக் குறித்து அறியாமல் இருக்கமாட்டார்கள். என்றாலும், "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (1 கொரி. 2:9). நீதிமான்களுக்கு தேவன் ஆயத்தம் செய்துவைத்திருக்கும் காரியங்களை சரியாக விவரிக்க மனித மொழிகளால் முடியாது. அதை நேரடியாகப் பார்க்கும்பொழுதுமட்டுமே அதைப் புரிந்துகொள்ளமுடியும். இனிமேல் தோன்ற இரக்கும் உலகத்தின் மகிமையை மனித மனம் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது. (36)

வேதாகமத்தில் இரட்சிக்கபட்டவர்களின் ஸ்தலம் பரமதேசம் எனப்படுகிறது. (எபி. 11:14–16). அங்கே பரம மேய்ப்பர் தமது ஆடுகளை ஜீவதண்ணீருள்ள ஊற்றுகளுக்கு நடத்துகிறார். ஜீவ விருட்சம் தனது கனிகளை ஒவ்வொரு மாதமும் தருகின்றது. அந்த மரத்தின் இலைகள் தொடர்ந்து ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள். ஆகவே அங்கே என்றென்றும் வற்றாத அருவிகள் இருக்கும். அந்தத் தண்ணீர் பளிங்குபோலத் தெளிவாக இருக்கும். அந்த அருவிகளின் கரைகளில் அமைதியாக ஆடி அசையும் மரங்கள் இருக்கும். அதையொட்டி கிரயம் கொடுத்து மீட்கப்பட்டவர்கள் உலாவிவரப் பாதைகள் இருக்கும். அந்தப் பாதைகளின்மேல் மரங்களின் நிழல் விழுந்துகொண்டிருக்கும். அங்கே நீண்டு பரந்த சமவெளிகள் இருக்கும். ஆங்காங்கே அழகிய மலைகளையும் உயர்ந்த சிகரங்களையும் தேவன் உண்டாக்கி வைத்திருப்பார். இதுகாறும் பயணிகளாயும் நிலையின்றி அலைந்து திரிகிறவர்களாயும் இருந்த தேவ மக்கள் அந்த அமைதியான சமவெளிகளிலே இந்த ஜீவ அருவிகளின் பக்கத்திலே வீடுகளில் தங்கி வாழ்வார்கள். (37)

தேவ ஜனங்கள் அனுபவிக்கும் சமாதானம்பற்றி வேதாகமம் “என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்” (ஏசா. 32:18), “வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்” (ஏசா. 65:21,22) என்கிறது. (38)

“என்னைக்குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப் பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன்; என்னுடைய நாமம் விளங்காதிருந்த ஜாதியை நோக்கி: இதோ, இங்கே இருக்கிறேன் என்றேன்.” “முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும்.” “அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை;

கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்”–ஏசாயா 35:1 55:13 11:6,9. (39)

பரலோகச் சூழ்நிலையில் வேதனை இருக்கமுடியாது. அங்கே கண்ணீர் சிந்துதல் கிடையாது. துக்கத்தின் சின்னங்கள் எதுவும் இருக்கமாட்டாது. “அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின.” “வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில்வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்” –வெளி. 21:4 ஏசா. 33:24. (40)

அங்கே புதிய எருசலேம் நகரம் இருக்கும். மகிமைப்பட்ட புதிய பூமியின் தலைநகராக அது இருக்கும். அந்தப் புதிய எருசலேமைப்பற்றி “நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்” (ஏசா. 62:3) என்கிறார். “அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது.” “இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்”–வெளி. 21:11,24. “நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்; அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை”–ஏசா. 65:19. “இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்”–வெளி. 21:3. (41)

தேவபட்டணத்தில் இரவு என்பதே இராது. தூங்குவது ஓய்வெடுப்பது என்பது யாருக்குமே விருப்பமாகவோ தேவையாகவோ இராது. தேவனின் சித்தத்தைச் செய்வதிலும் அவரது நாமத்தைத் துதித்துப் பாடுவதிலும் களைப்பு என்பதே ஏற்படாது. விடியற்காலையின் உற்சாகம் எப்பொழுதும் இருக்கும். ஒருபோதும் ஒரு சிறிதும் குறைந்துவிடாது... “அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்” (வெளி. 22:5). தேவனிட மிருந்தும் ஆட்டுக்குட்டியானவரிடமிருந்தும் வருகின்ற மகிமையின் ஒளி பரிசுத்த நகரத்தை எப்பொழுதும் நிறைத்திருக்கும். அந்த ஒளி நடுப்பகலில் உள்ள சூரிய ஒளியைவிடப் பலமடங்கு பிரகாசமாக இருக்கும். ஆனால்

அது கண்களை வேதனைப்படுத்தாது. மீட்கப்பட்டவர்கள் சூரியன் இல்லாத நித்தியமான மகிமையின் பகல் வெளிச்சத்திலே என்றென்றும் இருப்பார்கள். (42)

புதிய எருசலேமின் இன்னொரு சிறப்பு: “அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம்”–வெளி. 21:22. அதாவது தேவஜனங்கள் பிதாவையும் குமாரனையும் நேரடியாகவே கண்டு தொழுதுகொள்ளுகின்ற பாக்கியம் பெற்றிருப்பார்கள். இப்பொழுது நாம் இயற்கையிலும் மனிதர்களிடத்திலும் தேவன் செயல்படக்கூடிய செயல்படுகள் மூலமாகவே தேவனுடைய சாயலைப் பார்க்கிறோம். (1 கொரி. 13:12). அது கண்ணாடியில் பிரதிபலிக்கப்படும் உருவத்தைக் காண்பதுபோலத் தெளிவின்றி இருக்கிறது. ஆனால் தேவப்பட்டணத்திலோ நாம் அவரை முகமுகமாகக் காண்போம். அவரது மகிமை கலைக்கப்படாமல் ஆதியில் இருந்த மகிமையுடன் அவரைக் காண்போம். நாம் அவருக்கு முன்பாக நின்று அவரது முகத்தின் மகிமையை தெளிவாகக் காண்போம். (43)

தேவப்பட்டணத்தில் இருப்பவர்கள் தாங்கள் அறியப்பட்டு இருப்பதைப்போலவே தாங்களும் அறிந்திருப்பார்கள். அதாவது மனித ஆத்துமாவிலே தேவன் உருவாக்கிவைத்திருக்கும் அன்பும் இரக்கமுமாகிய மேன்மையான உணர்வுகள் ஒவ்வொருவரிடத்திலும் ஒருவருக்கொருவரிடத்திலும் முழுமையாகவும் மிக ஆழமாகவும் செயல்படும். அங்கே பரிசுத்தமான நபர்களின் உறவும் நட்பும் நமக்குக் கிடைக்கும். அன்றுமுதல் இன்றுவரை, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே தங்கள் ஆடைகளை வெளுத்து வெண்மையாக்கிக் கொண்ட அனைத்து மனிதர்களும் ஆசீர்வதிக்கப்பட்ட தேவதூதர்களுமாகிய அனைவரும் ஒருவருக்கொருவர் இடையில் காட்டும் அன்னியோன்யமும் ஒருவருக்கும் மற்றவருக்கும் இடையில் உள்ள தெய்வீக உறவுகளும் அங்கே இருக்கும். “பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும்” (எபே. 3:14) என்றபடி இவையெல்லாம் சேர்ந்து மீட்கப்பட்ட மனிதர்களின் மகிழ்ச்சியை முழுமையாக்கும். (44)

அங்கே மனிதர்களின் மனமும் அறிவும் மிகவும் விசாலமடைந்தவையாக இருக்கும். அவற்றைக்கொண்டு அவர்கள் தேவனுடைய படைப்பின் வல்லமையான அதிசயங்களையும் பாவிகளுக்காக மரித்தது என்கிற அந்த புதிரான அன்பின் ஆழங்களையும் என்றென்றும் ஆராய்ந்துகொண்டிருப்பார்கள். அதிலே அவர்கள் தெவிட்டாத இன்பங்காணுவார்கள். மக்கள் மீண்டுமாக ஆண்டவரை ஒருபொழுதும் மறந்துபோகமாட்டார்கள். அப்படி மறந்துபோகச்

செய்யும்படி கொடுமையும் வஞ்சகமும் நிறைந்த எதிரி எவனும் அங்கே இருக்கமாட்டான். மனிதர்களின் அறிவு நுட்பம் மேலும் மேலும் அதிகரிக்கும். திறமைகள் மேலும் மேலும் பெருகிக்கொண்டே இருக்கும். அறிவைத் தேடுகின்ற முயற்சிகள் மனதைக் களைப்படையச் செய்யவோ சோர்ந்துபோகச் செய்யவோ மாட்டாது. மிகச் சிறந்த திட்டங்களை நடத்தலாம். மிக உயர்ந்த இலட்சியங்களை அடையலாம். மிகப் பெரிய ஆசைகளை நிறைவேற்றலாம். அதற்குப்பின்னும் தொடரவேண்டிய புதுப்புது எல்லைகளும் மலரவேண்டிய புதுப்புது அற்புதங்களும் புரிந்து கொள்ளவேண்டிய புதுப்புது புதிர்களும் உடல்வலிமைக்கும் மனோ பலத்திற்குமான புதுப்புது சவால்களும் என்றென்றும் இருந்துகொண்டே இருக்கும். (45)

மீட்கப்பட்டவர்களின் பார்வைக்கும் பயனுக்கும் படிப்பிற்கும் பரலோகத்தின் கருவூலங்கள் அனைத்துமே திறந்திருக்கும். இப்பிரபஞ்சத்தில் பூமியைப்போன்ற கணக்கற்ற உலகங்களும் அவற்றில் பாவத்தையே அறியாத தேவ குடும்பத்தின் பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே மனிதர்கள் பாவம்செய்து துன்பப்பட்டபோது, தாங்களும் துயருற்றவர்கள். பிறகு மீட்படைந்து சந்தோஷமாகப் பாடியபொழுது தாங்களும் மகிழ்ந்து பாடியவர்கள். மீட்படைந்த மனிதர்கள் அந்த உலகங்கள் ஒவ்வொன்றையும் பறந்து சென்று பார்த்து மகிழுவர். அங்கே இருக்கும் பாவமே அறியாத பரிசுத்த மக்களோடு கலந்துரையாடி, அவர்களுடைய ஞானத்தையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்துகொள்ளுவார்கள். அவர்கள் தேவனுடைய படைப்பின் நுட்பங்களைக் குறித்து யுகயுகமாக ஆராய்ந்து அறிந்துவைத்திருக்கும் அறிவையும் நுட்பங்களையும் கேட்டுத்தெரிந்துகொண்டு மகிழ்வார்கள். சூரியனும் நட்சத்திரங்களும் இன்னும் பலவும் தத்தமக்கு நியமிக்கப்பட்ட பாதைகளிலே சென்று சிங்காசனத்தைச் சுற்றிவருகிற படைப்பின் மகத்துவத்தைத் தமது அயராத கண்களால் கண்டு மகிழ்வர். மிகச் சிறியதானாலும் மிகப் பெரியதானாலும் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துப் படைப்புகளிலும் படைத்தவரின் நாமம் எழுதப்பட்டிருப்பதையும் அவரது உன்னதமான படைப்பின் வல்லமை வெளிப்படுத்தப்பட்டிருப்பதையும் காண்கின்றனர். (46)

நித்தியத்தின் ஆண்டுகள் உருண்டோடுகையில் தேவனையும் கிறிஸ்துவையும்பற்றி மேலும்மேலும் சிறப்பான மகிமையான வெளிப்படுத்தல்கள் அவரது பிள்ளைகளுக்குக் கிடைக்கும். இப்படியாக தேவனைப்பற்றிய அறிவு விருத்தியாகும்போது, ஒருவர்மேல் ஒருவர் வைக்கும் அன்பு, மதிப்பு என்பதான மகிழ்ச்சி அனைத்துமே அதிகரித்துக்கொண்டே இருக்கும். தேவனைப்பற்றி மனிதர்கள் எந்த அளவிற்கு அறிவடைகிறார்களோ,

அந்த அளவிற்கு அவரது குணாதிசயம் எவ்வளவு அழகானது என்பதைக் கண்டுகொள்ளுவார்கள். மீட்பரின் மூலம் மனிதர்கள் அடைந்திருக்கும் ஆசீர்வாதங்கள் எப்படிப்பட்டது என்பதையும், சாத்தானோடு நடந்த ஆன்மீகப் போராட்டத்தில் நிகழ்த்தப்பட்ட ஒப்பற்ற சாதனைகள் என்ன என்பதையும் கிறிஸ்துவானவர் எடுத்து விளக்குவார். அப்போது மீட்கப்பட்டவர்களின் இருதயம் ஆச்சரியமான மகிழ்ச்சியால் துள்ளும். தேவன்மேல் அவர்கள் வைத்திருக்கும் விசுவாசம் மேலும் ஆழமானதாகத் திகழும். கட்டுக்கடங்காத மகிழ்ச்சியில் தங்களது பொன் சுரமண்டலங்களை எடுத்து வாசிப்பார்கள். ஆயிரம் ஆயிரமும் பதினாயிரம் பதினாயிரமுமான குரல்கள் ஒன்றாயிணைந்து உரத்த தொனியில் புகழாரங்கள் பாடுவர். (47)

"வானத்திலும் பூமியிலும் பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்"—வெளி. 5:13. (48)

மாபெரும் ஆன்மீகப்போராட்டம் முடிந்தது. இனி பாவமும் இல்லை, பாவிகளும் இல்லை. பிரபஞ்சம் முழுவதும் பரிசுத்தமாயிருக்கிறது. நன்மையும் மகிழ்ச்சியும் இணைந்தொலிக்கும் இசை நன்றாகப் பிரபஞ்சமெங்கும் கேட்கிறது. அனைத்தையும் படைத்த ஆண்டவரிடமிருந்து வரம்பெற்ற வெளியெங்கும் உயிரோட்டமும் ஒளியும் உவகையும் பெருகி வழிந்தோடுகின்றன. அணுமுதல் அண்டம்வரை, உயிருள்ளவை உயிரற்றவை அனைத்துமே மருவற்ற அழகும் குறைவற்ற உவப்பும் கொண்டு விளங்குவதைக் காணும்போது ஒன்று மட்டும் நன்றாகப் புரிகிறது. அவைகளெல்லாம் ஆண்டவர் அன்பாகவே இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. (49) ★